LIBRARY
TANJORE

அருட்பெருஞ்ஜோதி

திருவருட் பிரகாச வள்ளலார் 1271

என்னும்

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

திருவருட்பா

ஆறாவது திருமுறை

சமரச சுத்த சன்மார்க்க சங்க

வெளியீடு

36, சாமிபிள்ளை தெரு, சூளை, சென்னை.

காஞ்சீபுரம்

தவசி. குப்புசாமி முதலியார் அவர்களது

"குமரன்" அச்சு நிலையத்தில் பதிப்பித்தது.

சுவாமிகளின் 110-ம் ஆண்டு

ஆங்கிரஸ ஆண்டு புரட்டாசித் திங்கள் 16-ம் நாள்

[பதிவு செய்தது] 1-10-1932 [ந. 5

SRI VENKATESWARA ORIENTAL INSTITUTE
LIBRARY
TIRUPATI

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா

குறள் வெண்பா

திருச்சிற்றம்பலம்

எல்லாம் செயல்கூடும் என்னுணை யம்பலத்தே
எல்லாம்வல் லான்றனையே யேத்து.

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

திரு அருட்பிரகாச வள்ளலார்

தமது திருக்கரத்தால் எழுதப்பட்ட திவ்ய பாசுரம்



திருவருட்பா 6-வது திருமுறை வாதனைக்கழிவு 18-ம் பாசுரம் — பக்கம் - 119.

* ய்ந்ன்னை. இந்த இடத்தில் காகிதம் சிதைந்து விட்டது.

LIBRARY
TIRUPATI

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பிரகாச வள்ளலார் அருளிச்செய்த

விண்ணப்பம்

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார, சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனதில் பற்றுவண்ணம் அருள் செய்தல்வேண்டும். சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட்பெருங்கருணைக்கு வந்தனம்! வந்தனம்!!

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி

திருவருட் பிரகாசவள்ளலார் திருவடிகள் வாழ்க

பதிப்புரை

திருவருட்பா என்னுமித் தெய்வநூல் ஆறு திருமுறைகளாக வகுக்கப்பெற்றுளது. அவ்வாறனுள் முதலிலந்தை ஒரு பிரிவாகவும், ஆறுவனை மற்றொரு பிரிவாகவுங் கொள்ளலாம். ஏனெனில்:— இந்த ஆறுவது திருமுறையானது ஐயா அவர்கள், திருவாக்கின்படி, சமரச சுத்தசன்மார்க்கத்தைப் பெறவேண்டிய சாதகர்கட்கே உரித்தானதாகும். இந்த ஆறுவது திருமுறையைக் கையாளுபவர்கள், சுவாமிகள் காட்டியபடி புனிதமுறும் சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைப் பெற்று ஜீவகாருண்யத்தையே தெய்வ வழிபாடாகக் கொண்ட சமரச நன்னிலையெய்திய பக்குவ நிலையுடையார்களே ஆவார்கள் என்க. ஆதலாலேயே முதலிலந்து திருமுறைகளை ஒரு புத்தகமாகவும், இவ்வொரு திருமுறையை மட்டுக் தனியே வேறொரு புத்தகமாகவும் ஆக்கியுள்ளோம்.

இப்புனிதத் திருமறையாகிய ஆறுவது திருமுறையைத் தாமே முடிக்கவேண்டுமெனப் பேரன்பு கொண்டு முடித்துவைத்த எமது ஆன்மநேய உரிமைச் சகோதரர், காஞ்சி — குமரன் அச்சு நிலைய உரிமையாளரான திருவருட்செல்வர் தவசி — குப்புசாமி முதலியாரவர்கள், இம்மை மறுமைப் பயன்களைப் பூரணமாகப் பெற்று, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரது பெருங் கருணைக்குப் பாத்திரராகிப் பேரின்பசித்திப் பெருவாழ்வடைய, திருவருட் பிரகாச வள்ளற் பெருமானை நாம் அனைவரும் இறைஞ்சுவோமாக.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா

ஆறாவது திருமுறை

நூற் பிரிவு

சுத்த சன்மார்க்க விளக்கம்

		பக்கம்
1	விண்ணப்பம்	
2	பதிப்புரை	
3	உண்மை நெறி	
4	ஜீவகாருண்ய ஒழுக்கம் — முதல் பிரிவு	1
5	ஜீவகாருண்ய ஒழுக்கம் — இரண்டாவது பிரிவு	33
6	ஜீவகாருண்ய ஒழுக்கம் — மூன்றுவது பிரிவு	42

பதிக அட்டவணை

		பாட்டு.	பக்கம்.
1	அருட்பெருஞ்ஜோதி அகவல்	1596	1
2	பரசிவ வணக்கம்	2	47
3	பதி விளக்கம்	13	47
4	அருட்பெருஞ்ஜோதி விளக்கம்	8	51
5	பதிவிளக்கம்	10	53
6	ஆற்றுமை 1	10	55
7	ஆற்றுமை 2	10	58
8	ஆற்றுமை 3	10	60
9	முறையீடு	10	63
10	அடியார் பேறு	20	65
11	ஆத்தும விசாரத் தழுங்கல்	10	68
12	அவா அறுப்பு	13	70

			பாட்டு.	பக்கம்
13	திருவருட் பெருமை	....	10	74
14	பிரிவாற்றுமை	....	20	76
15	சிற்சபை விளக்கம்	....	10	81
16	திருவடி முறையீடு	.....	10	83
17	தற்சுதந்தர மின்மை	....	10	86
18	அத்துவி தானந்தத் தனுபவ விடையீடு	....	10	87
19	திருக்கதவந் திறத்தல்	....	10	90
20	பிள்ளைச்சிறு விண்ணப்பம்	....	28	92
21	பிள்ளைப்பெரு விண்ணப்பம்	....	129	96
22	சுத்த சன்மார்க்க வேண்டுகோள்	....	11	111
23	ஆன்மதரிசனம்	....	10	113
24	சித்திவிளைவு	....	11	115
25	வாதனைக்கழிவு	....	20	117
26	அனுபோக நிலையம்	....	10	120
27	தற்போத விழைப்பு	....	10	121
28	மாயா விளக்கம்	....	10	123
29	அபயத்திறன்	....	28	124
30	பிரிவாற்றுமை	...	10	128
31	பிரியேனென்றல்	....	11	129
32	திருவருட்பேறு	....	10	132
33	சிவானந்தத்தழுந்தல்	....	10	134
34	திருமுன் விண்ணப்பம்	....	10	136
35	வாதனைக்கிரங்கல்	....	10	137
36	முறையீடு	....	10	140
37	உண்மை கூறல்	....	10	141
38	அருள்விளக்க மாலை	....	100	143
39	வரம்பில் வியப்பு	....	10	164
40	திருவடிப் புகழ்ச்சி 1	....	10	165
41	திருவடிப் புகழ்ச்சி 2	....	10	167
42	திருவடிப் புகழ்ச்சி 3	....	10	169
43	திருவடிப் புகழ்ச்சி 4	....	10	172
44	திருவடிப் புகழ்ச்சி 5	....	30	174
45	குரு தரிசனம்	....	10	180
46	திருவடி நிலை	....	10	181
47	அச்சோப்பத்து	....	10	183
48	பரசிவ நிலை	....	10	185
49	சிவானந்த நிலை	....	10	187

			பாட்டு.	பக்கம்.
50	ஆற்றுமை கூறல் 1	....	10	188
51	ஆற்றுமை கூறல் 2	....	10	190
52	திருவூடப் புகழ்ச்சி	....	10	191
53	பற்றறுகை	....	10	193
54	திருவருட் புகழ்ச்சி	....	20	195
55	திருவருட் பெருமை 1	....	10	198
56	திருவருட் பெருமை 2	....	13	199
57	உபதேச உண்மை	....	10	200
58	அமையங் கூறல்	....	10	202
59	அனுபவ நிலை	...	8	204
60	கைம்மாறின்மை	....	10	205
61	வேண்டுகோள் 1	....	10	206
62	வேண்டுகோள் 2	....	10	208
63	திருவருட் பேறு	....	10	209
64	ஆற்றுமை	....	10	210
65	திருப்பள்ளி யெழுச்சி	....	10	212
66	திருவுந்தியார்	....	10	214
67	சரணடைதல்	....	11	215
68	பற்றறுத்தல்	....	11	216
69	சிற்சத்தி துதி	....	10	219
70	பிரிவாற்றுமை	....	10	220
71	ஆனந்தானுபவம்	....	12	221
72	சிவபுண்ணியப்பேறு	....	10	223
73	அந்தாப்பத்து	....	10	224
74	சமரச நிலை	....	11	225
75	வேண்டுகோள்	....	10	226
76	தலைவி பாங்கிக் குரைத்தல்	....	11	228
77	தாய்கூறல்	....	10	229
78	பாங்கி தலைவி பெற்றி யுரைத்தல்	....	10	230
79	தலைவி தலைவன்செயலைத் தாய்க்குரைத்தல்	....	10	233
80	தலைவி வருந்தல்	....	24	235
81	நற்றாய் செவிலிக்குக் கூறல்	....	10	240
82	அனுபவ மாலை	....	100	241
83	வரம்பிலின்பம்	....	45	262
84	தோழிக் குரிமை கிளத்தல்	...	14	271
85	அருட்பெருஞ்ஜோதி	....	13	274
86	அடிமைப்பேறு	....	10	275

			பாட்டு.	பக்கம்.
87	உத்தரஞான சிதம்பர மான்மியம்	....	11	277
88	திருவருட்பேறு	....	10	278
89	நெஞ்சொடுகூறல்	....	9	279
90	ஈகும்மாறின்மை	....	20	281
91	பாமாலை யேற்றல்	....	12	283
92	திருவருட் கோடை	....	10	285
93	வேண்டுகோள் 4	....	10	286
94	அனுபவசித்தி	....	11	287
95	இன்பத்திறன்	....	10	289
96	சிவயோக நிலை	....	10	291
97	திருவருட் பேறு 4	....	10	292
98	கைம்மாறின்மை 3	....	10	293
99	குறையிரத்தல்	....	16	295
100	நடராஜபதி மாலை	....	34	297
101	சற்குரு மணிமாலை	....	25	311
102	தான் பெற்றபேறு	....	20	316
103	பேறடைவு	....	10	320
104	உய்வகை கூறல்	....	12	321
105	நெஞ்சொடு கிளத்தல்	....	10	323
106	தலைவிகூறல்	....	10	325
107	உறுதிகூறல் 1	....	10	327
108	உறுதிகூறல் 2	....	10	330
109	சுத்தசிவ நிலை	....	47	332
110	ஞான சரியை	....	28	337
111	இரங்கல்	....	10	343
112	உலகப்பேறு	....	10	344
113	சுத்தசன்மார்க்க வேண்டுகோள் 2	....	6	346
114	வேண்டுகோள் 5	....	6	347
115	சன்மார்க்க முரசு	....	2	348
116	திருவருட் பேறு 5	....	4	348
117	அபயம் 1	....	5	349
118	மாயை நீக்கம்	....	5	350
119	முறையீடு 3	....	5	351
120	சிவானந்தநிலை 2	....	3	352
121	பராபரன் உண்மை நிலையம்	....	3	353
122	அபயங்கூறல்	....	3	353
123	அபயநிலை	....	2	354

			பாட்டு.	பக்கம்.
124	அனுபவநிலை 2	....	1	354
125	விண்ணப்பம்	....	1	354
126	திருத்தொண்டர் அடிப்பெருமை	....	1	355
127	சன்மார்க்க துன்மார்க்க இயல்பு	....	1	355
128	பதி நிச்சயம்	....	1	355
129	பிரார்த்தனை விளக்கம்	....	1	356
130	உண்மை விளக்கம்	....	1	356
131	சமரச சித்தாந்தப் பரநெறி விளக்கம்	....	1	356
132	தனிப் பாடல்கள்	....	124	357
133	நடராஜ அலங்காரம்	...	3	376
134	வருதருணப் பாடல்	....	4	379
135	திருவருள் முறையீட்டுக் கண்ணி	....	69	380
136	திருவடிக்கண்ணி	....	11	384
137	போன்புக்கண்ணிகள்	....	14	385
138	நெஞ்சொடு கிளத்தல் 1	....	10	387
139	மெய்யருள் வியப்பு	....	100	388
140	வருகைக்கண்ணி (வர்க்கமாலை என்னும் காலைப்பாட்டு)		105	401
141	வேட்கைக் கண்ணி	....	12	411
142	ஆடலமுதக் கண்ணி	....	12	414
143	ஆனந்த மேலீடு	....	11	417
144	ஆனந்தக் களிப்பு 1	....	34	420
145	ஆனந்தக் களிப்பு 2	....	33	424
146	ஆனந்தக் களிப்பு 3	....	30	429
147	நெஞ்சொடு கிளத்தல் 2	....	23	433
148	ஆனந்தக்களிப்பு 4 — 2-வது திருமுறை	....	30	435
149	பாங்கியர்க் கறிவுறுத்தல் — 2-வது திருமுறை		27	439
150	வெண்ணிலா — 2-வது திருமுறை	....	23	441
151	நடேசர் கொம்மி — 2-வது திருமுறை	....	7	443
152	சிதா சம்வாதம் — 2-வது திருமுறை	....	6	444

கீர்த்தனைகள்

153	நடேசர் கீர்த்தனை 1 — 2-வது திருமுறை	....	9	445
154	நடேசர் கீர்த்தனை 2 — 2-வது திருமுறை	...	7	446
155	சண்முகர் கொம்மி — 5-வது திருமுறை	....	15	447
156	சண்முகர் காலைப்பாட்டு — 5-வது திருமுறை		12	449

		பாட்டு.	பக்கம்.
157	இது நல்ல தருணம் ...	6	451
158	புண்ணியம்	9	452
159	வருவார் அழைத்து வாடி	5	453
160	பெரு வழக்கு	5	454
161	ஆடிய பாதம்	17	455
162	அபயம் 2	16	457
163	அற்புதம்	9	458
164	காட்சிக் கண்ணி	33	460
165	அக்கச்சி	4	463
166	ஆனந்தமேலீடு 1 — சங்கு	16	464
167	ஆனந்தமேலீடு 2 — சின்னம்	10	466
168	ஆனந்தமேலீடு 3	11	468
169	பிரபஞ்ச வெற்றி	1	469

நாமாவளி

170	அம்பலத்தரசே	84	470
171	போகம் சுகபோகம்	2	476
172	சூதுமன்னு விந்தையே	38	476
173	நடுநாடி நடுநாடி	3	479
174	தங்குறு வட்பு	12	479
175	பொதுநிலை யருள்வது	3	480
176	வான சிற்கன	3	481
177	ஓதவடங்காது	2	481
178	விரைசேர் சடையாய்	4	482
179	பசியாத அமுதே	15	482
180	நீடியவேதம்	8	484
181	வேதசிகாமணியே	10	486
182	பதஞம்புறு	3	487
183	ஜோதி	3	488

184	சித்திவளாசத் திருமாளிகையில் அருளிய திருப்பாடல்	1	489

பல்வகைய தனிப்பாடல்கள்

		பாட்டு.	பக்கம்.
185	பல்வகைய தனிப்பாடல்கள்	17	491
186	நிந்தாஸ்துதி	1	494
187	பெரியநாயகியம்மை தோத்திரம்	3	494
188	ஞானசிகாமணி தோத்திரம்	3	495
189	வயித்தியநாதர் பதிகம்	12	496
190	ஸ்ரீராம நாமத் திருப்பதிகம்	11	501
191	போற்றித் திருப்பஞ்சகம் — வீரராகவர்	5	503
192	இலக்ஷ்மி தோத்திரம்	1	504
193	துலுக்காணத்தம்மன் பேரில் பஞ்சரத்தினம்	5	505
194	சிங்கபுரிக் கந்தர் பதிகம்	11	506
195	குடும்ப கோஷம்	5	508
195	குருதரிசனப் படலம் — முதலாவது	53	509
195	முயற்சிப்படலம் — இரண்டாவது	58	516
196	திருவருட்பா வரலாறு (தொ. வேலாயுத முதலியார்)	66	524

வசனபாகம்

1	சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்தியச் சிறு விண்ணப்பம்		533
2	சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்		536
3	சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்		545
4	சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்		550
5	வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்டதினம் வெளியிட்ட அற்புதப் பத்திரிகை		555
6	உண்மைப் பத்திரிகை		558
7	சமரச வேத பாடசாலை		559
8	ஞானசபை விளக்கப் பத்திரிகை		560
9	மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகை சத்தியஞானதீப விளக்கத்தைப் பற்றிய வள்ளற் பெருமான் திருநெறிக் குறிப்புகள்.		562
10	சித்திவளாகத்திலும் தரும சாலையிலும் வசிப்பவர்கள் பரஸ்பரம் பழகுவதற்கு எச்சரிப்புப் பத்திரிகை		564
11	சமாதி வற்புறுத்தும் பத்திரிகை		566
12	சமரச சுத்தசன்மார்க்க சத்திய ஞாஞசாரம். — சுத்த தேகம் ...		568
13	உபதேசம்.		569

		பக்கம்.
14	மெய் மொழியும் ஒழுக்கமும்.	 580
15	திருவருளை எவ்வாறு பெறக்கூடும்.	 586
16	சித்தி வகை மூன்று.	 590

சமரச சுத்தசன்மார்க்கத் திருநெறிக் குறிப்புகள்

1	சமரசவேத சன்மார்க்க சங்கம்	....	1
2	ஞானம்	....	6
3	மூக்குணம்	....	6
4	மும்மலங்கள்	....	7
5	தர்மம்	....	7
6	சங்கல்பம்—சன்மார்க்கக் கொள்கை	....	8
7	நினைப்பு மறைப்பு	...	10
8	விருப்பு வெறுப்பு	....	10
9	சமய சூக்கும பஞ்சாக்ஷரத்தின் தாத்பர்யம்	....	11
10	சி என்பதன் பொருள்	....	12
11	சிவ என்பதன் பொருள்	....	13
12	சிவம் என்பதன் பொருள்	....	13
13	அகரத்தின் லக்ஷணம்—9	....	13
14	கற்பபேதம் என்பதன் பொருள்	....	13
15	அண்டமும் பிண்டமும்	....	14
16	எழுவகைப் பிறவி	....	15
17	சாகாத்தலை வேகாக்கால் போகாப்புனல்	....	16
18	மூன்றுசை	....	17
19	சாகாக் கல்வி	....	17
20	சிவகுணம் 8 ஜீவகுணம் 8	....	18
21	இந்து வேதாகமம்	....	18
22	சாகாதவனே சன்மார்க்கி	....	18
23	சுத்தசன்மார்க்கத்துக்கு உரியவர்கள்	....	18
24	ஆணவமல நிவர்த்தி	....	19
25	மாயாதிரைகள் ஏழு	....	19
26	அழுதவகை ஐந்து	....	20
27	சுவர்ணதேகம் பிரணவதேகம் ஞானதேகம்	....	20
28	சூளிகைமணி—ஒன்பது	....	21
29	கடவுள் ஒன்றும் இரண்டும் ஆனர்	....	21
30	பிண்டானுபவ லக்ஷணம்	....	21
31	சிருட்டிஞாயம்	....	25

32	பஞ்ச அமுத ஸ்தானங்கள்	....	26
33	பிரமாண்ட பகிரண்ட வியாபக சந்திர சூரிய கிரகண பரிச லக்ஷண விவரம்	....	27
34	வந்தனமுறை	....	29
35	நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல்	...	32
36	தேக நஷ்டத்தின் முக்கிய காரணங்கள்	....	41
37	நட்மை நஷ்டஞ்செய்யும் நான்கு	....	42
38	பெண்களின் சமத்துவம்	....	42
39	துர்மரணங்கள்	....	43
40	தேகம் நீடிப்பதற்குத் தீபப் பிரமாணம்	....	43
41	இல்வாழ்வானுக்கு ஞாயம்	....	44
42	ஜாக்கிரதை	....	44
43	பஞ்சமகா பாதகங்கள்	....	45
44	ஒளிநிலையும் சுத்த ஞானியும்	....	45
45	சுத்தசன்மார்க்க ஆகாரவிலக்கு	....	47
46	பஞ்சகவ்யத்தின் உண்மை	....	47
47	புறப்புற அமுதம்	....	47
48	வெந்நீர்	....	48
49	குளிர்ந்த ஜலம்	....	48
50	சனிதோடு என்பது	....	49
51	சர்க்கரையும் உப்பும்	....	49
52	கரிசாலையும் தூதுளையும்	....	49
53	ஜீவகாருண்யமே முத்திக்கு முதற்படி	....	50
54	பக்தி	....	51
55	ஜாதி சமயங்கள்	....	51
56	சந்நியாசமும் தயவும்	....	52
57	பரோபகாரம்	....	52
58	எல்லா உயிரையும் பொதுவாய்ப் பார்ப்பது	....	52
59	சத்விசாரம்	....	53
60	கடவுள் தயவும் ஜீவ தயவும்	....	53
61	சுரர் அசுரர் என்பதற்குப் பொருள்	....	53
62	திரயோதச நிலைகளும் தாழுங் குணமும்	....	54
63	சுவர்ண தேகிகளின் ஆயுள்	....	54
64	அணுபக்ஷ சம்புபக்ஷ அனுபவவிவரம்	....	55
65	சிருஷ்டிகளும் — பக்ஷிபதங்களும்	....	56
66	கரு உண்டாகும் விதம்	....	57
67	சுக்கில சுரோணிதம்	....	57
68	சுக்கிலம்	....	58

69	சப்த தாதுக்களின் விவரம்	....	58
70	ஆண்பெண் பருவம்	....	59
71	பிண்டமும் அண்டமும்	....	59
72	ஜீவன் இருக்கின்ற ஸ்தானம்	....	60
73	ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணும்	....	61
74	உரோம தத்துவமும் பிந்து ஸ்தானமும்	....	62
75	மர்க்கட ஞாயம் — மார்ச்சால ஞாயம்	....	65
76	புராணங்களின் உண்மை	....	65
77	சமயநூல்களில் பிழை	....	66
78	சுவர்க்க நரகம்	....	66
79	தயவுக்குத் தடைகள் — ஜாதி, சமயங்கள்	....	66
80	வேதம் முதலிய நூல்கள்	....	67
81	தேவாரம்	....	67
82	திருவாசகம்	....	68
83	திருமந்திரமும் திருவாசகமும்	....	68
84	வேதாரண்ய விவரம்	....	68
85	திருப்பாற் கடல் கடைந்த விவரம்	....	68
86	நாராயணன் என்பதன் பொருள்	....	69
87	மகாவிஷ்ணு என்பது	....	69
88	வாமனாவதாரம் — மாபலி	....	69
89	கருடன்மீது மகாவிஷ்ணு ஏறியது	....	70
90	பிரம விஷ்ணுக்கள் அடிமுடி தேடல்	....	70
91	பிரமனுக்குத் தலை ஐந்து — நான்கு	....	70
92	இராவணனுக்குத் தலை பத்து என்பது	....	71
93	சரஸ்வதியை மூக்கறுத்தது	....	71
94	பைரவரும் வீரபத்திரரும்	....	71
95	சுப்பிரமணியம்	....	72
96	குண்டோதரனுக்கு அன்னமிட்டது	....	79
97	சந்திரனுக்குத் தண்டனை	....	80
98	அயக்கிரீவம் என்பதன் பொருள்	....	80
99	மார்க்கண்டேய சரித்திர உண்மை	....	81
100	காயமே கோயில்	....	81
101	சமய மத சன்மார்க்கம்	....	81
102	சமயமத சன்மார்க்கமும் சுத்தசன்மார்க்கமும்	....	82
103	கடவுள் மனிததேகத்தில் காரியப்படுதல்	....	83
104	சுத்தசன்மார்க்க சாதனம்	....	83
105	காயத்ரி	....	84
106	சூரியன், சந்திரன், அக்கினி இவற்றின் கலைகள்	....	85

107	மழை	....	87
108	பூதம் என்பது	....	87
109	திசைகளும் பலனும்	....	88
110	தத்துவம் என்பது	....	89
111	பௌதிகம் என்பது	....	89
112	கடவுள் ஏகம் அனேகம்	....	89
113	கலியுக முடிவு	....	89
114	கூடஸ்த பிரம ஐக்கியம்	....	90
115	மலம் நீங்கிச் சிவமாதல்	....	90
116	தேகத்தைத் திறந்து வைத்திருத்தல் ஆகாது	....	91
117	அருள்வெளி	....	91
118	ஆனந்தம்	....	91
119	சத்தியும் சிவமும்	....	92
120	சன்மார்க்கத்தில் அவா	....	92
121	ஜீவனுக்குப் புருஷன் என்ற பெயர்	....	92
122	பற்று வகை	....	93
123	ஆன்மலாபம் அடைய மார்க்கம் இரண்டு	....	93
124	ஞான சிருஷ்டி	....	93
125	சபை ஐந்து	....	93
126	ஒளி	....	94
127	ரசவாதம் — உபரசவாதம்	....	94
128	வாக்கு நான்கு	....	94
129	நித்தியத் துறவு	....	95
130	மூக்குணவகை	....	95
131	அவஸ்தை மூன்று	....	95
132	நவநிலைகள்	....	95
133	பரஞானம் அபரஞானம்	...	96
134	சுத்தசன்மார்க்க அனுபவஸ்தானம்	....	96
135	அண்டபிண்ட அமுதம்	....	96
136	சகலர், விஞ்ஞானகலர், பிரளயாகலர்	....	96
137	ஓங்காரம்	....	97
138	பூர்வஜென்மம் உத்தரஜென்மம்	....	97
139	உபதேசம்	....	98
140	தியானம்	....	98
141	கவலை	....	98
142	ஞானம்	....	98
143	ஜீவன் முக்தன்—ஞானசித்தன்	....	99

144	தன்மை முன்னிலை படர்க்கை	....	99
145	அபேதம்	....	99
146	ஆண்டவர் சோதனை	....	99
147	கலை அறிவும்—அருள் அறிவும்	....	100
148	அகங்கார அழிவு	....	100
149	சிவ சிந்தனை	....	100
150	அன்புருவம்	....	100
151	சகஜநிலை	....	101
152	சங்கல்பம்	....	101
153	பிண்டதிசை	....	101
154	பக்குவரும் சூரியகலையும்	....	101
155	ஆலமரத்தடியில் சூரியனை வணங்கல்	....	101
156	இகபர காமங்கள்	....	102
157	குடிலை	....	102
158	திருமந்திரம்	....	102
159	சாதம்	....	102
160	உடம்பின் அருமை	....	102
161	சன்மார்க்கத்தில் இன்னிசை	....	103
162	உபதேசம் அனுஷ்டானமுறை	....	103
163	பிரார்த்தனை	....	104
164	தீக்ஷை	....	104
165	தமிழ்	....	104
166	அகரம்	....	108
167	அகரத்தைப்பற்றிய விஞ்சுக்கள்	....	109
168	இலக்கண வியனடை வழக்கப்பாடுறுத்துவிக்கும் பத்திரிகை		112
169	வேதாந்த தேசிகர் குறட்பா	....	114
170	பொன் வண்ணத் தந்தாதி	....	117
171	ஜீவகாருண்ய ஒழுக்க விளம்பரம்	....	120
172	திருவருட்பா — இனி அச்சிடுவதாகக் குறிக்கப்பட்டவை	....	122
173	ஐயா அவர்கள் — 50 கடிதத் திருநெறிக் குறிப்புகள்	....	123
174	"உலகெலாம்" என்னும் மெய்ம் மொழிப் பொருள் விளக்கம்		141
175	ஓஷதியின் குணானுபவம்	....	213
	சற்குரு தோத்திரம்	....	222
	குரு வணக்கம்		
	அகராதி		

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி

திருவருட் பிரகாச வள்ளலார்

தமது மெய்யன்பர்கட்கு உபதேசித்தருளிய

உண்மை நெறி

நாம் பெறும் புருஷார்த்தம் நான்கு

1. ஏமசித்தி. 2. சாகாக்கல்வி. 3. தத்துவ நிக்கிரகஞ் செய்தல். 4. கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்.

இவைகளைப் பெறுவதற்கு ஒழுக்கம் நான்கு வகைப்படும்

1. இந்திரிய ஒழுக்கம் 2. கரண ஒழுக்கம். 3. ஜீவ ஒழுக்கம். 4. ஆன்ம ஒழுக்கம்.

1. இந்திரிய ஒழுக்கம்

இந்திரிய ஒழுக்கமாவது:—கொடிய சொல் செவி புசாது நாதம் முதலிய ஸ்தோத்திரங்களைக் கேட்டல்; அசுத்த பரிச மில்லாது தயாவண்ணமாகப் பரிசித்தல்; குரூரமாகப் பாராதிருத்தல்; உருசி விரும்பாதிருத்தல்; சுகந்தம் விரும்பாதிருத்தல்; இன்சொல்லாடல்; பொய் சொல்லாதிருத்தல்; ஜீவஹிம்சை நேரிடுங் காலத்தில் எவ்வித தந்திரத்தினாவது தடைசெய்தல்; பெரியோர்கள் எழுந்தருளியிருக்கும் இடங்களுக்குச் செல்லுதல்.ஜீவ உபகார நிமித்தமாய்சாதுக்கள் வாஸஸ்தானங்களிலும், திவ்ய திருப்பதிகளிலும் சஞ்சரித்தல்; நன்முயற்சியில் கொடுத்தல் எடுத்தலாதி செய்தல்; மித ஆகாரஞ் செய்தல்; மித போகஞ் செய்தல்; மல ஜலோபாதிகளைக் கிரமமாய் ஒழித்தல்; காலதேபதத்தாலும் உஷ்ண ஆபாசத்தாலும் தடை நேர்ந்தால் ஔஷதி வகைகளாலும் பௌதிக மூலங்களாலும், சரபேத அஸ்த பரிச தந்திரத்தாலும், மூலாங்கப் பிரணவத்யான சங்கற்பத்தாலும் தடை தவிர்த்துக் கொள்ளல்; (மந்தரனுக்கு) சுக்கிலத்தை அக்கிரமாதிக்கிரமத்தில் விடாது நிற்றல்; (தீவிரதனுக்கு) எவ்வகையிலும் சுக்கிலம் வெளிப்படாமை நிறுத்தல்; இடைவிடாது கோசத்தைக் கவசத்தால் மறைத்தல் இதுபோல் உச்சி, மார்பு முதலிய அங்கங்களையும் மறைத்தல்; சஞ்சரிக்குங் காலத்தில் காலில் கவசம் தரித்தல்; அழுக்காடையுடுத்தா திருத்தல்; முதலியன இந்திரிய ஒழுக்கம்.

2. கரண ஒழுக்கம்

கரண ஒழுக்கமாவது:—மனதைச் * சிற்சபையின் கண்ணே நிறுத்தல்; அதாவது முதலில் புருவ மத்தியில் நிற்கச் செய்தல்; தூர் விஷயத்தைப் பற்றுதிருக்கச் செய்தல்; ஜீவதோஷம் விசாரியாதிருத்தல்; தன்னை மதியாதிருத்தல்; இராகாதி நீக்கி இயற்கைச் சத்துவ மயமாதல்; தனது தத்துவங்களை அக்கிரமத்திற் செல்லாது கண்டித்தல் முதலியன கரண ஒழுக்கம்.

3. ஜீவ ஒழுக்கம்

ஜீவ ஒழுக்கமாவது:—ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய யாவர்களிடத்திலும், ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி எல்லவரும் தம்மவர்களாய்ச் சமத்திற் கொள்ளுதல் ஜீவ ஒழுக்கம்.

4. ஆன்ம ஒழுக்கம்

ஆன்ம ஒழுக்கமாவது:—யானை முதல் எறும்பு ஈறுகத் தோன்றிய சரீரங்களிலுள்ள ஜீவான்மாவே திருச்சபை யாகவும் அதனுள் பரமான்மாவே பதியாகவும் கொண்டு யாதும் நீக்கமற எவ்விடத்தும் பேத மற்று எல்லாந் தானுக நிற்றல் ஆன்ம ஒழுக்கம்.

இவ்வண்ணம் நின்றால், மேற்குறித்த அரும் புருஷார்த்தம் கைகூடும்.

குறிப்பு :—திருவருட் பிரகாச வள்ளலார் வடலூர்ப் பெருவெளியிலே, சன்மார்க்க போதனை செய்துவருங்கால், இந்த "உண்மை நெறியினை" யுரைத்து சுவரில், ஒட்டிவைத்தது, "இந்நெறியைப் பெற்றுய்யுங்கள்;" என்று உபதேசித்தருளியது பிரசித்தம்.

---

* சிற்சபை:— விந்து, அறிவு, பாலம், முச்சுடர், முச்சந்தி, முப்பாழ், நெற்றிக்கண், கபாடம், சபாத்வாரம், மகம்மேரு, மூலம், சாகாத்தலை முதலிய ஒரு பொருட் கிளவியாம்.

அருட்பெருஞ்ஜோதி

எல்லாம் செயல் கூடும் என்னுணை அம்பலத்தே

எல்லாம் வல்லான்றனையே யேத்து.

திருச்சிற்றம்பலம்.

திரு அருட்பிரகாச வள்ளலார் திருவடி வாழ்க

சன்மார்க்க சங்கச் சட்டங்கள்

1. அங்கத்தினர் :

சாதி, மத சமய பேதமின்றி ஆண், பெண், சிறியர், பெரியர் யாவரும் சங்கத்தில் அங்கத்தினராகச் சேரலாம். சங்க அங்கத்தினர்களில் பிரிவு இரண்டு. அவை : 1. அகவினம்—புலால் உண்ணுத தயவுடையவர்கள். 2. புற வினம்—புலால் உண்ணும் கடின மன முடையவர்கள். புறவினத்தார் நாளடைவில் புலாலை விடுத்து அகவினத்தாராக வேண்டும். (திரு அருட்பா 6-வது திருமுறை அருள் விளக்கமாலை 'உயிர்க்கோலையும்' என்ற பாடலைக் கவனிக்க.)

2. வழிபாடு :

உள்ளத்தில் சத்திய ஞான சபை விளங்குவதாயும் அதனுள் அறிவே புருவ மத்தியில் அருட்பெருஞ்ஜோத்யாக விளங்குவதாயும் ஆழ நினைத்துக் கடவுள் வழிபாடு செய்தல் வேண்டும். வெளி முகத்தில் விளக்கே ஜோதியாகவும், ஆண்டவன் விளங்கும் ஒளியாகவும் பாவித்துத் திருவிளக்கையே வழிபடல் வேண்டும்.

குறிப்பு :—வழிபாட்டிற்குக் கண்ணாடி விளக்கே சிறந்தது. கண்ணாடியே மனம்—உள் ஒளியே அறிவாகிய ஜோதி—அஞ்ஞானிகளின் மனமாகிய கண்ணாடியில் அழுக்கேறி யிருத்தலே திரைகள். வழிபடும்போது சாதி, மதம், சமயங்கள், ஆசார சங்கற்ப விகற்பங்கள் யாவும் மண்மூடிப் போகவேண்டும் எனவும், ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளராகி உலகியல் நடத்தல் வேண்டும் எனவும், உலகனைவரும் சன்மார்க்க நெறியிற் பழகி, பேரின்ப வாழ்வில் திளைக்க வேண்டுமெனவும் உள்ளே நினைத்து, ஆண்டவனை வாயார வாழ்த்தி வழிபடல் வேண்டும்.

3. ஒழுக்கம் :

உள்ளும் புறமும் ஒத்து நடக்க வேண்டும். தூய்மையான உள்ளம், தூய்மையான வாக்கு, தூய்மையான உடை கொள்ளவேண்டும். திருவருள் எவ்வாறு பெறக் கூடும்? என்ற சிந்தனையில் கருத்தைச் செலுத்தித் திருவருட்பாவில் உள்ள 'உண்மை நெறி' யின்படியும் 'உலகியல் என்னும் நித்திய ஒழுக்கத்தின்படியும்' ஒழுகவேண்டும்.

4. எச்சரிப்பு :

சன்மார்க்க சங்கத்து அன்பர்கள் திருவருட்பாவில் உள்ள எச்சரிப்புப் பத்திரிகையில் கண்டபடி வழிபாடு விஷயத்தில் யாவரும் மனம் ஒத்து ஜாக்கிரதையுடன் பழக வேண்டும்.

5. சாதனம் :

திருவருட்பாவில் உள்ள பாடல்களைப் பிழையின்றி மனப்பாடம் செய்து கொண்டு காலந்தவறுமல் பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்பதை உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து தோத்திரம் செய்ய வேண்டும். நாடோறும் காலை மாலைகளில் 'திருவடிப்புகழ்ச்சி' பாராயணமும், பிரதி வியாழன்தோறும் 'அருட்பெருஞ்ஜோதி அகவல்' பாராயணமும் மாதமொருதரமாகிலும் 'ஜீவகாருணிய ஒழுக்கத்தை' ஓதலும், தரத்துக்குத் தக்கபடி ஆதாரமற்ற எழுகளுக்கு ஆகாரம் முதலிய உதவி செய்தலும் வேண்டும்.

6. உலகியல் :

உலகியலில் சன்மார்க்க முறைப்படி திருமணம், பூப்பு நன்னீராட்டல் முதலிய விழாக்களில், இருட்சாதி தத்துவச் சாத்திரக் குப்பைகளையெல்லாம் தள்ளி, கண் மூடி வழக்கங்களை எல்லாம் மண் மூடிப் போகவிட்டு, ஒழுக்கமும் அறிவுமுள்ள பெரியார் ஒருவரை முன்னதாகக் கொண்டு அவர் முன்னிலையில் பதிவிளக்கு, குடவிளக்கு முதலிய திரு விளக்குகளை ஏற்றி, சுமங்கலப் பெண்களால் எல்லாச் சடங்குகளையும் செய்வித்து, ஆண்டவரை வழிபாடு செய்து, தாலிகட்டுவித்தல், நன்னீராட்டுவித்தல் முதலிய விழாக்களைச் செய்தல் வேண்டும். சாதி மத சமய பேதங்களொன்றும் பாராட்டலாகாது.

இத்தேகத்தையே நித்திய தேகமாக்கி மரண மிலாப் பெருவாழ்வில் வாழ்வதே சன்மார்க்க நோக்கமாகும். மரணம் நமது அஜாக்கிரதையே யாகும். அப்படி ஏதேனும் தேக ஆனி நேரிட்டால் சமாதி செய்வித்தல் வேண்டும். 'பரனளிக்கும் தேக மிது சுடுவது அபராதமாகும்'. கர்ம காரியங்கள் ஒன்றும் செய்தல் கூடாது. நேரிட்டதினத்தில் தெரிவிக்கத் தக்கவர்களுக்குத் தெரிவித்து சமாதி பூசை செய்து நேரிட்ட மட்டில் அன்னவிரயம் செய்தல் வேண்டும். சமாதி வழிபாடு செய்யும்போது 'இந்த ஆன்மா பரிபூரண சாந்தியைப் பெற வேண்டும்' என வேண்துதல் வேண்டும். ஏதேனும் சந்தேக மிருந்தால் சங்கத்திற்குத் தபால் பில்லைகளுடன் (Stamps) எழுதவும். (திருவருட்பாவில் சமாதி வற்புறுத்தும் பத்திரிகையைப் பார்க்கவும்).

7. உபகரித்தல் :

சங்கத்தில் நடைபெறும் அன்னவிரயத்திற்கும் வழிபாட்டிற்கும் உத்வ விரும்பும் அன்பர்கள் ஆன்ம நேய அன்புடன் செலுத்த வேண்டிய மாதச்சந்தா குறைந்தது அணா நான்கு. இயல்புடையவர்கள் தங்கள் தரத்துக்குத் தக்கபடி அதிகமாகவும் செலுத்தலாம். வருடச்சந்தா குறைந்தது ரூபாய் மூன்று. இத்துடன் வள்ளற் பெருமான் நிறுவிய வடலூர் தெய்வ நிலையங்களில் நடைபெறும் அன்ன விரயத்திற்கும் வழிபாட்டிற்கும் இயன்றபட்டில் உதவி செய்தல் நமது கடமையாகும்.

சங்கத்தின் அன்பர்கள் ஒவ்வொருவரும் வருடச்சந்தா ரூபாய் ஒன்று செலுத்தி வடலூர் சத்திய தருமச்சாலைக்கு அவசியம் அங்கத்தினராதல் வேண்டும்.

☞ விலாசம் :

சென்னை சமரச சுத்தசன்மார்க்க சங்கம்,

8/99, அம்மன் கோயில் தெரு,

திருவல்லிக்கேணி சமீபம், G. P. O., சென்னை.

LIBRARY
SRI VENKATESWARA UNIVERSITY
TIRUPATI

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா

சன்மார்க்க விளக்கத்தின் முதற்பிரிவாகிய

ஜீவகாருண்ய ஒழுக்கம்

பரசிவ வணக்கம்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கருத்தமர் அமுதே
அன்பெனுங் கடத்துள் அடங்கிடுங் கடலே
அன்பெனும் அணுவுளார் ஒளியே
அன்பெனும் உயிருள் ஒளிர்தரும் அறிவே
அன்புரு வாம்பர சிவமே.

அருட்பெருஞ்ஜோதி

முதற்பிரிவு

அருட்பெருஞ்ஜோதி

உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பிலுல் அடையத் தக்க ஆன்ம லாபத்தைக் காலமுள்ள போதே அறிந்து அடைய வேண்டும்.

அந்த ஆன்மலாபம் எது? என்று அறிய வேண்டில் :—

எல்லா அண்டங்களையும், எல்லாப் புவனங்களையும், எல்லாப் பொருள்களையும், எல்லா ஜீவர்களையும், எல்லா ஒழுக்கங்களையும், எல்லாப் பயன்களையும், தமது பூரண இயற்கை விளக்கமாகிய 'அருட்சத்தியால்', தோன்றிவிளங்க, விளக்குஞ் செய்விக்கின்ற, இயற்கை உண்மை வடிவினராகிய, 'கடவுளின்' பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று, எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும, எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற, 'ஒப்பற்ற பேரியவாழ்வே' இந்த மனிதப் பிறப்பிலுல் அடையத்தக்க ஆன்ம லாபம் என்று உண்மையாக அறியவேண்டும்.

இயற்கை இன்பத்தைப் பெற்றுத் தடைபடாமல் வாழ்கின்ற அந்தப் பெரியவாழ்வை எதலுல் அடையக் கூடும்? என்று அறிய வேண்டில் :—

கடவுளின் இயற்கை விளக்கமாகிய 'அருளைக்' கொண்டே அடையக் கூடும் என்று அறியவேண்டும்.

கடவுளின் இயற்கை விளக்கமாகிய 'அருளை' எதலுல் பெறக்கூடும்? என்று அறிய வேண்டில் :—

ஜீவகாருண்ய ஒழுக்கத்திலுல் கடவுள் அருளைப் பெறக்கூடுமல்லது, வேறெந்தவழியாலும் சிறிதும் பெறக்கூடாது என்று உறுதியாக அறிதல்வேண்டும்.

கடவுள் அருளை ஜீவகாருண்ய ஒழுக்கத்திலல் பெறக் கூடுமல்லது வேறெந்த வழியாலும் பெறக்கூடாதென் பது எப்படி? என்னில்:—

அருளென்பது,—கடவுள் தயவு, கடவுள் இயற்கை விளக்கம். ஜீவகாருண்ய மென்பது,—ஜீவர்கள்தயவு, ஜீவர்கள் ஆன்ம இயற்கை விளக்கம். இதனால், தயவைக்கொண்டு தயவைப்பெறுதலும், விளக்கத் தைக் கொண்டு விளக்கத்தைப் பெறுதலுங் கூடும். வேறொன்றினால் பெறக் கூடாமை அனுபவ மாகலின், ஜீவகாருண்யத்தைக் கொண்டு அருளைப்பெறு தல் கூடும், வேறொன்றினாலும் பெறக்கூடாமை நிச்சயம். இதற்கு வேறு பிரமாணம் வேண்டா மென்று அறிய வேண்டும்.

அருளைப்பெறுவதற்கு ஜீவகாருண்யமே வழியாகலால், ஞான வழி யென்பதும்,—சன்மார்க்க மென்பதும்,—ஜீவகாருண்ய ஒழுக்கம் என் றும்,—அஞ்ஞானவழி யென்பதும் துன்மார்க்கம் என்பதும்,—ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமை யென்றும்—அறியப்படும். ஜீவகாருண்யம் விளங்கும் போது அறிவும் அன்பும் உடனே நின்று விளங்கும்,—அதனால் உபகாரசத்தி விளங்கும்,—அந்த உபகாரசத்தியால் எல்லா நன்மைகளுந் தோன்றும்.

ஜீவகாருண்யம் மறையும்போது அறிவும் அன்பும் உடனே மறை யும்,—அதனால் உபகாரசத்தி மறையும்,—உபகாரசத்தி மறையவே எல்லாத் தீமைகளுந் தோன்றும்.

ஆகலில், புண்ணியமென்பது—ஜீவகாருண்ய மொன் றேயென்றும், பாவமென்பது—ஜீவகாருண்ய மில்லாமை யொன்றே யென்றும் அறியப்படும்.*

ஜீவகாருண்ய ஒழுக்கத்திலல் வரும் விளக்கமே கடவுள் விளக் கமென்றும்,—ஜீவகாருண்ய ஒழுக்கத்திலல் வரும் இன்பமே கடவுள் இன்ப மென்றும்,—இவ் விளக்கத்தையும் இன்பத்தையும் பலகால் கண்டு அனுபவித்துப் பூர்த்தி யடைந்த சாத்தியர்களே ஜீவன் முத்தரென்றும்,— அவர்களை கடவுளை அறிவால் அறிந்து கடவுள்மயம் ஆவார்கள் என்றுஞ் சத்தியமாக அறியவேண்டும்.

---

* "அறவினை யாதெனிற் கொல்லாமை; கோறல்
பிறவினை யெல்லாந் தரும்."
(திருக்குறள்—33-வது அதிகாரம், கொல்லாமை—1.)

ஆதலால், ஜீவகாருண்ய ஒழுக்கமென்பதென்? எனில் :—

ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக்கொண்டு தெய்வ வழிபாடு செய்து வாழ்தலென் றறியவேண்டும்.

ஜீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம் எப்போது உண்டாகும்? என்னில் :—

ஜீவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம் கோலை, இவைகளால்—துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதாயினும், கேட்டபோதாயினும்,—இவ்வாறு உண்டாகு மென்று அறிந்தபோதாயினும்—ஆன்ம உருக்கம் உண்டாகுமென்று அறியவேண்டும்.

ஜீவகாருண்யம் உண்டாவதற்கு உரிமை எது? என்னில் :—

ஜீவர்களெல்லாம்—ஒரு தன்மையாகிய இயற்கை யுண்மை யினதேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டபடியால்,—ஓர் உரிமையுள்ள சகோதரர்களே யாவர். சகோதரர்களுள் ஒருவர்—ஒரு ஆபத்தால் துக்கப்படுகின்ற போதும், துக்கப்படுவாரென்று அறிந்த போதும், அவரைத் தமது சகோதரரென்று கண்ட மற்றொரு சகோதரருக்கு—உருக்கமுண்டாவது சகோதர உரிமையாகலில்,—ஒரு ஜீவன் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதும்,—துக்கப் படுமென்று அறிந்த போதும்—மற்றொரு ஜீவனுக்கு உருக்கமுண்டாவது பழைய ஆன்ம உரிமை யென்று அறியவேண்டும்.

ஜீவர்கள் துக்கப் படுகின்றதைக் கண்ட போதும், சிலர் ஜீவகாருண்ய மில்லாமல் கடின சித்தர்களாயிருக்கின்றார்கள்; இவர்களுக்குச் சகோதர உரிமை யில்லாமற் போவது ஏன்? என்னில் :—

துக்கப்படுகின்றவரைத் தமது சகோதரரென்றும்,—துக்கப்படுகின்றாரென்றும்,—துக்கப்படுவாரென்றும்,—அறியத்தக்க ஆன்ம அறிவு என்கிற கண்ணானது அஞ்ஞான காசத்தால் மிகவும் ஒளிமழுங்கினபடியாலும்,—அவைகளுக்கு உபகாரமாகக் கொண்ட மனம் முதலான உபாயவங்களாகிய கண்ணாடிகளும், பிரகாச பிரதிபலித மில்லாமல் தடிப்புள்ளவைகளாக இருந்தபடியாலும், கண்டறியக் கூடாமையாயிற்று. அதனால், சகோதர உரிமை

யிருந்தும் ஜீவகாருண்யம் உண்டாகாம லிருந்தி தன்று அறியவேண்டும். இதலல் ஜீவகாருண்யமுள்ளவர் ஆன்ம திருஷ்டி விளக்க முள்ளவ ரென்று அறியப்படும்.

ஜீவர்களுக்குப் பசி, தாகம், பயம் முதலியவற்றால் வரும் துன்பங்களெல்லாம், மனம், கண் முதலிய கரணேந்திரிய அனுபவங்களல்லது, ஆன்ம அனுபவங்களல்ல—அதலல் ஜீவகாருண்யங் கொள்வதில் விசேஷ பிரயோசனம் இல்லையே? என்னில் :—

இந்தத் தூலதேகத்தில், ஜீவனுக இருக்கிற ஆன்மாவும், அறிவுக் கறிவா யிருக்கிற கடவுள் இயற்கை விளக்கமுந் தவிர, காரணம், இந்திரியம் முதலிய மற்றவைகளெல்லாம் கருவிகளாகிய தத்துவ சடங்களே யல்லது சித்துக்களல்ல. ஆகலில், சுகதுக்கங்களைச் சடங்கள் அனுபவிக்க அறியா. செம்மண்—சந்தோஷித்தது, துக்கித்தது என்று சொல்லப்படாது. அதுபோல், மனம்—சந்தோஷித்தது, துக்கித்தது என்று சொல்லப்படாது. செம்மண்ணினுல் தேக வாழ்க்கைக்கு வீடுகட்டிக் கொள்வதுபோல, மனம் முதலான கரணேந்திரியங்களால் ஜீவவாழ்க்கைக்குக் கடவுளால் கட்டிக் கொடுக்கப்பட்ட தேகம் ஒரு சிறிய வீடாகும். இன்ப துன்பங்களை வீட்டிலிருக்கின்றவன் அனுபவிப்பா னல்லது, வீடு அனுபவிக்க மாட்டாது. அன்றியும், காசத்தினுல் ஒளி மழுங்கப்பட்டு உபாயனங்களாகிய கண்ணுடிகளால் பார்க்கின்ற கண்கள் துன்ப விஷயத்தைக் கண்டபோது, அக்கண்கள் நீர் சொரியுமே யல்லது, கண்ணுடி நீர் சொரிய மாட்டாது. ஆகலில், ஆன்ம திருஷ்டிக்கு உபாயனங்களாக இருக்கின்ற மனம் முதலான கருவிகள் சுகதுக்கங்களை அனுபவிக்கமாட்டா: ஆன்மாவே அனுபவிக்க வேண்டுமென்று அறிய வேண்டும்.

ஒரு ஜீவனுக்குச் சுகம் நேரிட்டபோது மனம் மகிழ்கின்றது; துக்கம் நேரிட்டபோது மனம் தளர்கின்றது: ஆதலால், சுகதுக்கங்களை அம்மனம் அனுபவிப்பதாக அறியப்படாதோ? என்னில் :—

அறியப்படாது. பளிங்கினுற் செய்த வீட்டினுள் இருக்கின்ற வீட்டுத் தலைவனுடைய தேக விளக்கமும், தேகச் சோர்வும், அந்தப் பளிங்கு வீட்டில் பிரதிபலித்துப் புறத்தில் தோன்றுவதுபோலும், கண்களின் மலர்ச்

கியும், சோர்வும் அக்கண்களிலிட்ட உபாயனங்களில் பிரதிபலித்துப் புறத்தில் தோன்றுவது போலும், சுகதுக்கங்களால் ஆன்மாவுக்கு உண்டாகிற பகிழ்ச்சியுந் தளர்வும், மனம் முதலான கரணேந்திரியங்களில் பிரதிபலித்துப் புறத்தில் தோன்றுகின்றன. ஆகலில், சுகதுக்கங்கள் ஆன்மாவுக்கே அனுபவமென்றும், சுகதுக்கங்களை அறிந்து அனுபவிப்பதற்குக் கரணேந்திரியங்கள் ஆன்மாவுக்கு உபகாரக் கருவிகளாகுமென்றும் அறியவேண்டியது.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவர்களில் அனேகர் பசி, தாகம், பயம் முதலியவற்றால் மிகவுந் துன்பப் படுகின்றது என்? என்னில்:—

மூன் தேகத்தில், ஜீவகாருண்ய ஒழுக்கத்தை விரும்பாமல் கடின சித்தர்களாகித் துன்மார்க்கத்தில் நடந்த ஜீவர்களாதலால், கடவுள் விதிந்த அருளாக்கினைப்படி, பசி, தாகம், பயம் முதலியவற்றால் மிகவுந் துக்கப்படுகிறார்களென்று அறியவேண்டும்.

மூன் தேகம் உண்டென்பது எப்படி? என்னில்:—

ஒரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடித்தனஞ் செய்பவன், சமுசாரி அதற்குமுன் வேறொரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடித்தனஞ் செய்திருந்தானல்லது, வீடில்லாமல் குடித்தனஞ் செய்பவனாட்டானென்றும், இப்போது வந்த வீட்டிலுங் கலகம் நேரிட்டால் பின்னும் வேறொரு வீட்டில் குடிபோவான் என்றும் அறிவது போல், இந்தத் தேகத்தில் ஆகாரக் கூலி கொடுத்துக் குடியிருக்க வந்த ஜீவன், இதற்கு முன்னும் வேறொரு தேகத்தில் அந்தக் கூலியைக் கொடுத்து ஜீவித்திருந்தானல்லது, தேகமில்லாமல் ஜீவித்திருக்க மாட்டானென்றும், இந்தத் தேகத்திலுங் கலகம் நேரிட்டால் பின்னும் வேறொரு தேகத்தில் குடிபோவானென்றும், நம்பியே வேண்டும். ஆதலால், முன்னும் பின்னும் ஜீவர்களுக்குத் தேகங்கள் நேரிடுமென்று அறியவேண்டும்.

ஜீவர்கள் முன் தேகத்தில் செய்த பாபகர்மங்கள் இந்தத் தேகத்திலும் வருமென்பது எப்படி? என்னில்:—

ஒரு சமுசாரி முன் குடித்தனஞ் செய்திருந்த வீட்டில் தன் நில்லவன் கட்டளைப்படி நடவாமல் துன்மார்க்கர்களை வருவித்து அவர்களோடு கூடிப் பழகியிருந்தானால், அந்தச் சமுசாரி அந்த வீட்டைவிட்டு வெளியாகு

வீட்டில் குடிவந்த காலத்திலும், அந்தத் துன்மார்க்கர்கள் இந்த வீட்டிலும் வந்து, அவனுடன் பழக்கஞ் செய்வார்கள். அதுபோல், ஒரு ஜீவன் முன் குடியிருந்த தேகத்தில், கடவுள் கட்டளைப்படி நடவாமல் துன்மார்க்கத்தால் பாப கர்மங்களை விரும்பிச் செய்திருந்தாலுல், அந்த ஜீவன் வேறொரு தேகத்தில் வந்தபோதும் அந்தப் பாப கர்மங்கள் இப்போது வந்த தேகத்திலும் வந்து அந்த ஜீவனைச் சேருமென்று அறியவேண்டும்.

மூன் பிறப்பில் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை விட்டுத் துன்மார்க்கத்தில் நடந்த ஜீவர்களை இந்தப் பிறப்பில் பசி, தாகம், பயம் முதலியவற்றால் துக்கப்படச் செய்வது கடவுள் அருளாக்கினை நியதி யென்றால், அந்த ஜீவர்கள் விஷயத்தில் காருண்யம் வைத்து ஆகாரம் முதலியவை கொடுத்து அவர்கள் துக்கத்தை மாற்றுவது கடவுள் அருளாக்கினைக்கு விரோதமாகாதோ? என்னில்:—

ஆகாது. அரசன் தன் கட்டளைக்கு முழுதும் விரோதித்து, கால்களுக்கு விலங்கிடப்பட்டுச் சிறைச்சாலையில் இருக்கின்ற பெரிய குற்றவாளிகளுக்கும் தன் சேவகர்களைக் கொண்டு ஆகாரங் கொடுப்பிக்கின்றான். அதுபோல், கடவுள் தன் கட்டளைக்கு முழுதும் விரோதித்துப் பல வகையால் பந்தஞ்செய்யப்பட்டு நரகத்திலிருக்கின்ற பாபிகளுக்கும் தம் பரிவார தேவர்களைக்கொண்டு ஆகாரங் கொடுப்பிக்கின்றார். அரசன் தன் கட்டளைப்படி நடவாமல் வேறுபட்ட சாதாரண குற்ற முடையவர்களைத் தன்னுலவர்கள் பெறத்தக்க லாபத்தைப் பெறவொட்டாமல் உத்தியோகத்தினின்றும் நீக்கி, அவர்களுக்கு நல்லறிவு வருவிக்கின்ற நிமித்தம் அவ்விடத்தை விட்டு வேறிடங்களில் வெளிப்படுத்துகின்றான். அவர்கள் உத்தியோக மிழந்தபடியால், சுக போஜன முதலிய போகங்களை யிழந்து, ஊர்ப்புறங்களிற்போய் ஆகாரம் முதலியவை குறித்து அலைந்து வருந்துகின்றபோது, தயவுள்ளவர்கள் கண்டு, ஆகார முதலியவை கொடுக்கின்றார்கள். அதை அரசன் கேட்ட காலத்திலும், கண்ட காலத்திலும், கொடுத்தவர்களை இரக்கமுள்ள நல்ல சமுசாரிகளென்று சந்தோஷித்து உபசரிக்கின்றானே யல்லது கோபிக்கவில்லை.

அதுபோல் கடவுள் தன் கட்டளைப்படி நடவாத சாதாரண குற்றமுடைய ஜீவர்களைத் தமது சத்தியால் அவர்கள் பெறத்தக்க சுகங்களைப் பெற வொட்டாமல் தாம் கொடுத்த சௌக்கிய புவன போகங்களை விடுவித்து, அந்த ஜீவர்களுக்கு நல்லறிவு வருவிக்கும் நிமித்தம் அந்தத் தேகத்தின்

றும் நீக்கி வேறொரு தேகத்தில் விடுக்கின்றார். அந்த ஜீவர்கள் சொக்கிய புவனபோகங்களை யிழந்தபடியால், சொக்கிய போஜன முதலியவற்றை யிழந்து வேறு வேறிடங்களில், ஆகார முதலியவை யில்லாமல் வருந்தும் போது, தயவுள்ளவர்கள் அந்த வருத்தத்தைக் கண்டு ஆகார முதலியவை கொடுத்தால், அப்படிக் கொடுத்தவர்களை நல்ல இரக்க முள்ளவர்கள், மேன் மேலுஞ் சுகத்தை யடையக் கடவர்களென்று, சந்தோஷித்து உபசரிப்பா ரல்லது கோபிக்கமாட்டார். ஆதலால், கடவுள் அருளாக்கினைக்கு ஜீவர் களிடத்து ஜீவர்கள் காருண்யம் வைப்பதே சம்மதமென்று உண்மையாக அறிய வேண்டும்.

இந்த ஜீவகாருண்யத்தால் இகலோக ஒழுக்கம் வழங்கு கின்றது. ஜீவகாருண்ய மில்லையாகில், இகலோக ஒழுக் கம் எவ்வளவும் வழங்கமாட்டாதென்று அறியவேண் டும். எப்படி? என்னில்:—

ஜீவகாருண்ய மில்லாதபோது,—அறிவும் அன்புந் தோன்று ; அவை தோன்றுதபோது, கண்ணோட்டமும் ஒருமையும், உபகாரமும், விளங் கா ; அவை விளங்காதபோது, வலிய ஜீவர்களால் எளிய ஜீவர்கள் ஒழுக்கம் : பொறுமை முதலானவைகளால் தடை பட்டழிந்துபோம். பின்பு, வலிய ஜீவர்கள் ஒழுக்கங்களும், தாமச ஒழுக்கங்களாகி ஒருவரொழுக்கத்தால் மற் றொருவரொழுக்கம் மதத்திறற் சோர்வடைந்து மாறுபட்டழிந்துபோம். ஜீவகாருண்ய ஒழுக்கஞ் சிறிதுமில்லாத புலி, சிங்கம் முதலிய மிருகங்கள் வழங்குகின்ற காட்டில் இகலோக ஒழுக்கம் வழங்கவேயில்லை. அதுபோல், ஜீவகாருண்ய மில்லாத மனிதர்கள் வழங்குமிடத்திலும் இகலோக ஒழுக்கம் வழங்கவே மாட்டாதென்று அறிய வேண்டும்.

பரலோக ஒழுக்கமுஞ் ஜீவகாருண்யத்தால் வழங்குகின் றது. அது இல்லையாயின் பரலோக ஒழுக்கமும் வழங்கமாட்டாது. எப்படி? என்னில்:—

ஜீவகாருண்யம் இல்லாதபோது அருள்விளக்கந் தோன்றுது. அது தோன்றுதபோது, கடவுள் நிலை கைகூடாது. அது கூடாதபோது, முத்தியின்பம் ஒருவரும் அடைய மாட்டார்கள். அடையாத பட்சத்தில், பரலோக ஒழுக்கம் வழங்கவே மாட்டாதென்று அறிய வேண்டும்.

17. ஜீவகாருண்ய ஒழுக்கம் மிகவும் வழங்காமையால், துன்மார்க்கப் பிறவியே பெருகி யெங்கும் புல்லொழுக்கங்களே வழங்குகின்றன. எப்படி? என்னில்:—

ஜீவகாருண்ய மில்லாத கடினசித்தர்களெல்லாம் அவரவர் கடினசெய்கைக்குத் தக்கபடி, சிலர் நரக வாசிகளாகவும், சிலர் சமூத்திர வாசிகளாகவும், சிலர் ஆரண்ய வாசிகளாகவும், சிலர் புலி, கரடி, சிங்கம், யாளி, யானை, கடமை, கடா, பன்றி, நாய், பூனை முதலிய துட்ட மிருகங்களாகவும், சிலர் பாம்பு, தேள் முதலிய விஷ ஜெந்துக்களாகவும், சிலர் முதலை, சுறு முதலிய கடின ஜெந்துக்களாகவும், சிலர் காக்கை, கழுகு முதலிய பக்ஷி சண்டாளங்களாகவும், சிலர் எட்டி, கள்ளி முதலிய அசுத்த தாபரங்களாகவும் பிறந்திருக்கின்றார்கள். ஆகலால், புல்லொழுக்கங்களே மிகவும் வழங்குகின்றனவென்றறிய வேண்டும்.

ஜீவகாருண்யம். கடவுளருளைப் பெறுவதற்கு முக்கிய சாதனமென்பது மல்லாமல், அதுவே அந்த அருளின் ஏகதேச விளக்கமென்றும், அறிய வேண்டும். ஜீவகாருண்யம் ஆன்மாக்களின் இயற்கை விளக்கம் ஆகலால், அந்த இயற்கை விளக்கமில்லாத ஜீவர்களுக்குக் கடவுள் விளக்கம் அகத்திலும் புறத்திலும் வெளிப்படவே மாட்டாது.

---

18. ஜீவகாருண்யத்திற்கு முக்கியமான லக்ஷியம் எது? என்னில்:—

ஆன்மாக்களெல்லாம் இயற்கை உண்மை ஏகதேசங்களாயும் இயற்கை விளக்கமாகிய **அருள்**, அறிவுக்கறிவாய் விளங்குதற்கு ஒற்றுமை உரிமை இடங்களாயும் இருக்கின்றனவென்றும், அந்த ஆன்மாக்கள் ஜீவர்களாகி அதிகரிப்பதற்குப் பூதகாரிய தேகங்களே உரிமையாக இருக்கின்றனவென்றும், அந்தத் தேகங்களில் ஆன்மாக்கள் ஜீவர்களாகி அதிகரியாவிடில் ஆன்ம விளக்கம் மறைபடுமென்றும், அதனல் அருள்விளக்கம் வெளிப்படாதென்றும், அப்போது மூடமுண்டாகுமென்றும், அதுவே ஆன்மாக்களுக்குப் பந்தமாகுமென்றும், அதுபற்றி அவசியம் பூதகாரிய தேகம் வேண்டுமென்றும், பூத காரிய தேகங்களுக்கு மாயை முதற்காரணமாதலால், அந்த மாயையின் விகற்ப ஜாலங்களாகிய பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம் கோலே என்பவைகளால் அந்தத் தேகங்களுக்கு அடிக்கடி அபாயங்கள் நேரிடுமென்றும், அப்படி அபாயங்கள் நேரிடாமல் கரணேந்திரிய சகாயங்களைப்

பெற்ற தம்மறிவைக்கொண்டு சர்வ ஜாக்கிரதையோடு முயற்சி செய்து தடுத்துக் கொள்வதற்குத் தக்க அல்ப சுதந்தரம் ஜீவர்களுக்கு அருளாற் கொடுக்கப்பட்டதென்றும், அந்தச் சுதந்தரத்தைக் கொண்டு ஜீவர்களெல்லாம் தேகங்களிலிருந்து அபாயங்களை நீக்கி ஆன்மலாபத்தைப் பெறுதற்கு முயற்சி செய்யக் கடவரென்றும், ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும், பசி, தாகம் பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை, என்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்துகொள்ளமாட்டாமல் வருந்துகின்ற ஜீவர்கள் விஷயத்தில் அவைகளை நிவர்த்தி செய்விக்கத்தக்க சுதந்தரமுள்ள ஜீவர்கள் காருண்யத்தால் நிவர்த்தி செய்விக்க வேண்டுமென்றும்;

[அபர ஜீவகாருண்யம்]

அப்படி நிவர்த்தி செய்விப்பதில் பசியினால் வருந் துன்பமுங் கொலையினால் வருந் துன்பமுந் தவிர மற்றவைகளால் வருந் துக்கங்களை மாற்றுவது அபரஜீவகாருண்ய மாதலால், இவ்வுலக இன்பத்தை மாத்திரம் சிறிதுண்டு பண்ணுமென்றும்;

[பர ஜீவ காருண்யம்]

பசியினால் வருந்துன்பத்தையும், கொலையினால் வருந்துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பது பரஜீவகாருண்யம். ஆதலால், இவ்வுலக இன்பங்களையும், அளவிறந்த சித்தியின்பங்களையும் எக்காலத்தும் அழியாத முத்தியின்பத்தையும், அருளாலடையப்படுமென்றும்; ஊழ்வகையாலும், அஜாக்கிரதையாலும் அன்னிய ஜீவர்களுக்கு நேரிடுகிற அபாயங்களை நிவர்த்தி செய்விப்பதற்குத் தக்க சுதந்தரமும், அறிவு மிருந்தும், அவ்வாறு செய்யாமல் வஞ்சித்தவர்களுக்கு, இவ்வுலக இன்பத்தோடு மோக்ஷ இன்பத்தை யனுபவிக்கின்ற சுதந்தரம் அருளாலடையப்படுவதில்லை யென்றும்; தற்காலத்தில் அனுபவிக்கின்ற புவனபோக சுதந்தரங்களையும் இழந்துவிடுவரென்றும் கடவுள் வேதத்தில் விதித்திருக்கின்றபடியால்; ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும் பசி, கொலை யென்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்திசெய்துகொள்ளத்தக்க அறிவும் சுதந்தரமுமில்லாத ஜீவர்கள் விஷயத்தில் அவைகளை நிவர்த்தி செய்விக்கத்தக்க அறிவும் சுதந்தரமுமுள்ள ஜீவர்கள், வஞ்சியாமல் தயவினால் நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யத்திற்கு முக்கியமான லட்சியமென்றும்; அதில் சத்தியமாக நம்பிக்கைவைத்துப் பசித்த ஜீவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்கியும், கொலைப்படும் ஜீவர்களுக்குச் செய்வகையால் கொலை நீக்கியும், திருப்தி இன்பத்தையுண்டு பண்ணுவதே மேலான பிரயோசனமென்றும் அறியவேண்டும்.

19. பசி, கொலை, பிணி, தாகம், எளிமை, பயம், இச்சை யென்ப வைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்விப்பது விதியாக இருக்கவும், இவ்விடத்துப் பசியினாலும் கொலையினாலும் வரும் அபாயங்களைமாத்திரம் நிவர்த்தி செய்விப்பது விசேஷமென்று குறித்தது என்? என்றறிய வேண்டில்:—

ஜீவகாருண்ய ஒழுக்கத்தில், அபாஜீவகாருண்ய மென்றும், பரஜீவகாருண்யமென்றும் இருவகையாம். அவற்றில் பசி நீக்கலும் கொலை நீக்கலும் பரஜீவகாருண்ய மாதலால் விசேஷமாகக் குறிக்கப்பட்டதென்றறிய வேண்டும்.

[தாகம்]

அன்றியும், பசியினால் வருந்துகின்ற ஜீவர்களுக்குப் பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுடையவர்கள், தாகம் நீங்குதற்குத் தண்ணீர் கொடாமலிராக்கள். தண்ணீர் யொடுப்பது பிரயாசமுமல்ல. தண்ணீர், வரி, குளம், கால்வாய் முதலான இடத்தினிருக்கின்றது. தாகத்தால், மாற்றிக்கொள்ளத் தக்க ஏகதேச அபாயம் நேரிடுமேயல்லது, அதனால் தேகத்திற்கு ஆனி நேரிடாது: பசியினால், மாற்றிக்கொள்ளக்கூடாத விகடுதி தேகத்திற்கு நேரிடும்.

[பிணி]

பசியினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்விக்கத் தக்க தயவுடையவருக்குப் பிணியினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதற்குத் தயவுண்டாகாமலிராது. பசி மிகுதியினாலேயே பிணிகள் விருத்தியாகின்றன. ஆகாரப் பக்குவங்களாலேயே அப்பிணிகள் நீங்குகின்றன. பிணிக்கு வேறு மருந்து கொடுப்பினும், பத்திய ஆகாரமே தேகம் நிற்பதற்கு அவசியமான ஆதாரமாயிருக்கின்றது. பிணியோடு தேகத்தை நெடுநாள் வைத்திருக்கக் கூடும்: ஒருநாளாகிலும் ஆகாரமில்லாமல் தேகத்தை வைத்திருக்கக்கூடாது.

[இச்சை]

பசித்தவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்குவிக்கின்ற தயவுடையவர்களுக்கு இச்சையால் வரும் துன்பங்களை நீக்குவிப்பதற்குத் தயவு வராம

லிராது. ஜீவர்களுக்கு உள்ளபடி பசி நேரிடுமாகில் ஆகாரத்திலல்லது மற்றொன்றிலும் இச்சையே யிராது. ஆகாரங் கிடைக்கில் உண்டு பசிதீர்ந்தவர் தம் இச்சையைச் சிறிய முயற்சிகளால் முடித்துக் கொள்ளவுங் கூடும்; அல்லது சமாதானஞ் செய்து கொள்ளவுங் கூடும். இச்சையோடு பலநாள் தேகத்தை வைத்திருக்கலாம்: பசியோடு ஒருநாளும் வைத்திருக்க முடியாது.

[எளிமை]

பசித்த ஜீவர்களுக்கு ஆகாரத்தால் பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுள்ளவர்களுக்குச் சுதந்தரமற்ற ஜீவர்களது எளிமையை நீக்கத் தயவு வராமலிராது. பசியினால் வருந்துகின்ற எளிமைக்கு மேற்பட்ட எளிமையே இல்லை. எளிமையைச் சிலநாள் சென்று மாற்றிக் கொள்ளக்கூடும்: பசியை அவ்வாறு மாற்றிக்கொள்ளக் கூடாது. எளிமையோடு தேகத்தை வைத்திருக்கக்கூடும்: பசியோடு வைத்திருக்க முடியாது.

[பயம்]

பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுடையவருக்குப் பயத்தை நிவர்த்தி செய்விப்பதில் தயவு வராமலிராது. பசியினால் வரும் பயத்திற்கும் கொலையினால் வரும் பயத்திற்கும் மேற்பட்ட பயமேயில்லை. பயத்தை உபாயத்தால் நீக்கிக் கொள்ளக்கூடும்: பசியை உபாயத்தால் நீக்கிக்கொள்ளக் கூடாது. பயத்தோடு தேகத்தை வைத்திருக்கலாம்: பசியோடு வைத்திருக்கப்படாது. பசியினால் வரும் அவத்தைகளுந் துன்பங்களும், கொலையினால் வரும் அவத்தைகளுந் துன்பங்களும் தம்முள் ஒத்திருக்கின்றன. ஆகலால், பசியினால் வருந் துன்பத்தையும், கொலையினால் வருந் துன்பத்தையும், நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யத்திற்கு முக்கிய லட்சியமென்றறிய வேண்டும்.

---

20. பசியினால்வருந் துன்பத்தை நீக்குதலும் கொலையினால் வருந் துன்பத்தை நீக்குதலும் ஜீவகாருண்யத்திற்கு முக்கிய லக்ஷியமாக இருக்கவும், இவ்விடத்தில் பசிநீக்குதலே மாத்திரம் அடிக்கடி வலியுறுத்துவது என்? எனில்:—

ஒரு ஜீவன், பசியினால் கொல்லப்படு மென்பதை யறிந்து காருண்யத்தால் பசியை நீக்கி உயிர்பிழைக்கும்படி செய்பவர், வேறு வகையால்

உயிர்க்கொலை நேரிட்டால் அதற்கிரங்கி அந்தக்கொலையால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்யாமலிராார்கள். கொலையால் வருந்துன்பத்தை நிவர்த்திசெய்வி யாதவர்கள், பசியால் வருந் துன்பத்தையும் நிவர்த்திசெய்விக்கத் தக்க தய வுடையவர்க ளாகார்கள். பசியால் வருங் கொலையை ஆகாரத்தாலன்றி வேறு வகையால் நிவர்த்தி செய்விக்கப்படாது ; பகை மூதலியவற்றால் வருங்கொலை யை, அனேக உபாயத்தால் நிவர்த்திசெய்விக்கக் கூடுமாதலால், கொலையால் வருந் துன்பத்தைப் பசியால் வருந்துன்பத்தி லடைத்து அடிக்கடி வலி யுறுத்துகின்றதென் றறிய வேண்டும்.

அன்றியும், தாகத்தால் வருந்துகின்றவரும்,—பிணியால் வருந்து கின்றவரும்,—இச்சையால் வருந்துகின்றவரும்,—எளிமையால்வருந்துகின்ற வரும்,—பயத்தால் வருந்துகின்றவரும்,—பசிவருத்த முண்டாகும்போது அவ்வவ் வருத்தங்களை யெல்லாம் மறந்து பசிவருத்தம் மேற்பட்டு, ஆகாரந் தேட முயற்சி செய்கின்றார்கள்.

அன்றி, அரசன் ஆக்கினையால், கொலைக்குற்றம் பற்றிக் கொலை செய்ய விதிக்கப்பட்ட குற்றவாளியும், பசிவந்தபோது தன் பயத்தையுந் துன்பத்தையும் மறந்து அந்தப் பசியை மாற்றிக்கொள்ள முயலுகிறான்.

வயித்தியரால் தாம் இறந்துவிடுவது நிச்சயமென்று தெரிந்து கொண்ட வியாதியாளரும் மூப்பாளரும் பசி வந்தபோது, தமது துன்பத்தை மறந்து, பசிநீக்க முயலுகின்றார்கள்.

பசிக்குத் தயவினால் ஆகாரங் கொடுக்கத் துணிந்தவன் வேறுவகை யால் ஜீவர்கள் இம்சைப்பட்டழிவதற்குச் சம்மதிக்கவே மாட்டான் ; ஆக லானும் பசியால் வருந் துன்பத்தை நிவர்த்திசெய்விக்கிற தருமத்தை அடிக் கடி வலியுறுத்துவ தென்றறியவேண்டும்.

21. பசியினால் வருங் கெடுதி எல்லா ஜீவர்களுக்குந் தேக நா சஞ் செய்வது உண்மையானால், எல்லா ஜீவர்கள் பசியையு மறிந்து நிவர்த்தி செய்விக்க வேண்டும் ; அப்படி நிவர் த்தி செய்விக்கத் தொடங்கில் கடவுளால் சிருஷ்டிக்கப் பட்ட தேவர், மனிதர், நரகர், மிருகம், பறவை, ஊர்வன, தாபரம், என்கிற இவ் வெழுவகைப்பட்ட ஆளவிறந்த

பேதங்களுடைய ஜீவர்களது பசியை யறிந்து நீக்குவது அசாத்தியமாகுமே ? என்னில் :—

தேவர்கள்,—மனித சுதந்தரத்திலும் மேற்பட்ட சுதந்தர முடைய வர்களாய்த், தங்களுக்கு நேரிட்ட பசியைத் தங்கள் முயற்சியினாலேயே, மாற்றிக்கொள்ளத்தக்க வல்லப முடையவர்க ளாதலால், அவர்கள் பசியைக் குறித்து மற்றவர், யோசிப்பது அவசியமல்ல வென்றும், தேவர்களுக்கும் பசி நேர்ந்தால் துன்பமுண்டாகுமே யென்று இரங்குவது மாத்திரம் அவசிய மென்றும் ;

நரகர்,— நாம் பசியாற்றுவிக்கத்தக்க இடங்களில் இல்லாமல் வைரி டங்களி லிருக்கின்றபடியாலும், நரகர் பசிக்குத் தண்டனைப் பரிவாரங்களால் பசி யாற்றுவித்தலாலும், அந்நரகர் பசியைக் குறித்து யோசிப்பது அவசிய மல்ல வென்றும், அந்நரகரும் பசிநேரிடில் வருந்துவார்களே யென்று இரங்குவது மாத்திரம் அவசியமென்றும் ;

உழ்வகையிலுள் சிறிதுஞ் சுதந்தரமில்லாத, மரம் புல் முதலிய தாபரங்களில், மனிதர் தங்கள் வாழ்க்கைக்குச், சகாயமாகத் தங்கள் முயற்சி யால் விளைவிக்கின்ற தாபர வர்க்கங்களுக்குப் பசி குறித்து நீர் விடுவது அவசியமென்றும், மற்றைத் தாபரவர்க்கங்களெல்லாம் அருள் நியதியின்படி ஆகாரங்கொடுப்பிக்க உயிர்த்திருக்கின்றனவாதலாலும், அவைகளுக்கெல்லாம் பசியறிந்து ஆகாரங் கொடுப்பது, நமது சுதந்தரமல்ல, கடவுள் சுதந்தர மென்றும், அவை குறித்து யோசிப்பது அவசியமல்ல வென்றும், ஆகாரமில்லா விடில் வருந்துமே யென்று இரங்குதல் மாத்திரம் அவசியமென்றும் ;

நிலத்திலும் நீரிலும் ஊருகின்ற உயிர்களுக்கும், பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் அவ்வவற்றின் ஊழ்வகைக்குத் தக்கபடி அருள் நியதி ஆகா ரங் கொடுப்பிக்க உண்டு பசியாறுகின்றனவென்றும், அவ்வவைகளுக்குத் தக்க ஆகாரம் அறிந்து கொடுப்பது நமது சுதந்தரமல்ல கடவுள் சுதந்தரமென்றும், அவைகளில் மனிதர் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் சுதந்தரத்தால் ஏற் பாதித்துக்கொள்ளுகின்ற பசு, எருது, எருமை, கடா, ஆடு, குதிரை முதலிய சிலமிருகங்களுக்கு ஆகாரங்கொடுத்துப் பசியாற்றுதல் அவசியமென்றும் ;

மனிதர்களில், ஆண்மக்கள் பெண்மக்கள் என்றிருவகைப்பட்ட எல்லா மனிதர்களுக்கும், பசியால் வரும் நஷ்டங்களும், துன்பங்களும், பசி நிவர்த்தியால் வரும் லாபங்களும், இன்பங்களும், பொதுவில் ஒரு தன்மையா யிருத்தலாலும், பசியால் வரும் நஷ்டங்களையுந்

துன்பங்களையும் மன முதலான அந்தக்கரண விருத்தியினாலும், கண் முதலான இந்திரியங்களாலும், மிகவும் அறிந்துகொள்கின்ற ஆன்ம அறிவு ஒத்திருத்தலாலும், மனிதர்களுக்கு ஊழ்வகையினால் அருள் நியதியின்படி கொடுப்பிக்கின்ற ஆகாரமட்டில் ஜீவித்துத் தேகத்தை வைத்திருக்கக் கூடாமையாலும், தங்கள் முயற்சியாலும் அறிவாலும் சுதந்தரத்தாலும் சம்பாதிக்கின்ற, ஆகாமிய ஆகாரத்தாலும், பசி நீக்கித் தேகத்தை வைத்திருக்க வேண்டுமாதலாலும், ஆகாமியத்தால் சம்பாதிக்கின்ற ஜீவசுதந்தரம் மனிதர்களுக்கு அருளால் மிகவுங் கொடுக்கப்பட்டபடியாலும், ஊழ்வகையால் ஆகாரம் நேரிடாமல் பசித்து வருந்தும்படியாகவும், அந்தப் பசியை நீக்குநிமித்தம் ஒருவரை யொருவர் எதிர்பார்க்கும்படியாகவும், அவர் தயவினால் ஆகாரங் கொடுத்து அப்பசியை நீக்கி அவரை நன்முயற்சியிற் செலுத்தவும், ஆகாரங் கொடுத்தவர் சித்திமுத்திகளை யடையவும், அருள் நியதியாக விதிக்கப்பட்டபடியாலும்;

மனிததேகம் மற்ற ஜீவதேகம்போல இலேசிலே எடுக்கக் கூடாததாகலாலும்,—மனித தேகத்தில் ஆன்மவிளக்கமும் அருள் விளக்கமும், மிகவும் விளங்குதலாலும்,—இந்த மனித தேகம் போலல் மீளவும் இந்தத் தேகம் வருமென்கிற நிச்சயமில்லாமையாலும், இந்த மனிததேகம் முத்தியின்பம் பெறுதற்கே எடுத்த தேகமாதலாலும், இந்த மனிததேக மாத்திரமேமுதற் சிருஷ்டிதொடங்கிக் கடவுள்சங்கற்பத்தால் சிருஷ்டிக்கப்பட்ட உயர்ந்த அறிவையுடைய தேகமாதலாலும், மனிதர்கள் மாத்திரம் பசியாற்று விக்கின்ற ஜீவகாருண்ய விதியைப் பொதுவில் அவசியம் உறுதியாகப் பிடிக்க வேண்டுமென்றும்,—கடவுள் விதித்திருக்கின்றபடியால், பசியை ஆகாரத்தினால் நிவர்த்தி செய்விக்கின்ற ஜீவகாருண்ய ஒழுக்கம் மனிதர்களிடத்தே பெரும்பான்மை நடத்த வேண்டுமென்று அறியவேண்டும்.

22. ஊழ்வகைக்குத் தக்கபடி மிருகம் பறவை முதலிய ஜீவர்களுக்கு, அருளால் நியதி ஆகாரமாத்திரம் இருக்க மனிதர்களுக்கு மாத்திரம் ஊழ் நியதி ஆகாரத்தோடு ஆகாமிய முயற்சி ஆகாரமும் வேண்டுவது அவசியமென்றது எப்படி? என்னில்:—

மனிதர்கள் பிராரத்தப்படி நியதியாகாரத்தைப் புசித்துப் பிராரத்த அனுபவத்தை நீக்கிக்கொண்டு, ஆகாமியத்தால் முயற்சியாகாரத்தைப் புசித்துக் காணேந்திரிய தேகத்தை வலுவுள்ளதாகச் செய்துகொண்டு, சன்மார்க்க சாதனத்தை அனுசரித்துச் சித்தி முத்தி இன்பங்களைப் பெறக்கடவரென்று கடவுள் விதித்திருக்கின்றபடியால், மனிதர்களுக்குப் பிராரத்த ஆகாரமும் ஆகாமிய முயற்சி ஆகாரமும், அவசியம் வேண்டுமென்று அறியவேண்டும். மிருகம், பட்சி, ஊர்வன, தாபரம், என்கிற ஜீவதேகங்கள் தண்டனை நிமித்தம் விதித்த தேகங்களாதலால், பிராரத்த ஆகாரம் கடவுள் விதித்த வண்ணம் அருட்சத்தியால் தடைபடாமல் கொடுக்கப்படுமாகலில், ஆகாமிய ஆகாரம் சம்பாதிக்க வேண்டாமென்று அறியவேண்டும்.

23. ஆனால் ஜீவகாருண்யம் எல்லா ஜீவர்களுக்கும் பொதுவென்று முதலில் குறிக்கப்பட்டது என்னை? எனில்:—

ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் முக்கியமாக எல்லா மனிதர்களுக்கும் பொதுவில் பசியினால் வருந்துன்பத்தை நிவர்த்திசெய்து ஆகாரத்தினால் திருப்தி இன்பத்தை உண்டுபண்ண வேண்டுமென்றும்,—பசியைப்போல் வேறுவகையினால் ஜீவகொலை நேரிடுவதானால் அந்த ஜீவகொலையைத் தம்மாற் கூடிய வரையில் எவ்விதத்திலாயினும் தடைசெய்து உயிர்பெறுவித்துச் சந்தோஷிப்பிக்க வேண்டுமென்றும்,—பிணி, பயம் முதலிய மற்ற எதுக்களால் ஜீவர்களுக்குத் துன்பம் நேரிடில் அத்துன்பங்கள் தங்களால் நீக்கத் தக்கவைகளாகில் நீக்கவேண்டுமென்றும்,—மிருகம், பறவை, ஊர்வன தாபரம் முதலிய ஜீவர்களிடத்துப் பயத்தினால் வருந் துன்பத்தையும் கோலையினால் வருந் துன்பத்தையும் எவ்விதத்தும் நிவர்த்திசெய்ய வேண்டுமென்றும்,—அவற்றுள் துட்ட ஜீவர்களிடத்தும், சிறிது பயத்தினால் வருந் துன்பமாத்திரமே யல்லது கோலையினால் வருந் துன்பங்களைச் செய்யப்படாதென்றும்,—இவ்வகை முழுதும் ஜீவகாருண்யமே யாதலால், எல்லா உயிர்களிடத்தும் ஜீவகாருண்யம் வேண்டுமென்ற கடவுளால் ஆணை செய்ததென் றறியவேண்டும்.

24. மனிதர்கள், தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகச் சம்பாதிக்கின்ற உயிர்களில் சில உயிர்கள், தாமச ஆகாரமாகியமாமிச ஆகாரஞ் செய்வதானால், அவைகளுக்குப் பசியாற்றுவிக்கும்போது அந்த ஆகாரத்தைக் கொடுத்து ஆற்றுவிக்கப் படாதோ? என்னில்:—

ஒரு ஜீவனைக் கொன்று ஒரு ஜீவனுக்கு மாமிசத்தால் பசியாற்றுதல் ஜீவகாருண்ய ஒழுக்கமே யல்ல வென்றும்,—கடவுள் சம்மதமும் அல்ல வென்றும்,—இவைகட்கு முழுவிரோதமென்றும்,—அறியவேண்டும். எல்லா ஜீவர்களும் இயற்கை புண்மை ஏக தேசங்களாகிக் கடவுள் இயற்கை விளக்கமாகிய அருளுக்கு இடமாக இருக்கின்றபடியாலும்,—கடவுள் இயற்கை விளக்கம் மறைபடும்போது ஜீவத்தன்மை இல்லாதபடியாலும்,—கடவுளியற்கை விளக்கமும், ஜீவனியற்கை விளக்கமும், ஒன்றோடொன்று மாறுபடாதாகலாலும்,—கடவுளியற்கை விளக்கமும், ஜீவன் இயற்கை விளக்கமும், அந்தந்தத் தேகங்களினும், விளங்குகின்ற படியாலும்,—ஒரு ஜீவனை வதைத்து அதனல் மற்றொரு ஜீவனுக்குப் பசியாற்றுதல் ஜீவகாருண்ய வொழுக்கத்திற்கு முழுவிரோத மென்றே அறிய வேண்டும்.

---

25. புலி, சிங்கம் முதலிய மிருகங்கள் மற்றொரு ஜீவனைக்கொன்று தாமச ஆகாரத்தால் பசியாற்றித் திருப்தி யின்பத்தை யடைந்து சந்தோஷிக்கின்றன: அந்தச் சந்தோஷம் கடவுளியற்கை விளக்க ஏகதேசமும் ஜீவன் இயற்கை விளக்க நிறைவும் எனவுங் கொள்ளக் கூடாதோ? என்னில்:—

கூடாது. தாமச ஆகாரத்தால் பூரணசத்துவமாகிய கடவுளியற்கை விளக்க ஏகதேசமும் ஏகதேச சத்துவமாகிய ஆன்ம இயற்கை விளக்கமும் விளங்காது, இருளால் ஒளி விளங்காதது போல்.

---

26. இதைத் தாமச ஆகாரமென்பது என்னை? எனில்:—

கடவுள் விளக்கம் வெளிப்படாதபடி ஆன்ம விளக்கத்தை மறைத்த இம்சை ஆகாரத்தால் தாமச ஆகாரமாயிற்று.

27. இந்த ஆகாரத்தால் வந்த திருப்தி பின்பமாகிய சந்தோஷ விளக்கம் எதனுடைய விளக்கம்? என்னில் :—

அநாதி பசு கரண மாயா விளக்கம் என்று அறிய வேண்டும்.

28. பசு என்பது என்ன?

ஆணவம் மாயை கன்மம் என்கிற மும்மல பந்தத்தால் மூன்று பட்டு அறிவிழந்த ஆன்மாவையே பசுவென்பது.

29. அப் பசுவிற்கு விளக்கந் தோன்றுவது எப்படி? என்னில் :—

சூரியனை மறைத்த மேகவண்ணத்திலுள்ள இருளினிடத்தும் சூரியப் பிரகாச விசேஷந்தோன்றுதலால் அவ்விருளும் விளக்கமாக வழங்குகின்றது. அதுபோல், அசுத்த மாயா கரணங்களுந் தாமசகுணமும் இருள் வண்ணமுடையவாயினும், தம்மால் மறைக்கப்பட்ட பரஜீவ விளக்க விசேஷத்தால், அசுத்த மாயாகரணமும், தாமசகுணமும் விளக்கமாக வழங்குகின்றன. இதனால், தாமச ஆகாரத்தில் வரும் விளக்கம் அசுத்த மாயாகரண விளக்கமே யென்று அறியவேண்டும்.

30. ஆனால், மரம், புல், நெல் முதலான தாபரங்களும் உயிராகவே சொல்லப்படுகின்றனவே, அவைகளை இம்சை செய்து ஆகாரமாகக் கொண்டால் அவை தாமச ஆகாரமல்லவோ? அதனால் வந்த சந்தோஷம் அசுத்த மாயாகரண சந்தோஷமல்லவோ? என்னில் :—

மரம், புல், நெல் முதலான தாபரங்களும் உயிர்கள் தான். அவைகளை இம்சைசெய்து ஆகாரங்கொண்டால் அது ஏகதேச தாமச ஆகாரந்தான்; அந்த ஆகாரத்தால் வந்த சந்தோஷமும் அசுத்தகரண சந்தோஷந்தான். ஆனாலும் அப்படியல்ல.

மரம், புல், நெல் முதலான ஜீவர்கள் பரிசமென்கிற ஓரறிவையுடைய ஜீவர்களாதலாலும்,—அவ்வுடம்பில் ஜீவ விளக்கம் ஒருசார் விளங்குத

லாலும்,—அவ்வுயிர்கள் தோன்றும் வித்துக்களும், மற்ற வித்துக்கள்போல் சடமாதலாலும்,—அவ்வித்துக்களை நாமே விதைத்து உயிர்விளைவு செய்யக் கூடுமாதலாலும்,—அவ்வுயிர்களை வேறு செய்யாமல், அவ்வுயிர்களினிடத்து உயிரில்லாமல், உயிர்தோன்றற் கிடமான சடங்களாகத் தோன்றிய வித்துக்களையும், காய்களையும், கனிகளையும், பூக்களையும், கிழங்குகளையும், தழைகளையும், ஆகாரங்களாகக் கொள்வதேயன்றி அவ்வுயிருள்ள முதல்களை ஆகாரமாகக் கொள்ளாதபடியாலும்,—அவைகளில் வித்து, காய், கனி, முதலானவை கொள்ளும்போது—சுக்கிலம், நகம், ரோமம் முதலியவைகளை வாங்கும் போது, இம்சை உண்டாகாமைபோல், இம்சை உண்டாகாதபடியாலும்,—தாபரவர்க்கங்களுக்கு, மன முதலான அந்தக்காரணங்கள் விருத்தியில்லாதபடியாலும்,—அது உயிர்க்கோலையுமல்ல ; துன்பமுண்டு பண்ணுவதுமல்ல ; அதனல், அது ஜீவகாருண்ய விரோதமாகாது : அந்த ஆகாரத்தால் வந்த சந்தோஷமும் ஜீவவிளக்க சகிதமான கடவுள் விளக்கமே யாகுமென்று அறிய வேண்டும்.

31. மரம் முதலிய தாபரங்களில் தோன்றிய வித்துக்களை இனி உயிரேறுதற் கிடமாகிய சடங்களென்பது எப்படி? என்னில் :—

வித்துக்களில் ஜீவனிருந்தால் நிலத்தில் விதையாமுன்னமே விளைய வேண்டும் : நிலத்தில் விதைத்த காலத்தும், சில வித்துக்கள் விளையாமலே யிருக்கின்றன. அன்றியும் வித்தென்பது காரணம். இந்தக் காரணம் உடம்பு தோன்றுதற்கே யென்று சிறு பிள்ளைகளாலும் அறியப்படும். அன்றி, உயிர் நித்தியம், உடம்பு அநித்தியம் : நித்தியமான உயிர் காரணம் வேண்டாது : அநித்தியமாகிய உடம்பே காரணம் வேண்டும். ஆகலில் வித்துக்களைச் சடமென்று அறிய வேண்டும்.

32. ஆனல், வித்துக்களினிடத்து ஆன்மாக்கள் ஏறுவது எப்படி? என்னில்:—

நிலத்திற் கலந்த வித்திற்கு நீர் விடில் அந்த நீரின் வழியாகக் கடவுள் அருள் நியதியின்படி ஆன்மாக்கள் அணுத்தேகத்தோடு கூடி நிலத்திற் சென்று அந்நிலத்தின் பக்குவ சத்தியோடு கலந்து வித்துக்களினிடமாகச் செல்கின்றன வென்று அறிய வேண்டும்.

33. மூலைகளையே பிடுங்கப்படா தென்று சிலர் சொல்லுகின்றார்கள்; வித்து, காய், இலை முதலியவைகளைப் புசிக்கலாமென்று சொல்வது எப்படி? என்னில் :—

வித்து நிலத்திற் படிந்தபின் நீர்வழியாக ஆன்மாவானது சென்று பக்குவ சத்தியிற் கலந்து வித்திலேறி மூளத்தபடியால், மூளையானது வித்து காய் முதலியவைகளைப் போலச் சடமல்ல. ஆகலால், மூலைகளைப் பிடுங்கப் படா தென்பது உண்மை யென்றறிய வேண்டும்.

[தாவர ஆகாரம்]

34. வித்து, காய், கனி முதலியவற்றில் உயிர்க்கொலை இல்லாவிடினும், நகம், ரோமம், சுக்கிலம் முதலியவற்றிலிருக்கிற அசுத்தமாவதில்லையோ? என்னில் :—

தத்துவ விருத்தியும் தாதுவிருத்தியும் இல்லாதபடியால் அசுத்தமுமில்லை.

ஆகலில், மரம், புல், நெல் முதலியவைகளின் வித்து, காய், கனி, தழை முதலியவற்றைப் புசிப்பது ஜீவகாருண்ய விரோதமல்ல வென்றறிய வேண்டும்.

[மாமிச ஆகாரம் நியதியல்ல]

35. மாமிச, ஆகாரம் புலி முதலாகிய துட்டமிருகங்களுக்கு நியதியாகாரமல்லவோ? என்றறிய வேண்டில் :—

அது அவ்வுயிர்களுக்குச் சிருஷ்டி நியதி ஆகாரமல்ல : பரம் பரை வழக்கத்தாற்பெற்ற ஆகாரமாமென்றறியவேண்டும். ஆகலில், அதை நிவர்த்தி செய்வித்துச் சுத்துவ ஆகாரங்களைப் புசிப்பிக்கும்படி செய்யலாங் கூடும் : ஒரு சிலமுடையவன் கிரகத்தில் வழங்குகின்ற பூனைக்கும், நாய்க்கும் வேறிடங்களிற் போய் அசுத்த ஆகாரங் கொள்ளாமல் காவல்செய்து அடிநாள்தொடங்கிச் சுத்த ஆகார வழக்கமே செய்விக்கின்றான் ; அவைகள் அவைகளைப்புசித்து உயிர் வழங்கிவருகின்றன. அப்படியே புலி, சிங்கம் முதலிய துட்ட வர்க்கங்களையும் மேல்நின்று சுத்த ஆகாரத்தில் பழக்குவாரில்

லாமையால் அசுத்த ஆகாரங்களைப் பழக்கத்தாற் புசிக்கின்றன வென்று அறியலாம்.

ஆகலில், ஒரு ஜீவனைக் கொன்று மற்றொரு ஜீவனுக்குப் பசியாற்றுவித்தல் கடவுளருளுக்குச் சம்மதமுமல்ல, ஜீவகாருண்ய ஒழுக்கமு மல்ல வென்று சத்தியமாக அறிய வேண்டும்.

இந்த ஜீவகாருண்ய மென்கிற சாதனத்தில் சாத்தியமாகின்ற இன்பம், அபர இன்பமென்றும், பர இன்பமென்றும் இருவகைப்படும்.

[அபர இன்பம்]

இச்சை முதலியவைகளைப்பற்றி உண்டாகின்ற துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வருமின்பம் அபர இன்பமாகும். அவை இம்மையில் அனுபவிக்கின்ற இன்பங்களில் சிலவென் றறியவேண்டும்.

---

36. அவை எவை? என்னில் :—

உடுப்பதற்கு வஸ்திரமில்லாமலும்,—இருப்பதற்கு இடமில்லாமலும்,—உழுவதற்கு நிலமில்லாமலும்,—பொருந்துவதற்கு மனைவியில்லாமலும்,—விரும்பியபடி செய்வதற்குப் பொருள் முதலிய வேறு வேறு கருவிகளில்லாமலும்,—துன்பப்படுகின்ற ஜீவர்கள் விஷயத்தில் ஜீவகாருண்யந் தோன்றி, உடுப்பதற்கு வஸ்திரம், இருப்பதற்கு இடம், உழுவதற்கு நிலம், பொருந்துவதற்குப் பெண், விரும்பியபடி செய்வதற்குப் பொருள் முதலானவை கொடுத்த போது, பெற்றுக் கொண்டவர்களுக்கு உள்ளிருந்து முகத்தினிடமாகத் தோன்றுகின்ற இன்ப விளக்கமும், அந்த இன்பத்தைக்கண்டுகொடுத்தவர்களுக்கு உண்டாகின்ற இன்ப விளக்கமும் கடவுள் காரணத்தில் ஏகதேசமும் ஜீவகாரணத்திற் பூரணமுமாகத் தோன்றுகின்றவையாகலால்—அது அபரஇன்ப மென்று அறியவேண்டும்.

[பர இன்பம்]

பசியினால் வருந் துன்பத்தை நிவர்த்திசெய்விப்பதில் வருமின்பம் பரஇன்பமாகும். அவை இம்மையில் போக சித்திகளாலும், யோகசித்திகளாலும், ஞானசித்திகளாலும் வருகின்ற இன்பங்களும்,—முடிவில் அனுபவிக்கப்படும் மோட்ச இன்பமும் ஆகுமென்றறிய வேண்டும். உண்பதற்கு ஆகார

மில்லாமல் சோர்வடைந்த ஜீவர்களுக்கு ஜீவகாருண்யத்தால் ஆகாரங்கொடுக்க, உண்டு பசிநீங்கிய தருணத்தில், அந்த ஜீவர்களுக்கு அகத்தினிடத்தும் முகத்தினிடத்தும் தழைந்துபொங்கித்ததும்புகின்ற இன்பமும், அது கண்டபோது கொடுத்தவர்களுக்கு அகத்திலும் முகத்திலும் அவ்வாறுண்டாகின்ற இன்பமும், ஆன்ம சகிதமாகிய கடவுள் காரணத்திற் பூரணமாகத் தோன்றுகின்றவை யாகலால்,—பர இன்பமென்று அறியவேண்டும்.

[பசியின் சகியாமை]

வஸ்திரம், இடம், நிலம், பெண், பொருள் முதலானவைகளில்லாமல் துன்பப்படுகின்றவர்கள், அத்துன்பங்களை மனவெழுச்சியால் சகித்துக் கொண்டு உயிர்தரித்துத் தங்களாற் செய்யக்கூடிய முயற்சியைச் செய்யக் கூடும்,—பசியினால் துன்பம் நேரிட்டபோது மனவெழுச்சியால் அத்துன்பத்தைச் சகித்துக்கொள்ளக்கூடாது. சகிக்கத்தொடங்கில் உயிரிழந்துவிடுவார்கள். பசி நேரிட்டபோது,—பெற்றவர்கள் பிள்ளைகளை விற்றும்,—பிள்ளைகள் பெற்றவர்களை விற்றும்,—மனைவியைப் புருடன் விற்றும்,—புருடனை மனைவி விற்றும்,—அந்தப் பசியினால் வருந்துன்பத்தை மாற்றிக்கொள்ளத் துணிவார்களென்றால், அன்னியமாகிய வீடு, மாடு, நிலம், உடைமை முதலியவைகளை விற்றுப் பசியை நீக்கிக்கொள்வார்களென்பது சொல்லவேண்டுவதில்லை. உலகமுழுதும் ஆளுகின்ற சக்கரவர்த்தியாகிய அரசனும் பசிநேரிட்டபோது,—தனது அதிகார வுயர்ச்சி முழுதும் விட்டுத் தாழ்ந்த வார்த்தைகளால் 'பசி நேரிட்டது: என்னசெய்வது'என்று அருகிலிருக்கின்ற அமைச்சர்களிடத்துக் குறைசொல்லுகிறான். பகைவரால் எறியப்பட்டு மார்பிலுருவிய பாணத்தையுங் கையாற் பிடித்துக்கொண்டு, எதிரிட்ட பகைவரையெல்லாம், அஞ்சாது ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க சுத்தவீரரும் பசி நேரிட்டபோது,—சௌரியத்தையிழந்து பசிக்கஞ்சிப் பக்கத்தில் நிற்கின்றவரைப்பார்த்து 'இளைப்பு வருமே! சண்டை எப்படிச்செய்வது!' என்று முறையிடுகின்றார்கள். இவ்வுலக போகங்களோடு இந்திரபோக முதலிய போகங்களையும், தூருப்பாகவெறுத்து, முற்றுந்துறந்து அறிவையறிந்து அனுபவம் விளங்கிய ஞானிகளும்,—இந்திரியங்களை அடக்கி மனோலயஞ்செய்து உண்மை நிட்டையிலிருக்கின்ற யோகிகளும்,—இறந்தோரையும் எழுப்பத்தக்க அளவிறந்த மகத்துவங்கள் விளங்கிய சித்தர்களும், முனிவர்களும்,—தபசிகளும்,—பசிநேரிட்டபோது,—தங்கள் தங்கள் அனுபவலட்சியங்களைவிட்டு அந்நாத ஊரை நோக்கிப் பலிக்கு வருகின்றார்கள்; பலிநேராதபோது நிலைகலங்குகின்றார்கள். சொற்பனத்தில் ஓர் இழிவுவரினும் அதுகுறித்து உயிர்விடத்தக்க மானிகளும் பசி நேரிட்டபோது,—சொல்லத் தகாதவரிடத்துஞ்சொல்லி மானங்குலைகின்றார்கள். சாதி சமய ஆசாரங்களில் அழுத்தமுடைய ஆசாரியர்களும் பசிவந்தபோது,—ஆசாரத்தை மறந்து ஆகாரத்திற்கு எதிர்பார்க்

கின்றார்கள். கல்விகேள்விகளில் நிரம்பி, அறிதற்கரிய நுட்பங்களை யறிந்து, செய்தற்கரிய செய்கைகளைச் செய்துமுடிக்க வல்லவர்களும் பசி நேரிட்ட போது,—அறிவுங் கருத்தும் அழிந்து தடுமாறுகின்றார்கள். இராப்பகல் தோன்றாது புணர்ச்சியின்பத்திற் பொங்குகின்ற காமிகளும் பசிநேரிட்ட போது,—புணர்ச்சியை மறந்து காமத்தைக் கசந்து கலங்குகின்றார்கள். நாமே பெரியர் நமக்குமேற் பெரியரில்லையென்று இறுமாப்படைகின்ற அகங்காரிகளும் பசிநேரிட்டபோது,—அகங்காரங் குலைந்து ஆகாரங் கொடுப் பவரைப் பெரியவராகப் புகழ்கின்றார்கள். ஒருவகைக் காரியங்களில் அனேக வகைகளாக உபசரிக்கச் செய்கின்ற டம்பர்களும் பசிநேரிட்டபோது,—டம்பத்தை இழந்து மயங்குகின்றார்கள். இவரிவர் இப்படி இப்படியாலல் ஒருவகை ஆதாரமு மில்லாத ஏழைகள், பசிநேரிட்டபோது, என்னபாடு படார்கள்! அந்தக்காலத்தில் அந்த ஏழைகளுக்கு ஆகாரங் கிடைத்தால் எப் படிப்பட்ட சந்தோஷமுண்டாகும்! அந்தச் சந்தோஷத்தைத் தோற்றுவித்த வர்களுக்கு எப்படிப்பட்ட லாபங்கிடைக்கும்! இப்படிப்பட்டதென்று சொல்லுதற்கும் அருமை என்றறியவேண்டும்.

[பசியின் அவத்தை]

ஜீவர்களுக்குப் பசி அதிகரித்தகாலத்தில்,—ஜீவ அறிவு விளக்கமில் லாமல் மயங்குகின்றது,—அது மயங்கவே அறிவுக்கறிவாகிய, **கடவுள் விளக்கம்** மறைபடுகின்றது,—அது மறையவே புருடதத்துவம் சோர்ந்து விடுகின்றது,—அது சோரவே பிரகிருதி தத்துவம் மழுங்குகின்றது,—அது மழுங்கவே, குணங்களெல்லாம் பேதப்படுகின்றன,—மனம் தடுமாறிச் சிதறுகின்றது,—புத்தி கெடுகின்றது,—சித்தம் கலங்குகின்றது,—அகங் காரம் அழிகின்றது,—பிராணன் சுழல்கின்றது,—பூதங்களெல்லாம் புழுங் குகின்றன,—வாதபித்த சிலேட்டுமங்கள் நிலைமாறுகின்றன,—கண் பஞ்ச டைந்து குழிந்துபோகின்றது,—காது கும்மென்று சவிடுபடுகின்றது,— நா உலர்ந்து வறளுகின்றது,—நாசி குழைந்து அழல்கின்றது,—தோல் மெலிந்து ஸ்பரிசை கெடுகின்றது,—கை கால் சோர்ந்து துவளுகின்றன;—வாக்குத் தொனிமாறிக் குளறுகின்றது,—பற்கள் தளருகின்றன: மல சல வழி வெதும்புகின்றது,-மேனி கருகுகின்றது,-ரோமம் வெறிக்கின்றது,—நரம்பு கள் குழைந்து நைகின்றன,—நாடிகள் கட்டுவிட்டுக் குழைகின்றன,—எலும் புகள் கருகிப் பூட்டுகள் நெக்குவிடுகின்றன,—இருதயம் வேகின்றது,— மூளை சுருங்குகின்றது,—சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது,—ஈரல் கரை கின்றது,—இரத்தமும் சலமும் சுவறுகின்றன,—மாமிசம் குழைந்து தன்மை கெடுகின்றது,—வயிறு பகீலென்றெரிகின்றது,—தாப சோபங்கள் மேன்மேலும் உண்டாகின்றன, உயிரிழந்து விடுவதற்கு மிகவுஞ் சமீபித்த அடையாளங்களும் அனுபவங்களும் தோன்றுகின்றன: பசியினல் இவ்

வளவு அவத்தைகளுந் தோன்றுவது ஜீவர்களுக்கெல்லாம் பொதுவாகவே இருக்கின்றது.

இவ்வளவு அவத்தைகளும் ஆகாரங் கிடைத்தபோது உண்டு பசி நீங்க நீங்குகின்றன. அப்போது தத்துவங்களெல்லாம், தழைத்து,—உள்ளங் குளிர்ந்து,—அறிவு விளங்கி, அகத்திலும் முகத்திலும் ஜீவகளையும் கடவுள் களையுந் துளும்பி ஒப்பில்லாத திருப்தி இன்பம் உண்டாகின்றது.

இப்படிப்பட்ட இன்பத்தை உண்டுபண்ணுகின்ற புண் ணியத்துக்கு எந்தப் புண்ணியத்தை இணையென்று சொல்ல லாம்? இந்தப் புண்ணியத்தைச் செய்கின்ற புண்ணியர்களை எந்தத் தெய்வத்துக்குச் சரியென்று சொல்லலாம்? எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுளம்சமென்றே சத்தியமாக அறியவேண்டும்.

இதலால், நரகவேதனை,—சனனவேதனை,—மரணவேதனை,—என் கின்ற மூன்று வேதனைகளுங் கூடி முடிந்த வேதனையே பசி வேதனை யென் றும்; அகம், புறம், நடு, கீழ், மேல், பக்கம் என்கிற எவ்விடத்தும் நிறைந்து எக்காலத்தும் வேறுபடாத மோக்ஷ இன்பமே ஆகாரத்திலுல் உண்டாகும் திருப்தி இன்பம் என்றும் அறியப்படும்.

[பசி என்பது ஓர் உபகாரக் கருவி]

பசியில்லாவிடில் ஜீவர்கள் ஆகாரங் குறித்து ஒருவரை யொருவர் எதிர்பார்க்க மாட்டார்கள்; எதிர்பாராத பக்ஷத்தில் உபகாரச் செய்கை தோன் றாது; அது தோன்றாதபோது ஜீவகாருண்யம் விளங்காது; அது விளங் காதபோது கடவுளருள் கிடைக்கமாட்டாது. ஆகலால், பசியும் கடவு ளாற் கொடுக்கப்பட்ட ஓர் உபகாரக் கருவி என்றே அறியவேண்டும்.

பசியிலால் துன்பப்படுகின்றவர்கள் ஆகாரத்தைக் கண்ட காலத்தில் அடைகின்ற சந்தோஷமும் தாய், பிதா, பெண்டு, பிள்ளை, காணி, பூமி, பொன், மணி முதலானவைகளைக் கண்ட காலத்திலும் அடையார்களாயின், ஆகாரம் உண்ட காலத்தில் உண்டாகும் சந்தோஷம் எப்படிப்பட்டதாக இருக் கும்! ஆகலால், இந்த ஆகாரத்தின் சொரூப ரூப சுபாவங்களும் கடவுளரு ளின் ஏகதேச சொரூப ரூப சுபாவங்களாகவே அறியவேண்டும்.

ஜீவகாருண்யம்.

பசியென்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்ற போது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான்— ஜீவகாருண்யம்.

பசியென்கிற விஷக்காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே —ஜீவகாருண்யம்.

கடவுளியற்கை விளக்கத்திற்கு இடமாகிய ஜீவ தேகங்களென்கிற ஆலயங்கள் பசியினால் பாழாகுந் தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவ் வாலயங்களை விளக்கஞ் செய்விப்பதே—ஜீவகாருண்யம்.

கடவுள் இன்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித்தனஞ் செய்கின்ற ஜீவரது தத்துவக் குடும்ப முழுதும் பசியினால் நிலை தடுமாறி அழியுந் தருணத்தில் ஆகாரங் கொடுத்து அக்குடும்ப முழுதும் நிலைபெறச் செய்வதே—ஜீவகாருண்யம்.

பசியென்கிற புலியானது ஏழை உயிர்களைப் பாய்ந்து கொல்லத் தொடங்குந் தருணத்தில் அப்புலியைக் கொன்று அவ்வுயிரை இரட்சிப்பதே —ஜீவகாருண்யம்.

பசியென்கிற விஷம் தலைக்கேறி ஜீவர் மயங்குந் தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தை இறக்கி மயக்கந்தெளியச் செய்வதே—ஜீவகாருண்யம்.

பசியென்கிற கொடுமையாகிய தேள் வயிற்றிற் புகுந்து கொட்டுகின்றபோது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தால் அக் கடுப்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே—ஜீவகாருண்யம்.

'நேற்று இராப்பகல் முழுதும் நம்மை அரைப்பங்கு கொன்றுதின்ற பசியென்கிற பாபி இன்றும் வருமே!—இதற்கென்ன செய்வோம்!' என்று ஏக்கங் கொள்கின்ற ஏழை ஜீவர்களது ஏக்கத்தை நீக்குவதுதான்—ஜீவ காருண்யம்.

'வெயிலேறிப் போகின்றதே! இனிப் பகியென்கின்ற வேதனை வந்து சம்பவிக்குமே! இந்த விதிவசத்திற்கு என்ன செய்வது!' என்று தேனில் விழுந்த ஈயைப்போல், திகைக்கின்ற ஏழை ஜீவர்களுடைய திகைப்பை நீக்குவதுதான்—ஜீவகாருண்யம்.

'இருட்டிப்போகின்றதே இனி ஆகாரங்குறித்து எங்கே போவோம்!—யாரைக்கேட்போம்!—என்ன செய்வோம்!'—என்று விசாரத்தில் அழுந்திய ஏழை ஜீவர்களது விசாரத்தை மாற்றுவதே—ஜீவகாருண்யம்.

'நடந்து நடந்து காலுஞ்சோர்ந்தது,—கேட்டுக்கேட்டு வாயுஞ்சோர்ந்தது,—நினைத்து நினைத்து மனமும் சோர்ந்தது. இனி இப்பாவி வயிற்றுக்கென்ன செய்வோம்!—என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே—ஜீவகாருண்யம்.

'பகற்போதும் போய்விட்டது,—பசியும் வருத்துகின்றது,—வேறிடங்களிற்போக வெட்கந்தடுக்கின்றது,—வாய்திறந்து கேட்க மானம் வலிக்கின்றது,—வயிறு எரிகின்றது,—உயிரை விடுவதற்கும் உபாயந் தெரியவில்லை,—இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்!'—என்று, மனமும் முகமும் சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல், உற்பாத சோப்பனங்கண்ட ஊமையைப்போல் மனமறுகுகின்ற மானிகளாகிய ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து மானத்தைக் காப்பதுவே—ஜீவகாருண்யம்.

'நாம் முன் பிறப்பில் பசித்தவர்கள் பசிக்குறிப்பறிந்து பசியை நீக்கியிருந்தால் இப்பிறப்பில் நமது பசிக்குறிப்பறிந்து பசியை நீக்குவதற்குப் பிறிதொருவர் நேர்வார்,—அப்போது அப்படி நாம் செய்ததில்லை. இப்போது நமக்கிப்படிச் செய்வாருமில்லை'—என்று விவகரித்துக்கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழை ஜீவர்களுக்கு ஆகாரங்கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே—ஜீவகாருண்யம்.

தேகமுழுதும் நரம்புகள் தோன்றப் பசியினால் இளைத்து உயிரொடுங்கி மூர்ச்சை மூடியகாலத்தும் அயலாரைக் கேட்பது துணியாமற், கடவுளை நினைத்து நினைத்து,—நெருப்பிற்படுத்து,—நித்திரை செய்யத் தொடங்குவாரைப்போல,—அடிவயிற்றிற் கொடிய பசி நெருப்பை வைத்துப் படுக்கத் தொடங்குகின்ற விவேகிகளுக்கு ஆகாரங்கொடுத்து அந்தப்பசி நெருப்பை ஆற்றுவதே—ஜீவகாருண்யம்.

'நேற்றுப்பட்டினி கிடந்ததுபோல் இன்றும் பட்டினிகிடப்பது எப்படி? நாம் பாலியவசத்தால் இன்றும் பட்டினி கிடக்கத் துணிவோமாயினும், பட்டினி சகியாத நமது ஏழைமனவி வயிற்றுக்கு யாது செய்வோம்?

இவள் பசியைக் குறிப்பதும் பெரிதல்ல, வார்த்திப திசையால் மிகவுஞ்சோர்ந்த நமது தாய் தந்தைகள் இன்றும் பட்டினிகிடந்தால் இறந்துவிடுவார்களே! இதற்கென்ன செய்வோம்? பசியினல் அழுதழுது களைத்த நமது புத்திரர்களது சோர்ந்த முகத்தை எப்படிப்பார்ப்போம்?'—என்று எண்ணி எண்ணிக், கோல்லன் உலையிலூத மூண்ட நெருப்பைப்போல், பசிநெருப்பும்,—பய நெருப்பும்,—விசாரநெருப்பும்,—உள்ளே மூண்டபடி யிருக்கக் கன்னப்புடையில் கைகளை வைத்துக்கொண்டு கண்களில் நீர்கலங்க வருந்துகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்து வருத்தத்தை மாற்றுவதே—ஜீவகாருண்யம்.

'கண்கை, கால் முதலிய உறுப்புக்களிற் குறைவில்லாதவர்களாகி ஆகாரஞ் சம்பாதிக்கத்தக்க சக்தியுள்ளவர்களும் பசியால் வருந்தி இதோ படுத்திருக்கின்றார்கள்,—குருடும், செவிடும், ஊமையும், முடமுமாகவிருக்கின்ற நமக்கு ஆகாரம் எந்த வழியாற் கிடைக்கும்!—பசி எப்படி நீங்கும்'—என்று தனித்தனி நினைத்து நினைத்துத் துக்கப்படுகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்குவதே—ஜீவகாருண்யம்.

பசியினல் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும்,—எந்தக் சமயத்தாராயினும்,—எந்த ஜாதியாராயினும்,—எந்தச் செய்கையாராயினும்,—அவர்கள் தேசவொழுக்கம், சமயவொழுக்கம், ஜாதியொழுக்கம், செய்கையொழுக்கம் முதலானவைகளைப் பேதித்து விசாரியாமல்,—எல்லா ஜீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாக விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி, அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே—ஜீவகாருண்யம்.

சன்மார்க்க ஒழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பசி நிவர்த்திசெய்துகொள்ளத் தக்க மிருகம், பறவை, ஊர்வன, தாபரம் என்கின்ற உயிர்களுக்குப் பசி வந்தபோது, பசி நிவர்த்தி செய்விப்பதே—ஜீவகாருண்யம்.

பசியை நிவர்த்திசெய்துகொள்ளத்தக்க புவனபோக சுதந்தரங்களைப் பெறுதற்குரிய அறிவு இருந்தும்,—பூர்வ கர்மத்தாலும்,—அஜாக்கிரதையாலும்,—அச்சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பசியினல் வருந்துகின்ற ஜீவர்களுக்கு ஆகாரங்கொடுத்து அந்தப் பசி வருத்தத்தை நீக்கித் திருப்தியின்பத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாகிய 'ஜீவகாருண்யம் என்கின்ற திறவுகோலைக்' கொண்டுதான் மோட்சமாகிய மேல்வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழவேண்டும். ஆகலின், ஜீவகாருண்ய மென்கின்ற மோட்ச வீட்டுத் திறவு

கோலக் காலமுள்ளபோதே சம்பாதித்துக்கொண்ட சமூசாரிகள்,—சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல், எக் காலத்தும் அடையாத இன்பவீட்டை அடைந்து, அவ்வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு, உள்ளே புகுந்து, நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள்.

புண்ணிய பூமிகளை வலஞ்செய்தல்,—புண்ணிய தீர்த்தங்களி லாடல்,—புண்ணிய தலங்களில் வசித்தல்,—புண்ணியமூர்த்திகளைத் தரிசித் தல்,—தோத்திரஞ் செய்தல்,—ஜபஞ் செய்தல்,—விரதஞ் செய்தல்,— யாகஞ் செய்தல்,—பூஜை செய்தல்,—முதலிய சரியை கிரியைகளைச் செய்கின்ற விரதிகளும்,—பத்தர்களும்,—இருடிகளும், — உணவை நீக்கி, உறக்கத்தை விட்டு, விடயச் சார்புகளைத் துறந்து,—இந்திரியங்களை அடக்கி,—மௌனையஞ்செய்து,—யோகத்திலிருக்கின்ற யோகிகளும்,—அவி றந்த சித்தியின்பங்களைப் பெற்ற சித்தர்களும்,—நித்தியா நித்தியங்களை அறிந்து,எல்லாப்பற்றுக்களையும் துறந்து,பிரமானுபவத்தைப் பெற்ற ஞானி களும்,—ஜீவகாருண்யம் என்கிற திறவுகோலைச் சம்பாதித்துக் கொள்ளாத வர்களானால்,—மோட்சமென்கிற மேல்வீட்டிற்கு முன்னும் பின்னுமாக ஏறிச் சமீபத்திற் காத்திருந்து மீளவும் அத்திறவுகோலைச் சம்பாதிக்கத் திரும்புவார்க ளல்லது, கதவைத்திறந்து உள்ளே புகுந்து இன்பத்தை அடைந்து வாழமாட்டார்களென்று உண்மையாக அறியவேண்டும்.

இதனால், அறிவு விளங்கிய ஜீவர்களுக்கெல்லாம் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடென்றும் அறியப்படும், அன்றியும், ஜீவகாருண்யமெனுஞ் சத்தை உடையவர்களாகி அருந்தல் பொருந்தல் முதலிய பிரபஞ்ச போகங் களை அனுபவிக்கின்ற சமூசாரிகளெல்லாம் சர்வ சத்தியையுடைய கடவுளரு ளுக்கு முழுதும் பாத்திரமாவார்கள். **ஜீவகாருண்ய வொழுக்க மில்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியா னம் முதலியவைகளைச் செய்கின்றவர்களும் கடவுளருளுக்குச் சிறிதும் பாத்திரமாகார்கள் ; அவர்களை ஆன்மவிளக்கமுள்ள வர்களாகவும் நினைக்கப்படாது ; ஜீவகாருண்யமில்லாது செய் யப்படுகிற செய்கைகளையெல்லாம் பிரயோஜனமில்லாத மாயா ஜாலச் செய்கைகளே யாகுமென்று அறியவேண்டும்.**

எல்லா ஜீவர்களும் கடவுள் இயற்கை யுண்மை யெனுஞ்சங்களா தலாலும், அவரவர் இடங்களிற் கடவுள் அருள் விளக்கம் விளங்குதலாலும்,— சமூசாரிகளுள் தமது தாய், தந்தை, புணர்ந்தோர், மக்கள், துணைவர் முத லிய குடும்பமமட்டில் பசியாற்றிக்கொள்ளத்தக்க, அற்ப சக்திபுள்ள சமூசாரி கள், தாய், பிதா, மக்கள், துணைவர் முதலிய குடும்பத்தாரைப் பசியினாற் பாதவிக்கவிட்டு அயலார்க்குப் பசியாற்றத் தொடங்குதலும்,—தம்மிடத்துப்

பசித்துவந்த அயலாரை,—அந்தப் பசியால் பரதவிக்கவிட்டுத், தம் குடும்பத் தார் பசியையாற்றத் தொடங்குதலும்,—கடவுளருளுக்குச் சம்மதமல்ல.

ஆகலால், தமது குடும்பச் செலவைக் கூடியமட்டில் சிக்கனஞ் செய்து, இருதிறத்தார் பசியும் நீக்குதல்வேண்டும் என்றும்;—அற்ப சத்தி யினுங் குறைவுபட்டுத் தமது குடும்பமட்டிலும் பசியாற்றுவிப்பதற்குப் பிர யாசையால் மிகச் சிறிய முயற்சியுடைய சமூசாரிகள், தமது குடும்பமட்டி லாவது பசியாற்றுவித்துக்கொண்டு,—தம்மிடத்துப் பசித்துவந்த அயலார் விஷயத்தில் மிகவும் தயவுடையவர்களாகி அவர் பசியை மற்றொருவரைக் கொண்டாவது ஆற்றுவிப்பதற்குத் தக்க முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும்,—இயல்புள்ள பிரபல சமூசாரிகள் தங்கள் தங்கள் வரு வாய்க்குத் தக்கவரையில், தாய், பிதா, புணர்ந்தோர், மக்கள், துணைவர், உறவினர், சினேகர், அதிதிகள், பெரியர், அடிமைகள், அயலார், பகைவர் முதலியவர்களுக்கும், தமது குடும்பத்திற்குச் சகாயமாகத் தேடிய, பசு, எருது, எருமை, ஆடு, குதிரை, தாபர முதலிய பிராணிகளுக்கும், பசியை யாற்றுவித்துத் திருப்தியின்பத்தை உண்டுபண்ண வேண்டுமென்றும்,—விவாகம், புத்திரப்பேறு, தெய்வம் படைத்தல் முதலிய பலவகைச் செய்கை களில் வேறு வேறு சடங்குகளும், வேறு வேறு பெருமைப்பாடுகளும் குறித்துப் பொருட்செலவு செய்தலை அமைத்து,—விவாகமுதலிய அந்தந்தச் செய்கைகளிலும் பசித்த ஜீவர்களுக்குப் பசியை ஆற்றுவித்து இன்பத்தை யுண்டுபண்ணுகின்ற சிறப்பினையே செய்யவேண்டுமென்றும்—அப்படிச் செய் யில், பசித்தவர் பசிநீங்கி அடைந்த இன்பத்திலும் அனேகமடங்கு அதிக மான இன்பத்தைத் தாம் அடைவார்களென்றும் சத்தியமாக அறிய வேண்டும்.

சமூசாரிகள் விவாக முதலிய விசேஷ காரியங்களில் பந்தலை அலங் கரித்தும்,—அவ்விடத்தில் வேறு வேறு சடங்குகளைச் செய்வித்தும்,—ஆடல் பாடல் வரிசை ஊர்வலம் முதலிய விநோதங்களையும் அப்பவர்க்கம், சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளையும் நடத்தியும், எக்களிப்பில் அழுந்தியிருக்குந் தருணத்தில், பசித்த ஏழைகள் முகத்தைப் பார்க்கவும் சம் மதிக்கவில்லை. இப்படிப்பட்ட சந்தோஷ காலத்தில் தமக்காயினும் தமது மக்கள் துணைவர் முதலியோர்க்காயினும் ஒவ்வோர் ஆபத்து நேரிடுகின்றது. அப்போது அவ்வளவு சந்தோஷத்தையும் இழந்து துக்கப்படுகிறார்கள். இப் படித் துக்கப்படும்போது,—அலங்காரஞ் செய்த பந்தலும், சங்கல்பவிகல்ப மான சடங்குகளும்,—ஆடல், பாடல், வாத்தியம், வரிசை, ஊர்கோலம் முதலிய விநோதங்களும்,—அப்பவர்க்கம், சித்திரான்னம் முதலிய பெரு மைப்பாடுகளும்,—அந்த ஆபத்தைத் தடைசெய்யக் கண்டதில்லை. அந்தச்

சுபகாரியத்தில் உள்ளபடியே பசித்த ஜீவர்களுக்கு ஆகாரங்கொடுத்துப் பசியை நீக்கி அவர்கள் அகத்திலும், முகத்திலும், கடவுள் விளக்கத்தையும், கடவுளின்பத்தையும், வெளிப்படச் செய்திருந்தார்களானால்,—அந்த விளக்கமும் இன்பமும் அத்தருணத்தில் நேரிட்ட ஆபத்தை நீக்கி விளக்கத்தையும் இன்பத்தையும் சத்தியமாக உண்டுபண்ணுமல்லவா? ஆகலில், விவாக முதலிய விசேஷச் செய்கைகளிலும் தங்கள் தங்கள் தரத்திற்கு ஒத்தபடி பசித்தவர்களது பசியை ஆற்றுவித்துத் திருப்தி யின்பத்தை உண்டுபண்ணுவது முக்கியமென் றறியவேண்டும்.

சூலை, குன்மம், குஷ்டம் முதலிய தீராத வியாதிகளால் வருந்துகின்ற சமூசாரிகள் தங்கள் தரத்திற்கு ஒத்தபடி பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அனுசரித்தார்களானால்,—அந்த ஜீவகாருண்ய அனுசரிப்பே நல்ல மருந்தாக அந்த வியாதிகளை நிவர்த்திசெய்து, விசேஷ திளக்கியத்தை உண்டுபண்ணுமென்பது உண்மை.

பலநாள் சந்ததியில்லாமல் பலபல விரதங்களைச்செய்து வருந்துகின்ற சமூசாரிகள் தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளது பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால்,—அந்த ஜீவகாருண்ய அனுசரிப்பு நல்ல அறிவுள்ள சந்ததியை உண்டுபண்ணுமென்பது உண்மை.

அற்பவயதென்று குறிப்பினால் அறிந்துகொண்டு இறந்து போவதற்கு அஞ்சி விசாரப்படுகின்ற சமூசாரிகள்,—தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால்,—அந்த ஜீவகாருண்ய அனுசரிப்புத் தீர்க்காயுளை உண்டுபண்ணுமென்பது உண்மை.

கல்வி, அறிவு, செல்வம், போகம், முதலியவைகளைக் குறித்து வருந்துகின்ற சமூசாரிகள்,—தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால்,—அந்த ஜீவகாருண்ய அனுசரிப்பு **கல்வி**, அறிவு, செல்வம், போகம், முதலானவைகளை உண்டுபண்ணுமென்பது உண்மை.

பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாகக்கொண்ட ஜீவகாருண்யமுள்ள சமூசாரிகளுக்குக் கோடையில் வெயிலும் வருத்தாது,—மண்ணும் சூடுசெய்யாது,—பெருமழை, பெருங்காற்று, பெரும்பனி, பேரிடி, பெருநெருப்பு முதலிய உற்பாதங்களும் துன்பம் செய்விக்கமாட்டா,—விசூசிகை, விஷக்காற்று, விஷசுரம் முதலிய அஜாக்கிரதைப் பிணிகளுமுண்

டாகா,—அந்த ஜீவகாருண்யமுள்ள சமூசாரிகள்,—ஆற்று வெள்ளத்தாலும், கள்ளர்களாலும், விரோதிகளாலும், கலக்கப்படார்கள், அரசர்களாலும் அவமதிக்கப்படார்கள்,—ஜீவகாருண்யமுள்ள சமூசாரிகளது விளைநிலத்தில் பிரயாசையில்லாமலே விளவு மேன்மேலும் உண்டாகும்,—வியாபாரத்தில் தடையில்லாமல் லாபங்களும், உத்தியோகத்தில் கெடுதியில்லாத மேன்மையும் உண்டாகும்;—சுற்றங்களாலும் அடிமைகளாலும் சூழப்படுவார்கள்;—துஷ்டமிருகங்களாலும், துஷ்ட ஜந்துக்களாலும், துஷ்டப் பசாசுகளாலும் துஷ்ட தெய்வங்களாலும், பயஞ்செய்யப்படார்கள்.

ஜீவகாருண்யமுள்ள சமூசாரிகளுக்கு எப்படிப்பட்ட ஆபத்துக்களும் அஜாக்கிரதையினாலும் ஊழ்வகையினாலும் சத்தியமாக வராது.

பசித்தவர்களுக்குப் பசியாற்றுவித்து இன்பத்தை உண்டு பண்ணுகின்ற ஜீவகாருண்ய ஒழுக்கமாகிய மேலான விரதமானது—தேவர்கள், மனிதர்கள், பிரமசாரிகள், சமூசாரிகள், தபசிகள், சந்யாசிகள், ஆண் ஜாதியர், பெண் ஜாதியர், வார்த்திபர், வாலிபர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், முதலியயாவராலும் அவசியம் செய்யத்தக்கதென்பது கடவுளாணை யென்றறிய வேண்டும்.

பசித்தவர்க்குப் பசியை நீக்குகின்ற விஷயத்தில் புருஷனைப் பெண் ஜாதி தடுத்தாலும்,—பெண்சாதியைப் புருஷன் தடுத்தாலும்—பிள்ளைகளைத் தந்தை தடுத்தாலும்,—தந்தையைப் பிள்ளைகள் தடுத்தாலும்,—சீஷரை ஆசாரியர் தடுத்தாலும்,—அடியாரை ஆண்டவன் தடுத்தாலும்,—குடிகளை அரசன் தடுத்தாலும்,—அந்தத்தடைகளால் சிறிதுந் தடைபடாமல் அவரவர் செய்த நன்மைதீமைகள் அவரவரைச் சேருமல்லது வேறிடத்திற் போகாதென்பதை உண்மையாக நம்பி ஜீவகாருண்ய வொழுக்கத்தை நடத்த வேண்டுமென்றும் அறியவேண்டும்.

உள்ளபடி பசியால் வருந்துகின்ற ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுக்க நினைத்தபோது, நினைத்த புண்ணியாது மனம் வேறு பற்றுக்களைவிட்டுச் சுத்தக்காரணமாகி நினைத்தபடியால், அந்தப் புண்ணியர்களை யோகிகளென்றே உண்மையாக அறியவேண்டும்.—ஆகாரங்கொடுக்க நினைத்தபடி உபசரித்துக் கொடுக்கும்போது, அவருண்ணுவது தாமுண்ணுவதாக அறிந்து களிக்கின்றபடியால், ஞானிகளென்றே உண்மையாக அறியவேண்டும்.—ஆகாரங் கொடுக்க உண்டு பசி தீர்ந்தவர்களுக்கு அத்தருணத்தில் ஆன்மாவின் உள்ளும் புறத்தும் கீழும்மேலும் நடுவும் பக்கமும் நிறைந்து காணமுதலிய தத்துவங்க

லெல்லாம் குளிர்வித்துத் தேகமுழுதும் சில்லென்று தழைய முகத்தினிட மாகப் பூரித்து விளங்குகின்ற கடவுள் விளக்கத்தையும் திருப்தியின்பமாகிய கடவுள் இன்பத்தையும் பிரத்தியட்சத்தில் தெரிசித்து அநுபவிக்கின்றார்க ளாதலால், அந்தப் புண்ணியர்கள் கடவுளைக் கண்டவர்களென்றும் கடவு ளின்பத்தை அனுபவிக்கின்ற முத்தரென்றும் அறியவேண்டும்.—பசி நீங்க உண்டு சந்தோஷித்தவர்கள் இந்தப் புண்ணியர்களைத் தெய்வமாகப் பாவிக் கின்றார்களாதலால், இவர்களே தெய்வமுமென்று உண்மையாக அறியவேண் டும்.

ஜீவகாருண்ய வொழுக்கம் உடையவர்களாகி ஜீவர்களைப் பசியென் கின்ற அபாயத்தில் நின்றும் நீங்கச்செய்கின்ற உத்தமர்கள் எந்த ஜாதியா ராயினும்,—எந்தச் சமயத்தாராயினும்,—எந்தச் செய்கையையுடையவர்க ளாயினும்,—தேவர், முனிவர், சித்தர், யோகர், முதலிய யாவராலும் வணங் கத்தக்க சிறப்புடையவர் ஆவார்களென்று சர்வ சக்தியையுடைய கடவுள் சாட்சியாக சத்தியஞ் செய்யப்படுமென்று அறியவேண்டும்.

இன்னும் இந்த ஜீவகாருண்ய வொழுக்கத்தின் விரிவைச் சமரச வேதத்திற் கண்டுகொள்ளலாம்.

அருட் பெருஞ்ஜோதி

கட்டோடே கனத்தோடே வாழ்கின்றே மென்பீர்
கண்ணேடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலங்காண் கின்றீர்
குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக் குறியீர்
எட்டோடே யிரண்டுசேர்த் தெண்ணவும் அறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே.

உ

அருட்பெருஞ்ஜோதி

சன்மார்க்க விளக்கத்தின் முதற்பிரிவாகிய

ஜீவகாருண்ய ஒழுக்கம்

(இரண்டாவது பிரிவு)

திருச்சிற்றம்பலம்

உலகத்தில் உயர்பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள், இந்தப் பிறப்பினால் அடையத்தக்க தலைப்பட்ட ஆன்ம இன்ப சுகத்தைக் காலமுள்ள பொழுதே விரைந்து அறிந்து அடையவேண்டும்.

1. அந்தத் தலைப்பட்ட ஆன்ம இன்பவாழ்வு எத்தனை வகை? என்று அறிய வேண்டில்:—

இம்மையின்ப வாழ்வு, மறுமை இன்பவாழ்வு, பேரின்பவாழ்வு, என மூன்று வகை யென்று அறியவேண்டியது.

1. இம்மை யின்ப வாழ்வு

அவற்றுள் சிறியதேக காரணங்களைப் பெற்றுச் சிறிய முயற்சியால் சிறிய விடயங்களைச் சில நாள் அனுபவிக்கப்படுகின்ற இன்பத்தை இம்மை யின்ப வாழ்வு என்றறிய வேண்டும்.

இம்மையின்ப லாபம்

இம்மை இன்ப லாபமாவது:—மனிதப் பிறப்பில்,—தேகத்திலும், கரணங்களிலும்,—புவனத்திலும்,—போகங்களிலும்,—குறைவின்றி நல்ல அறிவுடையவர்களாய்,—பசி, பிணி, கோலை முதலிய தடைகளில்லாமல், உறவினர், சினேகர், அயலார் முதலியருந் தழுவ,—சந்ததி விளங்கத்தக்க சற்குணமுள்ள மனைவியோடு,—விடயங்களைச் சிலநாள் அனுபவிக்கின்றதை இம்மை யின்பலாபம் என்றறிய வேண்டும்.

இம்மை இன்பத்தை அடைந்தவர் பெருமை எது? என்று அறியவேண்டில் :—

அன்பு, தயை, ஒழுக்கம், அடக்கம், பொறுமை, வாய்மை, தூய்மை முதலிய சுபகுணங்களைப் பெற்று, விடய இன்பங்களை வருந்தி முயன்று, அனுபவித்துப் புகழ்பட வாழ்தலென்று அறியவேண்டும்.

2. மறுமை யின்ப வாழ்வு

மறுமையின்ப வாழ்வாவது யாது? எனில் :—

உயர் பிறப்பில் பெரிய தேககரணங்களைப் பெற்று பெரிய முயற்சியால் பெரிய விஷயங்களைப் பலநாள் அனுபவிக்கின்ற இன்பத்தை மறுமை யின்ப வாழ்வு என்று அறியவேண்டும்.

மறுமை யின்ப லாபம்

மறுமையின்ப லாபம் எது? என்னில் :—

உயர் பிறப்பைப்பெற்று இம்மையின்ப லாபத்தில் குறிக்கப் பட்ட நற்குணங்களெல்லாம் பொருந்த உயர் நிலையில் சுத்தவிடயங்களைப் பல நாள் அனுபவிக்கின்ற இன்ப லாபத்தை மறுமையின்ப லாபமென்றறிய வேண்டும்.

மறுமையின்ப லாபத்தை யடைந்தவர் பெருமை யாது? என்றறிய வேண்டில் :—

அன்பு, தயை முதலிய சுபகுணங்களைப் பெற்றுச் சுத்தவிடய இன்பங்களை எண்ணியபடி தடைபடாமல் முயன்று பல நாளனுபவித்துப் புகழ்படவாழ்தலென்றறிய வேண்டும்.

3. பேரின்ப வாழ்வு

பேரின்ப வாழ்வாவது :—

எல்லாத் தேகங்களையும், எல்லாக் கரணங்களையும், எல்லாப் புவனங்களையும், எல்லாப் போகங்களையும், தமது பூரண இயற்கை விளக்கமாகிய அருட்சத்தியின் சந்நிதி விசேடத்தால் தோன்றி விளங்க விளக்கஞ் செய்விக்கின்ற பூரண இயற்கை உண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று, எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் தடைபடாமல் அனுபவிக்கப்படுகின்ற ஒப்பற்ற அந்தப் பெரிய இன்பத்தைப் பேரின்ப வாழ்வு என்றறிய வேண்டும்.

பேரின்ப லாபம்

பேரின்ப லாபம் யாது ? எனில் :—

யாவுந் தாமாய் விளங்குவதே.

2. பேரின்ப லாபத்தையடைந்தவர் பெருமை எது ? என்றறிய வேண்டில் :—

தோல், நரம்பு, என்பு, தசை, இரத்தம், சுக்கிலம், முதலிய அசுத்த பூத காரியங்களும்,—அவற்றின் காரணங்களாகிய அசுத்த பிரகிருதி அணுக்களுமாகிய தேகத்தை மாற்றி, மாற்று இவ்வளவு என்றறியப்படாத உயர்ந்த பொன்னுகிய சுத்த, பூத காரிய சுத்த தேகத்தையும், பொன்வடிவாகத் தோற்றுதல் மாத்திரமே யன்றிப் பரிசிக்கப்படாத சுத்த பூதகாரண பிரணவ தேகத்தையும், தோன்றப்படுதலின்றி விளங்குகின்ற ஞான தேகத்தையும், பெற்றவர்களாயிருப்பார்கள்.

உள்ளே மண்ணினது திண்மையால் தறிக்கப்படார்கள் ;—புறத்தே மண் கல் முதலியவற்றுல் எறியினும், அவை அவர் வடிவில் தாக்குவன வல்ல ;—உள்ளே நீரினது தண்மையால் குளிரப்படார்கள் ;—புறத்தே நீரிலழுத்தினும் அவர் வடிவம் அழுந்தாது ;—உள்ளே நெருப்பினது வெம்மையால் சுடப்படார்கள் ;—புறத்தே நெருப்பிற் சுடினும் அவர் தேகத்தில் சூடும் வடுவும் தோன்றுவனவல்ல ;—உள்ளே காற்றினது ஊக்கத்தால் அசைக்கப்படார்கள் ;—புறத்தே காற்று அவர் வடிவைப் பரிசித்தசைக்கமாட்டாது ;—உள்ளே ஆகாயத்தின் கலப்பினுல் அந்தரிக்கப் படார்கள் :—புறத்தே ஆகாயம் அவர் தேகத்தை அந்தரிக்க மாட்டாது ;—ஆதாரத்தி லன்றி நிராதாரத்திலும் அவர் தேகம் உலாவும்.

எண்சீரடி யாசிரிய விருத்தம்

காற்றுலே புவியாலே கனமத னுலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றுலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறவியற்றுங் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றுலே யெஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்யளிக்க வேண்டுமென்றேறன் விரைந்தளித்தா னெனக்கே
ஏற்றுலே யிழிவெனநீர் நினையாதீ ருலகீர்
எந்தையருட் பெருஞ்ஜோதி யிறைவனைச்சார் வீரே.

(6-ந் திருமுறை. பக்கம் 366—64)

அவரது கண்கள் முதலிய கரணேந்திரியங்களும், வாக்கு முதலிய கர்மேந்திரியங்களும்;—பார்த்தல் முதலிய விஷயங்களையும், பேசுதல் முதலிய விஷயங்களையும் பற்றுவனவல்ல. தயையினுல் விஷயங்களைப் பற்றவேண்டில் சுவர், மலை முதலிய தடைகளும், — அவர் கண்களை மறைப்பனவல்ல; — அண்ட பிண்டங்களில் அகம் புறம் முதலிய எவ்விடத்து முள்ள விடயங்களை அவர் கண்கள், — இருந்தவிடத்து இருந்தே கண்டறியும், — அண்ட பிண்டங்களில் எவ்விடத்திருந்து பேசினும், அவர் செவிகள் இருந்த இடத்திருந்தே கேட்டறியும், — எவ்விடத்தில் இருக்கின்ற ரசங்களையும் அவர் நா இருந்த இடத்திருந்தே சுவைத்தறியும், — எவ்விடத்திருக்கின்ற பரிசங்களையும் அவர் மெய் இருந்தவிடத்திருந்தே பரிசித்தறியும்,—எவ்விடத்திருக்கின்ற கந்தங்களையும் அவர் மூக்கு இருந்த இடத்திருந்தே முகந்தறியும்,—எவ்விடத்திருக்கின்றவர்களுக்கும் அவரது கைகள் இருந்த விடத்திருந்தே கொடுத்தல் கூடும்.—எவ்விடத்திலும் அவரது கால்கள் இருந்த விடத்திருந்தே நடத்தல் கூடும்.—அவரது வாக்கு எவ்விடத்திருக்கின்ற எவ்வெவர்களோடும் இருந்த விடத்திருந்தே பேசுதல் கூடும்.—மற்ற இந்திரியங்கள் இருந்த விடத்திருந்தே எவ்விடத்தும் ஆனந்தித்தல்கூடும்.—அவரது மன முதலான கரணங்கள் எப்படிப்பட்ட விஷயங்களையும் பற்றுவனவல்ல;—தயவினுல் பற்றத்தொடங்கில், எல்லா உயிர்களினது எல்லாச் சங்கற்ப விகற்பங்களையும் ஒரு நிமிடத்தில் ஒருங்கே நினைத்து விசாரித்து நிச்சயித்துக் கொள்ளும்.—அவரறிவு ஒன்றையும் சுட்டி யறியாது;—தயவினுல் சுட்டியறியத் தொடங்கில், எல்லா அண்டங்களையும், எல்லா வுயிர்களையும் எல்லாப் பண்புகளையும், எல்லா அனுபவங்களையும், எல்லாப் பயன்களையும், ஒருங்கே ஒரு நிமிடத்தில் சுட்டியறியும்.—அவர்கள் நிர்க்குணத்தராவார்கள்,—அல்லது, சாத்துவித தாமச இராசத முதலிய முக்குணங்களாலும் உள்ளே விகாரப்படார்கள்;—புறத்தே அவரது குணங்கள் கரணங்களைப் பற்றுவனவல்ல.—உள்ளே பிரகிருதியினுல் மூடப்படார்கள்;—புறத்தே அவரது பிரகிருதி குணங்களைப் பற்றுவனவல்ல.—உள்ளே கால தத்துவத்தால் வேற்றுமைப்படார்கள்;—புறத்தே காலத்தால் அவரது திருமேனி தடைபடாது.—உள்ளே நியதி அளவால் அளக்கப்படார்கள்;—புறத்தே நியதியால் அவரது திருமேனி அரைபடாது.—அன்றிக் காலம், வித்தை, ராகம், புருடன் முதலிய மற்றைத் தத்துவங்களும் தத்துவ தாரியங்களும் அவர்களுக்கு இல்லை.—மாயையால் பேதப்படார்கள்;—சுத்தமகா மாயையைக்கடந்து அதன்மேல் அறிவுருவமாக விளங்குவார்கள்.

அகாரம், நித்திரை, மைதுனம், பயம் என்பவைகளால் தடைபடார்கள். அவர்கள் தேகத்திற்குச் சாயை, வியர்வை, அழுக்கு, நரை, திரை, மூப்பு, இறப்பு முதலிய குற்றங்கள் உண்டாவனவல்ல. பனி, மழை, இடி,

வெயில் முதலியவற்றாலும், இராக்கதர், அசுரர், பூதம், பிசாசு முதலியவற்றாலும், தேவர், முனிவர், மனிதர், நாகர், மிருகம், பறவை, ஊர்வன, தாபரம் என்பவைகளாலும், — எவ்விடத்தும், — எக்காலத்தும்,—அவர் தேகம் வாதிக்கப்படாது ;—வாள், கத்தி முதலிய கருவிகளாலும், கண்டிக்கப்படாது ;—எல்லா அண்டங்களும் அணுக்கள்போலச் சிறிதாகத் தோன்றலும், எல்லா அணுக்களும் அண்டங்கள் போலப் பெரிதாகத் தோன்றலும் அவர் தேகத்திற்கு உரித்து;—இறந்தோரை எழுப்புதல்,—வார்த்திபரை வாலிபராக்கல்—முதலிய கருமசித்திகளும்,—யோகசித்திகளும்,—ஞானசித்திகளும்,—அவர் சங்கிதியில் விளங்கும்.—சிருஷ்டித்தல்,—காத்தல்,—அழித்தல், — மறைத்தல்,—அனுக்கிரகித்தல்,—என்ற கிருத்தியங்களும்,—அவர் நினைத்தமாத்திரத்தில் நடக்கும்.—பஞ்ச கர்த்தாக்களும் அவர் கடைக்கண் பார்வையால் தங்கள் தங்கள் தொழில் நடத்துவார்கள்.—அவர்கள் அறிவு கடவுளறிவாக இருக்கும், அவர்கள் செய்கை கடவுள் செய்கையாக இருக்கும். அவர்கள் அனுபவம் கடவுள் அனுபவமாயிருக்கும். சர்வ சக்தியுடையவர்களாய் எக்காலத்தும் அழிவில்லாதவர்களாய், ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களும், அம்மல வாதனைகளும், இல்லாதவர்களாய், பேரருள்வண்ண முடையவர்களாய் விளங்குவார்கள். சடமாகிய ஒரு துரும்பும் அவரது திருநோக்கத்தால் உயிர்பெறும். பஞ்ச கிருத்தியங்களும் செய்யும். அவரது பெருமை வேதாந்த, சித்தாந்த கலாந்த, போதாந்த, நாதாந்த, யோகாந்தம் என்கின்ற ஆறந்தங்களிலும் விளங்கும் ; அவற்றைக் கடந்தும் விளங்குமென்று அறியவேண்டும்—இவை பேரின்பத்தை யடைந்தவர்கள் பெருமையென்று அறியவேண்டும்.

---

3. இம் மூவகை இன்ப லாப வாழ்வையும் எதனால் பெறக் கூடும்? என்றறிய வேண்டில் :—

கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளின் ஏகதேசத்தைக் கொண்டும் அருட்பூரணத்தைக் கொண்டும் அடையக்கூடுமென்று அறிய வேண்டும்.

---

4. மூவகை இன்பங்களில் அருளின் ஏகதேசத்தைக்கொண்டு அடையத்தக்கவை எவை? அருட்பூரணத்தைக்கொண்டு அடையத்தக்கது யாது? என்றறிய வேண்டில் :—

இம்மையின்ப லாபம் மறுமையின்ப லாபம் : என்கின்ற இரண்டையும் அருளின் ஏகதேசத்தைக் கொண்டு அடையக்கூடுமென்றும் ;

பேரின்பலாபமென்கின்ற ஒன்றையும், அருட்பூரணத்தைக்கொண்டு அடையக்கூடுமென்றும் அறியவேண்டும்.

5. கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருள் எந்த வண்ணம் உடையது? என்றறிய வேண்டில்:—

சொல்லுவார் சொல்லும் வண்ணங்களும்,—நினைப்பார் நினைக்கும் வண்ணங்களும்,—அறிவார் அறியும் வண்ணங்களும்,—அனுபவிப்பார் அனுபவிக்கும் வண்ணங்களும்,—ஆகிய சர்வசத்தி வண்ணங்களும்,—தனது ஏக தேச வண்ணங்களாக விளங்க விளக்கி விளங்குகின்ற பூரணவிளக்க வண்ணத்தையுடையது என்று அறியவேண்டும்.

6. அந்த அருள் எவ்விடத்து விளங்குகின்றது? என்று அறிய வேண்டில்:—

நோக்குவார் நோக்குமிடம், நோக்கப்படுமிடம்,—கேட்பார், கேட்குமிடம், கேட்கப்படுமிடம்,—சுவைப்பார், சுவைக்குமிடம், சுவைக்கப்படுமிடம்,—முகருவார், முகருமிடம், முகரப்படுமிடம்,—பொருந்துவார், பொருந்து மிடம், பொருந்தப்படு மிடம், பேசுவார், பேசு மிடம், பேசப்படுமிடம்,—செய்வார், செய்யுமிடம், செய்யப்படுமிடம்,—நடப்பார், நடக்குமிடம், நடக்கப்படுமிடம்,—விடுவார், விடுமிடம், விடப்படுமிடம்,—நினைப்பார், நினைக்குமிடம், நினைக்கப்படுமிடம், விசாரிப்பார், விசாரிக்குமிடம், விசாரிக்கப்படுமிடம்,—துணிவார், துணியுமிடம், துணியப்படுமிடம்,—தூண்டுவார், தூண்டுமிடம், தூண்டப்படுமிடம்,—அறிவார், அறியுமிடம், அறியப்படுமிடம்,—அனுபவிப்பார், அனுபவிக்குமிடம், அனுபவிக்கப்படுமிடம்,—முதலிய எவ்விடங்களிலும் எக்காலத்தும் விளங்குகின்றதென்று அறியவேண்டும்.

7. அந்த அருளை எதனாற் பெறக்கூடும்? என்றறிய வேண்டில்:—

ஜீவகாருண்ய ஒழுக்கத்தினாற் பெறக்கூடுமென்றறியவேண்டும்.

8. ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் அருளைப் பெறக்கூடுமென்பது எப்படி? என்றறிய வேண்டில்:—

அருள் என்பது:—கடவுளுடைய இயற்கை விளக்கம்—அல்லது கடவுள் தயவு. ஜீவகாருண்யமென்பது:—ஆன்மாக்களின் இயற்கை விளக்

கம்—அல்லது ஆன்மாக்கள் தயவு. இதனால், ஒருமை—ஒருமைக் காண மாகிய சிறிய—சிறிய விளக்கத்தைக் கொண்டு பெரிய விளக்கத்தைப் பெறு தலும்,—சிறிய தயவைக்கொண்டு பெரிய தயவைப் பெறுதலும் கூடும். சிறு நெருப்பைக்கொண்டு பெருநெருப்பைப் பெறுதல் போல வென்றறியவேண் டும்.

இதனால் ஜீவகாருண்ய ஒழுக்கமே சன்மார்க்கமென்றறியப்படும்: ஜீவகாருண்யம் விளங்கும்போது,—அறிவும் அன்பும் உடனுக விளங்கும்;—அதனால், உபகாரசத்தி விளங்கும்;—அந்த உபகாரசத்தியால், எல்லா நன்மை களும் தோன்றும்,—ஜீவகாருண்ய மறையும்போது, அறிவும் அன்பும் உட னுக நின்று மறையும்;—அதனால், உபகாரசத்தி மறையும், உபகாரசத்தி மறையவே, எல்லாத் தீமைகளுந் தோன்றும்.

ஆகலின், புண்ணியமென்பது ஜீவகாருண்ய மொன்றேயென்றும், பாவமென்பது ஜீவகாருண்யமில்லாமை யொன்றேயென்றும் அறியவேண்டும். அன்றி ஜீவகாருண்ய ஒழுக்கத்தினால் வரும் விளக்கமே கடவுள் இன்பமென் றும்,—இவ் விளக்கத்தையும் இன்பத்தையும் பலகாலறிந்து அடைந்து அனு பவித்து நிறைவுபெற்ற சாத்திய ஞானிகளே மேற்குறித்த பேரின்பலாபத் தைப் பெற்றவர்களென்றும், அவர்களே கடவுளை அறிவாலறிந்து கடவுள்மய மானவர்களென்றும் சத்தியமாக அறியவேண்டும்.

9. ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் இலக்கணம் என்ன? என்று அறியவேண்டில் :—

ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயத்தில் பொதுவாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக்கொண்டு கடவுள் வழிபாடுசெய்து வாழ்தல் என்று அறியவேண்டும்.

10. ஜீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத் தைக்கொண்டு கடவுள் வழிபாடு செய்வது எப்படி? என்றறிய வேண்டில் :—

ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம்—காருண்யம்—உண்டாக உண்டாக அந்த ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்பட்டுப் பூரணமாக விளங்கும்; அத்திருவருள் விளங்கவே கடவுள் இன்பம் அனுபவமாகிப் பூரணமாகும்.

11. ஆன்ம உருக்கம் உண்டாக உண்டாக ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப் படுவது எப்படி? என்றறிய வேண்டில்:—

தயிருக்கும் கட்டைக்கும் கடைதலால் நெகிழ்ச்சி உண்டாக உண்டாக அதன் உள்ளிருக்கின்ற வெண்ணெயும் நெருப்பும் வெளிப்படுவதுபோல,—வெளிப்படுமென்று அறியவேண்டும்.

திருவருள் விளங்குவதிலல் கடவுள் இன்பம் அனுபவ மாகிப் பூரணமாவது எப்படி? என்றறிய வேண்டில்:—

வெண்ணெயும் நெருப்பும் வெளிப்படவே அவற்றின் உண்மைத் தன்மை அனுபவமாகிப் பூரணமாவதுபோல,—கடவுள் இன்பம் பூரணமாகு மென்றறிய வேண்டும்.

ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம் எப் போது வெளிப்படும்? என்றறிய வேண்டில்:—

பசி, கொலை, பிணி, ஆபத்து, தாகம் பயம், இன்மை, இச்சை இவைகளால் ஜீவர்கள் துக்கத்தை அனுபவிக்கக்கண்ட போதும்,—கேட்ட போதும்,—அறிந்தபோதும்,—ஆன்ம உருக்கம் உண்டா மென்றறிய வேண்டும்.

பசி என்பது

பசி என்பது,—ஆகாரம் பெருமையினல் வயிற்றினுட்பற்றி நின்று தேகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள கருவி கரணங்களின் தன்மைகளைச் சுடுதல் செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவிப்பதற்கு முதற்காரணமாகிய விகற்ப மாயாகாரியப் பிண்டப்பகுதி நெருப்பு.

கொலை என்பது

கொலை என்பது,—தேகத்தின் அகத்தும் புறத்துமுள்ள கருவி கரணங்களைப் பல வேறு கருவிகரணப் புடைபெயர்ச்சிகளால் பதைப் புண் டாகக் கலகஞ்செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவித் தற்கு நிமித்தமாகிய விகற்ப பூதகாரிய கொடுந்தொழில்.

பிணி என்பது

பிணி யென்பது:—வாத பித்த சிலேத்தும விகற்பங்களால் மாறு பட்டு தேகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள கருவி கரணங்களை நலிவு

செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவித்தற்கு நிமித்த மாகிய நிறை விகற்ப மாயா காரியப் பிண்டப்பகுதி வேற்றுமை விளைவு.

ஆபத்து என்பது

ஆபத்து என்பது :—அகங்காரத்தாலும், மற்றியாலும், கரும வேறுபாட்டாலும், தேகபோக அனுபவங்களைத் தடுக்கின்ற விக்கினங்கள்.

பயம் என்பது

பய மென்பது தேகமுதலிய கருவிகளுக்கு நட்டஞ் செய்வதாகிய விடயங்கள் நேரிட்டபோது கரணங்களுக்கும் அறிவுக்கும் உண்டாகின்ற நடுக்கம்.

இன்மை என்பது

இன்மை யென்பது கல்வி செல்வம் முதலிய கருவிகளைத் தற் சுதந்தரத்திற் பெறுமை.

இச்சை என்பது

இச்சை யென்பது அடையக்கருதிய விடயங்களில் அருமை குறித்து அவற்றை மேன்மேலும் கருதச்செய்கின்ற சித்தவிருத்தி என்று அறியவேண்டும்.

முதற்பட்டதும்—இடைப்பட்டதும்

இவற்றுள் பசி கோலை, என்பவை இம்மை இன்பம், மறுமை இன்பம், பேரின்பம் என்கிற மூன்றையும் தடுத்தலால் முதற்பட்ட தடையென்றும்: பிணி, பயம், ஆபத்து, இன்மை என்பவை இம்மை மறுமை இன்பங்களைச் சிறிது தடுத்தலால் இடைப்பட்டன வென்றும் அறியவேண்டும்.

ஜீவகாருண்யத்தின் வல்லபம்

ஜீவகாருண்யத்தின் வல்லபம் யாதென்றறிய வேண்டில் :—

பிற உயிர்களிடத்துப் பசி கொலை முதலியவற்றுள் எதனுற் காருண்யந் தோன்றியதோ அதனல் அவ்வுயிர் வருந்தாதபடி அதை நீக்குதற்கு முயல்விப்பது அதன் வல்லபமென் றறியவேண்டும்.

ஜீவகாருண்யத்தின் பிரயோஜனம்

ஜீவகாருண்யத்தின் பிரயோஜனம் யாதென்றறிய வேண்டில் :—

உயிர்களுக்கு இன்பம் உண்டுபண்ணுவது அதன் பிரயோஜனம் என்றறியவேண்டும்.

இந்த ஜீவகாருண்யத்தின் சொரூப சுபாவ வியாபக முதலியவை களை மூன்றுவது பிரிவுள் கண்டு கொள்க.

ஜீவகாருண்ய ஒழுக்கம்

(மூன்றுவது பிரிவு)

ஜீவகாருண்யமாகிய ஆன்ம உருக்கம் உண்டாவதற்கு உரி மையெது? என்றறியவேண்டில்:—

திருச்சிற்றம்பலம்

ஈவ்களெல்லாம் ஒரு தன்மையாகிய கடவுளியற்கை உண்மை எகதேசங்களாகி கடவுளருட்சத்தியால் பூதகாரிய தேகங்களில் வருவிக்கப்பட்ட படியால் இந்த ஜீவர்களெல்லாம் ஒருநிமை இனத்தவர்களேயாகும். சகோதரருள் ஒருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுவதைக் கண்ட போதும்,—கேட்டபோதும்,—அறிந்தபோதும்,—அவர்தேகம் நமது சகோதர தேக மென்றும் தெரிந்துகொண்ட,—மற்றொரு சகோதரருக்கு உருக்க முண்டாவது தேக வுரிமையால் என்று அறிவதுபோல,—ஒரு ஜீவன் ஒரு ஆபத்தால் துக்கப்படுவதைக் கண்ட போதும்,—கேட்டபோதும்,—அறிந்த போதும்,—அந்த ஜீவனைத் தமது ஆன்ம இனம் என்று தெரிந்துகொண்ட மற்றொரு ஜீவனுக்கு உருக்கமுண்டாவது ஆன்ம உரிமையென்று அறிய வேண்டும்.

ஜீவர்கள் துக்கப்படுவதைக்கண்டபோதும் சிலர் ஜீவகாருண்யமில்லாமல் கடின சித்தர்களாயிருக்கின்றார்களே, இவர்களுக்கு ஆன்ம உரிமையில்லாமற்போவது என்? என்றறியவேண்டில்:—

துக்கப்படுகின்றார்களென்றும் துக்கப்படுவார்களென்றும், அறியத்தக்க ஆன்ம அறிவு என்கின்ற கண்ணனது அருளான காசத்தால் மிகவும் ஒளிமழுங்கின படியாலும், அவைகளுக்கு உபகாரமாகக் கொண்ட மன முதலான உபகரணங்களாகிய கண்ணாடிகளும் பிரகாசப் பிரதிபலித மில்லாமல் தடிப்புள்ளவைகளாக இருந்தபடியாலும் கண்டறியக் கூடாமையாயிற்று. அதனல் ஆன்ம உரிமை இருந்தும் ஜீவகாருண்யமில்லாமல் இருந்திதன் றறியவேண்டும்.

ஆனல் இந்த ஆன்ம உருக்கம் என்கின்ற ஜீவகாருண்யத்திற்கு ஆற்றல் எவ்விடத்து உண்டாதுமென்று அறிய வேண்டில்:—

பசி, கொலை, பிணி முதலிய தடைகளில் எந்தத் தடைப்பற்றி ஜீவ காருண்யந் தோன்றியதோ அந்தத் தடையை நிவர்த்தி செய்கின்றவிடத்துத் தான் ஜீவகாருண்யத்திற்கு ஆற்றல் இருந்ததென்று அறியவேண்டும்.

இதனால், 'ஜீவர்களுக்குப், பசி கொலை பிணி முதலியவற்றால் வருந்துன்பங்களெல்லாம் மனம் கண் முதலிய கரணேந்திரிய அனுபவங்களே யல்லது ஆன்ம அனுபவங்களல்ல: ஆகலில், ஜீவகாருண்யத்தால் விசேஷ பிரயோஜன மில்லையே' என்பார்க்கு உத்தரம் யாது? என்றறிய வேண்டில்:—

இந்தத் தேகத்தில் ஆன்மாவும்:—அறிவுக்கறிவா யிருக்கிற கடவுள் விளக்கமும்—தவிர, கரணம், இந்திரியம் முதலிய மற்றத் தத்துவங்களெல்லாம் மூடமாகிய கருவிகளே யல்லது அறிவாகிய ஆன்மாக்களல்ல. ஆகலில், சுகதுக்கங்களை அறிவாகிய ஆன்மாக்கள் அனுபவிக்குமேயல்லது மூடமாகிய தத்துவங்கள் அனுபவிக்க அறியா. மனம் முதலான கரணங்களும், கண் முதலிய இந்திரியங்களும் ஜீவர் வாழ்க்கைக்குக் கடவுள் அருளால் கட்டிக்கொடுக்கப்பட்ட சிறிய வீட்டின் கருவிகளாகும். இன்ப துன்பங்களை வீட்டிலிருக்கின்றவன் அனுபவிப்பானல்லது வீட்டின் கருவிகளாகிய மண் கல், மரம், கால், தீ, நீர், முதலியவைக ளனுபவிக்க அறியமாட்டா.

அன்றியும், காசத்தால் ஒளி மழுங்கப்பட்டு உபநயனங்களாகிய கண்ணுடியால் பார்க்கின்ற கண்கள் துன்ப விஷயங்களைக் கண்டபோது—அக்கண்கள் நீர் சொரியுமே யல்லது கண்ணுடி நீர் சொரியாது. ஆகலில் ஆன்மதிருஷ்டிக்கு உபநயனங்களாக இருக்கிற மனம் முதலிய கருவிகள் சுகதுக்கங்களை அனுபவிக்க அறியாவென்று அறியவேண்டும்.

ஒரு ஜீவனுக்குச் சுகம் நேரிட்டபோது மனம் மகிழ்கின்றது, துக்கம் நேரிட்டபோது மனந்தளர்கின்றது; என்றால், சுகதுக்கங்களையும் மனம் அனுபவிப்பதாக அறியப்படாதோ என்பவர்க்கு உத்தரம் யாது? என்றறிய வேண்டில்:—

பளிங்கு வீட்டினுள் இருக்கின்ற வீட்டுத் தலைவனுடைய தேக விளக்கமும் தேகச் சோர்வும் அந்த வீட்டிற் பிரதிபலித்துப் புறத்தில் தோன்றுவது போலவும், கண்களின் மலர்ச்சியுஞ் சோர்வும் அக்கண்களிலிட்ட உபநயனங்களில் பிரதி பலித்துப் புறத்தில் தோன்றுவதுபோலவும், சுகதுக்கங்களால் ஆன்மாவுக்கு உண்டாகின்ற மகிழ்ச்சியும் தளர்ச்சியும் மனம் கண் முதலிய கரணேந்திரியங்களிற் பிரதிபலித்துப் புறத்தில் தோற்றுகின்றது.

அன்றியும் ஒரு வீட்டினுள் வைத்த தீபமானது மிகுந்த விளக்க முள்ளதாக விளங்குகின்றபோது, அந்த வீடும் அந்த வீட்டின் கருவிகளும்

மிகவும் விளக்கமுள்ளதாக விளங்குகின்றன. அந்தத் தீபம் விளக்கம் குறையும்போது வீடும் வீட்டிலுள்ளவைகளும் விளக்கம் குறைகின்றன.

ஆகலில், சுகதுக்கங்கள் மனத்துக்கு அனுபவமல்லவென்றும்,—ஆன்மாவுக்கே அனுபவமென்றும்,—அனுபவத்திற்கு காணைக்கிரியங்கள் ஆன்மாவுக்கு உபகாரக் கருவிகளே என்றும்,—பிரமாணிப்பதே உத்தமமென்றறிய வேண்டும்.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவர்களில் அநேகர், பசி, கொலை, பிணி, முதலியவற்றால் மிகவுந் துன்பப் படுவது எதனால்? என்றறிய வேண்டில்:—

முன் தேகத்தில் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை விரும்பாமல்விட்டுக், கடின அறிவுள்ளவர்களாகித் துன்மார்க்கத்தில் நடந்த ஜீவர்களாகலால், கடவுள் விதித்த அருளாக்கினைப்படி பசி, கொலை, பிணி முதலியவற்றால் மிகவுந் துக்கப்படுகின்றார்களென்று அறியவேண்டும்.

முன் தேகம் உண்டென்பது எப்படி? என்றறிய வேண்டில்:—

ஒரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடியிருக்கவந்த ஒரு சமுசாரி, அதற்கு முன்னும் வேறொரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடித்தனம் செய்திருந்தானென்றும்,—வீடில்லாமல் குடித்தனம் செய்யமாட்டானென்றும்,—பின்வந்த வீட்டிலும் கலகம் நேரிட்டால் திரும்ப வேறொரு வீட்டில் குடிபோவானென்றும்,—தனக்கென்று சுதந்தரமாக ஒரு வீடு கட்டிக்கொண்டால் முன்போல் குடிக்கூலி கொடுத்துக் குடிபோவதை விடுவானென்றும் அறிவதுபோல;—இந்தத் தேகத்தில் ஆகாரக் கூலி கொடுத்துக் குடியிருந்த ஜீவன், இதற்கு முன்னும் வேறொரு தேகத்தில் அந்தக் கூலி கொடுத்து ஜீவித்திருந்ததென்றும்,—தேகமில்லாமல் ஜீவித்திருக்கமாட்டாதென்றும்,—இந்தத் தேகத்திலும் கலகம் நேரிட்டால் இன்னம் வேறொரு தேகத்திற் குடிபோகுமென்றும்,—தனக்கென்று சுதந்தரமாக நித்தியமாகிய அருட்டேகத்தைப் பெற்றுக்கொண்டால் பின்பு வேறொரு தேகத்தில் குடிபோகமாட்டாதென்றும் அறியவேண்டும்.

சிலர் முன்தேகம் எடுத்ததும் பின்தேகம் எடுப்பதும் இல்லை, இப்பொழுது எடுத்ததேகம் அழிந்தால், தேகியும் அழிந்து விடுவானென்றும் சிலர் முத்தியடைவானென்றும் சிலர் பாவபுண்ணியங்களை எக்காலத்தும் அனுபவிப்பானென்றும் சிலர் தேகம்இல்லாமல்தேகம் அழிந்த

விதத்திருப்பா னென்றும் பலவாறு வாதிப்பது எதனால்? என்றறிய வேண்டில்:—

அவரவர்களும் தேகமே ஆன்மாவென்றும்,—போகமே முத்தியென்றும்—கொள்ளப்பட்டவர்களாதலால்,—மூடமாகிய தேகத்தில்,—அறிவாகிய ஆன்மா வொருவன் உண்டென்றும்,—அவனுக்குப் பந்தமுத்தி உண்டென்றும்,—முத்தியடைகின்ற பரியந்தம் பந்த விகற்பத்தால் வேறு வேறு தேகம் எடுப்பானென்றும்,—பிரத்யட்ச அனுபவமான பிரமாணங்களால் உண்மையை அறிந்துகொள்ளப்படாதவர்களென்றும்,—அவர்கள் கொள்கைக்குப் பிரமாணமும் யுத்தியும் அனுபவமும் இல்லையென்றும்,—அறிய வேண்டும்.

ஜீவர்கள், தங்கள் சுதந்தரத்தாலே தேகபோகங்களை யடைகின்றார்களென்றால்,—தங்கள் இச்சைக்கடுத்த தேகங்களையும் போகங்களையும் அடையவேண்டும்.—அப்படி யின்றிச் சிலர் இச்சைக்கடுத்த பழுதற்ற அங்கமுள்ளவர்களாகவும்,—சுகங்களை யனுபவிக்கின்றவர்களாகவும்,—சிலர், இச்சைக்கு அடாத பழுதுள்ள அங்கமுள்ளவர்களாகவும்,—துக்கங்களை அனுபவிக்கின்றவர்களாகவும்,—இருக்கின்றார்கள். ஆகலில், ஜீவர்கள் தேக போகங்களைத் தங்களிச்சையால் அடைந்தவர்களல்லவென்றும்,

அப்படியடைவது இயற்கை என்றால்:—இயற்கை என்பது எக்காலத்தும் வேறுபடாமல் ஒரு தன்மையாக இருத்தல் வேண்டுமென்றும்—அப்படி ஒருதன்மையாக இராமல் பலவேறு வகைப்படுதலால் இயற்கையல்லவென்றும்,

கடவுள் இச்சையென்றால்—கடவுள் கருணையும் நீதியும் உடையவராதலில் எல்லா ஜீவர்களுக்கும் ஒரு தன்மையாகச் சுக அனுபவங்களையே அடைவிக்கவேண்டும்:—அப்படி யடைவிக்காமையால் கடவுளிச்சையல்ல வென்றும்,

கடவுளருளால் சிருஷ்டித்த முதல் சிருஷ்டியில் தமது இயற்கை அனுபவிக்கும்படி விதித்த விதிகளைப் பழகாமையால், முயற்சி தவறினபடியால், அந்த அநாதிமல வாசனையின் முயற்சி பேதங்களால் பின் பல பல தேகபோகங்கள் இரண்டாவது சிருஷ்டியில் நேரிட்டதென்றும்,—பிரமாணித்தறிய வேண்டும்.

எடுத்துக்கொண்ட தேகம் தவறினால் வேறு தேகம் எடுப்பதில்லை யென்றால்,—முதல் சிருஷ்டி தொடங்கி இதுவரையில் அழிந்த தேகங்களுக்கு அளவில்லை;—அப்படியே ஆன்மாக்களுக்கும் அளவில்லை;—ஆகவே இனி ஆன்மாக்கள் தேகங்களை எடுக்காம லிருக்கவேண்டும். அப்படியில்லை;—

தேகங்களை எடுத்துக்கொண்டேயிருக்கிறார்கள். ஆயின் ஆன்மாக்களை நூதன மாகச் செய்து அது வருவதற்கு நூதன நூதனமாகத் தேகங்களை வருவிப் பதென்றால்,—நூதன நூதனமாகத் தேகமாத்திரம் செய்யக்கூடும்,—தேகத் திலிருக்கிற ஆன்மாவை நூதன நூதனமாகச் செய்யப்படாது,—ஆன்மா எக்காலத்தும் உள்ளதாய் விளங்கப்பட்டது,—அது தோன்றுதலும் அழி தலுமில்லை,—அதை ஆக்கவும் அழிக்கவும்படாது.—ஆன்மாக்களும் குடத் தைப்போல் செய்யப்படுவதாலல்,—சுகதுக்கங்களை அனுபவிக்கவறியாது,—புண்ணிய பாவங்களை அடையமாட்டாது.—குடம் அழிவதுபோல் அழிந்து போய்விடும்.—அழியுமானால், பந்தமுத்திகளுமில்லை ;—புண்ணிய பாவங்களு மில்லை.—ஆதலால் குடம் உடைகின்றபோது குடத்தினுள் இருந்த காற்றும் ஆகாயமும் உடையாமலிருப்பது சிறுவர்களுக்கும் தெரியும்.—ஆகலில், தேகம் அழியும்போது தேகத்தினுள் இருக்கின்ற ஆன்ம விளக்கமும் கடவுள் விளக்கமும் அழியாதென்றும்,—ஆன்மாக்கள் முயற்சி பேதத்தால் தேக போக பேதங்களை யடைவது உண்மையென்றும்,—யுத்தியால் அறிய வேண்டும்.

ஒரு தாய் தந்தைகளுக்கு ஒரு காலத்தில் இரட்டைப் பிள்ளை பிறக்கின்றது, அவற்றுள் ஒரு பிள்ளை சிவத்தது—ஒரு பிள்ளை கறுத்தது; ஒரு பிள்ளை அங்கப்பழுதுள்ளது ஒரு பிள்ளை அங்கப் பழுதில்லாதது; ஒரு பிள்ளை பால் குடிக்கின்றது ஒரு பிள்ளை பால் குடிக்கில் சத்தம் பண்ணுகின் றது; ஒரு பிள்ளை வியாதியுள்ளது ஒரு பிள்ளை வியாதி யில்லாதது; ஒரு பிள்ளை இரண்டு வயதில் பேசுகின்றது; ஒரு பிள்ளை பேசத் தெரியாமலிருக் கின்றது; இந்த இரட்டைப் பிள்ளைகளுக்கு இந்த பேதம் எவ்விடத்தில் யா தொரு ஏதுக்களுமில்லாமல் வந்ததை யூன்றி விசாரிக்கில், முன்பிறப்பில் எடுத்ததேகத்தின் கர்மமாகிய முயற்சிபேதங்களென்றும்,—இந்த இரட்டைப் பிள்ளைக்கு மூன்று வயதில் விளையாடும்போது தனித்தனி தாய் தந்தைகள் கொடுத்த தின்பண்டங்களை வைத்துத் தின்கிற தருணத்தில் இவ்விரண் டு பிள்ளைகளும் தவிர வேறுபிள்ளை யொன்றுவந்தால் அதைக்கண்டு இவ்விரு வரில் ஒரு பிள்ளை தன் கையிலிருக்கின்ற தின்பண்டத்தைக் கொடுக்கின் றது; மற்றொரு பிள்ளை கொடுக்கப்படாதென்று தடுக்கின்றது; ஒரு பிள்ளை புத்தகத்தை எடுத்துச் சிறுவர் படிக்கின்றதுபோல் படிக்கின்றது மற் றொரு பிள்ளை புத்தகத்தைப் பிடுங்கி யெறிந்து படிக்கப்படாதென்று அடுக் கின்றது: ஒரு பிள்ளை பயப்படுகின்றது, மற்றொரு பிள்ளை பயப்படாட விருக்கின்றது—இப்படியே இந்தப் பிள்ளைகளுக்கு தயை, அன்பு, அறிவு, செய்கை முதலியவைகள் தாய் தந்தையர்கள் கற்பிக்காத காலத்திற்றானே உள்ளதாகவும் இல்லாததாகவும் எப்படி வந்ததென்று விசாரிக்கத் தொடங் கில், இந்த இரண்டு பிள்ளைகளுக்கும் முன் பிறப்பில் எடுத்த தேகத்தி லிருந்த வாசனை இந்தப் பிறப்பில் இந்தத் தேகத்தில் கற்பியாமல் வந்த

தென்றும்—அனுபவத்தால் கருதி யறியவேண்டும். இப்படி யறிந்தால் ஜீவர்களுக்கு முன்னும் பின்னும் தேகமுண்டென்பது நன்றாகத் தெரியும். இப்படி யறியமாட்டாமையால் பிறப்பில்லை என்கிறார்களென்றறிய வேண்டும்.

அன்றி, இந்தத் தூலதேகம் அழியாம லிருக்கின்றபோதே சொற்பனத்தில் ஆன்மா வேறு வேறு தேகமெடுத்துப் பல பல விசித்திரங்களை யனுபவிக்கின்றதாலும், இந்தத் தேகம் நீங்குப்போது வேறு தேகமெடுத்து வாசனைக்கடுத்த அனுபவங்களை அனுபவிக்கு மென்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

அன்றி, சித்தி விசேஷத்தால் இந்தத் தேகத்திலிருந்த ஒருவன் இந்தத் தேகத்தைவிட்டு வேறு தேகத்திற்குப் பிரவேசிக்கின்றான் என்றால், இந்தத் தேகம் அழியும்போது இதிலிருந்த ஆன்மா கன்மபேதத்தால் வேறு தேகத்தில் பிரவேசிக்கு மென்பதைச் சொல்லவேண்டுவதில்லை.

அன்றி, ஒரு பட்சியானது காலவேற்றுமையாலும் குணவேற்றுமையாலும் முன் முட்டையென்கின்ற ஒரு தேகத்திலிருந்து, பின்பு குஞ்சு என்கின்ற மற்றொரு தேகத்தில் வருகிறதாலும், ஆன்மாக்கள் கர்ம பேதத்தால் இந்தத் தேகத்திலிருந்து வேறு தேகத்தில் வருமென்பது சொல்ல வேண்டுவதில்லை.

அன்றி, ஒரு குளவியால் ஒரு கிருமி, புழுவென்கிற தேகத்திலிருந்து குளவியென்கிற தேகத்தில் வருமாலும், கருமத்தினால் ஒரு ஆன்மா ஒரு தேகத்திலிருந்து மற்றொரு தேகத்தில் வருமென்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

அன்றி, ஒரு ஆன்மா ஒரு பிறப்பிற்றானே சில தேகத்திலிருந்து பாலதேகத்திலும், பாலதேகத்திலிருந்து வாலிபதேகத்திலும், வாலிபதேகத்திலிருந்து வார்த்திபதேகத்திலும் வருமாலும், அந்த ஆன்மா கன்ம பேதத்தால் வேறு பிண்ட தேகத்தில் வருமென்பதைச் சொல்லவேண்டுவதில்லை.

அன்றி, மந்திர தந்திரபேதத்தால் ஒரு பிறப்பிற்றானே பெண் தேகத்திலிருந்து ஆண்தேகத்திலும், ஆண்தேகத்திலிருந்து பெண் தேகத்திலும் ஆன்மாக்கள் வருமாலும், கர்மபேதத்தால் வேறு தேகம் எடுக்கும் என்பது சொல்ல வேண்டுவதில்லை.

அன்றி, ஒரு தாபர தேகத்திலிருந்த ஆன்மாவானது அந்தத் தேகத்திற்றானே மரகதக்கிருமி என்கின்ற புழு தேகத்தில் வருகின்றது. அன்றி, ஓர் எறும்பானது அந்தத் தேகத்திலிருந்தே பீலிகபட்சி என்கின்ற தேகத்தில் வருகின்றது. அன்றி, ஓர் பாம்பானது அந்தத் தேகத்திலிருந்தே

சர்ப்பபட்சி : யென்கிற வேறொரு தேகத்தில் வருகின்றது. இப்படியே மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாபர முதலிய அந்தந்த தேகங்களிலிருக்கின்ற ஆன்மாக்கள் அந்தந்த தேகத்திலிருந்தே வேறு தேகங்களை யெடுக்கின்றனவாதல், அந்தந்த தேகங்களழியும் போது வேறு தேகங்களெடுக்கு மென்பது சொல்லவேண்டுவதில்லை.

சிலர் 'முன்தேகம் உண்டென்பது உண்மையாதல், அந்தத் தேகத்தில் நீ யார்? உன் சரிதமெது? சொல்' என்கின்றார்களே; அவர் கேள்விக்கு உத்தரம் என்னென்றறிய வேண்டில் :—

எழுபது வயதுள்ள ஒருவனைப் பார்த்து உனக்கு ஐந்து வயதில் உன் சரித்திரம் என்னவென்று கேட்டபோது 'நேற்றைப் பொழுதில் நடந்த என் சரித்திரம் இன்றைப் பொழுதில் அவஸ்தையால் சொல்லத் தெரியாது விழிப்பேனென்றால், என் ஐந்து வயதின் சரித்திரத்தை எப்படிச் சொல்ல மாட்டுவேன்? நீயெப்படிக் கேட்கக்கூடும்?' என்கின்றான். ஒரு பிறப்பில் நடந்த அவனது சரித்திரங்களையே அவஸ்தை தேதங்களால் அறிந்து சொல்ல மாட்டாமல் திகைப்புண்டாவதென்றால், முன் தேகத்தில் நடந்த சரித்திரங்களை அநேக அவஸ்தையில் திகைக்கின்ற நாம் எப்படியறிந்து சொல்லக்கூடும் என்பதே உத்தரம் என்றறியவேண்டும்.

ஜீவகாருண்ய ஒழுக்கம் மூன்றுவது பிரிவு முற்றிற்று.

சன்மார்க்க விளக்கத்தின் முதற்பிரிவாகிய

ஜீவகாருண்ய ஒழுக்கம் முற்றிற்று*.

அறுசீரடியாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மருவாணைப் பெண்ணைக்கி யொருகணத்திற் கண்விழித்து வயங்கு மப்பெண்
உருவாணை யுருவாக்கி யிறந்தவரை யெழுப்புகின்ற வுறுவ னேனுங்
கருவாணை யுறவிரங்கா துயிருடம்பைக் கடிந்தண்ணுங் கருத்த னேலெங்
குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை ஞானியெனக் கூறு ணீதே.

திருச்சிற்றம்பலம்

(2-ந் திருமுறை. பக்கம் 359)

* சுவாமிகள் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை மிக்க விரிவாக ஏழு பிரிவில் எழுதி உபதேசித்திருப்பதாகக் கேள்வி. இன்றைய வரையில் திருவருட் செயலால் கிடைத்தவை இவ்வளவே.

SRI VENKATESWARA ORIENTAL INSTITUTE
LIBRARY
TIRUPATI

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா

ஆறாவது திருமுறை

1. அருட்பெருஞ்ஜோதி அகவல்

நிலைமண்டில ஆசிரியப்பா

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

அருட்சிவ நெறிசார் அருட்பெரு நிலைவாழ்
அருட்சிவ பதியாம் அருட்பெருஞ் ஜோதி

ஆகம முடிமேல் ஆரண முடிமேல்
ஆகமின் மேலங்கிய அருட்பெருஞ் ஜோதி

இகநிலைப் பொருளாய்ப் பரநிலைப் பொருளாய்
அகமறப் பொருந்திய அருட்பெருஞ் ஜோதி

ஈனமின் றிகபரத் திரண்டின்மேற் பொருளாய்
I ஆனலின் மேலங்கிய அருட்பெருஞ் ஜோதி 10

உரைமனங் கடந்த ஒருபெரு வெளிமேல்
அரசுசெய் தோங்கும் அருட்பெருஞ் ஜோதி

I னல் என்பது—ஆகாயம், நீக்கம்.

ஊக்கமு முணர்ச்சியும் ஒளிதரு மாக்கையும்
ஆக்கமு மருளிய அருட்பெருஞ் ஜோதி

எல்லையில் பிறப்பெனும் இருங்கடல் கடத்தியென்
அல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

ஏழு நிலைமிசை ஏற்றியென் றனக்கே
ஆழுறு காட்டிய அருட்பெருஞ் ஜோதி

ஐயமுந் திரிபும் அறுத்தென துடம்பினுள்
ஐயமு நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

ஒன்றென இரண்டென ஒன்றிரண் டெனவிலை
அன்றென விளங்கிய அருட்பெருஞ் ஜோதி

ஓதா துணர்ந்திட ஒளியளித் தெனக்கே
ஆதார மாகிய அருட்பெருஞ் ஜோதி

ஔவிய மாதியோர் ஆறுந் தவிர்த்தபோர்
அவ்வியல் வழுத்தும் அருட்பெருஞ் ஜோதி

திருநிலைத் தனிவெளி சிவவெளி யெனுமோர்
அருள்வெளிப் பதிவளர் அருட்பெருஞ் ஜோதி

சுத்தசன் மார்க்கச் சுகத்தனி வெளியெனும்
அத்தகைச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

சுத்தமெய்ஞ் ஞானச் சுகோதய வெளியெனும்
அத்து விதச்சபை அருட்பெருஞ் ஜோதி

தூயக லாந்தச் சுகந்தரு வெளியெனும்
ஆயசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி

ஞானயோ காந்த நடத்திரு வெளியெனும்
ஆனியில் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

விமலபோ தாந்தமா மெய்ப்பொருள் வெளியெனும்
அமலசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி

பெரியநா தாந்தப் பெருநிலை வெளியெனும்
அரியசிற் றம்பலத் தருட்பெருஞ் ஜோதி

சுத்தவே தாந்தத் துரியமேல் வெளியெனும்
அத்தகு சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

சுத்தசித் தாந்தச் சுகப்பெரு வெளியெனும்
அத்தனிச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

சுகாமெய்ஞ் ஞானத் தனிப்பெரு வெளியெனும்
அகார நிலைப்பதி அருட்பெருஞ் ஜோதி

தத்துவா தீதத் தனிப்பொருள் வெளியெனும்
அத்திரு வம்பலத் தருட்பெருஞ் ஜோதி

சச்சிதா னந்தத் தனிப்பர வெளியெனும்
அச்சிய லம்பலத் தருட்பெருஞ் ஜோதி

சாகாக் கலைநிலை தழைத்திடு வெளியெனும்
ஆகா யத்தொளிர் அருட்பெருஞ் ஜோதி
காரண காரியங் காட்டிடு வெளியெனும்
ஆரண சிற்சபை அருட்பெருஞ் ஜோதி
ஏக மனேகம் எனப்பகர் வெளியெனும்
ஆகம சிற்சபை அருட்பெருஞ் ஜோதி
வேதா கமங்களின் விளைவுகட் கெல்லாம்
ஆதார மாஞ்சபை அருட்பெருஞ் ஜோதி
என்று தியசுடர்க் கியனிலை யாயவை
அன்றுந் திருச்சபை அருட்பெருஞ் ஜோதி
சமயங் கடந்த தனிப்பொருள் வெளியாய்
அமையுந் திருச்சபை அருட்பெருஞ் ஜோதி
மூச்சுடர் சுளுமொளி முயங்குற வளித்தருள்
அச்சுட ராஞ்சபை அருட்பெருஞ் ஜோதி
துரியமுங் கடந்த சுகபூ ரணந்தரும்
அரியசிற் றம்பலத் தருட்பெருஞ் ஜோதி
எவ்வகைச் சுகங்களும் இனிதுற வளித்தருள்
அவ்வகைச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி
இயற்கையுண் மையதாய் இயற்கையின் பமுமாம்
அயர்ப்பிலாச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி
சாக்கிரா தீதத் தனிவெளி யாய்நிறை
வாக்கிய சிற்சபை அருட்பெருஞ் ஜோதி
சுட்டுதற் கரிதாஞ் சுகாதீத வெளியெனும்
அட்டமேற் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி
நவந்தவிர் நிலைகளும் நண்ணுமோர் நிலையாய்
அவிந்தவிர் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி
உபயபக் கங்களும் ஒன்றெனக் காட்டிய
அபயசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி
சேகர மாம்பல சித்தி நிலைக்கெலாம்
ஆகர மாஞ்சபை அருட்பெருஞ் ஜோதி
மனுதிகட் கரிய மதாதீத வெளியாய்
அனுதிசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி
ஓதிநின் றுணர்ந்துணர்ந் துணர்தற் கரிதாம்
ஆதிசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி
வாரமு மழியா வரமுந் தருந்திரு
ஆரமு தாஞ்சபை அருட்பெருஞ் ஜோதி
இழியாப் பெருநலம் எல்லா மளித்தருள்
அழியாச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

கற்பம் பலபல கழியினு மழிவுறு
அற்புதந் தருஞ்சபை அருட்பெருஞ் ஜோதி

எனைத்துந் துன்பிலா இயலளித் தெண்ணிய
அனைத்துந் தருஞ்சபை அருட்பெருஞ் ஜோதி

பாணிப் பிலதாய்ப் பாவிகளைக் கருள்புரி
ஆணிப்பொ னம்பலத் தருட்பெருஞ் ஜோதி

எம்பல மெனத்தொழு தேத்திகளைக் கருள்புரி
அம்பலத் தாடல்செய் அருட்பெருஞ் ஜோதி

தம்பர ஞான சிதம்பர மெனுமோர்
அம்பரத் தோங்கிய அருட்பெருஞ் ஜோதி

எச்சபை பொதுவென இயம்பின ரறிஞர்கள்
அச்சபை யிடங்கொளும் அருட்பெருஞ் ஜோதி

வாடுதல் நீக்கிய மணிமன் றிடையே
ஆடுதல் வல்ல அருட்பெருஞ் ஜோதி

நாடகத் திருச்செயல் நவிற்றிடு மொருபேர்
ஆடகப் பொதுவொளிர் அருட்பெருஞ் ஜோதி

கற்பனை முழுவதுங் கடந்தொளி தருமோர்
அற்புதச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி

ஈன்றநற் முயினும் இனிய பெருந்தய
வான்றசிற் சபையில் அருட்பெருஞ் ஜோதி

இன்புறு நானுளத் தெண்ணியாங் கெண்ணியாங்
கன்புறத் தருசபை அருட்பெருஞ் ஜோதி

எம்மைபு மென்னைவிட் டிறையும் பிரியா
தம்மையப் பனுமாம் அருட்பெருஞ் ஜோதி

பிறிவுற் றறியாப் பெரும்பொரு ளாயென்
அறிவுக் கறிவாம் அருட்பெருஞ் ஜோதி

ஜாதியு மதமுஞ் சமயமுங் காணு
ஆதிய நாதியாம் அருட்பெருஞ் ஜோதி

தனுகர ணாதிகள் தாங்கடந் தறியுமோர்
அனுபவ மாகிய அருட்பெருஞ் ஜோதி

உனுமுணர் வுணர்வாய் உணர்வெலாங் கடந்த
அனுபவா தீத அருட்பெருஞ் ஜோதி

பொதுவுணர் வுணரும் போதலாற் பிரித்தே
அதுவெனிற் றோன்று அருட்பெருஞ் ஜோதி

உளவினி லறிந்தால் ஒழியமற் றளக்கின்
அளவினி லளவா அருட்பெருஞ் ஜோதி

என்னையும் பணிகொண் டிறவா வரமளித்
தன்னையி லுவந்த அருட்பெருஞ் ஜோதி

ஓதியோ தாமல் உறவெனக் களித்த
ஆதியீ றில்லா அருட்பெருஞ் ஜோதி
படியடி வான்முடி பற்றினுந் தோற்ற
அடிமுடி யெனுமோர் அருட்பெருஞ் ஜோதி
பவனத்தி னண்டப் பரப்பினெங் கெங்கும்
அவனுக் கவனும் அருட்பெருஞ் ஜோதி
திவளுநற்ற வண்டத் திரளினெங் கெங்கும்
அவளுக் கவளாம் அருட்பெருஞ் ஜோதி
மதனுற்ற வண்ட வரைப்பினெங் கெங்கும்
அதனுக் கதுவாம் அருட்பெருஞ் ஜோதி
எப்பாலு மாய்வெளி யெல்லாங் கடந்துமேல்
அப்பாலு மாகிய அருட்பெருஞ் ஜோதி
வல்லதா யெல்லா மாகியெல் லாமும்
அல்லதாய் விளங்கும் அருட்பெருஞ் ஜோதி
எப்பொருள் மெய்ப்பொருள் என்பர்மெய் கண்டோர்
அப்பொரு ளாகிய அருட்பெருஞ் ஜோதி
தாங்ககி லாண்ட சராசர நிலைநின்
ருங்குற விளங்கும் அருட்பெருஞ் ஜோதி
சத்தர்க ளெல்லாந் தழைத்திட வகம்புறத்
தத்திசை விளங்கும் அருட்பெருஞ் ஜோதி
சத்திக ளெல்லாந் தழைக்கவெங் கெங்கும்
அத்தகை விளங்கும் அருட்பெருஞ் ஜோதி
மூந்துறு மைந்தாழின் மூர்த்திகள் பலர்க்கும்
ஐந்தாழி லளிக்கும் அருட்பெருஞ் ஜோதி
பெரிதினும் பெரிதாய்ச் சிறிதினுஞ் சிறிதாய்
அரிதினு மரிதாம் அருட்பெருஞ் ஜோதி
காட்சியுங் காணுக் காட்சியு மதுதரும்
ஆட்சியு மாகிய அருட்பெருஞ் ஜோதி
இன்புறு சித்திக ளெல்லாம் புரிகவென்
றன்புட னெனைக்கருள் அருட்பெருஞ் ஜோதி
இறவா வரமளித் தென்னைமே லேற்றிய
அறவாழி யாந்தனி அருட்பெருஞ் ஜோதி
நானந்த மில்லா நலம்பெற வெனக்கே
ஆனந்த நல்கிய அருட்பெருஞ் ஜோதி
எண்ணிய வெண்ணியாங் கியற்றுக வென்றெனை
அண்ணியுள் ளோங்கும் அருட்பெருஞ் ஜோதி
மேயினை மெய்ப்பொருள் விளங்கினை நீயது
ஆயினை யென்றருள் அருட்பெருஞ் ஜோதி

எண்ணிற் செழுந்தேன் இனியதெள் ளமுதென
அண்ணித் தினிக்கும் அருட்பெருஞ் ஜோதி

சிந்தையிற் றுன்பொழி சிவம்பெறு கெனத்தொழில்
ஐந்தைபு மெனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

எங்கெங் கிருந்துயிர் எதேது வேண்டினும்
அங்கங் கிருந்தருள் அருட்பெருஞ் ஜோதி

சகமுதல் புறப்புறந் தங்கிய வகப்புறம்
அகப்புற முற்றுமாம் அருட்பெருஞ் ஜோதி

சிகரமும் வகரமும் சேர்தனி யுகரமும்
அகரமு மாகிய அருட்பெருஞ் ஜோதி

உபாச வேதியின் உபயமும் பரமும்
அபாரமு மாகிய அருட்பெருஞ் ஜோதி

மந்தண மிதுவென மறுவிலா மதியால்
அந்தணர் வழுத்தும் அருட்பெருஞ் ஜோதி

எம்புயக் கனியென எண்ணுவா ரிதய
அம்புயத் தமர்ந்த அருட்பெருஞ் ஜோதி

செடியறுத் தெதிட தேகமும் போகமும்
அடியருக் கேதரும் அருட்பெருஞ் ஜோதி

துன்பறுத் தொருசிவ துரிய சுகந்தனை
அன்பருக் கேதரும் அருட்பெருஞ் ஜோதி

பொதுவது சிறப்பது புதியது பழையதென்
றதுவது வாய்த்திகழ் அருட்பெருஞ் ஜோதி

சேதனப் பெருநிலை திகழ்தரு மொருபரை
ஆதனத் தோங்கிய அருட்பெருஞ் ஜோதி

ஓமயத் திருவுரு வுவப்புட னளித்தெனக்
காமயத் தடைதவிர் அருட்பெருஞ் ஜோதி

எப்படி யெண்ணிய தெண்கருத் திங்கெனக்
கப்படி யருளிய அருட்பெருஞ் ஜோதி

எத்தகை விழைந்தன என்மன மிங்கெனக்
கத்தகை யருளிய அருட்பெருஞ் ஜோதி

இங்குறத் திரிந்துளம் இளையா வகையெனக்
கங்கையிற் கனியாம் அருட்பெருஞ் ஜோதி

பாருயப் புரிகெனப் பணித்தெனக் கருளியென்
ஆருயிர்க் குள்ளொளிர் அருட்பெருஞ் ஜோதி

தேவியுற் றொளிர்தரு திருவுரு வுடனென
தாவியிற் கலந்தொளிர் அருட்பெருஞ் ஜோதி

எவ்வழி மெய்வழி என்பவே தாகமம்
அவ்வழி யெனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

டாகா,—அந்த ஜீவகாருண்யமுள்ள சமூசாரிகள்,—ஆற்று வெள்ளத்தாலும், கள்ளர்களாலும், விரோதிகளாலும், கலக்கப்படார்கள், அரசர்களாலும் அவமதிக்கப்படார்கள்,—ஜீவகாருண்யமுள்ள சமூசாரிகளது விளைநிலத்தில் பிரயாசையில்லாமலே விளைவு மேன்மேலும் உண்டாகும்,—வியாபாரத்தில் தடையில்லாமல் லாபங்களும், உத்தியோகத்தில் கெடுதியில்லாத மேன்மையும் உண்டாகும்;—சுற்றங்களாலும் அடிமைகளாலும் சூழப்படுவார்கள்;—துஷ்டமிருகங்களாலும், துஷ்ட ஜந்துக்களாலும், துஷ்டப் பசாசுகளாலும் துஷ்ட தெய்வங்களாலும், பயஞ்செய்யப்படார்கள்.

ஜீவகாருண்யமுள்ள சமூசாரிகளுக்கு எப்படிப்பட்ட ஆபத்துக்களும் அஜாக்கிரதையினாலும் ஊழ்வகையினாலும் சத்தியமாக வராது.

பசித்தவர்களுக்குப் பசியாற்றுவித்து இன்பத்தை உண்டு பண்ணுகின்ற ஜீவகாருண்ய ஒழுக்கமாகிய மேலான விரதமானது—தேவர்கள், மனிதர்கள், பிரமசாரிகள், சமூசாரிகள், தபசிகள், சந்யாசிகள், ஆண் ஜாதியர், பெண் ஜாதியர், வார்த்திபர், வாலிபர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், முதலிய யாவராலும் அவசியம் செய்யத்தக்கதென்பது கடவுளாணை யென்றறிய வேண்டும்.

பசித்தவர்க்குப் பசியை நீக்குகின்ற விஷயத்தில் புருஷனைப் பெண் ஜாதி தடுத்தாலும்,—பெண்சாதியைப் புருஷன் தடுத்தாலும்—பிள்ளைகளைத் தந்தை தடுத்தாலும்,—தந்தையைப் பிள்ளைகள் தடுத்தாலும்,—சீஷரை ஆசாரியர் தடுத்தாலும்,—அடியாரை ஆண்டவன் தடுத்தாலும்,—குடிகளை அரசன் தடுத்தாலும்,—அந்தத்தடைகளால் சிறிதுந் தடைபடாமல் அவரவர் செய்த நன்மைதீமைகள் அவரவரைச் சேருமல்லது வேறிடத்திற் போகாதென்பதை உண்மையாக நம்பி ஜீவகாருண்ய வொழுக்கத்தை நடத்த வேண்டுமென்றும் அறியவேண்டும்.

உள்ளபடி பசியால் வருந்துகின்ற ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுக்க நினைத்தபோது, நினைத்த புண்ணியரது மனம் வேறு பற்றுக்களைவிட்டுச் சுத்தக்காரணமாகி நினைத்தபடியால், அந்தப் புண்ணியர்களை யோகிகளென்றே உண்மையாக அறியவேண்டும்.—ஆகாரங்கொடுக்க நினைத்தபடி உபசரித்துக் கொடுக்கும்போது, அவருண்ணுவது தாமுண்ணுவதாக அறிந்து களிக்கின்ற படியால், ஞானிகளென்றே உண்மையாக அறியவேண்டும்.—ஆகாரங் கொடுக்க உண்டு பசி தீர்ந்தவர்களுக்கு அத்தருணத்தில் ஆன்மாவின் உள்ளும் புறத்தும் கீழும்மேலும் நடுவும் பக்கமும் நிறைந்து காணுமுதலிய தத்துவங்க

கருமசித் திகளின் கலிபல கோடியும்
அரசுற வெனக்கருள் அருட்பெருந் ஜோதி

யோகசித் திகள்வகை யுறுபல கோடியும்
ஆகவென் றெனக்கருள் அருட்பெருந் ஜோதி

ஞானசித் தியின்வகை நல்விரி வனைத்தும்
ஆனியின் றெனக்கருள் அருட்பெருந் ஜோதி

புடையுறு சித்தியின் பொருட்டே முத்தியை
அடைவதுஎன் றருளிய அருட்பெருந் ஜோதி

முத்தியேன் பதுநிலை முன்னுறு சாதனம்
அத்தக வென்றவென் அருட்பெருந் ஜோதி

சித்தியேன் பதுநிலை சேர்ந்த வனுபவம்
அத்திற லென்றவென் அருட்பெருந் ஜோதி

எகசிற் சித்தியே இயலுற வனேகம்
ஆகிய தென்றவென் அருட்பெருந் ஜோதி

இன்பசித் தியினியல் ஏக மனேகம்
அன்பருக் கென்றவென் அருட்பெருந் ஜோதி

எட்டிரண் டென்பன இயலுமுற் படியென
அட்டநின் றருளிய அருட்பெருந் ஜோதி

இப்படி கண்டனை இனியுறு படியெலாம்
அப்படி யேயெனும் அருட்பெருந் ஜோதி

படிமுடி கடந்தனை பாரிது பாரென
அடிமுடி காட்டிய அருட்பெருந் ஜோதி

ஜோதியுட் ஜோதியின் சொரூபமே யந்தம்
ஆதியென் றருளிய அருட்பெருந் ஜோதி

இந்தசிற் ஜோதியின் இயலுரு வாதி
அந்தமென் றருளிய அருட்பெருந் ஜோதி

ஆதியு மந்தமும் அறிந்தனை நீயே
ஆதியென் றருளிய அருட்பெருந் ஜோதி

நல்லமு தெனவென் நாவுளங் காட்டியென்
அல்லலை நீக்கிய அருட்பெருந் ஜோதி

கற்பக மென்னுளங் கைதனிற் கொடுத்தே
அற்புத மியற்றெனும் அருட்பெருந் ஜோதி

கதிர்ஞல மென்னிரு கண்களிற் கொடுத்தே
அதிசய மியற்றெனும் அருட்பெருந் ஜோதி

அருளொளி யென்றனி அறிவினில் விரித்தே
அருணெறி விளக்கெனும் அருட்பெருந் ஜோதி

பரையொளி யென்மனப் பதியினில் விரித்தே
அரசது வியற்றெனும் அருட்பெருந் ஜோதி

வல்லப சத்திகள் வகையெலா மளித்தென
தல்லலை நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

ஆரிய லகம்புறம் அகப்புறம் புறப்புறம்
ஆமு தெனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

சூரிய சந்திர ஜோதியுட் ஜோதியென்
முரியர் புகழ்தரும் அருட்பெருஞ் ஜோதி

பிறிவே தினியுனைப் பிடித்தன முனக்குநம்
அறிவே வடிவெனும் அருட்பெருஞ் ஜோதி

எஞ்சே லுலகினில் யாதொன்று பற்றியும்
அஞ்சேல் என்றருள் அருட்பெருஞ் ஜோதி

மாண்டுழ லாவகை வந்திளங் காலையே
ஆண்டுகொண் டருளிய அருட்பெருஞ் ஜோதி

பற்றுக ளனைத்தையும் பற்றறத் தவிர்த்தென
தற்றமு நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

சமயங் குலமுதற் சார்பெலாம் விடுத்த
அமயந் தோன்றிய அருட்பெருஞ் ஜோதி

வாய்தற் குரித்தெனும் மறையா கமங்களால்
ஆய்தற் கரிய அருட்பெருஞ் ஜோதி

எல்லாம் வல்லசித் தெனக்களித் தெனக்குனை
அல்லா திலையெனும் அருட்பெருஞ் ஜோதி

நவையிலா வுளத்தில் நாடிய நாடிய
அவையெலா மளிக்கும் அருட்பெருஞ் ஜோதி

கூற்றுதைத் தென்பாற் குற்றமுங் குணங்கொண்
டாற்றன்மிக் களித்த அருட்பெருஞ் ஜோதி

நன்றறி வறியா நாயினேன் றனையும்
அன்றுவக் தாண்ட அருட்பெருஞ் ஜோதி

நாயினுங் கடையேன் ஈயினு மிழிந்தேன்
ஆயினு மருளிய அருட்பெருஞ் ஜோதி

தோத்திரம் புகலேன் பாத்திர மல்லேன்
ஆத்திர மளித்த அருட்பெருஞ் ஜோதி

எச்சோ தனைகளும் இயற்று தெனக்கே
[1] அச்சோ வென்றருள் அருட்பெருஞ் ஜோதி

ஏழு நிலைகடி ஏற்றியென் றனையீண்
டாழுறு கடத்திய அருட்பெருஞ் ஜோதி

தாபத் துயரந் தவிர்த்துல குறுமெலா
ஆபத்து நீக்கிய அருட்பெருஞ் ஜோதி

மருட்பகை தவிர்த்தெனை வாழ்வித் தெனக்கே
அருட்குரு வாகிய அருட்பெருஞ் ஜோதி

[1] அச்சோ என்பது—இரக்கக்குறிப்பு.

உருவமு மருவமும் உபயமு மாகிய
அருணிலை தெரித்த அருட்பெருஞ் ஜோதி

இருளறுத் தென்னுளத் தெண்ணியாங் கருளி
அருளமு தளித்த அருட்பெருஞ் ஜோதி

தெருணிலை யிதுவெனத் தெருட்டியென் னுளத்திருந்
தருணிலை காட்டிய அருட்பெருஞ் ஜோதி

பொருட்பத மெல்லாம் புரிந்துமே லோங்கிய
அருட்பத மளித்த அருட்பெருஞ் ஜோதி

உருள்சக டாகிய உளஞ்சலி யாவகை
அருள்வழி நிறுத்திய அருட்பெருஞ் ஜோதி

வெருண்மன மாயை வினையிருள் நீக்கியுள்
அருள்விளக் கேற்றிய அருட்பெருஞ் ஜோதி

சுருள்விரி வுடைமனச் சுழலிலா மறுத்தே
அருளொளி நிரப்பிய அருட்பெருஞ் ஜோதி

விருப்போ டிகலுறு வெறுப்புந் தவிர்த்தே
அருட்பே றளித்த அருட்பெருஞ் ஜோதி

அருட்பேர் தரித்துல கணைத்து மலர்ந்திட
அருட்சீ ரளித்த அருட்பெருஞ் ஜோதி

உலகெலாம் பரவவென் உள்ளத் திருந்தே
அலகிலா வொளிசெய் அருட்பெருஞ் ஜோதி.

1. ஐம்பூத இயல் வகை

விண்ணினுள் விண்ணுப் விண்ணாடு விண்ணுப்
அண்ணி நிறைந்த அருட்பெருஞ் ஜோதி

விண்ணுறு விண்ணுப் விண்ணிலை விண்ணுப்
அண்ணி வயங்கும் அருட்பெருஞ் ஜோதி

காற்றினுட் காற்றுப்க் காற்றிடைக் காற்றுப்
ஆற்றலி னேங்கும் அருட்பெருஞ் ஜோதி

காற்றுறு காற்றுப்க் கானிலைக் காற்றுப்
ஆற்ற விளங்கும் அருட்பெருஞ் ஜோதி

அனலினு ளனலாய் அனனடு வனலாய்
அனலுற விளங்கும் அருட்பெருஞ் ஜோதி

அனலுறு மனலாய் அனனிலை யனலாய்
அனலுற வயங்கும் அருட்பெருஞ் ஜோதி

புனலினுட் புனலாய்ப் புனலிடைப் புனலாய்
அனையென வயங்கும் அருட்பெருஞ் ஜோதி

புனலுறு புனலாய்ப் புனனிலைப் புனலாய்
அனையெனப் பெருகும் அருட்பெருஞ் ஜோதி

புவியினுட் புவியாய்ப் புவிநடுப் புவியாய்
அவைதர வயங்கும் அருட்பெருஞ் ஜோதி
புவியுறு புவியாய்ப் புவிநிலைப் புவியாய்
அவைகொள விரிந்த அருட்பெருஞ் ஜோதி
விண்ணிலை சிவத்தின் வியனிலை யளவி
அண்ணுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
வளிநிலைச் சத்தியின் வளர்நிலை யளவி
அளியுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
நெருப்பது நிலைநடு நிலையெலா மளவி
அருப்பிட வகுத்த அருட்பெருஞ் ஜோதி
நீர்நிலை திரைவளர் நிலைதனை யளவி
ஆர்வுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
புவிநிலை சுத்தமாம் பொற்பதி யளவி
அவையுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி.

2. மண்ணியல் விரி

மண்ணினிற் றிண்மையை வகுத்ததிற் கிடக்கை
அண்ணுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணினிற் பொன்மை வகுத்ததி லம்மையை
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணினி லம்பூ வகுத்ததி லந்திறம்
அண்ணுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணினி னுற்றம் வகுத்ததிற் பல்வகை
அண்ணுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணினிற் பற்பல வகைகரு நிலையியல்
அண்ணுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணினி லந்தியல் வகுத்ததிற் பலபயன்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணிடை யடிநிலை வகுத்ததிற் பன்னிலை
அண்ணுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணிலந் தைந்து வகையுங் கலந்துகொண்
டண்ணுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணியற் சத்திகள் மண்செயற் சத்திகள்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணுருச் சத்திகள் மண்கலைச் சத்திகள்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணெளிச் சத்திகள் மண்கருச் சத்திகள்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

மண்கணைச் சத்திகள் வகைபல பலவும்
அண்கொள வமைத்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணிலைச் சத்தர்கள் வகைபல பலவும்
அண்ணுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
மண்கரு வுயிர்த்தொகை வகைவிரி பலவா
அண்கொள வமைத்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணினிற் பொருள்பல வகைவிரி வெவ்வே
றண்ணுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணுறு நிலைபல வகுத்ததிற் செயல்பல
அண்ணுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணிடைப் பக்குவம் வகுத்ததிற் பயன்பல
அண்ணுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
மண்ணியல் பலபல வகுத்ததிற் பிறவும்
அண்ணுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி.

3. நீரியல் விரி

நீரினிற் றண்மையும் நிகழ் நெழுக்கமும்
ஆறுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
நீரினிற் பசுமையை நிறுத்தி யதிற்பல
ஆறுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
நீரிடைப் பூவியல் நிகழுறு திறவியல்
ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி
நீரினிற் சுவைநிலை நிரைத்ததிற் பல்வகை
ஆறுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி
நீரினிற் கருநிலை நிகழ்த்திய பற்பல
ஆறுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
நீரிடை நான்கியல் நிலவுவித் ததிற்பல
ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி
நீரிடை யடிநடு நிலையுற வகுத்தனல்
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி
நீரிடை யொளியியல் நிகழ்பல குணவியல்
ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி
நீரிடைச் சத்திகள் நிகழ்வகை பலபல
ஆர்தர வகுத்த அருட்பெருஞ் ஜோதி
நீரினிற் சுத்தர்கள் நிறைவகை யுறைவகை
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி
நீரிடை யுயிர்பல நிகழுறு பொருள்பல
ஆறுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி

நீரிடை நிலைபல நிலையுறு செயல்பல
ஆர்கொள வகுத்த அருட்பெருஞ் ஜோதி
நீருறு பக்குவ நிறைவுறு பயன்பல
ஆருற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
நீரியல் பலபல நிரைத்ததிற் பிறவும்
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி.

4. தீயியல் விரி

தீயினிற் சூட்டியல் சேர்தரச் செலவியல்
ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
தீயினில் வெண்மைத் திகழியல் பலவாய்
ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
தீயிடைப் பூவெலாந் திகழுறு திறமெலாம்
ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
தீயிடை பொளியே திகழுற வமைத்ததில்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி
தீயிடை யருநிலை திருநிலை கருநிலை
ஆயுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
தீயிடை மூவியல் செறிவித் ததிற்பல
வாய்வகை யமைத்த அருட்பெருஞ் ஜோதி
தீயிடை நடுநிலை திகழ்நடு நடுநிலை
ஆயுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
தீயிடைப் பெருந்திறல் சித்திகள் பலபல
வாயுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
தீயிடைச் சித்துகள் செப்புறு மணைத்தும்
ஆயுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
தீயிடைச் சத்திகள் செறிதரு சத்தர்க
ளாய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி
தீயிடை யுயிர்பல திகழுறு பொருள்பல
வாய்வகை யமைத்த அருட்பெருஞ் ஜோதி
தீயிடை நிலைபல திகழ்செயல் பலபயன்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி
தீயினிற் பக்குவஞ் சேர்குண மியற்குணம்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி
தீயிடை யுருக்கியல் சிறப்பியல் பொதுவியல்
ஆயுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
தீயியல் பலபல செறித்ததிற் பலவும்
ஆயுறப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி.

5. காற்றியல் விரி

காற்றிடை யசையியல் கலையிய லுயிரியல்
ஆற்றலி னமைத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றிடைப் பூவியல் சருதுறு திறவியல்
ஆற்றலின் வகுத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றினி லூறியல் காட்டுறு பலபல
ஆற்றலி னமைத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றினிற் பெருநிலை கருநிலை யளவில
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றிடை யீரியல் காட்டி யதிற்பல
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றினி லிடைநடு கடைநடு வகப்புறம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றினிற் குணம்பல கணம்பல வணம்பல
ஆற்றலி னமைத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றிடைச் சத்திகள் கணக்கில வலப்பில
ஆற்றவும் அமைத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றிடைச் சத்தர்கள் கணிதங் கடந்தன
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றிடை யுயிர்பல கதிபல கலைபல
ஆற்றலி னமைத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றிடை நானிலக் கருவிக ளனைத்தையும்
ஆற்றுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றிடை யுணரியல் கருதிய லாதிய
ஆற்றுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றிடைச் செயலெலாங் கருதிய பயனெலாம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றினிற் பக்குவக் கதியெலாம் விளைவித்
தாற்றலின் வகுத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றினிற் காலங் கருதுறு வகையெலாம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி
காற்றியல் பலபல கணித்ததிற் பிறவும்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி.

6. வெளி இயல் விரி

வெளியிடைப் பகுதியின் விரிவிய லணுவியல்
அளியுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி

வெளியிடைப் பூவெலாம் வியப்புறு திறனெலாம்
அளியுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
வெளியினி லொலிநிறை வியனில யனைத்தும்
அளியுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
வெளியிடைக் கருநில விரிநில யருநில
அளிகொள வகுத்த அருட்பெருஞ் ஜோதி
வெளியிடை முடிநில விளங்குற வகுத்தே
அளிபெற விளக்கும் அருட்பெருஞ் ஜோதி
வெளியினிற் சத்திகள் வியப்புறு சத்தர்கள்
அளியுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
வெளியிடை யொன்றே விரித்ததிற் பற்பல
அளியுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
வெளியிடைப் பலவே விரித்ததிற் பற்பல
அளிதர வமைத்த அருட்பெருஞ் ஜோதி
வெளியிடை யுயிரியல் வித்தியல் சித்தியல்
அளிபெற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
வெளியி னனைத்தையும் விரித்ததிற் பிறவும்
அளியுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி.

7. அகப்புற விரி

புறநடு வொடுகடை புணர்ப்பித் தொருமுதல்
அறமுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
புறந்தில நடுவொடு புணர்ப்பித் தொருகடை
அறம்பெற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
அகப்புற நடுக்கடை யணைவாற் புறமுதல்
அகப்பட வகுத்த அருட்பெருஞ் ஜோதி
அகப்புற நடுமுத லணைவாற் புறக்கடை
அகப்பட வமைத்த அருட்பெருஞ் ஜோதி
கருதக நடுவொடு கடையணைந் தகமுதல்
அருளுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
தணிபக நடுவொடு தலையணைந் தகக்கடை
அணியுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
அகநடு புறக்கடை யணைந்தகப் புறமுதல்
அகமுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
அகநடு புறத்தில யணைந்தகப் புறக்கடை
அகலிடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி
அகநடு வதனு லகப்புற நடுவை
அகமற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகப்புற நடுவா ணிபுற நடுவை
அகப்பட வமைத்த அருட்பெருஞ் ஜோதி

புறநடு வதனைப் புறப்புற நடுவை
அறமுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புகலரு மகண்ட பூரண நடுவால்
அகநடு வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புறப்புறக் கடைமுதல் புணர்ப்பாற் புறப்புறம்
அறக்கணம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புறத்தியல் கடைமுதல் புணர்ப்பாற் புறத்துறும்
அறக்கணம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகப்புறக் கடைமுத லிணைவா லக்கணம்
அகத்துற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அகக்கடை முதல்புணர்ப் பதனை லகக்கணம்
அகத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி.

8. ஐம்பூதக் கலப்பின் விரி

வானிடைக் காற்றுங் காற்றிடை நெருப்பும்
ஆனற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நெருப்பிடை நீரும் நீரிடைப் புவியும்
அருப்பிட வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நீர்மேல் நெருப்பும் நெருப்பின்மே லுயிர்ப்பும்
ஆர்வுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

புனன்மேற் புவியும் புவிமேற் புடைப்பும்
அனன்மேல் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பகுதிவான் வெளியிற் படர்ந்தமா பூத
அகல்வெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி.

9. வெளி வகை விரி

உயிர்வெளி யிடையே உரைக்கரும் பதுதி
அயல்வெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உயிர்வெளி யதனை யுணர்கலை வெளியில்
அயலற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

கலைவெளி யதனைக் கலப்பறு சுத்த
அலர்வெளி வகுத்த அருட்பெருஞ் ஜோதி

சுத்தநல் வெளியைத் துரிசறு பரவெளி
அத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பரவெளி யதனைப் பரம்பர வெளியில்
அரசுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பரம்பர வெளியைப் பராபர வெளியில்
அரந்தைகெட வகுத்த அருட்பெருஞ் ஜோதி
பராபர வெளியைப் பகர்பெரு வெளியில்
அராவற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
பெருவெளி யதனைப் பெருஞ்சுக வெளியில்
அருளுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
குணமுதற் கருவிகள் கூடிய பகுதியில்
அணைவுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
மனமுதற் கருவிகள் மன்னுயிர் வெளியிடை
அனமுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
காலமே முதலிய கருவிகள் கலிவெளி
ஆலுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
துரிசறு கருவிகள் சுத்தகல் வெளியிடை
அரசுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
இவ்வெளி யெல்லாம் இலங்கவண் டங்கள்
அவ்வயி ணமைத்த அருட்பெருஞ் ஜோதி.

10. அண்டப் பகுதி விரி

ஓங்கிய வண்டம் ஒளிபெற முச்சுடர்
ஆங்கிடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி
சிருட்டித் தலைவரைச் சிருட்டியண் டங்களை
அருட்டிறல் வகுத்த அருட்பெருஞ் ஜோதி
காவல்செய் தலைவரைக் காவலண் டங்களை
ஆவகை யமைத்த அருட்பெருஞ் ஜோதி
அழித்தல்செய் தலைவரை யவரண் டங்களை
அழுக்கற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
மறைத்திடு தலைவரை மற்றுமண் டங்களை
அறத்தொடு வகுத்த அருட்பெருஞ் ஜோதி
தெளிவுசெய் தலைவரைத் திகழுமண் டங்களை
அளிபெற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
விந்துவாஞ் சத்தியை விந்தினண் டங்களை
அந்திறல் வகுத்த அருட்பெருஞ் ஜோதி
ஓங்கார சத்திக ளூற்றவண் டங்களை
ஆங்காங் கமைத்த அருட்பெருஞ் ஜோதி
சத்தத் தலைவரைச் சாற்றுமண் டங்களை
அத்தகை வகுத்த அருட்பெருஞ் ஜோதி
நாதமாம் பிரமும் நாதவண் டங்களு நம்
ஆதரம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பகர்பரா சத்தியைப் பதியுமண் டங்களை
அகமற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பரசிவ பதியைப் பரசிவாண் டங்களை
அரசுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி

எண்ணில்பல் சத்தியை யெண்ணிலண் டங்களை
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

அளவில்பல் சத்தரை யளவிலண் டங்களை
அளவற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

உயிர்வகை யண்டம் உலப்பில வெண்ணில
அயர்வற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 610

11. கடல் வகை

களவில கடல்வகை கங்கில கரையில
அளவில வகுத்த அருட்பெருஞ் ஜோதி

கடலைவ யணைத்துங் கரையின்றி நிலைபுற
அடலன லமைத்த அருட்பெருஞ் ஜோதி

கடல்களு மலைகளுங் கதிகளு நதிகளும்
அடலுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

கடலிடைப் பல்வளங் கணித்ததிற் பல்லுயிர்
அடலுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

12. மலை வளம்

மலையிடைப் பல்வளம் வகுத்ததிற் பல்லுயிர்
அலைவற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 620

13. எண் வகை

ஒன்றினி லொன்றே ஒன்றிடை யாயிரம்
அன்றற[I] வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பத்திடை யாயிரம் பகரதிற் கோடி
அத்துற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

நூற்றிடை யிலக்க நுவலதி லனந்தம்
ஆற்றிடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

கோடியி லனந்த கோடிபல் கோடி
ஆடுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

14. வித்தும் விளைவும்

வித்திய லொன்றுப் விளைவியல் பலவாய்
அத்தகை யமைத்த அருட்பெருஞ் ஜோதி 630

[I] அன்று என்பது—பகை.

விளைவிய லனைத்தும் வித்திடை யடங்க
அளவுசெய் தமைத்த அருட்பெருஞ் ஜோதி
வித்தும் பதமும் விளையுப கரிப்பும்
அத்திற லமைத்த அருட்பெருஞ் ஜோதி
வித்திடை முளையும் முளையிடை விளைவும்
அத்தக வமைத்த அருட்பெருஞ் ஜோதி
வித்தினுள் வித்தும் வித்ததில் வித்தும்
அத்திறம் வகுத்த அருட்பெருஞ் ஜோதி
விளைவினுள் விளைவும் விளைவதில் விளைவும்
[1] அளையுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 640
முளையதின் முளையும் முளையினுள் முளையும்
அளைதர வமைத்த அருட்பெருஞ் ஜோதி
வித்திடைப் பதமும் பதத்திடை வித்தும்
[2] அத்துற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
பதமதிற் பதமும் பதத்தினுட் பதமும்
அதிர்வற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

15. ஒற்றுமை வேற்றுமை இயல்

ஒற்றுமை வேற்றுமை உரிமைக ளனைத்தும்
அற்றென வகுத்த அருட்பெருஞ் ஜோதி
பொருணிலை யுறுப்பியல் பொதுவகை முதலிய
அருளுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 650
உறவினி லுறவும் உறவினிற் பகையும்
அறனுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
பகையினிற் பகையும் பகையினி லுறவும்
அகைவுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
பாதியு முழுதும் பதிசெயு மந்தமும்
ஆதியும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி
துணையு நிமித்தமுந் துலங்கதி னதுவும்
அணைவுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
உருவதி லுருவும் உருவினுள் ளுருவும்
அருளுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி 660
அருவினுள் ளருவும் அருவதி லருவும்
அருளிய லமைத்த அருட்பெருஞ் ஜோதி
காணமு மிடமுங் களிமுத லணையுமோர்
அரணிலை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

---

1 அள என்பது-அளதல் என்னும் பொருள் மேல்நின்ற முதனிலைத் தொழிற்பெயர்.

2 அத்து என்பது-அது என்னும் சுட்டுப்பெயரினிடையில் தகரமெய் விரித்தல்.

உருவதி லருவும் அருவதி லுருவும்
அருளுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
வண்ணமும் வடிவு மபங்கிய வகைபல
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
சிறுமையிற் சிறுமையுஞ் சிறுமையிற் பெருமையும்
அறிதர வகுத்த அருட்பெருஞ் ஜோதி
பெருமையிற் பெருமையும் பெருமையிற் சிறுமையும்
அருணிலை வகுத்த அருட்பெருஞ் ஜோதி
திண்மையிற் றிண்மையுந் திண்மையி னேர்மையும்
[1] அண்மையின் வகுத்த அருட்பெருஞ் ஜோதி
மென்மையின் மென்மையும் மென்மையில் வன்மையும்
[2] அண்மையற் றமைத்த அருட்பெருஞ் ஜோதி
அடியினுள் ளடியு மடியிடை யடியும்
அடியுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
நடுவினுண் ணடுவும் நடுவதி னடுவும்
அடர்வுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி
முடியினுண் முடியும் முடியினின் முடியும்
அடர்தர வமைத்த அருட்பெருஞ் ஜோதி

16. அகப்புறப் பூ

அகப்பூ வகவுறுப் பாக்க வதற்கவை
அகத்தே வகுத்த அருட்பெருஞ் ஜோதி
புறப்பூ புறத்திற் புனையுரு வாக்கிட
அறத்துடன் வகுத்த அருட்பெருஞ் ஜோதி
அகப்புறப் பூவகப் புறவுறுப் பியற்றிட
அகத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி
புறப்புறப் பூவதன் புறப்புற வுறுப்புற
அறத்திடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

17. நால்வகைத் தோற்ற விரி

பாரிடை வேர்வையில் பையிடை முட்டையில்
ஆருயி ரமைக்கும் அருட்பெருஞ் ஜோதி
ஊர்வன பறப்பன வுறுவன நடப்பன
ஆர்வுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
அசைவில வசைவுள ஆருயிர்த் திரள்பல
அசைவற வகுத்த அருட்பெருஞ் ஜோதி
அறிவொரு வகைமுதல் ஐவகை யறுவகை
அறிதர வகுத்த அருட்பெருஞ் ஜோதி

1 அண்மை என்பது—சமீபம். 2 அண்மை என்பது—தீமை.

வெவ்வே றியலொடு வெவ்வேறு பயனுற
அவ்வா றமைத்த அருட்பெருஞ் ஜோதி

சித்திர விசித்திர சிருட்டிகள் பலபல
அத்தகை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

18. ஆண் பெண் இயல்

பெண்ணினுள் ளாணும் ஆணினுட் பெண்ணும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்ணினுண் மூன்றும் ஆணினுள் ளிரண்டும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்ணிடை நான்கும் ஆணிடை மூன்றும்
அண்ணுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்ணிய லாணும் ஆணியற் பெண்ணும்
அண்ணுற வமைத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்டிறற் புறத்தும் ஆண்டிற லகத்தும்
அண்டுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பெண்ணியன் மனமும் ஆணிய லறிவும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

தனித்தனி வடிவினுந் தக்கஆண் பெண்ணியல்
அனைத்துற வகுத்த அருட்பெருஞ் ஜோதி

19. காத்தருள் விரி

உனற்கரு முயிருள வுடலுள வுலகுள
அனைத்தையும் வகுத்த அருட்பெருஞ் ஜோதி

ஓவுரு வெழுவகை உயிர்முத லனைத்தும்
ஆவகை வகுத்த அருட்பெருஞ் ஜோதி

பைகளின் முட்டையிற் பாரினில் வேர்வினில்
ஐபெற வமைத்த அருட்பெருஞ் ஜோதி

தாய்கருப் பையினுள் தங்கிய வுயிர்களை
ஆய்வுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

முட்டைவாய்ப் பயிலு முழுவுயிர்த் திரள்களை
அட்டமே காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

நிலம்பெறு முயிர்வகை நீள்குழு வனைத்தும்
அலம்பெறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

வேர்வுற வுதித்த மிகுமுயிர்த் திரள்களை
ஆர்வுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

உடலுறு பிணியால் உயிருடல் கெடாவகை
அடலுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

சிசுமுதல் பருவச் செயல்களி னுயிர்களை
அசைவறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

உயிருறு மூடலையும் உடலுறு மூயிரையும்
அயர்வறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

பாடுறு மவத்தைகள் பலவினு மூயிர்களை
ஆடுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

மூச்சுட ராதியா லெச்சக வுயிரையும்
I அச்சறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 740

வான்முகிற் சத்தியான் மழைபொழி வித்துயிர்
2 ஆனறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

இன்புறு சத்தியா லெழின்மழை பொழிவித்
தன்புறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

எண்ணியல் சத்தியா லெல்லா வுலகினும்
அண்ணுயிர் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

அண்டப் புறப்புற அமுதம் பொழிந்துயிர்
அண்டுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

தேவரை யெல்லாந் திகழ்புற வமுதளித்
தாவகை காத்தருள் அருட்பெருஞ் ஜோதி 750

அகப்புற வமுதளித் தைவரா திகளை
அகப்படக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

தருமக வமுதாற் சத்திசத் தாகளை
அருளினிற் காக்கும் அருட்பெருஞ் ஜோதி

காலமு நியதியுங் காட்டியெவ் வுயிரையும்
3 ஆலுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

விச்சையை யிச்சையை விளைவித் துயிர்களை
அச்சறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

போகமுங் களிப்பும் பொருந்துவித் துயிர்களை
ஆகமுட் காக்கும் அருட்பெருஞ் ஜோதி 760

கலையறி வளித்துக் களிப்பினி லுயிரெலாம்
அலைவறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

விடய நிகழ்ச்சியான் மிகுமுயி ரனைத்தையும்
அடைவுறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

துன்பளித் தாங்கே சுகமளித் துயிர்களை
அன்புறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

காணேங் தியத்தாற் களிப்புற வுயிர்களை
அரணேர்ந் தளித்தருள் அருட்பெருஞ் ஜோதி

I அச்சு-அஞ்சுதலென்னு முதனிலைத் தொழிற்பெயர். 2 அற-மிகவும்.

3 ஆல் என்பது—அசைவு.

எத்தகை யெவ்வுயி ரெண்ணின வவ்வுயிர்க்
கத்தகை யளித்தருள் அருட்பெருஞ் ஜோதி

எப்படி யெவ்வுயி ரெண்ணின வவ்வுயிர்க்
கப்படி யளித்தருள் அருட்பெருஞ் ஜோதி

ஏங்கா துயிர்த்திர ளெங்கெங் கிருந்தன
ஆங்காங் களித்தருள் அருட்பெருஞ் ஜோதி

சொல்லுறு மசுத்தத் தொல்லுயிர்க் கவ்வகை
அல்லலிற் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

சுத்தமு மசுத்தமுந் தோயுயிர்க் கிருமையின்
அத்தகை காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

வாய்ந்திடுஞ் சுத்த வகையுயிர்க் கொருமையின்
ஆய்ந்துறக் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

ஏவையெலா மெவையெலா மீண்டின வீண்டின
அவையெலாங் காத்தருள் அருட்பெருஞ் ஜோதி

20. அடக்கி யருள் விரி

அண்டத் துரிசையு மகிலத் துரிசையும்
அண்டற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

பிண்டத் துரிசையும் பேருபிர்த் துரிசையும்
அண்டற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

உயிருறு மாயையி னுறுவிரி வனைத்தும்
அயிறற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

உயிருறு மிருவினை யுறுவிரி வனைத்தும்
அயர்வற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

காமப் புடைப்புயிர் கண்டொட ராவகை
ஆமற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

பொங்குறு வெகுளிப் புடைப்புக ளெல்லாம்
அங்கற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

மதம்புரை மோகமு மற்றவு மாங்காங்
கதம்பெற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

வடுவுறு மசுத்த வாதனை யனைத்தையும்
அடர்வற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

சுத்தமு மசுத்தமுந் தோய்ந்தவா தனைகளை
அத்தகை யடக்கும் அருட்பெருஞ் ஜோதி

நால்வயிற் றுரிசு நண்ணுயி ராதியில்
ஆலற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

நால்வயிற் படைப்பு நால்வயிற் காப்பும்
ஆலற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

மூவிடத் திருமையின் முன்னிய தொழில்களில்
ஆவிடத் தடக்கும் அருட்பெருஞ் ஜோதி
மூவிட மும்மையின் முன்னிய தொழில்களில்
ஆவிட மடக்கும் அருட்பெருஞ் ஜோதி
தத்துவச் சேட்டைபுந் தத்துவத் துரிசும்
அத்தகை யடக்கும் அருட்பெருஞ் ஜோதி
சுத்தமா நிலையிற் சூழ்வுறு விரிவை
அத்தகை யடக்கும் அருட்பெருஞ் ஜோதி

21. திரை விளக்கம்

கரவின்மா மாயைக் கரும்பெருந் திரையால்
அரசது மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
பேருறு நீலப் பெருந்திரை யதனல்
ஆருயிர் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
பச்சைத் திரையாற் பாவெளி யதனை
அச்சுற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
செம்மைத் திரையாற் சித்துறு வெளியை
அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
பொன்மைத் திரையாற் பொருளுறு வெளியை
அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
வெண்மைத் திரையான் மெய்ப்பதி வெளியை
அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
கலப்புத் திரையாற் கருதனு பவங்களை
அலப்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
விடய நிலைகளை வெவ்வேறு திரைகளால்
அடர்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
தத்துவ நிலைகளைத் தனித்தனித் திரையால்
அத்திற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
திரைமறைப் பெல்லாந் தீர்த்தாங் காங்கே
அரசுறக் காட்டும் அருட்பெருஞ் ஜோதி

22. அருளில் தெருட்டல்

தோற்றமா மாயைத் தொடர்பறுத் தருளின்
ஆற்றலைக் காட்டும் அருட்பெருஞ் ஜோதி
சுத்தமா மாயைத் தொடர்பறுத் தருளை
அத்தகை காட்டும் அருட்பெருஞ் ஜோதி
எனைத்தா ணவமுத லெல்லாந் தவிர்த்தே
அனுக்கிர கம்புரி அருட்பெருஞ் ஜோதி

விடைய மறைப்பெலாம் விடுவித் துபிர்களை
அடைவுறத் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

சொருப மறைப்பெலாந் தொலைப்பித் துயிர்களை
அருளினிற் றெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

மறைப்பின் மறைந்தன வருவித் தாங்கே
அறத்தொடு தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

எவ்வகை யுயிர்களும் இன்புற வாங்கே
அவ்வகை தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

கடவுளர் மறைப்பைக் கடிந்தவர்க் கின்பம்
அடைவுறத் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

சத்திகண் மறைப்பைத் தவிர்த்தவர்க் கின்பம்
அத்துறத் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

சத்தர்கண் மறைப்பைத் தவிர்த்தவர்க் கின்பம்
அத்தகை தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

படைக்குந் தலைவர்கள் பற்பல கோடியை
அடைப்புறப் படைக்கும் அருட்பெருஞ் ஜோதி

காக்குந் தலைவர்கள் கணக்கில்பல் கோடியை
ஆக்குறக் காக்கும் அருட்பெருஞ் ஜோதி

அடக்குந் தலைவர்கள் அளவிலர் தமையும்
அடர்ப்பற வடக்கும் அருட்பெருஞ் ஜோதி

மறைக்குந் தலைவர்கள் வகைபல கோடியை
அறத்தொடு மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி

தெருட்டுந் தலைவர்கள் சேர்பல கோடியை
அருட்டிறந் தெருட்டும் அருட்பெருஞ் ஜோதி

ஐந்தொழி லாதிசெய் யைவரா திகளை
ஐந்தொழி லாதிசெய் அருட்பெருஞ் ஜோதி

இறந்தவ ரெல்லா மெழுந்திட வுலகில்
அறந்தலை யளித்த அருட்பெருஞ் ஜோதி

செத்தவ ரெல்லாஞ் சிரித்தாங் கெழுதிறல்
அத்தகை காட்டிய அருட்பெருஞ் ஜோதி

இறந்தவ ரெழுகவென் றெண்ணியாங் கெழுப்பிட
அறந்துணை யெனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

செத்தவ ரெழுகெனச் செப்பியாங் கெழுப்பிட
அத்திற லெனக்கருள் அருட்பெருஞ் ஜோதி

சித்தெலாம் வல்ல திறலளித் தெனக்கே
அத்தனென் றேங்கும் அருட்பெருஞ் ஜோதி

23. தனிப் பொருள்

ஒன்றது ரண்டது வொன்றினி ரண்டது
ஒன்றினு ளொன்றது வொன்றெனு மொன்றே

ஒன்றல வாண்டல வொன்றினி ரண்டல
ஒன்றினு ளொன்றல வொன்றெனு மொன்றே

ஒன்றினி லொன்றுள வொன்றினி லொன்றில
ஒன்றுற வொன்றிய வொன்றெனு மொன்றே

24. மெய்ப் பொருள்

களங்கநீத் துலகங் களிப்புற மெய்ந்நெறி
விளங்கவென் னுள்ளே விளங்குமெய்ப் பொருளே

மூவிரு நிலையின் முடிநடு முடிமேல்
ஓவற விளங்கும் ஒருமைமெய்ப் பொருளே

எழுநில மிசையே யின்புரு வாகி
வழுநிலை நீக்கி வயங்குமெய்ப் பொருளே

கவநிலை மிசையே கடிவுறு நடுவே
சிவமய மாகித் திகழ்ந்தமெய்ப் பொருளே

ஏகா தசநிலை யாததி னடுவே
ஏகா தனமிசை யிருந்தமெய்ப் பொருளே

திரையோ தசநிலை சிவவெளி நடுவே
வரையோ தருசுக வாழ்க்கைமெய்ப் பொருளே

ஈரெண் ணிலையென இயம்புமே னிலையிற்
பூரண சுகமாய்ப் பொருந்துமெய்ப் பொருளே

எல்லா நிலைகளு மிசைந்தாங் காங்கே
எல்லா மாகி யிலங்குமெய்ப் பொருளே

மனுதிகள் பொருந்தா வானடு வாணுப்
அனுதியுண் மையதா யமர்ந்தமெய்ப் பொருளே

தாமெனு தானுப்த் தானே தானுப்
ஊனுயிர் விளக்கு மொருதனிப் பொருளே

அதுவினு ளதுவா யதுவே யதுவாய்ப்
பொதுவினுள் நடிக்கும் பூரணப் பொருளே

இயல்பினு ளியல்பா யியல்பே யியல்பாய்
உயலுற விளங்கு மொருதனிப் பொருளே

அருவினுள் ளருவா யருவரு வருவாய்
உருவினுள் விளங்கு மொருபரம் பொருளே

அலகிலாச் சித்தா யதுநிலை யதுவாய்
உலகெலாம் விளங்கும் ஒருதனிப் பொருளே

பொருளினுட் பொருளாய்ப் பொருளது பொருளாய்
ஒருமையின் விளங்கு மொருதனிப் பொருளே 910

ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கெழு
கோடியும் விளங்கக் குலவுமெய்ப் பொருளே

கூட்டுறு சித்திகள் கோடிபல் கோடியும்
ஆட்டுற விளக்கும் அருட்பெரும் பொருளே

அறிவுறு சித்திக ளனந்தகோ டிகளும்
பிறிவற விளக்கும் பெருந்தனிப் பொருளே

வீடுக ளெல்லாம் விதிநெறி விளங்க
ஆடல்செய் தருளு மரும்பெரும் பொருளே

பற்றுக ளெல்லாம் பதிநெறி விளங்க
உற்றரு ளாடல்செய் ஒருதனிப் பொருளே 920

25. பராபர இயல்

பரத்தினிற் பரமே பரத்தின்மேற் பரமே
பரத்தினுட் பரமே பரம்பர பரமே

பரம்பெறும் பரமே பரந்தரும் பரமே
பரம்பதம் பரமே பரஞ்சிதம் பரமே

பரம்புகழ் பரமே பரம்பகர் பரமே
பரஞ்சுக பரமே பரஞ்சிவ பரமே

பரங்கொள்சிற் பரமே பரஞ்செய் தற்பரமே
தரங்கொள்பொற் பரமே தனிப்பெரும் பரமே

வரம்பரா பரமே வணம்பரா பரமே
பரம்பரா பரமே பதம்பரா பரமே 930

26. பதவியல்

சத்திய பதமே சத்துவ பதமே
நித்திய பதமே நிர்க்குண பதமே

தத்துவ பதமே தற்பத பதமே
சித்துறு பதமே சிற்சுக பதமே

தம்பரம் பதமே தனிச்சுகம் பதமே
அம்பரம் பதமே அருட்பரம் பதமே

தந்திர பதமே சந்திர பதமே
மந்திர பதமே மந்தண பதமே

நவந்தரு பதமே நடந்தரு பதமே
சிவந்தரு பதமே சிவசிவ பதமே 940

27. சிவ ரகசியம்

பிரமமெய்க் கதியே பிரமமெய்ப் பதியே
பிரமநிர்க் குணமே பிரமசிற் குணமே

பிரமமே பிரமப் பெருநிலை மிசையுறும்
பரமமே பரம பதந்தருஞ் சிவமே

அவனே டவளா யதுவா யலதாய்
நவமா நிலைமிசை நண்ணிய சிவமே

எம்பொரு ளாகி யெமக்கருள் புரியுஞ்
செம்பொரு ளாகிய சிவமே சிவமே

ஒருநிலை யிதுவே உயர்நிலை யெனுமொரு
திருநிலை மேவிய சிவமே சிவமே

மெய்வைத் தழியா வெறுவெளி நடுவுறு
தெய்வப் பதிபாஞ் சிவமே சிவமே

புரைதவிர்த் தெனக்கே பொன்முடி சூட்டிச்
சிரமுற நாட்டிய சிவமே சிவமே

கல்வியுஞ் சாகாக் கல்வியு மழியாச்
செல்வமு மளித்த சிவமே சிவமே

அருளமு தெனக்கே அளித்தரு ணெறிவாய்த்
தெருளுற வளர்க்குஞ் சிவமே சிவமே

சத்தெலா மாகியுந் தானொரு தானுஞ்
சித்தெலாம் வல்லதோர் திருவருட் சிவமே

எங்கே கருணை இயற்கையி னுள்ளன
அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே

யாரே யென்னினும் இரங்கு கின்றார்க்குச்
சீரே யளிக்குஞ் சிதம்பர சிவமே

பொய்ந்நெறி யனைத்தினும் புகுத்தா தெனையருட்
செந்நெறி செலுத்திய சிற்சபைச் சிவமே

கோல்லா நெறியே குருவருள் நெறியெனப்
பல்கா லெனைக்குப் பகர்ந்தமெய்ச் சிவமே

உயிரெலாம் போதுவின் உளம்பட நோக்குக
செயிரெலாம் விடுமெனச் செப்பிய சிவமே

I பயிர்ப்புறு கரணப் பரிசுகள் பற்பல
உயிர்த்திர ளொன்றென வுரைத்தமெய்ச் சிவமே

உயிருள்யா மெம்மு ளுயிரினை யுணர்ந்தே
உயிர்நலம் பரவுகென் றுரைத்தமெய்ச் சிவமே

இயலரு ளொளியோ ரேகதே சத்திரும்
உயிரொளி காண்கவென் றுரைத்தமெய்ச் சிவமே

28. திருவருள் வல்லபம்

அருளலா தணுவும் அசைந்திடா ததனால்
அருணலம் பரவுகென் றறைந்தமெய்ச் சிவமே

I பயிர்ப்பு என்பது—அருவருப்பு.

அருளுறி னெல்லாம் ஆகுமீ துண்மை
அருளுற முயல்கவென் றருளிய சிவமே 980

அருணெறி யொன்றே தெருணெறி மற்றெலாம்
இருணெறி யெனவெனக் கியம்பிய சிவமே

அருள்பெறிற் றுருப்புமோ ரைந்தொழில் புரியும்
தெருளிது வெனவே செப்பிய சிவமே

அருளறி வொன்றே யறிவுமற் றெல்லாம்
மருளறி வென்றே வகுத்தமைப்ச் சிவமே

அருட்சுக மொன்றே யரும்பெறற் பெருஞ்சுகம்
மருட்சுகம் பிறவென வகுத்தமைப்ச் சிவமே

அருட்பே றதுவே யரும்பெறற் பெரும்பே
றிருட்பே றறுக்கவென் றியம்பிய சிவமே 990

அருட்டனி வல்லப மதுவே யெலாஞ்செய்
பொருட்டணிச் சித்தனப் புகன்றமைப்ச் சிவமே

அருளறி யார்தமை யறியா ரெம்மையும்
பொருளறி யாரெனப் புகன்றமைப்ச் சிவமே

அருணிலை யொன்றே யனைத்தும் பெறுநிலை
பொருணிலை காண்கெனப் புகன்றமைப்ச் சிவமே

அருள்வடி வதுவே யழியாத் தனிவடி
வருள்பெற முயலுகென் றருளிய சிவமே

அருளே நம்மிய ருளே நம்முரு
அருளே நம்வடி வாமென்ற சிவமே 1000

அருளே நம்மடி யருளே நம்முடி
அருளே நம்நடு வாமென்ற சிவமே

அருளே நம்மறி வருளே நம்மனம்
அருளே நங்குண மாமென்ற சிவமே

அருளே நம்பதி யருளே நம்பதம்
அருளே நம்மிட மாமென்ற சிவமே

அருளே நந்துணை யருளே நந்திதாழில்
அருளே நம்விருப் பாமென்ற சிவமே

அருளே நம்பொரு ளருளே நம்மொளி
அருளே நாமறி வாயென்ற சிவமே 1010

அருளே நங்குல மருளே நம்மினம்
அருளே நாமறி வாயென்ற சிவமே

அருளே நஞ்சுக மருளே நம்பெயர்
அருளே நாமறி வாயென்ற சிவமே

அருளொளி யடைந்தனை யருளமு துண்டனை
அருண்மதி வாழ்கவென் றருளிய சிவமே

அருணிலை பெற்றனை யருள்வடி வற்றனை
அருளா சியற்றுகென் றருளிய சிவமே

29. சிவபதி

உள்ளகத் தமர்ந்தென துயிரிற் கலந்தருள்
வள்ளல்சிற் றம்பலம் வளர்சிவ பதியே
நிகரிலா வின்ப நிலைநடு வைத்தினைத்
தகவொடு காக்குந் தனிச்சிவ பதியே
சுத்தசன் மார்க்க சுகநிலை தனிலெனைச்
சத்திய முக்கிய தனிச்சிவ பதியே
ஐவருங் காண்டற் கரும்பெரும் பொருளென்
கைவரப் புரிந்த கதிசிவ பதியே
துன்பந் தொலைத்தருட் ஜோதியால் நிறைந்த
இன்ப மெனக்கரு ளெழிற்சிவ பதியே
சித்தமும் வாக்குஞ் செல்லாப் பெருநிலை
ஒத்துற வேற்றிய வொருசிவ பதியே
கையற வினைத்துங் கடிந்தெனைத் தேற்றி
வையமேல் வைத்த மாசிவ பதியே
இன்புறச் சிறியே னெண்ணுதோ றெண்ணுதோ
றன்பொடென் கண்ணுறும் அருட்சிவ பதியே
பிழையெலாம் பொறுத்தெனுட் பிறங்கிய கருணை
மழையெலாம் பொழிந்து வளர்சிவ பதியே
உளத்தினுங் கண்ணினு முயிரினு மெனது
குளத்தினு நிரம்பிய குருசிவ பதியே

30. அருள் குரு

பரமுட னபரம் பகர்நிலை யிலையெனத்
திறமுற வருளிய திருவருட் குருவே
மதிநிலை பிரவியின் வளர்நிலை யனலின்
திதிநிலை யனைத்துந் தெரித்தசற் குருவே
கணநிலை யவற்றின் கருநிலை யனைத்துங்
குணமுறத் தெரித்துட் குலவுசற் குருவே
பதிநிலை பசுநிலை பாச நிலையெலாம்
மதியுறத் தெரித்துள் வயங்குசற் குருவே
பிரம ரகசியம் பேசியென் னுளத்தே
தரமுற விளங்குஞ் சாந்தசற் குருவே
பரம ரகசியம் பகர்ந்தென துளத்தே
வரமுற வளர்த்து வயங்குசற் குருவே

சிவரக சியமெலாந் தெரிவித் தெனக்கே
நவநிலை காட்டிய ஞானசற் குருவே

சத்திய லணைத்துஞ் சித்தியன் முழுதும்
அத்தகை தெரித்த அருட்சிவ குருவே

அறிபவை யெல்லாம் அறிவித் தென்னுள்ளே
பிறிவற விளங்கும பெரியசற் குருவே

கேட்பவை யெல்லாங் கேட்பித் தென்னுளே
வேட்கையின் விளங்கும் விமலசற் குருவே

காண்பவை யெல்லாங் காட்டுவித் தெனக்கே
மாண்பத மளித்து வயங்குசற் குருவே 1060

செய்பவை யெல்லாஞ் செய்வித் தெனக்கே
உய்பவை யளித்தெனுள் ஓங்குசற் குருவே

உண்பவை யெல்லா முண்ணுவித் தென்னுள்
பண்பினில் விளங்கும் பரமசற் குருவே

சாகாக் கல்வியின் றரமெலாங் கற்பித்
தேகாக் கரப்பொரு ளீந்தசற் குருவே

சத்திய மாஞ்சிவ சித்திக ளணைத்தையும்
மெய்த்தகை யளித்தெனுள் விளங்குசற் குருவே

எல்லா நிலைகளு மேற்றிச் சித்திலாம்
வல்லா னெனவெணை வைத்தசற் குருவே 1070

31. உயிர்த் தாய்

சீருற வருளாந் தேசுற வழியாப்
பேருற வென்னைப் பெற்றநற் றாயே

பொருந்திய வருட்பெரும் போகமே யுறுகெனப்
பெருந்தய வாலெணைப் பெற்றநற் றாயே

ஆன்றசன் மார்க்கம் அணிபெற வேனைத்தான்
ஈன்றமு தளித்த இனியநற் றாயே

பசித்திடி தோறுமென் பாலணைந் தருளால்
வசித்தமு தருள்புரி வாய்மைநற் றாயே

தளர்தோ றடியேன் சார்பணைந் தென்னை
உளந் தெளிவித்த ஒருமைநற் றாயே 1080

அருளமு தேமுத லெவகை யமுதமும்
தெருளுற வெனக்கருள் செல்வநற் றாயே

இயலமு தேமுத லெழுவகை யமுதமும்
உயலுற வெனக்கரு ளுரியநற் றாயே

நண்புறு மெண்வகை நவவகை யமுதமும்
பண்புற வெனக்கருள் பண்புடைத் தாயே

மற்றுள வழுத வகையெலா மெனக்கீக
உற்றுண வளித்தரு ளோங்குகற் ரூயே

கலக்கமு மச்சமும் கடிந்தென துளத்தீத
அலக்கணுந் தவிர்த்தரு ளன்புடைத் தாயே

துய்ப்பினி லனைத்துஞ் சுகம்பெற வளித்தெனக்
கெய்ப்பெலாந் தவிர்த்த இன்புடைத் தாயே

சித்திக ளெல்லாந் தெளிந்திட வெனக்கீக
சத்தியை யளித்த தயையுடைத் தாயே

சத்தினி பாதந் தனையளித் தெனைமேல்
வைத்தமு தளித்த மரபுடைத் தாயே

சத்திசத் தர்களெலாஞ் சார்ந்தென தேவல்செய்
சித்தியை யளித்த தெய்வகற் ரூயே

தன்னிக ரில்லாத் தலைவனைக் காட்டியே
என்னைமே லேற்றிய வினியகற் ரூயே

வெளிப்பட விரும்பிய வினைவெலா மெனக்கீகே
அளித்தளித் தின்புசெய் யன்புடைத் தாயே

எண்ணகத் தெதுபுறத் தென்னையெந் ஞான்றுங்
கண்ணெனக் காக்குங் கருணைகற் ரூயே

இன்னரு ளமுதளித் திறவாத் திறல்புரிந்
தென்னை வளர்த்திடு மின்புடைத் தாயே

என்னுட லென்னுயி ரென்னறி வெல்லாம்
[1] தன்னவென் ரூக்கிய தயையுடைத் தாயே

தெரியா வகையாற் சிறியேன் றளர்ந்திடத்
தரியா தணைத்த தயையுடைத் தாயே

சினமுத லனைத்தையுந் தீர்த்தெனை நனவினுங்
கனவினும் பிரியாக் கருணைகற் ரூயே

தூக்கமுஞ் சோம்புமென் றுன்பமு மச்சமும்
ஏக்கமு நீக்கிய என்றனித் தாயே

32. உயிர்த் தந்தை

துன்பெலாந் தவிர்த்துளே யன்பெலா நிரம்ப
இன்பெலா மளித்த என்றனித் தந்தையே

எல்லா நன்மையு மென்றனக் களித்த
எல்லாம் வல்லசித் தென்றனித் தந்தையே

நாயிற் கடையே னலம்பெறக் காட்டிய
தாயிற் பெரிதுந் தயவுடைத் தந்தையே

[1] தன்ன — அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப்பெயர்.

அறிவிலாப் பருவத் தறிவெனக் களித்தே
பிறிவிலா தமர்ந்த பேரருட் டந்தையே

புன்னிக ரில்லேன் பொருட்டிவ ணடைந்த
தன்னிக ரில்லாத் தனிப்பெருந் தந்தையே

அகத்தினும் புறத்தினு மமர்ந்தருட் ஜோதி
ஜகத்தினி லெனக்கே தந்தமெய்த் தந்தையே

இணையிலாக் களிப்புற் றிருந்திட வெனக்கே
துணையடி சென்னியிற் சூட்டிய தந்தையே

ஆதியீ றறியா வருளர சாட்சியிற்
ஜோதிமா மகுடஞ் சூட்டிய தந்தையே 1130

எட்டிரண் டறிவித் தெனைத்தனி யேற்றிப்
பட்டிமண் டபத்திற் பதித்தமெய்த் தந்தையே

தங்கோ லளவது தந்தருட் ஜோதிச்
செங்கோல் செலுத்தெனச் செப்பிய தந்தையே

தன்பொரு ளனைத்தையுந் தன்னர சாட்சியில்
என்பொரு ளாக்கிய வென்றனித் தந்தையே

தன்வடி வனைத்தையுந் தன்னர சாட்சியில்
என்வடி வாக்கிய வென்றனித் தந்தையே

தன்சித் தனைத்தையுந் தன்சமு கத்தினில்
என்சித் தாக்கிய வென்றனித் தந்தையே 1140

தன்வச மாகிய தத்துவ மனைத்தையும்
என்வச மாக்கிய வென்னுயிர்த் தந்தையே

தன்கையிற் பிடித்த தனியருட் ஜோதியை
என்கையிற் கொடுத்த வென்றனித் தந்தையே

தன்னையுந் தன்னருட் சத்தியின் வடிவையும்
என்னையு மொன்றென வியற்றிய தந்தையே

தன்னிய லென்னியல் தன்செய லென்செயல்
என்ன வியற்றிய வென்றனித் தந்தையே

தன்னுரு வென்னுரு தன்னுரை யென்னுரை
என்ன வியற்றிய வென்றனித் தந்தையே 1150

சதுரப் பேரருட் டனிப்பெருந் தலைவனென்
றெதிரற் றோங்கிய வென்னுடைத் தந்தையே

மனவாக் கறியா வரைப்பினி லெனக்கே
இனவாக் கருளிய வென்னுயிர்த் தந்தையே

உணர்ந்துணர்ந் துணரினு முணராப் பெருநிலை
அணைந்திட வெனக்கே யருளிய தந்தையே

துரியவாழ் வுடனே சுகபூ ரணமெனும்
பெரியவாழ் வளித்த பெருந்தனித் தந்தையே

ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
பேறளித் தாண்ட பெருந்தகைத் தந்தையே

எவ்வகைத் திறத்தினு மெய்துதற் கரிதாம்
அவ்வகை நிலையெனக் களித்தருட் டந்தையே

இனிப்பிற வாநெறி யெனக்களித் தருளிய
தனிப்பெருந் தலைமைத் தந்தையே தந்தையே

33. உயிர்த் துணை

பற்றயர்ந் தஞ்சிய பரிவுகண் டணைத்தினைச்
சற்றுமஞ் சேலெனத் தாங்கிய துணையே

தளர்ந்தவத் தருணமென் றளர்வெலாந் தவிர்த்துட்
களர்ந்திட வெனக்குக் கிடைத்தமைப்த் துணையே

துறையிது வழியிது துணிவிது நீசெயும்
முறையிது வெனவே மொழிந்தமைப்த் துணையே

எங்குறு தீமையு மெணைத்திதாட ராவகை
கங்குலும் பகலுமெய்க் காவல்செய் துணையே

வேண்டிய வேண்டிய விருப்பெலா மெனக்கே
யீண்டிருந் தருள்புரி யென்னுயிர்த் துணையே

இகத்தினும் பரத்தினு மெனக்கிடர் சாரா
தகத்தினும் புறத்தினு மமர்ந்தமைப்த் துணையே

34. உயிர் நட்பு

அயர்வற வெனக்கே யருட்டுணை யாகியென்
உயிரினுஞ் சிறந்த வொருமையென் னட்பே

அன்பினிற் கலந்தென தறிவினிற் பின்றே
இன்பினி லெளைந்தமைவன் னின்னுயிர் நட்பே

நான்புரி வனவெலாந் தான்புரிந் தெனக்கே
வான்பத மளிக்க வாய்த்தநன் னட்பே

உள்ளமு முணர்ச்சியு முயிருங் கலந்துகொன்
டெள்ளுறு நெய்யிலென் னுள்ளுறு நட்பே

செற்றமுந் தீமையுந் தீர்த்துநான் செய்த
குற்றமுங் குணமாக் கொண்டவென் னட்பே

குணங்குறி முதலிய குறித்திடா தெனினே
அணங்கறக் கலந்த அன்புடை நட்பே

பிணக்கும் பேதமும் பேயுல கோர்புகல்
கணக்குந் தீர்த்தெனைக் கலந்தநன் னட்பே

சவலைநெஞ் சகத்தின் றளர்ச்சியு மச்சமும்
கவலையுந் தவிர்த்தெனைக் கலந்தநன் னட்பே

35. உயிர் உறவு

களைப்பறிந் தெடுத்துக் கலக்கந் தவிர்த்தெனக்
கிளைப்பறிந் துதவிய என்னுயி ருறவே

தன்னைத் தழுவுறு தாஞ்சிறி தறியா
தென்னைத் தழுவிய வென்னுயி ருறவே

மனக்குறை நீக்கிநல் வாழ்வளித் தென்றும்
எனக்குற வாகிய வென்னுயி ருறவே

துன்னு மனுதியே சூழ்ந்தெனைப் பிரியா
தென்னுற வாகிய என்னுயி ருறவே

36. இயற்கை உண்மை (சத்து)

என்றுமோர் நிலையா யென்றுமோ ரியலாய்
என்றுமுள் ளதுவா மென்றனிச் சத்தே

அனைத்துல கவைகளு மாங்காங் குணரினும்
இனைத்தென வறியா வென்றனிச் சத்தே

பொதுமறை முடிகளும் புகலவை முடிகளும்
இதுவெனற் கரிதா மென்றனிச் சத்தே

ஆகம முடிகளு மவைபுகல் முடிகளும்
எகுதற் கரிதா மென்றனிச் சத்தே

சத்தியஞ் சத்தியஞ் சத்திய மெனவே
இத்தகை வழுத்து மென்றனிச் சத்தே

துரியமுங் கடந்ததோர் பெரியவான் பொருளென
உரைசெய்வே தங்க ளுன்னுமெய்ச் சத்தே

அன்றத னப்பா லதன்பரத் ததுதான்
என்றிட நிறைந்த வென்றனிச் சத்தே

37. இயற்கை விளக்கம் (சித்து)

என்றுமுள் ளதுவா யெங்குமோர் நிறைவாய்
என்றும் விளங்கிடு மென்றனிச் சித்தே

சத்திகள் பலவாய்ச் சத்தர்கள் பலவாய்
இத்தகை விளங்கு மென்றனிச் சித்தே

தத்துவம் பலவாய்த் தத்துவி பலவாய்
இத்தகை விளங்கு மென்றனிச் சித்தே

படிநிலை பலவாய்ப் பதநிலை பலவாய்
இடிவற விளங்கிடு மென்றனிச் சித்தே

மூர்த்தர்கள் பலவாய் மூர்த்திகள் பலவாய்
ஏற்பட விளக்கிடு மென்றனிச் சித்தே

உயிர்வகை பலவா யுடல்வகை பலவாய்
இயலுற விளக்கிடு மென்றனிச் சித்தே

அறிபவை பலவா யறிவன பலவாய்
எறிவற விளக்கிடு மென்றனிச் சித்தே

நிணபவை பலவாய் நினைவன பலவாய்
இனைவ்ற விளக்கிடு மென்றனிச் சித்தே

காட்சிகள் பலவாய்க் காண்பன பலவாய்
ஏட்சியின் விளக்கிடு மென்றனிச் சித்தே

செய்வினை பலவாய்ச் செய்வன பலவாய்
எய்வற விளக்கிடு மென்றனிச் சித்தே

அண்ட சராசர மனைத்தையும் பிறவையும்
எண்தா விளக்கு மென்றனிச் சித்தே

எல்லாம் வல்லசித் தெனமறை புகன்றிட
எல்லாம் விளக்கிடு மென்றனிச் சித்தே

38. இயற்கை இன்பம் (ஆனந்தம்)

ஒன்றது லொன்றென் றுரைக்கவும் படாதாய்
என்றுமோர் படித்தா மென்றனி இன்பே

இதுவது வென்னு விபவுடை யதுவாய்
எதிரற நிறைந்த வென்றனி யின்பே

ஆக்குறு மவத்தைக ளனைத்தையுங் கடந்துமேல்
எக்கற நிறைந்த வென்றனி யின்பே

அறிவுக் கறிவினி லதுவது வதுவாய்
எறிவற் றோங்கிய வென்றனி யின்பே

விடய மெவற்றினு மேன்மேல் விளைந்தவை
இடையிடை யோங்கிய வென்றனி யின்பே

இம்மையு மறுமையு மியம்பிடு மொருமையும்
எம்மையு நிரம்பிடு மென்றனி யின்பே

முத்தர்கள் சித்தர்கள் சத்திகள் சத்தர்கள்
எத்திறத் தவர்க்குமா மென்றனி யின்பே

எல்லா நிலைகளி னெல்லா வுயிருறும்
எல்லா வின்புமா மென்றனி இன்பே

39. அருள் அமுதம்

கரும்புறு சாறுங் கனிந்தமுக் கனியின்
விரும்புறு மிதமு மிக்கதீம் பாலும்
குணங்கொள் கோற்றேனுங் கூட்டியொன் றாக்கி
மணங்கொளப் பதஞ்செய் வகைபுற வியற்றிய

உணவெனப் பலகா லுரைக்கினு நிகரா
வணமுறு மின்ப மயமே யதுவாய்க்
கலந்தறி வுருவாய்க் கருதுதற் கரிதாய்
நலந்தரு விளக்கமு நவிலருந் தண்மையும்
உள்ளதா யென்று முள்ளதா யென்னுள்
உள்ளதா யென்றன் உயிருள முடம்புடன்
எல்லா மினிப்ப இயலுறு சுவையளித்
தெல்லாம் வல்லசித் தியற்கைய தாகிச்
சாகா வரமுந் தனித்தபே ரறிவும்
மாகா தலிற்சிவ வல்லப சத்தியும்
செயற்கரு மனந்த சித்தியு மின்பமும்
மயக்கறத் தருந்திறல் வண்மைய தாகிப்
பூரண வடிவாய்ப் பொங்கிமேற் றதும்பி
ஆரண முடியுட னகம முடியுங்
கடந்தென தறிவாங் கனன்மேற் சபைநடு
நடந்திகழ் கின்றமெய்ஞ் ஞானவா ரமுதே
சத்திய வமுதே தனித்திரு வமுதே
நித்திய வமுதே நிறைசிவ வமுதே
சச்சிதா னந்தத் தனிமுத லமுதே
மெய்ச்சிதா காச விளைவரு ளமுதே
ஆனந்த வமுதே யருளொளி யமுதே
தானந்த மில்லாத் தத்துவ வமுதே
நவநில தருமோர் நல்லறிதள் ளமுதே
சிவநில தனிலே திரண்டவுள் ளமுதே
பொய்படாக் கருணைப் புண்ணிய வமுதே
கைபடாப் பெருஞ்சீர்க் கடவுள்வா னமுதே
அகம்புற மகப்புற மாகிய புறப்புறம்
உகந்த நான்கிடத்து மோங்கிய வமுதே
பனிமுத னீக்கிய பரம்பர வமுதே
தனிமுத லாய சிதம்பர வமுதே
உலகெலாங் கொள்ளினும் [1] உலப்பிலா வமுதே
அலகிலாப் பெருந்திற லற்புத வமுதே

40. மணி

அண்டமு மதன்மே லண்டமு மவற்றுள்
பண்டமுங் காட்டிய பரம்பர மணியே
பிண்டமு மதிலுறு பிண்டமு மவற்றுள்
பண்டமுங் காட்டிய பராபர மணியே

1. உலப்பு—குறைவு.

நினைத்தவை நினைத்தவை நினைத்தாங் கெய்துற
அனைத்தையுந் தருமோ ரரும்பெறன் மணியே

விண்பத மனைத்து மேற்பத முழுவதுங்
கண்பெற நடத்துங் ககளமா மணியே

பார்பத மனைத்தும் பகரடி முழுவதுஞ்
சார்புற நடத்துஞ் சரவொளி மணியே

அண்டகோ டிகளெலா மரைக்கணத் தேதெரிக்
கண்டுகொண் டிடவொளிர் கலைநிறை மணியே

சராசர வுயிர்தொறுஞ் சாற்றிய பொருடொறும்
விராவியுள் விளங்கும் வித்தக மணியே

மூவரு முனிவரு முத்தருஞ் சித்தருந்
தேவரு மதிக்குஞ் சித்திசெய் மணியே

தாழ்வெலாந் தவிர்த்துச் சகமிசை யழியா
வாழ்வெனக் களித்த வளரொளி மணியே

நவமணி முதலிய நலமெலாந் தருமொரு
சிவமணி யெனுமருட் செல்வமா மணியே

41. மந்திரம்

வான்பெறற் கரிய வகையெலாம் விரைந்து
நான்பெற வளித்த நாதமந் திரமே

கற்பம் பல்பல கழியினு மழியாப்
பொற்புற வளித்த புனிதமந் திரமே

அகரமு முகரமு மழியாச் சிகரமும்
வகரமு மாகிய வாய்மைமந் திரமே

ஐந்தென எட்டென ஆறென நான்கென
மூந்துறு மறைமுறை மொழியுமந் திரமே

வேதமு மாகம விரிவுக ளனைத்தும்
ஓதநின் றுலவா தோங்குமந் திரமே

42. மருந்து

உடற்பிணி யனைத்தையு முயிர்ப்பிணி யனைத்தையும்
அடர்ப்பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே

சித்திக்கு மூலமாஞ் சிவமருந் தெனவுளந்
தித்திக்கு ஞானத் திருவருண் மருந்தே

இறந்தவ ரெல்லா மெழுந்திடப் புரியுஞ்
சிறந்தவல் லபமுறு திருவருண் மருந்தே

மரணப் பெரும்பணி வாரா வகைமிகு
காரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே

நரைதிரை மூப்பவை நண்ணு வகைதருஞ்
உரைதரு பெருஞ்சீ ருடையநன் மருந்தே
என்றே யென்னினு மிளமையோடிருக்க
நன்றே தருமொரு ஞானமா மருந்தே
மலப்பிணி தவிர்த்தருள் வலந்தரு கின்றதோர்
நலத்தகை யதுவென நாட்டிய மருந்தே
சிற்சபை நடுவே திருநடம் புரியும்
அற்புத மருந்தெனும் ஆனந்த மருந்தே

43. மாற்றறியாப் பொன்

இடையுறப் படாத வியற்கை விளக்கமாய்த்
தடையொன்று மில்லாத் தகவுடை யதுவாய்
மாற்றிவை யென்ன மதித்தளப் பரிதாய்
ஊற்றமும் வண்ணமு மொருங்குடை யதுவாய்
காட்சிக் கினியதற் கலிபுடை யதுவாய்
ஆட்சிக் குரியபன் மாட்சியு முண்டைத்தாய்க்
கைதவர் கனவினுங் காண்டற் கரிதாய்ச்
செய்தவப் பயனுந் திருவருள் வலத்தால்
உளம்பெறு மிடமெலா முதவுக வெனவே
வளம்பட வாய்த்து மன்னிய பொன்னே

புடம்படாத் தாமும் விடம்படாத் திறமும்
வடம்படா நலமும் வாய்த்தசெம் பொன்னே
மும்மையுந் தருமொரு செம்மையை புடைத்தாய்
இம்மையே கிடைத்திங் கிலங்கிய பொன்னே
எடுத்தெடுத் துதவினு மென்றுங் குறையா
தடுத்தடுத் தோங்குமெய் யருளுடைப் பொன்னே
தளர்ந்திடே லெடுக்கின் வளர்ந்திடு வேமெனக்
களர்ந்திட வுரைத்துக் கிடைத்தசெம் பொன்னே
எண்ணிய தோறு மியற்றுக வென்றெனை
அண்ணியென் கரத்தி லமர்ந்தபைம் பொன்னே
நீகேண் மறக்கினு நின்னையாம் விட்டுப்
போகே மெனவெனைப் பொருந்திய பொன்னே
எண்ணிய வெண்ணியாங் கெய்திட வெனக்குப்
பண்ணிய தவத்தாற் பழுத்தசெம் பொன்னே
விண்ணியற் றலைவரும் வியந்திட வெனக்குப்
புண்ணியப் பயனுற் பூத்தசெம் பொன்னே
நால்வகை நெறியினு நாட்டுக வெனவே
பால்வகை முழுதும் பணித்தபைம் பொன்னே

எழுவகை நெறியினு மியற்றுக வெனவே
முழுவகை காட்டி முயங்கிய பொன்னே

44. உலவா நிதி

எண்ணிய படியெலா மியற்றுக வென்றெனைப்
புண்ணிய பலத்தாற் பொருந்திய நிதியே
ஊழிதோ றூழி யுலப்புறு தோங்கி
வாழியென் றெனக்கு வாய்த்தநன் னிதியே
இதமுற வூழிதோ றெடுத்தெடுத் துலகோர்க்
குதவினு முலவா தோங்குநன் னிதியே
இருநிதி யெழுநிதி யியனவ நிதிமுதல்
திருநிதி யெல்லாந் தருமொரு நிதியே
எவ்வகை நிதிகளு மிந்தமா நிதியிடை
அவ்வகை கிடைக்குமென் றருளிய நிதியே
அற்புதம் விளங்கு மருட்பெரு நிதியே
கற்பனை கடந்த கருணைமா நிதியே
நற்குண நிதியே சற்குண நிதியே
நிற்குண நிதியே சிற்குண நிதியே

45. சோதிமலை

பளகிலா தோங்கும் பளிக்குமா மலையே
வளமெலா நிறைந்த மாணிக்க மலையே
மதியுற விளங்கு மரகத மலையே
வதிதரு பேரொளி வச்சிர மலையே
உரைமனங் கடந்தாங் கோங்குபொன் மலையே
துரியமேல் வெளியிற் சோதிமா மலையே

46. இயற்கைப் பொருண்மை

புற்புதந் திரைநுரை புரைமுத லிலதோர்
அற்புதக் கடலே அமுதத்தெண் கடலே
இருட்கலை தவிர்த்தொளி யெல்லாம் வழங்கிய
அருட்பெருங் கடலே யானந்தக் கடலே
பவக்கடல் கடந்துநான் பார்த்தபோ தருகே
உவப்புறு வளங்கொண் டோங்கிய கரையே
என்துயர்ச் சோடைக ளெல்லாந் தவிர்த்துளம்
நன்றுற விளங்கிய நந்தனக் காவே
சேற்றுநீ ரின்றிநற் றீஞ்சுவை தருமோர்
ஊற்றுநீர் நிரப்ப வுடையபூந் தடமே

கோடைவாய் விரிந்த குளிர்தரு நிழலே
மேடைவாய் வீசிய மெல்லிய காற்றே

களைப்பறக் கிடைத்த கருணைநன் னீரே
இளைப்பற வாய்த்த இன்சுவை யுணவே

தென்னைவாய்க் கிடைத்த செவ்விள நீரே
தென்னைவான் பலத்தின் திருகுதீம் பாலே

நீர்நசை தவிர்க்கு நெல்லிபங் கனியே
வேர்வினை பலவின் மென்சுவைச் சுளையே

கட்டுமாம் பழமே கதலிவான் பழமே
இட்டநற் சுவைசெய் இலந்தையங் கனியே

புனிதவான் றருவிற் புதுமையாம் பலமே
கனியெலாங் கூட்டிக் கலந்ததீஞ் சுவையே

இதந்தரு கரும்பி லெடுத்ததீஞ் சாறே
பதந்தரு வெல்லப் பாகினின் சுவையே

சாலவே யினிக்குஞ் சர்க்கரைத் திரளே
ஏலவே நாவுக் கினியகற் கண்டே

உலப்புறு தினிக்கு முயர்மலைத் தேனே
கலப்புறு மதுரங் கனிந்தகோற் றேனே

நவையிலா தெனக்கு நண்ணிய நறவே
சுவையெலாந் திரட்டிய தூயதீம் பதமே

பதம்பெறக் காய்ச்சிய பசுநறும் பாலே
இதம்பெற வுருக்கிய இளம்பசு நெய்யே

உலர்ந்திடா தென்று மொருபடித் தாகி
மலர்ந்துநல் வண்ணம் வயங்கிய மலரே

இகந்தரு புவிமுத லெவ்வுல குயிர்களும்
உகந்திட மணக்குஞ் சுகந்தநன் மணமே

யாழுறு மிசையே யினியவின் னிசையே
ஏழுறு மிசையே யியலரு னிசையே

திவளொளிப் பருவஞ் சேர்ந்தநல் லவளே
அவளொடுங் கூடி யடைந்தசேதார் சுகமே

நாதநல் வரைப்பில் நண்ணிய பாட்டே
வேதகீ தத்தில் விளைதிருப் பாட்டே

நன்மார்க்கர் நாவில் நவிற்றிய பாட்டே
சன்மார்க்க சங்கந் தழுவிய பாட்டே

நம்புறு மாகம நவிற்றிய பாட்டே
எம்பல மாகிய வம்பலப் பாட்டே

என்மனக் கண்ணே என்னருட் கண்ணே
என்னிரு கண்ணே யென்கணுண் மணியே

என்பெருங் களிப்பே யென்பெரும் பொருளே
என்பெருந் திறலே யென்பெருஞ் செயலே
என்பெருந் தவமே யென்றவப் பலனே
என்பெருஞ் சுகமே யென்பெரும் பேறே
என்பெரு வாழ்வே யென்றன்வாழ் முதலே
என்பெரு வழக்கே யென்பெருங் கணக்கே
என்பெரு நலமே யென்பெருங் குலமே
என்பெரு வலமே யென்பெரும் புலமே
என்பெரு வரமே யென்பெருந் தரமே
என்பெரு நெறியே யென்பெரு நிலையே
என்பெருங் குணமே யென்பெருங் கருத்தே
என்பெருந் தபவே யென்பெருங் கதியே
என்பெரும் பதியே யென்னுயி ரியலே
என்பெரு நிறைவே யென்றனி யறிவே

47. தனி அன்பு

தோலெலாங் குழைந்திடச் சூழ்ரம் பனைத்தும்
மேலெலாங் கட்டவை விட்டுவிட் டியங்கிட
என்பெலா நெக்குநெக் கியலிடை நெகிழ்ந்திட
மென்புடைத் தசையெலா மெய்யுறத் தளர்ந்திட
இரத்த மனைத்துமுள் ளிறுகிடச் சுக்கிலம்
உரத்திடை பந்தித் தொருதிர ளாயிட
மடலெலா மூள மலர்ந்திட அமுதம்
உடலெலா மூற்றெடுத் தோடி நிரம்பிட
ஓண்ணுதல் வியர்த்திட ஒளிமுக மலர்ந்திடத்
தண்ணிய வுயிர்ப்பினிற் சாந்தந் ததும்பிட
உண்ணகை தோற்றிட வுரோமம் பொடித்திடக்
கண்ணினீர் பெருகிக் கால்வழிந் தோடிட
வாய்துடித் தலறிட வளர்செவித் துணைகளிற்
கூயிசைப் பொறியெலாங் கும்மெனக் கொட்டிட
மெய்யெலாங் குளிர்ந்திட மென்மார் பசைந்திடக்
கையெலாங் குவிந்திடக் காலெலாஞ் சுலவிட
மனங்கனிந் துருகிட மதிநிறைந் தொளிர்ந்திட
இனம்பெறு சித்த மியைந்து களித்திட
அகங்கார மாங்காங் கதிகரிப் பமைந்திடச்
சகங்காண வுள்ளந் தழைத்து மலர்ந்திட
அறிவுரு வனைத்து மானந்த மாயிடப்
பேற்றியுறு மான்மதற் போதமும் போயிடத்

தத்துவ மினைத்துந் தாமொருங் கொழிந்திடச்
சத்துவ மொன்றே தனித்துகின் றோங்கிட

உலகெலாம் விடய முளவெலா மறைந்திட
அலகிலா வருளி னைசைமேற் பொங்கிட

என்னுளத் தெழுந்துயி ரெல்லா மலர்ந்திட
என்னுளத் தோங்கிய என்றனி அன்பே

பொன்னடி கண்டருட் புத்தமு துணவே
என்னுளத் தெழுந்த என்னுடை யன்பே

தன்னையே யெனக்குத் தந்தரு ளொளியால்
என்னை வேதித்த என்றனி யன்பே 1480

என்னுளே யரும்பி யென்னுளே மலர்ந்து
என்னுளே விரிந்த என்னுடை யன்பே

என்னுளே விளங்கி யென்னுளே பழுத்து
என்னுளே கனிந்த என்னுடை யன்பே

தன்னுளே நிறைவுறு தயமெலா மளித்தே
என்னுளே நிறைந்த என்றனி யன்பே

துன்புள வினைத்துந் தொலைத்தெனை துருவை
இன்புரு வாக்கிய என்னுடை யன்பே

I பொன்னுடம் பெனக்குப் பொருந்திடும் பொருட்டாய்
என்னுளங் கலந்த என்றனி யன்பே 1490

தன்வச மாகித் ததும்பிமேற் பொங்கி
என்வசங் கடந்த என்னுடை யன்பே

தன்னுளே பொங்கிய தண்ணமு துணவே
என்னுளே பொங்கிய என்றனி யன்பே

48. நித்திய விளக்கு

அருளொளி[2] விளங்கிட ஆணவ மெனுமோர்
இருளற வென்னுளத் தேற்றிய விளக்கே

துன்புறு தத்துவத் தூரிசெலா நீக்கிநல்
இன்புற வென்னுளத் தேற்றிய விளக்கே

மயலற வழியா வாழ்வுமேன் மேலும்
இயலுற வென்னுளத் தேற்றிய விளக்கே 1500

இடவெளி யினைத்து மியலொளி விளங்கிட
நடுவெளி நடுவே நாட்டிய விளக்கே

கருவெளி யினைத்துங் கதிரொளி விளங்கிட
உருவெளி நடுவே யொளிதரு விளக்கே

1 சுத்த தேகம். 2 பிரணவ தேகம்.

தேற்றிய வேதத் திருமுடி விளங்கிட
ஏற்றிய ஞான வியலொளி விளக்கே

ஆகம முடிமே லருளொளி விளங்கிட
வேகம தறவே விளங்கொளி விளக்கே

ஆரியர் வழுத்திய வருணிலை யறுதி
காரியம் விளக்குமோர் காரண விளக்கே

49. நிறைமதி

தண்ணிய வமுதே தந்தென துளத்தே
புண்ணியம் பலித்த பூரண மதியே

உய்தர வமுத முதவியென் னுளத்தே
செய்தவம் பலித்த திருவளர் மதியே

பதியெலாந் தழைக்கப் பதம்பெறு மமுத
நிதியெலா மளித்த நிறைதிரு மதியே

பாலெனத் தண்கதிர் பரப்பியெஞ் ஞான்றும்
மேல்வெளி விளங்க விளங்கிய மதியே

50. கருணை மழை

உயங்கிய உள்ளமு முயிருந் தழைத்திட
வயங்கிய கருணை மழைபொழி மழையே

என்னையும் பணிகொண் டென்னுளே நிரம்ப
மன்னிய கருணை மழைபொழி மழையே

உளங்கொரு மெனக்கே வுவகைமேற் பொங்கி
வளங்கொளக் கருணை மழைபொழி மழையே

நலந்தர வுடலுயிர் நல்லறி வெனக்கே
மலர்ந்திடக் கருணை மழைபொழி மழையே

தூய்மையா லெனது தூரிசெலா நீக்கிநல்
வாய்மையாற் கருணை மழைபொழி மழையே

51. செஞ்சுடர்

வெம்மல விரவது விடிதரு ணைந்தனிற்
செம்மையி லுதித்துளந் திகழ்ந்த செஞ்சுடரே

திரையெலாந் தவிர்த்துச் செல்வியுற் றுங்கே
வரையெலாம் விளங்க வயங்குசெஞ் சுடரே

அலகிலாத் தலைவர்க ளரசுசெய் தத்துவ
உலகெலாம் விளங்க வோங்குசெஞ் சுடரே

மூன்றுறு மலவிருள் முழுவது நீக்கியே
யென்னுள வரைமே லெழுந்தசெஞ் சுடரே

ஆதியு நடுவுட னந்தமுங் கடந்த
ஜோதியா யென்னுளுஞ் சூழ்ந்த மெய்ச்சுடரே

52. அருட் கனல்

உள்ளொளி யோங்கிட வுயிரொளி விளங்கிட
வெள்ளொளி காட்டிய மெய்யருட் கனலே
நலங்கொளப் புரிந்திடு ஞானயா கத்திடை
வலஞ்சுழித் தெழுந்து வளர்ந்தமெய்க் கனலே
வேதமு மாகம விரிவும் பரம்பர
நாதமுங் கடந்த ஞானமெய்க் கனலே
எண்ணிய வெண்ணிய வெலாந்தர வென்னுள்
நண்ணிய புண்ணிய ஞானமெய்க் கனலே
வலமுறு சுத்தசன் மார்க்க நிலைபெறு
நலமெலா மளித்த ஞானமெய்க் கனலே

53. பரஞ்சுடர்

இரவொடு பகலிலா வியல்பொது நடஞ்டு
பரமவே தாந்தப் பரம்பரஞ் சுடரே
வாநிறை பொதுவிடை வளர்திரு நடம்புரி
பரமசித் தாந்தப் பதிபரஞ் சுடரே
சமரச சத்தியச் சபையி னடம்புரி
சமரச சத்தியத் தற்சுயஞ் சுடரே

54. அருட்பெருஞ்ஜோதி

சபையென துளமெனத் தானமர்ந் தெனக்கே
அபய மளித்ததோர் அருட்பெருஞ் ஜோதி
மருளெலாந் தவிர்த்து வரமெலாங் கொடுத்தே
அருளமு தருத்திய அருட்பெருஞ் ஜோதி
வாழிநின் பேரருள் வாழிநின் பெருஞ்சீர்
ஆழியொன் றளித்த அருட்பெருஞ் ஜோதி
என்னையும் பொருளென வெண்ணியென் னுளத்தே
அன்னையு மப்பனு மாகிவீற் றிருந்து
உலகியற் சிறிதும் உளம்பிடி யாவகை
அலகில்பே ரருளா லறிவது விளக்கிச்
சிறுநெறி செல்லாத் திறனளித் தழியா
துறுநெறி யுணர்ச்சிதந் தொளியுறப் புரிந்து
சாகாக் கல்வியின் தரமெலா முணர்த்திச்
சாகா வரத்தையுந் தந்துமேன் மேலும்

அன்பையும் விளைவித் தருட்பே ரொளியால்
இன்பையு நிறைவித் தென்னையு நின்னையும்

ஒருரு வாக்கியா னுன்னிய படியெலாஞ்
சீருறச் செய்துயிர்த் திறம்பெற வழியா

அருளமு தளித்தனை யருணிலை யேற்றினை
அருளறி வளித்தனை அருட்பெருஞ் ஜோதி

வெல்கநின் பேரருள் வெல்கநின் பெருஞ்சீர்
I அல்கலின் மேங்கிய அருட்பெருஞ் ஜோதி

உலகுயிர்த் திரளெலா மொளிநெறி பெற்றிட
இலகுமைந் தொழிலையும் யான்செயத் தந்தனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலி னேங்கிய அருட்பெருஞ் ஜோதி

மூவருந் தேவரு முத்தருஞ் சித்தரும்
யாவரும் பெற்றிடா இயலெனக் களித்தனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலி னேங்கிய அருட்பெருஞ் ஜோதி

சித்திக ளனைத்தையுந் தெளிவித் தெனக்கே
சத்திய நிலைதனைத் தயவினிற் றந்தனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலி னேங்கிய அருட்பெருஞ் ஜோதி

உலகினி லுயிர்களுக் குறுமிடை யூறெலாம்
விலகநீ யடைந்து விலக்குக மகிழ்க

சுத்தசன் மார்க்கச் சுகநிலை பெறுக
உத்தம னுகுக வோங்குக வென்றனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலி னேங்கிய அருட்பெருஞ் ஜோதி

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி.

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி

---

1 அல்கல் என்பது—குறைதல்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

2. பரசிவ வணக்கம்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

திருவிளங்கச் சிவயோகச் சித்தியெலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்கவொளி சிறந்ததிரு விளக்கே
உருவிளங்க வுயிர்விளங்க வுணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்கஅரு ளுதவுபெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தாருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே 1

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அன்பெனும் பிடிபு ளகப்படு மலையே
அன்பெனுங் குடில்புகு மாசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனுங் கரத்தம ரமுதே
அன்பெனுங் கடத்து ளடங்கிடுங் கடலே
அன்பெனு முயிரொளி ரறிவே
அன்பெனு மணுவு ளமைந்தபே ரொளியே
அன்புரு வாம்பர சிவமே. 2

அருட்பெருஞ்ஜோதி

---

3. பதிவிளக்கம்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அகரநிலை விளங்குசத்த ரனைவருக்கு மவர்பால்
அமர்ந்தசத்தி மாரவர்க ளனைவருக்கு மவராற்
பகரவரு மண்டவகை யனைத்தினுக்கும் பிண்டப்
பகுதிகளங் கனைத்தினுக்கும் பதங்களனைத் தினுக்கும்

இகாமுறு முயிரெவைக்குங் கருவிகளங் கெவைக்கும்
எப்பொருட்கு மனுபவங்க ளெவைக்குமுத்தி யெவைக்கும்
சிகாமுதல் சித்திவகை யெவைக்குமொளி வழங்குந்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர். 1

வண்ணமிகு பூதவெளி பகுதிவெளி முதலா
வகுக்குமடி வெளிகளெலாம் வயங்குவெளி யாகி
எண்ணமுறு மாமவுன வெளியாகி யதன்மேல்
இசைத்தபர வெளியாகி யியலுபய வெளியாய்
அண்ணுறுசிற் பரவெளியாய்த் தற்பரமாம் வெளியாய்
அமர்ந்தபெரு வெளியாகி யருளின்ப வெளியாய்த்
திண்ணமுறுந் தனியியற்கை யுண்மைவெளி யான
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர். 2

சார்பூத விளக்கமொடு பகுதிகளின் விளக்கந்
தத்துவங்கள் விளக்கமெலாந் தருவிளக்க மாகி
நேராதி விளக்கமதாய்ப் பரைவிளக்க மாகி
நிலைத்தபரா பரைவிளக்க மாகியகம் புறமும்
பேராசை விளக்கமதாய்ச் சுத்தவிளக் கமதாய்ப்
பெருவிளக்க மாகியெலாம் பெற்றவிளக் கமதாய்ச்
சீராட விளங்குகின்ற வியற்கைவிளக் கமதாந்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர். 3

இடம்பெறுமிந் திரியவின்பங் கரணவின்ப முலக
இன்பமுயி ரின்பமுத லெய்துமின்ப மாகித்
தடம்பெறுமோ ரான்மவின்பந் தனித்தவறி வின்பஞ்
சத்தியப்பே ரின்பமுத்தி யின்பமுமா யதன்மேல்
நடம்பெறுமெய்ப் பொருளின்பம் நிரதிசய வின்பம்
ஞானசித்திப் பெரும்போக நாட்டரசின் பமுமாய்த்
திடம்பெறவோங் கியவியற்கைத் தனியின்ப மயமாந்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர். 4

எல்லாந்தா னுடையதுவா யெல்லாம்வல் லதுவாய்
எல்லாந்தா னுனதுவா யெல்லாந்தா னலதாய்ச்
சொல்லாலும் பொருளாலுந் தோன்றுமறி வாலுந்
துணிந்தளக்க முடியாதாய்த் துரியவெளி கடந்த
வல்லாள ரனுபவத்தே யதுவதுவா யவரும்
மதித்திடுங்கா லரியதுவாய்ப் பெரியதுவா யணுவுஞ்
செல்லாத நிலைகளினுஞ் செல்லுவதாய் விளங்குந்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர். 5

அயர்வறுபே ரறிவாகி யவ்வறிவுக் கறிவாய்
அறிவறிவுள் ளறிவாயாங் கதனுள்ளோ ரறிவாய்
மயர்வறுமோ ரியற்கையுண்மைத் தனியறிவாய்ச் செயற்கை
மன்னுமறி வனைத்தினுக்கும் வயங்கியதா ரகமாய்த்
துயரறுதா ரகமுதலா யம்முதற்கோர் முதலாய்த்
துரியநிலை கடந்ததன்மேல் சுத்தசிவ நிலையாய்
உயர்வுறுசிற் றம்பலத்தே யெல்லாந்தா மாகி
ஓங்குகின்ற தனிக்கடவு ளொருவருண்டே கண்டீர். 6

அண்டமெலாம் பிண்டமெலா முயிர்களெலாம் பொருள்கள்
ஆனவெலா மிடங்களெலாம் நீக்கமற நிறைந்தே
கொண்டவெலாங் கொண்டவெலாங் கொண்டுகொண்டு மேலுங்
கொள்வதற்கே யிடங்கொடுத்துக் கொண்டுசலிப் பின்றிக்
கண்டமெலாங் கடந்துநின்றே யகண்டமதா யதுவாய்
கடந்தவெளி யாயதுவுங் கடந்ததனி வெளியாம்
ஒண்டகுசிற் றம்பலத்தே யெல்லாம்வல் லவராய்
ஓங்குகின்ற தனிக்கடவு ளொருவருண்டே கண்டீர். 7

பாரோடீர் கனல்காற்ரு காயமெனும் பூதப்
பகுதிமுதல் பகர்நாதப் பகுதிவரை யான
ஏர்பெறுதத் துவவுருவாய்த் தத்துவகா ரணமாய்
இயம்பியகா ரணமுதலாய்க் காரணத்தின் முடிவாய்
நேருறுமம் முடிவனைத்து நிகழ்ந்திடுபூ ரணமாய்
நித்தியமாய்ச் சத்தியமாய் நிர்க்குணசிற் குணமாய்
ஓர்தருசன் மாத்திரமாந் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவு ளொருவருண்டே கண்டீர். 8

இரவிமதி யுடுக்கண்முதல் கலிகளெலாந் தம்மேமார்
இலேசமதா யெண்கடந்தே யிலங்கியபின் டாண்டம்
பரவுமற்றைப் பொருள்களுயிர்த் திரள்கண்முத லெல்லாம்
பகரகத்தும் புறத்துமகப் புறத்துடனப் புறத்தும்
விரவியெங்கு நீக்கமற விளங்கியந்த மாதி
விளம்பரிய பேரொளியா யவ்வொளிப்பே ரொளியாய்
உரவுறுசின் மாத்திரமாந் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவு ளொருவருண்டே கண்டீர். 9

ஆற்றுவிட யானந்தந் தத்துவவா னந்தம்
அணியோகா னந்தமதிப் பருஞான னந்தம்
பேற்றுறுமான் மானந்தம் பரமானந் தஞ்சேர்
பிரமானந் தஞ்சாந்தப் பேரானந் தத்தே

டேற்றிடுமே கானந்த மத்துவிதா னந்தம்
இயன்றசச்சி தானந்தஞ் சுத்தசிவா னந்தம்
ஊற்றமதாஞ் சமரசவா னந்தசபை தனிலே
ஓங்குகின்ற தனிக்கடவு ளொருவருண்டே கண்டீர். 10

வகுத்தவுயிர் மூதற்பலவாம் பொருள்களுக்கும் வடிவம்
வண்ணநல முதல்பலவாங் குணங்களுக்கும் புகுதல்
புகுத்தலுறன் முதல்பலவாஞ் செயல்களுக்குந் தாமே
புகல்கரண முபகரணங் கருவியுப கருவி
மிகுத்தவுறுப் பதிகரணங் காரணம்பல் காலம்
விதித்திடுமற் றவைமுழுது மாகியல்லா ராகி
உகப்புறுமோர் சுத்தசிவா னந்தசபை தனிலே
ஓங்குகின்ற தனிக்கடவு ளொருவருண்டே கண்டீர். 11

இயற்கையிலே பாசங்க ளொன்றுமிலார் குணங்கள்
ஏதுமிலார் தத்துவங்க ளேதுமிலார் மற்றோர்
செயற்கையில்லார் பிறப்பில்லா ரிறப்பில்லார் யாதுந்
தரிப்பில்லார் களங்கமில்லார் தீமையொன்று மில்லார்
வியப்புறவேண் டுதலில்லார் வேண்டாமை யில்லார்
மெய்யேமெய் யாகியெங்கும் விளங்கியின்ப மயமாய்
உயத்தருமோர் சுத்தசிவா னந்தசபை தனிலே
ஓங்குகின்ற தனிக்கடவு ளொருவருண்டே கண்டீர். 12

ஒன்றுமலா ரிரண்டுமலா ரொன்றிரண்டு மானார்
உருவுமலா ரருவுமலா ருருவருவு மானார்
அன்றுமுளா ரின்றுமுளா ரென்றுமுளார் தமக்கோர்
ஆதியிலா ரந்தமிலா ரரும்பெருஞ்ஜோ தியினர்
என்றுகனல் மதிபகத்தும் புறத்தும்விளங் கிடுவார்
யாவுமிலார் யாவுமுளார் யாவுமலார் யாவும்
ஒன்றுறுதா மாகிநின்றார் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவு ளொருவருண்டே கண்டீர். 13

அருட்பெருஞ்ஜோதி

அஷ்டகம்

4. அருட்பெருஞ்ஜோதி விளக்கம்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெரு வெளியி லருட்பெரு வுலகத்
தருட்பெருந் தலத்துமே னிலையில்
அருட்பெரும் பீடத் தருட்பெரு வடிவில்
அருட்பெருந் திருவிலே யமர்ந்த
அருட்பெரும் பதியே யருட்பெரு நிதியே
அருட்பெருஞ் சித்தியென் னமுதே
அருட்பெருங் களிப்பே யருட்பெருஞ் சுகமே
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 1

குலவுபே ரண்டப் பகுதியோ ரனந்த
கோடிகோ டிகளுமாங் காங்கே
நிலவிய பிண்டப் பகுதிகள் முழுது
நிகழ்ந்தபற் பலபொருள் திரளும்
விலகுறு தகத்தும் புறத்துமே லிடத்தும்
மெய்யறி வானந்தம் விளங்க
அலகுறு தொழியா ததுவதில் விளங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 2

கண்முதற் பொறியால் மனமுதற் காணக்
கருவிளைற் பகுதியின் கருவால்
எண்முதற் புருட தரத்திளைற் பரத்தால்
இசைக்குமோர் பரம்பர வுணர்வால்
விண்முதற் பரையால் பராபர வறிவால்
விளங்குவ தரிதென வுணர்ந்தோர்
அண்முதற் றடித்துப் படித்திட வோங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 3

நசைத்தமே னிலையீ தெனவுணர்ந் தாங்கே
நண்ணியுங் கண்ணுறு தந்தோ
திசைத்தமா மறைக ளுயங்கின மயங்கித்
திரும்பின வெனிலத னியலை

இசைத்தலெங் ஙனமோ வையகோ சிறிதும்
இசைத்திடு வேமென நாவை
அசைத்திடற் கரிதென் றுணர்ந்துளோர் வழுத்தும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 4

சுத்தவே தாந்த மவனமோ வலது
சுத்தசித் தாந்தரா சியமோ
நித்தநா தாந்த நிலையனு பவமோ
நிகழ்பிற முடிபின்மேன் முடிபோ
புத்தமு தனைய சமரசத் ததுவோ
பொருளிய லறிந்தில மெனவே
அத்தகை யுணர்ந்தோ ருரைத்துரைத் தேத்தும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 5

ஏகமோ வன்றி யனேகமோ வென்றும்
இயற்கையோ செயற்கையோ நித்தோ
தேகமோ பொதுவோ சிறப்பதோ பெண்ணே
திகழ்ந்திடு மாணதோ வதுவோ
யோகமோ பிரிவோ வொளியதோ வெளியோ
உரைப்பதற் றேறவென வுணர்ந்தோர்
ஆகமோ துரைத்து வழுத்தநின் றேங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 6

தத்துவ மனைத்துந் தனித்தனி கடந்தே
தத்துவா தீதமே னிலையில்
சித்தியல் முழுதுந் தெரிந்தன மவைமேற்
சிவநிலை தெரிந்திடச் சென்றேம்
ஒத்தவந் நிலைக்கண் யாமுமெம் மூணர்வும்
ஒருங்குறக் கரைந்துபோ யினமென்
றத்தகை யுணர்ந்தோர் வழுத்தநின் றேங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 7

எங்குமாய் விளங்குஞ் சிற்சபை யிடத்தே
இதுவது வெனவுரைப் பரிதாய்த்
தங்குமா ரியற்கைத் தனியனு பவத்தை
தந்தெனைத் தன்மய மாக்கிப்
பொங்குமா னந்த போகபோக் கியலுய்ப்
புத்தமு தருத்தியென் னுளத்தே
அங்கையிற் கனிபோன் றமர்ந்தருள் புரிந்த
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 8

5. பதி விளக்கம்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

உரைவளர் கலியே கலிவள ருரையே
புரைகலி வளர்தரு பொருளே
விரைவளர் மலரே மலர்வளர் விரையே
விரைமலர் வளர்தரு நறவே
கரைவளர் தருவே தருவளர் கரையே
கரைதரு வளர்கிளர் கனியே
பரைவள ரொளியே யொளிவளர் பரையே
பரையொளி வளர்சிவ பதியே. 1

ஒளிவள ருயிரே யுயிர்வள ரொளியே
ஒளியுயிர் வளர்தரு மூணர்வே
வெளிவளர் நிறைவே நிறைவளர் வெளியே
வெளிநிறை வளர்தரு விளைவே
வளிவள ரசைவே யசைவளர் வளியே
வளியசை வளர்தரு செயலே
அளிவள ரனலே யனல்வள ரளியே
அளியனல் வளர்சிவ பதியே. 2

அடிவள ரியலே யியல்வள ரடியே
அடியியல் வளர்தரு கதியே
முடிவளர் பொருளே பொருள்வளர் முடியே
முடிபொருள் வளர்சுக நிதியே
படிவளர் விதையே விதைவளர் படியே
படிவிதை வளர்பல நிகழ்வே
தடிவளர் முகிலே முகில்வளர் தடியே
தடிமுகில் வளர்சிவ பதியே. 3

சிரம்வளர் முதலே முதல்வளர் சிரமே
சிரமுதல் வளர்தரு செறிவே
தரம்வளர் நிலையே நிலைவளர் தருவே
தருநிலை வளர்தரு தகவே
வரம்வளர் நிறையே நிறைவளர் வரமே
வரநிறை வளர்தரு வயமே
பரம்வளர் பதமே பதம்வளர் பரமே
பரம்பதம் வளர்சிவ பதியே. 4

திருவளர் வனமே வனம்வளர் திருவே
திருவனம் வளர்தரு திகழ்வே
உருவளர் வடிவே வடிவள ருருவே
உருவடி வளர்தரு முறைவே
கருவள ரருவே யருவளர் கருவே
கருவரு வளர்ஙவ கதியே
குருவளர் நெறியே நெறிவளர் குருவே
குருநெறி வளர்சிவ பதியே. 5

நிறைவளர் முறையே முறைவளர் நிறையே
நிறைமுறை வளர்பெரு நெறியே
பொறைவளர் புவியே புவிவளர் பொறையே
புவிபொறை வளர்தரு புனலே
துறைவளர் கடலே கடல்வளர் துறையே
துறைகடல் வளர்தரு சுதையே
மறைவளர் பொருளே பொருள்வளர் மறையே
மறைபொருள் வளர்சிவ பதியே. 6

தவம்வளர் தயையே தயைவளர் தவமே
தவநிறை தயைவளர் சதுரே
நவம்வளர் புரமே புரம்வளர் நவமே
நவபுரம் வளர்தரு மிறையே
துவம்வளர் குணமே குணம்வளர் துவமே
துவகுணம் வளர்தரு திகழ்வே
சிவம்வளர் பதமே பதம்வளர் சிவமே
சிவபதம் வளர்சிவ பதியே. 7

நடம்வளர் நலமே நலம்வளர் நடமே
நடநலம் வளர்தரும் ஒளியே
இடம்வளர் வலமே வலம்வள ரிடமே
யிடவலம் வளர்தரும் இசையே
திடம்வள ருளமே யுளம்வளர் திடமே
திடவுளம் வளர்தரு திருவே
கடம்வள ருயிரே யுயிர்வளர் கடமே
கடமுயிர் வளர்சிவ பதியே. 8

அதுவள ரணுவே யணுவள ரதுவே
யதுவணு வளர்தரு முறவே
விதுவள ரொளியே யொளிவளர் விதுவே
விதுவொளி வளர்தரு செயலே

மதுவளர் சுவையே சுவைவளர் மதுவே
மதுவுறு சுவைவள ரியலே
பொதுவளர் வெளியே வெளிவளர் பொதுவே
பொதுவெளி வளர்சிவ பதியே. 9

நிதிவளர் நிலமே நிலம்வளர் நிதியே
நிதிநிலம் வளர்தரு நிறைவே
மதிவளர் நலமே நலம்வளர் மதியே
மதிநலம் வளர்தரு பரமே
கதிவளர் நிலையே நிலைவளர் கதியே
கதிநிலை வளர்தரு பொருளே
பதிவளர் பரமே பதம்வளர் பதியே
பதிபதம் வளர்சிவ பதியே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

6. ஆற்றுமை—1

எழுசீரடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

எழுவினும் வலிய மனத்தினேன் மலஞ்சார்
ஈயினு நாயினு மிழிந்தேன்
புழுவினுஞ் சிறியேன் பொய்விழைந் தழல்வேன்
புன்மையேன் புலைத்திதாழிற் கடையேன்
வழுவினும் பெரியேன் மடத்தினும் பெரியேன்
மாண்பிலா வஞ்சக நெஞ்சக்
குழுவினும் பெரியே னம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே. 1

கற்றமே லவர்த முறவினைக் கருதேன்
கலகர்த முறவினிற் களித்தேன்
உற்றமே தகவோ ருவப்பற விருந்தேன்
உலகியற் போகமே யுவந்தேன்
செற்றமே விழைபுஞ் சிறுநெறி பிடித்தேன்
தெய்வமொன் றெனுமறி வறியேன்
குற்றமே யுடையே னம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே. 2

கடுமையேன் வஞ்சக் கருத்தினேன் பொல்லாக்
கன்மனக் கூங்கனேன் கடையேன்
நெடுமையாண் பணிபோல் நின்றவெற் றுடம்பேன்
நீசனேன் பாசமே யுடையேன்
நடுமையோன் றறியேன் கெடுமையிற் கிளைத்த
நச்சுமா மரமெனக் கிளைத்தேன்
கொடுமையே குறித்தே னட்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே. 3

நிலத்திலும் பணத்தும் நீள்விழி மடவார்
நெருக்கிலும் பெருக்கிய நினைப்பேன்
புலத்திலும் புரைசேர் பொறியிலு மனத்தைப்
போக்கிவீண் போதுபோக் குறுவேன்
நலத்திலோ ரணுவு நண்ணிலேன் கடைய
நாயினுங் கடையனே னவையேன்
குலத்திலுங் கொடியே னம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே. 4

செடிமுடிந் தலையு மனத்தினேன் றுன்பச்
செல்லிரு ளிரிப்புண்ட சிறியேன்
அடிமுடி யறியு மாசைசற் றறியேன்
அறிந்தவர் தங்களை யடையேன்
படிமுழு தழித்துக் கடிகொளுங் கடையர்
பணத்திலுங் கொடியனேன் வஞ்சக்
கொடிமுடிந் திடுவே னம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே. 5

அரங்கினிற் படைகொண் டுயிர்க்கொலை புரியும்
அறக்கடை யவரினுங் கடையேன்
இரங்கிலோர் சிறிது மிரக்கமுற் றறியேன்
இயலுறு நாசியுட் கிளைத்த
சிரங்கினிற் கொடியேன் சிவநெறி பிடியேன்
சிறுநெறிச் சழக்கையே சிலுகுக்
குரங்கெனப் பிடித்தே னம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே. 6

வாட்டமே யுடையார் தங்களைக் காணின்
மனஞ்சிறி தாக்கமுற் றறியேன்
கோட்டமே யுடையேன் கொலையனேன் புலையேன்
கூற்றினுங் கொடியனேன் மாயை

ஆட்டமே புரிந்தே னறத்தொழில் புரியேன்
அச்சமு மவலமு மியற்றுங்
கூட்டமே விழைந்தே னம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே. 7

கலைத்தொழி லறியேன் கள்ளுணுங் கொடியேன்
கறிக்குழல் நாயினுங் கடையேன்
விலைத்தொழி லுடையேன் மெய்யெலாம் வாயாய்
விளம்புறும் வீணனே னசுத்தப்
புலைத்தொழி லுடையேன் பொய்யனேன் சிற்றம்
பொங்கிய மனத்தினேன் பொல்லாக்
கொலைத்தொழில் புரிவே னம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே. 8

பணமிலார்க் கிடுக்கண் புரிந்துணுஞ் சோற்றுப்
பணம்பறித் துழல்கின்ற படிறேன்
எணமிலா தடுத்தார்க் குறுபெருந் தீமை
இயற்றுவே னெட்டியே யனையேன்
மணமிலா மலரிற் பூத்தன னிருஞான்
மாடெனத் திரிந்துழல் கின்றேன்
குணமிலாக் கொடியே னம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே. 9

கடியரிற் கடையேன் கடையரிற் கடையேன்
கள்வரிற் கள்வனேன் காமப்
பொடியரிற் பொடியேன் புலையரிற் புலையேன்
பொய்யரிற் பொய்யனேன் பொல்லாச்
செடியரிற் செடியேன் சினத்தரிற் சினத்தேன்
தீயரிற் றீயனேன் பாபக்
கொடியரிற் கொடியே னம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே. 10

அருட்பெருஞ்ஜோதி

7. ஆற்றுமை—2

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

குலத்திடையுங் கொடியனெரு குடித்தனத்துங் கொடியேன்
குறிகளிலுங் கொடியனன்றிக் குணங்களிலுங் கொடியேன்
மலத்திடையே புழுத்தசிறு புழுக்களிலுங் கடையேன்
வன்மனத்துப் பெருப்பாவி வஞ்சநெஞ்சப் புலையேன்
நலத்திடையோ ரணுவளவும் நண்ணுகிலேன் பொல்லா
நாய்க்குநகை தோன்றநின்றேன் பேய்க்குமிக இழிந்தேன்
நிலத்திடைநா னென்பிறந்தே னின்கருத்தை யறியேன்
நிற்குணனே நடராஜ நிபுணமணி விளக்கே. 1

விளக்கறியா விருட்டறையிற் கவிழ்ந்துகிடந் தழுது
விம்முகின்ற குழவியினு மிகப்பெரிதுஞ் சிறியேன்
அளக்கறியாத் துயர்க்கடலில் விழுந்துதெடுங் காலம்
அலைந்தலைந்து மெலிந்ததுரும் பதனின்மிகத் துரும்பேன்
கிளக்கறியாக் கொடுமையெலாங் கிளைத்தபழு மரத்தேன்
கெடுமதியேன் கடுமையினேன் 1 கிறியேபசும் வெறியேன்
களக்கறியாப் புவியிடைநா னென்பிறந்தே னந்தோ
கருணைநடத் தரசேநின் கருத்தையறி யேனே. 2

அறியாத பொறியவர்க்கு மிழிந்ததிதாழி லவர்க்கும்
அதிகரித்துத் துன்மார்க்கத் தரசுசெய்புங் கொடியேன்
குறியாத கொடும்பாவச் சுமைசுமக்குந் திறத்தேன்
கொல்லாமை யென்பதையோர் குறிப்பாலுங் குறியேன்
செறியாத மனக்கடையேன் றீமையெலா மூடையேன்
சினத்தாலு மதத்தாலுஞ் செறிந்தபுத லினையேன்
எறியாத புவியிடைநா னென்பிறந்தே னுன்றன்
இதயமறி யேன்மன்றி னினித்தநடத் திறையே. 3

இனித்தபழச் சாறுவிடத் திழிந்தமலங் கொளுமோர்
இழிவிலங்கி னிழிந்துநின்றே னிரக்கமொன்று மில்லேன்
அனித்தநெறி யிடைத்திதாடர்ந்து மனித்த வுடம்பெடுத்த
அறக்கடையர் தமக்கெல்லா மறக்கடைய னானேன்

1 கிறி என்பது—பொய்.

பனித்தமனக் குரங்காட்டிப் பலிக்குழலுங் கொடியேன்
பாதகமுஞ் சூதகமும் பயின்றபெரும் படிறேன்
தனித்தகடுங் குணத்தேதன் னென்பிறந்தே னினது
தனிக்கருத்தை யறிந்திலேன் சபைக்கேற்று மொளியே. 4

ஏறுகின்றே மெனமதித்தே யிறங்குகின்ற கடையேன்
ஏதமெலா நிறைமனத்தே னிரக்கமிலாப் புலையேன்
சீறுகின்ற புலியனையேன் சிறுதாழிலே புரிவேன்
செய்வகையொன் றறியாத சிறியரினுஞ் சிறியேன்
மாறுகின்ற குணப்பேதை மதியதனு லிழிந்தேதன்
வஞ்சமெலாங் குடிகொண்ட வாழ்க்கைமிக வுடையேன்
வீறுகின்ற வுலகிடைநா னென்பிறந்தே னினது
மெய்க்கருத்தை யறிந்திலேன் விளங்குநடத் தரசே. 5

அரசரெலா மதித்திடப்பே ராசையிலே யரசே
டாமெனவே மிகக்கிளைத்தே னருளடையாக் கடையேன்
புரசமரம் போற்பருத்தே னெட்டியெனத் தழைத்தேன்
புங்கெனவும் புளியெனவும் மங்கியுதிர் கின்றேன்
பரசும்வகை தெரிந்துகொளேன் தெரிந்தாரைப் பணியேன்
பசையறியாக் கருங்கன்மனப் பாறைசுமந் தழல்வேன்
விரசுநிலத் தேதன்பிறந்தே னின்கருத்தை யறியேன்
விபக்குமணி மன்றுமுங்கி விளங்குபரம் பொருளே. 6

பொருளறியேன் பொருளறிந்தார் போன்றுநடித் திங்கே
பொங்கிவழிந் துடைகின்றேன் பொய்யகத்தே தன் புலையேன்
மருளறியாத் திருவாள ருளங்கயக்கத் திரிவேன்
வையுண்டு முழுவுதவா மாடெனவே தடித்தேதன்
வெருளறியாக் கொடுமனத்தே தன் விழற்கிறைத்துக் களிப்பேன்
வினாக்களிற் றலைநின்றேறன் விலக்கனைத்தும் புரிவேன்
தெருளறியே னுலகிடைநா னென்பிறந்தே னினது
திருவுளத்தை யறிந்திலேன் தெய்வநடத் தரசே. 7

தவம்புரியேன் றவம்புரிந்தார் தமைப்போல நடித்துத்
தருக்குகின்றே னுணர்ச்சியிலாச் சடம்போல விருந்தேதன்
பவம்புரிவேன் கமரினிடைப் பால்கவிழ்க்குங் கடையேன்
பபனறியா வஞ்சமனப் பாவிகளிற் சிறந்தேதன்
அவம்புரிவே னறிவறியே னன்பறியே னன்பால்
ஐயாநின் னடிபடைந்தார்க் கணுத்துணையு முதவேன்
நவம்புரியு முலகிடைநா னென்பிறந்தே னினது
நல்லதிரு வுளமறியேன் ஞானநடத் திறையே. 8

இறையளவு மறிவொழுக்கத் திச்சையிலேன் நாகில்
இருந்துழன்று வாடுகின்றே ரெல்லார்க்கு மிழிந்தேன்
பொறையளவோ நன்மையெலாம் போக்கில்விட்டுத் தீமை
புரிகின்றே னெரிகின்ற புதுநெருப்பிற் கொடியேன்
நிறையளவோ முறையளவோ நிலையளவுந் தவிர்ந்த
நெடுஞ்சால நெஞ்சகத்தேன் நீலவிடம் போல்வேன்
கறையளவா வுலகிடைநா னேன்பிறந்தே னினது
கருத்தறியேன் கருணைநடங் காட்டுகின்ற குருவே. 9

காட்டுகின்ற வுவர்க்கடல்போற் கலிகளினுஞ் செல்வக்
களிப்பினிலுஞ் சிறந்துமிகக் களித்துநிறை கின்றேன்
நீட்டுகின்ற வாபத்தி லொருசிறிது முதவேன்
நெடுந்தூர மாழ்ந்துதவாப் படுங்கிணறு போல்வேன்
ஆட்டுகின்ற வருட்பெருமை யொருசிறிதுந் தெரியேன்
அச்சமிலை ணைமிலை னடக்கமொன்று மில்லேன்
கூட்டுகின்ற வுலகிடைநா னேன்பிறந்தே னினது
குறிப்பறியேன் மன்றினடங் குலவுகுல மணியே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

8. ஆற்றுமை —3

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

தாவு மானினைக் குதித்துக்கொண் டோடித்
தைய லார்முலைத் தடம்படுங் கடையேன்
கூவு காக்கைக்குச் சோற்றிலோர் பொருக்குங்
கொடுக்க நேர்ந்திடாக் கொடியரிற் கொடியேன்
ஓவு றுதுழ லியெனப் பலகால்
ஓடி யோடியே தேடுறுந் தொழிலேன்
சாவு றுவகைக் கென்செயக் கடவேன்
தந்தையே யெனைத் தாங்கிக்கொண் டருளே. 1

போக மாதியை விழைந்தனன் வீணிற்
பொழுது போக்கிடு மிழுதையே னழியாத்
தேக மாதியைப் பெறமுயன் றறியேன்!
சிரங்கு நெஞ்சகக் குரங்கொடு முழல்வேன்

காக மாதிக ளருந்தீவார் பொருக்குங்
காட்ட நேர்ந்திடாக் கடையிரிற் கடையேன்
ஆக மாதிசொல் லறிவறி வேனே
அப்ப னேயெனை யாண்டுகொண் டருளே. 2

விழியைத் தூர்க்கின்ற வஞ்சரை விழைந்தேன்
விருந்தி லேபுண வருந்தியோர் வயிற்றுக்
குழியைத் தூர்க்கின்ற கொடியரிற் கொடியேன்
கோப வெய்யனேன் பாபமே பயின்றேன்
வழியைத் தூர்ப்பவர்க் குளவுரைத் திடுவேன்
மாய மேபுரி பேயரிற் பெரியேன்
பழியைத் தூர்ப்பதற் கென்செயக் கடவேன்
பரமனே யெனைப் பரிந்துகொண் டருளே. 3

மதத்தி லேயபி மானங்கொண் டழல்வேன்
வாட்ட மேசெயுங் கூட்டத்திற் பயில்வேன்
இதத்தி லேயொரு வார்த்தையும் புகலேன்
ஈயு மொய்த்திடற் கிசைவுறு துண்பேன்
குதத்தி லேபிழி மலத்தினுங் கடையேன்
கோடை வெய்யிலின் கொடுமையிற் கொடியேன்
கிதத்தி லேபுறற் கென்செயக் கடவேன்
தெய்வ மேயெனைச் சேர்த்துக்கொண் டருளே. 4

கோடிய வெம்புலிக் குணத்தினே னுதவாக்
கூவ நேர்ந்துளேன் பாவமே பயின்றேன்
சுடிய நெஞ்சினேன் குங்குமஞ் சுமந்த
கழுதை யேனவப் பொழுதையே கழிப்பேன்
விடியு முன்னரே யெழுந்திடா துறங்கும்
வேட னேன் முழுமூடரிற் பெரியேன்
அடிய னுவதற் கென்செயக் கடவேன்
அப்ப னேயெனை யாண்டுகொண் டருளே. 5

தூங்கு கின்றதே சுகமென வறிந்தேன்
சோற தேபெறும் பேறதென் றுணர்ந்தேன்
ஏங்கு கின்றதே தொழிலெனப் பிடித்தேன்
இரக்கில் ரூர்களே பென்னினு மவர்பால்
வாங்கு கின்றதே பொருளென வலித்தேன்
வஞ்ச நெஞ்சிறற் பஞ்செனப் பறந்தேன்
ஓங்கு கின்றதற் கென்செயக் கடவேன்
உடைய வாவெனை யுவந்துகொண் டருளே. 6

வருத்த நேர்பெரும் பாரமே சுமந்து
வாடு மோர்பொதி மாடென வுழன்றேன்
பருத்த வூணெடு மலமுணத் திரியும்
பன்றி போன்றுளேன் நன்றியொன் றறியேன்
கருத்தி லாதயல் குரைத்தலுப் படைந்த
கடைய நாயினிற் கடையனி னருட்குப்
பொருத்த னுவதற் கென்செயக் கடவேன்
புண்ணி யாவெனைப் புரிந்துகொண் டருளே. 7

துருக்க லோகொடுங் கருங்கலோ வயிரச்
சூழ்க லோவெனக் காழ்கொளு மனத்தேன்
தருக்க லாணவக் கருக்கலோ டுழல்வேன்
சந்தை நாயெனப் பந்தமுற் றலைவேன்
திருக்கெ லாம்பெறு I வெருக்கெனப் புகுவேன்
தீய னேன்பெரும் பேயனே னுளந்தான்
உருக்க லாவதற் கென்செயக் கடவேன்
உடைய வாவெனை யுவந்துகொண் டருளே. 8

கான மேபுழல் விலங்கினிற் கடையேன்
காம மாதிகள் கூளகணிற் பிடித்தேன்
மான மேமிடைச் சாதியே மதமே
வாழ்க்கை யேயென வாரிக்கொண் டலைந்தேன்
ஈன மேபொரு ளெனக்களித் திருந்தேன்
இரக்க மென்பதோ ரெட்டினை யறியேன்
ஞான மேவுதற் கென்செயக் கடவேன்
நாய காவெனை நயந்துகொண் டருளே. 9

இருளை யேயொளி யெனமதித் திருந்தேன்
இச்சை யேபெரு விச்சையென் றலைந்தேன்
மருளை யேதரு மனக்குரங் கோடும்
வனமெ லாஞ்சுழன் றினமென வலைந்தேன்
பொருளை நாடுநற் புந்திசெய் தறியேன்
பொதுவி லேநடம் புரிகின்றீ ரும்றன்
அருளை மேவுதற் கென்செயக் கடவேன்
அப்ப னேயெனை யாண்டுகொண் டருளே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

1 வெருக்கு என்பது —கசர மெய்விரிக்கும் வழிவிரித்தல் (பூனை)

9. முறையீடு

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

மருந்தறியேன் மணியறியேன் மந்திரமொன் றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலை யறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான்
செய்தறியேன் மனமடங்கும் திறத்தினிலோ ரிடத்தே
இருந்தறியேன் அறிந்தோரை ஏத்திடவும் அறியேன்
எந்தைபிரான் மணிமன்றம் எய்தவறி வேலே
இருந்ததிசை சொலவறியேன் எங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வேன் ஏதுமறிந் திலனே 1

அகங்காரக் கொடுங்கிழங்கை யகழ்ந்தெறிய வறியேன்
அறிவறிந்த வந்தணர்பாற் செறியுநெறி யறியேன்
நகங்கான முறுதவர்போல் நலம்புரிந்து மறியேன்
நச்சுமரக் கனிபோலே யிச்சைகனிந் துழன்றேன்
மகங்காணும் புலவரெலாம் வந்துதாழ நடிக்கும்
மணிமன்றந் தனையடையும் வழியுமறி வேலே
இகங்காணத் திரிகின்றே னெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந் திலனே. 2

கற்குழறை கற்றறியேன் கற்பனகற் றறிந்த
கருத்தர்திருக் கூட்டத்திற் களித்திருக்க வறியேன்
நிற்குநிலை நின்றறியே னின்றுரி னடித்தேன்
நெடுங்காமப் பெருங்கடலை நீந்தும்வகை யறியேன்
சிற்குணமா மணிமன்றிற் றிருநடனம் புரியுந்
திருவடியென் சென்னிமிசைச் சேர்க்கவறி வேலே
இற்குணஞ்செய் துழல்கின்றே னெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந் திலனே. 3

தேகமுறு பூதநிலைத் திறஞ்சிறிது மறியேன்
சித்தாந்த நிலையறியேன் சித்திநிலை யறியேன்
யோகமுறு நிலைசிறிது முணர்ந்தறியேன் சிறியேன்
உலகநடை யிடைக்கிடந்தே புழைப்பாரிற் கடையேன்
ஆகமுறு திருநீற்றி னொளிவிளங்க வசைந்தே
அம்பலத்தி லாடுகின்ற வடியையறி வேலே
ஏகவனு பவமறியே னெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந் திலனே. 4

வேதாந்த நிலைநாடி விரைந்துமுயன் றறியேன்
மெய்வகையுங் கைவகையுஞ் செய்வகையு மறியேன்
நாதாந்தத் திருவீதி நடந்திடுதற் கறியேன்
நானெரன் றறியேனெங் கோனெரன் றறியேன்
போதாந்தத் திருநாடு புகவறியேன் ஞான
பூரண காயமெனும் பொதுவையறி வேனே
ஏதாந்தீ யேன்சரித மெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந் திலனே. 5

கலைமுடிவு கண்டறியேன் காரணமலா மடக்குங்
கதியறியேன் கதியறிந்த கருத்தர்களை யறியேன்
கோலைபுலைகள் விடுத்தறியேன் கோபமறுத் தறியேன்
கொடுங்காமக் கடல்கடக்குங் குறிப்பறியேன் குணமா
மலைமிசைநின் றிடவறியேன் ஞானநடம் புரியும்
மணிமன்றந் தனையடையும் வழியுமறி வேனே
இலையெனும்பொய் புலகினிடை யெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந் திலனே. 6

சாதிமதஞ் சமயமெனுஞ் சங்கடம்விட் டறியேன்
சாத்திரச்சே றுடுகின்ற சஞ்சலம்விட் டறியேன்
ஆதியந்த நிலையறியே னலையறியாக் கடல்போல்
ஆனந்தப் பெரும்போகத் தமர்ந்திடவு மறியேன்
நீதிநெறி நடந்தறியேன் ஜோதிமணிப் பொதுவில்
நிருத்தமிடு மொருத்தர்திருக் கருத்தை யறிவேனே
ஏதிலர்சா ருலகினிடை யெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந் திலனே. 7

சாகாத தலையறியேன் வேகாத காலின்
தாமறியேன் போகாத தண்ணீரை யறியேன்
ஆகாய நிலையறியேன் மாகாய நிலையும்
அறியேன் மெய்ந் நெறிதனையோ ரணுவளவு மறியேன்
மாகாத லுடையபெருந் திருவாளர் வழுத்தும்
மணிமன்றந் தனையடையும் வழியுமறி வேனே
1 ஏகாய வுலகினிடை யெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந் திலனே. 8

1 ஏகம் என்பது-முத்தி. ஈறுதொக்கு நின்றது.

தத்துவமென் வசமாகத் தான்செலுத்த வறியேன்
சாகாத கல்விகற்குந் தரஞ்சிறிது மறியேன்
அத்தநிலை சத்தநிலை யறியேன்மெய் யறிவை
அறியேன்மெய் யறிந்தடங்கு மறிஞரையு மறியேன்
சுத்தசிவ சன்மார்க்கத் திருப்பொதுவி னிடத்தே
தூயநடம் புரிகின்ற ஞாயமறி வேனே
எத்துணையுங் குணமறியே னெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந் திலனே. 9

வரையபர மார்க்கமொடு பரமார்க்க மறியேன்
மரணபயந் தவிர்த்திடுஞ்சன் மார்க்கமதை யறியேன்
திரையறுதண் கடலறியே னக்கடலைக் கடந்தே
தெள்ளமுத முணவறியேன் சினமடக்க வறியேன்
உரையுணர்வு கடந்ததிரு மணிமன்றந் தனிலே
ஒருமைநடம் புரிகின்றூர் பெருமையறி வேனே
இரையுறுபோய் யுலகினிடை யெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந் திலனே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

10. அடியார் பேறு

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அடியார் வருத்தந் தனைக்கண்டு தரியா ரின்ப மளித்திடுவார்
வடியாக் கருணைப் பெருங்கடலா ரென்ற பெரியோர் வார்த்தையெலாம்
நெடியார்க் கரியாய்க் கொடியேனென் றிரைவன் றனைவு நீக்கியதோ
கடியாக் கொடுமா பாதகன்முன் கண்ட பரிசுங் கண்டிலனே. 1

பையார் பாம்பு கொடியதெனப் பகர்வா ரதற்கும் பரிந்துமுன்னுள்
ஐயா கருணை பளித்தனையென் னளவி லின்னு மளித்திலையே
மையார் மிடற்றே யானந்த மன்றி னடிப்போய் வல்வினையேன்
நையா நின்றே னையோநான் பாம்பிற் கொடிய ரினையனே. 2

பீழை புரிவான் வருந்துகின்ற பேய்க்குங் கருணை பெரிதளிப்பான்
ஊழை யகற்றும் பெருங்கருணை யுடையா னென்பா ருனையேயோ
மோழை மனத்தாற் குரங்கெறிந்த விளங்கா யாகி மொத்துண்ணும்
ஏழை யடியேன் வருத்தங்கண் டிருத்த லழகோ வெண்கோவே. 3

மருணே டுலகிற் கொலைபுரிவார் மனமே கரையாக் கல்லென்று
பொருணே டியநின் றிருவாக்கே புகல வறிந்தே னென்னளவிற்
கருணை நிதிநின் றிருவுளமுங் கல்லென் றுரைக்க வறிந்திலனே
இருணே டியவிச் சிறியேனுக் கின்னு மிரங்கா திருந்தாயே. 4

முன்னுங் கொடுமை பலபுரிந்து முடுகிப் பின்னுங் கொடுமைசெய
உன்னுங் கொடியர் தமக்குமரு ளுதவுங் கருணை யுடையாமே
மன்னும் பதமே துணையென்று மதித்து வருந்துஞ் சிறியேனுக்
கின்னுங் கருணை புரிந்திலதா னென்ன கொடுமை செய்தேனே. 5

அங்கே யடியார் தமக்கெல்லா மருளா ரமுத மளித்தையோ
இங்கே சிறியே னொருவனுக்கு மிடர்தா னளிக்க இசைந்தாயேல்
செங்கேழ் வண்ணத் தனிக்கனியே சிவமே யடிமைச் சிறுகாயேன்
எங்கே புகுவே னென்செய்வே னெவரென் முகம்பார்த் திருவாயே. 6

அளியே யன்ப ரன்பேநல் லமுதே சுத்த வறிவான
வெளியே வெளியி லின்பநடம் புரியு மரசே விதியொன்றுந்
தெளியேன் றீங்கு பிறர்செயினுந் தீங்கு நினையாத் திருவுளத்தான்
எளியே னளவி னினைக்கவொருப் படுமோ கருணை யெந்தாயே. 7

தீது நினைக்கும் பாவிகட்குந் செய்தாய் கருணை யெனத்தெளிந்து
வாது நினைக்கு மனக்கடையேன் மகிழ்வுற் றிருந்தே னென்னளவில்
சூது நினைப்பா யெனில்யார்க்குச் சொல்வேன் யாரைத் துணைகொள்வேன்
எது நினைப்பே னையோநான் பாவி புடம்பே னெடுத்தேனே. 8

போதுவென் றறிந்து மிரங்காத சிலர்க்குங் கருணை புரிவதன்றிக்
கதுவென் றழுங்க நினையாநின் கருணை யுளந்தா னறிவென்ப
திதுவென் றறியா வெனைவருத்த வெந்த வகையாற் றுணிந்ததுவோ
எதுவென் றறிவே னென்புரிவே னையோ புழுவி லிழிந்தேனே. 9

வெடிக்கப் பார்த்து நிற்கின்ற வெய்யர் தமையும் வினைத்துயர்கள்
பிடிக்கப் பார்க்கத் துணியாத பெருமா னினது திருவுளந்தான்
நடிக்கப் பார்க்கு முலகத்தே சிறியேன் மனது நவையாலே
துடிக்கப் பார்த்திங் கிருந்ததுகா ணையோ விதற்குந் துணிந்ததுவோ. 10

கல்லுங் கனியத் திருநோக்கம் புரியுங் கருணைக் கடலேகான்
அல்லும் பகலுந் திருக்குறிப்பை யெதிர்பார்த் திங்கே அயர்கின்றேன்
கொல்லுங் கொடியார்க் குதவுகின்ற குறும்புத் தேவர் மனம்போலச்
சொல்லு மிரங்கா வன்மைகற்க வெங்கே யையோ துணிந்தாயோ. 11

படிமே லாசை பலவைத்துப் பணிபு மவர்க்கும் பரிந்துசுகக்
கொடிமே லுறச்செய் தருள்கின்ரு யென்பா லிரக்கங் கொண்டிலையே
பொடிமெய் யணிநின் னருட்கிதுதா னழகோ பொதுவி னடிக்குமுன்றன்
அடிமே லாசை யல்லால்வே ருசை யையோ பறியேனே. 12

நாயே னுலகி லறிவுவந்த நாள்தொட் டிந்த நாள்வரையும்
வயேன் பிறிதி லுன்குறிப்பே யெதிர்பார்த் திருந்தே னென்னுடைய
தாயே பொதுவி னடம்புரியுந் தாயே தயவு தாராயேல்
மாயே னோயோ வெதுகொண்டு வாழ்ந்திங் கிருக்கத் துணிவேனே. 13

நயத்தா லுனது திருவருளை நண்ணுக் கொடியே னுபுடம்மை
உயத்தான் வையேன் மடித்திடுவேன் மடித்தாற் பின்ன ருலகத்தே
வயத்தா லெந்த வுடம்புறுமோ வென்ன வருமோ வென்கின்ற
பயத்தா லேயோ விவ்வுடம்பைச் சுமக்கின் றேனெம் பரஞ்சுடரே. 14

இன்ப மடித்துன் னடியரெலா மிழியா தேறி யிருக்கின்ரூர்
வன்ப ரிடத்தே பலகாற்சென் றவரோ டுறவு வழங்கியுன்றன்
அன்ப ருறவை விடுத்துலகி லாடிப் பாடி யடித்தவினைத்
துன்ப முடுகிச் சுடச்சுடவுஞ் சோறுண் டிருக்கத் துணிந்தேனே. 15

எந்நாள் கருணைத் தனிமுதனீ யென்பா லிரங்கி யருளுதலோ
அந்நா ளெந்நா ளெந்நாளென் றெண்ணி யெண்ணி யலமந்தேன்
சென்னுள் களிலோர் நன்னுளுந் திருநா ளான திலையையோ
முன்னு ளென்னை யாட்கொண்டா யென்ன நாண முடுகுவதே. 16

எந்த வகைசெய் திடிற்கருணை யெந்தாய் நீதா னிரங்குவையோ
அந்த வகையை நானறியே னறிவிப் பாரு மெனக்கில்லை
இந்த வகையிங் கையோநா னிருந்தாற் பின்ன ரென்செய்கேன்
பந்த வகையற் றவருளத்தே நடிக்கு முண்மைப் பரம்பொருளே. 17

அடுக்குந் தொண்டர் தமக்கெல்லா மருளீந் திங்கே யென்னளவிற்
கொடுக்குந் தன்மை தனையொளித்தா லொளிக்கப் படுமோ குணக்குன்றே
தடுக்குந் தடையும் வேறில்லைத் தமியேன் றனையித் தாழ்வகற்றி
எடுக்குந் துணையும் பிறிதில்லை யையோ வின்னு மிரங்கிலையே. 18

எல்லா முடையாய் நின்செயலே யெல்லா மென்ரு லென்செயல்கள்
எல்லா நினது செயலன்றே வென்னை யென்னைப் புறந்தள்ளல்
வல்லா யென்னைப் புறம்விடுத்தாற் புறத்து முன்றன் மயமன்றே
நல்லா ரெங்குஞ் சிவமயமென் றுரைப்பார் எங்க ணுயகனே. 19

கூடுங் கருணைத் திருக்குறிப்பை யிற்றைப் பொழுதே குறிப்பித்து
வாடுஞ் சிறியேன் வாட்டமெலாந் தீர்த்து வாழ்வித் திடவேண்டும்
பாடும் புகழோய் நினையல்லால் துணைவே றில்லைப் பரவெளியில்
ஆடுஞ் செல்வத் திருவடிமே லாணை முக்கா லாணையதே. 20

அருட்பெருஞ்ஜோதி

---

11. ஆத்தும விசாரத் தழுங்கல்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

போகமே விழைந்தேன் புலைமனச் சிறியேன்
பூப்பினும் புணர்ந்தவம் பொறியேன்
ஏகமே பொருளென் றறிந்திலேன் பொருளின்
இச்சையால் எருதுநோ வறியாக்
காகமே யெனப்போய்ப் பிறர்தமை வருத்திக்
களித்தபாத கத்தொழிற் கடையேன்
மோகமே புடையே னென்னினு மெந்தாய்
முனிந்திடேல் காத்தரு ளெனையே. 1

பூப்பினும் பலகால் மடந்தைபர் தமைப்போய்ப்
புணர்ந்தவம் புலையனேன் விடஞ்சார்
பாம்பினுங் கொடிய நுறவையே விழைந்த
பள்ளனேன் கள்ளனே னெருக்கும்
ஆப்பினும் வலியே னறத்தொழில் புரியேன்
அன்பிலை லடுத்தவர் கரங்கள்
கூப்பினுங் கூப்பாக் கொடுங்கையே னெனினுங்
கோபியேல் காத்தரு ளெனையே. 2

விழுத்தலை நெறியை விரும்பிலேன் கரும்பின்
மிகவினிக் கின்றநின் புகழ்கள்
வழுத்தலை யறியேன் மக்களே மனையே
வாழ்க்கையே துணையென மதித்துக்
கொழுத்தலை மனத்துப் புழுத்தலைப் புலையேன்
கொக்கனேன் செக்கினைப் பலகால்
இழுத்தலை யெருதி னுழைத்தலை புடையேன்
என்னினுங் காத்தரு ளெனையே. 3

புலவிலைக் கடையிற் றலைகுனிந் தலைந்து
பொறுக்கிய சுணங்கனேன் புறத்தில்
தலைவிலை பிடித்துக் கடைவிலை படித்த
தயவிலாச் சழக்கனேன் சழக்கர்
உலவிலை யெனவே வியக்கவெந் தொழிலில்
உழன்றுழன் றழன்றதோ ருளத்தேன்
இலவிலை யெனக்கென் றகங்கரித் திருந்தேன்
என்னினுங் காத்தரு ளெனையே. 4

கோட்டிலை யடையாப் பட்டிமா டனையேன்
கொட்டைகள் பரப்பிமேல் வனைந்த
கட்டிலை விரும்பி யடிக்கடி படுத்த
கடையனேன் கங்குலும் பகலும்
அட்டிலை யடுத்த பூனைபோ லுணவை
அறவுண்டு குப்பைமேற் போட்ட
நெட்டிலை யனைய னென்னினும் வேறு
நினைத்திடேல் காத்தரு ளெனையே. 5

நேரிழை யவர்தம் புணர்முலை நெருக்கில்
நெருக்கிய மனத்தினேன் வீணிற்
போரிழை வெறியர் புகழ்பெறு வெறியேன்
புனைகலை யிலர்க்கொரு கலையில்
ஓரிழை யெனினுங் கொடுத்திலை னீள
உடுத்துடுத் தூர்தொறுந் திரிந்தேன்
எரிழை விழைந்து பூண்டுளங் களித்தேன்
என்னினுங் காத்தரு ளெனையே. 6

அளத்திலே படிந்த துரும்பினுங் கடையேன்
அசடனே னறிவிலே னுலகிற்
குளத்திலே குளிப்பார் குளிக்கவெஞ் சிறுநீர்க்
குழியிலே குளித்தவெங் கொடியேன்
வளத்திலே பொசித்துத் தளத்திலே படுக்க
மனங்கொண்ட சிறியனேன் மாயைக்
களத்திலே பயின்ற வுளத்திலே பெரியன்
என்னினுங் காத்தரு ளெனையே. 7

தொழுதெலாம் வல்ல கடவுளே நின்னைத்
துதித்திலேன் றூய்மையோன் றறியேன்
கழுதெலா மனையே னிழுதெலா முணவிற்
கலந்துணக் கருதிய கருத்தேன்

பழுதெலாம் புரிந்து பொழுதெலாங் கழித்த
பாவியேன் தீமைகள் சிறிதும்
எழுதலாம் படித்தன் றெனமிக வுடையேன்
என்னினுங் காத்தரு ளெனையே. 8

வட்டியே பெருக்கிக் கொட்டியே யேழை
மனைகவர் கருத்தினே னேட்டைச்
சட்டியே யெனினும் பிறர்கொளத் தரியேன்
தயவிலேன் சூதலா மடைத்த
பெட்டியே நிகர்த்த மனத்தினேன் உலகிற்
பெரியவர் மனம்வெறுத் திடச்செய்
I வெட்டியே கள்ளி வெட்டியே யடைத்த
வேடனேன் மூடரிற்றலை யேன்
எட்டியே மண்ணுங் கட்டியே யனையேன்
என்னினுங் காத்தரு ளெனையே. 9

உடுத்திலேஞ் சிறிது முண்டிலே மெனவந்
தோதிய வறிஞருக் கேதுங்
கொடுத்திலேன் கொடுக்குங் குறிப்பிலே னுலகிற்
குணம்பெரி துடைய நல்லோரை
அடுத்திலே னடுத்தற் காசையு மில்லேன்
அவனிமேல் நல்லவ னெனப்பேர்
எடுத்திலே னெனினுந் தெய்வமே துணையென்
றிருக்கின்றேன் காத்தரு ளெனையே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

12. அவா அறுப்பு

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

தாலவாழ்க் கையிலே சார்ந்தவ ரெல்லாந்
தக்கமுப் போதினுந் தனித்தே
சீலமார் பூசைக் கடன்முடிக் கின்றார்
சிறியனேன் தவஞ்செய்வான் போல

---

1 திருவருட் பிரகாசவள்ளலார் தமது திருக்கரத்தாலெழுதிய மூலப் பிரதியில் இத் திருச்செய்யுள் ஐந்தடியாகவே யிருத்தலினு லங்ஙனமே பதிப்பிக்கப்பட்டது. 'பாட்டுக்கடங்கா' என்ற செய்யுளை கவனிக்கவும்.

ஞாலமே லவர்க்குக் காட்டினன் றனித்தே
நவிலுமிந் நாய்வயிற் றினுக்கே
காலையா தியமுப் போதினுஞ் சோற்றுக்
கடன்முடித் திருந்தன னெந்தாய். 1

சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திடி லொருவன்
றன்னுநற் றவமெலாஞ் சுருங்கி
ஆற்றிலே கரைத்த புளியெனப் போம்என்
றறிஞர்க ளுரைத்திடல் சிறிதும்
போற்றிலே னுன்னைப் போற்றிலேன் சுவையிற்
பொருந்திய காரசா ரஞ்சேர்
சாற்றிலே கலந்த சோற்றிலே யாசை
தங்கினே னென்செய்வே னெந்தாய். 2

விருப்பிலேன் போலக் காட்டினே னன்றி
விளைவிலா தூணைலா மறுத்த
கருப்பிலே யெனினுங் கஞ்சியா திகளைக்
சுருத்துவந் துண்ணுதற் கமையேன்
நெருப்பிலே புருக்கு நெய்யிலே சிறிதும்
நீரிடாத் தயிரிலே நெகிழ்ந்த
பருப்பிலே சோற்றுப் பொருப்பிலே யாசை
பற்றினே னென்செய்வே னெந்தாய். 3

உறியிலே தயிரைத் திருடிபுண் டனனென்
றருருவனை யுரைப்பதோர் வியப்போ
குறியிலே யமைத்த வுணவெலாந் திருடிக்
கொண்டுபோ யுண்டனன் பருப்புக்
கறியிலே பொரித்த கறியிலே கூட்டுக்
கறியிலே கலந்த போராசை
வெறியிலே புனையு மறந்தனன் வயிறு
வீங்கிட வுண்டன னெந்தாய். 4

கீரையே விரும்பேன் பருப்பொடு கலந்த
கீரையே விரும்பினேன் வெறுந்தண்
ணீரையே விரும்பேன் தெங்கிளங் காயின்
நீரையே விரும்பினே னுணவில்
ஆரையே யெனக்கு நிகரெனப் புகல்வேன்
அய்யகோ அடிச்சிறு நாயேன்
பேரையே யுரைக்கிற் றவமிலா மோட்டம்
பிடிக்குமே யென்செய்வே னெந்தாய். 5

பாலிலே கலந்த சோறெனில் விரைந்தே
பத்தியா லொருபெரு வயிற்றுச்
சாலிலே யடைக்கத் தடைபடேன் வாழை
தகுபலா மாழுதற் பழத்தின்
தோலிலே யெனினுங் கிள்ளியோர் சிறிதுஞ்
சூழ்ந்தவர்க் கீந்திடத் துணியேன்
வாலிலே னிருக்கில் வனத்திலே யிருக்க
வாய்ப்புளே னென்செய்வே னெந்தாய். 6

உடம்பொரு வயிரூப்ச் சருக்கரை கலந்த
உண்டியே யுண்டனன் பலகால்
கடம்பெறு புளிசோ றுண்டுளே களித்தேன்
கட்டிநற் றயிரிலே கலந்த
தடம்பெருஞ் சோற்றிற் றருக்கினே னெலுமிச்
சம்பளச் சோற்றிலே தடித்தேன்
திடம்பெறு மற்றைச் சித்திரச் சோற்றிற்
செருக்கினே னென்செய்வே னெந்தாய். 7

மிளகுமேன் மேலுஞ் சேர்த்தபல் லுணவில்
விருப்பெலாம் வைத்தன னுதவாச்
சுளகினுங் கடையேன் பருப்பிலே யமைத்த
துவையலே சுவர்க்கமென் றுண்டேன்
இளகிலா மனத்தே னினியபச் சடிசில்
எவற்றிலு மிச்சைவைத் திசைத்தேன்
குளகுணும் விலங்கி னிலக்கறிக் காசை
கொண்டன னென்செய்வே னெந்தாய். 8

தண்கோய் கிழங்கு பூழுத லொன்றுந்
தவிரவிட் டிடுவதற் கமையேன்
கொண்டுபோய் வயிற்றுக் குழியெலா நிரப்பக்
கொட்டினேன் குணமிலாக் கொடியேன்
வண்டுபோல் விரைந்து வயலெலா நிரம்ப
மலங்கொட்ட வோடிய புலையேன்
பண்டுபோற் பசித்தூண் வருவழி பார்த்த
பாவியே னென்செய்வே னெந்தாய். 9

வறுத்தலே பொடித்து மலர்த்தலே புரட்டி
வைத்தலே துவட்டலிற் சுவைகள்
உறுத்தலே முதலா வுற்றபல் லுணவை
ஒருமல வயிற்றுப்பை புள்ளே

துறுத்தலே யெனக்குத் தொழிலெனத் துணிந்தேன்
துணிந்தரைக் கணத்தும்வன் பசியைப்
பொறுத்தலே யறியேன் மலைப்புலைக் கூட்டைப்
பொறுத்தன னென்செய்வே னெந்தாய். 10

பருப்பிடி யரிவா லிடிகளா திகளாற்
பண்ணிய பண்ணிகா ரங்கள்
உருப்பிடி நிரம்ப வரவர வெல்லாம்
ஒருபெரு வயிற்றிலே யடைத்தேன்
கருப்பிடி புலகி னெருப்பிடி யனைய
கடையரிற் கடையனே னுதவாத்
துருப்பிடி யிருப்புத் துண்டுபோற் கிடந்து
தூங்கினே னென்செய்வே னெந்தாய். 11

அடிக்கடி நுண்மை விழைந்துபோ யவைகள்
அடுக்கிய விடந்தொறு மலைந்தேன்
தடிக்கடி நாய்போல் நுகர்ந்துவாய் சுவைத்துத்
தவம்புரிந் தானென நடித்தேன்
பொடிக்கடி நாசித் துளையிலே புகுத்திப்
பொங்கினே னையகோ வெனது
முடிக்கடி புனைய முயன்றிலே னறிவில்
மூடனே னென்செய்வே னெந்தாய். 12

உண்டியே விழைந்தே னெனினுமென் றன்னை
உடையவா வடியேனே னுனையே
அண்டியே யிருந்தே னிருக்கின்றே னிருப்பேன்
அப்பனின் னுணைநின் றனக்கே
தொண்டுறு தவர்கைச் சோற்றினை விரும்பேன்
தூயனே துணைநினை யல்லாற்
கண்டிலே னென்னைக் காப்பதுன் கடன்காண்
கைவிடேல் கைவிடே லெந்தாய். 13

அருட்பெருஞ்ஜோதி

13. திருவருட்பெருமை

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

வெறுத்துரைத்தேன் பிழைகளெலாம் பொருத்தருளல் வேண்டும்
விளங்கறிவுக் கறிவாகி மெய்ப்பொதுவி னடிப்போய்
கறுத்துரைத்தார் தமக்குமருள் கனிந்துரைக்கும் பெரிய
கருணைநெடுங் கடலேமுக் கண்ணேங்குங் கரும்பே
மறுத்துரைப்ப தெவனருணீ வழங்குகினு மன்றி
மறுத்திடினு முன்னியலான் மற்றிருருசார் பறியேன்
செறுத்துரைத்த வுரைகளெலாந் திருவருளே யென்று
சிந்திப்ப தல்லாமற் செய்வகையொன் றிலனே. 1

மிகுத்துரைத்தேன் பிழைகளெலாஞ் சகித்தருளல் வேண்டும்
மெய்யறிவின் புருவாகி வியன்பொதுவி னடிப்போய்
தொகுத்துரைத்த மறைகளுரும்பின் விரித்துரைத்துங் காணுத்
துரியநடு வேயிருந்த பெரியபரம் பொருளே
பகுத்துரைத்த பயனுரைக்கோர் பொருளாகி விளங்கும்
பரஞ்சுடரே பரம்பரனே பசுபதியே யடியேன்
வகுத்துரைப்ப தெவனருணீ வழங்குகினு மன்றி
மறுத்திடினு முன்னியலான் மற்றிருருசார் பிலனே. 2

முன்னவனே சிறியேனுன் சிறிதுமறி யாதே
முனிந்துரைத்த பிழைபொருத்துக் கனிந்தருளல் வேண்டும்
என்னவனே யென்றுணையே யென்னுறவே யென்னை
ஈன்றவனே யென்றுயே யென்குருவே யெனது
மன்னவனே யென்னுடைய வாழ்முதலே யென்கண்
மாமணியே மணிமிடற்றீரூர் மாணிக்க மலையே
அன்னவனே யம்பலத்து ளாடுகின்ற வழுதே
ஆறணிந்த சடையாயான் வேறுதுணை யிலனே. 3

சினந்துரைத்தேன் பிழைகளெலாம் மனம்பொருத்தல் வேண்டும்
தீனதயா நிதியேமெய்ஞ் ஞானசபா பதியே
புனைந்துரைப்பா ரகத்தோன்றும் புறத்தோன்றும் நினைத்தே
பொய்புலக ராங்கவர்போற் புனைந்துரைத்தே னலனுன்
இனந்திருத்தி யெனையாட்கொண் டென்னுளமார்ந் தினைத்தான்
எவ்வுலகுந் தொழுநிலைமே லேற்றியசற் குருவே
கனந்தருகிற் சுகவமுதங் களித்தளித்த நிறைவே
கருணைநடத் தரசேயென் கண்ணிலங்கு மணியே. 4

ஊடுதற்கோ ரிடங்காணே னுவக்குமிட முளதோ
உன்னிடமு மென்னிடமு மோரிடமா தலினுல்
வாடுதற்கு நேர்ந்திடிலோ மாட்டாமை யாலும்
மனம்பிடியா மையினுலுஞ் சினந்துரைப்பேன் சிலவே
கூடுதற்கு வல்லவனீ கூட்டியெனைக் கொண்டே
குலம்பேச வேண்டாமென் குறிப்பனைத்து மறிந்தாய்
நாடுதற்கிங் கென்னுலே முடியாது நீயே
நாடுவித்துக் கொண்டருள்வாய் ஞானசபா பதியே. 5

என்னுளநீ கலந்துகொண்டா யுன்னுளநான் கலந்தேதன்
என்செயலுன் செயலுன்ற னிருஞ்செயலென் செயலே
பின்னுளநான் பிதற்றலெலாம் வேறுகுறித் தெனைநீ
பிழையேற்ற நினைத்திடிலோ பெருவழக்கிட் டிடுவேன்
அன்னையினுந் தயவுடையா யப்பனெனக் காணுப்
அன்றியுமென் னுருயிருக் காருயிராய் நிறைந்தாய்
மன்னுமணிப் பொதுநடஞ்செய் மன்னவனே கருணை
மாநிதியே யெனக்கருள்வாய் மனக்கலக்கந் தவிர்த்தே. 6

எணங்குறியே னியல்குறியே னேதுநினை யாதே
என்பாட்டுக் கிருந்தேனிங் கெனைவலிந்து நீயே
மணங்குறித்துக் கொண்டாய்நீ கொண்டதுதொட் டெனது
மனம்வேறு பட்டதிலை மாட்டாமை யாலே
கணங்குறித்துச் சிலபுகன்றேன் புகன்றமொழி யெனது
கருத்திலிலை யுன்னுடைய கருத்திலுண்டோ வுண்டேல்
குணங்குறிப்பான் குற்றமொன்றுங் குறியானென் றறவோர்
கூறிடுமவ் வார்த்தையின்று மாறிடுமே யரசே. 7

மனம்பிடியா மையினுலோ மாட்டாமை யாலோ
மறதியினு லோவெனது வருத்தமத னுலோ
தினம்பிடியா மயக்காலோ திகைப்பாலோ பிறர்மேற்
சினத்தாலோ வெதனுலோ சிலபுகன்றே னிதனை
சினம்பிடியாத் தேவர்திரு வுளம்பிடியா தெனவே
சிந்தைகளித் திருக்கின்றேன் திருவுளத்தை யறியேன்
இனம்பிடியா மையுமுண்டோ வுண்டெனிலன் புடையார்
ஏசல்புகழ் பேசலென வியம்புதலென் னுலகே. 8

நாயகரே யுமதுவச நானிருக்கின் றதுபோல்
நாடியதத் துவத்தோழி நங்கையரென் வசத்தே
மேயவரா காமையினு லவர்மேலங் கெழுந்த
வெகுளியினுற் சிலபுகன்றேன் வேறுநினைத் தறியேன்

தூயவரே வெறுப்புவரில் விதிவெருக்க வென்றூர்
சூழவிதித் தாரைவெறுத் திடுதலவர் துணிவே
தியவரா யினுங்குற்றங் குறியாது புகன்றுல்
தீமொழியன் றெனத்தேவர் செப்பியது முளதே. 9

குற்றமொரு சிறிதெனினுங் குறித்தறியேன் வேறூர்
குறையதனுற் சிலபுகன்றேன் குறித்தறியேன் மீட்டும்
சற்றுமனம் வேறுபட்ட தில்லைகண்டீ ரெனது
சாமியும்மே லாணையொரு சதுருரினைத் தறியேன்
பெற்றவளு முற்றவருஞ் சுற்றமுநீ ரென்றே
பிடித்திருக்கின் றேன்பிறிதோர் வெடிப்புமுனைத் தறியேன்
இற்றைதொடுத் தென்னளவில் வேறுநினை யாதீர்
என்னுடைய நாயகரே யென்னுசை யிதுவே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

14. பிரிவாற்றுமை

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

செய்வகை யறியேன் மன்றுண்மா மணிகின்
திருவுளக் குறிப்பையுந் தெரியேன்
உய்வகை யறியே னுணர்விலே னந்தோ
உறுகண்மே லுறுங்கொலென் றுலைந்தேன்
மெய்வகை யடையேன் வேறெவர்க் குரைப்பேன்
விணையனே னென்செய விரைகேன்
பொய்வகை புடையே னெங்ஙனம் புகுகேன்
புலையனேன் புகலறி யேனே. 1

அறிவிலே னறிந்தார்க் கடிப்பணி புரியேன்
அச்சமு மவலமு முடையேன்
செறிவிலேன் பொதுவாந் தெய்வநீ நினது
திருவுளத் தெனினுநினை யாயேல்
எறிவிலேன் சிறியே னெங்ஙனம் புகுவேன்
என்செய்வேன் யார்துணை யென்பேன்
பிறிவிலேன் பிரித்தா லுயிர்தரிக் கலனென்
பிழைபொறுத் தருள்வதுன் கடனே. 2

உன்கட னடியேற் கருளலென் றுணர்ந்தேதன்
உட்பொரு ளாவியு முனக்கே
பின்கட னின்றிக் கொடுத்தனன் கொடுத்த
பின்னுநான் றளருத லழகோ
என்கடன் புரிவேன் யார்க்கெடுத் துரைப்பேன்
என்செய்வேன் யார்துணை யென்பேன்
முன்கடன் பட்டார் போன்மனங் கலங்கி
முறிதலோர் கணந்தரி யேனே. 3

தரித்திடேன் சிறிதுந் தரித்திடே னெனது
தளர்ச்சியுந் துன்பமுந் தவிர்த்தே
தெரித்திட லினைத்துந் தெரித்திடல் வேண்டுந்
தெரித்திடா யெனிலிட ரெனைத்தான்
எரித்திடு மந்தோ வென்செய்வே னெங்கே
எய்துகேன் யார்துணை யென்பேன்
திரித்தநெஞ் சகத்தேதன் சரித்திர மினைத்துந்
திருவுளந் தெரிந்தது தானே. 4

தானெனைப் புணருந் தருணமீ தெனவே
சத்திய முணர்ந்தனன் தனித்தே
தேனுறக் கருதி யிருக்கின்றே னிதுகின்
திருவுளந் தெரிந்ததென் றுரியே
ஆனைனக் கூவி யணைந்திடல் வேண்டும்
அரைக்கண மாயினுந் தாழ்க்கில்
நானிருப் பறியேன் திருச்சிற்றம் பலத்தே
நடம்புரி ஞானநா டகனே. 5

ஞானழு மதனு லடையபு பவமும்
நாயினே னுணர்ந்திட வுணர்த்தி
ஈனமு மிடருந் தவிர்த்தனை யந்நாள்
இந்தநா ளடியனே னிங்கே
ஊனமொன் றில்லோய் நின்றனைக் கூவி
அழைக்கின்றே னெருசிறி தெனினும்
ஏனென வினவா திருத்தலு மழகோ
இறையுநான் றரிக்கல னினியே. 6

இனியநற் றுயி லினியவென் னரசே
என்னிரு கண்ணுண்மா மணியே
கனியென வினிக்குங் கருணையா ரமுதே
கனகவம் பலத்துறுங் களிப்பே

துனியுறு மனமுஞ் சோம்புறு முணர்வுஞ்
சோர்வுறு முகமுங்கொண் டடியேன்
தனியுளங் கலங்க லழகதோ வெணைத்தான்
தந்தநற் றந்தைதீ யலையோ. 7

தந்தையுந் தாயுங் குருவும்யான் போற்றுஞ்
சாமியும் பூமியும் பொருளுஞ்
சொந்தநல் வாழ்வு நேயமுந் துணையுஞ்
சுற்றமு முற்றுநீ யென்றே
சிந்தையுற் றிங்கே யிருக்கின்றே னிதுநின்
திருவுளந் தெரிந்ததே யெந்தாய்
நிந்தைசெய் யுலகில் யானுளங் கலங்கல்
நீதியோ நின்னருட் கழகோ. 8

அழகனே ஞான வமுதனே யென்றன்
அப்பனே யம்பலத் தாசே
குழகனே யின்பக் கொடியுளங் களிக்குங்
கொழுகனே சுத்தசன் மார்க்கக்
கழகனேர் நின்ற கருணைமா நிதியே
கடவுளே கடவுளே யெனநான்
பழகனேர்ந் திட்டே னின்னுமிவ் வுலகிற்
பழங்கணு லழுங்குத லழகோ. 9

பழம்பிழி மதுரப் பாட்டல வெனினும்
பத்தரும் பித்தரும் பிதற்றும்
கிழம்பெறும் பாட்டுங் கேட்பதுன் னுள்ளக்
கிளர்ச்சியென் றறிந்தநாண் முதலாய்
வழங்குநின் புகழே பாடுறு கின்றேன்
மற்றொரு பற்றுமிங் கறியேன்
1 சழங்குடை யுலகிற் றளருத லழகோ
தந்தையுந் தாயுநீ யலையோ. 10

தாயுமென் னொருமைத் தந்தையும் ஞான
சபையிலே தனிநடம் புரியுந்
தூயநின் பாதந் துணையெனப் பிடித்தேன்
துக்கமுஞ் சோம்பலுந் துயரும்
மாயையும் வினையு மறைப்புமா ணவமும்
வளைத்தெனைப் பிடித்திடல் வழக்கோ
நாயினே னினியோர் கணந்தரிப் பறியேன்
நல்லருட் ஜோதிதந் தருளே. 11

1 சழங்கு மெலிக்கும்வழி மெலித்தல்—சழக்கு வழக்கிற்கு மாறுபட்டது.

சோதியே லெனைநீ சோதனை தொடங்கிற்
சூழுயிர் விடத்தொடங் குவனுன்
நீதியே நிறைநின் றிருவரு ளறிய
நிகழ்த்தினே னிச்சய மிதுவே
ஓதியே யுணர்தற் கரும்பெரும் பொருளே
உயிர்க்குயி ராகிய வொளியே
ஆதியே நடுவே யந்தமே யாதி
நடுவந்த மில்லதோ ரறிவே. 12

இல்லையுண் டெனுமிவ் விருமையுங் கடந்தோர்
இயற்கையி னிறைந்தபே ரின்பே
அல்லையுண் டெழுந்த தனிப்பெருஞ் சுடரே
அம்பலத் தாடல்செய் யமுதே
வல்லையின் றடியேன் றுயரெலாந் தவிர்த்து
வழங்குக நின்னருள் வழங்கல்
நல்லையின் றலது நாளையென் றிடிலோ
நானுயிர் தரிக்கல னரசே. 13

அரைசெலாம் வழங்குந் தனியர சதுநின்
அருளர செனவறிந் தனன்பின்
உரைசெய்தின் னருண்மே லுற்றபே ராசை
உளமெலா மிடங்கொண்ட தெந்தாய்
வரைசெயா மேன்மேற் பொங்கிவாய் ததும்பி
வழிகின்ற தென்வசங் கடந்தே
இரைசெயென் னுயி ரழைக்கவவ் வருள
ஈந்தரு ளிற்றையிப் போதே. 14

போதெலாம் வீணிற் போக்கியே மாந்த
புழுத்தலைப் புலையர்கள் புணர்க்குஞ்
சூதெலாங் கேட்குந் தொறுமுனைப் பரவுந்
தூயர்கள் மனமது துளங்கித்
தாதெலாங் கலங்கத் தளருத லழகோ
தனியருட் ஜோதியா லந்த
வாதெலாந் தவிர்த்துச் சுத்தசன் மார்க்கம்
வழங்குவித் தருளுக விரைந்தே. 15

விரைந்துநின் னருளை யீந்திடல் வேண்டும்
விளம்புமித் தருணமென் னுளந்தான்
கரைந்தது காதல் பெருகிமேற் பொங்கிக்
கரையெலாங் கடந்தது கண்டாய்

வரைந்தெனை மணந்த வள்ளலே யெல்லாம்
வல்லவா வம்பல வாணி
திரைந்தவென் னுடம்பைத் திருவுடம் பாக்கித்
திகழ்வித்த சித்தனே சிவனே. 16

சிவந்திகழ் கருணைத் திருநெறிச் சார்புந்
தெய்வமொன் றேயெனுந் திறமும்
நவந்தரு நிலைகள் சுதந்தரத் தியலும்
நன்மையு நரைதிரை முதலாந்
துவந்துவந் தவிர்த்துச் சுத்தமா தியமுச்
சுகவடி வம்பெறும் பேறுந்
தவந்திக ழெல்லாம் வல்லசித் தியுநீ
தந்தருள் தருணமீ தெனக்கே. 17

தருணமிஞ் ஞான்றே சுத்தசன் மார்க்கத்
தனிநெறி யுலகெலாந் தழைப்பக்
கருணையுஞ் சிவமே பொருளெனக் கருதுங்
கருத்துமுற் றெம்மனோர் களிப்பப்
பொருணிறை யோங்கத் தெருணிலை விளங்கப்
புண்ணியம் பொற்புற வயங்க
அருணயந் தருள்வாய் திருச்சிற்றம் பலத்தே
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 18

என்னுள வமைமே லருளொளி யோங்கிற்
றிருளிர வொழிந்தது முழுதும்
மன்னுறு மிதய மலர்மலர்ந் ததுநன்
மங்கல முழங்குகின் றனசீர்ப்
பொன்னியல் விளக்கம் பொலிந்தது சித்திப்
பூவையர் புணர்ந்திடப் போந்தார்
சொன்னகற் றருண மருட்பெருஞ் ஜோதி
துலங்கவந் தருளுக விரைந்தே. 19

வந்தருள் புரிக விரைந்திது தருணம்
மாமணி மன்றிலே ஞான
சுந்தர வடிவச் ஜோதியாய் விளங்குஞ்
சுத்தசன் மார்க்கசற் குருவே
தந்தருள் புரிக வரமெலாம் வல்ல
தனியருட் ஜோதியை யெனது
சிந்தையிற் புணர்ப்பித் தென்னெடுங் கலந்தே
செய்துவித் தருள்கசெய் வகையே. 20

15. சிற்சபை விளக்கம்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

சோறு வேண்டினுந் துகிலணி முதலாஞ்
சுகங்கள் வேண்டினுஞ் சுகமலாற் சுகமாம்
வேறு வேண்டினு நினையடைந் தன்றி
மேவொ ணாதெனு மேலவ ருரைக்கே
மாறு வேண்டிலேன் வந்துநிற் கின்றேன்
வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன்
சாறு வேண்டிய பொழில்வட லரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 1

எஞ்ச லின்றிய துயரிரு விடரால்
இடுக்குண் டையநின் னின்னருள் விரும்பி
வஞ்ச நெஞ்சினேன் வந்துநிற் கின்றேன்
வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன்
அஞ்ச லென்றரு ளாட்கொளல் வேண்டும்
அப்ப நின்னலா லறிகிலே னென்றுந்
தஞ்ச மென்றவர்க் கருள்வட லரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 2

சூழ்வி லாதுழல் மனத்திறற் சுழலுந்
துட்ட னேனருட் சுகப்பெரும் பதின்
வாழ்வு வேண்டினேன் வந்துநிற் கின்றேன்
வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன்
ஊழ்வி னாமையி லரைக்கண மெனினும்
உன்னை விட்டய லொன்றுமுற் றறியேன்
தாழ்வி லாதசீர் தருவட லரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 3

ஆட்ட மோய்கிலா வஞ்சக மனத்தால்
அலைதந் தையவோ வயர்ந்துள மயர்ந்து
வாட்ட மோடிவண் வந்துநிற் கின்றேன்
வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன்
நாட்ட நின்புடை யன்றிமற் றறியேன்
நாயி னேன்பிழை பொறுத்தது தருணந்
தாட்ட லந்தரு வாய்வட லரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 4

கருணை யொன்றிலாக் கன்மனக் குரங்கால்
காடு மேடுழன் றுளமெலிந் தந்தோ
வருண நின்புடை வந்துநிற் கின்றேன்
வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன்
அருண னென்றெனை யகற்றிடு வாயேல்
ஐய வோதுணை யறிந்தில னிதுவே
தருண மெற்கருள் வாய்வட லரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே.

கரண வாதனை யான்மிக மயங்கிக்
கலங்கி னேனெரு களைகணு மறியேன்
மரண நீக்கிட வந்துநிற் கின்றேன்
வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன்
இரண னென்றெனை யெண்ணிடேல் பிறிதோர்
இச்சை யொன்றிலே னெந்தைநின் னுபய
சரண மீந்தருள் வாய்வட லரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே.

தூய நெஞ்சினே னன்றுநின் கருணைச்
சுகம் விழைந்திலே னெனினும்பொய் யுலக
மாயம் வேண்டிலேன் வந்துநிற் கின்றேன்
வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன்
ஈய வாய்த்தநற் றருணமீ தருள்க
எந்தை நின்மல ரிணையடி யல்லால்
தாய மொன்றிலேன் றனிவட லரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே.

சிரத்தை யாதிய சுபகுணஞ் சிறிதுஞ்
சேர்ந்தி லேனருட் செயலிலேன் சாகா
வாத்தை வேண்டினேன் வந்துநிற் கின்றேன்
வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன்
காத்தை நேருளக் கடையனென் றெனைநீ
கைவி டேலொரு கணமினி யாற்றேன்
தாத்தை யீந்தருள் வாய்வட லரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே.

பத்தி யஞ்சிறி துற்றிலே னுன்பாற்
பத்தி யொன்றிலேன் பரமநின் கருணை
மத்தி யம்பெற வந்துநிற் கின்றேன்
வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன்

எத்தி யஞ்சலி யெனவரு ளாயேல்
எழை யேனுயி ரிழப்பனுன் ஞாண
சத்தி யம்புகன் றேன்வட லரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 9

கயவு செய்மத கரியெனச் செருக்குங்
கருத்தி னேன்மனக் கரிசிறை லடைந்த
மயர்வு நீக்கிட வந்துநிற் கின்றேன்
வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன்
உயவு வந்தருள் புரிந்திடா யெனிலென்
னுயிர்த் தரித்திடா துன்னடி யாணை
தயவு செய்தருள் வாய்வட லரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

16. திருவடி முறையீடு

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

சீரிடம் பெறுமோர் திருச்சிற்றம் பலத்தே
திகழ்தனித் தந்தையே நின்பாற்
சேரிட மறிந்தே சேர்ந்தனன் கருணை
செய்தருள் செய்திடத் தாழ்க்கில்
யாரிடம் புகுவேன் யார்துணை யென்பேன்
யார்க்கெடுத் தென்குறை யிசைப்பேன்
போரிட முடியா தினித்துய ரொடுநான்
பொறுக்கலே னருள்கவிப் போதே. 1

போதுதான் விரைந்து போகின்ற தருணீ
புரிந்திடத் தாழ்த்தியே லுயோ
யாதுதான் புரிவேன் யாரிடம் புகுவேன்
யார்க்கெடுத் தென்குறை யிசைப்பேன்
தீதுதான் புரிந்தே னெனினுநீ யதனைத்
திருவுளத் தடைத்திடு வாயேல்
ஈதுதான் றந்தை மரபினுக் கழகோ
வென்னுயிர்த் தந்தைநீ யலையோ. 2

தந்தைநீ யலையோ தநயனு னலலை
தமியனேன் றளர்ந்துளங் கலங்கி
எந்தையே குருவே யிறைவனே முறையோ
என்றுநின் றிரவிடு கின்றேன்
சிந்தையே யறியார் போன்றிருந் தனையேற்
சிறியனே னென்செய்கே னையோ
சந்தையே புகுந்த நாயினிற் கடையேன்
தளர்ச்சியைத் தவிப்பவர் யாரே. 3

யாரினுங் கடையேன் யாரினுஞ் சிறியேன்
என்பிழை பொறுப்பவர் யாரே
பாரினும் பெரிதாம் பொறுமையோய் நீயே
பாவியேன் பிழைபொறுத் திலையேல்
ஊரினும் புகுத வொண்ணுமோ பாவி
யுடம்பைவைத் துலாவவும் பதிமோ
சேரினு மெனைத்தான் சேர்த்திடார் பொதுவாந்
தெய்வத்துக் கடாதவ னென்றே. 4

அடாதகா ரியங்கள் செய்தன னெனினும்
அப்பநீ யடியனேன் றன்னை
விடாதவா றறிந்தே களித்திருக் கின்றேன்
விடுதியோ விட்டிடு வாயேல்
உடாதவெற் றரைநேர்ந் துயங்குவ னையோ
வுன்னரு ளடையகா னிங்கே
படாதபா டெல்லாம் பட்டன னந்தப்
பாடெலாம் நீயறி யாயோ. 5

அறிந்திலை யோவென் பாடெலா மென்றே
யழைத்தன னப்பனே யென்னை
எறிந்திடா திந்தத் தருணமே வந்தாய்
எடுத்தணைத் தஞ்சிடேல் மகனே
பிறிந்திடேஞ் சிறிதும் பிறிந்திடே முலகிற்
பெருந்திறற் சித்திக ளெல்லாஞ்
சிறந்திட வுனக்கே தந்தன மெனவென்
சென்னிதொட் டுரைத்தனை களித்தே. 6

களித்தென துடம்பிற் புகுந்தனை யெனது
கருத்திலே யமர்ந்தனை கனிந்தே
தெளித்தவென் னறிவில் விளங்கினை யுயிரிற்
சிறப்பிலுஞ் கலந்தனை யுள்ளந்

தளிர்த்திடச் சாகா வரங்கொடுத் தென்றுந்
தடைபடாச் சித்திக ளெல்லாம்
அளித்தனை யெனக்கே நின்பெருங் கருணை
அடியன்மேல் வைத்தவா றென்னே. 7

என்னிக ரில்லா விழிவினேன் றனைமேல்
ஏற்றினை யாவரும் விபப்பப்
பொன்னியல் வடிவும் புரைபடா வுளமும்
பூரண ஞானமும் பொருளும்
உன்னிய வெல்லாம் வல்லசித் தியும்பே
ருவகையும் உதவினை யெனக்கே
தன்னிக ரில்லாத் தலைவனே நினது
தயவையென் னென்றுசாற் றுவனே. 8

சாற்றுவே னெனது தந்தையே தாயே
சற்குரு நாதனே யென்றே
போற்றுவேன் திருச்சிற் றம்பலத் தாடும்
பூரணை வெனவுல கெல்லாந்
தூற்றுவே னன்றி யெனக்குநீ செய்த
தூயபே ருதவிக்கு நானென்
ஆற்றுவே னுயி ருடல்பொரு ளெல்லாம்
அப்பனின் சுதந்தர மன்றே. 9

சுதந்தர முனக்கே கொடுத்தன முனது
தூயநல் லுடம்பினிற் புகுந்தேதம்
இதந்தரு முளத்தி லிருந்தனம் உனையே
யின்புறக் கலந்தன மழியாப்
பதந்தனில் வாழ்க அருட்பெருஞ் ஜோதிப்
பரிசுபெற் றிடுகபொற் சபையுஞ்
சிதந்தரு சபையும் போற்றுக வென்றுய்
தெய்வமே வாழ்க்நின் சீரே. 10

அருட்பெருஞ்ஜோதி

17. தற்சுதந்தர மின்மை

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

அருட்பெருஞ்ஜோதி

இப்பாரி லுடலாவி பொருளுமுன்பாற் கொடுத்தேதன்மற் றெனக்கென் றிங்கே
எப்பாலுஞ் சுதந்தரமோ ரிறையுமிலை அருட்ஜோதி யியற்கை யென்னுந்
துப்பாய வுடலாதி தருவாயோ வின்னுமெனைச் சோதிப் பாயோ
அப்பாநின் றிருவுளத்தை யறியேனிவ் வடியேனு லாவ தென்னே. 1

என்னேயெம் பெருமானிங் கின்னுமெனைந் திலனென்றே யேங்கி யேங்கி
மன்னேயென் மணியேயகண் மணியேயென் வாழ்வேயுல் வரத்தாற் பெற்ற
பொன்னேயற் புதமேசெம் பொருளேயென் புகலேமெய்ப் போத மேயென்
அன்னேயென் னப்பாவென் றழைத்தலன்றி யடியேனு லாவ தென்னே. 2

போடியெடுக்கப் போயதனை மறந்துமடி யெடுத்தரையிற் புனைவென் சில்லோர்
தடியெடுக்கக் காணிலதற் குளங்கலங்கி யோடுவனித் தரத்தே னிங்கே
முடியெடுக்க வல்லேனே விறைவாநின் னருளிலதல் முன்னை வைத்த
அடியெடுக்க முடியாதே யந்தோவிச் சிறியேனு லாவதென்னே. 3

பாட்டுவித்தாற் பாடுகின்றேன் பணிவித்தாற் பணிகின்றேன் பதியே நின்னைக்
கூட்டுவித்தாற் கூடுகின்றேன் குழைவித்தாற் குழைகின்றேன் குறித்த வூணை
ஊட்டுவித்தா லுண்கின்றே னுறக்குவித்தா லுறங்குகின்றே னுறங்கா தென்றும்
ஆட்டுவித்தா லாடுகின்றே னந்தோவிச் சிறியேனு லாவ தென்னே. 4

உடுப்பவனு முண்பவனும் நானேயென் னவுநாண முறுவ தெந்தாய்
தடுப்பவனுந் தடைதீர்த்துக் கொடுப்பவனும் பிறப்பிறப்புத் தன்னை நீக்கி
எடுப்பவனுங் காப்பவனு மின்பவனு பவகுருவா யென்னு ளோங்கி
அடுப்பவனு நீயென்ற லந்தோவிச் சிறியேனு லாவ தென்னே. 5

சாவதென்றும் பிறப்பதென்றுஞ் சாற்றுகின்ற பெரும்பாவந் தன்னை யெண்ணி
நோவதின்று புதிதன்றே யென்றுமுள தாலிந்த நோவை நீக்கி
ஈவதுமன் றிடைநடிப்போய் நின்னுலே யாகுமற்றை யிறைவ நாலே
ஆவதொன்று மில்லையென்ற லந்தோவிச் சிறியேனு லாவ தென்னே. 6

இசைத்திடவு நினைத்திடவும் பெரிதரிதாந் தனித்தலைமை யிறைவா வுன்றன்
நசைத்திடுபே ரருட்செயலா லசைவதன்றி யைந்தொழில்செய் நாத நாலுந்
தசைத்திடுபுன் துரும்பினையு மகங்கரித்துத் தங்கள்சுதந் தரத்தா லிங்கே
அசைத்திடற்கு முடியாதே லந்தோவிச் சிறியேனு லாவ தென்னே. 7

கல்லாய மனத்தைபுமோர் கணத்தினிலே கனிவித்துக் கருணை யாலே
பல்லாரு மதிசயிக்கப் பக்குவந்தந் தருட்பதமும் பாலிக் கின்றோய்
எல்லாஞ்செய் வல்லோய்சிற் றம்பலத்தே யாடலிடு கின்றோய் நின்னல்
அல்லாலொன் றுகாதே லந்தோவிச் சிறியேனு லாவ தென்னே. 8

கரைசேரப் புரிந்தாலுங் கடையேன்செய் குற்றமெலாங் கருதி மாயைத்
திரைசேரப் புரிந்தாலுந் திருவுளமே துணையெனநான் சிந்தித் திங்கே
உரைசேர விருத்தலன்றி யுடையாயென் னுறவேயென் னுயிரே யென்றன்
அரசேயென் னம்மேயென் னப்பாவிச் சிறியேனு லாவ தென்னே. 9

இன்பேநன் றருளியரு ளியற்கையிலே வைத்தாலு மிங்கே யென்னைத்
துன்பேசெய் வித்தாலு மென்செய்வே னின்னருளே துணையென் றந்தோ
என்பேதை மனமடங்கி யிருப்பதன்றி யெல்லாங்கண் டிருக்கு மென்றன்
அன்பேயென் னம்மேயென் னப்பாவிச் சிறியேனு லாவ தென்னே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

18. அத்துவிதானந்தத்தனுபவவிடையீடு

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

திருத்தகுபொன் னம்பலத்தே திருநடஞ்செய் தருளுந்
திருவடிக ளடிச்சிறியேன் சென்னிமிசை வருமோ
உருத்தகுநா னிலத்திடைநீண் மலத்தடைபோய் ஞான
உருப்படிவ மடைவேனு வொன்றிரண்டென் னுத
பொருத்தமுறு சுத்தசிவா னந்தவெள்ளந் ததும்பிப்
பொங்கியகம் புறங்காணு தெங்குநிறைந் திடுமோ
அருத்தகுமவ் வெள்ளத்தே நான்மூழ்கி நான்போய்
அதுவாகப் பெறுவேனு அறிந்திலன்மேல் விளைவே. 1

கரணமெலாங் கரைந்ததனிக் கரைகாண்ப தளதோ
கரைகண்ட பொழுதினையுங் கண்டுதெளி வேனு
அரணமெலாங் கடந்ததிரு வருள்வெளிநேர் படுமோ
அவ்வெளிக்கு ளானந்த வனுபவந்தா னுறுமோ
மரணமெலாந் தவிர்ந்துசிவ மயமாகி நிறைதல்
வாய்த்திடுமோ மூலமல வாதனையும் போமோ
சரணமெலாந் தரமன்றிற் றிருநடஞ்செய் பெருமான்
தனதுதிரு வுளமெதுவோ சற்றுமறிந் திலனே. 2

நாதாந்தந் திருவீதி நடந்துகடப் பேனை
ஞானவெளி நடுவின்ப நடந்தரிசிப் பேனை
போதாந்தத் திருவடியென் சென்னிபொருந் திடுமோ
புதுமையறச் சிவபோகம் பொங்கிநிறைந் திடுமோ
வேதாந்த சித்தாந்த சமாசமும் வருமோ
வெறுவெளியிற் சுத்தசிவ வெளிமயந்தா னுறுமோ
பாதாந்த வரைநீறு மணக்கமன்றி லாடும்
பரமர்திரு வுளமெதுவோ பாமமறிந் திலனே. 3

சிதம்பரத்தே யானந்த சித்தர்திரு நடந்தான்
சிறிதறிந்த படியின்னு முழுதுமறி வேனை
பதம்பெறத்தீதம் பழம்பிழிந்து பாலுநறும் பாகும்
பசுநெய்யுங் கலந்ததெனப் பாடிமகிழ் வேனை
நிதம்பரவி யானந்த நித்திரைநீங் காத
நித்தர்பணி புரிந்தின்ப சித்திபெறு வேனை
மதம்பரவு மலைச்செருக்கிற் சிறந்தசிறி யேனென்
வள்ளல்குரு நாதர்திரு வுள்ளமறி யேனே. 4

களக்கமறப் பொதுநடநான் கண்டுகொண்ட தருணங்
கடைச்சிறியே னுளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பியுதிர்ந் திடுமோ
வெம்பாது பழுக்கினுமென் கரத்திலகப் படுமோ
கொளக்கருது மலமாயைக் குரங்குகவர்ந் திடுமோ
குரங்குகவ ராதெனது குறிப்பிலகப் படினுங்
துளக்கமற வுண்ணுவனே தொண்டைவிக்கிக் கொளுமோ
ஜோதிதிரு வுளமெதுவோ வதுமறிந் திலனே. 5

திருப்பொதுவிற் றிருநடநான் சென்றுகண்ட தருணஞ்
சித்தியெனும் பெண்ணரசி யெத்தியென்கை பிடித்தாள்
கருப்பறியா தெனையதன்முன் சலந்தபுத்தி யெனுமோர்
காரிகைதான் கண்டளவிற் கனிந்துமகிழ்ந் திடுமோ
விருப்பமுறு தெனைமுனிந்து விடுத்திடுமோ நேயம்
விளைந்திடுமோ விவர்க்குநிதஞ் சண்டைவிளைந் திடுமோ
தருப்பொதுவி லிருவருக்குஞ் சந்தியுண் டாமோ
தடைபடுமோ திருவுளந்தான் சற்றுமறிந் திலனே. 6

ஆனந்த நடம்பொதுவிற் கண்டதரு ணத்தே
அருபருந்தான் றென்கருத்தி லடைந்தமர்ந்த தறுதான்
கானந்த மதத்தாலே காரமறை படுமோ
கடுங்கார மாகியென்றன் கருத்திலுறைந் திடுமோ

ஊனந்த மறக்கொளும்போ தினிக்கரசந் தருமோ
வுணக்கசந்து குமட்டியெதி ரெடுத்திடநேர்ந் திடுமோ
நானந்த வுளவறிந்து பிறர்க்கிய வருமோ
நல்லதிரு வுளமெதுவோ வல்லதறிந் திலனே. 7

தாய்கொண்ட திருப்பொதுவி லெங்கள்குரு நாதன்
சந்நிதிபோய் வரவிடுத்த தனிக்கரணப் பூவை
காய்கொண்டு வந்திடுமோ பழங்கொண்டு வருமோ
கனிந்தபழங் கொண்டுவருங் காலதனை மதமாம்
பேய்கொண்டு போய்விடுமோ பிலத்திடைவீழ்ந் திடுமோ
பின்படுமோ முன்படுமோ பிணங்கியொளித் திடுமோ
வாய்கொண்டு வென்றிடுமோ தோற்றிடுமோ வென்னை
மறந்திடுமோ திருவுளத்தின் வண்ணமறிந் திலனே. 8

தீட்டுமணிப் பொதுநடஞ்செய் திருவடிகண் டேத்தச்
செல்கின்றேன் சிறியேன்முன் சென்றவழி யறியேன்
காட்டுவழி கிடைத்திடுமோ நாட்டுவழி தருமோ
காலிளைப்புக் கண்டிடுமோ காணுதோ களிப்பாம்
மேட்டினிடை விடுத்திடுமோ பள்ளத்தே விடுமோ
விவேகமெனுந் துணையுறுமோ வேடர்பய முறுமோ
ஈட்டுதிரு வடிச்சமுகங் காணவுநேர்ந் திடுமோ
எப்படியோ திருவுளந்தா னேதுமறிந் திலனே. 9

ஞானமணிப் பொதுநடஞ்செய் திருவடிகண் டிடவே
நடக்கின்றே னந்தோமுன் னடந்தவழி யறியேன்
ஊனமிகு மாணவமாம் பாவியெதிர்ப் படுமோ
உடைமையெலாம் பறித்திடுமோ நடைமெலிந்து போமோ
ஈனமுறு மகங்காரப் புலிகுறுக்கே வருமோ
இச்சையெனு மிராக்கதப்பே யெனைப்பிடித்துக் கொளுமோ
ஆனமலத் தடைநீக்க வருட்டுணைதா னுறுமோ
ஐயதிரு வுளமெதுவோ யாதுமறிந் திலனே. 10

அருட்பெருஞ்ஜோதி

19. திருக்கதவந் திறத்தல்

திருவருட்புகழ்ச்சி

எண்சீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

திருக்கதவந் திறவாயோ திரைகளெலாந் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்ஜோதித் திருவுருக்காட் டாயோ
உருக்கியழு தூற்றெடுத்தென் னுடம்புயிரோ டுளமும்
ஒளிமயமே யாக்குறமெய் புணர்ச்சியரு ளாயோ
கருக்கருதாத் தனிவடிவோய் நின்னையென்னுட் கலந்தே
கங்குல்பக லின்றியென்றுங் களித்திடச்செய் யாயோ
செருக்கருதா தவர்க்கருளுஞ் சித்திபுரத் தரசே
சித்தசிகா மணியேயென் திருநடரா யகனே. 1

மணிக்கதவந் திறவாயோ மறப்பையெலாந் தவிர்த்தே
மாற்றறியாப் பொன்னேநின் வடிவதுகாட் டாயோ
கணிக்கறியாப் பெருநிலையி லென்னிணைதீ கலந்தே
கரைகடந்த பெரும்போகங் கண்டிடச்செய் யாயோ
தணிக்கறியாக் காதல்மிகப் பெருகுகின்ற தரசே
தாங்கமுடி யாதினியென் றனித்தலைமைப் பதியே
திணிக்கலையா தியையெல்லாம் பணிக்கவல்ல சிவமே
சித்தசிகா மணியேயென் திருநடரா யகனே. 2

உரைகடந்த திருவருட்பே ரொளிவடிவைக் கலந்தே
உவட்டாத பெரும்போக மோங்கியுறும் பொருட்டே
இரைகடந்தென் னுள்ளகத்தே யெழுந்துபொங்கித் ததும்பி
என்காதற் பெருவெள்ள மென்னைமுற்றும் விழுங்கிக்
கரைகடந்து போனதினித் தாங்கமுடி யாது
கண்டுகொள்வாய் நீயேயென் கருத்தின்வண்ண மரசே
திரைகடந்த குருமணியே சிவஞான மணியே
சித்தசிகா மணியேயென் திருநடரா யகனே. 3

உன்புடைநான் பிறர்போலே யுடுக்கவிழைந் தேனே
உண்ணவிழைந் தேனேவே றுடைமைவிழைந் தேனே
அன்புடையா யென்றனைநீ யணைந்திடவே விழைந்தேன்
அந்தோவென் னுசைவெள்ள மணைகடந்த தரசே

என்புடைவந் தணைகவென வியம்புகின்றே னுலகோர்
என்சொலினுஞ் சொல்லுகவென் னிலச்சையெலாம் விடுத்தேன்
தென்புடையோர் முகநோக்கித் திருப்பொதுநிற் கின்றேயெய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 4

இறந்திறந்தே யிளைத்தவெலாம் போதுமிந்த வுடம்பே
இயற்கையுடம் பாகவரு ளின்னமுத மளித்தென்
புறந்தழுவி யகம்புணர்ந்தே கலந்துகொண்டென் நாளும்
பூரணமாஞ் சிவபோகம் பொங்கியிட விழைந்தேன்
பிறந்திறந்து பொய்க்கதியைப் பெறநினைத்தே மாந்த
பேதையர்போ லெனைநினையேல் பெரியதிருக் கதவந்
திறந்தருளி யணைந்திடுவாய் சிற்சபைவா ழரசே
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 5

பொய்யுடையார் விழைகின்ற புனர்ச்சிவிழைந் தேதேனை
பூணவிழைந் தேதேனுவான் காணவிழைந் தேதேனை
மெய்யுடையா யென்னெஞ்சே விளையாட விழைந்தேன்
விளையாட்டென் பதுஞானம் விளையும்விளை யாட்டே
பையுடைப்பாம் பணையரொடு மாடுகின்றே யெனது
பண்பறிந்தே நண்புவைத்த பண்புடையோ யின்னே
செய்யுடையென் னெஞ்சுகூடி யாடவெழுந் தருள்வாய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 6

கூறுகின்ற சமயமெலா மதங்களெலாம் பிடித்துக்
கூவுகின்றார் பலரொன்றுங் கொண்டறியார் வீணே
நீறுகின்றார் மண்ணுகி நாறுகின்ற ரவர்போல்
நீடுலகி லழிந்துவிட நினைத்தேதேனை நிலைமேல்
ஏறுகின்ற திறம்விழைந்தே னேற்றுவித்தா யாங்கே
இலங்குதிருக் கதவுதிறந் தின்னமுத மளித்தே
தேறுகின்ற மெய்ஞ்ஞான சித்தியுறப் புரிவாய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 7

வேதநெறி யாகமத்தி னெறிபவுரா ணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்து முளவனைத்துங் காட்டி
உள்ளதனை யுள்ளபடி யுணரவுணர்த் தினையே
ஏதமற வுணர்ந்தனன்வீண் போதுகழிப் பதற்கோர்
எள்ளளவு மெண்ணமிலே னென்னெஞ்சே புணர்ந்தே
தீதறவே யனைத்தும்வல்ல சித்தாடல் புரிவாய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே. 8

கலையுரைத்த கற்பனையே நிலையெனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கமெலா மண்மூடிப் போக
மலைவறுசன் மார்க்கமொன்றே நிலைபெறவெவ் வுலகும்
வாழ்ந்தோங்கக் கருதியருள் வழங்கினையென் றனக்கே
உலைவறுமிப் பொழுதேதந் றருணமென நீயே
உணர்த்தினைவந் தணைந்தருள்வா யுண்மையுரைத் தவனே
சிலைநிகர்வன் மனங்கரைத்துத் திருவமுத மளித்தாய்
சித்தசிகா மணியேயென் திருநடரா யகனே. 9

திருத்தகுமோர் தருணமிதிற் றிருக்கதவந் திறந்தே
திருவருட்பே ரொளிகாட்டித் திருவமுத மூட்டிக்
கருத்துமகிழ்ந் தென்னுடம்பிற் கலந்துளத்திற் கலந்து
கனிந்துயிரிற் கலந்தறிவிற் கலந்துலக மனைத்தும்
உருத்தகவே யடங்குகின்ற வுபதிதாறும் பிறியா
தொன்றுகிக் காலவரை யுரைப்பமிலலாங் கடந்தே
திருத்தியொடு விளங்கிபரு ளாடல்செய வேண்டுந்
சித்தசிகா மணியேயென் திருநடரா யகனே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

20. பிள்ளைச்சிறு விண்ணப்பம்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

தடித்தவோர் மகனைத் தந்தையீண் டடித்தாற் முயுட னணைப்பள் தாயடித்தாற்
பிடித்தொரு தந்தை யணைப்பனிங் கெனக்குப் பேசிய தந்தையுந் தாயும்
பொடித்திரு மேனி யம்பலத் தாடும் புனிதநீ யாதலா லென்னை
அடித்தது போது மணைத்திடல் வேண்டும் அம்மையப் பாவினி யாற்றேன். 1

பெற்றதம் பிள்ளைக் குணங்களை யெல்லாம் பெற்றவ ரறிவதே யல்லால்
மற்றவ ரறியா ரென்றனை யீன்ற வள்ளலே மன்றிலே நடிக்குங்
கொற்றவ வோரெண் குணத்தவ நீதான் குறிக்கொண்ட கொடியனேன் குணங்கள்
முற்றுநன் கறிவா யறிந்துமென் றனைநீ முனிவதென் முனிவுதீர்ந் தருளே. 2

வெம்மதிக் கொடிய மகன்கொடுஞ் செய்கை விரும்பினு மங்ஙனம் புரியச்
சம்மதிக் கின்ற ரவன்றனைப் பெற்ற தந்தைதாய் மகன்விருப் பாலே
இம்மதிச் சிறியேன் விழைந்ததொன் றிலைநீ யென்றனை விழைவிக்க விழைந்தேன்
செம்மதிக் கருணைத் திருநெறி யிதுநின் திருவுள மறியுமே யெந்தாய். 3

பொய்பிழை யனந்தம் புகல்கின்றே னதிலோர் புன்முனை யாயினும் பிறர்க்கு
கைபிழை யுளதேல் நவின்றிடேன் பிறர்பால் நண்ணிய கருணையாற் பலவே
கைபிழை யாமை கருதுகின் றேனின் கழற்பதம் விழைகின்றே னல்லாற்
செய்பிழை வேறுன் றறிகிலே னந்தோ திருவுள மறியுமே யெந்தாய். 4

அப்பணி முடியென் னப்பனே மன்றில் ஆனந்த நடம்புரி யரசே
இப்புவி தனிலே யறிவுவந் ததுதொட் டிந்தநாள் வரையுமென் றனக்கே
எப்பணி யிட்டா யப்பணி யலதென் இச்சையாற் புரிந்ததொன் றிலையே
செப்புவ தென்னுன் செய்தவை யெல்லாந் திருவுள மறியுமே யெந்தாய். 5

முன்னெடு பின்னு நீதரு மடவார் முயக்கினிற் பொருந்தினே னதுவும்
பொன்னெடு விளங்குஞ் சபைநடத் தரசுன் புணர்ப்பலா லென்புணர்ப் பலவே
என்னெடு மிருந்திங் கறிகின்ற நினக்கே யெந்தைவே றியம்புவ தென்னே
சொன்னெடு வானத் தரம்பைய ரெனினுந் துரும்பெனக் காண்கின்றேன் றனித்தே. 6

இன்னுமிங் கெனேநீ மடந்தையர் முயக்கி லெய்துவித் திடுதியே லதுவுன்
தன்னுளப் புணர்ப்பிங் கெனக்கொரு சிறிதுஞ் சம்மத மன்றுநா னிதனைப்
பன்னுவ தென்னே யிதிலரு வருப்புப் பாலுணுங் காலையே யுளதால்
மன்னுமம் பலத்தே நடம்புரி வோயென் மதிப்பெலாந் திருவடி மலர்க்கே. 7

அறிவிலாச் சிறிய பருவத்திற் றுனே யருந்தலி லெனக்குள வெருப்பைப்
பிறிவிலா தென்னுட் கலந்தநீ யறிதி யின்றுநான் பேசுவ தென்னே
செறிவிலாக் கடையே னென்னினு மடியேன் றிருவரு ளழுதமே விழைந்தேன்
எறிவிலாச் சுவைவே றெவற்றினும் விழைவோ ரெட்டுணை யேனுமின் றெந்தாய். 8

இன்சுவை யுணவு பலபல வெனக்கிங் கெந்தைநீ கொடுப்பிக்கச் சிறியேன்
நின்சுவை யுணவென் றுண்கின்றே னின்னு நீதரு வித்திடு லதுநின்
தன்சுதந் தரமிங் கெனக்கதி லிறையுஞ் சம்மத மில்லைநான் றுனே
என்சுதந் தரத்திற் றேடுவே னல்லேன் தேடிய தும்மிலை யீண்டே. 9

செறிவதின் மனத்தேன் காசிலே யாசை செய்திலே னிந்தநா ளன்றி
அறிவதில் லாத சிறுபரு வத்து மடுத்தவர் கொடுத்தகா சவர்மேல்
எறிவது மேட்டி லெறிந்தது மெனக்குள் ளிருக்கின்ற நீயறிந் ததுவே
பிறிவதில் லாநின் னருட்பெரும் பொருளைப் பெற்றனன் பேசுவ தென்னே. 10

பணத்திலே சிறிது மாசையொன் றிலைநான் படைத்தவப் பணங்களைப் பலகால்
கிணற்றிலே யெறிந்தேன் குளத்திலு மெறிந்தேன் கேணியி லெறிந்தன னெந்தாய்
குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை யெறிகலேன் கொடுக்கின்றேன் பிறர்க்கே
கணத்திலே யெல்லாங் காட்டுநின் னருளைக் கண்டன னினிச் சொல்வ தென்னே. 11

கீனத்தவிவ் வுடம்பி லாசையெள் ளளவுங் கிளைத்திலேன் பசியற வுணவு
தினைத்திடுந் தோறும் வெறுப்பொடு முண்டே னின்றுமே வெறுப்பிலுண் கின்றேன்
தனைத்திடு முடையூ னுடம்பொரு சிறிதுந் தடித்திட நினைத்திலே னின்றும்
இனைத்திட விழைகின் றேனிது நான்ரு னியம்பலென் னீயறிந் ததுவே. 12

இவ்வுல கதிலே யிறையர சாட்சி யின்பத்து மற்றையின் பத்தும்
எவ்வள வெனினு மிச்சையொன் றறியே னெண்ணுதோ றருவருக் கின்றேன்
அவ்வுல கதிலே யிந்திரர் பிரம ரரிமுத லோரடை கின்ற
கவ்வையின் பத்து மாசைசற் றறியே னெந்தனின் கருத்தறிந் ததுவே. 13

சரியையோர் நான்குங் கிரியையோர் நான்குஞ் சாற்றிடும் யோகமோர் நான்கும்
புரியவும் பதங்கள் பொருந்தவு மெனது புந்தியி லாசைசற் றறியேன்
பெரியதோர் ஞான நான்கினும் ஆசை பெற்றிலேன் முத்திபெற் றிடவும்
உரியதோ ரிச்சை யெனக்கிலை யென்ற னுள்ளநீ யறிந்ததே யெந்தாய். 14

இறக்கவு மாசை யில்லையிப் படிநா னிருக்கவு மாசையின் றினிநான்
பிறக்கவு மாசை யிலையுல கெல்லாம் பெரியவர் பெரியவ ரெனவே
சிறக்கவு மாசை யிலைவிசித் திரங்கள் செய்யவு மாசையொன் றில்லை
துறக்கவு மாசை யிலதுய ரடைந்து தூங்கவு மாசையொன் றிலையே 15

சற்சபைக் குறியார் தம்மொடுங் கூடித் தனித்தபே ரன்புமெய் யறிவும்
நற்சபைக் குறிய வொழுக்கமு மழியா நல்லமெய் வாழ்க்கையும் பெற்றே
சிற்சபை நடமும் பொற்சபை நடமுந் தினந்தொறும் பாடிநின் றாடித்
தெற்சபை யுலகத் துயிர்க்கெலா மின்பஞ் செய்வதென் னிச்சையா மெந்தாய். 16

உருமலி யுலகி லுன்னைநான் கலந்தே யூழிதோ றூழியும் பிரியா
தொருமையுற் றழியாப் பெருமைபெற் றடியே னுன்னையே பாடிநின் றாடி
இருநிலத் தோங்கிக் களிக்கவும் பிறருக் கிடுக்கணுற் றுலவை தவிர்த்தே
திருமணி பொதுவி லன்புடை யவராய்ச் செய்யவு மிச்சைகா ணைந்தாய். 17

எவ்வுயிர்த் திரளு மென்னுயி ரெனவே யெண்ணிநல் லின்புறச் செயவும்
அவ்வுயிர் களுக்கு வருமிடை யூற்றை யகற்றியே யச்சநீக் கிடவுஞ்
செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச் சிவசிவ வென்றுகூத் தாடி
ஒவ்வுறு களிப்பா லழிவுரு திங்கே யோங்கவு மிச்சைகா ணைந்தாய். 18

உலகறி வெனக்கிங் குற்றநாள் தொடங்கி யுன்னறி வடைபுநாள் வரையில்
இலகியென் னுறவி பழகியு மெனைத்தா னெண்ணியும் நண்ணியும் பின்னர்
விலகிய மாந்த ரனைவரு மிங்கே மெய்ப்புறக் கூடிநின் றுனையே
அலகில்பே ரன்பிற் போற்றிவாழ்ந் திடவு மடியனேற் கிச்சைகா ணைந்தாய். 19

திருவளர் திருச்சிற் றம்பல மோங்குஞ் சிதம்பர மெனும்பெருங் கோயில்
உருவளர் மறையு மாகமக் கலையு முறைத்தவா றியல்பெறப் புதுக்கி
மருவளர் மலரின் விளக்கினின் மேனி வண்ணங்கண் டுளங்களித் திடவுங்
கருவள ருலகிற் றிருவிழாக் காட்சி காணவு மிச்சைகா ணைந்தாய். 20

தங்கமே யனையார் கூடிய ஞான சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவுஞ் சங்கஞ் சார்திருக் கோயில் கண்டிடவுந்
தூங்கமே பெறுஞ்சற் சங்கநீ ழேழி துலங்கவுஞ் சங்கத்தி லடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி யாடவு மிச்சைகா ணைந்தாய். 21

கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த கடுந்துய ரச்சமா திகளைத்
தருணைநின் னருளாற் றவிர்த்தவர்க் கின்பந் தரவும்வன் புலைகொலை யிரண்டும்
ஒருவிய நெறியி லுலகெலா நடக்க வுளுற்றவும் அம்பலந் தனிலே
மருவிய புகழை வழுத்தவும் நின்னை வாழ்த்தவு மிச்சைகா ணைந்தாய். 22

மண்ணுல கதிலே யுயிர்கள்தாம் வருந்தும் வருத்தத்தை யொருசிறி தெனினுங்
கண்ணுறப் பார்த்துஞ் செவியுறக் கேட்டுங் கணமும்நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறு மெனக்கே நின்னருள் வலத்தா லிசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணுமவ் வருத்தந் தவிர்க்கநல் வரந்தான் நல்குத லெனக்கிச்சை யெந்தாய். 23

இவையலாற் பிறிதோர் விடயத்தி லிச்சை யெனக்கிலை யிவையெலா மென்னுட்
சிவையொடு மமர்ந்த பெருந்தயா நிதிநின் றிருவுள மறிந்தது தானே
தவமிலே னெனினு மிச்சையின் படிநீ தருதலே வேண்டுமிவ் விச்சை
நவையிலா விச்சை யெனவறி விக்க வறிந்தன னவின்றன னெந்தாய். 24

தனிப்பெருஞ் ஜோதித் தலைவனே யெனது தந்தையே திருச்சிற்றம் பலத்தே
கனிப்பெருங் கருணைக் கடவுளே யடியேன் கருதிநின் றுரைக்கும்விண் ணப்பம்
இனிப்புறு நினது திருவுளத் தடைத்தே யெனக்கருள் புரிகநீ விரைந்தே
இனிச்சிறு பொழுதுந் தரித்திடே னுன்ற னிணைமலர்ப் பொன்னடி யாணை. 25

திரிபிலாப் பொருளே திருச்சிற்றம் பலத்தே திகழ்கின்ற தெய்வமே யன்பர்
பரிவுறுந் தோறும் விரைந்துவந் தருளும் பண்பனே பரையிடப் பாகா
பெரியபொற் சபையி னடம்புரி கின்ற பேரருட் ஜோதியே யெனக்கே
உரியநற் றந்தை வள்ளலே யடியே னுரைக்கின்றேன் கேட்டரு ளிதுவே. 26

தானலா திறைபு முயிர்க்கசை வில்லாத் தலைவனே திருச்சிற்றம் பலத்தே
வானலால் வேறொன் றிலையென வுரைப்ப வயங்கிய மெய்யின்ப வாழ்வே
ஊனலா லுயிரு முளமுமுள் ளுணர்வு முவப்புற வினிக்குந்தெள் ளமுதே
ஞானநா டகஞ்செய் தந்தையே யடியே னவில்கின்றேன் கேட்டரு ளிதுவே. 27

என்னுயிர்க் குயிராந் தெய்வமே யென்னை யெழுமையுங் காத்தரு ளிறைவா
என்னுளத் தினிக்குந் தீஞ்சுவைக் கனியே யெனக்கறி வுணர்த்திய குருவே
என்னுடை யன்பே திருச்சிற்றம் பலத்தே யெனக்கருள் புரிந்தமெய் யின்பே
என்னையீன் றெடுத்த தந்தையே யடியே னிசைக்கின்றேன் கேட்கவிம் மொழியே.

அருட்பெருஞ்ஜோதி

21. பிள்ளைப்பெரு விண்ணப்பம்.

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

கருணையா ரமுதே யென்னுயிர்க் குயிரே கனிந்தசிற் றம்பலக் கனியே
வருணமா மறையின் மெய்ப்பொரு ளாகி வயங்கிய வள்ளலே யன்பர்
தெருணிறை யுளத்தே திகழ்தனித் தலைமைத் தெய்வமே திருவருட் சிவமே
தருணமென் றெருமைத் தந்தையே தாயே தரித்தருள் திருச்செவிக் கிதுவே. 1

என்னையாண் டருளி யென்பிழை பொறுத்த விறைவனே திருச்சிற்றம் பலத்தே
என்னையாண் டஞ்சே லுனக்குநல் லருளிங் கிகுது மென்றவென் குருவே
என்னைவே றெண்ணு துள்ளதே யுணர்த்தி யெனக்குளே விளங்குபே ரொளியே
என்னையீன் றளித்த தந்தையே விரைந்திங் கேற்றருள் திருச்செவிக் கிதுவே. 2

இரும்புநேர் மனத்தேன் பிழையெலாம் பொறுத்தென் னிதயத்தி லெழுந்திருந் தருளி
விரும்புமெய்ப் பொருளாந் தன்னிய லெனக்கு விளங்கிட விளக்கியுட் கலந்தே
கரும்புமுக் கனிபா லமுதொடு செழுந்தேன் கலந்தென வினிக்கின்றேய் பொதுவில்
அரும்பெருஞ் ஜோதி யப்பனே யுளத்தே யடைத்தரு ளென்மொழி யிதுவே. 3

மலத்திலே கிடந்தேன் றனையெடுத் தருளி மன்னிய வடிவளித் தறிஞர்
குலத்திலே பயிலுந் தரமுமிங் கெனக்குக் கொடுத்துளே விளங்குசற் குருவே
பலத்திலே சிற்றம் பலத்திலே பொன்னம் பலத்திலே யன்பர்தம் மறிவாந்
தலத்திலே யோங்குந் தலிவனே யெனது தந்தையே கேட்கவென் மொழியே. 4

விண்டபோ தகரு மறிவரும் பொருளே மெய்யனே யையனே யுலகில்
தொண்டனேன் றன்னை யடுத்தவர் நேயர் சூழ்ந்தவ ருறவினர் தாயர்
கொண்டுடன் பிறந்தோ ரயலவ ரெனுமிக் குறிப்பினர் முகங்களி லிளைப்பைக்
கண்டபோ தெல்லா மயங்கியென் னுள்ளங் கலங்கிய கலக்கநீ யறிவாய். 5

சீர்த்தசிற் சபையென் னப்பனே யெனது தெய்வமே யென்பெருஞ் சிறப்பே
ஆர்த்தவிவ் வுலகி லம்மையர் துணைவ ரடுத்தவ ருறவினர் நேயர்.
வேர்த்தமற் றயலார் பசியினுற் பிணியால் மெய்யுளம் வெதும்பிய வெதுப்பைப்
பார்த்தபோ தெல்லாம் பயந்தென துள்ளம் பதைத்ததுன் னுளமறி யாதோ. 6

பரைத்தனி வெளியில் நடம்புரிந் தருளும் பரமனே யரும்பெரும் பொருளே
தரைத்தலத் தியன்ற வாழ்க்கையில் வறுமைச் சங்கடப் பாவியால் வருந்தி
நரைத்தவ ரிளையர் முதலினு ரெனையோர் நண்பனென் றவரவர் குறைகள்
உரைத்தபோ தெல்லா நடுங்கியென் னுள்ள முடைந்ததுன் னுளமறி யாதோ. 7

அன்னையே யப்பா திருச்சிற்றம் பலத்திதன் னையனே யிவ்வுல கதிலே
பொன்னையே யுடையார் வறியவர் மடவார் புகலுமா டவரிவர் களுக்குள்
தன்னையே யறியாப் பிணியிறு லாவி தளர்கின்றார் தருணமீ தெனதீவ
சொன்னமோ தெல்லாம் பயந்துநா னடைந்த சோபத்தை நீபறி யாயோ. 8

உண்டதோ றெல்லா மமுதென வினிக்கு மொருவனே சிற்சபை யுடையாய்
விண்டபே ருலகி லம்மவிவ் வீதி மேவுமோ ரகத்திலே யொருவர்
ஒண்டுயிர் மடிந்தா ரலறுகின் றாரென் றொருவரோ டொருவர்தாம் பேசிக்
கொண்டபோ தெல்லாங் கேட்டென துள்ளங் குலைநடுங் கிபதறித் திலையோ.9

காவியல் கருணை வடிவனே தலைமைக் கடவுளே சிற்சபை தனிலே
மேவிய வொளியே யிவ்வுல கதிலுார் வீதியா திகளிலே மனிதர்
ஆவிபோ னதுகொண் டுறவின ரழுத வழுகுரல் கேட்டபோ தெல்லாம்
பாவியே னுள்ளம் பகீரென நடுங்கிப் பதைத்ததுன் னுளமறி யாதோ. 10

நாதனே யென்னை நம்பிய மாந்தர் ஞாலத்திற் பிணிபல வடைந்தே
எதநேர்ந் திடக்கண் டையகோ வடியே னெய்திய சோபமு மிளைப்பும்
ஓதநே ருள்ள நடுக்கமுந் திகைப்பு முற்றபே ரேக்கமா திகளுந்
தீதனே னின்று நினைத்திட வுள்ளந் திடுக்கிட னீயறிந் திலைபோ. 11

கற்றவ ருளத்தே சரும்பினி லினிக்குங் கண்ணுதற் கடவுளே யென்னைப்
பெற்றதாய் நேய முறவினர் துணைவர் பெருகிய பழக்கமிக் குடையோர்
மற்றவ ரிங்கே தனித்தனி பிரிந்து மறைந்திட்ட தோறுமப் பிரிவை
உற்றுநா னினைக்குந் தோறுமுண் ணடுங்கி யுடைந்தன னுடைகின்றே னெந்தாய்.

என்றுநா டுறுவோர்க் கின்பமே புரியு மெந்தையே யென்றனைச் சூழ்ந்தே
நன்றுநா டியநல் லோருயிர்ப் பிரிவை நாயினேன் கண்டுகேட் டுற்ற
அன்றுநா னடைந்த நடுக்கமுந் துயரு மளவிலை யளவிலை யறிவாய்
இன்றவர் பிரிவை நினைத்திடுந் தோறு மெய்திடுந் துயருநீ யறிவாய். 13

நிலைபுரிந் தருளு நித்தனே யுலகி னெறியலா நெறிகளிற் சென்றே
கொலைபுரிந் திட்ட கொடியவ ரிவரென் றயலவர் குறித்தபோ தெல்லாம்
உலைபுரிந் திடுவெங் தீவயிற் றுள்ளே யுற்றென நடுநடுக் குற்றே
தொலைபுரிந் தோடிக் கண்களை மூடித் துயர்ந்ததும் நீயறிந் ததிலே. 14

ஓர்ந்தவுள் ளகத்தே நிறைந்தொளிர் கின்ற வொருவனே யுலகிய லதிலே
மாந்தர்க ளிறப்பைக் குறித்திடும் பறையின் வல்லொலி கேட்டபோ தெல்லாம்
காந்தியென் னுள்ளங் கலங்கிய கலக்கங் கடவுணீ யேயறிந் திடுவாய்
ஏந்துமிவ் வுலகி லிறப்பெனி லெந்தா யென்னுள நடுங்கு வதியல்பே. 15

மறைமுடி வயங்கு மொருதனித் தலைமை வள்ளலே யுலகர சாள்வோர்
உறையுறு வாள்கொண் டொருவரை யொருவ ருயிரறச் செய்தன ரெனவே
தறையுறச் சிறியேன் கேட்டபோ தெல்லாந் தளர்ந்துள நடுங்கினின் றயர்ந்தேன்
இறையு மிவ்வுலகிற் கொலையெனி லெந்தா யென்னுள நடுங்கு வதியல்பே. 16

தாய்மொழி குறித்தே கணக்கிலே மற்றோர் தாய்க்குரா லென்பதை யிரண்டா
வாய்மொழி வஞ்சம் புகன்றனன் வரைந்தே னடுங்கினே னினைத்ததை மனத்தே
தூய்மொழி நேயர் நம்பிமே ரில்லிற் சூழ்ந்தன னினைத்தது துயர்ந்தேன்
காய்மொழி புகன்றேன் பொய்மொழி புகன்றேன் கலங்கினே னதுநினைத் தெந்தாய்.17

எட்டரும் பொருளே திருச்சிற்றம் பலத்தே யிலகிய விறைவனே யுலகிற்
பட்டினி யுற்றூர் பசித்தனர் களாயால் பரதவிக் கின்றன ரென்றே
ஓட்டிய பிறசாற் கேட்டபோ தெல்லாம் உளம்பகீ ரெனநடுக் குற்றேன்
இட்டவிவ் வுலகிற் பசியெனி லெந்தா யென்னுள நடுங்குவ தியல்பே. 18

பல்லிகள் பலவா யிடத்துமுச் சியினும் பகருநர் முதற்பல வயினும்
சொல்லிய தோறும் பிறர்துயர் கேட்கச் சொல்கின்ற வோவெனச் சூழ்ந்தே
மெல்லிய மனநொந் திளைத்தன னெந்தாய் கூகை வெங்குரல் செவுந்தோறும்
வல்லிபக் குரல்கேட் டயர்பசுப் போல வருந்தினே னெந்தைநீ யறிவாய். 19

காக்கைகள் கூவக் கலங்கினேன் பருந்தின் கடுங்குரல் கேட்டுளங் குலைந்தேன்
தாக்கிய வாந்தை குவல்செயப் பயந்தேன் சாக்குரற் பறவையாற் றளர்ந்தேன்
வீக்கிய வேறு கொடுஞ்சகு னஞ்செய் வீக்களால் மயங்கினேன் விடத்தில்
ஊக்கிய பாம்பைக் கண்டபோ துள்ள மொடுங்கினே னடுங்கினே னெந்தாய்.20

வேறுபல் விடஞ்செய் புயிர்களைக் கண்டு வெருவினேன் வெய்யநாப்க் குழுவின்
சீறிய குரலோ டழுகுரல் கேட்டுத் திடுங்கினேன் மற்றைவெங் சகுனக்
கூறதாம் விலங்கு பறவையூர் வனவெங் கோள்செயு மாடவர் மடவார்
ஊறுசெய் கொடுஞ்சொல் விளைக்கெலா முள்ள முயங்கினேன் மயங்கினே னெந்தாய். 21

நிறமுறு விழிக்கீழ்ப் புறத்தொடு தோளும் நிறையுடம் பிற்சில வுறுப்பும்
உறவுதோற் றடித்துத் துடித்திடுந் தோறு முன்னிமற் றவைகளை யந்தோ
பிறர்துயர் காட்டத் துடித்தவோ வென்று பேதுற்று மயங்கிநெஞ் சுடைந்தேன்
நறுவிய துகிலிற் கறையுறக் கண்டே நடுங்கினே னெந்தைநீ யறிவாய். 22

மங்கைய ரெனைத்தாம் வலிந்துறுந் தோறும் மயங்கிநா மிவரொடு முயங்கி
இங்குளங் களித்தாற் களித்தவர்க் குடனே யின்னலுற் றிடுநமக் கின்னல்
தங்கிய பிறர்தந் துயர்தனைக் காண்ட லாகுமத் துயருறத் தரியேம்
பங்கமீ தெனவே யெண்ணினா னுள்ளம் பயந்தது மெந்தைநீ யறிவாய். 23

வலிந்தெனை யழைக்கு மடந்தையர் தெருவில் மறந்துவந் தடித்தபின் னினைந்தே
மலிந்திவர் காணில் விடுவரன் றிவரால மயங்கியுண் மகிழ்ந்தன மெனிலோ
நலிந்திடு பிறர்தந் துயர்தனைக் கண்டே நடுங்குற வருமெனப் பயந்தே
மெலிந்துட னுளைத்து வீதிவே றுன்றின் மேவினே னெந்தைநீ யறிவாய்.24

களிப்புறு சுகமா முணவினைக் கண்ட காலத்து முண்டகா லத்தும்
தெளிப்புறு மனத்தோ டுஞ்சினே னெனினத்தான் றேர்ந்தபல் சுபங்களில் நேயர்
அளிப்புறு விருந்துண் டமர்கவென் றழைக்க வவர்களுக் கன்பிலே டாங்கே
ஒளிப்புறு வார்த்தை வுரைத்திய லொளித்தே பயத்தொடு மூற்றன னெந்தாய்.25

இன்புறு முணவு கொண்டபோ தெல்லா மிச்சுகத் தாலினி யாது
துன்புறுங் கொல்லோ வென்றுள நடுங்கிச் சூழ்வெறு வயிற்றொடு மிருந்தேன்
அன்பிலே யன்பர் கொடுத்தவை யெல்லா மைபசோ தெப்வமே யிவற்றுல்
வன்புறச் செய்யே லென்றுளம் பயந்து வாங்கியுண் டிருந்தன னெந்தாய். 26

உற்றதா ரணியி லெனக்குல குணர்ச்சி யுற்றநாண் முதலொரு சிலநாள்
பெற்றதாய் வாட்டம் பார்ப்பதற் கஞ்சிப் பேருனை வுண்டனன் சிலநாள்
உற்றவர் நேய ரன்புளார் வாட்ட முறுவதற் கஞ்சினே னுண்டேன்
மற்றிவை யல்லாற் சுகவுணக் கொள்ள மனநடுங் கியதுநீ யறிவாய். 27

தொழுந்தகை யுடைய ஜோதியே யடியேன் சோம்பலால் வருந்திடு தோறும்
அழுந்தவென் னுள்ளம் பயந்ததை யென்னு ளளவிடற் கெய்துமோ பகலில்
விழுந்துறு தூக்கம் வரவது தடுத்தும் விட்டிடா வன்மையாற் றூங்கி
எழுந்தபோ தெல்லாம் பயத்தொடு மெழுந்தே னென்செய்வே னென்செய்வே னென்றே. 28

அந்தமோ டாதி யில்லதோர் பொதுவி லரும்பெருஞ் ஜோதியே யடியேன்
சொந்தமோ வறியேன் பகலிரவெல்லாந் தூக்கமே கண்டனன் தூக்கம்
வந்தபோ தெல்லாம் பயத்தொடும் படுத்தேன் மற்றுநா னெழுந்தபோ தெல்லாந்
தொந்தமாம் பயத்தாற் சிவசிவ தூக்கந் தொலைவதெக் காலமென் றெழுந்தேன். 29

உடையவம் பலத்தி லொருவனே யென்ற னுயிர்க்குயி ராகிய வொளியே
கடையனு னனவில் நடுங்கிய நடுக்கங் கணக்கிலே சிறிதுறுங் கனவில்
இடையுறு நடுக்கங் கருதவுஞ் சொலவு மெண்ணவு மெழுதவும் படுமோ
நடையறு சிறியேன் கனவுகண் டுள்ள நடுங்கிடா நாளுமொன் றுளதோ. 30

பகலிர வடியேன் படுத்தபோ தெல்லாந் தூக்கமாம் பாவிவந் திடுமே
இகலுறு கனவாங் கொடியவெம் பாவி யெய்துமே யென்செய்வோ மென்றே
உகலுற வுள்ளே நடுங்கிய நடுக்க முன்னுள மறியுமே யெந்தாய்
நகலுறச் சிறியேன் கனவுகண் டுள்ள நடுங்கிடா நாளுமொன் றுளதோ. 31

தொகுப்புறு சிறுவர் பயிலுங்காற் பயிற்றுந் தொழிலிலே வந்தகா பத்திற்
சகிப்பிலா மையினு லடித்தன னடித்த தருணநான் கலங்கிய கலக்கம்
வகுப்புற நினது திருவுள மறியு மற்றுஞ்சில் லுயிர்களிற் கோபம்
மிகப்புகுந் தடித்துப் பட்டபா டெல்லா மெய்யநீ யறிந்ததே யன்றே. 32

ஒடித்தவிவ் வுலகிற் சிறுவர்பாற் சிறிய வுயிர்கள்பாற் றீமைகண் டாங்கே
அடித்திடற் கஞ்சி யுளைந்தன னென்னு லாற்றிடாக் காலத்திற் சிறிதே
பொடித்துநான் பயந்த பயமெலா முனது புந்தியி லறிந்ததே யெந்தாய்
வெடித்தவெஞ் சினமென் னுளமுறக் கண்டே வெதும்பிய நடுக்கநீ யறிவாய். 33

கோபமே வருமோ காமமே வருமோ கொடிய மோகங்களே வருமோ
சாபமே யனைய தடைமதம் வருமோ தாமதப் பாவிவந் திடுமோ
பாபமே புரியும் லோபமே வருமோ பயனில்மாற் சரியம்வந் திடுமோ
தாபஆங் கார மேயுறுமோ வென் றையநான் றளர்ந்தது மறிவாய். 34

காமமா மதமாங் காரமா திகளென் கருத்திலே யுற்றபோ தெல்லாம்
நாமமா ருளத்தீ தாடையகோ நான்று ணடுங்கிய நடுக்கநீ யறிவாய்
சேமமா ருலகிற் காமமா திகளைச் செறிந்தவர் தங்களைக் கண்டே
ஆமைபோ லொடுங்கி யடங்கினே னதுவு மையநின் றிருவுள மறியும். 35

கருத்துவே ருகிக் கோயிலிற் புகுந்துன் காட்சியைக் கண்டபோ தெல்லாம்
வருத்தமே யடைந்தேன் பயத்தொடுந் திரும்பி வந்துநொந் திளைத்தன னெந்தாய்
நிருத்தனே நின்னைத் துதித்தபோ தெல்லாம் நெகிழ்ச்சியில் லாமையால் நடுங்கிப்
பருத்தவென் னுடம்பைப் பார்த்திடா தஞ்சிப் படுத்தது மையநீ யறிவாய். 36

புன்புலா லுடம்பி னசுத்தமு மிதனிற் புகுந்துநா னிருக்கின்ற புணர்ப்பும்
என்பொலா மணியே யெண்ணிநா னெண்ணி யேங்கிய வேக்கநீ யறிவாய்
வன்புலா லுண்ணு மனிதரைக் கண்டு மயங்கியுள் நடுங்கி யாற்றுமல்
என்பெலாங் கருக இளைத்தன னந்த இளைப்பையு மையநீ யறிவாய். 37

இந்தவிர் வடிவெம் மிறைவனே யென்றே டியல்கலைத் தருக்கஞ்செய் திடவே
வந்தவர் தம்மைக் கண்டபோ தெல்லாம் மனமிக நடுங்கினே னறிவாய்
சந்தியுற் றிருருகாற் படித்தசாத் திரத்தைத் தமியனேன் மீளவுங் கண்டே
நொந்தது முலகப் படிப்பிலென் னுள்ள நொந்தது மையநீ யறிவாய். 38

மூனித்தவெவ் வினையோ நின்னருட் செயலோ தெரிந்திலென் மோகமே லின்றித்
தனித்தனி யொருசார் மடந்தையர் தமக்கு ளொருத்தியைக் கைதொடச் சார்ந்தேன்
குனித்தமற் றவரைத் தொட்டன னன்றிக் கலப்பிலென் மற்றது குறித்தே
பனித்தன னினைக்குந் தோறுமுள் ளுடைந்தேன் பகர்வதென் னெந்தைநீ யறிவாய். 39

பதியனே பொதுவிற் பரமநா டகஞ்செய் பண்பனே நண்பனே யுலகில்
ஓதியனேன் பிறர்பா லுரத்தவார்த் தைகளா லொருசில வாதங்கள் புரிந்தே
மதியிலா மையினு லகங்கரித் ததன்பின் வள்ளலுன் னருளினு லறிந்தே
விதியைநா னெந்து நடுங்கிய தெல்லா மெய்யனே நீயறிந் ததுவே. 40

அருளினே யளிக்கு மப்பனே யுலகி லன்புளார் வலிந்தெனக் கீந்த
பொருளினே வாங்கிப் போனபோ தெல்லாம் புழுங்கிய புழுக்கநீ யறிவாய்
மருளுமப் பொருளைச் சாலகத் தெறிந்து மனமிக வினைத்ததும் பொருளால்
இருளுறு மெனநா னுளநடுங் கியது மெந்தைநின் றிருவுள மறியும். 41

பொருளிலே யுலக மிருப்பதா தலினுல் புரிந்துநா மொருவர்பாற் பலகால்
மருவினுற் பொருளி னிச்சையாற் பலகால் மருவுகின் றுனெனக் கருதி
வெருவுவ தெனநா னஞ்சியெவ் விடத்து மேவிலே னெந்தைநீ யறிவாய்
ஒருவுமப் பொருளை நினைத்தபோ தெல்லா முவட்டினே னிதுவுநீ யறிவாய். 42

தகைத்தபே ருலகி லெயனே யடியேன் தடித்தவுள் ளத்தினாடு களித்தே
நகைத்தபோ தெல்லாம் நடுங்கினே னிங்கே நல்லவா கனங்களி லேறி
உகைத்தபோ தெல்லாம் நடுங்கினேன் விரைந்தே தியோடிய போதெலாம் பயந்தேன்
பகைத்தபோ தயலார் பகைகளுக்கஞ்சிப் பதுங்கினே னெதுங்கினே னெந்தாய். 43

சகட்புற வாழ்வைப் பார்த்திடிற் கேட்கிற் சஞ்சல முறுமெனப் பயந்தே
நகர்ப்புறத் திருக்குந் தோட்டங்க டோறும் நண்ணியும் பிறவிடத் தலைந்தும்
பகற்பொழு தெல்லா நாடொறுங் கழித்தேன் பகலன்றி யிரவுமப் படியே
மிகப்பல விடத்துந் திரிந்தன னடியேன் விளம்பலென் னீபறிந் ததுவே. 44

உருவுள மடவார் தங்களை நான்கண் ணுற்றபோ துளநடுக் குற்றேன்
ஒருவுளத் தவரே வலிந்திட வேறோ ருவளகத் தொளித்தய லிருந்தேன்
கருவுளச் சண்டைக் கூக்குரல் கேட்ட காலத்தி னுணுற்ற கலக்கந்
திருவுள மறியு மூரத்தசொல் லெனது செவிபுகிற் கனல்புகு வதுவே. 45

பண்ணிகா ரங்கள் பொசித்தவப் போதும் பராக்கிலே செலுத்திய போதும்
எண்ணிய மடவார் தங்களை விழைந்தே யிசைந்தனு பவித்தவப் போதும்
நண்ணிய தயில மூழுக்குற்ற போது நவின்றசங் கீதமு நடமுங்
கண்ணுறக் கண்டு கேட்டவப் போதுங் கலங்கிய கலக்கநீ யறிவாய். 46

நயந்தபொற் சரிகைத் துகிலெனக் கெனது நண்பின ருடுத்திய போது
பயந்தவப் பயத்தை யறிந்தவ ரெல்லாம் பயந்தனர் வெய்பிலில் கவிகை
வியந்துமேற் பிடித்த போதெலா முள்ளம் வெருவினேன் கைத்துகில் வீசி
அயந்தரு தெருவில் நடப்பதற் கஞ்சி அரைக்குமேல் வீக்கின னெந்தாய். 47

கையுற வீசி நடப்பதை நாணிக் கைகளைக் கட்டியே நடந்தேன்
மெய்புறக் காட்ட வெருவிவெண் டுகிலால் மெய்யெலா மையகோ மறைத்தேன்
வையமேற் பிறர்தங் கோலமு நடையும் வண்ணமு மண்ணலே சிறிதும்
பையநா னூன்றிப் பார்த்ததே யில்லை பார்ப்பனேல் பயமிகப் படைப்பேன். 48

வைகிய நகரி லெழிலுடை மடவார் வலிந்தெனைக் கைபிடித் திழுத்தும்
சைகைவே றுரைத்துஞ் சரசவார்த் தைகளாற் றனித்தெனைப் பலவிசை யறிந்தும்
பொய்கரைந் தாணை புகன்றுமேல் விழுந்தும் பொருண்முத லியகொடுத் திசைத்துங்
கைகலப் பறியே னடுங்கினே னவரைக் கடிந்தது மில்லைநீ யறிவாய். 49

எளியரை வலியா ரடித்தபோ தையோ வென்மனங் கலங்கிய கலக்கம்
தெளியநா னுரைக்க வல்லவ னல்லேன் றிருவுள மறியுமே யெந்தாய்
களியரைக் கண்டு பயந்தவென் பயந்தான் கடலினும் பெரியது கண்டாய்
அளியர்பாற் கொடியர் செய்தவெங் கொடுமை யறிந்தவென் னடுக்கமா றறிவார். 50

இரவிலே பிறர்தம் மிடத்திலே யிருந்த இருப்பெலாங் கள்ளர்கள் கூடிக்
கரவிலே கவர்ந்தார் கொள்ளையென் றெனது காதிலே விழுந்தபோ தெல்லாம்
விரைவிலே நெருப்பை மெய்யிலே மூட்டி வெதுப்பல்போல் வெதும்பினே னெந்தாய்
உரவிலே யொருவர் திடுக்கென வரக்கண் டுளநடுக் குற்றனன் பலகால். 51

உரத்தோரு வருக்கங் கொருவர்பே சியபோ துள்ளக நடுங்கினேன் பலகால்
கரத்திரு வுரத்துக் கதவுதட் டியபோ தையகோ கலங்கினேன் கருத்தில்
புரத்திலே யம்மா வப்பனே யையோ வெனப்பிறர் புகன்றசொல் புகுந்தே
தரத்திலென் னுளத்தைக் கலக்கிய கலக்கந் தந்தைநீ யறிந்தது தானே. 52

மண்ணினீ ணடையில் வந்தவென் துயரை மதித்துளம் வருந்திய பிறர்தங்
கண்ணினீர் விடக்கண் டையகோ நானுங் கண்ணினீர் விட்டுளங் கவன்றேன்
அண்ணிநின் றிருருவ ரசப்பிலே யென்னை யழைத்தபோ தடியனே னெண்ணை
தெண்ணியா துற்ற தோவெனக் கலங்கி யேனினல் மறந்தன னெந்தாய். 53

தேட்டிலே மிகுந்த சென்னையி லிருந்தாற் சிறுகுறு மென்றுளம் பயந்தே
நாட்டிலே சிறிய வூர்ப்புறங் களிலே நண்ணினே னூர்ப்புற மடுத்த
காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க் களத்திலே திரிந்துற்ற விளைப்பை
ஏட்டிலே யெழுத முடியுமோ விவைக ளெந்தைதீ யறிந்தது தானே. 54

என்புடை வந்தார் தம்முக நோக்கி யென்கொலோ வென்கொலோ விவர்தாந்
துன்புடை யவரோ இன்புடை யவரோ சொல்லுவ தென்னையோ வென்றே
வன்புடை மனது கலங்கியங் கவரை வாவெனல் மறந்தன னெந்தாய்
அன்புடை யவரைக் கண்டபோ தெல்லா மென்கொலோ வென்றயர்ந் தேனே. 55

காணுறு பசுக்கள் கன்றுகளாதி கதறிய போதெலாம் பயந்தேன்
எணுறு மாடு முதல்பல மிருசு மிளைத்தவை கண்டுள மிளைத்தேன்
கோணுறு கோழி முதல்பல பறவை கூவுதல் கேட்டுளங் குலைந்தேன்
வீணுறு கொடியர் கையிலே வாளை விதிர்த்தல்கண் டென்னென வெகுண்டேன்.

பிதிர்ந்தமண் ணுடம்பை மறைத்திட வலியார் பின்முன்னைக் காதுமேல் நோக்கி
அதிர்ந்திட நடந்த போதெலாம் பயந்தே னவர்புகன் றிட்டதீ மொழிகள்
பொதிந்திரு செவியிற் புகுந்தொறும் பயந்தேன் புண்ணியா கின்றுதி யெனுமோர்
முதிர்ந்த தீங்கனியைக் கண்டிலேன் வேர்த்து முறிந்தகாய் கண்டுளந் தளர்ந்தேன். 57

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன் பசியிரு விளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறு தயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோரென் னேருறக் கண்டுளந் துடித்தேன்
I ஈடின்மா னிகளா யெழுக ளாய்நெஞ் சிளைத்தவர் தமைக்கண்டே யிளைத்தேன்.

நலிதரு சிறிய தெய்வமென் றையோ நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள் பலிக்கடா முதலிய வுயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே புந்திநொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில் கண்டகா லத்திலும் பயந்தேன். 59

துண்ணெனக் கோடியோர் பிறவுயிர் கொல்லத் தொடங்கிய போதெலாம் பயந்தேன்
கண்ணினு லுயோ பிறவுயிர் பதைக்கக் கண்டகா லத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையுந் தூண்டிலுங் கண்ணி வகைகளுங் கண்டபோ தெல்லாம்
எண்ணியென் னுள்ள நடுங்கிய நடுக்க மெந்தைதின் திருவரு ளறியும். 60

நடுநிலை யில்லாக் கூட்டத்தைக் கருணை நண்ணிடார் தமையரை நாளுங்
கெடுதிலை நினைக்குஞ் சிற்றறி காரக் கேடரைப் பொய்யலாற் களத்தாப்

1. ஈடு என்பது—ஒப்பு.

படிநிலை யவரைப் பார்த்தபோ தெல்லாம் பயந்தனன் சுத்தசன் மார்க்கம்
விடிநிலை யுலக நடையெலாங் கண்டே வெருவினேன் வெருவினே னெந்தாய். 61

ஓங்கிய திருச்சிற் றம்பல முடைய வொருதனித் தலைவனே யென்னைத்
தாங்கிய தாயே தந்தையே குருவே தயாநிதிக் கடவுளே நின்பால்
நீங்கிய மனத்தார் யாவரே யெனினு மவர்தமை நினைத்தபோ தெல்லாங்
தேங்கிய வுள்ளம் பயந்தன னதுநின் றிருவுள மறியுமே யெந்தாய். 62

காட்டுயி ரணமே லிருக்கவும் பயந்தேன் காலின்மேற் கால்வைக்கப் பயந்தேன்
பாட்டயல் கேட்கப் பாடவும் பயந்தேன் பஞ்சணை படுக்கவும் பயந்தேன்
நாட்டிய வுயர்ந்த திண்ணைமே லிருந்து நன்குறக் களித்துக்கால் கீழே
நீட்டவும் பயந்தே னீட்டிப் பேசுதலை நினைக்கவும் பயந்தன னெந்தாய். 63

தலைநெறி ஞான சுத்தசன் மார்க்கஞ் சார்ந்திட முயலுறு தந்தோ
கலைநெறி யுலகக் கதியிலே கருத்தைக் கனிவுற வைத்தன ராகிப்
புலைநெறி விருப்பி னுருல குயிர்கள் பொதுவெனக் கண்டிரங் காது
கொலைநெறி நின்றூர் தமக்குளம் பயந்தே னெந்தைநான் கூறுவ தென்னே. 64

இவ்வணஞ் சிறியேற் குலகிய லறிவிங் கெய்திய நாளது தொடங்கி
னைவண மிற்றைப் பகல்வரை யடைந்த நடுக்கமுந் துன்பமு முரைக்க [யும்
எவ்வணத் தவர்க்கும் [1]அல்குறு தெனில்யா னிசைப்பதென் னிசைத்தே யமை
செவ்வணத் தருண மிதுதலை வாநின் றிருவுள மறிந்தமை யெல்லாம். 65

தரைத்தலத் தெனைநீ யெழுமையும் பிரியாத் தம்பிரா னல்லையோ மனத்தைக்
கரைத்துளே புகுந்தென் னுயிரிலுட் கலந்த கள்வனீ யல்லையோ வெனைத்தான்
இசைத்திவ ணளித்த சிற்சபை விளங்கு மெந்தைநீ யல்லையோ நின்பால்
உரைத்தலென் னெழுக்க மாதலா லுரைத்தே னீயறி யாததொன் றுண்டோ. 66

கைதலத் தோங்குங் கனியினென் னுள்ளே கனிந்தவென் களைகணீ யலையோ
மெய்தலத் தகத்தும் புறத்தும்விட் டகலா மெய்யனீ யல்லையோ வெனது
பைதறீர்த் தருளுந் தந்தைநீ யலையோ பரிந்துநின் றிருமுன்வின் னைப்பஞ்
செய்தலென் னெழுக்க மாதலாற் செய்தே தன் திருவுள மறிந்தமை யெல்லாம். 67

இன்னவா றடியே னச்சமுந் துயரு மெய்திநின் றினைத்தன னந்தோ
துன்னவா ணவமு மாயையும் வினையுஞ் சூழ்ந்திடு மறைப்புமிங் குனைத்தான்
உன்னவா சற்றே யுரைக்கவா வொட்டே மென்பவா லென்செய்வே னெனது
மன்னவா ஞான மன்றவா வெல்லாம் வல்லவா விதுதகு மேயோ. 68

எள்ளலாம் பயத்தாற் றுயரினு லடைந்த வினைப்பெலா மிங்குநா னுற்றிக்
கொள்ளவே யடுத்தேன் மாயையா திகளென் கூடவே யடுத்ததென் னந்தோ
வள்ளலே யெனது வாழ்முதற் பொருளே மன்னவா நின்னலா லறியேன்
உள்ளல்வே றிலையென் னுடல்பொரு ளாவி யுன்னலே யென்னவன் றெந்தாய். 69

---

1. அல்குறுது என்பது—குறைவுபடாது.

என்சுதந் தரமோ ரெட்டுணை யேனு மில்லையே யெந்தையெல் லாமுன்
தன்சுதந் தரமே யடுத்தவித் தருணந் தமியனேன் றனைப்பல துயரும்
வன்சுவை மயக்கு மச்சமு மறைப்பு மாயையும் வினையுமா ணவமும்
இன்சுவைக் கனிபோ லுண்கின்ற தழகோ விவைக்கெலா நானிலக் கலதே. 70

அறிவொரு சிறிதிங் கறிந்தநாண் முதலென் னப்பனே நினைமறந் தறியேன்
செறிவிலாச் சிறிய பருவத்தும் வேறு சிந்தைசெய் தறிந்திலே னுலகிற்
பிறிதொரு பிழையுஞ் செய்திலே னந்தோ பிழைத்தன னுயினு மென்னைக்
குறியுறக் கொண்டே குலங்குறிப் பதுநின் குணப்பெருங் குன்றினுக் கழகோ.71

ஐயநா னுடும் பருவத்திற் றுனே யடுத்தநன் னேயமே டப்பா
பொய்புல காசை யெனக்கிலை யுனக்கென் புகலென வவனுமங் கிசைந்தே
மெய்புறத் துறப்போ மென்றுபோய் நினது மெய்யருள் மீட்டிட மீண்டோம்
துய்யநின் னுள்ள மறிந்திதே யென்தா யின்றுநான் சொல்லுவ தென்னை. 72

தேர்விலாச் சிறிய பருவத்திற் றுனை தெய்வமே தெய்வமே யெனநின்
சார்வுகொண் டெல்லாச் சார்வையும் விடுத்தேன் தந்தையுங் குருவுநீ யென்றேன்
போர்விலா துளத்தே வந்தவா பாடிப் பிதற்றினேன் பிறர்மதிப் பறியேன்
ஓர்விலாப் பிழைக ளொன்றையு மறியே னின்றுநா னுரைப்பதிங் கென்னை. 73

பொறித்துனைப் பதியாப் பெற்றநா ளடிமை புரிந்தது போலவே யின்றுஞ்
செறித்து நிற்கின்றே னன்றியென் னுரிமைத் தெய்வமுங் குருவுமெய்ப் பொருளும்
நெறித்தநற் றுயுந் தந்தையு மின்பு நேயமு நீயெனப் பெற்றே
குறித்தறிந் ததன்பி னெந்தைநா னேறிக் குதித்ததென் கூறுக நீயே. 74

பரிந்துனைப் பதியாப் பெற்றநா ளடிமைப் பணிபுரிந் தாங்கிது வரையில்
புரிந்துறு கின்றே னன்றியென் னுயிரும் பொருளுமென் புணர்ப்புமென் னறிவும்
விரிந்தவென் சுகமுந் தந்தையுங் குருவு மெய்ம்மையும் யாவுநீ யென்றே
தெரிந்தபின் னந்தோ வேறுநான் செய்த செய்கையென் செப்புக நீயே. 75

மைதவழ் முகில்போன் றருள்பொழி கருணை வள்ளலே நின்னையன் பாலும்
வைதவர் தமைநான் மதித்திலே னன்பால் வாழ்த்துகின் றேர்த்தமை வாழ்த்தி
உய்தவ ரிவரென் றுறுகின்றே னல்லா லுன்னரு ளறியநான் வேறு
செய்ததொன் றிலையே செய்தன னெனினுந் திருவுளத் தடைத்திட லழகோ. 76

ஆரண முரைத்த வரைப்பெலாம் பலவா மாகம முரைவரைப் பெல்லாங்
காரண நினது திருவருட் செங்கோல் கணிப்பருங் களிப்பிலே யோங்கி
நாரணர் முதலோர் போற்றிட விளங்கி நடக்கின்ற பெருமைநா னறிந்துந்
தாரணி யிடையித் துன்பமா திகளாற் றனையனேன் றளருத லழகோ. 77

பார்முதல் நாதப் பதியெலாங் கடந்தப் பாலுமப் பாலுமப் பாலும்
ஓர்முத லாகித் திருவருட் செங்கோ லுரைப்பரும் பெருமையி னோங்கிச்
சீர்பெற விளங்க நடத்திமெய்ப் பொதுவிற் சிறந்தமெய்த் தந்தைநீ யிருக்க
வார்கட லுலகி லச்சமா திகளான் மகன்மனம் வருந்துத லழகோ. 78

ஆர்ந்தவே தாந்தப் பதிமுதல் யோகாந் தப்பதி வரையுமப் பாலுந்
தேர்ந்தரு ளாணைத் திருநெறிச் செங்கோல் செல்லுவோர் சிற்சபை யிடத்தே
சார்ந்தபே ரின்பத் தனியர சியற்றுந் தந்தையே தனிப்பெருந் தலைவா
போர்ந்திடே னெந்த விதத்தினு நினக்கே பிள்ளைநான் வருந்துத லழகோ. 79

சித்திக ளெல்லாம் வல்லதோர் ஞானத் திருச்சபை தன்னிலே திகழுஞ்
சத்திக ளெல்லாஞ் சத்தர்க ளெல்லாந் தழைத்திடத் தனிபருட் செங்கோல்
சத்திய ஞானம் விளக்கியே நடத்துந் தனிமுதற் றந்தையே தலைவா
பித்திய லுடையே னெனினுநின் றனக்கே பிள்ளைநான் வாடுத லழகோ. 80

சாற்றுபே ரண்டப் பகுதிக ளனைத்துந் தனித்தனி யவற்றுளே நிரம்பித்
தோற்றுமா பிண்டப் பகுதிக ளனைத்துஞ் ஜோதியால் விளக்கியா னந்த
ஆற்றிலே நனைத்து வளர்த்திடும் பொதுவி லரும்பெருந் தந்தையே யின்பப்
பேற்றிலே விழைந்தேன் றலைவநின் றனக்கே பிள்ளைநான் பேதுற லழகோ. 81

சிறந்ததத் துவங்க ளனைத்துமா யலவாய்த் திகழொளி யாயொளி யெல்லாம்
பிறங்கிய வெளியாய் வெளியெலாம் விளங்கும் பெருவெளி யாயதற் கப்பால்
நிறைந்தசிற் சபையி லருளர சியற்று நீதிநற் றந்தையே யினிமேற்
பிறந்திடே னிறவே னின்னைவிட் டகலேன் பிள்ளைநான் வாடுத லழகோ. 82

எண்ணிய வெல்லாம் வல்லபே ரருளா மிணையிலாத் தனிநெடுஞ் செங்கோல்
நண்ணிய திருச்சிற் றம்பலத் தமர்ந்தே நடத்துமோர் ஞானநா யகனே
தண்ணரு ளளிக்குந் தந்தையே யுலகிற் றனையனுன் பயத்தினுற் றுயரால்
அண்ணிய மலங்க ளாந்தினு லின்னு மையகோ வாடுத லழகோ. 83

கலையெலாம் புகலுங் கதியெலாங் கதியிற் காண்கின்ற காட்சிக ளெல்லாம்
நிலையெலா நிலையி னேர்ந்தனு பவஞ்செய் நிறைவெலாம் விளங்கிடப் பொதுவின்
மலைவிலாச் சோதி யருட்பெருஞ் செங்கோல் வாய்மையா னடத்துமோர் தனிமைத்
தலைவனே யெனது தந்தையே நினது தனையனுன் தளருத லழகோ. 84

ஆதியே நடுவே யந்தமே யெனுமிவ் வனைவெலா மின்றியோன் முன
ஜோதியே வடிவாய்த் திருச்சிற்றம் பலத்தே தூயபே ரருட்டனிச் செங்கோல்
நீதியே நடத்துந் தனிப்பெருந் தலைமை நிருத்தனே யொருத்தனே நின்னை
ஓதியே வழுத்துந் தனையனு னிங்கே யுறுகணுற் றளருத லழகோ. 85

அத்தனே திருச்சிற் றம்பலத் தரசே யரும்பெருஞ் ஜோதியே யடியார்
பித்தனே யெனினும் பேயனே யெனினும் பெரிதருள் புரிதனித் தலைமைச்
சித்தனே யெல்லாஞ் செய்திட வல்ல செல்வனே சிறப்பனே சிவனே
சுத்தனே நினது தனையனுன் மயங்கித் துயர்ந்துளம் வாடுத லழகோ. 86

உற்றதோர் திருச்சிற் றம்பலத் தோங்கு மொருதனித் தந்தையே நின்பாற்
குற்றநான் புரிந்திங் கறிந்திலேன் குற்றங் குயிற்றினே னென்னிலக் குற்றம்
இற்றென வறிவித் தறிவுதந் தென்னை யின்புறப் பயிற்றுதல் வேண்டும்
மற்றய லார்போன் றிருத்தலோ தந்தை வழக்கிது நீயறி யாயோ. 87

குற்றமோ குணமோ நானறி யேனென் குறிப்பெலாந் திருச்சிற்றம் பலத்தே
உற்றதா தலினு லுலகியல் வழக்கி லுற்றிடின் மற்றென தலவே
I தெற்றென வருட்கே குற்றமென் பதுதான் செய்திடிற் றிருத்தலே யன்றி
மற்றய லார்போன் றிருப்பதோ தந்தை மரபிது நீயறி யாயோ. 88

மாயையால் வினையா லரிபிர மாதி வானவர் மனமதி மயங்கித்
தீயகா ரியங்கள் செய்திடி லஃதோ சிறியனேன் செய்வது புதிதோ
ஆயினுந் தீய விவையென வறியே னறிவித்துத் திருத்துத லன்றி
நீயிவண் பிறர்போன் றிருப்பது தந்தை நெறிக்கழ கல்லவே யெந்தாய். 89

கருணையுஞ் சிவமே பொருளெனக் காணுங் காட்சியும் பெருகமற் றெல்லாம்
மருணெறி யெனநீ யெனக்கறி வித்த வண்ணமே பெற்றிருக் கின்றேன்
இருணெறி மாயை வினைகளாற் கலக்க மெய்திய தென்செய்வே னெந்தாய்
தெருணிலை யின்றிக் கலங்கினே னெனினுஞ் சிறுநெறி பிடித்ததொன் றிலையே. 90

கலங்கிய போதுந் திருச்சிற்றம் பலத்திற் கருணைபங் கடவுளே நின்பால்
இலங்கிய நேயம் விலங்கிய திலையே யெந்தைதன் னுளமறி யாதோ
மலங்கிய மனத்தேன் புகல்வதென் வினையால் மாயையால் வரும்பிழை யெல்லாம்
அலங்குமென் பிழைக ளல்லவென் றுன்னே டடிக்கடி யறைந்தன னுண்டே. 91

இரும்பினுங் கொடிய மனஞ்செயும் பிழையு மென்பிழை யன்றெனப் பலகால்
விரும்பினின் னடிக்கே விண்ணப்பித் திருந்தேன் வேறுநான் செய்ததிங் கென்னே
அரும்பொனே திருச்சிற் றம்பலத் தமுதே யப்பனே யென்றிருக் கின்றேன்
தருமம்பினுஞ் சிறியேன் புகல்வதென் னினது தூயதாந் திருவுள மறியும். 92

வருமுயி ரிரக்கம் பற்றியே யுலக வழக்கிலென் மனஞ்சென்ற தோறும்
வெருவினின் னடிக்கே விண்ணப்பித் திருந்தேன் விண்ணப்பஞ் செய்கின்றே னின்றும்
உருவுவென் னுயிர்தா னுயிரிரக் கந்தா னென்றதே யிரண்டிலை இரக்கம்
ஒருவிலென் னுயிரு மொருவும் என்னுள்ளத் தொருவனே நின்பதத் தாணை. 93

தலைவர்க ளெல்லாந் தனித்தனி வணங்குந் தலைவனே யின்றுமென் னுளமும்
மலைவிலென் னறிவு நானுமிவ் வுலக வழக்கிலே யுயிரிரக் கத்தால்
இலகுகின் றனநா னென்செய்வே னிரக்க மென்னுயி ரென்னவே றிலையே
நிலைபெறு மிரக்கம் நீங்கிலென் னுயிரும் நீங்குநின் றிருவுள மறியும். 94

ஆதலா லிரக்கம் பற்றிநா னுலகி லாடலே யன்றியோர் விடயக்
காதலா லாடல் கருதிலேன் விடயக் கருத்தெனக் கில்லையென் றிடலிப்
போதலாற் சிறிய போதுமுண் டதுதின் புந்தியி லறிந்தது தானே
ஈதலால் வேறோர் தீதென திடத்தே யில்லைநா னினைப்பதென் னினக்கே. 95

என்னையு மிரக்கந் தன்னையு மொன்று யிருக்கவே யிசைவித்திவ் வுலகில்
மன்னிவாழ் வுறவே வருவித்த கருணை வள்ளல்நீ நினக்கிது விடயம்

---

1 தெற்றென என்பது—விரைந்து.

பன்னலென் னடியே னுயினும் பிள்ளைப் பாங்கிலு ளுரைக்கின்றே னெந்தாய்
இன்னவா றெனநீ சொன்னவா றியற்று திருந்ததோ நிறையுமிங் கிலையே. 96

உறுவினை தவிர்க்கு மொருவனே யுலகி லோடியு மாடியு முழன்றும்
சிறுவர்தாந் தந்தை வெறுப்பவார்க் கின்றூர் சிறியனே னெருதின மேனும்
மறுகினின் றுடி யார்த்ததிங் குண்டோ நின்பணி மதிப்பலா லெனக்குச்
சிறுவிளை யாட்டிற் சிந்தையே யிலெநின் திருவுள மறியுமே யெந்தாய். 97

தந்தையர் வெறுப்ப மக்கடாம் பயனில் சழக்குரை யாடிவெங் காமச்
சிந்தைய ராகித் திரிகின்று ரந்தோ சிறியனே னெருதின மேனும்
எந்தைநின் னுள்ளம் வெறுப்பநின் பணிவிட் டிவ்வுல கியலிலவ் வாறு
தெந்தன வென்றே திரிந்ததுண் டேயோ திருவுள மறியா னறியேன். 98

அம்புவி தனிலே தந்தையர் வெறுப்ப வடிக்கடி யயலவ ருடனே
வம்புறு சண்டை விளைக்கின்றூர் சிறுவர் வள்ளலே நின்பணி விடித்தே
இம்பரிவ் வுலகி லொருதின மேனு மேழையேன் பிறரொடு வெகுண்டே
வெம்புறு சண்டை விளைத்ததுண் டேயோ மெய்யநின் னுணர்வா னறியேன். 99

வள்ளலிவ் வுலகிற் றந்தையர் வெறுப்ப மக்கடா மொழுக்கத்தை மறந்தே
கள்ளருந் துதல்சூ தாடுதல் காமக் கடைதொறு மயங்குதல் பொய்யே
விள்ளுதல் புரிவா ரையகோ வடியேன் மெய்யநின் றிருப்பணி விடித்தே
எள்ளியவ் வாறு புரிந்ததோன் றுண்டோ யெந்தைநின் னுணர்வா னறியேன். 100

மலிவி லாத்திருச் சிற்றம்பலத் தமர்ந்த வள்ளலே யுலகினிற் பெற்றூர்
குலைநடுக் குறவே கடுகடுத் தோடிக் கொடியதீ நெறியிலே மக்கள்
புலைகொலை களவே புரிகின்று ரடியேன் புண்ணிய நின்பணி விடித்தே
உலையவவ் வாறு புரிந்ததோன் றுண்டோ யுன்பதத் தாணைநா னறியேன். 101

தனிப்பெருந் ஜோதித் தந்தையே யுலகிற் றந்தையர் பற்பல காலும்
இனிப்புறு மொழியா லறிவுற மக்கட் கேற்கவே பயிற்றிடுந் தோறும்
பனிப்புற வோடிப் பதுங்கிடு கின்றூர் பண்பனே யென்னைநீ பயிற்றத்
தினைத்தனை யேனும் பதுங்கிய துண்டோ திருவுள மறியநா னறியேன். 102

தன்னைநே ரில்லாத் தந்தையே யுலகிற் றந்தையர் தங்களை யழைத்தே
சொன்னசொன் மறுத்தே மக்கடம் மனம்போனு சூழலே போகின்று ரடியேன்
என்னைநீ யுணர்த்தல் யாதது மலையி னிலக்கெனக் கொள்கின்றே னல்லாற்
பின்னையோ நிறையு மறுத்ததோன் றுண்டோ பெரியநின் னுணர்வா னறியேன். 103

போற்றுவார் போற்றும் புனிதனே மக்கள் பொருந்துதன் தந்தையர் தமையே
வேற்றுவாழ் வடைய வீடுதா பணந்தா மெல்லிய சரிகைவத் திரந்தா
ஏற்றவா பரணந் தாவெனக் கேட்டே யிரங்குவா ரிவைகுறித் தடியேன்
தேற்றுவாய் நின்னைக் கேட்டதோன் றுண்டோ திருவுள மறியநா னறியேன். 104

குணம்புரி யெனது தந்தையே யுலகிற் கூடிய மக்கள்தந் தையரைப்
பணம்புரி காணி பூமிகள் புரிநற் பதிபுரியேற்ற பெண் பார்த்தே
மணம்புரி யெனவே வருத்துகின் றுரென் மனத்திலே யொருசிறி தேனும்
எணம்புரிந் தானான் வருத்திய துண்டோ வெந்தைதின் ஞானா னறியேன்.

இகத்திலே யெனவந் தாண்டமெய்ப் பொருளே யென்னுயிர்த் தந்தையே யிந்தச்
சகத்திலே மக்கள் தந்தைய ரிடத்தே தாழ்ந்தவ ராய்ப்புறங் காட்டி
அகத்திலே வஞ்சம் வைத்திருந் கின்று ரையகோ வஞ்சம்நின் னளவில்
முகத்திலே யென்ற னகத்திலே யுண்டோ முதல்வனின் ஞானா னறியேன்.

தன்மைகாண் பரிய தலைவனே யெனது தந்தையே சகத்திலே மக்கள்
வன்மைவார்த் தைகளாற் றந்தையர் தம்மை வைகின்றார் வள்ளலே மருந்தே
என்மனக் கனிவே யென்னிரு கண்ணே யென்னுயிர்க் கிசைந்தமெய்த் துணையே
நின்மனம் வெறுப்பப் பேசிய துண்டோ நின்பதத் தாணைநா னறியேன். 107

ஒப்பிலா மணியென் னப்பனே யுலகி லுற்றிடு மக்கள்தந் தையரை
வைப்பில்வே றொருவர் வைதிடக் கேட்டு மனம்பொறுத் திருக்கின்ற டியேன்
தப்பிலா நினைவே றுரைத்திடக் கேட்டாற் றரிப்பனே தரித்திடே னன்றி
வெப்பிலென் னுயிர்தான் தரிக்குமோ யாதாய் விளையுமோ வறிந்திலே னெந்தாய்.

இத்தகை யுலகி லிங்ஙனஞ் சிறியே னெந்தைதின் றிருப்பணி விடித்தே
சித்தம்வே றுகித் திரிந்தமெ தியிலைநான் தெரிந்தநாண் முதலிது வரையும்
அத்தனே யரசே பையனே யழுதே யப்பனே யம்பலத் தாடுஞ்
சித்தனே சிவனே யென்றென துளத்தே சிந்தித்தே யிருக்கின்றே னின்றும். 109

பொய்வகை மனத்தே னென்னினு மெந்தாய் பொய்புல காசைசற் றறியேன்
கைவகை தவிரத் திருச்சிற் றம்பலத்தே நண்ணிய மெய்ப்பொரு ணமது
கைவகைப் படலெக் கணத்திலோ வெனநான் கருதினேன் கருத்தினை முடிக்கச்
செய்வகை யறியே னென்செய்வே னோபோ தெய்வமே யென்றிருக் கின்றேன். 110

அன்னையே யென்ற னப்பனே திருச்சிற் றம்பலத் தமுதனே யெனநான்
உன்னையே கருதி யுன்பணி புரிந்திங் குலகிலே கருணையென் பதுதான்
என்னையே நிலையா யிருத்தவுள் வருந்தி யிருக்கின்றே னென்னுள மெலிவும்
மன்னுமென் னுடம்பின் மெலிவுநா னிருக்கும் வண்ணமுந் திருவுள மறியும். 111

பொய்படாப் பயனே பொற்சபை நடஞ்செய் புண்ணியா கண்ணினுண் மணியே
கைபடாக் கனிலே கறைபடா மதியே கணிப்பருங் கருணையங் கடலே
தெய்வமே யெனநான் நின்னையே கருதித் திருப்பணி புரிந்திருக் கின்றேன்
மைபடா வுள்ள மெலிவும்நா னிருக்கும் வண்ணமுந் திருவுள மறியும். 112

தன்னிக ரறியாத் தலைவனே தாயே தந்தையே தாங்குநற் றுணையே
என்னிரு கண்ணே யென்னுயிர்க் குயிரே யென்னுடை யெய்ப்பினில் வைப்பே
உன்னுதற் கினிய வொருவனே யெனநா னுன்னையே நினைத்திருக் கின்றேன்
மன்னுமென் னுள்ள மெலிவுநா னிருக்கும் வண்ணமுந் திருவுள மறியும். 113

திருவளர் திருவம் பலத்திலே யங்காள் செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்
உருவளர் திருமந் திரத்திரு முறையா லுணர்த்திய மெய்ம்மொழிப் பொருளுங்
கருவள ரடியே னுளத்திலே நின்று காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்
மருவியென் னுளத்தே நம்பிநா னிருக்கும் வண்ணமுந் திருவுள மறியும். 114

உவந்தென துளத்தே புணர்த்திய வெல்லா முறுமலை யிலக்கென நம்பி
நிவந்தசேதாள் பணைப்ப மிகவுளங் களிப்ப நின்றதும் நிலைத்தமெய்ப் பொருளிப்
பவந்தனிற் பெறுதல் சத்திய மெனவே பற்பல குறிகளா லறிந்தே
சிவந்தபொன் மலைபோ லிருந்தது மிங்காள் திகைப்பதுந் திருவுள மறியும். 115

ஏய்ந்தபொன் மலைமேற் றப்பத்தி லேறி யேகவு மேகவு நுணுகித்
தேய்ந்தபோ தடியேன் பயந்தவெம் பயத்தைத் தீர்த்துமே லேற்றிய திறத்தை
வாய்ந்துளே கருதி மலையெனப் பணைத்தே மனங்களிப் புற்றுமெய் யின்பந்
தோய்ந்துநின் முடிச் சுழன்றது மிங்காள் சுழல்வதுந் திருவுள மறியும். 116

வாட்டமோ டிருந்த சிறியனேன் றனது வாட்டமு மாயைபா திகளின்
ஈட்டமுந் தவிர்க்கத் திருவுளத் திரங்கி யென்னையோர் பொருளென மதித்தே
தீட்டரும் புகழ்சேர் திருவடித் துணைகள் செலுத்திய திருச்சிலம் பொலிதான்
கேட்டபோ திருந்த கிளர்ச்சியு மிங்காள் கிலேசமுந் திருவுள மறியும். 117

கற்றவர் கல்லார் பிறர்பிறர் குரலென் காதிலே கிடைத்தபோ தெல்லாம்
மற்றவர் தமக்கென் னுற்றசேதா வவர்தம் மாபின முறவினர் தமக்குள்
உற்றதிங் கெதுவோ வென்றுள நடுங்கி யோடிப்பார்த் தோடிப்பார்த் திரவும்
எற்றரும் பகலு மேங்கிநா னடைந்த வேக்கமுந் திருவுள மறியும். 118

கருணையம் பதிநங் கண்ணுண்மா மணிநங் கருத்திலே கலந்தசதள் ளமுதம்
மருணெறி தவிர்க்கு மருந்தெலாம் வல்ல வள்ளல்சிற் றம்பல மன்னும்
பொருணிறை யின்பம் நம்மையாண் டளித்த புண்ணியம் வருகின்ற தருணந்
தருணமிப் போதென் றெண்ணிநா னிருக்குந் தன்மையுந் திருவுள மறியும். 119

இமையவர் பிரமர் நாரணர் முதலோ ரெய்துதற் கரியபே ரின்பந்
தமையறிந் தவருட் சார்ந்தபே ரொளிநந் தயாநிதித் தனிப்பெருந் தந்தை
அமையுநம் முயிர்க்குத் துணைதிருப் பொதுவி லாயர்தாம் வருகின்ற சமயம்
சமயமிப் போதென் றெண்ணிநா னிருக்குந் தன்மையுந் திருவுள மறியும். 120

அடியனே னுள்ளந் திருச்சிற்றம் பலத்தென் னழுதநின் மேல்வைத்த காதல்
நெடியவேழ் கடலிற் பெரிதெனக் கிங்காள் நிகழ்கின்ற வாவலும் விரைவும்
படியவென் றன்னுற் சொலமுடி யாது பார்ப்பறப் பார்த்திருக் கின்றேன்
செடியனே னிருக்கும் வண்ணங்க ளெல்லாந் திருவுளங் கண்டதே யென்தாய். 121

பன்னிரண் டாண்டு தொடங்கிநா னிற்றைப் பகல்வரை யடைந்தவை யெல்லாம்
உன்னிநின் றுரைத்தா லுலப்புரு தகுமொ ருசில வுரைத்தன னெனினும்
என்னுளத் தகத்தும் புறத்துமுட் புறத்து மியல்புறப் புறத்தினும் விளங்கி
மன்னிய ஜோதி யாவுநீ யறிந்த வண்ணமே வகுப்பதென் நினக்கே. 122

இதுவரை யடியே னடைந்தவெம் பயமு மிடர்களுந் துன்பமு மெல்லாம்
பொதுவளர் பொருளே பிற்பொருட் டல்லாற் புலையனேன் பொருட்டல விதுநின்
மதுவளர் மலர்ப்பொற் பதத்துணை யறிய வகுத்தன னடியனேன் றனக்கே
எதிலுமோ ராசை யிலையிலை பயமு மிடருமற் றிலையிலை யெந்தாய். 123

என்னள விலையே யென்னினும் பிறர்பா லெய்திய கருணையால் எந்தாய்
உன்னுறு பயமு மிடருமென் றன்னை யுயிரொடுந் தின்கின்ற தந்தோ
இன்னுமென் றனக்கிவ் விடரொடு பயமு மிருந்திடி லென்னுயிர் தரியா
தன்னையும் குருவு மப்பனு மான வமுதனே யளித்தரு ளெனையே. 124

பயத்தோடு துயரு மறைப்புமா மாயைப் பற்றொடு வினையுமா ணவமும்
கயத்தவன் மயக்கு மருட்சியு மெனது கருத்திலை யினியொரு கணமும்
வியத்திடத் தரியே னிவையெலாந் தவிர்த்துன் மெய்யரு ளளித்திடல் வேண்டும்
உயத்தரு வாயே விருக்கின்றே னிலையே லுயிர்விடு கின்றன னின்றே. 125

ஐயநான் பயத்தாற் றுயரிரு லடைந்த வடைவையுண் ணினைத்திடுந் தோறும்
வெய்யதீ மூட்டி விடுத்தலொப் பதுநான் மிகவிவற் றுலைத்திட்டேன்
வையமே வினிநா னிவைகளா லிளைக்க வசமிலை னிவையெலாந் தவிர்த்தே
உய்யவைப் பாயே விருக்கின்றே னிலையே லுயிர்விடு கின்றன னின்றே. 126

பயந்துய ரிடருண் மருட்சியா தியவிப் பகையெலாம் பற்றறத் தவிர்த்தே
நயந்தநின் னருளா மமுதளித் தடிமை யுடியீண் டெண்ணிய வெல்லாம்
வியந்திடத் தருதல் வேண்டுமீ தெனது விண்ணப்ப நின்றிரு வுளத்தே
வயந்தரக் கருதித் தயவுசெய் தருள்க வள்ளலே சிற்சபை வாழ்வே. 127

என்னுயிர்க் காத்தல் கடனுனக் கடிமை யினைசத்தவின் ணப்பமேற் றருளி
உன்னுமென் னுளத் துறும்பயமிடர்க ளூற்றகண்மற் றிவையெலா மொழித்தே
நின்னரு ளமுத மளித்தென தெண்ண நிரப்பியாட் கொள்ளுதல் வேண்டும்
மன்னுபொற் சபையில் வயங்கிய மணியே வள்ளலே சிற்சபை வாழ்வே. 128

பரிக்கிலேன் பயமு மிடரும்வெந் துயரும் பற்றறத் தவிர்த்தரு ளினிநான்
தரிக்கிலேன் சிறிதுந் தரிக்கிலே னுள்ளந் தரிக்கிலேன் தரிக்கிலே னந்தோ
புரிக்கிலே சத்தை யகற்றியாட் கொள்ளும் பொற்சபை யண்ணலே கருணை
வரிக்கணே ரின்ப வல்லியை மணந்த வள்ளலே சிற்சபை வாழ்வே. 129

அருட்பெருஞ்ஜோதி

22. சுத்தசன்மார்க்க வேண்டுகோள்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாநா னன்புசெயல் வேண்டும்
எப்பாரு மெப்பதமு மெங்கணுநான் சென்றே
எந்தைதனி தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கந்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினு நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையுமவேண் டுவனே. 1

ஐயாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அடிமுடிகண் டெங்நாளு மனுபவித்தல் வேண்டும்
பொய்யாத வாய்மைகளே புகன்றிடுதல் வேண்டும்
புகன்றபடி புகன்றபடி புரிந்திடுதல் வேண்டும்
I எய்யாத அருட்ஜோதி யென்கைபுறல் வேண்டும்
இறந்தவுயிர் தமைமீட்டு மெழுப்பியிடல் வேண்டும்
நையாத வண்ணமுயிர் காத்திடுதல் வேண்டும்
நாயகனின் றனைப்பிரியா துறுதலுமவேண் டுவனே. 2

அண்ணைநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அழியாத தனிவடிவம் யானடைதல் வேண்டும்
கண்ணுற நினையெங்குங் கண்டுவத்தல் வேண்டும்
காணுத காட்சியெலாங் கண்டுகொளல் வேண்டும்
பண்ணுற நின்றனையே பாடியுறல் வேண்டும்
பரமானந் தப்பெருங்கூத் தாடியிடல் வேண்டும்
உண்ணுடி யுயிர்களுறுங் துயர்தவிர்த்தல் வேண்டும்
உன்னைப்பிரியா துறுகின்ற வுறவதுவேண் டுவனே. 3

அத்தாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்ஜோ தியைப்பெற்றே யகங்களித்தல் வேண்டும்
செத்தாரை மீட்டுமிங்கே யெழுப்பியிடல் வேண்டும்
திருச்சபைக்கே யடிமைகளாச் செய்வித்தல் வேண்டும்
ஒத்தாரு முயர்ந்தாருந் தாழ்ந்தாரு மெவரும்
ஒருமையுள ராகியுல கியல்நடத்தல் வேண்டும்
எத்தாலு மழியாத வடிவதிலே நானும்
எந்தாயு மொன்றுக வினிதுறல்வேண் டுவனே. 4

1 எய்யாத என்பது—அறியாத

அரைசேர்ந்தான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்ஜோ தியைப்பெற்றே அகமகிழ்தல் வேண்டும்
வரைசேரெவ் வுலகமுமோ ரொழுக்கமுறல் வேண்டும்
மடிந்தாரை மீளவுநான் வருவித்தல் வேண்டும்
புரைசேருங் கொலைகெறியும் புலைகெறியுஞ் சிறிதும்
பொருந்தாம லெவ்வுயிரும் புரிந்துவத்தல் வேண்டும்
உரைசேர்மெய்த் திருவடிவி லெந்தாயு நானும்
ஒன்றுகி யெஞ்ஞான்று மோங்குதல்வேண் டுவனே. 5

அடிகேள்நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அண்டமெலாம் பிண்டமெலாம் கண்டுகொளல் வேண்டும்
துடிசேரெவ் வுலகமுமெத் தேவருமெவ் வுயிரும்
சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றிடுதல் வேண்டும்
படிவானும் படைத்தன்முத லைந்தாழிலும் ஞானம்
படைத்தன்முத லைந்தாழிலும் நான்புரிதல் வேண்டும்
ஒடியாத திருவடிவி லெந்தாயு நானும்
ஒன்றுகி யெஞ்ஞான்று மோங்குதல்வேண் டுவனே. 6

அம்மாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆணவமா தியமுழுது மறுத்துநிற்றல் வேண்டும்
இம்மாலத் தத்துவங்க ளெல்லாமென் வசத்தே
இயங்கியொரு தீமையுமில் லாதிருத்தல் வேண்டும்
எம்மானென் வேண்டுதல்வேண் டாமையறல் வேண்டும்
எகசிவ போகமனு போகமுறல் வேண்டும்
தம்மானத் திருவடிவி லெந்தாயு நானும்
சார்ந்துகலந் தோங்குகின்ற தன்மையும்வேண் டுவனே. 7

அச்சாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆறந்த நிலைகளெல்லா மறிந்தடைதல் வேண்டும்
எச்சார்பு மாகியுயிர்க் கிதம்புரிதல் வேண்டும்
எனையடுத்தார் தமக்கெல்லா மின்புதரல் வேண்டும்
இச்சாதி சமயவிகற் பங்களெலாந் தவிர்ந்தே
எவ்வுலகுஞ் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்
உச்சாதி யந்தமிலாத் திருவடிவில் யானும்
உடையாயுங் கலந்தோங்கு மொருமையும்வேண் டுவனே. 8

அறிவாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஐந்தாழில்நான் புரிந்துலகி லருள்விளக்கல் வேண்டும்
செறியாத காணமெலாஞ் செறித்தடக்கல் வேண்டும்
சித்தாந்த வேதாந்தப் பொதுசிறத்தல் வேண்டும்
எறியாதென் னெண்ணமெலா மினிதருளல் வேண்டும்
எல்லாஞ்செய் வல்லசித்தே யெனக்களித்தல் வேண்டும்
பிறியாதென் னுடுகலந்து நீயிருத்தல் வேண்டும்
பெருமானின் றனைப்பாடி யாடுதல்வேண் டுவனே. 9

அருளாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அணுத்துணையுஞ் சினங்காம மடையாமை வேண்டும்
மருளாய வுலகமெலா மருணீங்கி ஞான
மன்றிடத்தே வள்ளலுனை வாழ்த்தியிடல் வேண்டும்
இருளாமை யுறல்வேண்டு மெனையடுத்தார் சுகம்வாய்ந்
திடல்வேண்டு மெவ்வுயிரு மின்படைதல் வேண்டும்
பொருளாமோர் திருவடிவி லுடையாபும் நானும்
புணர்ந்துகலந் தொன்றுகிப் பொருந்துதல்வேண் டுவனே. 10

அமலாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆடிநிற்குஞ் சேவடியைப் பாடிநிற்க வேண்டும்
எமதுதித் தடையென்று மெய்தாமை வேண்டும்
எல்லாஞ்செய் வல்லதிற னெனக்களித்தல் வேண்டும்
I கமையாதி யடைந்துயிர்க ளெல்லாஞ்சன் மார்க்கம்
காதலித்தே திருப்பொதுவைக் களித்தேதத்தல் வேண்டும்
விமலாதி யுடையவொரு திருவடிவில் யானும்
விமலாநீ யுங்கலந்தே விளங்குதல்வேண் டுவனே. 11

அருட்பெருஞ்ஜோதி

---

23. ஆன்மதரிசனம்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

திருவெலாந் தருமோர் தெய்வமா மொருவன் திருச்சிற்றம் பலந்திகழ் கின்றுன்
உருவெலா முணர்ச்சி யுடல்பொரு ளாவி யுளவெலா மாங்கவன் றனக்கே
தெருவெலா மறியக் கொடுத்தனன் வேறு செயலிலே னெனநினைத் திருந்தேன்
அருவெலா முடையாய் நீயறிந் ததுவே யடிக்கடி யுரைப்பதென் னினக்கே. 1

நினைத்தபோ தெல்லா நின்னையே நினைத்தே னினைப்பற நின்றபோ தெல்லாம்
எனைத்தனி யாக்கி நின்கணே நின்றே னென்செய லென்னவோர் செயலுங்
தினைத்தனை யெனினும் புரிந்திலே னெல்லாஞ் சிவன்செய லாமெனப் புரிந்தேன்
அனைத்துமென் னரசே நீயறிந் ததுவே யடிக்கடி யுரைப்பதென் னினக்கே. 2

---

1 கமை என்பது—பொறுமை.

களித்தபோ தெல்லா நின்னிய லுணர்ந்தே களித்தனன் கண்கணீர் ததும்பித்
துளித்த போதெல்லா நின்னருள் நினைத்தே துளித்தனன் சூழ்ந்தவ ருளத்தைத்
தெளித்தபோ தெல்லா நின்றிறம் புகன்றே தெளித்தனன் செய்கைவே றறியேன்
ஒளித்திரு வுளமே யறிந்திவ் வினைத்து முரைப்பதென் னடிக்கடி யுனக்கே. 3

உண்டதும் பொருந்தி யுவந்தது முறங்கி யுணர்ந்தது முலகிய லுணர்வாற்
கண்டதுங் கருதிக் களித்ததுங் கலிகள் கற்றதுங் கரைந்ததுங் காதல்
கொண்டது நின்னே டன்றிநான் றனித்தென் குறிப்பினிற் குறித்ததொன் றிலையே
ஒண்டகு முனது திருவுள மறிந்த துரைப்பதென் னடிக்கடி யுனக்கே. 4

களவிலே களித்த காலத்து நீயே களித்தனை நான்களித் தறியேன்
உளவிலே யுவந்த போதுநீ தானே யுவந்தனை நானுவந் தறியேன்
கொளவிலே சமுமோர் குறிப்பிலே னினைத்துங் குறித்தனை கொண்டனை நீயே
அளவிலே யெல்லா மறிந்தனை யாசை யடிக்கடி யுரைப்பதென் னினக்கே. 5

திலதவா னுதலார் தமைக்கன விடத்துஞ் சிறிதுநான் விழைந்திலே னிந்த
உலகவாழ் வதிலோ ரணுத்துணை யெனினு முவப்பிலே னுலகுறு மாயைக்
கலகவா தனைதீர் காலமென் றுறுமோ கடவுளே யெனத்துயர்ந் திருந்தேன்
அலகிலாத் திறலோய் நீயறிந் ததுநா னடிக்கடி யுரைப்பதென் னினக்கே. 6

சாதியு மதமுஞ் சமயமுந் தவிர்ந்தேன் சாத்திரக் குப்பையுந் தணந்தேன்
நீதியு நிலையுஞ் சத்தியப் பொருளு நித்திய வாழ்க்கையுஞ் சுகமும்
ஆதியு நடுவு மந்தமு மெல்லாம் அருட்பெருஞ் ஜோதியென் றறிந்தேன்
ஓதிய வினைத்து நீயறிந் ததுநா னுரைப்பதென் னடிக்கடி யுனக்கே. 7

பித்தெலா முடைய வுலகர்தங் கலகப் பிதற்றெலா மென்றெழிந் திடுமோ
சத்தெலா மொன்றென் றுணர்ந்தசன் மார்க்க சங்கமென் றோங்குமோ நலமைச்
சித்தெலாம் வல்ல சித்தனென் றுறுமோ தெரிந்திலே னெனத்துயர்ந் திருந்தேன்
ஒத்தெலா முனது திருவுள மறிந்த துரைப்பதென் னடிக்கடி யுனக்கே. 8

ஒன்றெனக் காணு முணர்ச்சியென் றுறுமோ வூழிதோ றூழிசென் றிடினும்
என்றுமிங் கிறவா வியற்கையென் றுறுமோ வியலருட் சித்திக ளெனைவந்
தொன்றலென் றுறுமோ அனைத்துமென் வசத்தே யுறுதலென் றோவெனத் துயர்ந்தேன்
உன்திரு வுளமே யறிந்திவ் வினைத்து முரைப்பதென் னடிக்கடி யுனக்கே. 9

கள்ளவா தனையைக் களைந்தருள் நெறியைக் காதலித் தொருமையிற் கலந்தே
உள்ளவா றிந்த வுலகெலாங் களிப்புற் றோங்குத லென்றுவந் துறுமோ
வள்ளலே யதுகண் டடியனே னுள்ள மகிழ்ந்தலென் றோவெனத் துயர்ந்தேன்
ஒள்ளியோய் நினது திருவுள மறிந்த துரைப்பதென் னடிக்கடி யுனக்கே. 10

அருட்பெருஞ்ஜோதி

24. சித்தி விளாவு

சிவதரிசனம்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

திருவுடையாய் சிற்சபைவாழ் சிவபதியே யெல்லாஞ்
செய்யவல்ல தனித்தலைமைச் சித்தசிகா மணியே
உருவுடையென் னுயிர்க்குயிரா யொளிர்கின்ற வொளியே
உன்னுதொறு மென்னுளத்தே யூறுகின்ற வமுதே
அருவுடைய பெருவெளியா யதுவிளங்கு வெளியாய்
அப்பாலு மாய்நிறைந்த வருட்பெருஞ் ஜோதியனே
மருவுடையாள் சிவகாம வல்லிமண வாளா
வந்தருள்க அருட்ஜோதி தந்தருள்க விரைந்தே. 1

சொல்லவனே பொருளவனே துரியபதத் தவனே
தூயவனே நேயவனே ஜோதியுரு வவனே
நல்லவனே நன்னிதியே ஞானசபா பதியே
நாயகனே தாயகனே நண்பவனே யனைத்தும்
அல்லவனே யானவனே யம்மையப்பா வென்னை
ஆண்டவனே தாண்டவனே யருட்குருவே யெல்லாம்
வல்லவனே சிவகாம வல்லிமண வாள்வா
மன்னவனே யென்னவனே வந்தருள்க விரைந்தே. 2

துரியநிலை துணிந்தவருஞ் சொல்லருமெய்ப் பொருளே
சுத்தசிவா னந்தசபைச் சித்தசிகா மணியே
பெரியசிவ பதியேநின் பெருமையறிந் திடவே
பேராசைப் படுகின்றேன் பித்தர்களிற் பெரியேன்
கரியமணித் திறத்தினையுங் காணவல்லே னல்லேன்
கண்மணியே நின்திறத்தைக் காணுதல்வல் லேனே
அரியபெரும் பொருளாமுன் னருட்ஜோதி யெனக்கே
அளித்தனையே லறிந்துகொள்வே னளித்திடுக விரைந்தே. 3

மறப்பறியாப் பேரறிவில் வாய்த்தபெருஞ் சுகமே
மலைவறியா நிலைநிரம்ப வயங்கியசிற் பொருளே
இறப்பறியாத் திருநிலையி லென்னைவளர்த் தருளும்
என்னுடைய நற்றாயே யெந்தாயே நினது
சிறப்பறியா வுலகமெலாஞ் சிறப்பறிந்து கொளவே
சித்தசிகா மணியேநீ சித்தியெலாம் விளங்கப்
பிறப்பறியாப் பெருந்தவரும் விழைப்பவந்து தருவாய்
பெருங்கருணை யரசேநீ தருந்தருண மிதுவே. 4

முன்னுழைப்பா லுறுமெனவே மொழிகின்றார் மொழியின்
முடிவறியே னெல்லாஞ்செய் முன்னவனே நீயென்
தன்னுழைப்பார்த் தருள்வாயே லுண்டோனைத்து மொருநின்
தனதுசுதந் தரமேயிங் கெனதுசுதந் தரமோ
என்னுழைப்பா லென்பயனீ விரங்கியரு ளாயேல்
யாரெனன் னறிவெதுமே லென்னேமதிப் பவரார்
பொன்னுழைப்பாற் பெறலுமரி தருளிலையே லெல்லாம்
பொதுநடஞ்செய் புண்ணியநீ யெண்ணியவா றுமே. 5

விழித்துவிழித் திமைத்தாலுஞ் சுடருதய மிலையேல்
விழிகள்விழித் திளைப்பதலால் விளைவொன்று மிலையே
மொழித்திறஞ்செய் தடிக்கடிநான் முடுகிமுயன் றுலும்
முன்னவநின் பெருங்கருணை முன்னிடலின் றெனிலோ
செழித்துறுநற் பயனெதுவோ திருவுளந்தா னிரங்கில்
சிறுதுரும்போ லைந்தொழிலுஞ் செய்திடல் சத்தியமே
பழித்துரைப்பா ருரைக்கவிலாம் பசுபதிநின் செயலே
பரிந்தெனையும் பாடுவித்துப் பரிசுமகிழ்ந் தருளே. 6

மாநிருபா திபர்சூழ மணிமுடிதான் பொறுத்தே
மண்ணுள வாருள மனத்தினினைத் தேமே
தேமொருவா மொழிச்சியரைத் திளைக்கவிழைந் தேமே
தீஞ்சுவைகள் விரும்பினமே திமைகள்செய் தேமே
நாமொருபா வமுமறியேன் நன்னிதியே யெனது
நாயகனே பொதுவிளங்கு நடராஜ பதியே
எமொருமை பிலர்போனீ பிருக்கின்ற யழகோ
என்னொருமை யறியாயோ யாவுமறிந் தாயே. 7

பாவிமனக் குரங்காட்டம் பார்க்கமுடி யாதே
பதிவெறுத்தே னிதிவெறுத்தேன் பற்றனைத்துந் தவிர்த்தேன்
ஆவியுடல் பொருளாபுன்பாற் கொடுத்தேதனுன் னருட்பேர்
ஆசைமய மாகியுனை யடித்துமுபல் கின்றேன்
கூவியெனை யாட்கொளநீ நினையாயோ நினது
குறிப்பறியேன் பற்பலகால் கூவியிளைக் கின்றேன்
தேவிசிவ காமவல்லி மகிழுமண வாளா
தெருணிறைவா னமுதளிக்குந் தருணமிது தானே. 8

கட்டவிழ்ந்த கமலமெனக் கருத்தவிழ்ந்து நினையே
கருதுகின்றேன் வேறுன்றுங் கருதுகிலே னிதுதான்
சிட்டருளந் திகழ்கின்ற சிவபதியே நினது
திருவுளமே யறிந்ததுநான் செப்புதலென் புவிமேல்
விட்டகுறை தொட்டகுறை யிரண்டுநிறைந் தனனீ
விரைந்துவந்தே யருட்ஜோதி புரிந்தருளுந் தருணந்
தொட்டதுநான் துணிந்துரைத்தே னீயுணர்த்த வுணர்ந்தே
சொல்வதலா லென்னறிவாற் சொல்லவல்லே னன்றே. 9

காட்டையெலாங் கடந்துவிட்டே னுட்டையடைந் துனது
கடிநகர்ப்பொன் மதிற்காட்சி கண்குளிரக் கண்டேன்
கோட்டையெலாங் கொடிநாட்டிக் கோலமிடப் பார்த்தேன்
கோயிலின்மேல் வாயிலிலே குறைகளெல்லாந் தவிர்ந்தேன்
சேட்டையற்றுக் கருவியெலா மென்வசத்தின் றிடவே
சித்தியெலாம் பெற்றேனுன் திருச்சிற்றம் பலமேல்
பாட்டையெலாம் பாடுகின்றே னிதுதருணம் பதியே
பலந்தருமென் னுளந்தனிலே கலந்துநிறைந் தருளே. 10

சித்தியெலாம் வல்லசிவ சித்தனுளங் கலந்தான்
செத்தாரை யெழுப்புகின்ற திருநாள்க ளெடுத்த
இத்தினமே தொடங்கியழி யாதநிலை யடைதற்
கேற்றகுறி யேற்றவிடத் திசைந்தியல்கின் றனநாஞ்
சத்தியமே பெருவாழ்விற் பெருங்களிப்புற் றிடுதல்
சந்தேதகித் தலையாதே சாற்றியவென் மொழியை
நித்தியவான் மொழியென்ன நினைந்துமகிழ்ந் தமைவாய்
நெஞ்சேநீ யஞ்சேலுள் ளஞ்சேலஞ் சேலே. 11

அருட்பெருஞ்ஜோதி

---

25. வாதனைக்கழிவு

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

பொழுது விடிந்த தினிச்சிறிதும் பொறுத்து முடியே னெனநின்றே
அழுது விழிக ணீர்துளும்பக் கூவிக் கூவி யயர்கின்றேன்
பழுது தவிர்க்குந் திருச்செவிக்குட் பட்ட திலையோ பலகாலும்
உழுது களைத்த மாடனையேன் றுணைவே றறியே னுடையானே. 1

உடையாய் திருவம் பலத்தாட லொருவா வொருவா வுலவாத
கொடையா யெனநா னின்றனையே கூவிக் கூவி யயர்கின்றேன்
தடையா யினதீர்த் தருளாதே தாழ்க்கி லழகோ புலைநாயிற்
கடையாய்த் திரிந்தேன் கலங்குதல்சம் மதமோ கருணைக் கருத்தினுக்கே. 2

கருணைக் கருத்து மலர்ந்தெனது கலக்க மனைத்துந் தவிர்த்தேதயித்
தருணத் தருளா விடிலடியேன் றறியேன் றளர்வேன் றளர்வதுதான்
அருணச் சுடரே நின்னருளுக் கழகோ வழகென் றிருப்பாயேல்
தெருணற் பதஞ்சா ரடியரெலாஞ் சிரிப்பார் நானுந் திகைப்பேனே. 3

திகைப்பார் திகைக்க நான்சிறிதுந் திகையே னெனநின் றிருவடிக்கே
வகைப்பா மாலை சூட்டுகின்றேன் மற்றொன் றறியேன் சிறியேர்க்குத்
தகைப்பா ரிடையித் தருணத்தே தாரா யெனிலோ பிறரெல்லாம்
நகைப்பார் நகைக்க வுடம்பினைவைத் திருத்த லழகோ நாயகனே. 4

நாயிற் கடையேன் கலக்கமெலாந் தவிர்த்து நினது நல்லருளே
ஈயிற் கருணைப் பெருங்கடலே யென்னே கெடுவ தியற்கையிலே
தாயிற் பெரிய தயவுடையான் குற்றம் புரிந்தோன் றன்னையுமோர்
சேயிற் கருதி யணைத்தானென் றுரைப்பா ருனைத்தான் றெரிந்தோரே. 5

தெரிந்த பெரியர்க் கருள்புரிதல் சிறப்பென் றுரைத்த தெய்வமறை
திரிந்த சிறியர்க் கருள்புரிதல் சிறப்பிற் சிறப்பென் றுரைத்தனவே
புரிந்தம் மறையைப் புகன்றவனு நீயே யென்றுற் புண்ணியனே
விரிந்த மனத்துச் சிறியேனுக் கிரங்கி யருளல் வேண்டாவோ. 6

வேண்டா ருளரோ நின்னருளை மேலோரன்றிக் கீழோரும்
ஈண்டார் வதற்கு வேண்டினரா லின்று புதிதோ யான்வேண்டல்
தூண்டா விளக்கே திருப்பொதுவிற் ஜோதி மணியே ஆறுமுன்
ருண்டா வதிலே முன்னென்னை யாண்டாய் கருணை யளித்தருளே. 7

அருளே வடிவா மரசேநீ யருளா விடிலிவ் வடியேனுக்
கிருளே தொலைய வருளளிப்பா ரெவரே யெல்லாம் வல்லோய்நின்
பொருளேய் வடிவிற் கலியொன்றே புறத்து மகத்தும் புணர்ந்தங்குந்
தெருளே யுறவித் தலைவருக்குஞ் சிறந்த வருளாய்த் திகழ்வதுவே. 8

திகழ்ந்தார் கின்ற திருப்பொதுவிற் சிவமே நின்னைத் தெரிந்துகொண்டு
புகழ்ந்தார் தம்மைமப் பொறுத்திடவும் புன்மை யறிவாற் பொய்புரைதீ
இகழ்ந்தேன் றனைக்கீழ் வீழ்த்திடவு மென்னை புவிக்கிங் கிசைத்திலதீ
அகழ்ந்தார் தமையும் பொறுக்கவென வமைத்த யெல்லா மமைத்தாயே. 9

எல்லாம் வகுத்தா யெனக்கருளில் யாரே தடுப்பா ரெல்லாஞ்செய்
வல்லான் வகுத்த வண்ணமென மகிழ்வா ரென்கண் மணியேயென்
சொல்லா னவையு மணிந்துகொண்ட துரையே ஜோதித் திருப்பொதுவில்
நல்லாய் கருணை நடத்தரசே தருண மிதுநீ நயந்தருளே. 10

நயந்த கருணை நடத்தரசே ஞான வழுதே நல்லோர்கள்
விபந்த மணியே மெய்ப்பறிவாம் விளக்கே யென்னை விதித்தோனே
கபந்த மனத்தே னெனினுமிகக் கலங்கி நரகக் கடுங்கடையிற்
பயந்த பொழுதுந் தாழ்த்திருத்த லழகோ கடைக்கண் பார்த்தருளே. 11

பார்த்தா ரிரங்கச் சிறியேனென் பாவி மனத்தாற் பட்டதுயர்
தீர்த்தா யந்தா ளதுதொடங்கித் தெய்வந் துணையென் றிருக்கின்றேன்
சேர்த்தா யுலகி லிந்நாளிற் சிறியேன் றனைவெந் துயர்ப்பாவி
ஈர்த்தா லதுகண் டிருப்பதுவோ கருணைக் கழகிங் கெந்தாயே. 12

தாயே யெனைத்தான் தந்தவனே தலைவா ஞான சபாபதியே
பேயேன் செய்த பெருங்குற்றம் பொருத்தாட் கொண்ட பெரியோனே
நீயே யிந்நாள் முகமறியார் நிலையி லிருந்தால் நீடுலகில்
நாயே யனையே னெவர்துணையென் றெங்கே புகுவே னவிலாயே. 13

ஆயேன் வேதா கமங்களோதன் கறியேன் சிறியே னவலமிகும்
பேயே னெனினும் வலிந்தென்னைப் பெற்ற கருணைப் பெருமானே
நீயே யருள நினைத்தாயே லெல்லா நலமும் நிரம்புவனுன்
காயே யெனினுங் கனியாகு மன்றே நினது கருணைக்கே. 14

கருணை நிதியே யென்னிரண்டு கண்ணே கண்ணிற் கலந்தாளிருந்
தெருணை டொளியே வெளியேயமைப்ச் சிவமே சித்த சிகாமணியே
இருணி லகி லறிவின்றி யிருக்கத் தரியே னிதுதருணம்
தருணை வடியேற் கருட்ஜோதி தருவா யென்முன் வருவாயே. 15

வருவா யென்கண் மணிநீயென் மனத்திற் குறித்த வண்ணமெலாந்
தருவாய் தருண மிதுவேயமைத்த் தலைவா ஞான சபாபதியே
உருவாய் சிறிது தாழ்க்கிலுயி ரொருவு முரைத்தே னென்னுடைவாய்
இருவா யலகின் றிருவடிப்பாட் டிசைக்கு மொருவா யிசைத்தேதனே. 16

தேனே திருச்சிற் றம்பலத்திற் றெள்ளா ரமுதே சிவஞான
வானே ஞான சித்தசிகா மணியே யென்கண் மணியேயென்
ஊனே புகுந்தென் னுளங்கலந்த வுடையா யடியே னுவந்திடநீ
தானே மகிழ்ந்து தந்தாயித் தருணங் கைம்மா றறியேனே. 17

அறியேன் சிறியேன் செய்தபிழை யனைத்தும் பொறுத்தா யருட்ஜோதிக்
குறியே குணமே பெறவென்னைக் குறிக்கொண் டளித்தாய் சன்மார்க்க
நெறியே விளங்க வெனைக்கலந்து நிறைந்தாய் நின்ன யொருகணமும்
பிறியேன் பிறியே னிறவாமை பெற்றே னுற்றேன் பெருஞ்சுகமே. 18

சுகமே நிரம்பப் பெருங்கருணைத் தொட்டி லிடத்தே யெனையமர்த்தி
அகமே விளங்கத் திருவருளா ரமுத மளித்தே யணைத்தருளி
முகமே மலர்த்திச் சித்திநிலை முழுதுங் கொடுத்து மூவாமற்
சகமே யிருக்கப் புரிந்தாயே தாயே யென்னைத் தந்தாயே. 19

தந்தா யின்றுந் தருகின்றாய் தருவாய் மேலுந் தனித்தலைமை
யெந்தாய் நினது பெருங்கருணை யென்னென் றுரைப்பே னிவ்வுலகிற்
சிந்தா குலந்தீர்த் தருளெனநான் சிறிதே கூவு முன்னென்பால்
வந்தாய் கலந்து மகிழ்கின்றா யெனது பொழுது வான்பொழுதே. 20

அருட்பெருஞ்ஜோதி.

26. அனுபோக நிலையம்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

இனிப்பிரிந் திறையு மிருக்கலேன் பிரிவை யெண்ணினு மையகோ மயங்கிப்
பனிப்பிலென் னுடம்பு முயிருமுள் ளுணர்வும் பரதவிப் பதையறிந் திலையோ
தனிப்படு ஞான வெளியிலே யின்பத் தனிநடம் புரிதனித் தலைவா
கனிப்பயன் றருதற் கிதுதகு தருணங் கலந்தருள் கலந்தரு ளெனையே. 1

பிரிந்தினிச் சிறிதுந் தரிக்கலேன் பிரிவைப் பேசினு நெய்விடுத் தீப்போல்
எரிந்துளங் கருகி மயங்கல்கண் டிலையோ வெங்கணுங் கண்ணுடை யெந்தாய்
புரிந்தசிற் பொதுவிற் றிருநடம் புரியும் புண்ணியா வென்னுயிர்த் துணைவா
கரைந்திடா தறுதற் கிதுதகு தருணங் கலந்தருள் கலந்தரு ளெனையே. 2

மேலையே காந்த வெளியிலே நடஞ்செய் மெய்யனே யையனே யெனக்கு
மாலையே யணிந்த மகிழ்நனே யெல்லாம் வல்லனே நல்லனே யருட்செங்
கோலையே நடத்து மிறைவனே போரெண் குணத்தனே யினிச்சகிப் பறியேன்
காலையே தருதற் கிதுதக தருணங் கலந்தருள் கலந்தரு ளெனையே. 3

பண்டுகொண் டெனைத்தான் பிழைகுறி யாத பண்பனே திருச்சிற்றம் பலத்தே
தொண்டுகொண் டடியர் களிக்கநின் றாடுந் தூயனே நேயனே பிரமன்
விண்டுகண் டறியா முடியடி யெனக்கே விளங்குறக் காட்டிய விமலா
கண்டுகொண் டுறுதற் கிதுதகு தருணங் கலந்தருள் கலந்தரு ளெனையே. 4

தனித்துணை யெனுமென் தந்தையே தாயே தலைவனே சிற்சபை தனிலே
இனித்தமிதள் ளமுதே யென்னுயிர்க் குயிரே யென்னிரு கண்ணுண்மா மணியே
அனித்தமே நீக்கி யாண்டவென் குருவே யண்ணலே யினிப்பிரி வாற்றேன்
கனித்துணை தருதற் கிதுதகு தருணங் கலந்தருள் கலந்தரு ளெனையே. 5

துன்பெலாங் கவிர்க்குந் திருச்சிற்றம் பலத்தே ஜோதியுட் ஜோதியே யழியா
இன்பெலா மளிக்கு மிறைவனே யென்னை யீன்றநற் றந்தையே தாயே
அன்பெலா மாகி நிறைந்தசீர் நிறைவே யண்ணலே யினிப்பிரி வாற்றேன்
பொன்பதந் தருதற் கிதுதகு தருணம் புணர்ந்தருள் புணர்ந்தரு ளெனையே. 6

எதுமொன் றறியாப் பேதையாம் பருவத் தென்னையாட் கொண்டெனை யுவந்தே
ஓதுமின் மொழியாற் பாடவே பணித்த வொருவனே யென்னுயிர்த் துணைவா
வேதமும் பயனு மாகிய பொதுவில் விளங்கிய விமலனே ஞான
போதகந் தருதற் கிதுதகு தருணம் புணர்ந்தருள் புணர்ந்தரு ளெனையே. 7

எண்ணிய வெனதுள் ளெண்ணமே யெண்ணத் திசைந்தபே ரின்பமே யான்முன்
பண்ணிய தவமே தவத்துறும் பலனே பலத்தினுற் கிடைத்தவென் பதியே
தண்ணிய மதியே மதிமுடி யரசே தனித்தசிற் சபைநடத் தமுதே
புண்ணிய மளித்தற் கிதுதகு தருணம் புணர்ந்தருள் புணர்ந்தரு ளெனையே. 8

மலப்பகை தவிர்க்குந் தணிப்போது மருந்தே மந்திர மேயொளிர் மணியே
நிலைப்பட வெனையன் முண்டரு ளளித்த நேயனே தாயனே யவனே
பலப்படு பொன்னம் பலத்திலே நடஞ்செய் பரமனே பரமசிற் சுகந்தான்
புலப்படத் தருதற் கிதுதகு தருணம் புணர்ந்தருள் புணர்ந்தரு ளெனையே. 9

களிப்புறு மடியேன் கையிலே கிடைத்த கற்பகத் தீஞ்சுவைக் கனியே
வெளிப்புறத் தோங்கும் விளக்கமே யகத்தே விளங்குமோர் விளக்கமே யெனக்கே
ஒளிப்பிலா தன்றே யளித்தசிற் பொதுவி லொருவனே யினிப்பிரி வாற்றேன்
புளிப்பற வினித்தற் கிதுதகு தருணம் புணர்ந்தருள் புணர்ந்தரு ளெனையே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

27. தற்போத விழப்பு

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அவ்வண்ணம் பழுத்தவரு மறிந்திலர்சற் றெனினும்
அறிந்தனமோர் சிறிதுகுரு வருளாலே யந்தச்
செவ்வண்ணம் பழுத்ததனித் திருவுருக்கண் டெவர்க்குந்
தெரியாம லிருப்பமெனச் சிந்தனைசெய் திருந்தேன்
இவ்வண்ண மிருந்தவெனைப் பிறரறியத் தெருவில்
இழுத்துவிடுத் ததுகடவு ளியற்கையருட் செயலோ
மவ்வண்ணப் பெருமாயை தன்செயலோ வறியேன்
மனமாலை பாய்வதுகாண் மன்றினடத் தரசே. 1

கள்ளிருந்த மலரிதழி சடைக்கனிந்த வடிவங்
கண்டுகொண்டேன் சிறிதடியேன் கண்டுகொண்ட படியே
நள்ளிருந்த வண்ணமின்னுங் கண்டுகண்டு களித்தே
நாடறியா திருப்பமென்றே நன்றுநினைந் தொருசார்
உள்ளிருந்த வெனைத்தெருவி லிழுத்துவிடுத் ததுதான்
உன்செயலோ பெருமாயை தன்செயலோ வறியேன்
வள்ளிருந்த குணக்கடலே யினிதுநினக்குந் தோறும்
மனமாலை பாய்வதுகாண் மன்றினடத் தரசே. 2

இகத்திருந்த வண்ணமெலா மிகத்திருந்த வருட்பேர்
இன்பவடி வுஞ்சிறியேன் முன்புரிந்த தவத்தால்
சகத்திருந்தார் காணுதே சிறிதுகண்டு கொண்ட
தாநினைந்து பெரிதின்னுந் தான்காண்பே மென்றே
அகத்திருந்த வெனைப்புறத்தே யிழுத்துவிடுத் ததுதான்
ஆண்டவனின் னருட்செயலோ மருட்செயலோ வறியேன்
மகத்திருந்தா ரென்னளவி லென்னினைப்பா ரந்தோ
மனமாலை பாய்வதுகாண் மன்றினடத் தரசே. 3

கருங்களிறு போன்மதத்தாற் கண்செருக்கி வீணை
காலமெலாங் கழிக்கின்ற கடையர்கடைத் தலைவாய்
ஒருங்குநிறை யென்றனைமுன் வலிந்தருளை வடிவாய்
உள்ளமர்ந்தே யுள்ளதனை யுள்ளபடி யுணர்த்திப்
பெருங்கருணை யாலளித்த பேறதனை யின்னும்
பிறரறியா வகைபெரிதும் பெறுதுமென வுள்ளே
மருங்கிருந்த வெனைவெளியி லிழுத்துவிட்ட தென்னே
மனமாலை பாய்வதுகாண் மன்றினடத் தரசே. 4

நாடுகின்ற மறைகளெலா நாமறியோ மென்று
நாணியுரைத் தலமரவே நல்லமணி மன்றில்
ஆடுகின்ற சேவடிகண் டானந்தக் கடலில்
ஆடுமன்பர் போனமக்கும் அருள்கிடைத்த தெனினும்
வீடுகின்ற பிறர்சிறிது மறியாம லிருக்க
வேண்டுமென விருந்தவென்னை வெளியிலிழுத் திட்டு
வாடுகின்ற வகைபுரிந்த விதியைநினைந் தையோ
மனமாலை பாய்வதுகாண் மன்றினடத் தரசே. 5

நதிகலந்த சடையசைபத் திருமேனி விளங்க
நல்லதிருக் கூத்தாட வல்லதிரு வடிகள்
கதிகலந்து கொளச்சிறியேன் கருத்திடையே கலந்து
கள்ளமற வுள்ளபடி காட்டிடக்கண் டின்னும்
பதிகலந்து கொளுமட்டும் பிறரறியா திருக்கப்
பரிந்துள்ளே யிருந்தவென்னை வெளியிலிழுத் திட்டு
மதிகலந்து கலங்கவைத்த விதியைநினைந் தையோ
மனமாலை பாய்வதுகாண் மன்றினடத் தரசே. 6

மஞ்சனைய குழலம்மை யெங்கள்சிவ காம
வல்லிமகிழ் திருமேனி வண்ணமது சிறிதே
நஞ்சனைய கொடியேன்கண் டிடப்புரிந்த வருளை
நாடறியா வகையின்னு நீடநினைத் திருந்தேன்
அஞ்சனைய பிறரெல்லா மறிந்துபல பேசி
அலர்தூற்ற வலியவெனை வெளியிலிழுத் திட்டு
வஞ்சனைசெய் திடவந்த விதியைநினைந் தையோ
மனமாலை பாய்வதுகாண் மன்றினடத் தரசே. 7

அரிபிரம ருருத்திரரு மறிந்துகொள மாட்டா
தலமரவு மீதென்ன வதிசயமோ மலத்தில்
புரிபுழுவி லிழிந்தேனைப் பொருளாக்கி யருளாம்
பொருளளிக்கப் பெற்றனனிப் புதுமைபிற ரறியா
துரிமைபெற விருப்பனென வுள்ளிருந்த வென்னை
உலகறிய வெளியிலிழுத் தலகில்லிருத் தியிலை
வரிதலையிட் டாட்டுகின்ற விதியைநினைந் தையோ
மனமாலை பாய்வதுகாண் மன்றினடத் தரசே. 8

விழற்கிறைத்துக் களிக்கின்ற வீணர்களிற் சிறந்த
விணைக்கொடியேன் பொருட்டாக விரும்பியெழுந் தருளிக்
கழற்கிசைந்த பொன்னடிநந் தலைமேலு யமைத்துக்
கருணைசெயப் பெற்றனமிக் கருணைநமை யின்னும்
நிழற்கிசைத்த மேனிலையி லேற்றுமென மகிழ்ந்து
நின்றவெண்ணை வெளியிலிழுத் துலகவியா பார
வழக்கில்வளைத் தலைக்கவந்த விதியைநினைந் தையோ
மனமாலை பாய்வதுகாண் மன்றினடத் தரசே. 9

அடிபிடித்துத் திரிகின்ற மறைகளெலாங் காணு
அருள்வடிவைக் காட்டிநம்மை யாண்டுகொண்ட கருணைக்
கொடிபிடித்த குருமணியைக் கூடுமட்டும் வேதிரூர்
குறிப்பின்றி யிருப்பமெனக் கொண்டகத்தே யிருந்தேன்
படிபிடித்த பலர்பலவும் பகர்ந்திடவிங் கெணைத்தான்
படுவழக்கிட் டுலகியலாம் வெளியிலிழுத் தலைத்தே
மடிபிடித்துப் பறிக்கவந்த விதியைநினைந் தையோ
மனமாலை பாய்வதுகாண் மன்றினடத் தரசே. 10

அருட்பெருஞ்ஜோதி

28. மாயா விளக்கம்.

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

திடுக்கற வெணைத்தான் வளர்த்திடப் பரையாஞ் செவிலிபாற் சேர்த்தனை யவளோ
எடுக்கவு நினையாள் படுக்கவு மொட்டாள் என்செய்வே னின்னுமென் னிடைப்பால்
மடுக்கநற் முயும் வந்திலள் நீயும் வந்தெணைப் பார்த்திலை யந்தோ
தடுக்கருங் கருணைத் தந்தையே தளர்ந்தேன் தநயனேன் தளர்ந்திட லழகோ. 1

தளர்ந்திடேல் மகனே யென்றெணை யெடுத்தோர் தாய்கையிற் கொடுத்தனை யவளோ
வளர்ந்திடா வகையே நினைத்தனள் போன்று மாயமே புரிந்திருக் கின்றுள்
கிளர்ந்திட வெணைத்தான் பெற்றநற் முயுங் கேட்பதற் கடைந்திலை யந்தோ
உளந்தரு கருணைத் தந்தையே நீயும் உற்றிலை பெற்றவர்க் கழகோ. 2

தாங்கவென் றணையோர் தாய்கையிற் கொடுத்தாய் தாயவள் நான்றனித் துணர்ந்து
தூங்கவு மொட்டா ளெடுக்கவுந் துணியாள் சூதையே நினைத்திருக் கின்றுள்
ஓங்குநற் முயும் வந்திலா ளந்தோ வுளந்தளர் வுற்றன னீயும்
ஈங்குவந் திலையே லென்செய்கே னிதுதான் எந்தைநின் றிருவருட் கழகோ. 3

அத்தநீ யெணையோர் தாய்கையிற் கொடுத்தா யாங்கவள் மகள்கையிற் கொடுத்தாள்
நித்திய மகளோர் நீலிபாற் கொடுத்தாள் நீலியோ தன்புடை யாடுந்
தத்துவ மடவார் தங்கையிற் கொடுத்தாள் தனித்தனி யவரவ ரெடுத்தே
கத்தவெம் பயமே காட்டினர் நானுங் கலங்கினேன் கலங்கிட லழகோ. 4

வாங்கிய செவியி றரிவொடுத் தூயிற்று மகன்மைகாரிற் கொடித்தன பிணைத்தார்
ஈங்கிவள் கருத்தி லெறுதினைத் தனனோ என்றெப்பே னெனவிளம்பே றுரைத்து
தூங்கவு மொட்டா ளடுக்கடு கிளிதித் தெரட்டியுற மாப்படி சின்றுர்
வங்குறு கின்றேன் பிள்ளைதன் னருமை யன்றவ றறிவிப்ப திலேன். 5

வலத்திலே செனியி யெடுத்திடச் சோம்பி மக்கள்பாற் சாய்ந்தனிட் டழுத்தார்
மலத்திலே புழைத்துக் கிடந்தழல் கேட்டுமெ வ்விதனே பெறுத்திலை யயர்ந்
இலத்திலே கூடி யாடுகின் றனர்கான் என்றெப்பே னெனவ்வண்ணம் பரிந்தை
நிலத்திலே யவர்க ளறிந்திலார் பெற்றோர்ப் கியுடிங் கறிந்திலே பேசோ. 6

தும்மினேன் வெதும்பித் தொட்டிலிற் கிடக்கேதா சார்த்தறி னோத்தபோன் றுடனுங்
கம்மினேன் செவிலி யம்மிபோ லைசயான் காதருங் கேட்டுயிர்ப் பிலேன்
சென்மிபே மடவார் கொம்மிபே பாடிக் கிரித்தி ருக்கிளை யெல்லை
இம்மிபே யெனினு மீந்திடார் போல இருப்பதோ பெரியரக் கருணை. 7

திருவிலா வாயிரத் தொட்டிலே கங்குற் றொட்டிலே பாலிற் றொட்டிலே
திருவிலாப் பொத்தைத் தொட்டிலிற் றெவியி கிரிப்பதோர் — திருத்தொட்டில்
பிரிவிலாத் தனிமைத் தலைவனே பெற்ற பிள்ளைகா — தொட்டில்
கருவிலாப் நிபித் தருளாட்டவுந் திருவோ கன்ம — தொட்டிலே. 8

காய்ந்திடு மனத்தான் போல்றனன் கிரிதரன் கனிகிடாய் — பாய்ந்திடு வேடப் பயல்களா லெனக்குப் பயப்பி — தேய்ந்திடு மதியென் றெண்ணரிறன் முனைபாத் தி — சாய்ந்தவிச் செவிலி கையிலே யென்னைத் தந்தது — 9

ஞானவா னந்த வல்லியாம் பிரியா காபதி யுடனெழுந் — ஈனமா ரிடர்தீர்த் தெதிர்த்தினை யணைந்தே யின்னமு — ஊனமொன் றில்லா தோங்குபைப் தலைந்தில் உயிர் — வானமும் புவியு மதிக்கவாழ்ந் தருள்க மாயனி மலர்ச்சி — 10

அருட்பெருஞ்ஜோதி

---

29. அபயத்திறன்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

ஆடக மணிப்பொற் குன்றமே யென்னை ஆண்டுகொண் டருளிய பொருளே
வீடகத் தேற்றும் விளக்கமே விளக்கின் மெய்ப்பொளிக் குள்ளொளி விளைவே
வாடகச் சிறியேன் வாட்டங்க ளெல்லாம் தவிர்த்தருள் வழங்கிய மகிழ்வில்
நாடகக் கருணை நாதனே யுன்னை நம்பினேன் கைவிடே லெனையே. 1

வட்டவான் சுடரே வளரொளி விளக்கே வயங்குசிற் ஜோதியே யடியேன்
இட்டமே யிட்டத் திணைந்துளே கலந்த இன்பமே யென்பெரும் பொருளே
கட்டமே தவிர்த்திங் கென்னைவாழ் வித்த கடவுளே கனகமன் றகத்தே
நட்டமே புரியும் பேரரு ளமுதே நம்பினேன் கைவிடே லெனையே. 2

புல்லவா மனத்தே னென்னினுஞ் சமயம் புகுதவா பொய்ந்நெறி யொழுக்கஞ்
சொல்லவா பிறரைத் துதிக்கவா சிறிதோர் சொப்பனத் தாயினு நினையேன்
கல்லவா மனத்தே தாருறவுங் கருதேன் கனகமா மன்றிலே நடிக்கும்
நல்லவா வெல்லாம் வல்லவா வுனையே நம்பினேன் கைவிடே லெனையே. 3

புண்படா வுடம்பும் புரைபடா மனமும் பொய்படா வொழுக்கமும் பொருந்திக்
கண்படா திரவும் பகலுநின் றனையே கருத்தில்வைத் தேத்துதற் கிசைந்தேன்
உண்பதே யெனினு முடுப்பதே யெனினும் உலகரை நம்பிலே னெனது
நண்பனே நலஞ்சார் பண்பனே யுனையே நம்பினேன் கைவிடே லெனையே. 4

புண்ணிலே புரந்த கோலெனத் துயரம் புகுந்திதயக் கலக்கிய போதுங்
கண்ணிலே யெனது கருத்திலே கலந்த கருத்தனே நின்றனை யல்லால்
மண்ணிலே வயங்கும் வானிலே பிறரை மதித்திலேன் மதிக்கின்றார் தமையும்
கண்ணிலேன் வேறொன் றெண்ணிலே னுனையே நம்பினேன் கைவிடே லெனையே.

ஊன்பெறு முயிரு முணர்ச்சியு மன்பும் ஊக்கமு முண்மையு மென்னைத்
தான்பெறு தாயுந் தந்தையுங் குருவுந் தனிப்பெருந் தெய்வமுந் தவமும்
வான்பெறு பொருளும் வாழ்வுநற் றுணையும் மக்களு மனைவியு முறவும்
நான்பெறு நன்பும் யாவுநீ யென்றே நம்பினேன் கைவிடே லெனையே. 6

வாட்டமுந் துயரு மச்சமுந் தவிர்த்தென் வடிவமும் வண்ணமு முயிருந்
தேட்டமு நீயே கொண்டுநின் கருணைத் தேகமு முருவமெய்ச் சிவமும்
ஈட்டமு மெல்லாம் வல்லநின் னருட்பே ரின்பமு மன்புமெய்ந் ஞான
நாட்டமுங் கொடுத்துக் காப்பதுன் கடனென் நம்பினேன் கைவிடே லெனையே. 7

வம்பனேன் பிறர்போல் வையமும் வானும் மற்றவு. மதித்திலேன் மதஞ்சார்
2 உம்பனே ரகங்கா ரந்தவிர்த் தெல்லா உலகமும் வாழ்கவென் றிருந்தேன்
செம்பொனே கருணைத் தெய்வமே யெல்லாஞ் செயவல்ல சித்தனே சிவனே
நம்பனே ஞான நாதனே யுனையே நம்பினேன் கைவிடே லெனையே. 8

ஆயகா லிருந்து நடந்திட வலியில் லாமையா லழுங்குவா னெனவுன்
மேயகா லிருந்துந் திருவரு ளுறவோர் விருப்பிலா மையின்மிக மெலிந்தேன்
தீயகான் விலங்கைத் தூயமா னிடஞ்செய் சித்தனே சத்திய சபைக்கு
நாயகா வுயிர்க்கு நாயகா வுனையே நம்பினேன் கைவிடே லெனையே. 9

1 நட்டம் என்பது—நடனம். 2. உம்பல் என்பது—யானை.

அற்றமு மறைக்கு மறிவிலா தோடி யாடிய சிறுபரு வத்தை
குற்றமுங் குணங்கொண் டென்னையாட் கொண்ட குணப்பெருங் குன்றமே குருவே
செற்றமும் விருப்புந் தீர்ந்தமெய்த் தவர்தஞ் சிற்சபை யினிக்கின்ற தேனே
கற்றக வுடைய நாதனே யுனையே கம்பினேன் கைவிடே லெனையே. 10

படம்புரி பாம்பிற் கொடியனேன் கொடிய பாவியிற் பாவியேன் நிலைக்
கிடம்புரி மனத்தே னிரக்கமொன் றில்லே னென்னினுந் துணைபெற்த விருத்துந்
திடம்புரி நின்பொன் னடித்துணை யெனவே சிந்தனை செய்திருக் கின்றேன்
நடம்புரி கருணை நாயகா வுனையே நம்பினேன் கைவிடே லெனையே. 11

படித்தன னுலகப் படிப்பெலா மெப்ந்நூல் படித்தவர் தங்களைப் பார்த்து
நொடித்தனன் கடிந்து நோக்கினேன் காம நோக்கினேன் பொய்பற்தம் முறவு
பிடித்தன னுலகிற் பேதையர் மயங்கப் பெரியரிற் பெரியபோற் பேசி
நடித்தன னெனினு நின்னடித் துணையே நம்பினேன் கைவிடே லெனையே. 12

பஞ்சுறே ருலகப் பாட்டிலே மெலிந்த பாவியேன் சாவியே போன
புன்செயே யுணேயேன் புழுத்தலைப் புலேயேன் பொய்யெலாம் பூரித்த வஞ்ச
நெஞ்சினேன் பாப நெறியினேன் சினத்தி னெழுயினேன் கொடியனேன்காம
நஞ்சினே னெனினு மஞ்சினே னுனையே நம்பினேன் கைவிடே லெனையே. 13

கயந்துளே வுவட்டுங் காஞ்சிரங் காயிற் கடியனேன் காமமே கலந்து
வியந்துளே மகிழும் வீணனேன் கொடிய வெகுளியேன் வெய்யனேன் வெறியேன்
1 மயர்ந்துளே னுலக வாழ்க்கையை மனேயை மக்களை பொக்கமே பற்றித்
நயந்துளே னெனினும் பயந்துளே னுனையே நம்பினேன் கைவிடே லெனையே. 14

ஓடினேன் பெரும்பே ராசையா லுலகில் ஊர்தொறு முன்றியே யுடைந்தே
தேடினேன் காமச் சேற்றிலே விழுந்து திமங்கினேன் திசைகெட்டு
வாடினேன் சிறிய 2 வாரியான் மகிழ்ந்தேதன் வஞ்சமே பொருளென பற்றி
நாடினே னெனினும் பாடினே னுனையே நம்பினேன் கைவிடே லெனையே. 15

காட்டிலே திரியும் விலங்கினிற் கடையேயன் கைவழக் கற்றிலே னற்ற
ஓட்டிலே யெனினு மாசைவிட் டறிந்தேன் உலுத்தனே னெனினுந் தூற்றும்
ஏட்டிலே யெழுதிக் கணக்கிட்ட கொடியேயன் எச்சிலு முமிழ்ந்திடே னாக
நாட்டிலே பெரியே னென்னினு முனையே நம்பினேன் கைவிடே லெனையே. 16

துனித்தவெம் மடவார் பகல்வந்த போது துறவியிற் கடிகடித் திருந்தேன்
தனித்திர வதிலே வந்தபோ தோடித் தழுவினேன் கடமுலே விழைந்தேன்
இனித்தசொல் புகன்றே னென்பினைக் கறித்தே யிடர்ப்பட்ட காயென விளைத்தேன்
நனித்தவ றுடையே னென்னினு முனையே நம்பினேன் கைவிடே லெனையே. 17

தார்த்தட முலேயார் நான்பல தொடுஞ்சார் தலத்திலே வந்தபோ தனையர்
பார்த்திலேன் வார்த்தைப் பகர்ந்திலேன் தபசுப் பாதகப் பூனேபோ லிருந்தேன்

1. மயர்ந்துளேன் என்பது—மயங்கினேன். 2. வாரி என்பது—வருவாய்.

போர்த்துகான் றனித்த போதுபோய் வலிந்து பேசினேன் வஞ்சரிற் பெரியேன்
நார்த்திட ருளத்தே னென்னினு முனையே நம்பினேன் கைவிடே லெனையே. 18

பெண்மையே விழைந்தே னவர்மன மறியேன் பேயெனப் பிடித்தனன் மடவார்க்
குண்மையே புகல்வான் போன்றவர் தமைத்தொட் டுவந்தகங் களித்தபொய் யுளத்தேன்
தண்மையே யறியேன் வெம்மையே யுடையேன் சாத்திரம் புகன்றுவாய் தடித்தேன்
நன்மையே யடையே னென்னினு முனையே நம்பினேன் கைவிடே லெனையே. 19

வன்மையிற் பொருண்மே லிச்சையில் லவன்போல் வாதிபோல் வார்த்தைகள் வழங்கி
அன்மையிற் பிறர்பா லுளவினுற் பொருளை அடிக்கடி வாங்கிய கொடியேன்
இன்மையுற் றவருக் குதவிலேன் பொருளை யெனைவிடக் கொடியருக் கீந்தேன்
நன்மையுற் றறியே னென்னினு முனையே நம்பினேன் கைவிடே லெனையே. 20

கட்டமே யறியே னடுத்தவ ரிடத்தே காசிலே யாசையில் லவன்போற்
பட்டமே காட்டிப் பணம்பறித் துழன்றேன் பகலிலாந் தவசிபோ லிருந்தேன்
இட்டமே யிவ்வி லுண்டயல் புணர்ந்தே இழுதையிற் றூங்கினேன் களித்து
நட்டமே புரிந்தே னென்னினு முனையே நம்பினேன் கைவிடே லெனையே. 21

காணியே கருதுங் கருத்தினைப் பிறர்க்குக் காட்டிடா தம்பலா மடங்குந்
தூணியே யெனச்சார்ந் திருந்தனன் சோற்றுச் சுகத்திறற் சோம்பினே னுதவா
ணியே யனையே னிரப்பவர்க் குமியும் ஈந்திலே னீந்தவ னெனவே
நாணிலே னுரைத்தே னென்னினு முனையே நம்பினேன் கைவிடே லெனையே. 22

அடுத்தவர் மயங்கி மதித்திட நினைத்தேன் அடிக்கடி பொய்களே புனைந்தே
எடுத்தெடுத் துரைத்தே னெனக்கெதி ரிலையென் றிகழ்ந்தன னகங்கரித் திருந்தேன்
கொடுத்தவர் தமையே மிகவுப சரித்தேன் கொடாதவர் தமையிகழ்ந் துரைத்தேன்
நடுத்தய வறியே னென்னினு முனையே நம்பினேன் கைவிடே லெனையே. 23

எளியவர் வளைத்த நிலமெலாங் கவரும் எண்ணமே பெரிதுளேன் புன்செய்க்
களியுணு மனையிற் சர்க்கரை கலந்து காய்ச்சுபால் கேட்டுண்ட கடையேன்
துளியவர்க் குதவேன் விருப்பிலான் போலச் சுவைபெறச் சுவைத்தநாக் குடையேன்
1 நளிரெனச் சுழன்றே னென்னினு முனையே நம்பினேன் கைவிடே லெனையே. 24

கோலபல புரிந்தே புலைநுகர்ந் திருந்தேன் கோடுறு குரங்கினிற் குதித்தே
அலைதரு மனத்தே னறிவிலே னெல்லாம் அறிந்தவன் போற்பிறர்க் குரைத்தேன்
மலைவுறு சமய வலையகப் பட்டே மயங்கிய மதியினே னல்லோர்
நலையல வெனவே திரிந்தன னெனினும் நம்பினேன் கைவிடே லெனையே. 25

ஈயெனப் பறந்தே னெறும்பென வுழன்றேன் எட்டியே யெனமிகத் தழைத்தேன்
பேயெனச் சுழன்றேன் பித்தனே யெனவாய்ப் பிதற்றெடு மூர்தொறும் பெயர்ந்தேன்
காயெனக் காய்த்தேன் கடையென நடந்தேன் கல்லெனக் கிடந்தனன் குரைக்கும்
நாயெனத் திரிந்தே னென்னினு முனையே நம்பினேன் கைவிடே லெனையே. 26

1. நளிர் என்பது—நண்டு.

ஒன்றியே யுனைவை யுண்டுடல் பருத்த வூத்தைதீய வுதக்கழும் புறவீவ
வென்றியே யுரைத்து விளைகளை விளைத்த வீனாளை வுயர்கொடவுந்து சுழன்று
பன்றியே யணைவேன் கட்டுவா ரற்ற I பகடெனத் திரிகின்ற படிறன்
நன்றியே யறிவே னென்னினு முனையே நம்பினேன் கைவிட லெனோவே.27

கவையெலாங் தவிர்த்த வெறுமர மனையேன் கள்ளனைன் கற்புரண்ட கடியேன்
சுவையெலாம் விரும்பிச் சுழன்றதோர் கடையேன் துட்டனேன் றீதுலாக் குலைக்கென்
இவையெலா மடக்க வுடையனை வலனை இத்தகா வினைறவின் கவதாவால்
நவையெலாந் தவிர்த்தென் துயரறப் நினைவ நம்பினேன் கைவிட லெனோவே. 28

அருட்பெருஞ்ஜோதி

30. பிரிவாற்றாமை

அறுசீரடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

போக மாட்டேன் பிறரிடத்தே பொய்யிற் கிடந்து புலர்த்துயாமம்
வேக மாட்டேன் பிறிதான்றும் விரும்ப மாட்டேன் பொய்யுடலன்
ஆக மாட்டே னரசேயென் னப்பா வென்ற னாபாதன்
சாக மாட்டே னுனைப்பிரிந்தாற் றரிக்க மாட்டேன் கண்டாயே. 1

செல்ல மாட்டேன் பிறரிடத்தே சிறிதுங் கரியேன் றிமோதிகள்
சொல்ல மாட்டே னினிக்கணமுங் துயர மாட்டேன் சாய்பண்டி
புல்ல மாட்டேன் பொய்யியாழுக்கம் பொருந்த மாட்டேன் பிறவுயிரைக்
கொல்ல மாட்டேன் உனையல்லால் குறிக்க மாட்டேன் கண்டாயே. 2

வெறுக்க மாட்டே னின்றனையே விரும்பிப் பிறந்தேன் பயர்சிறகம்
பொறுக்க மாட்டே னுலகவர்போற் பொய்யிற் கிடந்து டரன் றனிவான்
சிறுக்க மாட்டே னரசேசின் றிருத்தா ளாணை கின்னையோ
மறுக்க மாட்டேன் வழங்குவன வெல்லாம் வழங்கி வாழ்வாயே. 3

கருணைப் பெருக்கே யானந்தக் கனியே யென்னுட் கலந்தாதரித்த
தருணச் சுடரே யெனையீன்ற தாயே யென்னைத் தந்தாயை
வருணப் படிக மணிமலையே மன்றி னடஞ்செப் வாழ்வேவந்
பொருண்மெய்ப் பதியே யினித்துயரம் பொறுக்க மாட்டேன் கண்டாயே. 4

திண்ணம் பழுத்த சிந்தையிலே திகழ்ந்த நலவாச் சுபஜ்ஜோதி
வண்ணம் பழுத்த தனிப்பழமே மன்றில் விளங்கு மணிச்சுடரே
தண்ணம் பழுத்த மதியமுதே தருவா யிதுவே தருணமென்பன்
எண்ணம் பழுத்த தினிச்சிறியே னிறையுந் தரியேன் தரியேனே. 5

1. பகடு என்பது—பொதினெருது.

நாட்டுக் கிசைந்த மணிமன்றில் ஞானவடிவாய் நடஞ்செ யருள்
ஆட்டுக் கிசைந்த பெருங்கருணை யப்பா வென்ற னரசேயென்
பாட்டுக் கிசைந்த பதியேயோர் பரமா னந்தப் பழமேமேல்
வீட்டுக் கிசைந்த விளக்கேயென் விவேகம் விளங்க விளக்குகவே. 6

வேதந் தலைமேற் கொளவிரும்பி வேண்டிப் பரவு தினதுமலர்ப்
பாதந் தலைமேற் சூட்டியெனைப் பணிசெய் திடவும் பணித்தனைநான்
சாதந் தலைமே லெடுத்தோருவர் தம்பின் செலவுந் தரமில்லேன்
ஏதந் தலைமேற் சுமந்தேனுக் கிச்சீர் கொடுத்த தெவ்வாறே. 7

பொய்விட் டகலாப் புலைக்கொடியேன் பொருட்டா விரவிற் போந்தோருன்
கைவிட் டகலாப் பெரும்பொருளென் கையிற் கொடுத்தே களிப்பித்தாய்
மைவிட் டகலா விழியின்ப வல்லி மகிழு மணவாளா
மெய்விட் டகலா மனத்தவர்க்கு வியப்பா முனது மெய்யருளே. 8

சாமத் திரவி லெழுந்தருளித் தமியேன் றூக்கந் தடுத்துமயற்
காமக் கடலைக் கடத்தியருட் கருணை யமுதங் களித்தளித்தாய்
நாமத் தடிகொண் டடிபெயர்க்கு நடையார் தமக்குங் கடையானேன்
ஏமத் தருட்பே றடைந்தேதனை னென்ன தவஞ்செய் திருந்தேனே. 9

பாதி யிரவி லெழுந்தருளிப் பாவி யேனை யெழுப்பியருட்
ஜோதி யளித்தென் னுள்ளகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி கடஞ்செய் பேரின்ப நிதிநான் பெற்ற நெடும்பேற்றை
ஓதி முடியா தென்போலிவ் வுலகம் பெறுதல் வேண்டுவனே. 10

அருட்பெருஞ்ஜோதி

31. பிரியேனென்றல்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அப்பாநான் பற்பலகா லறைவதென்னை படியேன்
அச்சமெலாந் துன்பமெலா மறுத்துவிடைத் துவக்தே
இப்பாரி லிதுதருண மென்னையடைந் தருளி
எண்ணமெலா முடித்தென்னை யேன்றுகொளா யெனிலோ
தப்பாம லுயிர்விடுவேன் சத்தியஞ்சத் தியகின்
தாளிணைக ளறிகவிது தயவுடையோ பெவர்க்குந்
துப்பாகித் துணையாகித் துலங்கியமெய்த் துணைபே
சுத்தசிவா னந்தவருட் ஜோதிநடத் தரசே. 1

ஆணையுன்மே லாணையுன்மே லாணையுன்மே லையா
அரைக்கணமு நினைப்பிரிந்தே யினித்தரிக்க மாட்டேன்
கோணைநிலத் தவர்பேசக் கேட்டதுபோ தின்றுங்
குறும்புமொழி செவிகளுறக் கொண்டிடவு மாட்டேன்
ஊணையுறக் கத்தினைநான் விடுகின்றே னீதான்
உவந்துவரா யெனிலென்ற னுயிரையும்விட் டிடுவேன்
மாணைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்நீ யெனது
மனமறிவா யினமுனக்கு வகுத்துரைப்ப தென்னை. 2

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெலாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்
உடலுயிரா தியவெல்லாம் நீயெடுத்துக் கொண்டென்
உடலுயிரா தியவெல்லா முவந்தெனக்கே யளிப்பாய்
வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுன்
மணியேயென்பெண் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியேயென்பெண் னவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராஜ மணியே. 3

வாழையடி வாழைஎன வந்ததிருக் கூட்ட
மரபினில்யா மெனுவனன்றே வகையறிவே னிந்த
ஏழைபடும் பாடினைக்குத் திருவுளச்சம் மதமோ
இதுதகுமோ இதுமுறையோ இதுகருடக் காலை
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்நா னுனக்கு
மகனலனோ நீயெனக்கு வாய்த்ததந்தை யலையோ
கோழைபுல குயிர்த்துயர மினிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருளின் னருளொளியைக் கொடுத்தருளிப் பொழுதே. 4

செய்வகையென் னெனத்திகைத்தேன் திகையேலென் றெனதரசே
திருமேனி காட்டியெனைத் தெளிவித்தாய் நீயே
பொய்வகையன் றிதுவினது புந்தியறிந் ததுவே
பொன்னடியே துணையெனநா னென்னுயிர்வைத் திருந்தேன்
எய்வகையென் னம்பெருமா னருள்புரிவா னென்றே
யெந்தைவர வெதிர்பார்த்தே யின்னுமிருக் கின்றேன்
ஐவகையிவ் வுயிர்த்துயர மினிப்பொறுக்க மாட்டேன்
அருட்ஜோதிப் பெரும்பொருளை யளித்தருளிப் பொழுதே. 5

முன்னெருநாண் மயங்கினனீ மயங்கேலென் றெனக்கு
முன்னமுருக் காட்டினைநான் முகமலர்ந்திங் கிருந்தேன்
இன்னும்வரக் காணேனின் வரவையெதிர் பார்த்தே
எண்ணியெண்ணி வருந்துகின்றே னென்னசெய்வே னங்தோ
அன்னையினுங் தயவுடையாய் நின்றபவை நினைத்தே
ஆருயிர்வைத் திருக்கின்றே னுனையிது கண்டாய்
என்னிருகண் மணியேயென் னறிவேயென் னன்பே
என்னுயிர்க்குப் பெருந்துணையே யென்னுயிர்நா யகனே. 6

உன்னைமறந் திடுவேனே மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணந்தரியே னுன்னுணை யிதுநீ
என்னைமறந் திடுவாயோ மறந்திடுவா யெனில்யான்
என்னசெய்வே னெங்குறுவே னெவர்க்குரைப்பே னெந்தாய்
அன்னையினுந் தயவுடையாய் நீமறந்தா யெனினும்
அகிலமெலா மளித்திடுகின் னருள்மறவா தென்றே
இன்னுமிகக் களித்திங்கே யிருக்கின்றேன் மறவேல்
இதுதருண மருட்ஜோதி யெனக்குவிரைந் தருளே. 7

நான்மறந்தே னெனினுமெனைத் தான்மறவா னெனது
நாயகனென் றுடுகின்றேன் எனினுமிது வரையும்
வான்மறந்தேதன் வானவரை மறந்தேதன்மா லயனை
மறந்தேதனம் முருத்திரரை மறந்தேதனின் னுடைய
ஊன்மறந்தே னுயிர்மறந்தே னுணர்ச்சியெலா மறந்தேன்
உலகமெலா மறந்தேதனிங் குன்னைமறந் தறியேன்
பான்மறந்த குழவியைப்போல் பாரேலிங் கெனையே
பரிந்துநின தருட்ஜோதி புரிந்துமகிழ்ந் தருளே. 8

தெருவிடத்தே விளையாடித் திரிந்தவினை வலித்தே
சிவமாலை யணிந்தனையச் சிறுவயதி லிந்த
உருவிடத்தே நினக்கிருந்த ஆசையெலா மிங்காள்
ஓடியதோ புதியவொரு வுருவுவிழைந் ததுவோ
கருவிடத்தே எனைக்காத்த காவலனே யுனது
கால்பிடித்தேன் விடுவேனே கைப்பிடியன் றுதான்
வெருவிடத்தி தன் னுயிர்ப்பிடிகா ணுயிரகன்று லன்றி
விடமாட்டேன் விடமாட்டேன் விடமாட்டே னுனை. 9

பெரியனருட் பெருஞ்ஜோதிப் பெருங்கருணைப் பெருமான்
பெரும்புகழைப் பேசுதலே பெரும்பேறென் றுணர்ந்தேன்
துரியநிலத் தவரெல்லாந் துதிக்கின்று ரேழை
துதித்தல்பெரி தலவிங்கே துதித்திடவென் றெழுந்த
அரியபெரும் பேராசைக் கடல்பெரிதே யதுவென்
னளவுகடந் திருக்கின்ற தாதலினல் விரைந்தே
உரியவரு ளமுதளித்தே நினைத்துதிப்பித் தருள்வாய்
உலகமெலாங் களித்தோங்க வோங்குகடத் தரசே. 10

கவலையெலாந் தவிர்ந்துமிகக் களிப்பிடுறு நினையே
கைகுவித்துக் கண்களினீர் கனிந்துசுரந் திடவே
சவலைமனச் சலனமெலாந் தீர்ந்துசுக மயமாய்த்
தானேதா னகியின்பத் தனிநடஞ்செய் யினைத்தாள்
தவலருஞ்சீர்ச் சொன்மாலை வனைந்துவனைந் தணிந்து
தாளுகி நாடைத் தருணமிது தானே
குவலயத்தா ரதிசயிக்க வெழுந்தருளி வருவாய்
குருவேயென் குற்றமெலாங் குணமாக்கொண் டவனே. 11

அருட்பெருஞ்ஜோதி.

32. திருவருட்பேறு

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

படிகளெலா மேற்றுவித்தீர் பரமகடம் புரியும்
பதியையடை வித்திரப் பதிகடோ வினங்கும்
கொடிகணிறை மணிமாடக் கோயிலெலாங் காட்டுக்
கொடுத்திரக் கோயிலிலே கோபுரமா யினிலை
செடிகளிலாத் திருக்கதவந் திறப்பித்துக் காட்டித்
திருப்பவுரீர் மூடுவித்தீர் திறக்கிறகல் லெனறிம்
அடிகளிது கருணைமினி யரைக்கணமுந் தரிபென்
அப்பலத்தே நடம்புரிவீர் வந்தருள்வீர் விரைந்தே. 1

பெட்டியிதி லுலகாத பெருட்பொருளெ லாநிறை
பெறுகவென வளுதிறக்கும் பெருட்கிறவு கோலுஞ்
எட்டிரண்டுந் தெரியாதே னெனைவாயி லெகுத்தீர்
இதுகருணைத் திறக்குகென பெருட்கிறவாய் நின்றிலன்
அட்டிசெய நினையாதி னரைக்கணமுந் தரிபென்
அரைக்கணத்துக் காயிரமா யிரங்கோடி யுகமாக
வட்டியிட்டு நும்மிடத்தே வாங்குவதுண் மாயோ
மணிமன்றில் நடம்புரிவீர் வந்தருள்வீர் விரைந்தே. 2

கைக்கிசைந்த பொருளெனக்கு வாய்க்கிசைந்த நுமது பரிக்கு
காலமென்ன கணக்கென்ன கருதுமிட மெங்கு
மெய்க்கிசைந்தன் றளித்ததுநீர் சுத்தபஞ்ச கிருத்தியமே
விடுவேனோ வின்றடியேன் விருப்கிறைக்கு கலதிவ
செய்க்கிசைந்த சிவபோகம் விளைத்தருளே வியைத்திகன்
தினைத்தோறுங் காத்திருந்தேன் றிருவுளமே யறிபும்
மைக்கிசைந்த விழியம்மை சிவகாம வல்லி
மகிழுநடம் புரிகின்றீர் வந்தருள்வீர் விரைந்தே. 3

பரிகலத்தே திருவமுதம் படைத்துளதே பணிக்கீர்
பணித்தபின்னே வென்னுடைய பக்குவப்பார்க் கின்றீர்
இருநிலத்தே பசித்தவர்க்கும் பசிதீக்க வல்லார்
இவர்சிறிய ரிவர்பெரிய ரென்னல்வழக் கலதே
உரிமையுற்றே னுமக்கேயென் னுள்ளமன்றே யுறைக்கீர்
உடல்பொருளா விகளெலா மும்மதெனக் கொண்டீர்
திரிவகத்தே நான்வருந்தப் பார்த்திருந்த லழகோ
சிவகாம வல்லிமகிழ் திருநடரா யகதே. 4

போய்கொடுத்த மனமாயைச் சேற்றில்விழா தெனக்கே
பொன்மணிமே டையிலேறிப் புந்திமகிழ்ந் திருக்கக்
கைகொடுத்தீ ருலகமெலாங் களிக்கவுல வாத
காலிரண்டுங் கொடுத்தீரைக் காலுமழி யாத
மெய்கொடுக்க வேண்டுமுமை விடமாட்டேன் கண்டீர்
மேலேறி னேனினிக்கீழ் விழைந்திறங்கே னென்றும்
மைகொடுத்த விழியம்மை சிவகாம வல்லி
மகிழ்நடம் புரிகின்றீர் வந்தருள்வீர் விரைந்தே. 5

மின்போலே வயங்குகின்ற விரிசடையீ ரடியேன்
விளங்குமும திணையடிகள் மெய்யழுந்தப் பிடித்தேன்
முன்போலே யேமாந்து விடமாட்டேன் கண்டீர்
முனிவறியீ ரினியொளிக்க முடியாது நுமக்கே
என்போலே யிரக்கப்விட்டுப் பிடித்தவர்க ளிலையே
என்பிடிக்கு ளிசைந்ததுபோ லிசைந்ததிலை பிறர்க்கே
பொன்போலே முயல்கின்ற மெய்த்தவர்க்கு மரிதே
பொய்தவனேன் செய்தவம்வான் வையகத்திற் பெரிதே. 6

எதுதருணை மதுதெரியே னென்னினுரிமம் மானே
யெல்லாஞ்செய் வல்லவனே யென்றனிரா யகனே
இதுதருணைக் தவறுமெனி லென்னுயிர்போப் விடுமிவ்
வெளியேன்மேற் கருணைபுரிந் தெழுந்தருளல் வேண்டும்
மதுதருணை வாரிசமு மலர்ந்ததரு ளுதயம்
வாய்ந்ததுசிற் சபைவிளக்கம் வயங்குகின்ற துலகில்
விதுதருணை வழுதளித்தி தன் னெண்ணமெலா முடிக்கும்
வேலையிது காலமென விளம்பவும்வேண் டுவதே தா. 7

கோளறிந்த பெருந்தவர்தங் குறிப்பறிந்தே யுதவுங்
கொடையாளா சிவகாமக் கொடிக்கிசைந்த கொழுநா
ஆளறிந்திங் கெனையாண்ட வரசேயென் னமுதே
அம்பலத்தே நடம்புரியு மரும்பெருஞ் ஜோதியனே
தாளறிந்தே னின்வரவு சத்தியஞ்சத் தியமே
சந்தேக மில்லையந்தத் தனித்திரு வரவின்
நாளறிந்து கொளல் வேண்டு நவிலுகநீ யெனது
நனவிடையா யினுமன்றிக் கனவிடையா யினுமே. 8

அன்றெனக்கு நீயுரைத்த தருணமிது வெனவே
அறிந்திருக்கின் றேனடியே னுயினுமென் மனந்தான்
கன்றெனச்சென் றடிக்கடியுட் கலங்குகின்ற தரசே
கண்ணுடைய கரும்பேயென் கவலைமனக் கலக்கம்
பொன்றிடப்பே ரின்பவெள்ளம் பொங்கிடவிவ் வுலகிற்
புண்ணியர்க ளுளங்களிப்பப் பொருந்திவிளங் கிடநீ
இன்றெனக்கு வெளிப்படவென் னிதயமலர் மிசைநின்
றெழுந்தருளி யருள்வதெலா மினிதருள்க விரைந்தே. 9

இதுதருண சமையாளற் கெழுந்தருளுந் தருணம்
இனித்தடையொன் றிலைகண்டா யென்மனனே தீதான்
மதுவிழுமோ ரீப்போலே மயங்காதே தயங்கி
வாடாதே மலங்காதே மலர்ந்துமகிழ்ந் திருப்பாய்
குதுகலமே யிதுதொடங்கிக் குறைவிலகா ணைபதுர
குருவாணை நமதுபெருங் குலதெய்வக் காணை
பொதுவில்நடம் புரிகின்ற புண்ணியனு னெனக்குட்
புணர்ந்துரைத்த திருவார்த்தை பொன்வார்த்தை யிதுவே. 10

அருட்பெருஞ்ஜோதி

33. சிவானந்தத்தழுந்தல்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

காரண காரிய கல்வித வெல்லாம்
கற்பித்தென் னுள்ளே கலந்துநிகாண் டென்னை
காரணர் கான்முகர் போற்றுமே லெற்றி
காதாந்த காட்டுக்கோர் காயக னெங்கோ
பூரணமா மின்பம் பொங்கித் ததும்பப்
புத்தமு தாமருட் போனகத் தூற்ற
ஆரண வீதியி லாடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதியென் னண்டவர் தீரே. 1

தேகமெப் போதுஞ் சிதையாத வண்ணஞ்
செய்வித் தெலாம்வல்ல சித்தியுந் தந்த
போகமெல் லாமென்றன் போகமே தாங்கிப்
போதாந்த காட்டைடப் புகுமே லெற்றி
ஏகசி வானந்த வாழ்க்கையி லென்றுங்
இன்புற்று வாழு மியல்பளித் தென்னை
ஆகம வீதியி லாடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதியென் னண்டவர் தீரே. 2

தானந்த மில்லாத தன்மையைக் காட்டுந்
சாகாத கல்வியைத் தந்தெனக் குள்ளே
தேனந்தத் தெள்ளமு தூற்றிப் பெருக்கித்
திக்கித்துச் சித்தஞ் சிவமய மாக்கி
வானந்த மாதியுங் கண்டுகொண் டழியா
வாழ்க்கையி லின்புற்றுச் சுத்தவே தாந்த
ஆனந்த வீதியி லாடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதியென் னண்டவர் தீரே. 3

சிற்சபை யின்பத் திருநடங் காட்டித்
தெள்ளமு தூட்டியென் சிந்தையைத் தேற்றிப்
பொற்சபை தன்னிற் பொருத்தியெல் லாஞ்செய்
பூரண சித்திமெய்ப் போகமுந் தந்தே
தற்பர மாமோர் சதானந்த நாட்டில்
சத்திய ஞக்கியோர் சுத்தசித் தாந்த
அற்புத வீதியி லாடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதியென் ணண்டவர் நீரே. 4

தத்துவ மெல்லாமென் தன்வச மாக்கிச்
சாகாவ ரத்தையுந் தந்தெனைத் தேற்றி
ஒத்துவந் துள்ளே கலந்துகொண் டெல்லா
உலகமும் போற்ற வுயர்நிலை யேற்றிச்
சித்தியெ லாஞ்செயச் செய்வித்துச் சத்துஞ்
சித்தும் வெளிப்படச் சுத்தநா தாந்த
அத்திரு வீதியி லாடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதியென் ணண்டவர் நீரே. 5

இத்தனை யென்றுநின் றெண்ணிட வொண்ணை
என்பிழை யாவையு மன்பினிற் கொண்டே
சத்திய மாஞ்சிவ சித்தியை யென்பால்
தந்தெனை யாவரும் வந்தனை செயவே
நித்திய ஞக்கிமெய்ச் சுத்தசன் மார்க்க
நீதியை யோதியோர் சுத்தபோ தாந்த
அத்தனி வீதியி லாடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதியென் ணண்டவர் நீரே. 6

மருந்து மணியிது மந்திர மிதுசெய்
வகையிது துறையிது வழியிது வெனவே
இருந்தெனு ளறிவித்துத் தெள்ளமு தளித்தே
என்னையுந் தன்னையு மேகம தாக்கிப்
பொருந்தியெ லாஞ்செய வல்லவோர் சித்திப்
புண்ணிய வாழ்க்கையில் நண்ணியோ காந்த
அருந்தவ வீதியி லாடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதியென் ணண்டவர் நீரே. 7

பதிசார வைத்துமுற் பசுநிலை காட்டிப்
பாசவி மோசனப் பக்குவ ஞக்கி
நிதிசார நானிந்த நீளுல கத்தே
நினைத்தன நினைத்தன நேருறப் புரிந்து
திதிசேர மன்னுயிர்க் கின்பஞ்செய் கின்ற
சித்தியெ லாந்தந்து சுத்தக லாந்த
அதிகார வீதியி லாடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதியென் ணண்டவர் நீரே. 8

இருளான மலமறுத் திசபரங் கண்டிட
எல்லா வுயிர்களு மின்புற்று வாழ
மருளான பற்பல மார்க்கங்க ளெல்லாம்
வழிதுறை தெரியாமல் மண்முடிப் போகத்
தெருளான சுத்தசன் மார்க்கம தொன்றே
சிறந்து விளங்கவோர் சிற்சபை காட்டும்
அருளான வீதியி லாடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதியென் ணுண்டவர் நீரே. 9

இருட்சாதி தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப் புன்செயி லெருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாங் குழிக்கோட்டி மண்முடிப் போட்டுத்
தெருட்சாருஞ் சுத்தசன் மார்க்கநன் னீதி
சிறந்து விளங்கவோர் சிற்சபை காட்டும்
அருட்ஜோதி வீதியி லாடச் செய்தீரே
அருட்பெருஞ் ஜோதியென் ணுண்டவர் நீரே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

34. திருமுன் விண்ணப்பம்

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

மாமழை மாமணிப் பொதுநடம் புரிகின்ற வள்ளலே பதிகின்ற
வாழை வான்பழச் சுவையெனப் பத்தர்தம் மனத்துனை நிற்கிப்போ
ஏழை நாயினேன் விண்ணப்பந் திருச்செவிக் கேற்றுநின் சேவல்வேண்டும்
கோழை மானிடப் பிறப்பிதி லுன்னருட் குருவருட் கொருமாறே. 1

பொன்னின் மாமணிப் பொதுநடம் புரிகின்ற புண்ணியா கனிக்கோங்கி
மன்னு வாழைபின் பழச்சுவை யெனப்பத்தர் மனத்துனை நிற்கிப்போய்
சின்ன நாயினேன் விண்ணப்பந் திருச்செவி சேர்த்தருள் செயல்வேண்டும்
இன்ன வென்னுடைத் தேகநல் லொளிபெறு மிபதுருக் கொருமாறே. 2

விஞ்சு பொன்னணி யம்பலத் தருணடம் விளைத்தருயிர்க் குயிராகி
எஞ்சு றுதலே நின்பருள் கின்றவன் னிறைவகின் னருளின்றி
அஞ்சு நாயினேன் விண்ணப்பந் திருச்செவி யமைத்தருள் செயல்வேண்டும்
துஞ்சு மிவ்வுட லிம்மையே துஞ்சிடாச் சுகவுடல் கொருமாறே. 3

ஓங்கு பொன்னணி யப்பலத் தருணட முயிர்க்கெலா மொளிவண்ணப்
பாங்கு மேவுநின் றிருடல்செய் யிறைவகின் பதமலர் பணிந்தேத்தித்
தேங்கு நாயினேன் விண்ணப்பந் திருச்செவி சேர்த்தருள் செயல்வேண்டும்
ஈங்கு வீழுட லிம்மையே வீழ்ந்திடா வியலுட லுறுமாறே. 4

இலங்கு பொன்னணிப் பொதுநடம் புரிகின்ற விறைவவிவ் வுலகெல்லாந்
துலங்கும் வண்ணநின் றருளுநின் றிருவடித் துணைதுணை யென்னுமற்
கலங்கு நாயினேன் விண்ணப்பங் திருச்செவி கலந்தருள் செயல்வேண்டும்
அலங்கு மிவ்வுட லிம்மையே யழிவுறு வருளுட லுறுமாறே. 5

சிறந்த பொன்னணித் திருச்சிற்றம் பலத்திலே திருநடம் புரிகின்ற
அறந்த வாதசே வடிமலர் முடிமிசை யணிந்தக மகிழ்ந்தேத்த
மறந்த நாயினேன் விண்ணப்பங் திருச்செவி மடித்தருள் செயல்வேண்டும்
பிறந்த விவ்வுட லிம்மையே யழிவுறுப் பெருநலம் பெறுமாறே. 6

விளங்கு பொன்னணித் திருச்சிற்றம் பலத்திலே விரைமலர்த் திருத்தாளை
உளங்கொ ளன்பர்தம் முளங்கொளு மிறைவனின் னெப்பிலாப் பெருந்தன்மை
களங்கொள் நாயினேன் விண்ணப்பங் திருச்செவி கலந்தருள் செயல்வேண்டுந்
துளங்கு மிவ்வுட லிம்மையே யழிவுறுத் தொல்லுட லுறுமாறே. 7

வாய்ந்த பொன்னணிப் பொதுநடம் புரிகின்ற வள்ளலே மறையெல்லாம்
ஆய்ந்து மின்னவென் றறிந்திலா நின்றிரு வடிமலர் பணியாமற்
சாய்ந்த நாயினேன் விண்ணப்பங் திருச்செவி தரித்தருள் செயல்வேண்டும்
வாய்ந்த விவ்வுட லிம்மையே திருவரு ளியலுட லுறுமாறே. 8

மாற்றி லாதபொன் னம்பலத் தருநடம் வயங்குகின் றிளிர்கின்ற
பேற்றி லாருயிர்க் கின்பரு ளிறைவனின் பெய்கழற் கணிமாலை
சாற்றி டாதவென் விண்ணப்பங் திருச்செவி தரித்தருள் செயல்வேண்டுங்
காற்றி லாகிய விவ்வுட லிம்மையே கதியுட லுறுமாறே. 9

தீட்டு பொன்னணி யம்பலத் தருநடஞ் செய்துயிர்த் திரட்கின்பங்
காட்டு கின்றதோர் கருணையங் கடவுணின் கழலிணை கருதாதே
நீட்டி நின்றவென் விண்ணப்பங் திருச்செவி நேர்ந்தருள் செயல்வேண்டும்
வாட்டு மிவ்வுட லிம்மையே யழிவுறு வளமடைந் திடுமாறே. 10

அருட்பெருஞ்ஜோதி

35. வாதனைக்கிரங்கல்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

படமாட்டேன் துயர்சிறிதும் படமாட்டே னினிநான்
பயப்படவு மாட்டேனுன் பதத்துணையே பிடித்தேன்
விடமாட்டே னேமாந்து விடமாட்டேன் கண்டீர்
மெய்ம்மையிது நும்மாணை விளம்பினனும் மடியேன்
கெடமாட்டேன் பிறர்மொழிகள் கேட்டிடவு மாட்டேன்
கிளரொளியம் பலத்தாடல் வளரொளிரும் மல்லல்
நடமாட்டே னென்னுளத்தே நான்சாக மாட்டேன்
நல்லதிரு வருளாலே நான்முனை னேனே. 1

சாகாத கல்வியிலே தலைகாட்டிக் கொடுத்தீர்
தடையறியாக் கால்காட்டித் தரம்பெறவு மளித்தீர்
மாகாத வுடையவனுன் மனங்கனிவித் தடியா
வானமுதும் மெய்ஞ்ஞான மருந்துமூளைப் புரிந்தீர்
போகாத புனலாலே சுத்தவுடம் பினராம்
புண்ணியரும் நண்ணரிய பொதுநிலையுந் தந்தீர்
நாகாதி பதிகளுநின் றேத்தவளர்க் கின்றீர்
நடராஜ ரேநுமக்கு நானெதுசெய் வேனே. 2

வேதாந்த நிலையுமத னந்தத்தே விளங்கும்
மெய்ந்நிலையுங் காட்டுவித்தீர் விளங்கிபசித் தாந்தப்
போதாந்த நிலையுமப்பாற் புகலரிதாம் பெரிய
பொருணிலையுந் தெரிவித்தீர் புண்ணியரே நுமது
பாதாந்த மறிவித்தீர் சுத்தவடி வடனே
பகர்பிரணை வாகாரப் பரிசுமெனக் களித்தீர்
நாதாந்தத் தனிச்செங்கோல் நான்செலுத்தக் கொடுத்தீர்
நடராஜ ரேநுமக்கு நானெதுசெய் வேனே. 3

ஆர்நீயென் றெதிர்வினவில் விடைகொடுக்கத் தெரியா
தறிவிலியேன் பொருட்டாக வன்றுவந்தென் றனக்கே
ஏர்நீடும் பெரும்பொருளொன் றீந்துமகிழ்ந் தாண்டீர்
இன்றும்வலிந் தெளியேன்பா லெய்திமொளி போங்கப்
பார்நீடத் திருவருளாம் பெருஞ்ஜோதி யளித்தீர்
பகருமெலாம் வல்லசித்திப் பண்புறவுஞ் செய்தீர்
நார்நீட நான்முனைப் நடம்புரிகின் றீரே
நடராஜ ரேநுமக்கு நானெதுசெய் வேனே. 4

பாயிரமா மறைகளெலாம் பாடுகின்ற பாட்டின்
பாட்டேயென் றறிந்துகொண்டேன் பரம்பொருளின் பெருமை
ஆயிரமா யிரங்கோடி நாவுடையோ ரெனினும்
அணுத்துணையும் புகலரிதே லந்தாவிச் சிறியேன்
வாயிரங்கா வகைபுகலத் துணிந்தேனென் னுடைய
மனத்தாசை யொருகடலோ வெழுகடலிற் பெரிதே
சேயிரங்கா முனமெடுத்தே யணைத்திடுத்தா யனையாய்
திருச்சிற்றம் பலம்விளங்குஞ் சிவஞான குருவே. 5

ஊனுரைக்கு முயிரளவு முலகளவு மறியேன்
உன்னளவை யறிவேனே யென்னளவை யறிந்தேனாய்
வானுரைக்க மாட்டாதே வருந்தினவே மறையும்
வகுத்துரைக்க வறியாதே மயங்கினவே யந்தோ

கோணுரைக்கும் குறிகுணங்கள் கடந்தபெரு வெளிமேல்
கூடாதே கூடிநின்ற கோவேகின் னியலை
நாணுரைக்க நாணுரோ நாணுரோ நவிலேன்
நானெனவே நாணுகின்றேன் நடராஜ குருவே. 6

கண்ணுடையீர் பெருங்கருணைக் கடலுடையீ ரெனது
கணக்கறிந்தீர் வழக்கறிந்தீர் களித்துவந்தன் றுரைத்தீர்
எண்ணுடையா ரெழுத்துடையா ரெல்லாரும் போற்ற
என்னிதய மலர்மிசைநின் றெழுந்தருளி வாமப்
பெண்ணுடைய மனங்களிக்கப் பேருலகங் களிக்கப்
பெத்தருமுத் தருமகிழப் பத்தரெலாம் பரவ
விண்ணுடைய வருட்ஜோதி விளையாடல் புரிய
வேண்டுமென்றே னென்பதன்முன் விரைந்திசைந்தீ ரதற்கே. 7

பொதுநடஞ்செய் மலரடியென் றலைமேலே யமைத்தீர்
புத்தமுத மளித்தீரென் புன்மையெலாம் பொறுத்தீர்
சதுமறையா கமங்களெலாஞ் சாற்றரிய பெரிய
தனித்தலைமைத் தந்தையரே சாகாத வரமும்
எதுநினைத்தே னினைத்தாங்கே யதுபுரியுந் திறமும்
இன்பவனு பவநிலையு மெனக்கருளு வதற்கே
இதுதருண மென்றேனு னென்பதன்முன் கொடுத்தீர்
என்புகல்வே னென்புடைநும் மன்பிருந்த வாறே. 8

கரும்பின்மிக வினிக்கின்ற சருணையமு தளித்தீர்
கண்ணனையீர் கனகசபை கருதிபகிற் சபைமுன்
துரும்பின்மிகச் சிறியேனு னன்றுகின்று துயர்க்தேதன்
துயரேலென் றெல்லையிட்டீர் துரையேயெவ் வெல்லை
விரும்புறவா யிற்றிதுதான் தருணமிந்தத் தருணம்
விரைந்தருள வேண்டுமென விளம்பிகின்றே னடியேன்
பெரும்பிழைக ளனைத்தினையும் பொறுத்தருளி யிங்நாள்
பெரிதளித்தீர் அருட்பெருமை பெற்றவனிற் பெரிதே. 9

அங்நாளி லடிச்சிறியே னம்பலவா யிலிலே
அருளாகினைந் தொருபுறத்தே யயர்ந்தழுது கின்றேன்
முன்னளில் யான்புரிந்த பெருந்தவத்தா லெனக்கு
முகமலர்ந்து மொழிந்தவருண் மொழியைநினைந் தந்தச்
செங்நாளை யெதிர்பார்த்தே பன்னாளுங் களித்தேதன்
சிந்தைமலர்ந் திருந்தேனச் செல்வமிகு திருநாள்
இங்நாளை யாதலினு லெனக்கருள்வீ ரென்றேன்
என்பதன்முன் னளித்தீர்நும் மன்புலகிற் பெரிதே. 10

அருட்பெருஞ்ஜோதி

36. முறையீடு

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

உருவா யருவா யொளியாய் வெளியாய் உலவா வொருசெ ருவா மழுகந்
தருவா யிதுவே தருணந் தருணந் தரியேன் சிறிதுந் தரிசே னினிநீ
வருவா யலையே லுயிர்வாழ் கலனுன் மதிசேர் முடிமேயும் பதிசே யடிசேன்
குருவாய் முனமே மனமே யிடமாக் குடிகொண் டவசெ அபயம் அபயம். 1

என்னே செய்வேன் செய்வகை யொன்றிங் கிதுவென் றருள்வா யிதுவெகருணைம்
மன்னே யயனுந் திருமா லவனும் மதித்தற் கரிய பெரிய பொருளே
அன்னே யப்பா வையா வரசே அன்பே யறிவே யமுதே யழியா
பொன்னே மணியே பொருளே யருளே பொதுவாழ் புனிதா அபயம் அபயம். 2

கருணை நிதியே யபயம் மபயம் கனகா சனசெ யபயம் மபயம்
அருணை டகனே யபயம் மபயம் அழகா வமலை யபயம் மபயம்
கருணை தவனே யபயம் மபயந் தனிகா யகனே யபயம் மபயம்
தெருணை நிறைவா யபயம் மபயந் திருவம் பலவா யபயம் மபயம். 3

மருளுந் துயருந் தவிருஞ் படியென் மனமன் றிடைதீ வருவா யபயம்
இருளும் பவமும் பெறுவஞ் சகமுந் தினனென் றிகழு லபயம் மபயம்
வெருளுங் கொடுவெம் புலியுங் கொலையும் விடமா தரருள்வா யபயம் மபயம்
அருளும் பொருளுந் தெருளுந் தருவாய் அபயம் மபய மபயம் மபயம். 4

இனியோ நிறையுந் தரியே னபயம் இதுகின் னருளே யறியும் மபயம்
கனியே னெனநீ நினையே லபயங் கவியே சருணைக் கடலே யபயம்
தனியேன் துணைவே றறியே னபயந் தருவீடா தருவீ தரவா வபயம்
துனியே யறவந் தருள்வா யபயந் சுகதா டகனே யபயம் மபயம். 5

அடியா நிதபாம் புயனே யபயம் அரசே யமுதே யபயம் மபயம்
முடியா தினிநான் றறியே னபயம் முறைமோ முறைதோ முகள்வா வபயம்
கடியே னலறு னபயம் மபயங் கருணை கரனே யபயம் மபயம்
தடியே லருள்வா யபயம் மபயந் தருணை தவனே யபயம் மபயம். 6

மலவா தனைதீர் கலவா வபயம் வலவா திருவம் பலவா பெயம்
உலவா நெறிநீ சொலவா வபயம் உறைவா யுயிர்வா பிறைவா வபயம்
பலவா குலநான் தரியேன் அபயம் பலவா பகவா பனவா அபயம்
நலவா வடியே னலவா அபயம் நடரா யகனே அபயம் அபயம். 7

கொடியேன் பிழைநீ குறியேல் அபயம் கொலைதீர் நெறியேன் குருவே அபயம்
முடியேன் பிறவே னெனைநின் னடியே முயல்வேன் செயல்வே றறியேன் அபயம்
படியே யறியும் படியே வருவாய் பதியே சுதியே பரமே அபயம்
அடியே னினியோ நிறையுந் தரியேன் அரசே யருள்வாய் அபயம் அபயம். 8

இடர்தீர் நெறியே யருள்வாய் அபயம் இனிநான் தரியேன் தரியேன் அபயம்
விடர்போ லெனைநீ நினையேல் அபயம் விடுவே னலனு னபயம் அபயம்
உடலோ டுறுதே வருளா வியுமிங் குனவே யெனவே யலவே அபயம்
சுடர்மா மணிதே அபயம் அபயம் சுகநா டகனே அபயம் அபயம். 9

குற்றம் பலவா யினுநீ குறியேல் குணமே கொளுமென் குருவே அபயம்
பற்றம் பலதீ யலதோர் நெறியும் பதியே யறியே னடியேன் அபயம்
சுற்றம் பலவு முனதே யெனவோ துணைவே றிலைநின் றுணையே அபயம்
சிற்றம் பலவா அருள்வா யினிநான் சிறிதுந் தரியேன் தரியேன் அபயம். 10

அருட்பெருஞ்ஜோதி

37. உண்மை கூறல்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங் கருணைசே தாயவ ரேயென்
கனிப்பெருந் தேறலை யவரே
பனிப்படுத் தென்னாண்ட பரம்பர ரேயெம்
பரிவறி புனரைப் பதிகிதம் பரரே
இனிப்பிற பொழுதெனக் தாழ்த்திடல் வேண்டாம்
நினைபவை நினையா யிக்குகண் டல்லால்
அனித்திப வுலகியற் பார்க்கவு மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீ ராணைநும் மீதே. 1

பெறுவது மரணமன்றிப் பிறிதொன்றும் விரும்பேன்
பெரல்லும் பேச்சன்றிப் பிறிதொன்றும் பேசேன்
உறவெனும் பாசமன்றிப் பிறிதொன்று முவதேன்
உன்னலுன் நினைவன்றிப் பிறிதொன்று முன்னேன்
மறவெறி சீர்த்திகளை வாழ்வித்துக் கொண்டீர்
வள்ளலே நுந்திரு வரவுகண் டல்லால்
அறுசுவை யுண்டிகொண் டருந்தவு மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீ ராணைநும் மீதே. 2

கரும்பிடை யிரதமுங் கனியிலின் சுவையுங்
காட்டியென் னுள்ளங் கலந்தினிக் கின்றீர்
விரும்பிநும் பொன்னடிக் காட்பட்டு நின்றேன்
மேல்விளை வறிகிலன் விச்சையொன் றில்லேன்
தருமப்பிரகாச சிறியனை யன்றுவந் தாண்டீர்
தூயநும் போருட் ஜோதிகண் டல்லால்
அரும்பெற வுண்டியை விரும்பவு மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீ ராணைநும் மீதே. 3

தடுத்தேனை யாட்கொண்ட தந்தைய ரேயெந்
தனிப்பெருந் தலைவரே சபைநடத் தவரே
தொடுத்தோன்று சொல்கிலேன் சொப்பனத் தேனுந்
தூயநுந் திருவரு ணேயம்விட் டறியேன்
விடுத்திடி லென்னேநீர் விடுப்பனென் னுயிரை
லெருவுளக் கருத்தெலாந் திருவுளத் தறிவீர்
அடுத்தவப் பாயலிற் படுக்கவு மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீ ராணைநும் மீதே. 4

காசையும் பணத்தையுங் கன்னியர் தமையுங்
காணியி னாட்சியுங் கருதிலேன் கண்டீர்
நேசநுந் திருவரு ணேசமொன் றல்லால்
நேசமற் றிலையிது நீரறி யீரோ
ஏசற லகற்றிவந் தென்னைமுன் னண்டீர்
இறையவ ரேயுமை யின்றுகண் டல்லால்
ஆசையிற் பிறரொடு பேசவு மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீ ராணைநும் மீதே. 5

என்பொரு ளென்னுட லென்னுயி ரெல்லாம்
ஈந்தன னும்மிடத் தெம்பெரு மானீர்
இன்பொடு வாங்கிக்கொண் டென்னையாட் கொண்டீர்
என்செய லொன்றிலை யாவுநுஞ் செயலே
வன்பொடு நிற்கிலீ ரென்பொடு கலந்தீர்
வள்ளலே நுந்திரு வரவுகண் டல்லால்
அன்பொடு காண்பாரை முன்பிட மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீ ராணைநும் மீதே. 6

திருந்துமென் னுள்ளத் திருக்கோயில் ஞான
சித்தி புரமெனச் சத்தியங் கண்டேன்
இருந்தருள் கின்றநீ ரென்னிரு கண்கள்
இன்புற வன்றுவந் தெழிலுருக் காட்டி
வருந்தலை யென்றெனைத் தேற்றிய வாறே
வள்ளலே யின்றுநும் வரவுகண் டல்லால்
அருந்தவர் நேரினும் பொருந்தவு மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீ ராணைநும் மீதே. 7

கரைக்கண மின்றியே கடனிலை செய்தீர்
கருணைக் கடற்குக் கரைக்கணஞ் செய்யீர்
உரைக்கண வாத வுயர்வுடை யீரென்
உரைக்கண விப்பல வுதவிசெய் கின்றீர்

வரைக்கண வெண்குண மாநிதி யானீர்
வாய்மையிற் குறித்தநும் வரவுகண் டல்லால்
அரைக்கண மாயினுந் தரித்திட மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீ ராணைநும் மீதே. 8

மடுக்கநும் பேரருட் டண்ணமு தெனக்கே
மாலையுங் காலையு மத்தியா னத்துங்
கடுக்கு மிரவினும் யாமத்தும் விடியற்
காலையி னுந்தந்தென் கடும்பசி தீர்த்தே
எடுக்குநற் றுயொடு மிணைந்துநிற் கின்றீர்
இறையவ ரேபுமை யிங்குகண் டல்லால்
அடுக்கவிழ் கலையெடுத் துடுக்கவு மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீ ராணைநும் மீதே. 9

கருத்துரைக் கின்றவர் களித்துரைக் கின்ற
காலையி தென்றே கருத்து ளறிந்தேன்
நிறுத்துரைக் கின்றபன் னோர்மைக ளின்றி
நீடொளிப் பொற்பொது நாடகம் புரிவீர்
செறுத்துரைக் கின்றவர் தேர்வதற் கரியீர்
சிற்சபை யீரெனச் சேர்ந்திடல் வேண்டும்
அறுத்துரைக் கின்றநான் பொறுத்திட மாட்டேன்
அருட்பெருஞ் ஜோதியீ ராணைநும் மீதே. 10

அருட்பெருஞ்ஜோதி

38. அருள்விளக்கமாலை

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அருள்விளக்கே யருட்சுடரே யருட்ஜோதிச் சிவமே
அருளமுதே யருணிறைவே யருள்வடிவப் பொருளே
இருள்கடிந்தென் னுளமுழுது மிடங்கொண்ட பதியே
என்னறிவே யென்னுயிரே யெனக்கினிய வுறவே
மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில்நடம் புரிகின்ற மணவாளா வெனக்கே
தெருளளித்த திருவாளா ஞானவுரு வாளா
தெய்வநடத் தரசேநான் செய்மொழியேற் றருளே. 1

கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே

மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே யெனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற வரசேயென் னலங்கலணிந் தருளே. 2

இன்புறுநா னெய்ப்பிடத்தே பெற்றபெரு வைப்பே
ஏங்கியபோ தென்றன்னைத் தாங்கியநற் றுணையே
அன்புறவென் னுட்கலந்தே யண்ணிக்கு மமுதே
அச்சமெலாந் தவிர்த்தென்னை யாட்கொண்ட குருவே
என்பருவங் குறியாதே யெனைமணந்த பதியே
இச்சையுற்ற படியெல்லா மெனக்கருளுந் துணையே
துன்பறமெய் யன்பருக்கே பொதுநடஞ்செய் பரசே
தூயதிரு வடிகளுக்கென் சொல்லுமணிந் தருளே. 3

ஓசித்தகோடி யனையேற்குக் கிடைத்தபெரும் பற்றே
உண்மையங்கும் போதுமெயக் கொழித்தருளுந் தெளிவே
பசித்தபொழு தெதிர்கிடைத்த பாற்சோற்றுத் திரளே
பயந்தபொழு தெல்லாமென் பயந்தவித்த துணையே
நசித்தவரை யெழுப்பியரு ணல்நியமா மருந்தே
நான்புணர நாணுகி ணண்ணியமெய்ச் சிவமே
கசித்தமனத் தன்பர்தொழப் பொதுநடஞ்செய் பரசே
கனித்தெனது சொன்மாலை கழுவிலணிந் தருளே. 4

மனமினைத்து வாடியபோ தென்னைதிரே கிடைத்து
வாட்டமெலாந் தவிர்த்தெனக்கு வாழ்வளித்த நிதியே
சினமுகத்தார் தமைக்கண்டு திகைத்தபொழு தவரைச்
சிரித்தமுகத் தவராக்க வெனக்களித்த சிவமே
அனமுகத்தா னரிமுதலோர் தருவிரிஞ்ச வெனைத்தே
அடிமுடிகள் காட்டுவித்தே யடிமைகொண்ட பதியே
இனமெனப்பே ரன்பர்தொழப் பொதுநடஞ்செய் பரசே
என்னுடைய சொன்மாலை யாவுமணிந் தருளே. 5

கங்குலிலே வருந்திபவென் வருத்தமெலாந் தணித்தே
காலையிலே யென்னுளத்தே கிடைத்தபெருங் களிப்பே
செங்குவளை மாலையொடு மல்லிகைப்பூ மாலை
சேர்த்தணிந்தென் றுளமணந்த தெய்வமண வாளா
எங்குமொளி மயமாகி நின்றநிலை காட்டி
என்னகத்தும் புறத்துநிறைந் திலங்கியமெய்ப் பொருளே
துங்கமுறத் திருப்பொதுவிற் றிருநடஞ்செய் பரசே
சொன்மாலை சூட்டுகின்றேன் றெளிலிலணிந் தருளே. 6

கரைந்துவிடா தென்னுடைய காவகத்தே யிருந்து
கனத்தசுவை தருகின்ற கற்கண்டே கனியாப்
விரைந்துவந்தென் னுன்பமெலாந் தவிர்த்தவரு ளமுதே
மெய்யருளே மெய்யாகி விளங்குகின்ற விளக்கே

திரைந்தவுடல் விரைந்துடனே பொன்னுடம்பே யாகித்
திகழ்ந்தழியா தோங்கவருள் சித்தேமெய்ச் சத்தே
வரைந்தென்னை மணம்புரிந்து பொதுநடஞ்செய் யரசே
மகிழ்வொடுநான் புனைந்திடுஞ்சொன் மாலையணிந் தருளே. 7

கதிக்குவழி காட்டுகின்ற கண்ணேயென் கண்ணிற்
கலந்தமணி யேமணியிற் கலந்தகதி ரொளியே
விதிக்குமுல குயிர்க்குயிராய் விளங்குகின்ற சிவமே
மெய்புனைந்தோர் கையகத்தே விளங்கியதீங் கனியே
மதிக்குமதிக் கப்புறம்போய் வயங்குதனி நிலையே
மறைமுடியா கமமுடிமேல் வயங்குமின்ப நிறைவே
துதிக்குமன்பர் தொழப்பொதுவில் நடம்புரியு மரசே
சொன்மாலை சூட்டுகின்றேன் தோளிலணிந் தருளே. 8

அண்டவள வெவ்வளவோ வவ்வளவு மவற்றில்
அமைந்தசரா சரவளவெவ் வளவோவவ் வளவும்
கண்டதுவா யாங்கவைகள் தனித்தனியே யகத்தும்
கான்புறத்து மகப்புறத்தும் புறப்புறத்தும் விளங்க
விண்டகுபே ரருட்ஜோதிப் பெருவெளிக்கு நடுவே
விளங்கியொரு பெருங்கருணைக் கொடிநாட்டி யருளாந்
தண்டகுமோர் தனிச்செங்கோல் நடத்திமன்றில் நடிக்குந்
தனியரசே யென்மாலை தோளிலணிந் தருளே. 9

நல்லார்சொல் யோகாந்தப் பதிகள்பல கோடி
நாட்டியதோர் போதாந்தப் பதிகள்பல கோடி
வல்லார்சொல் கலாந்தநிலைப் பதிகள்பல கோடி
வழுத்துமொரு நாதாந்தப் பதிகள்பல கோடி
இல்லார்ந்த வேதாந்தப் பதிகள்பல கோடி
இலங்குகின்ற சித்தாந்தப் பதிகள்பல கோடி
எல்லாம்பே ரருட்ஜோதித் தனிச்செங்கோல் நடத்தும்
என்னரசே யென்மாலை யினிது புனைந் தருளே. 10

நாட்டியதோர் சுத்தபரா சத்தியண்ட முதலா
ஞானசத்தி யண்டமது கடையாக விவற்றுள்
ஈட்டியபற் பலசத்தி சத்தாண்டப் பகுதி
எத்தனைபோ கோடிகளுந் தன்னிழற்கீழ் விளங்கச்
சூட்டியபொன் முடியிலங்கச் சமரசமெப்ஞ் ஞானச்
சுத்தசிவ சன்மார்க்கப் பெருநிலையி லமர்ந்த
நீட்டியபே ரருட்ஜோதித் தனிச்செங்கோல் நடத்தும்
நீதிநடத் தரசேயென் னெடுஞ்சொலணிந் தருளே. 11

தன்பெருமை தானறியாத் தன்மையனே யெனது
தனித்தலைவா வென்னுயிர்க்கு ளினித்தசனிச் சுவையே
நின்பெருமை நானறியே னுண்மட்டோ வறியேன்
நெடுமால்நான் முகன்முதலா மூர்த்திகளு மறியார்
அன்புறுமா கமமறைக ளறியாவே யெனினும்
அவருமவை களுஞ்சிலசொல் லணிகின்றார் தினைத்தே
என்பருவங் குறியாதே யெனையாண்ட வரசே
யாலுமவர் போலணிகின் றேனணிந்திங் கருளை. 12

உண்ணவுண்ணத் தெவிட்டாத தித்திக்குந் னுடம்பே
டுயிருணர்வுங் கலந்துகலந் துள்ளகத்தும் புறத்தும்
தண்ணியவன் னாட்பரவப் பொங்கியினைந் தாங்கே
ததும்பியென்றன் மயமெல்லாந் தன்மயமே யாக்கி
எண்ணியமெவன் னெண்ணமெலா மெய்தினைனி வாங்கி
இலங்குகின்ற சிவசருளா மின்னமுதக் கினிதே
புண்ணியமே யென்பெரிய பொருளினியென் னையே
புன்மொழியென் றிகழாதே புணர்த்துமகிழ்ந் தருளை. 13

நாட்டார்கள் சூழ்ந்துமதித் திடமனிமே டைபிசை
நடுவிருக்க வென்றனீய நாட்புயத்தே சிறுபுன
பாட்டாளர் பாடிதாறும் பரிசனிக்குந் துணைசெய
பன்னுமறைப் பாட்டேமெய்ப் பாட்டுனது பயனை
கூட்டாளா சிவகாமக் கொடிக்கிசைந்த கொழுந
கோவேயென் கணவாவென் குலவாவென் றுளமார
நீட்டாளர் புகழ்ந்தேத்த மணிமன்றில் நடிக்குந்
நிதிகடத் தரசேயென் னெடுமொழிகொண் டருளை. 14

கைக்கிசைந்த பொருளேயென் கருத்திசைந்த கனியே
கண்ணேயென் கண்களுக்கே கலந்தினைந்த கணமா
மெய்க்கிசைந்த வணிமேம்பா லேமெடையி னுடனே
மெய்கலந்த தருணத்தே விளைந்தபெருந் சுகமே
கெய்க்கிசைந்த வணவேயென் னெறிக்கிசைந்த நிலையே
நித்தியமே யெல்லாமாந் சத்தியமே யுலகில்
பொய்க்கிசைந்தார் காணாத பொதுநடஞ்செய் பரனே
புன்மொழியென் றிகழாதே புணர்த்துமகிழ்ந் தருளை. 15

கொடுத்திடாஅ னெடுத்திடவுங் குறையாத நிதியே
கொல்லாத நெறியேநித் தெல்லாஞ்செய் பதியே
மடுத்திடவு மடுத்தடுத்தே மடிப்பதற்குள் ளாசை
வைப்பதன்றி வெறுப்பறியா வண்ணநிறை யழகே
எடுத்தெடுத்துப் புகன்றாலு மூலவாத வொளியே
என்னுயிரே யென்னுயிருக் கிசைந்தபெருந் துணையே
தடுத்திடவல் லவரில்லாத் தனிமுதற்பே ரரசே
தாழ்மொழியென் றிகழாதே தரித்துமகிழ்ந் தருளை. 16

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரைபுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தேங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே யிளஞ்சூட்டி னிறக்கி
எடுத்த சுவைக் கட்டியினு மினித்திடுந் தெள்ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே
அடிமலர்க்கென் சொல்லணியா மலங்கலணிந் தருளே. 17

மலைவறியாப் பெருஞ்ஜோதி வச்சிரமா மலையே
மாணிக்க மணிப்பொருப்பே மரகதப்பேர் வரைபே
விலையறியா வுயராணிப் பெருமுத்துத் திரளே
விண்ணவரு நண்ணருமோர் மெய்ப்பொருளின் விளைவே
கொலையறியாக் குணத்தோர்தங் கூட்டுறவே யருட்செங்
கோல்நடத்து கின்றதனிக் கோவேமெய் யறிவால்
நிலையறிந்தோர் போற்றுமணி மன்றில்நடத் தரசே
நின்னடிப்பொன் மலர்களுக்கென் னெடுஞ்சொலணிந் தருளே. 18

கண்களிக்கப் புகைசிறிதுங் காட்டாதே புருவக்
கலைநடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே
பண்களிக்கப் பாடுகின்ற பாட்டில்விளை சுகமே
பத்தருளே தித்திக்கப் பழுத்ததனிப் பழமே
மண்களிக்க வான்களிக்க மணந்தசிவ காம
வல்லியென மறைகளெலாம் வாழ்த்துகின்ற வாமப்
பெண்களிக்கப் பொதுநடஞ்செய் நடத்தரசே நினது
பெரும்புகழ்சே வடிகளுக்கென் னரும்புமணிந் தருளே. 19

உருவெளியே யுருவெளிக்குள் ளுற்றவெளி யுருவே
உருநடுவும் வெளிநடுவு மொன்றுன வொன்றே
பெருவெளியே பெருவெளியில் பெருஞ்ஜோதி மயமே
பெருஞ்ஜோதி மயநடுவே பிறங்குதனிப் பொருளே
மருவொழியா மலரகத்தே வயங்குமொளி மணியே
மந்திரமே தந்திரமே மதிப்பரிய மருந்தே
திருவொழியா தோங்குமணி மன்றினடத் தரசே
சிறுமொழியென் றிகழாதே சேர்த்துமகிழ்ந் தருளே. 20

நானென்றுந் தானென்றும் நாடாத நிலையில்
ஞானவடி வாய்விளங்கும் வானநடு நிலையே
ஊனென்று முயிரென்றுங் குறியாமே முழுதும்
ஒருவடிவாந் திருவடிவ முவந்தளித்த பதியே
தேனென்றுங் கரும்பென்றுஞ் செப்பரிதாய் மனமுந்
தேகமுமுள் ளுயிருணர்வுந் தித்திக்குஞ் சுவையே
வானென்று மொளியென்றும் வகுப்பரிதாம் பொதுவில்
வயங்குநடத் தரசேயென் மாலிபுமேம் பருளே. 21

எட்டிரண்டு மென்னென்றுல் மயங்கியவின் றனக்தே
எட்டாத நிலையெல்லா மெட்டுவித்த குருதேவ
சுட்டிரண்டுங் காட்டாதே துரியநிலை நடுதேவ
சுகமயமாய் விளங்குகின்ற சுத்தபரம் பொருளே
மட்டிதுவென் றறிவதற்கு மாட்டாதே மறைகள்
மவுனமுறப் பரம்பரத்தே வயங்குகின்ற வொளிதே
தட்டறியாத் திருப்பொதுவில் தனிநடஞ்செய் பரதே
தாழ்மொழியென் றிகழாதே தரித்துமகிழ்த் தருளே. 22

சாதிகுலஞ் சமயமெலாந் தவிர்த்தெனேமே லேற்றித்
தனித்ததிரு வுருதனித்த தனித்தலைமைப் பொருளே
ஆதிநடுக் கடைகாட்டா தண்டபகி ரண்டம்
ஆருயிர்க ளகம்புறமற் நினைத்துநிறை வொளியே
ஓதியுணர்ந் தவரெல்லா மெனைக்கூட்க வெனைத்தான்
ஓதாம லுணர்ந்துணர்வா முருவுறச்செய் யுறவே
சோதிமய மாய்விளங்கித் தனிப்பொதுவில் நடிக்குந்
தூயநடத் தரசேயென் சொல்லுமணிக் தருளே. 23

அடிக்கடியென் னெகதனினும் புறத்தினினும் பேரா
அருளுருவாய்த் திரிந்துதிரிந் தருள்கென்று பொருளே
படிக்களவின் மறைமுடிமே லாகமத்தின் முடிமேல்
பதித்தபத மென்முடிமேற் பதித்தனினி பதிவே
பொடிக்கனகத் திருமேனிக் திருமாலங்கற் பூர்ப்
பொடிமணத்தே டகம்புறமும் புதுமணஞ்செய் யருளே
அடிக்கனக வம்பலத்தே திருச்சிற்றம் பலத்தே
ஆடல்புரி யரசேயென் னலங்கலணிக் தருளே. 24

அறையாத மிருபெருங்காற் றடித்தாலுந் திரியும்
அசையாதே யவியாதே யண்டபகி ரண்டத்
துறையாவும் பிண்டவகைத் துறைமுழுதுக் விளங்கச்
தூண்டாதே விளங்குகின்ற ஜோதியனி யினக்தே
மறையாதே குறையாதே களங்கமு மில்லாதே
மயக்காதே டனிக்காதே வயங்குகின்ற வருளே
இறையாயெவ் வுயிரகத்து மகப்புறத்தும் புறத்தும்
இலங்குநடத் தரசேயென் னிசையுமணிக் தருளே. 25

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்துணர்த்தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலுங் கட்டிபனைத் தாலும்
இத்தனைக்குந் தித்திக்கும் இனித்தசுவைக் கருப்பே
வேர்த்தாவி மயங்காது கனிந்தருங் கனியே
மெய்ம்மையறி வானந்தம் விளக்குமரு ளமுதே
தீர்த்தாவென் றன்பரெலாந் தொழப்பொதுவில் நடிக்குந்
தெய்வநடத் தரசேயென் சிறுமொழியேற் றருளே. 26

பற்றுதலும் விடுதலுமுள் ளடங்குதலு மீட்டும்
படுதலொடு சுடுதலும்புண் படுத்தலுமில் லாதே
உற்றுளிகொண் டோங்கியெங்கும் தன்மயமாய் ஞான
உருவாகி யுயிர்க்குயிரா போங்குகின்ற நெருப்பே
சுற்றுதலுந் தோன்றுதலு மறைதலும்விச் சென்றே
சுடுதலுமில் லாதென்றுந் துலங்குகின்ற சுடரே
மூற்றுமுணர்ந் தவருளத்தே திருச்சிற்றம் பலத்தே
முயங்குகுடத் தரசேயென் மொழியுமணிந் தருளே. 27

ஐம்பூத பரங்கண்முத லைங்குமவற் றுள்ளே
அடுத்திடுநன் ஞன்குமவை யகம்புறமேல் நடுக்கீழ்
கம்பூத பக்கமுத லெல்லாந்தன் மயமாய்க்
காணுமவற் றப்புறமுங் கலந்ததனிக் கணலே
செம்பூத வுலகங்கள் பூதாண்ட வண்களள்
செழித்திடநற் கதிர்பரப்பித் திகழ்கின்ற சுடரே
வெம்பூதத் தடைதவிர்த்தா ரேத்தமணி மன்றில்
விளங்குகுடத் தரசேயென் விளம்புமணிந் தருளே. 28

வாதுறுமிந் தியகரண பரங்கண்முத லைங்கும்
வகுத்திடுநன் ஞன்குமகம் புறமேல்கீழ் நடுப்பால்
ஓதுறுமற் றெல்லாந்தன் மயமாகக் கலந்தே
ஓங்கவற்றி னப்புறமு மொளிர்கின்ற வொளியே
சூதுறுமிந் திபகரனை லோகாண்ட மனைத்துஞ்
சுடர்பரப்பி விளங்குகின்ற சுயஞ்ஜோதிச் சுடரே
போதுறுவார் பலர்நின்று போற்றநடம் பொதுவில்
புரியுகடத் தரசேயென் புகலுமணிந் தருளே. 29

பகுதிபர முதலைங்கு மவற்றுறுநன் ஞன்கும்
பரவியெலாந் தன்மயமாம் படிநிறைந்து விளங்கித்
தகுதிபெறு மப்பகுதிக் கப்புறமுஞ் சென்றே
தனியொளிச்செங் கோல்நடத்தித் தழைக்கின்ற வொளியே
மிகுதிபெறு பகுதியுல கம்பகுதி யண்டம்
விளங்கவருட் சுடர்பரப்பி விளங்குகின்ற சுடரே
தொகுதிபெறு கடவுளர்க ளேத்தமன்றில் நடிக்குந்
துரியநடத் தரசேயென் சொல்லுமணிந் தருளே. 30

மாமாயைப் பரமாதி நான்குமவற் றுள்ளே
வயங்கியநன் ஞன்குந்தன் மயத்தாலே விளக்கி
ஆமாறம் மாமாயைக் கப்புறத்து நிறைந்தே
அறிவொன்றே வடிவாகி விளங்குகின்ற வொளியே
தாமாயா புவனங்கள் மாமாயை யண்டந்
தழைத்துவிளங் கிடக்கதிர்செய் தனித்தபெருஞ் சுடரே
தேமாலும் பிரமனுநின் றேத்தமன்றில் நடிக்குந்
தெய்வநடத் தரசேயென் சிறுமொழியேற் றருளே. 31

சுத்தபர முதல்நான்கு மவற்றுன்னன் னென்குந்
தூயவொளி வடிவாகத் துலங்குமோளி யாயிற்கை
நித்தபரம் பரநடுவாப் முதலாயந் தமதாய்
நீடியவோர் பெருநிலைமே லாடியபே ரொளிசேப
வித்தமுறுஞ் சுத்தபர மேலாகாண்ட மனைத்தும்
விளக்கமுறச் சுடர்பரப்பி விளங்குகின்ற சுடரே
சத்தியனூ னைந்தச் சித்தர்புகழ் பொதுவில்
தனித்தநடத் தரசேயென் சாற்றுமணிக் குருவே. 32

சாற்றுகின்ற கலையைந்திற் பரமாதி நான்குந்
தக்கவவற் றாடியிருந்த நன்னென்கு நிறைந்தை
ஊற்றுகின்ற வகம்புறமேல் நடிக்கிற்மடற் றனைத்தும்
உற்றிடுந்தன் மயமாகி யொளிர்கின்ற வொளிசேப
தோற்றுகின்ற கலைபுலகங் கலையண்ட முழுதுந்
துலங்குகின்ற சுடர்பரப்பிச் சூழ்கின்ற வடிசேர்
போற்றுகின்ற மெய்ப்பாடப் கனிப்பாடிந் தருளுந்
பொதுவினடத் தரசேயென் புகலுமணிக் குருவே. 33

நாட்டியவோங் காரணைந்திற் பரமுதலோர் நான்குந்
நன்னென்கு மாறிடத்தும் நயந்துநிலைபெற் றருளி
ஈட்டியசெம் பொருணிலையோ டிலக்கியமுட் கிளர்ந்த
இனிதுநின்று விளங்குகின்ற வின்பமய வொளிசேப
கூட்டியவோங் காரவுல கீகாங்காரவண்டம்
குடிவிளங்கக் கதிர்பரப்பிக் குலவுபெரு வடிசேர
பாட்டியல்கொண் டன்பரெலாம் போற்றுமன்றி னடஞ்செய்
பரமநடத் தரசேயென் பாட்டுமணிக் குருவே. 34

மன்னுகின்ற வபரசத்திப் பரமாதி யவற்றுள்
வகுத்தநிலை யாதியெலாம் வையங்கவரி னைவ்வாம்
பன்னுகின்ற பற்பலவாம் விசித்திரசித் திரங்கள்
பரவிவிளங் கிடவிளக்கிப் பதித்தருளு மடசேப
துன்னபர சத்தியுல கபரசத்தி யண்டந்
சுகம்பெறவே கதிர்பரப்பித் துலங்குகின்ற வடிசேர
உன்னுமன்ப ருளங்களிக்கத் திருச்சிற்பம் பயந்தை
ஓங்குநடத் தரசேயென் னுயிருமணிக் குருவே. 35

விளங்குபர சத்திகளின் பரமாதிபவற்றுள்
விரிந்தநிலை யாதிபலாம் விளங்கவொளி பரப்பிக்
களங்கமிலாப் பரவெளியி லற்புதநல் நடித்தான்
காட்டாதே நிறைந்தருங் கலந்திலம்பே ரொளிசேப
உளங்குலவு பரசத்தி யுலகமண்ட முழுதும்
ஓளிவிளங்கச் சுடர்பரப்பி போக்குதனிற் சுடரே
வளங்குலவு திருப்பொதுவில் மாநடஞ்செய் பரசே
மகிழ்ந்தினது சொல்லிலனுமோர் மாலைபணிக் குருவே. 36

தெரிந்தமகா சுத்தபர முதலுமவற் றுள்ளே
சிறந்தநிலை யாதிகளுந் தெளிந்துவிளங் குறவே
பரிந்தவொரு சிவவெளியி னீக்கமற நிறைந்தே
பரமசுக மயமாகிப் பரவிபபே ரொளியே
விரிந்தமகா சுத்தபர லோகாண்ட முழுதும்
மெய்யறிவா னந்தநிலை விளக்குகின்ற சுடரே
புரிந்ததவப் பயனுகும் பொதுவினடத் தரசே
புன்மொழியென் றிகழாதே புனைந்துமகிழ்ந் தருளே. 37

வாய்ந்தபர நாதமைந்திற் பரமுதலு மவற்றுள்
மன்னுநிலை யாதிகளும் வயங்கியிட நிறைந்தே
ஆய்ந்தபர சிவவெளியில் வெளியுருவா யெல்லாம்
ஆகியதன் னியல்விளக்கி யலர்ந்திடும்பே ரொளியே
தோய்ந்தபர நாதவுல கண்டமெலாம் விளங்கச்
சுடர்பரப்பி விளங்குகின்ற தூயதனிச் சுடரே
வேய்ந்தமணி மன்றிடத்தே நடம்புரியு மரசே
விளம்புறுமென் சொன்மாலை விளங்கவணிந் தருளே. 38

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கு மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கு மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கு நலமே
எல்லார்க்கும் பொதுவில்நட மிடுகின்ற சிவமே
என்னரசே யான்புகலு மிசையுமணிந் தருளே. 39

காட்சியுறக் கண்களுக்குக் களிக்கும்வண்ண முளதாய்க்
கையுமெய்யும் பரிசிக்கச் சுகபரிசத் ததுவாய்ச்
சூழ்ச்சியுற நாசிக்குச் சுகந்தஞ்செய் குவதாய்த்
தூயசெவிக் கினியதொரு சுகநாதத் ததுவாய்
மாட்சியுற வாய்க்கினிய பெருஞ்சுவை யீகுவதாய்
மறைமுடிமேல் பழுத்தெனக்கு வாய்த்தபெரும் பழமே
ஆட்சியுற வருளொளியாற் றிருச்சிற்றம் பலத்தே
ஆடல்புரி யரசேயென் னலங்கலணிந் தருளே. 40

திரையிலதா யழிவிலதாய்த் தோலிலதாய்ச் சிறிதுஞ்
சினைப்பிலதாய்ப் பனிப்பிலதாய்ச் செறிந்திடுகோ திலதாய்
விரையிலதாய்ப் புரையிலதாய் நாரிலதாய் மெய்யே
மெய்யாகி யருள்வண்ணம் விளங்கியின்ப மயமாய்ப்
பரைவெளிக்கப் பால்விளங்கு தனிவெளியிற் பழுத்தே
படைத்தவென துளத்தினிக்கக் கிடைத்ததனிப் பழமே
உரைவளர்மா மறைகளெலாம் போற்றமணிப் பொதுவில்
ஓங்குநடத் தரசேயென் னுரையுமணிந் தருளே. 41

கார்ப்பிலதாய்த் துவர்ப்பிலதா யுவர்ப்பிலதாய்ச் சிறிதுங்
கசப்பிலதாய்ப் புளிப்பிலதாய்க் காய்ப்பிலதாய்ப் பிறவில்
சேர்ப்பிலதா யெஞ்ஞான்றுந் திரிப்பிலதா யுயிர்க்கே
திணைத்தனையு கோய்தருமத் தீமையொன்று மிலதாய்ப்
பார்ப்பனியே னுள்ளகத்தே விளங்கியறி வின்பம்
படைத்திடமெய்த் தவப்பயனல் கிடைத்ததனிப் பழமே
ஓர்ப்புடையார் போற்றமணி மன்றிடத்தே வெளியாய்
ஓங்கியசே ரசேசையன் னுரையுமணிந் தருளே. 42

தேற்றியிலே ஞான்பசித்துப் படுத்திளைத்த தருணங்
திருவழுதார் திருக்கரத்தே திகழ்வள்ளத் தெடுத்தே
ஒற்றியிற்போப்ப் பசித்தனையோ வென்றனையங் கெழுப்பி
உவந்துகொடுத் தருளியவென் னுயிர்க்கினிதாந் தாயே
பற்றியவென் பற்றனைத்துந் தன்னடிப்பற் றுகப்
பரிந்தருளி யெனையின்ற பண்புடையெந் தாயே
பெற்றியுளார் சுற்றிநின்று போற்றமணிப் பொதுவில்
பெருநடஞ்செய் யரசேயென் பிதற்றுமுவந் தருளே. 43

தாய்முதலோ ரோடுசிறு பருவத்திற் றில்லைத்
தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது
வேய்வனைசே மற்காட்டாதே யென்றனக்கே யெல்லாம்
வெளியாகக் காட்டியவென் மெய்ப்புறவாம் பொருளே
காய்வகையில் லாதுளத்தே கனிந்தநறுங் கனியே
கனவிடத்தும் நனவிடத்து மெனைப்பிரியாக் களிப்பே
தூய்வகையோர் போற்றமணி மன்றினடம் புரியுஞ்
ஜோதிநடத் தரசேயென் சொல்லுமணிந் தருளே. 44

ஓங்கியவோர் துணையின்றிப் பாதியிர வதிலே
உபர்ந்தவொட்டுத் திண்ணையிலே படுத்தகடைச் சிறியேன்
தூங்கிமிகப் புரண்டுவிழத் தரையில்விழா தெனையே
தூக்கியெடுத் தணைத்துக்கீழ்க் கிடத்தியமெய்த் துணையே
தாங்கியவென் னுயிர்க்கின்பந் தந்தபெருந் தகையே
சற்குருவே நான்செய்பெருந் தவப்பயனும் பொருளே
வங்கியவென் னேக்கமெலாந் தவிர்த்தருளிப் பொதுவில்
இலங்குநடத் தரசேயென் னினைபுமணிந் தருளே. 45

தனிச்சிறியேன் சிறிதிங்கே வருந்தியபோ ததனைத்
தன்வருத்த மெனக்கொண்டு தரியாதக் கணத்தே
பனிப்புறுமவ் வருத்தமெலாந் தவிர்த்தருளி மகனே
பயமுனக்கென் னென்றென்னைப் பரிந்தணைத்த குருவே
இனிப்புறுகன் மொழிபுகன்றென் முடிமிசையே மலர்க்கால்
இணைபமர்த்தி யெனையாண்ட வென்னுயிர்நற் றுணையே
கனித்தநறுங் கனியேயென் கண்ணைசிற் சபையில்
கலந்தநடத் தரசேயென் கருத்துமணிந் தருளே. 46

ஒருமடந்தை வலிந்தணைந்து கலந்தகன்ற பின்னர்
உளம்வருந்தி யென்செய்தே தாமென்றயர்ந்த போது
பெருமடந்தைசேர் பிள்ளாயென் கெட்டதான்று மிலகம்
பெருஞ்செயலென் றெணைத்தேற்றிப் பிடித்தபெருந் தகையே
திருமடந்தை மாரிருவ ரென்னெதிரே நடிக்கச்
செய்தருளிச் சிறுமையெலாந் தீர்த்தருளிச் சிவமே
கருமடந்தீர்ந் தவரெல்லாம் போற்றமணி மன்றிற்
காட்டுநடத் தரசேயென் பாட்டுமணிக் தருளே. 47

இருளிரவி லொருமூலைத் திண்ணையில்கான் பசித்தே
இளைப்புடனே படுத்திருக்க வெணைத்தேடி வந்தே
பொருளுணவு கொடுத்துண்ணைச் செய்வித்தே பசியைப்
போக்கியருள் புரிந்தவென்றன் புண்ணியநற் றுணையே
மருளிரவு நீக்கியெல்லா வாழ்வுமெனக் கருளி
மணிமேடை நடுவிருக்க வைத்தவொரு மணியே
அருளுணவு மளித்தென்னை யாட்கொண்ட சிவமே
அம்பலத்தென் னரசேயென் னலங்கலணிக் தருளே. 48

நான்பசித்த போதெல்லாந் தான்பசித்த தாகி
நல்லுணவு கொடுத்தென்னைச் செல்வமுற வளர்த்தே
ஊன்பசித்த விளைப்பொன்றுந் தோற்றுத வகையே
ஒள்ளியதெள் ளமுதனைக்கிங் குவந்தளித்த வொளியே
வான்பதிக்கு நெடுமாற்கு நான்முகற்கு மரிதாம்
வாழ்வெனக்கே யாகியுற வமளித்த பதியே
தேன்பரித்த மலர்மணமே திருப்பொதுவில் ஞான
திருநடஞ்செய் யரசேயென் சிறுமொழிமேற் றருளே. 49

நடைக்குரிய வுலகிடையோர் நல்லநண்ப னெனை
நான்குறித்த பொருள்களெலாம் நாடிகைபான் றதிலை
கிடைக்கவெனக் களித்தகத்தும் புறத்துமகப் புறத்தும்
கிளர்ந்தொளிகொண் டோங்கியமெய்க் கினையெலும்பே ரொளியே
படைப்புமுத லிந்தொழிலுங் கொள்கவெனக் குறித்தே
பயந்தீர்த்தென் னுள்ளகத்தே யமர்ந்தனிப் பதியே
கடைப்படுமென் கரத்திலொரு கங்கணமுந் தரித்த
ககனநடத் தரசேயென் கருத்துமணிக் தருளே. 50

நீநினைத்த நன்மையெலாம் யாமறிந்தோம் நினையே
நேர்காண வந்தனமென் றென்முடிமேல் மலர்க்கால்
தானிலைக்க வைத்தருளிப் படுத்திடநான் றொழுக்கித்
தாள்கமைடுத் தப்புறத்தே வைத்திடத்தா னைகத்தே
வணினைத்தா யிவ்வளவு சுதந்தரமென் மகனை
எனக்கிலையோ வென்றருளி யெனையாண்ட குருவே
தேனிலைத்த திப்பாகே சர்க்கரையே கனியே
தெய்வநடத் தரசேயென் சிறுமொழிமேற் றருளே. 51

மூர்த்திகளு கெடுங்கால முயன்றுலு மறிய
முடியாத முடிவில்லா முன்னியவோர் தினத்தே
ஆர்த்தியுட னறியவெனக் களித்தருளி யடியேன்
அகத்தினைத்தன் னிடமாக்கி யமர்ந்தவருட் குருவே
பார்த்திபரும் விண்ணவரும் பணிந்துமகிழ்ந் தேத்தப்
பரகாத நாட்டரசு பாலித்த பதியே
வர்த்திகழுந் திருப்பொதுவி லின்பநடத் தரசே
என்னுடைய சொன்மாலை யிலங்கவணிந் தருளே. 52

இச்சையொன்று மில்லாதே யிருந்தவெனக் கிங்கே
இயலுறுசன் மார்க்கநிலைக் கிச்சையையுண் டாக்கித்
தச்சுறவே பிறமுயற்சி செயுந்தோறு மவற்றைத்
தடையாக்கி யுலகறியத் தடைதீர்த்த குருவே
எச்சமய முடிபுகளுந் திருச்சிற்றம் பலத்தே
இருந்தவென வெனக்கருளி யிசைவித்த விறையே
முச்சகமும் புகழுமணி மன்றிடத்தே நடிக்கும்
முதலரசே யென்னுடைய மொழியுமணிந் தருளே. 53

கையாத தீங்கனியே கபக்காத வமுதே
கரையாத கற்கண்டே [1] புரையாத கரும்பே
பொய்யாத பெருவாழ்வே புகையாத கனலே
போகாத புனலேயுள் வேகாத காலே
கொய்யாத நறுமலரே கோவாத மணியே
குளியாத பெருமுத்தே யொளியாத வெளியே
செய்யாத பேருதவி செய்தபெருந் தகையே
தெய்வநடத் தரசேயென் சிறுமொழியேற் றருளே. 54

எண்ணுத மந்திரமே யெழுதாத மறையே
எழுத மேனிலைநின் றிறங்காத நிறைவே
பண்ணுத பூசையிலே படியாத படிப்பே
பாராத பார்வையிலே பதியாத பதிப்பே
நண்ணுத மனத்தகத்தே நண்ணுத நலமே
நாடாத நாட்டகத்தே நடவாத நடப்பே
அண்ணலென் னப்பாவென் னையாவென் னரசே
அடியினைக்கென் சொன்மாலை யணிந்துமகிழ்ந் தருளே. 55

சாகாத கல்வியிலே தலையான நிலையே
சலியாத காற்றிடைநின் றெரியாத கனலே
எகாத புனலிடத்தே யிடியாத புவியே
ஏசாத மந்திரத்தே பேசாத பொருளே
கூகாவென் றெனைக்கூடி யெடுக்காதே யென்றுங்
குலையாத வடிவெனக்கே கொடுத்ததனி யமுதே
மாகாத லுடையார்கள் வழுத்தமணிப் பொதுவில்
மாநடஞ்செய் யரசேயென் மாலையுமேற் றருளே. 56

1 புரையாத என்பது—ஒப்பில்லாத.

சுத்தநிலை யனுபவங்கள் தோன்றுவெளி யாகித்
தோற்றும்வெளி யாகியவை தோற்றுவிக்கும் வெளிபாய்
நித்தநிலை களினடுவே நிறைந்தவெளி யாகி
நீயாகி நானுகி நின்றதனிப் பொருளே
சத்தியமே சத்துவமே தத்துவமே சுவமே
சமரசசன் மார்க்கநிலைத் தலைநின்ற சிவமே
புத்தமுதே சித்தியெலாம் வல்லதிருப் பொதுவில்
புனிதநடத் தரசேயென் புகலுமணிக் தருளே. 57

நானளக்குந் தோறுமதற் குற்றதுபோற் காட்டி
நாட்டியபின் னுருநிறைது மனவிலுரு தாகித்
தானளக்கு மளவதிலே முடிவதெனத் தோற்றித்
தன்னளவுங் கடந்தப்பால் மன்னுகின்ற பொருளே
வானளக்க முடியாதே வானனந்தங் கோடி
வைத்தபெரு வானளக்க வசமோவென் றுரைத்துத்
தேனளக்கு மறைகளெலாம் போற்றமணி மன்றில்
திகழுநடத் தரசேயென் சிறுமொழியேற் றருளே. 58

திசையறிய மாட்டாதே திகைத்தகிறி யேனைத்
தெளிவித்து மணிமாடத் திருத்தவிசி லேற்றி
நசையறியா நற்றவரு மற்றவருஞ் சூழ்ந்து
நயப்பவருட் சிவநிலையை காட்டவைத்த பதியே
வசையறியாப் பெருவாழ்வே மபலறியா வறிவே
வானுதவே யின்பவடி வாயிருந்த பொருளே
பசையறியா மனத்தவர்க்கும் பசையறிவித் தருளப்
பரிந்தநடத் தரசேயென் பாட்டுமணிக் தருளே. 59

என்னுயிரு மென்னுடலு மென்பொருளும் யானெ
இசைந்துகொடுத் திடவாங்கி யிட்டதன்பின் மகிழ்ந்தே
தன்னுயிருந் தன்னுடலுந் தன்பொருளு மெனக்கே
தந்துகலந் தெனைப்புணர்ந்த தனித்தபெருஞ் சுடரே
மன்னுயிருக் குயிராகி யின்பமுமாய் நிறைந்த
மணியேயென் கண்ணேயென் வாழ்முதலே மருந்தே
மின்னியபொன் மணிமன்றில் விளங்குநடத் தரசே
மெய்யுமணிக் தருள்வோயென் பொய்யுமணிக் தருளே. 60

மன்னுகின்ற பொன்வடிவு மந்திரமாம் வடிவும்
வான்வடிவும் கொடுத்தெனக்கு மணிமுடியுஞ் சூட்டிப்
பன்னுகின்ற தொழிலைந்துஞ் செய்திடவே பணித்துப்
பண்டுறவென் னகம்புறமும் விளங்குகின்ற பதியே
உன்னுகின்ற தோறுமெனக் குள்ளமெலா மினித்தே
ஊறுகின்ற தெள்ளமுதே பொருதனிப்பே ரொளியே
மின்னுகின்ற மணிமன்றில் விளங்குநடத் தரசே
மெய்யுமணிக் தருள்வோயென் பொய்யுமணிக் தருளே. 61

நன்மையெலாந் தீமையெனக் குரைத்தோடித் திரியும்
நாய்க்குலத்திற் கடையான நாயடியே னியற்றும்
புன்மையெலாம் பெருமையெனப் பொறுத்தருளிப் புலையேன்
பொய்புரைமெய் புரையாகப் புரிந்துமகிழ்ந் தருளித்
தன்மையெலா முடையபெருந் தவிசேற்றி முடியுந்
தரித்தருளி யைந்தொழில்செய் சதுரளித்த பதியே
இன்மையெலாந் தவிர்ந்தடியா ரின்பமுறப் பொதுவில்
இலங்குநடத் தரசேயென் னிசையுமணிந் தருளே. 62

விழுக்குலத்தா ருருவருக்கும் புழுக்குலத்திற் கடைபேன்
மெய்புரைபேன் பொய்புரையை வியந்துமகிழ்ந் தருளி
முழுக்குலத்தோர் முடிசூட்டி யைந்தொழில்செய் யெனவே
மொழிந்தருளி யெனையாண்ட முதற்றனிப்பே ரொளியே
எழுக்குலத்தில் புரிந்தமனக் கழுக்குலத்தார் தமக்கே
எட்டாத நிலையேயா னெட்டியபொன் மலையே
மழுக்குலத்தார் போற்றுமணி மன்றினடம் புரியும்
மாநடத்தென் னரசேயென் மாலையணிந் தருளே. 63

கலிக்கொடிகண் டறியாத புலிக்குடியிற் கடையேன்
கைதவனேன் பொய்த்தவமுங் கருத்திலுவந் தருளி
மலிக்குபர்மா தவிசேற்றி மணிமுடியுஞ் சூட்டி
மகனெனநீ வாழ்கவென வாழ்த்தியவென் குருவே
புலிக்கொடியா ரொருசிறிதும் புலப்படக்கண் டறியாப்
பொன்னேகா லுன்னுகின்ற புத்தமுதத் திரளே
விலிக்கறியா மாமணியே வெறுப்பறியா மருந்தே
வினைக்குநடத் தரசேயென் விளம்புமணிந் தருளே. 64

மதமென்றுஞ் சமயமென்றுஞ் சாத்திரங்க ளென்றும்
மன்றுகின்ற தேவரென்றும் மற்றவர்கள் வாழும்
பதமென்றும் பதமடைந்த பத்தரறு பயிக்கப்
பட்டவறு பவங்களென்றும் பற்பலவா விரிந்த
விதமொன்றுந் தெரியாதே மயங்கியவென் றனக்கே
லெட்டவெளி யாயறிவித் திட்டவரு ளிறையே
சதமென்றுஞ் சுத்தசிவ சன்மார்க்கப் பொதுவில்
தனிநடஞ்செய் யரசேயென் சாற்றுமணிந் தருளே. 65

என்னுரைசெ யெல்லாந்தன் னருள்வடிவந் தனக்கே
யெய்திடச்செப் திட்டருளி யெனையுமுடன் னிருத்தித்
தன்னுரைசெ யெல்லாமென் னுள்ளகத்தே வைத்துத்
தானுமுட னிருந்தருளிக் கலந்தபெருந் தகையே
அன்னைவென் குருபிரா யப்பாவென் னமுதே
ஆவாவென் றெனையாண்ட தேவாமெய்ச் சிவமே
பொன்னுரும் பொதுவில்நடம் புரிகின்ற வரசே
புண்ணியனே யென்மொழிப்பூங் கண்ணியுமேற் றருளே. 66

தன்னரசே செலுத்திநின்ற தத்துவங்க ளனைத்துந்
தனித்தனியென் வசமாகித் தாழ்ந்தேவலி யற்ற
முன்னரசும் பின்னரசும் நடுவரசும் போற்ற
முன்னுமண்ட பிண்டாங்க ளெவற்றினுமெப் பாலும்
என்னரசே யென்றுரைக்க வெனக்குமுடி சூட்டி
இன்பவடி வாக்கியென்று மிலங்கவைத்த சிவமே
என்னரசே யென்னுயிரே யென்னிருகண் மணியே
இணைபடிப்பொன் மலர்களுக்கென் விசைபுமணிக் தருளே. 67

பரவெளியே நடுவெளியே வுபசாந்த வெளியே
பாழ்வெளியே முதலாக வேழ்வெளிக்குப் பாலும்
விரவியமா மறைகளெலாந் தனித்தனிசென் றளந்தும்
மெய்ப்பளவு காணுதே மெளிற்றினைத்துப் போற்ற
உரவிலனை தேதடிபவவ் வெளிகளுக்குர்ர் வெளியாப்
ஓங்கியவவ் வெளிகளைத்தன் னுள்ளடக்கும் வெளியாய்க்
கரையறநின் றோங்குகின்ற சுத்தசிவ வெளியே
கனிந்தருடத் தரசேயென் கருத்துமணிக் தருளே. 68

வெய்யிலிலே நடந்திளைப்பு மேவியவக் கணத்தே
மிகுநிழலுந் தண்ணமுதுந் தந்தவருர் வினைவே
மையல்கெடு துற்றிடத்தே மடன்றையர்கள் தாமே
வலித்துவைச் செய்வித்த மாண்புமடைய நட்பே
கையறவாற் கலங்கியபோ தக்கணத்தே போந்து
கையறவு தவிர்த்தருளிக் காத்தளித்த துணையே
ஐபழுதே லென்றெனையாள் டழுதளித்த பதியே
அம்பலத்தி தன் னரசேயென் னலங்கலணிக் தருளே. 69

கோலம்புரிவார் தவ்ரமற்றை யெல்லாரு நினது
குலத்தாரே நீயெனது குலத்துமுதன் மகனே
மலைவறவே சுத்தசிவ சமரசசன் மார்க்கம்
வளரவளர்ந் திருக்கவென வாழ்த்தியவென் குருவே
நிலைவிழைவார் தமைக்காக்கு நித்தியனே யெல்லா
நிலைபுட்வினங் குறவருனில் நிறுத்தியசிற் குணனே
புலையறியாப் பெருந்தவர்கள் போற்றமணிப் பொதுவில்
புனிதநடத் தரசேயென் புகலுமணிக் தருளே. 70

உயிர்க்கோலையும் புலைப்புசிப்பு முடையவர்க ளெல்லாம்
உறவினத்தா ரல்லரவர் புறவினத்தா ரவர்க்குப்
பயிர்ப்புறுமோர் பசிதவிர்த்தன் மாத்திரமே புரிக
பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவி லிங்கே

நபப்புறுசன் மார்க்கமவ ரடையளவு மிதுதான்
நம்மாணை யென்றெனக்கு நவின்றவரு ளிறையே
I மயர்ப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில்நடம் புரியும்
மாநடத்தி தன் னரசேயென் மாலையணிந் தருளே. 71

வன்புடையார் கொலைகண்டு புலையுண்பார் சிறிதும்
மரபினரன் றுதலினுல் வகுத்தவவ ரளவில்
அன்புடைய வென்மகனே பசிதவிர்த்தல் புரிக
அன்றியருட் செயலொன்றுஞ் செயத்துணியே லென்றே
இன்புறவென் றனக்கிசைத்த வென்குருவே யெனைத்தான்
ஈன்றதனித் தந்தையே தாயேயென் னிறையே
துன்பறுமெய்த் தவர்சூழ்ந்து போற்றுதிருப் பொதுவில்
தூயநடத் தரசேயென் சொல்லுமணிந் தருளே. 72

கொடியவரே கொலைபுரிந்து புலைநுகர்வா ரெனினுங்
குறித்திடுமோ ராபத்தில் வருந்துகின்ற போது
படியிலதைப் பார்த்துகவேல் அவர்வருத்தந் துன்பம்
பயந்தீர்த்து விடுகவெனப் பரிந்துரைத்த குருவே
நெடியவரே நான்முகரே நித்தியரே பிறரே
நின்மலரே யென்கின்ற ரெல்லாருங் காண
அடியுமுமுயர் முடியுமெனக் களித்தபெரும் பொருளே
அம்பலத்தி தன் னரசேயென் னலங்கலணிந் தருளே. 73

தனையுடையா ரெல்லாருஞ் சமரசசன் மார்க்கம்
சார்ந்தவரே யிங்கவர்கள் தம்மோடுங் கூடி
நபமுறுகல் லருணைறியிற் களித்துவிளை யாடி
நன்னுகவென் றனக்கிசைத்த நண்புறுசற் குருவே
உபலுறுமென் னுயிர்க்கினிய வுறவேயென் னறிவில்
ஓங்கியபே ரன்பேயென் னன்பிலுறு மொளியே
மபலறுமெய்த் தவர்சூழ்ந்து போற்றுமணி மன்றில்
மாநடத்தி தன் னரசேயென் மாலையணிந் தருளே. 74

அருளுடையா ரெல்லாருஞ் சமரசசன் மார்க்கம்
அடைந்தவரே யாதலினு லவருடனே கூடித்
தெருளுடைய வருணைறியிற் களித்துவிளை யாடிச்
செழித்திடுக வாழ்கவெனச் செப்பியசற் குருவே
பொருளுடைய பெருங்கருணைப் பூரணமெய்ச் சிவமே
போதாந்த முதலாறும் நிறைந்தாளிரு மொளியே
மருளுடையார் தமக்குமரு ணீக்கமணிப் பொதுவில்
வயங்குநடத் தரசேயென் மாலையுமேற் றருளே. 75

1 மயர்ப்பு என்பது—சோர்வு.

வெம்மாலைச் சிறுவரொடும் விளையாடித் திரியும்
மிகச்சிறிய பருவத்தே வியந்துநினை நமது
பெம்மானென் றடிகுறித்துப் பாடும்வகை புரிந்த
பெருமானே நான்செய்த பெருந்தவமெய்ப் பயனே
செம்மாந்த சிறியேனைச் சிறுநெறியிற் சிறிதுஞ்
செலுத்தாமற் பெருநெறியிற் செலுத்தியநற் றுணையே
அம்மானே யென்னுயிர்க் கானபெரும் பொருளே
அம்பலத்தி தன் னரசேயென் னலங்கலணிந் தருளே. 76

ஆணவமா மிருட்டறையிற் கிடந்தசிறி யேனை
அணிமாயை விளக்கறையி லமர்த்தியறி வளித்து
நீணவமாந் தத்துவப்பொன் மேடைமிசை யேற்றி
நிறைந்தவரு ளமுதளித்து நித்தமுற வளர்த்து
மாணுறவெல் லாகலமுங் கொடுத்துலக மறிய
மணிமுடியுஞ் சூட்டியவென் வாழ்முதலாம் பதியே
ஏணுறுசிற் சபையிடதுந் தொற்சபையி னிடத்தும்
இலங்குநடத் தரசேயென் னிசையுமணிந் தருளே. 77

பான்மறுத்து விளையாடுஞ் சிறுபருவத் திடையே
பசருமூல கிச்சையொன்றும் பதியாமதன் னுளத்தே
மான்மறுத்து விளங்குதிரு வைந்தெழுத்தே பதிய
வைத்தபெரு வாழ்வேயென் வாழ்வினுறுஞ் சுகமே
மீன்மறுத்துச் சுடர்மயமாய் விளங்கியசீ தார் விண்ணை
விண்ணனைந்த முள்ளடங்க விரிந்தபெரு வெளியே
ஊன்மறுத்த பெருந்தவருக் கொளிவடிவங் கொடுத்தே
ஓங்குநடத் தரசேயென் னுரையுமணிந் தருளே. 78

மெய்ச்சுகமு முயிர்ச்சுகமு மிகுங்கரணச் சுகமும்
விளங்குபதச் சுகமுமதன் மேல்வீட்டிச் சுகமும்
எச்சுகமுந் தன்னிடத்தே யெழுந்தசுக மாக
எங்கணுமோர் நீக்கமற வெழுந்தபெருஞ் சுகமே
அச்சுகமு மடையறிவு மடைந்தவருங் காட்டா
ததுதானு யதுவதுவாய் அப்பாலாம் பொருளே
பொய்ச்சுகத்தை விரும்பாத புனிதர்மகிழ்ந் தேத்தும்
பொதுநடத்தி தன் னரசேயென் புகலுமணிந் தருளே. 79

அண்டவகை யெவ்வளவோ வவ்வளவு மவற்றில்
அமைந்தவுயி ரெவ்வளவோ வவ்வளவு மவைகள்
கண்டபொரு ளெவ்வளவோ வவ்வளவு மவற்றில்
கலந்தகலப் பெவ்வளவோ வவ்வளவு நிறைந்தே
விண்டகுமோர் நாதவெளி சுத்தவெளி மோன
வெளிஞான வெளிமுதலாம் வெளிகளெலாம் நிரம்பிக்
கொண்டதுவாய் விளங்குகின்ற சுத்தசிவ மயமே
குலவுநடத் தரசேயென் குற்றமுங்கொண் டருளே. 80

சத்தியஞான முகரனந்தர் நாரணர்மற் றுளவாங்
தலைவரவ ரவருலகிற் சார்ந்தவர்கள் பிறர்கள்
இத்திசையத் திசையாக விசைக்குமண்டப் பகுதி
எத்தனையோ கோடிகளி லிருக்குமுயிர்த் திரள்கள்
அத்தனைபேருண்டாலு மணுவளவுங் குறையா
தருள்வெளியில் ஒளிவடிவா யானந்த மயமாய்ச்
சுத்தசிவ வனுபவமாய் விளங்கியதெள் ளமுதே
நாயகடத் தரசேயென் சொல்லுமணிக் தருளே. 81

பொறிகரண முதல்பலவாந் தத்துவமு மவற்றைப்
புரிந்தியக்கி நடத்துகின்ற பூரணரு மவர்க்குச்
செறியுமுப காரிகளாஞ் சத்திகளு மவரைச்
செறுத்துகின்ற சத்தர்களுந் தன்னொளியால் விளங்க
அறிவறிவா யவ்வறிவுக் கறிவாயெவ் விடத்தும்
ஆனதுவாய்த் தானதுவா யதுவதுவாய் நிறைந்த
நெறிவழங்கப் பொதுவிலருட் டிருநடஞ்செய் யரசே
நின்னடியேன் சொன்மாலை நிலைக்கவணிக் தருளே. 82

உண்ணுகின்ற வூண்வெறுத்து வற்றியும்புற் றொழுந்தும்
ஒருகோடிப் பெருந்தலைவ ராங்காங்கே வருந்திப்
பண்ணுகின்ற பெருந்தவத்துங் கிடைப்பரிதாய்ச் சிறிய
பயல்களினுஞ் சிறியேற்குக் கிடைத்தபெரும் பதியே
நண்ணுகின்ற பெருங்கருணை யமுதளித்தென் னுளத்தே
நாணுகித் தாணுகி யமர்ந்தருளி நான்முன்
எண்ணுகின்ற படியெல்லா மருள்கின்ற சிவமே
இலங்குநடத் தரசேயென் னினையுமணிக் தருளே. 83

கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்
கூட்டமுமக் கூட்டத்தே கூவுகின்ற கலையுங்
கள்ளமுறு மக்கலைகள் காட்டியபல் கதியுங்
காட்சிகளுங் காட்சிதரு கடவுளரு மெல்லாம்
பிள்ளைவிளை யாட்டெனநன் கறிவித்திங் கெனையே
பிள்ளைமெனக் கொண்டுபிள்ளைப் பெயரிட்ட பதியே
தள்ளரிய மெய்யடியார் போற்றமணி மன்றில்
தனிநடஞ்செய் யரசேயென் சாற்றுமணிக் தருளே. 84

நால்வருண டாச்சிரம மாசார முதலா
நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல்வருணந் தேல்வருணங் கண்டறிவா ரிலைநீ
விழித்திதுபா ரென்றெனக்கு விளம்பியசற் குருவே
கால்வருணங் கலையாதே வீணிலலை யாதே
கான்பனவெல் லாமெனக்குக் காட்டியமெய்ப் பொருளே
மால்வருணங் கடந்தவரை மேல்வருணத் தேற்ற
வயங்குநடத் தரசேயென் மாலையணிக் தருளே. 85

எவ்விடத்து மெவ்வுயிர்க்கு மிலங்குசிவ மொன்றே
என்னுணை யென்மகனே யிரண்டில்லை டாங்கே
செவ்விடத்தே யருளொடுசேர்த் திரண்டெனக்கண் டறிதீ
திகைப்படைபே லென்றெனக்குச் செப்பியசற் குருவே
அவ்விடத்தே யுவ்விடத்தே யமர்ந்தருள்போற் காட்டி
அங்குமிங்கு மப்புறமு மெங்குநிறை பொருளே
ஓவ்விடச்சிற் சபையிடத்தும் பொற்சபையி னிடத்தும்
ஓங்குநடத் தரசேயென் னுரையுமணிக் தருளே. 56

இயல்வேதா கமங்கள்புரா ணங்களிதி காசம்
இவைமுதலா விந்திரசா லங்கடையா வுரைப்பார்
மயலொருநூல் மாத்திரந்தான் சாலமென வறிந்தார்
மகனேநீ நூலனைத்துஞ் சாலமென வறிக
செயலனைத்து மருளொளியாற் காண்கவென வெனக்கே
திருவுளம்பற் றியஞான தேசிகமா மணியே
அயலறியா வறிவுடையா ரெல்லாரும் போற்ற
ஆடுகின்ற வரசேயென் னலங்கலணிக் தருளே. 57

தோன்றியவே தாகமத்தைச் சாலமென வுரைத்தீதம்
சொற்பொருளை மிலக்கியமும் பொய்யெனக்கண் டறிதீயல்
ஊன்றியவே தாகமத்தி னுண்மைநினைக் காகும்
உலகறிவே தாகமத்தைப் பொய்யெனக்கண் டுணர்வாய்
ஆன்றதிரு வருட்செங்கோல் கினக்களித்தோம் நீயே
ஆள்கவரு ளொளியாலென் றளித்ததனிச் சிவதீம
என்றதிரு வமுதனைக்கு மீந்தபெரும் பொருளே
இலங்குநடத் தரசேயென் னிசையுமணிக் தருளே. 55

தான்முகங்கள் லுருத்திரர்கள் காரணரிக் திரர்கள்
சுவிலருகர் புத்தர்முதன் மதத்தலைவ ரெல்லாம்
வான்முகத்திற் றோன்றியரு ளொளிசிறிதே யடைந்து
வானகத்தும் வையகத்தும் மனப்போன படியே
தேன்முகந்துண் டவரெனவே விளையாடா நின்ற
சிறுபிள்ளைக் கூட்டமென அருட்பெருஞ்ஜோ தியினற்
றான்மிகக்கண் டறிகவெனச் சாற்றியசற் குருவே
சபையினிடத் தரசேயென் சாற்றுமணிக் தருளே. 59

தவறுத லேதாத்த சித்தாந்த முதலாச்
சாற்றுகின்ற வந்தமெலாந் தனித்துரைக்கும் பொருளே
இவறுத சுத்தசிவ சன்மார்க்க நிலையில்
இருந்தருளாம் பெஞ்ஜோதி கொண்டறிதல் கூடும்
எவராலும் பிறிதொன்றாற் கண்டறிதல் கூடா
தென்னுணை யென்மகனே அருட்பெருஞ்ஜோ தியைத்தான்
தவறுது பெற்றனீ வாழ்கவென்ற பதியே
சபையினடத் தரசேயென் சாற்றுமணிக் தருளே. 90

ஐயமுறே லென்மகனே யிப்பிறப்பிற் றூனே
அடைவமித்தல்லா மடைந்தனிகீ யஞ்சலியென் றருளி
வையமிசைத் தனியிருத்தி மணிமுடியுஞ் சூட்டி
வாழ்கவென வாழ்த்தியபின் வாழ்க்கைமுதற் பொருளே
துய்யவருட் பெருஞ்ஜோதி சுத்தசிவ வெளியே
சுகமயமே யில்லாஞ்செய் வல்லதனிப் பதியே
உய்யுநெறி காட்டிமணி மன்றிடத்தே நடிக்கும்
ஒருமைமடத் தரசேயென் னுரையுமணித் தருளே. 91

காலையிலே யென்றனக்கே கிடைத்திபெரும் பொருளே
களிப்பேயென் கருத்தகத்தே கனிந்தருங் கனியே
மேலையிலே யிம்மையிலே லெவ்வுலகிலே தவத்தால்
மேவுகின்ற பெரும்பயனும் விளைவையெலாந் தருமச்
சாலையிலே யொருபகலிற் றந்ததனிப் பதியே
சமரசசன் மார்க்கசங்கத் தலைமைமர்ந்த நிதியே
மாலையிலே சிற்சபைமாழி மாலையணிந் தாடும்
மாமடத்திற் னரசேயென் மாலையணித் தருளே. 92

சிற்பதமுந் தற்பதமும் பொற்பதத்தே காட்டுஞ்
சிவபதமே யானந்தத் தெய்ப்பாகின் பதமே
சொற்பதங்கள் கடந்ததன்றி முப்பதமுங் கடந்தே
துரியபத முங்கடந்த பெரியதனிப் பொருளே
நற்பதமென் முடிசூட்டிக் கற்பமெலாங் கனத்தே
ஞானநித்ய காலுக நல்கியவென் குருவே
பற்பதத்துப் பலவகையாலாம் பொற்றமணி மன்றிற்
பரிபுரடத் தரசேயென் பாடலணித் தருளே. 93

ஆதியிலே பெண்ணபான்டென் னறிவகத்தே யமர்ந்த
அப்பாவென் னன்பெரியன் குருபிரே பழுத்த
ஜோதியிலே விளையாடித் திரிந்தபின்னைப் பருவ
மிகப்பெரிய பருவமென வியந்தருளி பருளாஞ்
ஜோதியிலே யிழைபுனைச்சேய் தினைபமொழி மாலை
நிகரித்திடச்செய் தணிந்துகொண்ட துரையேயிற் பொதுவாம்
நீதியிலே நிறைந்தருடத் தரசேயின் றடிசேன்
நிகழ்த்தியசொன் மாலையுநீ திகழ்த்தியணித் தருளே. 94

கனைக்குவழக் கதுகடந்த பெருவெளிக்கு நடுவே
கதிர்பரப்பி விளங்குகின்ற கண்ணிறைந்த சுடரே
இனைக்கமுறு மன்பர்கள்தம் மிதயவெளி முழுதும்
இனிதுவிளங் குறநடுவே யிலங்குமொளி விளக்கே
மனைக்குநறு மணமேகின் மயமாயென் னுளத்தே
வயங்குதனிப் பொருளேயென் வாழ்வேயென் மருந்தே
பினைக்கறியாப் பெருந்தவர்கள் சூழமணி மன்றிற்
பெருநடஞ்செய் யரசேயென் பிதற்றுமணித் தருளே. 95

அடிச்சிறியே னச்சமெலா மொருகணைத்தே தீக்கி
அருளமுத மிகவளித்தே ணிபுமெனக் கணிந்து
கடிக்கமலத் தயன்முதலோர் கண்டுமிக விபப்பக்
கதிர்முடியுஞ் சூட்டியெனைக் களித்தான்ட பதியே
வடித்தமறை முடிவயங்கு மாமணிப்பொற் சுடரே
மனவாக்குக் கடந்தபெரு வானுவா மொளியே
படித்தலத்தார் வான்றலத்தார் பரவியிடப் பொதுவிற்
பரிந்தநடத் தரசேசயென் பாட்டுமணிக் தருளே. 96

எத்துணையுஞ் சிறியேனை நான்முகன்மால் முதலோர்
ஏறரிதாம் பெருநிலைமே லேற்றியுட னிருந்தே
மெய்த்துணையாங் திருவருட்பே ரமுதமிக வளித்து
வேண்டியவா றடிநாயேன் விளையாடப் புரிந்து
சுத்தசிவ சன்மார்க்க நெறியொன்றே யெங்குந்
துலங்கவருள் செய்தபெருஞ் ஜோதியினை பொதுவில்
சித்துருவாய் நடம்புரியு முத்தமநற் குருவே
சிற்சபையென் னரசேயென் சிறுமொழியேற் றருளே. 97

இருந்தவிடங் தெரியாதே யிருந்தசிறி யேனை
எவ்வுலகு மெள்ளவரு மேமத்திடமே லேற்றி
அருந்தவரு மயன்முகலாத் தலைவர்களை முனைத்தே
அதிசயிக்கத் திருவமுதும் அளித்தபெரும் பதியே
திருந்துமறை முடிப்பொருளே பொருண்முடிபி னணைத்தோர்
திகழுமுடிக் துட்கொண்ட சிவயோகப் பொருளே
பெருந்தவர்கள் போற்றமணி மன்றில்நடம் புரியும்
பெருநடத்தென் னரசேசயென் பிதற்றுமணிக் தருளே. 98

குணமறியேன் செய்தபெருங் குற்றமெலாங் குணமாக்
கொண்டருளி யென்னுடைய குறிப்பெல்லா முடித்து
மணமுறுபே ரருளின்ப வமுதமெனக் களித்து
மணிமுடியுஞ் சூட்டியெனை வாழ்கவென வாழ்த்தித்
தணவிலிலா தென்னுளத்தே தான்கலந்து நானுந்
தானுமொரு வடிவாகித் தழைத்தோங்கப் புரிந்தே
அணவுறுபே ரருட்ஜோதி யரசுகொடுத் தருளி
ஆடுகின்ற வரசேயென் னலங்கலணிக் தருளே. 99

தலைகாலிங் கறியாதே திரிந்தசிறி யேனைத்
தான்வலிந்தாட் கொண்டருளித் தடைமுழுதுந் தவிர்த்தே
மலைவறுமெய் யறிவளித்தே யருளமுத மருத்தி
வல்லபசத் திகளெல்லா மருவியிடப் புரிந்து
நிலைபுறவே தானுமடி யேனுமொரு வடிவாய்
நிறைபநிறை வித்துபர்ந்த நிலபதன்மே லமர்த்தி
அலர்தலைப்பே ரருட்ஜோதி யரசுகொடுத் தருளி
ஆடுகின்ற வரசேயென் னலங்கலணிக் தருளே. 100

39. வரம்பில்வியப்பு

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

பொன்புனை புயனு மபனுமற் றவரும் புகலரும் பெரியவோர் நிலையில்
இன்புரு வாகி யருளொடும் விளங்கி இபற்றலை யாதிபைத் தொழிலுந்
தன்பொதுச் சமுகத் தைவர்க ளியற்றத் தனியர சியற்றுமோர் தலைவன்
அன்பெனுங் குடிசை நுழைந்தன னுனல் அவன்றனை மறுப்பவர் யாரே. 1

மன்பதை வகுக்கும் பிரமர்நா ரணர்கள் மன்னுருத் திரர்களே முதலாம்
ஒன்பது கோடித தலைவர்க ளாங்காங் குறுபெருந் தொழில்பல விபற்றி
இன்புறச் சிறிதே கடைகக்கணித் தருளி இலங்குமோ ரிறைவனின் றடியேன்
அன்பெனுங் குடிசை நுழைந்தன னந்தோ அவன்றனை மறுப்பவர் யாரே. 2

தன்னிக ரில்லாத் தலைவனென் றரற்றித் தனித்தனி மறைகளா கமங்கள்
உன்னிநின் றுழி யுணர்ந்துணர்ந் துணரா ஒருதனிப் பெரும்பதி யுவந்தே
புன்னிக ரில்லாப் புலையனேன் பிழைகள் பொறுத்தருட் பூரண வடிவாய்
என்னுளம் புகுந்தே நிறைந்தன னந்தோ எந்தையைத் தடுப்பவர் யாரே. 3

பால்வகை யாழை பெண்கொலோ விருடைப் பாலதோ பாலுறு வதுவோ
எல்வகை யொன்றோ விரண்டதோ அறுதி இயற்கையோ வவதியிலி யல்போ
மேல்வகை யாதோ வெனமறை முடிகள் விளம்பிட விளங்குமோர் தலைவன்
மால்வகை மனத்தீ தனுளக்குடில் புகுந்தான் வள்ளலைத் தடுப்பவர் யாரே. 4

வரம்பெறு மான்ம வுணர்ச்சியுஞ் செல்லா வருபர வுணர்ச்சியு மாட்டா
பரம்பர வுணர்ச்சி தானுநின் றறியாப் பராபர வுணர்ச்சியும் பற்றா
உரம்பெறு வுணர்வார் யாரெனப் பெரியர் உரைத்திட வோங்குமோர் தலைவன்
கரம்பெறு கனிபோ லென்னுளம் புகுந்தான் கடவுளைத் தடுப்பவர் யாரே. 5

படைத்திடன் முதலாத் தொழில்புரிந் திலங்கும் பரம்பர வொளியெலா மணுவிற்
கிடைத்திடக் கிழ்மேல் நடுவெனக் காட்டாக் கினரொளி யாயொளிக் கெல்லாம்
அடைத்த காரணமாய்க் காரணங் கடந்த அருட்பெருஞ் ஜோதிபா மொருவன்
கடைத்தனிச் சிறியே னுளம்புகுந் தமர்ந்தான் கடவுளைத் தடுப்பவர் யாரே. 6

அளவெலாங் கடந்த பெருந்தலை யண்ட அடுக்கெலா மம்மவோ ரணுவின்
பிளவிலோர் கோடிக் கூற்றிலொன் றுகப் பேசரின் றுங்கிய பெரியோன்
களவெலாந் தவிர்த்தென் கருத்தெலா நிரப்பிக் கருணைபா ரமுதளித் தளமாம்
வளவிலே புகுந்து வளர்கின்றன் அந்தோ வள்ளலைத் தடுப்பவர் யாரே. 7

உள்ளவா மண்ட கோடி கோடிகளில் உளவுயிர் முழுவது மொருங்கே
கொள்ளைகொண் டிடினு மணுத்துணை யெனினுங் குறைபடாப் பெருங்கொடைத் தலைவன்
கள்ளநெஞ் சகத்தேன் பிழையெலாம் பொறுத்துக் கருத்தெலா மினிதுதந் தருளித்
தள்ளருந் திறத்தென் னுள்ளகம் புகுந்தான் தந்தையைத் தடுப்பவர் யாரே. 8

அறிந்தன வறிந்தாங் கறிந்தறிந் தறியா தையகோ வையகோ வறிவின்
மறிந்தன மயர்ந்தே மெனமறை யனந்தம் வாய்குழைந் துரைத்துரைத் துரைபும்
முறிந்திட வாளா விருந்தவென் றறிஞர் மொழியுமோர் தனிப்பெருந் தலைவன்
மெறிந்தென துளத்திற் சேர்ந்தன னவன்றன் திருவளைத் தடிப்பவர் யாரே. 9

கருமுதற் கருவாய்க் கருவினுட் கருவாய்க் கருவிலாங் காட்டுமோர் கருவாய்க்
குருமுதற் குருவாய்க் குருவிலாங் கிடைத்த கொள்கையாய்க் கொள்கையோ டளவா
அருமுத லருவா யல்லவா யப்பால் அருட்பெருஞ் ஜோதியாந் தலைவன்
மருவியென் னுளத்திற் புகுந்தன னவன்றன் வண்மையைத் தடிப்பவர் யாரே. 10

அருட்பெருஞ்ஜோதி

40. திருவடிப்புகழ்ச்சி 1

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

வானிருக்கும் பிரமர்களு நாரணரும் பிறரும்
மாதவம்பன் னுட்புரிந்து மணிமாட நிலைசெ
தேனிருக்கு மலரணைமேற் பளிக்கரையி னூடே
திருவடிசேர்ந் தருள்கவெனச் செப்பிவரும் திடமும்
நானிருக்குங் குடிசையிலே வலிந்துநுழைந் தினைக்கே
நல்லதிரு வருளமுத நல்கியதன் றியுமென்
னானிருக்கும் குடிசையிலு முவந்துநுழைந் தெளியேன்
உள்ளமெனுஞ் சிறுகுடிசை யுள்ளுநுழைந் தனையே. 1

படிசெய்பிர மன்முதலோர் பற்பலநாள் முபன்றே
பகலொளிசெய் நவமணிகள் பதித்தசிங்கா தனத்தே
அடிசெய்திதழுந் தருளியெமை யாண்டருளல் வேண்டும்
அரசேயென் றவரவரு மாங்காங்கே வருந்த
வடிசெய்மறை முடிநடுவே மன்றகத்தே நடிக்கும்
மலரடிகள் சிவப்பவொரு வளமுமிலா வசுத்தக்
குடிசைநுழைந் தனையேயென் றேசுவரே யன்பர்
கூசாம லென்னுளமாங் குடிசைநுழைந் தனையே. 2

உள்ளபடி யுள்ளதுவா யுலகமெலாம் புகிலும்
ஒருசிறிதுந் தடையிலதா யொளிபதுவே மபமாய்
வெள்ளமெனி நடுவுளதா யியற்கையிலே விளங்கும்
வேதமுடி யிலக்கியமா மேடையிலே யமர்ந்த
வள்ளன்மல ரடிசிவப்ப வந்தனது கருத்தின்
வண்ணமெலா முவந்தளித்து வயங்கியபே ரின்பங்
கொள்ளைகொளக் கொடுத்ததுதான் போதாதோ அரசே
கொடும்புலையேன் குடிசையிலுங் குலவிநுழைந் தருளே. 3

தடையறியாத் தகையினதாய்த் தன்னிகரில் லதுவாய்த்
தத்துவங்க ளனைத்திலுக்குந் தாரகமா யலைவக்கு
விடையறியாத் தனிமுதலாய் விளங்குவெளி நடுவே
விளங்குகின்ற சத்தியமா மேடையிலே யமர்ந்த
நடையறியாத் திருவடிகள் சிவந்திடவந் தெனது
நலிவினைத்துந் தவிர்த்தருளி ஞானவமு தளித்தாய்
கொடையிதுதான் போதாதே தா வென்னரசே யடியேன்
குடிசையிலுங் கோணுதே குலவிநழைந் தணையே. 4

இறையளவுந் துரிசிலதாய்த் தூய்மையதாய் நிறைவாய்
இயற்கையதா யனுபவங்க ளெலைவக்குமுத லிடமாய்
மறைமுடியோ டாகமத்தின் மணிமுடிமேன் முடிபாய்
மன்னுகின்ற மெய்ஞ்ஞான மணிமேடை யமர்ந்த
நிறையருட்சீ ரடிமலர்கள் சிவந்திடவந் தடியேன்
நினைத்தவெலாங் கொடுத்தருளி நிலைபெறச்செய் தணையே
குறைவிலதிப் பெருவரத்தான் போதாதே தா அரசே
கொடும்புலையேன் குடிசையிலுங் குலவிநழைந் தணையே. 5

உருவினதா யருவினதா யுருவருவா யுளர்வாய்
உள்ளதுவா யொருதன்மை யுடையபெரும் பதியாய்
மருவியவே தாந்தமுதல் வகுத்திடுங் கலாந்த
வரையதன்மே லருள்வெளியில் வயங்கிய மேடையிலே
திருவுறவே யமர்ந்தருளுந் திருவடிகள் பெயர்த்தே
சிறியேன்கண் ணடைந்தருளித் திருவினைத்துங் கொடுத்தாய்
குருவேயென் னரசேயிக் தமையாதே தா வடியேன்
குடிசையிலுங் கோணுதே குலவிநழைந் தணையே. 6

மணமுளதா யொளியுளதாய் மந்திரவா தரமாய்
வல்லதுவாய் நல்லதுவாய் மதங்கடந்த வரைப்பாய்
வணமுளதாய் வளமுளதாய் வயங்குமொரு வெளியில்
மணிமேடை யமர்ந்ததிரு வடிமலர்கள் பெயர்த்தே
எணமுளவின் பாலடைந்தென் னெண்ணமெலா மளித்தாய்
இங்கிதுதான் போதாதே தா வென்னரசே ஞான
குணமலையே யருளமுதே குருவேயென் பதியே
கொடும்புலையேன் குடிசையிலுங் குலவிநழைந் தணையே. 7

சிரம்பெறுவே தாகமத்தி னடிநடுவு முடியுஞ்
செல்லாத நிலையதுவா யெல்லாம்வல் லதுவாய்
பரம்பரமாய்ப் பரம்பரமேற் பரவுசிதம் பரமாய்ப்
பதிவெளியில் விளங்குகின்ற மதிசிவமே டையிலே
தரங்குலவ வமர்ந்ததிரு வடிகள்பெயர்த் தெனது
சார்படைந்தென் னெண்ணமெலாந் தந்தனையென் னரசே
குரங்குடனச் சிறியேனுக் கிங்கிதமோ தாதே தா
கொடும்புலையேன் குடிசையிலுங் குலவிநழைந் தணையே. 8

பற்றியபற் றனைத்தினையும் பற்றறவிட் டறிவாம்
பான்மையொன்றே வடிவாகிப் பழுத்தபெரி யவரும்
உற்றறிதற் கரியவொரு பெருவெளிமேல் வெளியில்
ஓங்குமணி மேடையமர்ந் தோங்கியசே வடிகள்
பெற்றறியப் பெயர்த்துவந்தென் கருத்தனைத்துங் கொடுத்தே
பிறவாம லிறவாமற் பிறங்கவைத்த வரசே
கொற்றமுனேன் றனக்கிதுதான் போதாதோ கொடியேன்
குடிசையிலுங் கோணாத குலவிறுமைந் தினையே. 9

கருவியொடு கரணமெலாங் கடந்துகடந் ததன்மேற்
காட்சியெலாங் கடந்ததன்மேற் காணாது கடந்து
ஒருநிலையி னனுபவமே யுருவாகிப் பழுத்த
உணர்ச்சியினுங் காணாம லோங்குமொரு வெளியில்
மருவியதோர் மேடையிலே வயங்கியசே வடிகள்
மலர்த்திவந்தென் கருத்தனைத்தும் வழங்கினையின் புறவே
குருமணியே யென்னரசே யெனக்கிதுபோ தாதோ
கொடும்புலையேன் குடிசையிலுங் குலவிறுமைந் தினையே. 10

அருட்பெருஞ்ஜோதி

41. திருவடிப் புகழ்ச்சி 2

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அடுத்தானை யடியேனை யஞ்சே லென்றிங்
காண்டானைச் சிறுநெறிக ளடைபா தென்னைத்
தடுத்தானைப் பெருநெறிக்குத் தடைதீர்த் தானைத்
தன்னருளுந் தன்பொருளுந் தானே யென்பாற்
கொடுத்தானைக் குற்றமெலாங் குணமாக் கொள்ளுங்
குணத்தானைச் சமயமதக் குழிநின் றென்னை
எடுத்தானை யெல்லாஞ்செய் வல்ல சித்தை
ஈந்தானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 1

விரித்தானைக் கருவியெலாம் விரிய வேதம்
விதித்தானை மெய்ந்நெறியை மெய்யே யெற்குத்
தெரித்தானை நடம்பொதுவிற் செய்கின் றானை
சிறியேனுக் கருளொளியாற் சிறந்த பட்டந்
தரித்தானைத் தானேநா னெனு மென்றுங்
தழைத்தானை யெனைத்தடுத்த தடைக ளெல்லாம்
எரித்தானை யென்னுயிருக் கின்பா னானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 2

நட்டானே நட்டமெலாம் நயந்து கொண்டே
நம்பகலாய் அருந்சிலென நவின்றென் சென்னி
தொட்டானே யெட்டிரண்டுஞ் சொல்லி னூனைத்
துண்டமிலாத் தொலைத்தானைச் சோர்ந்து தூங்க
வொட்டானே மெய்ப்பதிவே யுருவா யென்னுள்
உற்றானே யுணர்ந்தார்க்கு முணர்ந்து கொள்ள
எட்டானே யென்னளவி லெட்டி னானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 3

1சோற்றானைச் சோற்றினுறுஞ் சுகத்தி னானைத்
தூளக்கமிலாப் பாராஜை நீரா னூனைக்
காற்றானை வெளியானைக் கனலா னூனைக்
கருணைநெடுங் கடலானைக் களங்கர் காணாத்
தோற்றானை நான்காணாத் தோற்றி னூனைச்
சொல்லறியேன் சொல்லியபுன் சொல்லை யெல்லாம்
ஏற்றானை யென்னுளத்தி லெய்தி னானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 4

சேர்த்தானை யென்றனைத்தன் னன்ப போடு
செறிபாத மனஞ்செறியச் செம்பொற் னூளில்
ஆர்த்தானை யம்பலத்தி லாடா நின்ற
ஆனந்த நடத்தானை யருட்கண் ணிணக்கம்
பார்த்தானைப் பாராரைப் பாரா தானைப்
பார்ப்பறிவே பார்த்திருக்கப் பண்ணி யென்னை
ஈர்த்தானை யைந்தொழினீ யியற்றென் னூனை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 5

மூவாயானைச் சுத்தசிவ வெளியிற் னூனை
மூவாத்தானை மூவாத முதலா னூனைக்
சுவையானைக் காலக்கிமலைக் களவித்தென்னைக்
காத்தானை யென்பிழையைக் கருதிக் கோபம்
விளைவானைச் சிவபோகம் விளைவித் தானை
வெண்டாமை வெண்டவிலை மேவி யென்றும்
இளையானை மூத்தானை மூப்பி லானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 6

புயலானை மழைபானை யதிர்ப்பி னூனைப்
போற்றியமின் னெளியானைப் புனித னூனைச்
செயலானைச் செயலெல்லாந் திகழ்வித் தானைத்
திருச்சிற்றம் பலத்தானைத் தெளியா ருள்ளே
அயலானை யுறவானை யன்பு ளானை
அறிந்தாரை யறிந்தானை யறிவா லன்றி
இயலானை யெழிலானைப் பொழிலா னூனை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 7

1 சோறு என்பது—முத்தி.

தாயானைத் தந்தையெனக் காயி னுனைச்
சற்குருவு மானானைத் தமிழே னுள்ளே
மேயானைக் கண்காண விளங்கி னுனை
மெய்ம்மையெனக் களித்தானை வேதஞ் சொன்ன
வாயானை வஞ்சமிலா மனத்தி னுனை
வரங்கொடுக்க வல்லானை மனிமன் றன்றி
ஏயானைத் தூரியநடு விருக்கின் றுனை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 8

தழைத்தானைத் தன்னையொப்பா ரில்லா தானைத்
தானேதா னுலகினைத் தமிய னேனைக்
குழைத்தானை யென்கையிலோர் கொடைதந் தானைக்
குறைகொண்டு நின்றேனைக் குறித்து நோக்கி
அழைத்தானை யருளமுத மளிக்கின் றுனை
அச்சமெலாந் தவிர்த்தானை யன்பே யென்பால்
இழைத்தானை யென்னிதயத் திருக்கின் றுனை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 9

உடையானை யருட்ஜோதி யுருவி னுனை
ஓவானை மூவானை யுலவா வின்பக்
கொடையானை யென்குறைதீர்த் தென்னை யாண்டு
கொண்டானைக் கொல்லாமை குறித்தி டாதை
அடையானைத் திருச்சிற்றம் பலத்தி னுனை
அடியேனுக் கருளமுத மளிக்க வேபின்
னிடையானை யென்னுளை யெல்லாந் தந்த
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

42. திருவடிப் புகழ்ச்சி 3

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அறிந்தானை யறிவறிவுக் கறிவா னுனை
அருட்பெருஞ் ஜோதியினை யடியே னன்பிற்
செறிந்தானை யெல்லாஞ்செய் வல்ல சித்தாப்ச்
சிறந்தானைச் சிறுநெறியிற் சென்றூர் தம்மைப்
பிறிந்தானை யென்னுளத்திற் கலந்து கொண்ட
பிரியமுள்ள பெருமானைப் பிறவி தன்னை
எறிந்தானை யெனையெறியா தெடுத்தான் டானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 1

பாலானைத் தினனானைப் பழத்தினானைப்
பலனுறுசெங் கரும்பானைப் பாய்ந்து வேகாக்
காலானைக் கலிசாகாத் தலையி னானைக்
காயென்றுந் தலையென்றுங் கருதற் கெய்தா
மேலாகின மேனிலைமே லழுதா னானை
மேன்மேலு மெனதுளத்தே விளங்க லன்றி
எலானை யென்பாட லேற்றுக் கொண்ட
எம்மானைக் கண்குளிரத் திருக்கின் றேனை. 2

உள்ளானைக் கதவுதிறந் துள்ளே காண
உளமெனக்கே யுரைத்தானை யுரையார் பாட்டைக்
கொள்ளானை யென்பாட்டைக் குறிக்கொண் டானைக்
கோல்லாமை விரதமெனக் கொண்டார் தம்மைத்
தள்ளானைக் கோலடுலையைத் தள்ளா தாரைத்
தழுவானை யான்புரிந்த தவறு நோக்கி
என்னானை யிடர்கெடுத்த் திங்கென்னை யாண்ட
எம்மானைக் கண்குளிரத் திருக்கின் றேனை. 3

உறவானை யென்னுயிர்க்கு ளுயிரா னானை
உறுநினைதொறுஞ் செயினுமையை உன்னி யென்னை
மறவானை யுறுவாழ்வு வழங்கி னானை
வஞ்சகர்க்குத் திருக்கோயில் வழிக்க பாடந்
திறவானை யென்னளவிற் றிறந்து காட்டிச்
சிற்சபையும் பொற்சபையுஞ் சேர்வித் தானை
இறவாப்பி றவாவின யியற்கை யானை
எம்மானைக் கண்குளிரத் திருக்கின் றேனை. 4

அகத்தானைப் புறத்தானை யணுவா னானை
அணுவணுவிற் குள்ளனாய் நணுவ வானை யதனுள்ளா னானை
மகத்தானை பகற்கிறவிடமார் மகத்தா னானை
மாமகத்தா யிருந்தானை யெங்கா நின்ற
சகத்தானை யண்டமெலாந் தானே னானைத்
தனிப்பதினாம் பெருங்கருணைத் தாயா னானை
இகத்தானைப் பரத்தானைப் பொதுவி லாடும்
எம்மானைக் கண்குளிரத் திருக்கின் றேனை. 5

செய்யானைக் கரியானைப் பசுமையானைத்
திகழ்ந்திடுபொன் மையினானை வெண்மை யானை
பெய்பானைப் பொய்யானை மெய்ம்பொய் யில்லா
வெளியானை யொளியானை விளம்பு வார்க்குக்
கையானை யென்னையெடுத் தணைத்துக் கொண்ட
கையானை என்னையென்றுங் கையா தானை
எய்யானை எவ்வுலகு மேத்த லென்னை
எம்மானைக் கண்குளிரத் திருக்கின் றேனை. 6

மருந்தானை மணியானை வழுத்தா நின்ற
மந்திரங்க ளானனை வான நாட்டு
விருந்தானை யுறவானை நண்பி னானை
மேலானைக் கீழானை மேல்கீ ழென்னப்
பொருந்தானை யென்னுயிரிற் பொருந்தி னானைப்
பொன்னானைப் பொருளானைப் பொதுவா யெங்கும்
இருந்தானை யிருப்பானை யிருக்கின் றானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 7

ஆன்றானை யறிவானை யழிவி லானை
அருட்பெருஞ் ஜோதியினானை யலர்ந்த ஜோதி
மூன்றானை யிரண்டானை யொன்று னானை
முன்னானைப் பின்னானை மூட நெஞ்சில்
தோன்றானைத் தூயருளே தோன்றி னானைச்
சுத்தசிவ சன்மாக்கந் துலங்க வென்னை
ஈன்றானை யெல்லாமா யல்லா தானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 8

தோய்ந்தானை யென்னுளத்தே யென்பா லன்பாற்
சூழ்ந்தானை யான்றொடுத்த சொற்பூ மாலை
வேய்ந்தானை யென்னுடைய வினைதீர்த் தானை
வேதாந்த முடிமுடிமேல் விளங்கி னானை
வாய்ந்தானை யெப்பிடத்தே வைப்பா னானை
மணிமன்றி னடிப்பானை வரங்க ளெல்லாம்
ஈந்தானை யாய்ந்தவர்தம் மிதயத் தானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 9

நன்றானை மன்றகத்தே நடிக்கின் றானை
நாடாமை நாடலினை நடுவே போக்கி
நின்றானைப் பொன்றுத நிலையி னானை
நிலைபறிந்து நில்லாதார் நெஞ்சி லேசம்
ஒன்றானை யெவ்வுயிர்க்கு மொன்று னானை
ஒருசிறியேன் றனைநோக்கி யுளமீ யஞ்சேல்
என்றானை யென்றுமுள வியற்கை யானை
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. 10

அருட்பெருஞ்ஜோதி

43. திருவடிப் புகழ்ச்சி 4

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அருளமைக யருட்குருவை யருட்பெருஞ் ஜோதியையென்
அம்மையையென் னப்பனையென் ணண்டவனை யமுதைத்
தெருளுரவிமென் னுரிமையென்ற னுயிர்க்குயிரை யெல்லாஞ்
சிவப்பவல்ல தனித்தலைமைச் சித்தசிகா மணியை
மருவுபெரு வாழ்வையெல்லா வாழ்வுமெனக் களித்த
வாழ்முதலை மருந்தினைமா மணியையென்கண் மணியைக்
கருணைநடம் புரிகின்ற கனகசபா பதியைக் (1)
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.

திருத்தருவே தாத்தரிமொழி சித்தாந்த முதலாத்
தெரிந்தின்ற அற்கரிமலர்த் தேடியுங்கண் டறியா
ஒருத்தலையுள் நினைவினையெளி ருள்ளொளிக்குள் ளொளியை
உள்ளபடி யுள்ளவடிவ முடையபெருந் தகையை
நிருத்தரிவையெப்பொருளான நின்மலனைச் சிவனை
நித்தியனைச் சத்தியனை நிர்க்குணனை யெனது
குருத்தெளிவைச்சிற் சபையோங்குங் கடவுளையென் கண்ணைற் (2)
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.

பாட்டிலைந்து பரசமய பதியையருட் பதியைப்
பசுபதியைக் கனகசபா பதியையுமா பதியைத்
தெட்டெழுத்துப் பெருப்பதியைச் சிவபதியை யெல்லாஞ்
சிறப்பவல்ல தனிப்பதியைத் திகழ்தெய்வப் பதியை
ஆட்டியல்செய் தருள்பரம பதியைநவ பதியை
ஆய்ந்த காட்டுணர்த்தெ ரதிபதியை யரசைக்
காட்டியென்னை மணைட்புரிந்தென் கைபிடித்த பதியைக் (3)
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.

மதித்திடுதெ லரியவொரு மாணிக்க மணியை
வயங்கியபே ரொளியுடைய வச்சிரமா மணியைத்
துதித்திடுவே தாகமத்தின் முடிமுடித்த மணியைச்
சுயஞ்ஜோதித் திருமணியைச் சுத்தசிவ மணியை
விதித்தன்முதல் தொழிலியற்று வித்தகுரு மணியை
விண்மணியை யம்மணிக்குள் விளங்கியமெய்ம் மணியைக்
கதித்தசுக மயமணியைச் சித்தசிகா மணியைக் (4)
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.

மாற்றையளந் தறிந்திலமென் றருமறையா கமங்கள்
வழுத்தமணி மன்றுநங்கி வயங்குமருட் பொன்னை
ஆற்றன்மிகு பெரும்பொன்னை யைந்தாழிலும் புரியும்
அரும்பொன்னை யென்றன்னை யாண்டசெழும் பொன்னைத்
தேற்றமிகு பசும்பொன்னை செம்பொன்னை ஞான
சிதம்பரத்தே விளங்கிவளர் சிவமயமாம் பொன்னைக்
காற்றனலா காயமெலாங் கலந்தவண்ணப் பொன்னைக் (5)
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.

ஆய்தருவே தாகமத்தி னடிமுடிநின் றிலங்கும்
அரிபரெரும் பொருளையவைக் கனுபவமாம் பொருளை
வேய்தருதத் துவப்பொருளைத் தத்துவங்கள் விளங்க
விளங்குகின்ற பரம்பொருளைத் தத்துவங்க ளனைத்துந்
தோய்தரலில் லாததனிச் சுயஞ்ஜோதிப் பொருளைச்
சுத்தசிவ மயமான சுகாதிதப் பொருளைக்
காய்தரலில் லாதென்னைக் காத்தவருட் பொருளைக் (6)
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.

திருத்தமிகு முனிவர்களுந் தேவர்களு மழியாச்
சித்தர்களுஞ் சிருட்டிசெயுந் திறத்தர்களுங் காக்கும்
அருத்தமிகு தலைவர்களு மடக்கிடல்வல் லவருஞ்
அலைபுரிகின் றவர்களுமுள் ளடுக்கிரகிப் பவரும்
பொருத்துமற்றைச் சத்திகளுஞ் சத்தர்களு மெல்லாம்
பொருளெதுவோ வெனத்தேடிப் போகவவ ரவர்தங்
கருத்திலொளித் திருக்கின்ற கள்வனையென் கண்ணுற் (7)
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.

கோணுத நிலையினராய்க் குறிகுணங்கண் டிடவுங்
கூடாத வண்ணமலக் குகைமுதலா மிடத்தில்
ஊணுதி விடுத்துயிப்பை யடக்கிமன மடக்கி
உருபோறிக ளடக்கிவரு முகங்கள்பல கோடித்
தூணுக வசைதலின்றித் தூங்காது விழித்த
தூயசதா நிட்டர்களுந் தூரியநிலை யிடத்துங்
காணுத வகையொளித்த கள்வனையென் கண்ணுற் (8)
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.

நீட்டாய சித்தாந்த நிலையினிடத் தமர்ந்தும்
நிகழ்கின்ற வேதாந்த நெறியினிடத் திருந்தும்
ஆட்டாய போதாந்த மலைவறுநா தாந்தம்
ஆதிமற்றை யந்தங்க ளனைத்தினுமுற் றறிந்தும்
வேட்டாசைப் பற்றனைத்தும் விட்டுலகம் போற்ற
வித்தகராய் விளங்குகின்ற முத்தர்கட்குந் தன்னைக்
காட்டாம லொளித்திருக்குங் கள்வனையென் கண்ணுற் (9)
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.

மருணைறிசேர் மலவுடம்பை யழியாத விமல
வடிவாக்கி யெல்லாஞ்செய் வல்லசித்தாம் பொருளைத்
தருணமது தெரிந்தெனக்குத் தானேவந் தளித்த
தபோநிதியை யெனையீன்ற தந்தையையென் னுயைப்
பொருணிறைசிற் றம்பலத்தே விளங்குகின்ற பதியைப்
புகலரிதாந் சுத்தசிவ பூரணமெய்ச் சுகத்தைக்
கருணைபருட் பெருஞ்ஜோதிக் கடவுளை யென் கண்ணைற் (10)
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.

அருட்பெருஞ்ஜோதி

44. திருவடிப் புகழ்ச்சி 5

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அருளைலா மளித்த வம்பலத் தமுதை
அருட்பெருஞ் ஜோதியை யரசை
மருளைலாத் தவிர்த்து வாழ்வித்த மருந்தை
வள்ளலை மாணிக்க மணியைப்
பொருளைலாங் கொடுத்தென் புந்தியிற் கலந்த
புண்ணிய நிதியைமெய்ப் பொருளைத்
திருவருளம் வல்ல சித்தை மெய்ஞ்ஞான
சிவபத்தைக் கண்டுகொண் டேனே. 1

துன்பெலாந் தவிர்த்த துணையையென் னுள்ளத்
துறுசெலாந் தொலைத்த மெய்ச்சுகத்தை
என்பொலா மணியை யென்சிகா மணியை
யென்னிருகண் ணுண்மா மணியை
அன்பெலா மளித்த வம்பலத் தமுதை
அருட்பெருஞ் ஜோதியை யடியேன்
என்பெலா முருக்கி யின்பெலா மளித்த
எந்தையைக் கண்டுகொண் டேனே. 2

சிதத்திலே யூறித் தெளிந்தசிதல் எழுதைச்
சிற்றிலாம் வல்லமெய்ச் சிவத்தைப்
பதத்திலே பழுத்த தனிப்பெரும் பழத்தைப்
பரம்பர வாழ்வையெம் பதியை
மதத்திலே மயங்கா மதியிலே விளைந்த
மருந்தைமா மந்திரத் தன்னை
இதத்திலே யென்னை யிருத்தியாட் கொண்ட
இறைவனைக் கண்டுகொண் டேனே. 3

உணர்ந்தவ ருளப்போன் றென்னுளத் தடர்ந்த
ஒருபெரும் பதியையென் னுவப்பைப்
புணர்ந்தினைக் கலந்த போகத்தை யெனது
பொருளையென் புண்ணியப் பயனைக்
கொணர்ந்தொரு பொருளென் கரத்திலே கொடுத்த
குருவையென் குணப்பெருங் குன்றை
மணந்தசங் குவளை மலரெனக் களித்த
வள்ளலைக் கண்டுகொண் டேனை. 4

புல்லிய நெறிநீத் தினையெடுத் தாண்ட
பொற்சபை யப்பனை வேதஞ்
சொல்லிய படியென் சொல்லிலாங் கொண்ட
ஜோதியைச் சோதியா தென்னை
மல்லிகை மாலை யணிந்துளே கலந்து
மன்னிய பதியையென் வாழ்வை
எல்லியு மிரவு மென்னினிட் டகலா
இறைவனைக் கண்டுகொண் டேனை. 5

பண்ணிய தவமும் பலமுமெப்ப் பலஞ்செய்
பதியுடா மொருபசு பதியை
நண்ணியென் னுளத்ததுத் தன்னுள மாக்கி
நல்கிய கருணைதா யகனை
எண்ணியபடியே யெனக்கருள் புரிந்த
இறைவனை மறைமுடி யிலங்குந்
தண்ணிய விளக்கைத் தன்னிக ரில்லாத்
தந்தையைக் கண்டுகொண் டேனை. 6

பெண்மையை வயங்கு மாண்மையை யனைத்தும்
பிறங்கிய பொதுமையைப் பெரிய
தண்மையை யெல்லாம் வல்லவர் சித்த
சாமியைத் தயாநிதி தன்னை
வண்மையை யழியா வரத்தினை ஞான
வாழ்வையென் மதியிலே விளங்கும்
உண்மையை யென்ற னுபிரையென் னுபிரா
ஒருவனைக் கண்டுகொண் டேனை. 7

ஆதியை யாதி யந்தமீ தெனவுள்
ளறிவித்த வறிவையெ னன்பை
ஜோதியை யெனது துணையையென் சுகத்தைச்
சுத்தசன் மார்க்கத்தின் துணிபை
நீதியை யெல்லா நிலைகளுங் கடந்த
நிலையிலே நிறைந்தமா நிதியை
ஓதியை யோதா துணர்த்திய வொளியை
ஒளிதனைக் கண்டுகொண் டேனை. 8

என்செய லினைத்துந் தன்செய லாக்கி
என்னைவாழ் விக்கின்ற பதியைப்
பொன்செயல் வகையை புணர்த்தியென் னுளத்தே
பொருந்திய மருந்தையென் பொருளை
வன்செய லகற்றி யுலகெலாம் விளங்க
வைத்தசன் மார்க்கசற் குருவைக்
கொன்செய லொழித்த சத்திய ஞானக்
கோயிலிற் கண்டுகொண் டேனே. 9

புன்னிக ரில்லேன் பொருட்டிருட் டிரவிற்
போந்தரு ளளித்தசற் குருவை
கன்னிகர் மனத்தைக் கரைத்தெனுட் கலந்த
கருணையங் கடவுளைத் தனது
சொன்னிக ரெனவென் சொல்லெலாங் கொண்டே
தோளுறப் புணர்ந்தமைப்த் துணையைத்
தன்னிக ரில்லாத் தலைவனை யெனது
தந்தையைக் கண்டுகொண் டேனே. 10

ஏங்கலை மகனே தூங்கலை யெனவந்
தெடுத்தினை யணைத்தவென் தாயை
ஓங்கிய வெனது தந்தையை யெல்லாம்
உடையவென் னுருபெரும் பதியைப்
பாங்கனி லென்னைப் பரிந்துகொண் டெல்லாப்
பரிசுமிங் களித்ததற் பரத்தைத்
தாங்குமோர் நீதித் தனிப்பெருங் கருணைத்
தலைவனைக் கண்டுகொண் டேனே. 11

துன்புறேல் மகனே தூங்கலை யெனவென்
சோர்வெலாந் தவிர்த்தருட் ருணை
அன்புளே கலந்த தந்தையை யென்றன்
ஆவியைப் பாவியே னுளத்தை
இன்பிலே நிறைவித் தருளுரு வாக்கி
இனிதமர்ந் தருளிய விறையை
வன்பிலாக் கருணை மாநிதி யெனுமென்
வள்ளலைக் கண்டுகொண் டேனே. 12

நனவினு மெனது கனவினு மெனக்கே
நண்ணிய தண்ணிய வமுதை
மனனுறு மயக்கந் தவிர்த்தருட் ஜோதி
வழங்கிய பொருந்தயா நிதியைச்
சினமுத லாறுந் தீர்த்துளே யமர்ந்த
சிவகுரு பதியையென் சிறப்பை
உனலரும் பெரிய துரியமேல் வெளியில்
ஒளிதனைக் கண்டுகொண் டேனே. 13

கரும்பிலின் சாற்றைக் கனிந்தமுக் கனியைக்
கருதுகோற் றேனறுஞ் சுவையை
அரும்பெற லமுதை யறிவையென் னன்பை
ஆவியை யாவிபுட் கலந்த
பெருந்தனிப் பதியைப் பெருஞ்சுகக் களிப்பைப்
பேசுதற் கரும்பெரும் பேற்றை
விரும்பியென் னுளத்தை யிடங்கொண்டு விளங்கும்
விளக்கினைக் கண்டுகொண் டேனே. 14

களங்கொளுங் கடையேன் களங்கலாந் தவிர்த்துக்
களிப்பெலா மளித்தசர்க் கரையை
உளங்கொளுந் தேனை யுணவுணத் தெவிட்டா
துள்ளகத் தூறுமின் னமுதை
வளங்கொளும் பெரிய வாழ்வையென் கண்ணுண்
மணியையென் வாழ்க்கைமா நிதியைக்
குளங்கொளு மொளியை யொளிக்குளே விளங்குங்
குருவையான் கண்டுகொண் டேனே. 15

சிதம்பர வொளியைச் சிதம்பர வெளியைச்
சிதம்பர நடம்புரி சிவத்தைப்
பதந்தரு பதத்தைப் பரம்பர பதத்தைப்
பதிசிவ பதத்தைத்தற் பதத்தை
இதந்தரு முண்மைப் பெருந்தனி நிலையை
யாவுமா யல்லவாம் பொருளைச்
சதந்தரு சச்சி தானந்த நிறைவைச்
சாமியைக் கண்டுகொண் டேனே. 16

ஆரண முடிமே லமர்பிர மத்தை
ஆகம முடியமர் பரத்தைக்
காரண வரத்தைக் காரிய தரத்தைக்
காரிய காரணக் கருவைத்
தாரண நிலையைத் தத்துவ பதியைச்
சத்திய நித்திய தலத்தைப்
பூரண சுகத்தைப் பூரண சிவமாம்
பொருளினைக் கண்டுகொண் டேனே. 17

சுத்தவே தாந்தப் பிரம1 ரா சியத்தைச்
சுத்தசித் தாந்தரா சியத்தைத்
தத்துவா தீதத் தனிப்பெரும் பொருளைச்
சமரச சத்தியப் பொருளைச்
சித்தெலாம் வல்ல சித்தையென் னறிவிற்
றெளிந்தபே ரானந்தத் தெளிவை
வித்தமாம் வெளியைச் சுத்தசிற் சபையின்
மெய்ம்மையைக் கண்டுகொண் டேனே. 18

1 ராசியம் என்பது—இரகசியம்.

சமயமு மதமுங் கடந்தமேதார் ஞான
சபைநடம் புரிகின்ற தனியைத்
தமையறிந் தவருட் சார்ந்தமெய்ச் சார்பைச்
சத்துவ நித்தசற் குருவை
அமையவென் மனத்தைத் திருத்திநல் லருளா
ரமுதளித் தமர்ந்தவற் புதத்தை
நிமலநிர்க் குணத்தைச் சிற்சு ணைகார
நீநியைக் கண்டுகொண் டேனை. 19

அளவைக ளனைத்துங் கடந்துநின் றோங்கும்
அருட்பெருஞ் ஜோதியை யுலகக்
களவைவிட் டவர்தங் கருத்துளே விளங்குங்
காட்சியைக் கருணையங் கடலை
உளவையென் றனக்கே யுரைத்தருள்தலாம் வல்ல
ஒளியையு முதவிய வொளியைக்
[1] குளவயி னிறைந்த குருசிவ பதியைக்
கோயிலிற் கண்டுகொண் டேனை. 20

சார்கலாந் தாதிச் சடாந்தமுங் கலந்த
சமரச சத்திய வொளியைச்
சோர்வலாத் தவிர்த்தென் னறிவினுக் கறிவாய்த்
தலங்கிய ஜோதியைச் சோதிப்
பார்பெறுப் பதத்தைப் பதமெலாங் கடந்த
பரமசன் மார்க்கமெய்ப் பதியைச்
சேர்குணந் தந்திற் சிறந்தசேதார் தலைமைத்
தெய்வத்தைக் கண்டுகொண் டேனை. 21

அடிநடு முடியோ ரணுத்துணை யேனும்
அறிந்திடப் படாதமெய் யறிவைப்
படிமுத லண்டப் பரப்பெலாங் கடந்த
பதிபிரி வில விளங்குமெய்ப் பதியைக்
கடியவென் மனலுங் கல்லியுங் கனியக்
கடைக்கணித் தருளிய கருணைக்
கொடிவள ரிடத்துப் பெருந்தயா நிதியைக்
கோயிலிற் கண்டுகொண் டேனை. 22

பயமும்வன் கவலை யிடர்முத லனைத்தும்
பற்றறத் தவிர்த்தருட் பரிசும்
நயமும்நற் றிருவு முருவுமீங் கெனக்கு
நல்கிய நண்பைநன் னுதல
[2] இயமுற வெனது குளநடு நடஞ்செய்
எந்தையை யென்னுயிர்க் குயிரைப்
புயனடு விளங்கும் புண்ணிய வொளியைப்
பொற்புறக் கண்டுகொண் டேனை. 23

---

1 குளம் என்பது—நெற்றி. 2 இயம் என்பது—ஒலி.

கலைநிறை மதியைக் கனலைச்செங் கதிரைக்
ககனத்தைக் காற்றினை யமுதை
நிலைநிறை யடியை யடிமுடி தோற்ற
நின்மல நிர்க்குண நிறைவை
மலைவறு முளத்தே வயங்குமெய் வாழ்வை
வரவுபோக் கற்றசின் மயத்தை
அலையறு கருணைத் தனிப்பெருங் கடலை
அன்பினிற் கண்டுகொண் டேனை. 24

மும்மையை யெல்லா முடையபே ரரசை
முழுதுதாருங் குணர்த்திய வுணர்வை
வெம்மையைத் தவிர்த்திங் கெனக்கரு ளமுதம்
வியப்புற வளித்த மெய்விளைவைச்
செம்மையை யெல்லாச் சித்தியு மென்பாற்
சேர்ந்திடப் புரியருட் டிறத்தை
அம்மையைக் கருணை யப்பனை யென்பே
ரன்பனைக் கண்டுகொண் டேனை. 25

கருத்தனை யெனது கண்ணினை யவனைக்
கருணையா ரமுதனைக் களித்த
ஒருத்தனை யென்னை யுடைய நாயகனை
உண்மைவே தாகம முடியின்
அருத்தனை யரனை யப்பனைத் திருச்சிற்
றம்பலத் தருணடம் புரியும்
நிருத்தனை யெனது நேயனை ஞான
நிலையனைக் கண்டுகொண் டேனை. 26

வித்தெலா மளித்த விமலனை யெல்லா
வினைவையும் விளக்கவல் லவனை
[1] அத்தெலாங் காட்டு பரும்பிறன் மனிதை
ஆனந்தக் கூத்தனை யரசைச்
சத்தெலா மான சயம்புவை ஞான
சபைத்தனித் தலைவனைத் தவனைச்
சித்தெலாம் வல்ல சித்தனை யொன்றுந்
தெய்வத்தைக் கண்டுகொண் டேனை. 27

உத்தர ஞான சித்திமா புரத்தின்
ஓங்கிய வொருபெரும் பதியை
உத்தர ஞான சிதம்பர வொளியை
உண்மையை யொருதனி யுணர்வை
உத்தர ஞான நடம்புரி கின்ற
ஒருவனை புலகெலாம் வழுத்தும்
உத்தர ஞான சுத்தசன் மார்க்கம்
ஓதியைக் கண்டுகொண் டேனை. 28

1 அத்து என்பது—செந்நிறம்.

புலைகோலை தவிர்த்த நெறியிலை யென்னைப்
புணர்த்திய புனிதனை யெல்லா
நிலைகளுங் காட்டி அருட்பெரு நிலையில்
நிறுத்திய நிமலனை யெனக்கு
மலைவறத் தெளிந்த வமுதளித் தழியா
வாழ்க்கையில் வாழுவைத் தவனைத்
தலைவனை யின்ற தாயையென் னுரிமைத்
தந்தையைக் கண்டுகொண் டேனே. 29

பனியிடர் பயந்தீர்த் தெனக்கமு தளித்த
பரமனை யென்னுளீள பழுத்த
கனியனை யவனை அருட்பெருஞ் ஜோதிக்
கடவுளைக் கண்ணினுண் மணியைப்
புனிதனை யெல்லாம் வல்லவோர் ஞானப்
பொருளெனக் களித்தமெய்ப் பொருளைத்
தனியனை யின்ற தாயையென் னுரிமைத்
தந்தையைக் கண்டுகொண் டேனே. 30

அருட்பெருஞ்ஜோதி

---

45. குருதரிசனம்

திருமுதுகுன்றம்.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

திருமால் கமலத் திருக்கண்மலர் திகழு மலர்ந்தாட் சிவக்கொழுந்தைக்
கருமா லகற்றுங் தனிமருந்தைக் கனக சபையிற் கலந்தவொன்றை
அருமா மணியை யாரமுதை யன்பை யறிவை யருட்பெருக்கைக்
குருமா மலையைப் பழமலையிற் குலவி யோங்கக் கண்டேனே. 1

வான நடுவே வயங்குகின்ற மவுன மதியை மதிபழுத்தத்
தேனையளிந்த பழச்சுவையைத் தெய்வ மணியைச் சிவபதத்தை
ஊன மறியா வுளத்தொளிரு மொளியை யொளிக்கு மொருபொருளை
ஞான மலையைப் பழமலைமேல் நண்ணி விளங்கக் கண்டேனே. 2

தவள நிறத்துத் திருநீறு தாங்கு மணித்தோட் டாணவைஞங்
குவளை விழித்தா யொருபுறத்தே குலவ விளங்குங் குருமணியைக்
கவள மதமா கரியுரியைக் களித்த மேனிக் கற்பகத்தைப்
பவள மலையைப் பழமலையிற் பாவி யேத்திக் கண்டேனே. 3

இலைத்த விடத்தி லுதவியன்ப ரிடத்தே யிருந்த வேமவைப்பை
வளைத்த மதின்மூன் றெரித்தருளை வளர்த்த கருணை வாரிதியைத்
திளைத்த யோக வுளத்தேதாங்கித் திகழுந் துரியா தீதமட்டுங்
களைத்த மலையைப் பழமலையிற் களைந்து வயங்கக் கண்டேனே. 4

மடந்தை மலையாண் மனமகிழ மருவும் பதியைப் பசுபதியை
அடர்ந்த வினையின் முடக்கையறுத் தருளு மரசை யலைசுடன்மேற்
கிடந்த பச்சைப் பெருமலைக்குக் கேடி லருள்தந் தகம்புறமுங்
கடந்த மலையைப் பழமலைமேற் கண்கள் களிக்கக் கண்டேனே. 5

துனியும் பிறவித் தொடுவழக்குஞ் சோர்ந்து விடவுந் துரியவெளிக்
கினியும் பருக்குங் கிடையாத வின்ப மடைந்தே யிருந்திடவும்
பனியுந் திமய மலைப்பச்சை படர்ந்த பவளப் பருப்பதத்தைக்
1 கனியுஞ் சிலையுங் கலந்தவிட மெங்கே யங்கே கண்டேனே. 6

கருணைக் கடலை யக்கடலிற் கலந்த வமுதை யவ்வமுதத்
தருணச் சுவையை யச்சுவையிற் சார்ந்த பயனைத் தனிச்சுகத்தை
வருணப் பவளப் பெருமலையை மலையிற் பச்சை மருந்தாருபால்
பொருணச் சுறவே பழமலையிற் பொருந்தி யோங்கக் கண்டேனே. 7

என்னு ருயிரிற் கலந்துகலந் தினிக்குங் கரும்பின் கட்டிதனைப்
பொன்னுர் வேணிக் கொழுங்கனியைப் புனிதருளத்திற் புகுங் களிப்பைக்
கன்னு ருரித்தூப் பணிகொண்ட கருணைப் பெருக்கைக் கலித்தளிவைப்
பன்னு கப்பூ ணணிநயப்பப் பழைய மலையிற் கண்டேனே. 8

நல்ல மனத்தே தித்திக்க நண்ணுங் கனியை நலம்புரிந்தென்
அல்ல லகற்றும் பெருவாழ்வை யன்பாலியன்ற வருமருந்தைச்
சொல்ல முடியாத் தனிச்சுகத்தைத் துரிய நடுவே தோன்றுகின்ற
வல்ல மலையைப் பழமலையில் வயங்கி யோங்கக் கண்டேனே. 9

ஆதி நடுவு முடிவுமிலா வருளா னந்தப் பெருங்கடலை
ஓதி யுணர்தற் கரியசிவ யோகத் தெழுந்த வொருசுகத்தைப்
பாதியாகி யொன்றுகிப் படர்ந்த வடிவைப் பரம் பரத்தை
ஜோதி மலையைப் பழமலையிற் சூழ்ந்து வணங்கிக் கண்டேனே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

46. திருவடி நிலை

வியப்பு

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

உலகுபல் கோடி கோடிக ளிடங்கொ ளுலப்பிலா வண்டத்தின் பகுதி
அலகுகாண் பரிய பெரியகூட் டத்த வவையெலாம் புறத்தொரு சார்பில்
விலகுறு வணுவிற் கோடியி லொருகூற் றிருந்தென விருந்தென மிடைந்தே
இலகுபொற் பொதுவி னடம்புரி கருணை யிணையடிச் சமுகத்தோ ரிடத்தே.

---

1 கனியுஞ்சிலை என்பது—வளைந்தமலை, அதாவது மேரு.

தடையுறுப் பிரமன் விண்டுருத் திரன்மா யேச்சுரன் சதாசிவன் விந்து
நடையறுப் பிரம முபர்பரா சத்தி நவில்பர சிவமெனு மிவர்கள்
இடையுறுத் திருச்சிற் றம்பலத்தாடு மிடதுகாற் கடைவிர னகத்தின்
கடையுறு துகளென் றறிந்தன னதன்மேற் கண்டனன் திருவடி நிலையே. 2

அடர்மலத் தடையாற் றடையுறு மபன்மா லரன்மயேச் சுரன்சதா சிவன்வான்
படர்தரு விந்து பிரணவப் பிரமம் பரைபரம் பரனெனு மிவர்கள்
சுடர்மணிப் பொதுவிற் றிருநடம் புரியுந் துணையடிப்பா துகைப் புறத்தே
இடர்கெட வயங்கு துகளென வறிந்தே னெத்துவன் திருவடி நிலையே. 3

இகத்துழல் பகுதித் தேவரிற் றிரன்மால் பிரமனீ சானனே முதலாம்
மகத்துழல் சமய வானவர் மன்றின் மலரடிப் பாதுகைப் புறத்தும்
புகத்தரம் பொருந்தா மலத்துறு சிறிய புழுக்களென் றறிந்தன னதன்மேற்
செகத்தொடர் பிகந்தா ருளத்தம ரொளியிற் றெரிந்தனன் திருவடி நிலையே. 4

பொன்வணப் பொருப்பொன் றதுசகு ணத்தம் போந்தவான் முடியதாங் கதன்மேல்
மன்வணச் சோதித் தம்பமொன் றதுமா வயிந்துவாந் தத்தகாண் டதன்மேல்
என்வணச் சோதிக் கொடிபர நாதாந் தத்திலே யிலங்கின ததன்மேல்
தன்வண மனைக்கு மொளிமலராகத் தழுவினன் திருவடி நிலையே. 5

ண்ணுதற் பகர்பொன் வண்ணத்த வுளவான் மற்றவற் றுட்புறங் கிழ்மேல்
ணுணுறு மனந்தர் பக்கமென் றிவற்றி னமைந்தன சத்திக ளவற்றின
ண்ணுறு சத்த ரெனுமிரு புடைக்கும் கருதுரு முதலிய விளங்க
ண்ணுறு முபய மெனமன்றி லென்று நவின்றனர் திருவடி நிலையே. 6

தாகையள விவையென் றறிவரும் பகுதித் தொல்லோபி னெல்லோபு மவற்றின்
கையொடு விரியு முளப்பட வாங்கே மன்னியங் கணுமிரு பாற்குத்
கையுறு முதலா வனைங்கடை யாகத் தயங்கமற் றதுவது கருவிச்
கையுற வுபய மெனமன்றி லாடு மென்பராற் றிருவடி நிலையே. 7

ன்றவோங் கியமா மாயையின் பேத வகைதாகை விரியென மலிந்த
வான்றிணென் றனந்த கோடிகோ டிகளா வுற்றன மற்றவை யெல்லாம்
ன்றவந் நிலோபி னுருச்சுவை விளங்க நின்றசத் திகளொடு சத்தர்
சன்றதி கரிப்ப நடித்திடும் பொதுவி லென்பராற் றிருவடி நிலையே. 8

சுமோங் கார மீறதாப்ப் பேசாப் பெரியதோவாங் காரமே முதலாய்
சறு மங்க முபாங்கம்வே றங்க மென்றவற் றவணவ ணிசைத்த
சறு சத்தி சந்தரான் டமைத்து மன்னதி காரமைந் திபற்றத்
தசுசெய் தணிபொன் னம்பலத் தாடு மென்பராற் றிருவடி நிலையே. 9

ரைதரு சுத்த நிலமுத லதீதப் பதிவரை நிறுவியாங் கதன்மேல்
ரைதர வொண்ணு வெறுவெளி வெட்ட வெறுவெளி யெனகுல குணார்ந்த
ரையறு மின்ப வனுபவந் தரற்கோர் திருவுருக் கொண்டுபொற் பொதுவில்
ரையறு மின்ப நடம்புரிகின்ற வென்பராற் றிருவடி நிலையே. 10

47. அச்சோப் பத்து

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

அருட்பெருஞ்ஜோதி

கருத்தனையென் கண்மணியைக் கண்ணுதலைப்
பெருங்கருணைக் கடலை வேதத்
திருத்தனையென் சிவபதியைத் தீங்கனியைத்
தெள்ளமுதத் தெளிவை வானில்
ஒருத்தனையென் னுயிர்த்துணையை யுயிர்க்குயிரை
உயிர்க்குணர்வை யுணர்த்த ணிதி
அருத்தனைச்சிற் றம்பலத்தி தன் அருட்பெருஞ்
ஜோதியைப்பெற்றே னச்சோ வச்சோ. 1

மெய்யனையென் துயர்தவிர்த்த விமலனையென்
னிதயத்தே விளங்கு கின்ற
துய்யனைமெய்த் துணைவனைவான் தூயகிலத்
தலைவனைச்சிற் சுகந்தந் தானைச்
செய்யனைவெண் ணிறத்தனையென் சிவபதியை
பொன்றுன தெய்வந் தன்னை
அப்பனைச்சிற் றம்பலத்தி தன் அருட்பெருஞ்
ஜோதியைப்பெற்றே னச்சோ வச்சோ. 2

எப்பொருளு மெவ்வுயிரு மெவ்வுலகும்
விளங்கவிளக் கிடுவான் றன்னைச்
செப்பரிய பெரியவொரு சிவபதியைச்
சிவகதியைச் சிவமே பா கத்தைத்
துப்புரவு பெறவெனக்கே யருளமுதந்
துணிந்தளித்த துணையை யென்றன்
அப்பனைச்சிற் றம்பலத்தி தன் னருட்பெருஞ்
ஜோதியைப் பெற்றே னச்சோ வச்சோ. 3

பிறிவனைத்துந் தோற்றுதென் னுளங்கலந்த
பெருந்தகையெம் பெருமான் றன்னைச்
செறிவனைத்து மென்மனத்துக் களித்தெனக்குப்
பெருங்களிப்புச் செய்தான் றன்னை
முறிவனைத்து மின்றியரு ளமுதளவு
கொடுத்தெனக்கு முன்னின் முனை
அறிவனைச்சிற் றம்பலத்தி தன் அருட்பெருஞ்
ஜோதியைப்பெற்றே னச்சோ வச்சோ. 4

பொன்புனையுள் ளொளிக்கொளியைப் பூரணமாம்
பெரும்பொருளைப் புனிதந் தன்னை
என்பிழையைப் பொருத்தினையு மென்றுகொண்ட
பெருங்கருணை யியற்கை தன்னை
இன்பினையென் னிதயத்தே யிருந்தருளும்
பெருவாழ்வை யென்னு ளோங்கும்
அன்பினைச்சிற் றம்பலத்தின் னருட்பெருஞ்
ஜோதியைப்பெற்றே னச்சோ வச்சோ. 5

இத்தனையென் றிடமுடியாச் சத்தியெலா
முடையானை யெல்லாம் வல்ல
சித்தனையென் சிவபதியைத் தெய்வமெலாம்
விரித்தடக்குந் தெய்வத் தன்னை
எத்தனையு மென்பிழைகள் பொறுத்ததனிப்
பெருந்தாயை யென்னை யீன்ற
அத்தனைச்சிற் றம்பலத்தின் அருட்பெருஞ்
ஜோதியைப்பெற்றே னச்சோ வச்சோ. 6

எம்மையுமென் றனைப்பிரியா தென்னுளமே
யிடங்கொண்ட விறைவன் றன்னை
இம்பையிலென் றனக்கழியாத் திருவடிவத்
தந்தானை யெல்லாம் வல்ல
செம்மைதரு சித்தனையென் சிவபதியைத்
தெள்ளமுதத் தினளை யென்றன்
அம்மையைச்சிற் றம்பலத்தின் அருட்பெருஞ்
ஜோதியைப்பெற்றே னச்சோ வச்சோ. 7

என்னையுமென் பொருளையுமென் னுயிரையுந்
தான்கொண்டிங் கென்பா லன்பால்
தன்னையுந்தன் பொருளையுந்தான் னுயிரையுங்
களித்தளித்த தலைவன் றன்னை
முன்னையும்பின் னையுமெனக்கே முழுத்துணைபா
யிருந்தமுழு முதல்வன் றன்னை
அன்னையைச்சிற் றம்பலத்தின் அருட்பெருஞ்
ஜோதியைப்பெற்றே னச்சோ வச்சோ. 8

எண்ணிலவே றிரங்கிலின் னெவ்வுமிலாக்
கருகின்றே மின்னே யென்றன்
கண்ணிரம்ப வொளிகாட்டிக் கருத்திலமர்ந்
திருக்கின்ற கருந்தன் றன்னைப்
புண்ணியனை யுளத்தூறும் புத்தமுதை
மெய்யின்பப் பொருளை யென்றன்
அண்ணலைச்சிற் றம்பலத்தின் அருட்பெருஞ்
ஜோதியைப்பெற்றே னச்சோ வச்சோ. 9

சாதியைநீள் சமயத்தை மதத்தையெலாம்
விடுவித்தென் றன்னை ஞான
நீதியிலே சுத்தசிவ சன்மார்க்க
நிலைதனிலே நிறுத்தி ஞானப்
பாதியையொன் றுனவனைப் பரம்பரனைப்
பராபரனைப் பதிய ஞதி
ஆதியைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்
ஜோதியைப்பெற்றே னச்சோ வச்சோ. 10

அருட்பெருஞ்ஜோதி

48. பரிவநிலை

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அருட்ஜோதித் தெய்வமென யாண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே யாடுகின்ற வானந்தத் தெய்வம்
பொருட்சாரு மறைகளெலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வமுயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கியொளி யீந்தருளுந் தெய்வம்
எண்ணியநா னெண்ணியவா றெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாட லுவந்தெனையுஞ் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 1

எல்லாஞ்செய் வல்லதெய்வ மெங்குநிறை தெய்வம்
என்னுயிரிற் கலந்தெனக்கே யின்பளிக்குந் தெய்வம்
நல்லார்க்கு நல்லதெய்வம் நடுவான தெய்வம்
நற்சபையி லாடுகின்ற நடராஜத் தெய்வம்
கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுந் தெய்வம்
காரணமாந் தெய்வமருட் பூரணமாந் தெய்வம்
செல்லாத நிலைகளெலாஞ் செல்லுகின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 2

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னைநிக ரில்லாத தனித்தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்
மலரடியென் சென்னிமிசை வைத்தபெருந் தெய்வம்
காயாது கனியாகிக் கலந்தினிக்குந் தெய்வம்
கருணைநிதித் தெய்வமுற்றுங் காட்டுவிக்குந் தெய்வம்
சேயாக வெனைவளர்க்குந் தெய்வமகா தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 3

என்னிதயக் கமலத்தே யிருந்தருளுந் தெய்வம்
என்னிரண்டு கண்மணிக்கு ளிலங்குகின்ற தெய்வம்
பொன்னடியென் சென்னியிலே பொருந்தவைத்த தெய்வம்
பொய்யாத தெய்வமிடர் செய்யாத தெய்வம்
அன்னியமல் லாததெய்வ மறிவான தெய்வம்
அவ்வறிவுக் கறிவாமென் னன்பான தெய்வம்
சென்னிலையிற் செம்பொருளாய்த் திகழ்கின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 4

எண்ணியவா வினையாடென் றறவளித்த தெய்வம்
எல்லாஞ்செய் வல்லதெய்தே யெனக்கிசைந்த தெய்வம்
கண்ணியபொன் னம்பலத்தே நடம்புரியுந் தெய்வம்
காணுகித் தாணுகி கண்ணுகின்ற தெய்வம்
பண்ணியமென் பூசையிலே பலித்தபெருந் தெய்வம்
பாடுகின்ற மறைமுடியி லாடுகின்ற தெய்வம்
திண்ணியனென் றறவுலகஞ் செப்பவைத்த தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 5

இச்சையெலா மெனக்களித்தே யெவ்வினக்கலத்த தெய்வம்
இறந்தவர்க ளீனவரையு மெழுப்புகின்ற தெய்வம்
எச்சமயத் தெய்வமுந்தா னெனநிறைந்த தெய்வம்
எல்லாஞ்செய் வல்லதெய்வ மெனதுகுல தெய்வம்
பிச்சகற்றும் பெருந்தெய்வஞ் சிவகாமி யெனுமோர்
பெண்கொண்ட தெய்வமெங்கும் கண்கண்ட தெய்வம்
1 செச்சைமல ரெனவிளங்குந் திருமேனித் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 6

சாகாத வரமெனக்கே தந்தணித் தெய்வம்
சன்மார்க்க சபையிலெனைத் தனிக்கவைத்த தெய்வம்
மாகாத லாலெனக்கு வாய்த்தவொரு தெய்வம்
மாதவரா தியரெல்லாம் வாழ்த்துகின்ற தெய்வம்
வகாத நிலையதன்மே லெனைபேற்றுந் தெய்வம்
எண்ணுதொறும் மென்னுளத்தே யினிக்கின்ற தெய்வம்
தேகாதி யுலகமெலாஞ் செயப்பணித்த தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 7

தூண்டாத மணிவிளக்காய்த் துலங்குகின்ற தெய்வம்
துரியதெய்வ மரியதெய்வம் பெரியபெருந் தெய்வம்
மாண்டாரை யெழுப்புகின்ற மருந்தான தெய்வம்
மாணிக்க வல்லியையோர் வலத்தில்வைத்த தெய்வம்
ஆண்டாரை யாண்டதெய்வம் அருட்ஜோதித் தெய்வம்
ஆகமமே தாதியெலா மறிவரிதாந் தெய்வம்
தீண்டாத வெளியில்வளர் தீண்டாத தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 8

1 செச்சைமலர் என்பது—வெட்சிமலர்.

எவ்வகைத்தாந் தவஞ்செயினு மெய்தரிதாந் தெய்வம்
எனக்களிதிற் கிடைத்ததென்மன மிடங்கொண்ட தெய்வம்
அவ்வகைத்தாந் தெய்வமதற் கப்பாலாந் தெய்வம்
அப்பாலும் பெருவெளிக்கே யப்பாலாந் தெய்வம்
ஒவ்வகத்தீத யொளியாகி யோங்குகின்ற தெய்வம்
ஒன்றுன தெய்வமிக நன்றுன தெய்வம்
செவ்வகைத்தென் றறிஞரெலாஞ் சேர்பெரிய தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 9

சத்தியமாந் தனித்தெய்வந் தடையறியாத் தெய்வம்
சத்திகளெல் லாம்விளங்கத் தாமேங்குந் தெய்வம்
நித்தியதன் மயமாகி நின்றதெய்வ மெல்லா
நிலைகளுந்தன் னருள்வெளியில் நிலைக்கவைத்த தெய்வம்
பத்திவலைப் படுகின்ற தெய்வமெனக் கெல்லாப்
பரிசுமளித் தழியாத பதத்தில்வைத்த தெய்வம்
சித்தியெலாந் தருந்தெய்வஞ் சித்தாந்தத் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெப்வம். 10

அருட்பெருஞ்ஜோதி

49. சிவானந்தநிலை

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அணிவளர் திருச்சிற் றம்பலத் தாடு மானந்த போகமே யழுதே
மணிவள ரொளியே யொளியினுள் ளொளியே மன்னுமென் னுருயிர்த் துணையே
துணிவுறு சித்தாந் தப்பெரும் பொருளே தூயவே தாந்தத்தின் பயனே
பணிவுறு முளத்தே யினித்திட வெனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே. 1

திருவளர் திருச்சிற் றம்பலத் தாடுந் தெய்வமே மெய்ப்பொருட் சிவமே
உருவளரொளியே யொளியினுள்ளொளியே ஓங்குமென் னுயிர்ப்பெருந் துணையே
ஒருதனித் தலைமை யருள்வெளி நடுவே உவந்தரு ளிக்கின்ற வரசே
பருவர னீக்கி யினித்திட வெனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே. 2

துதிவளர் திருச்சிற் றம்பலத் தோங்குஞ் ஜோதிபுட் ஜோதியே யெனது
மதிவளர் மருந்தே மந்திர மணியே மன்னிய பெருங்குண மலையே
கதிதரு துரியத் தனிவெளி நடுவே கலந்தரு ளாள்கின்ற களிப்பே
பதியுறு முளத்தே யினித்திட வெனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே. 3

சீர்வளர் திருச்சிற் றம்பலத் தோங்குஞ் செல்வமே யென்பெருஞ் சிறப்பே
நீர்வளர் நெருப்பே நெருப்பினுள் ளொளியே நிறையொளி வழங்குமோர்வெளியே
ஏர்தரு கலாந்த மாதியா றந்தத் திருந்தரு ளாள்கின்ற பதியே
பாருறு முளத்தே யினித்திட வெனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே. 4

உரைவளர் திருச்சிற் றம்பலத் தோங்கு மொள்ளிய தெள்ளிய வொளியே
வரைவளர் மருந்தே மவுனமந் திரமே மந்திரத் தாற்பெற்ற மணியே
நிரைதரு சுத்த நிலைக்குமே னிலையி னிறைந்தர சாள்கின்ற நிதியே
பரையுறு முளத்தே யினித்திட வெனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே 5

மேல்வளர் திருச்சிற் றம்பலத் தோங்கு மெய்யறி வானந்த விளக்கே
கால்வளர் கனலே கனல்வளர் கதிரே கதிர்கடு வளர்கின்ற கலையே
ஆலுறு முபசாந் தப்பர வெளிக்கப் பாலர சாள்கின்ற வரசே
பாலுறு முளத்தே யினித்திட வெனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே. 6

இசைவளர் திருச்சிற் றம்பலத் தோங்கு மின்பமே யென்னுடை யன்பே
திசைவள ரண்ட கோடிக ளனைத்துந் திகழுற நிகழ்கின்ற சிவமே
மிசையுறு மவுன வெளிகடந் ததன்மேல் வெளிபர சாள்கின்ற பதியே
பசையுறு முளத்தே யினித்திட வெனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே. 7

அருள்வளர் திருச்சிற் றம்பலத் தோங்கும் அருட்பெருஞ் ஜோதியே யெனது
பொருள்வள ரறிவுக் கறிவுதந் தென்னை பொன்னடி நண்ட பெய்ப்பொருளே
மருவுமோர் நாத வெளிக்குமேல் வெளியில் மகிழ்ந்தர சாள்கின்ற வாழ்வே
பருவர னீக்கி யினித்திட வெனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே. 8

வான்வளர் திருச்சிற் றம்பலத்தோங்கு மாபெருங் கருணாநிதியே பதியே
ஊன்வள ருயிர்கட் குயிர்தர எல்லா வுலகமு நிறைந்தபே ரொளியே
மான்முதன் மூர்த்தி மானிலக் கப்பால் வயங்குமோர் வெளிநடு மணியே
பான்மையுற் றுளத்தே யினித்திட வெனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே.

தலம்வளர் திருச்சிற் றம்பலத் தோங்குந் தனித்தலைப்பெ ரும்பதிநின் றிவணம்
நலம்வளர் கருணை நாட்டம்வைத் தென்னையே கண்டுகொண்ட டருளிய கண்ணே
வலமுறு நிலைகள் யாவையுங் கடந்து வயங்கிய தனிநிலை வாழ்வே
பலமுறு முளத்தே யினித்திட வெனக்கே பழுத்தபே ரானந்தப் பழமே.10

அருட்பெருஞ்ஜோதி

50. ஆற்றுமை கூறல்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அம்பலத் தாடு மமுதமே யென்கோ அடியனே னுருவி யென்கோ
ரம்பலத் தெல்லாம் வல்லசித் தென்கோ என்னிரு கண்மணி யென்கோ
ம்பிடி லணைக்கு நற்றுணை யென்கோ நான்பெற்ற பெருஞ்செல்வ மென்கோ
ம்பரிப் பிறப்பே மெய்ப்பிறப் பாக்கி யென்னையாண் டருளிய தினையே. 1

அம்மையே யென்கோ வப்பனே யென்கோ அருட்பெருஞ் ஜோதியே யென்கோ
செம்மையே யெல்லாம் வல்லசித் தென்கோ திருச்சிற்றம் பலத்தமு தென்கோ
தம்மையே யுணர்ந்தா ருளத்தொளி யென்கோ தமியனேன் றனித்துணை யென்கோ
இம்மையே யழியாத் திருவுரு வளித்திங் கென்னையாண் டருளிய நினையே. 2

எய்ப்பிலே கிடைத்த வைப்பது வென்கோ என்னுயிர்க் கின்பமே யென்கோ
துய்ப்பிலே நிறைந்த பெருங்களிப் பென்கோ ஜோதியுட் ஜோதியே யென்கோ
தப்பெலாம் பொறுத்த தயாநிதி யென்கோ தனிப்பெருந் தலைவனே யென்கோ
இப்பிறப் பதிலே மெய்ப்பய னளித்திங் கென்னையாண் டருளிய நினையே. 3

அச்சநீக் கியவென் னரிய னென்கோ அம்பலத் தெம்பிரா னென்கோ
நிச்சலு மெனக்கே கிடைத்தவாழ் வென்கோ நீடுமென் னேயனே யென்கோ
பிச்சனேற் களித்த பிச்சனே யென்கோ பெரியரிற் பெரியனே யென்கோ
இச்சகத் தழியாப் பெருநல மளித்திங் கென்னையாண் டருளிய நினையே. 4

அத்தனேர் கிடைத்த சுவைக்கனி யென்கோ அன்பிலே நிறையமு தென்கோ
சித்திதலாம் வல்ல சித்தனே யென்கோ திருச்சிற்றம் பலச்சிவ மென்கோ
மத்தனேன் பெற்ற பெரியவாழ் வென்கோ மன்னுமென் வாழ்முத லென்கோ
இத்தனிப் பிறப்பை நித்தியமாக்கி யென்னையாண் டருளிய நினையே. 5

மறப்பெலாந் தவிர்த்த மதியமு தென்கோ மயக்கறீத் தருண்மருந் தென்கோ
பறப்பெலா மொழித்த பதிபத மென்கோ பதச்சுவை யனுபவ மென்கோ
சிறப்பெலா மெனக்கே செய்ததா யென்கோ திருச்சிற்றம் பலத்தந்தை யென்கோ
இறப்பிலா வடிவ மிம்மையே யளித்திங் கென்னையாண் டருளிய நினையே. 6

அன்பிலே பழுத்த தனிப்பழ மென்கோ அறிவிலே யறிவறி வென்கோ
இன்பிலே நிறைந்த சிவபத மென்கோ என்னுயிர்த் துணைப்பதி யென்கோ
வன்பிலா மனத்தே வயங்கொளி யென்கோ மன்னுமம் பலத்தர சென்கோ
என்புரி பழியாப் பொன்புரி யாக்கி யென்னையாண் டருளிய நினையே. 7

தடையிலா தெடுத்த வருளமு தென்கோ சர்க்கரைக் கட்டியே யென்கோ
அடைவுறு வபிரக் கட்டியே யென்கோ அம்பலத் தாணிப்பொன் னென்கோ
உடைய மாணிக்கப் பெருமலை யென்கோ உள்ளொளிக் குள்ளொளி யென்கோ
இடைதலற் றேறுங்குந் திருவளித் திங்கே யென்னையாண் டருளிய நினையே. 8

மறைமுடி விளங்கு பெரும்பொரு ளென்கோ மன்னுமா கமப்பொரு ளென்கோ
குறைமுடித் தருளசெய் மதப்வம்மே யென்கோ குணப்பெருங் குன்றமே யென்கோ
பிறைமுடிக் கணிந்த பெருந்தகை யென்கோ பெரியவம் பலத்தர சென்கோ
இறைமுடிப் பொருளென் னுளம்பெற வளித்திங் கென்னையாண் டருளிய நினையே.

என்னுளம் பிரியாப் பேரொளி யென்கோ என்னுயிர்த் தந்தையே யென்கோ
என்னுயிர்த் தாயே யின்பமே யென்கோ என்னுயிர்த் தலைவனே யென்கோ
என்னுயிர் வளர்க்குந் தனியமு தென்கோ என்னுடை நண்பனே யென்கோ
என்மெரு வாழ்வின் தனிமுத லென்கோ என்னையாண் டருளிய நினையே. 10

51. ஆற்றுமை கூறல் 2

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

கருணைமா நிதியே யென்னிரு கண்ணே கடவுளே கடவுளே யென்னே
தருணவா னமுதே யென்பெருந் தாயே தந்தையே தந்தையே யென்னே
தெருணிறை மதியே யென்குரு பதியே தெய்வமே தெய்வமே யென்னே
அருணிறை தருமென் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவ நின்றனை யறிந்தேன். 1

ஒட்டியே யென்னு ளூறுமொளி யென்னே ஓளியெலாம் நிரம்பிய நிலைக்கோர்
விட்டியே யென்னே வெட்டியி லெனக்கு விளங்குறக் கிடைத்தவொர் வயிரப்
பெட்டியே யென்னே பெட்டியி னடுவே பெரியவர் வைத்திதார் தங்கக்
கட்டியே யென்னே அம்பலத் தாடுங் கருணையங் கடவுளின் றனையே. 2

துன்பெலாந் தவிர்த்த துணைவனே யென்னே ஜோதியுட் ஜோதியே யென்னே
அன்பெலா மளித்த அன்பனே யென்னே அம்மையே யப்பனே யென்னே
இன்பெலாம் புரிந்த இறைவனே யென்னே என்னுயிர்க் கின்னமு தென்னே
என்பொலா மணியே யென்கணே யென்னே என்னுயிர் நாதனின் றனையே. 3

கருத்தனே யெனது கருத்திலுக் கிசைந்த கனிவனே கனிவனே யென்னே
ஒருத்தனே யெல்லா முடைய நாயகனே ஒருதனிப் பெரியனே யென்னே
திருத்தனே யெனது செல்வமே யெல்லாஞ் செயவல்ல சித்தனே யென்னே
நிருத்தனே யெனக்குப் பொருத்தனே யென்னே நிறையருட் ஜோதியின் றனையே 4

தாயனே யெனது தந்தையே யொருமைத் தலைவனே தலைவனே யென்னே
பேயனேன் பிழையைப் பொருத்தருள் புரிந்த பெருந்தகைப் பெரும்பதி யென்னே
சேயனேன் பெற்ற சிவபத மென்னே சித்திலாம் வல்லசித் தென்னே
தூயனே யெனது நேயனே யென்னே ஜோதியுட் ஜோதியின் றனையே. 5

அரும்பிலே மலர்வுற் றருண்மணம் வீசும் ஆனந்தத் தனிமல ரென்னே
கரும்பிலே யெடுத்த சுவைத்திர ளென்னே கடையனே னுடையதெந் நாளும்
இரும்பிலே பழுத்துப் பேரொளி தருமோர் பசும்பொனே யென்னே
தரும்பினேன் பெற்ற பெரும்பத மென்னே ஜோதியுட் ஜோதியின் றனையே. 6

தாகமுள் ளெடுத்த போதெதிர் கிடைத்த சர்க்கரை யமுதமே யென்னே
மோகம்வந் தடுத்த போதுகைப் பிடித்த முகமலர் கணவனே யென்னே
போகமுள் விரும்பும் போதிலே வலிந்து புணர்ந்தவோர் தூவையே யென்னே
ஆகமுட் புகுந்தென் னுயிரினுட் கலந்த அம்பலத் தாடினின் றனையே. 7

தந்துவ மனைத்துந் தவிர்த்துநான் தனித்த தருணத்திற் கிடைத்ததான் றென்னே
சுத்துவ நிரம்புஞ் சுத்தசன் மார்க்கந் தனிலுறு மனுபவ மென்னே
ஒத்துவந் தெனைத்தான் கலந்துகொண் டெனக்குள் ஓங்கிய வொருமையே யென்னே
சித்துவந் தாடுஞ் சித்தனே யென்னே திருச்சிற்றம் பலத்தவ நினையே. 8

யோகமெய்ஞ் ஞானம் பலித்தபோ துளத்தில் ஓங்கிய காட்சியே யென்கோ
ஏகமெய்ஞ் ஞான யோகத்திற் கிடைத்துள் ளிசைந்தபே ரின்பமே யென்கோ
சாகலைத் தவிர்த்திதன் றன்னைவாழ் விக்கச் சார்ந்தசற் குருமணி யென்கோ
மாகமும் புவியும் வாழ்வுற மணிமா மன்றிலே நடிக்கின்றோய் நினையே. 9

இரவிலா தியம்பும் பகலிலா திருந்த இயற்கையு ளியற்கையே யென்கோ
வரவிலா வுரைக்கும் போக்கிலா நிலையில் வயங்கிய வான்பொரு ளென்கோ
திரிவிலா தெல்லாம் வல்லசித் தெனக்கே செய்ததோர் சித்தனே யென்கோ
கரவிலா தெனக்குப் பேரருட் ஜோதி கனித்தனித் தருளிய நினையே. 10

அருட்பெருஞ்ஜோதி

52. திருநடப்புகழ்ச்சி

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

பதியேயெம் பரனேயெம் பரம்பரனே யெமது
பராபரனே யானந்தப் பதந்தருமெஞ் ஞான
நிதியேயெமெய்ந் நிறைவேயெமெய்ந் நிலையேயெமெப் யின்ப
நிருத்தமிடுந் தனித்தலைமை நிபுணமணி விளக்கே
கதியேயென் கண்ணேயென் கண்மணியே பெனது
கருத்தேதயென் கருத்திலுற்ற கனிவேசெங் கனியே
துதியேயென் துரையேயென் தோழாவென் னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 1

ஆரணமே ஆகமமே ஆரணவா கமத்தின்
அரும்பொருளே யரும்பொருளி னனுபவமே யறிவே
காரணமே காரியமே காரணகா ரியங்கள்
கடந்தபெரும் பதியேயென் கருத்தமர்ந்த நிதியே
பூரணமே புண்ணியமே பொதுவிளங்கு மரசே
புத்தமுதே சத்தியமே பொன்னேசெம் பொருளே
தோரணமே விளங்குசித்தி புரத்தினிமென் னுளத்துஞ்
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 2

இணையேது மின்றிநின்ற விறையவனே மறைசொல்
ஏகமுமா யனேகமுமா யிலங்குபரம் பரனே
அணையேது மின்றிநிறை பெரும்புனலே யதன்மேல்
அனலேயென் னப்பாவென் னவத்தையெலாங் கடத்தும்
புணையேயெமெய்ப் பொருளேயெமெப்ப் புகழேயெமெய்ப் புகலே
பொதுவே யுள்ளதுவே தற்போதமிலார்க் குதவுந்
துணையே சத்துவமே தத்துவமே யென்னுளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்தசிகா மணியே. 3

ஆதியந்தந் தோற்றுத அரும்பெருஞ்ஜோ தியனே
அம்மேயென் னப்பாவென் னையாவென் னரசே
ஓதியெந்த வகையாலு முணர்ந்துகொளற் கரிதாய்
உள்ளபடி யியற்கையிலே வுள்ளவொரு பொருளே
ஊதியந்தந் தெனையாட்கொண் டுள்ளிடத்தும் புறத்தும்
ஓவாமல் விளங்குகின்ற வுடையவனே யிந்தச்
சாதியிந்த மதமெனும்வாய்ச் சழக்கையெலாந் தவிர்த்த
சத்தியனே யுண்கின்றேன் சத்திபத்தி தள்ளுமே. 3

அச்சமெலாந் தவிர்த்தருளி யிச்சையெலா மளித்த
அம்மேயென் னப்பாவென் னையாவென் னரசே
I துச்சவுல காசாரத் துடுக்கனைத்துந் தவிர்த்தே
சுத்தநெறி வழங்குவித்த சித்தசிகா மணியே
உச்சநிலை நடுவிளங்கு மொருதலைமைப் பதியே
உலகமெலா மெடுத்திடினு முலவாத நிதியே
இச்சமய மெழுந்தருளி யிறவாத வரமும்
எல்லாஞ்செய் வல்லசித்தி னியற்கையுந்தந் தனையே. 4

அன்புடைய வென்னறிவே யருளுடைய பொருளே
அம்மேயென் னப்பாவென் னையாவென் னரசே
துன்புடைய வுலகமெலாஞ் சுகமுடையா ராகத்
துன்மார்க்கந் தவிர்த்தருளிச் சன்மார்க்கம் வழங்க
இன்புடைய பேரருளிங் கெனைப்பொருள்செய் தளித்த
என்னுடைதே யென்னுறவே யெனக்கினிய துணையே
என்புடைநீ யிருக்கின்று யுன்புடைநான் மகிழ்ந்தே
இருக்கின்றே னிவ்வொருமை யார்பெறுவா ரீண்டே. 5

அடுக்கியபே ரண்டமெலா மணுக்களென விரித்த
அம்மேயென் னப்பாவென் னையாவென் னரசே
நடுக்கியபெவ் வினச்சமெலாந் தவிர்த்தருளி யழியா
ஞானவழு தளித்துலகி னுட்டியபே ரறிவே
இடுக்கியகைப் பிள்ளையென விருந்தசிறி பேனுக்
கெல்லாஞ்செய் வல்லசித்தி யிந்தபெருந் தகையே
மூடுக்கியவஞ் ஞானந்த காரமெலாந் தவிர்த்து
முத்தருளத் தேமுளைத்த சுத்தபரஞ் சுடரே. 6

ஆங்காரந் தவிர்ந்தவருள் ளோங்காதின் றவனே
அம்மேயென் னப்பாவென் னையாவென் னரசே
ஓங்காச நிலைகாட்டி யதன்மேலுற் றருளிரும்
ஒருநிலையுங் காட்டியப்பா லுயர்ந்ததனி நிலையிற்
பாங்காக வேத்தியெந்தப் பதத்தலெவ ராலும்
படைக்கவொணாச் சித்தியைநான் படைக்கவைத்த பதியே
தூங்காது பெருஞ்சுகமே சுகித்திடவிவ் வுலகைச்
சுத்தசன்மார்க் கந்தனிலே வைத்தருள்க விரைந்தே. 7

1 துச்சம் என்பது—உரிமையில்லாமை.

ஆடகப்பொற் சபைநடமே நாடகஞ்செய் தருளும்
அம்மேயென் னப்பாவென் னையாவென் னரசே
வேடகத்தே யெழுதாத மறைகளெலாங் களித்தே
என்னுளத்தே யெழுதுவித்த வெண்ணிமைப் பதியே
பாடகக்கான் மடந்தையரு மைந்தருஞ்சன் மார்க்கப்
பயன்பெறநல் லருளளித்த பரம்பரனே மாயைக்
காடகத்தை வளஞ்செறிந்த நாடகமாப் புரிந்த
கருணையனே சிற்சபையிற் கனிந்தநறுங் கனியே. 8

அடியாதென் றறிந்துகொளற் கரும்பெரிய நிலையே
அம்மேயென் னப்பாவென் னையாவென் னரசே
முடியாதென் றறிந்திடற்கு முடியாதென் றுணர்ந்தோர்
மொழிந்திடவே முடியாது முடிந்ததனி முடிவே
கடியாத பெருங்கருணைக் கருத்தேதயென் கருத்திற்
கனிந்துகனிந் தினிக்கின்ற கனியேயென் களிப்பே
மடியாத வடிவெனக்கு வழங்கியநல் வரமே
மணிமன்றில் நடம்புரியும் வாழ்க்கையியற் பொருளே. 9

அனந்தமறை யாகமங்க ளளப்பரிய சிவமே
அம்மேயென் னப்பாவென் னையாவென் னரசே
மனந்தருவா தனைதவிர்த்தே ரறிவினிலா ரறிவாய்
வயங்குகின்ற குருவேயென் வாட்டமெலாந் தவிர்த்தே
இனந்தழுவி யென்னுளத்தே இருந்துயிரிற் கலந்தென்
எண்ணமெலாங் களித்தளித்த வெண்ணிமைப் பதியே
சினந்தவிர்ந்தெவ் வுலகமுமோர் சன்மார்க்க மடைந்தே
சிறப்புறவைத் தருள்கின்ற சித்தசிகா மணியே. 10

அருட்பெருஞ்ஜோதி

54. திருவருட்புகழ்ச்சி

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ் ஜோதிய முதமே பமுத மளித்தெனை வளர்த்திட வருளாந்
தெருட்பெருந் தாய்தன் கையிலே கொடுத்த தெய்வமே சத்திபச் சிவமே
இருட்பெரு நிலத்தைக் கடத்தியென் றனமே லேற்றிய வின்பமே யெல்லாப்
பொருட்பெரு நெறியுங் காட்டிய குருவே பொதுநடம் புரிகின்ற பொருளே. 1

சித்தெலாம் வல்ல சித்தனே ஞான சிதம்பர ஜோதியே சிறியேன்
கத்தெலாந் தவிர்த்துக் கருத்தெலா மளித்த கடவுளே கருணைபங் கடலே
சத்தெலா மொன்றே சத்திய மெனவென் றனக்கறி வித்ததோர் தனையே
புத்தெலா நீக்கிப் பொருளெலாங் காட்டும் பொதுநடம் புரிகின்ற பொருளே. 2

ளோ ரனந்த மனந்தமே ணைக்கிக் கற்பங்கள் கணக்கில கடப்ப
ளோ ரனந்த நேடியுங் காணு நித்திய நிர்க்குண நிறைவே
ளற் றுயிருக் கமுதளித் தருளு மருட்பெருங் கடலெனு மரசே
ள வகற்றி யெனக்குளே நிறைந்து பொதுநடம் புரிகின்ற பொருளே. 3

னிய மதியே தனித்தசெங் சுடரே சத்திய சாத்தியக் கனலே
யிய வொளியே யொளிக்குளோ ரொளியே யுலகெலாந் தழைக்கமெய் யுளத்தே
ரிய விளக்கே யெண்ணிய படிக்கே கல்கிய ஞானபோ னகமே
ரிய நிதியே கண்ணிய நிலையே பொதுநடம் புரிகின்ற பொருளே. 4

நிறைவே I சற்புத ரறிவி லறிவென வறிகின்ற வறிவே
புனை மாயைக் கற்பனை கடந்த துரியநன் னிலத்திலே துலங்குஞ்
ஞ் சுடரே தற்பர ஞானச் செல்வமே சித்தெலாம் புரியும்
ல மளித்த நற்புலக் கருத்தே பொதுநடம் புரிகின்ற பொருளே. 5

பதியே தத்துவங் கடந்த தனித்தநேர் சத்திய பதியே
ா நெறியிற் சார்ந்தசன் மார்க்கர் தமக்குளே சார்ந்தநற் சார்பே
று சமயப் பிணக்குறு மவர்க்குப் பெறலரி தாகிய பேறே
ா தனித்தென் னுளத்திலே கலந்து பொதுநடம் புரிகின்ற பொருளே. 6

ளரி காட்டி வெளியிலே விளைந்த விளைவெலாங் காட்டிமெய் வெந
நி காட்டி யென்னுளே விளங்கும் நோக்கமே யாக்கமுந் திறலும்
கப் பயனு மளித்தனை வளர்க்கு நாயகக் கருணைநற் குருவே
பிர்க் குபிராய்ப் பொருந்திய மருந்தே பொதுநடம் புரிகின்ற பொருளே. 7

ா விளங்கு மருட்பெரு விளக்கே யரும்பெருஞ் ஜோதியே சுடரே
ணி யறுத்த வாய்மையெம் மருந்தே பருந்திலாம் பொருந்திய மணியே
று கருணைச் செல்வமே யெல்லா வுயிர்க்குநு நிறைந்தோ ருணர்வே
கை தவிர்க்கும் பூரண வரமே பொதுநடம் புரிகின்ற பொருளே. 8

நிறைவே பராபர வெளியே பரமசிற் சுகந்தரும் பதியே
று சிவசன் மார்க்கர்தம் மதியில் வயங்கிய பெருஞ்சுடர் மணியே
று கனியே கனியுறு சுவையே கருதிய கருத்துறு களிப்பே
ா நிதியே சிரம்புகல் கதியே பொதுநடம் புரிகின்ற பொருளே. 9

முடியிற் றய்பமே லேற்றி மெய்ந்நிலை யமர்வித்த வியப்பே
கருத்தி லினிக்கின்ற கரும்பே கருணைவா னமுதத் தெண்கடலே
மறிவி லருளொளி யாகி யானந்த மாமனு பவமே
பதியே யற்புத நிதியே பொதுநடம் புரிகின்ற பொருளே. 10

ாண் பரிய தலைவனே யெல்லாந் தாவல்ல சம்புவே சமயப்
ந் தகமும் புறமுமொத் தமைந்த புண்ணியர் நண்ணிய புகலே
சர் மனத்தை நன்மைசேர் மனமா வயங்குவித் தமர்ந்தமெய் வாழ்வே
சார் கனகப் பொதுவெவாடுஞானப் பொதுநடம் புரிகின்ற பொருளே. 11

சற்புதர் என்பது—நல்லறிவுடையவர். 2 உலப்பு என்பது—கேடு.

மூவிரு முடிபின் முடிந்தவோர் முடியே முடிபெலாங் கடந்தசீர் முதலே
தாவிய முதலுங் கடையுமேற் காட்டாச் சத்தியத் தனிநடு நிலையே
மேவிய நடுவில் விளங்கிய விளைவே விளைவெலாந் தருகின்ற வெளிப்பே
பூவிய லளித்த புனிதசற் குருவே பொதுநடம் புரிகின்ற பொருளே. 12

வேதமும் பொருளும் பயனுமோ ரடைவும் விளம்பிய வனுபவ விளைவும்
போதமும் சுகமு மாகியிங் கிவைகள் போனதுமா யொளிர் புலமே
ஏதமுற் றிருந்த வேழையென் பொருட்டிவ் விருநிலத் தியலரு ளொளியாற்
பூதநல் வடிவங் காட்டியென் னுளத்தே பொதுநடம் புரிகின்ற பொருளே. 13

அடியனேன் பொருட்டிவ் வவனிமேற் கருணை யருள்வடி வெடுத்தெழுந் தருளி
யெடியனே முதலோர் பெறற்கருஞ் சித்தி நிலையெலா மளித்தமா நிதியே
மடிவுறு தென்றுஞ் சுத்தசன் மார்க்கம் வயங்கநல் வரந்தந்த வாழ்வே
பொடியணி கனகப் பொருப்பொளிர் நெருப்பே பொதுநடம் புரிகின்ற பொருளே

என்பிழை யனைத்தும் பொறுத்தருள் புரிந்தென் னிதயத் திருக்கின்ற குருவே
அன்புடை யரசே யப்பனே யென்ற னம்மையே யருட்பெருஞ் ஜோதி
இன்புறு நிலையி லேற்றிய துணையே யென்னுயிர் நாதனே யென்னைப்
பொன்புனை மாலை புனைந்தவோர் பதியே பொதுநடம் புரிகின்ற பொருளே.

சத்திய பதியே சத்திய நிதியே சத்திய ஞானமே வேத
நித்திய நிலையே நித்திய நிறைவே நித்திய வாழ்வரு ணிறையே
சித்தியின் புருவே சித்தியின் கருவே சித்தியிற் சித்தியே யெனது
புத்தியின் தெளிவே புத்தமு தளித்துப் பொதுநடம் புரிகின்ற பொருளே.

சிதத்தொளிர் பரமே பரத்தொளிர் பதியே சிவபத வனுபவச் சிவமே
மதத்தடை தவிர்த்த மதிமதி மதியே மதிநிறை யமுதநல் வாய்ப்பே
சதத்திரு நெறியே தனிநெறித் துணையே சாமியே தந்தையே தாயே
புதப்பெரு வரமே புகற்கருந் தரமே பொதுநடம் புரிகின்ற பொருளே. 17

கலிவளர் கலையே கலைபிணுட் கலையே கலையெலாந் தருமொரு கருவே
நிலைவளர் கருவுட் கருவென வயங்கு நித்திய வானமே ஞான
மலைவளர் மருந்தே மருந்துறு பலனே மாபலந் தருகின்ற வாழ்வே
புலைதவிர்த் தெனையும் பொருளெனக் கொண்டு பொதுநடம் புரிகின்ற பொருளே.

மெய்ம்மையே கிடைத்த மெய்ம்மையே ஞான விளக்கமே விளக்கத்தின் வியப்பே
கைம்மையே தவிர்த்து மங்கல மளித்த கருணையே கரிசிலாக் களிப்பே
மும்மையே யதற்கு ளதுவது வாகு மற்புதக் காட்சியே யெனது
பொய்ம்மையே பொறுத்துப் புகலளித் தருளிப் பொதுநடம் புரிகின்ற பொருளே.

காரண வருவே காரிய வுருவே காரண காரியங் காட்டி
ஆரண முடியு மாகம முடியு மமர்ந்தொளி ரற்புதச் சுடரே
நாரண தரமே நாரண வலமே நாரண காரத்தின் ஞாங்கர்ப்
பூரண வொளிசெய் பூரண சிவமே பொதுநடம் புரிகின்ற பொருளே. 20

அருட்பெருஞ்ஜோதி

1 புதம் என்பது—அறிவு.

55. திருவருட்பெருமை [1]

எழுசீராடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

ன்பனே யப்பா வம்மையே யரசே யருட்பெருஞ் ஜோதியே யடியென்
பெலாந் தொலைத்த துணைவனே ஞான சுகத்திலே தோற்றிய சுகமே
பனே யெல்லாம் வல்ல சித்தாகி யென்னுளே யிலங்கிய பொருளே
பனென் பிழைகள் பொறுத்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 1

குமா கருணைப் பெருங்கட லின்பப் பெருக்கமே யென்பெரும் பேற
தமோ ருள்ளத் I துவட்டுறு தினிக்கு முண்மைவா னமுதமே யென்பாற்
நெஞ் சதனைத் தளிர்த்திடப் புரிந்த கருணையங் கடவுளே விரைந்து
வென் றுரைத்தேன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 2

தயேன் குருவே யென்னுயிர்க் குயிரே யென்னிரு கண்ணினுண் மணியே
று மமுதே யென்னுயிர்த் துணையே யிணையிலா வென்னுடை யன்பே
தநல் லுறவே யம்பலத் தரசே ஜோதியே ஜோதியே விரைந்து
ந ளென்றென் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 3

வன வெனது குருவென ஞான குணமென வொளிர்சிவக் கொழுந்தே
ன வதிலே மணமென வணத்தின் பொலிவென வயங்கிய பொற்பே
ணத் தேவ தேவென வொருமைச் சிவமென விளங்கிய பதியே
பன வுரைத்தேன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 4

மே யிடங்கொண் டென்னையாட் கொண்ட வொருவனே யுலகெலா மறியத்
ளமு தளித்திங் குன்னைவாழ் விப்பேனுஞ் சித்தமுஞ் சேலென்ற சிவமே
மே தவிர்த்த கருணைமா நிதியே கடவுளே கனகவம் பலத்தேன்
லே யென்றேன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 5

பா வளித்த நல்லவா வெனையும் நயந்தவா காயினை னவின்ற
லவா வெனக்குத் துணையவா ஞான சுகத்தவா ஜோதிபம் பலவா
பா வனைத்து மானவா வென்னை யாண்டவா தாண்டவா வெல்லாம்
ா வென்றென் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 6

மையே முதலெங் குணக்கரு வாய செல்வமே நல்வழி காட்டுங்
டையே கண்மை கலந்தவென் கண்ணே கண்ணுறு வினைத்தகற் கருத்தே
மையே யெல்லா முடையவோர் தலைமை யொருதனித் தெய்வமே யுலவா
டையே யென்றென் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 7

மையே தவிர்த்துக் கருணையே கனிந்த கற்பகத் தனிப்பெருந் தருவே
மையே விளக்கித் துணைமையே யளித்த ஜோதியே தூய்மையில் லவர்க்குச்
மையே யெல்லாஞ் செயவல்ல ஞான சித்தியே சுத்தசன் மார்க்க
மையே யென்றேன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 8

1 உவட்டுறு என்பது—பெருக்கெடுத்து.

என்னவா வனைத்து மீந்தவா வென்னை யீன்றவா வென்னவா வேதஞ்
சொன்னவா கருணைத் துயவா பெரியர் துதியவா வம்பலத் தமுதம்
அன்னவா வறிவா லறியரி யறிவா ஆனந்த நாடகம் புரியும்
மன்னவா வென்றேறன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 9

விரதமா திகழுநந் தவிர்த்துமெய்ஞ் ஞான விளக்கினு லென்னுளம் விளக்கி
இரதமா தியநற் றெள்ளமு தளித்திங் கென்கருத் தனைத்தையும் புரிந்தே
சரதமா நிலையிற் சித்தெலாம் வல்ல சத்தியைத் தயவினுற் றருக
வரதனே யென்றேன் வந்தருட் ஜோதி வழங்கினை வாழிநின் மாண்பே. 10

அருட்பெருஞ்ஜோதி

56. திருவருட்பெருமை 2

பண் – நட்டராகம்

அருட்பெருஞ்ஜோதி

விரைசேர் பொன்மலரே யதின் மேவிய செந்தேனே 1
கரைசேர் முக்கனியே கனி யிற்சுவை யின்பமனே
பரைசே ருள்ளொளியே பெரும் பற்றப்பல நடஞ்செய்
அரைசே தந்தனையே யரு ளாரமு தந்தனையே.

விண்ணுர் செஞ்சுடரே சுடர் மேவிய வுள்ளொளியே 2
தண்ணுர் வெண்மதியே யதிற் றங்கிய தண்ணமுதே
கண்ணுர் மெய்க்கனலே சிவ காமப்பெண் காதலனே
அண்ணு தந்தனையே யரு ளாரமு தந்தனையே.

துப்பார் செஞ்சடையா யருட் ஜோதி சுகக்கலே 3
செப்பா மேனிலைக்கே சிறி யேனைச் செலுத்தியவா
எப்பா லும்புகழும் பொது வின்ப நடம்புரியும்
அப்பா தந்தனையே யரு ளாரமு தந்தனையே.

மெய்யா மெய்யருளே யென்று மேவிய மெய்ப்பொருளே 4
கையா ருங்கனியே நுதற் கண்கொண்ட செங்கரும்பே
செய்யாய் வெண்ணிறத்தாய் திருச் சிற்றம் பலநடஞ்செய்
ஐயா தந்தனையே யரு ளாரமு தந்தனையே.

போறிவே றின்றிநின்ற நிதம் போற்றும் புனிதருளே 5
குறிவே றின்றிநின்ற பெருஞ் ஜோதிக் கொழுஞ்சுடரே
செறிவே தங்களெலா முரை செய்ய நிறைந்திடுபேர்
அறிவே தந்தனையே யரு ளாரமு தந்தனையே.

மூத்தா முத்தருளே யொளிர் கின்ற முழுமுதலே 6
சித்தா சித்தியெலாந் தர வல்ல செழுஞ்சுடரே
பித்தா பித்தனெனை வலிந் தாண்ட பெருந்தகையே
அத்தா தந்தனையே யரு ளாரமு தந்தனையே.

தன்னே ரில்லவனே யெனைத் தந்த தயாநிதியே
மன்னே மன்றிடத்தே நடஞ் செய்புமென் வாழ்முதலே
பொன்னே யெண்ணுயிரே யுயி ருண்ணிறை பூரணமே
அன்னே தந்தனையே யரு ளாரமு தந்தனையே. 7

பவனே வெம்பவ நோய் தனைத் தீர்க்கும் பரஞ்சுடரே
சிவனே செம்பொருளே திருச் சிற்றம் பலநடிப்போய்
தவநே யம்பெறுவார் தமைத் தாங்கி யருள்செயவல்
லவனே தந்தனையே யரு ளாரமு தந்தனையே 8

தேனுய்த் தீம்பழமாய்ச் சுவை சேர்கரும் பாயமுதம்
தானு யன்பருளே யினிக் கின்ற தனிப்பொருளே
வானுய்க் காலனலாய்ப் புன லாயதில் வாழ்புவியாய்
ஆனுய் தந்தனையே யரு ளாரமு தந்தனையே. 9

பொடியேற் கும்புயனே யருட் பொன்னம் பலத் தரசே
செடியேற் கன்றளித்தாய் திருச் சிற்றம் பலர்சுடரே
கடியேற் கன்னையெனுஞ் சிவ காமக் கொடியுடையாய்
அடியேற் கின்றளித்தா யரு ளாரமு தந்தனையே. 10

ஒளியே யவ்வொளியின் னடு வுள்ளொளிக் குள்ளொளியே
வெளியே யெவ்வெளியு மடங் கின்ற வெறுவெளியே
தளியே யப்பலத்தே நடஞ் செய்புந் தயாநிதியே
அளியே தந்தனையே யரு ளாரமு தந்தனையே. 11

மருளேய் நெஞ்சகனேன் மன வாட்டமெலாந் தவிர்த்தே
தெருளே யோர்வடிவா புறச் செய்த செழுஞ்சுடரே
பொருளே சிற்சபைவாழ் வுறு கின்றவென் புண்ணியனே
அருளே தந்தனையே யரு ளாரமு தந்தனையே. 12

முன்பே யென்றனையே வலிந் தாட்கொண்ட முன்னவனே
இன்பே யெண்ணுயிரே யெனை யின்ற விறையவனே
பொன்பே ரம்பலவா சிவபோகஞ்செய் சிற்சபைவாழ்
அன்பே தந்தனையே யரு ளாரமு தந்தனையே. 13

அருட்பெருஞ்ஜோதி

---

57. உபதேச உண்மை

பண்-நட்டராகம்

அருட்பெருஞ்ஜோதி

கண்ணே கண்மணியே—கருத்—தேதருத் தின் கனிவே
விண்ணே விண்ணிறைவே—சிவ—மேதனி மெய்ப் பொருளே
தண்ணே ரொண்மதியே—யெனைத்—தந்த தயாநிதியே
உண்ணே ருள்ளொளியே—யெனக்—குண்மை யுரைத்தருளே. 1

வளியே வெண்ணெருப்பே—குளிர்—மாமதி யேகனலே
வெளியே மெய்ப்பொருளே—பொருள்—மேவிய மேனிலையே
அளியே யற்புதமே—பழு—தேயறி வேயாசே
ஒளியே யுத்தமனே—யெனக்—குண்மை யுரைத்தருளே. 2

அன்பே யென்னரசே—திரு—வம்பலத் தாரமுதே
என்பே யுள்ளுருகக்—கலந்—தென்னு ளிருந்தவனே
இன்பே யென்னறிவே—பர—மேசிவ மேயெனவே
உன்பே ரோதுகின்றேன்—எனக்—குண்மை யுரைத்தருளே. 3

தனையா வென்றழைத்தே—யருட்—சத்தியளித் தவனே
அனையா யப்பனுமா—யெனக்—காரிய னெவனே
இனையா தென்னையுமேல்—நிலை—யேற்றுவித் தாண்டவனே
உனையா னேத்துகின்றேன்—எனக்—குண்மை யுரைத்தருளே. 4

துப்பா செஞ்சுடரே—யருட்—ஜோதிசுகக் கடலே
அப்பா வென்னரசே—திருவ—ட்பலத்தா ரமுதே
இப்பாரிற் பசிக்கே—தந்த—இன்சுவை நல்லுணவே
ஒப்பா வொப்பரியாய்—எனக்—குண்மை யுரைத்தருளே. 5

என்றே யென்னுளுறுஞ்—சுட—ரேயென யீன்றவனே
நன்றே நண்பெனக்கே—மிக—நல்கிய நாயகனே
மன்றார் மாமணியே—சுக—வாழ்க்கையின் மெய்ப்பொருளே
ஒன்றே யென்றுணையே—யெனக்—குண்மை யுரைத்தருளே. 6

திருவே தெள்ளமுதே—அருட்—சித்தசிகா மணியே
கருவே ரற்றிடவே—களை—கின்றவன் கண்ணுதலே
மருவே மாமலரே—மலர்—வாழ்கின்ற வானவனும்
உருவே யென்குருவே—யெனக்—குண்மை யுரைத்தருளே. 7

தடையா வுந்தவிர்த்தே—யெனைத்—தாங்கிக்கொண் டாண்டவனே
அடையா யன்பிலர்பால்—எனக்—கன்பொடு தந்தபெருங்
கொடையாய் குற்றமெலாங்—குணங்—கொண்ட குணக்குன்றமே
உடையா யுத்தமனே—யெனக்—குண்மை யுரைத்தருளே. 8

பெண்ணை யாணுருவாய்—எனைப்—பெற்றபெருந் தகையே
அண்ணை வென்னரசே—திரு—வம்பலத் தாடுகின்றோய்
எண்ணை நாயடியேன்—களித்—திட்ட வுணவை யெலாம்
உண்ணை துண்டவனே—யெனக்—குண்மை யுரைத்தருளே. 9

நன்னை லுங்கடந்தே—யொளிர்—ஞான சபாபதியே
பொன்னை ருஞ்சபையாய்—அருட்—பூரண புண்ணியனே
என்னை லாவதொன்றும்—உனக்—கில்லையெனினு மெந்தாய்
உன்னல் வாழுகின்றேன்—என்னக்—குண்மை யுரைத்தருளே. 10

அருட்பெருஞ்ஜோதி

58. அமையங்கூறல்

பன்னிருசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

கருணை ததும்பிப் பொதுநோக்குங் கண்ணிற் கிடைத்த கண்ணேயோர்
கனியிற் கனிந்தன் புருவான கருத்திற் கிடைத்த கருத்தேதமைப்
அருணன் னிலையி லதுவதுவா யறிவிற் கிடைத்த வறிவேயென்
அகத்தும் புறத்து மொளிநிறைவித் தமர்ந்த குருவே யைம்பூத
வருணு முதலா யவைகடந்த வரைப்பாய் விளங்கு மணிமன்றில்
வயங்கு சுடரே யெல்லாஞ்செய் வல்ல குருவே யென்னுளத்தே
தருண நடஞ்செய் அரசேயென் தாயே யென்னைத் தந்தாயே
தனித்த தலைமைப் பதியேயித் தருணம் வாய்ந்த தருணமிதே. 1

கருவிற் கலந்த துணையேயென் கனிவிற் கலந்த வழுதேயென்
கண்ணிற் கலந்த வொளியேயென் கருத்திற் கலந்த களிப்பேயென்
உருவிற் கலந்த வழகேயென் உயிரிற் கலந்த உறவேயென்
உணர்விற் கலந்த சுகமேயென் உடைய வொருமைப் பெருமானே
தெருவிற் கலந்து விளையாடுஞ் சிறியேன் றனக்கே மெய்ந்நான
சித்தி யளித்த பெருங்கருணைத் தெய்வ முலகத் திருளெல்லாம்
மருவிக் கலந்து வாழ்வதற்கு வாய்ந்த தருண மிதுவென்றே
வாயே பறையா யறைகின்ற னெந்தாய் கருணை வலத்தாலே. 2

தானே தயவாற் சிறியேற்குத் தனித்த ஞான வழுதளித்த
தாயே யெல்லாச் சுதந்தரமுந் தந்த கருணை யெந்தாயே
ஊனே விளங்க வுணமிலா வொளிமெய்ப் பெல்லா வுலகமுமென்
உடைமை யாக்கொண் டருணிலைமேல் உற்றே னென்ற னருளாலே
வானே மதிக்கச் சாகாத வாறு யெல்லாம் வல்லசித்தே
வயங்க வுனையுட் கலந்துகொண்டேன் வருக்குந் தொழிலு முகலெந்து
தானே புரிகின் றென்புரித வுரை நீயோ நானறியேன்
நானீ யென்னும் பேதமிலா நடஞ்செய் கருணை நாயகனே. 3

கலைசார் முடிபு கடந்துணர்வு கடந்து நிறைவாய்க் கரிசிலதாய்க்
கருணை மயமாய் விளங்குசிதா காய நடவி லியற்கையுண்மைத்
தலைசார் வடிவி லின்பநடம் புரியும் பெருமைத் தனிமுதலே
சாகாக் கல்வி பயிற்றியென்னுட் சார்ந்து விளங்குஞ் சற்குருவே
கலைசார் மனத்துச் சிறியேன்றன் குற்ற மனைத்தும் பொறுத்தருளிப்
பொன்ற வடிவு கொடுத்தெல்லாம் புரிவல் லபந்தந் தருட்ஜோதி
கலைசா றிறைமை யளித்தனைநான் பொதுவில் ஞான நீதியெனும்
நிருத்தம் புரிகின் றென்புரித னீயோ நாமே நிகழ்த்தாயே. 4

கருத்திற் கருதிக் கொண்டவெலாங் கணத்திற் புரிய வெனக்கேமெய்க்
காட்சி ஞானக் கண்கொடுத்த கண்ணே விடயக் கானகத்தே
எருத்திற் றிரிந்த கடையேனை யெல்லா வுலகுந் தொழநிலைமேல்
ஏற்றி நீயு நானுமொன்று யிருக்கப் புரிந்தா யெந்தாயே
இருத்திக் கருத்தி லுன்றயவை யெண்ணுந் தோறு மந்தோவென்
இதய மூருகித் தளதளவென் றிளகி யிளகித் தண்ணீராய்
அருத்திப் பெருநீ ராற்றெடுசேர்ந் தன்புப் பெருக்கிற் கலந்ததுநான்
அதுவென் றுன்றுந் தோற்றுமே தயச்சோ வச்சோ வச்சோவே. 5

ஏதுந் தெரியா தகங்காரித்திங் கிருந்த சிறியேன் றனைவலிந்தே
எல்லா வுலகு மதிசயிக்க வெல்லாம் வல்ல சித்தெனவே
ஓதும் பொருளைக் கொடுத்தென்று முலவா வின்பப் பெருநிலையில்
ஓங்கி யுறவைத் தனையேயென் னுடைய வொருமைப் பெருமானே
ஈதுன் கருணைக் கியல்போநீ யென்பால் வைத்த பெருங்கருணை
இந்நாட் புதிதே யந்நாளி லிலையே யிதனை யெண்ணியநான்
தாது முணர்வு முயிருமுள்ளத் தடமும் பிறவாந் தத்துவமுந்
தாமே குழைந்து தழைந்தமுத சார மயமா கின்றேனே. 6

ஓவா துண்டு படுத்துறங்கி யுணர்ந்து விழித்துக் கதைபேசி
உடம்பு நோவா துளமடக்கா தோதோ நோன்பு கும்பிட்டே
சாவா வரமுஞ் சித்தியெலாந் தழைத்த நிலையுஞ் சன்மார்க்க
சங்க மதிப்பும் பெற்றேனென் சதுர்தான் பெரிதென் சரித்திரத்தை
ஆவா நினைக்கி லதிசயமென் அப்பா வரசே யமுதேயென்
ஆவிக் கினிய துணையேயென் அன்பே யறிவே யருட்ஜோதித்
தேவா விதுநின் செயலேயிச் செயலை நினைக்குந் தொறுமெனது
சிந்தை கனிந்து கனிந்துருகித் தெள்ளா ரமுத மானதுவே. 7

இரவும் பகலுந் தூங்கியவென் தூக்க மனைத்து மியல்போகத்
திசைந்த பலனுப் விளைந்ததுநா னிரண்டு பொழுது முண்டவெலாம்
பரவு மமுத வுணவாயிற் றந்தோ பலர்பாற் பகலிரவும்
படித்த சமயச் சாத்திரமும் பலரா றசெய்த தோத்திரமும்
விரவிக் களித்து நாத்தடிக்க விளம்பி விரித்த பாட்டெல்லாம்
வேதா கமத்தின் முடிமீது விளங்குந் திருப்பாட் டாயினவே
காவலான் றறியாப் பெருங்கருணைக் கடவு ளிதுநின் றபவிதனைக்
கருதுந் தொறுமென் கருத்தலர்ந்து சுகமே மயமாக் கண்டதுவே. 8

ஊற்றை யுடம்பி லிருட்டறைவா யுறங்கி விழித்துக் கதைபேசி
உண்டிங் குடுத்துக் கருத்திழந்தே யுதவா வெருதி னார்திரிந்து
நேற்றை வரையும் வீண்போது போக்கி யிருந்தே னெறியறியேன்
நேரே யிற்றைப் பகலந்தோ நெடுங்கா லமுமெய்த் தவமோக
ஆற்றை யடைந்தோ ரெல்லோரு மச்சோ வென்றே யதிசயிப்ப
வழுதுண் டழியாத் திருவுருவ மடைந்தேன் பெரிய வருட்ஜோதிப்
பேற்றை யுரிமைப் பேறுகப் பெற்றேன் பெரிய பெருமானின்
பெருமை யிதுவே லிதனிபலை யாரே துணிந்து பேசுவரே. 9

புரைசேர் வினைபுங் கொடுமாயைப் புணர்ப்பு மிருளு மறைப்பிலிடு
புகலும் பிறவாந் தடைகளெலாம் போக்கி ஞானப் பொருள்விளங்கும்
வரைசேர்த் தருளிச் சித்தியெலாம் வழங்கிச் சாகா வரங்கொடுத்து
வலிந்தென் னுளத்தி லமர்ந்துயிரிற் கலந்து மகிழ்ந்து வாழ்கின்றாய்
பரைசேர் வெளியிற் பதியாயப் பான்மேல் வெளியில் விளங்குசித்த
பதியே சிறியேன் பாடலுக்குப் பரிசு விரைந்தே பாலித்த
அரைசே யழுத மெனக்களித்த அம்மே யுண்மை யறிவளித்த
அப்பா பெரிய அருட்ஜோதி யப்பா வாழி நின்னருளே. 10

அருட்பெருஞ்ஜோதி

59. அனுபவநிலை

கட்டளைக்கலித்துறை

அருட்பெருஞ்ஜோதி

நான்செய்த புண்ணியமென் னுரைக்கேன் பொது ணண்ணியதோர்
வான்செய்த மாமணி யென்கையிற் பெற்றுரல் வாழ்வடைந்தேன்
ஊன்செய்த தேக மொளி வடிவாகுின் றேறுங்குகின்றேன்
தேன்செய்த தெள்ளமு துண்டேன்கண் டேன்மெய்த் திருநிலையே. 1

நான்செய்த புண்ணிய மென்னுரைப் பேன்பொது ணண்ணியதோர்
வான்செய்த மெய்ப்பொரு ளென்கையிற் பெற்றுமெய் வாழ்வடைந்தேன்
கோன்செய்த பற்பல கோடி யண்டங்களுந் கூறவற்றில்
தான்செய்த பிண்டப் பகுதியும் நான்செயத் தந்தனனே. 2

திருநிலை பெற்றன னம்பலத் தானருட் டெள்ளமு துண்
டருநிலை பெற்றன ணென்றே சிவமென வோங்குகின்ற
பெருநிலை பெற்றனன் சுத்தசன் மார்க்கம் பிடித்துநின்றேன்
இருநிலை முன்னிலை யெல்லா நிலையு மெனக்குளவே. 3

Tத்தனை நான்குற்றஞ் செய்தும் பொறுத்தனை யென்னைநின்பால்
வைத்தனை யுள்ள மகிழ்ந்தனை நான்சொன்ன வார்த்தைகளிங்
:த்தனை யுஞ்சம் மதித்தருள் செய்தனை யம்பலத்தே
நத்தனை யாய்ினைக் கென்மே லிருக்கின்ற மோகமென்னே. 4

னியே யிறையுஞ் சகிப்பறி யேனெனைக் கின்பகல்குங்
னியேயென் றன்னிரு கண்ணேமுக் கண்கொண்ட கற்பகமே
னியேயென் னன்புடைத் தாயேசிற் றம்பலஞ் சார்ந்தைதியே
நனியே லருள்க வருள்கமெய்ஞ் ஞானமுழு தையுமே. 5

புத்தியஞ் சேல்சற்று மென்னெஞ்ச மேகிற் பொதுத் தந்தையார்
நித்தயஞ் சேர்ந்த நெறியிற் செலுத்தினர் நீயினிநன்
முத்தியும் ஞானமெய்ச் சித்தியும் பெற்று முயங்கிடுவாய்
சத்தியஞ் சத்தியஞ் சத்தியஞ் சத்தியஞ் சத்தியமே. 6

கூடிய நாளிது தான்தரு ணம்மெனைக் கூடியுள்ளே
வாடிய வாட்டமெல் லாந்தவிர்த் தேசுக வாழ்வளிப்பாய்
நீடிய தேலினிச் சற்றும் பொறே னுயிர் நீத்திடவேன்
ஆடிய பாத மறியச்சொன் னேனென தாண்டவனே. 7

ஆக்கிய நாளிது தான்தரு ணம்மரு ளாரமுதந்
தேக்கிமெய் யின்புறச் செய்தருள் செய்தருள் நீயெனையும்
நீக்கினை யேலினிச் சற்றும் பொறே னுயிர் நீத்திடவேன்
தாக்கிய பாத மறியச்சொன் னேனருட் ஜோதியனே. 8

அருட்பெருஞ்ஜோதி

60. கைம்மாறின்மை

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

இழையெலாம் விளங்கு மம்மை யிடங்கொணின் கருணை யென்னும்
மழையெலாம் பொழிந்தென் னுள்ள மயக்கெலாந் தவிர்த்து நான்செய்
பிழையெலாம் பொறுத்த வுன்றன் பெருமைக்கென் புரிவே னங்தோ
உழையெலா மிலங்குஞ் ஜோதி யுயர்மணி மன்று ளானே. 1

போதுதான் வீணை போக்கிப் புலையனேன் புரிந்த பொல்லாத்
தீதுதான் பொறுத்த வுன்றன் றிருவருட் பெருமைக் கங்தோ
ஏதுதான் புரிவே னெனகோ வென்னென்று புகழ்வேன் ஞான
மாதுதா னிடங்கொண் டோங்க வயங்குமா மன்று ளானே. 2

சிற்றறி வுடைய னெகித் தினந்தொறுந் திரிந்து நான்செய்
குற்றமுங் குணமாக் கொண்ட குணப்பெருங் குன்றே யென்னைப்
பெற்றதா யினுமிக் கோங்கும் பெருமநின் பெருமை தன்னைக்
கற்றறி வில்லே னெந்தக் கணக்கறிந் துரைப்பே னங்தோ. 3

மையரி நெடுங்க ணுர்தம் வாழ்க்கையின் மயங்கி யிங்கே
பொய்யறி வுடையேன் செய்த புன்மைகள் பொறுத்தாட் கொண்டாய்
ஐயறி வுடையார் போற்று மம்பலத் தரசே நின்சீர்
மெய்யறி வறியே னெந்த விளைவறிந் துரைப்பே னங்தோ. 4

பேயினும் பெரியேன் செய்த பிழைகளுக் கெல்லை யில்லை
ஆயினும் பொறுத்தாட் கொண்டா யப்பலத் தாசை யென்றன்
தாயினு மினிய வுன்றன் தண்ணருட் பெருமை தன்னை
நாயினுங் கடையே னெந்த நலமறிந் துரைப்பே னந்தோ. 5

துரும்பினிற் சிறியேன் வஞ்சஞ் சூழ்ந்தமைஞ் சகத்தின் செய்த
பெரும்பிழை யனைத்து மந்தோ பெருங்குண மாகக் கொண்டாய்
அரும்பொரு ளென்ன வேத மாகமம் வழுத்து கின்ற
கரும்பினி னினியா யுன்றன் கருணையென் னென்பே னந்தோ. 6

வரைகடந் தடியேன் செய்த வன்பிழை பொறுத்தாட் கொண்டாய்
திரைகடந் தண்ட பிண்டத் திசையெலாங் கடந்தே யப்பாற்
கரைகடந் தோங்கு முன்றன் கருணையங் கடற்சீ ருள்ளம்
உரைகடந் ததுவென் றுல்யா னுணர்வதன் னுரைப்ப தென்னை. 7

நனவினும் பிழையே செய்த நாயினுங் கடையே னந்தோ
கனவினும் பிழையே செய்தேன் கருணைமா நிதியே நீதான்
நினைவினுங் குறியா தாண்டாய் நின்னருட் பெருமை தன்னை
வினவினுஞ் சொல்வார் காணே னென்செய்வேன் விளைய னேனை. 8

வன்செயல் பொறுத்தாட் கொண்ட வள்ளலே யடிய னேன்றன்
முன்செய லனைக ளோடு முடுகுபின் செயல்க ளெல்லாம்
என்செய லாகக் காணே னெனைக்கலந் தோன்றுப் நின்றூப்
நின்செய லாகக் கண்டேன் கண்டபின் னிகழ்த்த லென்னை. 9

இருமையு மொருமை தன்னில் ஈந்தனை யெந்தா யுன்றன்
பெருமையென் னென்று நான்றுன் பேசுவன் பேத மின்றி
உரிமையால் யானும் நீயும் ஒன்றெனக் கலந்து கொண்ட
ஒருமையை நினைக்கின் றேனென் னுள்ளகந் தழைக்கின் றேனை. 10

அருட்பெருஞ்ஜோதி

—o—

61. வேண்டுகோள் 1

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

த்தவா னகத்தே யுரத்தவா ஞான வொளியினை லோங்குமோர் சித்தி
ஸவா பெரியோர் புரத்தவா குற்றம் பொறுத்தடி பேன்றனக் களித்த
ஸவா வுண்மை வரத்தவா ஆக மங்களு மறைகளுங் காணத்
ஸவா வறிவா தரத்தவா பொதுவிற் றனித்தவா வினித்தவாழ் வருளே. 1

முன்னவா திபர்க்கு முன்னவா வேத முடிபெலா மொழிகின்ற முதல்வா
பின்னவா திபர்க்குப் பின்னவா வெவர்க்கும் பெரியவா பெரியவர் மதிக்குஞ்
சின்னவா சிறந்த சின்னவா ஞான சிதம்பர வெளியிலே நடிக்கும்
மன்னவா வழுத மன்னவா வெல்லாம் வல்லவா நல்லவாழ் வருளே. 2

விடையவா தனைதீர் விடையவா சுத்த வித்தைமுன் சிவவரை கடந்த
நடையவா ஞான நடையவா வின்ப நடம்புரிந் துயிர்க்கெலா முதவுங்
கொடையவா வோவாக் கொடையவா வெனையாட் கொண்டெனு ளமர்ந்தருளியவென்
உடையவா வெல்லா முடையவா வுணர்ந்தோர்க் குரியவா பெரியவாழ் வருளே. 3

வலத்தவா நாத வலத்தவா ஜோதி மலையவா மனமுதல் கடந்த
புலத்தவா வெனது புலத்தவா தவிர்த்துப் பூரண ஞானநோக் களித்த
நலத்தவா வரையா நலத்தவா மறைக ணுடியுங் காண்பதற் கரிதாம்
பலத்தவா திருவம் பலத்தவா வெல்லாம் படைத்தவா படைத்தவாழ் வருளே. 4

உணர்ந்தவ ருளத்தை யுகந்தவா வியற்கை யுண்மையே யுருவதா யின்பம்
புணர்ந்திட வெனைத்தான் புணர்ந்தவா ஞானப் பொதுவிலே பொதுநடம் புரிந்தெண்
குணந்திகழ்ந் தோங்குங் குணத்தவா குணமுங் குறிகளுங் கோலமுங் குலமுந்
தணந்தசன் மார்க்கத தனிநிலை நிறுத்துந் தக்கவா மிக்கவாழ் வருளே. 5

தத்துவங் கடந்த தத்துவா ஞான சமரச சுத்தசன் மார்க்கச்
சத்துவ நெறியி னடத்தியென் றனைமேற் றனிநிலை நிறுத்திய தலைவா
சித்துவந் தாடுஞ் சித்திமா புரத்திற் றிகழ்ந்தவா திகழ்ந்தென துளத்தே
ஒத்துநின் றோங்கு முடையவா கருணை யுளத்தவா வளத்தவாழ் வருளே. 6

மதம்புகல் முடிபு கடந்தமெய்ஞ் ஞான மன்றிலே வயங்கொளி டகஞ்செய்
பதப்புக லடிபேற் கருட்பெருஞ் ஜோதிப் பரிசுதந் திடுதுமென் றுளத்தே
நிதம்புகல் கருணை நெறியவா வின்ப நிலையவா நித்தநிர்க் குணமாம்
சிதம்புகல் வேத சிரத்தவா வினித்த தேனவா ஞானவாழ் வருளே. 7

மூவிரு முடிபுங் கடந்ததோ ரியற்கை முடிபிலே முடிந்தென துடம்பும்
ஆவியுந் தனது மயம்பெறக் கிடைத்த வருட்பெருஞ் ஜோதியம் பலவா
ஓவுரு முதலா வுரைக்குமெப் புருவு முணர்ச்சியு மொளிபெறு செயலும்
மேவினின் றவர்க்குண் மேவிய வுணர்வுண் மேயவா தூயவாழ் வருளே. 8

பங்கமோ ரணுவும் பற்றிடா வறிவாற் பற்றிய பெற்றியா ருளத்தே
தங்குமோர் ஜோதித் தனிப்பெருங் கருணைத் தாந்திகழ் சத்தியத் தலைவா
துங்கமுற் றழியா நிலைதரு மியற்கைத் தொன்மையாஞ் சுத்தசன் மார்க்கச்
சங்கநின் றோத்துஞ் சத்திய ஞான சபையவா வபயவாழ் வருளே. 9

இனித்தசெங் கரும்பி லெடுத்ததீஞ் சாற்றி னிளம்பதப் பாகொடு தேனுங்
கனித்ததீங் கனியி னிரதமுங் கலந்து கருத்தெலாங் களித்திட வுண்ட
மனித்தரு மமுத வுணவுகொண் டருந்தும் வானநாட் டவர்களும் வியக்கத்
தனித்தமெய்ஞ் ஞான வமுதெனக் களித்த தனியவா வினியவாழ் வருளே. 10

62. வேண்டுகோள் 2

கலிநிலைத்துறை

அருட்பெருஞ்ஜோதி

கருணைநிதி யேயடி யேனிரு கண்ணுளானே
தருணமிதென் சிந்தையுண் மேவிய தேவதேவே
பொருணெடிய சிற்றம்ப லத்தாளிர் புண்ணியாமெய்த்
தருணவிது தான்தரு ணம்மெனைத் தாங்கிக்கொள்ளே. 1

கூகாவெனக் கூடி யெடாதிக் கொடியனேற்கே
சாகாவரந் தந்த தயாநிதித் தந்தையெனின்
மாகாதல ருகின ருனிங்கு வாழ்கின்றேனென்
யோகாதி சயங்க ருரைக்க வுலப்புரூதே. 2

எந்தாயுனைக் கண்டு களித்தன னீண்டிப்போதே
சிந்தாநல மும்பல மும்பெற்றுத் தேக்குகின்றேன்
அந்தாமரை யானெடு மாலவ ருதிவாரீர்
வந்தாரெனை வாழ்த்துகின் ருரிங்கு வாழ்கவென்றே. 3

வாழ்வேனரு ளாரமு துண்டிங்கு வாழ்கின்றேனுன்
எழ்வேதனை யுந்தவிர்ந் தேதனுனை யேயடைந்தேன்
சூழ்வேன்றிருச் சிற்றட்பலத்தைத் துதித்து வாழ்த்தித்
தாழ்வேனலை தியார்க்கு மினிச்சற்றுந் தாழ்ந்திடேனே. 4

தாழாதெனை யாட்கொண் டருளிய தந்தையெனின்
கேழார்மணி யம்பலம் போற்றக் கிடைத்துளேனுன்
ஏழாநிலை மேனிலை யேறி யிலங்குகின்றேன்
ஊழால்வரு துன்பங்கள் யாவு மொழிந்ததன்றே. 5

கோடாமறை யாகம மாதிய கூறுகின்ற
சூடாமணி யேமணி யுள்ளொளிர் ஜோதியேயென்
பாடானவை தீர்த்தரு ளீந்துநின் பாதமென்னும்
வாடாமல ரொன்முடி சூட்டினை வாழிநீயே. 6

எல்லாஞ்செய வல்லவனே யெனை யீன்றதாயின்
நல்லாய்சிவ ஞானிகள் பெற்றமெய்ஞ் ஞானவாழ்வே
கொல்லாநெறி காட்டியென் றன்னைக் குறிப்பிற் கொண்டுன்
பொல்லாமை பொறுத்தனை வாழ்கநின் பொற்பதமே. 7

பரமான சிதம்பர ஞானசபா பதியே
வரமான வெல்லாமெனக் கீந்தநல் வள்ளலேயென்
தரமானது சற்றுங் குறித்திலை சாமிநின்னை
உரமானவுள் ளன்பர்க ளேசுவ ருண்மையிதே. 8

தாயேயெனைத் தந்த தயாநிதித் தந்தையெயிற்
நாயேன்பிழை யாவையுங் கொண்டனை நன்மையென்றே
காயேகனி யாகக் கருதுங் கருத்தனைநின்
சேயேயென வென்பெய ரெங்குஞ் சிறந்ததன்றே. 9

பொய்யேயுரைக் கின்றவென் சொல்லும் புனைந்துகொண்டாய்
மெய்யேதிரு வம்பலத் தாடல் செய்வித்தகனே
எய்யேனினி வெம்மலக் கூட்டிலிருந் தென்னுள்ளம்
கையேன்சுத்த நல்லுடம் பெய்தின ணினிலத்தே. 10

அருட்பெருஞ்ஜோதி

63. திருவருட்பேறு

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அருளே பழுத்த சிவதருவி லளித்த பழந்தந் தடியேனைத்
தெருளே சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை யாக்கினையே
மருளே முதலாந் தடையெல்லாந் தீர்த்தே னின்பால் வளர்கின்றேன்
பொருளே யினிநின் றனைப்பாடி யாடும் வண்ணம் புகலுகவே. 1

ஒருவா தடியே னெண்ணியவா றெல்லா மருளி யுளங்களித்தே
திருவார் சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை யாக்கினையே
பெருவாழ் வடைந்தேன் பெருங்களிப்பால் பெருமா னின்பால் வளர்கின்றேன்
உருவா ருலகி லுனைப்பாடி யாடும் வண்ணம் உரைத்தருளே. 2

அவமே புரிந்தேன் றனைமீட்டின் அருளா ரமுத மிகப்புகட்டிச்
சிவமே சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை யாக்கினையே
பவமே தொலைத்தேன் பெருங்களிப்பாற் பதியே நின்பால் வளர்கின்றேன்
கவமே யடியே னினைப்பாடி யாடும் வண்ணா கவிலுகவே. 3

பல்வா தனையுந் தவிர்த்தெனக்கே பரமா னந்த வமுதளித்துச்
செல்வா சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை யாக்கினையே
வல்வா தனைசெய் மனச்செருக்கை மாற்றி நின்பால் வளர்கின்றேன்
நல்வாழ் வளித்தாய் நினைப்பாடி யாடும் வண்ணம் நவிலுகவே. 4

ஓவா வின்ப மயமாகி போங்கு மமுத முதவிபெனைத்
தேவா சிற்றம் பலவாநின் செல்வப் பிள்ளை யாக்கினையே
பூவார் மணம்போற் சுகந்தருமெய்ப் பொருளே நின்பால் வளர்கின்றேன்
நாவா லுனியே னினைப்பாடி யாடும் வண்ணம் நவிலுகவே. 5

ளிவே தவிர்த்துச் சிறியேன்றன் எண்ணை முழுது மளித்தருளித்
தளிவே சிற்றம் பலவாகின் செல்வப் பிள்ளை யாக்கினையே
ளிவேவய் வடிவு பெற்றோங்கி உடையா யுன்பால் வளர்கின்றேன்
ளிவேவய் நினது புகழ்பாடி யாடும் வண்ணஞ் சாற்றுகவே. 6

றப்பே தவிர்த்திங் கெனையென்று மாளா நிலையிற் றனியமர்த்தி
றப்பே சிற்றம் பலவாகின் செல்வப் பிள்ளை யாக்கினையே
றப்பே தவிர்ந்தேன் பெருங்களிப்பாற் பெருமா னின்பால் வளர்கின்றேன்
றப்பே ருலகில் உனைப்பாடி யாடும் வண்ணஞ் சாற்றுகவே. 7

ளனே புகுந்தென் னுளங்கனிவித் தூபிரிற் கலந்தே பொன்றுதிக்
தனே சிற்றம் பலவாகின் செல்வப் பிள்ளை யாக்கினையே
ானே யழியா வாழ்வுடையேன் தானே நின்பால் வளர்கின்றேன்
ானே ருலகில் உனைப்பாடி யாடும் வண்ணஞ் சாற்றுகவே. 8

ூரா வுருகு மளித்தருளி யன்பா லின்ப நிலைக்கேற்றி
ாரார் சிற்றம் பலவாகின் செல்வப் பிள்ளை யாக்கினையே
ரா ரின்ப வனுபவங்க ளெல்லாம் பொருந்தி யிருக்கின்றேன்
ரா வுலகி லடிச்சிறியேன் செய்யும் பணியைத் தெரிக்குகவே. 9

மெய்வைப் பதியா நிலைக்கேற்றி விளங்கு மருளைத் தினைவளித்து
தெய்வப் பதியே சிவமேகின் செல்வப் பிள்ளை யாக்கினையே
ஔவைப் பறிந்தேன் துரிசெல்லா மறுத்தே னின்பால் வளர்கின்றேன்
பொய்வைப் படையேன் இவ்வுலகிற் புரியும் பணியைப் புகன்றருளே. 10

அருட்பெருஞ்ஜோதி

64. ஆற்றுமை

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

இப்பார் முதலெண் மூர்த்தமதா யிலங்குங் கருணை யெங்கோவே
தப்பா யினதீர்த் தென்னையுமுன் றடுத்தாட் கொண்ட தயாநிதியே
எப்பா லவரும் புகழ்ந்தேத்து மிறைவா வெல்லாம் வல்லோனே
அப்பா வரசே யினிச்சிறிது மாற்ற மாட்டேன் கண்டாயே. 1

புரைசேர் துயரப் புணரிமுற்றுங் கடத்தி ஞான பூரணமாங்
கரைசேர்த் தருளி யின்னமுதக் கடலிற் குடிப்பித் திடல்வேண்டும்
உரைசேர் மறையின் முடிவிளங்கு மொளிமா மணியே யுடையானே
அரசே யப்பா வினிச்சிறிது மாற்ற மாட்டேன் கண்டாயே. 2

கண்ணை யமுதக் கடலேயென் கண்ணே கண்ணுட் கருமணியே
தண்ணார் மதிபோ லதிர்பரப்பித் தழைத்த சுடரே தனிக்கனலே
எண்ணை டரிய பெரியவண்ட மெல்லா நிறைந்த வருட்ஜோதி
அண்ணை வடலூ யினிச்சிறிது மாற்ற மாட்டேன் கண்டாயே. 3

பொய்யா தென்று மெனதுளத்தே பொருந்து மருந்தே புண்ணியனே
கையார்ந் திலங்கு மணியேசெங் கருமே கனியே கடையேற்குச்
செய்யா வுதவி செய்தபெருந் தேவே மூவாத் தெள்ளமுதே
ஐயா வடலூ யினிச்சிறிது மாற்ற மாட்டேன் கண்டாயே. 4

இத்தா ரணியி லென்பிழைக ளெல்லாம் பொறுத்த வென்குருவே
சித்தா சிற்றம் பலத்தாடு நிருத்தா வெல்லாஞ் செயவல்ல
சித்தா சித்தி புரத்தமர்ந்த தேவே சித்த சிகாமணியே
அத்தா வடலூ யினிச்சிறிது மாற்ற மாட்டேன் கண்டாயே. 5

எம்மே தகவு மூடையவர்தம் மிதயத் தமர்ந்த விறையவனே
இம்மே தினிபி லெனைவருவித் திட்ட கருணை யெம்மானே
நம்மே லவர்க்கு மறிவரிய நாதா வென்னை நயந்தின்ற
அம்மே யப்பா வினிச்சிறிது மாற்ற மாட்டேன் கண்டாயே. 6

செப்பார் கலைகள் மொழிந்தபொருட் டிறங்க ளனைத்துந் தெரிந்துதெளிந்
திப்பா ரிடைதின் புகழ்பாடு கின்ற பெரிய ரின்மொழிப்பாட்
டொப்பா சிறியேன் புன்மொழிப்பாட் டெல்லா முவந்த வுடையானே
அப்பா வடலூ யினிச்சிறிது மாற்ற மாட்டேன் கண்டாயே. 7

துப்பார் கனகப் பொதுவினடத் தொழிலா லுலகத் துயிரோழிக்கும்
வைப்பா மிறைவா சிவகாம வல்லிக் கிசைந்த மணவாளா
ஒப்பா ருயர்ந்தா ரில்லாத வொருவா வெல்லா முடையானே
அப்பா வடலூ யினிச்சிறிது மாற்ற மாட்டேன் கண்டாயே 8

ஒப்பா ருரைப்பார் நின்பெருமைக் கெனமா மறைக ளோலமிடுந்
துப்பார் வண்ணச் சுடரேமெய்ச் சோதிப் படிக வல்லாந்தாய்
வெப்பா னலைதீர்த் தெனக்கமுத விருந்து புரிதல் வேண்டுமென்றன்
அப்பா வடலூ யினிச்சிறிது மாற்ற மாட்டேன் கண்டாயே. 9

வேப்பா ருள்ளக் கலக்கமெலா மிற்றைப் பொழுதே விலக்கிபொழிந்
திப்பா ரிடையென் கருத்தின்வண்ணை மெல்லாம் விரைவி னீந்தருள்க
ஒப்பா ரிரைத்த தன்றுண்மை புரைத்தீ தென்ன் கருணை புடையானே
அப்பா வடலூ யினிச்சிறிது மாற்ற மாட்டேன் கண்டாயே. 10

அருட்பெருஞ்ஜோதி

65. திருப்பள்ளி யெழுச்சி

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

பொழுது விடிந்ததென் னுள்ளமென் கமலம்
பூத்தது பொன்னொளி பொங்கிய தெங்கும்
தொழுதுநிற் கின்றனன் செய்பணி யெல்லாஞ்
சொல்லுதல் வேண்டுமென் வல்ல சற்குருவே
முழுதுமா னினைன வாகம வேத
முறைகளை லாமொழி கின்றமுன் னவனே
எழுதுத லரியசீர் அருட்பெருஞ் ஜோதி
என்தந்தை யேபள்ளி யெழுந்தருள் வாயே. 1

துற்குண மாயைபோய்த் தொலைந்தது ஞானந்
தோன்றிடப் பொன்னொளி தோற்றிய கதிர்தான்
சிற்குண வரைமிசை யுதயஞ்செய் ததுமா
சித்திகள் அடிப்பணி செய்திடச் சூழ்ந்த
நற்குண சன்மார்க்க சங்கத்தா ரெல்லாம்
நண்ணினர் தோத்திரம் பண்ணிநிற் கின்றார்
எற்குண வளித்தவென் அருட்பெருஞ் ஜோதி
என்னம்மை யேபள்ளி யெழுந்தருள் வாயே. 2

நிலந்தெளிந் ததுகண மழுங்கின சுவணை
நீடொளி தோன்றிற்றுக் கோடொலிக் கின்ற
அலர்ந்தது தாமரை யாவை விருள்போய்
அழிந்தது கழிந்தது மாயைமா லிரவு
புலர்ந்தது தொண்டரோ டண்டருங் கூடிப்
போற்றியோ சிவசிவ போற்றியென் கின்றார்
இலங்குரு வளித்தவென் அருட்பெருஞ் ஜோதி
என்குரு வேபள்ளி யெழுந்தருள் வாயே. 3

கல்லாய மனங்களுங் கரையப்பொன் னொளிதான்
கண்டது கங்குலும் விண்டது தொண்டர்
பல்லாரு மெய்தினர் பாடிநின் முடிப்
பரவுகின் முரன்பு விரவுகின் முராய்
நல்லார்மெய்ஞ் ஞானிகள் யோகிகள் பிறரும்
நண்ணினர் சூழ்ந்தனர் புண்ணிய நிதியே
எல்லாஞ்செய் வல்லவென் அருட்பெருஞ் ஜோதி
என்தெய்வ மேபள்ளி யெழுந்தருள் வாயே. 4

புன்மாலை யிரவெலாம் புலர்ந்தது ஞானப்
பொருப்பின்மேற் பொற்கதிர் பொலிந்தது புலவோர்
சொன்மாலை நிகாடுத்தனர் துதித்துநிற் கின்றூர்
சுத்தசன் மார்க்கசங் கத்தவ ரெல்லாம்
மன்மாலை மாலையா வந்துசூழ் கின்றூர்
வானவர் பெருங்கினர் வாழியென் கின்றூர்
என்மாலை யணிந்தவென் அருட்பெருஞ் ஜோதி
என்பதி யேபள்ளி யெழுந்தருள் வாயே. 5

ஒருமையி னுலகெலா மோங்குக வெனவே
உதின சின்னங்க ளெதின சங்கம்
பெருமைகொள் சமரச சுத்தசன் மார்க்கப்
பெருட்புகழ் பேசினர் பெரியவர் சூழ்ந்தார்
அருமைபெரு மெளிமைபெரு மாகியன் றுகி
அப்பலத் தேதெரித் தாடல்செய் பதியே
இருமையு மளித்தவென் அருட்பெருஞ் ஜோதி
யென்னர சேபள்ளி யெழுந்தருள் வாயே. 6

சினைப்பள்ளித் தாமங்கள் கொணர்ந்தன ரடியார்
சிவசிவ போற்றியென் றுவகைகொள் கின்றூர்
நினைப்பள்ளி யுள்ளத்திகள் ளாரமு தளிக்கும்
நெடியத் தேவரென் றூரியர் புகன்றூர்
முனைப்பள்ளி பரிற்றுதென் றணைக்கல்வி பயிற்றி
முழுதுணர் வித்தடம் பழுதிலாந் தவிர்த்தே
எனைப்பள்ளி யெழுப்பிய அருட்பெருஞ் ஜோதி
என்னப்ப னேபள்ளி யெழுந்தருள் வாயே. 7

மதம்பிடித் தவரெல்லாம் வாய்ப்பிடிப் புண்டு
வந்துநிற் கின்றனர் வாய்திறப் பிப்பான்
கதம்பிடித் தவரெல்லாங் கடும்பிணி யாலே
கலங்கினர் சூழ்ந்தன ருலம்புறு கின்றூர்
பதம்பிடித் தவரெல்லாம் அம்பலப் பாட்டே
பாடின ராடினர் பரவிநிற் கின்றூர்
இதம்பிடித் தெனையாண்ட அருட்பெருஞ் ஜோதி
என்னைய னேபள்ளி யெழுந்தருள் வாயே. 8

மருளோடு மாயைபோய்த் தொலைந்தது மதங்கள்
வாய்மூடிக் கொண்டன மலர்ந்தது கமலம்
அருளொளி விளங்கிய தொருதிருச் சபையும்
அலங்கரிக் கின்றனர் துலங்கிவீற் றிருக்கத்
தெருளொடு பொருளுமேன் மேமெலனைக் களித்துச்
சித்தெலாஞ் செய்திடத் திருவருள் புரிந்தே
இருளறுத் தெனையாண்ட அருட்பெருஞ் ஜோதி
என்வள்ள லேபள்ளி யெழுந்தருள் வாயே. 9

அலங்கரிக் கின்றோமோர் திருச்சபை யதிலே
அமர்ந்தருட் ஜோதிகொண் டடிச்சிறி யோமை
வலம்பெறு மிறவாத வாழ்வில்வைத் திடவே
வாழ்த்துகின் றோ முன்னர் வணங்கிநிற் கின்றோம்
விலங்கிய திருளெலாம் விடிந்தது பொழுது
விரைந்தெமக் கருளுதல் வேண்டுமித் தருணம்
இலங்குநற் றருணமெம் அருட்பெருஞ் ஜோதி
எம்தந்தை யேபள்ளி யெழுந்தருள் வாயே. 10

அருட்பெருஞ்ஜோதி

66. திருவுந்தியார்

கலித்தாழிசை

அருட்பெருஞ்ஜோதி

இரவு விடிந்த திணையடி வாய்த்தன
பாவி மகிழ்ந்தேனென் றுந்தீ பற
பாலமு துண்டேனென் றுந்தீ பற. 1

பொழுது விடிந்தது பொற்பதம் வாய்த்தன
தொழுது மகிழ்ந்தேனென் றுந்தீ பற
தூயவ னேனென்ன் றுந்தீ பற. 2

தூக்கந் தொலைந்தது சூரியன் றோன்றினன்
எக்கந் தவிர்ந்தேனென் றுந்தீ பற
இன்னமு துண்டேனென் றுந்தீ பற 3

துன்பந் தவிர்ந்தது தூக்கந் தொலைந்தது
இன்பங் கிடைத்தமதென் றுந்தீ பற
எண்ணம் பலித்தமதென் றுந்தீ பற 4

ஞான முதித்தது காத மொலித்தது
தீனந் தவிர்ந்தமதென் றுந்தீ பற
சிற்சபை கண்டேனென் றுந்தீ பற. 5

திரையற்று விட்டது செஞ்சுடர் தோன்றிற்று
பசையொளி போங்கிற்றென் றுந்தீ பற
பலித்தது பூசையென் றுந்தீ பற. 6

உள்ளிரு ணீங்கிற்றென் றுள்ளொளி யோங்கிற்றுத்
தெள்ளமு துண்டேனென் றுந்தீ பற
திருத்திக்க வுண்டேனென் றுந்தீ பற. 7

எந்தையைக் கண்டே னிடரெலா நீங்கினேன்
சிந்தை மகிழ்ந்தேனென் றுந்தீ பற
சித்திகள் பெற்றேனென் றுந்தீ பற. 8

தந்தையைக் கண்டேனன் சாகா வரம்பெற்றேன்
சிந்தை களித்தேனென் றுந்தீ பற
சித்தெலாம் வல்லேனென் றுந்தீ பற. 9

முத்தியைப் பெற்றேனம் முத்தியிலுல் ஞான
சித்தியை யுற்றேனென் றுந்தீ பற.
சித்தனு மானேனென் றுந்தீ பற. 10

அருட்பெருஞ்ஜோதி

67. சரணடைதல்

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

என்னை நின்றே னெண்ணமெலா மெய்த வருள்செய்கின் றதனித்
தன்னை ழுழுதே சிற்சபையிற் றனித்த தலைமைப் பெருவாழ்வே
கண்ணு ரொளியே யொளியெல்லாங் கலந்த வெளியே கருதுறுமென்
அன்னை வையா வம்மாவென் னப்பா யாலுன் னடைக்கலமே. 1

திரைசேர் மறைப்பைத் தீர்த்தெனக்கே தெரியா வெல்லாந் தெரிவித்துப்
பரைசேர் ஞானப் பெருவெளியிற் பழுத்த கொழுத்த பழந்தந்தே
கரைசே ரின்பக் காட்சியெலாங் காட்டிக் கொடுத்தே யெனையாண்ட
அரைசே யய்யா வம்மாவென் அப்பா யாலுன் னடைக்கலமே. 2

தேனே யழுதே சிற்சபையிற் சிவமே தவமே செய்கின்றோர்
ஊனே புகுந்த வொளியேயெமைப் புணர்வே யென்ற னுயிர்க்குயிராம்
வானே யென்னைத் தாலுக்கு வானே கோனே யெல்லாம்வல்
லானே யையா வம்மாவென் அப்பா யாலுன் னடைக்கலமே. 3

கடையே னுள்ளக் கவலையெலாங் கழற்றிக் கருணை யமுதளித்தென்
புடையே யகத்தும் புறத்துமகப் புறத்தும் விளங்கும் புண்ணியனே
தடையே தவிர்க்குங் கனகசபைத் தலைவா ஞான சபாபதியே
அடையே னுலகை யுணையடைந்தேன் அடியே னுன்ற னடைக்கலமே. 4

இகத்தும் பரத்தும் பெரும்பலன்கள் எல்லாம் பெறுவித் திம்மையிலே
முகத்தும் முளத்துங் களிதுளும்ப மூவா வின்ப நிலையமர்த்திச்
சகத்து ளவர்கண் மிகத்துதிப்பத் தக்கோ னெனவைத் தென்னுடைய
அகத்தும் புறத்தும் விளங்குகின்றோய் அடியே னுன்ற னடைக்கலமே. 5

நீண்ட மறைக ளாகமங்கள் நெடுநாள் முயன்று வருந்தினின்று
வேண்ட வவைகட் கொருசிறிதும் விளங்கக் காட்டா தென்மொழியைப்
பூண்ட வடியை யென்றலேமேற் பொருந்தப் பொருந்தி யென்றன்னை
ஆண்ட கருணைப் பெருங்கடலே அடியே னுன்ற னடைக்கலமே. 6

பாடுஞ் சிறியேன் பாட்டனைத்தும் பலிக்கக் கருணை பாலித்துக்
கோடு மனப்பேய்க் குரங்காட்டங் குலைத்தே சீற்றக் கூற்றொழித்து
நீடு முலகி லழியாத நிலைமே லெனைவைத் தென்னுளத்தே
ஆடுங் கருணைப் பெருவாழ்வே அடியே னுன்ற னடைக்கலமே. 7

கட்டுக் கடங்கா மனப்பரியைக் கட்டு மிடத்தே கட்டுவித்தென்
மட்டுக் கடங்கா வாங்கார மதமா வடங்க வடக்குவித்தே
எட்டுக் கிசைந்த விரண்டுமெனக் கிசைவித் தெல்லா வின்னமுதும்
அட்டுக் கொடுத்தே யருத்துகின்றே யடியே னுன்ற னடைக்கலமே. 8

புல்லுங் களபப் புணர்முலையார் புணர்ப்பும் பொருளும் பூமியுமென்
தொல்லு முலகப் பேராசை யுவரி கடந்தி யெனதுமனக்
கல்லுங் கனியக் கரைவித்துக் கருணை யமுதங் கனிந்தளித்தே
அல்லும் பகலு மெனதுளத்தே அமர்ந்தே தாயுன் னடைக்கலமே. 9

பிச்சங் கவரி நிழற்றியசைத் திடமால் யானைப் பிடரின்மேல்
நிச்சம் பவனி வருகின்ற நிபுண ரெல்லாந் தொழுதேத்த
எச்சம் புரிவோர் போற்றவெனை ஏற்ற நிலைமே லேற்றுவித்தென்
அச்சந் தவிர்த்தே யாண்டுகொண்டோய் அடியே னுன்ற னடைக்கலமே. 10

இருளைக் கெடுத்தென் னெண்ணமெலாம் இனிது முடிய நிரம்புவித்து
மருளைத் தொலைத்து மெய்ஞ்ஞான வாழ்வை யடையும் வகைபுரிந்து
தெருளத் தெளிவித் தெல்லாஞ்செய் சித்தி நிலையைத் தேர்வித்தே
அருளைக் கொடுத்தென் றனையாண்டோய் அடியே னுன்ற னடைக்கலமே. 11

அருட்பெருஞ்ஜோதி

68. பற்றறுத்தல்

அருட்பெருஞ்ஜோதி

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

சத்தியஞ் சத்திய மருட்பெருஞ் ஜோதித்
தந்தைய ரேயெனைத் தாங்குகின் றீரே
உத்தம மாகுநுந் திருச்சமு கத்தென்
உடல்பொருள் ஆவியை யுவப்புட னளித்தேன்
இத்தகை யுலகிடை யவைக்குமென் றனக்கும்
எதுஞ் சுதந்தர மில்லையிங் கினிநீர்
எத்தகை யாயினுஞ் செய்து கொள்கிற்பீர்
எனைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் தீரே. 1

ஆணைநும் மாணையென் னருட்பெருஞ் ஜோதி
ஆண்டவரே திரு வம்பலத் தவரே
காணவிட் டுரைக்கின்ற வாறிது கண்டீர்
காயகரோ புமை நான்விட மாட்டேன்
கோணையென் உடல்பொரு ளாவியு நுமக்கே
கொடுத்தன னினியென்மேற் குறைசொல்ல வேண்டாம்
ஏணைநின் றெடுத்தகைப் பிள்ளைநானன்றே
எணைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் தீரே. 2

அகத்தொன்று புறத்தொன்று நினைத்ததிங் கில்லை
அருட்பெருஞ் ஜோதியென் ணண்டவ ரேநீர்
சகத்தின்று மெங்கணுஞ் சாக்கியாய் நின்றீர்
தனிப்பெருந் தேவரீர் திருச்சமு கத்தே
I உகத்தின தடல்பொரு ளாவியை நுமக்கே
ஒருபையி னளித்தன னிருமையும் பெற்றேன்
இகத்தன்றிப் பாத்திணு மெனக்கோர் பற்றிலைகாண்
எணைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் தீரே. 3

தப்படி யெடுத்துக்கொண் டுலகவர் போலே
சாற்றிட மாட்டேனுன் சத்தியஞ் சொன்னேன்
செப்படி வித்தைசெய் கித்தனென் றேதுந்
தேவரீர் வல்லபத் திருச்சமு கத்தே
இப்படி வான்முத லெங்கணு மறிய
என்னுட லாதியை யீந்தன னுமக்கே
எப்படி யாயினுஞ் செய்துகொள் கிற்பீர்
எணைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் தீரே. 4

தருணத்துக் கேற்றவா சொல்லிப்பின் மாற்றுந்
தப்புரை யீதன்று சத்தியஞ் சொன்னேன்
கருணைப் பெருக்கினிற் கலந்தன துள்ளே
கனவினு நனவினுங் களிப்பருள் கின்றீர்
ருணைப் பொதுவிலும் மாசமு கத்திதன்
வண்பொரு ளாதியை நண்பொடு கொடுத்தேன்
இருணைச் சமுத்தமு தந்தர வல்லீர்
எணைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் தீரே. 5

வாய்மட்டிற் சொல்கின்ற வார்த்தையன் றிதுவென்
மனமொத்துச் சொல்லிய வாய்மை முக்காலும்
தாய்மட்டி லன்றியென் தந்தையுங் குருவுஞ்
சாமியு மாகிய தனிப்பெருந் தகையீர்
ஆய்மட்டி லென்னுட லாதியை நுமக்கே
அன்புடன் கொடுத்தன ணண்டவ ரேநீர்
எய்மட்டி லெப்படி யேனுஞ்செய் கிற்பீர்
எணைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் தீரே. 6

1 உகந்து என்பது—உகத்துவலித்தல் விகாரம்.

தித்திக்கப் பேசிக் கசப்புள்ளே காட்டுந்
திருட்டுப்பேச் சன்றுநுந் திருவுள மறியும்
எத்திக்கு மறியவென் னுடல்பொரு ளாவி
என்பவை மூன்றுமுள் ளன்பொடு கொடுத்தேன்
சித்திக்கு மூலத்தைத் தெளிவித்தென் னுள்ளே
திருநடஞ் செய்கின்ற தேவரீர் தாமே
இத்திக்கி லெப்படி பேனுஞ்செய் கிற்பீர்
எனைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் தீரே. 7

புன்மார்க்கத் துள்ளுநம் புறத்தும் வெறுகிப்
புகன்றசொல் லன்றுநும் பொன்னடி கண்ட
சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் காணச்
சத்தியஞ் சத்தியஞ் சத்தியஞ் சொன்னேன்
தன்மார்க்கத் தென்னுட லாதியை நுமக்கே
தந்தனன் றிருவாருட் சந்நிதி முன்னே
என்மார்க்கத் தெப்படி யேனுஞ்செய் கிற்பீர்
எனைப்பள்ளி யெழுப்பிமெய் பின்பந்தந் தீரே. 8

இச்சைவே றில்லையிங் கென்கருத் தெல்லாம்
என்னுள் ளமர்ந்துறிந் தேதயிருக் கின்றீர்
விச்சை யெலாம்வல்ல நுந்திருச் சமுக
விண்ணப்ப மென்னுட லாதியை நுமக்கே
நிச்சலுந் தந்தன னென்வச மின்றி
நின்றன னென்றனை நீர்செய்வ தெல்லாம்
எச்செய லாயினுஞ் செய்துகொள் கிற்பீர்
எனைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் தீரே. 9

மன்செய்து கொண்டசன் மார்க்கத்தி லிங்கே
வன்செய்து கொண்டதை நான்செய்து கொண்டேன்
முன்செய்து கொண்டது மிங்ஙனங் கண்டீர்
மூவனை யாமுட லாதியை நுமது
பொன்செய்து கொண்ட பொதுவினி லாடும்
பொன்னடி காணப் பொருந்திக் கொடுத்தேன்
என்செய்து கொண்டாலுந் செய்துகொள் கிற்பீர்
எனைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் தீரே. 10

தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்
சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
பொய்ச்சம யாதினை மெச்சுகின் றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கமொன் றில்லார்
மேல்வினை வறிகிலர் வீண்கழிக் கின்றார்
எய்வந்த துன்பொழித் தவர்க்கறி வருள்வீர்
எனைப்பள்ளி யெழுப்பிமெய் யின்பந்தந் தீரே. 11

69. சிற்சத்திதுதி

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

ஜோதிக் கொடியே யானந்த சொருபக் கொடியே ஜோதியுறு
பாதிக் கொடியே ஜோதிவலப் பாகக் கொடியே யெனையீன்ற
ஆதிக் கொடியே யுலகுகட்டி யாளுங் கொடியே சன்மார்க்க
நீதிக் கொடியே சிவகாம நிமலக் கொடியே யருளுகவே. 1

பொருணற் கொடியே மாற்றுயர்ந்த பொன்னங் கொடியே போதாந்த
வருணக் கொடியே யெல்லாஞ்செய் வல்லா ரிடஞ்சேர் மணிக்கொடியே
தருணக் கொடியே யென்றன்னைத் தாங்கி யோங்குந் தனிக்கொடியே
சருவீணக் கொடியே ஞானசிவ காமக் கொடியே யருளுகவே. 2

நீட்டுக் கொடியே சன்மார்க்க நீதிக் கொடியே சிவகீதப்
பாட்டுக் கொடியே யிறைவர்வலப் பாகக் கொடியே பரநாத
நாட்டுக் கொடியே யெனையீன்ற ஞானக் கொடியே யென்னுறவாங்
கூட்டுக் கொடியே சிவகாமக் கொடியே யடியேற் கருளுகவே. 3

மால்க் கொடியேன் குற்றமெலா மன்னித் தருளி மரணமெனுஞ்
சாலக் கொடியை யொடித்தினக்குட் சார்ந்து விளங்குந் தவக்கொடியே
காலக் கருவைக் கடந்தாளிர்வான் கருவுங் கடந்து வயங்குகின்ற
கோலக் கொடியே சிவஞானக் கொடியே யடியேற் கருளுகவே. 4

நாடாக் கொடிய மனமடக்கி நல்ல மனத்தைக் கனிவித்துப்
பாடாப் பிழையைப் பொறுத்தினக்கும் பதமீந் தாண்ட பதிக்கொடியே
தேடாக் கருமஞ் சித்தியெலாந் திகழுத் தயவாற் றெரிவித்த
சேடாக் கொடியே சிவதருமக் கொடியே வடியேற் கருளுகவே. 5

மணங்கொள் கொடிப்பூ முதனன்கு வகைப்பூ வடிவுள் வயங்குகின்ற
வணங்கொள் கொடியே பைம்பூவு மலிய மலர்ந்த வான்கொடியே
கணங்கொள் யோக சித்தியெலாங் காட்டுங் கொடியே கலங்காத
குணங்கொள் கொடியே சிவபோகக் கொடியே யடியேற் கருளுகவே. 6

புலங்கொள் கொடிய மனம்போன போக்கிற் போகா தெனைவீட்டி
நலங்கொள் கருணைச் சன்மார்க்க நாட்டில் விடுத்த நற்கொடியே
வலங்கொண் ஞான சித்தியெலாம் வயங்க விளங்கு மணிமன்றிற்
குலங்கொள் கொடியே மெய்ஞ்ஞானக் கொடியே யடியேற் கருளுகவே. 7

வெறிக்குஞ் சமயக் குழியில்விழ விரைந்தென் றன்னை விழாதவகை
மறிக்கு மொருபே ரறிவளித்த வள்ளற் கொடிபே டனக்கொடியைச்
செறிக்கும் பெரிய ருளத்தாங்குந் தெய்வக் கொடிபே சிவஞானங்
குறிக்குங் கொடிபே யானந்தக் கொடிபே யடிபேற் கருளுகவே. 8

தடுத்த லரிய பயங்கவலை யெல்லாந் தவிர்த்துக் கருத்துள்ளே
அடுத்த கொடியே யருளமுத மளித்தென் றனிமெய் யருட்கரத்தால்
எடுத்த கொடியே சித்தியெலா மிந்தா மகனே யென்றெனக்கே
கொடுத்த கொடியே யானந்தக் கொடியே யடியேற் கருளுகவே. 9

I ஏட்டைத் தவிர்த்தென் னெண்ணமெலா மெய்த வொளிதந் தியான்வணங்த
பாட்டைப் புனைந்து பரிசளித்த பரமஞானப் பதிக் கொடியே
தேட்டைத் தணிப்பே ரருட்செங்கோல் செலுத்துஞ் சுத்த சன்மார்க்கக்
கோட்டைக் கொடியே யானந்தக் கொடியே யடியேற் கருளுகவே. 10

அருட்பெருஞ்ஜோதி

70. பிரிவாற்றாமை

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

தேடிய தண்டு நினதரு வண்மை தெளிந்திடச் சிறிதுநின் னுடனே
ஊடிய தண்டு பிறர்தமை யடித்தே யுரைத்தது முவந்தது முண்டோ
ஆடிய பாத மறியாத னறியேன் அம்பலத் தருட்பெருஞ் ஜோதி
கூடிய நின்னைப் பிரிகிலேன் பிரிவைக் கூறவுங் கூசுமென் னுளமே. 1

மடம்புரி மனத்தாற் கலங்கிய தண்டு வள்ளலே நின்றிரு வரவுக்
கிடம்புரி சிறியேன் கலங்கினே னென்னினு மிறையுப்வே றெண்ணிய தண்டோ
நடம்புரி பாத மறியாத னறியே னுன்செயும் வகையினி நன்றே
திடம்புரிந் தருளிக் காத்திடல் வேண்டுஞ் சிறிதுநான் பொறுக்கிலேன் சிவனே. 2

நீக்கிய மனம்பின் னெடுத்ததினைக் கலக்கி நின்றதே யன்றிநின் னளவில்
நோக்கிய நோக்கம் பிறவிட மதனே நோக்கிய திறையுமிங் குண்டோ
தூக்கிய பாத மறியாத னறியேன் துயரினிப் பொறுக்கிலேன் சிறிதும்
தேக்கிய களிப்பாற் சிறப்பவந் தென்னைத் தெளிவித்த னின்கடன் சிவனே. 3

ஈன்றநற் றாயுந் தந்தையுங் குருவு மென்னுயிர்க் கின்பமும் பொதுவில்
ஆன்றமெய்ப் பொருளே யென்றிருக் கின்றே னன்றிவே றெண்ணிய தண்டோ
ஊன்றிய பாத மறியாத னறியே னுறுகணிங் காற்றிலேன் சிறிதுந்
தோன்றியென் னுளத்தே மயக்கெலாந் தவிர்த்துத் துலக்குத னின்கடன் றானே. 4

மாயையாற் கலங்கி வருந்திய போதும் வள்ளலுன் றன்னையே மதித்துன்
சாயையாப் பிறரைப் பார்த்ததே யல்லாற் றனிவழவே றெண்ணிய தண்டோ
தூயபொற் பாத மறியாத னறியேன் துயரினிச் சிறிதுமிங் காற்றேன்
நாயகா வெனது மயக்கெலாந் தவிர்த்தே நன்றருள் புரிவதுன் கடனே. 5

1 எட்டை என்பது—தும்பம்.

வண்ணம் வேறெனினும் வடிவு வேறெனினு மன்னிய வுண்மையொன் றென்றே
யெண்ணிய தல்லாற் சச்சிதா னந்தத் திறையும்வே றெண்ணிய துண்டோ
அண்ணனின் பாத மறியா னறியேன் அருளினிச் சிறிதுமிங் காற்றேன்
திண்ணமே நின்மே லாணையென் றன்னைத் தெளிவித்துக் காப்பதுன் கடனே. 6

ஊடல்செய் மதமுஞ் சமயமு மிவற்றி லுற்றகற் பனைகளுந் தவிர்ந்தேன்
வாடல்செய் மனத்தாற் கலங்கினே னெனினு மன்றினை மறந்ததிங் குண்டோ
ஆடல்செய் பாத மறியா னறியேன் ஐயவோ சிறிதுமிங் காற்றேன்
பாடல்செய் கின்றேன் படிக்கினறே னெனைக்குப் பரிந்தருள் புரிவதுன் கடனே. 7

உள்ளதே யுள்ள திண்டுலே யெல்லாம் ஒருசிவ மயமென வுணர்ந்தேன்
கள்ளநோர் மனத்தாற் கலங்கினே னெனினுங் கருத்தயல் கருதிய துண்டோ
வள்ளலுன் பாத மறியா னறியேன் மயக்கினிற் சிறிதுமிங் காற்றேன்
தெள்ளமு தருளி மயக்கெலாந் தவிர்த்தே தெளிவித்தல் நின்கடன் சிவனே. 8

எம்மத நிலையு நின்னருள் நிலையி லிலங்குத லறிந்தன னெல்லாஞ்
சம்மத மாக்கிக் கொள்கின்றே னல்லாற் றனித்துவே றெண்ணிய துண்டோ
செம்மலுன் பாத மறியா னறியேன் சிறிதுமிங் கினித்துய ராற்றேன்
இம்மதிக் கடியேன் குறித்தவா றுள்ள தியற்றுவ துன்கட னெந்தாய். 9

அகம்புற மற்றை யகப்புறம் புறத்தே படுத்திடும் புறப்புற நான்கில்
இகந்தது மிலையோ வேகதே சத்தா லிறையுமிங் கெண்ணிய துண்டோ
உகந்தநின் பாத மறியா னறியே னுறுகணிங் கினிச்சிறி துந்தான்
இகம்பெற லாற்றேன் மயக்கெலாந் தவிர்த்திங் கென்னையாண் டருள்வதுன் கடனே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

71. ஆனந்தானுபவம்

நேரிசை வெண்பா

அருட்பெருஞ்ஜோதி

கள்ளத்தை யெல்லாங் கடக்கவிட்டே னின்னருளாம்
வெள்ளத்தை யெல்லா மிகவுண்டேன் — உள்ளத்தே
காணுத காட்சியெலாங் காண்கின்றே னேங்குமன்ற
வாணு நினக்கடிமை வாய்த்து. 1

காலையிலே நின்றன்னைக் கண்டுகொண்டேன் சன்மார்க்கச்
சாலையிலே யின்பந் தழைக்கின்றேன் — ஞாலமிசைச்
சாகா வரம்பெற்றேன் தத்துவத்தின் மேனடிக்கும்
ஏகா நினக்கடிமை யேய்ந்து. 2

மூவர்களுந் தேற முடியா முடிபெல்லாம்
யாவர்களுங் காண வெனக்களித்தாய் — மேவுகடை
நாய்க்குத் தவிசளித்து நன்முடியுஞ் சூட்டுதலெந்
தாய்க்குத் தனியியற்கை தான். 3

கொள்ளையென வின்பங் கொடுத்தாய் நினது செல்வப்
பிள்ளையென வெற்குப் பெயரிட்டாய் — தெள்ளமுதந்
தந்தாய் சமரசசன் மார்க்கசங்கத் தேவைத்தாய்
எந்தாய் கருணை யிது. 4

கண்டேன் களித்தேன் கருணைத் திருவமுதம்
உண்டே னுயர்நிலமே லோங்குகின்றேன் — கொண்டேன்
அழியாத் திருவுருவ மச்சோவெஞ் ஞான்றும்
அழியாச்சிற் றம்பலத்தே யான். 5

பார்த்தேன் பணிந்தேன் பழிச்சினேன் மெய்ப்புளகம்
போர்த்தேனென் னுள்ளமெலாம் பூரித்தேன் — ஆர்த்தேகின்
றுடுகின்றேன் பாடுகின்றே னன்புருவா னெனருளை
நாடுகின்றேன் சிற்சபையை நான். 6

எண்ணுகின்றே னெண்ணைங்க ளெல்லாந் தருகின்றன்
உண்ணுகின்றே னுண்ணவுண்ண வூட்டுகின்றன் — நண்ணுதிருச்
சிற்றம் பலத்தே திருநடஞ்செய் கின்றனென்
குற்றம் பலபொறுத்துக் கொண்டி. 7

கொண்டா னடிமை குறியான் பிழையொன்றுங்
கண்டே களித்தான் கலந்திருந்தான் — பண்டாய
நான்மறைபு மாகமமு நாடுந் திருப்பொதுவில்
வாய்மலர்ந்தா னென்னை மதித்து. 8

கண்டேன் களித்தேன் கருணைத் திருவமுதம்
உண்டே னழியா வரம்பெற்றேன் — பண்டே
எனையுவந்து கொண்டா னெழின்ஞான மன்றன்
தனையுவந்து கொண்டான் றனை. 9

தாதையா மென்னுடைய தாயாமென் சற்குருவாம்
மேதையா மின்ப விளைவுமாம் — ஓது
குணவாளன் தில்லைபருட் கூத்த னுமையாள்
மணவாளன் பாத மலர். 10

திருவாமென் தெய்வமாந் தெள்ளமுத ஞானக்
குருவா மெனைக்காக்குங் கோவாம் — பருவரையின்
தேப்பிள்ளை யாமென் சிவகாம வல்லிமகிழ்
மாப்பிள்ளை பாத மலர். 11

என்னறிவா மென்னறிவி னின்பமா மென்னறிவின்
தன்னறிவா முண்மைத் தனிநிலையாம் — மன்னுகொடிச்
சேலையிட்டான் வாழச் சிவகாம சுந்தரியை
மாலையிட்டான் பாத மலர். 12

72. சிவபுண்ணியப்பேறு

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

மாலிலே மயங்கி மண்ணிலே யநித்த வாழ்விலே வரவிலே மலஞ்சார்
தோலிலே யாசை வைத்துவீண் பொழுது தொலைக்கின்றார் தொலைக்கதா னுனது
காலிலே யாசை வைத்தன னீயுங் கனவினு நனவினு மெனைநின்
பாலிலே வைத்தா யெனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. 1

மதத்திலே சமய வழக்கிலே மாயை மருட்டிலே யிருட்டிலே மறவாக்
கதத்திலே மனத்தை வைத்துவீண் பொழுது கழிக்கின்றார் கழிக்கதா னுன்பூம்
பதத்திலே மனத்தை வைத்தன னீயும் பரிந்தெனை யழிவிலா நல்ல
பதத்திலே வைத்தா யெனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. 2

குலத்திலே சமயக் குழியிலே நரகக் குழியிலே குமைந்து வீண்பொழுது
நிலத்திலே போக்கி மயங்கியே மாந்து நிற்கின்றார் நிற்கதா னுவந்து
வலத்திலே நினது வசத்திலே நின்றேன் மகிழ்ந்துநீ யென்னுள மெனுமம்
பலத்திலே நின்று யெனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. 3

கூடவும் பின்னே பிரியவுஞ் சார்ந்த கொழுந்துரு மகளிரு நாண
நீடவென் னுளத்தே கலந்துகொண் டென்றும் நீங்கிடா திருந்துநீ யென்னை
டாடவை மெல்லாம் வல்லசித் தியைப்பெற் றறிவுரு வாகிதா னுனையே
பாடவும் பெற்றே னெனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. 4

உயத்திட மறியா திறந்தவர் தமையிவ் வுலகிலே யுயிர்பெற்று மீள
நயந்திதாடு வருவித் திடுமொரு ஞான நாட்டமுங் கற்பகோ டியினும்
வயந்திதாடு சாகா வரமுமென் றனக்கே வழங்கிடப் பெற்றனன் மரண
பயத்தைவிட் டொழித்தே னெனக்கிது போதுமே பண்ணிய தவம்பலித் ததுவே. 5

நாடல்செய் கின்றேன் அருட்பெருஞ் ஜோதி நாதனை யென்னுளே கண்டு
கூடல்செய் கின்றே னெண்ணிய வெல்லாங் கூடுமே குலவியின் புருவாய்
ஆடல்செய் கின்றேன் சித்திதலாம் வல்லா னம்பலந் தன்னையே குறித்துப்
பாடல்செய் கின்றே னெனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. 6

துதிபெறு மயனே டரியான் முதலோர் சூழ்ந்துசூழ்ந் திளைத்திதாரு தங்கள்
விதியைநொந் தின்றும் விழித்திருக் கின்றார் விழித்திருந் திடவுமோ வாமே
மதியிலேன் அருளாற் சுத்தசன் மார்க்க மன்றிலே வயங்கிய தலைமைப்
பதிபதம் பெற்றே னெனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. 7

புரிசைவா னுலகிற் பூவுல கெல்லாம் புண்ணிய உலகமாய்ப் பொலிந்தே
கரிசெலாந் தவிர்ந்து களிப்பெலா மடைந்து கருத்திதாடு வாழவுங் கருத்தின்
துரிசெலாந் தவிர்க்குஞ் சுத்தசன் மார்க்கந் துலங்கவுந் திருவருட் ஜோதிப்
பரிசெலாம் பெற்றே னெனக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. 8

வேதமே விளங்க மெய்ம்மையே வயங்க வெம்மையே நீங்கிட விமல
வாதமே வழங்க வானமே முழங்க வையமே யுய்யவேவார் பரம
நாதமே தொனிக்க ஞானமே வடிவாய் நன்மணி மன்றிலே நடிக்கும்
பாதமே பிடித்தே தனைக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. 9

கட்டமுங் கழன்றேன் கவலைவிட் டொழிந்தேன் கலக்கமுந் தீர்ந்தனன் பிறவிச்
சட்டமுங் கிழித்தேன் தூக்கமுந் துறந்தேன் சாவையு நோயையுந் தவிர்ந்தேன்
சிட்டமு மடைந்தேன் சிற்சபை யுடையான் செல்வமெய்ப் பிள்ளையென் றுரிமைப்பேர்ப்
பட்டமுந் தரித்தே தனைக்கிது போதும் பண்ணிய தவம்பலித் ததுவே. 10

அருட்பெருஞ்ஜோதி

73. அந்தோப்பத்து

கலித்தாழிசை

அருட்பெருஞ்ஜோதி

நானந்த மடையாதெந் நாளினுமுள்
ளவணுகி நடிக்கும் வண்ணம்
ஆனந்த நடப்புரிவா னனந்த
அமுதளித்தான் அந்தோ வந்தோ. 1

சாதிமதஞ் சமயமுதல் சங்கற்ப
விகற்பமெலாந் தவிர்ந்து போக
ஆதிகடம் புரிகின்ற னருட்ஜோதி
எனக்களித்தான் அந்தோ வந்தோ. 2

துரியபத மடைந்தபெருஞ் சுத்தர்களு
முத்தர்களுந் துணிந்து சொல்லற்
கரியபத மெனக்களித்தா னம்பலத்தில்
ஆடுகின்றான் அந்தோ வந்தோ. 3

மருட்பெருஞ்சோ தனையெனது மட்டுமிலா
வணங்குருவை வைத்தே மன்றில்
அருட்பெருஞ்ஜோ திப்பெருமா னருளமுத
மெனக்களித்தான் அந்தோ வந்தோ. 4

துன்பமெலா மொருகணத்திற் றொலைத்தருளி
எந்நாளுஞ் சுகத்தி லோங்க
அன்புடையா னம்பலத்தா னருட்ஜோதி
எனக்களித்தான் அந்தோ வந்தோ. 5

பந்தமெலாந் தவிர்த்தருளிப் பதந்தருவோ
காந்தமுதல் பகரா நின்ற
அந்தமெலாங் கடந்திடச்செய் தருளமுதம்
எனக்களித்தான் அந்தோ வந்தோ. 6

பேராலு மறிவாலும் பெரியரெனச்
சிறப்பாகப் பேச நின்றோர்
ஆராலும் பெறலரிய தியாததனைப்
பெறுவித்தான் அந்தோ வந்தோ. 7

தினைத்தனையு மறிவறியாச் சிறியனென
நினையாமற் சித்தி யான
வனைத்துமென்றன் வசமாக்கி யருளமுதம்
எனக்களித்தான் அந்தோ வந்தோ. 8

பொதுவாகி பொதுவினடம் புரிகின்ற
பேரின்பப் பொருள்தான் யாதோ
அதுநானுய் நானதுவா யத்துவித
மாகிநின்றேன் அந்தோ வந்தோ. 9

மருள்வடிவே யெஞ்ஞான்று மெவ்விடத்தும்
எதனாலு மாய்வி லாத
அருள்வடிவா யிம்மையிலே யடைந்திடப்பெற்
றுடுகின்றேன் அந்தோ வந்தோ. 10

அருட்பெருஞ்ஜோதி

---

74. சமரசநிலை

நேரிசை வெண்பா

அருட்பெருஞ்ஜோதி

சித்தி புரத்தே தினந்தோறுஞ் சீர்கொளருட்
சத்திவிழா நீடித் தழைத்தோங்க — எத்திசையில்
உள்ள வரும்வந்தே யுவகை புறுகமதத்
துள்ள லொழிக தொலைந்து. 1

ஒன்றே சிவமென் றுணர்ந்திவ் வுலகமெலாம்
நன்றே யொருமைபுற்று நண்ணியே — மன்றே
நடம்புரியும் பாத நளினமலர்க் குள்ளம்
இடம்புரிக வாழ்க விசைந்து. 2

சிற்சபையும் பொற்சபையுஞ் சித்தி விளக்கத்தால்
நற்சகமே னீடூழி நண்ணிடுக — சற்சபையோர்
போற்றிவரம் பெற்றுவகை பூரிக்க வாழ்ந்திடுக
நாற்றிசையும் வாழ்க நயந்து. 3

அச்சந் தவிர்த்தே யருளிற் செலுத்துகின்ற
விச்சை யரசே விளங்கிடுக — நச்சரவ
மாதிக் கொடியவுயி ரத்தனையும் போயொழிக
நீதிக் கொடிவிளங்க நீண்டு. 4

கருணையிலா ஆட்சி கடுகி யொழிக
அருணயந்த நன்மார்க்க ராள்க — தெருணயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்றுநினைத்
தெல்லோரும் வாழ்க விசைந்து. 5

புல்லொழுக்க மெல்லாம் புணரியிடைப் போயொழிக
நல்லொழுக்க மொன்றே நலம்பெறுக — இல்லொழுக்கிற்
செத்தார்க ளெல்லாம் திரும்ப வெழுந்துமனம்
ஒத்தாராய் வாழ்க வுவந்து. 6

செத்தா ரெழுக சிவமே பொருளென்றே
இத்தாரணியி லிருந்தாளிர்க — சுத்தசிவ
சன்மார்க்கம் ஒன்றே தழைக்க தயவறியாத்
தன்மார்க்கம் போக தொலைந்து. 7

செத்தவர்க ளெல்லாந் திரும்ப வெழுந்துவரச்
சித்தம்வைத்துச் செய்கின்ற சித்தியனே — சுத்தசிவ
சன்மார்க்க சங்கத் தலைவனே நிற்போற்றும்
என்மார்க்க நின்மார்க்க மே. 8

நல்லாரு மென்னை நயந்தாரு நன்மைசொல
வல்லாரு மென்னை வளர்த்தாரும் — எல்லாரும்
நீயென் றிருக்கின்றே னின்மலனே நீபெற்ற
சேயென் றிருக்கின்றேன் சேர்ந்து. 9

ஆடவெடுத் தானென் றறைகின்றீ ரென்றலேமேற்
சூடவெடுத் தானென்று சொல்கின்றேன் — நாடறிய
இவ்வழக்கை யார்பா லிசைத்தறுத்துக் கொள்கிற்பாம்
கவ்வையற்ற வம்பலத்தான் கால். 10

நோவாது நோன்பெனைப்போல் நோற்றவரு மெஞ்ஞான்றும்
சாவா வரமெனைப்போற் சார்ந்தவருந் — தேவாநின்
பேரருளை யென்போலப் பெற்றவரு மெவ்வுலகில்
யாருளர்நீ சற்றே யறை. 11

அருட்பெருஞ்ஜோதி

75. வேண்டுகோள்

கலித்துறை

அருட்பெருஞ்ஜோதி

வேதமும் வேதத்தி னந்தமும் போற்ற விளங்கியநின்
பாதமு மாமுடி யுங்கண்டு கொள்ளும் படியெனக்கே
போதமும் போதத் தருளமு துந்தந்த புண்ணியனே
நாதமு நாத முடியுங் கடந்த நடத்தவனே. 1

வண்ணப் பொன்னம்பல வாழ்வெவையென் கண்ணினுண் மாமணியே
சுண்ணப் பொன்னீற்மிளிர் யோங்கிய ஜோதிச் சுகப்பொருளே
எண்ணப் பயின்றவென் னெண்ண மெலாமுன்ன ரீகவிதன்
விண்ணப்ப மேற்று வருவாயென் பால்விரைந் தேவிரைந்தே. 2

சிற்சபை யப்பனைக் கண்டுகொண் டேனருட் டெள்ளமுதஞ்
சற்சபை யுள்ளந் தழுக்கவுண் டேனுண்மை தானறிந்த
நற்சபை சித்திக ளெல்லாமென் கைவச நண்ணப்பெற்றேன்
பொற்சபை யோங்கப் புரிந்தாடு தற்குப் புகுந்தனனே. 3

வரையற்ற சீர்பெரு வாழ்வுதந் தென்மன மன்னியென்றும்
புரையற்ற மெய்ஞ்ஞா யேற்றிமெய்ஞ் ஞானப் பொதுவினிடைத்
திரையற்ற காட்சி யளித்தின் னமுதத் தெளிவருளி
கரையற்று மூப்பற் றிறப்பற் றிருக்கவு நண்ணினனே. 4

தாயாகி யென்னுயிர்த் தந்தையு மாகியென் சற்குருவாய்த்
தேயாப் பெருஞ்சுக மாகியென் சத்தியத் தெய்வமுமாய்
வாயாரப் பாடுநல் வாக்களித் தென்னுள மன்னுகின்ற
தூயா திருநட ராயாசிற் றம்பலச் சோதியனே. 5

ஆதியு மந்தமு மில்லாத் தனிச்சுட ராகியின்ப
நீதியு நீர்மையு மோங்கப் பொதுவி னிருத்தமிடுஞ்
ஜோதியும் I வேதியும் நானறிந் தேனிச் செகதலத்தில்
சாதியும் பேதச் சமயமு நீங்கித் தனித்தனனே. 6

தன்னேரி லாத தலைவாசிற் றம்பலந் தன்னிலென்னை
இன்னே யடைகுவித் தின்பருள் வாயிது வேதருணம்
அன்னே யெனைப்பெற்ற வப்பாவென் றுன்னை யடிக்கடிக்கே
சொன்னேன்முன் சொல்லுகின் றேன்பிற வேதுந் துணிந்திலனே. 7

தேகாதி மூன்றுமுன் பாற்கொடுத் தேனின் திருவடிக்கே
மோகா திபனென் றுலகவர் தூற்ற முபலுகின்றேன்
நாகா திபரும் வியந்திட வென்னெதிர் நண்ணியென்றுஞ்
சாகா வரந்தந்து சன்மார்க்க நீதியுஞ் சாற்றுகவே. 8

கற்றேன்சிற் றம்பலக் கல்வியைக் கற்றுக் கருணைநெறி
உற்றேனெக் காலமுஞ் சாகாம லோங்கு மொளிவடிவம்
பெற்றே னுயர்ஞ்ஞ பெற்றே னுலகிற் பிறஞ்ஞையைப்
பற்றேன் சிவானந்தப் பற்றேயென் பற்றெனப் பற்றினனே. 9

தீமைகள் யாவுந் தொலைத்துவிட் டேனித் தினந்தொடங்கிச்
சேமநல் லின்பச் செயலே விளங்கமெய்ச் சித்தியெலாங்
காமமுற் றென்னைக் கலந்துகொண் டாளக் கருணைகடத்
தாமமென் னுள்ளமுஞ் சாரவும் பெற்றனன் சத்தியமே. 10

அருட்பெருஞ்ஜோதி

1 வேதி என்பது—இரும்பைப் பொன்னாக்குங் குளிகை போன்றவன்.

76. தலைவி பாங்கிக்குரைத்தல்

கலித்தாழிசை.

அருட்பெருஞ்ஜோதி

வேதாந்த நிலையொடு சித்தாந்த நிலையு
மேவும் பொதுநடம் நான்காணல் வேண்டும்
நாதாந்தத் திருவீதி நடப்பாயோ தோழி
நடவாம லென்மொழி கடப்பாயோ தோழி. 1

தோம்பத வுருவொடு தற்பத வெளியிற்
சேர்ன்றசி பதநடம் நான்காணல் வேண்டும்
எம்பத மாகி யிசைவாயோ தோழி
இசையாமல் வீணிலே யசைவாயோ தோழி. 2

சின்மய வெளியிடைத் தன்மய மாகித்
திகழும் பொதுநடம் நான்காணல் வேண்டும்
என்மய மாகி யிருப்பாயோ தோழி
இச்சை மயமா யிருப்பாயோ தோழி. 3

நவநிலை மேற்பர நாதத் தலத்தே
ஞானத் திருநடம் நான்காணல் வேண்டும்
மவுனத் திருவீதி வருவாயோ தோழி
வாராமல் வீண்பழி தருவாயோ தோழி. 4

ஆறுறுக் கப்புற மாகும் பொதுவில்
அதுவது வாநடம் நான்காணல் வேண்டும்
ஏறுமை விழியாம லிருப்பாயோ தோழி
ஏறி யிழிந்திங் கிறப்பாயோ தோழி. 5

வகார வெளியிற் சிகார வுருவாய்
மகாரத் திருநடம் நான்காணல் வேண்டும்
விகார வலைகை விறுப்பாயோ தோழி
வேறுகி யென்சொல் மறுப்பாயோ தோழி. 6

நாதாந்த நிலையொடு போதாந்த நிலைக்கு
நடுவாம் பொதுநடம் நான்காணல் வேண்டும்
சூதாந்தற் போதத்தைச் சுடுவாயோ தோழி
துட்டநெறியிற் கெடுவாயோ தோழி. 7

அறிவி லறிவை யறியும் பொதுவில்
ஆனந்தத் திருநடம் நான்காணல் வேண்டும்
சிறிவி லறிவாகிச் செல்வாயோ தோழி
செல்லாமல் மெய்ந்நெறி வெல்வாயோ தோழி. 8

என்னைத்தன் னைடே யிருத்தும் பொதுவில்
இன்பத் திருநடம் நான்காணல் வேண்டும்
நின்னைவிட் டென்னைடே நிலைப்பாயோ தோழி
நிலையாம லென்னைபு மலைப்பாயோ தோழி. 9

துரியத்திற் கப்பாலுந் தோன்றும் பொதுவில்
ஜோதித் திருநடம் நான்காணல் வேண்டும்
கரியைக்கண் டாங்கது காண்பாயோ தோழி
காணுது பொய்ப்பணி பூண்பாயோ தோழி. 10

தத்துவத் துட்புறந் தானும் பொதுவிற்
சத்தாந் திருநடம் நான்காணல் வேண்டும்
கொத்தறு வித்தை குறிப்பாயோ தோழி
குறியா துலகில் வெறிப்பாயோ தோழி. 11

அருட்பெருஞ்ஜோதி

77. தாய்கூறல்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

காதல்கைம் மிகுந்த தென்செய்வே னெனைநீ கண்டுகொள் கணவனே யென்றுள்
ளதலுன் புகழே யன்றிநா னொன்று முவந்திலே னுண்மையீ தென்றுள்
பேதைநான் பிறிதோர் புகலிலேன் செய்த பிழையெலாம் பொறுத்தரு ளென்றுள்
மாதய வுடைய வள்ளலே யென்றுள் வரத்தினுல் நான்பெற்ற மகளே. 1

மயங்கினே னெனினும் வள்ளலே யுனைநான் மறப்பனே கனவினு மென்றுள்
உயங்கினே னுன்னை மறந்திடி லேயோ வுயிர்த்தரி யாதெனக் கென்றுள்
Iகயங்கினேன் கயங்கா வண்ணநின் கருணைக் கடலழு தளித்தரு ளென்றுள்
வயங்குசிற் சபையில் வரதனே யென்றுள் வரத்தினுல் நான்பெற்ற மகளே. 2

அஞ்சலென் றெனையித் தருணநீ வந்தே யன்பினு லணைத்தரு ளென்றுள்
பஞ்சுபோற் பறந்தே னையகோ துன்பம் படமுடி யாதெனக் கென்றுள்
செஞ்செவே யெனது கருத்தெலா முனது திருவுள மறியுமே யென்றுள்
வஞ்சக மறியா வள்ளலே யென்றுள் வரத்தினுல் நான்பெற்ற மகளே. 3

பூமியோ பொருளோ விரும்பிலே னுன்னைப் புணர்ந்திட விரும்பினே னென்றுள்
காமியென் றெனைநீ கைவிடேல் காமக் கருத்தெனக் கில்லைகா ணென்றுள்
சாமிநீ வரவு தாழ்த்திடி லேயோ சற்றுநான் தரித்திடே னென்றுள்
மாமிகு கருணை வள்ளலே யென்றுள் வரத்தினுல் நான்பெற்ற மகளே. 4

1 கயங்கல் என்பது—கசங்கல்.

அடுத்துநா னுன்னைக் கலந்தனு பவிக்க வாசைமேற் பொங்கிய தென்னுள்
தடுத்திட முடியா தினிச்சிறு பொழுதுந் தலைவனே தாழ்த்திடே லென்னுள்
தொடுத்துல குள்ளார் தூற்றுதல் வாயாற் சொலமுடி யாதெனக் கென்னுள்
மடுத்தவெங் துயர்தீர்த் தெடுத்தரு ளென்னுள் வரத்தினுல் நான்பெற்ற மகளே. 5

தடுத்திடல் வல்லா ரில்லெனின் னருளைத் தருகநற் றருணமீ தென்னுள்
கொடுத்திடி லுமோ நின்னருட் பெருமை குறையுமோ குறைந்திடா தென்னுள்
நடுத்தய விலர்போன் றிருத்தலுன் றனக்கு ஞாயமோ நண்பனே யென்னுள்
வடுத்தினும் வாயே னல்லனு னென்னுள் வரத்தினுல் நான்பெற்ற மகளே. 6

பொன்செய் நின்வடிவைப் புணர்ந்திட னினைத்தேன் பொங்கிய தாசைமே லென்னுள்
என்செய்வே னெனினும் விழுங்கிய தையோ வென்னள வன்றுகா ணென்னுள்
கொன்செயு முலக ரென்னையு முனது குறிப்பையுங் குறித்திலா ரென்னுள்
வன்செயு மவர்வா யோய்வதென் றென்னுள் வரத்தினுல் நான்பெற்ற மகளே. 7

மெலிந்தவென் னுளத்தை யறிந்தனை தயவு மேவிலை யென்னையோ வென்னுள்
நலிந்தபோ தின்னும் பார்த்துமென் றிருத்த னல்லவர்க் கடிப்பதோ வென்னுள்
மலிந்த விவ்வுலகர் வாய்ப்பதர் தூற்ற வைத்தலுன் மரபல வென்னுள்
வலிந்தெனைக் கலந்த வள்ளலே யென்னுள் வரத்தினுல் நான்பெற்ற மகளே. 8

ஒன்றிலேன் பிறிதொன் றுன் னருட்ஜோதி யொன்றுற வொன்றினே னென்னுள்
நன்றிலே னெனினு நின்றிரு வடியை நம்பினே னயந்தரு ளென்னுள்
குன்றிலே யிருத்தற் குரியநான் றுயரக் குழியிலே யிருந்திடே னென்னுள்
மன்றிலே நடஞ்செய் வள்ளலே யென்னுள் வரத்தினுல் நான்பெற்ற மகளே. 9

ஆடிய பாதத் தழகனென் றெனைத்தா னன்புறுற் கூடின னென்னுள்
கோடிமா தவங்கள் புரியினும் பிறர்க்குக் கூடுதல் கூடுமோ வென்னுள்
பாடிய படியென் கருத்திலா கிரப்பிப் பரிசெலாம் புரிந்தன னென்னுள்
வாடிய வுளமும் தளிர்த்தன னென்னுள் வரத்தினுல் நான்பெற்ற மகளே. 10

அருட்பெருஞ்ஜோதி

78. பாங்கி தலைவி பெற்றியுரைத்தல்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அம்மதவேள் கணையொன்றே வைங்கணையும் விடுத்தான்
அருளடையு மாசையினு லாருயிர்தான் பொறுத்தாள்
இம்மதமோ சிறிதுமிலாள் கலவியிலே யெழுந்த
எகசிவ போகவெள்ளத் திரண்டுபடா ளெனினும்
எம்மதமோ வெக்குலமோ வென்றுனினைப் புளதேல்
இவ்மதமு மிவள்குலமு மெல்லாமுஞ் சிவமே
சம்மதமோ தேவர்திரு வாய்மலர வேண்டுஞ்
சபையில்நடம் புரிகின்ற தனிப்பெரிய துரையே. 1

1 அங்கலிட்ட களத்தழக ரப்பலவர் திருத்தேர்தாள்
ஆசையெனும் பேயகற்ற லாவதிலை யெனவே
பொங்கலிட்ட தாயர்முகந் தொங்கலிட்டுப் போனர்
பூவைமுகம் பூமுகம்போற் பூரித்து மகிழ்ந்தாள்
எங்களிட்டந் திருவருள்மங் கலஞ்சூட்ட லன்றி
இரண்டுபடா தொன்றுக்கி யின்படைவித் திடவே
தங்களிட்டம் யாதுதிரு வாய்மலர வேண்டுஞ்
சபையில்நடம் புரிகின்ற தனிப்பெரிய துரையே. 2

பனம்பழமே யெனினுமிந்தப் பசிதவிர்த்தாற் போதும்
பாருமெனப் பகர்கின்ற பாவையர்போற் பகராள்
இனம்பழமோ கங்கலந்தாள் சிவானுபவத் தல்லால்
எந்தவனு பவங்களினு மிச்சையில்லா ளெவர்தம்
மனம்பழமோ காயோவென் றறிந்துவர விடுத்தாள்
மற்றவர்போற் காசுபணத் தாசைவைத்து வருந்தாள்
தனம்பழமோ தேவர்திரு வாய்மலர வேண்டுஞ்
சபையில்நடம் புரிகின்ற தனிப்பெரிய துரையே. 3

புல்லவரே போய்யுலக போகமுற விழைவார்
புண்ணியரே சிவபோகம் பொருந்துதற்கு விழைவார்
கல்லவரே மனியிவரே யென்றறிந்தா ளதனற்
கனவிடையும் பொய்யுறவு கருதுகிலாள் சிறிதும்
நல்லவரே யெனினுமுமை நாடாரே லவரை
நன்குமதி யாளிவளை நண்ணிவண்ண முளதேதா
வல்லவரே நுமதுதிரு வாய்மலர வேண்டும்
வயங்குதிரு மணிமன்றில் வாழ்பெரிய துரையே. 4

தத்துவருந் தத்துவஞ்செய் தலைவர்களும் பிறருந்
தனித்தனியே வலிந்துவந்து தன்னெதிர்நிற் கின்றூர்
எத்துணையும் மற்றவரை யேறெடுத்துப் பாராள்
இருவிழிக ணீர்சொரிவா ளென்னுயிர்நா யகனே
ஒத்துயிரிற் கலந்துகொண்ட வுடையாயென் றுமையே
ஓதுகின்று ளிவளளவி லுத்தமரே யுமது
சித்தமெது தேவர்திரு வாய்மலர வேண்டுஞ்
சிற்சபையிற் பொற்சபையிற் றிசழ்பெரிய துரையே. 5

அன்னையைக்கண் டப்மாநீ யம்பலத்தென் கணவர்
அடியவளேல் மிகவருக வல்லளெனி லிங்கே
என்னையுனக் கிருக்கின்ற தேதுகவென் றுரைப்பாள்
இச்சையெலா மும்மிடத்தே யிசைந்தனளிங் கிவளை
முன்னையளென் றெண்ணுதீர் தாழ்த்திருப்பீ ராணல்
மூடுகியுயிர் விடுத்திடுவாள் கடுகிவர வுளதேல்
மன்னவரே யுமதுதிரு வாய்மலர வேண்டும்
வயங்குதிரு மணிமன்றில் வாழ்பெரிய துரையே. 6

1 அங்கு-அல், எனப்பிரித்து—அவ்விடத்து இருள்-எனப் பொருள்கொள்க.

கரவறியா வம்பலத்தென் கணவரைக்கண் டலது
கண்துயிலே னுண்டிகொளேன் களித்தமரே னென்பாள்
இரவறியாள் பகலறியா ளெதிர்வருகின் றவரை
இன்னவரென் றறியாளிங் கின்னலுழக் கின்றாள்
வரவெதிர்பார்த் தாழல்கின்று ளிவளளவி லுமது
மனக்கருத்தின் வண்ணமது வாய்மலர வேண்டும்
விரவுமொரு கணமுமினித் தாழ்க்கிலுயிர் தரியாள்
மெய்ப்பொதுவில் நடம்புரியு மிகப்பெரிய துரையே. 7

ஊராசை யுடலாசை யுயிர்பொருளி னாசை
உற்றவர்பெற் றவராசை யொன்றுமிலா னுமது
பேராசைப் பேய்ப்பிடித்தாள் கள்ளுண்டு பிதற்றும்
பிச்சியெனப் பிதற்றுகின்றாள் பிறர்பெயர்கேட் டிடிலோ
நாராசஞ் செவிபுகுந்தா லென்னநலி கின்றாள்
நாடறிந்த திதுவெல்லாம் நங்கையிவ ளளவில்
நீராசைப் பட்டதுண்டேடல் வாய்மலர வேண்டும்
நித்தியமா மணிமன்றில் நிகழ்பெரிய துரையே. 8

என்னுயிரிற் கலந்துகொண்டா ரவரிலிஃ தவர்தாம்
இருக்கவிடம் புனைகவென்று ளிச்சைமய மாகித்
தன்னுயிர்தன் னுடல்மறந்தா ளிருந்தறியாள் படுத்துந்
தரித்தறியா ளெழுந்தெழுந்து தனித்தாருசார் திரிவாள்
அன்னமுண வழைத்தாலுங் கேட்பதிலா ளுலகில்
அணங்கனையா ரதிசயிக்குங் குணங்கள்பல பெற்றாள்
மின்னிவளை விழைவதுண்டேடல் வாய்மலர வேண்டும்
மெய்ப்பொதுவில் நடம்புரியு மிகப்பெரிய துரையே. 9

அம்பலத்தே நடம்புரியு மெனதுதனித் தலைவர்
அன்புடனென் னுளங்கலந்தே அருட்பெருஞ் ஜோதியினல்
தம்பலத்தே பெரும்போகந் தந்திடுவா ரிதுதான்
சத்தியஞ்சத் தியமதனைச் சார்ந்தவர்தா மிருக்க
எம்பலத்தே மலரணையைப் புனைகவெனப் பலகால்
இயம்புகின்றாள் இவளளவி லிசைந்துநம தருளாஞ்
செம்பலத்தே யுறுதருணம் வாய்மலர வேண்டுஞ்
சிற்சபைபொற் சபையோங்கித் திகழ்பெரிய துரையே. 10

அருட்பெருஞ்ஜோதி

79. தலைவி தலைவன்செயலைத் தாய்க்குரைத்தல்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அன்னப் பார்ப்பா லழகா நிலையூடே
அம்பலஞ் செய்துகின் றாடு மழகர்
தன்னப்பார்த் தென்னுயிர் தோழியு நானுஞ்
சூதாடு கின்றவச் சூழலில் வந்தே
உன்னைப்பார்த் துன்னுளே யென்னைப்பா ராதே
ஊரைப் பார்த்தோடி யுழல்கின்ற பெண்ணை
என்னைப் பாரென்கின் றாரென்னடி யம்மா
என்கை பிடிக்கின் றாரென்னடி யம்மா. 1

அதுபா வகமுகத் தானந்த நாட்டில்
அம்பலஞ் செய்துகின் றாடு மழகர்
விதுபா கெமுகத் தோழியு நானும்
மெய்ப்பா வணிசெய்யும் வேளையில் வந்து
பொதுபா வணிசெய்யப் போகாதே பெண்ணை
பொய்ப்பா வணிசெய்து கைப்பானை ணைபோ
இதுபாவ மென்கின் றாரென்னடி யம்மா
என்கை பிடிக்கின் றாரென்னடி யம்மா. 2

அறங்காதல் செய்தேணை யாண்டுகொண் டிங்கே
அருட்பெருஞ் ஜோதியா யாடு மழகர்
உறங்காத வண்ணஞ் சிற்றம்பலம் பாடி
உதிக்கின்ற வொண்மையிற் றுதிக்கின்ற போது
புறங்காதல் செய்வார்போற் செய்யாதே பெண்ணை
பொற்கம்ப மேறிணை சொர்க்கமங் கப்பால்
இறங்காதே யென்கின் றாரென்னடி யம்மா
என்கை பிடிக்கின் றாரென்னடி யம்மா. 3

அங்ஙாள்வந் தென்றனை யாண்டருள் செய்த
ஐய ரமுதமென் னப்ப ரழகர்
நன்னாள் கழிக்கின்ற நங்கைய ரோடு
நானம் பலம்பாடி நண்ணுறும் போது
பின்னை ளென்றெண்ணிப் பிதற்றாதே பெண்ணை
பேரருட் ஜோதி பெருமணஞ் செய்நாள்
இங்ஙாளை யென்கின் றாரென்னடி யம்மா
என்கை பிடிக்கின் றாரென்னடி யம்மா. 4

தப்போது வாருளஞ் சார்ந்திட வுன்னர்
சத்திய ருத்தமர் நித்த மணைளர்
ஒப்போது வொண்ணுத மெய்ப்போத மன்றின்
உண்மையைப் பாடிநா னண்மையி னின்றேன்
அப்போதென் றன்னை யுயர்ந்திடேல் பெண்ணே
அன்புடை நின்னையா மின்புறக் கூடல்
இப்போதே யென்கின்ரு ரென்னடி யம்மா
என்கை பிடிக்கின்ரு ரென்னடி யம்மா. 5

மெய்க்குலம் போற்ற விளங்கு மணைளர்
வித்தக ரம்பல மேவு மழகர்
இக்குல மாதரும் யானுமென் னுதர்
இன்னரு ளாடல்கள் பன்னுறும் போது
பொய்க்குலம் பேசிப் புலம்பாதே பெண்ணை
நூனை நோக்கம் பொருந்தினை நீதான்
எக்குல மென்கின்ரு ரென்னடி யம்மா
என்கை பிடிக்கின்ரு ரென்னடி யம்மா. 6

வெம்மத நெஞ்சிடை மேவுற வுன்னர்
வெப்பல மாற்றுபொன் னம்பல வாணர்
சம்மத மாமட வார்களு நானுந்
தத்துவம் பேசிக்கொண் டோத்துறும் போது
இம்மதம் பேசி யிறங்காதே பெண்ணை
எகசி வோகத்தை யெய்தினை நீதான்
எம்மத மென்கின்ரு ரென்னடி யம்மா
என்கை பிடிக்கின்ரு ரென்னடி யம்மா. 7

பாரோடு விண்ணும் படைத்த பண்பாளர்
பற்றம் பலத்தார்சொல் சிற்றம் பலத்தார்
வாரிடு கொங்கையர் மங்கைய ரோடே
மன்றகம் பாடி மகிழ்கின்ற போது
ஏருடம் பொன்றென வெண்ணேல்நீ பெண்ணை
எம்முடம் புன்னை யிணைத்திங் கெமக்கே
ஈருடம் பென்கின்ரு ரென்னடி யம்மா
என்கை பிடிக்கின்ரு ரென்னடி யம்மா. 8

மறப்பற்ற நெஞ்சிடை வாழ்கின்ற வள்ளல்
மலப்பற் றறுத்தவர் வாழ்த்து மணைளர்
சிறப்புற்ற மங்கையர் தம்மொடு நான்ரு ன்
சிற்றம்பலம் பாடிச் செல்கின்ற போது
புறப்பற் றகற்றத் தொடங்காத பெண்ணை
பூலையகப் பற்றை யறுத்தாய் நினக்கே
இறப்பற்ற தென்கின்ரு ரென்னடி யம்மா
என்கை பிடிக்கின்ரு ரென்னடி யம்மா. 9

ஆறெனு மந்தக்க ளாகியன் முகும்
அம்பலத் தாடல்செய் யானந்த சித்தர்
தேறறி வாகிச் சிவாணு பவத்தே
சின்மய மாய்நான் றிளைக்கின்ற போது
மாறகல் வாழ்வினில் வாழ்கின்ற பெண்ணை
வல்லவள் நீயேயிம் மாநிலை மேலே
ஏறினை யென்கின்று ரென்னடி யம்மா
என்கை பிடிக்கின்று ரென்னடி யம்மா. 10

அருட்பெருஞ்ஜோதி

80. தலவி வருந்தல்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

பருவமிலாக் குறையாலோ பகுதிவகை யாலோ
பழக்கமிலா பையிணலோ படிற்றுவினை யாலோ
இருவகை மாயையிணலோ வாணவத்தி ணலோ
என்னலோ பிறராலோ வெதனலோ வறியேன்
சருவலொழிந் தென்மனமாம் பாங்கிபகை யாணுள்
தனித்தபரை யெனுட்வளர்த்த தாயுமுகம் பாராள்
நிருபமடப் பெண்களெலாம் வலதுகொழிக் கின்றூர்
நிபுணரெங்கள் நடராயர் நினைவையறிந் திலனே. 1

அம்பலத்தே திருநடஞ்செய் யடிமலரென் முடிமேல்
அணிந்திடமுன் சிலசொன்னே ணதனலோ வன்றி
எம்பலத்தே யெம்மிறைவ னென்னை மணம் புரிவான்
என்றுசொன்னே னிதனலோ வெதனலோ வறியேன்
வம்பிசைத்தே னெனவெனது பாங்கிபகை யாணுள்
வளர்த்தெடுத்த தனித்தாயு மலர்ந்துமுகம் பாராள்
நிம்பமரக் கனியாணுர் மற்றைபர்க ளெல்லாம்
நிபுணரெங்கள் நடராயர் நினைவையறிந் திலனே. 2

கண்ணுறங்கே ணுறங்கினுமென் கணவரொடு கலக்குங்
கனவன்றி யிலையென்றே னதனலோ வன்றி
எண்ணுறங்கா நிலவிலவ ரிருக்குமிடம் புகுவேன்
என்றுரைத்தே னிதனலோ வெதனலோ வறியேன்
பெண்ணடங்கா ளெனத்தாழி பேசிமுகங் கடித்தாள்
பெருந்தயவர்ல் வளர்த்தவளும் வருந்தயலா ளாணுள்
மண்ணடங்காப் பழிகூறி மற்றவர்க ளிருந்தார்
வள்ளல்நட ராயர்திரு வுள்ளமறிந் திலனே. 3

எல்லாஞ்செய் வல்லதுரை யென்கணவ ரென்றுல்
எனக்குமொன்று நினக்குமொன்று வென்றவத ணுலோ
இல்லாமை யெனக்கில்லை யெல்லார்க்குந் தருவேன்
என்றுசொன்னே னிதனுலோ வெதனுலோ வறியேன்
கல்லார்போ லெண்ணமுகங் கடுத்துநின்றுள் பாங்கி
களித்தெடுத்து வளர்த்தவருங் கலந்தனளங் குடனே
செல்லாமை சிலபுகன்று சிரிக்கின்றுர் மடவார்
சித்தர்கட ராயர்திருச் சித்தமறிந் திலனே. 4

இச்சையெலாம் வல்லதுரை யெண்ணமணம் புரிந்தார்
எடியெனக் கிணையெவர்க ளென்றவத ணுலோ
எச்சமயத் தேவரையு மினிமதிக்க மாட்டேன்
என்றுசொன்னே னிதனுலோ வெதனுலோ வறியேன்
நச்சுமரக் கனிபோலே பாங்கிமனங் கசந்தாள்
நயந்தெடுத்து வளர்த்தவருங் கயந்தெடுப்புப் புகன்றுள்
அச்சமிலா ளிவளென்றே யலருரைத்தார் மடவார்
அண்ணல்கட ராயர்திரு வெண்ணமறிந் திலனே. 5

வஞ்சமிலாத் தலைவருக்கே மாலையிட்டே னெல்லா
வாழ்வுமென்றன் வாழ்வென்றே னதனுலோ வன்றி
எஞ்சலுறேன் மற்றவர்போ லிறத்துபிறந் துழலேன்
என்றுசொன்னே னிதனுலோ வெதனுலோ வறியேன்
அஞ்சுமுகங் காட்டிநின்றுள் பாங்கியெனை வளர்த்த
அன்னையுமப் படியாகி யெண்ணமுகம் பாராள்
நெஞ்சுரத்த பெண்களெலாம் நீட்டிநகைக் கின்றுர்
நிருத்தர்கட ராயர்திருக் கருத்தையறிந் திலனே. 6

அன்னமுண வளைத்தனர்கா ணுடிமல ரடித்தேன்
அருந்துகின்றே னெனவுரைத்தே னதனுலோ வன்றி
என்னுயிர்கா யகமெடுகா னணையுமிட மெங்கே
என்றுரைத்தே னிதனுலோ வெதனுலோ வறியேன்
துன்னுமெறிக் கொருதுணையாந் தோழிமனங் கசந்தாள்
துணிந்தெடுத்து வளர்த்தவருஞ் சோர்ந்தமுக மாளுள்
நென்னலொத்த பெண்களெலாங் கூடிநகைக் கின்றுர்
நிபுணரெங்கள் நடராயர் நினைவையறிந் திலனே. 7

பொதுநடஞ்செய் துரைமுகத்தே தளதளவென் றெளிரும்
புன்னகையென் பொருளென்றே னதனுலோ வன்றி
இதுவரையும் வரக்காணேன் தடைசெய்தா ரெவரோ
எனப்புகன்றே னிதனுலோ வெதனுலோ வறியேன்
புதுமுகங்கொண் டெனதுதனித் தோழிமனந் திரிந்தாள்
புரிந்தெடுத்து வளர்த்தவருந் புதுமைசில புகன்றுள்
மதுவுகந்து களித்தவர்போற் பெண்களிணைடிக் கின்றுர்
வள்ளல்கட ராயர்திரு வுள்ளமறிந் திலனே. 8

கண்கலந்த கணவரென்னைக் கைகலந்த தருணங்
கரணமறிந் திலனென்றே னதனுலோ வன்றி
எண்கலந்த போகமெலாஞ் சிவபோகந் தனிலே
இருந்திதென்றே னிதனுலோ வெதனுலோ வறியேன்
விண்கலந்த மதிமுகந்தான் வேறுபட்டாள் பாங்கி
வியந்திதடுத்து வளர்த்தவளும் வேறுசில புகன்றாள்
பண்கலந்த மொழிமடவார் பழிகூற லானுர்
பத்தர்புகழ் நடராயர் சித்தமறிந் திலனே. 9

மாடமிசை யோங்குசிலா மண்டபத்தே மகிழ்ந்தேன்
வள்ளலொடு நானென்றே னதனுலோ வன்றி
ஈடறியாச் சுகம்புகல வெண்ணுலே முடியா
தென்றுரைத்தே னிதனுலோ வெதனுலோ வறியேன்
எடவிழ்பூங் குழற்காதைத் தோழிமுகம் புலர்ந்தாள்
எனையெடுத்து வளர்த்தவளு மிரக்கமிலா ளானுள்
நாடறியப் பெண்களெலாங் கூடிநகைக் கின்றுர்
நல்லநட ராயர்கருத் தெல்லைபறிந் திலனே. 10

கற்பூர மணக்கின்ற தென்மேனி முழுதுங்
கணவர்மண மதுவென்றே னதனுலோ வன்றி
இற்பூவை யறியுமடி நடந்தவண்ண மெல்லாம்
என்றுரைத்தே னிதனுலோ வெதனுலோ வறியேன்
பொற்பூவின் முகம்விபர்த்தாள் பாங்கி யவளுடனே
புரிந்திதடுத்து வளர்த்தவளுங் கரிந்தமுகம் படைத்தாள்
சொற்பூவைத் தொடுக்கின்றுர் கால்கள்களை யாதே
துன்றுநட ராயர்கருத் தெல்லைபறிந் திலனே. 11

மன்னுதிருச் சபைநடுவே மணவாள ருடனே
வழக்காடி வலதுபெற்றே னென்றவத னுலோ
இன்னுமவர் வதனவிள நகைகாணச் செல்வேன்
என்றுசொன்னே னிதனுலோ வெதனுலோ வறியேன்
மின்னுமிடைப் பாங்கியொரு விதமாக நடந்தாள்
மிகப்பரிவால் வளர்த்தவளும் வெய்துயிர்த்துப் போனுள்
அன்னநடைப் பெண்களெலாஞ் சின்னமொழி புகன்றுர்
அத்தர்நட ராயர்திருச் சித்தமறிந் திலனே. 12

கள்ளுண்டா லெனப்புகன்றீர் கனகசபை நடுவே
கண்டதலா லுண்டதிலை யென்றவத னுலோ
எள்ளுண்ட மற்றவர்போ லென்னைநினை யாதீர்
என்றுரைத்தே னிதனுலோ வெதனுலோ வறியேன்
உள்ளுண்ட மகிழ்ச்சியெலா முவட்டிநின்றுள் பாங்கி
உவந்துவளர்த் தவளுமென்பாற் சிவந்தகண்ண ளானுள்
துள்ளுண்டு பெண்களெலாஞ் சூழ்ந்துநொடிக் கின்றுர்
சுத்தர்நட ராயர்திருச் சித்தமறிந் திலனே. 13

காரிகையீ ரெல்லீருங் காணவம்மி னெனது
கணவரழ கினையென்றே னதனுலோ வன்றி
எரிகவாத் திருவுருவை யெழுதமுடி யாதே
என்று சொன்னே னிதனுலோ வெதனுலோ வறியேன்
காரிகவாக் குழல்சோரக் கடுத்தெழுந்தாள் பாங்கி
கண்பொறுத்து வளர்த்தவளும் புண்பொறுத்தா ளுளத்தே
நேரிகவாப் பெண்கள்மொழிப் போரிகவா தெடுத்தார்
நிருத்தர்நட ராயர்திருக் கருத்தையறிந் திலனே. 14

கண்ணேறு படுமெனநா னஞ்சுகின்றே னெனது
கணவர்வடி வதுகாணற் கென்றவத னுலோ
எண்ணுத மனத்தவர்கள் காணவிழை கின்றூர்
என்றுரைத்தே னிதனுலோ வெதனுலோ வறியேன்
நண்ணுரிற் கடுத்தமுகந் தோழிபெற்ற னவளை
நல்கியெனை வளர்த்தவளு மல்கியவன் படித்தாள்
பெண்ணுயம் பலபலவும் பேசுகின்று ரிங்கே
பெரியநட ராயருள்ளப் பிரியமறிந் திலனே. 15

கற்பூரங் கொணர்ந்துவம்மி னென்கணவர் வந்தால்
கண்ணெச்சிற் கழிக்கவென்றே னதனுலோ வன்றி
எற்பூத நிலையவர்தந் திருவடித்தா மரைக்கீழ்
என்றுசொன்னே னிதனுலோ வெதனுலோ வறியேன்
வற்பூத வனம்போன்றுள் பாங்கியவ டனுமுன்
மகிழ்ந்துபெற்றிங் கெனவளர்த்தாள் வினவளர்த்தா ளாளுள்
விற்பூவொண் ணுதன்மடவார் சொற்போர்செய் கின்றூர்
விண்ணிலவு நடராய ரெண்ணமறிந் திலனே. 16

மனையணைந்த மலரணமே லெனையணைந்த போது
வடிவுசுக வடிவானே னென்றவத னுலோ
இனைவறியேன் முன்புரிந்த பெருந்தவமென் புகல்வேன்
என்றுரைத்தே னிதனுலோ வெதனுலோ வறியேன்
புனைமுகமோர் கரிமுகமாய்ப் பொங்கிநின்றுள் பாங்கி
புழுங்குமனத் தவளாகி யழுங்குகின்றுள் செவிலி
பனையுலர்ந்த வோலையெனப் பெண்களொலிக் கின்றூர்
பண்ணவரென் நடராய ரெண்ணமறிந் திலனே. 17

தாழ்குழலீ ரெனைச்சற்றே தனிக்கவிட்டா லெனது
தலைவரைக்கான் குவலென்றே னதனுலோ வன்றி
எழ்கடலிற் பெரிதன்றே நான்பெற்ற வின்பம்
என்றுரைத்தே னிதனுலோ வெதனுலோ வறியேன்
கூழ்கொதிப்ப தெனக்கொதித்தாள் பாங்கியெனை வளர்த்த
கோதைதமருண் டாடுகின்ற பேதையென லாளுள்
சூழ்மடந்தை மார்களெலாந் தூற்றிநகைக் கின்றூர்
சுத்தர்நட ராயர்திருச் சித்தமறிந் திலனே. 18

தனித்தலைவர் வருகின்ற தருணமிது மடவீர்
தனிக்கவெனை விடுமினென்றே னதனுலோ வன்றி
இனித்தசுவை யெல்லாமென் கணவரடிச் சுவையே
என்றுரைத்தே னிதனுலோ வெதனுலோ வறியேன்
பனித்தகுளிர் காலத்தே சனித்தசலம் போன்றுள்
பாங்கியெனை வளர்த்தவளுந் தூங்குமுகங் கொண்டாள்
கனித்தபழம் விடுத்துமின்னுர் காய்தின்னு கின்றூர்
கருத்தர்கட ராயர்திருக் கருத்தையறிந் திலனே. 19

அரும்போனலை யாரெனது துரைவருமோர் சமயம்
அகலநின்மி னணங்கனையீ ரென்றவத னுலோ
இரும்புமன மாலுலு மிளகிவிடுங் கண்டால்
என்றுரைத்தே னிதனுலோ வெதனுலோ வறியேன்
கரும்பனையாள் பாங்கியும்நாப்க் கடுகனையா ளானுள்
களித்தெனை வளர்த்தவளும் புளித்தின்று ளோத்தாள்
விரும்புகின்ற பெண்களெலா மரும்புகின்று ரலர்தான்
வித்தகரெல் னடராயர் சித்தமறிந் திலனே. 20

மணவாளர் வருகின்ற தருணமிது மடவீர்
மறைந்திருமின் நீவிரென்றே னதனுலோ வன்றி
எனைமேது நுமக்கெனைத்தான் யார்தடுக்கக் கூடும்
என்றுரைத்தே னிதனுலோ வெதனுலோ வறியேன்
குணநீடு பாங்கியவ ளெம்மிறையை நினையார்
குணங்கொண்டாள் வளர்த்தவளும் பணம்வின்டா ளானுள்
மனநீடு குழன்மடவார் குணநீடு கின்றூர்
வள்ளல்கட ராயர்திரு வுள்ளமறிந் திலனே. 21

பதிவருமோர் தருணமிது நீவிரவர் வடிவைப்
பார்ப்பதற்குத் தாமில்லே ரென்றவத னுலோ
எதிலுமெனக் கிச்சையில்லை யவரடிக்கண் னைல்லால்
என்றுரைத்தே னிதனுலோ வெதனுலோ வறியேன்
மதிமுகத்தாள் பாங்கியொரு விதிமுகத்தா ளானுள்
மகிழ்ந்தென்னை வளர்த்தவளு மிகழ்ந்துபல புகன்றுள்
துதிசெய்மட மாதரெலாஞ் சதிசெய்வா ரானுர்
சுத்தர்கட ராயர்திருச் சித்தமறிந் திலனே. 22

மன்றுடங் கணைவர்திரு வார்த்தையன்றி யுமது
வார்த்தையென்றன் செவிக்கேறு தென்றவத னுலோ
இன்றுவி யன்னவர்க்குத் தனித்தவிடங் காணேன்
என்றுரைத்தே னிதனுலோ வெதனுலோ வறியேன்
மூன்றுனை யவிழ்ந்துவிழ முடுகிடக் கின்றுள்
முதற்பாங்கி வளர்த்தவளு மதர்ப்புடன்செல் கின்றுள்
ஒன்றுத மனப்பெண்கள் வென்றுரி னடித்தார்
ஒருத்தர்கட ராயர்திருக் கருத்தையறிந் திலனே. 23

கூடியவென் கணவரெனைக் கூடாமற் கலைக்கக்
கூடுவதே தா நும்மாலே யென்றவத னுலோ
ஏடியெனை யறியாரோ சபைக்குவரு வாரோ
என்றுரைத்தே னிதனுலோ வெதனுலோ வறியேன்
நாடியவென் பாங்கிமன மூடிநின்று போளுள்
நண்ணியெனை வளர்த்தவரு மெண்ணியவா றிசைத்தாள்
தேடியவா யங்களெலாங் கூடியுரைக் கின்றார்
திருத்தர்கட ராயர்திருக் கருத்தையறிந் திலனே. 24

அருட்பெருஞ்ஜோதி

81. நற்றாய் செவிலிக்குக் கூறல்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

உணர்ந்தவர் தமக்கு முணர்வரி யானென் னுள்ளகத் தமர்ந்தன னென்றாள்
அணிந்தன னெனக்கே யருண்மண மாலை யதிசய மதிசய மென்றாள்
துணிந்துநான் றனித்த போதுவந் தென்கை தொட்டனன் பிடித்தன னென்றாள்
புணர்ந்தனன் கலந்தா னென்றுளே களித்துப் பொங்கினள் நான்பெற்ற பொன்னே

தனிப்பெரும் பதியே யென்பதி யாகத் தவமிது புரிந்தீரை வென்றாள்
அனித்தநீத் தெனைத்தா னன்பினு லணைத்தா னதிசய மதிசய மென்றாள்
இனித்துயர் சிறிது மடைந்திடே னென்று னெனக்கினை யார்கொலோ வென்றாள்
சனிப்பிறப் பறுத்தே னென்றுளே களிப்புத் ததும்பினள் நான்பெற்ற கனியே. 2

புண்ணிய பதியைப் புணர்ந்தன னுன்செய் புண்ணியம் புகலரி தென்றாள்
தண்ணிய மதியி னமுதெனக் களித்த தயவைநான் மறப்பதே வென்றாள்
எண்ணிய வினைத்து மீந்தருள் கின்று னென்னினையா வெண்ணினையா வென்றாள்
அண்ணிய பேரா னந்தமே வடிவ மாயினள் நான்பெற்ற வணங்கே. 3

சத்திய ஞான சபாபதி யெனக்கே தனிப்பதி யாயினு னென்றாள்
நித்திய வாழ்வு பெற்றுநா னின்ப நிலைதனில் நிறைந்தன னென்றாள்
பித்திய லுலகீர் காண்மினீ ரித்திப் பேறலா மென்வசத் தென்றாள்
எத்திசை யிரு மொத்திவண் வருக வென்றன னெனதுமெல் லியலே. 4

திருமணிப் பொதுவி லொருபெரும் பதியென் சிந்தையிற் கலந்தன னென்றாள்
பெருமையிற் சிறந்தே னென்பெருந் தவத்தைப் பேசுத லரிதரி தென்றாள்
இருமையு மென்போ லொருமையிற் பெற்றார் யாண்டுளார் யாண்டுளா ரென்றாள்
மருமலர் முகத்தே யிளநகை துளும்ப வயங்கினள் நான்பெற்ற மகளே. 5

வள்ளலைப் புணர்ந்தே னம்மவோ விதுதான் மாலையோ காலையோ வென்றாள்
எள்ளலைத் தவிர்ந்தே னுலகெலா மெனக்கே யேவல்செய் கின்றன வென்றாள்
தெள்ளமு தருந்தி யழிவிலா வுடம்புஞ் சித்தியும் பெற்றன னென்றாள்
துள்ளிய மடவீர் காண்மினீ ரென்றாள் சோர்விலாள் நான்பெற்ற சுதையே. 6

கனகமா மன்றில் நடம்புரி பதங்கள் கண்டனன் கண்டன னென்றுள்
அனகசிற் சடையி லொருபெரும் பதியை னன்பிலே கலந்த னென்றுள்
தினகர சோமாக் கினியெலா மெனக்கே செயல்செயத் தந்த னென்றுள்
தனகரத் தெனைத்தான் தழுவின னென்றுள் தவத்திறம் பெற்றநந் தனமே. 7

கோடிப்பெரு மணிப்பொற் கோயிலென் னுளமாக் கொண்டுவந் தமர்ந்த னென்றுள்
கடிப்புது மலர்ப்பூங் கண்ணிவேய்ந் தெனைத்தான் கடிமணம் புரிந்த னென்றுள்
ஒடிப்பற வெல்லாம் வல்லதோர் சித்தாம் வொளியெனக் களித்த னென்றுள்
இடிப்பொடு நொடித்தீர் காண்மினே வென்று ளென்றவத் தியன்றமெல் லியலே. 8

வாழிமா மணிமன் றிறைவனே யெனக்கு மாலைவந் தணிந்த னென்றுள்
ஊழிதோ றூழி யுலவினு முலவா வுடம்பெனக் களித்த னென்றுள்
ஆழிசூ ழுலகோ டண்டங்க ளனைத்து மளிக்கவென் றருளின னென்றுள்
வழியன் மாட மினைபுற வைத்தா னென்றன னெனது மெல்லியலே. 9

ஏலுநன் மணிமா மன்றருட் ஜோதி யென்னுளத் தடர்ந்த னெனவ்றுள்
பாலுமின் சுவையும் போன்றென தாவி பற்றினன் கலந்த னென்றுள்
சாலுமெவ் வுலகுந் தழைக்கவென் றனக்கே சத்தியை யளித்த னென்றுள்
மேலுமெக் காலு மழிவிலே னென்றுள் மிகுகளிப் புற்றனள் வியந்தே த. 10

அருட்பெருஞ்ஜோதி

---

82. அனுபவ மாலை

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அம்பலத்தே திருநடஞ்செய் பதிமலியென் முடிமேல்
அணிந்துகொண்டே னன்பொடுமென் னுருப்பிக்கு மணிந்தேதன்
எம்பரத்தே மணக்குமந்த மலர்மனைத்தைத் தோழி
என்னுரைப்பே னுனைக்கவென்று லென்னளவன் றதுவே
வம்பிசைத்தே னன்றடிநீ யென்னருகே யிருந்துன்
டனிகாசி யடைப்பதனைத் திறந்துமுகர்ந் தறிகான்
நம்புறுபார் முதல்காத வரைபுளகாட் டவருந்
தன்குமுகர்ந் தனர்வியந்தார் தன்மணமீ தெனவே. 1

கண்ணுறங்கே னுறங்கினுமென் கணவனொடு கலக்குங்
கனவேகண் டுளமகிழ்வேன் கனவான்றோ றனவின்
எண்ணடங்காப் பெருஞ்ஜோதி யென்னிலைய வெனவே
இணைந்திரவு பகல்காணை தின்புறச்செய் கின்றார்
மண்ணுறங்கு மலையுறங்கு மலைகடலு முறங்கும்
மற்றுளவெல் லாமுறங்கும் மாநிலத்தே தமது
பெண்ணுறங்கா வெனைத்தாயர் பேசுமகிழ் கின்றார்
பெண்களெல்லாங் கூசுகின்றார் பெருந்தவஞ்செய் திலமே. 2

எல்லாஞ்செய் வல்லதுரை யெண்ணமணம் புரிந்தார்
எவ்வுலகில் யாரெனக்கிங் கீடுரைநீ தோழி
நல்லாய்மீக் கூற்றுடையா ரிந்திரர்மா முனிவர்
நான்முகர்நா ரணரெல்லாம் வான்முகராய் நின்றே
பல்லாரி லிவள்புரிந்த பெருந்தவத்தை நம்மாற்
பகர்வரிதென் கின்றுரைசிற் பதியில்நடம் புரியும்
வல்லாணை மணந்திடவும் பெற்றனளிங் கிவளே
வல்லாளென் றுரைக்கின்றார் நல்லார்கள் பலரே. 3

இச்சையெலாம் வல்லதுரை யெண்ணமணம் புரிந்தார்
யான்செய்தவம் யார்செய்தா ரிதுகேளென் தோழி
எச்சமயத் தேவரையுஞ் சிறுதுரும்பென் றெணும்
எண்ணுவதே றுண்ணியரை யெண்ணுமனத் தாலே
பிச்சியென நினைத்தாலும் நினையடிநீ யவரைப்
பிரிவேறு பிரிவென்று பேசுகிலுந் தரியேன்
விச்சைநடங் கண்டேறு னடங்கண்டாற் பேயும்
விடத்துணியா தென்பார்களென் விளவுரைப்ப தென்னே. 4

வஞ்சமிலாத் தலைவருக்கே மாலைமகிழ்ந் தணிந்தேன்
படைறைகளுட ணுகமங்கள் வகுத்துவகுத் துரைக்கும்
எஞ்சலுறு வாழ்வனைத்து மென்னுடைய வாழ்வே
எற்றேநான் புரிந்ததவந் சற்றேநீ யுரையாய்
அஞ்சுமுகங் காட்டியவன் தாயரெலா மெனக்கே
ஆறுமுகங் காட்டிமிக வீறுபடைக் கின்றார்
பஞ்சடிப்பா லையரெல்லாம் விஞ்சடிப்பா லிருந்தே
பரவுகின்றார் தோழியென்ற னுறவுமிக விழைந்தே. 5

அன்னமுண வழைக்கின்றாய் தோழியிங்கே நான்றான்
அப்பலத்தே யாடுகின்ற வண்ணலடி மலர்த்தேன்
உண்ணநினைத் துண்டேனென் னுள்ளகத்தே வாழும்
ஒருதலைமைப் பெருந்தலைவ ருடையவருட் புகழாம்
இன்னமுதி லென்னுடையன் பென்னுநறுங் கனியின்
இரதமுமென் றணிக்கனிவ ருருக்காட்சி யெனுமோர்
கன்னலுளே தனித்தித்தித்த தேட்பாகுங் கலந்தே
களித்துண்டேன் பசிசிறிதுங் கண்டிலனுள் ளகத்தே. 6

போதுநடஞ்செய் துரைமுகத்தே தளதளவென் றொளிரும்
புன்னகையே யொருகோடிப் பொன்பெறுமென் றுரைப்பார்
இதுவரைதான் பலகோடி யென்னிலுமோ ரளவோ
எண்ணிறந்த வண்டவகை எத்தனைகோ டிகளுஞ்
சதுமறைசெல் லண்டவகை தனித்தனியே நடத்துஞ்
சத்தர்களுஞ் சத்திகளுஞ் சிறிதுபெறு குவரோ
துதிபெறுமத் திருவாளர் புன்னகையை நினைக்குந்
தோறுமன மூறுகின்ற சுகவமுதம் பெறுமே. 7

கண்கலந்த கணைவரினைக் கைகலந்த தருணங்
கண்டறியே னென்னையுமென் கரணங்க டினையும்
எண்கலந்த போகமெலாஞ் சிவபோகந் தனிலோர்
இறையளவென் றுரைக்கின்ற மறையளவின் றறிந்தேன்
விண்கலந்த திருவாள ருயிர்கலந்த தருணம்
வினைத்துயர்தீர்ந் தடைந்தசுக நினைத்திடுந்தோ றெல்லாம்
உண்கலந்த வானந்தப் பெரும்போக மப்போ
துற்றதென வெனைவிழுங்கக் கற்றதுகாண் தோழி. 8

மாடமிசை யோங்குநிலா மண்டபத்தே யெனது
மணவாளர் கொடுத்ததிரு வருளமுத மகிழ்ந்தே
வடவிழ்பூங் குழலாய்நா னுண்டதொரு தருணம்
என்னையறிந் திலனுலகந் தன்னையுநா னறியேன்
தேடரிய நறும்பாலுந் தேப்பாகு நெய்யுந்
தேனுமொக்கக் கலந்ததெனச் செப்பினுஞ் சாலாதே
ஈடறியாச் சுவைபுகல வென்னுரேல முடியா
தென்னடியோ வவ்வமுதம் பொன்னடிதா னிகரே. 9

கற்பூர மணக்கின்ற தென்னுடம்பு முழுதுங்
கணவர்திரு மேனியிலே கலந்தமனை மதுதான்
இற்பூத மணப்போலே மறைவதன்று கண்டாய்
இயற்கைமணந் தூரியநிறை யிறைவடிவத் துளதே
பொற்பூவு நறுமணமுங் கண்டறியா ருலகர்
புண்ணியனர் திருவடிவி னண்ணியவா றதுவே
நற்பூதி யணிந்ததிரு வடிவுமுற்றுந் தோழி
நான்கண்டேன் நான்புணர்ந்தே னனதுவா னேனே. 10

மன்னுதிருச் சபைநடுவே வயங்குநடம் புரியும்
மணவாளர் திருமேனி வண்ணங்கண் டுவந்தேன்
என்னடியித் திருமேனி யிருந்தவண்ணந் தோழி
என்புகல்வேன் மதியிரவி யிலங்குமங்கி யுடனே
மின்னுமொன்றுய்க் கூடியவை யெண்கடந்த கோடி
விளங்குவண்ண மென்றுரைக்கோ வுரைக்கினுஞ் சாலாதே
அன்னவண்ண மறைமுடிவு மறைவரிதே யந்த
அரும்பெருஞ்ஜோ தியின்வண்ண மாருரைப்பா ரந்தோ. 11

கள்ளுண்டா னெனப்புகன்றுர் கனகசபை நடுவே
கண்டதுண்டு சிற்சபையி லுண்டதுமுண் டடிநான்
எள்ளுண்ட பலவிடயத் திறக்குங்கள் ளன்றே
என்றுமிற வாநிலையி லிருத்துங்கள் ளுலகர்
உள்ளுண்ட போதுமயக் குற்றிடுங்கள் ளலவே
உள்ளமயக் கனைத்தினையு மொழித்திடுங்கள் மடவாய்
அள்ளுண்ட பிறருமெனை யடித்தடித்துக் கண்டால்
அறிவுதரு மவர்க்குமிங்கே யாதுண்ட கள்ளே. 12

காரிகைநீ யெண்ணுடனே காணவரு வாயோ
கனகசபை நிடுநின்ற கணவர்வடி வழகை
ஏரிகவாத் திருவடிவை யெண்ணமுடி யாதே
இயம்பமுடிந் திடுமோகா மெழுதமுடிந் திடுமோ
பேரிகவா மறைகளுட ணகமங்க ளெல்லாம்
பின்னதுமுன் முன்னதுபின் பின்முன்னப் மயங்கிப்
பாரிகவா தின்றளவு மிகவெழுதி யெழுதிப்
பார்க்கின்ற முடிபொன்றும் பார்த்ததிலை யம்மா. 13

கண்ணேறு படுமெனகா னஞ்சுகின்றேன் பலகால்
கணவர்திரு வடிவழகைக் கண்டுகண்டு களிக்கில்
எண்ணரிவண் ணைசிவள்ள மென்சொல்வழி கேளா
தெனையீர்த்துக் கொண்டுசபைக் கேகுகின்ற தந்தோ
பெண்ணைசை பெரிதன்பர் விண்ணரு மவர்க்கும்
பெண்ணைசை பெரிதலகா ணணைசை பெரிதே
உண்ணெடிப் பற்பலகாற் கண்ணேறு கழிக்கல்
உறுகின்றேன் தோழிநின்னற் பெறுகின்ற படியே. 14

கற்பூரங் கொளர்ந்திடுக தனித்தோழி யெனது
கணவர்வரு தருணமிது கண்ணேறு கழிப்பாம்
எற்பூத நிலைபவர்தந் திருவடித்தா மரைக்கீழ்
இருப்பதடிக் கீழிருப்ப தென்றுநினை யல்காண்
பற்பூத நிலைகடந்து நாதநிலைக் கப்பால்
பராத நிலையதன்மேல் விளங்குகின்ற தறிநீ
இற்பூவை யம்மடிக்குக் கண்ணேறு கழித்தால்
எவ்வுலகத் தெவவுயிர்க்கு மினிதுநலந் தருமே. 15

மனையணைந்து மலரணைமே லெனையணைந்த போது
மணவாளர் வடிவென்று மெனதுவடி வென்றுந்
தனைநினைந்து பிரித்தறிந்த தில்லையடி யெனைத்தான்
சற்றுமறி யேமெனனில்யான் மற்றறிவ தென்னை
நினையளவா யிணைம்மிகற்ப வுணர்ச்சியென்ப திலையே
திருவாளர் கலந்தபடி செப்புவதெப் படிசோ
உனையணைந்தா லிவ்வாறு கான்கேட்பே னப்போ
துன்னறிவு மென்னறிவு மோரறிவாங் காணே. 16

தாழ்குழலா யெனைச்சற்றே தனிக்கவிட்டால் ஞான
சபைத்தலைவர் வருகின்ற தருணமிது நான்றன்
வாழ்வடைபொன் மண்டபத்தே பளிக்கரையி னூடே
மலரணையை யலங்கரித்து வைத்திடுதல் வேண்டும்
சூழுறநா னலங்கரிப்பே னென்கின்றுப் தோழி
துரைக்குபன மில்லையது துணிந்தறிந்தேன் பலகால்
எழ்கடலிற் பெரிதன்றே நானடைந்த சுகமிங்
கிதைவிடநான் செய்பணிவே றெப்பணிநீ யியம்பே. 17

தனித்தலைவர் வருகின்ற தருணமிது தோழி
தனிக்கவலை விடுநீபுந் தனித்தாருபா லிருத்தி
இனித்தசுவைத் திரள்கலந்த திருவார்த்தை நீபும்
இன்புறக்கேட் டுளங்களிப்பா யிதுசாலு நினக்கே
மனித்தர்களோ வானவரோ மலரயனே மாலோ
மற்றையரோ வென்புகல்வேண் மதியசுரரா தியருந்
தனித்தவொரு திருவார்த்தை கேட்பதற்கே கோடி
தவஞ்செய்து நிற்கின்றார் தவஞ்செய்த நிலத்தே. 18

மணவாளர் வருகின்ற தருணமிது மடவாய்
மானிகையின் வாயிலெலாம் வளம்பெறநீ புனைக
குணவாள ரணையுமல ரணையகத்தை நானே
குலமணிவி ளக்கத்தா லலங்கரிக்கப் புகுவேன்
தணவாத சுகந்தருமென் தனிக்கணவர் வரிலோ
சற்றுமயல் வாதனைக ளூற்றிடுத லாகா
அணவாத மனத்தவரைப் புறப்பணிக்கே விடுக
அன்புடையார் களுக்கிடுக வகப்பணிசெய் திடவே. 19

அரும்பொனனை யாரெனது கணவர்வரு தருணம்
ஆயிழையீ தாதலினுல் வாயில்முகப் பெல்லாம்
விரும்புறத்தோ ரணங்கொடிகள் பழுத்தகுலை வாழை
விரைக்கமுகு தெங்கிளநீ ரெனைப்பலவும் புனைக
கருங்புகல்லின் முளைநிறைநீர்க் குடமிணைந்த கயலுங்
கண்ணுடி கவரிமுத லுண்ணுடி யிடுக
இருங்பொடுகல் லொத்தமனங் களுங்கனிப வுருக்கும்
இறைவர்திரு வரவெதிர்கொண் டேத்துவதற் கினிதே. 20

ப்திவருமோர் தருணமிது தருணமிது தோழி
பராக்கடையில் மணிமாடப் பக்கமெலாம் புனைக
அதிகநலம் பெறுபளிக்கு மணிமேடை நடுவே
அணையையலங் கரித்திடுகான் புகுகின்றேன் விரைந்தே
கதிதருவார் நல்வரவு சத்தியஞ்சத் தியநீ
களிப்பினிறை மணிவிளக்காற் கதிர்பரவ நிரைத்தே
புதியநவ மணிகுயின்ற வாசனங்க ளிடுக
புண்ணியனுர் நல்வரவை யெண்ணியெண்ணி யினிதே. 21

மன்றுடங் கணவர்திரு வரவைநினைக் கின்றேன்
மகிழ்ந்துநினைத் திடுந்தோறு மனங்கனிவுற் றுருகி
நன்றுவின் பாற்றிரளி னறுநெய்புந் தேனும்
நற்கருப்பஞ் சாறெடுத்த சர்க்கரையுங் கூட்டி
இன்றுர வுண்டதென வினித்தினித்துப் பொங்கி
எழுந்தெனையும் விழுங்குகின்ற தென்றுலென் தோழி
இன்றுவி யன்னவரைக் கண்டுகொளுந் தருணம்
என்சரித மெப்படியோ வென்புகல்வே னங்தோ. 22

கூடியவென் தனிக்கணவர் நல்வரத்தை நாளை
குறிக்கின்ற தோறுமொளி யெரிக்கின்ற மனந்தான்
நீடியபொன் மலைமுடிமேல் வாழ்வடைந்த தேவர்
நீண்முடிமே லிருக்கின்ற தென்றுரைக்கோ வன்றி
ஆடியபொற் சபைநடுவே சிற்சபையி னடுவே
ஆடுகின்ற வடிநிழற்கீ ழிருக்கின்ற தென்கோ
வடவிழ்பூங் குழலாயென் னிறைவரைக்கண் ணுற்றுல்
என்மனத்தின் சரிதமதை யார்புகல்வா ரந்தோ. 23

அருளாளர் வருகின்ற தருணமிது தோழி
ஆயிரமா யிரங்கோடி யணிவிளக்கேற் றிடுக
தெருளாய பசுநெய்யே விடுகமற்றை நெய்யேல்
திருமேனிக் கொருமாசு செய்தாலுஞ் செய்யும்
இருளேது காலைவிளக் கேற்றிடவேண் டுவதோ
என்னுதே மங்கலமா யேற்றுதலாங் கண்டாய்
மருளேலங் கவர்மேனி விளக்கமதண் கடந்த
மதிகதிர்செங் கனல்கூடிற் றென்னினுஞ் சாலாதே. 24

என்னிருகண் மணியனைபா ரென்னுயிர்தா யகனூர்
என்னுயிருக் கமுதாரு ரெல்லாஞ்செப் வல்லார்
பொன்னணிபொற் சபையாளர் சிற்சபையா ரென்னைப்
புறம்புணர்ந்தா ரகம்புணர்ந்தார் புறத்தகத்தும் புணர்ந்தார்
அன்னியரல் லடியவரே யெனதுகுல தெய்வம்
அருந்தவத்தாற் கிடைத்தகுரு வாகுமது மட்டோ
மன்னுறுமென் தனித்தாயுந் தந்தையுமங் கவரே
மக்கள்பொருள் மிக்கதிரு வொக்கலுமங் கவரே. 25

தந்தையென்றுய் மகனென்றுப் மணவாள னென்றுப்
தகுமோவிங் கிதுவென்ன வினவுதியோ மடவாய்
சிந்தைசெய்து காணடிநீ சிற்சபையில் நடிக்குந்
திருவாள ரெனைப்புணர்ந்த திருக்கணவ ரவர்தாம்
அந்தநடு மூதலில்லா வரும்பெருஞ்ஜோ திபரே
அண்டசரா சரங்களெலாங் கண்டதுவே றிலையே
எந்தவகை பொய்புகல்வேன் மற்றையர்போ லம்மா
ஈங்கவர்தந் திருமேனி நானுமென வறியே. 26

எல்லாமுஞ் செயவல்ல தனித்தலைவர் பொதுவில்
இருந்துநடம் புரிகின்ற வரும்பெருஞ்ஜோ தியினர்
நல்லாய்நன் னாட்டார்க ளெல்லாரு மறிய
நண்ணியெனை மணம்புரிந்தார் புண்ணியரு ளதனல்
இல்லாமை யெனக்கில்லை யெல்லார்க்குந் தருவேன்
என்னுடைய பெருஞ்செல்வ மென்புகல்வ னெம்மா
செல்லாத அண்டமட்டோ அப்புறத்தப் பாலுஞ்
சிவஞானப் பெருஞ்செல்வஞ் சிறப்பதுகண் டறியே. 27

வான்கண்ட பிரமர்களும் நாரணரும் பிறரும்
மாதவம்பன் னெட்புரிந்து வருந்துகின்ற ரந்தோ
நான்கண்ட காட்சியவர் கண்டிலர்ம்ர புலகில்
நாமிருபெண் செய்ததவ மெத்தவமோ வறியேன்
கோன்கண்ட குடிக்கொன்றுங் குறைவிலையே யண்ட
கோடியெலாந் தனிப்பெருஞ்செங் கோனடத்து மிறைவர்
தான்கண்ட குடியானேன் குறைகளெலாந் தவிர்ந்தேன்
தனித்தவள மாடமிசை யினித்திருக் கின்றேனே. 28

என்கணவர் பெருந்தன்மை யாறந்த நிலைக்கே
எட்டிநின்று பார்ப்பவர்க்கு மெட்டாதே தோழி
பொன்கணவர் கலைமடந்தை தன்கணவர் முதலோர்
புனைந்துரைக்குங் கதைபோல நினைந்துரைக்கப் படுமோ
புன்கணவ ரறியாதே புலம்புகின்ற ரவர்போல்
புகன்மறைபு மாகமமும் புலம்புகின்ற வம்மா
உன்கணவர் திறம்புகலென் றுரைக்கின்றாய் நீதான்
உத்தமரு ளருட்ஜோதி பெற்றிடமுன் விரும்பே. 29

ஈங்குசில ருண்ணுகவென் றென்னையழைக் கின்றார்
எனதோழி நானிவர்கட் கென்புகல்வே னஃம்மா
ஓங்குநிலா மண்டபத்தே யென்கணவ ருடனே
உவட்டாத தெள்ளமுத முண்டுபசி தீர்ந்தேன்
தேங்குழலிங் கினியெனக்குப் பசிவரிலப் போது
செப்புகின்றே னிப்போது சிலுகிழைத்தல் வேண்டாம்
ஏங்கலற நீயவர்க்குத் தெளிவிப்பாய் மற்றை
இருந்தவரும் விருந்தவரு மினிதுபுசித் திடற்கே. 30

ஐயரேனை யாளுடைபா ரரும்பெருஞ்ஜோ தியினர்
அப்பலதே நடம்புரிபு மானந்த வடிவர்
மெய்யரெனை மணம்புரிந்த தனிக்கணவர் துரிய
வெளியினிலா மண்டபத்தே மேவியமு தளித்தென்
கையகத்தே யொருபசும்பொற் கங்கணமும் புனைந்தார்
கங்கணத்தின் தரத்தையென்னுற் கண்டுரைக்கப் படுமோ
வையகமும் வானகமுங் கொடுத்தாலு மதற்கு
மாறுக மாட்டாதே மதிப்பரிதா மதுவே. 31

தன்வடிவந் தாணுதந் திருச்சிற்றம் பலத்தே
தனிநடஞ்செய் பெருந்தலைவர் பொற்சபையெங் கணவர்
பொன்வடிவ மிருந்தவண்ண நினைத்திடும்போ தெல்லாம்
புகலருட்பே ரானந்த போகவெள்ளந் ததும்பி
என்வடிவிற் பொங்குகின்ற தம்மாவென் னுள்ளம்
இருந்தபடி யென்புகல்கே னென்னளவன் றதுதான்
முன்வடிவங் கரைந்தினிய சர்க்கரையுந் தேனும்
முக்கனியுங் கூட்டியுண்ட பக்கமுஞ்சா லாதே. 32

இவ்வுலகி லெணைப்போல்வா ரோரனந்தங் கோடி
என்னிலுயர்ந் திருக்கின்ற ரெத்தணையோ கோடி
அவ்வுலகிற் சிறந்துநின்ற ரளவிறந்த கோடி
அத்தணைபோர் களுமன்தா நித்தம்வருந் திடவும்
எவ்வுலகு முனைர்வரிய திருச்சிற்றம் பலத்தே
இனிதமர்ந்த தலைவரிங்கே யெண்ணமணைம் புரிந்தார்
நவ்விவிழி மடமாதே நிழ்மேலென் பதுதான்
நாதர்திரு வருட்ஜோதி நாடுவதான் றிலையே. 33

திருவாளர் பொற்சபையிற் றிருநடஞ்செய் தருள்வார்
சிற்சபையா ரென்றனக்குத் திருமாலை கொடித்தார்
உருவாள ரருவாகி யொளியாகி வெளியாய்
ஓங்குகின்ற ரென்னுடைய வுயிர்த்துணைவ ரவர்தம்
பெருவாய்மைத் திருவருளை பெருவாழ்வென் றுணர்ந்தோர்
பேசியபெய் வாசகத்தின் பெருமையையுன் றுணர்ந்தேன்
துருவாத வெனக்கிங்கே யருணிலைக்குந் தோறுந்
சொல்லளவல் லாதசுகந் தோன்றுவதென் தோழி. 34

அருளாளர் பொற்பொதுவி லானந்த நடஞ்செய்
ஆனந்த வண்ணரெனை யாளுடையார் நான்றன்
தெருளாத பருவத்தே தெருட்டிமணம் புரிந்த
திருவாள ரவர்பெருமைத் திறத்தையெவர் புகல்வார்
மருளாத வாகமங்கள் மாமறைக ளெல்லாம்
மருண்டனவே யென்னடிநம் மனவாக்கி னளவோ
இருளாமை யென்றுறுமோ வன்றுசிறி தூரைப்பாம்
என்னவுரா ணீர்ப்பதிதற் கென்புரிவேன் தோழி. 35

செம்பவளத் திருமலைபோ மாணிக்க விளக்கோ
தெய்வமர கதத்திரளோ செழுநீலப் பொருப்போ
பம்புமணி யொளியோகந் பசும்பொன்னின் சுடரோ
படிகவண்ணப் பெருங்காட்சி தானேவென் றுணர்ந்தே
எம்பரமன் றெம்பெருமான் புறவண்ணம் யாதோ
என்பாசே லகவண்ணம் யாருரைக்க வல்லார்
தம்பரமென் றெண்ணையன்று மணம்புரிந்தார் ஞானச்
சபைத்தலைவ ரவர்வண்ணஞ் சாற்றுவதென் தோழி. 36

தேவர்களோ முனிவர்களோ சிறந்தமுத்தர் தாமோ
தேர்ந்தசில யோகிகளோ செம்பொருள்கண் டாரோ
மூவர்களோ வைவர்களோ முதற்பரையோ பரமோ
முன்னியமென் றுணித்தலைவர் தம்மியலை யுணர்ந்தார்
யாவர்களு மல்லமென்றல் யாணுணர்ந்து மொழிதற்
கமையுமோ வொருசிறிது மமைபாது கண்டாய்
ஆவலொடு மன்பர்தாழச் சிற்சபையி னடிப்பார்
அவர்பெருமை யவரறிவா ரவருமறிந் திலரே. 37

திருச்சிற்றம் பலத்தின்பத் திருவுருக்கொண் டின்பத்
திருநடஞ்செய் தருள்கின்ற திருவடிக்கே தொழும்பாய்
அருச்சிக்கும் போன்ப ரறிவின்கண் ணறிவாய்
அவ்வறிவில் விளைந்தசிவா னந்தவமு தாகிப்
1 பரிச்சிக்கு மவ்வமுதி னிறைந்தசுவை யாகிப்
பயனுகிப் பயத்தினனு பவமாகி நிறைந்தே
2 உருசிக்கு மெனமறைக ளாகமங்க ளெல்லாம்
ஓதுகின்ற வெனிலவர்தம் மொளியுரைப்ப தெவனே. 38

வெடித்தளிந்த முக்கனியின் வடித்தரசந் தனிலே
விரும்புறவுட் பிழிந்தெடுத்த சுரும்பிரதங் கலந்தே
தடித்தசெழும் பாற்பெய்து கோற்றேன்விட் டதனைத்
தனித்தபர வமுதத்திற் முன்கலந்துண் டாற்போல்
இடித்திடித்தென் னுளமுழுதுந் தித்திக்கும் வார்த்தை
இனிதுரைத்து மணம்புரிந்த வென்னுயிர்நா யகர்வான்
பொடித்திருமே னியரவரைப் புணரவல்லே னவர்தம்
புகழுரைக்க வல்லேனு வல்லெண்காண் தோழி. 39

கன்னியெனை மணந்தபதி கனிதருசிற் சபைக்கே
கலந்ததனிப் பதிவயங்கு கனகசபா பதிவான்
பன்னியருக் கருள்புரிந்த பதியுலக மெல்லாம்
படைத்தபதி காத்தருளும் பசுபதியெவ் வுயிர்க்கும்
அன்னியமல் லாதகத்தும் புறத்துமகப் புறத்தும்
அருட்செங்கோல் செலுத்துகின்ற வதிபதிபா மதனுல்
என்னியல்போற் பிறரியலை யெண்ணியிடேல் பிறரோ
என்பதிபா லன்பதிலா ரன்புளரே லெண்ணே. 40

என்னியல்போற் பிறரியலை யெண்ணேலென் றுரைத்தேதன்
இறுமாப்பா வுரைத்தனனென் றெண்ணியிடேல் மடவாய்
பன்னியநா னென்பதியின் பற்றலது வேறோர்
பற்றறியே னுற்றவரு மற்றவரும் பொருளும்
உன்னியவென் னுயிருமென துடலுமென துணர்வும்
உயிருணர்வா லடைசுகமுங் திருச்சிற்றம் பலத்தே
மன்னியவா தலிறற்பெண் மகளுமலென் வசமான்
மகனுமலே னலியுமலே னிதுகுறித்தென் றறியே. 41

பார்முதலாப் பரகாதப் பதிகடந்தப் பாலும்
பாங்குடைய தனிச்செங்கோ லோங்கடாத் திடுதால்
சீர்திளைந்தா ரேத்துதொறு மேத்துதற்கோ வெனது
திருவாள ரருள்கின்ற தன்றுமனங் கனிந்தே

---

1 பரிசிக்கும் என்னும் பெயரெச்சம் பரிச்சிக்கும் என விரிக்கும்
வழிவிரித்தல் என்னும் விகாரம்பெற்றது.

2 உருச்சிக்கும் என்பதும் அவ்வாறே.

ஆர்தருபே ரன்பொன்றே குறித்தருளு கின்றார்
ஆதலினு லவரிடத்தே யன்புடையா ரெல்லாம்
ஓர்தருமென் னுறவினரா மாணையிது நீயும்
உறவான தவரன்பு மறவாமை குறித்தே. 42

நாதாந்த வரைபுமெங்க ணுயகனுர் செங்கோல்
நடக்கின்ற தென்கின்றூர் நாதாந்த மட்டோ
போதாந்த நிலையுமுயர் யோகாந்த நிலையும்
புனிதகலாந் தப்பதியும் புகல்கின்றூர் புகலும்
வேதாந்த வெளியுமிகு சித்தாந்த வெளியும்
விளங்குமிவற் றப்பாலு மதன்மேலப் பாலும்
வாதாந்தத் ததன்மேலு மதன்மேலப் பாலும்
மன்றுடி யருட்செங்கோல் சென்றுட லறிமே. 43

புண்ணியனு ரென்னுளத்தே புகுந்தமர்ந்த தலைவர்
போதுவிளங்க நடிக்கின்ற திருக்கூத்தின் றிறத்தை
எண்ணியநா னெண்ணுறுதோ றுமுண்டுபசி தீர்ந்தே
இருக்கின்றே னடிக்கடிநீ யென்னையழைக் கின்றூய்
பண்ணுறுமென் தனிக்கணவர் கூத்தாடுஞ் சபையைப்
பார்த்தாலும் பசிபோமே பார்த்திடலன் றியுமே
அண்ணுறுமத் திருச்சபையை நினைக்கினுப்மே சாறல்
ஆறுமடி யூறுமடி யானந்த வழுதே. 44

கூசுகின்ற தென்னடிநா னம்பலத்தே நடிக்குங்
கூத்தாடிக் கணவருக்கே மாலையிட்டா யெனவே
ஏசுகின்றூ ராரடியோ வண்டபகி ரண்டத்
திருக்கின்ற சத்தர்களுஞ் சத்திகளும் பிறரும்
பேசுகின்ற வார்த்தையெலாம் வள்ளலருட் கூத்தின்
பெருமையலால் வேறொன்றும் பேசுகின்ற திலையே
வீசுகின்ற பெருஞ்ஜோதித் திருக்கூத்தின் றிறமே
வேதமுட னுகமங்கள் விளம்புகின்ற தன்றே. 45

குலமறியார் புலமறியா ரப்பலத்தே நடிக்குங்
கூத்தாடி யையருக்கே மாலையிட்டா யெனவே
புலமறியார் போனீயும் புகலுதியோ தோழி
பொளபொளவென் றளப்பதெலாம் போகவிட்டிங் கிதுகேள்
அலகறியாத் திருக்கூத்தென் கணவர்புரி யாரேல்
அயனரியோ டரன்முதலா மைவர்களும் பிறரும்
விலகறியா வுயிர்பலவும் நீயுமிங்கே நின்று
மினுக்குவதுங் குலுக்குவதும் வெளுத்துவிடுங் காணே. 46

கோடியிடைப்பெண் பேதாய்நீ யம்பலத்தே நடிக்குங்
கூத்தாடி யென்றனது கொழுநர்தமைக் குறித்தாய்
படியிடத்தே வானிடத்தே பாதலத்தே யண்ட
பகிரண்ட கோடியிலே பதிவிளக்க மெல்லாம்
அடிமலர்கொண் டையர்செய்யுந் திருக்கூத்தின் விளக்கம்
ஆகுமிது சத்தியமென் றருமறையா கமங்கள்
கெடியுறவே பறையடித்துத் திரிகின்ற வவற்றைக்
கேட்டறிந்து கொள்வாய்நின் வாட்டமெலாந் தவிர்ந்தே. 47

இன்பவடி வந்தருதற் கிறைவர்வரு கின்றார்
எல்லாஞ்செய் வல்லசித்த ரிங்குவரு கின்றார்
அன்பருளத் தேயினிக்கும் மமுதர்வரு கின்றார்
அம்பலத்தே நடம்புரியு மையர்வரு கின்றார்
என்புருப்பொன் னுருவாக்க வெண்ணிவரு கின்றார்
என்றுதிரு நாதவொலி யிசைக்கின்ற தம்மா
துன்பமறத் திருச்சின்ன வொலியதனை நீயுஞ்
சுகம்பெறவே கேளடியென் தோழியெனைச் சூழ்ந்தே. 48

துரியபதங் கடந்தபெருஞ் ஜோதிவரு கின்றார்
சுகவடிவந் தரவுயிர்க்குத் துணைவர்வரு கின்றார்
பெரியபிர மாதியர்க்கு மரியர்வரு கின்றார்
பித்தரென மறைபுகலுஞ் சித்தர்வரு கின்றார்
இரிவகல்சிற் சபைநடஞ்செ யிறைவர்வரு கின்றார்
என்றுதிரு நாதவொலி யிசைக்கின்ற தம்மா
உரிமைபெறு மென்தோழி நீயுமிங்கே சின்ன
ஒலிகேட்டுக் களித்திடுவா யுளவாட்ட மறவே. 49

ஈசரென துயிர்த்தலைவர் வருகின்றார் நீவிர்
எல்லீரும் புறத்திருமி னென்கின்றே னீதான்
ஏசறவே யகத்திருந்தா லென்னெனைக் கேட்கின்றாய்
என்கணவர் வரிலவர்தா மிருந்தருளு முன்னே
ஆசைவெட்க மறியாது நானவரைத் தழுவி
அணைத்துமகிழ் வேனதுகண் டதிசயித்து கொடிப்பார்
கூசறியா ளிவளென்றே பேசுவரங் கதனைற்
கூறியதல் லதுவேறு குறித்ததிலை தோழி. 50

அரசுவரு கின்றதென்றே யறைகின்றே னீதான்
ஐபமுறே லுற்றுக்கே ளசையாது தோழி
முரசுசங்கு வீணைமுதல் நாதவொலி மிகவும்
முழங்குவது திருமேனி வழங்குதெய்வ மணந்தான்
விரசவெங்கும் வீசுவது நாசியுயிர்த் தறிக
வீதியெலா மருட்ஜோதி விளங்குவது காண்க
பரசியெதிர் கொள்ளுதுகாண் கற்பூர விளக்குப்
பரிந்திடுத்தென் னுடன்வருக தெரிந்துதித்து மகிழ்ந்தே. 51

தாழ்குழல்நீ யாண்மகன்போல் நாணமச்சம் விடுத்தே
சபைக்கேறு கின்றுயென் றுரைக்கின்றாய் தோழி
வாழ்வகையென் கணவர்தமைப் புறத்தணைந்தா ளொருத்தி
மாலெனும்பே ருடையாளோர் வஞ்சியாழிப் படையாள்
ஆழ்கடலிற் றுயில்கின்றாள் மாமணிமண் டபத்தே
ஆள்கின்று ளாண்மகனை யறிந்திலையோ வவரைக்
கேழ்வகையி லகம்புணர்ந்தே னவர்கருணை யமுதங்
கிடைத்ததுநா ணுன்மகனை கின்றததி சயமோ. 52

துடியேறு மிடையுனக்கு வந்தவிறு மாப்பென்
சொல்லென்று யாபிரமர் சுரர்முனிவர் முதலோர்
பொடியேறு வடிவுடையா ரென்கணவர் சபையின்
பொற்படிக்கீழ் நிற்பதுபெற் றப்பரிசு நிகழ்ந்தே
இடியேறு போன்றிறுமாந் திருக்கின்று ரடிநான்
எல்லாரு மதிசயிக்க வீண்டுதிருச் சபையின்
படியேறித் தலைவர்திரு வடியூறு மமுதும்
பருகுகின்றே னிறுமாக்கும் பரிசுரைப்ப தென்னே. 53

ஈற்றறியே னிருந்திருந்திங் கதிசயிப்ப தென்னீ
என்கின்றுப் பீயசீனவிட் டோகுதாறு நான்றுன்
காற்றறியாத் தீபம்போ லிருந்திடுமத் தருணங்
கண்டபரி சென்புகல்வே னண்டபகி ரண்டந்
தோற்றறியாப் பெருஞ்ஜோதி மலைபரசா தத்தே
தோன்றியதாங் கதனுடலே தோன்றியதான் றதுதான்
மாற்றறியாப் பொன்னிலையோ வவ்வொளிக்குள் ளாடும்
வள்ளலரு ளொளியோவீ ததிசயிக்கும் வகைபே. 54

நடம்புரிவார் திருமேனி வண்ணமதை நான்போய்
நன்கறிந்து வந்துனக்கு நவில்வேனென் கின்றுய்
இடம்பலமிங் கதியாசீய நீபோயென் கணவர்
எழில்வண்ணந் தெரிந்துரைப்பா யிசைமறையா கமங்கள்
திடம்படநாந் தெரிதுமெனச் சென்றுதனித் தனிபே
திருவண்ணங் கண்டனமே சிவசிவவிவன் றுங்கே
கடம்பெறுகள் ளுண்டதென மயங்குகின்ற வாறு
கண்டிலதீ யாரலுங் கேட்டிலையோ தோழி. 55

போய்பிடித்தா ரெல்லாரும் புறத்திருக்க நான்போய்ப்
பொதுநடங்கண் டளங்களிக்கும் போதுமண வாளர்
மெய்பிடித்தாய் வாழியநீ சமரசசன் மார்க்கம்
விளங்கவுல கத்திடையே விளக்குகவென் றெனது
கைபிடித்தார் நானுமவர் கால்பிடித்துக் கொண்டேன்
களித்திடுக வினியுனைநாங் கைவிடோ மென்றும்
மைபிடித்த விழியுலக மெல்லாருங் காண
மாலையிட்டோ மென்றெனக்கு மாலையணிந் தாரே. 56

பொருத்தமிலா ரெல்லாரும் புறத்திருக்க நான்போய்ப்
பொதுநடங்கண் டுவந்துநிற்கும் போதுதனித் தலைவர்
திருத்தமுற வருகணைந்து கைப்பிடித்தார் நானுந்
தெய்வமல ரடிபிடித்துக் கொண்டேன்கிக் கெனவே
வருத்தமுறே லினிச்சிறிது மயங்கேல்கா ணழியா
வாழ்வுவந்த துன்றனக்கே போழலகு மதிக்கக்
கருத்தலர்ந்து வாழியவென் றுழியளித் தெனது
கையினிற்பொற் கங்கணமுங் கட்டினர்காண் தோழி. 57

தமையறியா ரெல்லாரும் புறத்திருக்க நான்போய்ச்
சபைநடங்கண் டளங்களிக்குந் தருணத்தே தலைவர்
இமையறியா விழிபுடையா ரெல்லாருங் கான
இளநகைமங் களமுகத்தே தளதளவென் றுளிர
எமையறிந்தா யென்றெனது கைபிடித்தார் நானும்
என்னைமறந் தென்னிறைவர் கால்பிடித்துக் கொண்டேன்
சுமையறியாப் பேரறிவே வடிவாகி யழியாச்
சுகம்பெற்று வாழ்கவென்றார் கண்டாயென் தோழி. 58

ஐயமுற்ற ரெல்லாரும் புறத்திருக்க நான்போய்
அம்பலத்தே திருநடங்கண் டகங்களிக்கும் போது
மையகத்தே பொருந்தாத வள்ளலரு கணைந்தென்
மடிபிடித்தார் நானுமவ ரடிபிடித்துக் கொண்டேன்
மெய்யகத்தே நம்மைவைத்து விழித்திருக்கின் றுய்ந்தீ
விளங்குகசன் மார்க்கநிலை விளக்குகவென் றெனது
கையகத்தே வொருபசும்பொற் கங்கணமும் புனைந்தார்
கருணையினிற் றுயரனையார் கண்டாயென் தோழி. 59

காமாலைக் கண்ணார்பலர் பூமாலை விழைந்தார்
கணைங்கொண்ட கண்ணார்பலர் மணங்கொள்ளத் திரிந்தார்
கோமாலை மனச்செருக்கால் மயங்கியுடம் பெல்லாங்
குறிகொண்ட கண்ணார்பலர் வெறிகொண்டுங் கலைந்தார்
ஆமாலை யவரெல்லாங் கண்டுளதா ணுறவே
அருட்பெருஞ்ஜோ தியரென்னை விரும்பிமனம் புரிந்தார்
தேமாலை யணிகுழலாய் நான்செய்த தவந்தான்
தேவர்களோ மூவர்களுஞ் செய்திலர்கண் டறியே. 60

காமாலைக் கண்ணரென்றுங் கணக்கண்ண ரென்றுங்
கருதுபல குறிகொண்ட கண்ணரென்றும் புகன்றேன்
ஆமாலு மவ்வயனு மிந்திரனு மிவர்கள்
அன்றிமற்றைத் தேவர்களு மசையனுக்க ளான
தாமாலைச் சிறுமாயா சத்திகளா மிவர்கள்
தாமோமா மாயைவரு சத்திகளோங் காரத்
தேமாலைச் சத்திகளும் விழித்திருக்க வெனக்கே
திருமாலை யணிந்தார்சிற் சபையுடையார் தோழி. 61

மாதேகே ளம்பலத்தே திருநடஞ்செய் பாத
மலரணிந்த பாதுகையின் புறத்திதழுந்த வணுக்கள்
மாதேவ ருருத்திரர்க ளொருகோடி கோடி
வளைபிடித்த நாரணர்க ளொருகோடி கோடி
போதேயு நான்முகர்க ளொருகோடி கோடி
புரந்தரர்கள் பலகோடி யாகவுருப் புனைந்தே
ஆதேய ராகியிங்கே தொழில்புரிவா ரென்றுல்
ஐயர்திரு வடிப்பெருமை யாருரைப்பார் தோழி. 62

உருத்திரர்க ளொருகோடி நாரணர்பல் கோடி
உறுபிரமர் பலகோடி யிந்திரர்பல் கோடி
பெருத்தமற்றைத் தேவர்களு முனிவர்களும் பிறரும்
பேசிலநந் தங்கோடி யாங்காங்கே கூடித்
திருத்தமுறு திருச்சபையின் படிப்புறத்தே நின்று
தியங்குகின்றூர் நடங்காணுஞ் சிந்தையரா யந்தோ
வருத்தமொன்றுங் காணுதே நாமிருத்தி யேறி
மாநடங்காண் கின்றேனென் மாதவந்தான் பெரிதே. 63

பாருலகா திபர்புவனை திபரண்டா திபர்கள்
பகிரண்டா திபர்விபோமா திபர்முதலா பதிபர்
எருலவாத் திருப்படிக்கீழ் நின்றுவிழித் திருக்க
எனைமேலே யேற்றினர்நான் போற்றியங்கு நின்றேன்
சிருலவா யோகாந்த நடந்திருக்க லாந்தத்
திருநடநா தாந்தத்தே செயுநடம்போ தாந்தப்
பேருலவா நடங்கண்டேன் திருவமுத முணவும்
பெற்றேனுன் செய்ததவம பேருலகிற் பெரிதே. 64

என்புகல்வேன் மோழிநான் பின்னர்கண்ட காட்சி
இசைப்பதற்கும் நினைப்பதற்கு மெட்டாது கண்டாய்
அன்புறுசித் தாந்தநடம் வேதாந்த நடமும்
ஆதிநடு வந்தமில்லாச் சோதிமன்றிற் கண்டேன்
இன்பமய மாயொன்று பிரண்டாயொன் றிரண்டும்
இல்லதுவா யெல்லாஞ்செய் வல்லதுவாய் விளங்கித்
தன்பரமாம் பரங்கடந்த சமரசப்பே ரந்தத்
தனிநடமுங் கண்ணுற்றேன் றனித்தசுகப் பொதுவே. 65

தூங்குகநீ யென்கின்றுப் தூங்குவதை வெனது
துரைவருமோர் தருணமிதிற் றூக்கமுந்தான் வருமோ
ஈங்கினிநான் றனித்திருக்க வேண்டுவதா தலினல்
என்னுடைய தூக்கமெலா நின்னுடைய தாக்கி
ஏங்கலறப் புறத்தேதபோய்த் தூங்குகநீ தோழி
என்னிருகண் மணியனைய பெனையணைந்த வுடனே
ஓங்குறவே நானவரைக் கலந்தவரும் நானும்
ஒன்றுன பின்னருனை யெழுப்புகின்றே னுவந்தே. 66

ஐயமுறேல் காலையில்யாம் வருகின்றே மிதுநம்
ஆணையென்று ரவராணை யருளாணை கண்டாய்
வெய்யருளத் தேபுகுதப் போனதிரு ளிரவு
விடிந்ததுநற் சுடருதய மேவுகின்ற தருணந்
தையலினி நான்றனிக்க வேண்டுவதா தலினுல்
சற்றேயப் புறத்திருநீ தலைவர்வந்த வுடனே
உய்யவிங்கே நானவரைக் கலந்தவரு நாணும்
ஒன்றுன பின்னருனை யழைக்கின்றே னுவந்தே. 67

மன்றுடையா ரென்கணவ ரென்னுயிர்கா யகனுர்
வாய்மலர்ந்த மணிவார்த்தை மலையிலக்காந் தோழி
துன்றியபே ரிருளெல்லாந் தொலைந்ததுபன் மாயைத்
துகளொளிமா மாயைமதி யொளியொடுபோ யினவால்
இன்றருளாம் பெருஞ்ஜோதி யுதயமுற்ற ததனுல்
இனிச்சிறிது புறத்திருநீ யிறைவர்வந்த வுடனே
ஒன்றுடையே னுனவரைக் கலந்தவரு நாணும்
ஒன்றுன பின்னருனை யழைக்கின்றே னுவந்தே. 68

வைகறையீ தருளுதயந் தோன்றுகின்ற தெனது
வள்ளல்வரு தருணமினி வார்த்தையொன்று னுலும்
சைகரையே லிங்ஙனான் றனித்திருத்தல் வேண்டுந்
தாழ்குழல்நீ யாங்கேபோய்த் தத்துவப்பெண் குழுவில்
பொய்கரைபா துள்ளபடி புகழ்பேசி யிருநீ
புத்தமுத மளித்தவருட் சித்தர்வந்த வுடனே
உயகரைவாய நானவரைக கலந்தவரு நாணும
ஒன்றுன பின்னருனை யழைக்கின்றே னுவந்தே. 69

காலையிலே வருகுவரென் கணவரென்றே நினக்குக்
கழறினனு னென்னலது காதிலுற்ற திலீயோ
வேலையிலா தவள்போலே வம்பளக்கின் றுய்நீ
விடிந்ததுநான் றனித்திருக்க வேண்டுவதா தலினுல்
சோலையிலே மலர்கொய்து தொடுத்துவந்தே புறத்திற்
சூழ்ந்திருப்பாய் தோழியென்றன் தலைவர்வந்த வுடனே
ஓலையுறு தியானவரைக் கலந்தவரு நாணும்
ஒன்றுன பின்னருனை யழைக்கின்றே னுவந்தே. 70

விடிந்ததுபே ராணவமாங் காரிருணீங் கியது
வெய்யவினைத் திரளெல்லாம் வெந்ததுகாண் மாயை
ஒடிந்ததுமா மாயையொழிந் ததுதிரைதீர்ந் ததுபே
ரொளியுதயஞ் செய்ததினித் தலைவர்வரு தருணந்
திடம்பெறநான் றனித்திருக்க வேண்டுவதா தலினுல்
தேமொழிநீ புறத்திருமா தேவர்வந்த வுடனே
உடம்புறவே நானவரைக் கலந்தவரு நாணும்
ஒன்றுன பின்னருனை யழைக்கின்றே னுவந்தே. 71

நான்றெடுக்கு மாலையிது பூமாலை யெனவே
நாட்டார்கள் முடிமேலே நாட்டார்கள் கண்டாய்
வான்றெடுக்கு மறைதொடுக்கு மாகமங்கள் தொடுக்கு
மற்றவையே யணிவார்கள் மதத்துரிமை யாலே
தான்றெடுத்த மாலையெலாம் பரத்தைதர்தோண் மாலை
தனித்திடுமென் மாலையருட் சபைநடுவே நடிக்கும்
ஊன்றெடுத்த மலர்களன்றி வேறுகுறி யாதை
ஓங்குவதா தலிலவைக்கே யுரித்தாகுந் தோழி. 82

வான்கொடுத்த மணிமன்றிற் றிருநடனம் புரியும்
வள்ளலெலாம் வல்லவர்நன் மலரெடுத்தென் னுளத்தே
தான்கொடுக்க நான்வாங்கித் தொடுக்கின்றே னினதனத்
தலைவர்பிற ரணிகுவரோ வுணர்தரந்தா முளரோ
தேன்கொடுத்த சுவைபோலே தித்தித்தென் னுளத்தே
திருக்கூத்துக் காட்டுகின்ற திருவடிக்கே யுரித்தாம்
யான்கொடுக்கும் பரிசுத்த மாலைமட்டோ தோழி
என்னுயி யுடல்பொருளுங் கொடுத்தனனுள் ளிசைந்தே. 83

என்மாலை மாத்திரமோ யார்மாலை யெனினும்
இறைவரையே யிலக்கியமா யிசைப்பதனி லவைதாம்
நன்மாலை யாகுமந்தச் சொன்மாலை தனக்கே
நானடிமை தந்தனம்பல் வந்தனஞ்செய் கின்றேன்
புன்மாலை பலபலவாய்ப் புகல்கின்ற தம்மா
பொய்புகுந்தாற் போற்செவியிற் புகுந்தாறுந் தனித்தே
வன்மாலை கோய்கைபுமே கேட்டிடவும் படிதோ
மன்முடி பதட்பாடி நின்முடி மவர்க்கே. 84

உரியபெருந் தனித்தலைவ ரோங்குசடாந் தத்தின்
உட்புறத்து மப்புறத்து மொருசெங்கோற் செலுத்துந்
துரியர்துரி யங்கடந்த சுகசொருபர் பொதுவிற்
சுத்தநடம் புரிகின்ற சித்தரடிக் கழலே
பெரியபதத் தலைவரெலாம் நிற்குநிலை யிதுவோர்
பெண்ணுரையென் றெள்ளுதியோ கொள்ளுதியோ தோழி
அரியபெரும் பொருண்மறைக ளாகமங்க ளுரைக்கும்
ஆணையுமிங் கிதிதற்கோ சையமிலை யறிவே. 85

மதமெனும்பேய் பிடித்தாட்ட வாடுகின்றே ரெல்லாம்
மன்றிடத்தே வள்ளல்செயு மாநடங்காண் குவரோ
சதமெனவே யிருக்கின்றார் படுவதறிந் திலரே
சாகாத கல்விகற்குந் தரமிவர்க்கு முளதோ
பதமறியா யிந்தமத வாதிகளோ சிற்றம்
பலநடங்கண் டுய்ந்தேனைச் சிலடுகன்றே ரென்றுப்
புதமொழிநீ யன்றுசொன்ன வார்த்தையன்றே வின்று
தோத்திரஞ்செய் தாங்காங்கே தொழுகின்றார் காணே. 86

எவ்வுலகி லெவ்வெவர்க்கு மரும்பெருஞ்ஜோ தியரே
இறைவரென்ப தறியாதே யிம்மதவா திகடாங்
கவ்வைபெறு குருடர்கரி கண்டகதை போலே
கதைக்கின்றார் சாகாத கல்விநிலை யறியார்
நவ்விவிழி யாயிவரோ சிலபுகன்று ரென்றுய்
ஞானநடங் கண்டேன்மெய்த் தேனமுத முண்டேன்
செவ்வைபெறு சமரசசன் மார்க்கசங்கத் தனிலே
சேர்ந்தேதனத் தினமோழியுந் தேமொழியா யினவே. 87

பெருகியபே ரருளுடையா ரம்பலத்தே நடிக்கும்
பெருந்தகையின் கணவர்திருப் பேர்புகலென் கின்றுய்
அருகர்புத்த ராதியென்பேன் அபனென்பேன் நாரா
யணனென்பேன் ஆனென்பேன் ஆதிசிவனென்பேன்
பருகுசதா சிவமென்பேன் சத்திசிவ மென்பேன்
பரமமென்பேன் பிரமமென்பேன் பரப்பிரம மென்பேன்
துருவுசுத்த பிரமமென்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவ மென்பணிவை சித்துவிளை யாட்டே. 88

சிற்சபையில் நடிக்கின்ற நாயகனர் தமக்குச்
சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ வென்றுய்
பிற்சமயத் தார்பெயரு மவர்பெயரே கண்டாய்
பித்தரென்றே பெயர்படைத்தார்க் கெப்பெரொவ் வாதோ
அச்சமயத் தேவர்மட்டோ நின்பெயரென் பெயரும்
அவர்பெயரே பெவ்வுயிரின் பெயருமவர் பெயரே
சிற்சபையி லென்கணவர் செப்புமொரு ஞானத்
திருக்கூத்துக் கண்டளவே தெளிபுமிது தோழி. 89

எப்பொருட்கு மெவ்வுயிர்க்கு முள்ளகத்தும் புறத்தும்
இயலுண்மை யறிவின்ப வடிவாகி நடிக்கும்
மெய்ப்பொருளாஞ் சிவமொன்றே யென்றறிந்தே னுனக்கும்
விளம்புகின்றேனன் மடவாய்நீ கிளத்துகின்றுய்ப் பீட்டும்
இப்பொருளப் பொருளென்றே யிசைப்பதென்னை பொதுவில்
இறைவர்செபு நிரதிசய வின்பநடங் தனைநீ
பப்பறவே காணுதியே லத்தருணத் தெல்லாம்
பட்டதுப்ப கல்போல வெட்டவெளி யாமே. 90

காணுத காட்சியெலாங் காண்கின்றேன் பொதுவில்
கருணைநடம் புரிகின்ற கணவரையுட் கலந்தேன்
கோணுத மேனிலைமே லின்பவனு பவத்திற்
குறையாத வாழ்வடைந்தேன் சூழ்வணத்துந் தவிர்ந்தேன்
நாணுநந் திருப்பொதுவில் நடம்பாடிப் பாடி
நயக்கின்றே னற்றவரும் வியக்கின்ற படிபே
மாணுகம் பொன்னுக மாகவரம் பெற்றேன்
வள்ளலருள் நோக்கடைந்தேன் கண்டாயென் றோழி. 91

சாதிசம யங்களிலே வீதிபல வகுத்த
சாத்திரக்குப் பைகளெல்லாம் பாத்திரமன் றெனவே
ஆதியிலென் னுளத்திருந்தே யறிவித்த படியே
அன்பாலின் றுண்மைநிலை யறிவிக்க வறிந்தேன்
ஓதியுணர்ந் தோர்புகழுஞ் சமரசசன் மார்க்கம்
உற்றேன்சிற் சபைகாணப் பெற்றேன்மெய்ப் பொருளாஞ்
ஜோதிகடத் தரசையென்ற னுயிர்க்குயிராம் பதியைச்
சுத்தசிவ நிறைவையுள்ளே பெற்றுமகிழ்ந் தேனே. 92

சரியைநிலை நான்கு மொரு கிரியைநிலை நான்குந்
தனியோக நிலைநான்குந் தனித்தனிகண் டறிந்தேன்
உரியசிவ ஞானநிலை நான்குமரு ளொளியால்
ஒன்றுரண்டு வறிந்தேன்மே லுண்மைநிலை பெற்றேன்
அரியசிவ சித்தாந்த வேதாந்த முதலாம்
ஆறந்த நிலையறிந்தே னப்பால்நின் றோங்கும்
பெரியசிவ வனுபவத்தாற் சமரசசன் மார்க்கம்
பெற்றேனிங் கிறவாமை யுற்றேன்காண் தோழி. 93

நான்பசித்த போதெல்லாந் தான்பசித்தா ராகி
நல்லதிரு வமுதளித்தே யல்லல்பசி தவிர்த்தே
ஊன்பதித்த வெண்ணுடைய வுளத்தேதம் முடைய
உபயபதம் பதித்தருளி யபயமெனக் களித்தார்
வான்பதிக்குங் கிடைப்பரியார் சிற்சபையில் நடிக்கு
மணவாள ரென்னைப்புணர்ந்த புறப்புணர்ச்சித் தருணம்
தான்பதித்த பொன்வடிவந் தனையடைந்து களித்தேன்
சாற்றுமகப் புணர்ச்சியிலு மேற்றமுரைப் பதுவே. 94

துருவுபர சாக்கிரத்தைக் கண்டுகொண் டேன்பர ம
சொற்பனங்கண் டேன்பரம சுழுத்தியுங்கண் டுணர்ந்தேன்
குருபிரம சாக்கிரத்தைக் கண்டேன்பின் பிரமங்
குலவியசொற் பனங்கண்டேன் சிவசுழுத்தி கண்டேன்
குருதுரியங் காண்கின்றேன் சமரசசன் மார்க்கங்
கூடினேன் பொதுவிலுருட் கூத்தாடுங் கணவர்
மருவிடப்பெற் றவர்வடிவ நானுனேன் களித்து
வாழ்கின்றே னெதிரற்ற வாழ்க்கையிலென் றோழி. 95

தனிப்படுமோர் சுத்தசிவ சாக்கிரநன் னிலையில்
தனித்திருந்தேன் சுத்தசிவ சொற்பனத்தே சார்ந்தேன்
கனிப்படுமெய்ச் சுத்தசிவ சுழுத்தியிலே களித்தேன்
கலந்துகொண்டேன் சுத்தசிவ துரியநிலை யதுவாய்ச்

சனிப்பிலதா யெல்லாமா யல்லதுவாஞ் சுத்த
சிவதுரியா தீதத்தீத சிவமயமாய் நிறைந்தேன்
இனிப்புறுசிற் சபையிறையைப் பெற்றபரி சதனுல்
இத்தனையும் பெற்றிங்கே யிருக்கின்றேன் றோழி. 96

அருட்ஜோதித் தலைவரெனக் கன்புடைய கணவர்
அழகியபொன் மேனியைநான் றழுவிநின்ற தருணம்
இருட்சாதி தத்துவங்க ளெல்லாம்போ யினவால்
எங்கணும்பே ரொளிமயமா யிருந்தனவாங் கவர்தாம்
மருட்சாதி நீக்கியணைப் புணர்ந்தவாரு தருணம்
மன்னுசிவா னந்தமய மாகினிறை வுற்றேன்
தெருட்சார்பி லிருந்தோங்கு சமரசசன் மார்க்கத்
திருச்சபைக்கண் ணுற்றேனென் றிருக்கணைவ ருடனே. 97

புறப்புணர்ச்சி யென்கணைவர் புரிந்ததரு ணந்தான்
புத்தமுத நானுண்டு பூரித்த தருணம்
சிறப்புணர்ச்சி மயமாகி யகப்புணர்ச்சி யவர்தாஞ்
செய்ததரு ணைச்சுகத்தைச் செப்புவதெப் படியோ
பிறப்புணர்ச்சி விடயமில்ல சுத்தசிவா னந்தப்
பெரும்போகப் பெருஞ்சுகந்தான் பெருகியெங்கு நிறைந்தே
மறப்புணர்ச்சி யில்லாதே நானதுவா யதுவென்
மயமாய்ச்சின் மயமாய்த்தன் மயமான நிலையே. 98

தாயினும்பே ரருளுடையா ரென்னுயிரிற் கலந்த
தனித்தலைவர் நான்செய்பெருந் தவத்தாலே கிடைத்தார்
வாயினுமோர் மனத்தினுமா மதியினுமெத் திறத்தும்
மதித்தளத்தற் கருந்துரிய மன்றினடம் புரிவார்
ஆயினுமென் னளவின்மிக வெளியரென வெண்ணே
அகம்புணர்ந்தார் புறம்புணர்ந்தார் புறப்புணர்ச்சித் தருணம்
தூயவொளி பெற்றழியா தோங்குவடி வானேன்
சுகமயமா மகப்புணர்ச்சி சொல்லுவமெப் படியோ. 99

அறியாத பருவத்தே பென்ணைவலிந் தழைத்தே
ஆடல்செயுந் திருவடிக்கே பாடல்செயப் பணித்தார்
செறியாத மனச்சிறியேன் செய்தபிழை யெல்லாந்
திருவிளையாட் டெனக்கொண்டே திருமாலை யணிந்தார்
பிறியாம லென்னுயிரிற் கலந்துகலந் தினிக்கும்
பெருந்தலைவர் நடராய ரெனைப்புணர்ந்தா ரருளாம்
அறிவாளர் புறப்புணர்ச்சி யெனையழியா தோங்க
அருளியதீண் டகப்புணர்ச்சி யளவுரைக்க லாமே. 100

அருட்பெருஞ்ஜோதி

83. வரம்பிலின்பம்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

திருவாளர் கனகசபைத் திருநடஞ்செய் தருள்வார்
தேவர்சிகா மணியெனக்குத் திருமாலை கொடுத்தார்
உருவாள ருருவாகி யொளியாகி வெளியாய்
ஓங்குகின்ற ரென்னுடைய வுயிர்த்துணைவ ரவர்தம்
பெருவாய்மைத் திறஞ்சிறிதும் பேசமுடி யாதே
பேசுவதார் மறைகளெலாங் கூசுகின்ற வென்றூல்
துருவாம லிங்கெனக்குக் கிடைத்ததையென் சொல்வேன்
சொல்லளவல் லாதசுகந் தோன்றுவதென் தோழி. 1

அருளாளர் பொற்பொதுவி லற்புதநா டகஞ்செய்
ஆனந்த வண்ணரெனை யாளுடையார் சிறியேன்
தெருளாத பருவத்தே தெருட்டிமனம் புரிந்த
சீராள ரவர்பெருமைத் திறத்தையெவர் புகல்வார்
மருளாத வாகமங்கண் மாமறைக ளெல்லாம்
மருண்டனவே யென்னடியென் மனவாக்கி னளவோ
இருளாமை யென்றுறுமோ வன்றுசிறி துரைப்பேன்
என்னவுநா னீர்ப்பதிதற் கென்புரிவேன் தோழி. 2

செம்பவளத் திருமலையே மாணிக்க விளக்கே
செழுஞ்ஜோதித் தனிப்பிழம்பே செவ்வண்ணத் திரளே
அம்பதுமத் திருவிளங்கு மகலத்தான் பிரமன்
அண்முதலோ ரைவர்களும் மப்பால்நின் றேருந்
தம்பரமென் றெம்பெருமான் புறவண்ண மெதுவே
என்பாரே லகவண்ணம் யாருரைக்க வல்லார்
தம்பரமென் றென்னையன்று மணம்புரிந்தார் கனக
சபைநாத ரவர்பெருமை சாற்றுவதென் தோழி. 3

தேவர்களோ சித்தர்களோ சிவன்முத்தர் தாமோ
சிறந்தமுனித் தலைவர்களோ செம்பொருள்கண் டோரோ
மூவர்களோ வறுவர்களோ முதற்சத்தி யவளோ
முன்னியநம் பெருங்கணவர் தம்மிபலை புணர்ந்தோர்
யாவர்களு மல்லவென்றூல் யாணுணர்ந்து சொல்ல
வமைபுமோ வொருசிறிது மமைபாது கண்டாய்
ஆவலொடு மன்பர்தாழக் கனகசபை நடிப்பார்
அவர்பெருமை பெவ்விதத்து மவரறிவார் தோழி. 4

பதியுடையார் கனகசபா பதியெனும்பே ருடையார்
பணைப்பரித்த வரையரென்னை மணம்புரிந்த கணைவர்
விதியுடையா ரேத்தநின்ற துதிபுடையார் ஞான
விளக்கனைய மெய்புடையார் வெய்யவினை யறுத்த
மதியுடையார் தமக்கருளும் வண்கைபெரி துடையார்
மங்கைசிவ காமவல்லி மணவாளர் முடிமேல்
நதியுடையா ரவர்பெருமை மறைக்குமிமட்டா தென்றுல்
நானுரைக்க மாட்டுவனே நவிலாயென் தோழி. 5

வெடித்தளிந்த முக்கனியின் வடித்தரசந் தனிலே
விரும்புறநின் றேங்கிபசெங் கரும்பிரதங் கலந்து
தடித்தசெழும் பாற்பெய்து கோற்றேன்விட் டதனைத்
தனித்தபரா வழுதத்திற் றுன்கலத்துண் டாற்போல்
இடித்திடித்தென் னுளமுழுதுந் தித்திக்கும் வாத்தை
இனிதுரைத்து மணமபுரிந்த வென்னுயிர்நா யகர்வான்
பொடித்திருமே னிடர்கடனம் புரிந்தின்று ரவர்தம்
புகழுரைக்க வல்லேனே வல்லேன்காண் தோழி. 6

திருச்சிற்றம் பலத்தின்பத் திருவுருக்காண் டருளாந்
திருநடஞ்செய் தருளுகென்ற திருவடிக ளிரண்டும்
அருச்சிக்கும் பேரன்ப ரறிவின்கண் ணறிவாய்
அவ்வறிவில் விளைந்தசிவா னந்தவமு தாகி
உருச்சிக்கும் பரநாதத் தலங்கடந்தப் பாற்சித்
துருவுகடந் திருக்குமென வுணர்ந்தோர்சொல் வாசேல்
பெருச்சித்தல் லாடவல்ல நடராஜப் பெருமான்
டெருமையையாம் பேசுவதென் பேசாயென் தோழி. 7

நாதவரை சென்றுமறை போரனந்தங் கோடி
நாடியினைத் திருந்தனவா கடங்கள் பரநாத
போதவரை போந்துபல முகங்கொண்டு தேடிப்
புணர்ப்பறியா திருந்தனவென் றறிஞர்புகல் வாசேல்
பாதவரை வெண்ணீறு படிந்திலங்கச் சோதிப்
படிவமெடுத் தம்பலத்தே பாதநடம் புரியும்
போதவரைக் காண்பதலா லவர்பெருமை யென்னுல்
புகலவச மாமோநீ புகலாயென் தோழி. 8

பரையிருந்த வெளிமுழுதும் பரவியப்பாற் பரையின்
பரமாகி யப்பரத்திற் பரம்பரமாய் விளங்கித்
திரைகடந்த திருவெளியி லானந்தா தீதத்
திருநடஞ்செய் யாதுசெயுந் திருவடிக ளென்றே
புரைகடந்தோர் புகல்கின்றூர் கேட்கின்றே மென்றுல்
புண்ணியரென் தனித்தலைவர் புனிதநட ராஜர்
வரைகடந்த திருத்தோண்மேற் றிருநீற்ற ரவர்தம்
வாய்மைசொல வல்லேனே வல்லேன்காண் தோழி. 9

ஏய்ப்பந்தி வண்ணமென்றும் படிகவண்ண மென்றும்
இணையிலொளி புருவமென்று மியலருவ மென்றும்
வாய்ப்பந்த லிடுவதன்றி யுண்மைசால வல்லார்
மண்ணிடத்தும் விண்ணிடத்து மற்றிடத்து மிலையே
காய்ப்பந்த மாமென்று கண்டுசால்வ தன்றிக்
காய்த்தவண்ணம் பூத்தவண்ணங் கண்டுகாண மாட்டா
தாய்ப்பந்த வுணர்வுடையேன் யானுஞ்சிற் சபையில்
தனிமுதல்வர் திருவண்ணஞ் சாற்றவல்லேன் தோழி. 10

கலைக்கடலைக் கடந்தமுனிக் கணங்களுமும் மலமாங்
கரிசகன்ற யோகிகளுங் கண்டுகாண மாட்டா
தலைக்கடலிற் புரும்பாகி யலைகின்றார் மன்றுள்
ஆடுகின்ற தென்பதலா லவர்வண்ண மதுவும்
நிலைக்குரிய திருச்சபையின் வண்ணமுமச் சபைக்கண்
நிருத்ததத்தின் வண்ணமுமிந் நீர்மையன வென்றே
மலைக்குநிறை கண்டாலுங் காணவொணா தம்ம
வாய்ப்பதர்கள் தூற்றுவதில் வரும்பயனென் தோழி. 11

சிதமலரோ சுகமலரும் பரிமளிக்க வோங்குந்
திருச்சிற்றம் பலநடமே திருநடனம் புரியும்
பதமலரோ பதமலரிற் பாதுகையோ வலைபயிற்
படிந்ததிருப் பொடியோவப் பொடிபடிந்த படியோ
இதமலரு மப்படிமே லிருந்தவரோ வவர்தேர்
இசைத்தவருங் கேட்டவரு மிலங்குமுத்த ரென்றுல்
நிதமலரு நடராஜப் பெருமானன் னவர்
நிலையுரைக்க வல்லாரார் நிகழ்த்தாயென் தோழி. 12

சுத்தமுற்ற வைம்பூத வெளிகரண வெளிமேல்
துலங்குவெளி துரியவெளி சுகவெளியே முதலாம்
இத்தகைய வெளிகளுள்ளே யெவ்வெளியோ நடனம்
இயற்றுவெளி யென்கின்ற ரென்றலவ் வெளிபில்
நித்தபரி பூரணமா யானந்த மயமாய்
நிருத்தமிடு மெம்பெருமா னிபுணநட ராயன்
சித்துருவாந் திருவடியி லுண்மைவண்ண மறிந்து
செப்புவதா ரென்வசமோ செப்பாயென் தோழி. 13

காற்றுருவோ கனலுருவோ கடவுளுரு வென்பார்
காற்றுருவுங் கனலுருவுங் கண்டுரைப்பீ ரென்றுல்
வேற்றுருவே புகல்வரதை வேறுரென்றுல் மறுத்தால்
விழித்துவிழித் தெம்போல்வார் மிகவுமருள் கின்றார்
தோற்றுமந்தத் தத்துவமுந் தோற்றுத்தத் துவமுந்
தூரசாக வலைகடந்த சுகசொரூ பமாகி
மாற்றமன வுணர்வுசெல்லாத் தலத்தாடும் பெருமான்
வடிவுரைக்க வல்லவரார் வழுத்தாயென் தோழி. 14

நாதமட்டுஞ் சென்றனமேற் செல்லவழி யறியேம்
நவின்றபர விந்துமட்டும் நாடினமே லறியேம்
ஏதமிலாப் பரநாத வெல்லைமட்டுஞ் சென்றேம்
இனிச்செல்ல வழிகாணை மிலங்குபெரு வெளிக்கே
ஆதரவிற் சென்றனமேற் செல்லவழி தெரியேம்
அம்மம்ம வென்றுமறை யாகமங்க ளெல்லாம்
ஓதுகின்ற திருநடனப் பெருமானுர் வடிவின்
உண்மைசால வல்லவரா ருரையாயென் தோழி. 15

தோன்றுசத்தி பலகோடி யளவுசால வொண்ணு
தோற்றுசத்தி பலகோடி தொகையுரைக்க முடியா
சான்றுலகந் தோற்றுவிக்குஞ் சத்திபல கோடி
தனைவிளம்ப லாகாவச் சத்திகளைக் கூட்டி
வன்றவகை விடுக்கின்ற சத்திபல கோடி
இத்தனைக்கு மதிகாரி யென்கணவ ரென்றுல்
ஆன்றமணி மன்றிலின்ப வடிவாகி நடிக்கும்
அவ்பெருமை யெவருரைப்பா ரறியாயென் தோழி. 16

தோற்றமொன்றே வடிவொன்று வண்ணமொன்று விளங்குஞ்
ஜோதியொன்று மற்றதனிற் றுலங்குமிய லொன்றே
ஆற்றவதிற் பரமாய வணுவொன்று பகுதி
அதுவொன்று பகுதிக்குள் ளமைந்தகரு வொன்று
ஏற்றமிக்க வக்கருவுட் சத்தியொன்று சத்திக்
கிறையொன்று மித்தனைக்கு மெங்கணவ ரல்லால்
ஆற்றமற்றே ரதிகாரி யில்லையடி மன்றில்
ஆடுமவர் பெருந்தகைமை யாருரைப்பார் தோழி. 17

ஒருமைபெறு தோற்றமொன்று தத்துவம்பல் வேறு
ஒன்றினிய லொன்றிடத்தே யுற்றிலவிங் கிவற்றை
இருமையினு மும்மைமுத லெழுமையினுங் கூட்டி
இலங்கியசிற் சத்திகடி விரண்டொன்றென் றுத
பெருமைபெற்று விளக்கவதி னடுவருணின் றிலங்கப்
பெரியவரு ணடுநின்று துரியகடம் புரியும்
அருமையெவர் கண்டுகொள்வ ரவர்பெருமை யவரே
அறியாரே யென்னடிநீ யறைந்தவண்ணந் தோழி. 18

படைத்தபடைப் பொன்றதிலே பரமதிற்கா ரணமாம்
பகுதியதிற் பகுக்கின்ற பணிகள்பல பலவாம்
புடைத்தவவை புகுந்துலவும் புரமொன்றப் புரத்திற்
பூபதியொன் றவர்க்குணர்த்தும் பூரணசித் தொன்று
மிடைத்தவிவை யெல்லாஞ்சிற் றம்பலத்தே நடிக்கும்
என்பதத்தோர் சிற்றிடத்து விளங்கநிலை பெறவே
அடைத்துமற்றிவ் வினைக்கெல்லா மப்புறத்தே நிற்பார்
அவர்பெருமை யெவரறிவா ரறியாப்பே தோழி. 19

சிருட்டியொன்று சிற்றணுவிற் சிறிததனிற் சிறிது
சினைத்தகர ணைக்கருவச் சினைக்கருவிற் சிறிது
வெருட்டியமா னம்மானிற் சிறிதுமதி மதியின்
மிகச்சிறிது காட்டுகின்ற வியன்சுடரொன் றதனில்
தெருட்டுகின்ற சத்திமிகச் சிறிததனிற் கோடித்
திறத்தினிலோர் சிறிதாகுந் திருச்சிற்றம் பலத்தே
அருட்டிறத்தி னடிக்கின்ற வெண்ணுடைய தலைவர்
அருட்பெருமை யெவருரைப்பா ரறியாயென் தோழி. 20

நான்முகர்கள் மிகப்பெரிய ராங்கவரிற் பெரியர்
நாரணர்கள் மற்றவர்க ணுடன்மிகப் பெரியர்
வான்முகத்த வருத்திரர்கள் மற்றவரிற் பெரியர்
மயேச்சுரர்கள் சதாசிவர்கள் மற்றவரிற் பெரியர்
மீன்முகத்த விந்ததனிற் பெரிததனில் நாத
மிகப்பெரிது பரையதனில் மிகப்பெரிய ளவளின்
ஆன்முகத்திற் பரம்பரந்தான் பெரிததனிற் பெரிதாய்
ஆடுகின்ற சேவடியா ரறிவார்காண் தோழி. 21

மண்ணனந்தங் கோடியள வுடையதுநீ ரதனில்
வயங்கியநூற் றொருகோடி மேலதிகம் வன்னி
எண்ணியவா யிரமயுதங் கோடியின்மே லிலக்கம்
எண்பத்து நான்கதின்மே லதிகம்வளி யொடுவான்
விண்ணளவு மூலமுயிர் மாமாயை குடிலை
விந்தளவு சொலமுடியா திந்தவகை யெல்லாம்
அண்ணலடிச் சிறுநகத்திற் சிற்றகத்தா மென்றால்
அவர்பெருமை யெவருரைப்பா ரறியாய்நீ தோழி. 22

மண்ணுதி யைம்பூத வகையிரண்டி னொன்று
வடிவுவண்ணா தியற்கையொரு வாலணுச்சத் தியலாய்க்
கண்ணெண்ணு மூணர்ச்சிசொலாக் காட்சியவாய் நிற்பக்
கருதுமவைக் குட்புறங்கீழ் மேற்பக்க நடுவில்
நண்ணியொரு மூன்றைந்து நாலொடுமூன் றெட்டாய்
நவமாகி மூலத்தி னவின்றசத்திக் கெல்லாம்
அண்ணுறுமா தாரசத்திகொடுத் தாடும்
அடிப்பெருமை யாரறிவா ரவரறிவார் தோழி. 23

மண்பூத முதற்சத்தி வாலணுவி னணுவாய்
மதித்தவத னுள்ளொளியா யவ்வொளிக்குள் ளொளியாய்
எண்பூதத் தவ்வொளிக்குள் ளிலங்குவெளி யாயவ்
வியல்வெளிக்கு ளொருவெளியா யிருந்தவெளி நடுவே
பண்பூத நடம்புரியும் பதப்பெருமை யெவரும்
பகுத்துணர முடியாதேற் பதமலரென் தலைமேல்
நண்பூற வைத்தருளு நடராஜப் பெருமான்
நல்லசெயல் வல்லபமார் சொல்லுவர்காண் தோழி. 24

வண்கலப்பிற் சந்திசெயுஞ் சத்தியுளே யொருமை
வயங்கொளிமா சத்தியத னுள்ளொருகா ரணமாம்
விண்கரணை சத்தியத னுட்டூலமை யாக
விளங்குகுருச் சத்தியதின் மெய்ம்மைவடி வான
எண்குணமா சத்தியிச்சச் சத்திதனக் குள்ளே
இறையாகி யதுவதுவா யிலங்கிநடம் புரியுந்
தண்கருணைத் திருவடியின் பெருமையறி வரிதேற்
சாமிதிரு மேனியின்சீர் சாற்றுவதென் தோழி. 25

பெரியவெனப் புகல்கின்ற பூதவகை யெல்லாம்
பேசுகின்ற பகுதியிலே வீசுகின்ற சிறுமை
உரியபெரும் பகுதியுடப் பகுதிமுதற் குடிலை
உளங்கொள்பரை முதல்சத்தி யோகமெலாம் பொதுவில்
துரியநடம் புரிகின்ற ஜோதிமலர்த் தாளில்
தோன்றியதோர் சிற்றசைவாற் றோன்றுகின்ற வென்றூல்
அரியபெரும் பொருளாக நடிக்கின்ற தலைவர்
அருட்பெருமை யென்னளவோ வறியாயென் தோழி. 26

பொன்வண்ணப் பூதமுதற் றன்மையுண்மை யகத்தே
பொற்புறமாக் கருவிளக்கம் பொருந்தவெண்மை செம்மை
தன்வண்ணப் பசுமையொடு கருமைகலப் பாகுந்
தன்மையினிற் றன்மையதாய்த் தனித்ததற்கோர் முதலாய்
மன்வண்ணத் தொளியுருவ முயிர்ப்பினிலுடு தோன்ற
வாலணுக்கூட் டங்களெலாவ் வகைநிறுவி நடத்தும்
மின்வண்ணத் திருச்சபையி லாடுகின்ற பதத்தின்
மெய்வண்ணம் புகலுவதார் விளம்பாயென் தோழி. 27

பொற்புடைய வைங்கருவுக் காதார காரணம்
புகன்றவறு கோடியவைக் காறிலக்க மவற்றுக்
கற்புறுமோ ரறுபதிரு யிரமவற்றுக் கடையா
முயிரமாங் கவற்றுக்கோ ரறுநூறுங் கிலைக்கே
விற்பொலிபு மறுபதுமற் றிலைக்காறுங் கிந்த
வியன்கரண சத்திகளை விரித்துவிளக் குவதாய்ச்
சிற்பரமா மணிமன்றிற் றிருநடனம் புரியுந்
திருவடியின் பெருமையெவர் செப்புவர்காண் தோழி. 28

எற்றமுறு மைங்கருவுக் கியல்பகுதிக் காரணம்
எழுகோடி யீங்கிவற்றுக் கேழிலக்க மிலைக்கே
தோற்றமுறு மெழுபதிரு யிரமிவற்றுக் கெழுமை
துன்னியநூ றிவற்றினுக்குச் சொல்லுமெழு பதுதான்
ஆற்றலுறு மிலைதமக்கோ ரேழாமிக் காணம்
அனைத்தினையுந் தனித்தனியே தோற்றிநிலை பொருத்திச்
சாற்றரிய வடிவுவண்ணஞ் சுவைப்பயனுண் டாக்குஞ்
சாமிதிரு வடிப்பெருமை சாற்றுவதார் தோழி. 29

விளங்கியவைங் கருச்சத்தி யோரனந்தங் கருவில்
விளைகின்ற சத்திகளோ ரனந்தவிளை வெல்லாம்
வளம்பெறவே தருகின்ற சத்திகளோ ரனந்த
மாண்படையத் தருவிக்குஞ் சத்திகளோ ரனந்தம்
உளங்கொளநின் றதிட்டிக்குஞ் சத்திகளோ ரனந்தம்
ஓங்கியவிச் சத்திகளைத் தனித்தனியே யிபக்கித்
தளங்கொளவின் டவ்வவற்றிற் குட்புறநின் மிருளிருஞ்
சாமிதிரு வடிப்பெருமை சாற்றுவதார் தோழி. 30

காணுகின்ற வைங்கருவின் வித்தினியல் பலவுங்
கருதுறுமங் குரத்தினியல் பற்பலவு மடியின்
மாணுகின்ற வியல்கள்பல பலப்பலவு நடுவில்
மன்னுமியல் பலபலவும் பலப்பலவும் முடியிற்
பூணுமிய லனந்தவகை புரிந்தபல பலவும்
பொருந்துவதா யவ்வவற்றின் புணர்க்கையுந்தா னெ
ணுகின்ற வலைகளுக்குட் பற்றுமனடிக்கும்
எழிற்கருணைப் பதப்பெருமை யியம்புவதார் தோழி. 31

மண்முதலாந் தத்துவத்திற் றன்மைபல கோடி
வயங்குசத்திக் கூட்டத்தால் வந்தனவோ ரனந்தம்
பண்ணுறுமத் திண்மையுளே திண்மையொரு கோடி
பலித்தசத்திக் கூட்டத்தாற் பணித்தனவோ ரனந்தம்
எண்ணுறுமித் திண்மைகளு மிவற்றினது விகற்பம்
எல்லாமுந் தனித்தனியின் றிலங்குநிலை புரிந்தே
விண்ணான்னும் படியவற்றிற் கலந்துகல வாது
விளையாடு மடிப்பெருமை விளம்புவதார் தோழி. 32

விண்ணிடத்தே முதன்மூப்பு விரியவதி லொருபூ
விரியவதின் மற்றொருபூ விரிந்திடவிவ் வைம்பூக்
கண்ணிடத்தே பிறிதொருபூ கண்மலர வதிலே
கட்டவிழ வேறொருபூ விட்டவிழ பூவும்
பெண்ணிடத்தே நான்காகி யாணிடத்தே மூன்றாய்ப்
பிரிவிலையாய்ப் பிரிவுளவாய்ப் பிறங்கியுடல் கரணம்
நண்ணிடத்தார்ந் திபற்றியதில் நடுநின்று விளங்கும்
நல்லதிரு வடிப்பெருமை சொல்லுவதார் தோழி. 33

வண்பூவில் வடிவுபல வண்ணங்கள் பலமேல்
மதிக்குமியல் பலவொளியின் வாய்மைபல வொளிக்குள்
நண்பூறுஞ் சத்திபல சத்திகளுள் வயங்கும்
நாதங்கள் பலநாத நடுவணையோர் கலையில்
பண்பாய நடங்கள்பல பலபெயர்ப்புங் காட்டும்
பதிகள்பல விவைக்கெல்லாம் பதியாகிப் பொதுவில்
கண்பாய விவற்றினெடு கலந்துகல வாமற்
காணுகின்ற திருவடிச்சீர் கழறுவதார் தோழி. 34

ஓங்கியவைம் பூவினைக்கு ளொன்றினொன்று திண்மை
உற்றனமற் றதுவதுவும் பற்றுவன பற்றத்
தாங்கியமா சத்திகளின் பெருங்கூட்டங் கலையாத்
தண்மைபுரிந் தாங்காங்குத் தனித்தனிகின் றிலங்கித்
தேங்கியபோ தவைகலையச் செய்கைபல புரிந்து
திகழொளியா யருள்விளியாய்த் திற[1] விலொளி வெளியில்
பாங்குறநேர் விளங்குகின்ற திருவடியின் பெருமை
பகுத்துரைக்க வல்லவரார் பகராயென் தோழி. 35

விரிந்திடுமைம் கருவினிலே விடயசத்தி யனந்த
விதமுகங்கொண் டிலகவவை விகிதவிகற் பாகிப்
பிரிந்திடுமா னிலக்கணைங்கள் பலகோடி பிரியாப்
பெருஞ்சத்தி யிலக்கணைங்கள் பற்பலகோ டிகளாய்த்
தெரிந்திடா னிலைக்குள்ளே யிருந்துவிளிப் படவுஞ்
செய்கைபல புரிகின்ற திறலுடைத்தா ரகமேல்
எரிந்திடுதீ நடுவிளிக்கண் லிருந்ததிரு வடியின்
எல்லையையார் சொல்லவல்லா ரியம்பாயென் தோழி. 36

தோன்றியவைங் கருவினிலே சொல்லருமோ ரியற்கை
துலங்குமதிற் பலகோடி குலங்கொள்குருத் துவிகள்
ஆன்றுவிளங் கிடுமவற்றி னசலபல கோடி
அமைந்திடுமற் றவைகளுளே யடலிலகோ ரனந்தம்
ஏன்றுநிறைந் திடுமவற்றிற் கணிப்பதவுக் கரிதாய்
இலங்குபிர காசிகடா டிருந்தனமற் றிவற்றில்
ஊன்றிய தாரக சத்தி யோங்குமதி னடிவை
உற்றதிரு வடிப்பெருமை யுரைப்பவரார் தோழி. 37

உறைந்திடுமைங் கருவினிலே யுருவசத்தி விகற்ப
முன்னுதற்கு முணர்வதற்கு மொண்ணுமெவெண் ணிலவே
நிறைந்தவவை தனித்தனிபே நிகழ்ந்திலங்க வவைக்குள்
நேர்மையொண்மை யுறுவித்தந் நேர்மையொண்மை யகத்தே
குறைந்திலவாம் பலவேறு குணங்களுறப் புரிந்து
குணங்களுளே குறிகள்பல கூட்டுவித்தாங் கமர்ந்தே
மறைந்தமனம் வெளிப்படுத்து மலரடியின் பெருமை
வகுத்துரைக்க வல்லவரார் வழுத்தாயென் தோழி. 38

சூழ்ந்திடுமைங் கருவினிலே சொருபசத்தி பேதஞ்
சொல்லிறுதி மனங்கடந்த வெல்லையிலா தனவே
தாழ்ந்திலவா யவையவைபுந் தனித்தனிகின் றிலங்கத்
தகுமவைக்குள் நவவிளக்கந் தரித்தந்த விளக்கம்
வாழ்ந்திடுவோர் சத்திநிலை யெங்கியுறப் புரிந்து
மதிக்குமந்தச் சத்திதனில் மன்னுசத்த ராகி
ஆழ்ந்திடுமோர் பரம்பரத்தை யசைத்துநின்று நடிக்கும்
அடிப்பெருமை யுரைப்பவரா ரறியாயென் தோழி. 39

1 திருவிலொளி—என்றும் பாடம்

பசுநிறத்த வைங்கருவிற் பகர்ந்தசுவைத் தன்மை
பற்பலதோ டிகளாமவ் வுற்பவசத் திகளில்
வசுநிறத்த விவிதநவ சத்திபல கோடி
வயங்குமவைக் குள்ளாதி வயங்குவளவ் வாதி
தசநிறத்த வாகவதிற் றனித்தனியோங் காரி
சார்ந்திடுவ ளவளகத்தே தனிப்பரைசார்ந் திடுவள்
திசைநிறத்தப் பரைகடுவிற் றிருநடனம் புரியுந்
திருவடியின் பெருவடிவைச் செப்புவதார் தோழி. 40

பூத்தசுடர்ப் பூவகத்தே புறத்தேசூ ழிடத்தே
பூத்துமிகக் காய்த்துமதி யழுதாழுகப் பழுத்து
மாத்தகைய பெருஞ்ஜோதி மணிமன்றுள் விளங்கும்
வண்ணமொரு சிறிதறிய மாட்டாமல் மறைகள்
ஏத்துவது மேறுவது மிறங்குவது மாகி
இருக்கின்ற வென்றுணர்ந்தோ ரியம்பிடலிச் சிறியேன்
தோத்திரஞ்செய் தம்மைகண்டு மகிழ்ந்திடவம் மன்றில்
துலங்குமடிப் பெருமையையென் சொல்லுவது தோழி. 41

வளம்பெறுவின் ணணுக்குளொரு மதியிரவி யழலாய்
வயங்கியதா ரகையாயிவ் வகையனைத்துந் தோற்றுந்
தளம்பெறுசிற் சொலிதபரா சத்திமய மாகித்
தனித்த சத்தி மாலுகித் தத்துவமெல் லாம்போய்
உளம்புகுத மணிமன்றிற் றிருநடஞ்செய் தருளும்
ஒருதலைவன் சேவடிச்சீ ருரைப்பவரெவ் வுலகில்
அளந்தறிது மெனமறைக ளரற்றுமெனிற் சிறிய
அடிச்சியுரைத் திடப்படுமோ வறியாயென் தோழி. 42

பரவியவைங் கருவினிலே பருவசத்தி வயத்தே
பரையதிட்டி.த் திடகாத விந்துமயக் கத்தே
விரவியதத் துவவணுக்க ளொன்றுடோன் றுயொன்றி
விளங்கவவற் றடிநடுவீ றிவற்றினில்மூ விதமாய்
உரவியலுற் றுபிரியக்கி யறிவையறி வித்தே
ஓங்குதிரு வம்பலத்தி லொளிநடனம் புரியுந்
தரவியலிற் றிதுவெனயார் தெரிந்துரைப்பார் சிறிய
தமியளுரைத் திடுந்தரமோ சாற்றுயென் தோழி. 43

சோதிமலை யொருதலையிற் சோதிவடி வாகிச்
சூழ்ந்தமற்றோர் தலைஞான சொரூபமய மாகி
ஓதியவே றுருதலையி லுபயவண்ண மாகி
உரைத்திடுமைங் கருவகைக்கோர் முப்பொருளு முதவி
ஆதிநடு வந்தமிலா வானந்த வுருவாய்
அம்பலத்தே யாடுகின்ற வடியிணையின் பெருமை
வேதியனுந் திருமாலு முருத்திரரு மறியார்
வியைவறியே னறிவேனை விளம்பாயென் தோழி. 44

பூவொன்றே முப்பூவைம் பூவெழுபூ நவாாம்
பூவிருபத் தைப்பூவாய்ப் பூத்துமலர்ந் திடவும்
நாவொன்று மணம்வேறு வணட்வேறு வேறுப்
நண்ணிவிளங் குறவுமதி னற்பயன்மாத் திரையில்
மேவொன்று யிருப்பவதி னடுநின்று ஞான
வியனடனம் புரிகின்ற விரைமலர்ச்சே வடியின்
பாவொன்று பெருந்தகைமை யுரைப்பவரார் சிறியேன்
பகர்ந்திடவல் லுநளல்லேன் பாராயென் தோழி. 45

அருட்பெருஞ்ஜோதி

84. தோழிக்குரிமைகிளத்தல்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

நயந்தநட நாயகருன் னுபகரே யெனினும்
நாடியமந் திரங்கள்சில கூடிபுரை யிடவே
வியந்தமற்றைத் தேவரெலாம் வரவுமவர் நேயம்
விரும்பாதே யிருப்பதென்னீ யென்கின்றாய் தோழி
வயந்தருமிந் திரர்பிரமர் நாரணர்கா ணர்கள்
மற்றையர்கண் மற்றையர்சண் மற்றையர்க ளெவர்க்கும்
பயந்தகுடி யல்லடிநான் திருச்சிற்றம் பலத்தே
பதிநடஞ்செய் யடிப்பணிக்கே பதித்தகுடி யறியே. 1

நயந்தநட நாயகருன் னுபகரே யெனினும்
நங்கைநினைக் கண்டிடவே நாடிமற்றைத் தலைவர்
வியந்துவரு கின்றதுகண் டுபசரியா திங்கே
மேவுணக்கி யிருப்பதென்னீ யென்கின்றாய் தோழி
வயந்தருபார் முதல்நாத வரையுளநாட் டவர்க்கும்
மற்றவரை நடத்துகின்ற மாநாட்டார் தமக்கும்
பயந்தகுடி யல்லடிநான் திருச்சிற்றம் பலத்தே
பதிநடஞ்செய் யடிப்பணிக்கே பதித்தகுடி யறியே. 2

நயந்தநட நாயகருன் னுபகரே யெனினும்
நாடும்மற்றைத் தலைவர்தமைக் கண்டபொழு தெனினும்
வியந்தவர்க்கோர் நல்லுரையுஞ் சொல்லாதே தருக்கி
வீதியிலே நடப்பதென்னீ யென்கின்றாய் தோழி
வயந்தருமிவ் வண்டபகி ரண்டமட்டோ நாத
வரையோவப் பாலுமுள மாநாட்டார் தமக்கும்
பயந்தகுடி யல்லடிநான் திருச்சிற்றம் பலத்தே
பதிநடஞ்செய் யடிப்பணிக்கே பதித்தகுடி யறியே. 3

கடுங்குணத்தோர் பெறற்கரிய நடத்தரசே நினக்குக்
கணவரெனி னுப்பிறரைக் கண்டபொழு தெனினும்
நடுங்குணத்தால் நின்றுசில நல்வார்த்தை பகராய்ப்
நங்காயீ தென்னைனநீ நவில்கின்றாய் தோழி
ஒடுங்குபல தத்துவர்க்குந் தத்துவரை நடத்தும்
உபயநிலைத் தலைவருக்கு மவர்தலைவர் களுக்கும்
நடுங்குகுடி யல்லடிநான் திருச்சிற்றம் பலத்தே
நடஞ்செய்யடிப் பணிக்கென்றே நாட்டியதற் குடியே. 4

மடங்கலந்தார் பெறற்கரிய நடத்தரசே நினக்கு
மணவாள ரெனினுமுன்பால் வார்த்தைமகிழ்ந் துரைக்க
இடங்கலந்த மூர்த்திகடாம் வந்தாலங் கவர்பால்
எண்ணமிலா திருக்கின்று யென்கொலென்றாய் தோழி
மடங்குசம யத்தலைவர் மதத்தலைவ ரவர்க்கும்
வயங்குமிவர்க் குபகரிக்கு மாத்தலைவர் களுக்கும்
அடங்குகுடி யல்லடிநான் திருச்சிற்றம் பலத்தே
ஆடலடிப் பணிக்கென்றே யமைத்தகுடி யறியே. 5

அறங்குலவு தோழியிங்கே நீயுரைத்த வார்த்தை
அறிவறியார் வார்த்தையெத னுலெனினிம் மொழிகேள்
உறங்குவதும் விழிப்பதும்பின் னுண்ணுவது மிறத்தல்
உறுவதுடன் பிறத்தல்பல பெறுவதுமா யுழலும்
மறங்குலவு மணுக்கள்பலர் செய்தவிர தத்தால்
மதத்தலைமை பதத்தலைமை வாய்த்தனரங் கவர்பால்
இறங்கலிலென் பேசுதலா லென்பயனே நடஞ்செய்
இறைவரடிப் புகழ்பேசி யிருக்கின்றேன் யானே. 6

சிவமயமே வேறிலையெல் லாமெனநீ தானே
தேமொழியாய் பற்பலகால் செப்பியிடக் கேட்டேன்
தவமயத்தார் பலசமயத் தலைவர்மதத் தலைவர்
தத்துவர்தத் துவத்தலைவ ரவர்தலைவர் தலைவர்
இவரவரென் றுயல்வேறு பிரித்தவர்பால் வார்த்தை
இயம்புவதென் னென்றுயீ தென்கொலென்றாய் தோழி
நவமயநீ யுணர்ந்தறியா யாதலிலிவ் வண்ண
நவின்றனைநின் னேயமற நான்புகல்வேன் கேளே. 7

ஒளியொன்றே யண்டபகி ரண்டமெலாம் விளங்கி
ஓங்குகின்ற தன்றியண்ட பகிரண்டங் களிலும்
வெளிகின்ற சராசரத்து மகத்திலுறு புறத்தும்
விளம்புமகப் புறத்திலுறு புறப்புறத்தும் நிறைந்தே
உளதின்ற விருணீக்கி யிலங்குகின்ற தன்மை
உலகறியும் நீயறியா தன்றுகண்டாய் தோழி
தளிகின்ற வொளிமயமே வேறிலை யெல்லாமுந்
தானெனவே தாகமங்கள் சாற்றுதல்சத் தியமே. 8

ஏற்றிடுவே தாகமங்க ளொளிமயமே யெல்லாம்
என்றமொழி தனைநினைத்தே யிரவிலிருட் டறையில்
சாற்றிடுமண் பாத்திரத்தை மரவட்டில் களைக்கற்
சட்டிகளை வேறுபல சார்ந்தகரு விகளைத்
தேற்றமிகு தண்ணீரைச் சீவர்கள்பற் பலரைச்
செப்பியவவ் விருட்டறையிற் றனித்தனிச்சேர்த் தாலும்
ஊற்றமுறு மிருணீங்கி யொளிகாண்ப தளதேதா
உளதேல்நீ யுறைத்தமொழி யுளதாகுந் தோழி. 9

பரமதனே லுலகுயிர்கள் கற்பனையே யெல்லாம்
பகர்சிவமே யெனவுணர்ந்தே தா மாதலினுல் நாமே
பிரமமெனப் பிறர்க்குரைத்துப் பொங்கிவழிந் தாங்கே
பேசுகின்ற பெரியவர்தம் பெரியமதம் பிடியேல்
உரமிகுபே ருலகுயிர்கள் பரமிவைகா ரியத்தால்
உள்ளனவே காரணத்தா லுள்ளனவில் லனவே
தரமிகுபே ரருளொளியாற் சிவமயமே யெல்லாந்
தாமெனவே யுணர்வதுசன் மார்க்கநெறி பிடியே. 10

பிரமமென்றுஞ் சிவமென்றும் பேசுகின்ற நிலைதான்
பெருநிலையே யிந்நிலையிற் பேதமுண்டோ வெனவே
தரமறிய வினவுகின்றாய் தோழியிது கேள்நீ
சமரசசன் மார்க்கநிலை சார்தியெனி லறிவாய்
திரமுறவா யினுமெல்லா மாகியல்லா தாகுந்
திருவருளாம் வெளிவிளங்க விளங்குதனிப் பொருளாஞ்
சிரமுறுமோர் பொதுவுண்மைச் சிவம்பிரம முடிபே
திகழ்மறையா கமம்புகலுந் திறனிதுகண் டறியே. 11

இலங்குகின்ற பொதுவுண்மை யிருந்தநிலை புகலென்
றியம்புகின்றாய் மடவாய்கேள் யானறியுந் தரமோ
துலங்குமதை யுறைத்திடவுங் கேட்டிடவும் படுமோ
சொல்லளவோ பொருளளவோ துன்னுமறி வளவோ
விலங்குகின்ற தத்துவங்க ளத்தனையுங் கடந்த
மேனிலையென் றந்தமிலாம் விளம்புகின்ற தன்றி
வலங்கொளுமம் மேனிலையி னுண்மையெது வென்றுல்
மவுனஞ்சா திப்பதன்றி வாய்திறப்ப திலையே. 12

வாய்திறவா மவுனமதே யாகுமெனிற் றோழி
மவுனசத்தி வெளியேழும் பரத்தபரத் தொழிபும்
தூயபரா பரமதுவே யென்றுலங் கதுதான்
றுலங்குநடு வெளிதனிலே கலந்துகரை வதுகான்
மேயநடு வெளியென்றுற் றற்பரமாம் வெளியில்
விரவியிடுந் தற்பரமாம் வெளியென்று லதுவும்
ஆயபெரு வெளிதனிலே யடங்குமிது மட்டே
அளப்பதொரு வாறதன்மே லளப்பதரி தரிதே. 13

கிளக்கின்ற மறையளவை யாகமப்பே ரளவைக்
கிளந்திடுமெப்ச் சாதனமா மளவையறி வளவை
விளக்குமிந்த வளவைகளைக் கொண்டுநெடுங் கால
மேலவர்க ளளந்தளந்து மெலிகின்ரு ராங்கே
அளக்கின்ற கருவியெலாந் தேய்ந்திடக்கண் டாரேல்
அன்றியொரு வாறனு மளவுகண்டா ரிலையே
துளக்கமுறு சிற்றறிவா லொருவாறன் றுரைத்தேன்
சொன்னவெளி வரையேனுந் துணிந்தளக்கப் படுமோ. 14

அருட்பெருஞ்ஜோதி

85. அருட்பெருஞ்ஜோதி

கலித்துறை

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ் ஜோதியென் ரருபி ரிற்கலந் தாடுகின்ற
அருட்பெருஞ் ஜோதியெ ணன்பிற் கலந்தறி வாய்விளங்கும்
அருட்பெருஞ் ஜோதித்தெள் ளாரமு தாகிபுள் ளண்ணிநிற்கும்
அருட்பெருஞ் ஜோதிதின் ரூசையொன் றேயென்னு ளார்கின்றதே. 1

ஆர்கின்ற தெள்ளமு தின்சுவை யென்னென் றறைவனந்தே
சார்கின்ற சிற்றம் பலப்பெருஞ் சீரினைச் சாற்றுதொறும்
சேர்கின்ற நாவுட னுள்ளமு மாவியுந் தித்தித்தலே
கோர்கின்ற தாலென் னருட்பெருஞ் ஜோதி நிறைந்துளத்தே. 2

உளத்தே பெருங்களிப் புற்றுடல் பேன்மித வுண்ணுகின்றேன்
வளத்தே யருட்பெருஞ் ஜோதியி ரூலொளி வாய்ந்தெனது
குளத்தே நிறைந்தணை யுங்கடந் தோங்கிக் குலவுபரி
மளத்தே மிகுந்து வயங்கு மமுத மனமகிழ்ந்தே. 3

மனமகிழ்ந் தேன்மன மாயையை நீக்கினன் மாநிலத்தே
தினமொறுங் காமமுந் தீர்ந்தினல் லாம்வல்ல சித்தும்பெற்றேன்
இனமிகுஞ் சுத்தசன் மார்க்கப் பெருநெறி யெய்தினன்றேன்
கனமிகு மன்றி லருட்பெருஞ் ஜோதியைக் கண்டுகொண்டே. 4

கண்டே னருட்பெருஞ் ஜோதியைக் கண்களிற் கண்டுகளி
கொண்டேன் சிவானந்தக் கூத்தாடிக் கொண்டிக் குவலயத்தே
தொண்டே திருவம்ப லந்தனக் காற்றிச் சுகவமுதம்
உண்டே னுயிர்தழைந் தோங்குகின் றேனுள் ளுவப்புறவே. 5

உறவே யெனதின் னுயிரே யெனதுள்ளத் துற்றினிக்கும்
நறவே அருட்பெருஞ் ஜோதிமன் ரூங்கு நடத்தரசே
இறவே னெனத்துணி வெய்திடச் செய்தனை யென்னையினி
மறவே லடிச்சிறி யேனெரு போது மறக்கினுமே. 6

மறப்பே னலேனுன்னை ஓர்கண மேனு மறக்கிலன்றே
இறப்பே னிதுசத் தியஞ்சத்தி யஞ்சத் தியமிசைத்தேன்
பிறப்பே தவிர்த்தெனை ஆட்கொண் டமுதம் பெரிதளித்த
சிறப்பே அருட்பெருஞ் ஜோதிமன் றேங்குஞ் செழுஞ்சுடரே. 7

சுடரே அருட்பெருஞ் ஜோதிய னேபெண் சுகத்தைமிக்க
விடரே யெனினும் விடுவரெந் தாய்நினை விட்டயலோன்
றடரே னரைக்கண மும்பிரிந் தாற்றல ரணைகண்டாய்
இடரே தவிர்த்தெனக் கெல்லா நலமுமிங் கீந்தவனே. 8

தவநேய முஞ்சுதத சன்மார்க்க நேயமுஞ் சத்தியமாஞ்
சிவனேய முந்தந்தென் னுள்ளந் தெளியத் தெளித்தனையே
நவநேய மன்றில் அருட்பெருஞ் ஜோதியை நாடிநின்ற
இவனே யவனெனக் கொள்வாருன் னன்ப ரிருநிலத்தே. 9

நிலத்தே புழுத்தபுழுவு மலேன்புன் னிலத் திழிந்த
மலத்தே புழுத்த புழுவனை யேனைபவ் வான்துதிக்குங்
குலத்தே தலைமை கொடுத்தென் னுளத்திற் குலவுகின்றுப்
தலத்தே அருட்பெருஞ் ஜோதிஅப் பாவென் தயாநிதியே. 10

நிதியே யெனுள்ள நிறைவே பொதுவி னிறைந்தசிவ
பதியே அருட்பெருஞ் ஜோதிய னேயம் பலம்விளங்குங்
கதியே யென்கண்ணுங் கருத்துங் களிக்கக் கலந்துகொண்ட
மதியே அமுதமழையேநின் பேரருள் வாழியவே. 11

வாழியென் றேயினை மாலப ணுதியர் வந்தருட்பேர்
ஆழியென் றேதுதித் தேதத்தப் புரிந்தனை அற்புதநீ
நீழியன் றேயென்றுஞ் சாகா வரமு முவந்தளித்தாய்
வாழிமன் றேங்கும் அருட்பெருஞ் ஜோதிநின் மன்னருளே. 12

மன்னிய நின்னரு ளாரமு தந்தந்து வாழ்வித்தநான்
உன்னிய வுண்ணிய வெல்லா முதவியென் னுள்ளத்திலே
தன்னிய லாகிக் கலந்தித் தருணந் தபவுசெய்தாய்
துன்னிய நின்னருள் வாழ்க அருட்பெருஞ் ஜோதியனே. 13

அருட்பெருஞ்ஜோதி

86. அடிமைப்பேறு

நேரிசை வெண்பா

அருட்பெருஞ்ஜோதி

அருளளித்தா னன்பளித்தா னம்பலத்தா னுண்மைப்
பொருளளித்தா னென்னுட் புணர்ந்தான்—தெருளளித்தான்
எச்சோ தனையு மியற்றும லாண்டிகொண்டான்
அச்சோ வெனக்கவன்போ லார். 1

ஆரணமு மாகமமு மாங்காங் குணர்த்துகின்ற
காரணமுங் காரியமுங் காட்டுவித்தான்—பூரணன்சிற்
றம்பலத்தா னென்னுளைசை யப்ப னெல்லாம்வல்ல
செம்பலத்தை யென்னுளத்தே சேர்த்து. 2

சேர்த்தான் பதமென் சிரத்தே திருவருட்கண்
பார்த்தானென் னெண்ணமெலாம் பாலித்தான்—தீர்த்தானென்
தன்பமெலாந் தூக்கமெலாஞ் சூழாது நீக்கிவிட்டான்
இன்பமெலாந் தந்தா னிசைந்து. 3

இசைந்தானென் னுள்ளத் திருந்தா னெனையும்
நசைந்தானென் பாட்டை நயந்தான்—அசைந்தாடு
மாயை மனமடக்கி வைத்தா னருளினுமென்
தாயைமகி ழும்பலவன் றான். 4

தானே யருளாளன் தானே பொருளாளன்
தானேயெல் லாம்வல்ல தானனன்—தானேதான்
நானென் னென்னுடைய நாயகனு னன்னான
வானை னம்பலத்தி தம்மான். 5

மான்முதலா யுள்ள வழக்கெல்லாந் தீர்த்தருளித்
தான்முதலா யென்னுளமே சார்ந்தமர்ந்தான்—தேன்முதலாத்
தித்திக்கும் பண்டமெலாஞ் சேர்த்தாங்கென் சிந்ததனில்
தித்திக்கு மம்பலத்தான் றேர்ந்து. 6

தேர்ந்தேன் தெளிந்தேதன் சிவமே பொருளெனவுள்
ஓர்ந்தே னருளமுத முண்கின்றேன்—சார்ந்தேதன்சிற்
றம்பலத்தி லெல்லாம்வல் லானே யவனருளால்
எம்பலத்தெல் லாம்வலனே னென். 7

ஆனே னவனு வவனருளா லாங்காங்கு
நானே களித்து நடிக்கின்றேன்—தானேயென்
தந்தையென் பால்வைத்த தயவைநினைக் குந்தோறுஞ்
சிந்தைவியக் கின்றேன் றெரிந்து. 8

தெரிந்தே னருளாற் சிவமொன்றே யென்று
புரிந்தேதன் சிவபலிக்குப் பூசை—விரிந்தமனச்
சேட்டையெலாந் தீர்த்துவிட்டேன் சித்திதலாம் வல்லவருள்
நாட்டையெலாங் கைக்கொண்டே னன். 9

நான்செய்த நற்றவந்தான் யாதோ நவிற்றரிது
வான்செய்த தேவரெலாம் வந்தேவல்—தான்செய்து
தம்பலமென் றேமதிக்கத் தான்வந்தென் னுட்கலந்தான்
அம்பலவன் றன்னருளி னல். 10

அருட்பெருஞ்ஜோதி

87. உத்தரஞான சிதம்பர மான்மியம்

கலித்துறை

அருட்பெருஞ்ஜோதி

அருளோங்கு கின்ற தருட்பெருஞ் ஜோதி யடைந்ததென்றன்
மருளோங்கு முமற் றவிர்த்தது நல்ல வரமளித்தே
பொருளோங்க நானருட் பூமியில் வாழப் புரிந்ததென்றுந்
தெருளோங்க வோங்குவ துத்தர ஞான சிதம்பரமே. 1

இணையென்று தான்றனக் கேற்றது போற்று மெனக்குநல்ல
துணையென்று வந்தது சுத்தசன் மார்க்கத்திற் சேர்ப்ப்தென்னை
அணையென்ற ணைத்துக்கொண் டைந்தாழி லீந்த தருளுலகிற்
றிணையைந்து மாகிய துத்தர ஞான சிதம்பரமே. 2

உலகமெ லாந்தாழ வுற்ற தெனக்குண்மை யொண்மைதந்தே
இலக வெலாம்படைத் தாருயிர் காத்தரு ளென்றதென்றும்
கலக மிலாச்சுத்த சன்மார்க்க சங்கங் கலந்தறபார்த்
திலக மெனநின்ற துத்தர ஞான சிதம்பரமே. 3

பவமே தவிர்ப்பது சாகா வரமும் பயப்பதுநற்
றவமே புரிந்தவர்க் கின்பந் தருவது தான்றனக்கே
உவமேய மான தொளிமேயோங்கு கின்ற தொளிருஞ்சுத்த
சிவமே நிறைகின்ற துத்தர ஞான சிதம்பரமே. 4

ஒத்தா ரையுமிழிந் தாரையு நேர்கண் டுவக்கவொரு
மித்தாரை வாழ்விப்ப தேற்றுர்க் கமுதம் விளம்பியிடு
வித்தாரைக் காப்பது சித்தாடு கின்றது மேதினிமற்
செத்தாரை மீட்கின்ற துத்தர ஞான சிதம்பரமே. 5

எத்தாலு மிக்க தெனக்கரு ளீந்ததில் லாமும்வல்ல
சித்தாடல் செய்கின்ற தெல்லா வுலகுஞ் செழிக்கவைத்த
தித்தா ரணிக்கணி யாயது வான்முழற் கேற்றதிதங்குஞ்
செத்தா லெழுப்புவ துத்தர ஞான சிதம்பரமே. 6

குருநெறிக் கேயெனைக் கூட்டிக் கொடுத்தது கூறரிதாம்
பெருநெறிக் கேசென்ற பேர்க்குக் கிடைப்பது பேயுலகக்
கருநெறிக் கேற்றவர் காணற் கரியது காட்டுகின்ற
திருநெறிக் கேற்கின்ற துத்தர ஞான சிதம்பரமே. 7

கோல்லா நெறியது கோடா நிலையது கோபமிலார்
சொல்லா லுவந்தது சுத்தசன் மார்க்கந் துணிந்ததுல
கெல்லா மளிப்ப திறந்தா லெழுப்புவ தேதமொன்றுஞ்
சொல்லா வளத்தின துத்தர ஞான சிதம்பரமே. 8

காணுத காட்சிகள் காட்டுவிக் கின்றது காலமெல்லாம்
வீணுள் கழிப்பவர்க் கெய்தரி தாயது வெஞ்சினத்தார்
கோணுத நெஞ்சிற் குலாவிநிற் கின்றது கூடிநின்று
சேணுடர் வாழ்த்துவ துத்தர ஞான சிதம்பரமே. 9

சொல்வந்த வேத முடிமுடி மீதிற் றுலங்குவது
கல்வந்த நெஞ்சினர் காணற் கரியது காமமிலார்
நல்வந் தினைசெய நண்ணிய பேறது நன்றெனக்கே
செல்வந்தந் தாட்கொண்ட துத்தர ஞான சிதம்பரமே. 10

ஏகாந்த மாகி வெளியா யிருந்தநின் கென்னைமுன்னே
மோகாந்த காரத்தின் மீட்டதென் னெஞ்ச முயங்கிரும்பின்
மாகாந்த மானது வல்வினை தீர்த்தினை வாழ்வித்தென்றன்
தேகாந்த நீக்கிய துத்தர ஞான சிதம்பரமே. 11

அருட்பெருஞ்ஜோதி

88. திருவருட்பேறு

நேரிசை வெண்பா

அருட்பெருஞ்ஜோதி

சீர்விளங்கு சுத்தத் திருமேனி தான்றரித்துப்
பார்விளங்க நான்படுத்த பாயலிலே — தார்விளங்க
வந்தா யெனைத்தூக்கி மற்றொருசார் வைத்தனையே
எந்தாய்நின் னுள்ள மறியேன். 1

பயத்தோ டொருபாற் படுத்திருந்தே னென்பால்
நயத்தோ டணைந்தே நகைத்து — வயத்தாலே
தூக்கி யெடுத்தினைமேற் சூழலிலே வைத்தனைநான்
பாக்கியவா னினைன் பதிந்து. 2

என்னேநின் றண்ணருளை யென்னென்பே னிவ்வுலகின்
முன்னே தவந்தான் முயன்றேனோ — கொன்னே
படுத்தயர்ந்தே னன்படுத்த பாயருகற் றென்னை
எடுத்தெதாருமே லேற்றிவைத் தாயே. 3

சிந்தா குலத்தெதாடுநான் றெய்வமே யென்றுநினைத்
தந்தோ படுத்துள் ளயர்வுற்றேன் — எந்தாய்
எடுத்தா யெனநினையா தேகிடந்தே னென்னை
எடுத்தாய் தயவைவிய வேன். 4

உன்னுகின்ற தோறுமென துள்ள முருகுகின்ற
தென்னுரைப்பே னென்னுரைப்பே னெந்தாயே — துன்னிநின்று
தூக்கந் தவிர்த்தென்னைத் தூக்கியெடுத் தன்பொடுமேல்
ஆக்கமுற வைத்தா யது. 5

நான்படுத்த பாயருகி னண்ணி யெனைத்தூக்கி
ஊன்படுத்த தேக மொளிவிளங்கத் — தான்பதித்த
மேலிடத்தே வைத்தனைநான் வெம்மையெலாந் தீர்ந்தேதனின்
காலிடத்தே வாழ்கின்றேன் காண். 6

புண்ணியந்தான் யாது புரிந்தேனோ நானறியேன்
பண்ணிய துன்போடே படுத்திருந்தேன் — நண்ணியெனைத்
தூக்கியெடுத் தெனது துன்பமெலாந் தீர்த்தருளி
ஆக்கியிடன் றேயருடந் தாய். 7

அஞ்சியஞ்சி யூணு மருந்தாம லாங்கொருசார்
பஞ்சி ணுழந்தே படுத்தயர்ந்தேன் — விஞ்சியங்கு
வந்தா யெனைத்தூக்கி மற்றொருசார் வைத்தமுது
தந்தாயென் நான்செய் தவம். 8

நானே தவம்புரிந்தேன் நானே களிப்படைந்தேன்
தேனே யெனுமமுதுந் தேக்க வுண்டேன் — ஊனே
ஒளிவிளங்கப் பெற்றே னுடையா னெனைத்தான்
அளிவிளங்கத் தூக்கியனைத் தான். 9

வாழி யெனைத்தூக்கி வைத்த கரதலங்கள்
வாழியெலாம் வல்ல மணிமன்றம் — வாழிநடம்
வாழி அருட்ஜோதி வாழி நடராஜன்
வாழிசிவ ஞான வழி. 10

அருட்பெருஞ்ஜோதி

—⊙—

89. நெஞ்சொடு கூறல்

நேரிசை வெண்பா

அருட்பெருஞ்ஜோதி

அன்னையப்பன் மாவினத்த ராய்குழலா ராசையினல்
தென்னையொப்ப நீண்ட சிறுநெஞ்சே — என்னையென்ன
யாவகைசேர் வாயி லெயிற்றில்லை யென்கிலையே
ஆவகையைத் தாய்ப்பதமா மூர்ந்து. 1

நீர்க்கிசைந்த காம நிலைமூன்று கொண்டபெயர்
போர்க்கிசைந்த தென்றறியாப் புன்னெஞ்சே — நீர்க்கிசைந்தே
ஒன்றொன்றொன் றொன்றொன்றொன் றொன்றொன்று தில்லைமணி
மன்றொன்று வாவா மகிழ்ந்து. 2

கைதலைமே லிட்டலையிற் கண்ணுடையான் கான்மலர்க்குக்
கைதலைமே லிட்டலையிற் கண்ணீர்கொண் — டுய்தலைமேல்
காணுமே லுண்மைக் கதிநிலையைக் கைக்கனியாக்
காணுமே நெஞ்சே கனித்து. 3

ஈற்றிலொன்றாய் மற்றை யியல்வருக்க மாகியபோர்
ஏற்ற பறவை யிருமைக்கும் — சாற்றுவமை
அன்றே தலைமகட்கா வம்பலவர் தம்பாலே
கென்றே யெனக்கு நினக்கும். 4

கல்லோ மணலோ கனியோ கரும்போவென்
றெல்லோரு மிங்கே யிருக்கின்றோம் — சொல்லோம்
அதுவா யதன்பொருளா யப்பாலா யார்க்கும்
பொதுவாய் நடிக்கின்ற போது. 5

அதுபா ரதிலே யடைந்துவதி மற்றுங்
கதிலேழை யைப்புரமெய் பன்பால் — அதிலே
நலமே வதிலேகின் னூர் திருவம்
பலமேவக் காட்டும் பரிசு. 6

நம்பார் வதிபாக னம்புரத்தி னின்றுவந்தோன்
அம்பாரத் தென்கிழக்கே யம்பலத்தான் — வெம்பாது
பார்த்தா லுரிப்பான் றெரியுஞ் சிதம்பரம்நீ
பார்த்தாயிப் பாட்டின் பரிசு. 7

நடிப்பார் வதில்லை நற்கோ புரத்தின்
அடிப்பார்வை யும்வடக்கே யார்ந்து — கொடிப்பாய
நின்று வளர்மலைபோ னெஞ்சேபார்த் தாற் றெரியும்
இன்றெவ் விடத்தெனிலிப் பாட்டு. 8

பூமி பொருந்து புரத்தே நமதுசிவ
காமிதனை வேட்டுக் கலந்தமர்ந்தான் — நேமி
அளித்தான்மால் கண்மலருக் கானந்தக் கூத்திற்
களித்தா னவன்றுள் களித்து. 9

அருட்பெருஞ்ஜோதி

90. கைம்மாறின்மை

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

கடையேன் புரிந்த குற்றமெலாங் கருதா தென்னுட் கலந்துகொண்டு
தடையே முழுதுந் தவிர்த்தருளித் தனித்த ஞான வமுதளித்துப்
புடையே யிருத்தி யருட்சித்திப் பூவை தனையும் புணர்த்தியருட்
கொடையே கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 1

கடுத்த மனத்தை யடக்கியொரு கணமு மிருக்க மாட்டாதே
படுத்த சிறியேன் குற்றமெலாம் பொறுத்தென் னறிவைப் பலகாலுந்
தடுத்த தடையைத் தவிர்த்தென்னுள் சாகா நலஞ்செய் தனிமுதலுங்
கொடுத்த குருவே நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 2

மருவு மூலக மதித்திடவே மரண பயந்தீர்த் தெழிலுறுதல்
உருவும் பொருளொன் றெனத்தெளிந்த வுணர்வு மென்று மூலவாத
திருவும் பரம சித்தியெனுஞ் சிறப்பு மிபற்கைச் சிவமெனுமோர்
குருவுங் கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 3

சேட்டித் துலகச் சிறுநடையிற் பல்காற் புகுந்து திரிந்துமயல்
நீட்டித் தலைந்த மனத்தையொரு நிமிடத் தடக்கிச் சன்மார்க்கக்
கோட்டிக் கியன்ற குணங்களெலாங் கூடப் புரிந்து மெய்ந்நிலையைக்
காட்டிக் கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 4

தோலுக் கருதித் தினந்தோறுஞ் சுழன்று சுழன்று மயங்குமந்த
வேலுக் கிசைந்த மனத்தைமுற்று மடக்கி ஞான மெய்ந்நெறியிற்
கோலுத் தொலுத்துக் கண்விளக்கங் கொடுத்து மேலும் வேகாத
காலுக் கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 5

பட்டிப் பகட்டி னார்திரிந்து பணமே நிலமே பாவையரே
1 தெட்டிக் கடுத்த பொய்யொழுக்கச் செயலே யென்று திரிந்துலகில்
ஓட்டிக் குதித்துச் சிறுவிளையாட் டுளந்தி யோடு மனக்குரங்கைக்
கட்டிக் கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 6

மதியைக் கெடுத்து மரணமெனும் வழக்கைப் பெருக்கி யிடர்ப்படுமோர்
விதியைக் குறித்த சமயநெறி மேவா தென்னைத் தடுத்தருளாம்
பதியைக் கருதிச் சன்மார்க்கப் பயன்பெற் றிடவென் னுட்கலந்தார்
கதியைக் கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 7

1 தெட்டு என்பது—வஞ்சகம்.

தருண நிதியே யென்னுருமைத் தாயே யென்னைத் தடுத்தாண்டு
வருண நிறைவிப் சன்மார்க்க மருவப் புரிந்த வாழ்வேஅல்
அருணை வெளியே யெனச்சிறிதே யழைத்தே னழைக்கு முன்வந்தே
கருணை கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 8

பொற்பங் கயத்தின் புதுநறவுஞ் சுத்த சலமும் புகல்கின்ற
வெற்பந் தரமா மதிமதுவும் விளங்கும் பசுவின் தீம்பாலும்
நற்பஞ் சகமு மொன்றுகக் கலந்து மரண நவைதீர்க்குங்
கற்பங் கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 9

புலையைத் தவிர்த்தென் குற்றமெலாம் பொறுத்து ஞான பூரணமா
நிலையைத் தெரித்துச் சன்மார்க்க நீதிப் பொதுவி னிருத்தமிடு
மலையைக் காட்டி யதனடியில் வயங்க விருத்திச் சாகாத
கலையைக் கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 10

அருணெ டறியா மனக்குரங்கை யடக்கத் தெரியா ததலைடசேர்ந்
திருணெ டனைத்துஞ் சுழன்றுசுழன் றிளைத்துக் களைத்தே னெனக்கந்தோ
தெருணெ டுலகில் மரணமுறுத் திறந்தந் தழியாத் திருவளித்த
கருணை நிதியே நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 11

மண்ணுண் மயங்கிச் சுழன்றேறு மனத்தை யடக்கத் தெரியாதே
பெண்ணுண் மயலைப் பெருங்கடல்போற் பெருக்கித் திரிந்தேன் பேயேனை
விண்ணுண் மணிபோன் றருட்ஜோதி விளைவித் தாண்ட வெண்ணுடைய
கண்ணுண் மணியே நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 12

புலந்த மனத்தை யடக்கியொரு போது நினைக்கமாட்டாதே
அலந்த சிறியேன் பிழைபொறுத்தே யருளா ரமுத மளித்திங்கே
உலந்த வுடம்பை யழியாத வுடம்பாப் புரிந்தென் னுயிரினுளே
கலந்த பதியே நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 13

தனியே கிடந்து மனங்கலங்கித் தளர்ந்து தளர்ந்து சகத்தினிடை
இனியே துறுமோ யென்செய்வேன் எந்தா யெனது பிழைகுறித்து
முனியே லெனைநான் மொழிவதற்கு முன்னே கருணை யமுதளித்த
கனியே கருப்பே நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 14

பெண்ணே பொருளே யெனச்சுழன்ற பேதை மனத்தாற் பெரிதுழன்று
புண்ணே யெனுமிப் புலையுடம்பிற் புகுந்து திரிந்த புலையேற்குத்
தண்ணார் மதியின் னமுதளித்துச் சாகா வரந்தந் தாட்கொண்ட
கண்ணே மணியே நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 15

பொருத்திக் கொடுத்த புலையுடம்பிற் புகுந்தேன் பிணைத்தற் கிணங்காத
எருத்திற் றிரிந்தேன் செய்பிழையை யெண்ணு தந்தோ வெனைமுற்றும்
திருத்திப் புனித வமுதளித்துச் சித்தி நிலைமேற் சேர்வித்தென்
கருத்திற் கலந்தாய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 16

பெண்ணுக் கிசைந்தே பலமுகத்திற் பேய்போற் சுழன்ற பேதைமனத்
தெண்ணுக் கிசைந்து துயர்க்கடலாழ்ந் திருந்தேன் றன்னை யெடுத்தருளி
விண்ணுக் கிசைந்த கதிர்போலென் விவேகத் திசைந்து மேலுமென்றன்
கண்ணுக் கிசைந்தோய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 17

மாட்சி யளிக்குஞ் சன்மார்க்க மரபில் மனத்தைச் செலுத்து தற்கோர்
சூழ்ச்சி யறியா துழன்றேனைச் சூழ்ச்சி யறிவித் தருளரசின்
ஆட்சி யடைவித் தருட்ஜோதி யழுத மளித்தே யானந்தக்
காட்சி கொடுத்தாய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 18

பொய்யிற் கிடைத்த மனம்போன போக்கிற் சுழன்றே பொய்புலகில்
வெய்யிற் கிடைத்த புழுப்போல வெதும்பிக் கிடந்த வெறியேற்கு
மெய்யிற் கிடைத்தே சித்தியெலாம் விளைவித் திடுமா மணியாயென்
கையிற் கிடைத்தோய் நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 19

போத லொழியா மனக்குரங்கின் போக்கை யடக்கத் தெரியாது
நோதல் புரிந்த சிறியேனுக் கிரங்கிக் கருணை நோக்களித்துச்
சாத லெனுமோர் சங்கடத்தைத் தவிர்த் தென்னுயிரிற் றூன்கலந்த
காத லரசே நின்றனக்குக் கைம்மா றேது கொடுப்பேனே. 20

அருட்பெருஞ்ஜோதி

91. பாமாலை யேற்றல்

நேரிசை வெண்பா

அருட்பெருஞ்ஜோதி

நான்புனைந்த சொன்மாலை நன்மாலை யென்றருளித்
தான்புனைந்தான் ஞான சபைத்தலைவன் — தேன்புனைந்த
சொல்லாள் சிவகாம சுந்தரியைத் தோள்புனைந்த
நல்லான் றன்றூட்கே நயந்து. 1

சொல்லுகின்ற வென்சிறுவாய்ச் சொன்மாலை யத்தனையும்
வெல்லுகின்ற தும்பையென்றே மேலணிந்தான் — வல்லிசிவ
காம சவுந்தரிக்குக் கண்ணனையான் ஞானசபைச்
சேமநட ராஜன் றெரிந்து. 2

ஏதாகு மோவெனநா னெண்ணி யிசைத்தவெலாம்
வேதா கமமென்றே மேலணிந்தான் — பாதாரு
விந்த மெனதுசிர மேலமர்த்தி மெய்யளித்த
எந்தை நடராஜன் இசைந்து. 3

இன்னுரையன் றென்றுலக மெல்லாம் மறிந்திருக்க
என்னுரையும் பொன்னுரையென் றேயணிந்தான் — தன்னுரைக்கு
நேரென்று னீடுலகில் நின்போ லுரைக்கவல்லார்
ஆரென்று னம்பலவ னுய்ந்து. 4

என்பாட்டுக் கெண்ணுத தெண்ணி யிசைத்தேதனென்
தன்பாட்டை சத்தியமாத் தான்புனைந்தான் — முன்பாட்டுக்
காலையிலே வந்து கருணையளித் தேதருமச்
சாலையிலே வாவென்றான் றான். 5

என்னே யதிசயமீ திவ்வுலகி லென்னுரையைப்
பொன்னே யெனமேற் புனைந்துகொண்டான் — தன்னேரில்
நல்லா ரணங்களெலாம் நாணியவே யெல்லாஞ்செய்
வல்லான் றிருக்கருணை வாய்ப்பு. 6

முன்பி னறியாது மொழிந்தமொழி மாலையெலாம்
அன்பி னிசைத்தந்தே தா வணிந்துகொண்டான் — என்பருவம்
பாராது வந்தென் பருவமலல் லாந்தவிர்த்துத்
தாரா வரங்களெலாந் தந்து. 7

பொன்னெப்ப தாமொருநீ போற்றியசொன் மாலையென்றே
என்னப்ப னென்சொல் லிசைத்தணிந்தான் — தன்னுப்பில்
வல்லா னிசைந்ததுவே மாமாலை யற்புதமீ
தெல்லாந் திருவருட் சீரே. 8

பின்மு னறியேனென் பிதற்றியசொன் மாலையெலாந்
தன்முனரங் கேற்றனவே தாவுரைத்தான் — என்முன்
இருந்தானென் னுள்ளே யிருக்கின்றான் ஞான
மருந்தான்சிற் றம்பலத்தான் வாய்ந்து. 9

நீயேயென் பிள்ளாயிங்கு நின்பாட்டிற் குற்றமொன்றும்
ஆயேமென் றந்தே தா வணிந்துகொண்டான் — நாயேன்செய்
புண்ணிய மிவ்வானின் புவியின் மிகப்பெரிதால்
எண்ணியவெல் லாம்பு ரிகின் றேன். 10

எண்ணுகின்றே னெண்ணுதாறென் எண்ணமெலாந் தித்திக்க
நண்ணுகின்ற தென்புகலவே னுனிலத்தீர் — உண்ணுகின்ற
உள்ளமுதே தா நான்று னுருற்றுதவத் தாற்கிடைத்த
தெள்ளமுதே தா வம்பலவன் சீர். 11

ஆக்கியளித் தன்முதலாந் தொழிலோ ரைந்தினையுந்
தேக்கி மகிழ்வொடுநீ செய்யென்றான் — தூக்கி
எடுத்தா னணைத்தா னிறவாத தேகங்
கொடுத்தான்சிற் றம்பலத்தெங் கோ. 12

அருட்பெருஞ்ஜோதி

92. திருவருட்கொடை

கோச்சகக்கலிப்பா

அருட்பெருஞ்ஜோதி

சிருட்டிமுத லைந்தொழிலுன் செய்யவெனக் சருள்புரிந்தாய்
பொருட்டிகழ்நின் பெருங்கருணைப் புனிதவமு துவந்தளித்தாய்
தெருட்டிகழ்நின் னடியவர்தந் திருச்சபையி னடுவிருத்திக்
தெருட்டியெனை வளர்க்கின்றாய் சிற்சபையி னடிக்கின்றாய். 1

படைத்தன்முத லைந்தொழில்செய் பணியெனக்கே பணித்திட்டாய்
உடைத்தனிப்பே ரருட்ஜோதி யோங்கியமெய் ளமுதளித்தாய்
கொடைத்தனிப்போ கங்கொடுத்தாய் நின்னடியர் குழுநடுவே
திடத்தமர்த்தி வளர்க்கின்றாய் சிற்சபையி னடிக்கின்றாய். 2

அயன்முதலோ ரைவர்செயுந் தொழிலெனக்கே யளித்திட்டாய்
உபருறுபே ரருட்ஜோதித் திருவமுத முவந்தளித்தாய்
மபர்வுறுநின் னடியவர்தஞ் சபைநடுவே வைத்தருளிச்
செயமுறவே வளர்க்கின்றாய் சிற்சபையி னடிக்கின்றாய். 3

ஐவர்செயுந் தொழிலெனக்கே யளித்தாய்நின் னருளமுதன்
கைவரச்மிசப் துண்ணுவித்தாய் கங்கணமென் கரத்தணிந்தாய்
சைவரெனு நின்னடியார் சபைநடுவே வைத்தருளித்
தெய்வமென்று வளர்க்கின்றாய் சிற்சபையி னடிக்கின்றாய். 4

மூத்தொழிலோ வைந்தொழிலு முன்னிமகிழ்ந் தெனக்களித்தாய்
புத்தமுத முண்ணுவித்தார் பொன்னணிமெய் கரத்தணிந்தாய்
சித்தரெனு நின்னடியார் திருச்சபையி னடுவிருத்திச்
சித்துருவின் வளர்க்கின்றாய் சிற்சபையி னடிக்கின்றாய். 5

ஐந்தொழிலுன் செயப்பணித்தா யருளமுத முணவளித்தாய்
வெந்தொழிறீர்ந் தோங்கியநின் மெய்யடியார் சபைநடுவே
எந்தையுனைப் பாடிமகிழ்ந் தின்புறவே வைத்தருளிச்
செந்தமிழின் வளர்க்கின்றாய் சிற்சபையி னடிக்கின்றாய். 6

நான்முகன்நா ரணன்முதலா மைவர்தொழி னயந்தளித்தாய்
மேன்மைபெறு மருட்ஜோதித் திருவமுதும் வியந்தளித்தாய்
பான்மைபுறு நின்னடியார் சபைநடுவே பதித்தருளித்
தேன்மையொடு வளர்க்கின்றாய் சிற்சபையி னடிக்கின்றாய். 7

நாயெனவே திரிந்தேனை வலிந்தழைத்து நான்முகன்மால்
தூயபெருந் தேவர்செயுந் தொழில்புரியென் றமுதளித்தாய்
நாயகநின் னடியர்சபை நடுவிருக்க வைத்தருளிச்
சேயெனவே வளர்க்கின்றாய் சிற்சபையி னடிக்கின்றாய். 8

டல்வழங்கு புழுவதனிற் சிறியேனைப் புணர்ந்தருளிச்
சொல்வழங்கு தொழிலந்துந் துணிந்துகொடுத் தமுதளித்தாய்
கல்விபெறு நின்னடியர் கழகநடு வைத்தென்னைச்
செல்வமொடு வளர்க்கின்றாய் சிற்சபையி னடிக்கின்றாய். 9

தெருமனதோ றலந்தேனை யலையாமே சேர்த்தருளி
அருளொளியா லந்தாழிலுஞ் செயப்பணித்தே யமுதளித்து
பருவியகின் மெய்யடியார் சபைநடுவே வைத்தழியாத்
திருவளித்து வளர்க்கின்றாய் சிற்சபையி னடிக்கின்றாப். 10

அருட்பெருஞ்ஜோதி

93. வேண்டுகோள்

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

அருட்பெருஞ்ஜோதி

துனிநா ளனைத்துந் தொலைத்துவிட்டேன் தூக்கந் தவிர்த்தேன் சுகம்பவிக்குங்
கனிநா ளிதுவே யென்றறிந்தேன் கருத்து மலர்ந்தேன் களிப்புற்றேன்
தனிநா யகனே கனகசபைத் தலைவா ஞான சபாபதியே
இனிநா னிறையுங் கலக்கமுறே னினைக்க மாட்டே னெனக்கருளே. 1

அருளும் பொருளும் யான்பெறவே யடுத்த தருண மிதுவென்றே
தெருளும் படிநின் னருளுணர்த்தத் தெரிந்தேன் துன்பத் திகைப்பொழிந்தேன்
மருளு மனந்தா னென்னுடைய வசத்தே நின்று வயங்கியதால்
இருளுந் தொலைந்த தினிச்சிறிது மினைக்க மாட்டே னெனக்கருளே. 2

அருளே யுணர்த்த வறிந்துகாண்டே னடுத்த தருண மிதுவென்றே
இருளே தொலைந்த திடமனத்து மெனவிட் டகன்றே யொழிந்தனவால்
தெருளே சிற்றம் பலத்தாடுஞ் சிவமே யெல்லாஞ் செயவல்ல
பொருளே யினிநான் வீண்போது போக்க மாட்டேன் கண்டாயே. 3

கண்டே களிக்கும் பின்பாட்டுக் காலை யிதுவென் றருளுணர்த்த
கொண்டே யறிந்து கொண்டேனற் குறிகள் பலவுங் கூடுகின்ற
தொண்டே புரிவார்க் கருளுமருட் ஜோதிக் கருணைப் பெருமானே
உண்டே னமுத முண்கின்றே னுண்பேன் துன்பை யொழித்தேனே. 4

ஒழித்தே னவல மச்சமெலா மோடத் துறந்தே னுறுகணைலாங்
கழித்தேன் மரணக் களைப்பற்றேன் களித்தேன் பிறவிக் கடல்கடந்தேன்
பழித்தேன் சிற்றம் பலமென்னுப் பாட்டை மறந்தேன் பரப்பரத்தே
விழித்தேன் கருத்தின் படியெல்லாம் விளையா டுதற்கு விரைந்தேனே. 5

விரைந்து விரைந்து படிகடந்தேன் மேற்பா லமுதம் வியந்துண்டேன்
கரைந்து கரைந்து மனமுருகக் கண்ணீர் பெருகக் கருத்தலர்ந்தே
வரைந்து ஞான மணம்பொங்க மணிமன் றரசைக் கண்டுகொண்டேன்
திரைந்துநெகிழ்ந்த தோலுடம்புஞ் செழும்பொன் னுடம்பாய்த் திகழ்ந்தேனே. 6

தேனே கன்னற் செழும்பாகே யென்ன மிகவுந் தித்தித்தென்
ஊனே புகுந்தென் னுளத்திலமர்ந் துயிரிற் கலந்த வொருபொருளே
வானே நிறைந்த பெருங்கருணை வாழ்வை மணிமன் றுடையானே
நானே பாடிக் களிக்கின்றேன் நாட்டார் வாழ்த்த நானிலத்தே. 7

நிலத்தே யடைந்த விடரனைத்தும் நிமிடத் தொழித்தே னிலைபெற்றேன்
வலத்தே யழியா வரம்பெற்றேன் மணிமன் றேத்தும் வாழ்வடைந்தேன்
குலத்தே சமயக் குழியிடத்தே விழுந்திவ் வுலகங் குமையாதே
நலத்தே சுத்த சன்மார்க்க நாட்டா கின்ற னுட்டகத்தே. 8

அகத்தே கறுத்துப் புறத்துவெளுத் திருந்த உலக ரனைவரையுஞ்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந் திடுதற் கென்றே யெனையிந்த
யுகத்தே யிறைவன் வருவிக்க வுற்றே னருளைப் பெற்றேனே. 9

பெற்றே னென்று மிறவாமை பேதற் றவிர்ந்தே யிறையவனை
உற்றே கலந்தா னனவினை யுற்றே கலந்தே னென்றுனம்
எற்றே யடியேன் செய்ததவம் யாரே புரிந்தா ரின்னமுதுந்
துய்த்தே யுலகீர் நீவிரெலாம் வாழ்க வாழ்க துணிபற்றே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

94. அனுபவசித்தி

கலித்துறை

அருட்பெருஞ்ஜோதி

அப்பாவெனக் கெப்பில் வைப்பா விருக்கின்ற வாமுதே
இப்பாரிலென் றன்னை நீபெ வருவித் திசைவுடனே
தப்பாத தந்திர மந்திரம் யாவையுந் தந்துலகில்
வெப்பா னதுதவிர்த் தைந்தொழில் செய்ப விதித்தனையே. 1

விதித்தனை யென்னை நின்றன் மகனென விதித்துளத்தே
பதித்தனை யென்னுட் பதிந்தனை சிற்றம் பலநடமும்
உதித்தொளிர் பொன்னம் பலநடமு மொருங்கே யெனக்கே
கதித்தழி யாமையு மின்பமுங் கைவரக் காட்டினையே. 2

காட்டினை ஞான வமுதளித் தாய்நற் சுகசபை
ஆட்டினை யென்பக்க மாக்கினை மெய்ப்பொரு ளன்றுவந் து
நீட்டினை யென்று மழியா வரந்தந் துன்சபையிற்
கூட்டினை நான்முனஞ் செய்தவம் யாதது கூறுகவே. 3

கூறுகந் தாய்சிவ காமக் கொடியைக் கொடியில்வெள்ளை
ஏறுகந் தாயென யீன்றுகந் தாய்மெய் யிலங்குதிரு
நீறுகந் தாயுல கெல்லாந் தழைக்க நிமிர்சடைமேல்
ஆறுகந் தாய்மன்றி லாட்டுகந் தாயென்னை யாண்டவனே. 4

ஆண்டவ னேதிரு வம்பலத் தேயரு ளாலியற்றுந்
தாண்டவ னேயென்னைத் தந்தவ னேமுற்றுந் தந்தவனே
நீண்டவ னேயுயிர்க் கெல்லாம் பொதுவினில் நின்றவனே
வேண்ட வினைக வரங்கொடுத் தாட்கொண்ட மேலவனே. 5

மேலவ னேதிரு வம்பலத் தாடல் விளைக்குமலர்க்
காலவ னேகனற் கையவ னேநுதற் கண்ணவனே
மாலவ னேத்தும் சிவகாம சுந்தர வல்லியையோர்
பாலவ னேயெனைப் பாலக னுக்கிய பண்பினனே. 6

வாட்டமெல் லாந்தவிர்த் தேனருட் பேரொளி வாய்க்கப்பெற்றேன்
கூட்டமெல் லாம்புக ழம்பல வாணரைக் கூடப்பெற்றேன்
தேட்டமெல் லாம்வல்ல சித்திபெற் றேனிச் சகதலத்தே
ஆட்டமெல் லாம்விளை யாடுகின் றேனெனக் கார்சரியே. 7

நான்செய்த புண்ணியம் யார்செய் தனரிந்த நானிலத்தே
வான்செய்த தேவருங் காணுத காட்சி பகிழ்ந்துகண்டேன்
ஊன்செய்த மெய்பு முயிரு முணர்வு மொளிமயமாக்
கோன்செய வேபெற்றுக் கொண்டேனுண் டேனருட் கோனமுதே. 8

எனையான் மதித்துப் புகல்கின்ற தன்றிஞ் தெந்தைபிரான்
தனையான் மதித்திங்குப் பெற்றதல் வாழ்வது சாற்றுகின்றேன்
வினையான் மெலிந்த மெலிவையெல்லாம் விரைந்தே தவிர்த்துத்
தனையான் புணர்ந்திடச் சாகா வரத்தைதுந் தந்தனனே. 9

சிற்றம் பலத்தைத் தெரிந்துகொண் டேனெஞ் சிவனருளால்
குற்றம் பலவுந் தவிர்ந்துநின் றேனெண் குணக்குன்றிலே
வெற்றம் பலசெய் தவரெல்லாம் விரைந்து விரைந்துவந்தே
நற்றம் பலந்தரு வாயென் கின்ற ரிந்தானிலத்தே. 10

ஒன்றுகண் டேன்றிரு வம்பலத் தேயொளி யோங்குகின்ற
நன்றுகண் டேனுல கெல்லாந் தழைக்க நடம்புரிதல்
இன்றுகண் டேனென்றுஞ் சாகா வரத்தை யெனக்கருள
மன்றுகண் டார்க்கிந்த வாழ்வுள தென்று மகிழ்ந்தனனே. 11

95. இன்பத்திறன்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

உலகுபுகழ் திருவமுதந் திருச்சிற்றம் பலத்தே
உடையவரின் றுதவினர்கா லுண்டுகுறை தீர்ந்தேன்
இலகுசிவ போகவடி வாகிமகிழ் கின்றேன்
இனைப்பறியேன் றவிப்பறியே னிடர்செப்பி யறியேன்
விலகலிலாத் திருவினையீர் நீவிரெலாம் பொசித்தே
விளைந்துவம்மி னம்பலத்தே விளங்குதிருக் கூத்தின்
அலகறியாத் திறம்பாடி யாடுதுநா மிதுவே
அருளடையு நெறியெனவே தாகமமார்ப் பனவே. 1

மாதவத்தா னுன்பெற்ற வானமுதே யெனது
வாழ்வேயென் கண்ணமர்ந்த மணியேயென் மகிழ்வே
போதவத்தாற் கழித்தேதினை வலிந்துகலந் தாண்ட
பொன்னேபொன் னம்பலத்தே புனிதநடத் தரசே
தீதவத்தைப் பிறப்பிதுவே சிவமாகும் பிறப்பாய்ச்
செய்வித்தென் னவத்தையெலாந் தீர்த்தபெரும் பொருளே
பூதலத்தே யடிச்சிறியே னினதுதிரு வடிக்கே
புகழ்மாலை சூட்டுகின்றேன் புனைந்துகலந் தருளே. 2

அளந்திடவே தாகமத்தி னடியுநடு முடியும்
அப்புறமு மப்பாலு மதன்மேலும் விளங்கி
வளர்ந்திடுசிற் றம்பலத்தே வயங்கியபே ரொளியே
மாற்றறியாப் பொன்னேயென் மன்னேகண் மணியே
தளர்ந்தவெனை யக்கணத்தே தளர்வொழித்தா னந்தந்
தந்தபெருந் தகையேயென் றனித்தனித் துணைவா
உளந்தருசம் மதமான பணியிட்டா யெனக்கே
உன்பணியே பணியல்லா லென்பணிவே றிலையே. 3

நாடுகலந் தாள்கின்றே ரெல்லாரும் வியப்ப
நண்ணியெனை மாலேயிட்ட நாயகனே நாட்டில்
ஈடுகணைந் திடற்கரிதாந் திருச்சிற்றம் பலத்தே
இன்பநடம் புரிகின்ற இறையவனே யெனைநீ
பாடுகவென் றேடுகலந் தாடுகவென் றெனக்கே
பணியிட்டாய் நான்செய்பெரும் பாக்கியமென் றுவந்தேன்
கோடுதவ றுதுணைநான் பாடுதற்கிங் கேற்ற
குணப்பொருளு மிலக்கியமுங் கொடுத்துமகிழ்ந் தருளே. 4

நண்புடையா யென்னுடைய நாயகனே யெனது
நல்லுறவே சிற்சபையில் நடம்புரியுந் தலைவா
என்புடையா மறைமுடிக்கு மெட்டாநின் புகழை
யாதறிவேன் பாடுகவென் றெனக்கீகை விட்டாய்
பண்புடைநின் மெய்யன்பர் பாடியபே ரன்பிற்
பழுத்தபழம் பாட்டிலொரு பாட்டுமறி யேனே
தண்புடைநன் மொழித்திறனுஞ் சுவைப்பொருளு மவைக்கே
தக்கவிப லிலக்கியமுந் தந்தருள்வா யெனக்கே. 5

பணிந்தடங்கு மனத்தவர்பாற் பரிந்தமரும் பதியே
பாடுகின்றே ருள்ளகத்தே கூடுகின்ற குருவே
கணிந்தமறை பலகோடி யாகமம்பல் கோடி
கடவுளின தருட்புகழைக் கணிப்பதற்குப் பலகால்
துணிந்துதுணிந் தெழுந்தெழுந்து தொடர்ந்துதொடர்ந் தடிகள்
சுமந்துசுமந் திளைத்திளைத்துச் சொல்லியவல் லனவென்
றுணிந்தமொழி மாற்றிவலி தணிந்தவென்று லக்தா
அடியேனின் புகழுரைக்க லாவதுவோ வறிந்தே. 6

விதிப்பவர்கள் பலகோடி துதிப்பவர்பல் கோடி
மேலவர்க ளொருகோடி விரைந்துவிரைந் துனையே
மதிப்பவர்க ளாகியவர் மதிபாலே பலகால்
மதித்துமதித் தவர்மதிபெண் மதியாகி யலந்தே
துதிப்பதுவே நலமெனக்கொண் டிற்றைவரை யேற்ற
சொற்பொருள்கள் காலுதே சுழல்கின்று ரென்றுல்
குதிப்பொழியா மனச்சிறிய குரங்கொடுழல் கின்றேன்
குறித்துரைப்பே னென்னவுளங் கூசுகின்ற தரசே. 7

ஒளியாகி யுள்ளொளியா யுள்ளொளிக்குள் ளொளியாய்
ஒளியொளியி லெளியாயவ் வொளிக்குளுமோ ரொளியாய்
வெளியாகி வெளிவெளியாய் வெளிபிடைமேல் வெளியாய்
மேல்வெளிமேற் பெருவெளியாய்ப் பெருவெளிக்கோர் வெளியாய்
அளியாகி யதுவாகி யதுவுமல்லா தாகி
அப்பாலா யப்பாலு மல்லதுவாய் நிறைவாந்
தளியாகி யெல்லாமாய் விளங்குகின்ற ஞான
சபைத்தலைவா நின்னியலைச் சாற்றுவதெவ் வணமே. 8

வாக்கொழிந்து மனமொழிந்து மதியொழிந்து மதியின்
வாதனைபு மொழிந்தறிவாய் வயங்கிநின்ற விடத்தும்
போக்கொழிந்தும் வரவொழிந்தும் பூரணமா யதுவும்
போனபொழு துள்ளபடி புகலுவதெப் படியோ
நீக்கொழிந்த நிறைவேமெய்ந் நிலையேயென் னுடைய
நேயமே யானந்த நிருத்தமிடும் பதியே
வெக்கொழிந்தா ருளத்திருக்கு மிறையேயென் குருவே
எல்லாமா யல்லதுமா யிலங்கியமெய்ப் பொருளே. 9

என்னியலே யானறியே னிவ்வுலகி னியலோர்
எள்ளளவுந் தானறியே னெல்லாமு முடையோய்
நின்னியலு மறிவேனே வறிந்தவனே போல
நிகழ்த்துகின் றேன் பிள்ளாயென நிலைப்பெயர்பேற் றிருந்தேன்
தன்னியலாந் தனிஞான சபைத்தலைமைப் பதியே
சத்தியனே நித்தியனே தயாநிதியே யுலகம்
பின்னியன்மா னிடப்பிள்ளை பேச்சிலுமோர் பறவைப்
பிறப்பினுறுங் கிளிப்பிள்ளைப் பேச்சுவக்கின் றதுவே. 10

அருட்பெருஞ்ஜோதி

96. சிவயோகநிலை

நேரிசை வெண்பா

அருட்பெருஞ்ஜோதி

மதிமண்ட லத்தமுதம் வாயார வுண்டே
பதிமண்ட லத்தரசு பண்ணை — நிதியே
நவநேய மாக்கு நடராஜ னேயெந்
சிவனே கதவைத் திற. 1

இந்தா ரருளமுதம் யானருந்தல் வேண்டுமிங்கே
நந்தா மணிவிளக்கே ஞானசபை — யெந்தாயே
கோவே யெனது குருவே யெண்ணயாண்ட
தேவே கதவைத் திற. 2

சாகா வருளமுதந் தானருந்தி நான்களிக்க
நாகா திபர்சூழ் நடராஜா — வெகா
பவனே பரனே பராபரனே யெங்கள்
சிவனே கதவைத் திற. 3

அருளோங்கு தண்ணமுத மன்பா லருந்தி
மருணீங்கி நான்களித்து வாழப் — பொருளாந்
தவநேயர் போற்றுந் தயாநிதியே யெங்கள்
சிவனே கதவைத் திற. 4

வானேர்க் கரிதெனவே மாமறைகள் சாற்றுகின்ற
ஞானே தயவமுத நானருந்த — வானந்
திறப் பாவலர்போற்றுஞ் சிற்றம் பலவா
சிறப்பா கதவைத் திற. 5

எல்லாமும் வல்லசித்தென் றெல்லா மறைகளுஞ்சொல்
நல்லா ரமுதமது நானருந்த — நல்லார்க்கு
நல்வாழ் வளிக்கு நடராயா மன்றுங்கு
செல்வா கதவைத் திற. 6

ஏழ்நிலைக்கு மேற்பா லிருக்கின்ற தண்ணமுதம்
வாழ்நிலைக்க காலுண்டு மாண்புறவே — கேழ்நிலைக்க
ஆவாவென் றென்னையுவக் காண்டதிரு வம்பலமா
தேவா கதவைத் திற. 7

ஈன வுலகத் திடர்நீங்கி யின்புறவே
ஞான வமுதமது கானருந்த — ஞான
உருவே யுணர்வே யொளியே வெளியே
திருவே கதவைத் திற. 8

தீரையோ தசத்தே திகழ்கின்ற வென்றே
வரையோது தண்ணமுதம் வாய்ப்ப — உரையோது
வானேயெம் மானேபெம் மானே மணிமன்றிற்
றேனே கதவைத் திற. 9

ஜோதிமலி மேல்வீட்டிற் றூய திருவமுதம்
பேதினிமே ணுண்ண வேண்டினேன் — ஓதரிய
ஏகா வனேகா வெழிற்பொதுவில் வாழ்ஞான
நேகா கதவைத் திற. 10

அருட்பெருஞ்ஜோதி

97. திருவருட்பேறு

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

சிவங் கனிந்தளிக் நம்பலத் தருணடங் செய்கின்ற பெருவாழ்வே
நவங் கனிக்கமே னிஜகதி விளங்கிய நண்பனே யடியேன்றன்
தவங் கனிந்தநீதார் விண்ணப்பத் திருச்செவி தரித்தருள் புரிந்தாயே
பவங் கனிக்கவிவ் வடிவமே படுவெருப் பதிவடி வாமாறே. 1

விளங்கு கின்றசிற் றம்பலத் தருணடம் விளைக்கின்ற பெருவாழ்வே
களங்க மில்லதோ ருளநடு விளங்கிய கருத்தனே யடியேனுன்
விளம்பி நின்றதோர் விண்ணப்பத் திருச்செவி வியந்தருள் புரிந்தாயே
உளங்கொ ளிவ்வடி விம்மையே மந்திர வொளிவடி வாமாறே. 2

விஞ்சு கின்றசிற் றம்பலத் தருணடம் விளைக்கின்ற பெருவாழ்வே
எஞ்ச லற்றமா மறைமுடி விளங்கிய வென்னுயிர்த் துணையேநான்
அஞ்ச லின்றியே செய்தவின் ணப்பமேற் றகங்களித் தளித்தாயே
தஞ்சு மிவ்வுட லழிவுறு தோங்குமெய்ச் சுகவடி வாமாறே. 3

ஓங்கு கின்றசிற் றம்பலத் தருணட மொளிர்கின்ற பெருவாழ்வே
ம்தஙகு லாவிய தெள்ளமு தேதபெருஞ் செல்வமே சிவமேநின்
பாங்க னேன்மொழி விண்ணப்பந் திருச்செவி பதித்தருள் புரிந்தாயே
ஈங்கு வீழுட லென்றுமீ ழாதொளி ரியல்வடி வாமாறே. 4

இலங்கு கின்றசிற் றம்பலத் தருணட மிடுகின்ற பெருவாழ்வே
துலங்கு பேரருட் ஜோதியே ஜோதிபுட் டுலங்கிய பொருளேயென்
புலங்கொள் விண்ணப்பந் திருச்செவிக் கேற்றருள் புரிந்தனை யிஞ்ஞான்றே
அலங்கு மிவ்வுட லெற்றையு மழிவுறு வருள்வடி வாமாறே. 5

சிறந்த பேரொளித் திருச்சிற்றம் பலத்திலே திகழ்கின்ற பெருவாழ்வே
துறந்த பேருளத் தருட்பெருஞ் ஜோதியே சுகப்பெரு நிலையோனான்
மறந்தி டாதுசெய் விண்ணப்பந் திருச்செவி மடித்தருள் புரிந்தாயே
பிறந்த விவ்வுட லென்றுமிங் கழிவுறுப் பெருமைபெற் றிடுமாறே. 6

வயங்கு கின்றசிற் றம்பலந் தன்னிலே வளர்கின்ற பெருவாழ்வே
மயங்கு றுதமெய் யறிவிலே விளங்கிய மாமணி விளக்கேயிங்
கியங்கு சிற்றடி யேன்மொழி விண்ணப்ப மேற்றருள் புரிந்தாயே
தயங்கு மிவ்வுட லெற்றையு மழிவுறுத் தனிவடி வாமாறே. 7

தீட்டு கின்றசிற் றம்பலந் தன்னிலே திகழ்கின்ற பெருவாழ்வே
காட்டு கின்றதோர் கதிர்நடு விளங்கிய கடவுளே யடியேனுன்
றீட்டி நின்றதோர் விண்ணப்பந் திருச்செவி நிறைத்தருள் புரிந்தாயே
பூட்டு மிவ்வுட லெற்றையு மழிவுறுப் பொன்வடிவா மாறே. 8

தடையி லாதசிற் றம்பலந் தன்னிலே தழைக்கின்ற பெருவாழ்வே
கடையி லாப்பெருங் கதிர்நடு விளக்குமோர் கடவுளே யடியேனுன்
னிடைய றுதுசெய் விண்ணப்பந் திருச்செவிக் கேற்றருள் புரிந்தாயே
புடையி னிவ்வுட லெற்றையு மழிவுறுப் பொன்வடி வாமாறே. 9

கையி னெல்லிபோல் விளங்குசிற் றம்பலங் கலந்தருள் பெருவாழ்வே
மெய்யி லேவிளைந் தோங்கிய போகமே மெய்ப்பெரும் பொருளேனான்
ஐய மற்றுரைத் திட்டவின் ணப்பமேற் றளித்தனை யிஞ்ஞான்றே
செய்பு மிவ்வுட லென்றுமிங் கழிவுறுச் சீவவடி வாமாறே. 10

அருட்பெருஞ்ஜோதி

98. கைம்மாறின்மை

கலித்துறை

அருட்பெருஞ்ஜோதி

நன்றே தருந்திரு நாடக நாடொறு ஞானமணி
மன்றே விளங்கப் புரிகின்ற வானந்த வார்கழலே
இன்றே அருட்பெருஞ் ஜோதிதந் தாண்டரு ளெய்துகணம்
ஒன்றே யெனினும் பொறேனரு ளாணை யுரைத்தனனே. 1

தற்ஜோதி யென்னுயிர்ச் சத்திய ஜோதித் தனித்தலைமைச்
சிற்ஜோதி மன்மருளிர் தீபக ஜோதியென் சித்தத்துள்ளே
நற்ஜோதி ஞானகன் னுடக ஜோதி நலம்புரிந்த
பொற்ஜோதி யானந்த பூரண ஜோதியெம் புண்ணியனே. 2

திரைகண்ட மாயைக் கடல்கடந் தேனருட் சீர்விளங்குங்
கரைகண் டடைந்தன னக்கரை மேற்சர்க் கரைகலந்த
உரைகண்ட தெள்ளமு தண்டே னருளொளி யோங்குகின்ற
வரைகண்ட தன்மிசை யுற்றே னுலக மதித்திடவே. 3

மனக்கேத மாற்றிவெம் மாயையை நீக்கி மலிந்தவினை
தனக்கே விடைகொடுத் தானவந் தீர்த்தருட் டண்ணமுதம்
எனக்கே மிகவு மளித்தருட் ஜோதியு மீந்தழியா
இனக்கேண்மை யுந்தந்தென் னுட்கலந் தான்மன்றி லென்னப்பனே. 4

வாதித்த மாயை விணையா ணவமெனும் வன்மலத்தைச்
சேதித்தென் னுள்ளந் திருக்கோயி லாக்கொண்டு சித்தியெலாம்
போதித் துடம்பையும் பொன்னுடம் பாக்கிநற் புத்தமுதுஞ்
சாதித் தருளிய நின்னருட் கியான்செயத் தக்கதென்னே. 5

செத்தா ரெழுகெனச் சிந்தைசெய் முன்னஞ் சிரித்தெழவே
இத்தா ரணியி லருட்பெருஞ் ஜோதி யெனக்களித்தாய்
எத்தாலு மென்று மழியா வடிவுதந் தென்னுணின்னை
வைத்தாய் மணிமன்ற வாணகின் பேரருள் வாய்மையென்னே. 6

ஆக்கலொன் றேதிதாழி லந்தையுந் தந்திந்த வண்டபிண்ட
வீக்கமெல் லாஞ்சென்று னிச்சையின் வண்ணம் விளங்குகநீ
எக்கழு றேலென் றுரைத்தருட் ஜோதியு மீந்தெனக்கே
ஊக்க மெலாமுற வுட்கலந் தானென் னுடையவனே. 7

என்னே யெம்மீதம் பெருமான் கருணை யிருந்தவண்ணந்
தன்னே ரிலாத வருட்பெருஞ் ஜோதியைத் தந்துலகுக்
கன்னே யெனவிளை யாடுக வென்றழி. யாதசெழும்
பொன்னேர் வடிவு மளித்தென் னுயிரிற் புணர்ந் தனனே. 8

அச்சோ வென்னென்று புகல்வேனென் னுண்டவ னம்பலத்தான்
எச்சோ தனையு மியற்றுதென் னுட்கலந் தின்னருளாம்
மெய்ச்சோதி யீந்தெனை மேனிலைக் கேற்றி விரைந்துடம்பை
இச்சோதி யாக்கி யழியா நலந்தந்த விச்சையையே. 9

வாழியென் னுண்டவன் வாழியெங் கோனருள் வாய்மையென்றும்
வாழியெம் மான்புகழ் வாழியென் னுதன் மலர்ப்பதங்கள்
வாழிமெய்ச் சுத்தசன் மார்க்கப் பெருநெறி மாண்புகொண்டு
வாழியிவ் வையமும் வானமு மற்றவும் வாழியவே. 10

99. குறையிரத்தல்

நேரிசை வெண்பா

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ் ஜோதி யபய மபயம்
பொருட்பெருஞ் ஜோதிப் புணைதந் — திருட்பெருங்கார்
அள்ளற் கடல் கடத்தி யக்கரைமே லானந்தங்
கொள்ளற் கபயங் கொடு. 1

ஆரமுதந் தந்தென்னுள் ளச்சமெலாந் தீர்த்தருளிச்
சீரமுத வண்ணத் திருவடிகண் — டார்வமிகப்
பாடி யுடம்புபிரும் பத்திவடி வாகிக்கூத்
தாடிக் களிக்க வருள். 2

இடர்தொலைந்த ஞான்றே யினவுந் தொலைந்த
சுடர்கலந்த ஞான்றே சுகமும் — முடிகியுற்ற
தின்னே களித்திடுது மென்னெஞ்சே யம்பலவன்
பொன்னேர் பதத்தைப் புகழ். 3

ஈனமெலாந் தீர்ந்தனவே யின்பமெலா மெய்தினவே
ஊனமெலாங் கைவிட் டொழிந்தனவே — ஞானமுளோர்
போற்றுஞ்சிற் றம்பலத்தும் பொன்னம் பலத்துநடம்
போற்றுமப் படிபெற்ற போது. 4

உள்ளக் கவலையெலா மோடி யொழிந்தனவே
வள்ளற் பெருஞ்ஜோதி வாய்த்தனவே — கள்ளக்
கருத்தொழிய ஞானக் கருத்தினைந்து நாதன்
பொருத்தமுற்றென் னுள்ளமர்ந்த போது. 5

ஊன வுடம்பே யொளியுடம்பா யோங்கிநிற்க
ஞான வமுதனக்கு நல்கியதே — வானப்
பொருட் பெருஞ்ஜோதிப் பொதுவில் விளங்கும்
அருட்பெருஞ் ஜோதி யது. 6

எல்லாஞ் செய்வல்லா னெந்தையரு ளம்பலவன்
நல்லா னெனக்குமிக நன்களித்தான் — எல்லாருங்
கண்டு வியக்கின்றூர் கருணைத் திருவமுதம்
உண்டுவியக் கின்றே னுவந்து. 7

ஏசா வுலகவர்க ளெல்லாருங் கண்டுநிற்கத்
தேசா ரொளியார் சிறியேனை — வாசாம
கோசரத்தி னேற்றிக் கொடுத்தா னருளமுதம்
ஈசனத்த னம்பலவ னே. 8

ஐயனெனக் கீந்த வதிசயத்தை யென்புகல்வேன்
பொய்யடியேன் குற்றம் பொறுத்தருளி — வையத்
தழியாம லோங்கு மருள்வடிவ நாடோ்
மொழியாடு தற்கு முனம். 9

ஒப்புயர்வொன் றில்லா வொருவனருட் ஜோதி
அப்பனெலாம் வல்லதிரு வம்பலத்தான் — இப்புவியில்
வந்தா னிரவி வருதற்கு முன்கருணை
தந்தானென் னுட்கலந்தான் முன். 10

ஓத வுலவா வொருதாழன் தோண்டருளன்
சாத லொழித்தென்னைத் தாங்கிப் — பூதலத்தில்
ஐந்தாழில்செய் யென்றே அருட்ஜோதிக் கோலளித்தான்
வெந்தாழில்போய் நீங்க விரைந்து. 11

ஔவியந்தீ ருள்ளத் தறிஞரெலாங் கண்டுவக்கச்
செவ்வியசன் மார்க்கஞ் சிறந்தோங்க — ஓவ்வி
விரைந்துவந்தென் னுட்கலந்து மெய்யேமெய்ப் யாக
நிறைந்தான்முப் பின்று னிலத்து. 12

ஜோதிப் பிழம்பே சுகவடிவே மெய்ஞ்ஞான
நீதிப் பொதுவே நிறைநிதியே — ஜோதிக்
கடவுளே மாயைபிரு கன்மமிரு ளெல்லாம்
விடவுளே நின்று விளங்கு. 13

துன்பமெலாந் தீர்ந்த சுகமெலாங் கைதந்த
அன்பரெலாம் போற்ற அருணடஞ்செய் — இன்பன்
அருட்பெருஞ்சிற் ஜோதிதிரு வம்பலத்தான் வேதப்
பொருட்பெருஞ் சித்தென்னுட் புகுந்து. 14

தூக்கங் கெடுத்துச் சுகங்கொடுத்தா னென்றனக்கே
ஆக்கமென வோங்கும்பொன் னம்பலத்தான் — ஏக்கமெலாம்
நீங்கினே னெண்ண நிரம்பினேன் பொன்வடிவந்
தாங்கினேன் சத்தியமாத் தான். 15

துன்பங் கெடுத்துச் சுகங்கொடுத்தா னென்றனக்கே
அன்பகத்தில் வாழுஞ்சிற் றம்பலத்தான் — இன்புருவந்
தாங்கினேன் சாகாத் தனிவடிவம் பெற்றிருளியால்
ஓங்கினே னுண்மை யுரை. 16

அருட்பெருஞ்ஜோதி

100. நடராஜபதி மாலை

பதினன்குசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அருணிலை விளங்குசிற் றம்பல மெனுஞ்சிவ
சுகாதீத வெளி நடுவிலே
அண்டபகி ரண்டகோ டிகளுஞ் சராசர
மனேத்துமவை யாக்கன் முதலாம்
பொருணிலைச் சத்தரொடு சத்திக ளனந்தமும்
பொற்பொடு விளங்கி யோங்கப்
புறப்புற மகப்புறம் புறமகமி வற்றின்மேற்
பூரண கார மாகித்
தெருணிலைச் சச்சிதா னந்தகர ணாதிகள்
சிறப்பமுத லந்த மின்றித்
திகழ்கின்ற மெய்ஞ்ஞான சித்தியனு பவநிலை
தெளிந்திட வயங்கு சுடரே
சுருணிலைக் குழலம்மை யானந்த வல்லிசிவ
சுந்தரிக் கினிய துணையே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. 1

என்னிய லுடம்பிலே யென்பிலே யன்பிலே
இதயத்தி லேத யபிலே
என்னுயிரி லேயென்ற னுயிரினுக் குயிரிலே
என்னியற் குணம தனிலே
இன்னியலென் வாக்கிலே யென்னுடைய நாக்கிலே
என்செவிப் புலனி சையிலே
என்னிருகண் மணியிலே யென்கண்மணி யொளியிலே
என்னனு பவந் தன்னிலே
தன்னியலென் னறிவிலே யறிவினுக் கறிவிலே
தானே கலந்து முழுதுந்
தன்மயம தாக்கியே தித்தித்து மேன்மேற்
றதும்பிநிறை கின்ற வமுதே
துன்னிய பெருங்கருணை வெள்ளமே யழியாத
சுகமே சுகா தீதமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. 2

உடலெலா முயிரெலா முளமெலா முணர்வெலாம்
உள்ளன வெலாங் கலந்தே
ஒளிமயம தாக்கியிரு ளீக்கியெக் காலத்தும்
உதயாத்த மான மின்றி
இடலெலாம் வல்லசிவ சத்திகர ணங்கியாய்
ஏகமா யேக போக
இன்பநிலை யென்னுமொரு சிற்சபையி னடுவே
இலங்கிநிறை கின்ற சுடரே
கடலெலாம் புவியெலாங் கனலெலாம் வளியெலாங்
ககனலாங் கண்ட பரமே
காணுத பொருளெனக் கலியெலாம் புகலவென்
கண்காண வந்த பொருளே
தொடலெலாம் பெறவெனக் குள்ளும் புறத்துமெய்த்
துணையாய்ப் விளங்கு மறிவே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. 3

மெய்தழைய வுள்ளங் குளிர்ந்துவகை மாறுது
மேன்மேற் கலந்து பொங்க
விச்சையறி வோங்கவென் னிச்சையறி வணுபவம்
விளங்குவறி வறிவ தாகி
உய்தழை வளித்திகலாம் வல்லசித் ததுதத்
துவட்டாது ளூறி யூறி
ஊற்றெழுந் தென்னையுங் காணக்கி யென்னுளே
உள்ளபடி யுள்ள வழுதே
கைதழைய வந்தவான் கனியே யெலாங்கண்ட
கண்ணே கலந்த கதிவே
கற்பனையி லாதிகாங்கு சிற்சபா மணியே
கணிப்பருங் கருணை நிறைவே
துய்தழை பரப்பித் தழைந்ததரு வேயருட்
சுகபோக யோக வருளே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. 4

எண்ணிலா வண்டபகி ரண்டத்தின் முதலிலே
இடையிலே கடையி லேமேல்
எற்றத்தி லேயவைபு ளூற்றத்தி லேதிரண்
டெய்துவடி வந்தன் னிலே
கண்ணுறு வருவிலே யுருவிலே குருவிலே
கருவிலே தன்மை தனிலே
கலியாதி நிலையிலே சத்திசத் தாகிக்
கலந்தோங்கு கின்ற பொருளே

தெண்ணிலாக் காந்தமணி மேமைடவாய்க் கோமைடவாய்ச்
சேர்ந்தனு பவித்த சுகமே
சித்தெலாஞ் செயவல்ல தெய்வமே யென்மனத்
திருமா ளிகைத் தீபமே
துண்ணுருச் சாந்தசிவ ஞானிக ளெளத்தே
சுதந்தரித் தொளிசெய் யொளியே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. 5

அம்புவியி லேபுவியி னடியிலே முடியிலே
அம்மண்ட லந்தன் னிலே
அகிலத்தி லேபுவியி னகலத்தி லேயவைக்
கானவடி வாதி தனிலே
விம்பமுற வேநிறைந் தாங்கவை நிகழ்ந்திட
விளக்குமவை யவையா கியே
மேலுமவை யவையாகி யவையவை யலாததொரு
மெய்ந்நிலைபு மான பொருளே
தம்பமிசை யெனேயேற்றி யழுதூற்றி யழியாத்
தலத்திலுற வைத்த வரசே
சாகாத வித்தைக் கிலக்கணமி லக்கியந்
தாழ் யிருந்த பரமே
தொம்பதமு முடனுற்ற தற்பதமு மசிபதச்
சுகமுமொன் றுன சிவமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. 6

நீரிலே நீருற்ற நிறையிலே நிறைபுற்ற
நிலையிலே நுண்மை தனிலே
நிகழ்விலே நிகழ்வுற்ற திகழ்விலே நிழலிலே
நெகிழிலே தண்மை தனிலே
ஊரிலே யங்நீரி னுப்பிலே யுப்பிலுறும்
ஒண்சுவையிலே திரை யிலே
உற்றநீர்க் கீழிலே மேலிலே நடுவிலே
உற்றிய லுறுத்து மொளியே
காரிலே யொருகோடி பொழியினுந் துணைபெறுக்
கருணைமழை பொழி மேகமே
கனகசபை நடுநின்ற கடவுளே சிற்சபைக்
கண்ணேணங்கு மொரு தெய்வமே
தூரிலே பலமளித் தூரிலே வளர்கின்ற
சுகசொருப மான தருவே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. 7

ஒள்ளிய நெருப்பிலே யுப்பிலே யொப்பிலா
ஒளியிலே சுடரிலே மேல்
ஓட்டிலே கூட்டிலே யுள்ளாடும் ஆட்டிலே
யுறுமாதி யந்தத் திலே
தெள்ளிய நிறத்திலே யருவத்தி லேயெலாஞ்
செயவல்ல செய்கை தனிலே
சித்தாய் விளங்கியுப சித்தாய சத்திகள்
சிறக்கவளர் கின்ற வொளியே
வள்ளிய சிவானந்த மயமே சுகாதீத
வானமே ஞான மயமே
மணியேயென் னிருகண்ணு ணுண் மணியேயென் னுயிரேயென்
வாழ்வேயென் வாழ்க்கை வைப்பே
துள்ளிய மனப்பேயை யுள்ளுற வடக்கிமெய்ச்
சுகமெனக் திந்த துணையே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிவட ராஜ பதியே. 8

அறைகின்ற காற்றிலே காற்றுப்பி லேகாற்றின்
ஆதிகடு வந்தத் திலே
ஆனபல பலகோடி சத்திகளி னுருவாகி
ஆடுமத னுட்டத் திலே
உறைகின்ற நிறைவிலே யூக்கத்தி லேகாற்றி
னுற்றபல பெற்றி தனிலே
ஓங்கியவை தாங்குமிரு பாங்கினுறு சத்தர்கட்
குபகரித் தருளு மொளியே
குறைகின்ற மதிநின்று கூடுவோ ராயிரங்
கோடிகர ணங்கள் வீசிக்
குலவுமுத மபமாகி யெவ்வுயிரி டத்துங்
குலாவுமொரு தண்ம தியமே
துறைநின்று பொறையொன்று தூயதறி வாற்கண்ட
சொருபமே துரிய பதமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிவட ராஜ பதியே. 9

வானிலே வானுற்ற வாய்ப்பிலே வானினரு
வத்திலே வானிய லிலே
வானடியி லேவானி னடுவிலே முடியிலே
வண்ணத் திலே கலையிலே
மானிலே நித்திய வலத்திலே பூரண
வரத்திலே மற்றை யதிலே
வளரனந் தானந்த சத்திசத் தர்கடம்மை
வைத்தவரு ளுற்ற வொளியே

தேனிலே பாலிலே சர்க்கரையி லேகனித்
திரளிலே தித்திக்கு மோர்
தித்திப்பெ லாங்கூட்டி யுண்டாலு மொப்பெனச்
செப்பிடாத் தெள் ளமுதமே
தூநிலா வண்ணத்தி லுள்ளோங்கு மானந்த
சொருபமே சொருப சுகமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. 10

என்றிரவி தன்னிலே யிரவிசொரு பத்திலே
இயலுரு விலேய ருவிலே
எறிட்ட சுடரிலே சுடரினுட் சுடரிலே
எரியாத பத்திர ளிலே
ஒன்றிரவி யொளியிலே யோங்கொளியி ளெளியிலே
ஒளியொளியி ளெளிநடு விலே
ஒன்றுகி நன்றுகி நின்றுடு கின்றவரு
ளொளியே யெனுற்ற துணையே
அன்றிரவில் வந்தெனக் கருளொளி யளித்தவென்
ஐயனே யரசனே யென்
அறிவனே யமுதனே யன்பனே யின்பனே
அப்பனே யருளா ளனே
துன்றியவென் னுயிரினுக் கினியனே தனியனே
தூயனே யென்னே யனே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. 11

அணிமதியி லேமதியி னருவிலே யுருவிலே
அவ்வுருவி னுருவத் திலே
அமுதகிர ணத்திலே யக்கிரண வொளியிலே
அவ்வொளியி ளெளி தன்னிலே
பணிமதியி னமுதிலே யவ்வமுதி னிப்பிலே
பக்கநடு வடிமுடி யிலே
பாங்குபெற வோங்குமொரு சித்தெ யென்னுள்ளே
பலித்த பரமா னந்தமே
மணியொளியி லாடுமரு ளொளியே நிலைத்தபெரு
வாழ்வே நிறைந்த மகிழ்வே
மன்னேயெ னன்பான பொன்னேயென் னன்னேயென்
வரமே வயங்கு பரமே
துணிமதியி லின்பவனு பவமா யிருந்தகுரு
துரியமே பெரிய பொருளே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. 12

அண்டவொரு மைப்பகுதி யிருமையாம் பகுதிமேல்
ஆம்கா ரியப்ப குதியே
ஆதிபல பகுதிக ளனந்தகோ டிகளினடு
வடியிணடு முடியு மவையிற்
கண்டபல வண்ணமுத லானவக நிலையுங்
கணித்தபுற நிலையு மேன்மேற்
கண்டதிக ரிக்கின்ற கூட்டமும் விளங்கக்
கலந்துநிறை கின்ற வொளியே
கொண்டபல கோலமே குணமே குணங்கொண்ட
குறியே குறிக்க வொண்ணைக்
குருதூரிய மேசுத்த சிவதூரிய மேயெலாங்
கொண்டதனி ஞான வெளியே
தொண்டரித யத்திலே கண்டென வினிக்கின்ற
சுகமோக வணுமோ கமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிதட ராஜ பதியே. 13

கரையிலாக் கடலிலே கடலுப்பி லேகடற்
கடையிலே கடலி டையிலே
கடன்முதலி லேகடற் றிரையிலே நுரையிலே
கடலிலாசை யதனடி யிலே
வரையிலா வெள்ளப் பெருக்கத்தி லேவட்ட
வடிவிலே வண்ண மதிலே
மற்றதன் வளத்திலே யுற்றபல சத்தியுள்
வயங்கியவை காக்கு மொளியே
புரையிலா வொருதெய்வ மணியேயெ னுள்ளே
புகுந்தறி வளித்த பொருளே
பொய்யாத செல்வமே நையாத கல்வியே
புடம்வைத் திடாத பொன்னே
மையிலா வாழ்வே மறைப்பிலா வைப்பே
மறுப்பிலா தருள் வள்ளலே
மணிமன்றி னடுநின்ற வொருதெய்வ மேயெலாம்
வல்லநட ராஜ பதியே. 14

உற்றியலு மணுவாதி மலையந்த மானவுட
லுற்றகரு வாகி முதலாய்
உயிரா யுயிர்ச்சுரரு முயிராகி யுணர்வாகி
உணர்வுரணர் வாகி யுணர்வுட்
பற்றியலு மொளியாகி யொளியினிணி யாகியம்
பரமாய்ச் சிதம்பர முமாய்ப்
பண்புறு சிதம்பரப் பொற்சபையு மாயதன்
பாங்கோங்கு சிற்சபையு மாய்த்

தெற்றியலு மச்சபையி னடுவினட மிடுகின்ற
சிவமாப் விளங்கு பொருளே
சித்தெலாஞ் செய்யெனத் திருவாக்க ளித்தெனைத்
தேற்றியருள் செய்த குருவே
மற்றியலு மாகியெனை வாழ்வித்த மெய்ஞ்ஞான
வாழ்வேயென் வாழ்வின் வரமே
மணிமன்றி னடுநின்ற வொருதெய்வ மேயெலாம்
வல்லநட ராஜ பதியே. 15

எவ்வுலகு மெவ்வுயிரு மெப்பொருளு முடையதாய்
எல்லாஞ்செய் வல்ல தாகி
இயற்கையே புண்மையா யியற்கையே யறிவாய்
இயற்கையே யின்ப மாகி
அவ்வயி னனுதியே பாசமில தாய்ச்சுத்த
அருளாகி யருள் வெளியிலே
அருணெறி விளங்கவே யருணடஞ் செய்தருள்
அருட்பெருஞ் ஜோதி யாகிக்
கவ்வையறு தனிமுதற் கடவுளா யோங்குமெய்க்
காட்சியே சருணை நிறைவே
கண்ணேயெ னன்பிற் கலந்தெனை வளர்க்கின்ற
கதியே கனிந்த கனியே
வெவ்வினை தவிர்த்தெனரு விளக்கேற்றி யென்னுளே
வீற்றிருந் தருளு மாசே
மெய்ஞ்ஞான நிலைநின்ற விஞ்ஞான கலருளே
மேவுநட ராஜ பதியே. 16

நாதாந்த போதாந்த யோகாந்த வேதாந்த
நண்ணுறு கலாந்த முடனே
நவில்கின்ற சித்தாந்த மென்னுமா றந்தத்தின்
ஞானமெய்க் கோடி நாட்டியே
மூதாண்ட கோடிக ளொடுஞ்சரா சரமெலாம்
முன்னிப் படைத்தன் முதலாம்
முத்தொழிலு மிருதொழிலு முன்னின்று யற்றியைம்
மூர்த்திகளு மேவல் கேட்ப
வாதாந்த முற்றபல சத்திகளொ டுஞ்சத்தர்
வாய்ந்துபணி செய்ய வின்ப
மாராச்சி யத்திலே திருவருட் செங்கோல்
வளத்தொடு செலுத்து மாசே
சூதாண்ட நெஞ்சினிற் சேராத நேயமே
துரியநடு நின்ற சிவமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
ஜோதிநட ராஜ பதியே. 17

ஒருபிர மனண்டங்க ளடிமுடிப் பெருமையே
உன்ன முடியா வவற்றின்
ஓரா யிரங்கோடி மாலண்ட மரனண்டம்
உற்றகோ டாகோ டியே
திருகலறு பலகோடி யீசனண் டஞ்சதா
சிவவண்ட மெண்ணி றந்த
திகழ்கின்ற மற்றைப் பெருஞ்சத்தி சத்தர்தஞ்
சிரண்ட மென்புக லுகவன்
உருவுறுமிவ் வண்டங்க ளத்தனையும் அருள்வெளியில்
உறுசிறு வணுக்க ளாக
ஊடசைய வவ்வெளியி னடுநின்று நடனமிடும்
ஒருபெருங் கருணை யரசே
மருவியெனை யாட்கொண்டு மகனுக்கி யழியா
வரந்தந்த மெய்த்தந் தையே
மணிமன்றி னடுநின்ற வொருதெய்வ மேயெலாம்
வல்லநட ராஜ பதியே. 18

வரவுசெல வற்றபரி பூரண காரசுக
வாழ்க்கைமுத லாவ னைக்கு
வாய்த்தபொரு ளேயென்கண் மணியேயெ னுள்ளே
வபங்கியாளிர் கின்ற வொளியே
இரவுபக லற்றவொரு தருணத்தி லுற்றபே
ரின்பமே யன்பின் விளைவே
என்றந்தை யேயெனது குருவேயெ னேயமே
என்னுசை யேயெ னறிவே
கரவுநெறி செல்லார் கருத்தினி னிக்கின்ற
கருணை யமுதே கரும்பே
கனியே யருட்பெருங் கடலேயெ லாம்வல்ல
கடவுளே கலக ளெல்லாம்
வியபுனர் வரியசிவ தூரியவனு பவமான
மெய்ம்மையே சன்மார்க் கமாம்
மெய்ஞ்ஞான நிலைநின்ற விஞ்ஞான கலருளே
மேவுநட ராஜ பதியே. 19

பராதி பூதமொடு பொறிபுலன் காரணமும்
பகுதியுங் கால முதலாப்
பகர்கின்ற கருவியு மவைக்குமே லுறுசுத்த
பரமாதி நாத வரையுஞ்
சீராய பரவிந்து பரநாத முந்தனது
திகழங்க மென்ற றுரைப்பத்
திருவருட் பெருவெளியி லானந்த நடனமிடு
தெய்வமே யென்று மழியா

ஊராதி தந்தினை வளர்க்கின்ற அன்னையே
உயர்தந்தை யேயெ னுள்ளே
உற்றதுணை யேயென்ற னுறவேயெ னன்பே
உவப்பேயெ னுடைய வுயிரே
ஆராலு மறியாத வுயர்நிலையி லெனைவைத்த
அரசே யருட் ஜோதியே
அகரநிலை முழுதுமா யப்பாலு மாகிநிறை
அமுதநட ராஜ பதியே. 20

உரைவிசுவ முண்டவெளி யுபசாந்த வெளிமேலை
யுறுமவுன வெளிவெளி யின்மேல்
ஓங்குமா மவுனவெளி யாதியுறு மனுபவம்
ஒருங்கநிறை புண்மை வெளியே
திரையறு பெருங்கருணை வாரியே யெல்லாஞ்செய்
சித்தியெ னக்கு வாய்த்த
செல்வமே யொன்றுன தெய்வமே யுய்வகை
தெரித்தினை வளர்த்த சிவமே
பரைநடு விளங்குமொரு ஜோதியே யெல்லாம்
படைத்திடுக வென்ற னக்கே
பண்புற வுரைத்தருட் போதமுத லித்தமெய்ப்
பரமமே பரம ஞான
வரைநடு விளங்குசிற் சபைநடுவி லானந்த
வண்ணநட மிடு வள்ளலே
மாறுத சன்மார்க்க நிலைநீதி யேயெலாம்
வல்லநட ராஜ பதியே. 21

வாழிதோ றூழிபல வண்டபகி ரண்டத்
துயிர்க்கெலாந் தரினு மந்தோ
ஒருசிறிது முலவாத நிறைவாகி யடியேற்
குவப்பொடு கிடைத்த நிதியே
வாழிநீ டூழியென வாய்மலர்ந் தழியா
வரந்தந்த வள்ள லேயென்
மதியினிறை மதியே வயங்குமதி யமுதமே
மதியமுதி னுற்ற சுகமே
ஏழிரே டேழுலகி லுள்ளவர்க ளெல்லாமி
தென்னையென் றதிச யிப்ப
இரவுபக லில்லாத பெருநிலையி லேற்றியெனை
இன்புறச் செய்த குருவே
ஆழியோ டணியளித் துயிரெலாங் காத்துவிளை
யாடென் றுரைத்த வரசே
அகரநிலை முழுதுமா யப்பாலு மாகியொளிர்
அபயநட ராஜ பதியே. 22

பூதமுத லாயபல கருவிக ளனைத்துமென்
புகல்வழிப் பணிகள் கேட்பப்
பொய்படாச் சத்திக ளனந்தகோ டிகளுமெய்ப்
பொருள்கண்ட சத்தர் பலரும்
ஏதமற வென்னுள நினைத்தவை நினைத்தாங்
கிசைந்தெடுத் துதவ வென்றும்
இறவாத பெருநிலையி லினிதுசோலா வின்புற்
றிருக்கவெனை வைத்த குருவே
நாதமுத லிருமூன்று வரையந்த நிலைகளு
நலம்பெறச் சன்மார்க் கமாம்
ஞானநெறி யோங்கவோர் திருவருட் செங்கோல்
நடத்திவரு நல்ல வரசே
வாதமிடு சமயமத வாதிகள் பெறற்கரிய
மாமதியி னமுத நிறைவே
மணிமன்றி னடுநின்ற வொருதெய்வ மேயெலாம்
வல்லநட ராஜ பதியே. 23

வாட்டமொடு சிறியனேன் செய்வகையை யறியாது
மனமிக மயங்கி யொருநாள்
மண்ணிற் கிடந்தருளை யுன்னியுல கியலினை
மறந்துதுயில் கின்ற போது
காட்டமுறு வைகறையி லென்னரு கணைந்தென்னை
நன்றுற வெழுப்பி மகனே
நல்யோக ஞானமெனி னுய்ப்புரித லின்றிநீ
நலிதலழ கோவெ ழுந்தே
ஈட்டுகநி னெண்ணம் பலிக்கவரு ளமுதமுண்
டின்புறுக வென்ற குருவே
என்றுனை பேயென்ற னன்பே நிறைந்தபே
ரின்பமே யென் செல்வமே
வேட்டவை யளிக்கின்ற நிதியமே சாகாத
வித்தையில் விளைந்த சுகமே
மெய்ஞ்ஞான நிலைகின்ற விஞ்ஞான கலருளே
மேவுநட ராஜ பதியே. 24

என்செய்வேன் சிறியனே னென்செய்வே னென்னெண்ணம்
வதாக முடியுமோ வென்
றெண்ணியிரு கண்ணினீர் காட்டிக் கலங்கினின்
றேங்கிய விராவி லொருநாள்
மின்செய்மெய்ஞ் ஞானவுரு வாகிநான் காணவே
வெளிநின் றணைத்த வுள்ளே
மேவியென் றுன்பந் தவிர்த்தருளி யங்ஙனே
வீற்றிருக் கின்ற குருவே

நன்செய்வா யிட்டவிளை வதுவிளைத் ததுகண்ட
நல்சூர விதீ னடைந்த
நன்மகிழ்வி னெருதேகாடி பங்கதிக மாகவே
நான்கண்டு கொண்ட மகிழ்வே
வன்செய்வாய் வாதருக் கரியபொரு ளேயென்னை
வலியவந் தாண்ட பரமே
மணிமன்றி னடுநின்ற வொருதெய்வ மேயெலாம்
வல்லநட ராஜ பதியே. 25

துன்பெலா தீர்ந்தன சுகம்பலித் ததுநினைச்
சூழ்ந்ததரு ளொளி நிறைந்தே
சுத்தசன் மார்க்கநிலை யனுபவம் நினக்கே
சுதந்தரம தான துலகில்
வன்பெலா நீக்கிநல் வழியெலா மாக்கிமெய்
வாழ்வெலாம் பெற்று மிகவும்
மன்னுயி ரெலாங்களித் திடநினைத் தணைபுன்றன்
மனநினைப் பின்ப டிக்கே
அன்பநீ பெறுகவுல வாதுநீ டூழிவிளை
யாடுக அருட் ஜோதியாம்
ஆட்சிதந் தோழுனைக் கைவிடோங் கைவிடோம்
ஆணைநம் மாணை யென்றே
இன்புறத் திருவாக் களித்ததனுள் ளேகலந்
திசைவுட னிருந்த குருவே
எல்லாஞ்செய் வல்லசித் தாகிமணி மன்றினில்
இலங்குநட ராஜ பதியே. 26

பேருற்ற வுலகிலுறு சமயமத நெறியெலாம்
பேய்பிடிப் புற்ற பிச்சுப்
பிள்ளாவிளை யாட்டென வுணர்ந்திடா துயிர்கள்பல
பேதமுற் றங்கு மிங்கும்
போருற் றிறந்துவீண் போயிரு ரின்னும்வீண்
போகாத படிவி ரைந்தே
புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டிமெய்ப்
பொருளினை யுணர்த்தி யெல்லாம்
ஏருற்ற சுகநிலை யடைந்திடப் புரிதிநீ
யென்பிள்ளை யாத லாலே
இவ்வேலை புரிகவென் றிட்டன மனத்தில்வே
றெண்ணற்க வென்ற குருவே
நீருற்ற வொள்ளிய நெருப்பே நெருப்பினுள்
நிறைந்திரு ளகற்று மொளியே
நிர்க்குண னந்தபர நாதாந்த வரையோங்கு
நீதிநட ராஜ பதியே. 27

சாகாத கல்வியே கல்வியொன் றேசிவந்
தானென வறிந்த வறிவே
தகுமறிவு மலமைந்தும் வென்றவல் லபமே
தனித்த பூரண வல்லபம்
வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
விளையவிளை வித்த தொழிலே
மெய்த்தொழில தாகுமிந் நான்கையு மொருங்கே
வியந்தடைந் துலக மெல்லாம்
மாகாத லுறவெலாம் வல்லசித் தாகிநிறை
வானவர மேயின் பமாம்
மன்னுமித நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்
மரபென் றுரைத்த குருவே
தேகாதி மூன்றுநான் தருமூனருள் செய்தெனைத்
தேற்றியருள் செய்த சிவமே
சிற்சபையி னடுநின்ற வொன்றுன கடவுளே
தெய்வநட ராஜ பதியே. 28

நீடுலகி லுற்றவர்கள் நன்குற வுரைக்கின்ற
நின்வார்த்தை யாவும் நமது
நீள்வார்த்தை யாகுமிது வுண்மை மகனேசற் றும்
நெஞ்ச மஞ்சே லுனக்கே
ஆடுறும் அருட்பெருஞ் ஜோதியிந் தனமென்றும்
அழியாத நிலையி னின்றே
அன்பினு லெங்கெங்கு மெண்ணிய படிக்குநீ
யாடிவாழ் கென்ற குருவே
நாடுநாடு நாட்டத்தி லுற்றவனு பவஞான
நானிளங் காலை யடைய
நல்கிய பெருங்கருணை யப்பனே யம்மையே
நண்பனே துணைவனே யென்
னுடுபிரி யாதுற்ற விண்பனே யன்பனே
ஒருவனே யருவனே யுள்
ளூறுமமு தாகியோ ராறின்முடி மீதிலே
ஓங்கு நடராஜ பதியே. 29

அந்நாளி லம்பலத் திருவாயி லிடையுனக்
கன்புட னுரைத்த படியே
அற்புதமெ லாம்வல்ல நம்மருட் பேரொளி
அளித்தன மகிழ்ந்து ளுள்ளே
இந்நாள் தொடுத்துநீ யெண்ணிய படிக்கே
இயற்றிவிளை யாடி மகிழ்க
என்றுமிற வாநிலையி லின்பவனு பவநெகி
லியல்சுத்த மாதி மூன்றும்

எந்நாளு முன்னிச்சை வழிபெற்று வாழ்கயாம்
எய்திநின் னுட்க லந்தேதம்
இனியெந்த வாற்றினும் பிரிவுறே முண்மையீ
தெம்மாணை யென்ற குருவே
மன்னுகி யென்பெரிய வாழ்வாகி யழியாத
வரமாகி நின்ற சிவமே
மணிமன்றி னடுநின்ற வொருதெய்வ மேயெலாம்
வல்லநட ராஜ பதியே. 30

காயெலாங் கனிபெனக் கனிவிக்கு மொருபெருங்
கருணை யமுதே யெனக்குக்
கண்கண்ட தெய்வமே கலிகண்ட வற்புதக்
காட்சியே கனக மலையே
தாயெலா மினையவென் றந்தையே யொருதனித்
தலைவனே நின்பெரு மையைச்
சாற்றிட நினைத்திட மதித்திட வறிந்திடச்
சார்கின்ற தோறு மந்தோ
வாயெலாந் தித்திக்கு மனமெலாந் தித்திக்கும்
மதியெலாந் தித்திக்கு மென்
மன்னியமெய் யறிவெலாந் தித்திக்கு மென்னிலதில்
வருமின்ப மென்புகலு வேன்
தூயெலாம் பெற்றநிலை மேலருட் சுகமெலாந்
தோன்றிட விளங்கு சுடரே
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேயருட்
ஜோதிநட ராஜ குருவே. 31

எய்ப்பறவை னக்குக் கிடைத்தபெரு நிதியமே
எல்லாஞ்செய் வல்ல சித்தாய்
என்கையி லகப்பட்ட ஞானமணி யேயென்னை
எழுமையும் விடாத நட்பே
கைப்பறவை னுள்ளே இனிக்கின்ற சர்க்கரைக்
கட்டியே கருணை யமுதே
கற்பக வனத்தே கனிந்தகனி யேயெனது
கண்காண வந்த கதியே
மெய்ப்பய னளிக்கின்ற தந்தையே தாயேயென்
வினையெலாந் தீர்த்த பதியே
மெய்யான தெய்வமே மெய்யான சிவபோக
வினைவேயென் மெய்மை யுறவே
துய்ப்புறுமெ னன்பான துணையேயென் னின்பமே
சுத்தசன் மார்க்க நிலையே
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேயருட்
ஜோதிநட ராஜ குருவே. 32

துன்புறு மனத்தலை யெண்ணுத லெண்ணினான்
சோர்ந்தொரு புறம்ப டித்துத்
தூங்குதரு ணத்தென்ற னருகிலுற் றன்பிலுல்
தூயதிரு வாய் மலர்ந்தே
இன்புறு முகத்திலே புன்னகை ததும்பவே
இருகைமலர் கொண்டு தூக்கி
என்றனை யெடுத்தணைத் தாங்குமற் றோரிடத்
தியலுற விருத்தி மகிழ்வாய்
வன்பறு பெருங்கருணை யமுதளித் திடர்நீக்கி
வைத்தநின் றயவை யந்தோ
வள்ளலே யுள்ளுறுதொ றுள்ளக மெலாமின்ப
வாரியமு தூறி யூறித்
துன்பமற மேற்கொண்டு பொங்கித் ததும்புமிச்
சுகவண்ண மென்புகலு வேன்
தூரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேயருட்
ஜோதிதட ராஜ குருவே. 33

ஓங்கிய பெருங்கருணை பொழிகின்ற வானமே
ஒருமைநிலை யுறுஞர னமே
உபயபத சததளமு மெனதிய சததளத்
தோங்கருடி வோங்கு சிவமே
பாங்கிய லளித்தன்னை யறியாத வொருசிறிய
பருவத்தி லாண்ட பதியே
பாசநெறி செல்லாத நேசர்தமை யீசராம்
படிவைக்க வல்ல பரமே
ஆங்கியல்வ தென்றுமற் றீங்கியல்வ தென்றும்வா
யாடுவோர்க் கரிய சுகமே
ஆனந்த மயமாகி யதுவுங் கடந்தவெளி
யாகிநிறை கின்ற நிறைவே
தூங்கிவிழு சிறியனைத் தாங்கியெழு கென்றெனது
தூக்கந் தொலைத்த துணையே
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேயருட்
ஜோதிதட ராஜ குருவே. 34

அருட்பெருஞ்ஜோதி

101. சற்குருமணி மாலை

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

மாற்றறி யாத செழும்பசும் பொன்னே
மாணிக்க மேசுடர் வண்ணக் கொழுந்தே
கூற்றறி யாத பெருந்தவ ருள்ளக்
கோயி லிருந்த குணப்பெருங் குன்றே
வேற்றறி யாதசிற் றம்பலக் கனியே
விச்சையில் வல்லவர் மெச்சும் விருந்தே
சாற்றறி யாதவென் சாற்றுங் களித்தாய்
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 1

கற்கரை யும்படி கரைவிக்குங் கருத்தே
கண்மணி யேமணி கலந்தகண் ணிலையே
சொற்கரை யின்றிய வொளியினுள் ளொளியே
துரியமுங் கடந்திட்ட பெரியசெம் பொருளே
சிற்கரை திரையறு திருவருட் கடலே
தெள்ளமுதே கனியே செழும் பாகே
சர்க்கரை யேயது சார்ந்தசெந் தேனே
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 2

என்னுயி ரேயென தின்னுயிர்க் குயிரே
என்னறி வேயென தறிவினுக் கறிவே
அன்னையி னியவென் னம்பலத் தமுதே
அற்புத மேபத மேயென தன்பே
பொன்னிணை யடிமலர் முடிமிசை பொருந்தப்
பொருத்திய தயவுடைப் புண்ணியப் பொருளே
தன்னிய லறிவருஞ் சத்திப நிலையே
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 3

காய்மனக் கடையனைக் காத்தமெய்ப் பொருளே
கலிகளுங் சருதரு மொருபெரும் பதியே
தேய்மதிச் சமயருக் கரியவொண் சுடரே
சித்திதலாம் வல்லதோர் சத்திய முதலே
ஆய்மதிப் பெரியருள் ளமர்ந்தசிற் பரமே
அம்பலத் தாடல்செய் செம்பதத் தரசே
தாய்மதிப் பரியதோர் தயவுடைச் சிவமே
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 4

உருவழு மருவமு முபயமு முளதாய்
உளதில தாயொளி யொருதனி முதலே
கருவினி லெனக்கருள் கனிந்தளித் தவனே
கண்ணுடை யாய்பெருங் கடவுளர் பதியே
திருநிலை பெறவெனை வளர்க்கின்ற பரமே
சிவகுரு துரியத்திற் றெளியனு பவமே
தருவளர் பொழில்வடற் சபைநிறை யொளியே
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 5

ஆறந்த நிலைகளி னனுபவ நிறைவே
அதுவது வாயொளிர் பொதுவுறு நிதியே
கூறெந்த நிலைகளு மொருநிலை யெனவே
கூறியெ னுள்ளத்திற் குலவிய களிப்பே
பேறிந்த நெறியெனைக் காட்டியென் றனையே
பெருநெறிக் கேற்றிய வொருபெரும் பொருளே
சாறெந்த நாள்களும் விளங்குமோர் வடல்வாய்த்
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 6

சாகாத தலையிது வேகாத காலாந்
தரமிது காணெனத் தயவுசெய் துரைத்தே
போகாத புனலிலுந் தெரிவித்தென் னுளத்தே
பொற்புற வமர்ந்தே ரற்புதச் சுடரே
ஆகாத போக்களுக் காகாத நினைவே
ஆகிய வெனக்கென்று மாகிய சுகமே
தாகாத லெனத்தரும் தருமசத் சத்திரமே
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 7

தத்துவ மசிநிலை யிதுவிது தானே
சத்தியங் காணெனத் தனித்துரைத் தெனக்கே
எத்துவந் தனைகளு நீக்கிமெய்ந் நிலைக்கே
ஏற்றிநா னிறவாத வியலளித் தருளாற்
சித்துவந் திலகங்க ளெவற்றினு மாடச்
செய்வித்த பேரருட் சிவபரஞ் சுடரே
சத்துவ நெறிதரு வடலருட் கடலே
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 8

இதுபதி யிதுபொரு ளிதுசுக மடைவாய்
இதுவழி யெனவெனக் கியல்புற வுரைத்தே
விதுவமு தொடுசிவ வமுதமு மளித்தே
மேனிலைக் கேற்றிய மெய்ந்நிலைச் சுடரே
பொதுநட மிடுகின்ற புண்ணியப் பொருளே
புரையறு முளத்திடைப் பொருந்திய மருந்தே
சதுமறை முடிகளின் முடிபுறு சிவமே
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 9

என்னிலை யிதுவுறு நின்னிலை யிதுவாம்
இருநிலை கருமொரு நிலையென வறிவாய்
முன்னிலை சிறிதுற விதுமய லுறலாம்
முன்னிலை பின்னிலை முழுநிலை யுளவாம்
இந்நிலை யறிந்தவ ணெழுநிலை கடந்தே
இயனிலை யடைகுவென் றியம்பிய பரமே
தன்னிலை யாகிய நன்னிலை யாசே
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 10

காரண மிதுபுரி காரிய மிதுமேற்
காரண காரியக் கருவிது பலவாய்
ஆரண மாகம மிவைவிரித் துரைத்தே
அளந்திடு நீயவை யளந்திடன் மகனே
பூரண நிலையனு பவமுறற் கணமாம்
பொழுதினி லறிதியெப் பொருணிலை கருமே
தாரணி தனிலென்ற தயவுடை யரசே
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 11

பன்னெறிச் சமயங்கண் மதங்களென் றிடுமோர்
பவநெறி யிதுவரை பரவிய திதனுல்
சென்னெறி யறிந்தில ரிறந்திறந் துலகோர்
செறியிரு ளடைந்தன ராதலி னினிநீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி யெனும்வான்
புத்தமு தருள்கின்ற சுத்தசன் மார்க்கத்
தன்னெறி செலுத்துக வென்றவென் னரசே
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 12

அடியிது முடியிது நடுநிலை யிதுமேல்
அடிநடு முடியிலா ததுவது மகனே
படிமிசை யடிநடு முடியறிந் தணையே
பதியடி முடியிலாப் பரிசையு மறிவாய்
செடியற வுலகினி லருணெறி யதுவே
செயலுற முயலுக வென்றசிற் பரமே
தடிமுகி லெனவருள் பொழிவட லரசே
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 13

நண்ணிய மதநெறி பலபல வவையே
நன்றற நின்றன சென்றன சிலவே
அண்ணிய வுலகின ரறிகிலர் நெடுநாள்
அலைதரு கின்றன ரலைவற மகனே
புண்ணிய முறுதிரு வருணெறி யிதுவே
பொதுநெறி யெனவறி வுறமுய லுதிநீ
தண்ணிய வமுதுணத் தந்தன மென்றுய்
தனிநட ராஜவென் சற்குரு மணியே. 14

ஏகாவ னேகாவென் றேத்திடு மறைக்கே
எட்டாத நிலையேகா னெட்டிய மலையே
ஓகாள மதங்களா முழுவது மாற்றி
ஒருநிலை யாக்கவென் றுரைத்தமெய்ப் பரமே
ஈகாத லுடையவர்க் கிருநிதி யளித்தே
இன்புறப் புரிகின்ற விபல்புடை யிறையே
சாகாத வரந்தந்திங் கெனைக்காத்த வரசே
தனிநட ராஜவென் சற்குரு மணியே.

அருட்பெருஞ்ஜோதி

102. தான்பெற்றபேறு

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

திருவளர்பே ரருளுடையான் சிற்சபையா னெல்லாஞ்
செய்யவல்ல தனித்தலைமைச் சித்தினல்லா முடையான்
உருவமுமா யுருவமுமா யுபயமுமா யலவாய்
ஓங்குமருட் பெருஞ்ஜோதி யொருவனுண்டே யவன்றன்
பெருமையிறை லெனையீன்று ணெனுருவன் றனை
பிள்ளையவன் பிள்ளையெனப் பெரியரெலா மறிவார்
இருமையுறு தத்துவர்காள் யென்னையறி யீரோ
ஈங்குமது துள்ளலெலா மேதுகடா வாதே. 1

மனமெனுமோர் பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான்
மற்றவர்போ லெனைநினைத்து மருட்டாதே கண்டாய்
இனமுறவென் சொல்வழியே யிருத்தியெனிற் சுகமாய்
இருந்திடுநீ யென்சொல்வழி யேற்றிலைபா லுலோ
தினையளவுன் னதிகாயந் செல்லவொட்டே னுலகஞ்
சிரிக்கவுனை யடக்கிடுவேன் திருவருளாற் கணத்தே
நனவிலெனை யறியாயோ யாரெனவிங் கிருந்தாய்
ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே. 2

பன்முகஞ்சேர் மனமெனுமோர் பரியாசப் பயலே
பதையாதே சிதையாதே பார்க்குமிட மெல்லாங்
கொன்முகங்கொண் டடிக்கடிபோய்க் குதியாதே யெனது
குறிப்பின்வழி நின்றிடுநின் குதிப்புநட வாது
என்முனமோர் புன்முனைமே லிருந்தபனித் துளிநீ
இம்மெனுமுன் னடக்கிடுவே னென்னையறி யாயோ
பின்முனென நினையேல்காண் சிற்சபையி னடிக்கும்
பெரியதனித் தலைவனுக்குப் பெரியபிள்ளை நானே. 3

விரிந்தமன மெனுஞ்சிறிய விளாபாட்டுப் பயலே
விரிந்துவிரிந் தலையாதே மெலியாதே விடயம்
புரிந்தநெறி புரிந்தவமே போகாதே பொறிவாய்ப்
புரையாதே விரையாதே புகுந்துமயங் காதே
தெரிந்துதெளிந் தொருநிலைபிற் சித்திரப்போ லிருநீ
சிறிதசைந்தா லக்கணமே சிதைத்திடுவேன் கண்டாய்
பரிந்தெனைநீ யாரென்று பார்த்தாய்சிற் சபைவாழ்
பதிதனக்கே யருட்பட்டம் பலித்தபிள்ளை நானே. 4

பாய்மனமென் றுரைத்திடுமோர் 1 பராய்முருட்டுப் பயலே
பலபொறியாம் படிக்காளிப் பயல்களொடுங் கூடிச்
சேய்மையினு மண்மையினுந் திரிந்தோடி யாடித்
திடங்காதே யொருவார்த்தை திருவார்த்தை யெனவே
ஆய்வுறக்கொண் டடங்குகநீ யடங்கிலேல வுனைத்தான்
அடியொடுவே ரறுத்திடுவே னுனைபரு ளாணை
பேய்மதிபா நீயெனைத்தா னறியாயோ வெல்லாம்
பெற்றவன்றன் செல்வாக்குப் பெற்றபிள்ளை நானே. 5

மயங்குபுத்தி யெனுமுலக வழக்காளிப் பயலே
வழிதுணையீ தென்றறியாய் வகைசிறிது மறியாய்
உயங்கிவிசா ரித்திடவே யோடுகின்று யுணரும்
உளவறியாய் வீணுழைப்பிங் குழைப்பதிலென் பயனை
வயங்குமன மடங்கிபவா றடங்குகநீ யிலையேல்
மடித்திடுவேன் கணத்திலுனை வாய்மையிது கண்டாய்
இயங்கவென்னை யறியாயோ யாரெனவெண் ணினையோ
எல்லாஞ்செய் வல்லவனுக் கினிபபிள்ளை நானே. 6

கலையறியாச் சித்தமெனுங் கனமோசப் பயலே
காலறியாய் தலைபறியாய் காண்பனகண் டறியாய்
நிலையறியா யொன்றையொன்று நிச்சயித்தி வுலகை
நெறிமயங்க மயக்குகின்றாய் நீயோவிங் குறுவாய்
அலையறியாக் கடல்போலே யசைவற நின்றிடுநீ
அசைவாயே லக்கணத்தை யடக்கிடுவே னுனைத்தான்
அலைவறிவா யென்றனைநீ யறியாயோ நான்றான்
ஆண்டவன்றன் தாண்டவங்கண் டமர்ந்தபிள்ளை காணே. 7

அகங்கார மெனும்பொல்லா அடவாதிப் பயலே
அடுக்கடுக்கா யெடுக்கின்று யடித்துமுடிக் கின்றாய்
சகங்காணத் தலைகாலுந் தெரியாம லலைந்து
திரிகின்றாய் நின்செயற்தான் சிறிதுநட வாது
இகங்காண வடங்குகநீ யடங்காமேற் கணத்தை
இருந்தவிடந் தெரியாதே யெரிந்திடச்செய் திடுவேன்
சுகங்காண வென்றனைநீ யறியாயோ நான்றான்
சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றபிள்ளை காணே. 8

1 பராய் என்பது—ஒருவகை மரம்.

மானெனுமோர் சகச்சாலச் சிறுக்கியிது கேளுன்
வஞ்சகக்கூத் தெல்லாமோர் மூட்டையெனக் கட்டி
ஈனமுற நின்றலேமே லெற்றெடுத்துக் கொண்டுன்
ஏவல்புரி பெண்களெலாமே யிவ்விடம்விட் டேகிக்
கானடைந்து கருத்தடங்கிப் பிழைத்திடுநீ யிலையேல்
கணத்திலுனை மாய்ப்பேனுன் கணத்திணைதங் கண்டாய்
எனினுநீ யறியாயோ சிற்சபையி னடஞ்செய்
இறைவனருட் பெருஞ்ஜோதிக் கினியபிள்ளை நானே. 9

மாயையெனும் படுதிருட்டுச் சிறுக்கியிது கேளுன்
மாயையெலாஞ் சுமைசுமையா வரிந்துகட்டிக் கொண்டுன்
சாயையெனும் பெண்ணினத்தார் தலைமேலு முனது
தலைமேலுஞ் சுமந்துகொண்டோர் சந்துவழி பார்த்தே
பேயெனக்காட் டிடையோடிப் பிழைத்திடுநீ யிலையேல்
பேசுமுன்னே மாய்த்திடுவேன் பின்னுமுன்னும் பாரேன்
ஆயெனினுநீ யறியாயோ வெல்லாஞ்செய் வல்லார்
அருளமுதுண் டருணிலைமே லமர்ந்தபிள்ளை நானே. 10

மாமாயை யெனும்பெரிய வஞ்சகிநீ யிதுகேள்
வரைந்தவுன்றன் பரிசனப்பெண் வகைதொகைக ளுடனே
போமாறுன் செயலனைத்தும் பூரணமாக் கொண்டு
போனவழி தெரியாதே போய்ப்பிழைநீ யிலையேல்
சாமாறுன் றனையின்றே சாய்த்திடுவே னிதுதான்
சத்தியமென் றெண்ணுதியென் றன்னையறி யாயோ
ஆமாறு சிற்சபையி லருணடனம் புரிவார்
அருளமுதுண் டருணிலைமே லமர்ந்தபிள்ளை நானே. 11

கன்மமெனும் பெருந்சிலுருக் கடுங்கலகப் பயலே
கங்குகரை காணுத கடல்போலே வினைகள்
நன்மையொடு தீமையெனப் பலவிகற்பங் காட்டி
நடத்தினைநின் னடத்தையெல்லாஞ் சிறிது நடவாது
என்முனிருந் தனையெனில்நீ யழிந்திடுவா யதனால்
இக்கணத்தே நின்னினத்தோ டேகுகநீ யிலையேல்
இன்மையுற மாய்த்திடுவே னென்னையறி யாயோ
எல்லாஞ்செய் வல்லவனுக் கினியபிள்ளை நானே. 12

எத்துணையுங் காட்டாத ஆணவமென் றிடுமோர்
இருட்டரைக்கோ ரதிகாரக் குருட்டுமுடப் பயலே
இத்தனைநாள் பிடித்தநினைக் கண்டுதுரத் திடவே
இன்னுமரைக் கணந்தரியே னிக்கணத்தே நினது
பொத்தியசுற் றத்துடனே போய்விடுதி யிலையேல்
பூரணமெய் யருளொளியாற் பொன்றுவிப்பே னினையே
சத்தியஞ்சொன் னேனெனினுநீ யறியாயோ ஞான
சபைத்தலைவன் றருதலைமைத் தனிப்பிள்ளை நானே. 13

பெருமாயை யென்னுமொரு பெண்பிள்ளை நீதான்
பெற்றவுடம் பிதுசாகாச் சுத்தவுடம் பாக்கி
ஒருஞானத் திருவமுதுண் டோங்குகின்றே னினிநின்
உபகரிப்போ ரணுத்துணையு முளத்திடைநான் விரும்பேன்
அருளாய ஜோதியெனக் குபகரிக்கின் றதுநீ
அறியாயோ வென்னளவி லமைகவைய லமர்க
தெருளாய வுலகிடையென் சரிதமுணர்ந் திலையோ
சிற்சபையென் னப்பனுக்குச் சிறந்தபிள்ளை நானே. 14

பேசுதிரோ தாயியெனும் பெண்மடவா யிதுகேள்
பின்முனறி யாதெனினீ யென்முன்மறைக் காதே
வேசறமா மலவிரவு முழுதும்விடிந் ததுகாண்
வீசுமருட் பெருஞ்ஜோதி விளங்குகின்ற தறிநீ
ஏசுறுநின் செலயனைத்து மென்னளவி னடவா
திதைதபறித்து விரைந்தெனவிட் டேகுகவிக் கணத்தே
மாசறுமென் சரிதமொன்றுந் தெரிந்திலையோ வெல்லாம்
வல்லவொரு சித்தருக்கே நல்லபிள்ளை நானே. 15

தூக்கமெனுங் கடைப்பயலே சோம்பேறி யிதுகேள்
துணிந்துனது சுற்றமொடு சொல்லுமைசைக் கணத்தே
தாக்குபெருங் காட்டகத்தே யேகுகநீ யிருந்தால்
தப்பாதுன் தலைபோகுந் சத்தியமீ தறிவாய்
ஏக்கமெலாந் தவிர்த்துவிட்டே னைக்கமெலாம் பெற்றேன்
இன்பமுறு கின்றனனீ யென்னையடை யாதே
போக்கில் விரைந்தோடுகநீ பொற்சபைசிற் சபைவாழ்
பூரணர்க்கிங் கன்பான பொருளனென வறிந்தே. 16

பயமெனுமோர் கொடும்பாவிப் பயலேநீ யிதுகேள்
பற்றறவென் றனைவிடித்துப் பணிக்கடல்வீழ்ந் தொளிப்பாய்
தயவினுரைத் தேனின்னு மிருத்தியெனி லுனது
தன்றலைக்குத் தீம்புவருந் தலைமட்டோ நினது
செயலுறுமுள் ளுடம்பழியுஞ் சுற்றமெலா மிறக்குந்
தீர்ந்ததினி யில்லையென்றே திருவார்த்தை பிறக்கும்
அயலிடைநேர்ந் தோடுகநீ யென்னையறி யாயோ
அம்பலத்தென் னப்பனருள் நம்புபிள்ளை நானே. 17

கோபமெனும் புலைப்பயலே காமவலைப் பயலே
கொடுமோகக் கடைப்பயலே குறும்புமதப் பயலே
தாபவுலோ பப்பயலே மாற்சரியப் பயலே
தயவுடனிங் கிசைக்கின்றேன் தாழ்த்திருக்கா தீர்காண்
தீபமெலாங் கடந்திருள்சேர் நிலஞ்சாரப் போவீர்
சிறிதுபொழு திருந்தாலும் திண்ணமிங்கே யழிவீர்
சாபமுறு முன்னமறிந் தோடுமினே வென்னைத்
தானறியீர் தனித்தலைவன் தலைப்பிள்ளை நானே. 18

பசியெனுமோர் பெரும்பாவிப் பயலேதுன் பெனுமோர்
பதிபாவிப் பயலேயா பத்தினும்பொய்ப் பயலே
வசியவத்தைக் கடைப்பயலே தடைப்பயலே யிடராம்
வன்பயலே நீவிரலா மென்புடைநில் லாதீர்
நசியவுமக் குளமுளதோ விக்கணத்தே நீவிர்
நடந்துவிரைந் தோடுமினே நாடறியா வனத்தே
கசியுமனத் தெனையறியீர் சிற்சபையில் விளங்குங்
கடவுள்மகிழ்ந் தளித்ததனிக் கதிர்ப்பிள்ளை காணே. 19

மரணமெனும் பெருந்திருட்டு மாபாவிப் பயலே
வையகமும் வானகமு மற்றகமுங் கடந்தே
பரணமுறு பேரிருட்டுப் பெருநிலமுந் தாண்டிப்
பசையறநீ யொழிந்திடுக விங்கிருந்தா யெனிலோ
இரணமுற வுனைமுழுதும் மடித்திடுவே னிதுதான்
என்னுடையா னருளாணை யென்குருமே லாணை
அரணுறுமென் னினைவிடத்தே யோடுகநீ நான்றான்
அருட்பெருஞ் ஜோதிப்பதியை யடைந்தபிள்ளை காணே. 20

அருட்பெருஞ்ஜோதி

103. பேறடைவு

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

மணம்புரி கடிகை யிரண்டனை யெனுமோர் வரையுள தாதலான் மகனை
னணம்புரிந் தழலேலல் சவுளமா திபசெய் தெழிலுறு மங்கலம் புனைந்தே
குணம்புரிந் தெமது மகனெனுங் குறிப்பைக் கோலத்தாற் காட்டுக வெனவே
வணம்புரி மணிமா மன்றிலென் றந்தை வாய்மலர்ந் தருளினர் மகிழ்ந்தே. 1

எம்பொரு ளெனுமென் னன்புடை மகனை யிரண்டனைக் கடிகையி லுனக்கே
அம்புவி வான மறியுமெய்ப் பருளா மங்கனை தனைமணம் புரிவித்
தும்பரும் வியப்ப வுபரிலை தருது முண்மையீ தாதலா லுலகில்
வெம்புறு துயர்தீர்ந் தணிக்குகா ளென்றூர் மெய்ப்பொது நடத்திறை யவரே. 2

அன்புடை மகனை மெய்யருட் டிருவை யண்டர்கள் வியப்புற நினக்கே
இன்புடை யுரிமை மணம்புரி விப்பா மிரண்டனைக் கடிகையில் விரைந்தே
துன்புடை யவைகண் முழுவதுந் தவிர்ந்தே தூய்மைசேர் நன்மணக் கோலம்
பொன்புடை விளங்கப் புனைந்துகா ளென்றூர் பொதுநடம் புரிகின்றூர் தாமே. 3

ஈதுகேள் மகனை மெய்யருட் டிருவை யிரண்டனைக் கடிகையில் நினக்கே
ஊதியம் பெறவே மணம்புரி விப்பா முண்மையீ தாதலா லினிவீண்
போதுபோக் காமல் மங்கலக் கோலம் புனைந்துள மகிழ்கநீ யென்றூர்
தீதுதீர்த் தென்னை யிளந்தைபிற் றூனை தெருட்டிய சிற்சபை யவரே. 4

விரைந்துகேண் மகனே யுலகெலாங் களிக்க மெய்யருட் டிருவினை நினக்கே
வரைந்துநன் மணஞ்செய் தொருபெரு நிலையில் வைத்துவாழ் வியங்கின்றே மதனால்
இரைந்துளங் கவலே லிரண்டரைக் கடிகை யெல்லையுள் ளெழின்மணக் கோலம்
நிறைந்துறப்பு புனைதி யென்றுவாய் மலர்ந்தார்நி ருத்தஞ்செய் யொருத்தருள் ளுவந்தே. 5

களிப்போடு மகனே யருளொளித் திருவைக் கடிகையோ ரிரண்டரை யதனில்
ஒளிப்பிலா துலக முழுவது மறிய வுனக்குநன் மணம்புரி விப்பாம்
அளிப்புறு மகிழ்வால் மங்கலக் கோல மணிபெறப் புனைகநீ விரைந்தே
வெளிப்பட வுரைத்தா மென்றனர் மன்றில் விளங்குமெய்ப் பொருளிறை யவரே. 6

கலங்கிடேல் மகனே யருளொளித் திருவைக் களிப்பொடு மணம்புரி விப்பாம்
விலங்கிடேல் வீணிற் போதுபோக் காமல் விரைந்துநன் மங்கலக் கோலம்
நலங்கொளப் புனைந்து மகிழ்கவிவ் வுலகர் நவிலுமவ் வுலகவர் பிறரும்
இலங்குநின் மணமே யெத்துவ ரென்று ரியலுறு சிற்சபை யவரே. 7

ஐயுறே விதுநம் மாணைநம் மகனே யருளொளித் திருவைகின் றனக்கே
மெய்புறு மகிழ்வால் மணம்புரி விப்பாம் விரைந்திரண் டரைக்கடி கையிலே
கையற வினைத்துந் தவிர்ந்துநீ மிகவுங் களிப்பொடு மங்கலக் கோலம்
வையமும் வானும் புகழ்ந்திடப் புனைக வென்றனர் மன்றிறை யவரே. 8

தூங்கலே மகனே யெழுகநீ விரைந்தே தூபநீ ராடுக துணிந்தே
பாங்குற வோங்கு மங்கலக் கோலம் பண்பொடு புனைந்துகொள் கடிகை
ஈங்கிரண் டரையி லருளொளித் திருவை யெழிலுற மணம்புரி விப்பாம்
ஏங்கலே யிதுநம் மாணைகா ணென்று ரியன்மணி மன்றிறை யவரே. 9

மயங்கிடேல் மகனே யருளொளித் திருவை மணம்புரி விக்கின்று மிதுவே
வயங்குநற் றருணக் காலைகா ணீநன் மங்கலக் கோலமே விளங்க
இயங்கொளப் புனைதி யிரண்டரைக் கடிகை யெல்லைபு ளென்றுவாய் மலர்ந்தார்
சயங்கொள வெனக்கே தண்ணரு ளளித்த தந்தையார் சிற்சபை யவரே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

104. உய்வகை கூறல்

கலிநிலைத்துறை

அருட்பெருஞ்ஜோதி

அருட் பெருந்தனிச் சோதியம் பலத்திலே நடிக்கும்
பொருட் பெருந்திரு நடமது போற்றுவீர் புவியீர்
மருட் பெரும்பகை நீக்கிமெய் வாழ்வுபெற் றிடலாம்
தெருட் பெரும்பதத் தாணை யீதறிமினே தெளிந்தே. 1

வாரஞ் செய்தபொன் மன்றிலே நடிக்கும்பொன் னடிக்கே
ஆரஞ் செய்தணிந் தவர்க்குமுன் னரியயன் முதலோர்
வீரஞ் செல்கிலா தறிமினே வேதமே லாணை
ஓரஞ் சொல்கிலே னடுநின்று சொல்கின்றே னுலகீர். 2

ஆதி யந்தமு மில்லதோ ரம்பலத் தாடும்
ஜோதி தன்னையே நினைமின்கள் சுகம்பெற விழைவீர்
நீதி கொண்டுரைத் தேனிது நீவிர்மே லேறும்
வீதி மற்றைய வீதிகள் கீழ்ச்செலும் வீதி. 3

நாதஞ் சொல்கின்ற திருச்சிற்றம் பலத்திலே நடிக்கும்
பாதஞ் சொல்கின்ற பத்தரே நித்தரென் றறிமின்
வேதஞ் சொல்கின்ற பரிசிது மெய்ம்மையான் பக்க
வாதஞ் சொல்கிலே னடுநின்று சொல்கின்றேன் மதித்தே. 4

துரிய மேற்பர வெளியிலே சுகநடம் புரியும்
பெரிய தோரருட் ஜோதியைப் பெறுதலே யெவைக்கும்
அரிய பேறுமற் றனைபெலா மெளியவே யறிமின்
உரிய விம்மொழி மறைமொழி சத்திய முலகீர். 5

ஆக மாந்தமும் வேதத்தி னந்தமும் அறையும்
பாக மாம்பர வெளிநடம் பரவுவீ ருலகீர்
மோக மாந்தருக் குரைத்திலே னிதுசுக முன்னும்
யோக மாந்தர்க்குக் காலமுண் டாகவே யுரைத்தேன். 6

வான நாடரும் நாடரு மன்றிலே வயங்கும்
ஞான நாடகக் காட்சியே நாம்பெறல் வேண்டும்
ஊன நாடகக் காட்சிபாற் காலத்தை யொழிக்கும்
ஈன நாடகப் பெயர்க்காள் வம்மினீ ரிங்கே. 7

சமய மோர்பல கோடியுஞ் சமபங்க டோறும்
அமைபுந் தெய்வங்க ளனந்தமும் ஞானசன் மார்க்கத்
தெமைபு முய்மைபு முடையதோ ரம்பலத் திறைபும்
அமைய வம்பலத் தாடும்பொற் பதமுமென் றறிமின். 8

ஆறு கோடியாஞ் சமயங்க ளகத்தினு மவைமேல்
வீறு சேர்ந்தசித் தாந்தமே தாந்தநா தாந்தந்
தேறு மற்றைய வந்தத்துஞ் சிவமொன்றே யன்றி
வேறு கண்டிலேன் கண்டசேற் பெரியர்காள் விளம்பீர். 9

கலை யிருந்ததோர் திருச்சிற்றம் பலத்திலே கருணை
நிலை யிருந்தது நினைத்தவை யாவையும் பெறலாம்
மலை யிருந்தென விருப்பிலேல் வம்மினே வன்றிக்
கோலை விரும்புவீ ரெனிற்புறத் தேகுமின் குலைந்தே. 10

கதி யிருக்கின்ற திருச்சிற்றம் பலத்திலே கருணை
நிதி யிருக்கின்ற தாதலால் நீவிர்க ளெல்லாம்
பதிய விங்கனே வம்மினே கோலபயில் வீரேல்
விதியை நோமினே போமினே சமயமெப் பகத்தே. 11

அருள் விளங்கிய திருச்சிற்றம் பலத்திலே யழியாப்
பொருள் விளங்குதல் காண்மினே காண்மினே புவியீர்
மருள் உளங்கொளும் வாதனை தவிர்ந்தருள் வலத்தால்
தெருள் விளங்குவீர் ஞானசன் மார்க்கமே தெளிமின். 12

அருட்பெருஞ்ஜோதி

105. நெஞ்சொடு கிளத்தல்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அப்பன்வரு தருணமிதே பையமிலை கண்டாய்
அஞ்சாதே யஞ்சாதே யகிலமிசை யுள்ளார்க்
கெய்ப்பறவே சத்தியமென் றுரைத்திடுகின் னுரைக்கோர்
எள்ளளவும் பழுதுவரா தென்னிறைவ ராணை
இப்புவியோ வானகமும் வானகத்தின் புறத்தும்
எவ்வுயிரு மெவ்வெவரு மேத்திமகிழ்ந் திடவே
செப்பமுறு திருவருட்பே ரொளிவடிவாய்க் களித்தே
செத்தாரை யெழுப்புதல்நாந் திண்ணமுணர் மனனே. 1

இறைவன்வரு தருணமிதே யிரண்டிலையஞ் சலுநீ
எள்ளளவு மையமுறே லெவ்வுலகுங் களிப்ப
நிறைமொழிகொண் டறைகவிது பழுதுவரா திறையு
நீவேறு நினைத்தயலே னெஞ்சேநான் புகன்ற
முறைமொழியென் னுடையவன்றன் மொழிந்தமொழி யெனக்கோர்
மொழியிலையென் னுடலாவி முதலனைத்துந் தானே
பொறையுறக்கொண் டருட்ஜோதி தன்வடிவு முயிரும்
பொருளுமளித் தெனைத்தாளப்பு புணர்த்தியது காணே. 2

என்னிறைவன் வருதருண மிதுகண்டா யிதற்கோர்
எட்டுணையு மையமிலை யென்னுளிருந் தெனக்கே
தன்னருட்டிடள் ளமுதளிக்குந் தலைவன்மொழி யிதுதான்
சத்தியஞ்சத் தியமெஞ்சே சற்றுமயக் கடையேல்
பன்னுலகத் துயிர்களெலாங் களித்துவியந் திடவே
வகுத்துரைத்துத் தெரித்திடுக வருநாளுன் வசத்தால்
உன்னியுரைத் திடமுடியா தாதலினு லின்றே
உரைத்திடுத லுபகார முணர்ந்திடுக விரைந்தே. 3

எல்லாஞ்செய் வல்லதனிப் பெருந்தலைமைச் சித்தன்
எனமறையா கமம்புகலு மென்னிறைவன் மகிழ்ந்தே
நல்லார்கள் வியக்கவெனக் கிசைத்தபடி யிங்கே
நானுனக்கு மொழிகின்றே னன்றறிவாய் மனனே

பல்லாருங் களிப்படையப் பகலிரவுந் தோற்றுப்
பண்பினருட் பெருஞ்ஜோதி நண்பினுடு நமக்கே
எல்லாநன் மைகளுமுற வருதருண மிதுவே
இல்வுலக முணர்ந்திடநீ யிசைத்திடுக விரைந்தே. 4

கருநாள்க ளத்தனையுங் கழிந்தனநீ சிறிதுங்
கலக்கமுறே லிதுதொடங்கிக் கருணைநடப் பெருமான்
தருநாளிவ் வுலகமெலாங் களிப்படைய நமது
சார்பினருட் பெருஞ்ஜோதி தழைத்துமிக விளங்குந்
திருநாள்க ளாமிதற்கோ ரையமிலை யிதுதான்
திண்ணமிதை யுலகறியத் தெரித்திடுக மனனே
வருநாளி லுரைத்திடலா மெனநினைத்து மயங்கேல்
வருநாளி னின்பமய மாகுநிறை வாயே. 5

உள்ளபடி யுரைக்கின்றேன் சத்தியமா முறையீ
தூணர்ந்திடுக மனனேநீ யுலகமெலா மறிய
வள்ளல்வரு தருணமிது தருணமிதே யென்று
வகுத்துரைத்துத் தெரித்திடுக மயக்கமணுத் துணையுங்
கொள்ளலியென் குருநாத னருட்ஜோதிப் பெருமான்
குறிப்பிதுவென் குறிப்பெனவுங் குறியாதே கண்டாய்
கள்ளுலகி னினிகாலைக் குரைத்துமெனத் தாழ்க்கேல்
நாளைதொட்டு நமக்கொழியா ஞானநடக் களிப்பே. 6

மாயைவினை யாணவமா மலங்களெலாந் தவிர்த்து
வாழ்வளிக்கும் பெருங்கருணை வள்ளல்வரு தருணம்
மேயதிது வாமிதற்கோ ரையமிலை யிங்கே
விரைந்துலக மறிந்திடவே விளம்புகநீ மனனே
காயகன்றன் குறிப்பிதுவென் குறிப்பெனநீ நினையேல்
காலாக்கே விரித்துரைப்பே மெனமதித்துத் தாழ்க்கேல்
தூயதிரு வருட்ஜோதித் திருநடங்கான் கின்ற
தூயதிரு நாள்வருநாள் தொடங்கியொழி யாவே. 7

மாற்றுரைக்க முடியாத திருமேனிப் பெருமான்
வருதருண மிதுகண்டாய் மனனேநீ மயங்கேல்
றேற்றுரைத்தே னிலைபுனக்கிங் கிவ்வாறென் னிறைவன்
நிகழ்த்துகவின் றென்றபடி நிகழ்த்துகின்றே னிதுதான்
கூற்றுதைத்த திருவடிமே லாணையிது கடவுள்
குறிப்பெனக்கொண் டுலகமெலாங் குதுகலிக்க விரைந்தே
சாற்றிடுதி வருநாளி லுரைத்துமெனத் தாழ்க்கேல்
தனித்தலைவ னருணடஞ்செய் சாற்றுழியா வினியே. 8

ஏதுமறி யாச்சிறிய பயல்களினுஞ் சிறியேன்
இப்பெரிய வார்த்தைதனக் கியானுரென் னிறைவன்
ஓதுகநீ யென்றபடி யோதுகின்றேன் மனனே
உள்ளபடி சத்தியமீ முணர்ந்திடுக நமது

தீதுமுழு துந்தவிர்த்தே சித்தியெலா மளிக்கத்
திருவருளாம் பெருஞ்ஜோதி யப்பன்வரு தருணம்
ஈதிதுவே யென்றுலக மறியவிரைந் துரைப்பாய்
எல்லாருங் களிப்படைந்துள் ளிசைந்தேதத்தி யிடவே. 9

தனித்தலைவ னெல்லாஞ்செய் வல்லசித்தன் ஞான
சபைத்தலைவ னென்னுளத்தே தனித்திருந்துள் ளுணர்த்தக்
கனித்தவுளத் தொடுமுணர்ந்தே புணர்த்துகின்றே னிதையோர்
கதையெனநீ நினையேல்மெய்க் கருத்துரையென் றறிக
இனித்தவருட் பெருஞ்ஜோதி யாணையெல்லா முடைய
இறைவன்வரு தருணமிது சத்திபமா மிதனைப்
பனித்தவுல கவரறிந்தே யுய்யும்வகை யின்னே
பகர்ந்திடுக நாளையருட் பரமசுகச் சாறே. 10

அருட்பெருஞ்ஜோதி

106. தலைவி கூற்று

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

தந்தேக மெனக்களித்தார் தம்மருளும் பொருளுந்
தம்மையுமிங் கெனக்களித்தா ரெம்மையிலும் பிரியார்
எந்தேக மதிற்புகுந்தா ரென்னுளத்தே யிருந்தார்
என்னுயிரிற் கலந்தகடத் திறைபவர்கா லெயிலே
வந்தேயிங் கமர்ந்தருள்வா ராதலினுல் விரைந்தே
மாளிகையை யலங்கரித்து வைத்திடுதி யிதற்குச்
சந்தேக மில்லையென்றன் றனித்தலைவர் வார்த்தை
சத்தியஞ்சத் தியமாதே சத்தியஞ்சத் தியமே. 1

நன்பாட்டு மறைகளுக்கு மாலயர்க்குங் கிடையார்
நம்மளவிற் கிடைப்பாரோ வென்றுநினைத் தேங்கி
என்பாட்டுக் கிருந்தேனை வலிந்துகலந் தணைந்தே
இன்பமுறத் தனிமாலை யிட்டகடத் திறைவர்
முன்பாட்டுக் காலையிலே வருகுவர்மா ளிகையை
முழுதுமலங் கரித்திடுக வையுறவோ டொருநீ
தன்பாட்டுக் கிருந்திடே லையர்திரு வார்த்தை
சத்தியஞ்சத் தியமாதே சத்தியஞ்சத் தியமே. 2

முன்பாட்டுக் காலையிலே வருகுவரென் கணவர்
மோசமிலை மோசமென மொழிகின்றீர் மொழிக
பின்பாட்டுக் காலையிலே நினைத்தவெலா முடியும்
பிசகிலையிம் மொழிசிறிதும் பிசகிலையிவ் வுலகில்

துன்பாட்டுச் சிற்றினத்தார் சிறுமொழிகேட் டுள்ளந்
துளங்கேல்நம் மாளிகையைச் சூழவலங் கரிப்பாய்
தன்பாட்டுத் திருப்பொதுவில் நடத்திறைவ ராணை
சத்தியஞ்சத் தியமாதே சத்தியஞ்சத் தியமே. 3

உள்ளுண்ட வுண்மையெலாம் ஞானறிவே னென்னை
உடையபெருந் தகையறிவா ருலகிடத்தே மாயைக்
கள்ளுண்ட சிற்றினத்தார் யாதறிவா ரெனது
கணவர்திரு வரவிந்தக் காலையிலங் கண்டாய்
நள்ளுண்ட மாளிகையை மங்கலங்க ணிரம்ப
நன்குபுனைந் தலங்கரிப்பாய் நான்மொழிந்த மொழியைத்
தள்ளுண்டிங் கையமுறேல் நடத்திறைவ ராணை
சத்தியஞ்சத் தியமாதே சத்தியஞ்சத் தியமே. 4

என்னுடைய தனிக்கணவ ரருட்ஜோதி யுண்மை
யானறிவே னுலகவர்க ளெங்ஙனங்கண் டறிவார்
உன்னலற வுண்ணுதற்கு முறங்குதற்கு மறிவார்
உலம்புதல்கேட் டையமுறே லெங்கியமா னிகையைத்
துன்னுறுமங் கலம்விளங்க வலங்கரிப்பா யிங்கே
தூங்குதலா லென்னபலன் சோர்வடையேல் பொதுவில்
தன்னுடைய நடம்புரியுந் தலைவர்திரு வாணை
சத்தியஞ்சத் தியமாதே சத்தியஞ்சத் தியமே. 5

என்னைமண மாலையிட்டா ரென்னுபிரிற் கலந்தார்
எல்லாஞ்செய் வல்லசித்த ரெனக்கறிவித் ததனை
இன்னவுல கினரறியா ராதலினற் பலவே
இயம்புகின்ற ரியம்புகநந் தலைவர்வரு தருணம்
மன்னியகா லையிலாகு மாளிகையை விரைந்து
மங்கலங்கள் புனைந்திடுக மயங்கையய மடையேல்
தன்னிகர்தா னம்பொதுவில் நடப்புரிவா ராணை
சத்தியஞ்சத் தியமாதே சத்தியஞ்சத் தியமே. 6

கீளையனந்த மறையாலும் நிச்சயிக்கக் கூடாக்
கிளரொளியா ரென்னளவிற் கிடைத்ததனித் தலைவர்
அளையவெனக் குணர்த்தியதை யானறிவே னுலகர்
அறிவாரோ வவருரைகொண் டையமுறே லிங்கே
இளவடையேன் மாளிகையை மங்கலங்க ணிரம்ப
இனிதுபுனைந் தலங்கரிப்பாய் காலையிது கண்டாய்
தளர்வறச்சிற் றம்பலத்தே நடம்புரிவா ராணை
சத்தியஞ்சத் தியமாதே சத்தியஞ்சத் தியமே. 7

ஆரறிவா ரெல்லாஞ்செய் வல்லவரென் னுள்ளே
அறிவித்த வுண்மையையமா லயன்முதலோ ரறியார்
பாரறியா தயல்வேறு பகர்வதுகேட் டொருநீ
பைபுளொடு மையமுறல் காலையிது கண்டாய்
நேருறநீ விரைந்துவிரைந் தணிபெறமா லிகையை
நீடவலங் கரிப்பாயுண் ணேயமொடு களித்தே
தாரகமிங் கெனக்கான நடத்திறைவ ராணை
சத்தியஞ்சத் தியமாதே சத்திபஞ்சத் தியமே. 8

ஐயரெனக் குள்ளிருந்திங் கறிவித்த வரத்தை
யாரறிவார் நானறிவே னவரறிவா ரல்லாற்
பொய்புலக ரறிவாரோ புல்லறிவாற் பலவே
புகல்கின்று ரதுகேட்டுப் புந்திமயக் கடையேல்
மெய்யரெனை யாளுடையார் வருகின்ற தருணம்
மேவியது மாலிகையை யலங்கரிப்பாய் விரைந்தே
தையலொரு பாலுடைய நடத்திறைவ ராணை
சத்தியஞ்சத் தியமாதே சத்தியஞ்சத் தியமே. 9

உடையவரென் னுளத்திருந்தே யுணர்வித்த வரத்தை
உலகவர்க ளறியார்க ளாதலினற் பலவே
இடைபுகல்கின் றுரதுகேட் டையமுறே லிங்கே
இரவுவிடுங் கதுகாலை யெய்தியதா லினியே
அடைவுறநந் தனித்தலைவர் தடையறவந் தருள்வார்
அணிபெறமா லிகையைவிரைந் தலங்கரித்து மகிழ்க
சடையசையப் பொதுநடஞ்செய் யிறைவர்திரு வார்த்தை
சத்திபஞ்சத் தியமாதே சத்திபஞ்சத் தியமே. 10

அருட்பெருஞ்ஜோதி

107. உறுதி கூறல் 1

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

கட்டோடே கனத்தோடே வாழ்கின்றீர் மென்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவு நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலங் காண்கின்றீர்
குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக் குறியீர்
எட்டோடே யிரண்டுசேர்த் தெண்ணவு மறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 1

ஆறுமை லவியாம லடைந்த கோபத்தீ
அடர்வுற வுலகிடை யஞ்சாது திரிவீர்
மாறுமல் மனஞ்சென்ற வழிசென்று திகைப்பீர்
வழிதுறை காண்கிலீர் பழிபடும் படிக்கே
காறுத மலர்போலும் வாழ்கின்றீர் மூப்பு
நரைதிரை மரணத்துக் கென்செயக் கடவீர்
எறுமல் வீணிலே யிறங்குகின் றீரே
எத்துணைகொள் கின்றீர் பித்துல கீரே. 2

ஆயாமை யாலேநீ ராதிய ஞதி
ஆகிய ஜோதியை யறிந்துகொள் கில்லீர்
மாயாமை பிறவாமை வழியொன்று மூணரீர்
மறவாமை நினையாமை வகைசிறி தறியீர்
காயாமை பழுக்கின்ற கருத்தையுங் கருதீர்
கண்மூடித் திரிகின்றீர் கனிவொடு மிரப்போர்க்
கியாமை யொன்றையே யின்றுணை யென்பீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 3

சாமாந்த ராகாத் தரஞ்சிறி துணரீர்
தத்துவ ஞானத்தை யிற்றனத் தெரியீர்
மாமாந்த நோயுற்ற குழவியிற் குழைந்தீர்
வாழ்க்கையி லற்ப மகிழ்ச்சியும் பெற்றீர்
காமாந்த காரத்திற் கண்மூடித் திரிவீர்
கற்பன கற்கிலீர் கருத்தினைக் கருதா
தேமாந்து தூங்குகின் றீர்விழிக் கின்றீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 4

அச்சையு முடம்பையு மறிவகை யறியீர்
அம்மையு மப்பனும் ஆரென்றத் தெரியீர்
பச்சையுஞ் செம்மையுங் கருமையுங் கூடிப்
பலித்ததும் வாழ்க்கையிற் பண்பொன்று மில்லீர்
பிச்சையிட் டுண்ணவும் பின்படு கின்றீர்
பின்படு தீமையின் முன்படு கின்றீர்
இச்சையிற் கண்மூடி யெச்சுகங் கண்டீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 5

வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை யறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத் தாள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக்கொண் டோட்டியுள் ளிருந்தீர்

பட்டினி கிடப்பாரைப் பார்க்கவு நேரீர்
பழங்கஞ்சி யாயினும் வழங்கவு நினையீர்
எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோற் கிளைத்தீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 6

வன்சொல்லி னல்லது வாய்திறப் பறியீர்
வாய்மையுந் தூய்மையுங் காய்மையில் வளர்த்தீர்
முன்சொல்லு மாறொன்று பின்சொல்வ தொன்றாய்
மூட்டுகின் றீர்வினை மூட்டையைக் கட்டி
மன்சொல்லு மார்க்கத்தை மறந்துதுன் மார்க்க
வழிநடக் கின்றீரம் மரணத்தீர்ப் புக்கே
என்சொல்ல விருக்கின்றீர் பின்சொல்வ தறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 7

துன்மார்க்க நடையிடைத் தூங்குகின் றீரே
தூக்கத்தை விடுகின்ற துணையொன்று கருதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திட விழையீர்
சாவையும் பிறப்பையுந் தவிர்ந்திட விரும்பீர்
பன்மார்க்கஞ் செல்கின்ற படிற்றுள மடக்கீர்
பசித்தவர் தம்முகம் பார்த்துணை வளியீர்
என்மார்க்க மெச்சுகம் யாதுநும் வாழ்க்கை
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 8

பொய்கட்டிக் கொண்டுநீர் வாழ்கின்றீ ரிங்கே
புலைகட்டிக் கொண்டவிப் பொய்யுடல் வீழ்ந்தால்
செய்கட்டி வாழ்கின்ற செருக்கற்று நரகிற்
சிறுபுழு வாகித் திகைத்திட லறியீர்
கைகட்டி வாய்பொத்தி நிற்பாரைக் கண்டே
கைகொட்டிச் சிரிக்கின்றீர் கருணைபொன் றில்லீர்
எய்கட்டி யிடைமொய்க்கு மீயினுஞ் சிறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 9

பண்ணுத தீமைகள் பண்ணுகின் றீரே
பகராத வன்மொழி பகருகின் றீரே
நண்ணுத தியின நண்ணுகின் றீரே
நடவாத நடத்தைகள் நடக்கவந் தீரே
கண்ணுகக் காக்கின்ற கருத்தினை நினைந்தே
கண்ணுர நீர்விட்டுக் கருதறி யீரே
எண்ணுத தெண்ணவு நேருமோர் காலம்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே. 10

அருட்பெருஞ்ஜோதி

108. உறுதிகூறல் 2

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே யபிமானித் தலைகின்ற வுலகீர்
அலைந்தலைந்து விணைநீ ரழிதலழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடுந் தனித்தலைவ ரொருத்தரவர் தாமே
வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றே னுமையே. 1

காடுவெட்டி நிலந்திருத்திக் காட்டெருவும் போட்டுக்
கருட்டைவிட்டுக் கடிவிரைத்துக் களிக்கின்ற வுலகீர்
கூடுவிட்டுப் போயினபின் னெதுபுரிவீ ரெங்கே
குடியிருப்பி தையோநீர் குறித்தறியீ ரிங்கே
பாடுபட்டீர் பயனறியீர் பாழ்க்கிறைத்துக் கழித்தீர்
பட்டதெலாம் போதுமிது பரமர்வரு தருணம்
ஈடுகட்டி வ்ருவீரேல் இன்பமிகப் பெறுவீர்
என்மையுரைத் தேனலிதா னுண்மையுரைத் தனனே. 2

ஆற்றுவெள்ளம் வருவதன்முன் னணைபோட வறியீர்
அகங்காரப் பேய்பிடித்தி ராடுதற்கே யறிவீர்
கூற்றுவரும் காலதனுக் கெதுபுரிவீ ரையோ
கூற்றுதைத்த சேவடியைப் போற்றவிரும் பீரே
வேற்றுரைத்து விணைபெருக்கி மெலிகின்ற வுலகீர்
விண்ணுலகக் கொடிவழக்கை விட்டுவிட்டு வம்மின்
சாற்றுவக்க வெனதுதனித் தந்தைவரு கின்ற
தருணமிது சத்திபஞ்சிற் சத்தியைச்சார் வதற்கே. 3

பொய்விளக்கப் புருகின்றீர் போதுகழிக் கின்றீர்
புலைகொலைகள் புரிகின்றீர் கலகலவென் கின்றீர்
கைவிளக்குப் பிடித்தொருபாழ்ங் கிணற்றில்விழு கின்ற
களியரெனக் களிக்கின்றீர் சருத்திருந்துங் கருதீர்
ஐவிளக்கு மூப்புமர ணுதிகளை நினைத்தால்
அடிவயிற்றை முருக்காதோ கொடியமுயற் றுலகீர்
மெய்விளக்க வெனதுதந்தை வருகின்ற தருணம்
மேவியதின் டடைவீரே லாவிபெறு வீரே. 4

எய்வகைசார் மதங்களிலே பொய்வகைச் சாத்திரங்கள்
எடுத்துரைத்தே யெமதுமதப்வ மெமதுமதப்வ மென்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வமொன்றென் றறியீர்
கரிபிடித்துக் கலகமிட்ட பேரியரினும் பெரியீர்
ஐவகைய பூதவுடம் பழிந்திடிலென் புரிவீர்
அழியுடம்பை யழியாமை யாக்கும்வகை யறியீர்
உய்வகையென் றனித்தந்தை வருகின்ற தருணம்
உற்றதிவ ணுற்றிடுவீர் பெற்றிடுவீ ருவப்பே. 5

உடம்புவரு வகையறியீ ருயிர்வகையை யறியீர்
உடல்பருக்க யுண்டுகித முறங்குதற்கே யறிவீர்
மடம்புகுபேய் மனத்தாலே மயங்குகின்றீர் மனத்தை
வசப்படுத்தீர் வசப்படுத்தும் வழிதுறைகற் றறியீர்
இடம்பெறுபொய் வாழ்க்கையிலே யின்பதுன்ப மடுத்தே
எண்ணியெண்ணி யிளைக்கின்றீ ரேழை யுலகீரே
நடம்புரியென் றனித்தந்தை வருகின்ற தருணம்
நண்ணியது நண்ணுமிதை புண்ணியஞ்சார் வீரே. 6

நரைமரண மூப்பறியா நல்லவுடம் பினீரே
நற்குலத்தா ரெனவறியீர் நானிலத்தீர் கீவிர்
வரையிலுயர் குலமென்றுந் தாழ்ந்தகுல மென்றும்
வகுக்கின்றீ ரிருதலமு மாண்டிடக்கா ணின்றீர்
புரையுறுநுங் குலங்களெலாம் புழுக்குலமென் றறிந்தே
புத்தமுத முண்டோங்கும் புனிதகுலம் பெறவே
உரைபெறுமென் றனித்தந்தை வருகின்ற தருணம்
உற்றதிவ ணுற்றிடுவீ ருண்மைபுரைத் தீதினை. 7

கனமுடையேங் கட்டுடைபே மென்றுநினைத் திங்கே
களித்திறுமாந் திருக்கின்றீ ரொளிப்பிடமு மறியீர்
சினமுடைய கூற்றுவருஞ் செய்திபறி யீரோ
செத்தறுமி தினத்தாரைச் சிறிதுநினை யீரோ
தினகரன்போற் சாகாத தேகமுடை யவரே
திருவுடையா ரெனவறிந்தே சேர்ந்திடுமி னீண்டே
மனமகிழ்ந்து கேட்கின்ற வரமெல்லா மெனக்கே
வழங்குதற்கென் றனித்தந்தை வருதருண மிதுவே. 8

வையகத்தீர் வானகத்தீர் மற்றகத்தீர் நுமது
வாழ்க்கையெலாம் வாழ்க்கையென மதித்துமயங் காதீர்
மையகத்தே யுறுமரண வாதனையைத் தவிர்த்த
வாழ்க்சையதே வாழ்க்கையென மதித்ததனைப் பெறவே
மெய்யகத்தே விரும்பியிங்கே வந்திடுமி னெனது
மெய்ப்பொருளாந் தனித்தந்தை யித்தருணந் தனிலே
செய்யகத்தே வளர்ஞான சித்திபுரந் தனிலே
சித்தாடல் புரிகின்றூர் திண்ணமிது தானே. 9

கரணமிகக் களிப்புறவே கடலுலகும் வானுங்
கதிபதியென் றுரைகின்றீ ரதிபதியீர் நீவிர்
மரணபயந் தவிராதே வாழ்வதிலென் பயனே
மயங்காதீ ருய்ங்காதீர் வந்திடுமி னீண்டே
திரணமுமோ ரைந்தொழிலைச் செய்பவொளி வழங்குஞ்
சித்திபுர மெனவோங்கும் உத்தரசிற் சபையில்
சரணமெனக் களித்தினையுந் தாளுக்க வெனது
தனித்தந்தை வருகின்ற தருணமிது தானே. 10

அருட்பெருஞ்ஜோதி

109. சுத்தசிவநிலை

நேரிசை வெண்பா

அருட்பெருஞ்ஜோதி

கண்ணிற் கலந்தான் கருத்திற் கலந்தானென்
எண்ணிற் கலந்தே யிருக்கின்றான் — பண்ணிற்
கலந்தானென் பாட்டிற் கலந்தா னுயிரிற்
கலந்தான் கருணை கலந்து. 1

எல்லா நலமு மெனக்கே கொடுக்கின்றான்
எல்லாஞ் செயவல்ல னெம்பெருமான் — எல்லாமாய்
நின்றான் பொதுவில் நிருத்தம் புரிகின்றான்
ஒன்றுகி னின்று வுவந்து. 2

எண்ணுகின்றே னெண்ணங்க ளெல்லாந் தருகின்றான்
பண்ணுகின்றேன் பண்ணுவித்துப் பாடுகின்றான்—உண்ணுகின்றேன்
தெள்ளமுத முள்ளந் தெளியத் தருகின்றான்
வள்ளனடா னாயன் மகிழ்ந்து. 3

சித்தியெலாந் தக்கே திருவம் பலத்தாடும்
நித்தியனென் னுள்ளே நிறைகின்றான் — சுத்தியடீ
தக்கோ வுலகி லறியீரோ நீவிரெலாஞ்
சக்கோடா மாயிருளின் சார்ந்து. 4

அய்யாவென் றோர்கா லழைக்கின்றே னப்பொழுதே
எய்யேன் மகனேயென் றெய்துகின்றான் — ஐயாவென்
அப்பன் பெருங்கருணை யார்க்குண் டுலகத்தீர்
செப்பமுடன் போற்றுமினே சேர்ந்து. 5

அப்பாவென் றோர்கா லழைக்கின்றே னப்பொழுதே
அப்பா மகனேயென் றூர்கின்றான் — தப்பார்
சடையான்சிற் றம்பலத்தான் தானேதா னானான்
உடையா னுளத்தே யுவந்து. 6

தானேவந் தென்னுளத்தே சார்ந்து கலந்துகொண்டான்
தானே யெனக்குத் தருகின்றான் — தானேநான்
ஆகப் புரிந்தானென் னப்பன் பெருங்கருணை
மேகத்திற் குண்டோ விளம்பு. 7

பாலுங் கொடுத்தான் பதிதிறக்கு மோர்திறவு
கோலுங் கொடுத்தான் குணங்கொடுத்தான் — காலுந்
தலையு மறியுந் தாழுங் கொடுத்தான்
நிலையுங் கொடுத்தா னிறைந்து. 8

வெவ்வினையு மாயை விளைவுந் தவிர்ந்தனவே
செவ்வையறி வின்பஞ் சிறந்தனவே — எவ்வயினும்
ஆனந்தற் றம்பலத்தே யாடுகின்றான் றண்ணருளாந்
தேனுண்டோங்கியது தேர்ந்து. 9

வஞ்ச வினையெல்லா மடிந்தனவன் மாயைபிரான்
அஞ்சி யெனைவிட்டே யகன்றனவால் — எஞ்சலிலா
இன்பமெலா மென்றனதே யெய்தி நிறைந்தனவால்
துன்பமெலாம் போன தொலைந்து. 10

அம்மை திரோதை யகன்று ளெனைவிரும்பி
அம்மையருட் சத்தி யடைந்தனளே — இம்மையிலே
மாமாயை நீங்கினள்போன் வண்ணவடி வுற்றதென் றுஞ்
சாமா றிலையெனக்குத் தான்.! 11

நானே தவம்புரிந்தே னினிலத்தி லம்பலவன்
தானேவந் தென்னைத் தடுத்தாண்டான் — ஊனே
புகுந்தானென் னுள்ளம் புகுந்தா னுபிரிற்
புகுந்தான் கருணை புரிந்து. 12

ஒன்றே சிவமென் றுணர்ந்தே னுணர்ந்தாங்கு
நின்றேமெய்ஞ் ஞான நிலைபெற்றேன் — நன்றேமெய்ச்
சித்தியெலாம் பெற்றேன் றிருவம் பலத்தாடி
பத்தியெலாம் பெற்ற பலன். 13

தூக்கங் கெடுத்தான் சுகங்கொடுத்தா னென்னுளத்தே
ஏக்கந் தவிர்த்தா னிருளறுத்தான் — ஆக்கமிகத்
தந்தா னெனையீன்ற தந்தையே யென்றழைக்க
வந்தானென் னப்பன் மகிழ்ந்து. 14

வாட்டமெலாந் தீர்த்தான் மகிழ்வளித்தான் மெய்ஞ்ஞான
நாட்டமெலாந் தந்தா னலங்கொடுத்தான் — ஆட்டமெலாம்
ஆடுகநீ யென்றுன்றன் ஆனந்த வார்கழலைப்
பாடுகநீ யென்றுன் பரன். 15

தாணு னெனலும்பே தந்தன்னைத் தவிர்த்தானன்
ஆனன்சிற் றம்பலவ னந்தோநான் — வானுடார்
செய்தற் கரிபதவஞ் செய்தேன் மகிழ்கின்றேன்
எய்தற் கரியசுக மேய்ந்து. 16

சுத்த வடிவுஞ் சுகவடிவாம் ஓங்கார
நித்த வடிவு நிறைந்தோங்கு — சித்தனுமோர்
ஞான வடிவுமிங்கே நான்பெற்றே னெங்கெங்கும்
தானவிளை யாட்டியற்றத் தான். 17

நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்சொல் வார்த்தையன்றி
நானுரைக்கும் வார்த்தையன்று நாட்டூர்நான் — ஏனுரைப்பேன்
நானு னெனக்கெனவோர் ஞானவுணர் வேதசிவம்
ஊனுடி நில்லா வுழி. 18

ஆரணமு மாகமமு மாங்காங் குரைக்கின்ற
காரணமுங் காரியமுங் காட்டுவித்தான் — தாரணியிற்
கண்டேன் களிக்கின்றேன் கங்குல்பக லற்றவிடத்
துண்டே னமுத முவந்து. 19

துன்மார்க்க மெல்லாந் தொலைத்துவிட்டேன் சுத்தசிவ
சன்மார்க்க சங்கந் தலைப்பட்டேன் — என்மார்க்கம்
நன்மார்க்க மென்றேவா ளுட்டார் புகழ்கின்றார்
மன்மார்க்கத் தாலே மகிழ்ந்து. 20

பன்மார்க்க மெல்லாம் பசையற் றொழிந்தனவே
சன்மார்க்க மொன்றே தழைத்ததுவே — சொன்மார்க்கத்
தெல்லா வுலகு மிசைந்தனவே யெம்பெருமான்
கொல்லா நெறியருளைக் கொண்டு. 21

சாதிகுல மென்றுஞ் சமயமத மென்றுமுப
நீதியிலாச் சிரமநீட் டென்றும் — ஓதுகின்ற
பேயாட்ட மெல்லாம் பிதிர்ந்தொழிந்த வேபிறர்தம்
வாயாட்டந் தீர்ந்தனவே மற்று. 22

சிந்தா குலந்தவிர்த்துச் சிற்றம் பலப்பெருமான்
வந்தா னெனைனத்தான் வலிந்தழைத்தே — ஐந்தொழிலும்
நீயேசெய் யென்றெனக்கே நேர்ந்தளித்தா னென்னுடைய
தாயே யனையான் றனித்து. 23

கூகா வெனவடுத்தோர் கூடி யழாதவண்ணம்
சாகா வரமெனக்கே தந்திட்டான் — ஏகாவ
னேகா வெனமறைக ளேத்துஞ்சிற் றம்பலத்தான்
மாகா தலனு மகிழ்ந்து. 24

நாடுகின்ற தெம்பெருமா னுட்டமதே நானுலகில்
ஆடுகின்ற தெந்தையரு ளாட்டமதே — பாடுகின்ற
பாட்டெல்லா மம்பலவன் பாத மலர்ப்பாட்டே
நீட்டெல்லா மாங்கவன்றன் னீட்டு. 25

சத்தியஞ் செய்கின்றேன் சகத்தீ ரறிமின்கள்
சித்தியெலாம் வல்ல சிவமொன்றே — நித்தியமென்
றெண்ணுமெண்ணைத் தாலேநம் மெண்ணமெலாங் கைகூடும்
நண்ணுமின்பத் தேனென்று நான். 26

நானே தவம்புரிந்தே னம்பெருமா னல்லருளால்
நானே யருட்சத்தி நாடடைந்தேன் — நானே
அழியா வடிவ மவைமூன்றும் பெற்றேன்
இழியாம லாடுகின்றே னிங்கு. 27

எவ்வுல குண்டங்க ளெத்தனைபு நான்காண
இவ்வுல கெல்லை யெனக்களித்தான் — எவ்வுயிரும்
சன்மார்க்க சங்கத் தணைபடையச் செய்வித்தே
என்மார்க்கங் காண்பே னினி. 28

சாத்திரங்க ளெல்லாந் தடுமாற்றஞ் சொல்வதன்றி
நேத்திரங்கள் போற்காட்ட நேராவே — நேத்திரங்கள்
சிற்றம் பலவன் றிருவருள்சீர் வண்ணமென்றே
உற்றிங் கறிகதே லுவந்து. 29

வேதா கமங்களென்று வீண்வாத மாடுகின்றீர்
வேதா கமத்தின் விளைவறியீர் — சூதாகச்
சொன்னவலா லுண்மைவெளி தோன்ற வுரைத்தவிலை
என்ன பயனீ வினை. 30

சாகாத கல்வித் தரமறிதல் வேண்டுமென்றும்
வேகாத காலுணர்தல் வேண்டுமுடன் — சாகாத்
தலையறிதல் வேண்டுந் தனியருளா லுண்மை
நிலையடைதல் வேண்டு நிலத்து. 31

பொய்யுரையென் றெண்ணுதிரேற் போமின் புறக்கடையில்
மெய்யுரையென் றெண்ணுதிரேன் மேவுமினே — ஐயனருள்
சித்தியெலாம் வல்ல திருக்கூத் தலவாமல்
இத்தினந்தோட் டாடுகிற்பா னிங்கு. 32

வான்வந்த தேவர்களு மாலயனு மற்றவரும்
தான்வந்து சூழ்ந்தார் தலைக்கடையில் — தேன்வந்த
மங்கை சிவகாம வல்லியொடு மெம்பெருமான்
இங்குநடஞ் செய்வா னினி. 33

சத்தியெலாங் கொண்டதனித் தந்தை நடராஜன்
சித்தியெலாம் வல்லான் றிருவாளன் — நித்தியன்றான்
ஊழிபல சென்றாலு மோவாம லிவ்விடத்தே
வாழிடஞ் செய்வான் மகிழ்ந்து. 34

இன்று தொடங்கியிங்கே யெம்பெருமா னெந்நாளும்
நன்று துலங்க நடம்புரிவான் — என்றுமென்சொல்
சத்தியமென் றெண்ணிச் சகத்தீ ரடைமின்கள்
நித்தியம்பெற் றுய்யலா நீர். 35

என்னுடலு மென்பொருளு மென்னுயிருந் தான்கொண்டான்
தன்னுடலுந் தன்பொருளுந் தன்னுயிரும் — என்னிடத்தே
தந்தா னருட்சிற் சபையப்பா வென்றழைத்தே தன்
வந்தான்வந் தானுண் மகிழ்ந்து. 36

செத்தாரை யெல்லாஞ் திருப்ப வெழுப்புதவிங்
செத்தால் முடியுமெனி லெம்மவரே — சித்தாம்
அருட்பெருஞ் ஜோதி யதனன் முடியுந்
தெருட்பெருஞ் சத்தியமீ தே. 37

இவ்வுலகிற் செத்தாரை யெல்லா மெழுகவெனில்
எவ்வுலகும் போற்ற வெழுந்திருப்பார் — செவ்வுலகிற்
சிற்றம் பலத்தான் றிருவருள்பெற் றூர்கோக்கம்
உற்றவரை யுற்றவர்க ளுற்று. 38

யான்புரிதல் வேண்டுங்கொ லிவ்வுலகிற் செத்தாரை
ஊன்புரிந்து மீள வுயிர்ப்பித்தல் — வான்புரிந்த
அம்பலத்தா னல்லருளா லத்தோகான் மேற்போர்த்த
கம்பலத்தா லாருங் களித்து. 39

என்னே யுலகி லிறந்தா ரெழுதல் மிக
அன்னே யதிசயமென் றுடுகின்றீர் — இன்னே
திருவம் பலத்தான் றிருநோக்கம் பெற்றூர்க்
குருவம் பலத்தேயென் றுண். 40

ஆடாதீர் சற்று மசையாதீர் வேறொன்றை
நாடாதீர் பொய்ப்புலகை நம்பாதீர் — வாடாதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர் விரைந்தினியிங்
கென்மார்க் கமுமென்றே. 41

மார்க்கமெலா மொன்றுகு மாநிலத்தீர் வாய்மையிது
தூக்கமெலா நீக்கித் துணிந்துளத்தே — எக்கம்விட்டுச்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியநீர்
நன்மார்க்கஞ் சேர்வீரிந் நாள். 42

இங்ஙாளே கண்டூ ரிறந்தா ரெழுகின்ற
நன்னிலைன் வார்த்தைதனை நம்புமிலை — இங்ஙாள்
அருட்பெருஞ் ஜோதி யடைகின்ற காள்மெய்
அருட்பெருஞ் சத்தியமீ தாம். 43

ஏமாந் திருக்கு மெமரங்கா ளிவ்வுலகில்
சாமாந்த ராகாத் தரம்பெறவே — காமாந்த
காரத்தை விட்டுக் கருதுமிலை வித்தருணம்
நீரத்தைச் சேர்வீர் நிஜம். 44

வீணே பராக்கில் விடாதீ ருமதுளத்தை
நாணே யுடைய நமரங்காள் — ஊணைகத்
தெள்ளமுத மின்றெனக்குச் சேர்த்தளித்தான் சித்தாட
உள்ளியகா ளீதறிமி னுற்று. 45

போற்றியுரைக் கின்றேன் பொய்யென் றிகழாதீர்
காற்றிசைக்கண் வாழு நமரங்காள் — ஆற்றலருள்
அப்பன் வருகின்று னருள்விளையாட் டாடுதற்கென்
றிப்புவியி லித்தருண மிங்கு. 46

ஆளுடையா னம்முடைய வப்பன் வருகின்ற
காளைதுவோ வென்று கலியாதீர் — நீள
நினையாதீர் சத்தியநா னோர்ந்துரைத்தே னிங்ஙாள்
அனையான் வருகின்று ணுய்ந்து. 47

அருட்பெருஞ்ஜோதி

—o—

110. ஞானசரியை

வாய்ப்பறையார்த்தல்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீரதனு லுடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே யென்னுரிமை நாயகனே யென்று
வணைந்துவணைந் தேத்நுதுநாம் வம்மினுல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டூர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண மிதுவே. 1

புகுந்தருண மிதுகண்டீர் நம்மவரே நான்றான்
புகல்கின்றே னென்மொழியோர் பொய்மொழி யென்னுதீர்
உகுந்தருணை முற்றவரும் பெற்றவரும் பிறரும்
உடைமைகளு முலகியலு முற்றதுணை யன்றே
மிகுந்தசுவைக் கருப்பேசெங் கனியேகோற் றேனே
மெய்ப்பயனே கைப்பொருளே விலையறியா மணியே
தகுந்ததனிப் பெரும்பதியே தயாநிதியே கதியே
சத்தியமே யென்றுரைமின் பத்தியோடு பணிந்தே. 2

பணிந்துபணிந் தணிந்தணிந்து பாடுமினே வுலகீர்
பரம்பரமே சிதம்பரமே பராபரமே வரமே
துணிந்துவந்த வேதாந்த சுத்தவனு பவமே
துரியமுடி யனுபவமே சுத்தசித்தாந் தமதாய்த்
தணிந்தநிலைப் பெருஞ்சுகமே சமரசசன் மார்க்க
சத்தியமே யியற்கையுண்மைத் தனிப்பதியே யென்று
கணிந்துளத்தே கனிந்துநினைந் துரைத்திடலப் பொழுதே
காணுத காட்சியெலாங் கண்டுகொள லாமே. 3

கண்டதெலா மனித்தியமே கேட்டதெலாம் பழுதே
கற்றதெலாம் பொய்யேநீர் களித்ததெலாம் வீணே
உண்டதெலா மலமேமபுட் கொண்டதெலாங் குறையே
உலகியலீ ரிதுவரையு முண்மையறிந் திலிரே
விண்டதனு லென்னினிநீர் சமரசசன் மார்க்க
மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து மெய்ப்பொருணன் குணர்ந்தே
என்டகுசிற் றம்பலத்தே யெந்தையரு ளடைமின்
இறவாத வரம்பெறலா மின்பமுற லாமே. 4

இன்புறலா மெவ்வுலகு மேத்திடவாழ்ந் திடலாம்
எல்லாஞ்செய் வல்லசித்தி யிறைமையும்பெற் றிடலாம்
அன்புடையீர் வம்மினிங்கே சமரசசன் மார்க்கம்
அடைந்திடுமின் அகவடிவிங் கனகவடி வாகிப்
பொன்புடைகன் கொளிரொளியே புத்தமுதே ஞான
பூரணமே யாரணத்தின் பொருண்முடிமேற் பொருளே
வன்புடையார் பெறற்கரிதா மணியேசிற் சபையின்
மாமருந்தே யென்றுரைமின் தீமையெலாந் தவிர்ந்தே. 5

தீமையெலா நன்மையென்றே திருவுளங்கொண் டருளிச்
சிறியேனுக் கருளமுதத் தெளிவளித்த திறத்தை
ஆமயந்தீர்த் தியற்கையின்ப வனுபவமே மயமாய்
அம்பலத்தே விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோ தியையோர்
ஓமயவான் வடிவுடையா ருள்ளகத்தே நிறைந்த
ஒருபொருளைப் பெருங்கருணை யுடையபெரும் பதியை
நாமருவி யிறவாத நலம்பெறலா மூலகீர்
நல்லவொரு தருணமிது வல்லிலவம்மி னீரே. 6

நீர்பிறரோ யானுமக்கு நேயவுற வலதீ னை
நெடுமொழியே புனைப்பனன்றிக் கொடுமொழிசொல் வேனே
சார்புறவே யருளமுதந் தந்தெனமே லேற்றித்
தனித்தபெருஞ் சுகமளித்த தனித்தபெரும் பதிதான்
சீர்பெறவே திருப்பொதுவிற் றிருமேனி தரித்துச்
சித்தாடல் புரிகின்ற திருநாள்க ளடுத்த
ஓர்புறவே யிதுநல்ல தருணமிங்கே வம்மின்
உலகியலீ ருன்னியவா றுற்றிடுவீர் விரைந்தே. 7

விரைந்துவிரைந் தடைந்திடுமின் மேதினியீ ரிங்கே
மெய்ம்மைபுரைக் கின்றேனீர் வேறுநினை யாதீர்
திரைந்துதிரைந் துளுத்தவரு மிளமையடைந் திடவுஞ்
செத்தவர்க ளெழுந்திடவுஞ் சித்தாடல் புரிய
வரைந்துவரைந் தெல்லாஞ்செய் வல்லசித்தன் றானே
வருகின்ற தருணமிது வரம்பெறலாம் நீவிர்
கரைந்துகரைந் துளமுருகிக் கண்களினீர் பெருகிக்
கருணைநடக் கடவுளையுட் கருதுமினே களித்தே. 8

களித்துலகி லளவிகந்த காலமுல கெல்லாங்
களிப்படைய அருட்ஜோதிக் கடவுள்வரு தருணந்
தெளித்திடுமெத் தருணமதோ வென்னுதீ ரிதுவே
செத்தவரை யெழுப்புகின்ற திகழ்தருண முலகீர்
ஒளித்துரைக்கின் றேனலனென் வாய்ப்பறையார்க் கின்றேன்
ஒருசிறிதும் அச்சமுறே னுள்ளபடி யுணர்ந்தேன்
அளித்திடுசிற் றப்பலத்தென் னப்பனருள் பெறவே
ஆசையுண்டேல் வம்மினிங்கே நேசமுடை யீரே. 9

ஆசையுண்டேல் வம்மினிங்கே அருட்ஜோதிப் பெருமான்
அம்மையுமா யப்பனுமா யருளுமரு ளாளன்
எசறநீத் தெனையாட்கொண் டெண்ணியவா றளித்தான்
எல்லாஞ்செய் வல்லசித்த னென்னுயிரிற் கலந்தான்
தேசுடைய பொதுவிலருட் டிருநடனம் புரியத்
திருவுளங்கொண் டெழுந்தருளுந் திருநாளிங் கிதுவே
மோசவுரை யெனநினைத்து மயங்காதீ ருலகீர்
மூக்காலத் தினுமழியா மூர்த்தமடைந் திடவே. 10

அடைந்திடுமி னுலகீரிங் கிதுதருணங் கண்டீர்
அருட்ஜோதிப் பெரும்பதியென் னப்பன்வரு தருணங்
கடைந்ததனித் திருவமுதங் களித்தருத்தி யெனக்கே
காணுத காட்சியெலாங் காட்டுகின்ற தருணம்
இடைந்தொருசா ரலியாதீர் சுகமெனைப் போற்பெறுவீர்
யான்வேறு நீர்வேறென் றெண்ணுகிலே னுரைத்தேன்
உடைந்தசம யக்குழியின் றெழுந்துணர்மி னழியா
ஒருநெறியாஞ் சன்மார்க்கத் திருநெறிபெற் றுவந்தே. 11

திருநெறியோன் றெயதுதான் சமரசசன் மார்க்கச்
சிவநெறியென் றுணர்ந்துலகீர் சேர்ந்திடுமி னீண்டு
வருநெறியி லெனையாட்கொண் டருளமுத மளித்து
வல்லபசத் திகளெல்லாம் வழங்கியவோர் வள்ளல்
பெருநெறியிற் சித்தாடத் திருவுளங்கொண் டருளிப்
பெருங்கருணை வடிவினெடு வருதருண மிதுவே
கருநெறிவீழ்ந் தழலாதீர் கலக்கமடை யாதீர்
கண்மையினுற் கருத்திதாருமித் துண்மையுரைத் தேனே. 12

உண்மையுரைக் கின்றேனிங் குவந்தடைமி னுலகீர்
உரையிதனிற் சந்தேகித் துளறிவழி யாதீர்
என்மையினு னெனதினையீ ரெல்லாஞ்செய் வல்லான்
என்னுளமர்ந் திசைக்கின்று னிதுகேண்மி னீவிர்
தண்மைபொடு சுத்தசிவ சன்மார்க்க நெறியிற்
சார்ந்துவிரைந் தேறுமிதே சத்திபவாழ் வளிக்கக்
கண்மைதரு மொருபெருஞ்சீர்க் கடவுளெனப் புகலுங்
கருணைநிதி வருகின்ற தருணமித தானே. 13

தானேதா னெகியெலாந் தானெகி யலறுப்
தனிப்பதிடாய் விளங்கிதிமென் தந்தையை யென்தாயை
வானேயல் வான்கருவே வான்சருவின் முதலே
வள்ளாலென் றன்பரெலா முள்ளாதின் றவனே
தேனேசெம் பாகேயென் றினித்திடுந் தெள்ளமுதைச்
சிற்சபையிற் பெருவாழ்வைச் சித்தசெய்மி னுலகீர்
ஊனேயு முடலழியா தூழிதோ று மோங்கும்
உத்தமசித் தியைப்பெறுவீர் சத்தியஞ்சொன் னேனே. 14

சத்தியவே தாந்தமெலாந் சித்தாந்த மெல்லாந்
தனித்தனிமே லுணர்ந்துணர்ந்துந் தனையுணர்தற் கரிதாய்
நித்தியநிற் சபைநடுவே நிறைந்துநடம் புரியும்
நித்தகபரி பூரணனைச் சித்தசிகா மணியை
அத்தனையோர் பெருட்பதியை யருமருந்தை யடியேன்
ஆவியையென் னுயிரினிலை யமர்ந்ததயா நிதியைச்
சித்தியெலா மெனக்களித்த சிவகதியை யுலகீர்
சிந்தைசெய்து வாழ்த்துமினே நிந்தையெலாந் தவிர்ந்தே. 15

நிந்தையிலார் நெஞ்சகத்தே நிறைந்தபெருந் தகையை
நிலையனைத்துங் காட்டியரு ணிலையளித்த குருவை
எந்தையையென் றனித்தாயை யென்னிருகண் மணியை
என்னுயிரை யென்னுணர்வை யென்னறிவுள் ளறிவை
சிந்தையிலே தனித்தினிக்குந் தெள்ளமுத யனைத்துஞ்
செய்யவல்ல தனித்தலைமைச் சிவபதியை யுலகீர்
முந்தைமல விருட்டொழிய முன்னுமினே கரண
முடுக்கொழித்துக் கடைமரண நடுக்கொழித்து முயன்றே. 16

முயன்றுலகிற் பயனடையா மூடமத மனைத்தும்
மூடுகியழிந் திடவுமொரு மோசமுமில் லாதே
இயன்றவொரு சன்மார்க்க மெங்குநில பெறவும்
எப்மிறைவ னெழுந்தருள வித்தருணங் கண்மூர்
துயின்றுணர்ந்தே யெழுந்தவர்போ லிறந்தவர்க ளெல்லாந்
தோன்றிவழு கின்றதிது தொடங்கிநிகழ்ந் திடுநீர்
பயின்றறிய விரைந்துவம்மின் படியாத படிப்பைப்
படித்திடலா முணர்ந்திடலாம் பற்றிடலாஞ் சுகமே. 17

சுகமறியீர் துன்பமொன்றே துணிந்தறிந்தீ ருலகீர்
சூதறிந்தீர் வாதறிந்தீர் தூய்மையறிந் திலிரே
இகமறியீர் பரமறியீ ரென்னேநுங் கருத்தி
தென்புரிவீர் மரணம்வரி லெங்குறுவீ ரந்தோ
அகமறியீ ரனகமறிந் தழியாத ஞான
அமுதவடி வம்பெறலா மடைந்திடுமி னீண்டே
முகமறியார் போலிருந்தீ ரென்னேயதீ யீதோ
முத்தமெலாம் போற்றுமருட் சித்தர்மக னினே. 18

ஞானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்றன் வார்த்தை
நம்புமினீ ரமரங்கான் கற்றருணு மிதுவே
வானுரைத்த மணிமன்றில் நடமபுரியெம் பெருமான்
வரவெதிர்கொண் டவனருளால் வரங்களெலாம் பெறவே
தேனுரைக்கு முளமினிக்க வெழுகின்றே னீவிர்
தெரிந்தடைந்தென் னுடனெழுமின் சித்தியெலாம் பெறலாம்
வனுரைத்தே னிரக்கந்தா லெடுத்துரைத்தேன் கண்மூர்
யானடையுஞ் சுகத்தினீர் தானடைதல் குறித்தே. 19

குறித்துரைக்கின் றேனிதனைக் கேண்மினிங்கே வம்மின்
கோனுமனக் குரங்காலே நானுகின்ற வுலகீர்
வெறித்தவும்மா லொருபயனும் வேண்டுகிலே னெனது
மெய்யுரையைப் பொய்யுரையாய் வேறுநினை யாதீர்
பொறித்தமதஞ் சமயமெலாம் பொய்பொய்யே யவற்றில்
புகுதாதீர் சிவமொன்றே பொருளெனக்கண் டறிமின்
செறித்திடுசிற் சபைநடத்தைத் தெரிந்துதுதித் திடுமின்
சித்தியெலா மித்தினமே சத்தியஞ்சேர்ந் திடுமே. 20

சேர்ந்திடவே யொருப்படுமின் சமரசசன் மார்க்கத்
திருநெறியே பெருநெறியாஞ் சித்தியெலாம் பெறலாம்
ஓர்ந்திடுமி னுண்ணுதற்கு முறங்குதற்கு முனைர்ந்தீர்
உலகமெலாங் கண்டிடுமோ ருளவையறிந் திலிரே
வார்ந்தகட லுலகறிய மரணமுண்டே யந்தோ
மரணமென்றுற் சடமெனுமோர் திரணமுஞ்சம் மதியா
சார்ந்திடுமம் மரணமதைத் தடுத்திடலாங் கண்மூர்
தனித்திடுசிற் சபைநடத்தைத் தரிசனஞ்செய் விரே. 21

செய்தாலுந் தீமையெலாம் பொறுத்தருள்வான் பொதுவில்
திருநடஞ்செய் பெருங்கருணைத் திறத்தானங் கவனே
மெய்தாவ நினைத்திடுக சமரசசன் மார்க்கம்
மேவுகவென் றுரைக்கின்றேன் மேதினியீ ரெனைத்தான்
வைதாலும் வைதிடுமின் வாழ்த்தினக்கொண் டிடுவேன்
மனங்கோணேன் மானமெலாம் போனவழி விடுத்தேன்
பொய்தானேர் சிறிதெனினும் புகலென்சத் தியமே
புகல்கின்றே னீவிரெலாம் புனிதமுறும் பொருட்டே. 22

பொருட்டலநும் போகமெலாம் பொய்யாமிங் கிதுகான்
புகலுவதென் றுடனாறுநும் புத்திபிற்கண் டதுவே
மருட்டுலகி ரிருட்டுலகில் மடிவதழ கலவே
மரணமிலாப் பெருவாழ்வில் வாழவம்மி னிங்கே
பொருட்டிறஞ்சேர் சுத்தசிவ சன்மார்க்க நிலையில்
பொருந்துமின்சிற் சபையமுதம் அருந்துமினன் புடனே
அருட்டிறஞ்சேர்ந் தெண்ணியவா றுடுமிதே நும்மை
அடுப்பவரே யன்றிநின்று தடுப்பவர்மற் றிலையே. 23

மற்றறிவோ மெனச்சிறிது தாழ்த்திருப்பீ ராலுல்
மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே யந்தோ
சற்றுமதை நும்மாலே தடுக்கமுடி யாதே
சமரசசன் மார்க்கசங்கத் தவர்களல்லா லதனை
எற்றிநின்று தடுக்கவல்லா ரெவ்வுலகி லெவருங்
இல்லைகண்டீர் சத்தியமீ தென்மொழிகொண் டுலகீர்
பற்றியபற் றனைத்தினையும் பற்றறவிட் டருளம்
பலப்பற்றே பற்றுமிதே வென்றுமிற வீரே. 24

இறந்தவரை யெடுத்திடும்போ தரற்றுகின்றீ ருலகீர்
இறவாத பெருவரமீ னெடைய மாட்டீர்
மறந்திருந்தீர் பிணிமூப்பிற் சம்மதமோ நுமக்கு
மறந்துமிதை நினைக்கினல்லீலார் மனநடுங்குங் கண்டீர்
சிறந்திடுசன் மார்க்கமொன்றே பிணிமூப்பு மரணஞ்
சேராமற் றவிர்த்திடுங்காண் தெரிந்துவம்மி னிங்கே
பிறந்தபிறப் பிதிற்றானே நித்தியமெய் வாழ்வு
பெற்றிடலாம் பேரின்ப முற்றிடலாம் விரைந்தே. 25

உற்றமொழி யுரைக்கின்றே னெருமையிலு லுமக்கே
உறவனன்றிப் பகைவனென வுன்னுதீ ருலகீர்
கற்றவருங் கல்லாரு மழிந்திடக்காண் கின்றீர்
கரணமெலாங் கலங்கவரு மரணமுஞ்சம் மதமோ
சற்றுமிதைச் சம்மதியா தென்மனந்தா னுமது
தன்மனந்தான் கன்மனமோ வன்மனமோ வறியேன்
இற்றினைத் தடுத்திடலா மென்னெடுசேர்ந் திடுமின்
என்மார்க்க மிறப்பொழிக்குஞ் சன்மார்க்கந் தானே. 26

சன்மார்க்கப் பெருங்குணத்தார் தம்பதியை யென்னைத்
தாங்குகின்ற பெருப்பதியைத் தனித்தசபா பதியை
நன்மார்க்கத் தெனைநடத்திச் சன்மார்க்க சங்க
நடுவிருக்க வருளமுத நல்கியநா யகனைப்
புன்மார்க்கர்க் கறிவரிதாம் புண்ணியனை ஞான
பூரணமெய்ப் பொருளாகிப் பொருந்தியமா மருந்தை
அன்மார்க்கந் தவிர்த்தருளி யம்பலத்தே நடஞ்செய்
அருட்பெருஞ்ஜோ தியைபுலகீர் தெருட்கொளச் சார்வீரே. 27

சாருலக வாதனையைத் தவிர்த்தவருள் ளகத்தே
சத்தியமா யமர்ந்தருளு முத்தமசற் குருவை
நேருறவே யெவராலுங் கண்டுகொளற் கரிதாம்
நித்தியவான் பொருளையெலா நிலைகளுந்தா னுகி
னருறவே விளங்குகின்ற வியற்கையுண்மை தன்னை
எல்லாஞ்செய் வல்லபத்தை யெனக்களித்த பதியை
ஓருறவென் றடைந்துலகீர் போற்றிமகிழ்ந் திடுமின்
உள்ளமெலாங் கனிந்துருகி யுள்ளபடி நினைந்தே. 28

அருட்பெருஞ்ஜோதி

111. இரங்கல்

ஆன்ம நேய உரிமை

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

ஆயுரைத்த அருட்ஜோதி வருகின்ற தருணமிதே யறிமி னென்றே
வாயுரைத்த வார்த்தையென்றன் வார்த்தைகளென் கின்றிரிம் மனித ரந்தோ
தாயுரைத்த திருப்பொதுவி னடம்புரிந்தென் னுளங்கலந்த தலைவா விங்கே
நீயுரைத்த திருவார்த்தை யெனவறியா ரிவரறிவி னிகழ்ச்சி யென்னே. 1

இறந்தவர்கள் பலருமிங்கே யெழுகின்ற தருணமிதே யென்று வாய்மை
அறந்தழைய வுரைக்கின்ற வார்த்தைகளென் வார்த்தைகளென் றறைகின்றாரால்
மறந்தசிறி யேனுரைக்க வல்லேனே யெல்லாஞ்செய் வல்லோ யுன்றன்
சிறந்ததிரு வார்த்தையெனத் தெரிந்திலரிம் மனிதர்மதித் திறமை யென்னே. 2

சோற்றுசை யொடுகாமச் சேற்றுசைப் படுவாரைத் துணிந்து கொல்லக்
கூற்றுசைப் படுமெனநான் கூறுகின்ற துண்மையினிற் கொண்டு நீவிர்
நேற்றுசைப் பட்டவருக் கின்றருள்வார் போலுமன்றி நினைத்த வாங்கே
பேற்றுசைக் கருள்புரியும் ஞானசபா பதிபுகழைப் பேசு வீரே. 3

தோண்டாளப் பணந்தேடுந் துறையாள வுலகாளச் சூழ்ந்த காமப்
பெண்டாளத் திரிகின்ற பேய்மனத்தீர் நும்முயிரைப் பிடிக்க நாளைச்
சண்டாளக் கூற்றுவரி லென்புகல்வீர் ஞானசபைத் தலைவ னும்மைக்
கொண்டாளக் கருதுமிதே ஆண்டபின்ன ரிவ்வுலகிற் குலாவு வீரே. 4

பிறந்தவரை நீராட்டிப் பெருகவளர்த் திடுகின்றீர் பேய நேரீர்
இறந்தவரைச் சுடுகின்றீர் எவ்வணஞ்சம் மதித்தீரோ இரவிற் றூங்கி
மறந்தவரைத் தீமூட்ட வல்லீரா நும்மனத்தை வயிரமான
சிறந்தவரை யெனப்புகழச் செய்துகொண்மூர் என்பிறந்து திரிகின் றீரே. 5

அணங்கெழுபே ரோசையொடும் பறையோசை பொங்கக்கோ ரணிகொண் டந்தோ
பிணங்கழுவி யெடுத்துப்போய்ச் சுடுகின்றீ ரினிச்சாகும் பிணங்க ளேநீர்
கணங்கழுகுண் டாலுமொரு பயனுண்டே யென்னபயன் கண்மூர் சுட்ட
எணங்கெழுஞ்சாம் பலிக்கண்டீ ரதுபுன்செ யெருவுக்கு மியலா தன்றே. 6

குணம்புதைக்க வுயிரடக்கங் கொண்டதுசுட் டாலதுதான் கொலையா மென்றே
வணம்புதைக்க வேண்டுமென வாய்தடிக்கச் சொல்கின்றேன் வார்த்தை கேட்டும்
பிணம்புதைக்கச் சம்மதியீர் பணம்புதைக்கச் சம்மதிக்கும் பேய நேரீர்
எணம்புதைக்கத் துயில்வார்நும் பாற்றுயிலற் கஞ்சுவரே யிழுதை யீரே. 7

கட்டாலுங் கனத்தாலுங் களிக்கின்ற பேயுலகீர் சுலேசோர்ந் தாரைப்
பொட்டாலுந் துகிலாலும் புனைவித்துச் சுடுகின்றீர் புதைக்க கேரீர்
சுட்டாலுஞ் சுடுமதுகண் டுமதுடம்பு தழியாதென் சொல்லீர் நும்மைத்
தொட்டாலுந் தோடமுறும் விட்டாலுங் கதியிலுமேற் சூழ்வீ ரன்றே. 8

பரனளிக்குந் தேகமிது சுடுவதப ராதமெனப் பகர்கின் றேனீர்
சிரமெளிக்கச் சுடுகின்றீர் செத்தவர்கள் பற்பலருஞ் சித்த காமி
உரனளிக்க வெழுகின்ற திருநூல்வந் தடித்தனவீ ரனைர்ந்து நல்லோர்
வரனளிக்கப் புனைதத்தலீல காணீரோ கண்கெட்ட மாட்டி னீரே. 9

புலைத்தொழிலே புரிகின்றீர் புண்ணியத்தைக் கருங்கடலிற் போக விட்டீர்
கொலைத்தொழிலிற் கொடியீர்நீர் செத்தாரைச் சுடுகின்ற கொடுமை நோக்கிக்
கலைத்தொழிலிற் பெரியருளங் கலங்கினரக் கலக்கமிலாங் கடவு ணீக்கித்
தலைத்தொழில்செய் சன்மார்க்கத் தலையெடுக்கப் புரிகுவதித் தருணந் தானே. 10

அருட்பெருஞ்ஜோதி

---

112. உலகப்பேறு

கலிவிருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

இன்பா வுலகங்கள் யாவுந் விளங்கின
துன்பா விறக்தவர் துன்பற்றுத் தோன்றினர்
அன்பா லடியவ ராடினர் பாடினர்
என்பா லருட்பெருஞ் ஜோதிபா லெய்தவே. 1

பாம்பெலா மோடின பறவைபுட் சார்ந்தன
தீம்பலா வாழைமாத் தென்னை சிறந்தன
ஆம்பலன் மென்மேலு மாயின வெண்ணுளத்
தோம்பலென் அருட்பெருஞ் ஜோதிபா ரோங்கவே. 2

மலங்கழிந் துலகவர் வானவ ராயினர்
வலம்பெறு சுத்தசன் மார்க்கஞ் சிறந்தது
பலம்பெறு மனிதர்கள் பண்புள ராயினர்
நலம்பெறும் அருட்பெருஞ் ஜோதிபார் நண்ணவே. 3

முன்னுள மார்க்கங்கள் யாவு முடிந்தன
மன்னுள சுத்தசன் மார்க்கஞ் சிறந்தது
பன்னுளந் தெளிந்தன பதிநட மோங்கின
என்னுளத் தருட்பெருஞ் ஜோதிபா ரெய்தவே. 4

விடம்பெற்ற வுயிரெலாம் விடமற்று வாழ்ந்தன
மடம்பெற்ற மனிதர்கள் மதிபெற்று வாழ்கின்றார்
திடம்பெற்றே யெழுகின்றார் செத்தவர் தினந்தினம்
நடம்பெற்ற அருட்பெருஞ் ஜோதிபார் நண்ணவே. 5

அண்டமு மகிலமு மருளர சாட்சியைக்
கொண்டன வோங்கின குறையெலாந் தீர்ந்தன
பண்டங்கள் பலித்தன பரிந்தென துள்ளத்தில்
எண்டகு மருட்பெருஞ் ஜோதிபா ரெய்தவே. 6

குணங்கள் சிறந்தன குற்றங்க ளற்றன
மணங்கள் விளங்கின வாழ்வுக ளோங்கின
பிணங்க ளெலாமுயிர் பெற்றெழுந் தோங்கின
இணங்க அருட்பெருஞ் ஜோதிபா ரெய்தவே. 7

பத்தர்கள் பாடினர் பணிந்துதின் றாடினர்
முத்தர்கள் மெய்ப்பொருள் முன்னி மகிழ்ந்தனர்
சித்தர்க ளானந்தத் தெள்ளமு துண்டனர்
சுத்த அருட்பெருஞ் ஜோதிபார் தோன்றவே. 8

ஏழுல கவத்தைவிட் டேறினன் மேனிலை
ஊழிதோ றூழியு முயிர்தழைத் தோங்கினன்
ஆழியா னயன்முத லதிசயித் திடவெணுள்
வாழி அருட்பெருஞ் ஜோதியார் மன்னவே. 9

இருட்பெரு மலமுழு துந்தவிர்ந் திற்றன
மருட்பெருங் கன்மமு மாயைபு கீங்கின
தெருட்பெருஞ் சித்திகள் சேர்ந்தன வெண்ணுளத்
தருட்பெருஞ் ஜோதியெ னன்பிற் கலந்தவே. 10

113. சுத்தசன்மார்க்க வேண்டுகோள்

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அன்பாடு திருப்பொதுவி லாடுகின்ற வரசேசின் னடிமே லாணை
என்பாடொன் றிலையென்னுற் றுரும்புமசைத் திடமுடியா திதுகாற் றெட்டுப்
பொன்பாடவ் விதத்தானும் புரிந்துகொண்டு நீதானே புரிதல் வேண்டும்
உன்பாடு நானுரைத்தே னீயினிச்சும் மாவிருக்க வொண்ணு தண்ணு. 1

முன்பாடு பின்பயன்றந் திடுமெனவே யுரைக்கின்றேர் மொழிக ளெல்லாம்
இன்பாடு மிவ்வுலகி லென்னறிவி லிலையதனு லெல்லாம் வல்லோய்
அன்பாடு திருப்பொதுவி லாடுகின்றே யருட்ஜோதி யளித்துக் காத்த
னுன்பாடு நானுரைத்தே னெனக்கொருபா டுண்டோநீ யுரைப்பா யப்பா. 2

உன்னுணை யுன்னைவிட வுற்றதுணை வேறிலையென் னுடையா யந்தோ
என்னுணைக் காத்தருளி யித்தினமே யருட்ஜோதி யீதல் வேண்டும்
அன்னாணை யாதபடி யருள்புரிந்த பெருங்கருணை யரசே யென்னை
முன்னுணின் னடியவனென் றுலகறிந்த விந்நாளென் மொழிந்தி டாதே. 3

தூங்காதே விழித்திருக்குஞ் சூதறிவித் தெனையாண்ட துரையே யென்னை
நீங்காதே யென்னுயிரிற் கலந்துகொண்ட பதியேகால் நீட்டிப் பின்னே
வாங்காதே விரைந்திவணீ வல்வேண்டுந் தாழ்த்திடிலென் மனந்தான் சற்றுந்
தாங்காதே யிதுனினது தனித்ததிரு வுளமறிந்த சரிதந் தானே. 4

இயங்காளி புலிகரடி யெனப்பெயர்கேட் டுளநடுங்கி யிருந்தே னூரில்
சயங்காளி கோயிலக்கண் டஞ்சிமனந் தழுதழுத்துத் தளர்ந்தே னிந்தப்
பயங்காளிப் பயல்போலப் பயந்தவர்க ளெங்குளர்காண் பதியே யென்னை
வயங்காளி லொருவனென நினையேயல்கைப் பிள்ளையென மதித்தி டாயே. 5

சிறுசெயலைச் செயுமுலகச் சிறுநடையோர் பலபுகலத் தினந்தோ றுந்தான்
உறுசெயலை யறியாவிச் சிறுபயலைப் பிடித்தலைத்த லுவப்போ கண்டாய்
தெறுசெயலைத் தவிர்த்தெல்லாச் சித்தியும்பெற் றிடவழியாத் தேக னுகப்
பெறுசெயலை யெனக்களித்தே மறுசெயலைப் புரிகவெனைப் பெற்ற தேவே. 6

அருட்பெருஞ்ஜோதி

114. வேண்டுகோள்

கலித்துறை

அருட்பெருஞ்ஜோதி

ஆதியப் பாகம் மனுதியப் பாகங்க ளம்மையொரு
பாதியப் பாகிரு பாதியப் பாசிவ பத்தரனு
பூதியப் பாகல் விபூதியப் பாபொற் பொதுநடஞ்செய்
ஜோதியப் பாசுயஞ் ஜோதியப் பாவெணைச் சூழ்ந்தருளே. 1

அண்டவப் பாபகி ரண்டவப் பாகஞ் சணிந்தமணி
கண்டவப் பாழுற்றுங் கண்டவப் பாசிவ காமியெனும்
ஒண்டவப் பாவையைக் கொண்டவப் பாசடை போங்குபிறைத்
துண்டவப் பாமறை விண்டவப் பாவெணைச் சூழ்ந்தருளே. 2

வேலையப் பாபடை வேலையப் பாபவ வெய்யிலுக்கோர்
சோலையப் பாபரஞ் ஜோதியப் பாசடைத் துன்றுகொன்றை
மாலையப் பாகற் சமரச வேதசன் மார்க்கசங்கச்
சாலையப் பாவெணைத் தந்தவப் பாவந்து தாங்கிக்கொள்ளே. 3

மெச்சியப் பாவலர் போற்றப் பொதுவில் விளங்கியவென்
உச்சியப் பாவென் னுடையவப் பாவென்னை யுற்றுப்பெற்ற
அச்சியப் பாழுக்க ணைப்பாவென் னுருயிர்க் கானவப்பா
கச்சியப் பாதங்கக் கட்டியப் பாவென்னைக் கண்டுகொள்ளே. 4

எக்கரை யும்மின்றி யோங்கு மருட்கட லென்றுரைக்கோ
செக்கரை வென்றபொன் னென்கோ படிகத் திரளதென்கோ
திக்கரை யம்பர மெனன்கோவென் னுள்ளத்திற் றித்திக்கின்ற
சர்க்கரைக் கட்டியென் கோனினைத் தான்மன்றிற் ருண்டவனே. 5

ஓட்டியென் கோதறுத் தாட்சொண் டனைநினை யோங்கறிவாந்
திட்டியென் கோவுயர் சிற்றம் பலந்தனிற் சேர்க்குநல்ல
வெட்டியென் கோவருட் பெட்டியி லோங்கி விளங்குந் தங்கக்
கட்டியென் கோபொற் பொதுநடஞ் செய்புழுக் கண்ணவனே. 6

அருட்பெருஞ்ஜோதி

115. சன்மார்க்கமுரசு

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

கிழக்குவெளுத் ததுகருணை யருட்ஜோதி யுதயங்
கிடைத்ததென துளக்கமலங் கிளர்ந்ததென தகத்தே
சழக்குவெளுத் ததுசாதி யாச்சிரமா சாரஞ்
சமயமதா சாரமெனச் சண்டையிட்ட கலக
வழக்குவெளுத் ததுபலவாம் பொய்ந்நூல்கற் றவர்தம்
மனம்வெளுத்து வாய்வெளுத்து வாயுறவா தித்த
முழக்குவெளுத் ததுசிவமே பொருளெனுஞ்சன் மார்க்க
முழுநெறியிற் பரநாத முரசுமுழங் கியதே. 1

நாதரருட் பெருஞ்ஜோதி நாயகரென் றணையே
நயந்துகொண்ட தனித்தலைவர் ஞானசபா பதியார்
வாதகடம் புரிகருணை மாநிதியார் வரதர்
வள்ளலெலாம் வல்லவர்மா ணல்லவரென் னிடத்தே
காதலுடன் வருகின்று ரென்றுபர நாதங்
களிப்புறவே தொனிக்கின்ற தந்தரதுந் துபிதான்
எதமற முழங்குகின்ற தென்றுசொல்லிக் கொண்டே
எழுகின்றுள் தொழுகின்று ளென்னுடைய மகளே. 2

அருட்பெருஞ்ஜோதி

116. திருவருட்பேறு

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

கொழுந்தேனுஞ் செழும்பாகுங் குலவுபசும் பாலுங்
கூட்டியுண்டாற் போலினிக்குங் குணங்கொள்முடிக் கனியே
தொழுந்தவ மடந்தையர்க்கு மங்கலநாண் கழுத்திற்
றிருன்றவிடங் கழுத்தினுள்ளே தோன்றநின்ற சுடரே
எழுந்தேறு மன்பருளத் தேற்றுதிரு விளக்கே
என்னுயிர்க்குத் துணையேயென் னிருகண்ணுண் மணியே
அழுந்தேற வறியாத வவலநெஞ்ச மந்தோ
அபயமுனக் கபயமெனை யாண்டருள்க விரைந்தே. 1

அம்பலத்தே யாடுகின்ற வாரமுதே யாசை
ஆனந்த மாகடலே யறிவேயென் னன்பே
உம்பர்கட்கே யன்றியிந்த வுலகர்கட்கு மருள்வான்
ஒளிர்கின்ற வொளியேமெய் புணர்ந்தோர்தம் முறவே
எம்பலத்தே வாகியெனக் கெழுமையுநற் றுணையாய்
என்னுளத்தே விளங்குகின்ற வென்னிறையே நினது
செம்பதத்தே மலர்விளங்கக் கண்டுகொண்டே னெனது
சிறுமையெலாந் தீர்ந்தேதமெய்ச் செல்வமடைந் தேனே. 2

அடிவிளங்கக் கனகசபைத் தனிநடனம் புரியும்
அருட்சுடரே யென்னுயிருக் கானபெருந் துணையே
துடிவிளங்கக் கரத்தேந்துஞ் ஜோதிமலை மருந்தே
சொற்பதமெல் லாங்கடந்த சிற்சொருபப் பொருளே
பொடிவிளங்கத் திருமேனிப் புண்ணியனே ஞான
போதகரைச் சிவிகையின்மேற் பொருந்தவைத்த புனிதா
படிவிளங்கச் சிறியேனின் பதமலர்கண் டுவந்தேதன்
பரிவொழிந்தே னருட்செல்வம் பரிசனப்பெற் றேனே. 3

அயலறியே னினதுமல ரடியன்றிச் சிறிதும்
அம்பலத்தே நிதம்புரியு மானந்த நடங்கண்
டியலறியே னெனினுமது கண்டுகொளு மாசை
ஒருகடலோ வெழுகடலோ வுரைக்கவொணு துடையேன்
மயலறியா மனத்தமர்ந்த மாமணியே மருந்தே
மதிமுடியெம் பெருமானின் வாழ்த்தன்றி மற்றோர்
செயலறியே னெனக்கருளத் திருவுளஞ்செய் திடுவாய்
திருவெழுத்தைதந் தாணையொரு துணைசிறிதிங் கிலனே. 4

அருட்பெருஞ்ஜோதி

117. அபயம்

நேரிசை வெண்பா

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ் ஜோதி அபயம் அபயம்
அருட்பெருஞ் ஜோதி அபயம் — அருட்பெருஞ்
ஜோதி அபயஞ் சிற்ஜோதி அபயம்பொற் 1
ஜோதி அபயந் துணை.

துணைவா யபயந் துயரகல வென்பால்
அணைவா யபய மபயம் — பணைவாய்
வடலா வபயம் வரதா வபயம்
நடநாய காவபய நான். 2

நாணைத் தாணுப் நடித்தருள்கின்ற யபயம்
தேனை யினிக்குஞ் சிவவபயம் — வானுதி
மெய்யா வபயம் விமலா வபயமென்ற
னையா வபய மபயம். 3

அபயம் பதியே யபயம் பரமே
அபயஞ் சிவமே யபயம் — உபய
பதத்திற் கபயம் பரிந்தெனுளத் தேகல்
விதத்திற் கருணை விளை. 4

கருணை நிதியே யபயங் கனிந்த
அருணை டகனே யபயம் — மருணடும்
உள்ளக் கவலை யொழிப்பாயென் வன்மனத்துப்
பொள்ளற் பிழைகள் பொறுத்து. 5

அருட்பெருஞ்ஜோதி

118. மாயை நீக்கம்

கலித்துறை

அருட்பெருஞ்ஜோதி

முன்னுன்செய் புண்ணியப்யாதோ வுலக முழுதுமென்பால்
இன்கா ளடைந்தின்ப மெய்திட வோங்கின னெண்ணியவா
றென்காரு மிவ்வுடம்பே பிறவாத வியற்கை பெற்றேன்
என்னைசை யப்பனைக் கண்டுகொண் டேனென் னிதயத்திலே. 1

தாழைப் பழம்பிழி பாலொடு சர்க்கரைச் சாறளிந்த
வாழைப் பழப்பசு நெய்தறுந் தேனு மருவச்செய்து
மாழைப் பலாச்சுளை மாம்பழ மாதி வடித்தளவி
னழைக் களித்தனை யேயரு ளாரமு தென்றுன்றையே. 2

தென்பான் முகங்கொண்ட தேவே செந்தேனிற் சிறந்தபசு
வின்பால் கலந்தளி முக்கனிச் சாறு மெடித்தளவி
அன்பான் மகிழ்ந்து மகனே வருகென் றழைத்தருளி
என்பா லளித்தனை யேயரு ளாரமு தென்றுன்றையே. 3

அருட்பெருஞ் ஜோதியென் னம்மையி னைடறி வாநந்தமாம்
அருட்பெருஞ் ஜோதியென் னப்பனென் னுள்ளத் தமர்ந்தன்பினல்
அருட்பெருஞ் ஜோதித்தெள் ளாரமு தந்தந் தழிவற்றதோர்
அருட்பெருஞ் ஜோதிச் செங்கோலுங் கொடுத்தன னற்புதமே. 4

போதோ விடிந்த தருளரசே யென்பொருட்டு வந்தென்
தாதோ ரெழுமையு நன்மையுற் றோங்கத் தருவதுதான்
மாதோட நீக்குங் கனிரசமோ வந்த வான்கனியின்
கோதோ வறிந்திலன் யாதோ திருவுளங் கூறுகவே. 5

அருட்பெருஞ்ஜோதி

119. முறையீடு

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

மன்றுளின் றாடும் வள்ளலே யெனது
வள்ளலென் றெனக்குளே தெரிந்த
அன்றுதான் றோடங்கி யம்மையே யப்பா
ஐயனே யன்பனே யரசே
என்றுநின் றனையே நினைத்திருக் கின்றேன்
எட்டுணை யெனினும்வேற் றிடத்திற்
சென்றுநின் றறியேன் தெய்வமே யிதுநின்
திருவுளந் தெரிந்தது தானே. 1

கண்ணெலா நிரம்பப் பேரொளி காட்டிக்
கருணைமா மழைபொழி முகிலே
விண்ணெலாம் நிறைந்த விளக்கமே யென்னுண்
மேவிய மெய்ம்மையே மன்றுள்
எண்ணெலாங் கடந்தே யிலங்கிய பதியே
இன்றுநீ யெழுமையேன் மனத்துப்
புண்ணெலாந் தவிர்த்துப் பொருளெலாங் கொடுத்துப்
புகுந்தென துளங்கலந் தருளே. 2

உள்ளலே னுடையா ருண்ணவும் வறியார்
உறுபசி யுழந்துவெந் துயரால்
வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ
மற்றிதை நினைத்திடுந் தோறும்
எள்ளலே னுள்ள மெரிகின்ற துடம்பும்
எரிகின்ற தென்செய்வே னந்தோ
கொள்ளலே னுணவுந் தரிக்கிலே னிந்தக்
குறையெலாந் தவிர்த்தரு ளெந்தாய். 3

அன்பிலே னெனினு மறிவிலே னெனினும்
அன்றுவந் தாண்டரு ளதனால்
துன்பிலே னெனவிவ் வுலகெலா மறியச்
சொல்லினேன் சொல்லிய நானே
இன்பிலே னெனவின் றுரைத்திட லழகோ
எனைபுல கவமதித் திடிலென்
என்பிலே கலந்தாய் நினக்கும்வந் திடுமே
எய்துக விரைந்தென திடத்தே. 4

சிரிப்பிலே பொழுது கழிக்குமிவ் வாழ்க்கைச்
சிறியவர் சிந்தைமாத் திரமோ
பொருப்பிலே தவஞ்செய் பெரியர்தம் மனமும்
புளிப்பிலே துவர்ப்பிலே யுவர்ப்புக்
கரிப்பிலே கொடிய கயப்பிலே கடிய
கார்ப்பிலே கார்ப்பொடு கலந்த
வெரிப்பிலே புகுவ தன்றியெள் ளளவும்
இனிப்பிலே புகுகின்ற திலையே. 5

அருட்பெருஞ்ஜோதி

120. சிவானந்தநிலை

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

பிறந்ததா ளயர்ந்தே னயர்ந்திடே லெனவென் முன்னரே தோன்றினை யந்தோ
அந்தநாள் தொடங்கி மகிழ்ந்திருக் கின்றே னப்பனே யையனே யரசே
இந்தநாள் கவலை யிடர்பய மெல்லா மென்னைவிட் டோழிந்திடப் புரிந்தாய்
எந்தநாள் புரிந்தே னிப்பெரும் பேறிங் கெய்துதற் குரியமெய்த் தவமே. 1

வாய்க்குறும் புரைத்துத் திரிந்துவீண் சுழித்து மலத்திலே கிடந்துழைத் திட்ட
நாய்க்குயர் தவிசிட் டொருமணி முடியு நன்றுறச் சூட்டினை யந்தோ
தூய்க்குணத் தவர்கள் புகழ்மணி மன்றிற் ஜோதியே நின்பெருந் தயவைத்
தாய்க்குறு தயவென் றெண்ணுகோ தாயின் றயவுமுன் றணிப்பெருந் தயவே. 2

பேரிடர் தவிர்த்துப் பொருள்புரிந்த பெருமநின் றன்னையென் றனக்கே
சாருறு தாயே யென்றுரைப் பேனே தந்தையே யென்றுரைப் பேனே
சீருறு குருவே யென்றுரைப் பேனே தெய்வமே யென்றுரைப் பேனே
ஆரென வுரைப்பே னென்னெனைப் புகழ்வே னாதுமொன் றறிந்திலே னந்தோ. 3

அருட்பெருஞ்ஜோதி

121. பராபரன் உண்மை நிலையம்

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

எவ்வுயிரும் பொதுவெனக்கண் டிரங்கியுப காரிக்கின்றார் யாவ ரந்தச்
செவ்வியர்தஞ் செயலனைத்துந் திருவருளின் செயலெனவே தெரிந்தே னிங்கே
கவ்வையிலாத் திருநெறியத் திருவாளர் தமக்கேவல் களிப்பாற் செய்ய
ஒவ்வியதென் கருத்தவர்சீ ரோதிடவென் வாய்மிகவு மூர்வ தாலோ. 1

எத்துணையும் பேதமுறு தெவ்வுயிருந் தம்முயிர்போ லெண்ணி யுள்ளே
ஒத்துரிமை யுடையவரா யுவக்கின்றார் யாவரவ ருளந்தான் சுத்த
சித்துருவா யெம்பெருமா னடம்புரியு மிடமெனநான் தெரிந்தே னந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடவென் சிந்தைமிக விழைந்த தாலோ. 2

கருணையொன்றே வடிவாகி யெவ்வுயிருந் தம்முயிர்போற் கண்டு ஞானத்
தெருணெறியிற் சுத்தசிவ சன்மார்க்கப் பெருநீதி செலுத்தா நின்ற
பொருணெறிசற் குணசாந்தப் புண்ணியர்தந் திருவாயாற் புகன்ற வார்த்தை
அருணெறிவே தாகமத்தி னடிமுடிசொல் வார்த்தைகளென் றறைவ தாலோ. 3

அருட்பெருஞ்ஜோதி

122. அபயங்கூறல்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

பொருட்பெருந் தனிமெய்ப் போகமே யென்னைப் புறத்திலும் அகத்திலும் புணர்ந்த
தெருட்பெருஞ் சிவமே சுத்தசன் மார்க்கச் செல்வமே கான்பெற்ற சிறப்பே
மருட்பெருங் கடலைக் கடத்தியென் றன்னை வாழ்வித்த வென்பெரு வாழ்வே
அருட்பெருஞ் ஜோதி யம்பலத் தரசே யம்மையே யப்பனே யபயம். 1

பொருட்பெரு மறைக ளனந்தமா கமங்கள் புகலுமோ ரனந்தமேற் போந்தே
தெருட்பெரு வெளிமட் டளவிலாக் காலந் தேடியுங் காண்கிலாச் சிவமே
மருட்பெரும் பகைதீர்த் தென்னையாட் கொண்ட வள்ளலே தெள்ளிய வமுதே
அருட்பெருஞ் ஜோதி யம்பலத் தரசே யம்மையே யப்பனே யபயம். 2

பொருட்பெருஞ் சுடர்செய் கலாந்தியோ காந்தம் புகன்றபோ தாந்தா தாந்தந்
தெருட்பெரு வேதாந் தந்திகழ் சித்தாந் தத்திலுந் தித்திக்குந் தேனே
மருட்பெரு விருளைத் தீர்த்தெனை வளர்க்கு மாபெருங் கருணையா ரமுதே
அருட்பெருஞ் ஜோதி யம்பலத் தரசே யம்மையே யப்பனே யபயம். 3

அருட்பெருஞ்ஜோதி

123. அபயநிலை

அறுசீரடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

ஆணை யாணைநீ யஞ்சலை யஞ்சலை யருளொளி தருகின்றும்
கோணை மாநிலத் தவரெலாம் நின்னையே குறிக்கொள்வர் நினக்கேயெம்
ஆணை யம்பலத் தரசையு மளித்தனம் வாழ்கநீ மகனேயென்
1 றேணை பெற்றிட வெனக்கருள் புரிந்தநின் னிணைமலர்ப் பதம்போற்றி. 1

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

எல்லா வுலகமு மென்னுட மாயின எல்லா வுயிர்களு மென்னுயி ராயின
எல்லா ஞானமு மென்ஞான மாயின எல்லா வித்தையு மென்வித்தை யாயின
எல்லாப் போகமு மென்போக மாயின எல்லா வின்பமு மென்னின்ப மாயின
எல்லாம்வல்லசிற் றம்பலத் தென்னப்பர் எல்லாம் நல்கியென்னுள்ளத் துள்ளாரே. 2

அருட்பெருஞ்ஜோதி

124. அனுபவநிலை

கோச்சகக் கலிப்பா
அருட்பெருஞ்ஜோதி

நானனன் தானனன் நாவுந்தா னுடம்மானன்
தேனனன் தெள்ளமுதாய்த் தித்தித்து நிற்கின்றன்
வானனன் ஞான மணிமன்றி லாடுகின்றன்
கோனனன் என்னுட் குலவுகின்ற கோமானே. 1

அருட்பெருஞ்ஜோதி

125. விண்ணப்பம்

அறுசீரடி ஆசிரிய விருத்தம்
அருட்பெருஞ்ஜோதி

ஐவகைத் தொழிலு மென்பா லளித்தனை யதுகொண் டிங்காள்
செய்வகை தெரிவித் தென்னைச் சேர்ந்தொன்று யிருத்தல் வேண்டும்
பொய்வகை யறியேன் வேறு புகலிலேன் பொதுவே நின்று
மெய்வகை யுரைத்தே னிந்த விண்ணப்பங் காண்க நீயே. 1

அருட்பெருஞ்ஜோதி

1 ஏணை என்பது—வன்மை.

126. திருத்தொண்டர் அடிப்பெருமை

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

வண்டணிபூங் குழலம்மை யெங்கள்சிவ காம
வல்லியொடு மணிமன்றில் வயங்கியகின் வடிவங்
கண்டவரைக் கண்டவர்தங் கான்மலர்முத் தேவர்
கனமுடிக்கே முடிக்கின்ற கடிமலரா மென்றூல்
பண்டகுநின் திருத்தொண்ட ரடிப்பெருமை யெவரே
பகர்ந்திடுவர் மறைகளெலாம் பகர்ந்திவான் புகுந்தே
விண்டுலர்ந்து வெளுத்ததவை வெளுத்தமட்டோ வவற்றை
வியந்தோதாது மந்தணரும் வெளுத்தனருள் ளுடம்பே. 1

அருட்பெருஞ்ஜோதி

127. சன்மார்க்க துன்மார்க்க இயல்பு

கலித்துறை

அருட்பெருஞ்ஜோதி

சேய்போ லுலகத் துயிரைபெல் லாமெண்ணிச் சேர்ந்துபெற்ற
தாய்போ லுரைப்பர்சன் மார்க்கசங் கத்தவர் சாற்றுமெட்டிக்
காய்போற் பிறர்தமைக் கண்டாற் கசந்துட் கடுகடுத்தே
நாய்போற் குரைப்பர்துன் மார்க்கசங் கத்தவர் நானிலத்தே. 1

அருட்பெருஞ்ஜோதி

128. பதி நிச்சயம்

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

உருவ ராகியு மருவின ராகியு முருவரு வினராயும்
ஒருவ ரேயுளார் கடவுள்கண் டறிமினே வுலகுளீ ருணர்வின்றி
இருவ ராமென்று மூவரே யாமென்று மியலுமை வர்களென்றும்
எருவ ராயுரைத் துழல்வதென் னுடற்குயி ரிரண்டுமூன் றெனலாமே. 1

அருட்பெருஞ்ஜோதி

129. பிரார்த்தனை விளக்கம்

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

கருணைக் கடலே யதிலெழுந்த கருணை யமுதே கனியமுதிற்
றருணச் சுவையே சுவையினைத்துஞ் சார்ந்த பதமே தற்பதமே
பொருண்மெய்ப் பரமே சிதம்பரமாம் பொதுவி னடிக்கும் பரம்பரமே
தெருண்மெய்க் கருத்திற் கலந்தனையுஞ் சித்தி நிலைகள் தெரித்தருளே. 1

அருட்பெருஞ்ஜோதி

130. உண்மை விளக்கம்

இலக்கணப் பொருள்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

வருமுன் வந்ததாக் கொள்ளுத லெனக்கு
வழக்கம் வள்ளல்நீ மகிழ்ந்தருட் ஜோதி
தருமுன் றந்தனை பென்றிருக் கின்றேன்
தந்தை நீதரல் சத்திய மென்றே
குருமுன் பொய்புரை கூறலே னினியிக்
குவலை யத்திடைக் கவலையைத் தரியேன்
திருமுன் விண்ணப்பஞ் செய்தனன் கருணை
செய்க வாழ்கநின் திருவருட் புகழே. 1

அருட்பெருஞ்ஜோதி

131. சமரச சித்தாந்தப் பாநெறி விளக்கம்

கலிநிலைத்துறை

அருட்பெருஞ்ஜோதி

உய்வ தாமிது நங்குரு வாணையொன் றுரைப்பேன்
சைவ மாதிசித் தாந்தத்து மறைமுடித் தலத்தும்
நைவ தின்றியாங் கதுவது வாயது நமது
தெய்வ மாகிய சிவபரம் பொருளெனத் தெளிவீர். 1

அருட்பெருஞ்ஜோதி

132. தனிப் பாடல்கள்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

காட்டைக் கடந்தே னுட்டை யடைந்தேன்
கவலை தவிர்ந்தே னுவகை மிகுந்தேன்
வீட்டைப் புகுந்தேன் தேட்டமு துண்டேன்
வேதாக மத்தின் வினைவெலாம் பெற்றேன்
ஆட்டைப் புரிந்தே யம்பலத் தோங்கும்
ஐயர் திருவடிக் கானந்த மாகப்
பாட்டைப் படித்தேன் படிக்கின்றேன் மேலும்
படிப்பே னெனைக்குப் படிப்பித்த வாறே. 1

அம்பலஞ் சேர்ந்தே னெம்பல மார்ந்தேன்
அப்பனைக் கண்டேன் செப்பமுட் கொண்டேன்
உம்பர் வியப்ப இப்ப ரிருந்தேன்
ஓதா துணர்ந்தேன் மீதான முற்றேன்
நம்பிடி லணைக்கு மெப்பெரு மானை
நாயகன் றன்னைத் தாயவன் றன்னைப்
பம்புறப் பாடிப் படிக்கின்றேன் மேலும்
படிப்பே னெனைக்குப் படிப்பித்த வாறே. 2

கள்ளத்தை யற்ற வுள்ளத்தைப் பெற்றேன்
கன்றிக் கனிந்தே மன்றிற் புகுந்தேன்
தெள்ளத் தெளிந்த வெள்ளத்தை யுண்டேன்
செய்வகை கற்றே னுய்வகை யுற்றேன்
அள்ளக் குறையா வள்ளற் பொருளை
அம்பலச் சோதியை யெம்பெரு வாழ்வை
பள்ளிக்குட் பாடி படிக்கின்றேன் மேலும்
படிப்பே னெனைக்குப் படிப்பித்த வாறே. 3

வேறு

கோச்சகக்கலிப்பா

மன்னப்பா மன்றிடத்தே மாநடஞ்செய் யப்பாவென்
றன்னப்பா சண்முகங்கொள் சாமியப்பா வெவ்வுயிர்க்கும்
முன்னப்பா பின்னப்பா மூர்த்தியப்பா மூவாத
பொன்னப்பா ஞானப் பொருளப்பா தந்தருளே. 4

ஆதியே திருவம்பலத் தாடல்செய் யரசே
நீதியே யெலாம் வல்லவாநல்லவா நினைந்தே
ஓதியே யுணர்தற் கரிதாகிய வொருவான்
ஜோதியே யெனைச்சோதி யேல்சோதியே லினியே. 5

வேறு

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

கலக்க நீங்கினேன் களிப்புறு கின்றேன்
கனக வப்பலங் கனிந்த செங்கனியே
துலக்க முற்றறிற் றம்பலத் தமுதே
துய ஜோதியே சுகப்பெரு வாழ்வே
விலக்க வில்லதோர் தனிமுத லரசே
வேத மாகமம் விளம்புமெய்ப் பொருளே
அலக்க ணற்றமெய் யன்பர்த முளத்தே
அமர்ந்ததோர் சச்சிதா னந்த சிவமே. 6

தரவு கொச்சகக்கலிப்பா

அழியாநிலை யாதது மேவினின் னன்பி னேடும்
ஒழியாதுனைப் பாடின் நடி புலகினூடே
வழியாமுயிர்க் கின்பம் புரிந்து வயங்கல் வேண்டும்
இழியாதருள் வாய்பொது மேவிய வெந்தை நீயே. 7

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

வள்ளலாங் கருணை மன்றிலை யழுத வாரியைக் கண்டன மனமே
அள்ளலா மெடுத்துக் கொள்ளலாம் பாடி யாடலா மடிக்கடி வியந்தே
உள்ளெலா நிரப்ப வுண்ணலா முலகி லோங்கலா முதவலா முறலாம்
கள்ளெலா முண்ட வண்டென வின்பங் காணலாங் களிக்கலா மினியே. 8

விண்ணெலாங் கலந்த வெளியிலா னந்தம் விளைந்தது விளைந்தது மனனே
கண்ணெலாங் களிக்கக் காணலாம் பொதுவிற் கடவுளே பென்றுநங் கருத்தில்
எண்ணலா மெண்ணி யெழுதலா மெழுதி யேத்தலா மெடுத்தெடுத்து வந்தே
உண்ணலாம் விழைந்தார்க் குதவலா முலகி லோங்கலா மோங்கலா மினியே. 9

படித்தவென் படிப்புங் கேள்வியு மிவற்றின் பயனதா முணர்ச்சியு மடியேன்
பிடித்தநன் னிலையு முயிருமெய் யின்பும் பெருமைபுந் சிறப்புநா னுண்ணும்
வடித்தவெள் ளமுதும் வயங்குமெய் வாழ்வும் வாழ்க்கைநன் முதலுமன் றகத்தே
நடித்தபொன் னடியுந் திருச்சிற்றம் பலத்தே நண்ணிய பொருளுமொன் றறிந்தேன். 10

எல்லார்க்குங் கடையாகி யிருந்தேனுக் கருள்புரிந்தே
எல்லார்க்குந் துணையாகி யிருக்கவைத்தா யெம்பெருமான்
எல்லார்க்கும் பொதுவில்நட மிடுகின்ற யிவ்வண்ணம்
எல்லார்க்குஞ் செய்யாமை யாதுகுறித் திசையெனக்கே. 11

என்னுடைய விண்ணப்ப மிதுகேட்க வெம்பெருமான்
நின்னுடைய பெருங்கருணை நிதியுடையே னுதவினில்
பொன்னுடையா னயன்முதலாம் புங்கவரை வியவேனென்
தன்னுடைய செயலெல்லாந் தம்பிரான் செயலன்றே. 12

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

தரம்பிற ரறியாத் தலைவனேவார் முக்கட் டனிமுதற் பேரருட் ஜோதி
பரம்பர ஞான சிதம்பர நடஞ்செய் பராபர நிராமய நிமல
உரம்பெறு மயன்மால் முதற்பெருந் தேவ ருளத்ததி சயித்திட வெனக்கே
வரந்தரு கின்றாய் வள்ளல் நின்கருணை மாகடற் கெல்லைகண் டிலனே. 13

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

நான்சொன்ன வார்த்தை பெலாந்
தான்சொன்ன வார்த்தையென்று நயந்தானென்னை
ஏன்சொன்ன தென்றிதையும் வினவியதும்
இல்லையுள மிசைந்தா னந்தோ
தேன்சொன்ன மொழியம்மை சிவகாம
வல்லிகண்டு சிறக்க நாளும்
வான்சொன்ன மணிமன்றில் நடம்புரிவான
பெருங்கருணை வாய்மை பென்னே. 14

ஆடியகான் மலர்களுக்கே யன்புடையார்
யாவரிங்கே யவர்க்கே யின்பங்
கூடியதென் றுரணமு மாகமமும்
ஆணையிட்டுக் கூறும் வார்த்தை
ஓடியதோ நெஞ்சேநீ யுன்னுவதென்
பற்பலவா யுன்னே வின்னே
பாடியவன் றிருப்பாட்டைப் படிகண்டாய்
இன்புலகப் படிகண் டாயே. 15

கட்டளைக்கலிப்பா

நாய்க்கு மோர்தவி சிட்டுப்பொன் மாமுடி
நன்று சூட்டினை யென்றுநின் னன்பர்கள்
வாய்க்கு வந்த படிபல பேசவே
மதியி லேனையு மன்னருட் சத்தியாற்
தாய்க்குக் காட்டிநற் றண்ணமு தூட்டியோர்
தவள மாடப்பொன் மண்டபத் தேற்றியே
சேய்க்கு நேரவென் கையிற்பொற் கங்கணந்
திகழக் கட்டினை யென்னைநின் செய்கையே. 16

கோச்சகக்கலிப்பா

ஓங்குமன்ப ரெல்லாரு முள்ளே விழித்துநிற்கத்
தூங்கியவென் றன்னை யெழுப்பியருட் டேபொருள்
வாங்குகவென் றென்பால் வலியக் கொடுத்தமுதும்
பாங்குறநின் றூட்டினையே யெந்தாய்நின் பண்பிதுவே. 17

நாட்பாரி லன்பரெலாம் நல்குகவென் றேத்திநிற்ப
ஆட்பாரி லன்போ ரணுத்துணையு மில்லேற்கே
நீட்பா யருளமுத நீகொடுத்தாய் நின்னையிங்கே
கேட்பா ரிலையென்று கிழ்மேல தாக்கினையே. 18

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

கன்றுடைய பசுப்போல கசிந்துருகு மன்பரெலாங் காணக்காட்டும்
என்றுடைய நாயகனே யெல்லாஞ்செய் வல்லவனே யிலங்குஞ்ஜோதி
மன்றுடைய மணவாளா மன்னவனே பெண்ணிருகண் மணியேகின்னை
அன்றுடையே னின்றுவிடே னுனையுன்மே லாணையுன்மே லாணையையா. 19

கோச்சகக்கலிப்பா

என்றரத்துக் கேலாத வெண்ணங்க ளெண்ணுகின்றேன்
முன்றரத்தி னெல்லா முடித்துக் கொடுக்கின்றாய்
நின்றரத்தை பென்புகல்வே னின்வலப்பால் மேவுபசும்
பொன்றரத்தை யென்னுரைக்கேன் பொற்பொதுவி னடிக்கின்றோப். 20

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

இன்பிலே வயங்குஞ் சிவபரம் பொருளே யென்னுயிர்க் கமுதமே யென்றன்
அன்பிலே பழுத்த தனிப்பெரும் பழமே யருணடம் புரியுமென் னரசே
வன்பிலே விளைந்த மாயையும் வினையு மடிந்தன விடிந்ததா லிரவுந்
துன்பிலே னினைநா னருட்பெருஞ் ஜோதிச் சூழலிற் றுலங்குகின் றேனே21

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

தேன்பாட லன்புடையார் செபப்பொதுவில் நடிக்கின்ற சிவமே ஞானக்
கான்பாடிச் சிவகாம வல்லிமகிழ் கின்றதிருக் கணவா நல்ல
வான்பாட மறைபாட வெண்ணுளத்தே விளங்குகின்ற மன்னு நின்னை
யான்பாட நீதிருத்த வென்னதவஞ் செய்தேதோ எந்தாய் எந்தாய். 22

ஆன்பாலு நறுந்தேனுஞ் சர்க்கரையுங் கூட்டிபதெள் ளமுதே யென்றன்
உன்பாலு முளப்பாலு முயிர்ப்பாலு மொளிர்கின்ற வொளியே வேதம்
தும்பாடல் புனைந்தேத்த வெண்ணுளத்தே யாடுகின்ற பொன்னே நின்னை
யான்பாட நீதிருத்த வென்னதவஞ் செய்தேதோ எந்தாய் எந்தாய். 23

கலித்துறை

அப்பூறு செஞ்சடை யப்பாகிற் றம்பலத் தாடுகின்றோப்
திப்பூறு வண்ணச் செழுஞ்சுட ரேதனிச் சோதியனே
வெப்பூறு நீக்கிய வெண்ணீறு பூத்தபொன் மேனியனே
உப்பூறு வாய்க்குத்தித் திப்பூறு காட்டிய வுத்தமனே. 24

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

கலக்க மற்றுகா னின்றனைப் பாடியே களிக்கின்ற நாளெந்நாள்
இலக்க முற்றறிந் திடவருள் புரிகுவா யெந்தையிவ் விரவின்கண்
துலக்க முற்றகிற் றம்பலத் தாடுமெய்ச் சோதியே சுகவாழ்வே
அலக்க ணற்றிடத் திருவருள் புரியுமென் னப்பனே யடியேற்கே. 25

கலித்துறை

நஞ்சுண் டுயிர்களைக் காத்தவ னேகட நாயகனே
பஞ்சுண்ட சிற்றடிப் பாவைபங் காநம் பராபரனே
மஞ்சுண்ட செஞ்சடை மன்னுபொன் னம்பல வாவலவா
பிஞ்சுண்ட வாய்க்குப் பழமளித் தாண்ட பெரியவனே. 26

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

கலைவளர் முடிய தென்னையாட் கொண்ட கருணைபங் கன்னைது ஞான
நிலைவளர் பொருள தலகெலாம் போற்ற நின்றது நிறைபெருஞ் ஜோதி
மலைவளர் கின்ற தருள்வெளி நடுவே வயங்குவ தின்பமே மபமாய்த்
தலைவளர் திருச்சிற் றம்பலந் தனிலே தனித்தனக் கினித்தசோ தார் கனியே.27

சிறுநெறிக் கெனைத்தா னிழுத்தசோ தார் கொடிய தீமன மாயைபைக் கனைத்தே
வெறுவிய தாக்கித் தடுத்தெனை யாண்ட மெய்யகின் கருணைபென் புகல்வேன்
உறுநறுந் தேனு மமுதுமென் கரும்பி லுற்றசா றட்டசர்க் கரையும்
நறுநெயுங் கலந்த சுவைப்பெரும் பழமே ஞானமன் றேங்குடன் னட்பே.28

புல்லிய நெறிக்கே யிழுத்தெனை யலைத்த பொய்ம்மன மாயைபைக் கனைத்தே
மெல்லிய தாக்கித் தடுத்தெனை யாண்ட மெய்யகின் கருணைபென் புகல்வேன்
வல்லியென் னம்மை மகிழுமன் றேங்கும் வள்ளலே மறைகளா கமங்கள்
சொல்லிய பதியே மிகுதயா நிதியே தொண்டனே னுயிர்க்குமெய்த் துணையே.29

சிவகாமவல்லி தோத்திரம்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அரங்காய மனமாயை யளக்க ராழும்
அறியாமற் காலிட்டிங் கழுந்து கின்றேன்
இரங்காயோ சிறிதுமுயி ரிரக்க மில்லா
என்மனமோ நின்மனமும் இறைவி புன்றன்
உரங்காணு மரசியற்கோல் கொடுங்கோ லானால்
ஓடியெங்கே புகுந்தெவருக் குரைப்ப தம்மா
திரங்காணைப் பிள்ளையெனத் தாய்வி டாளை
சிவகாம வல்லியெனுத் தெய்வத் தாயே. 30

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

திருவே திகழுங் கலைமகளே திருவே மலையான் றிருமகளே
உருவே யிச்சை மடமேதிமெய் யுணர்வின் வணமே யுபரின்பக்
குருவே யாதித் தனித்தாயே குலவும் பரையாம் பெருந்தாயே
மருவே மலரே சிவகாம வல்லி மணியே வந்தருளே. 31

அருளே யறிவே யன்பேதிகள் எழுதே மாத ராசேமெய்ப்
பொருளே தெருளே மாற்றறியாப் பொன்னே மின்னே பூங்கிளியே
இருளேய் மனத்தி லெப்தாத வின்பப் பெருக்கே யிவ்வடியேன்
மருளே தவிர்த்த சிவகாம வல்லி நினக்கே வந்தனமே. 32

கலித்துறை

தருவாயிது கற்றருணங் கண்டா பென்னைத் தாங்கிக்கொண்ட
குருவாய் விளங்கு மணிமன்ற வாணனைக் கூடியின்ப
உருவாயென் னுள்ளத்தி னுள்ளே யமர்ந்துள்ள வுண்மையெல்லாந்
திருவாய் மலர்ந்த சிவகாம வல்லியின் சீரருளே. 33

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

தனத்தா லியன்ற தனிச்சபையி னடிக்கும் பெருமான் றனக்கன்றே
இனத்தா னுயர்ந்த மணமாலை யிட்டுக் களித்த துரைப்பெண்ணை
மனத்தான் விளங்குஞ் சிவகாம வல்லிக் கனியே மாலொடுமோர்
அனத்தான் புகழு மம்மேயிவ் வடியே னுனக்கே யடைக்கலமே. 34

கலிநிலைத்துறை

அங்கே யுன்ற னன்பர்க ளெல்லா மமர்கின்றூர்
இங்கே நீதா னென்னள வின்னு மிரங்காயேல்
எங்கே போகேன் யாரொடு கோகே னெதுசெய்கேன்
செங்கேழ் வேணித் திங்க ளணிந்தருள் சிவனேயோ. 35

ஈயோ டுறழுஞ் சிறியே னளவி லெந்தாய்நின்
சேயோ டுறழும் பேரருள் வண்ணத் திருவுள்ளங்
காயோ பழமோ யாதே வறியேன் கவல்கின்றேன்
தீயோ டுறழுந் திருவருள் வடிவச் சிவனேயோ. 36

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருளா ரமுதே யென்னுடைய வன்பே யென்ற னறிவே யென்
பொருளா யகத்தும் புறத்துமெனைப் புணர்ந்த கருணைப் பொருப்பே மெய்த்
தெருளா மொளியே வெளியாகச் சிற்றம் பலத்தே நடிக் கின்றாய்
இருளா யினவெல் லாந்தவிர்த்தென் னெண்ணை முடிப்பா யிப்போதே. 37

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

மதிக்களவா மணிமன்றிற் றிருநடஞ்செய் திருத்தாளை வழுத்த வின்று
பதிக்களவா நலந்தருவ லென்றுநினை யேத்துதற்குப் பணிக்கின் றேனீ
விதிக்களவாச் சித்திகண்முன் காட்டுகவிங் கென்கின்றாய் விரைந்த நெஞ்சே
பொதிக்களவா முன்னரிங்கே சத்தத்திற் களவென்பார் போன்ற யன்றே. 38

கலிநிலைத்துறை

கருணை யாம்பெருங் கடலமு தளித்தனை யெனக்கே
தருணை வாரிச மலர்ப்பதந் தந்தனை நின்னை
அருண வண்ணவொண் சுடர்மணி மண்டபத் தடியேன்
பொருண யப்புறக் கண்டுகண் டுளமகிழ் போதே. 39

கோச்சகக்கலிப்பா

வானுகி வானடுவே மன்னு மொளியதனிற்
றானுகி வானுகிச் சன்மார்க்க ருள்ளிருக்குந்
தேனுகித் தெள்ளமுதாய்த் தித்திக்குந் தேவரீ
யானுகி யென்னு ளிருக்கின்ற யென்னேயோ. 40

கலிவிருத்தம்

ஞாணுகரச் சுடரே ஞான மணிவிளக்கே
ஆணவருட் பெருஞ்சிற் றம்பலத்தே யானந்தத்
தேணு ரமுதாஞ் சிவமே சிவமேநீ
நாணுகி யென்னுள் நடிக்கின்ற பெண்னேயோ. 41

நிலைமண்டில ஆசிரியப்பா

சிற்சபைக் கண்ணும் பொற்சபைக் கண்ணுத்
திருநடம் புரியுந் திருநட ராஜ
னெனக்கருள் புரிந்த நினக்கடி யேன்செகம்
மாற்றை யறிந்திலன் போற்றினின் னருளே. 42

நாயினுஞ் சிறியே னெயினும் பெரியேன்
யாதிற் பெரியேன் றீதிற் பெரியேன்
என்னையாண் டருளினை யென்னையாண் டவனே
அம்பலத் தாடல்செய் பெம்பெரும் பொருளே. 43

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருங் கடலே யென்னை யாண்டசற் குருவே ஞானப்
பொருட்பெருஞ் சபையி லாடும் பூரண வாழ்வே நாயேன்
மருட்பெரு மாயை முற்று மடிந்தன வினைக ளோடே
இருட்பெருந் தடையை நீக்கி யிரவியு மெழுந்த தன்றே. 44

மாணவ நிலைக்கு மேலே வயங்கிய வொளியே மன்றில்
தாணவ நடஞ்செய் கின்ற தனிப்பெருந் தலைவனே யென்
கோணவ மாயை யெல்லாங் குலைந்தன வினைக ளோடே
ஆணவ விருளை நீக்கி யலரியு மெழுந்த தன்றே. 45

தற்பரம் பொருளே வேதத் தலைநின்ற வொளியே மோனச்
சிற்பர சுகமே மன்றிற் றிருநடம் புரியுந் தேவே
வற்புறு மாயை யெல்லா மடிந்தன வினைக ளோடே
இற்படு மிருளை நீக்கி யிரவியு மெழுந்த தன்றே. 46

குறள் தாழிசை

அணியேயெனது மெய்யறிவேபொது வளரரசேதிரு வருளமுதே
இனிதருள்வா யிதுதருண மமுதருளா யிதுதருணம்
மணியேயெனது கண்மணியேபொது வளர்மதியேதிரு வருண்மதியே
அருள்புரிவா யிதுதருண மருள்புரிவா யிதுதருணம். 47

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

மழவுக்கு மொருபிடிசோ றளிப்பதன்றி யிருபிடியூண் வழங்க லிங்கே
உழவுக்கு முதல்குறைபு மெனவளர்த்தங் கவற்றையெலா மோகோ பேயின்
விழவுக்கும் புலாலுண்ணும் விருந்துக்கு மருந்துக்கு மெலிந்து மாண்டார்
இழவுக்கு மிடர்க்கொடுங் கோலிறைவரிக்குங்கொடுத் திழப்பாரென்னேயென்னே

கட்டளைக்கலிப்பா

உடுக்க வோவொரு கந்தைக்கு மேலிலை
உண்ண வோவுண வுக்கும் வழியிலை
படுக்க வோபழம் பாய்க்குங் கதியிலை
பாரி னல்லவர் பாற்சென்று பிச்சைதான்
எடுக்க வோதிட மில்லையென் பாலுனக்
கிரக்க மென்பது மில்லை உயிரைத்தான்
விடுக்க வோமன மில்லையென் செய்குவேன்
வெண்பி றைச்சடை வித்தக வள்ளலே. 49

பண்டு நின்றிருப் பாத மலரையே
பாடி யாடிய பத்திமை யோரைப்போல்
தொண்டு கொண்டெனை யாண்டனை யின்றுதான்
துட்ட னென்று துரத்திடல் நன்றுகொல்
குண்டு நீர்க்கடல் சூழல கத்துளோர்
குற்ற மாயிரங் கோடிசெய் தாலுமுன்
கொண்டு பின்குலம் பேசுவ ரோவினைக்
குறிக்கொள் வாயெண் குணத்திகழ் வள்ளலே. 50

தரவு கொச்சகக் கலிப்பா

கரும்பசைக்கு மொழிச்சிறியார் கன்மனத்திற் பயின்றுபயின்
றிரும்பசைக்கு மனம்பெற்றேன் யாதேனுவிவ் வேழைகள்தம்
அரும்பசிக்கு மருந்தளிப்பே னக்தோவிங் கென்னுலே
தருப்பசைக்க முடியாதே ஜோதிநடப் பெருமானே. 51

கலித்தாழிசை

அருளாலே பருவினை யருள்கின்ற பொழுதங்
கனுபவ மாகின்ற தென்னடி தாயே
தெருளாலே மருளாலே தெரியாது தெரியுந்
திருநட வின்பமென் றறியாயோ மகளே. 52

அறிவாலே யறிவினை யறிகின்ற பொழுதங்
கனுபவ மாகின்ற தென்னடி தாயே
செறிவாலே பிறிவாலே தெரியாது தெரியுந்
திருவரு ளுருவமென் றறியாயோ மகளே. 53

கலித்துறை

மாதோர் புடைவைத்த மாமருந்தே மணியே யென்மட்டில்
யாதோ திருவுளம் யானறி யேனிதற் கென்னசெய்வேன்
போதோ கழிகின்ற தந்தோவின் றன்னைப் பொருந்துகின்ற
சூதோ டணுவுந் தெரியேனின் பாதத் துணைதுணையே. 54

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

நல்வினை சிறிது நயந்திலே னென்பாள் நான்செயத் தக்கதே தென்பாள்
செல்வினை யொன்றுந் தெரிந்தில னேயோ தெய்வமே தெய்வமே யென்பாள்
வெல்வினை மன்றி னடம் புரிகின்றார் விருப்பில ரென்பினை யென்பாள்
வல்வினை யுடை.யே னென்றுளம் பதைப்பாள் வருந்துவாள் நான்பெற்ற மகளே.

கலிநிலைத்துறை

பூவார் கொன்றைச் செஞ்டை யாளர் புகழாளர்
ஈவார் போல்வந் தென்பினை புக்கா ரெழில்காட்டித்
தேவார் தில்லைச் சிற்சபை மேவுந் திருவாளர்
ஆவா வென்ற ரென்னடி யம்மா வவர்சூ தே. 56

கலித்துறை

எல்லாக் குறையுந் தவிர்ந்தே தலுன் னின்னரு ளெய்தினநான்
வலலாரின் வல்லவ னேனென் சருணை பருந்தருந்தி
நல்லா ரெவர்க்கு முபகரிப் பானிங்கு நண்ணுகின்றேன்
கொல்லா விரதத்தி லென்னைக் குறிக்கொண்ட கோலத்தனே. 57

தரவு கொச்சகக் கலிப்பா

ஆர்ந்தவருட் பெருஞ்ஜோதி யப்பாநா னடுத்தவர்தஞ்
சோர்ந்தமுகம் பார்க்கவினித் துணியேனின் னருளாணை
கோர்ந்தவர்கள் கோர்ந்தபடி நெகிழ்ந்துரைக்கும் வார்த்தைகளும்
ஓர்ந்துசெவி புகத்துணி யேன் உன்னாணை யுன்னாணை. 58

கலிவிருத்தம்

பொத்திய மலப்பிணிப் புழுக்கு ரம்பைதான்
சித்தியற் சுத்தசன் மார்க்கச் சேர்ப்பிலுல்
நித்திய மாகியே நிகழு மென்பது
சத்தியஞ் சத்தியஞ் சகத்து ளீர்களே. 59

ஓவுறுத் துயர்செயு முடம்புதா னென்றுஞ்
சாவுறு தின்பமே சார்ந்து வாழலாம்
மாவுறுச் சுத்தசன் மார்க்க நன்னிலை
மேவுறூர் தங்களே விடுக நெஞ்சமே. 60

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

ஆடுகின்ற சேவடிக்கே யாளானேன் மாளாத வாக்கை பெற்றேன்
கூடுகின்ற சன்மார்க்க சங்கத்தே நடுவிருந்து குலாவு கின்றேன்
பாடுகின்றே னெந்தைபிரான் பதப்புகழை யன்பிலெடும் பாடிப் பாடி
நீடுகின்றே னின்பக்கூத் தாடுகின்றே னெண்ணமெலா நிரம்பி னேனே. 61

என்னுரைக்கே னென்னுரைக்கே னிந்தவதி சயந்தன்னை யெம்ம ளுர்காள்
பொன்னுரைக்கு மணிமன்றிற் றிருநடனம் புரிகின்ற புனித னென்னுள்
மின்னுரைக்கும் படிகலந்தான் பிரியாமல் விளங்குகின்றான் மெய்மை யான
தன்னுரைக்கு மென்னுரைக்குஞ் சமரசஞ்செய் தருள்கின்றான் சகத்தின்மீதே.

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியே னுமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் றயவினுடங் கேட்டீர்
என்மார்க்கத் தெனினுமக்கு ளொருவனெனக் கொள்வீர்
எல்லாஞ்செய் வல்லநம திறைவனையே தொழுவீர்
புன்மார்க்கத் தவர்போலே வேறுசில புகன்றே
புந்திமயக் கடையாதீர் பூரணமெய்ச் சுகமாய்த்
தன்மார்க்க மாய்விளங்குஞ் சுத்தசிவ மொன்றே
தன்னுணை யென்னுணை சார்ந்தறிமி னீண்டே. 63

காற்றுலே புவியாலே ககனமத னுலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றுலே பிணியாலே கோலக்கருவி யாலே
கோளாலே பிறவியற்றுங் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றுலே யெஞ்ஞான்று மழியாதே விளங்கும்
மெய்யளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தா னெனக்கே
ஏற்றுலே யிழிவினீர் நினையாதீ ருலகீர்
எந்தையருட் பெருஞ்ஜோதி யிறைவனைச்சார் வீரே. 64

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

தந்தை தன்மையே தனையன்றன் தன்மையென்று சாற்றுதல் சத்தியங் கண்டீர்
எந்தை யெம்பிரா னெந்தாழில் புரியு மிறைவன் மன்றுளே யியனடம் புரிவான்
மைந்த னென்றன்னை யாண்டவ னெல்லாம் வல்லநாயக னல்லசீ ருடையான்
அந்த ணாளன்மெய் யறிவுடை யவனென் னப்பன் றன்மையென் றன்மையென் றறிமின். 65

உழக்கறியீ ரளப்பதற்கா ருளவறியீ ருலகீர்
ஊரறியீர் பேரறியீ ருண்மைபொன்று மறியீர்
கிழக்கறியீர் மேற்கறியீ ரம்பலத்தே மாயைக்
கேதமற நடிக்கின்ற பாதமறி வீரா
வழக்கறிவீர் சண்டையிட்டே வம்பளக்க வறிவீர்
வடிக்குமுன்னே சோறடுத்து வயிற்றடைக்க வறிவீர்
குழைக்கறியே பழக்கறியே கூட்டுவர்க்கக் கறியே
குழப்பேசா றேயெனவும் கூறவறி வீரே. 66

இணக்கறியீ ரிதமறியீ ரிருந்தநிலை யறியீர்
இடமறியீர் தடமறியீ ரிவ்வுடம்பை யெடுத்த
கணக்கறியீர் வழக்கறியீ ரப்பலத்தே மாயைக்
கலக்கமற நடிக்கின்ற துலக்கமறி வீரா
பிணக்கறிவீர் புரட்டறிவீர் பிழைசெயவே யறிவீர்
பேருணவைப் பெருவயிற்றுப் பிலத்திலிட வறிவீர்
மண்க்கறியே பிணக்கறியே வறுப்பேபேர்ப் பொரிப்பே
வடைக்குழம்பே சாறேயென் றடைக்கவறி வீரே. 67

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

கடுகோட்டுக் கறிக்கிடுக தாளிக்க வெனக்கழறிக் களிக்கா நின்ற
சுடுகோட்டுப் பிணங்காள்இச் சுகமனைத்துங் கணச்சுகமே சொல்லக் கேண்மின்
முடுகாட்டுக் கூற்றுவருஞ் சாவீராற் 1 சாவதற்கு முன்னே நீவிர்
இடுகோட்டுப் பிணங்கண்டா லேத்துமிலை வெமையுமிவ்வா றிடுக வென்றே. 68

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

கடல்கடந்தேன் சுரையடைந்தேன் கண்டுகொண்டேன் கோயில்
கதவுதிறந் திடப்பெற்றேன் காட்சியெலாங் கண்டேன்
அடர்கடந்த திருவழுதுண் டருளொளியா லனைத்தும்
அறிந்துதெளிந் தறிவுருவா யழியாமை யடைந்தேன்
உடல்குளிர்ந்தே னுயிர்கிளர்ந்தே னுள்ளமெலாந் தழைத்தேன்
உள்ளபடி யுள்ளபொரு ளுள்ளவணுப் நிறைந்தேன்
இடர்தவிர்க்குஞ் சித்தியெலா மென்வசமோங் கினவே
இத்தனையும் பொதுநடஞ்செய் யிறைவனருட் செயலே. 69

எழுசீரடி ஆசிரியவிருத்தம்

வாது பேசிய மனிதர் காளொரு வார்த்தை கேண்மின்கள் வந்துநும்
போது போவதன் முன்ன ரேயருட் பொதுவி லேநடம் போற்றுவீர்
தீது பேசினீ ரென்றி டாதுமைத் திருவு ளங்கொளுங் காண்மிலை
சூது பேசிலே னண்மை சொல்கின்றேன் சுற்ற மென்பது பற்றிய. 70

கட்டளைக்கலிப்பா

வெட்டை மாட்டி விடாப்பெருந் துன்பநோய்
விளைவ தெண்ணிலர் வேண்டிச்சென் றேதொழுக்
கட்டை மாட்டிக்கொள் வாரென வேண்டிப்பெண்
கட்டை மாட்டிக்கொள் வார்தங் கழுத்திலே
துட்டை மாட்டின் கழுத்தடிக் கட்டையோ
துணிக்குங் கட்டைய தாமிந்தக் கட்டைதான்
எட்டை மாட்டி யுயிர்விடக் கட்டைமேல்
ஏறும் போது மிழுக்கின்ற கட்டையே. 71

புண்ணைக் கட்டிக்கொண் டேயதன் மேலொரு
புடவை கட்டிப் புதுமைகள் காட்டிடும்
பெண்ணைக் கட்டிக்கொள் வாரிவர் கொள்ளிவாய்ப்
பேயைக் கட்டிக்கொண் டாலும்பி ழைப்பர்காண்
மண்ணைக் கட்டிக்கொண் டேயழு கின்றவிம்
மடையப் பிள்ளைகள் வாழ்வினை நோக்குங்கால்
கண்ணைக் கட்டிக்கொண் டீர்வழி போங்கிழக்
கழுதை வாழ்விற் கடையென லாகுமே. 72

1 "பானளிக்குந் தேகமீது சூடுவதபாதம்" பதிகம்—111-பாட்டு 9.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

உணிக்கு மூட்டுக்கும் கொதுதுக்கும் பேலுக்கு முவப்புறப் புசிக்கின்றீர்
துணிக்குங் காசுக்குஞ் சோற்றுக்கு மூர்கொறுஞ் சுற்றிப்போ யலைகின்றீர்
பிணிக்கும் பீடைக்கு முடலுளங் கொடுக்கின்றீர் பேதையீர் நல்லோர்கள்
பணிக்கும் வேலைசெய் துண்டுடுத் தம்பலம் பரவுதற் கிசையீரே. 73

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

தூக்கமுந் துயருமச்சமு மிடருந் தொலைந்தன தொலைந்தன வெனைவிட்
டேக்கமும் வினையு மாயையு மிருளு மிரிந்தன வொழிந்தன முழுதும்
ஆக்கமு மருளு மறிவுமெய்ப் யன்பு மழிவுறு வுடம்புமெய்ப் யின்ப
வூக்கமு மெனையே யுற்றன வுலகீ ருண்மையிவ் வாசக முணர்மின். 74

ஆதியு நடுவு மந்தமுமில்லா அருட்பெருஞ் ஜோதிபென் னுளத்தே
நீதியிற் கலந்து நிறைந்தது நானு நித்திய முபினை யுலகீர்
சாதியு மதமுஞ் சமயமுந் தவிர்த்தே சத்திய சுத்தசன் மார்க்க
வீதியி லுமைத்தா னிறுவுவ லுண்மை விளம்பினேன் வம்மினீ விரைந்தே. 75

மது விலக்கு

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

மதிப்பாலை யருட்பாலை யானந்தப் பாலையுண்ண மறந்தார் சிலோர்
விதிப்பாலை யறியேந்தாய்ப் பாலையுண்டு கிடந்தழுது பிளவிற் கேற்பக்
கொதிப்பாலை உணர்வழிக்குங் குடிப்பாலை மடிப்பாலைக் குடிப்பா ரிங்கே
துதிப்பாலை யருள்தருஞ் சிதவகிரா மணித்தலைவத் துதியா ரந்தே. 76

வெறி விலக்கு

வெண்பா

இம்மை யறையனைய வேகூர மாதருமா
இம்மைபுமை யிம்மையைபேயா என்செய்த — தம்மைமதன்
மாமாமா மாமாமா மாமாமா மாமாமா
மாமாமா மாமாமா மா. 77

எழுசீரடி ஆசிரிய விருத்தம்.

ஒன்று முன்னெண்பா லெண்ணிடக்கிடைத்த வுலவக்கு மேற்றனை யருளாளிபால்
நன்றுகண் டாங்கே யருட்பெருஞ் ஜோதி நாதனைக் கண்டவ னடிக்கும்
மன்றுகண் டதனிற் சித்திதலம் வல்ல மருந்துகண் டுற்றது வடிவாய்
நின்றுகான் டாடுந் தருணமிவ் விதுவே நெஞ்சமே யஞ்சலை நீயே. 78

கலித்துறை

கண்டேன் சிற்றம்பலத் தானந்த நாடகங் கண்டுகளி
கொண்டே னெல்லாம் வல்லசித்தினைக் கூடிக் குலவியமு
துண்டேன் மெய்ஞ்ஞான வுருவடைந் தேன்பொய் புலகொழுக்கம்
விண்டேன் சமரச சன்மார்க்கம் பெற்ற வியப்பிதுவே. 79

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

உயிரெலா மொருநீ திருநடம் புரியும்
ஒருதிருப் பொதுவென அறிந்தேன்
செயிரிலாந் தவிர்ந்தேன் றிருவெலா மடைந்தேன்
சித்திதலாம் வல்லிதான் றறிந்தேன்
மயிரெலாம் புளகித் துளமெலாங் கனிந்து
மலர்ந்தனன் சுத்தசன் மார்க்கப்
பயிரெலாந் தழைக்கப் பதியெலாங் களிக்கப்
பாடுகின்றேன் பொதுப் பாட்டே. 80

அருந்தவர் காண்டற் கரும்பெருங் கருணை
அருட்பெருஞ் ஜோதியென் னுளத்தே
இருந்தன னம்மா நான்செய்த தவந்தான்
என்னையோ வென்னையோ வென்னுள்
திருந்துதெள் ளமுதுண் டடிமெலாந் தவிர்ந்த
திருவுரு வடைந்தனன் ஞான
மருந்துமா மணியு மந்திர நிறைவும்
வாய்த்தன வாய்ப்பினென் னுளே. 81

நேரிசை வெண்பா

உன்னைவிட மாட்டேனை யுன்னுணை யெம்பெருமான்
என்னைவிட மாட்டா யிருவருமாய் — மன்னியன்றும்
வண்மை யெலாம்வல்ல வாய்மையரு ளாலுலகுக்
குண்மையின்பஞ் செய்து முவந்து. 82

இதுவே தருண மெனையுனைதற் கிங்கே
பொதுவே நடிக்கும் புனிதா — விதுவேவைத்த
சென்னியனே சுத்த சிவனே யுனக்கடியேன்
அன்னியனே யல்லே னறிந்து. 83

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

திருநி லத்துநல் லருளொடு மன்பொடுஞ் சிறப்பொடுஞ் செழித்தோங்க
உருநி லத்திவண் மகிழ்வொடு வாழ்வுற வுவந்துநின் னருள்செய்வாய்
இருநி லத்தவ ரின்புறத் திருவரு ளியல்வடி வொடுமன்றிற்
குருநி லத்தசற் குருவெனு மிறைவநின் குரைகழற் பதம்போற்றி. 84

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

யான்முனம் புரிந்த பெருந்தவம் யாதோ
என்சொல்வே னென்சொல்வே னங்தோ
ஊன்மன முருக வென்றனைத் தேற்றி
ஒளியுருக் காட்டிய தலைவா
என்மன மிரங்கா யின்றுநீ யென்றேன்
என்றசொல் லொலியடங் குதன்முன்
ஆன்மகிழ் கன்றி னணைத்தெனை யெடுத்தாய்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 85

பனிப்பறுத் தெல்லாம் வல்லசித் தாகிப்
பரந்தரு கின்றமெய் வாழ்வாம்
தனிப்பழ மெனக்கே தந்ததான் தந்தான்
தமிபனே னுண்டன னதன்றன்
இனிப்பைநா னென்னென் றியம்புவே னந்தோ
என்னுயி ரினித்தகதன் சுரணைஞ்
சனிப்பற வினித்த தத்துவ மெல்லாந்
தனித்தனி யினித்தன தழைத்தே. 86

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

மந்திர மறியேன் மற்றை மணிமருந் தறியேன் வேறு
தந்திர மறியே னெந்தத் தகவுகொண் டடைவே னெந்தாய்
இந்திரன் முதலாந் தேவ ரிறைஞ்சப்பொன் மன்றில் வேணிச்
சந்திர னுட னின்பத் தனிநடம் புரியுந் தேவே. 87

கலிவிருத்தம்

சிற்றறி வுடையனான் செய்த தீமைகள்
முற்றவும் பொறுத்தருள் முனிந்திடே லின்றே
தெற்றென வருட்பெருஞ் ஜோதிச் செல்வமும்
மற்றவும் வழங்குக வரதனே யென்றேன். 88

என்றசொல் செவிமடுத் நிறைபு மஞ்சிடேல்
இன்றுனக் கருட்பெருஞ் ஜோதி யீந்தனம்
நன்றுற மகிழ்கவெந் நாளுஞ் சாவுறு
வென்றியு மளித்தன மென்று மேவினன். 89

மேவியென் னுள்ளகத் திருந்து மேலுமென்
ஆவியிற் கலந்திவ னவனென் றேதுமோர்
பூவியற் பேதமும் போக்கி யொன்றதாய்த்
தேவியற் புரிந்தனன் சிதம்ப ரேசனே. 90

அருட்பெருஞ் ஜோதியென் னகத்தி லோங்கின
மருட்பெருந் திரையெலா மடிந்து நீங்கின
இருட்பெரு மலமுதல் யாவந் தீர்ந்தன
தெருட்பெருஞ் சித்திகள் சேர்ந்த வென்னையே. 91

நேரிசை வெண்பா

தாதையா மென்னுடைய தாயாமென் சற்குருவாம்
மேதையா மின்ப விளைவுமாம் — ஓது
குணவாளன் றில்லையருட் கூத்த னுமையாள்
மணவாளன் பாத மலர். 92

திருவாமென் றெய்வமாந் தெள்ளமுத ஞானக்
குருவா மெனைக்காக்குங் கோவாம் — பருவரையின்
தேப்பிள்ளை யாமெஞ் சிவகாம வல்லிமகிழ்
மாப்பிள்ளை பாத மலர். 93

என்னறிவா மென்னறிவி னின்பமா மென்னறிவின்
தன்னறிவா முண்மைத் தனிநிலையாம் — மன்னுகொடிச்
சேலையிட்டான் வாழச் சிவகாம சுந்தரியை
மாலையிட்டான் பாத மலர். 94

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

குற்றம் புரித லெனக்கியல்பே குணமாக் கொள்ள லுனக்கியல்பே
சிற்றம் பலவா வினிச்சிறியேன் செப்பு முகமன் யாதுளது
தெற்றென் றடியேன் சிந்தைதனைத் தெளிவித் தச்சந் துபர்தீர்த்தே
இற்றைப் பொழுதே அருட்ஜோதி யீக தருண மிதுவாமே. 95

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அன்புடை யவரேயெல் லாமுடை யவரே
அருட்பெருஞ் ஜோதியென் ணுண்டவ ரேயென்
வன்புடை மனத்தைநன் மனமாக்கி யெனது
வசஞ்செய்வித் தருளிய மணிமன்றத் தவரே
இன்புடை யவரேயென் னிறையவ ரேயென்
இருகணுண் மணிகளு ளிசைந்திருந் தவரே
என்புடை பெனைத்தூக்கி யெடுத்தீரிங் கிதனை
எண்ணுகின் றேனமு துண்ணுகின் றேனை. 96

வேறு

தன்னைவிடத் தலைமையொரு நகவினுமிங் கியலாத்
தனித்தலைமைப் பெரும்பதியே தருணதயா நிதியே
பொன்னடியென் சிரத்திருக்கப் புரிந்தபரம் பொருளே
புத்தமுத மெனக்களித்த புண்ணியனே நீதான்
என்னைவிட மாட்டாய்நா னுன்னைவிட மாட்டேன்
இருவருமொன் றுகிபிங்கே யிருக்கின்ற மிதுதான்
நின்னருளே யறிந்தறிதனிற் செயுஞ்செய்கை யனைத்தும்
நின்செயலோ வென்செயலோ நிகழ்த்திடுக நீயே. 97

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

செவ்வணத் தவரு மறையுமா கமமுந் தேவரு முனிவரும் பிறரும்
இவ்வணத் ததுவென் றறிந்திடற் கரிதா மெந்தைதின் றிருவருட் டிறத்தை
எவ்வணத் தறிவே னெங்ஙனம் புகல்வே னென்தரத் திபலுவ தேயோ
ஓவ்வணத் தரசே பெனக்கென விங்கோ ருணர்ச்சிபு முண்டுகொ லுணர்த்தே. 98

உணர்ந்துணர்ந் தாங்கே யுணர்ந்துணர்ந் துணரா வுணர்ந்தவ ருணர்ச்சி யாலுழைந்தே
திணர்ந்தன ராகி வியந்திட விளங்குஞ் சிவபதத் தலைவனின் னியலைப்
புணர்ந்தின் னருளே யறிபுர னறிந்து புகன்றிடுந் தரஞ்சிறி துளமே
கொணர்ந்தொரு பொருளென் கரங்கொளக் கொடுத்த குருவெனக் கூறலென் குறிப்பே. 99

கலித்துறை

பண்ணிய பூசை நிறைந்தது சிற்றம் பலநடங்கண்
டெண்ணிய வெண்ணம் பலித்தன மெய்யின்ப மெய்தியதோர்
தண்ணிய லாரமு துண்டனன் சுண்டனன் சாமியைநான்
நண்ணிய புண்ணிய மென்னுரைக் கேனிந்த நானிலத்தே. 100

கலித்தாழிசை

எக்கரையுங் காணுதே யிருட்கடலிற் கிடந்தேனை யெடுத்தாட் கொண்டே
அக்கரைசேர்த் தருளினுமோர் சர்க்கரையும் எனக்களித்தா னந்தோவந்தோ. 101

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

ஓங்கார வணைமீது நானிருந்த தருணம்
உவந்தெனது மணவாளர் சிவந்தவடி வகன்றே
ஈங்காரப் பனிக்குவடு வெடுத்ததிரை நின்றூர்
இருந்தருள்க வெனவெழுந்தே னெழுந்திருப்ப தென்னீ
ஆங்காரம் ஒழிபென்று மொழித்தனனப் போது
நான்றீனை வவர்தாளை வறிந்திலன்முன் குறிப்பை
ஊங்கார மிரண்டிருவு மொன்றுமே மாங்கே
உறைந்தவரு பவந்தாழி நிறைந்தபெரு வெளியே. 102

கலித்துறை

நான்செய்த புண்ணிய மென்னுரைக் கேன்பொது நண்ணியதோர்
வான்செய்த மாமணி யென்கையிற் பெற்றுநல் வாழ்வடைந்தேன்
ஊன்செய்த தேக மொளிவடி வாகின்ற் றோங்குகின்றேன்
கோன்செய்த விச்சை குணிக்கவல் லாரெவர் கூறுமினே. 103

நேரிசை வெண்பா

உண்மை யுரைத்தருளென் றேதினே னெற்றைபிரான்
வண்மையுட னென்னறிவில் வாய்த்துரைத்தான் — திண்மையுறு
சித்திநிலை யெல்லாந் தெரிவித் தருள்கின்றேறம்
இத்தருணஞ் சத்திபமே யென்று. 104

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

இச்சையெலாம் புகன்றேனென் இலச்சையெலாம் விடுத்தேன்
இனிச்சிறிதுந் தரியேனிங் கிதுதருணத் தடைந்தே
அச்சையெலாம் வெளிப்படுத்தி யச்சமெலா மகற்றி
அருட்ஜோதித் தனிபரசே யாங்காங்கு மோங்க
விச்சையெலா மெனக்களித்தே யவிச்சையெலாந் தவிர்த்து
மெய்ப்புறமவன் னெஞ்சகலந்து விளங்கிடுதல் வேண்டும்
பச்சையெலாஞ் செம்மையெலாம் பொன்மையெலாம் படர்ந்த
படிகமணி விளக்கேயம் பலம்விளங்கும் பதியே. 105

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

உடைய நாயகன் பிள்ளைநா ணுகிலெவ் வுலகமு மொருங்கின்பம்
அடைய நானருட் ஜோதிபெற் றழிவிலா யாக்கைகொண் டுலகெல்லாம்
இடைய வற்புதப் பெருஞ்செய லுடனோறும் விளைத்தெங்கும் விளையாடத்
தடைய தற்றநற் றருணமித் தருணமாத் தழைக்கவித் தனியேற்கே. 106

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

சொல்லுகின்றேன் பற்பலநான் சொல்லுகின்ற வெல்லாந்
துரிசலவே சூதலவே தூய்மையுடை யனவே
வெல்லுகின்ற வார்த்தையன்றி வெறும்வார்த்தை யென்வாய்
விளம்பாதென் னையர்நின்று விளம்புகின்ற படியால்
செல்லுகின்ற படியேநீ காண்பாயித் தினத்தே
தெரிமொழியப் போதுணநீ தெளிந்துகொள்வாய் கண்டாய்
ஒல்லுகின்ற வகையெல்லாஞ் சொல்லுகின்றே னடிநான்
உண்மையிது வுண்மையிது வுண்மையிது தானே. 107

என்னுலோர் துரும்புமசைத் தெடுக்கமுடி யாதே
எல்லாஞ்செய் வல்லவனென் றெல்லாரும் புகலும்
நின்னுலில் வுலகிடைநான் வாழ்கின்றே னரசே
நின்னருள்பெற் றழியாத நிலையையடைந் திடவென்
தன்னுலோர் சுதந்தரமு மில்லைகண்டாய் நினது
சகலசுதந் தரத்தையென்பாற் றபவுசெயல் வேண்டும்
பின்னுலென் றிடிற்சிறிதுந் தரித்திருக்க மாட்டேன்
பேராணை யுரைத்தேதினென் பேராசை யிதுவே. 108

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

கலையனே யெல்லாம் வல்லவோர் தலைமைக் கடவுளே யென்னிரு கண்ணே
நிலையனே ஞான நீதிமன் றிடத்தே நிருத்தஞ்செய் கருணைமா நிதியே
புலையனேன் பொருட்டின் றிருவடி யவனி பொருந்திய புதுமையென் புகல்வேன்
சிலையைநேர் மனத்தேதன் செய்தவம் பெரிதோ திருவருட்பெருந்திறல் பெரிதே 109

நேரிசை வெண்பா

உலகமெலாம் போற்ற வொளிவடிவ ணுகி
இலகவருள் செய்தா னினைசந்தே — திலகனென
நானே சன்மார்க்க நடத்துகின்றே னம்பெருமான்
ணுனே யெனக்குத் தனித்து. 110

தனித்துணையா வென்றன்னைத் தாங்கிக்கொண் டென்றன்
மனித்த வுடம்பழியா வாறே — கனித்துணையாம்
இன்னமுதந் தந்தெனக்கே யெல்லாமும் வல்லசித்தி
தன்னையுந்தந் தட்கலந்தான் ணுன். 111

சத்தியவார்த்தை

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

சிவ மெனும்பெயர்க் கிலக்கிய மாகியெச் செயலுந்தன் சமுகத்தே
நவ நிறைந்தபே ரிறைவர்க ளியற்றிட ஞானமா மணிமன்றில்
தவ நிறைந்தவர் போற்றிட வானந்தத் தனிநடம் புரிகின்றான்
எவ னவன்றிரு வாணையி தெசைத்தன னினித்துய ரடைதேனே. 112

கலித்துறை

கண்கொண்ட பூதல மெல்லாஞ் சன்மார்க்கங் கலந்துகொண்டே
பண்கொண்ட பாடலிற் பாடிப் படித்துப் பரவுகின்றார்
விண்கொண்ட சிற்சபை யொன்றே நிறைந்து விளங்குகின்ற
தெண்கொண்ட மற்றை மதமார்க்கம் யாவு மிறந்தனவே. 113

செத்தா ரெழுந்தனர் சுத்தசன் மார்க்கஞ் சிறந்ததுதான்
ஒத்தா ருபர்ந்தவ ரில்லா வொருவனே யுற்றடைந்தே
சித்தாடு கின்றனன் சாகா வரமுஞ் சிறக்கப்பெற்றேன்
இத்தா ரணியி லெனக்கிணை யாரென் றியம்புவனே. 114

நேரிசை வெண்பா

சர்க்கரையோத் தானெனக்கே தந்தானரு ளென்மனக்
கற்கரையச் செய்தே களிப்பித்தான் — கற்க
இனியா னருட்ஜோ தியெக்தையென்னு ளூற்றான்
இனியான் மயங்கே னிருந்து. 115

கலித்துறை

அப்பனே யிப்பனே யாக்கிச் சிவிகை யமர்ந்தவன்சால்
அப்பனே யென்னுயிர்க் கான செச்தேனே யழுதைபங்காள்
அப்பனே யாழி கடத்திக் கரைவிட் டளித்தசடை
அப்பனைச் சிற்றம் பலவனை நான்றுதித் தாடுவனே. 116

கட்டளைக்கலிப்பா

தொடக்கவோரு்ல சொன்மலரில்லைான் துதிக்கவோபத்தி சுத்தமுமில்லைபுள்
ஓடுக்கவோமன மென்வசமில்லையூழ் உற்றஆணவ மாதிமலங்களைத்
தடுக்கவோதிட மில்லையென்மட்டிலே தயவுதானினக் கில்லைபுயிரையும்
விடுக்கவோமன மில்லையென்செய்குவேன் விளங்குமன்றில் விளங்கியவள்ளலே. 117

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

சனி தொலைந்தது தடை தவிர்ந்தது தயை மிகுந்தது சலமொடே
துனி தொலைந்தது சுமை தவிர்ந்தது சுப மிகுந்தது சுகமொடே
கனி யெதிர்ந்தது கலை தவிர்ந்தது களி மிகுந்தது கனிவொடே
புனித மன்றிறை நடமி னிந்தது புக ழுபர்ந்தது புவியிலே. 118

உரையு முற்றது வொளியு முற்றது வுணர்வு முற்றது வுண்மையே
பரையு முற்றது பதியு முற்றது பதமு முற்றது பற்றியே
புரையு மற்றது குறையு மற்றது புலையு மற்றது புன்மைசேர்
திரையு மற்றது நரையு மற்று விழுந்ததே. 119

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

பண்ப னேகமுந் திரண்டுரு வாகியெம் பாக்கியம் போல்வந்த
நண்ப னேநினைப் பிரிந்தநாண் முதலிந்த நாள்வரை யுனவெல்லாம்
புண்ப னேர்ந்தபோ துண்டவர் கண்டுநிற் புகன்றுநின் னுடனிங்கே
உண்ப னேலஃ துணவென மதிப்பனீ துண்மைபென் றுணர்வாயே. 120

விர்த்தகிரி

நேரிசை வெண்பா

ஆறு விளங்க வணிகிளர்தே ரூர்ந்தவுலாப்
பேறு விளங்கவுளம் பெற்றதுமன் — கூறுகின்ற
ஒன்றிரண்டு தாறுபுடை யோங்கும் பழமலையார்
மின்றிரண்டு நின்றசடை மேல். 121

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

ஆதிமலை யனுதிமலை யன்புமலை யெங்கும்
ஆனமலை ஞானமலை யானந்த மலைவான்
ஜோதிமலை துரியமலை துரியமுடிக் கப்பாற்
றோன்றுமலை தோன்றுத சூதான மலைவெண்
பூதிமலை சுத்தவனு பூதிமலை யெல்லாம்
பூத்தமலை வல்லியெனப் புகழுமலை தனையோர்
பாதிமலை முத்தரெலாம் பற்றுமலை யென்னும்
பழமலையைக் கிழமலையாய்ப் பகருவதென் னுலகே. 122

சாக்கியனை யெறிந்தசிலை சகித்தமலை சித்த
சாந்தருளஞ் சார்ந்தோங்கித் தனித்தமலை சடையிற்
றாக்கியகா லொடுவிளங்குந் தூயமலை வேதஞ்
சொன்னமலை சொல்லிறந்த துரியநடு மலைவான்
ஆக்கியளித் தழிக்குமலை யழியாத மலைநல்
அன்பருக்கின் பந்தருமோ ரற்புதப்பொன் மலைநற்
பாக்கியங்க ளெல்லாமும் பழுத்தமலை யென்னும்
பழமலையைக் கிழமலையாய்ப் பகருவதென் னுலகே. 123

நேரிசை வெண்பா

ஆவியீ ரைந்தை யபரத்தே வைத்தோதில்
ஆவியீ ரைந்தை யகற்றலாம் — ஆவியீர்
ஐந்தறலா மாவியீ ரைந்துறலா மாவியீர்
ஐந்திடலா மோரிரண்டோ டாய்ந்து. 124

இதன் பொருள் :—

ஆவி—ஆன்ம அக்கர மென்னும், ஈரைந்து—பத்தாகிய யகரத்தை, ஐ—சிவத்திற்கு, அபரத்தே—பின்னுக, வைத்து—பொருத்தி, ஓதில்—செபிக்கில், ஆ வி ஈரைந்தை—ஆ என்னும் ஆ பத்துக்களையும் வி என்னும் வி பத்துக்களையும், அகற்றலாம்—நீக்கிக் கொள்ளலாம், ஆவி—ஆன்ம இயற் கையை, ஈர்—கெடுக்கும், ஐந்து—பஞ்ச மலங்களையும், அறலாம்—களைந்து விடலாம், ஆவி—ஆன்மாவுக்கு உறுதியாய், ஈரைந்து—பத்தியை, உறலாம்-பொருந்தலாம், ஆய்ந்து—சேர்க்கும் வகை தெரிந்து, ஆவி—பிராணனது கலைகள், ஈரைந்து—பத்துடன், ஓர்—ஒரு, இரண்டோடு—இரண்டையுங் கழியாமல், இடலாம்—சேர்த்துக் கட்டிக் கொள்ளலாம்.

பொழிப்புரை :—

ஆன்ம அக்கர மென்னும் பத்தாகிய யகரத்தை சிவத்திற்குப் பின்னைப் பொருத்தி செபிக்கில், ஆபத்துக்களையும் விபத்துக்களையும் நீக்கிக் கொள்ளலாம். ஆன்ம இயற்கையைக் கெடுக்கும் பஞ்ச மலங்களையும் களைந்து விடலாம். ஆன்மாவுக்கு உறுதியாய்ப் பத்தியைப் பொருந்தலாம். சேர்க்கும் வகை தெரிந்து பிராணனது கலைகள் பத்துடன் ஒரு இரண்டையுங் கழியா மல் சேர்த்துக் கட்டிக் கொள்ளலாம்.

அருட்பெருஞ்ஜோதி

133. நடராஜ அலங்காரம்

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

இரண்டே காற்கை முகந்தந்தி ரின்ப நடஞ்செய் பெருமானீர்
இரண்டே காற்கை முகங்கொண்டு ரென்னே யடிக ளென்றுரைத்தேதன்
இரண்டே காற்கை முகம்புடைக்க விருந்தா பெனைக்கென் றிங்கேநீ
இரண்டே காற்கை முகங்கொண்டா பென்றூர் மன்றி னின்றாரே. 1

இதன் பொருள் :—

இன்பம்—பேரின்பம் தருவதாகிய, நடஞ்செய்—திருநடனத்தைப் புரியா நின்ற, பெருமானீர்—பெருமானாகிய நீர், இரண்டே—இரண்டே

யாகிய, காற்கு—பாதங்களையுடைய எனக்கு, ஐ—அழகிய, முகம்—முகம் ஒன்றினை, தந்தீர்—கொடுத்தீர், (இங்ஙனம் இருக்க), இரண்டே காற்கு—இரண்டு பாதாம்புயங்களுக்கு, ஐமுகம்—பஞ்சமுகங்களை, கொண்மூர்—கொண்டநீராக இருக்கின்றீர், என்னை—பாதுபற்றி, அடிகள்—அடிகளே! என்றுரைத்தேன்—எனப்புகன்றேன். (அதற்கு) மன்றில் நின்றார்—அம்பலத்தின்கண் நின்ற இவர் (அடியாளைக் கண்ணுற்று), இரண்டேகால்—இரண்டு காலாகப் பெற்றநீ, கைமுகம் புடைக்க விருந்தாய்—கைத்த முகம் பெருக்கக் காட்டினை, எனைக்கென்று—யாது பற்றி யென வினவி, இங்கே நீ—இப்போது இவ்விடத்து, இரண்டே காற்கு—இரு காலாகிய அரை (அல்குலுக்கு இன்பம் பெருக்க எண்ணி), ஐமுகம் கொண்டாய் என்றார்—சுமுகங் கொண்டனை எனப் புகல்கின்றனர். ஏ! தோழி! இஃது என்? எனவினவியது.

பொழிப்புரை:—

"பொன்பம் தருவதாகிய திருநடனத்தைப் புரியாகின்ற பெருமானாகிய நீர், இரண்டேயாகிய பாதங்களையுடைய எனக்கு, அழகிய முகம் ஒன்றினைக் கொடுத்தீர். (இங்ஙனம் இருக்க) இரண்டு பாதாம்புயங்களுக்குப் பஞ்சமுகங்களைக் கொண்டநீராக இருக்கின்றீர். யாதுபற்றி அடிகளே!" எனப்புகன்றேன். (அதற்கு) அம்பலத்தின்கண் நின்ற இவர் (அடியாளைக் கண்ணுற்று), இரண்டு காலாகப் பெற்ற நீ, கைத்தமுகம் பெருக்கக் காட்டினை, யாதுபற்றி "யென வினவி இப்போது இவ்விடத்து இருகாலாகிய அரை (அல்குலுக்கு இன்பம் பெருக்க எண்ணி) சுமுகங்கொண்டனை எனப் புகல்கின்றனர். ஏ! தோழி! இஃது என்?" எனவினவியது. 1

இரண்டே காற்கை முகங்கொண்டீ ரென்னை யுடையீ ரம்பலத்தீர்
இரண்டே காற்கை முகந்தந்தீ ரென்னை யிதுதா னென்றுரைத்தேன்
இரண்டே காற்கை முகங்கொண்டிங் கிருந்த நீபு மெனைக்கண்டே
இரண்டே காற்கை முகங்கொண்டா யென்றார் தோழி யிவர்வாழி. 2

இதன்பொருள்:—

"இரண்டே காற்கு—இருவினைவழி செல்லாதவர்களுக்கு, ஐமுகம்—ஆசாரிய முகத்தினை, கொண்மூர்—கொண்டநீரா யிருக்கின்றீர். என்னை—அடியாளை, உடையீர்—உடையவரே! அம்பலத்தீர்—திருவம்பலத்தில் நடிக்கின்றவரே!, இரண்டே காற்கு—சூரியகலை சந்திரகலையாகிய வாகியனுபவத்திற்கு, ஐ—அழகிய, முகந்தந்தீர்—முகத்தினைத் தந்தவரே!, என்னை இதுதா னென்று—இஃது என்ன விஷயத்திற்கு என்று, உரைத்தேன்—செப்பினேன். (அதற்கு அன்னர்), இரண்டேகால், கை, முகங்கொண்டிங்கிருந்த

நீயும்—இரண்டு காலும், இருகையும், முகமும் அடையப்பெற்றிரா நின்ற நீயும், எனைக்கண்டே—நம்மைத் தரிசித்த தக்ஷணம் (நீமுன் உரைத்த வண்ணமே), இரண்டே காற்கு—வாசிக்கு, ஐமுகங் கொண்டாய்—அழகிய முகத்தினை, அனுபவ இடமாகக் கொண்டுவிட்டனை, என்றூர்—என்கின்றனர் தோழி!, இவர் வாழி—இன்னூர் நீடுழிவாழ்க!." எனத்தலைவி வாழ்த்தியதாகக் கொள்க.

பொழிப்புரை:—

"இருவினைவழி செல்லாதவர்களுக்கு, ஆசாரிய முகத்தினைக் கொண்ட நீராயிருக்கின்றீர். அடியாளை உடையவரே! திருவம்பலத்தில் நடிக்கின்றவரே! சூரியசந்திரகலையாகிய வாசியனுபவத்திற்கு அழகிய முகத்தினைத் தந்தவரே! இஃது என்ன விஷயத்திற்கு என்று செப்பினேன். (அதற்கு அன்னூர்), இரண்டுகாலும், இருகையும், முகமும் அடையப்பெற்றிரா நின்ற நீயும், நம்மைத் தரிசித்த தக்ஷணம் (நீ முன் உரைத்த வண்ணமே) வாசிக்கு, அழகிய முகத்தினை அனுபவ இடமாகக் கொண்டுவிட்டனை, என்கின்றனர் தோழி! இன்னூர் நீடுழி வாழ்க.!" எனத்தலைவி வாழ்த்தியதாகக் கொள்க.

இரண்டே காற்கை—தமிழில் எழுத்தில் இரண்டு (உ), கால் (வ), கை, உவகை. இரண்டேகாற் கைமுகந் தந்தீர்-என்றதற்கு, விநாயகருக்கு கை—துதிக்கையுடைய முகத்தினைத் தந்தீர் எனப் பொருள் கூறுவாரும் உளர். தலைவி தலைவருக்குள் நடந்த அலங்கார விவகாரத்துள் விநாயகரைப்பற்றிக் கூறுதல் அவ்வளவு விசேடமன்றெனக் கொள்க. 2

ஆடுங் கருணைத் திருநடத்தீ ராடு மிடந்தான் யாதென்றேன்
பாடுந் திருவுஞ் சவுந்தரமும் பழமுங் காட்டு மிடமென்றூர்
நாடும் படிநன் கருளுமென்றே னஞ்சாய் முன்பி னொன்றேயாய்
ஈடுந் தியபன் னடுவுள தா லென்றூர் தோழி யிவர்வாழி. 3

(குறிப்பு) ஆடுமிடம்—நடனஞ்செய்புமிடம், பாடும்—வேதாகமங்களால் புகழப்படும், திருவும்—பொன் என்னுஞ் சொல்லும், சவுந்தரமும்—அழகு அழகுக்குப் பிரதிபதமாய அம் என்னும் சொல்லும், பழமும்—(பழம்=பலம் வடமொழி) பலம் என்னும் சொல்லும் சேர்ந்தால், பொன்னம்பலம் ஆகிறது. முன்பின் ஒன்றேயாய்-முன்னும் பின்னும் ஒரு சொல்லாகிய அம், பல்நடுவுளது—பல் என்னுஞ் சொல் நடுவுளது. அம்+பல் அம்+அம்பலம். 3

அருட்பெருஞ்ஜோதி

134. வருதருணப் பாடல்

அற்புதம்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

ஐயனருள் வருகின்ற தருணமிது கண்டீர்
ஐயமிலை ஐயமிலை ஐயனடி யாணை
மெய்யனெனை யாட்கொண்ட வித்தகன்சிற் சபையில்
விளங்குகின்ற சித்தனெலாம் வல்லவொரு விடலன்
தய்யனருட் பெருஞ்ஜோதி துரியநட நாதன்
சுகவமுதன் என்னுடைய துரையம்பர்திங் கிருக்க
வையமிசை திருக்கோயில் அலங்கரிமின் விரைந்தே
மணியாலும் பொன்னாலும் மலராலும் வியந்தே. 1

தனித்தலைமைப் பெருப்பதியென் தந்தைவரு கின்ற
தருணமிது சத்தியங்காண் சகதலத்தீர் கேண்மின்
இனித்தநறுங் கனிபோன்றே என்னுளந் தித்திக்க
இன்னமுதம் அருத்தியெனை எழுலகும் போற்ற
மனித்தவுடம் பிதையழியா வாய்மையுடம் பாக்கி
மன்னியசித் தெல்லாஞ்செய் வல்லபமுங் கொடுத்தே
கனித்தசிவா னந்தமெனும் பெரும்போகந் தனிலே
களித்திடவைத் திடுகின்ற காலையுமிங் கிதுவே. 2

சத்தியவான் வார்த்தையிது தானுரைத்தேன் கண்டாய்
சந்தேகம் இலையிதனிற் சந்தாடம் உறுவாய்
இத்தினமே அருட்ஜோதி எய்துகின்ற தினமாம்
இனிவரும் அத் தினங்களெலாம் இன்பமுறு தினங்கள்
சுத்தசிவ சன்மார்க்கந் துலங்குமெலா வுலகுந்
தூய்மையுறும் நீயுரைத்த சொல்லனைத்தும் பலிக்கும்
செத்தவர்கள் எழுந்துலகில் திரிந்துமகிழ்ந் திருப்பார்
திருவருட்செங் கோலென்றுஞ் செல்லுகின்ற தாமே. 3

என்சாமி யெனதுதுரை என்னுயிர் நாயகமே
இன்றுவந்து நானிருக்கும் இடத்திலமர் கின்றீர்
பின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே யெனது
பேருடம்பிற் கலந்துளத்தே பிரியாம லிருப்பார்
தன்சாதி யுடைப்பெரிய தவத்தாலே நான்றான்
சாற்றுகின்றேன் அறிந்ததிது சத்தியஞ் சத்தியமே
மின்சாரும் இடைமடவாய் என்மொழிதின் றனக்கே
வெளியாகும் இரண்டரைநா ழிகைகடந்த போதே. 4

இங்ஙனம் எல்லாம் வல்லவர் ஓதுக என்றபடி உரைத்துளேன்.

அருட்பெருஞ்ஜோதி

கண்ணிகள்

135. திருவருள் முறையீட்டுக் கண்ணி

இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பற்றுநினைத் தெழுமிப் பாவிமனத் தீமையெலாம்
உற்று நினைக்கிலெனக் கூடிருவிப் போகுதடா. 1

எள்ளேத நின்னிடத்தே யெண்ணுகின்ற தோறுமதை
உள்ளே நினைக்கிலெனக் கூடிருவிப் போகுதடா. 2

துன்னுகின்ற தீமைன்பாற் சூழ்ந்துரைக்குந் தோறுமதை
உன்னுகின்ற போதிலெனக் கூடிருவிப் போகுதடா. 3

எள்ளுகின்ற தீமைன்பா லெண்ணுகின்ற தோறுமதை
உள்ளுகின்ற போதிலெனக் கூடிருவிப் போகுதடா. 4

மிக்க நிலைநிற்க விரும்பேன் பிழைகளெலாம்
ஒக்க நினைக்கிலெனக் கூடிருவிப் போகுதடா. 5

கோகோ வெனுங்கொடியேன் கூறியகுற் றங்களெலாம்
ஓகோ நினைக்கிலெனக் கூடிருவிப் போகுதடா. 6

பித்து மனக்கொடியேன் பேசியவன் சொல்லியெலாம்
ஒத்து நினைக்கிலெனக் கூடிருவிப் போகுதடா. 7

தோர்ந்து தெளிபாச் சிறியவனேன் தீமையெலாம்
ஓர்ந்து நினைக்கிலெனக் கூடிருவிப் போகுதடா. 8

நிறுத்தி யறியே னிகழ்த்தியவென் சொல்லை
உறுத்தி நினைக்கிலெனக் கூடிருவிப் போகுதடா. 9

தோன்றி விரியுமனத் துட்டனேன் வன்பிழையை
ஊன்றி நினைக்கிலெனக் கூடிருவிப் போகுதடா. 10

எண்ணினைப்ப தின்றினை யெள்ளி யுரைத்ததனை
உண்ணினைக்குந் தோறுமெனக் குள்ள முருகுதடா. 11

கடையவனேன் வைதகடுஞ் சொன்னினைக்குந் தோறும்
உடையவனே யென்னுடைய வுள்ள முருகுதடா. 12

பித்தனெனத் தீமை பிதற்றியதெண் ணுங்தோறும்
உத்தமனே யென்னுடைய வுள்ள முருகுதடா. 13

மன்றுடையாய் நின்னருளை வைதகொடுஞ் சொற்பொருளில்
ஒன்றை நினைக்கிலெனக் குள்ள முருகுதடா. 14

வெருவா மலையோ விளம்பியசொல் லெல்லாம்
ஒருவா நினைக்கிலெனக் குள்ள முருகுதடா. 15

புலைக்கொடியேன் புன்சொற் புகன்றதெண் ணுங்தோறும்
உலைக்கண்மெழு காகவென்ற னுள்ள முருகுதடா. 16

ஈடில் பெருந்தாயி னினியாய்நின் தண்ணருட்பால்
ஊடியசொல் லுன்னிலெனக் குள்ள முருகுதடா. 17

புரைத்தமன வஞ்சப் புலையேன் றிருவருளை
உரைத்தபிழை யெண்ணிலெனக் குள்ள முருகுதடா. 18

நாடி நினையா நவையுடையேன் புன்சொலெலாம்
ஓடி நினைக்கிலெனக் குள்ள முருகுதடா. 19

வெப்பில் கருணை விளக்கனையா யென்பிழையை
ஒப்பி நினைக்கிலெனக் குள்ள முருகுதடா. 20

அஞ்சலென் றுப்பின்பால் அடாதமொழி பேசியதை
அஞ்சி நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 21

மெய்யோர் சிறிதுமிலேன் வீண்மொழியா லூடியதை
ஐயோ நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 22

இத்தா ரணிக்குளெங்கு மில்லாத தீமைசெய்தேன்
அத்தா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 23

பொய்யால் விரிந்த புலைமனத்தேன் செய்பிழையை
ஐயா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 24

இப்பாவி நெஞ்சா லிழுக்குரைத்தே னுங்கதனை
அப்பா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 25

எண்ணுக் கொடுமையெலா மெண்ணிபுரைத் தேனதனை
அண்ணு நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 26

வெம்மான் மனத்து வினையேன் புகன்றதெலாம்
அம்மா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 27

எச்சோடு மில்லா திழிந்தேதன் பிழைகளெலாம்
அச்சோ நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 28

வந்தோடி மைமனத்து வஞ்சகனேன் வஞ்சமெலாம்
அந்தோ நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 29

ஓவாக் கொடியே னுரைத்த பிழைகளெலாம்
ஆவா நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 30

கரைசேர வெண்ணுக் கடையேன் பிழையை
அரசே நினைக்கிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 31

மருளுடையேன் வஞ்ச மனத்தீமை யெல்லாம்
அருளுடையா யெண்ணிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 32

ஈண்டவனேன் வன்சொல் இயம்பியதை யென்னுடைய
ஆண்டவனே யெண்ணிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 33

வற்புதனேன் வஞ்ச மனப்பிழையை மன்னுடும்
அற்புதனே யெண்ணிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 34

துன்புடையேன் புன்மொழிகள் தூற்றியதை யெவ்வுயிர்க்கும்
அன்புடையா யெண்ணிலெனக் கஞ்சுங் கலங்குதடா. 35

கோதிக்கின்ற வன்மொழியாற் கூறியதை யையோ
மதிக்கின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 36

சினங்கொண்ட போதெல்லாஞ் செப்பியவன் சொல்லை
மனங்கொள்ளுந் தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 37

செய்தநன்றி யெண்ணுச் சிறியவனே னின்னருளை
வைததெண்ணுந் தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 38

பொய்த்த மனத்தேதன் புகன்றகொடுஞ் சொற்களெலாம்
வைத்துநினைக் குந்தோறும் வாளிட் டறுக்குதடா. 39

பொங்குகின்ற தீமை புகன்றதெலா மெண்ணியெண்ணி
மங்குகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா 40

ஊடுகின்ற சொல்லா லுரைத்ததனை யெண்ணியெண்ணி
வாடுகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 41

உயங்குகின்றேன் வன்சொல் லுரைத்ததனை யெண்ணி
மயங்குகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 42

சொல்விளவு நோக்காதே சொன்னதலா மெண்ணுதாறும்
வல்வினையே னுள்ளகத்தே வாளிட் டறுக்குதடா. 43

மேல்விளவு நோக்காதே வேறுசொன்ன தெண்ணுதாறும்
மால்வினையே னுள்ளகத்தே வளிட்ட டறுக்குதடா. 44

விஞ்சகத்தா லந்தோ விளம்பியதை யெண்ணுதாறும்
வஞ்சகத்தே னுள்ளகத்தே வாளிட் டறுக்குதடா. 45

விலங்குகின்ற நெஞ்ச விளைவையெண்ணுந் தோறுமந்தோ
மலங்குகின்றே னுள்ளிடத்தே வாளிட் டறுக்குதடா. 46

தூய்மையிலா வன்மொழியாற் சொன்னவெலா மெண்ணுதாறும்
வாய்மையிலே னுள்ளகத்தே வாளிட் டறுக்குதடா. 47

கலிக்கின்ற வஞ்சக் கருத்தாற் கருதியதை
வலிக்கின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 48

நீட்டுகின்ற வஞ்ச நெடுஞ்சொலெலா நெஞ்சகத்தே
மாட்டுகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 49

பொருந்துகின்ற வஞ்சப் புதுமையெண்ணி யெண்ணியையோ
வருந்துகின்ற தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 50

வெருவிக்கும் வஞ்ச வெறுஞ்சொலெலாம் நெஞ்சில்
வருவிக்குந் தோறுமுள்ளே வாளிட் டறுக்குதடா. 51

ஊடும்போ துன்னை யுரைத்தவெலா நாயடியேன்
நாடும்போ தெல்லாமென் னுடி நடுங்குதடா. 52

வாய்க்கடையா வன்சொல் வழங்கியவென் வன்மனத்தை
நாய்க்கடையே னெண்ணுதாறும் நாடி நடுங்குதடா. 53

கன்றி யுரைத்த கடுஞ்சொற் கடுவையெலாம்
நன்றியிலே னெண்ணுதாறும் நாடி நடுங்குதடா. 54

புன்மையினால் வன்சொற் புகன்றபுலத் தன்மையெலாம்
நன்மையிலேன் எண்ணுதாறும் நாடி நடுங்குதடா. 55

ஊனெண்ணும் வஞ்ச வுளத்தா லுரைத்தவெலாம்
நானெண்ணுந் தோறுமென்ற னுடி நடுங்குதடா. 56

வஞ்சனையா லஞ்சாது வன்சொல் புகன்றவெலாம்
நஞ்சனையே னெண்ணுதாறும் நாடி நடுங்குதடா. 57

கோணநெடு நெஞ்சக் குரங்காற் குதித்தவிலாம்
நாணமிலே னெண்ணுதொறும் நாடி நடுங்குதடா. 58

ஊனமிலா நின்னை யுரைத்தகொடுஞ் சொல்லையெலாம்
ஞானமிலே னெண்ணுதொறும் நாடி நடுங்குதடா. 59

எற்றே மதியிலியே னெண்ணு துரைத்ததனைச்
சற்றே நினைத்திடினும் தாது கலங்குதடா. 60

இனியேது செய்வே னிகழ்ந்துரைத்த சொல்லைத்
தனியே நினைத்திடினுந் தாது கலங்குதடா. 61

நாயனையே னெண்ணுமை னலங்கியவன் சொல்லையெலாந்
தாயனையா யெண்ணுதொறுந் தாது கலங்குதடா. 62

நிற்குருகா வஞ்ச நினைவால் நினைத்தவிலாஞ்
சற்குருவே யெண்ணுதொறுந் தாது கலங்குதடா. 63

வெங்கரகில் வீழும் விளைவால் விளம்பியதை
என்னரசே யெண்ணுதொறு மென்னை விழுங்குதடா. 64

நன்கறியேன் வாளா நவின்ற நவையனைத்தும்
என்குருவே யெண்ணுதொறும் என்னை விழுங்குதடா. 65

ஆவ தறியா தடியே னிகழ்ந்தகொடும்
பாவ நினைக்கிற் பகிரன் றலைக்குதடா. 66

வந்திப் பறியேன் வழங்கியவன் சொல்லை யெலாம்
சிந்திக்கி லுள்ளே திடுக்கிட் டழுங்குதடா. 67

குற்ற நினைத்த கொடுஞ்சொலெலாமென் னுளத்தே
பற்றி நினைக்கிற் பயமா யிருக்குதடா. 68

எள்ளுகின்ற தீமை யெடுத்துரைத்தே னுங்கதனை
விள்ளுகின்ற தோறுமுள்ளம் வெந்து வெதும்புதடா. 69

அருட்பெருஞ்ஜோதி

136. திருவடிக்கண்ணி

இராகம் - நீலாம்புரி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

மின்னிடையாள் காண விளங்குமன்றி லாடுகின்றாய்
என்னுடையா யுன்றன் இணையடிதான் நோவாதா. 1

வன்னமுதே யின்ப மலியமன்றி லாடுகின்றீப்
என்னமுதே யுன்றன் இணையடிதான் சோவாதா. 2

நண்ணியமெய் யன்பர் நயக்கமன்றி லாடுகின்றீப்
புண்ணியனே யுன்றனது பொன்னடிதான் சோவாதா. 3

அன்பரின்பங் கொள்ளுகட மம்பலத்தே யாடுகின்றீப்
இன்புருவா முன்றன் இணையடிதான் சோவாதா. 4

நாலுணர்வா நுண்ணுணர்வி லேக்கநட மாடுகின்றீப்
மாலறியா வுன்றன் மலர்ப்பாதம் சோவாதா. 5

எள்ளலற வம்பலத்தே யின்பநட மாடுகின்றீப்
வள்ளலே யுன்றன் மலரடிதான் சோவாதா. 6

சைவ நிலைத்துத் தழைத்தோங்க வாடுகின்றீப்
தெய்வ மணியே திருவடிதான் சோவாதா. 7

எல்லாரு மின்புற் றிருக்கநட மாடுகின்றீப்
வல்லாரின் வல்லாய் மலர்ப்பாதம் சோவாதா. 8

அவமே கழிந்தின்பம் அன்பர்கொள வாடுகின்றீப்
சிவமே நினது திருவடிதான் சோவாதா. 9

தற்பரமா மன்றிற் றனிநடன மாடுகின்றீப்
சிற்பரமே யுன்றன் திருமேனி சோவாதா. 10

வில்வவேர் மாலை மிளிர்ந்தசைய வாடுகின்றீய
செல்வமே யுன்றன் திருமேனி சோவாதா. 11

அருட்பெருஞ்ஜோதி

137. பேரன்புக்கண்ணிகள்

இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

கற்றதென் றுஞ் சாகாத கல்வியென்று கண்டுகொண்டின்
அற்புதச்சிற் றம்பலத்தில் அன்புவைத்தேன் ஐயாவே. 1

ஈடணைகள் நீக்கிநமக் கின்பளிக்கு மென்றுமன்றில்
ஆடுந் திருவடிக்கே ஆசைவைத்தேன் ஐயாவே. 2

ஞானந்த மெய்தா நலம்பெறவே யெண்ணிமன்றில்
ஆனந்த நாடகத்துக் கன்புவைத்தேன் ஐயாவே. 3

வாடலறச் சாகா வரங்கொடுக்கு மென்றுமன்றில்
ஆடலடிப் பொன்மலர்க்கே அன்புவைத்தேன் ஐயாவே. 4

போற்புறவே பொன்னுப் பொருளளிக்கு மென்றுமன்றில்
அற்புதப்பொற் சேவடிக்கே அன்புவைத்தேன் ஐயாவே. 5

ஈனமறுத் தென்றும் இறவாமை நல்குமென்றே
ஞானமணி மன்றிடத்தே நண்புவைத்தேன் ஐயாவே. 6

ஓர்துணைநின் பொன்னடியென் றுன்னுகின்றே னுன்னையன்றி
யார்துணையும் வேண்டேனென் அன்புடைய ஐயாவே. 7

பூசைசெய்து பெற்றவன்றன் பொன்னடிமே லன்றியயல்
ஆசையொன்று மில்லையெனக் கன்புடைய ஐயாவே. 8

இச்சைநின்மே லன்றியெனக் கெள்ளளவும் வேறுமொன்றில்
இச்சையிலை நின்னருளை யென்னருமை ஐயாவே. 9

எப்படிநின் னுள்ள மிருக்கின்ற தென்னளவில்
அப்படிநீ செய்கவெனக் கன்புடைய ஐயாவே. 10

எவ்வண்ணம் நின்கருத்திங் கென்னளவி லெண்ணியதோ
அவ்வண்ணஞ் செய்கவெனக் கன்புடைய ஐயாவே. 11

தேசுறுநின் றண்ணருளாந் தெள்ளமுதங் கொள்ளவுள்ளே
ஆசைபொங்கு கின்றதெனக் கன்புடைய ஐயாவே. 12

மாசறுநின் பொன்னருளா மாமணிபெற் றுடவுள்ளே
ஆசைபொங்கு கின்றதெனக் கன்புடைய ஐயாவே. 13

நாசமிலா நின்னருளாம் ஞானமருந் துண்ணவுள்ளே
ஆசைபொங்கு கின்றதெனக் கன்புடைய ஐயாவே. 14

அருட்பெருஞ்ஜோதி

138. நெஞ்சொடு கிளத்தல்

கலித்தாழிசை

இராகம் - புன்னகவாளி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

அடங்குநா ளில்லா தமர்ந்தாணைக் காணற்கே
தொடங்கு நாள் நல்லதன்றே — நெஞ்சே
தொடங்கு நாள் நல்லதன்றே. 1

வல்லவ ரெல்லாமும் வல்லானைக் காணற்கே
நல்லநா ளெண்ணிய நாள் — நெஞ்சே
நல்லநா ளெண்ணிய நாள். 2

காலங் கடந்த கடவுளைக் காணற்குக்
காலங் கருதுவ தென் — நெஞ்சே
காலங் கருதுவ தென். 3

ஆல மமுதாக்கு மண்ணலைக் காணற்குக்
காலங் கருதுவ தென் — நெஞ்சே
காலங் கருதுவ தென். 4

தடையாது மில்லாத் தலைவனைக் காணற்கே
தடையாது மில்லைகண் டாய் — நெஞ்சே
தடையாது மில்லைகண் டாய். 5

கையு ளமுதத்தை வாயு ளமுதாக்கப்
பையு ளுனக்கென் னையோ — நெஞ்சே
பையு ளுனக்கென் னையோ. 6

என்னுயிர் நாதனை யான்கண் டுணைதற்கே
உன்னுவ தென்னைகண் டாய் — நெஞ்சே
உன்னுவ தென்னைகண் டாய். 7

நான்பெற்ற செல்வத்தை நான்பற்றிக் கொள்ளற்கே
என்பற்று வாயென்ப தார் — நெஞ்சே
என்பற்று வாயென்ப தார். 8

1. பையுள் என்பது—வருத்தம்.

தத்துவா தீதத் தலைவனைக் காணற்குத்
தத்துவ முன்னுவ தேன் — நெஞ்சே
தத்துவ முன்னுவ தேன். 9

ஒக்க வழுதத்தை யுண்டோ மினிச்சற்றும்
விக்கல் வராது கண்டாய் — நெஞ்சே
விக்கல் வராது கண்டாய். 10

அருட்பெருஞ்ஜோதி

139. மெய்யருள் வியப்பு

வர்க்கமாலை என்னும் காலிப்பாட்டு

இராகம் - செஞ்சுருட்டி - ரூபகதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

எனக்கு முனக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ
இந்தப் பொருத்தம் உலகில் பிறருக் கெய்தும் பொருத்தமோ.

சரணங்கள்

தனக்கு நிகரிங் கில்லா துயர்ந்த தம்ப மொன்றதே
தாவிப் போகப் போக நூலின் தாத்தில் நின்றதே
கனக்கத் திகைப்புற் றங்கே நானுங் கலங்கி வருந்தவே
கலக்க நீக்கித் தூக்கி வைத்தாய் நிலைபொருந்தவே. எனக்கு 1

இங்கோர் மலையி னடிவி லுயர்ந்த தம்ப நணுகவே
ஏறிப் போகப் போக நூலி னிழைபோல் நுணுகவே
அங்கே திகைத்து நடுங்கும் போதென் னடுக்க நீக்கியே
அதன்மே லுயர்ந்த நிலையில் வைத்தா யடிமை யாக்கியே. எனக்கு 2

இரவிற் பெரிய வெள்ளம் பரவி யெங்குந் தயங்கவே
யானுஞ் சிலரும் படகிலேறி யேம யங்கவே
விரவிற் றுனித்தங் கென்னை பொருகன் மேட்டி லேற்றியே
விண்ணி லுயர்ந்த மாடத் திருக்க விதித்தாய் போற்றியே. எனக்கு 3

மேலைப் பாற்சிவ கங்கை யென்னுமோர் தீர்த்தந் தன்னையே
மேவிப் படியிற் றவறி நீரில் விழுந்த வென்னையே
எலத் துகிலு முடம்பு நனையா தெடுத்தே யொன்றே
எடுத்தென் கரத்திற் பொற்பூ ணணிந்த இறைவ னீயன்றே. எனக்கு 4

என்ன துடலு முயிரும் பொருளும் நின்ன தல்லதோ
எந்தா யிதனைப் பெறுக வெனநா னின்று சொல்லதோ
சின்ன வயதி லென்னை யாண்ட திறத்தை நினைக்குதே
சிந்தை நினைக்கக் கண்ணீர் பெருக்கி யுடம்பை நனைக்குதே. எனக்கு 5

அப்பா நின்னை யன்றி யெங்கும் அணைப்பா ரில்லையே
அந்தோ நின்னை யன்றி யெங்கும் அருள்வா ரில்லையே
எப்பா லவர்க்கு நின்னை யன்றி யிகழ்மை யில்லையே
எனக்கு நின்மே லன்றி யுலகி லிச்சை யில்லையே. எனக்கு 6

அரசே யுன்னை யணைக்க வெனக்குள் ஆசை பொங்குதே
அணைப்போ மென்னு முண்மையா லென் ஆவி தங்குதே
விரைசேர் பாதம் பிடிக்க வென்கை விரைந்து நீளுதே
மேவிப் பிடித்துக் கொள்ளுந் தோறும் உவகை யாளுதே. எனக்கு 7

தனியன் மேல்நீ வைத்த தயவு தாய்க்கு மில்லையே
தகுமைந் தொழிலும் வேண்டுந் தோறுந் தருதல் வல்லையே
வினவு பெனக்கென் னுயிரைப் பார்க்க மிகவு நல்லையே
மிகவு நான்செய் குற்றங் குறித்து விடுவா யல்லையே. எனக்கு 8

என்னை யாண்ட வண்ண மெண்ணி னுள்ள முருகுதே
என்னை விழுங்கி பெங்கு மின்ப வெள்ளம் பெருகுதே
உன்ன வுன்ன மனமு முயிரு முடம்பு மினிக்குதே
உன்னுடென்னை வேறென்றெண்ணின் மிகவும்பனிக்குதே. எனக்கு 9

உன்பே ரருளை நினைக்குந் தோறு முடம்பு பொடிக்குதே
உண்டு பசிதீர்ந் தாற்போற் காதல் மிகவுந் தடிக்குதே
அன்பே யமைபு மென்ற பெரியர் வார்த்தை போயிற்றே
அன்போ ரணுவு மில்லா வெனக்கிங் கருள லாயிற்றே. எனக்கு 10

நினைக்க நினைக்கத் தித்திப் பெனது நினைவிற் கொடுக்குதே
நின்பா லன்றிப் பிறர்பாற் செல்ல நெஞ்ச நடுக்குதே
எனைத்துன் பொழித்தாட் கொண்ட நின்னை யன்னை பென்பனே
எந்தா யன்பி லேனின் னடிக்கு முன்னை யன்பனே. எனக்கு 11

உன்னை மறக்கி லெந்தா யுயிரென் னுடம்பில் வாழுமோ
உன்பா லன்றிப் பிறர்பா லென்ற னுள்ளஞ் சூழுமோ
என்னைக் கொடுக்க வாங்கிக் கொண்ட தென்ன கருதியோ
எந்தாய் நின்னைக் கொடுக்க வென்பா லின்று வருதியோ. எனக்கு 12

நேநோள் முபன்றும் காண்டற் கரிய நிலையைக் காட்டியே
நிறைந்தென் னகத்தும் புறத்துஞ் சூழ்ந்தா பொளியை காட்டியே
நடிகா டியபின் னருளைக் கென்மே லென்ன காட்டமோ
நாய்க்குத் தவிசிட் டனைநின் றனக்கிங் கிதுவோ ராட்டமோ. எனக்கு 13

நாகா திபனு மயனு மாலு நறுமு றென்னவே
ஞான வமுத மளித்தாய் நாலு முண்டு துன்னவே
சாகாக் கலையை யெனக்குப் பயிற்றித் தந்த தயவையே
சாற்றற் கரிது நினக்கென் கொடுப்ப தேதும் வியவையே. எனக்கு 14

யாது கருதி யென்னை யாண்ட தைய வையமோ
யானுன் னடிப்பொற் றுணைகட் குவந்து தொழும்பு செய்யமோ
ஓது கடவுட் கூட்ட மனைத்து மடிமை யல்லமோ
உடையாயவர்க்குள் ளெனையு மொருவ னென்று சொல்லமோ. எனக்கு 15

தலையுங் காலுந் திரித்து கோக்கித் தருக்கி னேனையே
தாங்கித் தெரித்த தயவை நினைக்கி லுருக்கு துனையே
புலையுங் கொலையுந் தவிர்ந்த நெறியிற் புனிதர் மதிக்கவே
புகுவித் தாயை யென்வாய் துடிப்ப தேத்தித் துதிக்கவே. எனக்கு 16

தாயே யெனக்குந் தயவு புரிந்த கருணைத் தந்தையே
தனியே நின்னை நினைக்கக் கிளர்வ தெனது சிந்தையே
காயே னெண்ண மனைத்து முடித்துக் கொடுத்த பண்பனே
கான்செய் தவத்தா லெனக்குக் கிடைத்த கல்ல நண்பனே. எனக்கு 17

எரு நிலையில் விரைந்து விரைந்திங் கென்னை யேற்றியே
இறங்கா திறங்கும் படிகண் முழுது மெடுத்தாய் போற்றியே
மாறுக் கருணை யென்மேல் வைக்க வந்த தென்னையோ
மதியி லெனினின் னருட்குச் செய்த தவந்தான் முன்னையோ. எனக்கு 18

இடமும் வலமு மிதுவென் றறியா திருந்த வென்னையே
எல்லா மறிவித் தருள்செய் கருணை யென்னை யென்னையே
நடமு நடஞ்செய் யிடமு மெனக்கு நன்று காட்டியே
நாயி னேனை வளர்க்கின் றுய்ந்தல் லமுத மூட்டியே. எனக்கு 19

விதுவுங் கதிரு மிதுவென் றறியும் விளக்க மின்றியே
விழித்து மயங்கி னேன்பாற் பெரிய கருணை யொன்றியே
அதுவு மதுவு மிதுவென் றெனக்குள் ளறியக் காட்டியே
அடிய னேனை வளர்க்கின் றுய்ந்தல் லமுத மூட்டியே. எனக்கு 20

இருளு மொளியும் வந்த வகையை யெண்ணி யெண்ணியே
இரவும் பகலு மயங்கி னேனை யினித நண்ணியே
அருளும் பொருளுங் கொடுத்து மயக்க நீக்கிக் காட்டியே
அன்பா லென்னை வளர்க்கின் றுய்கல் லழுத மூட்டியே. எனக்கு 21

அண்டத் தகத்தும் புறத்து முன்ற னுணை செல்லுதே
அவனே யெல்லாம் வல்லா னென்று மறைகள் சொல்லுதே
பிண்டத் தகத்தும் புறத்து நிறைந்த பெரிய ஜோதியே
பேயே னளவில் விளங்கு கின்ற தென்ன நீதியே. எனக்கு 22

கருணை நிதியின் றன்னைக் காணக் கண்கள் துடிக்குதே
காண்போ மென்று நினைக்குந் தோறும் உடம்பு பொடிக்குதே
அருணை டகஞ்செய் பதங்கள் பாடி யாட விரைவதே
ஆடும் பொதுவை நினைக்க நினைக்க நெஞ்சங் கரைவதே. எனக்கு 23

அருளார் ஜோதி யென்னுள் விளங்க வளித்த காலத்தே
அடியேன் குறைகள் யாவுந் தவிர்ந்த திந்த ஞாலத்தே
பொருளா யெனையு நினைக்க வந்த புதுமை யென்னையோ
பொன்னென் றைய மதிப்ப தெதவாத் துரும்பு தன்னையோ. எனக்கு 24

எனக்குள் நீயு முனக்குள் நானு மிருக்குந் தன்மையே
இன்று காட்டிக் கலக்கந் தவிர்த்துக் கொடுத்தாய் நன்மையே
தனக்குள் ளதுதந் தலைவர்க் குளதென் றறிஞர் சொல்வதே
சரியென் றெண்ணி னெது மனது களித்து வெல்வதே. எனக்கு 25

கருணைப் பொதுவிற் பெரிய ஜோதித் தருவிற் கனித்ததே
கனித்த பெரிய தனித்த கனியென் கருத்து ளினித்ததே
தருணத் துண்டு மகிழ்வுற் றேனம் மகிழ்ச்சி சொல்லவே
தனித்துக் கரைந்த வெனது கருத்தின் றரத்த தல்லவே. எனக்கு 26

என்னை குயிர்க்குத் துணைவ நின்னை யான் துதிக்கவே
என்ன தவஞ்செய் தேன்மூன் னுலகு ளோர் மதிக்கவே
பொன்னுர் புயனு மயனும் பிறரும் பொருந்த லரியதே
புலைய னேனுக் களித்த கருணை மிகவும் பெரியதே. எனக்கு 27

என்கண் மணியு ளிருக்குந் தலைவ நின்னைக் காணவே
என்ன தவஞ்செய் தேன்முன் னயனு மரியு நாணவே
புன்க ணெழித்துத் தெள்ளா ரமுதம் புகட்டி யென்னையே
பொருளா யெண்ணி வளர்க்கின் றுய்நீ யெனக்கோ ரன்னையே. எனக்கு 28

அறிவி லென்செய் குற்ற மனைத்தும் பொறுத்த தன்றியே
அழுது மனித்தா யார்செய் வார்க ளிந்த நன்றியே
செறி விலாத பொறியு மனமுந் செறிந்து நிற்கவே
செய்தாய் மேலுந் தெரித்தாய் சாகாக் கல்வி கற்கவே. எனக்கு 29

ஒருநா ழிகையில் யோக நிலையை யுணர்த்தி மாலையே
யோகப் பயனை முழுது மளித்தாய் மறுநாட் காலையே
திருநாள் நிலையுந் தீர்த்த நிலையுந் தெய்வ நிலையுமே
சிறியே னறியக் காட்டித் தெரித்தாய் வேதக் கலையுமே. எனக்கு 30

அண்டப் பரப்பின் திறங்க ளனைத்து மறிய வேண்டியே
ஆசைப் பட்ட தறிந்து தெரித்தா யறிவைத் தூண்டியே
பிண்டத் துயிர்கள் பொருத்தும் வகையும் பிண்டந் தன்னையே
பிரியும் வகையும் பிரியா வகையுந் தெரித்தாய் பின்னையே. எனக்கு 31

வேதா கமங்கள் புகன்ற விரிவை யொன்றொன் றுகவே
விளங்க விரைந்து தெரித்தாய் பயிலு மாசை போகவே
பூதா திகளைப் பொருத்தும் பகுதிப் பொருத்த முற்றுமே
பொய்மை நீக்கிக் காணக் காட்டித் தெரித்தாய் மற்றுமே. எனக்கு 32

வள்ளா லுன்னைப் பாடப் பாட வாய் மணக்குதே
வஞ்ச வினைக ளெனைவிட் டோடித் தலை வணக்குதே
எள்ளா துனது புகழைக் கேட்டுச் செவி நயக்குதே
எந்தாய் தயவை யெண்ணுந் தோறும் உளம் வியக்குதே. எனக்கு 33

இறைவா நின்னைக் கனவி லேனும் யான் மறப்பதே
எந்தா யுலகத் தவர்கள் போல்நா னினி யிறப்பதே
மறைவா சகமும் பொருளும் பயனு மதிக்கு மதியிலே
வாய்க்கக் கருணை புரிந்து வைத்தா யுயர்ந்த பதியிலே. எனக்கு 34

தலைவா வெனக்குக் கருணை யமுதந் தரவித் தலத்திலே
தவஞ்செய் தேனத் தவமு முன்ற னருள் வலத்திலே
அலைவா ரிதியிற் றுரும்பு போல அயனு மாலுமே
அலைய வெனக்கே யளிக்கின் றுய்ந்தே மெலு மேலுமே. எனக்கு 35

உடையா யெனக்குப் புரிந்த தயவை யுன்ன வுன்னவே
உடம்பு பூரிக் கின்ற தொளிர்பொன் மலைய தென்னவே
தடையா தினியுண் மூல மலத்தின் தடையும் போயிற்றே
சமய விகற்ப மெல்லா நீங்கிச் சமம தாயிற்றே. எனக்கு 36

மயங்குந் தோறு முள்ளும் புறத்து மயக்க நீக்கியே
மகிழ்விக் கின்று யொரு காலுன்றி யொருகாற் றூக்கியே
உயங்கு மலங்க ளொந்தும் பசையற் றொழிந்து வெந்ததே
உன்பே ரருட்பொற் ஜோதி வாய்க்குந் தருணம் வந்ததே. எனக்கு 37

எனக்கு நின்னைப் போல நுதற்கண் ஈந்து மதனையே
எரிப்பித் தாய்ப்பின் னெழுப்பிக் கொடுத்தா யருவ மதனையே
சினக்குங் கூற்றை யுதைப்பித் தொழித்துச் சிதைவு மாற்றியே
தேவர் கற்பம் பலவுங் காணச் செய்தாய் போற்றியே. எனக்கு 38

கள்ள மறியே னின்னுற் கண்ட காட்சி யொன்றுமே
கருத்தி லுளது வேறோர் விடயங் காணே னென்றுமே
உள்ள துரைக்கின் றேனின் னடிமே லாணை முன்னையே
உள்ளே விளங்கிக் காண்கின் றுய்க்கிங் கொளிப்ப தென்னையே. எனக்கு

என்னை யடிமை கொண்டாய் நானு னினக்கு நல்லனே
எல்லாம் வல்ல தலைவ நினக்கு நல்லன் அல்லனே
முன்னை வினைக ளனைத்து நீக்கி யுழுத மூட்டியே
மூவர்க் கரிய நிலையில் வைத்தா யென்னை காட்டியே. எனக்கு 40

ஜோதி மலையிற் கண்டே னின்னைக் கண் களிக்கவே
துய்த்தே னமுத மகத்தும் புறத்தும் பரிம ளிக்கவே
ஓதி யுணர்தற் கரிய பெரிய வுணர்வை நண்ணியே
ஓதா தணைத்து முணர்கின் றேனின் னருளை யெண்ணியே. எனக்கு 41

ஏழு நிலைக ளோங்குந் தெய்வ மாட மொன்றிலே
ஏற்றிக் களிக்க வைத்தா யதன்மே லிலங்கு குன்றிலே
வாழும் பரிசுங் கவிக்குங் கொடையு மதிக்குந் தூசுமே
மகிழ்ந்துகொடுத்துப் பின்னுங்கொடுத்தாய் மணிப்பொற்காசுமே. எனக்கு

இந்த வுலகி லுள்ளார் பலரு மிகவு நன்மையே
என்பாற் செய்ய வைத்தா யிதுநின் னருளின் தன்மையே
அந்த வுலகி லுள்ளார் பலரு மென்னை நோக்கியே
அப்பா வாழி யெனவும் புரிந்தா யடிமை யாக்கியே. எனக்கு 43

அழியாக் கருணை யமுத வடிவி னேங்குஞ் ஜோதியே
அரசே யெனக்குள் விளங்கு மாதி யாம னுதியே
ஒழியாத் துயரை யொழித்த பெரிய கருணை யாளனே
ஒன்று யொன்றி லுபய மாகி யொளிருந் தாளனே. எனக்கு 44

பாலுந் தேனுங் கலந்த தென்ன வென்னு ளினிக்கவே
பரம ஞான வமுத மளிக்கின் றுய் தனிக்கவே
ஏலு முயிர்க ளெல்லா நினக்குப் பொதுவ தென்பரே
இன்று நோக்கி யோர வார னென்ப ரன்பரே. எனக்கு 45

ஐயா நான்செய் பிழைக ளேழு கடலிற் பெரியதே
அனைத்தும் பொறுத்த தயவு பிறருக் கரிய தரியதே
மெய்யா நீசெய் யுதவிக் கொருகைம் மாறு வேண்டுமே
வேண்டா தென்ன வறிந்து மெனக்குள் ளாசை தூண்டுமே. எனக்கு 46

பூத வெளியி னடமும் பகுதி வெளியி னட்டமும்
போக வெளியிற் கூத்தும் யோக வெளியு ளாட்டமும்
நாத வெளியிற் குனிப்பும் பரம நாத நடமுமே
நன்று காட்டிக் கொடுத்தா யென்று நவியாத் திடமுமே. எனக்கு 47

எட்டு மிரண்டு மிதுவென் றெனக்குச் சுட்டிக் காட்டியே
எட்டா நிலையி லிருக்கப் புரிந்தா யிட்டுக் கூட்டியே
துட்ட வினையைத் தீர்த்து ஞானச் சுடருள் ளேற்றியே
தூண்டா தென்றும் விளங்க வைத்தா யுண்மை சாற்றியே. எனக்கு 48

அருளாம் பெரிய வெளிக்குட் ஜோதி வடிவ னுகியே
அரசு செலுத்துந் தனித்த தலைமைப் பரம யோகியே
பொருளா யெனையு முளங்கொண் டளித்த புனித நாதனே
போற்று நாத முடிவில் நடஞ்செய் கமல பாதனே. எனக்கு 49

உருவு மருவு முபய நிலைபு முடைய நித்தனே
உயிருள் நிறைந்த தலைவ வெல்லாம் வல்ல சித்தனே
மருவுந் துரிய வரையுள் நிறைந்து வயங்கும் பரமமே
மன்றிற் பரமா னந்த நடஞ்செய் கின்ற பிரமமே. எனக்கு 50

அன்னே யென்னை யாண்ட தலைவ வடியே னுள்ளமே
அமர்ந்த துணைவ வெனக்குக் கிடைத்த வமுத வெள்ளமே
பொன்னே பொன்னிற் பொலிந்து நிறைந்த புனித வானமே
புனித வானத் துள்ளே விளங்கும் புராண ஞானமே. எனக்கு 51

சமயத் தெய்வம் பலவுஞ் சிறிய துரும்ப தென்னவே
சாற்றப் புகினுஞ் சாலா வருளின் பெருமை யுன்னவே
அமைபு மண்டப் பகுதி பலவு மணுவின் பொடியிலே
அனந்தத்தொன்றென் றுரைத்துஞ்சாலா நின்பொன் னடியிலே. எனக்கு

அப்பா நின்னை யடைந்த வென்னை யொப்பா ரியாவரே
ஆரு றகன்ற நிலையை யடைந்தா னென்பர் தேவரே
இப்பா ராதி பூத மடங்குங் காலு நின்னையே
ஏத்திக் களித்து வாழ்வே னிதற்கு மைய மென்னையே. எனக்கு 53

என்னை மறைத்த மறப்பை நீக்கி யென்னைக் காட்டியே
இறைவ நினையுங் காட்டி வளர்த்தா யமுத மூட்டியே
முன்னை மறைக்கு மெட்டா நினது பெருமை தன்னையே
முன்னி மகிழ்ந்து பாடப் புரிந்தா யடிமை யென்னையே. எனக்கு 54

எண்ணுந் தோறும் எண்ணுந் தோறும் என்னு ளினிக்குதே
இறைவ நின்னைப் பாட நாவில் அமுதஞ் சனிக்குதே
கண்ணுங் கருத்து நின்பா லன்றிப் பிறர்பாற் செல்லுமோ
கண்டே னுன்னை யினிமே லென்னை மாயை வெல்லுமோ. எனக்கு 55

விந்தோ நாத வெளியுங் கடந்து மேலு நீளுதே
மேலே வெளியுங் கடந்துன் னடிய ராணை யாளுதே
அந்தோ வுனது பெருமை சிறிது மறிவா ரில்லையே
அறிந்தா ருலகி லின்ப வடிவ மாவ தொல்லையே. எனக்கு 56

இறுகப் பிடித்துக் கொண்டேன் பதத்தை யினிதான் விடுவதோ
எந்தாய் பாதம் பிடித்த கைபால் வேறு தொடுவதோ
குறுகப் பயந்து கூற்று மோடிக் குலைந்து போயிற்றே
கோவே யுன்ற னருட்சிற் ஜோதி யென்ன தாயிற்றே. எனக்கு 57

காய்க்கும் பருவந் தன்னைப் பழுத்த பருவ மாக்கியே
கனக சபையி னடிக்கின் ருயோர் காலைத் தூக்கியே
காய்க்குத் தவிசிட் டொருபொன் முடியு நன்று சூட்டியே
நட்ட நடுவே வைத்தாய் கருணை யமுத மூட்டியே. எனக்கு 58

கல்லை நோக்கிக் கனிந்து பழுத்த கனிய தாக்கியே
கனக சபையி னடிக்கின் ருயோர் காலைத் தூக்கியே
புல்லை முடிக்கு மணிகின் ருபென் புன்சொன் மாலையே
புனைந்தென் னுளத்தி லிருக்கப்புரிந்தாய் நின்பொற் காலையே. எனக்கு 59

சாதல் பிறத்த லென்னு மவத்தை தவிர்த்துக் காலையே
தனித்துன் னருளி னமுதம் புகட்டிக் கொடுத்தாய் மேலையே
ஓத வுணர்த்த லுவத்த லெனக்கு நின்பொற் பாதமே
உலக விடயக் காட்டிற் செல்லா தெனது போதமே. எனக்கு 60

அருளும் பொருளும் பெற்றே னடிய னெனி னாணுமே
அஞ்சே னன்மை வினைகட் கொருசிற் றளவு தேணுமே
இருளு நிறத்துக் கூற்றைத் துரத்தி யருட்சிற் ஜோதியே
என்ற னகத்தும் புறத்தும் விளங்கு கின்ற வாதியே. எனக்கு 61

காமக் கடலைக் கடந்து வெகுளிக் கடலை நீந்தினேன்
கழிய மயக்கக் கடலைத் தாண்டி யடியை யேந்தினேன்
சேமப் பொதுவி னடங்கண் டெனது சிறுமை நீங்கினேன்
சிற்றம் பலத்து நடங்கண் டுவந்து மிகவு மோங்கினேன். எனக்கு 62

தாங்கல் விதித வெண்டு மெனக்குச் சமய தாயிற்றே
சகத்தில் வழங்கு மாயை வழக்குத் தவிர்த்து போயிற்றே
எங்கள் சனித்த வெண்டு பின்றி யிளைப்பு நீங்கினேன்
எந்தாய்கருணை யமுதுண்டின்பப் பொருப்பி லோங்கினேன். எனக்கு 63

உறவு பகையென் றிரண்டு மெனக்கிங் கொன்ற தாயிற்றே
ஒன்றென் றிரண்டென் றளரும் பேத மோடிப் போயிற்றே
மறைவு நினைவென் றென்னை வலித்த வலிப்பு நீங்கினேன்
மன்றிற் பாமா னந்த நடங்கண் டின்ப மோங்கினேன். எனக்கு 64

உன்னைக் கண்டு கொண்டேன் கண்ட வுடனிங் கென்னையே
உலக மெல்லாங் கண்டு கொண்ட வுவப்பி தென்னையே
என்னைக் கண்டு கொண்ட காலத் திறைவ நின்னையே
யாருங் கண்டு கொண்டா ரில்லை யாங்க தென்னையே. எனக்கு 65

மலத்திற் புழுத்த புழுவு நிகர மாட்டா தாயினேன்
வள்ளல் கருணை யமுதுண் டின்ப நாட்டா னுயினேன்
குலத்திற் குறியிற் குணத்திற் பெருமை கொள்ளா தாயினேன்
கோதி லமுதுண் டெல்லா நலமு முள்ளா னுயினேன். எனக்கு 66

கடைய நாயிற் கடைய னுப்குங் கடைய னுயினேன்
கருணை யமுதுண் டின்ப நாட்டிற் குடைய னுயினேன்
விடயக் காட்டி லோடித் திரிந்த வெள்ளை நாயினேன்
விமலா நினக்கு மிகவுஞ் சொந்தப் பிள்ளை யாயினேன். எனக்கு 67

அயனு மாலுத் தேடித் தேடி யலர்ந்து போயினர்
அந்தோ இவன்முன் செய்த தவம்யா தென்ப ராயினர்
மயனுங் கருத மாட்டாத் தவள மாடத் துச்சியே
வயங்கு மணிமேல் வைத்தாய் சிறிய நாயை மெச்சியே. எனக்கு 68

வல்லா யுனது கருணை யழுதென் வாய்க்கு வந்ததே
மலமு மாயைக் குலமு வினையு முழுதும் வெந்ததே
எல்லா நலமு மான வதனை யுண்டு வந்ததே
இறவா தென்று மோங்கும் வடிவ மெனக்கு வந்ததே. எனக்கு 69

சிற்றம் பலத்தி னடங்கண் டவர்காற் பொடிகள் புல்லதே
சிருட்டி முதலோ ரைந்து தொழிலுஞ் செய்ய வல்லதே
பற்றம் பலத்தில் வைத்தார் தம்மைப் பணியும் பத்தரே
பரம பதத்த ரென்று பகர்வர் பரம முத்தரே. எனக்கு 70

சிருட்டி முதலோ ரைந்து தொழிலுஞ் செய்யென் றென்னையே
செல்வப் பிள்ளை யாக்கி வளர்க்கின் முயி தென்னையே
தெருட்டித் திருப்பொற் பதத்தைக் காட்டி யழுத மூட்டியே
திசழ நுவைத் தாய்சன் மார்க்க சங்கங் கூட்டியே. எனக்கு 71

அடிய னுக்கிப் பிள்ளை யாக்கி யெய னுக்கியே
அடிக ளாக்கிக் கொண்டா யென்னை யவல நீக்கியே
படியு ளோரும் வானு ளோரு மிதனை நோக்கியே
பதியு மோர வார னென்பர் பரிவு தெக்கியே. எனக்கு 72

அண்ணு வெனையும் பொருளென் றெண்ணி யிரவும் பகலுமே
அகத்தும் புறத்துந் திரிகின் முயிவ் வுலகென் புகலுமே
தண்ணு ரமுத மிகவு மெனக்குத் தந்த தன்றியே
தனியே யின்னுந் தருகின் முயென் னறிவி னென்றியே. எனக்கு 73

வேதா கமத்தி னடியு நடுவு முடியு மற்றுமே
வெட்ட வெளிய தாகி விளங்கக் கண்டேன் முற்றுமே
நாதா சிறிய நாய்க்குங் கடையேன் முற்றுங் கண்டதே
நாளை கண்டே னெந்தாய் கருணை நாட்டங் கண்டதே. எனக்கு 74

புழுவிற் புழுத்த புழுவு நிகரப் போதா நாயினேன்
பொதுவில் நடிக்குந் தலைவ நினக்கே யடிமை யாயினேன்
தழுவற் கரிய பெரிய துரியத் தம்பத் தேறினேன்
தனித்தப் பாலோர் தவள மாடத் திருந்து தேறினேன். எனக்கு 75

கடைய னெனது கொடிய கடின நெஞ்சக் கல்லையே
கனிய தாக்கித் தூக்கிக் கொண்டாய் துரியத் தெல்லையே
உடையாய் துரியத் தலத்தின் மேனின் முருங்குந் தலத்திலே
உன்பா லிருக்க வைத்தா யென்னை யுவந்து வலத்திலே. எனக்கு 76

அறிந்த காள்கள் தொடங்கி யிற்றைப் பகலின் வரையுமே
அடியேன் பட்ட பாட்டை நினைக்கிற் கல்லுங் கரையுமே
எறிந்த பாடு முழுதும் பெரிய இன்ப மாயிற்றே
எந்தாய் கருணை யெனக்கு மிகவுஞ் சொந்த மாயிற்றே. எனக்கு 77

பனிரண் டாண்டு தொடங்கி யிற்றைப் பகலின் வரையுமே
படியிற் பட்ட பாட்டை நினைக்கின் மலையுங் கரையுமே
துனியா தந்தப் பாடு முழுதுஞ் சுகம தாயிற்றே
துரையே நின்மெய் யருளிங் கெனக்குச் சொந்த மாயிற்றே. எனக்கு 78

ஈரா றுண்டு தொடங்கி யிற்றைப் பகலின் வரையுமே
எளியேன் பட்ட பாட்டை நினைக்கி லிருப்புங் கரையுமே
ஏரா யந்தப் பாடு முழுது மின்ப மாயிற்றே
இறைவா நின்மெய் யருளிங் கெனக்குச் சொந்த மாயிற்றே. எனக்கு 79

பாட்டா லுனது பதத்தை நாடிப் பாடும் வாயதே
பதியே யிந்த வுலகி லெனக்கு மிகவு நேயதே
நாட்டா ரெனினு நின்னை யுளத்து நாட்டா ராயிலோ
நயவேன் சிறிது நயத்தல் கயக்கு மெட்டிக் காயிலோ. எனக்கு 80

சின்ன வயது தொடங்கி யென்னைக் காக்குந் தெய்வமே
சிறியேன் மயங்குந் தோறு மயக்கந் தீர்க்குந் தெய்வமே
என்னை யவத்தைக் கடனின் றிங்ஙன் எடுத்த தெய்வமே
எல்லா நலமுந் தருமின் னமுதங் கொடுத்த தெய்வமே. எனக்கு 81

அச்சந் தீர்த்திங் கென்னை யாட்கொண் டருளு மமுதனே
அடியேன் பிழைக ளனைத்தும் பொறுத்து ளமர்ந்த வமுதனே
இச்சை யாவு முடித்துக் கொடுத்துள் ளிலங்குஞ் சுடரனே
என்று மிறவாக் கல்வி யடியேற் கீந்த குரவனே. எனக்கு 82

உள்ளும் புறத்துங் கருணை யமுத மூட்டும் அன்னையே
ஓதா துணர வுணர்வு முணர்வை யுதவும் அன்னையே
தெள்ளுங் கருணைச் செங்கோல் செலுத்திச் செய்த அப்பனே
செல்வப் பிள்ளை யாக்கி யென்னுட் சேர்ந்த அப்பனே. எனக்கு 83

இரவும் பகலு மென்னைக் காத்துள் ளிருக்கு மிறைவனே
எல்லா வுலகும் புகழ வெனையே லேத்து மிறைவனே
காவு நினையா தெனக்கு மெய்மைக் காட்டுந் துணைவனே
கனித்தென் றனையுஞ் சன்மார்க் கத்தில் நாட்டுந் துணைவனே. எனக்கு 84

சற்றும் வருந்தப் பாரா தென்னைத் தாங்கு நேயனே
தாழு னென்று பிரித்தற் கரிய தரத்து நேயனே
முற்றுந் தனதை யெனக்குக் கொடுத்து முயங்கு நேயனே
முன்னோ நான்செய் தவத்தா லெனக்குள் முளைத்த நேயனே. எனக்கு 85

நேயா நின்னை நினைக்க நினைக்க நெஞ்சங் களிக்குதே
நெடிய விழிக ளிரண்டு மின்ப நீர் துளிக்குதே
ஓயா துனது பெருமை நினைக்க வுவகை நீடுதே
உரைப்பா ரெவரென் றுலகிற் பலரை யோடித் தேடுதே. எனக்கு 86

பொன்னே நின்னை யுன்ன வுடம்பு புளக மூடுதே
பொதுவைக் காண வுள்ளே யாசை பொங்கி யாடுதே
என்னே பிறர்தம் வரவு நோக்கக் கண்கள் வெதும்புதே
எந்தாய் வரவை நினைக்கக் களிப்புப் பொங்கித் ததும்புதே. எனக்கு 87

மணியே நின்னைப் பொதுவிற் கண்ட மனிதர் தேவரே
மனிதர் கண்ணிற் பட்ட புல்லு மரமுந் தேவரே
அணியே நின்னைப் பாடு மடியர் தாமோ மூவரே
அவரைக் கண்டா ரவரைக் கண்டா ரவர்கள் மூவரே. எனக்கு 88

வாழ்வே நினது நடங்கண் டவரைச் சுத்த ரென்பரே
மலங்கண் மூன்றுந் தவிர்த்த சுத்த முத்த ரென்பரே
ஏழ்வே தனையு நீக்கி வாழு நித்த ரென்பரே
எல்லாஞ் செய்ய வல்ல ஞான சித்த ரென்பரே. எனக்கு 89

சிவமே நின்னைப் பொதுவிற் கண்ட செல்வர் தம்மையே
தேவர் கண்டு கொண்டு வணங்கு கின்ற ரிம்மையே
தவமே புரிந்து நின்னை யுணர்ந்த சாந்த சித்தரே
தகுமைந் தொழிலுந் தாமே யியற்ற வாய்ந்த சித்தரே. எனக்கு 90

ஐவ ராலு நின்னை யறிதற் கருமை யருமையே
யாரே யறிவர் மறையு மறியா வினது பெருமையே
பொய் வராத வாய்கொண் டுன்னைப் போற்று மன்பரே
பொருளே நின்னை யறிவ ரவரே யழியா வின்பரே. எனக்கு 91

என்னைக் காட்டி யென்னு ளிலங்கும் நின்னைக் காட்டியே
இறங்கா நிலையி லேற்றி ஞான வமுத மூட்டியே
பொன்னைக் காட்டிப் பொன்னே நினது புகழைப் பாடியே
புந்தி களிக்க வைத்தா யழியா தென்னை நாடியே. எனக்கு 92

அண்ட கோடி யனைத்தும் காணுங் கண்க ளெய்தியே
அறிந்தே னங்கைக் கனிபோ லவற்றி னுள்ள செய்தியே
பிண்ட கோடி முழுதுங் காணப் பெற்று நின்னையே
பேசிப் பேசி வியக்கின் றேனிப் பிறவி தன்னையே. எனக்கு 93

சிற்றம் பலத்தில் நடனங் காட்டிச் சிவத்தைக் காட்டியே
சிறப்பா யெல்லாம் வல்ல சித்திக் திறத்தைக் காட்டியே
குற்றம் பலவுந் தீர்த்தென் றனக்கோர் முடியுஞ் சூட்டியே
கோவே யீயு மென்னுட் கலந்து கொண்டாய் நாட்டியே. எனக்கு 94

சுத்த நிலையில் நடுவின் றெங்குந் தோன்றுஞ் ஜோதியே
தூய வெளியைக் கடந்தப் பாலுந் துலங்குஞ் ஜோதியே
சித்த ருளத்திற் சுடர்செய் தோங்குந் தெய்வ ஜோதியே
சிற்றம் பலத்தி னடஞ்செய் தெனக்குட் சிறந்த ஜோதியே. எனக்கு 95

அன்றே யென்னை அடிய னுக்கி யாண்ட ஜோதியே
அதன்பின் பிள்ளை யாக்கி யருளிங் களித்த ஜோதியே
நன்றே மீட்டு நேய னுக்கி நயந்த ஜோதியே
நானும் நீயு மொன்றென் றுரைத்து நல்கு ஜோதியே. எனக்கு 96

நீயே வலிந்திங் கென்னை யாண்ட நீதி ஜோதியே
நின்னைப் பாட வென்னை வளர்க்கு நிமல ஜோதியே
தாயே யெனவந் தென்னைக் காத்த தருமை ஜோதியே
தன்மை பிறரா லரிதற் கரிய தகுமை ஜோதியே. எனக்கு 97

சாகாக் கல்வி யெனக்குப் பயிற்றித் தந்த ஜோதியே
தன்னோர் முடியொன் றெனது முடியிற் றரித்த ஜோதியே
எகாக் கரப்பொற் பீடத் தென்னை யேற்று ஜோதியே
எல்லாம் வல்ல சித்தி யாட்சி யீந்த ஜோதியே. எனக்கு 98

ஜோதி யெவையும் விளங்க விளக்குஞ் ஜோதி வாழியே
தூய வெளிபி னடுவின் றோங்குஞ் ஜோதி வாழியே
சூது லாமெய்ச் சிற்றம் பலத்து ஜோதி வெல்கவே
துலங்கப் பொன்னம் பலத்தி லாடுஞ் ஜோதி வெல்கவே எனக்கு 99

சுத்த சிவசன் மார்க்க நீதி ஜோதி போற்றியே
சுகவாழ் வளித்த சிற்றம் பலத்து ஜோதி போற்றியே
சுத்த சுடர்ப்பொற் சபையி லாடுஞ் ஜோதி போற்றியே
ஜோதி முழுதும் விளங்க விளக்குஞ் ஜோதி போற்றியே. 100

எனக்கு முனக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ
இந்தப் பொருத்தம் உலகில் பிறருக் கெய்தும் பொருத்தமோ.

அருட்பெருஞ்ஜோதி

140. வருகைக்கண்ணி

வர்க்கமாலை என்னும் காலிப்பாட்டு

இராகம் - காம்போதி - அடதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

வாரீர் சிதம்பர வல்லி சிவகாம
வல்லி மணாளரே வாரீர்
மணிமன்ற வாணரே வாரீர்.

சரணங்கள்

அருட்பெருஞ் ஜோதியென் ஆண்டவ ரேதிரு
அம்பல வாணரே வாரீர்
அன்புடை யாளரே வாரீர். வாரீர் 1

அச்சந் தவிர்த்தென்னை ஆட்கொண் டருளிய
அந்தணரே யிங்கு வாரீர்
அம்பலத் தையரே வாரீர். வாரீர் 2

அன்புரு வானவர் இன்புற வுள்ளே
அறிவுரு வாயினீர் வாரீர்
அருட்பெருஞ் ஜோதியீர் வாரீர். வாரீர் 3

அண்டங்க ளெல்லாம் அணுவி லடக்கும்
அரும்பெருஞ் சித்தரே வாரீர்
அற்புதரே யிங்கு வாரீர். வாரீர் 4

அம்மையு மாயெனக் கப்பனு மாகியென்
அன்பனு மாயினீர் வாரீர்
அங்கண ரேயிங்கு வாரீர். வாரீர் 5

அல்ல லறுத்தென் அறிவை விளக்கிய
அம்பல வாணரே வாரீர்
செம்பொரு ளாயினீர் வாரீர். வாரீர் 6

அப்பணி பொன்முடி அப்பனென் றேத்துமெய்
அன்பருக் கன்பரே வாரீர்
இன்பந் தரவிங்கு வாரீர். வாரீர் 7

அச்சுதர் நான்முகர் உச்சியில் மெச்சும்
அடிக்கம லத்தரே வாரீர்
நடிக்கவல் லீரிங்கு வாரீர். வாரீர் 8

அண்டர்க் கரும்பதந் தொண்டர்க் களிதில்
அளித்திட வல்லீரே வாரீர்
களித்தென்னை யாண்டீரே வாரீர். வாரீர் 9

அம்பர மான சிதம்பர நாடகம்
ஆடவல்லீ ரிங்கு வாரீர்
பாடவல்லீ ரிங்கு வாரீர். வாரீர் 10

ஆதி யனுதியென் றுரணம் போற்றும்
அரும்பெருஞ் ஜோதியீர் வாரீர்
ஆனந்த நாடரே வாரீர். வாரீர் 11

ஆகம வேதம் அனேக முகங்கொண்
டருச்சிக்கும் பாதரே வாரீர்
ஆருயிர் நாதரே வாரீர். வாரீர் 12

ஆசறும் அந்தங்கள் ஆறும் புகன்றநல்
ஆரியரே யிங்கு வாரீர்
ஆனந்தக் கூத்தரே வாரீர். வாரீர் 13

ஆல நிழற்கண் அமர்ந்தறஞ் சொன்னநல்
ஆரியரே யிங்கு வாரீர்
ஆனந்தக் கூத்தரே வாரீர். வாரீர் 14

ஆரமு தாகியென் ஆவியைக் காக்கின்ற
ஆனந்தரே யிங்கு வாரீர்
ஆடவல்லீ ரிங்கு வாரீர். வாரீர் 15

ஆதர வாயென் அறிவைத் தெளிவித்
தமுத மளித்தீரே வாரீர்
ஆடிய பாதரே வாரீர். வாரீர் 16

ஆதார மீதானத் தப்பாலுங் காண்டற்
கரும்பெருஞ் ஜோதியீர் வாரீர்
கரும்பி னினிக்கின்றீர் வாரீர். வாரீர் 17

ஆதியு மந்தமும் இல்லா வரும்பெரும்
ஜோதியரே யிங்கு வாரீர்
வேதியரே யிங்கு வாரீர். வாரீர் 18

ஆடல்கொண் டீர்திரு அம்பலத் தேயென்றன்
பாடல்கொண் டீரிங்கு வாரீர்
கூடவல்லீ ரிங்கு வாரீர். வாரீர் 19

ஆக்கங் கொடுத்தென்றன் தூக்கந் தடுத்தவென்
ஆண்டவரே யிங்கு வாரீர்
தாண்டவரே யிங்கு வாரீர். வாரீர் 20

ஆபத்தை நீக்கியோர் தீபத்தை யேற்றியென்
ஆணவம் போக்கினீர் வாரீர்
காணவந் தேனிங்கு வாரீர். வாரீர் 21

இதுதரு ணந்தரு ணந்தரு ணம்என்
இறையவரே யிங்கு வாரீர்
இடர்தவிர்த் தாட்கொண்டூர் வாரீர். வாரீர் 22

இச்சையின் வண்ணம் எனக்கருள் செய்ய
இதுதருண மிங்கு வாரீர்
இன்னமு தாயினீர் வாரீர். வாரீர் 23

இன்பங் கொடுத்தேதயென் துன்பங் கெடுத்துள்
இருக்கின்ற நாதரே வாரீர்
இருக்கின் பொருளானீர் வாரீர். வாரீர் 24

இரவும் பகலும் இதயத்தி லூறி
இனிக்கு மமுதரே வாரீர்
இனித்தரியே னிங்கு வரீர். வாரீர் 25

இன்னுந் தாழ்த்தங்கே இருப்ப தழகன்று
இதுதருண மிங்கு வாரீர்
இருமையு மாயினீர் வாரீர். வாரீர் 26

இடர்தவிர்த் தின்பம் எனக்களித் தாளற்
கிதுதருண மிங்கு வாரீர்
இனியவரே யிங்கு வாரீர். வாரீர் 27

இறையும் பொறுப்பரி தென்னுயிர் நாதரே
இத்தருண மிங்கு வாரீர்
இதடஞ் செய்கின்றீர் வாரீர். வாரீர் 28

இம்மையி லேயெனக் கம்மையி லின்பம்
இதுவென் றளித்தீரே வாரீர்
இதயத் திருந்தீரே வாரீர். வாரீர் 29

இங்கங்கென் றுமேல எள்ளுக்கு ளெண்ணெய்போல்
எங்கும் நிறைந்தீரே வாரீர்
இந்தெழில் வண்ணரே வாரீர். வாரீர் 30

இணையொன்று மில்லா இணையடி யென்தலை
ஏறவைத்தீ ரிங்கு வாரீர்
இறுதியி லீரிங்கு வாரீர். வாரீர் 31

ஈன்றுளெ மெந்தையும் என்குரு வும்மெனக்
கின்பமு மாயினீர் வாரீர்
அன்பருக் கன்பரே வாரீர். வாரீர் 32

ஈன மறுத்துமெய்ஞ் ஞான விளக்கென்
இதயத்தி லேற்றினீர் வாரீர்
உதயச் சுடரினீர் வாரீர். வாரீர் 33

ஈடறி யாதமெய் வீடுதந் தன்பரை
இன்புறச் செய்கின்றீர் வாரீர்
வன்பர்க் கரியீரே வாரீர். வாரீர் 34

ஈதிய லென்றுநின் றோதிய வேதத்திற்
கெட்டா திருந்தீரே வாரீர்
நட்டார்க் கெளியீரே வாரீர். வாரீர் 35

ஈச ரெனும்பல தேசர்கள் போற்றும்ந
டேசரே நீரிங்கு வாரீர்
நேசரே நீரிங்கு வாரீர். வாரீர் 36

ஈச ரெளியர்க்கு நேசரென் றன்பர்கள்
ஏசநின்றீ ரிங்கு வாரீர்
நாசமில்லீ ரிங்கு வாரீர். வாரீர் 37

ஈறறி யாமறை யோனென் றறிஞர்
இபம்பதின் றீரிங்கு வாரீர்
வயந்தருவீ ரிங்கு வாரீர். வாரீர் 38

ஈதல்கண் டேமிகக் காதல்கொண் டேனெனக்
கீதல்செய்வீ ரிங்கு வாரீர்
ஓதரியீ ரிங்கு வாரீர். வாரீர் 39

ஈடணை யற்றநெஞ் சூடணை யுற்றுமற்
றீடணையீ ரிங்கு வாரீர்
ஆடவல் லீரிங்கு வாரீர். வாரீர் 40

ஈண்டறி வோங்கிடத் தூண்டறி வாகியுள்
ஈண்டுகின்றீ ரிங்கு வாரீர்
ஆண்டவரே யிங்கு வாரீர். வாரீர் 41

உள்ளதே யுள்ளது விள்ளது வென்றெனக்
குள்ள துரைசெய்தீர் வாரீர்
வள்ளல் விரைந்திங்கு வாரீர். வாரீர் 42

உருவா யருவாய் உருவரு வாயிலை
ஒன்றுமல்லீ ரிங்கு வாரீர்
என்றுநல்லீ ரிங்கு வாரீர். வாரீர் 43

உறவும் பகையும் உடைய நடையில்
உறவுமெண்ணே னிங்கு வாரீர்
பிறவுநண்ணே னிங்கு வாரீர். வாரீர் 44

உள்ளக் கருத்தைநான் வள்ளற் குரைப்பதென
உள்ளத் திருந்தீரே வாரீர்
விள்ளற் கரியீரே வாரீர். வாரீர் 45

உய்யவல் லார்க்கருள் செய்யவல் லீர்நானும்
உய்யவல்லே னிங்கு வாரீர்
செய்யவல்லீ ரிங்கு வாரீர். வாரீர் 46

உடையவ ராரிக் கடையவ னேனுக்கு
உடையவரே யிங்கு வாரீர்
தடைதவிர்ப்பீ ரிங்கு வாரீர். வாரீர் 47

உறங்கி யிறங்கும் உலகவர் போலநான்
உறங்கமாட் டேனிங்கு வாரீர்
இறங்கமாட் டேனிங்கு வாரீர். வாரீர் 48

உண்டுடுத் தின்னும் உழலமாட் டேனுமே
துண்டி விரும்பினேன் வாரீர்
உண்டிதர விங்கு வாரீர். வாரீர் 49

உன்னுதோ றுன்னுதோ றுள்ளே யினிக்கின்ற
உத்தமரே யிங்கு வாரீர்
உற்றதுணை யானீர் வாரீர். வாரீர் 50

உம்மாணை யும்மாணை உம்மையல் லாலெனக்
குற்றவர் மற்றிலலை வாரீர்
உற்றறிந்தீ ரிங்கு வாரீர். வாரீர் 51

ஊனை நடந்தவிர்த் தான நடங்காட்டும்
மோன நடேசரே வாரீர்
ஞான நடேசரே வாரீர். வாரீர் 52

ஊருமில் லீரொரு பேருமில் லீரறி
வோருமில் லீரிங்கு வாரீர்
யாருமில் லீரிங்கு வாரீர். வாரீர் 53

ஊறு சிவானந்தப் பேறு தருகின்ற
வீறுடை யீரிங்கு வாரீர்
நீறுடை யீரிங்கு வாரீர். வாரீர் 54

ஊன்றுநுஞ் சேவடி சான்று தரிக்கிலேன்
என்றுகொள் வீரிங்கு வாரீர்
ஆன்றவ ரேயிங்கு வாரீர். வாரீர் 55

ஊற்றை யுடம்பிது மாற்றுயர் பொன்னென
ஏற்றம் அருள்செய்வீர் வாரீர்
தேற்றம் அருள்செய்வீர் வாரீர். வாரீர் 56

ஊடலில் லீரெனைக் கூடவல் லீரென்னுள்
பாடல்கொல் வீரிங்கு வாரீர்
ஆடல்நல் லீரிங்கு வாரீர். வாரீர் 57

ஊக்கங் கொடுத்தென்றன் ஏக்கங் கெடுத்தருள்
ஆக்க மடித்தீரே வாரீர்
தூக்கந் தவிர்த்தீரே வாரீர். வாரீர் 58

ஊனை யெழுத்தினுள் ஆனை யெழுத்துண்டென்
றேனை யறிவித்தீர் வாரீர்
சேமஞ் செறிவித்தீர் வாரீர். வாரீர் 59

ஊகமி லென்பெற்ற தேக மழியாத
யோகங் கொடுத்தீரே வாரீர்
போகங் கொடுத்தீரே வாரீர். வாரீர் 60

ஊதியந் தந்தநல் வேதியரே யுண்மை
ஓதிய நாதரே வாரீர்
ஆதி யனுதியீர் வாரீர். வாரீர் 61

என்குறை தீர்த்தென்னுள் நன்குறை வீரினி
என்குறை யென்முன்னீர் வாரீர்
தங்குறை யில்லீரே வாரீர். வாரீர் 62

என்னுயி ராகியென் தன்னுயிர்க் குள்ளேயோர்
இன்னுயி ராயினீர் வாரீர்
என்னுயிர் நாதரே வாரீர். வாரீர் 63

என்கண் ணருள்செய்தென் புன்கண் விலக்கிய
என்கண் ணனையீரே வாரீர்
மின்கண் ணுதலீரே வாரீர். வாரீர் 64

எல்லா வுயிர்களும் நல்லா ரெனத்திதாழும்
எல்லாம்வல்லீ ரிங்கு வாரீர்
சொல்லா நிலையினீர் வாரீர். வாரீர் 65

எட்டு மிரண்டுமென் றிட்டு வழங்குதல்
எட்டும்படி செய்தீர் வாரீர்
[1] எட்டுரு வாயினீர் வாரீர். வாரீர் 66

என்று கண்டாமிது நன்றுகொண் டாளுக
என்றுதந் தீரிங்கு வாரீர்
அன்றுவந் தீரின்று வாரீர். வாரீர் 67

எச்சம யங்களும் பொய்ச்சம யமென்றீர்
இச்சமய மிங்கு வாரீர்
மெய்ச்சம யந்தந்தீர் வாரீர். வாரீர் 68

என்பாற் களிப்பொடும் அன்பாலொன் றீந்திதை
இன்பாற் பெறுகென்றீர் வாரீர்
தென்பால் முகங்கொண்டீர் வாரீர். வாரீர் 69

எச்ச வுரையன்றென் இச்சை யெலாமும
திச்சைகண்டீ ரிங்கு வாரீர்
அச்சந் தவிர்த்தீரே வாரீர். வாரீர் 70

எண்ண மெல்லாமும தெண்ணமல் லால்வேறீர்
எண்ண மெனக்கில்லை வாரீர்
வண்ண மளிக்கின்றீர் வாரீர். வாரீர் 71

ஏராய நான்முகர் நாரா யணர்மற்றும்
பாராயணஞ் செய்வீர் வாரீர்
பூராய மாயினீர் வாரீர். வாரீர் 72

ஏம மிகுந்திரு வாட சுகந்தரும்
ஏம சபேசரே வாரீர்
சோம சிகாமணி வாரீர். வாரீர் 73

1. எட்டும் இரண்டும்—பத்து. (கo) ய-ஆன்மா. எட்டுரு—அஷ்டமூர்த்தம், எட்டு உரு—(எட்டு தமிழில் எழுத 'அ' ஆகும்) அகரவடிவம் எட்டுரு—அரு.

ஏதமி லாப்பர காத முடிப்பொருள்
ஏதது சொல்லுவீர் வாரீர்
ஈத லுடையீரே வாரீர். வாரீர் 74

ஏக பராபர யோக [1] வெளிக்கப்பால்
ஏக வெளிநின்றீர் வாரீர்
ஏக ரனேகரே வாரீர். வாரீர் 75

ஏறி யிறங்கி இருந்தே னிறங்காமல்
ஏறவைத்தீ ரிங்கு வாரீர்
தேறவைத்தீ ரிங்கு வாரீர். வாரீர் 76

ஏகாந்த கன்னிலை யோகாந்தத் துள்ளதென்
றேகாந்தஞ் சொல்லினீர் வாரீர்
தேகாந்த மில்லீரே வாரீர். வாரீர் 77

ஏகாத கல்விதான் சாகாத கல்வியென்
றேகாத லாற்சொன்னீர் வாரீர்
வேகாத காலினீர் வாரீர். வாரீர் 78

ஏடா யிரமென்னைக் கோடா மொழியொன்றே
ஏடாவென்றீ ரிங்கு வாரீர்
ஈடாவா ரில்லீரே வாரீர். வாரீர் 79

ஏசாத தந்திரம் பேசாத மந்திரம்
ஈசான மேலென்றீர் வாரீர்
ஆசாதி யில்லீரே வாரீர். வாரீர் 80

ஏனென்பார் வேறிலை நானன்பாற் கூவுகின்
றேனென்பா லேனென்பீர் வாரீர்
ஆனின்பா லாடுவீர் வாரீர். வாரீர் 81

ஐந்து மலங்களும் வெந்து விழவெழுத்
தைந்துஞ்செய் புமென்றீர் வாரீர்
இந்து சிகாமணி வாரீர். வாரீர் 82

ஐயமுற் றேனையிவ் வையங் கரியாக
ஐயந் தவிர்த்தீரே வாரீர்
மெய்யம் பலத்தீரே வாரீர். வாரீர் 83

---

1 பராபரயோகம் என்பது — ஞானயோகம், ஏகவெளி என்பது—ஞானஞானம்

ஐயர் நடம்புரி மெய்யரென் றேயுணர்ந்
தையர்தாழ நின்றீர் வாரீர்
துய்ய ருளநின்றீர் வாரீர். வாரீர் 84

ஐவணங் காட்டுநும் மெய்வணம் வேட்டுநின்
றைவண ரேத்துவீர் வாரீர்
பொய்வணம் போக்குவீர் வாரீர். வாரீர் 85

ஒன்றே சிவமதை யோன்றுசன் மார்க்கமும்
ஒன்றேயென் றீரிங்கு வாரீர்
நன்றே நின்றீரிங்கு வாரீர். வாரீர் 86

ஒப்பாரில் லீருமக் கிப்பாரிற் பிள்ளோரான்
ஒப்பாரி யல்லகாண் வாரீர்
முப்பாழ் கடந்தீரை வாரீர். வாரீர் 87

I ஒத்த விடந்தன்னில் நித்திரை செய்யென்றீர்
ஒத்த விடங்காட்ட வாரீர்
சித்த சிகாமணி வாரீர். வாரீர் 88

ஒட்டுமற் றில்லோரான் விட்டுப் பிரிகிலென்
ஒட்டுவைத் தேதனும்மேல் வாரீர்
எட்டுக் குணத்தீரே வாரீர். வாரீர் 89

ஒருமை நிலையி லிருமையுந் தந்த
ஒருமையி னீரிங்கு வாரீர்
பெருமையி னீரிங்கு வாரீர். வாரீர் 90

ஒண்மை விரும்பினேன் அண்மையி லீகுவீர்
உண்மை சொன்னே னிங்கு வாரீர்
வண்மை யிடங்கொண்டூர் வாரீர். வாரீர் 91

ஓங்கார நாடகம் பாங்காகச் செய்கின்ற
ஓங்கார நாடரே வாரீர்
ஆங்கார நீக்கினீர் வாரீர். வாரீர் 92

ஓங்கும்பின் டாண்டங்கள் தாங்கும் பெருவெளி
ஓங்கு நடேசரே வாரீர்
பாங்குசெய் வீரிங்கு வாரீர். வாரீர் 93

1. ஔவை வாக்கு. ஒத்தவிடம் என்பது—மேடுபள்ளமில்லாத இடம். மனம் ஒத்த இடம் என்பது - நினைப்பு மறப்பு அற்ற இடம். தத்துவாதீத நிலை என்பது - தனித்த இடம்.

ஓசையி னுள்ளேயோர் ஆசையு திக்கமேல்
ஓசைசெய் வித்தீரே வாரீர்
பாச மறுத்தீரே வாரீர். வாரீர் 94

ஓரா துலகினைப் பாரா திருநினக்
கோரா வகையென்றீர் வாரீர்
பேரா நிலைகந்தீர் வாரீர். வாரீர் 95

ஓடாது மாயையை நாடாது நன்னெறி
ஊடா திருவென்றீர் வாரீர்
வாடா திருவென்றீர் வாரீர். வாரீர் 96

ஓலக் கபாடத்தைச் சாலத் திறந்தருள்
ஓலக்கங் காட்டினீர் வாரீர்
காலக் கணக்கில்லீர் வாரீர். வாரீர் 97

ஓடத்தி னின்றிரு மாடத்தி லேற்றிமெய்
யூடத்தைக் காட்டினீர் வாரீர்
வேடத்தைப் பூட்டினீர் வாரீர். வாரீர் 98

ஓமத்திலே நடுச் சாமத்திலே யெனை
I ஓமத்த னுக்கினீர் வாரீர்
சாமத்த நீக்கினீர் வாரீர். வாரீர் 99

ஓமென்ப தற்குமுன் ஆமென் றுரைத்துடன்
ஊமென்று காட்டினீர் வாரீர்
காமென்று நாட்டினீர் வாரீர். வாரீர் 100

ஓளவிய மார்க்கத்தின் வெவ்விய னீக்கியே
செவ்விய னுக்கினீர் வாரீர்
ஓவ்வியொன் றுக்கினீர் வாரீர். வாரீர் 101

கண்ணினையீ ரும்மைக் காணவென் னுசைக்
கடல்பொங்கு கின்றது வாரீர்
உடல்தங்கு கின்றது வாரீர். வாரீர் 102

கண்டனைந் தாலன்றிக் காதலடங் காதென்
கண்மணியீ ரிங்கு வாரீர்
உண்மணியீ ரிங்கு வாரீர். வாரீர் 103

1 ஓமத்தன் என்பது—உருவருவ வடிவம்; பிரணவதேகம்.
சாமத்தம் என்பது—சாகுந்தன்மையை

கட்டிக்கொண் டும்மைக் கலந்துகொளல் வேண்டும்
காரணரே யிங்கு வாரீர்
பூரணரே யிங்கு வாரீர். 104

வாரீர் சிதம்பர வல்லி சிவகாம
வல்லி மணாளரே வாரீர்
மணிமன்ற வாணரே வாரீர்

அருட்பெருஞ்ஜோதி

---

141. வேட்கைக் கண்ணி

இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

அணையவாரீ ரென்னை அணையவாரீர்
அணிகிளர்சிற் றம்பலத்தீர் அணையவாரீர்.

சரணங்கள்

இயற்கையுண்மை வடிவினரே அணையவாரீர்
எல்லாஞ்செய் வல்லவரே அணையவாரீர்
இயற்கைவிளக் கருத்தவரே அணையவாரீர்
எல்லார்க்கு நல்லவரே அணையவாரீர்
I இயற்கையின்ப மானவரே அணையவாரீர்
இறைமையெலா முடையவரே அணையவாரீர்
இயற்கைநிறை வானவரே அணையவாரீர்
என்னுடைய நாயகரே அணையவாரீர். அணைய 1

உலகமெலா முடையவரே அணையவாரீர்
உண்மையுரைக் கின்றவரே அணையவாரீர்
கலகமறுத் தாண்டவரே அணையவாரீர்
கண்ணனைய காதலரே அணையவாரீர்
அலகறியாப் பெருமையரே அணையவாரீர்
அற்புதப்பொற் ஜோதியரே அணையவாரீர்
இலகுசபா பதியவரே அணையவாரீர்
என்னுடைய நாயகரே அணையவாரீர். அணைய 2

---

1 இயற்கை உண்மை என்பது—சத்து; இயற்கை விளக்கம் என்பது—சித்து; இயற்கை இன்பம் என்பது—ஆனந்தம்.

பொதுவில்நடிக் கின்றவரே அணையவாரீர்
பொற்புடைய புண்ணியரே அணையவாரீர்
மதுவிலினிக் கின்றவரே அணையவாரீர்
மன்னியவென் மன்னவரே அணையவாரீர்
விதுவினமு தானவரே அணையவாரீர்
மெய்புரைத்த வித்தகரே அணையவாரீர்
இதுதருண மிறையவரே அணையவாரீர்
என்னுடைய நாயகரே அணையவாரீர். அணைய 3

வினைமாலை நீத்தவரே அணையவாரீர்
வேதமுடிப் பொருளவரே அணையவாரீர்
அனைமாலைக் காத்தவரே அணையவாரீர்
அருட்பெருஞ் ஜோதிப்பதியீர் அணையவாரீர்
புனைமாலை வேய்ந்தவரே அணையவாரீர்
பொதுவினிறை பூரணரே அணையவாரீர்
எனைமாலை யிட்டவரே அணையவாரீர்
என்னுடைய நாயகரே அணையவாரீர். அணைய 4

சிறுவயதி லெனைவிழைந்தீர் அணையவாரீர்
சித்தசிகா மணியேநீர் அணையவாரீர்
உறுவயதிங் கிதுதருணம் அணையவாரீர்
உண்மைசொன்ன வுத்தமரே அணையவாரீர்
பொறுமைமிக வுடையவரே அணையவாரீர்
பொய்யாத வாசகரே அணையவாரீர்
இறுதிதவிர்த் தாண்டவரே அணையவாரீர்
என்னுடைய நாயகரே அணையவாரீர். அணைய 5

சாதிமதந் தவிர்த்தவரே அணையவாரீர்
தனித்தலைமைப் பெரும்பதியீர் அணையவாரீர்
ஆதியந்த மில்லவரே அணையவாரீர்
ஆரணங்கள் போற்றநின்றீர் அணையவாரீர்
ஓதியுணர் வரியவரே அணையவாரீர்
உள்ளபடி யுரைத்தவரே அணையவாரீர்
ஈதிசைந்த தருணமிங்கே அணையவாரீர்
என்னுடைய நாயகரே அணையவாரீர். அணைய 6

அன்பாட்டை விழைந்தவரே அணையவாரீர்
அருட்ஜோதி வடிவினரே அணையவாரீர்
துன்பாட்டை யொழித்தவரே அணையவாரீர்
துரியநிறை பெரியவரே அணையவாரீர்
பின்பாட்டுக் காலபித அணையவாரீர்
பிச்சேற்று கின்றவரே அணையவாரீர்
என்பாட்டை யேற்றவரே அணையவாரீர்
என்னுடைய நாயகரே அணையவாரீர். அணைய 7

அரைக்கணமுந் தரியேனு னணையவாரீர்
ஆணையும்மே லாணையென்னை அணையவாரீர்
புரைக்கணங்கண் டறியேனு னணையவாரீர்
பொன்மேனிப் புண்ணியரே அணையவாரீர்
வரைக்கணஞ்செய் வித்தவரே அணையவாரீர்
மன்றில்நடிக் கின்றவரே அணையவாரீர்
இரைக்கணவு தருணமிதே அணையவாரீர்
என்னுடைய நாயகரே அணையவாரீர். அணைய 8

கருணைநடஞ் செய்பவரே அணையவாரீர்
கண்மணியிற் கலந்தவரே அணையவாரீர்
அருணிறைசிற் சபையவரே அணையவாரீர்
அன்பர்குறை தீர்த்தவரே அணையவாரீர்
தருணமிது விரைந்தென்னை அணையவாரீர்
சத்தியரே நித்தியரே அணையவாரீர்
இருணிறைந்தார்க் கறிவரியீ ரணையவாரீர்
என்னுடைய நாயகரே அணையவாரீர். அணைய 9

சேரவும்மே லாசைகொண்டே னணையவாரீர்
திருவுளமே யறிந்திதல்லா மணையவாரீர்
ஆரெனக்கிங் கும்மையல்லா லணையவாரீர்
அயலறியே னுணையும்மே லணையவாரீர்
ஈரகத்தே னல்லவிங்கே அணையவாரீர்
என்னுசை பொங்குகின்ற தணையவாரீர்
ஏரகத்தே யமர்ந்தருள்வீ ரணையவாரீர்
என்னுடைய நாயகரே அணையவாரீர். அணைய 10

கலந்துகொள வேண்டுகின்றே னணையவாரீர்
காதல்பொங்கு கின்றதென்ன அணையவாரீர்
புலந்தறியேன் விரைகின்றே னணையவாரீர்
புணர்வதற்குத் தருணமித்த அணையவாரீர்
அலந்தவிடத் தருள்கின்றீ ரணையவாரீர்
அரைக்கணமு மினித்தரியே னணையவாரீர்
இலந்தைதருங் கனியனையீ ரணையவாரீர்
என்னுடைய நாயகரே அணையவாரீர். 11

அணையவாரீ ரென்ன அணையவாரீர்
அணிகிளர்சிற் றம்பலத்தீ ரணையவாரீர்.

அருட்பெருஞ்ஜோதி

142. ஆடலமுதக்கண்ணி

இராகம் - மோகனம் - ஏகதாளசாப்பு

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

ஆடவாரீ ரென்னை டாடவாரீர்
அம்பலத்தே யாடுகின்றீ ராடவாரீர்.

சரணங்கள்

தன்மைபிறர்க் கறிவரியீ ராடவாரீர்
தனித்தலைமைப் பெரும்பதியீ ராடவாரீர்
வன்மைமனத் தவர்க்கரியீ ராடவாரீர்
வஞ்சமிலா நெஞ்சகத்தீ ராடவாரீர்
தொன்மைமறை முடியமர்ந்தீ ராடவாரீர்
துரியபதங் கடந்தவரே ஆடவாரீர்
இன்மைதவிர்த் தெனையாண்டீ ராடவாரீர்
என்னுடைய நாயகரே ஆடவாரீர். ஆடவாரீர் 1

திருவாளர் போற்றவென்னை டாடவாரீர்
திருவணையார் வாழ்த்தவிக்கே ஆடவாரீர்
பெருவாய்மைப் பெருந்தகையீ ராடவாரீர்
பேராசைப் பொங்குகின்றே னாடவாரீர்

உருவாகி யோங்குகின்றீ ராடவாரீர்
உத்தமரே யிதுதருண மாடவாரீர்
இருவாணி ரேத்தநின்றீ ராடவாரீர்
என்னுடைய நாயகரே ஆடவாரீர். ஆடவாரீர் 2

வேற்றுமுகம் பாரேனென்றே டாடவாரீர்
வெட்கமெல்லாம் விட்டுவிட்டே ணடவாரீர்
மாற்றுதற்கெண் ணுதிரென்றே டாடவாரீர்
மாற்றிலுயிர் மாய்ப்பேன்கண்டீ ராடவாரீர்
கூற்றுதைத்த சேவடியீ ராடவாரீர்
கொண்டுகுலங் குறியாதீ ராடவாரீர்
ஏற்றதனித் தருணமிதே ஆடவாரீர்
என்னுடைய நாயகரே ஆடவாரீர். ஆடவாரீர் 3

இல்லாமை நீக்கிநின்றீ ராடவாரீர்
என்னுமண மாலையிட்டீ ராடவாரீர்
கொல்லாமை நெறியென்றீ ராடவாரீர்
குற்றமிலாங் குணங்கொண்டீ ராடவாரீர்
நல்லார்சொல் நல்லவரே ஆடவாரீர்
நற்றாயி னினியவரே ஆடவாரீர்
எல்லாஞ்செய் வல்லவரே ஆடவாரீர்
என்னுடைய நாயகரே ஆடவாரீர். ஆடவாரீர் 4

ஆசைகொண்டே ணடியென்றே டாடவாரீர்
ஆசைவெட்க மறியாதா லாடவாரீர்
ஓசைகொண்ட தெங்குமிங்கே ஆடவாரீர்
உம்மாணை யும்மைவிடே ணடவாரீர்
காசுபணத் தாசையிலே ணடவாரீர்
கைபிடித்தாற் போதுமென்றே டாடவாரீர்
ஏசறநீத் தெனைபாண்டீ ராடவாரீர்
என்னுடைய நாயகரே ஆடவாரீர். ஆடவாரீர் 5

சன்மார்க்க நெறிவைத்தீ ராடவாரீர்
சாகாத வரந்தந்தீ ராடவாரீர்
கன்மார்க்க மனங்கரைத்தீ ராடவாரீர்
கண்ணிசைந்த கணவரேநீ ராடவாரீர்
சொன்மார்க்கப் பொருளானீ ராடவாரீர்
சுத்தவருட் ஜோதியரே ஆடவாரீர்
என்மார்க்க முளத்துகந்தீ ராடவாரீர்
என்னுடைய நாயகரே ஆடவாரீர். ஆடவாரீர் 6

அண்டமெலாங் கண்டவரே ஆடவாரீர்
அகண்டபரி பூரணரே ஆடவாரீர்
பண்டமெலாம் படைத்தவரே ஆடவாரீர்
பற்றிறுதிவீ டில்லவரே ஆடவாரீர்
கொண்டெனைவந் தாண்டவரே ஆடவாரீர்
கூத்தாட வல்லவரே ஆடவாரீர்
எண்டகுபோற் சபையுடையீ ராடவாரீர்
என்னுடைய நாயகரே ஆடவாரீர். ஆடவாரீர் 7

பேதநினை யாதுவிரைந் தாடவாரீர்
பின்பாட்டுக் காலியிதே ஆடவாரீர்
ஓதவுல வாதவரே ஆடவாரீர்
உள்ளாசை பொங்குகின்ற தாடவாரீர்
சாதலறுத் தெனையாண்டீ ராடவாரீர்
தனித்தலைமைப் பெருப்பதியீ ராடவாரீர்
ஏதமறுத் தவர்க்கினியீ ராடவாரீர்
என்னுடைய நாயகரே ஆடவாரீர். ஆடவாரீர் 8

கள்ளமொன்று மறியேனு டைவாரீர்
கைகலந்து கொண்டுரென்னை டாடவாரீர்
உள்ளபடி யுரைக்கின்றே னுடைவாரீர்
உம்மாசை பொங்குகின்ற தாடவாரீர்
தள்ளரியே னென்னைநெடுங்கே ஆடவாரீர்
தாழ்க்கிலிறை யுந்தரியே னுடைவாரீர்
எள்ளலறுத் தாண்டுகொண்டீ ராடவாரீர்
என்னுடைய நாயகரே ஆடவாரீர். ஆடவாரீர் 9

நச்சுகின்றே னிச்சலிங்கே ஆடவாரீர்
நாணமச்சம் விட்டேனென்னை டாடவாரீர்
விச்சையெலாந் தந்துகளித் தாடவாரீர்
வியந்துரைத்த தருணமிதே ஆடவாரீர்
எச்சுகமு மாகிநின்றீ ராடவாரீர்
எல்லாஞ்செய் வல்லவரே ஆடவாரீர்
இச்சைமய மாயிருந்தே னுடைவாரீர்
என்னுடைய நாயகரே ஆடவாரீர். ஆடவாரீர் 10

என்னுயிருக் குயிரானீ ராடவாரீர்
என்னறிவுக் கறிவானீ ராடவாரீர்
என்னுடை. யன்பிற்கலந்தீ ராடவாரீர்
என்னுடை. யுள்ளத்திருந்தீ ராடவாரீர்

என்னுரிமைத் தாயனையீ ராடவாரீர்
எனதுதனித் தந்தையரே ஆடவாரீர்
என்னெருமைச் சற்குருவே ஆடவாரீர்
என்னுடைய நாயகரே ஆடவாரீர். 11

ஆடவாரீர் என்னே டாடவாரீர்
அம்பலத்தே யாடுகின்றீ ராடவாரீர்.

அருட்பெருஞ்ஜோதி

143. ஆனந்தமேலீடு

இராகம் - பியாகடை - அடதாளசாப்பு

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

ஆடேடி பந்து ஆடேடி பந்து
ஆடேடி பந்து ஆடேடி பந்து.

சரணங்கள்

வாழியென் தோழி யென்வார்த்தை கேளென்றும்
மரண மில்லாவரம் நான்பெற்றுக் கொண்டேன்
சூழியற் செஞ்சுடர் தோற்றுறு கீழ்பாற்
றூய்த்திசை நோக்கினேன் சீர்த்திகழ் சித்தி
ஊழிதோ றூழிநின் றூடுவன் நீபும்
உன்னுதி யேலிங்கே மன்னரு ளாணை
ஆழி காத்தணிந் தாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 1

இசையாமற் போனவ ரெல்லாரு நாண
இறவாப் பெருவரம் யான்பெற்றுக் கொண்டேன்
வசையாது மில்லாத மேற்றிசை நோக்கி
வந்தேனென் றூழிநீ வாழிகாண் வேறு
நசையாதே யென்னுடை நண்பது வேண்டில்
நன்மார்க்க மாஞ்சுத்த சன்மார்க்கந் தன்னில்
அசையாமல் நின்றிங்கே ஆடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 2

இன்பாலே யுலகத்தா ரெல்லாருங் காண
இறவாப் பெருவரம் யான்பெற்றுக் கொண்டேன்
தென்பாலே நோக்கினேன் சித்தாடு கின்ற
திருநா ளிதுதொட்டுச் சேர்ந்தது தோழி
துன்பாலே யசைந்தது நீக்கியென் னேடே
சுத்தசன் மார்க்கத்தி லொத்தவ ளாகி
அன்பாலே யறிவாலே யாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 3

சதுமறை யாகம சாத்திர மெல்லாஞ்
சந்தைப் படிப்புநஞ் சொந்தப் படிப்போ
விதுநெறி சுத்தசன் மார்க்கத்திற் சாகா
வித்தையைக் கற்றன னுத்தர மெனுமோர்
பொதுவளர் திசைநோக்கி வந்தன னென்றும்
பொன்றுமை வேண்டிடி லென்தோழி நீதான்
அதுவிது வென்னும லாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 4

தப்பாலே சகத்தவர் சாவே துணிந்தார்
தாமுள நாணுகான் சாதலைத் தவிர்த்தே
எப்பாலு மெக்காலு மிருத்தலே பெற்றேன்
என்தோழி வாழிநீ பென்னேடு கூடி
துப்பாலே விளங்கிய சுத்தசன் மார்க்க
ஜோதியென் றோதிய வீதியை விட்டே
அப்பாலே போகாம லாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 5

வெங்கேத மரணத்தை விடுவித்து விட்டேன்
விச்சை யெலாங்கற்றென் னிச்சையின் வண்ணம்
எங்கேயு மாடுதற் கெய்தினேன் தோழி
என்மொழி சத்திய மென்னேடுங் கூடி
இங்கே களிப்பது நன்றிந்த வுலகோ
ஏதக் குழியி லிழுக்கு மதனுல்
அங்கே பாராதேநீ ஆடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 6

சிவமே பொருளென் றறிவா லறிந்தேன்
செத்தாரை மீட்கின்ற திண்மையைப் பெற்றேன்
உவமேய மில்லாத வொருநிலை தன்னில்
ஒன்றிரண் டென்னுத வுண்மையில் நின்றேன்

தவமே புரிகின்ரு ரெல்லாருங் காணத்
தயவா லழைக்கின்றேன் கபவாதே தோழி
அவமே போகாதென்னை டாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 7

துஞ்சாத நிலையொன்று சுத்தசன் மார்க்கச்
சூழலி லுண்டது சொல்லள வன்றே
எஞ்சாத வருளாலே யான்பெற்றுக் கொண்டேன்
இறந்தாரை யெல்லா மெழுப்புதல் வல்லேன்
விஞ்சாத வறிவாலே தோழிநீ யிங்கே
வேதுசெய் மரணத்துக் கெதுசெய்வா மென்றே
அஞ்சாம லென்னுளே ஆடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 8

ஈரமு மன்புங்கொண் டின்னருள் பெற்றேன்
என்மார்க்க மிறவாத சன்மார்க்கந் தோழி
காரமு மிகுபுளிச் சாரமுங் துவர்ப்புங்
கைப்போடே உப்போடே கசப்போடே கூட்டி
ஊரமு துண்டுநீ யொழியாதே அந்தோ
ஊழிதோ றூழியு முலவாமை கல்கும்
ஆரமு துண்டென்னை டாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. ஆடேடி 9

துதிசெயு முத்தருஞ் சித்தருங் சானைச்
சுத்தசன் மார்க்கத்தி லுத்தம ஞானப்
பதிசெயுஞ் சித்திகள் பற்பல வாகப்
பாரிடை வானிடைப் பற்பல காலம்
விதிசெயப் பெற்றன னின்றுதொட் டென்றும்
மெய்யருட் ஜோதியால் விளைவிப்ப னீயவ்
அதிசயம் பார்க்கலா மாடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து. 10

ஆடேடி பந்து ஆடேடி பந்து
ஆடேடி பந்து ஆடேடி பந்து

அருட்பெருஞ்ஜோதி

144. ஆனந்தக் களிப்பு [1]

இராகம் - இந்துஸ்தானி - அனுஷிததாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

ஞான மருந்திம் மருந்து — சுகம்
நல்கிய சிற்சபா நாத மருந்து

சரணங்கள்

அருட்பெருஞ் ஜோதி மருந்து — என்னை
ஐந்தொழில் செய்தற் களித்த மருந்து
பொருட்பெரும் போக மருந்து — என்னைப்
புறத்தும் அகத்தும் புணர்ந்த மருந்து. ஞான 1

எல்லாஞ்செய் வல்ல மருந்து — என்னுள்
என்றும் விடாமல் இனிக்கு மருந்து
சொல்லால் அளவா மருந்து — சுயஞ்
ஜோதி அருட்பெருஞ் ஜோதி மருந்து. ஞான 2

காணுது காட்டு மருந்து — என்றன்
கையிற்பொற் கங்கணங் கட்டு மருந்து
ஆணுகிப் பெண்ணும் மருந்து — அது
வாகி மணிமன்றி லாடு மருந்து. ஞான 3

சுத்தசன் மார்க்க மருந்து — அருட்
ஜோதி மலையில் துலங்கு மருந்து
சித்துரு வான மருந்து — என்னைச்
சித்தெலாம் செய்யச்செய் வித்த மருந்து. ஞான 4

அன்பர்க் கெளிய மருந்து — மற்றை
ஐவர்க்குங் காண்டற் கரிய மருந்து
என்பற்றி லோங்கு மருந்து — என்னை
இன்ப நிலையி லிருத்து மருந்து. ஞான 5

நாதாந்த நாட்டு மருந்து — பர
ஞான வெளியில் நடிக்கு மருந்து
போதாந்தற் கெய்து மருந்து — என்னுள்
பொன்னடி காட்டிப் புணர்ந்த மருந்து. ஞான 6

ஆதி அனுதி மருந்து — திரு
அம்பலத் தேநட மாடு மருந்து
ஜோதி மயமா மருந்து — என்னைச்
சோதியா தாண்ட துரிய மருந்து. ஞான 7

ஆறந்தத் தோங்கு மருந்து — அதற்
கப்பாலுக் கப்பாலு மான மருந்து
ஊறந்த மில்லா மருந்து — எனக்
குள்ளே கலந்த வுறவா மருந்து. ஞான 8

என்னுயிர்க் கன்பா மருந்து — கலந்
தென்னுயிர்க் குள்ளே யிருந்த மருந்து
என்னுயிர் காக்கு மருந்து — என்றும்
என்னுயி ராகிய இன்ப மருந்து. ஞான 9

என்னறி வுட்கொள் மருந்து — என்றும்
என்னறி வாகி யிலங்கு மருந்து
என்னறி வின்ப மருந்து — என்னுள்
என்னறி வுக்கறி வென்னு மருந்து. ஞான 10

என்குரு வான மருந்து — என்றும்
என்தெய்வ மாகி யிருக்கு மருந்து
என்னன்னை யென்னு மருந்து — என்றும்
என்றந்தை யாகிய வின்ப மருந்து. ஞான 11

என்பெரு வாழ்வா மருந்து — என்றும்
என்செல்வ மாகி யிருக்கு மருந்து
என்னுயிர் நட்பா மருந்து — எனக்
கெட்டெட்டுச் சித்தியு மீந்த மருந்து. ஞான 12

என்னிறை யான மருந்து — மகிழ்ந்
தெனக்குத்தன் பொன்மேனி யீந்த மருந்து
தன்னறி வாகு மருந்து — என்னைத்
தந்த மருந்தென்றன் சொந்த மருந்து. ஞான 13

உள்ளத்தி னுள்ளா மருந்து — என்றன்
உயிருக் கனுதி யுறவா மருந்து
தெள்ளத் தெளிக்கு மருந்து — என்னைச்
சிவமாக்கிக் கொண்ட சிவாய மருந்து. ஞான 14

மெய்ப்பொரு ளென்னு மருந்து — எல்லா
வேதா கமத்தும் விளங்கு மருந்து
கைப்பொரு ளான மருந்து — மூன்று
கண்கொண்ட வென்னிரு கண்ணுண் மருந்து. ஞான 15

மதியில் விளைந்த மருந்து — யார்க்கும்
மதிக்கப் படாதபொன் வண்ண மருந்து
கதிதரு மின்ப மருந்து — அருட்
கண்ணுறிலன் றன்னைக் கலந்த மருந்து. ஞான 16

கற்பூர ஜோதி மருந்து — பசுங்
கற்பூர நன்மணங் காட்டு மருந்து
பொற்பூவி னேங்கு மருந்து — என்தற்
போதந் தவிர்த்தசிற் போத மருந்து. ஞான 17

மேலை வெளியா மருந்து — நான்
வேண்டுந் தோறெல்லாம் விளைபு மருந்து
சாலை விளக்கு மருந்து — சுத்த
சமரச சன்மார்க்க சங்க மருந்து. ஞான 18

என்னைத் தானுக்கு மருந்து — இங்கே
இறந்தாரை யெல்லா மெழுப்பு மருந்து
துன்னுமெய்ச் சோதி மருந்து — அருட்
ஜோதியா லென்னைத் துலக்கு மருந்து. ஞான 19

பொய்யர்க் கரிதா மருந்து — என்னைப்
புறத்து மகத்தும் புணர்ந்த மருந்து
கையிற் கிடைத்த மருந்து — சிவ
காமக் கொழுனைக் கலந்த மருந்து. ஞான 20

ஆணவந் தீர்க்கு மருந்து — பர
மானந்தத் தாண்டவ மாடும் மருந்து
மாணவ வண்ண மருந்து — என்னை
வலிய வழைத்து வளர்க்கு மருந்து. ஞான 21

வானே வான மருந்து — என்னை
மாமணி மேடைமேல் வைத்த மருந்து
ஊனந் தவிர்த்த மருந்து — கலந்
துள்ளே யினிக்கின்ற வுண்மை மருந்து. ஞான 22

மலையி லக்கான மருந்து — என்றன்
மறைப்பைத் தவிர்த்தமெய் வாழ்க்கை மருந்து
கலைநலங் காட்டு மருந்து — எங்குங்
கண்ணுகிக் காணுங் கனத்த மருந்து. ஞான 23

அற்புத ஜோதி மருந்து — எல்லாம்
ஆகியன் முகி யமர்ந்த மருந்து
தற்பதந் தந்த மருந்து — எங்குந்
தானே தானுகித் தனித்த மருந்து. ஞான 24

தன்னை யளித்த மருந்து — என்றுஞ்
சாகாத நல்வரந் தந்த மருந்து
பொன்னடி ஈந்த மருந்து — அருட்
போனகந் தந்த புனித மருந்து. ஞான 25

கண்ணுக் கினிய மருந்து — என்றன்
கைப்பொரு ளாந்தங்கக் கட்டி மருந்து
எண்ணுக் கடங்கா மருந்து — என்னை
எதக் குழிவிட் டெடுத்த மருந்து. ஞான 26

சுட்டப் படாத மருந்து — என்றன்
தூக்கமுஞ் சோர்வுந் தொலைத்த மருந்து
எட்டுதற் கொண்ணு மருந்து — நான்
எட்டிப் பிடிக்க இசைந்த மருந்து. ஞான 27

உன்னற் கரிதா மருந்து — எனக்
குள்ளும் புறத்தும் உலாவு மருந்து
தன்னந் தனித்த மருந்து — சுத்தச்
சாக்கீரா தீதச் சபேச மருந்து. ஞான 28

ஒன்றிலொன் முன மருந்து — அந்த
ஒன்றி லிரண்டாகி யோங்கு மருந்து
அன்றிமூன் முன மருந்து — நான்
காகி யைந்தாகி யமர்ந்த மருந்து. ஞான 29

வெளிக்குள் வெளியா மருந்து — எல்லா
வெளியுங் கடந்து விளங்கு மருந்து
ஒளிக்குள் ளொளியா மருந்து — எல்லா
ஒளியுந் தானுகிய வுண்மை மருந்து. ஞான 30

ஆறுறுக் கப்பான் மருந்து — அதற்
கப்புறத் தீராறுக் கப்பான் மருந்து
ஈறுதி யெல்லா மருந்து — என்னை
எல்லாஞ் செயச்செய்த இன்ப மருந்து. ஞான 31

ஆரணத் தோங்கு மருந்து — அருள்
ஆகம மாகி அண்ணிக்கு மருந்து
காரணங் காட்டு மருந்து — எல்லாங்
கண்ட மருந்தென்னுட் கொண்ட மருந்து. ஞான 32

மலமைந்து நீக்கு மருந்து — புவி
வானண்ட மெல்லாம் வளர்க்கு மருந்து
நலமிக் கருளு மருந்து — தானே
நாணித் தாளு நாட்டு மருந்து. 33

ஞான மருந்திம் மருந்து — சுகம்
நல்கிய சிற்சபா நாத மருந்து.

அருட்பெருஞ்ஜோதி

145. ஆனந்தக் களிப்பு 2

இங்கிலீஷ்மெட்டு

இராகம் - சங்கராபரணம் - அடதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

சிவசிவ சிவசிவ ஜோதி — சிவ
சிவசிவ சிவசிவ சிவசிவ ஜோதி
சிவசிவ சிவசிவ ஜோதி.

சரணங்கள்

சிற்பர மாம்பரஞ் ஜோதி — அருட்
சித்தெல்லாம் வல்ல சிதம்பர ஜோதி
தற்பர தத்துவ ஜோதி — என்னைத்
தாளுக்கிக் கொண்ட தயாநிதி ஜோதி. சிவசிவ 1

சித்துரு வாஞ்சுயஞ் ஜோதி — எல்லாஞ்
செய்திட வல்ல சிதம்பர ஜோதி
அத்துவி தானந்த ஜோதி — என்னை
ஆட்கொண் டருளுஞ்சிற் றம்பல ஜோதி. சிவசிவ 2

சின்மய மாம்பெருஞ் ஜோதி — அருட்
செல்வ மளிக்குஞ் சிதப்பர ஜோதி
தன்மய மாய்நிறை ஜோதி — என்னைத்
தந்தமெய் ஜோதி சதானந்த ஜோதி. சிவசிவ 3

ஆதியீ றில்லாமுற் ஜோதி — அரன்
ஆதியர் தம்மை அளித்தபிற் ஜோதி
ஓதி யுணர்வருஞ் ஜோதி — எல்லா
உயிர்களி னுள்ளும் ஒளிர்கின்ற ஜோதி. சிவசிவ 4

மன்னிய பொன்வண்ண ஜோதி — சுக
வண்ணத்த தாம்பரு மாணிக்க ஜோதி
துன்னிய வச்சிர ஜோதி — முத்து
ஜோதி மரகத ஜோதியுட் ஜோதி. சிவசிவ 5

பார்முத லைந்தாமாஞ் ஜோதி — ஐந்திற்
பக்கமேல் கீழ்நடப் பற்றிய ஜோதி
ஓரைம் பொறியுரு ஜோதி — பொறிக்
குள்ளும் புறத்தும் ஒளிர்கின்ற ஜோதி. சிவசிவ 6

ஐம்புல முந்தானுஞ் ஜோதி — புலத்
தகத்தும் புறத்து மலர்ந்தாளிர் ஜோதி
பொய்ம்மயல் போக்குமுட் ஜோதி — மற்றைப்
பொறிபுலன் உள்ளும் புறத்துமாஞ் ஜோதி. சிவசிவ 7

மனமாதி யெல்லாமாஞ் ஜோதி — அவை
வாழ வகம்புறம் வாழ்கின்ற ஜோதி
இனமான வுள்ளக ஜோதி — சற்றும்
ஏழு திறங்கா திபக்குமோர் ஜோதி. சிவசிவ 8

மூக்குணமு மூன்றுஞ் ஜோதி — அவை
முன்பின் னியங்க முடுக்கிய ஜோதி
எக்குணத் துள்ளுமாஞ் ஜோதி — குணம்
எல்லாங் கடந்தீத யிலங்கிய ஜோதி. சிவசிவ 9

பகுதிமூன் றுகிய ஜோதி —மூலப்
பகுதிகள் மூன்றும் படைத்தருள் ஜோதி
விகுதி பலவாக்குஞ் ஜோதி — சற்றும்
விகுதியொன் றின்றி விளக்கிய ஜோதி. சிவசிவ 10

காலமுதற் காட்டுஞ் ஜோதி — கால
காரணத் தப்பால் கடந்தொளிர் ஜோதி
கோலம் பலவாகுஞ் ஜோதி — ஒன்றுங்
குறிக்கப் படாச்சிற் குணப்பெருஞ் ஜோதி. சிவசிவ 11

தத்துவ மெல்லாமாஞ் ஜோதி — அத்தத்
தத்துவ மெல்லாந் தருவிக்குஞ் ஜோதி
அத்துவிதப் பெருஞ் ஜோதி — எல்லாம்
அருளில் விளங்க வடர்த்திய ஜோதி. சிவசிவ 12

சத்தர்க ளெல்லாமாஞ் ஜோதி — அவர்
சத்நிக ளெல்லாந் தழைப்பிக்குஞ் ஜோதி
முத்த ரனுபவ ஜோதி — பர
முத்தியாஞ் ஜோதிமெய்ச் சித்தியாஞ் ஜோதி. சிவசிவ 13

ஆறந்தத் தேநிறை ஜோதி — அவைக்
கப்புறத் தப்பாலு மாகிய ஜோதி
வீறும் பெருவெளி ஜோதி — மேலும்
வெட்ட வெளியில் விளங்கிய ஜோதி. சிவசிவ 14

பேரருட் ஜோதியுட் ஜோதி — அண்ட
பிண்டங்க ளெல்லாம் பிறங்கிய ஜோதி
வாரமுற் றோங்கிய ஜோதி — மன
வாக்குக் கெட்டாததோர் மாமணி ஜோதி. சிவசிவ 15

ஒன்றுண பூரண ஜோதி — அன்பில்
ஒன்றுத உள்ளத்தி லொன்றுத ஜோதி
என்று பொளிர்கின்ற ஜோதி — என்னுள்
என்றும் விளங்கிய என்னுயிர் ஜோதி. சிவசிவ 16

மெய்யேமெய் யாகிய ஜோதி — சுத்த
வேதாந்த வீட்டில் விளங்கிய ஜோதி
துய்ய சிவானந்த ஜோதி — குரு
துரியத் தலத்தே துலங்கிய ஜோதி. சிவசிவ 17

சிவமய மாஞ்சுத்த ஜோதி — சுத்த
சித்தாந்த வீட்டில் சிறந்தொளிர் ஜோதி
உவமை யில்லாப்பெருஞ் ஜோதி — என
துள்ளே நிரம்பி யொளிர்கின்ற ஜோதி. சிவசிவ 18

என்னைத் தாலைக்கிய ஜோதி — இங்கே
இறந்தாரை யெல்லா மெழுப்புமோர் ஜோதி
அன்னைக்கு மிக்கருட் ஜோதி — என்னை
ஆண்டமு தந்தந்த ஆனந்த ஜோதி. சிவசிவ 19

சித்தஞ் சிவமாக்குஞ் ஜோதி — நான்
செய்த தவத்தால் தெரிந்தவுட் ஜோதி
புத்தமு தாகிய ஜோதி — சுக
பூரண மாயொளிர் காரண ஜோதி. சிவசிவ 20

தம்பத்தி லேற்றிய ஜோதி — அப்பால்
சார்மணி மேடைமேற் ருன்வைத்த ஜோதி
விம்பப் பெருவெளி ஜோதி — அங்கே
வீதியும் வீடும் விளக்கிய ஜோதி. சிவசிவ 21

சுகமய மாகிய ஜோதி — எல்லா
ஜோதியு மான சொரூபவுட் ஜோதி
அகமிதந் தீர்த்தருள் ஜோதி — சச்சி
தானந்த ஜோதி சதானந்த ஜோதி. சிவசிவ 22

நித்த பரானந்த ஜோதி — சுத்த
நிரதி சயானந்த நித்திய ஜோதி
அத்துவி தானந்த ஜோதி — எல்லா
ஆனந்த வண்ணமு மாகிய ஜோதி. சிவசிவ 23

பொய்யாத புண்ணிய ஜோதி —எல்லாப்
பொருளும் விளங்கப் புணர்த்திய ஜோதி
நையா தருள்செய்த ஜோதி — ஒரு
நானுந் தானுமொன்ருய் நண்ணிய ஜோதி. சிவசிவ 24

கண்ணிற் கலந்தருள் ஜோதி — உளக்
கண்ணுயிர்க் கண்ணருட் கண்ணுமாஞ் ஜோதி
எண்ணிற் படாப்பெருஞ் ஜோதி — நான்
எண்ணிய வண்ண மியற்றிய ஜோதி. சிவசிவ 25

விந்து வொளிநடு ஜோதி — பர
விந்து வொளிக்குள் விளங்கிய ஜோதி
நந்துயர் தீர்த்தருட் ஜோதி — பர
நாதாந்த நாட்டுக்கு நாயக ஜோதி. சிவசிவ 26

தானன்றி யொன்றிலா ஜோதி — என்னைத்
தன்மய மாக்கிய சத்திய ஜோதி
நானின்று கண்டதோர் ஜோதி — தானே
நாளுகி வாழ்ந்திட நல்கிய ஜோதி. சிவசிவ 27

தன்னிக ரில்லதோர் ஜோதி — சுத்த
சன்மார்க்க சங்கந் தழுவிய ஜோதி
என்னுள் நிறைந்தமெய் ஜோதி — என்னை
ஈன்றைத் தொழில்செய்பென் றேவிய ஜோதி. சிவசிவ 28

அச்சந் தவிர்த்தமெய் ஜோதி — என்னை
ஆட்கொண் டருளிய அம்பல ஜோதி
இச்சை யெலாந்தந்த ஜோதி — உயிர்க்
கிங்குமங் கென்னும லெங்குமாஞ் ஜோதி. சிவசிவ 29

காலையில் நான்கண்ட ஜோதி — எல்லாக்
காட்சியும் நான்காணக் காட்டிய ஜோதி
ஞாலமும் வானுமாஞ் ஜோதி — என்னுள்
நாளுகித் தாளுகி நண்ணிய ஜோதி. சிவசிவ 30

ஏகாந்த மாகிய ஜோதி — என்னுள்
என்றும் பிரியா திருக்கின்ற ஜோதி
சாகா வரந்தந்த ஜோதி — என்னைத்
தாளுக்கிக் கொண்டதோர் சத்திய ஜோதி. சிவசிவ 31

சுத்த சிவமய ஜோதி — என்னை
ஜோதி மணிமுடி சூட்டிய ஜோதி
சத்திய மாம்பெருஞ் ஜோதி — நானே
தாளுகி யாளத் தயவுசெய் ஜோதி. 32

சிவசிவ சிவசிவ ஜோதி — சிவ
சிவசிவ சிவசிவ சிவசிவ ஜோதி
சிவசிவ சிவசிவ ஜோதி.

அருட்பெருஞ்ஜோதி

146. ஆனந்தக் களிப்பு 3

இராகம் - கமாஸ் - ஆதிதாளம்.

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

ஜோதியுட் ஜோதியுட் ஜோதி — சுத்த
ஜோதி சிவஜோதி ஜோதியுட் ஜோதி
ஜோதியுட் ஜோதியுட் ஜோதி.

சரணங்கள்

சிவமே பொருளென்று தேற்றி — என்னைச்
சிவவெளிக் கேறுஞ் சிகரத்தி லேற்றி
சிவமாக்கிக் கொண்டது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 1

வித்தெல்லா மொன்றென்று காட்டி — அதில்
விளைவு பலபல வேறென்று காட்டி
சித்தெல்லாந் தந்தது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 2

சொல்வந்த அந்தங்க ளாறும் — ஒரு
சொல்லாலே ஆமென்றச் சொல்லாலே வீறும்
செல்வங் கொடுத்தது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 3

தங்கோ லவெனக் கோதிச் — சுத்த
சமரச சத்திய சன்மார்க்க நீதிச்
செங்கோ லளித்தது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 4

ஆபத்தை நீக்கி வளர்த்தே — சற்றும்
அசையாமல் அவியாம லடியே னுளத்தே
தீபத்தை வைத்து பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 5

மெய்யொன்று சன்மார்க்க மேதான் — என்றும்
விளங்கப் படைப்பாதி மெய்த்தொழில் நீதான்
செய்யென்று தந்தது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 6

என்பால் வருபவர்க் கின்றே — அருள்
ஈகின்றேன் ஈகின்றேன் ஈகின்றே னென்றே
தென்பா லிருந்தது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 7

துரிய தலமூன்றின் மேலே — சுத்த
துரியப் பதியி லதுவத னூலே
தெரியத் தெரிவது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 8

பரைதூக்கிக் காட்டிய காலே — ஆதி
பரையிவர்க் கப்பாலப் பாலென்று மேலே
திரைதூக்கிக் காட்டுதல் பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 9

தற்பர மேவடி வாகி — அது
தன்னைக் கடந்து தனியுரு வாகிச்
சிற்பரத் துள்ளது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 10

நவவெளி கால்வகை யாதி — ஒரு
நடவெளிக் குள்ளே நடத்திய நீதி
சிவவெளி யாமிது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 11

மேருவெற் புச்சியின் பாலே — நின்று
விளங்குமோர் தம்பத்தின் மேலுக்கு மேலே
சேருமோர் மேடைமேற் பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 12

ஆரண வீதிக் கடையும் — சுத்த
ஆகம வீதிக ளந்தக் கடையும்
சேர நடுக்கடை பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 13

பாடல் மறைகளோர் கோடி — அருட்
பாத வுருவ சொருபங்கள் பாடி
தேட இருந்தது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 14

நீடு சிவகாமங் கோடி — அருள்
நேருறப் பாடியு மாடியு மோடி
தேட இருந்தது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 15

பத்தி நெறியிற் செழித்தே — அன்பிற்
பாடுமெய் யன்பர் பதியிற் பழுத்தே
தித்தித் திருப்பது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 16

பித்தாடு மாயைக்கு மேலே — சுத்த
பிரம வெளியினிற் பேரரு ளாலே
சித்தாடு கின்றது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 17

தருநெறி யெல்லாமுள் வாங்கும் — சுத்த
சன்மார்க்க மென்னீரூர் தனிப்பேர்கொண் டோங்குந்
திருநெறிக் கேசென்று பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 18

எம்பொரு ளெம்பொரு ளென்றே — சொல்லும்
எல்லாச் சமயத்துள் எல்லார்க்கும் ஒன்றே
செம்பொரு ளென்பது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 19

சைவ முதலாக நாட்டும் — பல
சமயங்க ளெல்லாந் தனித்தனிக் காட்டுந்
தெய்வ மிதுவந்து பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 20

எள்ளலில் வான்முதல் மண்ணும் — அமு
தெல்லா மிதிலோ ரிறையள வென்னும்
தெள்ளமு தாமிது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 21

எத்தாலு மாகாதே அம்மா — என்றே
எல்லா வுலகு மியம்புதல் சும்மா
செத்தாரை மீட்பது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 22

பிறந்து பிறந்துழன் றேனை — என்றும்
பிறவா திறவாப் பெருமைதந் தானைச்
சிறந்தோளிர் வித்தது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 23

வருவித்த வண்ணமு நானே — இந்த
மாநிலத் தேதெரியும் வண்ணமுந் தானே
தெரிவித் தருளிற்றுப் பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 24

பாரிடம் வானிட மற்றும் — இடம்
பற்றிய முத்தர்கள் சித்தர்கள் முற்றும்
சேரிட மாமிது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 25

உய்யிள்ளை பற்பல ராவல் — கொண்டே
உலகத் திருப்பவிங் கென்னைத்தன் னேவல்
செய்யிள்ளை யாக்கிற்றுப் பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 26

உருவு முளர்வுஞ்செய் கன்றி — அறி
வுளமு மெனக்கே யுதவிய தன்றித்
திருவுங் கொடுத்தது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 27

எண்ணிய வெண்ணைந்த லெல்லாம் — கான்
எண்ணிய வாறே யினிதுதந் தென்னைத்
திண்ணிய ஞக்கிற்றுப் பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி 28

பேருல கெல்லா மதிக்கத் — தன்
பிள்ளையென் றென்னைப் பெயரிட் டழைத்தே
சீருறச் செய்தது பாரீர் — திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. 29

ஜோதியுட் ஜோதியுட் ஜோதி — சுத்த
ஜோதி சிவஜோதி ஜோதியுட் ஜோதி
ஜோதியுட் ஜோதியுட் ஜோதி.

அருட்பெருஞ்ஜோதி

147. நெஞ்சொடு கிளத்தல்

இராகம் - இந்துஸ்தான் காபி - சாப்பு தாளம்.

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

அஞ்சாதே நெஞ்சே அஞ்சாதே
அஞ்சாதே நெஞ்சே அஞ்சாதே.

சரணங்கள்

வஞ்சமி லாநாம் வருந்திடி லப்போதே
அஞ்சலென் பாரிதோ அம்பலத் திருக்கின்றார். அஞ்சாதே 1

துய்ய மருட்பெருஞ் ஜோதியார் நம்முடை
அய்ய ரிதோதிரு அம்பலத் திருக்கின்றார். அஞ்சாதே 2

மண்ணில் நமையாண்ட வள்ளலார் நம்முடை
அண்ணை லிதோதிரு அம்பலத் திருக்கின்றார். அஞ்சாதே 3

இப்புவி யில்நம்மை யென்றுகொண் டாண்டகம்
அப்ப ரிதோதிரு அம்பலத் திருக்கின்றார். அஞ்சாதே 4

சித்த ரெலாம்வல்ல தேவர் நமையாண்ட
அத்த ரிதோதிரு அம்பலத் திருக்கின்றார். அஞ்சாதே 5

ஜோதி அருட்பெருஞ் ஜோதியார் நம்முடை
ஆதி யிதோதிரு அம்பலத் திருக்கின்றார். அஞ்சாதே 6

தாண்டவ ரூபினைத் தான்தடுத் தாட்கொண்ட
ஆண்டவ ரிதோதா அம்பலத் திருக்கின்றார். அஞ்சாதே 7

வன்பர் மனத்தை மதியா தவர்நம
தன்ப ரிதோதிரு அம்பலத் திருக்கின்றார். அஞ்சாதே 8

தெருளுடை யாரெலாஞ் செய்யவல் லார்திரு
அருளுடை யாரிதோ அம்பலத் திருக்கின்றார். அஞ்சாதே 9

நம்மையாட் கொள்ள நடம்புரி வார்நம
தம்மையி னிதோதா அம்பலத் திருக்கின்றார். அஞ்சாதே 10

தன்னை யொப்பார்சிற் சபைநடஞ் செய்கின்றூர்
அன்னை யொப்பாரிதோ அம்பலத் திருக்கின்றூர். அஞ்சாதே 11

பாடுகின் றூர்க்கருட் பண்பினர் ஞானக்கூத்
தாடுகின்று ரிதோ அம்பலத் திருக்கின்றூர். அஞ்சாதே 12

காதரிப் பார்கட்குக் காட்டிக் கொடார்நம்மை
ஆதரிப் பாரிதோ அம்பலத் திருக்கின்றூர். அஞ்சாதே 13

நீளவல் லார்க்குமேல் நீளவல்லார் நம்மை
ஆளவல்லா ரிதோ அம்பலத் திருக்கின்றூர். அஞ்சாதே 14

இன்புடை யார்நம் மிதயத் தமர்ந்தபோர்
அன்புடையா ரிதோ அம்பலத் திருக்கின்றூர். அஞ்சாதே 15

உபய பதத்தைநம் உச்சிமேற் சூட்டிய
அபய ரிதோதிரு அம்பலத் திருக்கின்றூர். அஞ்சாதே 16

வேண்டுகொண் டாவென்ன மேனிலக் கேற்றியே
ஆண்டுகொண் டாரிதோ அம்பலத் திருக்கின்றூர். அஞ்சாதே 17

எச்சம்பெ றேல்மகனே யென்றென் னுள்ளூற்ற
அச்சந் தவிர்த்தவர் அம்பலத் திருக்கின்றூர். அஞ்சாதே 18

நமுதன் முதற்பல நன்மையு மாப்ஞான
அமுத ரிதோதிரு அம்பலத் திருக்கின்றூர். அஞ்சாதே 19

செடிகள் தவிர்த்தருட் செல்வ மளிக்கின்ற
அடிக ளிதோதிரு அம்பலத் திருக்கின்றூர். அஞ்சாதே 20

விரசுல கெல்லாம் விரித்தைந் தொழில்தரும்
அரசுடை யாரிதோ அம்பலத் திருக்கின்றூர். அஞ்சாதே 21

செறிவுடை யாருளத் தேநடஞ் செய்கின்ற
அறிவுரு வாரிதோ அம்பலத் திருக்கின்றூர். 22

அஞ்சாதே நெஞ்சே அஞ்சாதே
அஞ்சாதே நெஞ்சே அஞ்சாதே.

அருட்பெருஞ்ஜோதி

இரண்டாவது திருமுறை

148. ஆனந்தக் களிப்பு 4

இராகம் - நாதநாமக்கிரியை - ரூபக தாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

நல்ல மருந்திம் மருந்து — சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து. நல்ல

சரணங்கள்

அருள்வடி வான மருந்து — நம்முள்
அற்புத மாக அமர்ந்த மருந்து
இருளற வோங்கு மருந்து — அன்பர்க்
கின்புரு வாக இருந்த மருந்து. நல்ல 1

சஞ்சலந் தீர்க்கு மருந்து — எங்குந்
தானேதா னெகித் தழைக்கு மருந்து
அஞ்சலென் றருளு மருந்து — சச்சி
தானந்த மாக அமர்ந்த மருந்து. நல்ல 2

வித்தக மான மருந்து — சதுர்
வேத முடிவில் விளங்கு மருந்து
தத்துவா தீத மருந்து — என்னைத்
தாளுக்கிக் கொண்ட தயாள மருந்து. நல்ல 3

பிறப்பை யொழிக்கு மருந்து — யார்க்கும்
பேசப் படாத பெரிய மருந்து
இறப்பைத் தவிர்க்கு மருந்து — என்னுள்
என்றும் மதுரித் திணிக்கு மருந்து. நல்ல 4

ஞானது வாகு மருந்து — பர
ஞான வெளியில் நடிக்கு மருந்து
மோன வடிவா மருந்து — ஜீவன்
முத்த ருளத்தீ முடிக்கு மருந்து. நல்ல 5

புத்தமு தாகு மருந்து — பார்த்த
போதே பிணிகளைப் போக்கு மருந்து
பத்த ரருந்து மருந்து — அணு
பானமுந் தாணும் பரம மருந்து. நல்ல 6

மாலயன் தேடு மருந்து — முன்னம்
மார்க்கண்ட ரைச்காக்க வந்த மருந்து
காலனைச் சாய்த்த மருந்து — தேவர்
காணுங் கனவினுங் காண மருந்து. நல்ல 7

தற்பர யோக மருந்து — உப
சாந்த ருளத்திடைச் சார்ந்த மருந்து
சிற்பர யோக மருந்து — உயர்
தேவரெல் லாந்தொழுந் தெய்வ மருந்து. நல்ல 8

அம்பலத் தாடு மருந்து — பர
மானந்த வெள்ளத் தழுத்து மருந்து
எப்பல மாகு மருந்து — வேளூர்
என்னுந் தலத்தி லிருக்கு மருந்து. நல்ல 9

சேதப்ப டாத மருந்து — உண்டாற்
றேன்போ லினிக்குந் தெவிட்டா மருந்து
பேதப்ப டாத மருந்து — மலைப்
பெண்ணிடங் கொண்ட பெரிய மருந்து. நல்ல 10

ஆர்க்கு மரிதா மருந்து — தானே
ஆதி யனுதிபு மான மருந்து
சேர்க்கும் புனித மருந்து — தன்னைத்
தேடுவோர் தங்களை நாடு மருந்து. நல்ல 11

புண்ணியர்க் கான மருந்து — பரி
பூரண மாகப் பொருந்து மருந்து
எண்ணிய வின்ப மருந்து — எம
தெண்ணமெல் லாமுடித் திட்ட மருந்து. நல்ல 12

பால்வண்ண மாகு மருந்து — அதிற்
பச்சை நிறமும் படர்ந்த மருந்து
நூல்வண்ணை நாடு மருந்து — உள்ளே
நோக்குகின் றோர்களை நோக்கு மருந்து. நல்ல 13

பார்க்கப் பறிபோ மருந்து — தன்னைப்
பாராத வர்களைச் சேரா மருந்து
கூர்க்கத் தெரிந்த மருந்து — அணு
கூல மருந்தென்று கொண்ட மருந்து. நல்ல 14

கோதிலா தோங்கு மருந்து — அன்பர்
கொள்ளைகொண் டுண்ணைக் குலாவு மருந்து
மாதொரு பாக மருந்து — என்னை
வாழ்வித்த வென்கண் மணியா மருந்து. கல்ல 15

ஏக வுருவா மருந்து — மிக்க
ஏழைக ளுக்கு மிரங்கு மருந்து
சோகந் தவிர்க்கு மருந்து — பரஞ்
ஜோதிபென் றன்பர் துதிக்கு மருந்து. கல்ல 16

கோமளங் கூடு மருந்து — நலங்
கொடுக்கத் துஜங்கட்டிக் கொண்ட மருந்து
நாமள வாத மருந்து — நம்மை
நாமறி யுப்படி நண்ணு மருந்து. கல்ல 17

செல்வந் தழைக்கு மருந்து — என்றுங்
தீரா வினையெலாந் தீர்த்த மருந்து
நல்வந் தணைகொண் மருந்து — பர
நாதாந்த வீட்டினு நண்ணு மருந்து. கல்ல 18

வாய்பிடி யாத மருந்து — மத
வாதமும் பித்தமு மாய்க்கு மருந்து
நோய்பொடி யாக்கு மருந்து — அன்பர்
நோக்கிய நோக்கினுள் நோக்கு மருந்து. கல்ல 19

பெண்ணைசை தீர்க்கு மருந்து — பொருட்
பேராசை யெல்லாம் பிளக்கு மருந்து
மண்ணைசை தீர்க்கு மருந்து — எல்லாம்
வல்ல மருந்தென்று வாழ்த்து மருந்து. கல்ல 20

என்றுங் கெடாத மருந்து — வரும்
எல்லாப் பிணிக்கு மிதுவே மருந்து
துன்றுஞ் சிவோக மருந்து — நம்மைச்
சூழ்ந்திரு மைக்குந் துணையா மருந்து. கல்ல 21

கண்ணெளி காட்டு மருந்து — அம்மை
கண்டு கலந்து களிக்கு மருந்து
விண்ணெளி யாகு மருந்து — பர
வீடு தருங்கங்கை வேணி மருந்து. கல்ல 22

காயாம்பூ வண்ணை மருந்து — ஓரு
கஞ்ச மலர்மிசைக் காணு மருந்து
தாயாங் கருணை மருந்து — சிற்
சதாசிவ மானமெய்ஞ் ஞான மருந்து. நல்ல 23

அளவைக் கடந்த மருந்து — யார்க்கும்
அருமை யருமை அருமை மருந்து
உளவிற் கிடைக்கு மருந்து — ஒன்றும்
ஒப்புயர் வில்லா துயர்ந்த மருந்து. நல்ல 24

தன்மய மாகு மருந்து — சிவ
சாதனர் நெஞ்சிற் றழைக்கு மருந்து
சின்மய ஜோதி மருந்து — அட்ட
சித்தியு முத்தியுஞ் சேர்க்கு மருந்து. நல்ல 25

மறந்தா லொளிக்கு மருந்து — தன்னை
மறவா தவருள் வழங்கு மருந்து
இறந்தா லெழுப்பு மருந்து — எனக்
கென்றுந் துணையா யிருக்கு மருந்து. நல்ல 26

கரும்பி னினிக்கு மருந்து — கடுங்
கண்டகர்க் கெல்லாங் கசக்கு மருந்து
இரும்பைக் குழைக்கு மருந்து — பே
ரின்ப வெள்ளத்தே யிழுக்கு மருந்து. நல்ல 27

அணிமணி கண்ட மருந்து — அருள்
ஆனந்த சுத்த அகண்ட மருந்து
பிணிதவி ரின்ப மருந்து — யார்க்கும்
பேசா மருந்தென்று பேசு மருந்து. நல்ல 28

மூவர்க் கரிய மருந்து — செல்வ
முத்துக் குமாரனை யீன்ற மருந்து
நாவிற் கினிய மருந்து — தைப
பூசங் கண்டு தழுவு மருந்து. 29

நல்ல மருந்திம் மருந்து — சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து.

அருட்பெருஞ்ஜோதி

இரண்டாவது திருமுறை

149. பாங்கியர்க் கறிவுறுத்தல்

கண்ணிகள்

இராகம் - ஆனந்த பைரவி - ஆதிதாளம்.

அருட்பெருஞ்ஜோதி

அம்பலத்தி லாடுகின்றார் பாங்கிமாரே — அவர்
ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன் பாங்கிமாரே. 1

ஆடுகின்ற சேவடிமேற் பாங்கிமாரே — மிக
ஆசைகொண்டு வாடுகின்றேன் பாங்கிமாரே. 2

இன்பவடி வாய்ச்சபையிற் பாங்கிமாரே — நடம்
இட்டவர்மே லிட்டம் வைத்தேன் பாங்கிமாரே. 3

ஈனவுடற் கிச்சைவையேன் பாங்கிமாரே — நட
ராசர்தமை யெய்துமம்வண்ணம் பாங்கிமாரே. 4

உத்தமர்பொன் னம்பலத்தே பாங்கிமாரே — இன்ப
உருவாகி யோங்குகின்றார் பாங்கிமாரே. 5

ஊனவுல கைக்கருதேன் பாங்கிமாரே — மன்றில்
உத்தமருக் குறவாவேன் பாங்கிமாரே. 6

கற்பனையெல் லாங்கடந்தார் பாங்கிமாரே — என்றன்
கற்பனைக்குட் படுவாரோ பாங்கிமாரே. 7

கண்டிலர்நான் படும்பாடு பாங்கிமாரே — மூன்று
கண்ணுடையா ரென்பாரைபோ பாங்கிமாரே. 8

கன்மனமெல் லாங்கரைப்பார் பாங்கிமாரே — மனங்
கரையாரென் னளவிலே பாங்கிமாரே. 9

கள்ளமொன்று மறியேனென் பாங்கிமாரே — என்னைக்
கைவிடவுந் துணிவாரோ பாங்கிமாரே. 10

கற்பழித்துக் கலந்தாரே பாங்கிமாரே — இன்று
கைதழுவ விடுவாரோ பாங்கிமாரே. 11

கண்டவரெல் லாம்பழிக்கப் பாங்கிமாரே — என்றன்
கன்னியழித் தேதியொளித்தார் பாங்கிமாரே. 12

காமனைக்கண் ணிலெரித்தார் பாங்கிமாரே — என்றன்
காதலைக்கண் டறிவாரோ பாங்கிமாரே. 13

காவலையெல் லாங்கடந்து பாங்கிமாரே — என்னைக்
கைகலந்த கள்ளரவர் பாங்கிமாரே. 14

காணவிழைந் தேனவரைப் பாங்கிமாரே — கொண்டு
காட்டுவாரை யறிந்திலேன் பாங்கிமாரே. 15

கிட்டவர வேண்டுமென்றார் பாங்கிமாரே — நான்
கிட்டுமுன்னே எட்டநின்றார் பாங்கிமாரே. 16

கின்னரங்கே ளென்றிசைத்தார் பாங்கிமாரே — நான்
கேட்பதன்முன் சேட்படித்தார் பாங்கிமாரே. 17

கிள்ளையைத்தூ தாவிடுத்தேன் பாங்கிமாரே — அது
கேட்டுவரக் காணேனையோ பாங்கிமாரே. 18

கீதவகை பாடிநின்றார் பாங்கிமாரே — அது
சேட்டுமதி மயங்கினேன் பாங்கிமாரே. 19

கீழ்மைகுறி யாமிலென்னைப் பாங்கிமாரே — மனக்
கேண்மைகுறித் தாரேயன்று பாங்கிமாரே. 20

கீடமனை யேனையையும் பாங்கிமாரே — அடிக்
கேயடிமை கொண்டாரன்று பாங்கிமாரே. 21

குற்றமெல்லாம் குணமாகப் பாங்கிமாரே — கொள்ளுங்
கொற்றவரென் கொழுநர்காண் பாங்கிமாரே. 22

குற்றமொன்றுஞ் செய்தறியேன் பாங்கிமாரே — என்னைக்
கொண்டுகுலம் பேசுவாரோ பாங்கிமாரே. 23

குஞ்சிதப்பொற் பாதங்கண்டாற் பாங்கிமாரே — உள்ள
குறையெல்லாந் தீருங்கண்டீர் பாங்கிமாரே. 24

கூற்றுதைத்த பாதங்கண்டீர் பாங்கிமாரே — நுங்கள்
குடிக்கெல்லாங் குலதெய்வம் பாங்கிமாரே. 25

கூறரிய பதங்கண்டு பாங்கிமாரே — களி
கொண்டுநிற்க விழைந்தேனன் பாங்கிமாரே. 26

கூடல்விழைந் தேனவரைப் பாங்கிமாரே — அது
கூடும்வண்ணங் கூட்டிடுவீர் பாங்கிமாரே. 27

அருட்பெருஞ்ஜோதி

இரண்டாவது திருமுறை

150. வெண்ணிலா

கண்ணிகள்

இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே — ஒரு
தந்திரநீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே. 1

நாதமுடி மேலிருந்த வெண்ணிலாவே — அங்கே
நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 2

சச்சிதா னந்தக்கடலில் வெண்ணிலாவே — நானுந்
தாழ்ந்துவிழ வேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 3

இராப்பகலில் லாவிடத்தே வெண்ணிலாவே — நானும்
இருக்க வெண்ணி வாடுகின்றேன் வெண்ணிலாவே. 4

தேசுநிற மாய்நிறைந்த வெண்ணிலாவே — நானுந்
சிவமயம தாய்விழைந்தேன் வெண்ணிலாவே. 5

போதநடு வூடிருந்த வெண்ணிலாவே — மலப்
போதமற வேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 6

ஆருமறி யாமலிங்கே வெண்ணிலாவே — அரு
ளாளர்வரு வாரோசொல்லாய் வெண்ணிலாவே. 7

அந்தரங்க சேவைசெய்ய வெண்ணிலாவே — எங்கள்
அய்யர்வரு வாரோசொல்லாய் வெண்ணிலாவே. 8

வேதமுடி மேலிருந்த வெண்ணிலாவே — மல
வேதையுள வேதுசொல்லாய் வெண்ணிலாவே. 9

குண்டலிப்பால் நின்றிலங்கும் வெண்ணிலாவே — அந்த
குண்டலிப்பால் வேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 10

ஆதியந்த மென்றுரைத்தார் வெண்ணிலாவே — அந்த
ஆதியந்த மாவதென்ன வெண்ணிலாவே. 11

வித்திலாம லேவிளைந்த வெண்ணிலாவே — நீதான்
விளைந்தவண்ண மேதுசொல்லாய் வெண்ணிலாவே. 12

மூப்பொருளு மொன்றதென்பார் வெண்ணிலாவே — அந்த
மூன்றுமொன்றுய் முடிந்ததென்ன வெண்ணிலாவே. 13

நானதுவாய் நிற்கும்வண்ணம் வெண்ணிலாவே — ஒரு
ஞானநெறி சொல்லுகண்டாய் வெண்ணிலாவே. 14

ஞானமய மாய்விளங்கும் வெண்ணிலாவே — என்னை
நானறியச் சொல்லுகண்டாய் வெண்ணிலாவே. 15

வாசிவாசி யென்றுரைத்தார் வெண்ணிலாவே — அந்த
வாசியென்னப் பேசுகண்டாய் வெண்ணிலாவே. 16

ஐந்தலைப்பாம் பாட்டுகின்றூர் வெண்ணிலாவே — அவர்
அம்பலத்தில் நின்றதென்ன வெண்ணிலாவே. 17

ஓரேழுத்தில் ஐந்துண்டென்பார் வெண்ணிலாவே — அது
ஊமையெழுத் தாவதென்ன வெண்ணிலாவே. 18

அம்பலத்தி லாடுகின்றூர் வெண்ணிலாவே — அவர்
ஆடுகின்ற வண்ணமென்ன வெண்ணிலாவே. 19

அந்தரத்தி லாடுகின்றூர் வெண்ணிலாவே — அவர்
ஆடும்வகை யெப்படியோ வெண்ணிலாவே. 20

அணுவிலணு வாயிருந்தார் வெண்ணிலாவே — எங்கும்
ஆகின்ற வண்ணமென்ன வெண்ணிலாவே. 21

அண்டபகி ரண்டமெல்லாம் வெண்ணிலாவே — ஐயர்
ஆட்டமென்று சொல்வதென்ன வெண்ணிலாவே. 22

அம்பரத்தி லாடுகின்றூர் வெண்ணிலாவே — என்னை
ஆட்டுகின்ற ரிம்பரத்தே வெண்ணிலாவே. 23

அருட்பெருஞ்ஜோதி

இரண்டாவது திருமுறை

151. நடேசர் கொம்மி

இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

கொம்மியடிப் பெண்கள் கொம்மியடி — இரு
கொங்கை குலுங்கவே கொம்மியடி.

அனுபல்லவி

நம்மை யாளும்பொன் னம்பல வாணரின
காடிக் கொம்மி யடியுங்கடி — பதம் — பாடிக் கொம்மி யடியுங்கடி.

சரணங்கள்

காம மகற்றிய தூயனடி — சிவ — காம சௌந்தரி நேயனடி
மாமறை யோதுசெவ் வாயனடி — மணி — மன்றெனு ஞானவா காயனடி. 1

ஆனந்தத் தாண்டவ ராஜனடி — நமை — ஆட்கொண் டருளிய தேஜனடி
வானந்த மாமலை மங்கைமகிழ் — வடி — வானனடி மண வாளனடி. 2

கல்லைக் கனிவிக்குஞ் சுத்தனடி — முடி — கங்கைக் கருளிய கர்த்தனடி
தில்லைச் சிதம்பர சித்தனடி — தேவ — சிங்கமடி உயர் தங்கமடி. 3

பெண்ணொரு பால்வைத்த மத்தனடி — சிறு — பிள்ளைக் கறிகொண்ட பித்தனடி
நண்ணி நமக்கரு ளத்தனடி — மிக — நல்லனடி யெல்லாம் வல்லனடி. 4

அம்பலத் தாடல்செய் ஐயனடி — அன்ப — ரன்புக் கெளிதரு மெய்யனடி
தும்பை முடிக்கணி தூயனடி — சுயஞ் — ஜோதி யடிபரஞ் ஜோதியடி. 5

அருட்பெருஞ்ஜோதி

இரண்டாவது திருமுறை

152. சிலதாலம்வாதம்

கண்ணிகள்

இராகம் - சிந்துபைரவி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

தண்மதி யொண்முகப் பெண்மணியே — உன்னைத்
தான்கொண்ட நாயக ராரேடி?
அண்மையிற் பொன்னணி அம்பலத் தாடல்செய்
ஐய ரமுத ரழகரடி. 1

செங்கயற் கண்மட மங்கை நல்லாய் — உன்றன்
செங்கை பிடித்தவ ராரேடி?
அங்கய லாரன்று பொன்னம்ப லத்திதங்கள்
ஆனந்தத் தாண்டவ ராஜனடி. 2

கன்னற் சுவைமொழி மின்னிடையாய் — உன்னைக்
கன்னி யழித்தவ ராரேடி?
உன்னற் கரியபொன் னம்பலத் தாடல்செய்
உத்தம ரானந்த நித்தரடி. 3

தீமையி லாதபெண் மாமயிலே — உன்னைச்
சேர்ந்து கலந்தவ ராரேடி?
தாமமு டிக்கணிந் தப்பலத் தேயின்பத்
தாண்டவஞ் செய்புஞ் சதுரரடி. 4

அன்னநடைப் பெண்க ளாரமுதே — உன்னை
அன்பிற் புணர்ந்தவ ராரேடி?
துன்ன லுடையின ரப்பலத் தேநின்ற
தூய திருநட ராயரடி. 5

காரள கப்பெண் சிகாமணியே — உன்றன்
கற்பை யழித்தவ ராரேடி?
பேரளவைக் கடந் தம்பலத் தேநின்ற
பித்தர் பரானந்த நித்தரடி. 6

அருட்பெருஞ்ஜோதி

கீர்த்தனைகள்

இரண்டாவது திருமுறை

153. நடேசர் கீர்த்தனை 1

இராகம் - தோடி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

தெண்டனிட்டே னென்று சொல்லடி — சுவாமிக்கு நான்
தெண்டனிட்டே னென்று சொல்லடி.

அனுபல்லவி

தண்டலை விளங்குந் தில்லைத் தலத்திற் பொன்னம் பலத்தே
கண்டவர் மயங்கவேடங் கட்டியாடு கின்றவர்க்கு. தெண்ட

சரணங்கள்

கற்பூர வாசம்வீசும் பொற்பார் திருமுகத்தே
கனிந்த புன்னகையாடக் கருணைக் கடைக்கணைட
அற்பார்பொன் னம்பலத்தே ஆனந்தத் தாண்டவம்
ஆடிக்கொண் டேயின்னே ஆட்டங்கண் டாருக்கு. தெண்ட 1

இழிந்தாலு நம்மையிங்கே பேற்றுவா ரென்றடைந்தால்
எற்றுவார் போலேபின்னு மிழியவைப் பாருக்குப்
பழந்தா நழுவிமெல்லப் பாலில் விழுந்திதன்னப்
பசப்பிப் பசப்பியன்பர் பண்டம் பறிப்பவர்க்கு. தெண்ட 2

சுட்டதிரு நீறுபூசித் தொங்தோதாமென் முடிவார்க்குத்
தோன்றுதலை மாலையணி தோள்விளங்க வருவார்க்குப்
பிட்டுக்காசை பட்டுமாறன் பிரம்படி பட்டவர்க்குப்
பிள்ளைக்கறிக் காசைகொண்ட கள்ளத்தவ வேடருக்கு. தெண்ட 3

வாழ்ந்தாரை மேன்மேலும் வாழச்செய் பவருக்கு
மாசுபறித் தவர்கையிற் காசுபறிக் கின்றவர்க்குத்
தாழ்ந்தாரை யடிக்கடி தாழக்காண் பவருக்குத்
தாகுகி நாகுகித் தனியேகின் றவருக்கு. தெண்ட 4

ஆதியந்த நடுவில்லா ஆனந்த நாடருக்கு
அண்டருபிர் காத்தமணி கண்டசசி கண்டருக்கு
ஜோதிமய மாய்விளங்குந் தூயவடி வாளருக்குத்
தொண்டர்குடி கெடுக்கவே துஜங்கட்டிக் கொண்டவர்க்கு. தெண் 5

பாட்டுக்காசைப் பட்டுமுன்னம் பரவைதன் வாயிலிற்போய்ப்
பண்புரைத்துத் தூதனென்றே பட்டங்கட்டிக் கொண்டவர்க்கு
வீட்டுக்காசைப் படுவாரை வீட்டைவிட்டுத் துரத்தியே
வேட்டாண்டி யாயுலகில் ஓட்டாண்டி யாக்குவார்க்கு. தெண்ட 6

தாய்வயிற்றிற் பிறவாது தானே முளைத்தவர்க்கு
ஜாதிகுல மறியாது தாண்டவஞ்செய் கின்றவர்க்கு
வய தொழிலருளு மென்பிராண நாயகர்க்கு
ஏமாந்த வரையெல்லாம் ஏமாத்து மீசருக்கு. தெண்ட 7

அருட்பெருஞ்ஜோதி

இரண்டாவது திருமுறை

154. நடேசர் கீர்த்தனை 2

இராகம் - காம்போதி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

இன்னந் தபவுவர இலையா — உனக்கென்மீதில்
என்ன வர்மஞ் சொலையா.

சரணங்கள்

அன்னம் பாலிக்குந் தில்லைப் பொன்னம்பலத்தி லாடும்
அரசே — அரசே — அரசே — யென் றலறவும். இன்னந் 1

சின்னஞ் சிறுவயதி லென்னை யடிமைகொண்ட
சிவமே — சிவமே — சிவமே — யென் றலறவும். இன்னந் 2

முன்னம் பிழைபொறுத்தா யின்னம் பொறுதுவிட்டால்
முறையோ — முறையோ — முறையோ — வென் றலறவும். இன்னந் 3

தன்னை யறியாவென்னை யின்ன லுறச்செய்தாயே
தகுமோ — தகுமோ — தகுமோ — வென் றலறவும். இன்னந் 4

பண்டு மகிழ்ந்தினையாட் கொண்டு கருணைசெய்த
பரமே — பரமே — பரமே — யென் றலறவும். இன்னம் 5

கொண்டு குலம்பேசுவா ருண்டோ வுலகிலெங்கள்
குருவே — குருவே — குருவே —யென் றலறவும். இன்னம் 6

அருட்பெருஞ்ஜோதி

ஐந்தாவது திருமுறை

155. சண்முகர் கொம்மி

இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

குறவர் குடிசை நுழைந்தாண்டி — அந்தக்
கோமாட்டி யெச்சில் விழைந்தாண்டி
துறவர் வணங்கும் புகழாண்டி — அவன்
தோற்றத்தைப் பாடி யடியுங்கடி. 1

மாமயி லேறி வருவாண்டி — அன்பர்
வாழ்த்த வரங்கள் தருவாண்டி
தீமையி லாத புகழாண்டி — அவன்
சீர்த்தியைப் பாடி யடியுங்கடி. 2

பன்னிரு தோள்க ளுடையாண்டி — கொடும்
பாவிகள் தம்மை யடையாண்டி
என்னிரு கண்க ளனையாண்டி — அவன்
ஏற்றத்தைப் பாடி யடியுங்கடி. 3

வேங்கை மரமாகி நின்றாண்டி — வந்த
வேடர்தமை யெலாம் வென்றாண்டி
தீங்குசெய் சூரனைக் கொன்றாண்டி — அந்த
தீரனைப் பாடி யடியுங்கடி. 4

சீர்திகழ் தோகை மயின்மேலே — இளஞ்
செஞ்சுடர் தோன்றுந் திறம்போலே
கூர்வடி வேல்கொண்டு நம்பெருமான் — வருங்
கோலத்தைப் பாருங்கள் கோதையர்காள். 5

ஆறு முகங்களிற் புன்சிரிப்பும் — இரண்
டாறு புயந்திக ழற்புதமும்
வீறு பரஞ்சுடர் வண்ணமுமோர் — திரு
மேனியும் பாருங்கள் வெள்வளைகாள். 6

ஆனந்த மான வழுதனடி — பர
மானந்த நாட்டுக் கரசனடி
தானந்த மில்லாச் சதுரனடி — சிவ
சண்முக நங்குரு சாமியடி. 7

வேதமுடி சொல்லு நாதனடி — சதுர்
வேதமுடி திகழ் பாதனடி
நாத வடிவுகொள் நீதனடி — பர
நாதங் கடந்த நலத்தனடி. 8

தத்துவத் துள்ளே யடங்காண்டி — பர
தத்துவ மன்றித் தடங்காண்டி
சத்துவ ஞான வடிவாண்டி — சிவ
சண்முக நாதனைப் பாடுங்கடி. 9

சச்சிதா னந்த வுருவாண்டி — பர
தற்பர போகந் தருவாண்டி
உச்சிதா ழுன்பர்க் குறவாண்டி — அந்த
உத்தம தேவனைப் பாடுங்கடி. 10

அற்புத மான வழகனடி — துதி
அன்பர்க் கருள்செய் குழகனடி
சிற்பர யோகத் திறத்தனடி — அந்தச்
சேவகன் கீர்த்தியைப் பாடுங்கடி. 11

சைவந் தழைக்கத் தழைத்தாண்டி — ஞான
சம்பந்தர்ப் போற்கொண் டளைத்தாண்டி
பொய்வந்த வுள்ளத்திற் போகாண்டி — அந்த
புண்ணியன் பொன்னடி போற்றுங்கடி. 12

வாசி கடத்தித் தருவாண்டி — ஒரு
வாசியி லிங்கே வருவாண்டி
ஆசில் கருணை யுருவாண்டி — அவன்
அற்புதத் தாண்மல ரேத்துங்கடி. 13

இராப்பக லில்லா விடத்தாண்டி — அன்பர்
இன்ப வளங்கொள் நடத்தாண்டி
அராப்பளி யீந்த திடத்தாண்டி — அந்த
அண்ணலைப் பாடி யடியுங்கடி. 14

ஒன்றிரண் டான வுளவாண்டி — அந்த
ஒன்றிரண்டாகா வளவாண்டி
மின்றிரண் டன்ன வடிவாண்டி — அந்த
மேலவன் சீர்த்தியைப் பாடுங்கடி. 15

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடிவாழ்க

ஐந்தாவது திருமுறை

156. சண்முகர் காலைப்பாட்டு

இராகம் - காபி - சாப்புதாளம்

அருட்பெருஞ்ஜோதி

வாரும்வா ருந்தெய்வ வடிவேல் முருகரே
வள்ளி மணாளரே வாரும்
புள்ளி மயிலாரே வாரும். 1

சங்க மொலித்தது தாழ்கடல் விம்மிற்றுச்
சண்முக நாதரே வாரும்
உண்மை விளைதரே வாரும். 2

பொழுது விடிந்தது பொற்கோழி கூவிற்றுப்
பொன்னை வேலரே வாரும்
மின்னர் முந்நூலரே வாரும். 3

காகங் கரைந்தது காலையு மாயிற்றுக்
கண்ணுதல் சேயரே வாரும்
ஒண்ணுதல் கோயரே வாரும். 4

செங்கதிர் தோன்றிற்றுத் தேவர்கள் சூழ்ந்தனர்
செங்கல்வ ராயரே வாரும்
எங்குரு நாதரே வாரும். 5

அருணை னுதித்தனன் அன்பர்கள் சூழ்ந்தனர்
ஆறுமுகத் தோரே வாரும்
மாறிலகத் தோரே வாரும். 6

சூரியன் தோன்றினன் தொண்டர்கள் சூழ்ந்தனர்
சூரசங் காரரே வாரும்
வீரசிங் காரரே வாரும். 7

வீணை முரன்றது வேதியர் சூழ்ந்தனர்
வேலாயுதத் தோரே வாரும்
காலாயுதத் தோரே வாரும். 8

சேவ லொலித்தது சின்னம் பிடித்தனர்
தேவர்கள் தேவரே வாரும்
மூவர் முதல்வரே வாரும். 9

பத்தர்கள் சூழ்ந்தனர் பாடல் பயின்றனர்
பன்னிரு தோளரே வாரும்
பொன்மலர்த் தாளரே வாரும். 10

மாலை கொணர்ந்தனர் மங்சனம் போந்தது
மாமயில் வீரரே வாரும்
தீமையில் தீரரே வாரும். 11

தொண்டர்கள் நாடினர் தோத்திரம் பாடினர்
சுப்பிர மணியரே வாரும்
வைப்பி னணியரே வாரும். 12

சிவசண்முக சிவஞானதேசிகன் திருவடி வாழ்க

157. இது நல்ல தருணம்

இராகம் - கல்யாணி - அடதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

இதுநல்ல தருணம் — அருள் செய்ய
இதுநல்ல தருணம்

அனுபல்லவி

பொதுநல்ல நடம்வல்ல புண்ணிய சேகரனும்
பொய்யேதுஞ் சொல்கிலேன் மெய்யே புகல்கின்றேன். இது

சரணங்கள்

மதித்த சமயமத வழக்கெல்லா மாய்ந்தது
வருணச் சிரமமெனு மபக்கழுஞ் சாய்ந்தது
கொதித்த லோகாசாரக் கொதிப்பெல்லாம் ஒழிந்தது
கொலையுங் களவுமற்றைப் புலையும் அழிந்தது. இது 1

குறித்த வேதாகமக் கூச்சலும் அடங்கிற்று
கொதித்த மனமுருட்டுக் குரங்கு முடங்கிற்று
வெறித்தவெவ் வினைகளும் வெந்து குலைந்தது
விந்தைசெய் கொடுமாயைச் சந்தைபுங் கலைந்தது. இது 2

கோபமுங் காமமுங் குடிகெட்டுப் போயிற்று
கொடியவேவா ராங்காரம் பொடிப்பொடி யாயிற்று
தாபமுஞ் சோபமுந் தான்முனே சென்றது
தத்துவ மெல்லாமென் றன்வச நின்றது. இது 3

கரையா வெனதுமனக் கல்லுங் கரைந்தது
கலந்து கொளற்கென் கருத்தும் விரைந்தது
புரையா நிலையிலென் புந்தியுந் தங்கிற்று
பொய்படாக் காதல் ததும்பிமேற் பொங்கிற்று. 4

இதுநல்ல தருணம் — அருள்செய்ய
இதுநல்ல தருணம்.

அருட்பெருஞ்ஜோதி

158. புன்னியம்

இராகம் - உசேனி - அடதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

என்ன புண்ணியஞ் செய்தேனை — அம்மாநான்
என்ன புண்ணியஞ் செய்தேனை.

அனுபல்லவி

மன்னர்நாத ரம்பலவர் வந்தார்வந்தா ரென்றேதிருச்
சின்னநாத மென்னிசண்டு செவிகளினுட் சொல்கின்றதே. என்ன

சரணங்கள்

பொருணன் முகனுமாலுந் தெருணன் மகறபுகாளும்
போற்றுஞ் சிற்றம்பலத்தே பேற்று மணிவிளக்காய்
அருணை டகம்புரியுங் கருணை நிதியருன்னை
ஆளவந்தார் வந்தாரென்றெக் காளநாதஞ் சொல்கின்றதே. என்ன

பாடியநல் லோர்தமக்கே நாடியதெல் லாமளிப்பார்
பத்திவலை யுட்படுவார் சத்தியர் நித்திபர்மன்றில்
ஆடியபொற் பாதர்வேதந் தேடியசிற் போதருன்னை
அணையவந்தார் வந்தாரென்றே இணையில்நாதஞ் சொல்கின்றதே. என்ன

எந்தரமுட் கொண்டகுனை சுந்தரென் மணவாளர்
எல்லாஞ்செய் வல்லசித்தர் கல்லோ ருளத்தமர்ந்தார்
மந்திரமா மன்றினின்பந் தந்தநட ராஜருன்னை
மருவவந்தார் வந்தாரென்று தெருவில்நாதஞ் சொல்கின்றதே. என்ன

ஓதியேந்த விதத்தாலும் வேதியனுந் தேர்வரியார்
ஓங்கார பஞ்சகத்தே பாங்காக நடிக்கின்றார்
ஆதியந்தங் காண்பரிய ஜோதிசுயஞ் ஜோதிபுன்மே
டாடவந்தார் வந்தாரென்றே நாடிநாதஞ் சொல்கின்றதே. என்ன 4

அற்புதப்பே ரழகாளர் சொற்பதங் கடந்துநின்றார்
அன்பரெலாந் தொழுமன்றில் இன்பநடம் புரிகின்றார்
சிற்பரமெல் லாமும்வல்ல தற்பரர் விரைந்திங்குன்னைச்
சேரவந்தார் வந்தாரென்றேங் காரநாதஞ் சொல்கின்றதே. என்ன 5

ஆரணர் காரணமெல்லாம் பூரணரென் றேத்துகின்ற
ஐயர்திரு அம்பலவர் மெய்ப்பொருளெல்லாம் வல்லசித்தர்
காரணமுங் காரியமுந் தாரணிதீ யாகவுன்னைக்
காணவந்தார் வந்தாரென்றே வேறுரைதஞ் சொல்கின்றதே. என்ன 6

பாகார் மொழியாள்சிவ காமவ வல்லிநாளும்
பார்த்தாட மணிமன்றில் கூத்தாடு கின்றசித்தர்
வாகா வுனக்கேயென்றுஞ் சாகா வரங்கொடுக்க
வலியவந்தார் வந்தாரென்றே வலியாதஞ் சொல்கின்றதே. 7

என்ன புண்ணியஞ் செய்தேனே — அம்மாகான்
என்ன புண்ணியஞ் செய்தேனே.

அருட்பெருஞ்ஜோதி

159. வருவார் அழைத்து வாடி

இராகம் - பியாகடை - அடதாளசாப்பு

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

வருவா ரழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே
வந்தாற் பெறலாம் நல்ல வரமே.

அனுபல்லவி

திருவார்பொன் னம்பலத்தே செழிக்குங் குஞ்சித பாதர்
சிவசிதம் பரமோபாதர் தெய்வச் சபாநாதர். வரு

சரணங்கள்

சிந்தை களிக்கக்கண்டு சிவானந்த மதுவுண்டு
தெளிந்தோ ரெல்லாருந்தாண்டு செய்யப் பவரிகொண்டு
இந்த வெளியில்நடம் இடத்துணிந் தீரேயங்கே
இதைவிடப் பெருவெளி இருக்குதென் றுலிங்கே. வரு 1

இடுக்கி லாமலிருக்க இடமுண்டு நடஞ்செய்ய
இங்கம் பலமொன்றங்கே எட்டம் பலமுண்டைய
ஒடுக்கி லிருப்பதென்ன உளவுசண்டி கொள்விரென்றுல்
உண்மையிது வஞ்சமல்ல உன்மேலாணை யென்றுசொன்றுல். வரு 2

மெல்லியல் சிவகாம வல்லி யுடன்களித்து
விளையா டவுமெங்கள் விநையோ டவுமொளித்து
எல்லையிலின் பந்தரவும் நல்லசம யந்தானிது
இங்குமங்கும் நடமாடி இருக்கலா மென்றபோது. 3

வருவா ரழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே
வந்தாற் பெறலாம் நல்ல வரமே.

அருட்பெருஞ்ஜோதி

160. பெருவழக்கு

இராகம் - பைரவி - ரூபகதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

இவர்க்கு மெனக்கும்பெரு வழக்கிருக் கின்றதது
என்றுந் தீரா வழக்குக் காணடி.

அனுபல்லவி

எவர்க்கும் பெரியவர்பொன் னம்பலத் தேநடம்
இட்டா ரெனக்குமாலே இட்டா ரிதோவந்தார். இவர்

சரணங்கள்

அன்றிதோ வருகின்றே னென்று போனவரங்கே
ஆர்செய்த தடையாலோ இருந்தாரென் கையிற்சங்கை
இன்று தங்கையிற்கொண்டே வந்துநிற் கின்றாரிங்கே
இந்தக் கதவைமூடு இவர்போவ தினியெங்கே. இவர் 1

அவரவ ருலகத்தே ஆறிந்தலர் தூற்றப்பட்டேன்
அன்றுபோ னவரின்று வந்துநிற்கின்றார் கெட்டேன்
இவர்சூதை யறியாதே முன்னம் ஏமாந்துவிட்டேன்
இந்தக் கதவைமூடு இனியெங்கும் போகவொட்டேன். இவர் 2

சின்ன வயதிலென்னைச் சேர்ந்தார்புன் னகையோடு
சென்றார் தயவாலின்று வந்தார் இவர்க்காரீடு
என்னவிட் டினியிவர் எப்படி போவாரோடு
இந்தக் கதவைமூடு இரட்டைத்தாட் கோலப்போடு. 3

இவர்க்கு மெனக்கும்பெரு வழக்கிருக் கின்றதது
என்றுந் தீரா வழக்குக் காணடி.

அருட்பெருஞ்ஜோதி

161. ஆடியபாதம்

இராகம் - தன்யாசி - ரூபகதாளம்.

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

ஆடிய பாத மன்றுடிய பாதம்
ஆடிய பாதம் நின்றுடிய பாதம்.

சரணங்கள்

பாடிய வேதங்கள் தேடிய பாதம்
பத்திசெய் பத்தர்க்குத் தித்திக்கும் பாதம்
நாடிய மாதவர் சேடிய பாதம்
நாதாந்த நாட்டுக்கு நாயக பாதம். ஆடிய 1

தீராத வல்வினை தீர்க்கின்ற பாதம்
தெய்வங்க ளெல்லாந் தெரிசிக்கும் பாதம்
வாரா வரவாகி வந்தபொற் பாதம்
வஞ்ச மனத்தில் வசியாத பாதம். ஆடிய 2

ஆரா வமுதாகி அண்ணிக்கும் பாதம்
அன்ப ருளத்தீத அமர்ந்தருள் பாதம்
நாரா யணன்விழி நண்ணிய பாதம்
நான்புனை பாடல் நயந்த பொற்பாதம். ஆடிய 3

நல்லவ ரெல்லாம் நயக்கின்ற பாதம்
நாத முடிவில் நடிக்கின்ற பாதம்
வல்லவர் சொல்லெல்லாம் வல்லபொற் பாதம்
மந்திர யந்திர தந்திர பாதம். ஆடிய 4

எச்சம யத்தும் இலங்கிய பாதம்
எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்குமாம் பாதம்
அச்சந் தவிர்த்தென்னை ஆட்கொண்ட பாதம்
ஆனந்த நாட்டுக் கதிபதி பாதம். ஆடிய 5

தேவர்க ளெல்லாருஞ் சிந்திக்கும் பாதம்
தெள்ளமு தாயுளந் தித்திக்கும் பாதம்
மூவருங் காணு முழுமுதற் பாதம்
மும்பாழுக் சப்பால் முளைத்த பொற்பாதம். ஆடிய 6

துரிய வெளிக்கே உரிய பொற்பாதம்
சுகமய மாகிய சுந்தரப் பாதம்
பெரிய பொருளென்று பேசும் பொற்பாதம்
பேரின்பல்லாந் தந்த பெரும்புகழ்ப் பாதம். ஆடிய 7

சாகா வரந்தந்த தாரக பாதம்
சச்சிதா னந்த சுகோதய பாதம்
சேதகாதி யெல்லாஞ் சிருட்டிக்கும் பாதம்
திதிமுதல் ஐந்தொழில் செய்கின்ற பாதம். ஆடிய 8

ஓங்கார பீடத் தொளிர்கின்ற பாதம்
ஒன்று யிரண்டாகி ஓங்கிய பாதம்
தூங்காத தூக்கத்திற் றூக்கிய பாதம்
துரியத்தி னூன்றித் துலங்கிய பாதம். ஆடிய 9

ஐவண்ணம் மூன்கொண்ட அற்புதப் பாதம்
அபய மெல்லார்க்கு மமுதான பாதம்
கைவண்ணம் நெல்லிக் கனியாகும் பாதம்
கண்ணுங் கருத்துங் கலந்த பொற்பாதம். ஆடிய 10

ஆருயிர்க் காதார மாகிய பாதம்
அண்ட பிண்டங்கள் அளிக்கின்ற பாதம்
சாருயிர்க் கின்பந் தருகின்ற பாதம்
சுத்திய ஞான தயாநிதி பாதம். ஆடிய 11

தாங்கி யெனைப்பெற்ற தாயாகும் பாதம்
தந்தையு மாகித் தயவுசெய் பாதம்
ஓங்கியென் னுள்ளே உறைகின்ற பாதம்
உண்மை விளங்க உரைத்தபொற் பாதம். ஆடிய 12

எண்ணிய வாறே எனக்கருள் பாதம்
இறவா நிலையில் இருத்திய பாதம்
புண்ணியர் கையுட் பொருளாகும் பாதம்
பொய்ய ருளத்திற் பொருந்தாத பாதம். ஆடிய 13

ஆறந்தத் துள்ளும் அமர்ந்தபொற் பாதம்
ஆதி யனாதியு மாகிய பாதம்
மாறந்த மில்லாவென் வாழ்முதற் பாதம்
மண்முத லைந்தாய் வயங்கிய பாதம். ஆடிய 14

அருட்பெருஞ் ஜோதிய தாகிய பாதம்
அம்மையு மப்பனு மாகிய பாதம்
பொருட்பெரும் போகம் புணர்த்திய பாதம்
பொன்வண்ண மாகிய புண்ணிய பாதம். ஆடிய 15

ஈரணை ஞதியர் நாடரும் பாதம்
ஈன்தவத் தாற்பெற்ற ஈற்றுணைப் பாதம்
ஆரண மாகமம் போற்றிய பாதம்
ஆசைவிட் டார்க்கே அணிமையாம் பாதம். 16

ஆடிய பாத மன்றுடிய பாதம்
ஆடிய பாதம் நின்றுடிய பாதம்.

அருட்பெருஞ்ஜோதி

---

162. அபயம்

இராகம் - தோடி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

அபயம் அபயம் அபயம் அபயம்.

சரணங்கள்

உபயம தாயென் உறவாய்ச் சிதம்பர
சபையில் நடஞ்செயுஞ் சாமி பதத்திற்கே. அபயம் 1

எம்பலத் தாலெம்மை யென்னுகொளத் தில்லை
அம்பலத் தாடுமெம் ஐயர் பதத்திற்கே. அபயம் 2

தவசிதம் பரமாகித் தன்பய மாய்ச்செயுஞ்
சிவசிதம் பரமகா தேவர் பதத்திற்கே. அபயம் 3

ஒன்றும் பதத்திற் குயர்பொரு ளாகியே
என்றுமென் னுள்ளத் தினிக்கும் பதத்திற்கே. அபயம் 4

வானந்த மாந்தில்லை மன்றிடை யென்றுநின்
றானந்தத் தாண்டவ மாடும் பதத்திற்கே. அபயம் 5

ஈராய ணைமறை நான்முக ஞதியர்
பாரா யணஞ்செயும் பதும பதத்திற்கே. அபயம் 6

அன்பர் செயும்பிழை ஆயிரமும் பொறுத்
தின்ப மளிக்குநம் ஈசர் பதத்திற்கே. அபயம் 7

குற்றஞ் செயினுங் குணமாகக் கொண்டுநம்
அற்றந் தவிர்க்குநம் அப்பர் பதத்திற்கே. அபயம் 8

செம்பொரு ளாகிச் சிதம்பரத் தேயென்றும்
நம்பொரு ளான நடேசர் பதத்திற்கே. அபயம் 9

வெச்சென்ற மாயை வினையாதி யால்வந்த
அச்சந் தவிர்க்குநம் ஐயர் பதத்திற்கே. அபயம் 10

எண்ணிய எண்ணங்கள் எல்லா முடிக்குநம்
புண்ணிய ரும்திதய்வப் பொன்னடிப் போதுக்கே. அபயம் 11

மன்னம் பரத்தே வடிவில் வடிவாகிப்
பொன்னம் பலத்தாடும் பொன்னடிப் போதுக்கே. அபயம் 12

நாத முடிவில் நடம்புரிந் தன்பர்க்குப்
போத மளிக்கின்ற பொன்னடிப் போதுக்கே. அபயம் 13

உச்சி தாழ்கின்ற உறவோர் உறவான
சச்சி தானந்தத் தனிநடப் போதுக்கே. அபயம் 14

சித்தமு முள்ளமுந் தித்தித் தினிக்கின்ற
புத்தமு தாகிய பொன்னடிப் போதுக்கே. 15

அபயம் அபயம் அபயம்

அருட்பெருஞ்ஜோதி

163. அற்புதம்

இராகம் - தர்பார் - ரூபகதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

அற்புதம் அற்புதமே — அருள்
அற்புதம் அற்புதமே.

சரணங்கள்

சிற்பதம் பொற்பதஞ் சீரே சிறந்தது
சித்தாடு கின்ற திருநாள் பிறந்தது
கற்பத நெஞ்சக் கரிசு துறந்தது
கற்றபொய்ந் நூல்கள் கணத்தே மறந்தது. அற்புதம் 1

செத்தா ரெழுகின்ற திருநா ளெடுத்தது
சிவனெறி யொன்றே எங்குந்தலை யெடுத்தது
இத்தா ரணிமுதல் வாலு முடித்தது
இறவா வரந்தா னெனக்குக் கொடுத்தது. அற்புதம் 2

ஆனந்த நாடகம் ஆடுதல் சார்ந்தது
அடுத்த தருணம் இதுவாக நேர்ந்தது
ஈனந்த மாயை இருள்வினை சோர்ந்தது
என்னருட் ஜோதியென் உள்ளத்தி லார்ந்தது. அற்புதம் 3

சத்திய ஞான சபையென்னுட் கண்டனன்
சன்மார்க்க சித்தியை நான்பெற்றுக் கொண்டனன்
நித்திய ஞான நிறையமு தண்டனன்
நிந்தை யுலகியற் சந்தையை விண்டனன். அற்புதம் 4

வஞ்சக ரஞ்சினர் வாய்மூடிச் சென்றனர்
வந்து திரும்பவும் வாயிலில் நின்றனர்
தஞ்ச மெமக்கருள் சாமிநீ யென்றனர்
சன்மார்க்க சங்கத் தவர்களே யென்றனர். அற்புதம் 5

புறங்கூறி ரைசெல்லாம் புல்லெனப் போயினர்
பொற்படிக் கீழ்ப்புற மீளவு மேயினர்
மறங்கூறி ரேடென்செய் வோமென்று கூயினர்
வாழிய வென்றுசொல் வாயின ராயினர். அற்புதம் 6

வெவ்வினைக் காடெலாம் வேரோடி வெந்தது
வெய்ய மாமாயை விரிவற்று நொந்தது
செவ்விய ஞானஞ் சிறப்புற வந்தது
சித்திகள் யாவையுஞ் செய்திடத் தந்தது. அற்புதம் 7

சாதி சமயச் சழக்கெலா மற்றது
சன்மார்க்க ஞான சபைநிலை பெற்றது
மேதினி யிற்சாகா வித்தையைக் கற்றது
மெய்யருட் ஜோதியென் னுள்ளத்தி லுற்றது. 8

அற்புதம் அற்புதமே — அருள்
அற்புதம் அற்புதமே.

அருட்பெருஞ்ஜோதி

164. காட்சிக்கண்ணி

இராகம் - எதுகுலகாம்போதி - அடதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

ஆணிப்பொன் னம்பலத் தேகண்ட காட்சிகள்
அற்புதக் காட்சியடி — அம்மா
அற்புதக் காட்சியடி.

சரணங்கள்

ஜோதி மலையொன்று தோன்றிற் றதிலொரு
வீதியுண் டாச்சுதடி — அம்மா
வீதியுண் டாச்சுதடி. ஆணி 1

வீதியிற் சென்றேனவ் வீதி நடுவொரு
மேடை யிருந்ததடி — அம்மா
மேடை யிருந்ததடி. ஆணி 2

மேடை மேலேறினேன் மேடைமே லங்கொரு
கூட மிருந்ததடி — அம்மா
கூட மிருந்ததடி. ஆணி 3

கூடத்தை நாடவக் கூடமே லெழ்நிலை
மாட மிருந்ததடி — அம்மா
மாட மிருந்ததடி. ஆணி 4

எழ்நிலைக் குள்ளும் இருந்த அதிசயம்
என்னென்று சொல்வனடி — அம்மா
என்னென்று சொல்வனடி. ஆணி 5

ஓர்நிலை தன்னில் ஒளிர்முத்து வெண்மணி
சீர்நில மாச்சுதடி — அம்மா
சீர்நில மாச்சுதடி. ஆணி 6

பாரோர் நிலையிற் கருநிலஞ் செய்ப
பவளம தாச்சுதடி — அம்மா
பவளம தாச்சுதடி. ஆணி 7

மற்றோர் நிலையில் பரகதப் பச்சைநிசம்
மாணிக்க மாச்சுதடி — அம்மா
மாணிக்க மாச்சுதடி. ஆணி 8

பின்னோர் நிலையிற் பெருமுத்து வச்சிரப்
பேர்மணி யாச்சுதடி — அம்மா
பேர்மணி யாச்சுதடி. ஆணி 9

வேறோர் நிலையில் மிகுப்பவ ளத்திரள்
வெண்மணி யாச்சுதடி — அம்மா
வெண்மணி யாச்சுதடி. ஆணி 10

புகலோர் நிலையிற் பொருந்திய பன்மணி
பொன்மணி யாச்சுதடி — அம்மா
பொன்மணி யாச்சுதடி. ஆணி 11

பதியோர் நிலையிற் பகர்மணி யெல்லாம்
படிகம தாச்சுதடி — அம்மா
படிகம தாச்சுதடி. ஆணி 12

எழ்நிலை மேலை யிருந்தோர் தம்பம்
இசைந்தபொற் றம்பமடி — அம்மா
இசைந்தபொற் றம்பமடி. ஆணி 13

பொற்றம்பங் கண்டேறும் போதுநான் கண்ட
புதுமையென் சொல்வனடி — அம்மா
புதுமையென் சொல்வனடி. ஆணி 14

ஏறும்போ தங்கே யெதிர்ந்த வகைசால
என்னள வல்லவடி — அம்மா
என்னள வல்லவடி. ஆணி 15

ஆங்காங்கே சத்திகள் ஆயிர மாயிரம்
ஆகவந் தார்களடி — அம்மா
ஆகவந் தார்களடி. ஆணி 16

வந்து மயக்க மயங்காமல் நானருள்
வல்லபம் பெற்றேனடி — அம்மா
வல்லபம் பெற்றேனடி. ஆணி 17

வல்லபத் தாலந்த மாதப்பத் தேறி
மணிமுடி கண்டேனடி — அம்மா
மணிமுடி கண்டேனடி. ஆணி 18

மணிமுடி மேலோர் கொடுமுடி நின்றது
மற்றது கண்டேனடி — அம்மா
மற்றது கண்டேனடி. ஆணி 19

கோடுமுடி மேலாயி ரத்திதட்டு மாற்றுப்பொற்
கோயி லிருந்ததடி — அம்மா
கோயி லிருந்ததடி. ஆணி 20

கோயிலைக் கண்டங்கே கோபுர வாயிலில்
கூசாது சென்றேனடி — அம்மா
கூசாது சென்றேனடி. ஆணி 21

கோபுர வாயிலுட் சத்திகள் சத்தர்கள்
கோடிபல் கோடியடி — அம்மா
கோடிபல் கோடியடி. ஆணி 22

ஆங்கவர் வண்ணம்வெள் வண்ணம்செவ் வண்ணமுன்
ஐவண்ண மாகுமடி — அம்மா
ஐவண்ண மாகுமடி. ஆணி 23

அங்கவ ரெல்லாமிங் காரிவ ரென்னவும்
அப்பாலே சென்றேனடி — அம்மா
அப்பாலே சென்றேனடி. ஆணி 24

அப்பாலே சென்றேனங் கோர்திரு வாயிலில்
ஐவ ரிருந்தாரடி — அம்மா
ஐவ ரிருந்தாரடி. ஆணி 25

மற்றவர் நின்று வழிகாட்ட மேலோர்
மணிவாயி லுற்றேனடி — அம்மா
மணிவாயி லுற்றேனடி. ஆணி 26

எண்ணுமவ் வாயிலிற் பெண்ணே டாணைக
இருவ ரிருந்தாரடி — அம்மா
இருவ ரிருந்தாரடி. ஆணி 27

அங்கவர் காட்ட அணுக்கத் திருவாயில்
அன்பொடு கண்டேனடி — அம்மா
அன்பொடு கண்டேனடி. ஆணி 28

அத்திரு வாயிலில் ஆனந்த வல்லியென்
அம்மை யிருந்தாளடி — அம்மா
அம்மை யிருந்தாளடி. ஆணி 29

அம்மை யைக்கண் டேன்அவ ளருள் கொண்டேன்
அமுதமு முண்டேனடி — அம்மா
அமுதமு முண்டேனடி. ஆணி 30

தாங்கும் அவளரு ளாலே நடராஜர்
சந்தித கண்டேனடி — அம்மா
சந்தித கண்டேனடி. ஆணி 31

சந்தித யிற்சென்று கான்பெற்ற பேறது
சாமி யறிவாரடி — அம்மா
சாமி யறிவாரடி. 32

ஆணிப்பொன் னம்பலத் தேகண்ட காட்சிகள்
அற்புதக் காட்சியடி — அம்மா
அற்புதக் காட்சியடி.

அருட்பெருஞ்ஜோதி

---

165. அக்கச்சி

இராகம் - எதுகுலகாம்போதி - அடதாளம்

அருட்பெருஞ்ஜோதி

வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்
மயில்குயி லாச்சுதடி — அக்கச்சி
மயில்குயி லாச்சுதடி. 1

துள்ளலை விட்டுத் தொடங்கினேன் மன்றுடும்
வள்ளலைக் கண்டேனடி — அக்கச்சி
வள்ளலைக் கண்டேனடி. 2

ஜாதி சமயச் சழக்கைவிட் டேனருட்
ஜோதியைக் கண்டேனடி — அக்கச்சி
ஜோதியைக் கண்டேனடி. 3

பொய்யை யொழித்துப் புறப்பட்டேன் மன்றுடும்
ஐயரைக் கண்டேனடி — அக்கச்சி
ஐயரைக் கண்டேனடி. 4

அருட்பெருஞ்ஜோதி

166. ஆனந்தமேலீடு 1

இராகம் - சஹாணை - அடதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பல்லவி

உள தூது சங்கே ஊதூது சங்கே
ஊதூது சங்கே ஊதூது சங்கே.

சரணங்கள்

கைவிட மாட்டானென் றூதூது சங்கே
கனக சபையானென் றூதூது சங்கே
பொய்விடச் செய்தானென் றூதூது சங்கே
பூசை பலித்ததென் றூதூது சங்கே. ஊதூது 1

தூக்கந் தொலைத்தானென் றூதூது சங்கே
துன்பந் தவிர்த்தானென் றூதூது சங்கே
வக்கங் கெடுத்தானென் றூதூது சங்கே
வம சபையானென் றூதூது சங்கே. ஊதூது 2

பொன்னடி தந்தானென் றூதூது சங்கே
பொன்னம் பலத்தானென் றூதூது சங்கே
இன்ன லறுத்தானென் றூதூது சங்கே
என்னுள் அமர்ந்தானென் றூதூது சங்கே. ஊதூது 3

அச்சந் தவிர்த்தானென் றூதூது சங்கே
அம்பல வாணனென் றூதூது சங்கே
இச்சை யளித்தானென் றூதூது சங்கே
இன்பங் கொடுத்தானென் றூதூது சங்கே. ஊதூது 4

என்னுயிர் காத்தானென் றூதூது சங்கே
இன்பம் பலித்ததென் றூதூது சங்கே
பொன்னுருத் தந்தானென் றூதூது சங்கே
பொற்சபை யப்பனென் றூதூது சங்கே. ஊதூது 5

சிவமாக்கிக் கொண்டானென் றூதூது சங்கே
சிற்றம் பலத்தானென் றூதூது சங்கே
கவலோக் களித்தானென் றூதூது சங்கே
கானவ ணேனென்ன் றூதூது சங்கே. ஊதூது 6

நாத முடியானென் றாதாது சங்கே
ஞான சபையானென் றாதாது சங்கே
பாத மளித்தானென் றாதாது சங்கே
பணித்தது பூசையென் றாதாது சங்கே. ஊதாது 7

தெள்ளமு தாரினென் றாதாது சங்கே
சிற்சபை யப்பனென் றாதாது சங்கே
உள்ளம் உவந்தானென் றாதாது சங்கே
உள்ள துரைத்தானென் றாதாது சங்கே. ஊதாது 8

என்னறி வாரினென் றாதாது சங்கே
எல்லாஞ்செய் வல்லானென் றாதாது சங்கே
சென்னிலை தந்தானென் றாதாது சங்கே
சிற்சபை யப்பனென் றாதாது சங்கே. ஊதாது 9

இறவாமை யீந்தானென் றாதாது சங்கே
எண்ணம் பலித்ததென் றாதாது சங்கே
திறமே யளித்தானென் றாதாது சங்கே
சிற்றம் பலத்தானென் றாதாது சங்கே. ஊதாது 10

கரவு தவிர்ந்ததென் றாதாது சங்கே
கருணை கிடைத்ததென் றாதாது சங்கே
இரவு விடிந்ததென் றாதாது சங்கே
எண்ணம் பலித்ததென் றாதாது சங்கே. ஊதாது 11

எல்லாஞ்செய் வல்லானென் றாதாது சங்கே
எல்லார்க்கு நல்லானென் றாதாது சங்கே
எல்லா முடையானென் றாதாது சங்கே
எல்லாமும் ஆனானென் றாதாது சங்கே. ஊதாது 12

கருணை நிதியனென் றாதாது சங்கே
கடவு ளவனேயென் றாதாது சங்கே
அருளை டகத்தானென் றாதாது சங்கே
அம்பல ஜோதியென் றாதாது சங்கே. ஊதாது 13

தன்னிக ரில்லானென் றாதாது சங்கே
தலைவ னவனேயென் றாதாது சங்கே
பொன்னியல் வண்ணனென் றாதாது சங்கே
பொதுநடஞ் செய்வானென் றாதாது சங்கே. ஊதாது 14

ஆனந்த நாதனென் றூதூது சங்கே
அருளுடை யப்பனென் றூதூது சங்கே
தானந்த மில்லானென் றூதூது சங்கே
தத்துவ ஜோதியென் றூதூது சங்கே. ஊதூது 15

போய்விட் டகன்றேனென் றூதூது சங்கே
புண்ணிய னானேனென் றூதூது சங்கே
மெய்தொட்டு நின்றேனென் றூதூது சங்கே
மேல்வெளி கண்டேனென் றூதூது சங்கே. ஊதூது 16

அருட்பெருஞ்ஜோதி

167. ஆனந்தமேலீடு 2

இராகம் - தன்யாசி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

அம்பலவர் வந்தாரென்று சின்னம்பிடி
அற்புதஞ்செய் கின்றாரென்று சின்னம்பிடி
செம்பல னளித்தாரென்று சின்னம்பிடி
சித்திநிலை பெற்றதென்று சின்னம்பிடி. 1

சிற்சபையைக் கண்டோமென்று சின்னம்பிடி
சித்திகள்செய் கின்றோமென்று சின்னம்பிடி
பொற்சபை புகுந்தோமென்று சின்னம்பிடி
புந்திமகிழ் கின்றோமென்று சின்னம்பிடி. 2

ஞானசித்தி புரமென்று சின்னம்பிடி
நாடகஞ்செய் யிடமென்று சின்னம்பிடி
ஆனசித்தி செய்வோமென்று சின்னம்பிடி
அருட்ஜோதி பெற்றோமென்று சின்னம்பிடி. 3

கோடிகட்டிக் கொண்டோமென்று சின்னம்பிடி
கூத்தாடு கின்றோமென்று சின்னம்பிடி
அடிமுடியைக் கண்டோமென்று சின்னம்பிடி
அருளமுதம் உண்டோமென்று சின்னம்பிடி. 4

அப்பர்வரு கின்றரென்று சின்னம்பிடி
அற்புதஞ்செய் வதற்கென்று சின்னம்பிடி
செப்பகிலே பெற்றதென்று சின்னம்பிடி
சித்திபுரம் இடமென்று சின்னம்பிடி. 5

தானே நாலுசினனென்று சின்னம்பிடி
சத்தியஞ் சத்தியமென்று சின்னம்பிடி
ஊனே புகுந்ததென்று சின்னம்பிடி
ஒளிவண்ணா மானதென்று சின்னம்பிடி. 6

வேகாத காலுணர்ந்து சின்னம்பிடி
வேகா நடித்தெரிந்து சின்னம்பிடி
சாகாத் தலையறிந்து சின்னம்பிடி
சாகாத கல்விகற்றுச் சின்னம்பிடி. 7

மீதான நிலையேறிச் சின்னம்பிடி
வெட்டவெளி நடுநின்று சின்னம்பிடி
வேதாக மங்கடந்து சின்னம்பிடி
வேதாந்த சித்தாந்த சின்னம்பிடி. 8

பன்மார்க்க முங்கடந்து சின்னம்பிடி
பன்னிரண்டின் மீதுநின்று சின்னம்பிடி
சன்மார்க்க மார்க்கமென்று சின்னம்பிடி
சத்தியஞ்செய் கின்றோமென்று சின்னம்பிடி. 9

சித்தாடு கின்றரென்று சின்னம்பிடி
செத்தா ரெழுவாரென்று சின்னம்பிடி
இத்தா ரணியிலென்று சின்னம்பிடி
இதுவே தருணமென்று சின்னம்பிடி. 10

அருட்பெருஞ்ஜோதி

168. ஆனந்தமேலீடு 3

இராகம் - சஹானை - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

கையறவி லாதுகடுக் கண்புருவப் பூட்டு
கண்டுகளி கொண்டுதிதுத் துண்டுகடு நாட்டு
ஐயர்மிக வுப்பும்வகை யப்பர்விளை யாட்டு
ஆவெனிதன் றேமறைகள் பாவுவது பாட்டு. 1

சிற்சபையும் பொற்சபையுஞ் சொந்தமென தாச்சு
தேவர்களு மூவர்களுஞ் பேசுவதென் பேச்சு
இச்சமய வாழ்வினெனக் கென்னையினி யேச்சு
என்பிறவித் துன்பமெலா மின்றோடே போச்சு. 2

ஐயருட் ஜோதிபர சாட்சியென தாச்சு
ஆனைழு மாகமமும் பேசுவதென் பேச்சு
எய்புலக வாழ்வினெனக் கென்னையினி யேச்சு
என்பிறவித் துன்பமெலா மின்றோடே போச்சு. 3

ஈசனரு ளாற்கடலி லேற்றதொரு வோடம்
எனிக்கரை யேறினே னிருந்ததொரு மாடம்
தேசுறுமம் மாடமுதித் தெய்வமணிப் பீடம்
தீபவொளி கண்டவுடன் சேர்ந்ததுகந் தோடம். 4

மேருமலை உச்சியில் விளங்குசுப்ப நீட்சி
மேவுமதன் மேலுலகில் வீறுமர சாட்சி
சேருமதிற் கண்டபல காட்சிகள்கண் சாட்சி
செப்பலரி தாமிதற்கென் அப்பனருள் சாட்சி. 5

துரியமலை மேலுளதோர் ஜோதிவள நாடு
தோன்றுமதில் ஐயர்கடஞ் செய்யுமணி வீடு
தெரியுமது கண்டவர்கள் காணிலுயி ரோடு
செத்தவ ரெழுவாரென்று கைத்தாளம் போடு. 6

சோல்லால் அளப்பரிய ஜோதிவரை மீது
தூயதூரி யப்பதியில் நேயமறை போது
எல்லாஞ்செய் வல்லசித்தர் தம்மையுறும் போது
இறந்தா ரெழுவாரென்று புறந்தாரை யூது. 7

சிற்போதுவும் பொற்போதுவும் நானறிய லாச்சு
சித்தர்களும் முத்தர்களும் பேசுவதென் பேச்சு
இப்பெரிய இவ்வுலகில் என்னினியி யேச்சு
என்பிறவித் துன்பமெலா மின்றோடே போச்சு. 8

வலதுசோன்ன பேர்களுக்கு வந்ததுவாய்த் தாழ்வு
மற்றவரைச் சேர்ந்தவர்க்கும் வந்ததலைத் தாழ்வு
வலதுபுஜம் ஆடநம்பால் வந்ததருள் வாழ்வு
மற்றுநமைச் சூழ்ந்தவர்க்கும் வந்ததுநல் வாழ்வு. 9

அம்பலத்தில் எங்களைய ராடியநல் லாட்டம்
அன்பொடு துதித்தவருக் கானதுசொல் லாட்டம்
வம்புசொன்ன பேர்களுக்கு வந்ததுமல் லாட்டம்
வந்ததலை யாட்டமன்றி வந்ததுபல் லாட்டம். 10

நாத்திகஞ்சோல் கின்றவர்தம் நாக்குமூடை நாக்கு
நாக்குருசி கொள்ளுவது நாறியபிண் ணாக்கு
சீர்த்திபெறும் அம்பலவர் சீர்புகன்ற வாக்கு
செல்வாக்கு நல்வாக்கு தேவர்திரு வாக்கு. 11

அருட்பெருஞ்ஜோதி

---

169. பிரபஞ்சவெற்றி

இராகம் - அடாணா - ரூபகதாளம்

அருட்பெருஞ்ஜோதி

அருட்ஜோதி யானேனென் றறையப்பா முரசு
அருளாட்சி பெற்றேனென் றறையப்பா முரசு
மருட்சார்பு தீர்ந்தேனென் றறையப்பா முரசு
மரணந் தவிர்ந்தேனென் றறையப்பா முரசு.

அருட்பெருஞ்ஜோதி

நாமாவளி

170. அம்பலத்தாசே

அருட்பெருஞ்ஜோதி

இராகம் - இந்துஸ்தான் பியாக் - ஆதிதாளம்

அம்பலத் தரசே அரு மருந்தே
ஆனந்தத் தேனே அருள் விருந்தே. 1

பொதுநடத் தரசே புண்ணி யனே
புலவரெலாம் புகழ் கண்ணி யனே. 2

மலைதரு மகளே மட மயிலே
மதிமுக அமுதே இளங் குயிலே. 3

ஆனந்தக் கொடியே இளம் பிடியே
அற்புதத் தேனே மலை மானே. 4

சிவசிவ சிவசிவ சின்மய தேஜா
சிவசுந் தரகுஞ் சிதநட ராஜா. 5

படன விநோத பரம்பர வேதா
நடன சபேச சிதம்பர நாதா. 6

அரிபிர மாதியர் தேடிய நாதா
அரகர சிவசிவ ஆடிய பாதா. 7

அந்தண வங்கண அம்பர போகா
அம்பல நம்பர அம்பிகை பாகா. 8

அம்பர விம்ப சிதம்பர நாதா
அஞ்சித ரஞ்சித குஞ்சித பாதா. 9

தந்திர மந்திர யந்திர பாதா
சங்கர சங்கர சங்கர நாதா. 10

கனக சிதம்பர கங்கர புரஹர
அனக பரம்பர சங்கர ஹரஹர. 11

சகல கலாண்ட சராசர காரண
சகுண சிவாண்ட பராபர பூரண. 12

இக்கரை கடந்திடில் அக்கரை பே
இருப்பது சிதம்பர சர்க்கரை பே. 13

என்னுயி ருடம்பொடு சித்தம தே
இனிப்பது நடராஜ புத்தமு தே. 14

ஐயர் திருச்சபை யாடக மே
ஆடுத லானந்த நாடக மே. 15

உத்தர ஞான சிதம்பர மே
சித்தியெ லாந்தரு மம்பர மே. 16

அம்பல வாசிவ மாதே வா
வம்பல வாவிங்கு வாவா வா 17

நடராஜ னெல்லார்க்கு நல்லவ னே
நல்லவெ லாஞ்செய வல்லவ னே. 18

ஆனந்த நாடகங் கண்டோ மேபர
மானந்த போனகங் கொண்டோ மே. 19

சகள உபகள நிட்கள நாதா
உகள சததள மங்கள பாதா. 20

சந்தத முஞ்சிவ சங்கர பஜனம்
சங்கித மென்பது சற்சன வசனம். 21

சங்கர சிவசிவ மாதே வா
எங்களை யாட்கொள வாவா வா. 22

அரகர சிவசிவ மாதே வா
அருளமு தந்தர வாவா வா. 23

நடன சிகாமணி நவமணி யே
திடனக மாமணி சிவமணி யே. 24

நடமிடு மம்பல நன்மணி யே
புடமிடு செம்பல பொன்மணி யே. 25

உவட்டாது சித்திக்கும் உள்ளம தே
தெவிட்டாது தித்திக்குந் தெள்ளமு தே. 26

நடராஜ வள்ளலே நாடுத லே
நற்றாழி லாம்வினை யாடுத லே. 27

அருட்போது நடமிடு தாண்டவ னே
அருட்பெருஞ் ஜோதியென் ஆண்டவ னே. 28

நடராஜ மாணிக்கம் ஒன்றது வே
நண்ணுத லாணிப்பொன் மன்றது வே. 29

நடராஜ பலமது நம்பல மே
நடமாடு வதுதிரு அம்பல மே. 30

நடராஜர் பாட்டே நறும் பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும் பாட்டு. 31

சிதம்பரப் பாட்டே திருப் பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாந் தெருப் பாட்டு. 32

அம்பலப் பாட்டே அருட் பாட்டு
அல்லாத பாட்டெல்லா மருட் பாட்டு. 33

அம்பல வாணனை நாடின னே
அவனடி யாரொடுங் கூடின னே. 34

தம்பத மாம்புகழ் பாடின னே
தந்தன வென்றுகூத் தாடின னே. 35

நான்சொன்ன பாடலுங் கேட்டா ரே
ஞான சிதம்பர நாட்டா ரே. 36

இனித்துயர் படமாட்டேன் விட்டே னே
என்குரு மேலாணை யிட்டே னே. 37

இனிப்பாடு படமாட்டேன் விட்டே னே
என்னப்பன் மேலாணை யிட்டே னே. 38

சன்மார்க்கம் நன்மார்க்கம் நன் மார்க்கம்
சகமார்க்கந் துன்மார்க்கந் துன் மார்க்கம். 39

நாதாந்த நாட்டுக்கு நாயக ரே
நடராஜ சேசபா நாயக ரே. 40

நான் சொல்லு மிதுகேளீர் சத்தியமே
நடராஜ வெனில் வரு நித்தியமே. 41

நல்லோ ரெல்லார்க்குஞ் சபா பதியே
கல்வர மீபுக் தபா கிதியே. 42

நடராஜர் தன்னடம் கன்னட மே
நடப்புரி கின்றதும் என்னிட மே. 43

சிவகாம வல்லிக்கு மாப்பிள்ளை யே
திருவாள னெனவன் சீர்ப்பிள்ளை யே. 44

சிவகாம வல்லியைச் சேர்ந்தவ னே
சித்தெல்லாஞ் செய்திடத் தேர்ந்தவ னே. 45

இறவா வரந்தரும் நற்சபை யே
எனமறை புகழ்வது சிற்சபை யே. 46

என்னிரு கண்ணுள் இருந்தவ னே
இறவா தருளு மருந்தவ னே. 47

சிற்சபை யப்பனே யுற்றே னே
சித்தி யெலாஞ் செயப் பெற்றே னே. 48

அம்பல வாணர்தம் அடியவ ரே
அருளர சான்மணி முடியவ ரே. 49

அருட்பெருஞ் ஜோதியைக் கண்டே னே
ஆனந்தத் தெள்ளமு துண்டே னே. 50

இருட்பெரு மாயையை விண்டே னே
எல்லாஞ்செய் சித்தியைக் கொண்டே னே. 51

கருணை நிதியே குணநிதி யே
கதிமா நிதியே கலாநிதி யே. 52

தருணை பதியே சிவபதி யே
தனிமா பதியே சபாபதி யே. 53

கருணை நிதியே சபாபதி யே
கதிமா நிதியே பசுபதி யே. 54

சபாபதி பாதம் தபோ பிரசாதம்
தயாநிதி போதம் சதோதய வேதம். 55

கருணும் பரவர கரசிர பவபவ
அருணும் பரதர ஹரஹர சிவசிவ. 56

கனகா கரபுர ஹரசிர காதர
கருணை கரபர சுரவர ஹரஹர. 57

கனக சபாபதி பசுபதி நவபதி
அனக உமாபதி அதிபதி சிவபதி. 58

வேதாந்த பராம்பர ஜய ஜய
நாதாந்த நடாம்பர ஜய ஜய. 59

ஏகாந்த சர்வேச சமோ தம
யோகாந்த நடேச நமோ நம. 60

ஆதாம்பர ஆடக அதி சய
பாதாம்புஜ நாடக ஜய ஜய. 61

போதாந்த புரேச சிவா கம
நாதாந்த நடேச நமோ நட. 62

ஜால கோலகன காம்பர சாயக
காலகால வன காம்பர நாயக. 63

உபல சிரதல சுபகண வங்கண
சுபல கரதல கணபண கங்கண. 64

அபய வரதகர தலபுரி காரண
உபய பரதபத பரபரி பூரண. 65

அகர வுகரசுப கரவர சினகர
தகர வகரநவ புரசிர தினகர. 66

வகர சிகரதின கரசசி சரபுர
மகர வகரவர புரஹர ஹரஹர. 67

பரம மந்த்ரசக ளாகள கரணை
படன தந்த்ரநிக மாகம சரணை. 68

அனந்த கோடிகுண கரகர ஜொலிதா
அகண்ட வேதசிர காதர பலிதா. 69

பரிபூரண ஞான சிதம் பர
பதிகாரண நாத பரம் பர. 70

சிவ ஞானப தாடக நாடக
சிவ போத பரோகள கூடக. 71

சகல லோகபர காரக வாரக
சபள யோகசர பூரக நாரக. 72

சத்வ போதக தாரண தன்மய
சத்ய வேதக பூரண சின்மய. 73

வரகே சாந்த மகோதய காரிய
பரபா சாந்த சுகோதய சூரிய. 74

பளித தீபக சோபித பாதா
லளித ரூபக ஸ்தாபித நாதா. 75

அணுர்த கோபகரு ணம்பக நாதா
அமிர்த ரூபதரு ணம்புஜ பாதா. 76

அம்போ ருகபத அரஹர கங்கர
சம்போ சிவசிவ சிவசிவ சங்கர. 77

சிதம்பர காசா பரம்பிர காசா
சிதம்ப ரேசா சுயம்பிர காசா. 78

அருட்பிர காசம் பரப்பிர காசம்
அகப்பிர காசம் சிவப்பிர காசம் 79

நடப்பிர காசம் தவப்பிர காசம்
நவப்பிர காசம் சிவப்பிர காசம். 80

நாத பரம்பரனேபர நாத சிதம்பரனே
நாத திகம்பரனே தசநாத சுதந்தரனே. 81

ஞான நடத்தவனே பரஞானி யிடத்தவனே
ஞான வரத்தவனே சிவஞான புரத்தவனே. 82

ஞான சபாபதியே மறைநாடு சதாகதியே
தீன தயாநிதியே பரதேவி யுமாபதியே. 83

புத்தந்தரும் போதா வித்தந்தருந் தாதா
நித்தந்தரும் பாதா சித்தந்திரும் பாதா. 84

அருட்பெருஞ்ஜோதி

171. போகம் சுகபோகம்

இராகம் - சங்கராபரணம் - இங்கிலீஷ் மெட்டு - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

போகஞ் சுகபோகஞ் சிவபோகம் அதுநித்யம்
எகஞ் சிவமேகஞ் சிவமேகம் இதுசத்யம். 1

நலமங்கல முறுமம்பல நடனம்மது நடனம்
பலரன்கருள் சிவசங்கர படனம்மது படனம். 2

அருட்பெருஞ்ஜோதி

172. சூதுமன்னுவிந்தையே

இராகம் - சங்கராபரணம் - இங்கிலீஷ் கோட்டு - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

சூதுமன்னு விந்தையே சூடலென்ன நிந்தையே
கோதுவின்ட சிந்தையே கோயில்கொண்ட தந்தையே. 1

அன்புமூந்து சிந்தையே அம்பலங்கொள் விந்தையே
இன்பமென்பன் எந்தையே எந்ததந்தை தந்தையே. 2

ஞானசித்தி புரத்தினை நாதசத்தி பரத்தினை
வானமுத்த தரத்தினை வாதவித்தை வரத்தினை. 3

நீயென்னப்பன் அல்லவா நினக்குமின்னஞ் சொல்லவா
தாயின்மிக்க நல்லவா சர்வசித்தி வல்லவா. 4

பலத்திற்றன்னம் பலத்திற்பொன்னம் பலத்திற்றுன்னு நலத்தினை
பதத்திற்பன்னும் பரத்திற்றுன்னும் பரத்தின் மன்னுங் குலத்தினை. 5

ஆயவாய நேயனேய மாயனாய வாதியே
தூயவாய காயதேய தோயமேய ஜோதியே. 6

ஆதவாத வேதகீத வாதவாத வாதியே
சூதவாத பாதநாத சூதஜாத ஜோதியே. 7

அங்கசங்க மங்கைபங்க ஆதிஆதி ஆதியே
துங்கபுங்க வங்கலிங்க ஜோதிஜோதி ஜோதியே. 8

அத்தமுத்த அத்தமுத்த ஆதிஆதி ஆதியே
சுத்தசித்த சத்தசித்த ஜோதிஜோதி ஜோதியே. 9

அஞ்சலஞ்ச லென்றுவந்தென் நெஞ்சமர்ந்த குழகனே
வஞ்சகஞ்ச முண்டகண்ட மன்றுள்நின்ற அழகனே. 10

தொண்டர்கண்டு கண்டுமொண்டு கொண்டுரைண்ட இன்பனே
அண்டரண்டம் உண்டவிண்டு தொண்டுமண்டும் அன்பனே. 11

கந்ததோந்த பந்தசிந்து சிந்தவந்த காலமே
எந்தையெந்த சந்தமுந்து மந்தவந்த கோலமே. 12

என்றுமென்றி னென்றுமன்றுள் நன்றுகின்ற வீசனே
ஒன்றுமொன்று மொன்றுமொன்று மொன்றதென்ற தேசனே. 13

எட்டவெட்டி யொட்டவொட்டு மிட்டதிட்ட கீர்த்தியே
அட்டவட்ட நட்டமிட்ட சிட்டவட்ட மூர்த்தியே. 14

சேரிகார சாரவார சீரகார வூரனே
ஓருகார தேரதேர வாரவார தூரனே. 15

வெய்யநோய்ய யையையை மெய்புகன்ற துப்பனே
ஐயையை யையுய்வையை முய்யகின்ற வையனே. 16

பாசநாச பாபநாச பாததேச வீசனே
வாசவாச தாசர்நேச வாசகாச பேசனே. 17

உரியதுரிய பெரியவெளியில் ஒளியிலொளிசெய் கடனனே
பிரியவரிய பிரியமுடைய பெரியரிதய படனனே. 18

அகிலபுவன வுயிர்கள் தழைய அபயமுதவும் அமலனே
அபனுமரியும் அரனுமகிழ அருளுநடன விமலனே. 19

அகரவுகர மகரவகர வமுதசிகர சரணமே
அபரசபர வமனசமன வமலநிமல சரணமே. 20

தகரகக நடனகடன சகளவகள சரணமே
சகுணநிகுண சகமநிகம சகிதவிகித சரணமே. 21

அனகவனஜ வமிதவமிர்த வகலவகில சரணமே
அதுலவனத வசுதவசல வநிலவனல சரணமே. 22

தனகனக சபையவபய சரதவரத சரணமே
சதுரசதர சகசரித தருணசரண சரணமே. 23

உளமுமுணர்வும் உயிருமொளிர ஒளிருமொருவ சரணமே
உருவினுருவும் உருவுளுருவும் உடைய தலைவ சரணமே. 24

இளகுமிதய கமலமதனை யிறைகொளிறைவ சரணமே
இருமையொருமை நலமுமருளும் இனியசமுக சரணமே. 25

அடியுநடுவு முடியுமறிய வரியபெரிய சரணமே.
அடியரிதய வெளியினடன மதுசெயதிப சரணமே. 26

ஒடிவில்கருணை அமுதமுதவும் உபலவடிவ சரணமே
உலகமுழுது முறையநிறையு முபயசரண சரணமே. 27

அறிவுளறியு மறிவையறிய வருளுநிமல சரணமே
அவசமுறுமெய் அடியரிதயம் அமருமமல சரணமே. 28

இருமையுலகி லுயிரையுடலி லிணைசெயிறைவ சரணமே
எனையுமொருவ னெனவுளுணரும் எனதுதலைவ சரணமே. 29

நினையுநினைவு கனியவினிய நிறைவுதருக சரணமே
நினையுமெனையு மொருமைபுரியும் நெறியினிறுவ சரணமே. 30

வனையுமதுர வமுதவுணவு மலியவுதவ சரணமே
மருவுசபையில் நடனவாத வருகவருக சரணமே. 31

நினைக்கில்நெஞ்ச மினிக்குமென்ற நிருத்தமன்றி லொருத்தனே
நினைக்குமன்பர் நிலைக்கநின்று பொருத்துகின்ற கருத்தனே. 32

மயங்கிநெஞ்சு கலங்கிநின்று மலங்கினேனை யாண்டவா
வயங்கிநின்று துலங்குமன்றி லிலங்குஞான தாண்டவா. 33

களங்கவாத களங்கொள்சூத ருளங்கொளாத பாதனே
களங்கிலாத வுளங்கொள்வாருள் விளங்கு ஞானநாதனே. 34

தடித்தமலத்தைக் கெடுத்துநலத்தைக் கொடுத்தகருணைத் தந்தையே
தனித்தநிலத்தி லினித்தகுலத்திற் குனித்தவடிகொ ளெந்தையே. 35

எச்சரீட்டி விச்சைகாட்டி யிச்சையூட்டு மின்பனே
அச்சமோட்டி யச்சுநாட்டி வைச்சுளாட்டு மன்பனே. 36

சபாசிவா மஹாசிவா சகாசிவா சிகாசிவா
சதாசிவா சதாசிவா சதாசிவா சதாசிவா. 37

வாசிவா சதாசிவா மஹாசிவா தயாசிவா
வாசிவா சிவாசிவா சிவாசிவா சிவாசிவா. 38

அருட்பெருஞ்ஜோதி

173. நடுநாடி நடுநாடி

ஸ்ரீராகம் - மோகனம் - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

நடுநாடி நடுநாடி நடமாடு பதியே
நடராஜ நடராஜ நடராஜ நிதியே. 1

நடுநோடி யொடுகூடி நடமாடு முருவே
நடராஜ நடராஜ நடராஜ குருவே. 2

நடுநோடி யிடைநாடி நடமாடு நலமே
நடராஜ நடராஜ நடராஜ பலமே. 3

அருட்பெருஞ்ஜோதி

174. தங்குறுவம்பு

இராகம் - பியாக் - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

தங்குறுவம்பு மங்கதிரம்பு சங்கமியம்பு நங்கொழுகொம்பு
சங்கரசம்பு சங்கரசம்பு சங்கரசம்பு சங்கரசம்பு. 1

சந்தமியன்று அந்தணர்நன்று சந்ததநின்று வந்தனமென்று
சந்திசெய்மன்று மந்திரமொன்று சங்கரசம்பு சங்கரசம்பு. 2

நனந்தலைவீதி நடந்திடுஜாதி நலங்கொளுமாதி நடம்புரிநீதி
தினங்கலையோதி சிவந்தருமோதி சிதம்பரஜோதி சிதம்பரஜோதி. 3

நகப்பெருஞ்ஜோதி சுகப்பெருஞ்ஜோதி
நவப்பெருஞ்ஜோதி சிவப்பெருஞ்ஜோதி
அகப்பெருஞ்ஜோதி நடப்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி. 4

உமைக்கோருபாதி கொடுத்தருணீதி உவப்புறுவேதி நவப்பெருவாதி
அமைத்திடுபூதி யகத்திடுமாதி அருட்சிவஜோதி அருட்சிவஜோதி. 5

அகரசபாபதி சிகரசபாபதி அனகசபாபதி கனகசபாபதி
மகரசபாபதி யுகரசபாபதி வரதசபாபதி சரதசபாபதி. 6

அமலசபாபதி அபயசபாபதி அமுதசபாபதி அகிலசபாபதி
நிமலசபாபதி நிபுணசபாபதி நிலையசபாபதி நிபிடசபாபதி. 7

பரநடஞ்சிவ சிதம்பரநடமே பதிநடஞ்சிவ சபாபதிநடமே
திருநடனம்பர குருநடமே சிவநடமம்பர நவநடமே. 8

அம்பலத்தொருநட முருநடமே அருநடமொருநடந் திருநடமே
எம்பலத்தொருநடம் பெருநடமே இதன்பரத்திருநடங் குருநடமே. 9

வேறு

அஞ்சோ டஞ்சவை யேலாதே அங்கோ டிங்கென லாகாதே
அந்தோ வெந்துயர் சேராதே அஞ்சோ கஞ்சுக மோவாதே
தஞ்சோ பங்கொலை சாராதே சந்தோ டஞ்சிவ மாமீதே
சம்போ சங்கர மாதேவா சம்போ சங்கர மாதேவா. 10

வேறு

எந்தா யென்றிடி லிந்தா நம்பத மென்றீ யும்பர மன்று மும்பதம்
என்றே டிந்தன நன்று மங்கண வெங்கோ மங்கள வெஞ்சா நெஞ்சக
சந்தே கங்கெட நந்தா மந்திர சந்தோ டம்பெற வந்தா ளந்தண
சம்போ சங்கர சம்போ சங்கர சம்போ சங்கர சம்போ சங்கர. 11

நஞ்சோ வென்றிடு நங்கோ பங்கெட நன்றே தந்தணை நந்தா மந்தண
நம்பா கெஞ்சி னிரம்பா நம்பர நம்பா நம்பதி யம்பா தம்பதி
தஞ்சோ வென்றவர் தஞ்சோ பந்தெறு தந்தா வந்தன நுந்தா டந்திடு
சம்போ சங்கர சம்போ சங்கர சம்போ சங்கர சம்போ சங்கர. 12

அருட்பெருஞ்ஜோதி

175. பொதுநிலையருள்வது

இராகம் - இந்துஸ்தான் பியாக் - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பொதுநிலை யருள்வது பொதுவினில் நிறைவது
பொதுநலம் உடையது பொதுநடம் இடுவது
அதுபரம் அதுபதி அதுபொருள் அதுசிவம்
அரஹர அரஹர அரஹர அரஹர. 1

நவநிலை தருவது நவவடி வுறுவது
நவவெளி நடுவது நவநவ நவமது
சிவமெனும் அதுபதம் அதுகதி அதுபொருள்
சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ. 2

சந்திர சேகர சுந்தர சுரவர
தந்திர நவபத மந்திர புரட
சங்கர சிவசிவ சங்கர சிவசிவ
சர்வேகர சிவசிவ சங்கர சிவசிவ.

அருட்பெருஞ்ஜோதி

176. வானசிற்கன

இராகம் - சங்கராபரணம் - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

வானசிற்கன மந்திரதந்திர வாதசிற்குண மந்தணவந்தண
வாரசற்சன வந்திதசிந்தித வாமவற்புத மங்கலமங்கள
ஞானசிற்சுக சங்கரகங்கர ஞாயசற்குண வங்கணவங்கண
நாதசிற்பர வம்பரநம்பர நாததற்பர விப்பசிதம்பர. 1

பாரதத்துவ பஞ்சகரஞ்சக பாதசத்துவ சங்கசபங்கச
பாலநித்திய வம்பகநம்பக பாசபுத்தக பண்டிதகண்டித
நாரவித்தக சங்கிதவிங்கித நாடகத்தவ நம்பதிநங்கதி
நாதசிற்பர நம்பரவம்பர நாததற்பர விப்பசிதம்பர. 2

நாதபால சுலோசன வர்த்தன
சாதசால விமோசன நிர்த்தன. 3

அருட்பெருஞ்ஜோதி

177. ஓதவடங்காது

இராகம் - மாஞ்சி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

ஓதவடங் காதுமடங் காதுதொடங் காது
ஓகையொடுங் காதுமடங் காதுநடுங் காது
சூதமலங் காதுவிலங் காதுகலங் காது
ஜோதிபரஞ் ஜோதிசுயஞ் ஜோதிபெருஞ் ஜோதி. 1

ஏதமுயங் காதுகயங் காதுமயங் காது
ஏறியிறங் காதுவுறங் காதுகறங் காது
சூதமிணங் காதுபிணங் காதுவணங் காது
ஜோதிபரஞ் ஜோதிசுயஞ் ஜோதிபெருஞ் ஜோதி. 2

அருட்பெருஞ்ஜோதி

178. விரைசேர் சடையாய்

இராகம் - தீரசங்காபரணம் - ஆளம்

அருட்பெருஞ்ஜோதி

விரைசேர் சடையாய் விடையாய் உடையா.
விகிர்தா விபவா விமலா வமலா
வெஞ்சேர் பஞ்சார் நஞ்சார் கண்டா விம்ப சிதாரனே. 1

அரசே குருவே அமுதே சிவமே
அணியே மணியே அருளே பொருளே
அந்தோ வந்தாள் எந்தாய் எந்தாய் அம்பல நம்பதியே. 2

உருவே உயிரே உணர்வே உறவே
உரையே பொருளே ஒளியே வெளியே
ஒன்றே யென்றே நன்றே தந்தாய் அம்பர நம்பரனே. 3

அருவே திருவே அறிவே செறிவே
அதுவே இதுவே அடியே முடியே
அந்தோ வந்தாள் எந்தாய் எந்தாய் அம்பல நம்பதியே. 4

அருட்பெருஞ்ஜோதி

179. பசியாத அமுதே

இராகம் - ஆனந்தபைரவி - அடதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பசியாத அமுதே பகையாத பதியே
பகராத நிலையே பறையாத சுகமே
நசியாத பொருளே நலியாத உறவே
நடராஜ மணியே நடராஜ மணியே. 1

புரையாத மணியே புகலாத நிலையே
புகையாத கனலே புதையாத பொருளே
நரையாத வரமே நடியாத நடமே
நடராஜ நிதியே நடராஜ நிதியே. 2

சிவஞான நிலையே சிவபோக நிறைவே
சிவபோக வுருவே சிவமான உணர்வே
நவநீத மதியே நவநாத கதியே
நடராஜ பதியே நடராஜ பதியே. 3

தவயோக பலமே சிவஞான நிலமே
தலையேறும் அணியே விலையேறு மணியே
நவவார நடமே சுவகார புடமே
நடராஜ பரமே நடராஜ பரமே. 4

துதிவேத உறவே சுகபோத நறவே
துனிதீரும் இடமே தனிஞான நடமே
நதியார நிதியே அதிகார பதியே
நடராஜ குருவே நடராஜ குருவே. 5

வயமான வரமே வியமான பரமே
மனமோன நிலையே கனஞான மலையே
நயமான உரையே நடுவான வரையே
நடராஜ துரையே நடராஜ துரையே. 6

பதியுறு பொருளே பொருளுறு பயனே
பயனுறு நிறைவே நிறைவுறு வெளியே
மதியுறும் அமுதே அமுதுறு சுவையே
மறைமுடி மணியே மறைமுடி மணியே. 7

அருளுறு வெளியே வெளியுறு பொருளே
அதுவுறு மதுவே மதுவுறு சுவையே
மருளறு தெருளே தெருளுறும் ஒளியே
மறைமுடி மணியே மறைமுடி மணியே. 8

தருவளர் நிழலே நிழல்வளர் சுகமே
தடம்வளர் புனலே புனல்வளர் நலனே
திருவளர் உருவே உருவளர் உயிரே
திருநட மணியே திருநட மணியே. 9

உயிருறும் உணர்வே உணர்வுறும் ஒளியே
ஒளியுறு வெளியே வெளியுறு வெளியே
செயிரறு பதியே சிவநிறை நிதியே
திருநட மணியே திருநட மணியே. 10

கலைநிறை மதியே மதிநிறை யழுதே
கதிநிறை கதிரே கதிர்நிறை சுடரே
சிலைநிறை நிலையே நிலைநிறை சிவமே
திருநட மணியே திருநட மணியே. 11

மிகவுயர் நெறியே நெறியுயர் விளைவே
விளைவுயர் சுகமே சுகமுயர் பதமே
திகழுய ருயர்வே வுயரு ருயர்வே
திருநட மணியே திருநட மணியே. 12

இயல்கிளர் மறையே மறைகிளர் இசையே
இசைகிளர் துதியே துதிகிளர் இறையே
செயல்கிளர் அடியே யடிகிளர் முடியே
திருநட மணியே திருநட மணியே. 13

புரையறு புகழே புகழ்பெறு பொருளே
பொருளது முடிவே முடிவுறு புணர்வே
திரையறு கடலே கடலெழு சுதையே
திருநட மணியே திருநட மணியே. 14

நிகழ்நவ நிலையே நிலையுயர் நிலையே
நிறையருள் நிதியே நிதிதரு பதியே
திகழ்சிவ பதமே சிவபத சுகமே
திருநட மணியே திருநட மணியே. 15

அருட்பெருஞ்ஜோதி

---

180. நீடியவேதம்

இராகம் - இந்துஸ்தானி - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

நீடிய வேதந் தேடிய பாதம்
நேடிய கீதம் பாடிய பாதம்
ஆடிய போதங் கூடிய பாதம்
ஆடிய பாதம் ஆடிய பாதம். 1

சாக்கிய வேதந் தேக்கிய பாதம்
தாக்கிய ஏதம் போக்கிய பாதம்
சோக்கிய வாதம் ஆக்கிய பாதம்
தூக்கிய பாதந் தூக்கிய பாதம். 2

ஏன்றிய சூதந் தோன்றிய பாதம்
ஈன்றிய நாதம் ஆன்றிய பாதம்
ஓன்றிய பூதம் ஞான்றிய பாதம்
ஊன்றிய பாதம் ஊன்றிய பாதம். 3

சஞ்சிதம் வீடும் நெஞ்சித பாதம்
தஞ்சித மாகும் சஞ்சித பாதம்
கொஞ்சித மேவும் ரஞ்சித பாதம்
குஞ்சித பாதம் குஞ்சித பாதம். 4

எண்ணிய நானே திண்ணிய னேனென்
எண்ணிய வாறே நண்ணிய பேறே
புண்ணிய னேனென் அண்ணிய னேனென்
புண்ணிய வானே புண்ணிய வானே. 5

தோத்திய சீரே பொத்திய பேரே
துத்திய பாவே பத்திய நாவே
சத்திய நானே நித்திய னேனென்
சத்திய வானே சத்திய வானே. 6

எம்புலப் பகையே எம்புலத் துறவே
எங்குலத் தவமே எங்குலச் சிவமே
அம்பினிற் கனலே அந்தணர்க் கிறையே
அம்பலத் தாசே அம்பலத் தாசே. 7

இன்புடைப் பொருளே இன்சுவைக் கனியே
என்குணச் சுடரே யிந்தகத் தொளியே
அன்புடைக் குருவே அம்புயற் கிறையே
அம்பலத் தமுதே அம்பலத் தமுதே. 8

அருட்பெருஞ்ஜோதி

181. வேதசிகாமணியே

இராகம் - இந்துஸ்தான்தோடி - அடதாளசாப்பு

அருட்பெருஞ்ஜோதி

வேதசிகா மணியே போதசுகோ தயமே
மேதகுமா பொருளே யோதருமோர் நிலையே
நாதபரா பரமே சூதபரா வமுதே
ஞானசபா பதியே ஞானசபா பதியே. 1

ஏக சதாசிவமே யோக சுகாகரமே
ஏம பராநலமே காம விமோசனமே
நாக விகாசனமே நாக சுகோடணிமே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 2

தூய சதாகதியே நேய சதாசிவமே
சோம சிகாமணியே வாம உமாபதியே
ஞாய பராகரமே காய புராதரமே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 3

ஆரண ஞாபகமே பூரண சோபனமே
ஆதி யனாதியனே வேதிய னாதியனே
நாரண னாதரமே காரண மேபரமே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 4

ஆகம போதகமே யாதர வேதகமே
ஆமய மோசனமே யாரமு தாகரமே
நாக நடோதயமே நாத புரோதயமே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 5

ஆடக நீடானியே நேடக நாடனியே
ஆதி புராதனனே வேதி பராபரனே
நாடக நாயகனே நானவ னானவனே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 6

ஆரியனே சிவனே ஆரணனே பவனே
ஆலயனே அரனே ஆதரனே சுரனே
நாரியனே வரனே நாடியனே பரனே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 7

ஆதர வேதியனே ஆடக ஜோதியனே
ஆரணி பாதியனே ஆதர வாதியனே
நாத விபூதியனே நாமவ ணுதியனே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 8

தேவ கலாநிதியே ஜீவ தயாநிதியே
தீன சகாநிதியே சேகர மாநிதியே
நாவல ரோர்பதியே நாரி உமாபதியே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 9

ஆடிய நாடகனே ஆலமர் ஆதியனே
ஆகம மேலவனே ஆரண நாவலனே
நாடிய காரணனே நீடிய பூரணனே
ஞான சபாபதியே ஞான சபாபதியே. 10

அருட்பெருஞ்ஜோதி

182. பதநம்புறு

இராகம் - கருடத்தொனி - ஏகதாளம்

அருட்பெருஞ்ஜோதி

பதநம்புறு பவரிங்குறு பவசங்கட மறநின்றிடு
பரமம்பொது நடமென்றென துளநம்புற அருளம்பர
சிதகுஞ்சித பதரஞ்சித சிவசுந்தர சிவமந்திர
சிவசங்கர சிவசங்கர சிவசங்கர சிவசங்கர. 1

வேறு

கலகந்தரு மவலம்பன கதிரம்பல நிதமுங்
கனகந்தரு மணிமன்றுறு கதிதந்தரு ளுடலுஞ்
சலசந்திர னெனநின்றவர் தழுவும்பத சரணம்
சரணம்பதி சரணஞ்சிவ சரணங்குரு சரணம். 2

எனதென்பதும் நினதென்பதும் இதுவென்றுணர் தருணம்
இனமொன்றது பிறிதன்றென இசைகின்றது பரமம்
தனதென்பது மனதென்பது சகமென்றனை சரணம்
சரணம்பதி சரணஞ்சிவ சரணங்குரு சரணம். 3

அருட்பெருஞ்ஜோதி

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

183. ஜோதி

மகத்தா - ஆதிதாளம்

அருட்பெருஞ்ஜோதி

ஜோதிஜோதி ஜோதிசுயஞ்
ஜோதிஜோதி ஜோதிபரம்
ஜோதிஜோதி ஜோதியருள்
ஜோதிஜோதி ஜோதிசிவம். 1

வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞானஜோதி
மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாதஜோதி
ஏமஜோதி வியோமஜோதி யேறுஜோதி வீறுஜோதி
ஏகஜோதி யேகஜோதி யேகஜோதி யேகஜோதி. 2

ஆதிநீதி வேதனே ஆடல்நீடு பாதனே
வாதிஞான போதனே வாழ்கவாழ்க நாதனே. 3

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திரு அருட்பிரகாச வள்ளலார்

19. சித்தி வளாகத் திருமாளிகையில்

திருக்காப் பிட்டுக்கொண்ட காலத்து

(ஸ்ரீமுகவரு தைமீ 19உ)

அருளிய திருப்பாடல்

கோச்சகக் கலிப்பா

அருட்பெருஞ்ஜோதி

பிச்சுலகர் மெச்சப் பிதற்றி நின்ற பேதையனேன்
இச்சையெலாம் எய்த இசைந்தருளிச் செய்தனையே
அச்சமெலாந் தீர்ந்தேன் அருளமுதம் உண்கின்றேன்
நிச்சலும்பே ரானந்த நித்திரைசெய் கின்றேனே.

அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்



சித்திவளாகத் திருமாளிகை

X இந்தக் குறியிட்ட திருஅறையில்தான் சுவாமிகள் திருக்காப்பிட்டுக்கொண்டார்கள்.

185. பல்வகைய தனிப்பாடல்கள்

சிற்சபை

அருட்பெருஞ்ஜோதி

அருட்சபை கடப்புரி அருட்பெருஞ் ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே. 1

மாதங்க முகத்தீதானங் கணபதிதன் செங்கமல மலர்த்தாள் போற்றி
ஏதங்க ளறுத்தருளுங் குமரகுரு பரன்பாத விணைகள் போற்றி
தாதங்க மலர்க்கொன்றைச் சடைபுடைய சிவபெருமான் சரணம் போற்றி
சீதங்கொள் மலர்க்குழலாள் சிவகாம சவுந்தரியின் திருத்தாள் போற்றி. 2

கலித்துறை

சோடில்லை மேல்வெள்ளைச் சொக்கா இலைகல்ல சோமனில்லை
பாடில்லை கையிற் பணமில்லை தேகப் பருமனில்லை
வீடில்லை யாதொரு வீறுப்பு மில்லை விவாகமது
நாடில்லை நீகெஞ்ச மேயெந்த வாறினி நண்ணுவையே. 3

பந்து

பூவாம லெதிதம் காய்த்த விடத்தே
பூவார் மலர்கொண்டு பந்தாடா நின்றேன்
சாவா வரந்தந்து வாழ்வாயோ பந்தே
சாவாம லென்னெடு வீழ்வாயோ பந்தே. 4

கலித்துறை

வான்வேண்டு சிற்றம் பலத்தே வயங்கி வளரமுதத்
தேன்வேண்டி னேனித் தருணத் தருள்செய்க செய்திலையேல்
ஊன்வேண்டு மென்னுயிர் நீத்துநின் மேற்பழி யோவிளைப்பேன்
நான்வேண்டு மோபழி தான்வேண்டு மோசொல்க நாயகனே. 5

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

தருவகையித் தருணநல்ல தருணமிதி லெனக்கே
தனித்தவருட் பெருஞ்ஜோதி தந்தருள்க விதுதான்
ஒருவகையீ திலையெனில்வே றொருவகையென் னுடைய
உடலுயிரை யொழித்திடுக வுவப்பினுனே டியிந்த
இருவகையுஞ் சம்மதமே திருவடிசாட் சியதாய்
இயம்பினனென் னிதயமுன்ற னிதயமறிந் ததுவே
அருவகையோ வுருவகையு மாகியென்னு ளமர்ந்தாய்
அம்மேயென் னப்பாவென் னையாவென் னரசே. 6

வினைத்தடைதீர்த் தெனையாண்ட மெய்யன்மணிப் பொதுவில்
மெய்ஞ்ஞான நடம்புரிந்து விளங்குகின்ற விமலன்
எனைத்தனிவைத் தருளொளியீந் தென்னுளிருக் கின்றான்
எல்லாஞ்செப் வல்லசித்த னிச்சையருட் ஜோதி
தினைத்தனைபெற் றவரோனுஞ் சாலுமுன்னே யுலகிற்
செத்தவர்க ளெல்லாருந் திரும்பவரு கென்று
நினைத்தவுட னெதிர்வந்து நிற்பர்கண் டாயெனது
நெஞ்சேசற் யஞ்சேலுள் ளஞ்சேலஞ் சேலே. 7

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

என்னுடலு மென்னுயிரு மென்பொருளு நின்னவென விசைந்தஞ் ஞான்றே
உன்னிடைநான் கொடுத்தனன்மற் றென்னிடைவே றொன்றுமிலை யுடையா யிங்கே
புன்னிகரேன் குற்றமெலாம் பொறுத்ததுவும் போதாமற் புணர்ந்து கொண்டே
தன்னிகரின் றெனவைத்தா யிஞ்ஞான்றென் கொடுப்பேனின் றன்மைக் கந்தோ. 8

வேறு

கோது கொடுத்த மனச்சிறியேன் குற்றங் குணமாக் கொண்டேயிப்
போதுகொடுத்த நின்னருளாம் பொருளை நினைக்கும் போதெல்லாம்
தாது கொடுத்த பெருங்களிப்புஞ் சாலா தென்றுல் சாமினைக்
கேது கொடுப்பேன் கேட்பதன்முன் னெல்லாங் கொடுக்க வல்லாயே. 9

விருத்தம்

உருத்தி ரன்றிரு மாலய னெப்பமுக் குணமா
யிருத்த லின்றிபக் குணங்களை யென்றுமாண் டருளுங்
கருத்த னுகையிற் குணேசனக் குணவிகா ரத்திற்
பொருத்த மின்மைய னுகையாற் புகல்குண ரகிதன். 10

களங்க வக்குணங் கடந்திருத் தலிற்குண தீதன்
வளங்கொ ளத்தகு முலகெலா மருவிநிற் றலினுல்
விளங்கு விச்சுவ வியாபியிவ் விசுவத்தை யாண்டு
துலங்கு முலகந் தோற்றலின் விச்சுவ கருத்தன். 11

வெய்ய னுபுல கழித்தலின் விசுவ சங்காரி
பைய மேலெனப் படுவன பலவற்றின் மேலாம்
ஐய னுதலிற் பராபர னெனப் பட்ட
செய்ய னுகிய சிவபிரா னெருவனுண் டமரீர். 12

வன்மூட்டைப் பூச்சியும் புன்சிலப் பேனுக் தன்வாய்க்கொள்ளியால்
என்மூட்டைத் தேகந் சுறுக்கிடவே சுட்டிரா முழுதும்
தொன்மூட்டையினுந் துணியினும் பாயினுஞ் சூழ்கின்றதோர்
பொன்மூட்டை வேண்டியென் செப்வேனருண் முக்கட் புண்ணியனே. 13

தத்தா தனத்தைத் தாவென் றரங்கன் றனிகடித்தாய்
தத்தா தனத்தைத் தாவென் றரங்கன் றனிகடித்தாய்
தத்தா தனத்தைத் தாவென் றரங்கன் றனிகடித்தாய்
தத்தா தனத்தைத் தாவென் றரங்கன் றனஞ்செல்லுமே. 14

போற்றிச் சந்த விருத்தம்

போற்றி நின்னருள் போற்றி நின்பொது
போற்றி நின்புகழ் போற்றி நின்னுரு
போற்றி நின்னியல் போற்றி நின்னிலை
போற்றி நின்னெறி போற்றி நின்சுகம்
போற்றி நின்னுளம் போற்றி நின்மொழி
போற்றி நின்செயல் போற்றி நின்குணம்
போற்றி நின்முடி போற்றி நின்னடி
போற்றி நின்னடி போற்றி போற்றியே. 15

போற்றி நின்னிடம் போற்றி நின்வலம்
போற்றி நின்னடம் போற்றி நின்னலம்
போற்றி நின்றிறம் போற்றி நின்றரம்
போற்றி நின்வரம் போற்றி நின்கதி
போற்றி நின்கலை போற்றி நின்பொருள்
போற்றி நின்னெளி போற்றி நின்வெளி
போற்றி நின்றயை போற்றி நின்கொடை
போற்றி நின்பதம் போற்றி போற்றியே. 16

வேறு

போற்று கின்றவென் புன்மை யாவையும்
பொறுத்த நின்பெரும் பொறுமை போற்றியென்
ஆற்றுவே னுனக் கறிகிலே னெனக்
கறிவு தந்தபே ரறிவ போற்றிவான்
காற்று நீடழ லாதியைந்து நான்
காணைக் காட்டிய கருத்த போற்றிவன்
கூற்று தைத்துநீத் தழிவிலா வுருக்
கொள்ள வைத்தநின் கொள்கை போற்றியே. 17

அருட்பெருஞ்ஜோதி

186. நிந்தாஸ்துதி

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

இறகெடுத்த வமணர்குலம் வேரறுத்த சொக்கேயீ தென்ன ஞாயம்
அறுகெடுத்த சடைமுடிமேல் மண்ணெடுக்க மாட்டாம லடிபட்டு ஐயோ
பிறகெடுத்தீர் வளையல் விற்றீர் சொற்கேளாப் பிள்ளைகளைப் பெற்ற தோஷம்
விறகெடுத்தீர் என்செய்வீர் விதிவசந்தான் யாவரையும் விடாது தானே. 1

அருட்பெருஞ்ஜோதி

திருவதிகைத் திருவீரட்டானம்

187. பெரியநாயகியம்மை தோத்திரம்

கலி விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

உரிய நாயகி யோங்கதி கைப்பதித்
துரிய நாயகி தூயவீ ரட்டற்கே
பிரிய நாயகி பேரரு ணைநகி
பெரிய நாயகி பெற்றியைப் பேசுவாம். 1

உலகந் தழைக்க வுயிர்தழைக்க வுணர்வு தழைக்க வொளிதழைக்க
உருவந் தழைத்த பசுங்கொடிபே உள்ளத் தினிக்குந் தெள்ளமுதே
திலகந் தழைத்த நுதற்கரும்பே செல்வத் திருவே கலைக்குருவே
சிறக்கும் மலைப்பெண் மணியேமா தேவி யிச்சை ஞானமொடு
வலகந் தழைக்குங் கிரியையின்பம் வழங்கு மாதி பரையென்ன
வயங்கு மொருபே ரருளேயெம் மதியை விளக்கும் மணிவிளக்கே
அலகந் தழைக்குந் திருவதிகை ஐயர் விரும்பும் மெய்யுறவே
அரிய பெரிய நாயகிப்பெண் அரசே என்னை யாண்டருளே. 2

தன்னே ரரியாப் பரவெளியிற் சத்தாஞ் சுத்த வனுபவத்தைச்
சார்ந்து நின்ற பெரியவர்க்குந் தாயே யெமக்குத் தனித்தாயே
மின்னே மின்னே ரிடைப்பிடியே விளங்கு மிதய மலரனமே
வேதம் புகலும் பசுங்கிளியே விமலக் குயிலே யிளமயிலே
பொன்னே யெல்லாம் வல்லதிரி புரையே பரையே பூரணமே
புனிதமான புண்ணியமே பொற்பே கற்ப கப்பூவே
அன்னே முன்னே என்னேயத் தமர்ந்த வதிகை யருட்சிவையே
அரிய பெரிய நாயகிப்பெண் அரசே யென்னை யாண்டருளே. 3

அருட்பெருஞ்ஜோதி

திருவோத்தூர்

188. ஞானசிகாமணி தோத்திரம்

பன்னிருசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அனிவா யுலகத் தம்புயனு மளிக்குந் தொழிற்பொன் னம்புயனும்
அறியா வருமைத் திருவடியை யடியேந் தரிசித் தகங்குளிர
மணிவாய் மலர்ந்திதம் போல்வார்க்கு மறைபுண் முடிபை வகுத்தருள
வயங்குங் கருணை வடிவெடுத்து வந்து விளங்கு மணிச்சுடரே
பிணிவாய் பிறவிக் கொருமருந்தே பேரா னந்தப் பெருவிருந்தே
பிறங்கு கதியி னருளாறே பெரியோர் மகிழ்விற் பெரும்பேறே
தினிவா யெயிற்சூழ் திருவோத்தூர் திகழ வமர்ந்த சிவநெறியே
தேவர் புகழுஞ் சிவஞானத் தேவே ஞான சிகாமணியே. 1

நின்பா லறிவு நின்செயலு நீயும் பிறிதன் றெமதருளே
நெடிய விகற்ப வுணர்ச்சிகொடு நின்ற யதனல் நேர்ந்திலகாண்
அன்பா லுன்பா லொருமொழிதந் தனமிம் மொழியா லறிந்தொருங்கி
அளவா வறிவே யுருவாக வமரன் றுணர்த்து மரும்பொருளே
இன்பா லென்பாற் றருதாயி னினிய கருணை யிருங்கடலே
இகத்தும் பரத்துந் துணையாகி என்னு ளிருந்த வியனிறைவே
தென்பால் விளங்குந் திருவோத்தூர் திகழு மதுரச் செழுங்கனியே
தேவர் புகழுஞ் சிவஞானத் தேவே ஞான சிகாமணியே. 2

அசையும் பரிசாந் தத்துவமன் றவத்தை யகன்ற வறிவேநீ
யாகு மதனை யெமதருளா லலவா மென்றே யுலவாமல்
இசையும் விகற்ப நிலையையொழித் திருந்த படியே யிருந்தறிகாண்
என்றென் னுணர்வைத் தெளித்தனைக் கென்னை கைம்மா றறியேனே
நசையும் வெறுப்புந் தவிர்ந்தவர்பால் நண்ணுந் துணையே நன்னெறியே
நான்று னென்ன லறத்திகழ்ந்து நாளு மோங்கு நடுநிலையே
திசையும் புவியும் புகழோத்தூர்ச் சிற்கொண் மதுரச் செழும்பாகே
தேவர் புகழுஞ் சிவஞானத் தேவே ஞான சிகாமணியே. 3

அருட்பெருஞ்ஜோதி

189. வயித்தியநாதர் பதிகம்

பதினன்குசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

ஓகைமட வாரல்குலீ லபிரம பதமவர்கள்
உந்தியே வைகுந்த மேல்
ஓங்குமுலை யேகைலை யவர்குமுத வாயினிதழ்
ஊறலே யமுத மவர்தம்
பாகனைய மொழியேகல் வேதவாக் கியமவர்கள்
பார்வையே கருணை நோக்கம்
பாங்கினவ ரோடுவிளை யாடவரு சுகமதே
பரமசுக மாகுமிந்த
பூகமறி யாமலே தேகமிக வாடினீர்
உறுசுவைப் பழமை றிந்தே
உற்றவெறு வாய்மெல்லும் வீணர்நீ ரென்றுரல்
லோரை நிந்திப்ப ரவர்தம்
வாகைவாய் மதமற மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழ்வருள் வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 1

உண்டதே யுணவுதான் கண்டதே காட்சியிதை
உற்றறிய மாட்டார் களா
உயிருண்டு பாவபுண் ணியமுண்டு இருவினைகள்
உண்டுபிற வியுண்டு துன்பத்
தொண்டதே செயுநரக வாதைபுண் டின்பமுறு
சொர்க்கமுண் டிவையு மன்றித்
தொழுகடவு ளுண்டுகதி யுண்டென்று சிலர்சொலுந்
தூர்ப்புத்தி யாலுல கிலே
கொண்டதே சாதகம் வெறுத்துமட மாதர்தங்
கொங்கையும் வெறுத்துக் கையில்
கொண்டதீங் கனியைவிட் டந்தரத் தொருபழங்
கொள்ளுவீ ரென்ப ரந்த
வண்டர்வா யறவொரு மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழ்வருள் வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 2

உம்பர்வா னமுதனைய சொற்களாற் பெரியோர்
உரைத்தவாய் மைகளை நாடி
ஓதுகின் றூர்தமைக் கண்டவ மதித் தெதிரில்
ஓதிபோல நிற்பது மலால்
கம்பர்வாய் இவர்வாய்க் கதைப்பென்பர் சிறுகருங்
காக்கைவாய்க் கத்த லிவர்வாய்க்
கத்தலிற் சிறிதென்பர் சூடேறு நெய்யொரு
கலங்கொள்ள வேண்டு மென்பர்
இம்பர்நாங் கேட்டகதை யிதுவென்ப ரன்றியும்
இவர்க்கேது தெரியு மென்பர்
இவையெலா மெவனேனுவார் வம்பனும் வீணன்முன்
இட்டகட் டென்பர் மெத்த
வம்பர்வா யறிவொரு மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழ்வரு வேலரூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 3

கல்லையு முருக்கலாம் நாருரித் திடலாம்
கனிந்தகனி யாச்செய் யலாம்
கடிவிடமு முண்ணலாம் அமுதாக்க லாங்கொடுங்
கரடிபுலி சிங்க முதலா
வெல்லுமிரு கங்களையும் வசமாக்கலா மன்றி
வித்தை புங்கற் பிக்கலாம்
மிக்கவா ழைதத்தண்டை விறகாக்க லாமணலை
மேவுதேர் வடமாக் கலாம்
இல்லையொரு தெய்வம்வே றில்லையெம் பாலின்பம்
ஈகின்ற பெண்கள் குறியே
எங்கள்குல தெய்வமெனு மூடரைத் தேற்றவெனில்
எத்துணைபு மரிதரிது காண்
வல்லையவ ருணர்வற மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழ்வரு வேலரூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 4

படியளவு சாம்பலைப் பூசியே சைவம்
பழுத்த பழமோ பூசுணைப்
பழமோ வெனக்கருங் கல்போலு மசையாது
பாழாகு கின்றூர்க ளோர்
பிடியளவு சாதமுங் கொள்ளார்கள் அல்லதாரு
பெண்ணை யெனினுங் கொள்கிலார்
பேய்கொண்ட தோவன்றி நோய்கொண்ட தோபெரும்
பித்தேதற்ற தோவறிகி லேன்

செடியளவு வூத்தைவாய்ப் பல்லழுக் கெல்லாந்
தெரிந்திடக் காட்டி நகைதான்
செய்துவளை யாப்பெருஞ் செம்மாந் துண்டுபோற்
செம்மாப்ப ரவர்வாய் மதம்
மடியளவு தாவொரு மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழ்வரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 5

பெண்கொண்ட சுகமீது கண்கண்ட பலனிது
பிடிக்கவறி யாது சிலர்தாம்
பேரூரி லாதவொரு வெறுவெளியிலே சுகம்
பெறவே விரும்பி வீணிற்
பண்கொண்ட வுடல்வெளுத் துள்ளே நரம்பெலாம்
பசையற்று மேலெ ழுப்பப்
பட்டினி கிடந்து சாகின்றார்க ளீதென்ன
பாவமிவ ருண்மை யறியார்
கண்கொண்ட குருடரே யென்றுவாய்ப் பல்லெலாங்
காட்டிச் சிரித்து நீண்ட
கழுமரக் கட்டைபோல் நிற்பார்க ளையவிக்
கயவர்வாய் மதமு ழுதுமே
மண்கொண்டு போகவோர் மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழ்வரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 6

திருத்தமுடை யோர்கருணை யாலிந்த வுலகில்
தியங்குவீ ரழியாச் சுகம்
சேருலக மாம்பரம பதமதினை யடையுநெறி
சேரவா ருங்க ளென்றுல்
இருத்தினிய சுவையுணவு வேண்டுமெனி யாடைதரும்
இடம்வேண்டு மிவைக ளெல்லாம்
இல்லேபா யிணுமிரவு பகலென்ப தறியாமல்
இறுகப் பிடித்த ணைக்கப்
பெருத்தமுலை யோடிளம் பருவமுட னழகுடைய
பெண்ணைகப் படுமா கிலோ
பேசிமே ரப்பரம பதநாட்டி னுக்குநும்
பிறகிதோ வருவ மென்பார்
வருத்துமவ ருறவற மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழ்வரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 7

பேதையுல கீர்விரத மேதுதவ மேதுவீண்
பேச்சிவை யெலாம் வேதனும்
பித்தன்வாய்ப் பித்தேறு கத்துநூல் கத்திப
பெரும்புரட் டாகு மல்லால்
ஓதைபுறும் உலகா யததிணுள வண்மைபோல்
ஒருசிறிது மில்லை யில்லை
உள்ளதறி யாதிலவு காத்தகிளி போலுடல்
உலர்ந்தீர்க ளினியா யினும்
மேதையுண வாதிவேண் டுவமெலா முண்டுநீர்
விரைமலர்த் தொடை யாதியா
வேண்டுவ வெலாங்கொண்டு மேடைமேற் பெண்களொடு
விளையாடு வீர்க ளென்பார்
வாதையவர் சார்பற மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழ்வருள் வேலரரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 8

ஈனம் பழுத்தமன வாதையற நின்னருளை
எண்ணிநல் லோர்க ளொருபால்
இறைவநின் சேவித்தி யம்பியிரு கண்ணீர்
இறைப்ப வதுகண்டு நின்று
ஞானம் பழுத்துவிழி யாலொழுகு கின்றநீர்
நம்முலகி லொருவ ரலரே
ஞானியிவர் யோனிவழி தோன்றியவ ரோவென
நகைப்பர் சும்மா வழுகிலோ
ஊனங் குழுத்தகண் ணேமென்ப ருலகத்தில்
உயர்பெண்டு சாக்கொ டித்த
ஒருவன்முக மென்னவிவர் முகம்வாடி கின்றதென
உளறு வார்வா யடங்க
மானம் பழுத்திடு மருந்தருள்க தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழ்வருள் வேலரரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 9

கற்பவை யெலாங்கற் றுணர்ந்தபெரி யோர்தமைக்
காண்பதே யருமை யருமை
கற்பதரு மிடியனிவ னிடையடைந் தாலெனக்
கருணையா லவர் வலியவந்
திற்புற னிருப்பவது கண்டுமந் தோகடி
தெழுந்துபோய்த் தொழுது தங்கட்
கியலுறுதி வேண்டாது கண்கெட்ட குருடர்போல்
ஏமாந் திருப்ப ரிவர்தாம்

பொற்பினது சுவையறிபு மறிவுடைய ரன்றுமேற்
புல்லாதி யுணு முயிர்களும்
போன்றிடா ரிவர்களைக் கூரைபோய்ப் பாழாம்
புறச்சுவ ரெனப் புகலலாம்
வற்புறும் படிதரும வழியோங்கு தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 10

மெய்யோர் தினைத்தினையு மறிகிலார் பொய்க்கதை
விளம்பமெனி லிவ்வு லகிலோ
மேலுலகி லேறுகினு மஞ்சாது மொழிவர்தரு
மேவுமண் ணெனினு முதவக்
கையோ மனத்தையும் விடுக்கவிசை யார்கள்கொலை
களவுகட் காம முதலாக்
கண்டதீ மைகளன்றி நன்மையென் பதனையொரு
கனவிலுங் கண்டறி கிலார்
ஐயோமு னிவர்தமை விதிப்படி படைத்தவிதி
யங்கைதாங் கங்கை யென்னும்
ஆற்றிற் குளிக்கினுந் தீமூழ்கி யெழினுமவ்
வசுத்த நீங்காது கண்டாய்
மையோ ரணுத்துணையு மேவுறுத் தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 11

இளவேனின் மாலையாய்க் குளிர்சோலை யாய்மலர்
இலஞ்சிபூம் பொய்கை யருகாய்
வற்றசுந் திரகாந்த மேடையா யதன்மேல்
இலங்கு மரமிய வணையுமாய்
தளவேயு மல்லிகைப் பந்தராய்ப் பால்போற்
றழைத்திடு நிலாக் காலமாய்த்
தனியிளந் தென்றலாய் நிரைநரம் புளவீணை
தன்னிசைப் பாட லிடமாய்
களவே கலந்தகற் புடையமட வரல்புடை
கலந்தநய வார்த்தை புடனுய்க்
களிகொள இருந்தவர்கள் கண்டசுகம் நின்னடிக்
கழனிழற் சுக நிகருமே
வளவேலை சூழுலகு புகழ்கின்ற தவசிகா
மணியுலக நாத வள்ளல்
மகிழவரு வேளூரி லன்பர்பவ ரோகமற
வளர் வயித்திய நாதனே. 12

அருட்பெருஞ்ஜோதி

190. ஸ்ரீ ராமநாமத் திருப்பதிகம்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

காராய வண்ண மணிவண்ண கண்ண கனசங்கு சக்ர தரனீள்
சீராய தூய மலர்வாய நேய ஸ்ரீராம ராம னெனவே
தாராய வாழ்வு தருநெஞ்சு சூழ்க தாமோத ராய நமவோம்
நாராய ணைய நமவாம ணைய நமசேச வாய நமவே. 1

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

திருமகளெம் பெருமாட்டி மகிழும் வண்ணச்
செழுங்கனியே கொழும்பாகே தேனே தெய்வத்
தருமகுணக் காத்தருளக் காத்தீத வென்றித்
தனுவெடுத்த வொருமுதலே தருமப் பேறே
இருமையுமென் னுளத்தமர்ந்த ராம நாமத்
தென்னரசே யென்னமுதே யென்று யேங்கின்
மருமலர்ப்பொன் னடிவழுத்துஞ் சிறியேன் அகதோ
மனந்தளர்ந்தேன் அறிந்தும்அருள் வழங்கி லாயே. 2

கலைக்கடலே கருணைநெடுங் கடலே கானங்
கடந்ததடங் கடலேயென் கருத்தே ஞான
மலைக்கணைழுஞ் சுடரேவான் சுடரே யன்பர்
மனத்தினாளிருஞ் சுயஞ்சுடரே மணியே வானோர்
தலைக்கணுறு மகுடசிகா மணியே வாய்மைத்
தசரதன்றன் குலமணியே தமியேன் உள்ளம்
நிலைக்கணுறுஞ் ஸ்ரீராம வள்ளலே யென்
நிலையறிந்தும் அருளவின்று நினைந்தி லாயே. 3

மண்ணுளா நின்றவர்தம் வாழ்வு வேண்டேன்
மற்றவர்போற் பற்றடைந்து மாள வேண்டேன்
விண்ணுளா நின்றவொரு மேன்மை வேண்டேன்
வித்தகநின் றிருவருளே வேண்டி நின்றேன்
புண்ணுளா நின்றமன முடையேன் செய்த
பொய்யனைத்துந் திருவுளத்தே பொறுப்பா யன்றிக்
கண்ணுளா சுடர்க்கமலக் கண்ணு என்னைக்
கைவிடிலென் செய்வேனே கடைய னேனே. 4

தெவ்வினையார் அரக்கர்குலஞ் செற்ற வெற்றிச்
சிங்கமே யெங்கள்குல தெய்வ மேயோ
வெவ்வினைதீர்த் தருள்கின்ற ராம நாம
வியன்சுடரே யிவ்வுலக விடபக் காட்டில்
இவ்வினையேன் அகப்பட்டேன் புலனுங் கள்வர்க்
கிலக்கானேன் துணையொன்று மில்லேன் அந்தோ
செய்வினையொன் றறியேனிங் கென்ன யெந்தாய்
திருவுளத்திற் சேர்த்திலையேற் செய்வ தென்னே. 5

வான்வண்ணக் கருமுகிலே மழையே நீல
மணிவண்ணக் கொழுஞ்சுடரே மருந்தே வானத்
தேன்வண்ணச் செழுஞ்சுவையே ராம நாமத்
தெய்வமே நின்புகழைத் தெளிந்தே னந்தா
ஊன்வண்ணப் புலைவாயர் இடத்தே சென்றுங்
குழைக்கின்றேன் செய்வகையொன் றுணரேன் அந்தோ
கான்வண்ணக் குடும்பத்திற் கிலக்கா என்னைக்
காட்டிஅண்பே யென்னைநின் கருணை யீதா. 6

பொன்னுடையார் வாயிலிற்போய் வீணை காலம்
போக்குகின்றேன் இவ்வுலகப் புணர்ப்பை வேண்டி
என்னுடையாய் நின்னடியை மறந்தேன் அந்தோ
என்செய்கேன் என்செய்கேன் ஏழையே னுன்
பின்னுடையேன் பிழையுடையேன் அல்லா னுன்றன்
பேரருளும் உடையேனே பிறந்தேன் வாளா
உன்னுடைய திருவுளத்திதன் னினைதி போலுவன்
ஒருமுதல்வா ஸ்ரீராமா வுணர்கி லேனே. 7

அறம்பழுக்குந் தருவேயென் குருவே யென்றன்
ஆருயிருக் கொருதுணையே யரசே பூவை
நிறம்பழுக்க அழகொழுகும் வடிவக் குன்றே
நெடுங்கடலுக் கணையளித்த நிலையே வெய்ய
மறம்பழுக்கும் இலங்கையிரா வணனைப் பண்டோர்
வாளியினுற் பணிகொண்ட மணியே வாய்மைத்
திறம்பழுக்கும் ஸ்ரீராம வள்ள லேநின்
திருவருளே யன்றிமற்றோர் செயலி லேனே. 8

கல்லாய வன்மனத்துர் தம்பாற் சென்றே
கண்கலக்கங் கொள்கின்றேன் கவலை வாழ்வை
எல்லாமுள் ளிருந்தறிந்தா யன்றே சற்றும்
இரங்கிலையெம் பெருமானே யென்னே யென்னே
பொல்லாத வெவ்வினையேன் எனினும் என்னைப்
புண்ணியனே புரப்பதருட் புகழ்ச்சி யன்றே
அல்லார்ந்த துயர்க்கடனின் றெடுத்தி டாயேல்
ஆற்றேனுன் பழிநின்பால் ஆக்கு வேனே. 9

மையான நெஞ்சகத்தோர் வாயில் சார்ந்தே
மனந்தளர்ந்தேன் வருந்துகின்ற வருத்த மெல்லாம்
ஐயாவென் உளத்தமர்ந்தாய் நீதான் சற்றும்
அறியாயோ அறியாயேல் அறிவா ரியாரே
பொய்யான தன்மையினேன் எனினு மென்னைப்
புறம்விடுத்தல் அழகேயோ பொருளா எண்ணி
மெய்யாவென் றனையங்நாள் ஆண்டா யிங்நாள்
வெறுத்தனையேல் எங்கேயான் மேவு வேனே. 10

கூறுவதோர் குணமில்லாக் கொடிதாஞ் செல்வக்
குருட்டறிவோர் இடைப்படினென் குறைக ளெல்லாம்
ஆறுவதோர் வழிகாணேன் அந்தோ அந்தோ
அவலமெனுங் கருங்கடலில் அழுந்து கின்றேன்
ஏறுவதோர் வகையறியேன் எந்தா யெந்தாய்
ஏற்றுகின்றேற் நின்னையன்றி இல்லேன் என்னைச்
சீறுவதோ இரங்குவதோ யாதோ வுன்றன்
திருவுளத்தைத் தெரியேனே சிறிய னேனே. 11

அருட்பெருஞ்ஜோதி

திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவப்பெருமாள்

191. போற்றித் திருப்பஞ்சகம்

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

தண்ணமர் மதியே சாந்தந் தழைத்தசத் துவனே போற்றி
வண்ணமா மணியே போற்றி மணிவண்ணத் தேவா போற்றி
அண்ணலே எவ்வு ளூரில் அமர்ந்தரு ளாதி போற்றி
விண்ணவர் முதல்வா போற்றி வீரரா கவனே போற்றி. 1

பாண்டவர் தூத னுகப் பலித்தருள் பரனே போற்றி
நீண்டவ னென்ன வேதம் நிகழ்த்துமா நிதியே போற்றி
தூண்டலில் லாம லோங்குஞ் ஜோதிநல் விளக்கே போற்றி
வேண்டவ ரெவ்வு ளூர்வாழ் வீரரா கவனே போற்றி. 2

மேதினி புரக்கும் வேந்தர் வீறெலாம் நினதே போற்றி
கோதிலா மனத்தே நின்று குலாவிய கோவே போற்றி
ஓதிய எவ்வு ளூரில் உறைந்தருள் புரிவாய் போற்றி
வேதியன் றன்னை யீன்ற வீரரா கவனே போற்றி. 3

இளங்கோடி தனைக்கொண் டேகும் இராவணன் றனை யழித்தே
களங்கமில் விபீட ணைர்க்குக் கனவர சளித்தாய் போற்றி
துளங்குமா தவத்தோ ருற்ற துயரெலாந் தவிர்த்தாய் போற்றி
விளங்குநல் எவ்வு ளூர்வாழ் வீரரா கவனே போற்றி. 4

அற்புதத் திருவை மார்பில் அணைத்தபே ரழகா போற்றி
பொற்புறு திகிரி சங்கு பொருந்துகைப் புனிதா போற்றி
வற்புறு பிணிதீர்த் தென்னை மகிழ்வித்த வரதா போற்றி
வெற்புய எவ்வு ளூர்வாழ் வீரரா கவனே போற்றி. 5

அருட்பெருஞ்ஜோதி

திருக்கண்ணமங்கை

192. இலக்ஷ்மி தோத்திரம்

பன்னிருசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

உலகம் புரக்கும் பெருமான்றன் உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி
உவகை யளிக்கும் பேரின்ப வுருவே யெல்லாம் உடையாளே
திலகஞ் செறிவா ணுதற்கருமபே தினே கனிந்த செழுங்கனியே
தெவிட்டா தன்பர் உளத்துள்ளே தித்திக் தெழுமோர் தெள்ளமுதே
மலகஞ் சுகத்தேதற் கருளளித்த வாழ்வே யென்கண் மணியேயென்
வருத்தந் தவிர்க்க வருங்குருவாம் வடிவே ஞான மணிவிளக்கே
சலகந் தாம்போற் கருணைபொழி தடங்கண் திருவே கண்ணமங்கைத்
தாயே சரணஞ் சரணமிது தருணங் கருணை தருவாயே. 1

அருட்பெருஞ்ஜோதி

சென்னப்பட்டணம் ஏழுகிணற் றருகிலிருக்கும்

193. துலுக்காணத் தம்மன்பேரில்

பஞ்சரத்தினம்

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

சீர்வளர் மதியுந் திருவளர் வாழ்க்கைச் செல்வமுங் கல்வியும் பொறையும்
பார்வளர் திறனும் பயன்வளர் பரிசும் பத்தியு மெனக்கருள் பரிந்தே
வார்வளர் தனத்தாய் மருவளர் குழலாய் மணிவள ரணிமலர் முகத்தாய்
ஏர்வளர் குணத்தா யிசைதுலுக் காணத் திரேணுகை யெனுமொரு திருவே. 1

உவந்தொரு காசும் உதவிடாக் கொடிய உலுத்தர்தங் கடைதொறு மோடி
அவந்தனி லலைபா வகையெனக் குன்றன் அகமலர்ந் தருளுதல் வேண்டும்
நவந்தரு மதிய நிவந்தபூங் கொடியே நலந்தரு நசைமணிக் கோவை
இவந்தொளிர் பசுந்தே னிசைதுலுக் காணத் திரேணுகை யெனுமொரு திருவே.

விருந்தினர் தம்மை யுபசரித் திடவும் விரவுறு முறவினர் மகிழத்
திருந்திய மனத்தால் நன்றிசெய் திடவுஞ் சிறியனேற் கருளுதல் வேண்டும்
வருந்திவந் தடைந்தோர்க் கருள்செயுங் கருணை வாரியே வடிவுறு மயிலே
இருந்திசை புகழு மிசைதுலுக் காணத் திரேணுகை யெனுமொரு திருவே. 3

புண்ணியம் புரியும் புனிதர்தஞ் சார்பும் புத்திரர் மனைவியே முதலாய்
நண்ணிய குடும்ப நலம்பெறப் புரியும் நன்குமென் றனக்கருள் புரிவாய்
விண்ணிய கதிரி னொளிசெயு மிழையாய் விளங்கரு ளொழுகிய விழியாய்
எண்ணிய அடியர்க் கிசைதுலுக் காணத் திரேணுகை யெனுமொரு திருவே. 4

மனமெலி யாமற் பிணியடை யாமல் வஞ்சகர் தமைமரு வாமற்
சினநிலை யாம லுடல்சலி யாமற் சிறியனே னுறமகிழ்ந் தருள்வாய்
அனமகிழ் நடையா யணிதுடி யிடையாய் அழகுசெய் காஞ்சன வுடையாய்
இனமகிழ் சென்னை யிசைதுலுக் காணத் திரேணுகை யெனுமொரு திருவே. 5

அருட்பெருஞ்ஜோதி

குறிஞ்சிப்பாடிக் கடுத்துள்ள

194. சிங்கபுரிக் கந்தர் பதிகம்

வெண்பா

அருட்பெருஞ்ஜோதி

பொன்மகள்வாழ் சிங்கபுரி போதனறு மாமுகன்மேல்
நன்மைமிகு செந்தமிழ்ப்பா நாமுரைக்கச் — சின்மயத்தின்
மெய்வடிவா நங்குருதாள் வேழமுகன் றன்னிருதாள்
பொய்யகலப் போற்றுவமிப் போது.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

சீராரு மறையொழுக்கந் தவிராது நான்மரபு சிறக்க வாழும்
ஏராரு நிதிபதியிற் றிரன்புரமு மிகநாணு மெழிலின் மிக்க
வாராருங் கொங்கையர்கள் மணவாளருடன்கூடி வாழ்த்த நாளும்
தேராரு நெடுவீதிச் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 1

உம்பர்துயர் கயிலையரர்க் கோதிடவே யப்பொழுதே யுவந்து நாதன்
தம்பொருவில் முகமாறு கொண்டுறுத லீன்றபொறி சரவணத்தில்
நம்புபவ ருயவிடுத்து வந்தருளு நங்குகனே நலிவு தீர்ப்பாய்
திங்கள்தவழ் மதில்சூழுஞ் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 2

போல்லாத சூர்க்கிளையைத் தடிந்தமரர் படுந்துயரப் புன்மை நீக்கும்
வல்லானே யெனதுபிணி நீநினைந்தா லொருகணத்தில் மாறிடாதோ
கல்லாதே னெனினுமெனை யிகழாதே நினதடியார் கழகங் கூட்டாய்
செல்லாதார் வலியடக்குஞ் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக்குன்றே. 3

பண்றேசங் கப்புலவ ரருஞ்சிறையைத் தவிர்த்தருளும் பகவ னேயென்
புண்டருவிந் நோய்தணிக்கப் புரையிலியோய் யான்செய்யும் புன்மைதானே
தண்டையெழில் கிண்கிணிசேர் சரணமலர்க் கனுதினமும் தமியேன் அன்பாய்த்
தெண்டனிடச் செய்தருள்வாய் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 4

தாவாத வசியர்குலப் பெண்ணினுக்கோர் கரமளித்த சதுரன் அன்றே
மூவாத மறைபுகலு மொழிகேட்டுன் மூண்டகத்தாண் முறையிற் முழ்ந்து
தேவாதி தேவனெனப் பலராலுந் துதிபுரிந்து சிறப்பின் மிக்க
தீவாயிப் பிணிதொலைப்பாய் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 5

வானவர்கோன் மேனளிற் றரமறியா திகழ்ந்துவிட விரைவிற் சென்று
மானமதில் வீற்றிருந்தே யவன்புரிந்த கொடுமைதனை மாற்று மெங்கள்
தானவர்தங் குலமடர்த்த ஷண்முகனே இப்பிணியைத் தணிப்பாய் வாசத்
தேனவிழும் பொழில்சூழுஞ் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 6

மட்டாரும் பொழில்சேரும் பரங்கிரிசேர் தூர்பழனி மருவு சாமி
நட்டாரும் பணிபுரியு மாறுதலை மலைமுதலாய் நணுகி யெங்கள்
ஓட்டாதார் வலியடக்கி யன்பர்துதி யேற்றருளு மொருவ காவாய்
தேட்டாதார்க் கருள்புரியுஞ் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 7

முன்செய்த மாதவத்தால் அருணகிரிநாதர் முன்னே முறையிட் டேத்தும்
புன்செயல்தீர் திருப்புகழை யேற்றருளு மெய்ஞ்ஞான புனித னென்றே
என்செயலி லிரவுபக லொழியாமற் போற்றியிட விரங்கா தென்னே
தென்றிசைசேர்ந் தருள்புரியுஞ் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 8

விண்ணவர்கோ னருத்துயர நீக்கிடவு மாதுதவ விளைவு நல்கும்
கண்ணகன்ற பேரருளின் கருணையிறைக் குஞ்சரியைக் காத லோடும்
மண்ணுலகோர் முதலுயிர்கள் மகிழ்ந்திடவு மணம்புரிந்த வள்ளலே யென்
றிண்ணியதீ வினையொழிப்பாய் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 9

மாசகன்ற சிவமுனிவ ரருளாலே மானிடமாய் வந்த மாதின்
ஆசில்தவப் பேறளிக்க வள்ளிமலை தனைச்சார்ந்தே யங்கு கூடி
நேசமிகு மணம்புரிந்த நின்மலனே சிறியேனை நீயே காப்பாய்
தேசுலவு பொழில்சூழுஞ் சிங்கபுரி தனிலமர்ந்த தெய்வக் குன்றே. 10

அருட்பெருஞ்ஜோதி



195. குடும்ப கோவை

காப்பு

அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

பூவுலகும் பொன்னுலகும் புகழ்த்தவத்திற் பெரியருளம் புனித மான
தேவுலகென் றமர்ந்தருளுஞ் சிவகளிற்றை ஐந்துகரத் தெய்வந் தன்னை
மூவுலகுந் துதியாறு முகத்தமுதை யெங்குருவை முக்கட் கோவை
நாவுலகு நயப்பெய்த வழுத்தியெம துறுவினையின் நலைகள் தீர்ப்பாம். 1

ஆனமுகத் தனையாறு முகத்தனையும் முகத்தனப்பா லவளைப் பூதச்
சேனைமுகத் தலைவனைச்சண் டேசரனைக் கவுணியகோத் திரங்கோவைச்
சோனைமுகத் தருள்திருத்தாண் டகப்புனைந்த அப்பனைவன் றெண்டத் தேவை
வானைமுகத் தவர்வழுத்தும் வாதவூர் அடிகளையாம் வணங்கி வாழ்வாம். 2

தெறுங்கையா னனமுரித்த சிவனேயிக் குடும்பத்தின் செய்கை சொல்லப்
பெறுங்கையாம் வகையொன்றுந் தெரியாமே சொலப்புகுந்த பேதையேனைக்
குறுங்கையான் மலையணைத்துக் கொளநினைத்தான் என்கேடு கொளுந்தூ சின்றி
வெறுங்கையான் முழம்போடும் வேலையிலா வீணனென விளம்பு கேடே. 3

சீர்பாட்டிற் சிறந்தசிவ குருசேவையிக் குடும்பத்தின் திறம்பா டற்கே
ஓர்பாட்டிற் கோருகோடிப் பசும்பொன்வரும் ஆலுலும் உன்பே ரன்றிப்
பார்பாட்டிற் சிறுதெய்வப் பேர்களைமுன் னிலைவைத்துப் பாடேன் இந்த
கேர்பாட்டிற் பிழைகுறியேல் அருட்செவிக்கேற் பித்தலருள் நிலைமை யன்றே.

கலிநிலைத்துறை

மாநில மீதிற் றான்முறை செய்தது மனமேவும்
நானெனில் நானே நாணமி லேனை நகுகின்றேன்
ஈனமில் புலவீர் என்னுள் அமர்ந்தருள் இறையெம்மான்
தானெனில் அடியேன் அவைசொ லடக்கஞ் சதுரன்றே. 5

அருட்பெருஞ்ஜோதி

முதலாவது

195. குருதரிசனப் படலம்

கலிவிருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

நீர்வளம் நிலவளம் நிறைந்த பொற்பது
கார்வளர் பொழில்புடை கவின்ற காட்சிய
தேர்வளர் நலனெலா மென்று முள்ளது
சீர்வளர் தலங்களுள் திலக மென்பது. 1

திருவளர் புயத்தனுந் திசை முகத்தனுந்
தருவளர் மகத்தனுஞ் சார்ந்து நாடொறும்
மருவளர் மலர்கொடு வழிபட் டெண்ணிய
உருவளர் சிறப்பெலா முற்ற மாண்பது. 2

அற்றமில் சண்பைய ராதி மூவருஞ்
சொற்றமிழ்ப் பதிகங்கள் தோறுஞ் சேர்வது
நற்றவர் புகழ்வது நாயி னேனுக்குங்
கற்றவ ருறவினைக் காட்டி நின்றது. 3

தவநெறி தழைத்துமெய்ச் சாந்தம் பூத்துவன்
பவநெறி காய்த்தருட் பழம் பழுத்திடும்
நவநெறி தருப்பர நவிற்றுஞ் சைவமாஞ்
சிவநெறி தருந்தருச் சிறந்த சீரது. 4

சோலையுந் தடங்களுந் துரிசி லாஅறச்
சாலையும் மடங்களுஞ் சத்தி ரங்களும்
பாலையும் பழத்தையும் பருக லொத்தசொன்
மாலையுந் தொடுப்பவர் வாழ்வு முள்ளது. 5

அந்தணர் அறுதொழில் ஆற்றுஞ் சால்பது
மந்தண மறைமுடி வழுத்து மாண்பது
சுந்தர நீற்றணி துலங்கு மன்பர்கள்
வந்துவந் தணைசெய்து வசிக்கும் பேறது. 6

பூவெலாம் புதுமணம் பொலியு மொண்டயிர்க்
காவெலாஞ் சிவமணங் கமழு கின்றது
தேவெலாஞ் செறிவது சிவங் கனிந்தமெய்ந்
நாவெலாம் புகழ்வது நன்மை சான்றது. 7

சாலியும் போலிய தழைமிகாள் கன்னலின்
வேலியு முக்கனி விழைவுந் தாழைகள்
கோலிய பொங்கருங் குறைவி லாதது
I பாலியின் வடகரைப் படியின் மேலது. 8

எண்டிசை புகழகின் றிலங்கு கின்றது
அண்டர்கள் முடிவினும் அழிவி லாதது
தொண்டமண் டலவடற் றாய கீழ்த்திசை
கண்டல்சூழ் கடற்கரை காண வுள்ளது. 9

திருமகள் கலைமகள் சிறந்த ஞானமாங்
குருமகள் மூவருங் கூடி வாழ்வது
தெருமர லகற்றுமெஞ் சிவபி ரான்மலை
ஒருமக ளுடனுறை 2ஒற்றி மாண்பது. 10

அப்பெரும் பதியிடை அயன்முன் னகிய
முப்பெருந் தலைவரு முடிவ ணங்கிட
ஒப்பருஞ் சிவபிரா னுருவு கொண்டருள்
செப்பருங் கோயிலைச் சேர்ந்த சூழலில். 11

கிள்ளோக ளாகமங் கிளக்கக் கேட்டதற்
குள்ளுணர் பூவைக ளுரை விரித்திடத்
தெள்ளிய மயிலினந் தோற்று ளானந்தங்
கொள்ளுகொண் டபுனடங் குயிற்ற வுள்ளது. 12

சைவயா கங்களுஞ் சாற்று மற்றைய
தெய்வயா கங்களுஞ் செய்ய வோங்கிய
மைவிடாப் புகையொடு மழையுங் கூடினும்
மெய்விடார் உளமென விளக்கு கின்றது. 13

கண்டவ ருளமெலாங் கட்டு கின்றது
தண்டமிழ்க் கவிதைபோற் சாந்த மிக்கது
விண்டையன் பதமுதல் விரும்பத் தக்கது
எண்டருந் தவமர சிருக்குஞ் சீரது. 14

வந்தியா ரமுதையும் வாங்கி யுண்டருள்
அந்தியார் வண்ணார்தம் அருளில் நின்றது
நந்தியாச் சிரமமாம் நாமம் பெற்றது
நிந்தியா நெறியதோர் நிலையுண் டாயிடை. 15

1 பாலி என்பது—பாலாறு 2 ஒற்றி என்பது — திருவொற்றியூர்

வேதமு மாகம விரிவு மற்றைநூற்
போதமு மன்னுறப் போதிப் போர்களும்
வாதமும் விதண்டமு மருளு முவகைப்
பேதமு மபேதமும் பேசு வோர்களும். 16

பவமெலாந் தவிர்த்தருட் பதம ளிப்பது
தவமலா திலையெனச் சார்ந்து ளோர்களும்
அவமெலா மகன்றபின் னனுப விப்பது
சிவமலா திலையெனச் சேர்ந்து ளோர்களும். 17

ஞானயோ கத்தினை நண்ணி னோர்களும்
மோனமே பொருளென முன்னி னோர்களும்
வானமே பெறினுமிம் மாய வாழ்க்கையில்
ஊனமே யிருத்தலென் றுவட்டி னோர்களும். 18

மறந்தில ருலகரிவ் வஞ்ச வாழ்க்கையைத்
துறந்தில மென்னெனச் சொல்கின் றோர்களும்
இறந்திலர் பிறந்தில ரின்ப மெய்தினர்
வறந்திலர் தவரென வகுக்கின் றோர்களும். 19

தென்சொலும் வடசொலுந் தெரிந்து ளோர்களும்
இன்சொலும் வாய்மையு மிசைக்கின் றோர்களும்
வன்சொலு மடமையும் மறமும் வஞ்சமும்
புன்சொலு முடையர்பாற் பொருந்து றோர்களும். 20

கருநெறித் தமிழெலாங் கையகன் றுமெய்த்
திருநெறித் தமிழ்மறை தேர்ந்து ளோர்களும்
அருநெறித் தனிமையுழுத் தைந்தி னிட்பொருள்
குருநெறித் தகவுறக் குறிக்கின் றோர்களும். 21

இரவொடு பகலிலா திருக்கின் றோர்களும்
வரவொடு போக்கிலா வழிநின் றோர்களும்
கரவொடு மாயையைக் கடிந்த சீலரும்
உரவொடு மெய்ந்நில யோங்கு வோர்களும். 22

பொறிவழி மனஞ்செலாப் புனித சித்தரும்
அறிவழி யவ்வழி யகன்று ளோர்களும்
செறிவழி யாவகைச் சிறந்த முத்தரும்
குறிவழி திறம்புறாக் கொள்கை யோர்களும். 23

1 தேவாரம்.

மால்வகை முழுவதும் நீக்கி மன்னரும்
நூல்வகை ஞானத்தி னுவலு கின்றதோர்
நால்வகை நிலைகளில் நண்ணு வோர்களும்
எல்வகை யிணையடி யேத்திச் சூழ்ந்திட. 24

தெள்ளிய வமுதவெண் திங்களோ நறை
துள்ளிய நறுமணஞ் சூழ்ந் தலர்ந்திடும்
ஒள்ளிய கமலமோ வென்ன வோங்கிய
வள்ளிய திருமுக மண்டலத் திலே. 25

கடைவரை நிறைபெருங் கருணை வெள்ளமேன்
மடைதிறந் தொழுகிவான் வழிந்து பாலொடுந்
தடைபடாத் தண்ணளி தழும்பி யானந்தக்
கொடைதரும் விழிமலர் குளிர வாழ்ந்திட. 26

சிறைதெறுஞ் சிவசிவ சிவவென் றன்பொடு
மறைமொழி சிறக்கும்வாய் மலரும் விண்ணக
நிறையமு தொழுகிவெண் ணிலவ லர்ந்தருள்
இறைபெறும் புன்னகை பெழிலு மோங்கிட. 27

வேதபுத் தகந்திகழ் மென்கை யுந்திருப்
பாதபங் கயங்களும் பரவு நீற்றொளி
போதவுத் தூளனம் பொலிந்த மேனியும்
ஓதுகன் மரங்களு முருகத் தோன்றிட. 28

அருஞ்சிவ ஞானமும் அமல வின்பமுந்
திருந்தவோ ருருக்கொடு சேர்ந்த தென்னவே
தருஞ்சிவ குருவெனுந் தக்க தேசிகன்
இருந்தனன் இருந்தவா றிருந்த நாளினே. 29

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

ஒருநாளி லொருமகனைப் பதினாறண் டகலவகல முடையா னெற்றித்
திருநாளி லெம்பெருமான் தியாகேசன் திருப்பவனிச் சேவை செய்து
மருநாள மலர்த்தடஞ்சூழ் தெருவில்பெறுமவ் வாச்சிரம வனத்துட் போந்து
கருநாளின் கரிசறுக்குங் குருநாதன் இருக்கையெதிர் கண்டான் மன்னே. 30

கண்டவனைக் குருநாதன் கடைக்கணிக்கப் பெற்றதனைக் கடத்திற் சற்றே
திண்டகுதே றிடச்சிறிது தெளிநீர்போற் றெளிந்தறிவு சிறிது தோன்றத்
தண்டமெனக் கீழ்விழுந்து வணங்கியெதிர் நின்றுகரந் தலைமேற் கூப்பிப்
பண்டுறுமன் பொடுவிழிக ணீர்சொரிய வியந்துதுதி பண்ணு வானால். 31

கருணைநெடுங் கடலென்கோ கல்லாலின் அடியமர்ந்த கடவு ளென்கோ
அருணகிரிக் கருள்புரிந்த ஆறுமுகக் குருவென்கோ அமுத மென்கோ
மருணலிய வரும்பிறவி மருந்தென்கோ அடியேன்கண் மணியென்கோ மெய்த்
தெருணிறைந்த சிவகுருவே நின்றணையீண் டெவ்வாறு சிந்திக்கேனே. 32

என்றுனைக் கருணைபொடுஞ் சிவகுருவங் கெதிர்நோக்கி யிளையோ யுன்றன்
நன்றுன சரிதமெது நவிலுதியென் றுரைத்தருள ஞான யோகங்
குன்றுத குணக்குன்றே குறையாத குளிர்மதியே குருவே யென்றும்
பொன்றுத நிலையருள்வாய் கேட்டருள்க வெனவணங்கிப் புகல்வான் மாதோ. 33

கற்றவர்சூழ் இத்தலத்துக் கைங்கடிகை யெல்லதனிற் கவின்சேர் சென்னை
உற்றடியே னிருக்குமூர் சூத்திரர்தங் குலத்தாசை யுடையா னென்னைப்
பெற்றவன்பேர் வினாசியெனப் பெற்றவள்பே ரெனக்குமுன்னே பிறந்தார் மற்றுஞ்
சுற்றமிக வுடையேன்சஞ் சலனெனும்பே ரென்பெயராய்ச் சொல்வ ராலோ. 34

குடிப்பேறிற் றுப்முலைப்பா லேழாண்டு மட்டுமிகக் குடித்து நாக்குத்
தடிப்பேறிற் றுதலிறைற் படிப்பேறிற் றிலைபடியேன் தனக்குக் கல்விப்
பிடிப்பேறிச் சிறிபேன்முன் பிறந்தவர்தம் பெயரெழுதப் பெரிதுங் கற்று
நடிப்பேறி னரவர்முன் னெடிப்பேற நின்றேனிக் நாயினேனே. 35

தந்தையுணர்ந் திவன்மிகநாத் தடிப்பேறி னுடம்புந் தடித்தான் மற்றைப்
புந்தியிலுங் காரிருப்புப் பொருப்புலக்கைக் கொழுந்தாளன் போதஞ் சார
மந்தனெனப் பயின்றகலைச் சாலபினின் றகற்றி [1] ஔவை வாக்கு நாடிப்
பந்தமனைப் பண்டமெலாங் கடைபுழன்று சுமந்துவரப் பணித்தா னெந்தாய். 36

அண்ணுறுமென் தந்தைதாய்க் கடியனேன் கடைப்பிள்ளை யான தொன்றோ
கண்ணுறுநற் கல்வியினுங் கடைப்பிள்ளை யானென்பின் கருதும் வாழ்க்கை
நண்ணுறுபல் பண்டமெலாங் கொள்வதினுங் கடைப்பிள்ளை நானே யானென்
உண்ணுறுமிவ் வுடலோம்பி யொதிபோன் மிகவளர்ந்த வுணர்வி லேனே. 37

பெருஞ்செல்வப் பெருக்கத்திற் பிறந்தேதனன் பிள்ளையாப் பிறந்த நாள்தொட்
டிருஞ்செல்வத் திந்நாள்மட் டியல்வேறு குறைசிறிது மில்லை யெந்தாய்
அருஞ்செல்வ மெனுங்கல்வி யறிவில்லாக் குறையொன்றே யடைந்திட் டேனவ்
வருஞ்செல்வத் தாசையுளேன் பேடிமணம் நாடிமனம் வருந்தல் போன்றே. 38

இன்னவகை யுழல்கின்றேன் இத்தலத்திற் றிருநாளென் றிசைக்கக் கேட்டிங்
கென்னனைய சிறுவர்களோ டெப்தினேன் திருப்பவனி யினிது கண்டேன்
பின்னரென துடனுற்றோர் பிரிந்தனர்நா யடியேன்முன் பிறப்பிற் செய்த
தன்னனைய தவப்பயனுற் றேவேனின் றிருச்சமுகந் தரிசித் தேனே. 39

1. பீரம் பேணிற் பாரந் தாங்கும்.

ஈதெனது சரிதமொரு தெய்விகத்தாற் களர்நிலத்தி னிடைபே செந்நெற்
பேதமற முளைத்ததுபோற் றேவேநின் றிருச்சமுகப் பெருமைபாலே
மூதறிவு சிறிதென்னுண் முளைத்ததது பயிராக முழுதுங் கல்விக்
காதலுறு சிறியேனைக் காத்தருள வேண்டுமெனக் கழறி னனே. 40

அன்னவன்சொன் மொழிகேட்டுச் சிவகுருவங் கிளர்நிலா அருப்ப வுள்ளே
புன்னகைகொண் டின்னகத்திற் புரிந்ததுநன் முயினுமிப் போது நீயுன்
மன்னகருக் கேகியவண் தந்தைதாய்க் குறைத்தவர்சம் மதம்பெற் றீண்டித்
தொன்னகருக் கெய்துதியென் றுரைத்தருளச் சஞ்சலன்கை தொழுதுசொல்வான்.

வேர்ப்புலகின் புவப்புறுமென் தந்தைதாய் சம்மதத்தை வேண்டி மீண்டே
ஆர்ப்புலவாச் சென்னகர டைந்தேனற் பெருங்குகையி லமர்ந்த செங்கட்
போர்ப்புலியைப் பார்த்துவரப் போனகதை யாய்மொழியும் பொருளாயென்னைச்
சேர்ப்புடைய குருமணியே யென்செய்கே னறிவறியாச் சிறிய னேனே. 42

கண்பாரேன் றயர்ந்துபணிந் தழுதிருகண் ணீர்சொரியக் கலங்கி னேன
நண்பார்மெய்க் குருநாதன் நோக்கியிவ ணிருந்திடநீ நயப்பா யப்பா
பண்பாரிங் குறுமவர்தாம் பிச்சைச்சோ றுச்சியிலே பரிந்து வாங்கி
உண்பார்மற் றவ்வகைநீ யுண்ணுதியோ வுண்ணுதியே லுறைதி யென்றான். 43

உச்சியிலே பிச்சையெடுத் துண்பதுவோ பெரிதெனிபேற் கோவா தோடிக்
கச்சியிலே பிச்சைகொண்டு காசியிலே நீராடிக் கடிது போகிக்
கொச்சியிலே செபமுடித்துக் கொங்கணத்தி லேபுசித்துக் கொள்ளென் றாலும்
மெச்சியுளே மிகமகிழ்ந்து செய்வேனென் றனையையா விட்டி டேலே. 44

புல்லமுதே நல்லமுது புரைக்குடிலே புனைமாடம் புடைக்கும் பாறைக்
கல்லணையே மெல்லணைநாள் கழிந்தபழந் தந்தையே கலியென் றாலும்
அல்லலுறே னரசேசநின் சொல்லமுதுண் டருந்தவமா டதீத வைகி
ஒல்லுமலே திடவணைகொண் டருட்போர்வை போர்த்துநல முடுக்கின் மாதோ.

சைவநீ றணிவிளங்கி நகைதுளும்பி யுபசாந்தந் ததும்பிப் பொங்கித்
தெய்வநீ டருட்கருணை நிறைந்துவழிந் தழுகொழுகிச் செம்பொற் கஞ்சப்
பொய்கைவாய் மலர்ந்தசெழும் போதனைய நின்முகத்தின் பொலிவு நோக்குஞ்
செய்கையே லுலகுறுபுன் சுகம்போசித்தன் மிகையன்றே தேவ தேவே. 46

எவ்வகைநின் றிருவுளப்பாங் கிருப்பதெனி யேனளவி லெந்தா யெந்தாய்
அவ்வகைநின் றிடச்சிறிது மஞ்சேனென் றன்னைவிடே லாள்க வென்றே
இவ்வகையிற் பலபகர்ந்து விழுந்திறைஞ்சி யெழுந்திரா திருகண் ணீரால்
செவ்வகையிற் குருநாதன் றிருவடிக்கீழ் நிறையாறு செய்தான் மன்றே. 47

தெருளுறுமவ் வாச்சிரமத் திருத்துறை வறங்காக்குஞ் செல்வ னெல்லாம்
அருளுறுமெய்ச் சிவகுருவி னடிவணங்கிச் சிறியோமை யடர்ந்த பாச
மருளுறுவன் கடல்கடத்தி வாழ்வித்த குணக்கலமே மனிய பிஞ்ச
இருளுறுமொண் சிறுவனையுங் காத்தருள வேண்டுமென விரந்தா னையன். 48

மற்றவனை யெழுகவெனக் கருணைபுரிந் தமலமுக மலர்ந்து நோக்கிப்
புற்றரவ மரைக்கசைத்த ஒற்றிநகர்ப் பெருமானைப் போது மூன்றும்
நற்றகையன் புடன்தரிசித் தவன்கோயிற் பணியியற்றி நாளு நம்பால்
கற்றவர்தஞ் சொல்வழியிற் கலைபயின்று நெறிநிற்கக் கடவா யென்று. 49

தனிமலர்வாய் மலர்ந்தருளிப் பின்னரவண் மாணைக்கர் தம்மை நோக்கிப்
புனிதநெறி யீரிவனைப் புதியனெனக் கருதாமற் புரிந்து நாளுங்
கனிவுறவீண் டிவனகத்திற் கல்லாமை யெனுமிருளைக் கடியும் வண்ணம்
இனியகலை விளக்கிடுவீ ரென்றுன்சந் சலனதுகேட் டின்ப மெய்தா. 50

அடியனே னுய்ந்தனனின் னருணோக்கம் பெறற்கரது வாப தூப
கெடியமா தவமெதுசெய் திருந்தேனென் றகங்குளிர்ந்து நெஞ்சந் தேறி
முடியினுற் பன்முறைதாழ்ந் துடம்பொடுக்கித் துதிசாடுக்கி முறையாற் பேசும்
படியினவாய்ப் பொத்திபெதிர் நின்றுன்பின் குருநாதன் பணித்த வாறே. 51

வேதமுதற் கலையனைத்தும் விதிப்படிகற் றுணர்ந்தறிவான் மேலோ னாகிப்
போதமனச் செறிவுடைய மாணைக்கர் சஞ்சலனைப் புரிந்து நோக்கி
மூதறிவன் தேசிகன்றன் றிருவாக்கின் படியின்று முதலோர் கன்னற்
போதுகலை பயின்று மற்றைப் போதெலாஞ் சிவபணியே புரிதி யென்றார். 52

என்றவருட் சிதம்பரமா முனிவரவன் றனையருகே யிருத்தி யன்பால்
ஒன்றியவெண் ணீறணிந்து தூலவெழுத் தைந்துணர்த்தி யுடையான் கோயிற்
சென்றுதொழும் நெறியனைத்தும் விளக்கியருட் சிவபணியுந் தேற்றி யுள்ள
மன்றவன்பர் பருவமறிந் ததற்கியைந்த கலைபயிற்றி மகிழ்வித் தாரால். 53

அருட்பெருஞ்ஜோதி

இரண்டாவது
முயற்சிப்படலம்

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

அவ்வண்ணஞ் சஞ்சலன்முன் புரிந்திபற்று முப்பற்சிபெலாம் அளவிட் டோதச்
செவ்வண்ணம் பழுத்தஒற்றிச் சிவக்கொழுந்தின் திருவருளைச் சேர்ந்தோர்க்கன்றி
இவ்வண்ண மெனப்பகர்தல் பிறர்க்கரிதே ஆயினுமவ் விறைவன் முளை
வெவ்வண்ணச் சிறியேனுள் ளமர்த்தியொரு சிறிதறிய விளம்பு வேனால். 1

மேலயிலே படுத்திருந்த வெஞ்சூடரோன் குணபாலின் விழித்துப் பூவோர்
வேலயிலே முபலுறக்கீழ் வேலயிலே பெழுவதற்கு மேவு மாதி
காலயிலே யெழுந்தேதகிக் கங்கையிலே மிக்கதெனக் கருதி மேலோர்
ஓலயிலே பொறித்தநந்தி ஓடையிலே தெய்வநன்னீர் ஓடியாடி. 2

வெண்ணிலவு ததும்புதிரு வெண்ணீறுங் தெழுத்தேதாதி மிகவும் பூசி
உண்ணிலவு சிவகுருவின் அடித்துணைபுந் திருவொற்றி உவந்து மேவுங்
கண்ணிலவு நுதற்கரும்பின் கழற்பதமும் அன்பிறைடு கருதிச் சென்றே
எண்ணிலவு குருபரன்றன் திருமுனைடைந் தஞ்சலிசெய் திறைஞ்சி மன்னோ. 3

முன்னறியான் பின்னறியான் முழுமுடன் என்றென்னை முனிபா தாண்ட
நின்னருளை யென்னெனயான் நிகழ்த்துறுவேன் பெருங்கருணை நிறைவே தூய
நன்னெறியே நடக்கவருட் போதமெனுஞ் செங்கோலை நடத்தா னின்ற
மன்னவனே சிவகுருவாம் வள்ளலே நின்றுணைப்பொன் மலர்த்தாள் போற்றி. 4

அருந்தவரும் உணர்வினிபல் எதுவென்றால் இதுவெனவும் அறிய நீநின்
றிருந்ததிசை யெதுவென்றால் இதுவெனச்சுட் டவுந்தெரியா திருந்தவென்னைத்
திருந்தவருட் கடைநோக்கஞ் செய்தளித்த பெருங்கருணைச் செல்வ மேகன்
மருந்தமுத மனையவருட் சிவகுருவே போற்றியென வழுத்திப் பின்னர். 5

ஆங்குவிடை கொண்டுகுரு அருள்நோக்காற் சிவயோக மாதி நண்ணி
ஓங்குதிருக் கூட்டத்தைத் தனித்தனிநின் றிறைஞ்சிபெனை உவக்கும் வண்ணந்
தீங்ககற்றுஞ் சிவகுருவின் திருவுளத்தை நாயேன்மேல் திருப்பி யின்பம்
வாங்கியெனக் களித்தஅருண் மாதவரே நும்முடைய மலர்த்தாள் போற்றி. 6

குருவெல்லை கடவாத குணக்குன்றம் அனையீரே கோதில் வாய்மை
மருவெல்லை நெறிநின்ற மனத்தீரே போற்றியென வழுத்திப் பின்னர்
பொருவெல்லை அகன்றோங்கும் அன்பிறைடும் அவணின்று போந்தவ்வொற்றித்
திருவெல்லை தனைமகிழ்விற் கருவெல்லை கடக்கவலஞ் செய்து மாதோ. 7

தொழுந்தகைய முனிவரருஞ் சாருமிகத் தொழுதேத்தத் துலங்குந் திங்கட்
கொழுந்தசையச் சடையசையக் கூத்தாடிக் கொண்டேடபெங் கோமான்காளும்
எழுந்தருளும் பெருஞ்செல்வத் திருவாட வீதிதனி லிறைஞ்சி யேத்தி
அழுந்தியசற் பத்தியுடன் மூன்றுமுறை வலஞ்செய்தங் கதற்குப் பின்னர். 8

உளந்தெளிந்து விளங்குகின்ற வத்தமர்செய் தவமேபோல் ஓங்கி வானம்
அளந்ததிருக் கோபுரங்கண் டஞ்சலிசெய் திறைஞ்சிமுகி லாதி சூடி
இளங்கதிர்வெண் திங்களணி யெம்பெருமான் சடைமுடிபோல் இலங்குந் தூய
வளங்கெழுமோர் திருமதிலை ஐந்துமுறை வலமாக வந்து மாதே. 9

உட்புகுந்து திருவாய லிடையோங்கும் விடைக்கொடியை யுவந்து நோக்கிக்
கட்புனலிற் குளித்திரண்டு கைகுளிரத் தொழுதிறைஞ்சிக் கருணை செய்யும்
ஒட்புடைய நம்பெருமான் மாளிகையை வலமேமழின் உவந்து செய்து
நட்புடைய மனங்கசிய ஐந்தெழுத்துண் ணினைந்துமெல்ல நடந்து மாதே. 10

அம்பொடித்துப் பகைதுறக்குங் கயமுகனைக் கருணையிலை ஆரும் வண்ணங்
கொம்பொடித்து விசியவன் கோளொடித்துக் கோலொடித்துக் கோதில் விஞ்சை
வம்பொடித்து வாழ்வித்த ஆனைமுகப் பெருமானை வணங்கித் தண்டே
கம்பொடித்துக் கைகுவித்துக் கருத்துருகிக் கண்களினீர் கான நின்றே. 11

தடையுடைக்குந் தனிமுதலே தண்ணமுதே பெங்கள்பெருந் தகையேயோங்கி
மடையுடைக்கும் பெருங்கருணை மதமலையே யானந்த மலர்ப்ப வுள்ளத்
திடையுடைக்குந் துயர்நீக்கி யின்பளிக்கும் ஐந்துகரத் திறைவ மாயைக்
கடையுடைக்குங் கழற்புனைதாட் கணபதியே போற்றியெனக் கனிந்துமன்றே. 12

திறம்பழுத்த வருணந்தி தேவரடி வணங்கியருட் சிவத்தின் செய்ய
நிறம்பழுத்த மலரடியை மான்முதலோர் அழுக்காறு நிரம்ப மேற்கொண்
டறம்பழுத்த விடைபுருவத் தண்ணலெ லெனப்பரவி அனுக்ஞை பெற்று
மறம்பழுத்தார்க் கரியதிரு விமானத்தை யனந்தமுறை வலஞ்செய் தேத்தி. 13

வன்னிதியை மருவாத மாதவரும் மாலயனும் வணங்கிப் போற்றுஞ்
சன்னிதியைச் சார்ந்துவிழி யானந்த நீர்வெள்ளந் ததும்பப் பல்கால்
நன்னிதிபெற் றிடப்பணிந்து கரங்குவித்துப் படம்பக்க நாத னென்னுஞ்
செந்நிதியிற்பரஞ்சுடரைப் பொன்னிதிகண் டவன்போற்கண்செழிக்கக்கண்டு. 14

உடன்முழுதும் புளகமெழ வுளமுழுதும் உருக்கமெழ வுவந்தா னந்தக்
கடன்முழுதுங் கண்களெழக் கரசரணங் கம்பமெழக் கருத்தி னூடு
மடன்முழுதும் எழமலர்ந்த மலரின்முக மகிழ்ச்சியெழ மலிந்த பாசத்
திடன்முழுதும் அகன்றன்பே வடிவாக நின்றுதுதி செய்வான் மாதே. 15

உடையானே பெவ்வுயிர்க்கும் ஒருமுதலே யிளம்பிறை கொண்டோங்குங்கங்கைச்
சடையானே அன்பருளத் தாமரையில் அமர்ந்தபெருந் தகைமே வெள்ளை
விடையானேமறை முடிபின் விளங்கியமெய்ப் பொருளே மெய்விளங்கார்தம்மை
அடையானே திருவொற்றி ஆலயத்தெம் அரசேயின் னடிகள் போற்றி. 16

கலைமகளுந் திருமகளுங் கழுத்தணிந்த மங்கலநாண் கழற்று வண்ணம்
அலைகடலின் எழுவிடத்தை யடக்கியருண் மணிமிடற்றெம் அழுதே தெய்வ
மலைமகளை யொருபுறம்வைத் தலைமகளை முடியிட்ட மணியே மேருச்
சிலைவளைத்துப் புரமெரித்த சிறுநகையெம் பெருமானின் திருத்தாள்போற்றி. 17

மறைதேட அயன்றேட மால்தேட அன்பருள மலரி னுள்ளே
இறையேனும் பிரியாமல் இருந்தருளும் பெருவாழ்வே யிறையே பென்றுங்
குறையாத குளிர்மதியே கோவாத வொளிமணியே குணப்பொற் குன்றே
பொறைபாளர் வழுத்துமொற்றிப் பூங்கோயிற் பெருமானே போற்றிபோற்றி.

எனப்பெரிதுந் துதித்திறைஞ்சி ஆகின்ற பெருமான்முன் எய்தித் தூக்கும்
வனப்புடைய மலர்ப்பதமு மாபைதீன மிதித்தூன்று மலர்ப்பொற் றருந்தும்
மனப்பருவ மலர்மலரக் கண்குளிரக் கண்டுமிக வணங்கிப் பல்கால்
இனப்பெரியார்க் கின்பருளுங் கூத்துடைய மாமணியே யின்ப வாழ்வே. 19

காரணமுக் கண்கொளுஞ்செங் கரும்பேசெங் கனியேயென் கண்ணே மேலை
ஆரணத்துட் பொருளாகி யனேத்துமா யாதிதான்றும் அல்லா தாகிப்
பூரணசின் மயவெளியிற் சச்சிதா னந்தநடம் புரியுந் தேவே
ஏரணவு நடராயப் பெம்மானே யெம்மானே யென்று வாழ்த்தி. 20

சடையாடச் சடைமீதிற் சலமகளு மிளமதியுந் ததும்பக் கொன்றைத்
தொடையாடக் கருணைவிழிக் கடைதுளும்பப் புன்னகையுட் டுலங்கவெள்ளைக்
கொடையாட இமயமடக் கொடியாடத் தனிநெடுவேற் குழந்தை மேவி
இடையாடப் பவனிவரும் எம்பெருமான் தியாகனேதிர் இறைஞ்சி நின்று. 21

இருந்தேயென் னுளத்திலங்குஞ் செழுஞ்சுடரே ஓவாத இன்பமேயா
வருந்தேறு நிலைநின்ற வான்பொருளே பவப்பிணியை மாற்றுந் தெய்வ
மருந்தேயென் கண்ணேகண் மணியேசெம் மணியேயென் வாழ்வே யெங்கள்
பெருந்தேவே தருந்தியாகப் பெருமானே கடவுளர்தம் பிரானே போற்றி. 22

என்றுதுதித் தருள்வடிவிற் கல்லாலி னடியமர்ந்த இறைவன் முன்னின்
றொன்றுமனத் தன்புடன்கீழ் விழுந்துபணிந் தெழுந்திருகை உச்சி கூப்பி
நன்றுணர்ந்த நால்வருக்கன் றருண்மொழிந்த குருமணியே நாயி னேனை
இன்றுமகிழ்ந் தாட்கொண்ட சிவகுருவே சற்குருவே யென்று வாழ்த்தி. 23

மயிலேறும் பெருமாள்முன் னிறைஞ்சிமலர்க் கரங்கூப்பி வணங்கி நின்றே
அயிலேறுங் கதிர்வேற்கை யையாமிவன் னெப்பாமிவன் னரசே அன்பர்
கையிலேறுங் கனிபேழுக் கண்ணேறு பெற்றவிளங் காளாய்ப் நீலக்
குயிலேறு மொழிக்கடவுட் குஞ்சரக்தோய்ப் களிறேயென் குருவே போற்றி. 24

ஓடுகின்ற சிறுவர்களோ டுடன்கூடி விளையாட்டே யுவந்து காலும்
ஆடுகின்ற பருவத்தே அடிபேணுள் ளமர்ந்தருளி அன்பால் நின்னை
நாடுகின்ற வகைசிறிதே யளித்தீண்டு குருவாகி நலந்தந் தெள்கிப்
பாடுகின்ற வகையளித்த பரகுருவே போற்றியெனப் பரவி மன்றே. 25

பன்முறைநாத் தழும்பேறத் துதித்துநெடுங் [1]கடன்முழுதும் பருகிக் கற்றாள்
நன்முறைசெய் மணக்கோலங் காட்டியருள் பெருமான்முன் நண்ணி நின்று
தொன்முறைமா முமலருள் சுந்தரிசேர் கல்யாண சுந்தரா முற்
சொன்முறைசேர்சுந்தரன்றன் தொழாவென் றகங்குளிர்ந்து துதித்துவாழ்த்தி. 26

மான்மகனை நான்முகனை வைத்தவன்றன் சிரகத்தால் வகிர்ந்து வாங்கித்
தேன்மலர்ப்பொற் சுரத்தேந்துங் காபாலி முன்பணிந்து திருமால் வேதன்
வான்மகனு தியர்தம்மை வருத்தியவந் தகன்செருக்கு மாளச் சூலத்
தூன்மலர நுழைத்தேந்தும் வயிரவகிற் போற்றியென வுவந்து வாழ்த்தி. 27

நிலையாய்நின் றுயர்ந்தவர்கட் கருள்புரியும் பரம்பரையை நிமலை தன்னைத்
தலையான்மெய் யுறவணங்கி உலகமெலா மளித்தபெருந் தாயே மேருச்
சிலையான்றன் னிடத்தமர்ந்த தெள்ளமுதே ஆனந்தத் தேனே மானே
மலையான்றன் னெருமகளே வடிவுடைய இளங்குயிலே மயிலே போற்றி. 28

வான்வளர்த்த மலர்க்கொடியே மலைவளர்த்த மடப்பிடியே மணியே வாசக்
கான்வளர்த்த மலர்க்கோதைக் களிபேழுக் கனியேயைங் கரும்பே செங்கை
மான்வளர்த்துச் சடையிலிள மதிவளர்த்த வொருகிழவன் மகிழ வாய்த்த
தேன்வளர்த்த மொழிக்குமரி கௌரியென மறைபுகழ்மா தேவி போற்றி. 29

போற்றியெனப் புகழ்ந்துசண்பைப் புனிதமறைக் குலமணியைப் போந்துபோற்றி
நாற்றிசையும் புகழ்கின்ற நாவரசைப் பணிந்துசிவ ஞானந் தேறித்
தோற்றியவோர் சங்கிலியாற் றுடக்குண்ட யானைதனைத் தொழுது மாயை
மாற்றியகம் மாணிக்க வாசகப்பொன் மலையடியை வணங்கி மாதோ. 30

தொண்டுநிலை சேர்ந்துயர்ந்த சண்டேசர் முதலோரைத் தொழுது போற்றி
விண்டுமுத னெருங்குதிரு வாயலிடை அன்பினெடு மேவி யாங்குத்
தண்டுவிழுந் தெனவிழுந்து பணிந்துபணிந் திருவிழியிற் றரள மாலை
கொண்டுநடங் கொண்டுநெறி கொண்டுமகிழ் கொண்டுமனங் குளிர்ந்தான் பின்னர்.

1. அகஸ்திய முனிவர்.

கருவலகிட் டருள்புரியுங் கண்ணுடையான் விமானத்தின் கனகச் சூழன்
மருவலகின் மணித்திரண்மா ளிகைமண்ட பம்கண்முதல் வகுத்த வெல்லாந்
திருவலகிட் டணிசாந்தத் திருமெழுக்கிட் டன்பினெடுந் திருவா யற்கண்
ஒருவலகிற் றிரணமொடு புல்லாதி களைக்களைந்தாங் குவந்து மாதோ. 32

புறத்தணுகித் திருமதிலின் புறத்தினுற் றிருக்குளத்தின் புறத்து ஞானத்
திறத்தர்மகிழ்ந் தேத்துகின்ற திருமாட வீதியினுந் தெரிந்து காலின்
உறத்தருமுட் கல்லொடுபுல் லாதிகளை நீக்கிநல முறுத்திப் பாசம்
அறத்தொழுநல் லறத்தொழுகுஞ் சிவனடியார்க் கேவல்பல அன்பாற் செய்து. 33

கருமுடிக்குங் களமுடையான் கண்ணுடையா னெம்முடைய கருத்தன் செய்ய
திருமுடிக்குஞ் செங்கமலத் திருவடிக்கும் புனைந்திடுவான் சிறப்ப வைத்த
மருமுடிக்கு மலர்ந்தவனத் தினையுள் ளன்புடனே வணங்கித் தூநீர்
உருமுடிக்கட் சுமந்துகொணர்ந் தட்குளிர விடித்துவிடித் தூட்டி மாதோ. 34

தேங்கமழ்பொற் கொன்றைதரும் பாடலமா லதிவகுளஞ் சிறந்த சாதிக்
கோங்குவளை மபிலைதரு மல்லிகையொண் தளவமலர்க் குரவந் தும்பைப்
பாங்கறுகு கூவிளநற் பத்திரமா திபமிகுசற் பத்தி யுள்ளத்
தோங்குறமெய்ப் புனிதமொடு முவந்துபறித் தைந்தெழுத்தும் உன்னி ஆங்கே.

பொன்மாலை யணையகொன்றைப் பூமாலை முதற்பிணைபற் புனித மாலை
என்மாலை யகற்றுடையான் திருமுடிக்குச் சாத்துதிரு விண்டை மாலைக்
கன்மாலை நெஞ்சமுரும் கழன்மாலைத் தோண்மாலைக் கண்ணி மாலை
மன்மாலைத் தார்மாலை வகைமாலை தொடுத்தெடுத்து வந்து மாதோ. 36

மீண்டுமெருட் கோபிலினுட் புகுந்துச்சிப் பூசனைசெய் வேளைதன்னில்
ஆண்டவனுக் கணிவித்து வலம்புரிந்து தொழுதுதுதித் தாடிப் பாடி
ஆண்டமரும் பரிவாரத் தேவர்முத லனைவரையு மன்பா லேத்தி
வேண்டுவிருப் புடன்பிரியா விடைகொண்டு புறத்தணுகி மேவி யாங்கண். 37

சீரேன மறியாத திருவடியுங் குருவடியுஞ் சிந்தித் தேகி
ஆரேனுங் கோலகுறியார் எமக்குரியா ரெனவவர்தம் இல்லந்தோறும்
போரோர்நெற் சோறேனும் புதுக்கஞ்சி யேனுமன்றிப் புளித்த காடி
நீரேனும் கூழேனுங் கிடைத்ததுகை யேற்றுவந்து நின்று வாங்கி. 38

அங்குருவின் தகைதிகழ்க்கும் ஆச்சிரமத் திடையணுகி அன்பி னேடுந்
தங்குருவி னடிமுடிமண் ணுறவணங்கி யிருகரமுந் தலைமேற் கூப்பி
எங்குருவே சிவகுருவே யெழிற்குமர குருவேயிவ் வெளியேன் றன்பால்
இங்குருவிற் கருணைபுரி திருவாக்கின் படிபிச்சை யேற்ற தீதால். 39

எனத்தொழுது நின்முனைக் கருணையொடுங் கடைக்கணித்த இறைவன் கோயிற்
கனத்தபணி புரிந்தனை நின் னினைத்தவுடல் ஆங்கதனைக் காட்டுகின்ற
தினத்தவரோ டுண்ணுதிபின் பெய்துதியீண்டென உறைப்பவிறைஞ்சி வாழ்த்திச்
சினத்தழனீத் தருண்மிகுத்த திருக்கூட்டந் தனைவணங்கிச் சிந்தித் தேத்தி. 40

அக்கூட்டந் தனிலுண்ணு அருந்தவரை வினவியவ ரடியிற் முழ்ந்து
பிக்கூட்டும் அன்னையினு மிகப்பரிவி னவர்க்கூட்டி மிகுந்த சேடங்
கைக்கூட்டக் காணுதி யாயினுமற் றதுகுருவின் சுழல்க ளெத்தி
மெய்க்கூட்டம் விழைந்தவன்முன் மிகமகிழ்ச்சி யுடனுண்டு விரைந்து மாதோ. 41

வாய்பூசிக் கைபூசி வந்துசிவ குருவினடி வணங்கி நின்முன்
தாய்பூசித் ததிர்நிற்குந் தனையனைப்பார்த் தணைப்பதுபோல் தயவாலேக்கிப்
பேய்பூசித் திடுஞ்சிறிய பேதைபர்போ லல்லாது பெரிது மிக்கன்
பாய்பூசித் திறைவனடி வணங்குகின்ற நல்லோரைப் பணிந்து வாழ்த்தி. 42

அன்பிரக்க மறிவூக்கஞ் செறிவுமுதற் குணங்களுற அமைந்து நாளும்
இன்புறக்கண் ணுதலான்றன் திருக்கோயிற் பணிபுரிந்தீண் டிருக்கும் நல்லோர்
தன்பறச்சொல் வழியெந்த வழியந்த வழிநடந்து துகளில் கல்வி
பொன்புரக்குந் தொழில்வணிகர் போல்பயில்க வெனக்குரவன் புகன்முன் மன்னே.

அம்மொழியாஞ் செம்மணியை யணிமுடியி னணிந்துமன மலர்ந்து நாயேன்
இம்மொழியா ரமுதருந்த வென்னவருந் தவமுன்ன மியற்றி னேனே
செம்மொழியா ரணம்பரவுஞ் சிவகுருவே யெனத்துதித்துச் சினங்கொண்டோதும்
வெம்மொழியொன் றில்லாத திருக்கூட்டத் தவர்களொடு மேவி னனே. 44

கலிவிருத்தம்

கோற்றவர் புகழுமக் கூட்டந் தன்னில்வாழ்
முற்றவர் சிதம்பர முனிவர் தம்முனர்
உற்றிடு சஞ்சலன் உளத்தை யோர்ந்தவன்
கற்றிடக் கேட்டநற் கலைகள் தேற்றவே. 45

உளங்கொண் டங்கவன் தனையுழை யிருத்தியோர்
வளங்கெழு கன்னலின் மட்டும் இன்சுவை
அளந்தறிந் தூட்டுநல் அன்னை போன்மனக்
களங்கறப் பருவநேர் கலை பயிற்றிட. 46

பயின்றனன் சஞ்சலன் பரிந்து தெள்ளமு
தயின்றன னமென அகங் களித்தனன்
வியந்தனன் ஆங்கவர் விடுக்க மீண்டுநல்
வயந்தரு கோயிலின் மருங்கு நண்ணினன். 47

அன்புடன் புனிதநீ ராடி நீறணிந்
தின்புடன் கண்டிகை எடுத்துப் பூண்டுதன்
துன்பறக் குருபதந் துதித்துக் கோபுர
முன்புறப் பணிந்துமா முகனைப் போற்றியே. 48

அந்தியார் வண்ணனை யந்திப் பூசனை
சந்தியா நின்றவச் சமயத் தெய்திபுட்
புந்தியால் நினைந்துடற் புளகம் போர்த்திட
வந்தியா நின்றடி வணங்கி யேத்தியே. 49

பாங்கமர் சிவபரம் பரையை வாழ்த்திக்கை
ஓங்கயிற் பிள்ளையை உவந்து போற்றின்
ரூங்கமர் மற்றுள அமல மூர்த்திகள்
பூங்கழல் வணங்கியோர் புறத் திருந்தரோ. 50

வருநெறி மூலமாம் மந்திரத் தினை
மருவிய அக்கமா மணிவடங் கொடு
இருமைகொள் ளுயிரத் தெட்டி னெல்லையாம்
உருவுறச் செபமுடித் துளத்தி னுன்னியே. 51

எழுந்துவீழ்ந் திறைஞ்சிநின் றேத்தி யன்பினில்
அழுந்து நெஞ்சகத்தேகாடு அமலமாஞ் சிவக்
கொழுந்தமர் தனிவலங் கொண்டு கண்ணிடை
உழுந்துரு ளளவும்வே றுன்ன லின்றியே. 52

மாலயற் கரியகம் வள்ளலார் வளர்
ஆலயத் திரவிடை ஆற்றத் தக்கன
வலகெய்த் திருவிளக் கேறப் பார்த்திடும்
மூலமெய்த் திருப்பணி முதல ஆற்றியே. 53

விடைகோடு புறத்துறீஇ விமல னன்பர்கட்
கடைவுறப் பணிகள்செய் தகங் குளிர்ந்துவான்
தடைபொழி லாச்சிர மத்திற் சார்ந்தவண்
இடைமகிழ் குருவடி இறைஞ்சி யேத்தியே. 54

எண்ணுறு தவரடிக் கேவ லாற்றியுங்
கண்ணுறு பாடமுட் கருதி யும்மைவ
ருண்ணுறக் கேட்டுஞ்சொன் னயங்க ணைடியும்
பண்ணுறு பொருணலம் பாங்கி னேர்ந்துமே. 55

காமமும் வெகுளியுங் கடிந்தசொ லாதிய
காமமுங் கனவினுங் கண்ண லின்றியே
சேமமும் ஒழுக்கமுஞ் செறிவு மாதிய
தாமமு மணியுமபோற் ரூங்கி யோங்கியும். 56

கண்வளர்ந் நிதலங் கடிகை மற்றைய
திண்வளர் பொழுதெலாந் தேசிகப் பிரான்
பண்வளர் திருவடிப் பணியும் எம்பிரான்
ஒண்வளர் பணிகளும் உருற்றி வைகினன். 57

மாசறு தவர்களுண் மகிழ்ந்து நோக்கவுந்
தேசிகன் திருவுளந் திரும்பித் தேக்கவும்
ஆசறு கலைபயின் றமர்ந்து ளானிவன்
ஏசற விவ்வண்ணம் இயற்று நாளினை. 58

அருட்பெருஞ்ஜோதி



196. திருவருட்பா வரலாறு

காப்பு

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

அருட்பெருஞ்ஜோதி

ஒருகோட்டுச் சிவகளிற்றை யும்பர்சிறை யொழித்தொளிர்வைஞ் ஞாங்க ரேந்திக்
திருகோட்டு நம்பியையா ருடையாளை யுடையாளைச் செல்வக் காழி
வருகோட்டு மாமருந்தை வாகீச அமுதைதவன் மிருண்ட வாழ்வை
மருகோட்டு வயல்வாத ஹாரசைத் தண்டிதனை வழுத்தல் செய்வாம். 1

குரு தோத்திரம்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

பராபரங் கோதகலும் அநாமயம் போதநிலை
பகாநலம் வாதமறு சுகோதயம் பாதிதமில்
நிராமயங் காரகம திலாதசஞ் சீவிதநல்
நிராசைகொண் டாருடைய நிகேதநஞ் சூதமுறல்
வராததின் பாரவெளி முளைவில்வந் தேயருளி
மகாபலஞ் சேரவருள் விராவுசெம் பாதநம
இராமலிங் தார்மனதின் இராதசச் தோடகம
I இராமலிங் காயநம இராமலிங் காயநம.

அறுசீரடி யாசிரிய விருத்தம்

தன்னிகரும் பெருங்கருணை யருட்பிரகா சப்பெருமான் சந்நி தான
மன்னருளை விழைபன்பர் சிலரருட்பா வரலாறு மற்று மீண்டுந்
நன்னிதிதான் வெளிவந்த வாறுமுரைக் குநியென்ன நகைகா ணுதிங்
கென்னறியா மையைவிரிப்பே னினையெனனுய்ப் வண்டாமென் னிச்சையாலே.

நூல்

சோழ நாடு

தரவுக்கொச்சகக்கலிப்பா

மணிகொழிக்குங் கல்லோல மாக்கடலை முகந்துண்டு
பிணிதவிர்க்கத் தலைப்பெயலும் பெய்யாத காலத்துந்
தணிவில்வலந் தருபொன்னித் தடம்புனல்சூழ்ந் தகன்கடைவாய்
மணிமுழக்குங் கேட்டறியா வளநாடு சோணாட்டில். 1

1. இராமல் - இங்கு - ஆய - நம என்று பிரித்துப் பொருள் கொள்க.

திருத் தில்லை

நீர்பூத்துப் பிறைக்கொழுந்து நின்றவிர்செஞ் சடைக்காட்டின்
ஏர்பூத்த பவளமலை யிமையமருள் பசுங்கொடியும்
கார்பூத்த பன்னகமும் அடுபுலியும் நலனேங்கச்
சீர்பூத்த பொதுவுடைய திருத்தில்லைப் பதியொருசார். 2

தெய்வ மருதூர்

ஐந்தினைசேர் அகத்தமிழின் துறைநுகர்ந்து புறத்துறையின்
வந்தபொரு ளனைவைகொண்டு செய்வனசெய் மாண்பினவாம்
நந்தலிலா ஆக்கத்து நாற்குடியுந் தழைத்தோங்கும்
கொந்தவிழ்பூந் தண்மருதக் குலமருதூ ராமருதூர். 3

வள்ளலார் தம் - பெற்றோர்

இராமையன் மருவாமை [1] இராமைய னிராமையன்
அராமுடிப்பூ மணந்தபுகழ் அருங்கருணீ கக்குலத்தோன்
பராவுவட மீன்கற்பிற் [2] சின்னம்மை சின்னம்மைப்
பொராவண்ணந் துணைகொண்டு பொதுநீக்கி யறம்புரந்தான். 4

தூய்மையான் உயர்தவத்தால் துருவமுறீ இ யிருத்தலினன்
வாய்மையான் வடகைலை யெனவோங்கி வாழ்நாளிற்
சேய்மையாத் தனைப்பிரிந்திங் கெமைத்தரியாச் சிறியோமை
நோய்மையோ வுறவண்மை யின்பத்து நுழைவிப்பான். 5

வள்ளலாரின் அவதார நோக்கம்

மறைவிளங்க ஆகமவாய் மைகள்விளங்கச் சைவநெறித்
துறைவிளங்க வடகலையுந் தென்தமிழுந் துணிபொருளின்
நிறைவிளங்க நீடுயிர்கள் நெறிவிளங்க நிலைவிளங்கப்
பொறைவிளங்கப் பொய்புரூதா தேதழைபோம் புலம்விளங்க. 6

விடையுகைக்குந் தான்றீதான்றி விரித்துக்காட் டியமெய்ம்மை
நடையுகக்கக் காட்டியுங்கா ணுர்காண் நாலாம்பொய்க்
கடையுகத்திற் கண்கூடாய் நிலைகாட்டப் பெருங்கருணை
மடையுடைத்து மயற்காட்டின் மயங்காமே வெளிகாட்டி. 7

அறங்காட்டுந் துறைகாட்டி அறுசமயத் தவரவர்க்குத்
திறங்காட்டிச் சிவங்காட்டிச் சித்திமுத்தித் திருக்காட்டிப்
புறங்காட்டிற் பொய்யுடலை வையாமெய்ப் புலங்காட்டி
மறங்காட்டென் மனக்காட்டை வளராமே மதிகாட்ட. 8

1, 2. இராமைய பிள்ளை, சின்னம்மையார் இவ்விருவரும் வள்ளலார் தம் பெற்றோர்.

தவநெறியுந் தவப்பயனுஞ் சார்புஞ்சார் புணர்பொருளுஞ்
சிவனருளும் அருட்பயனுந் தேர்ந்தனர்தேர்ந் ததுமுணரா
தவநெறியிற் புக்குழன்றங் கசதியா டுறுமறிவில்
பவநெறிநாத் திகருமுயப் பரிந்தருளின் இயல்காட்டி. 9

சன்மார்க்கத் தவர்யாருந் தனிவிருப்பும் நிலைவிருப்பும்
பன்மார்க்கத் தவர்யாரும் பற்றுமொரு பற்றுகி
என்மார்க்கத் தவர்களுநா டரியபழம் பொருளெளியேன்
துன்மார்க்கத் தவம்போக்கித் தவமாக்கத் துணிந்தருளி. 10

பேய்யோடப் பொய்யோடாப் புறநிலைகள் புலம்போட
மெய்யோடா வைதிகச்செம் மொழியொன்றுன் வெய்யமல
மையோட மையோடு மனமோட மலிபிறவி
ஐயோடு மிறப்போட அருளோடு கண்ணேணி. 11

போக்குவர வில்லாது புறங்கிழ்மே லுண்ணாடுசார்
பாக்குமிடை அறவிருந்த அதிசூக்கத் தொருதனிமை
நோக்கருநோக் குணர்வருளா லேக்குறவெட் டுருவாதி
தாக்கருதாக் குறவன்று கொண்டதொரு தகைமையென. 12

ஊரோடுபேர் உருவொன்று மில்லாத வொப்பிலுனர்
வோருருவீ ருருமுக்க ணெலிருதோள் ஐந்துமுகங்
காருறுகண் டமுமாறு கவர்சடையு மறைத்தருளி
எருறவந் தெழுந்ததுவோ அன்றியிமை யவர்க்கன்று. 13

பொன்னுடு தணைவழங்கப் போர்காட்டி யெஃகேந்தி
எந்நாரு மென்னுரு மெந்தையா றிருநாளும்
மன்னுறு முகமுமொளித் துற்றதென லலதுமற்றிங்
கென்னுவ தன்னுர்பா லிருந்தசெய்மை தணைப்புனைந்து. 14

அறுமீனர் முன்களிப்ப 1 அனிலநாள் கொண்டதென
2 உறுகன்னி 3 அறுவைமீன் கொண்டருளி யுலகமெலாம்
பெறுகோல மதுகாட்டி உதயஞ்செய் பிள்ளையார்
வதியோப்பான் முளையுண்டார் மகிழ்ந்தணைபான் முலையுண்டார். 15

திருமுகங்கண் டவர்யாரே யாயினுங்கண் டளவேதீ
தொருவிமயக் கொழிந்தவர்தாஞ் செய்வனவு முறுவனவுந்
தருமுணர்ச்சி முக்குற்றத் தடையறவாங் குறலானும்
அருளன்பின் புறலானும் அல்லலெலாம் அறலானும். 16

பாதகரு தகங்களறப் பணலானும் பாவனையாய்க்
கோதறுபா வனைக்கெட்டாக் கொள்கைத்தா யுறலானும்
மேதகுதன் னிலையாக்கி நிலைப்பயனைக் குறலாதி
வேதகத்தா னும்பொருள்கொள் வெளிப்படையிற் புலப்படவே. 17

1. அனிலநாள்—விசாகம்; 2. கன்னி—புரட்டாசி; 3. அறுவைமீன்—சித்திரை.

இராமலிங்கம்

உருநாமம் இராமலிங்க மெனக்கொண்டா ரோங்கருளாற்
குருநாம மந்திரமாக் கொண்டுய்ந்தா ருபநிடந்தார்
பெருநாம மந்திரத்தைப் பெற்றியறி யாரெல்லாந்
திருநாம மிதுபிள்ளைத் திருநாம மென்பாரே. 18

பாசமெனக் கிடந்தேனைப் பசுவாக்கிப் பருவம்பார்த்
தாசகல வுணர்த்திபருள் ளுவட்டம்மை யப்பனுமாம்
பேசரிய பெரியாரைப் பேபுணர்வேன் பேசறியேன்
தேசுவரு மகவைசிறந் தாரெனவுஞ் சொலவியைந்தேன். 19

ஓதாதுணர்ந்தார்

மீதானத் துயர்பள்ளி மேவவெமை வைக்கும் எங்கள்
மேதாவைப் பள்ளிவிழைந் தருளிற்றிறன் றுரைப்பதெவன்
ஓதாமே யெமையெல்லா வுணர்த்துமுரு வெளியைபச்சோ
ஓதாமே யுணர்ந்திதன்பார் உணர்கிலா ரொருவிபப்போ. 20

திரு ஒற்றியூர்

அவ்வயினு ருயிர்கண்முத்தி ஆருகெறி யறிவிப்பான்
செவ்விதினல் லருள்வலித்த தோதெரியேஞ் சிறந்துயிர்கள்
உய்வகையுள் ளிருந்துமொளித் தொற்றிநின்ற படிகாட்டத்
தெய்வவொற்றி நின்றதனைத் திருவருளாற் றேற்றியதே. 21

அறவாழி அந்தணனைப் அருள் பழுத்த தவக்கொழுந்தெவ்
வறமாவ தெனிற்புலவீர் சந்திதிபை யடைந்துள்ளார்
அறமாவ தெல்லாமு மொருங்கடையப் பெற்றுசேல்
அறமாவ தெமக்கல்லால் அடிகளுக்கென் னறஞ்சொலுமே. 22

அருட் பிரவாகம்

ஆணவத்தி னன்மாழாந் தறிவிழந்து வெம்பிறவிப்
பூணவத்தைப் பட்டுழலும் புன்கணறுத் துய்விப்பான்
மாணவத்தை யருளுமறை விரித்தமணி வாக்கதனற்
பேணவத்தைச் சொரிதமிழ்ச்செம் பிரவாகம் பெருக்குவித்தே. 23

சிற்றடியேம் பிழைத்திதாழும்பைத் திருவுள்ளங் கொண்டகந்தை
மூற்றுமொழித் தருள்விரவ உபாசனை முறைதெரித்தங்
கற்றமற வறிவுருவாய்ப் உருவெளியாய் உருவாகிக்
குற்றமறுத் துணர்வூட்டிச் சேணினுமெய்க் குறிக்கொள்ள. 24

நல்லருளி னியல்பெளியோம் பெறக்காட்ட நன்னீராற்
செல்லவிரு ளறவிளக்கங் கெரிவித்துந் தீச்சனன
வல்லபிணி யறுவிக்கும் வகைகாட்டும் படியுடலின்
அல்லல்செயும் பிணியனைத்தும் அருண்மொழியா னேயறுத்தும். 25

"தோடுடைய செவிய" னெனுந் தொடையான்முன் னிளைவர்க்கும்
நாடுடைய பொருட்சுட்டி நன்றுவிளக் கியதென்ன
வீடுடைய வுலகமெலா முதிக்கின்ற வெனுந்தொடையாற்
பீடுடைய பொருட்சுட்டிப் பேரிறைமக்கின் றீதென்றும். 26

வேதியாய் மலக்களிம்பை நீக்கியெமைப் பொன்னாக்கும்
வாதியா யருள்விழுங்கி மாயாவா தியனாகி
ஜோதியாய் விளையாடுந் தோன்றலுக்கோ ராயிரம்பேர்
ஓதிலு ருணர்வுடைய தொண்டரெலா மொருசிலவர். 27

திருவருட் பிரகாச வள்ளலார்

தனித்துரைத்த இராமலிங்கத் தனிமறையா தரித்துப்புந்தார்
இனித்தஅருட் பிரகாச வள்ளலென இனிதேத்தி
அணித்தமற்றூர் சிலவறவ ரந்தோவென் போன்மறந்து
மனித்தனெனக் கொண்டொழிந்தார் மலவாழ்விற் சிலமறவர். 28

மூலயுண்ணி மோட்டெருமைப் பாற்கடன்மீ னெனவாழும்
நிலையுயிர்கள் தமையுடைய பூரணத்து ணின்றுமந்தோ
அலைவகன்று ரிலர்துன்பத் தழுங்குகின்று ரறியாமைத்
தலையிருந்தா ரினமென்றுல் அவர்க்குணர்த்துந் தரமன்றே. 29

என் பணங்காய்க் கற்றாணை மிருங்கடனு வாயாகி
முன்புகரா முண்டமகச் சின்னுட்பின் முருகாய்வந்
தன்புறநன் னரிபரியே யாகவுமந் தோவறியார்
தன்பெருமைச் சலமின்றிச் சந்துரைப்பார் தடிப்பரிதே. 30

ஆருயிர்கள் வினைக்கிடா யவ்வவர்கட் கறிவொழுக்கஞ்
சிருறுதெய் வஞ்சமயஞ் சிக்கெனவே யாத்தருளால்
தேதருமொரு சிவன்பருவந் தேற்றுவதாற் றிருவருளை
ஓருமதல் லால்வேறன் னுரைப்பதியா முயர்புலவீர். 31

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

அமலனுர்க் கீதார் புகழ்கொலா மாட லரியதிற் கிளந்தன னறியேன்
நிமலசந் நிதிநேர் தருமம்பொன்றே நேர்ந்த நேர்ச்சியி லளவறு சித்திக்
கமழுறு புத்தி முத்தியுற் றுயிர்கள் கனிவுற விதஞ்செயு மென்றுற்
சமரச வேத சன்மார்க்க சங்கச் சாதுளார் பொறுப்பரென் பிழையே. 32

தரவு கொச்சகக் கலிப்பா

எந்தையருட் பிரகாச னின்னுயிர்க ளமைத்தீதற்றச்
சுந்தழுற வினமாடுந் தண்ணருளா டலைப்போற்றச்
சுந்தரநல் லருளெடுத்துக் கைதருமேற் றொழுதிறைஞ்சிப்
பந்தவினைத் தொடக்குமயற் படருமற மொழிந்துய்வேன். 33

ஆயவரு ளிறையெங்கள் அருட்பிரகா சப்பெருமான்
தூயவரு ளாற்பொழிந்த சொல்லமிழ்தாந் தமிழ்ப்பெருக்கு
கேயவருட் பற்றுகி நிறைமனத்துப் பெரியர்க்கும்
மாயமயக் குழலென்போன் மறவர்க்கு மூள்ளுருக்கி. 34

திருவருட்பா

அளவாத பேரன்பு சொரிந்தருளை விளைவித்துத்
தளவாரு நகைக்கயற்கட் டையலிடங் கொண்டபிரான்
வளமாருங் கழன்மலரோ டிரண்டறுத்து வாழ்வித்தும்
உளவாலே அருட்பாவின் மறுருநாமம் பூண்டதுவே. 35

மருளாலே சிலரென்போன் மருளாலே மயங்கியுணர்ந்
தருளாலே யுரைத்ததென அருட்பாவி னுரைகொண்டார்
தெருளாதேன் சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கும்
அருளாலே உரைத்ததென அருட்பாவி னுரைகொண்டாம். 36

அத்தகைய திருவருட்பா உபாசனையி லகண்முறைமை
உய்த்தறியச் சோத்தமொடு சாத்திரமா யுறுதலிறைற்
சுத்தமுற எப்பொருளும் விளக்கெழுவாய்த் தொல்லெழுத்தை
வைத்தவெழுத் தைந்திணைமை மலர்விக்கும் வாய்மையிலால். 37

திருமுறை ஆறு

அறுசமயத் துள்ளாரும் அயலாரு மவரறியப்
பெறுபொருளை மளவாத பெரும்பொருளைங் காட்டலிலால்
உறுதிபெறு மத்துவா வதன்மேலா யுறுபொருளை
மருவறக்காட் டுகையாலு மற்றுறு முறையாக. 38

பிரிந்துபிரி யாதருளின் பெற்றிமிக்குப் பிணக்கறுமா
தெரிந்துமுறை செய்தருளுஞ் சிறப்பானே திருவருட்பா
விரிந்தமுறை ஆறெனவே மெய்யருளின் முடிபாட்டாற்
பரிந்தன்ப ருலகமெலாம் [1]பழிச்சுபுகழ் நிலவியதே. 39

பண்ணிறைந்த தமிழ்வேதப் பழம்பனுவற் முகையதன்சீர்
எண்ணிறைந்து நின்றனபோல் எண்ணிறைந்த தாங்கவற்றுள்
உண்ணிறைந்த கருணையினால் உயிர்க்குறுதி பயப்பமுனங்
கண்ணிறைந்த சுவைமருந்தாம் ஐந்துமுறை கண்டமைட்டில். 40

திருநெறிய தமிழாதித் தெய்வமுறை பன்னென்றும்
ஒருநெறிய மனம்வைத்தார் உறுகாறுந் திருத்தில்லைக்
கருநெறியங் ககல்விக்குங் கடப்பாளன் கைக்குறியாய்ப்
பெருநெறியர் சேமித்து வைத்ததொரு பெற்றியென. 41

1. பழிச்சு என்பது—போற்றும்.

அமலமருள் திருவருட்பா வருண்மரபு தனைக்குறித்துக்
கமைபுறுமா சேமித்து வைத்திருந்த தென்பார்கண்மூர்
எமையுடையா னெல்லாமும் வல்லஅருட் பிரகாசன்
சமரசவே தச்சன்மார்க் கச்சங்கச் சாதுக்கள். 42

தந்திருக்கூட் டத்துள்ளான் சதுரையான் பெரியசிவா
னந்தபுர விழுவுடையான் நஞ்சேல்வ ராயன்பால்
அந்தியிளம் பிறையணியும் அணிமுடியை மறைத்தபிரான்
சுந்தரக்கை சாத்தியவத் திருவேடு தொகுத்தன்றே. 43

திருவருட்பா மகிமை.

பண்ணீர்மைச் சுவைமுதிர்ந்த திருப்பனுவ லருட்பயனைத்
தண்ணீரென் றிருருவெண்பாச் சம்பந்தப் பிரான்வழியிற்
றெண்ணீர்த்தி தன் கூடல்வருஞ் சிதம்பரமா முனிதெரித்தால்
உண்ணீர்மை யொன்றுமிலேன் உரைப்பதுமோர் புகழாமே. 44

கலிநிலைத்துறை

ஆறு வதுமுறை யாரிய னுத்தம அருளாலே
வேறேர்ர் சார்சே முற்றன் றெம்விணை விளைபாகம்
தேறுப் பருவந் தேர்ந்திதன் றிசிலே ருதுகிற்க
வீரூர் மற்றை முறைவெளி வந்தமை விரிசெய்வாம். 45

தரவுகொச்சகக்கலிப்பா

ஆங்கவற்றைச் சிலரறிந்தார் அறியாரு மாகப்பின்
ஓங்கருளான் முத்துச்சா மிப்பெயரி னேருரவன்
தேங்ககல மன்பதைக்குத் திருவொற்றிச் சிவபெருமான்
பாங்கருட்சந் நிதிமுன்னர்ப் பகர்ந்துபத்தி விக்தினனே. 46

அப்பத்தி யன்புழுளை சிறிதுபூத் தருள்விரவ
மெய்ப்பத்தி யிற்சிலவர் விமலவருட் பாவிழைந்து
செப்புற்றூர் யாவரெனத் தேடுறுதேட் டங்கண்டு
துப்பற்றூர் சிலரெழுதித் துரிசிற்றூர் பரிசுற்றூர். 47

ஈதுணர்ந்தங் கென்போல்வார் சிற்சிலவர் பொருள்விழைவாற்
கோதுறுவார் மரபிறந்து கோள்விரா அய்ச் சிறிதச்சிற்
பேதுறுத்தாம் பொறித்தலுமப் பெற்றியுணர்ந் தாங்குரைத்த
தீதிறிரு வருட்செல்வ ராயப்போர் சேமத்தான். 48

மறுக்கத்தா னமரசெலாம் நொந்தழலும் வந்தழலும்
பொறுக்கத்தா னருநஞ்சம் அழுதுண்டு பொன்மிடறுங்
கறுக்கத்தா னுளம்வைத்த கண்ணுளன் கழற்கன்பான்
இறுக்கத்தான் கற்றவனேர் இரத்தினமென் பாரேடு. 49

கலிநிலைத்துறை

வில்லா ருஞ்சிறு பிள்ளை மதிப்பிஞ் சணிசேவணிப்
பொல்லார் மன்ரு டியசே வடிசேர் புலரிக்கான்
நல்லார் நம்பெரு மக்கட் கினியா னையையில்லான்
மல்லார் திண்டோ ணைப்பி அவன்றுணை வலியாமே. 50

தரவுகொச்சகக்கலிப்பா

சிவநேசச் சிவராஜ யோகியர்க்காந் திருச்சிறந்த
தவநேசன் வாசுதேவப் பெயர்கொள் ததுதியனே
பவநேச மற்றூர்கள் பற்றுபசு பதிக்கினிய
நவநேசன் ஐயாசாமிப் பெயரோ னேயிருவர். 51

தங்களூமுன் னிட்டவரைத் தடுத்தன்றி யறநோக்கி
அங்குசிலர் பொருளீந்தும் அவர்தனியே கரந்துமீட்
டுங்கச்சி லிட்டுவெளி யாக்குறக்கண் டுள்ளுடைந்து
மங்கலஞ்செய் நாயகர்க்கு வழிமொழிவின் ணைப்பித்து. 52

முறையுளித்தா மச்சியற்ற இரத்தினப்பேர் முதுக்குறைவன்
இறையருளுக் கேற்றிரப்ப வெந்தையரு ளிசைவின்றிக்
குறையிரந்தார் குறைக்கிரங்குங் கொள்கைகாண் டவக்குணவான்
மிறையுள்ளார் மிகையறுக்க மேற்கொண்டங் குசாவுதலும். 53

பல்லவகோத் திரத்துவந்த சபாபதிமால் பயந்தருளும்
கல்லவனெம் முயிர்த்துணையா ளுபலுர் கழன்மறவாச்
செல்வமிகு காரணத்தா னுஞ்செல்வ ராயனென
வல்லபடி முன்னுவன்ற வண்மைப்பேர்ச் சேமநிதி. 54

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

தன்னடைந்தார் தாணுகத் தாங்குபெருந் தயாளன்சற் குணங்க ளெல்லாம்
பொன்னுருவோன் றெடுத்ததெனும் புகழாளி யுயிருமொரு பொருளன் ருக
என்னவர்க்கு மீகைபயிற் றேந்தலுணர் விலுக்குறையுள் யார்க்குந் தத்த
முன்னமுணர்ந் துபகரிக்கு முதலியப்பா வண்ணலருண் முளைநன் மீனி. 55

தரவுகொச்சகக்கலிப்பா

விற்புருவ நெறித்தருளி வீறடங்கப் புரம்பொடித்த
பொற்புருவச் சிலையாளி புண்ணியநீற் றன்புடையான்
அற்புருவ னருட்பிரகா சப்பெருமான் றிருவருட்குச்
சொற்புதுவை வேலையன் றனைத்துணையாத் துணைகொண்டு. 56

திருவருட்பா முதற்பதிப்பு

வேண்டுவன வுபகரிக்கக் கலிநாற்பத் தோன்பதுநூற் றறுபான் மேலெட்
டாண்டெழுதா வெழுத்தேதற்றி நான்குமுறை யாசறிய வெளியிட் டியார்க்கும்
பூண்டெழுபே ரின்பமகிழ் வதுபெருகப் பணிபுரியும் பெற்றி யானே
காண்டகுசீர்த் தேவநா யகனருளு மிரத்தினப்பேர்க் காத்திட்டானே. 57

தரவுகொச்சகக்கலிப்பா

மிக்கமறை யேத்துமுக்கண் வித்தகனுர் திருமயிலைத்
தொக்கவிளங் கோக்குடியில் வருந்தூயன் குணநிதியான்
சிக்கிட்டி யருள்சோம சுந்தரன்செய் தாளாண்மை
தக்குலகு திருவருட்பா இனிதுபெறத் தழைத்தன்றே. 58

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

நேசமெல்லா முடையார்க்கா யுள்ளமுருகி நிறையழிந்த
தேசனெங்கள் சடகோபன் தெய்வத்தமிழோர் வடிவாகிப்
பாசங்கழன்று வடகலைப்பாற் கடற்கோர் பஃறியாஞ்சினி
வாசவரதப் பெயர்கொளறங் கரையுநாவின் மறைக்கொழுந்து. 59

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

வேதனுர் மாலார் காணரு முக்கண் விகிர்தனுர் விளம்பரு ஞான
போதனு ளளவாப் புனிதனுர் நாயேன் புழுத்தலைக் கினிதிருத் தியசெம்
பாதனு ரன்ப ருளம்பிரி யாத பாமனு ரருட்பிரகாச
நாதனுர் கருணைக் குறையுளார் வீரா சாமிப்பேர் நற்றவக் கொழுந்து. 60

தவமர சிருக்கு மத்தாணி நெஞ்சர் தகுமுயிர்க் கின்புசெய் தக்க
சிவமுனர் பெரிய ரருட்பிரகாச தேசனுர் திருவடிக் கன்பர்
அவமறு தேவநாயகன் அப்பா சாமியே யாதியா ரியர்கண்
நவமுறு சென்னைக் கூடன்மற் றுள்ள நற்றலந் தொறுநங்க ணுதன். 61

பொன்பழித் தலர்செந் தாமரை குழைத்த பூங்கழற் கன்பரா யுள்ளார்
தன்பொருஉஞ் சீர்த்திச் சமரச வேத சன்மார்க்கத் தனிப்பெருஞ்சங்கத்
தென்பவ மறுக்கு மெம்பெரு மக்க ளின்செவிக் களம்புகுந் தெளியேன்
துன்பறச் சென்னி யாசிருந் தன்றித் தூயநல் லருள்வர லாறே. 62

தரவுகொச்சகக்கலிப்பா

நடந்தசெய லருள்காட்ட நான்வகுத்த படியன்றி
மடம்படுமென் னறிவானே வகுத்ததன்றும் ஆதலினுல்
இடம்படுதம் முணராரின் எம்பெருமக் கள்சமையும்
உடம்படும்புன் மொழியெள்ளா துலகமெலா மோங்குகவே. 63

அருட்பெருஞ்ஜோதி

இவ்வாலாறு — ஆசிரியர் மாணிக்கர்

தொழுவூர். வேலாயுத முதலியாரால் சொல்லப்பட்டது.



சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்பா

வசனபாகம்

சமரச சுத்தசன்மார்க்க சங்க

1. சத்தியச் சிறுவிண்ணப்பம்

அருட்பெருஞ்ஜோதி

உத்தரஞான சித்திபுரமென்றும், உத்தரஞான சிதம்பரமென்றும் திருவருளாலாக்கப்பட்ட ஆக்கச் சிறப்புப் பெயர்களும், பார்வதிபுரமென்றும், வடலூரென்றும் உலகியலாற் குறிக்கப் பட்ட குறிப்புப் பெயர்களும், பெற்று விளங்குகின்ற தெய்வப்பதியினிடத்தே, இயற்கை விளக்க நிறைவாகியுள்ள ஓர் சுத்த சிவானுபவ ஞானசபையில் இயற்கை யுண்மை நிறைவாகிய திருவுருவைத் தரித்து, இயற்கையின்ப நிறைவாகிய சிவானந்த ஒருமைத் திருநடச் செய்கையை, எவ்வுயிரும் இன்பமடைதற் பொருட்டே செய்தருளுகின்ற,

எல்லாம்வல்ல தனித்தலைமைக் கடவுளாகிய

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே!

தேவரீரது திருவருட் சமூகத்தில் யான் செய்து கொள்ளுகின்ற சமரச சுத்தசன்மார்க்க சங்க சத்தியவிண்ணப்பம்:—

இவ்வுலகினிடத்து ஆறறிவுள்ள உயர்வுடைத்தாகிய தேகத்தைப்பெற்ற யான், இத்தேகத்திற்கு இடைக்கிடை நேருகின்ற மரணம், பிணி, மூப்பு, பயம், துன்ப முதலிய அவத்தைக ளெல்லாவற்றையும் நிவர்த்திசெய்து, இத்தேகத்தையே நித்திய தேகமாக்கிக்கொண்டு, எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எத்துணையும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் வேண்டுமென்பதே; எனது சத்தியமான அதிதீவர விருப்ப முயற்சியாக இருக்கின்றது.

எனது விருப்ப முயற்சி இங்ஙனமாக, அவத்தைக ளெல்லாவற்றையும் நீக்கி, இத்தேகத்தை நித்திய தேகமாக்கி, எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல், எதனற் பெறுதல் கூடுமென்று அறியத் தொடங்கிய தருணத்து:—

வேறு எந்தவழியாலும் பெறுதல்கூடாது, எல்லாமுடைய கடவுளது திருவருட் சுதந்தரம் ஒன்றுலே பெறுதல் கூடுமென்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி யறிந்தேன்.

பின்னர் திருவருட் சுதந்தரம் நமக்கு எந்த வழியாற் கிடைக்குமென்று அறியத் தொடங்கிய தருணத்து:—

எனது, யாமென்னும், தேகசுதந்தரம், போகசுதந்தரம், ஜீவசுதந்தரம் என்னும் மூவகைச் சுதந்தரங்களும், நீங்கியவிடத்தே கிடைக்குமென்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி அறிந்தேன். ஆகலில், எனது சுதந்தரமாகக் கொண்டிருந்த தேக சுதந்தரத்தையும், போக சுதந்தரத்தையும், ஜீவசுதந்தரத்தையும், தேவரீர் திருவருட்கே சர்வசுதந்தரமாகக் கொடுத்துவிட்டேன். கொடுத்த தருணத்தே, இத்தேகமும், ஜீவனும், போகப் பொருள்களும், சர்வ சுதந்தரராகிய கடவுள் பெருங்கருணையாற் கொடுக்கப்பெற்றன மன்றி, நமது சுதந்தரத்தாற் பெற்றனவல்ல வென்னும் உண்மையை அருளாலறிவிக்கவும் அறிந்துகொண்டேன். இனி இத்தேகத்தினிடத்தும் ஜீவனிடத்தும் போகப் பொருள்களிடத்தும், தேவரீர் திருவருள் சாட்சியாக எனக்கு எவ்விதத்தும் யாதோர் சுதந்தரத் தோற்றமும் தோற்றமாட்டாது.

தேவீர் திருவருட் சுதந்தரத்தை என்னிடத்தே வைத்தருளி, மரணம், பிணி, மூப்பு, பயம், துன்ப முதலிய அவத்தைக ளெல்லாவற்றை யுந் தவிர்த்து, இத் தேகத்தையே நித்திய தேகமாக்கி, எக்காலத்து மழி யாத பேரின்பசித்திப் பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும். இத் தேகத்தைப்பெற்ற எல்லாச் சீவர்களுக்கும் எனக்கறிவித்த வண்ணமே அறி வித்து அவரவர்களையும், உரிமையுடையவர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்.

தேவீர் பெருங்கருணை ஆட்சிக்கு வந்தனம் வந்தனம்.

இங்ஙனம்

திருமயம்

சொ. விசுவநாதம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

சமரச சுத்தசன்மார்க்க

2. சத்தியப் பெருவிண்ணப்பம்

அருட்பெருஞ்ஜோதி

இயற்கை உண்மை நிறைவாகியுள்ள ஓர் சுத்த சிவானுபவ வெளியில் இயற்கை விளக்க நிறைவாகி விளங்கிய அருட்பெருஞ்ஜோதி சோரூபராய், இயற்கை யின்ப நிறை வாகி யோங்கிய, சிவானந்த ஒருமைத் திருநடச் செய்கையை, எல்லாவுயிர்களும் இன்ப மடைதற் பொருட்டுத் திருவுளக் கருணையாற் செய்தருளுகின்ற,

சர்வவல்லபராகிய தனித்தலைமைக் கடவுளே !

சிற்றணுப்பசு

அறிவென்பது ஓர்சிறிதுந் தோற்றுத அஞ்ஞான மென்னும் பெரிய பாசாந்தகாரத்தில் நெடுங்காலம் சிற்றணுப்பசுவாகி அருகிக்கிடந்த அடியேனுக்குள் உள்ளொளியாகி யிருந்து, அப்பாசாந்தகாரத்தினின்றும் எடுத்து, எல்லாப் பிறப்புடம்புகளிலும் உயர்வுடைத்தாகிய ஆறறிவுள்ள இம் மனிதப் பிறப்புடம்பில் என்னை விடுத்து, சிறிது அறிவு விளங்கச்செய்த தேவீரது திருவருட்பெருங்கருணைத்திறத்தை எங்ஙனம் அறிவேன் ! எவ்வாறு கருதுவேன் !! என்னென்று சொல்வேன் !!!

பதிப்போதவு

எல்லாம்வல்ல இயற்கையுண்மைக் கடவுளே !

உபசாரத்தாற் பெற்ற தந்தையென்பான் ஒருவனது சுக்கிலத் துளியின்கண், என்னை ஓர் பகுதிப்பேரணுவுருவிற் பெருகி வெளிப்பட இருத்திய காலத்திலும் எனக்குள் உள்ளொளியாகியிருந்து அப்பகுதிப்பேரணு வுருவைச் சிரிட்டித்தருளினீர். அன்றிப் புறத்தில் யாவராலுஞ் சகிக்கப்படாத அதன் அருவருப்பையும் அசுத்தத்தையும் தீநாற்றத்தையும் சகித்து, அச் சுக்கிலத் துளியினிடத்து ஓர் ஆவியுருவாகியிருந்து, அத்துளியின்கண்ணுள்ள

பலவகை விரோத தத்துவங்களாற் சிறிதுந் தடைபடாமல் என்னுருவையும் காத்தருளினீர். அன்றி, அங்ஙனம் அரும்பிய ஆன்மசத்திக் கலைகள் வெளிப்பட விளக்கி வளர்த்தும் அருளினீர்.

உபசாரத்தாற் பெற்ற தாயென்பாள் ஒருத்தியின் சோணி தத்திரளில், என்னுருவைச் சேர்க்கும்வரையில், அப்போதப்போது என் னுருவைச் சிதைப்பதற்கு எதிரிட்ட துரிசுகளெல்லாவற்றையும் நிக்கிரகஞ் செய்தருளினீர். இங்ஙனம் புரிந்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் திறத்தை எங்ஙனமறிவேன்! எவ்வாறு கருதுவேன்!! என்னென்று சொல்வேன்!!!

பூதப்போணு உரு

எல்லாமுடைய இயற்கை விளக்கக் கடவுளே!

தாய் கருப்பையிற் சோணிதத்திரளிற் சேர்த்து, என்னை ஓர் பூதப் போணுவுருவிற் பெருகி வெளிப்பட இருத்திய காலத்திலும் எனக்குள் உள்ளொளியாகியிருந்து அப்பூதப் போணுவுருவைச் சிருட்டித் தருளினீர். அன்றிப் புறத்தில் எவராலுந் சிறிதுஞ் சகிக்கப்படாத அதன் அசுத்தம், அருவருப்பு, துர்க்கந்த முதலியவற்றைப் பொறுத்து அச்சோணிதத்திரளில் ஓர் ஆவி யுருவாகியிருந்து, அத்திரளினுள்ள பலவகை விரோத தத்துவங்களாற் சிறிதுந் தடைபடாமல் என்னுருவைக் காத்தருளினீர். அன்றியும், அவ்விடத் தெதிரிட்ட துரிசுகளெல்லாவற்றையும் நிக்கிரகஞ் செய்தருளினீர். அன்றி அங்ஙனம் பூத்த ஆன்ம சத்திக்கலைகள் வாட்டமடையாது வெளிப்பட்டு விளங்க வளர்த்தருளினீர்.

பவுதிக பிண்ட வடிவு

அன்றியும், தாய் கருப்பையி னிடத்துப் பூதப் போணுவுரு விற்கிடந்த என்னை, அக்கருப்பையிற் பவுதிக பிண்டவடிவில் இருத்தும் வரையில், நச்சுக்கிருமி, நச்சுக்காற்று, நச்சுச்சுவாலை முதலிய வுற்பாத வகைகளால் எனது பூதப்போணுவுருச் சிதறி வேறுபடாமலும் காத் தருளினீர். அன்றியும், தாய் கருப்பையிற் பவுதிக பிண்ட வடிவில் என்னை யிருத்திய காலத்திலும், எனது இச்சை ஞானக் கிரியைகளை வெளிப்படுத்துதல், முதலிய உபகரிப் பதிகரிப்புகளுக்குரிய, உபயோக தத்துவ வுறுப்புக ளெல்லாவற்றையும் குறைவின்றி வகுத்து அமைத்து, வளர்த்துக் காத்தருளினீர். அன்றியும், அடியேன் தாய் கருப்பையிற் பிண்டவடிவிற் கிடந்தகாலத்து, இருப்பிற் பெரிதுங் கடினமுடையதாய், இருட்குகையிற் பெரிதும் இருளுடையதாய், மிகவுஞ் சிற்றளவுடையதாய்,

அசுத்த முதலியவற்றால் நிரம்பிய அக்கருப்பையினுள் நெருக்கத்தாலும் வெப்பத்தாலும் புழுங்கிய புழுக்கத்தினால் வருந்தி வருந்திக் களைத்த போதெல்லாம், அங்ஙனம் அழுதக்காற்றை அடிக்கடி மெல்லென வீசுவித்து, அவ்வருத்தமுங் களைப்புந்தவிர்த்துக் காத்தருளினீர்.

அன்றியும் தாய் கருப்பையிற் பிண்டவடிவிற் கிடந்து பசியினாற் பாதவித்து மூர்ச்சித்த போதெல்லாம் பூதகாரிய அழுதத்தை எனக்கு ஊட்டுவித்துப் பசியைநீக்கி மூர்ச்சை தெளிவித்தருளினீர். அன்றியும் தாய் கருப்பையிற் பிண்ட வடிவிற் கிடந்து, பேய்வெருட்டாலும், பேரிருட்டாலும், பயந்தபோதெல்லாம் நாதவோலியாற், பேய் வெருட்டையும், விந்துவிளக்கத்தால், பேரிருட்டையுந் தவிர்த்து, என் பயத்தைநீக்கி யருளினீர். அன்றியும், தாய் கருப்பையின்கண் நேரிட்ட பெருந்தீ, பெருங்காற்று பேரோசை, பெருவெள்ளம், பெரும்புழு முதலிய உற்பாத துரிசுகள் அனைத்தையும் தவிர்த்துக் காத்து அப் பிண்ட வடிவில் எனக்கு ஓரறிவையும் விளக்கி யருளினீர்.

அன்றியும் உலகினிடத்தே பிறந்து அனுபவிப்பதற்குரிய சுக வனுபவப் பெருக்கம், ஆயுட்பெருக்கம், முதலிய நன்மைகளையும் எனக்கு அப்பிண்ட வடிவின்கண்ணே அமைத்தருளினீர்.

அன்றியும் சோணிதக்காற்றின் அடிபடல், யோனிநெருக் குண்ணல் முதலிய அவத்தைகளால் அபாயம் நேரிரு டொட்டாமல் காத்து இவ்வுலகினிடத்தே தோற்றுவித்தருளினீர். இங்ஙனம் புரிந்த "தேவரீரது திருவருட் பெருங்கருணைத் திறத்தை" எங்ஙனமறிவேன்! எவ்வாறு கருதுவேன்!! என்னென்று துதிப்பேன்!!!

எல்லாமாகிய இயற்கையின்பக் கடவுளே!

தந்தையென்பவனது சுக்கிலப் பையின்கண், யான் வந்தமைந்த கணப்போது தொடங்கி, தாயென்பவளது சோணிதப்பையின்கண், சென்றடைந்த கணப்போதிற்கு, முன்கணப்போது வரையுமாக, என்னுலொருவாறு அளவிடப்பட்ட ஒருகோடி இருபத்தோன்பதுலக்ஷத் தறுபதினாயிரங் (1,29,60,000) கணப்போது பரியந்தம் எவ்வகைத் தடைகளும் வாராதபடி பகுதிப் போரணுவுருவிற் கிடந்த எனது அகத்தினும், புறத்தினும், அருவாகியும், உருவாகியும் சலித்தன் முதலியவின்றி, அன்போடும் அருளோடும் பாதுகாத்திருந்த தேவரீரது திருவருட்பெருங் கருணைத் தன்மைக்கு இவ்வுலகில் ஒருவாறு ஒரு கணப்போது பாதுகாத்தலிற் சலிப்படைந்தும், தளர்ச்சியடைந்தும், அறிவறுப்புற்றும், சுதந்தரமற்றும், பாக்கியிலிருந்தும், தடைபடுகின்ற தந்தை முதலிய ஜீவர்கள்

கருணைத்தன்மையை, ஒப்பென்று சொல்வதற்கு எவ்விதத்திலுஞ் சிறி தாயினும் மனந்துணியாமையால், அங்ஙனம் உபசரியாதவனுகி யிருக் கின்றேன். ஆகலில் "தேவரீர் திருவருட் பெருங்கருணையை" யென் னென்று கருதுவேன்! என்னென்று துதிப்பேன்!!

அருட்பெருஞ்ஜோதித் தனித்தலைமைக் கடவுளே!

தாயென்பவளது சோணிதப்பையின்கண், யான் வந்தமைந்த கணப்போது தொடங்கி, இவ்வுலகிற் றோன்றிய கணப்போதிற்கு, முன் கணப்போது வரையுமாக என்றலொருவாறு அளவிடப்பட்ட ஆறுகோடி நாற்பத்தெட்டு லகூஷங் (6,48,00,000) கணப்போது பரியந்தம், எவ்வகைத் தடைகளும், எவ்வகை ஆபத்துகளும் வராதபடி, பூதப்பிரணு வுரு விலும், பிண்டப் பெருவடிவிலும் கிடந்த எனதகத்திலும், புறத்திலும், அருவாகியும், உருவாகியும், சலித்தன் முதலிய வின்றி, பெருந்தயவி னோடு பாதுகாத்திருந்த தேவரீர் திருவருட்பெருங்கருணைத் தன்மைக்கு, இவ்வுலகில் ஒருவாறு ஒரு கணப்போது பாதுகாத்தலிற் சலித்தும், தளர்ந்தும். அருவருத்தும் பரதந்திரித்தும், பராக்கடைந்தும் தடைபடு கின்ற, தாய் முதலிய ஜீவர் கருணைத் தன்மையை ஒப்பென்று சொல் வதற்கு, எவ்வகையினும், எத்துணையும் மனந் துணியாமையால் அங்ஙனம் உபசரியாதவனுகி யிருக்கின்றேன். ஆகலில், 'தேவரீரது திருவருட் பெருங்கருணையை' என்னென்று கருதுவேன்! எங்ஙனந் துதிப்பேன்!!

எல்லாமாகிய கடவுளே!

யாவராலும் பிரித்தற்கொருவாற்றுனுங் கூடாத, பாசமென்னு மகாந்தகாரத்தில், யான், அது, வென்னும் பேதந்தோற்றுது அருகிக் கலந்து, அளவிறந்த காலம் முன்பின்னென்பதின்றி மூர்ச்சித்துக்கிடந்த என்னை, அம்மகாந்தகாரத்தினின்றும் ஓர் கணப்பொழுதினுள், அதி காரணக் கிரியையால், அதிகாணப்பகுதி யுருவிற்பிரித்தெடுத்தருளிய 'தேவரீரது திருவருட் பேராற்றலை' என்னென்றுகருதி! என்னென்று துதிப்பேன்!!

சத்திய ஞானானந்தத் தனித்தலைமைக் கடவுளே!

காரணக்கிரியையாற் காரணப்பகுதி யுருவினும், அதிசூக்கு மக் கிரியையால் அதிசூக்குமப் பகுதியுருவினும், சூக்குமக்கிரியையாற் சூக்குமப் பகுதியுருவினும், பரத்துவ சத்தி சத்தரால் பூதவுருவினும், அபரத்துவ சத்தி சத்தரால் பவுதிக வடிவினும் ஓர் கணப்போதினுள் என்னைச் செலுத்தாமற் செலுத்திய 'தேவரீரது திருவருட் பேராற்றலை' என்னென்று கருதி! என்னென்று துதிப்பேன்!!

அகண்ட பூரணானந்தராகிய

அருட்பெருஞ்ஜோதிக் கடவுளே !

ஜீவனை ஆதரிப்பிக்கும் பூதப் பிருதிவித் தோற்றமும், ஜீவனை விர்த்தி செய்விக்கும் பூதநீர்த் தோற்றமும், ஜீவனை விளக்கஞ் செய்விக்கும் பூதாக்கினித் தோற்றமும், ஜீவனை யதிகரிப்பிக்கும் பூதவாயுத்தோற்றமும், ஜீவனை வியாபகஞ் செய்விக்கும் பூதவிளித் தோற்றமும்; உபப் பிருதிவி, உபநீர், உபாககினி, உபவாயு முதலிய தோற்றங்களும்; அவைகளிருக்கு மிடங்களும், தொழிலிட முதலிய விடங்களும்; ஓலியறிவு, உருவவறிவு, சுவையறிவு, நாற்றவறிவு, பரிசவறிவு, என்னும் ஐவகைக் குணவறிவுகளும்; அவைகளிருத்தற்குரிய செவி, கண், நாக்கு, மூக்கு, மெய்யென்னும் உள்ளிடப் பொறிகளும்; அவைகள் உத்தியோகித்தற்குரிய வெளியிடப் பொறிகளும்; வசனித்தறிதல், நடந்தறிதல், கொடுத் தெடுத்தறிதல், மலம் விடுத்தறிதல், ஜலம் விடுத்தறிதல், என்னும் ஐவகைத்தொழிலறிவுகளும்; அவைகளிருத்தற்குரிய வாக்கு, பாதம், கை, நீர்வாயில், அபானவாயில் என்னும் கருமவுள்ளிடப் பொறிகளும்; அவைகள் தொழிற்படற்குரிய கருமப் புறவிடப் பொறிகளும்;

நினைத்தல், விசாரித்தல், நிச்சயித்தல், அகங்கரித்தல் என்னும் சூக்குமக் காரணத்தொழில்களும்; அவைகளையியற்றும் மனம், புத்தி, சித்தம், அகங்கார மென்னும் சூக்குமக்காரணங்களும்; அவைகளை யியற்றுவிக்கும் அதிசூக்குமக் காரணங்களும்; அக்காரணங்களின் உபகரணங்களாகிப் பலபல பேதப்பட்டு விரிந்த சத்துவம், ராஜசம், தாமச முதலிய குணங்களும்; அவைகளிருத்தற்கும் உத்தியோகித்தற்கும் இடங்களும்; பருவஞ்செய்தல், தகுதிசெய்தல், இச்சைசெய்தல், தெளிவுசெய்தல், அதிகாரஞ்செய்தல், காரணஞ்செய்தல், காரியஞ்செய்தல் முதலிய இடைப்பாட்டுத்தொழில்களும்; அவைகளை யியற்றும்பொழுது இயைபு, இச்சை, அறிவுமுதலிய சருவிகளும்; அக்கருவிகளுக்குரிய இடங்களும்; அவைகள் உத்தியோகித்தற்குரிய இடங்களும்;

துரிசு நீக்குவித்தல், சுகம்விழைவித்தல், தூய்மைசெய்வித்தல், இன்பமடைதற்கு வழியாயிருத்தல், துணையாயிருத்தல் முதலிய பரத்துவத்தொழில்களும்; அவைகளை இயற்றுதற்குரிய தத்துவங்களும்; அவைகளிருத்தற்குரிய இடங்களும்; பிரேரித்தற்குரிய இடங்களும்; அறிதல், அறிவித்தல், அனுபவித்தல், அனுபவிப்பித்தல் முதலிய முக்கியதொழில்களும்; அவைகளை இயற்றுகின்ற சத்திசத்தர்களும்; அவர்களிருத்தற்குரிய இடங்களும்; அவர்கள் அதிகரித்தற் குரிய இடங்களும்;

வாதவிருத்தி, பித்தவிருத்தி, சிலேட்டும விருத்திகளும்; அவை களிருக்குமிடங்களும்; உத்திபோகிக்குமிடங்களும்; சூரியசத்தி, சந்திர சத்தி, அக்கினிசத்தி, தாரகசத்தி, பிரமசத்தி, மாயாசத்தி, ருத்திரசத்தி முதலிய சத்திகளும்; அவர்களிருத்தற்கும், அதிகரித்தற்கும் உரிய இடங்களும்; அச்சத்திகளை நடத்துஞ் சத்தர்களும்; அவர்களிருத்தற்கும் அதிகரித்தற்கும் உரிய இடங்களும்;

நனவு, கனவு, சுழுத்தி முதலிய அவத்தைகளும்; அவைகளிருத்தற்குரிய இடங்களும்; இங்ஙனம் இன்னும் பற்பல அகவுறுப்புகளும்; அகப்புற வுறுப்புகளும்; மீத்தோல், புடைத்தோல், வன்தோல், மென்தோல் முதலிய தோல்வகைகளும்; வெண்ணரம்பு, செந்நரம்பு, பசுநரம்பு, சிறு நரம்பு, பெருநரம்பு முதலிய நரம்பின்வகைகளும்; பேரென்பு, சிற்றென்பு, நீட்டென்பு, முடக்கென்பு முதலிய என்பின்வகைகளும்; நல்லிரத்தம், புல்லிரத்தம், கலவைபிரத்தம், கபிலைபிரத்தம் முதலிய இரத்தவகைகளும்; மெல்லிறைச்சி, கல்லிறைச்சி, மண்ணிறைச்சி, நீரிறைச்சி முதலிய இறைச்சி வகைகளும்; மேனிலைச்சுக்கிலம், கீழ்நிலைச்சுக்கிலம் முதலிய சுக்கிலவகைகளும்; ஓங்காரமூலை, ஆங்காரமூலை முதலிய மூலைவகைகளும்; தலையமுதம் இடையமுதம்; முதலிய அமுதவகைகளும்;

வெண்மை, செம்மை, பசுமை, கருமை, பொன்மை என்னும் வண்ணவகைகளும்; வெண்மையிற் செம்மை, வெண்மையிற் பசுமை, வெண்மையிற் கருமை, வெண்மையிற் பொன்மை; செம்மையில் வெண்மை, செம்மையிற் பசுமை, செம்மையிற் கருமை, செம்மையிற் பொன்மை; பசுமையில் வெண்மை, பசுமையிற் செம்மை, பசுமையிற் பொன்மை, பசுமையிற் கருமை, கருமையில் வெண்மை, கருமையிற் செம்மை, கருமையிற் பசுமை, கருமையிற் பொன்மை; பொன்மையில் வெண்மை, பொன்மையிற் செம்மை, பொன்மையிற் பசுமை; பொன்மையிற் கருமை, என்னும் வண்ணபேத வகைகளும்;

இவைகள் இருத்தற்குரிய இடங்களும் செயல் வகைகளும், பபன்வகைகளும்; இங்ஙனமின்னும் பற்பல புறவுறுப்புகளும், புறப்புற வுறுப்புகளும்; எனக்கு உபகரிக்கும்பொருட்டு, இப்பௌதிக வடிவின் கண் ஒருங்கே உண்ணின்று தோன்ற, உண்ணின்று தோற்றுது தோற்றுவித்த, 'தேவரீரது திருவருட் பேராற்றலே' எங்ஙன மறிந்து! எவ்வாறு கருதி!! என்னென்று துதிப்பேன்!!!

சுத்தசன்மார்க்க லகூடிய சத்தியஞானக் கடவுளே!

உயர் பிறப்பாகிய மனிதப்பிறப்பு

ஜீவர்களாற் கணித்தறியப்படாத பெரிய உலகின்கண்ணே போராசை, பெருங்கோபம், பெருமோகம், பெருமதம், பெருலோபம், பேரழுக்காறு, பேரகங்காரம், பெருவயிரம், பெருமடம், பெருமயக்க முதலியபெருங் குற்றங்களே பெரும்பாலும் விளைவதற்குரிமையாகிய மற்றை யிடங்களிற் பிறப்பிபாமல், குணங்களே பெரும்பாலும் விளைவதற்குரிமையாகிய இவ்விடத்தே யுறுப்பிற் குறைவுபடாத உயர்பிறப் பாகிய இம்மனிதப் பிறப்பில் என்னைப் பிறப்பித்தருளிய 'தேவரீரது பேரருட் பெருங்கருணைத் திறத்தை' என்னென்று கருதி! என்னென்று துதிப்பேன் !!

அருட்பெரு வெளியின் கண்ணே அருட்பெஞ்ஜோதி வடிவினராகி
விகற்பமில்லாது விளங்குகின்ற மெய்ப்பொருட் கடவுளே!

சிசுபருவம் — குமார பருவம்

சிசுப்பருவந்தொடங்கிக் குமார பருவம் வரையில் பேய் வெருட்டல், தோஷந்தாங்கல், பாலெதிரெடுத்தல், சவலைக்குருந்தாதல், நோய்ப்பிணிப்புண்டல், பசியாலரற்றல், பயத்தாலுலம்புதல், உண்டி யுவட்டல், உடம்பொடு கேர்தல் முதலிய எவ்வகைத் தடைகளாலுப், தடைபடாமல் எனதகத்தும் புறத்தும் காத்திருந்து வளர்த்தருளிய 'தேவரீரது சிபரருட் பெருங்கருணைத் திறத்தை' என்னென்று கருதி! என்னென்று துதிப்பேன் !!

அறிவாரறியும் வண்ணங்க ளெல்லாமுடைய
பேரருட்பெருஞ்ஜோதிப் பெருந்தகைக்கடவுளே!

குமார பருவம்

குமார பருவத்திற்றானே உலகிற் சிறுவர்களுடன்கூடிச் சிறு விளையாட்டியற்றல், சிற்றுண்டி விழைதல், சித்திரம் பயிற்றல், அதிசயம் பார்த்தல், அசங்கியம் பேசல், ஆவலித்தழுதல், சிறுசண்டை செய்தல், சிறுகுறும்பியற்றல், தன்வசத்தழலல், தாய்வயிற்சலித்தல் முதலிய குற் றங்களில் என்னைச் சிறிதுஞ் செலுத்தாமல், ஓர் சிறிது அறிவு விளங்கப் புரிந்து இடந்தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், ஜெபதபஞ் செய்தல், தெய்வம்பராவல், பிறவுயிர்க்கிரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப்பணி தல், பத்திசெய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில் என்னைச் செலுத்திய 'தேவரீரது பேரருட் பெருங்கருணைத் திறத்தை' என்னென்று கருதி! என்னென்று துதிப்பேன் !!

எல்லாமானவராயும், ஒன்றுமல்லாதவராயும், எல்லா அண்ட சராசரங்களின் அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற,

தனித்தலைமைக் கடவுளே !

ஆசிரியரின்றி கல்விப் பயிற்சி

குமார பருவத்தில் என்னைக் கல்வியிற் பயிற்றும் ஆசிரியரை யின்றியே என்றரத்திற் பயின்றறிதற்கருமையாகிய கல்விப் பயிற்சியை எனதுள்ளகத்தே யிருந்து பயிற்றுவித்தருளினீர்.

தென்மொழி — தமிழ்

இடம்பத்தையும், ஆரவாரத்தையும், பிரயாசத்தையும், பெரு மறைப்பையும், போதுபோக்கையும், உண்டுபண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசைசெல்ல வொட்டாது பயிலுதற்கும், அறி தற்கும் மிகவும் லேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், சாகாக் கல்வியை லேசில் அறிவிப்பதாய்த், திரு வருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி யொன்றனிடத்தே மனம் பற்றச்செய்து அத் தென்மொழிகளாற் பலவகைத் தோத்திரப் பாட்டு களைப் பாடுவித்தருளினீர்.

பொய்யுலகாசாரம்

அச்சிறு பருவத்திற்றானே ஜாதியாசாரம், ஆசிரம ஆசாரம் என்னும் பொய்யுலகாசாரத்தைப் பொய்யென்றறிவித்து, அவைகளை யனுட்டியாமற் றடைசெய்வித்து, அப்பருவம் ஏறுந்தோறும், ஏறுந்தோ றும் எனதறிவை விளக்கஞ் செய்து செய்து என்னை மேனிலையில் ஏற்றி ஏற்றி நிலைக்க வைத்தருளினீர்.

விடய இச்சை

வாலிபப்பருவம் அடுக்குந் தருணத்திற்றானே, அப்பருவத் திற்கு மிகவும் உரிய விடய இச்சைகளைச் சிறிதுந் தலையெடுக்கவொட் டாது அடக்குவித்தருளினீர்.

மெய் அறிவு, சமய - மத - மார்க்கங்கள்

அவ்வாலிபப்பருவந் தோன்றுவதற்கு முன்னரே, எல்லா உயிர்கட்கும் இன்பந் தருவதற்கு, அகத்தும் புறத்தும் விளங்குகின்ற, அருட்பெருஞ்ஜோதி உண்மைக்கடவுள் ஒருவரேயுள்ளார் என்றறிகின்ற மெய்யறிவை விளக்குவித்தருளினீர். வாலிபப் பருவந் தோன்றியபோதே,

சைவம், வைணவம், சமணம், பவுத்தமுதலாகப் பலபெயர்கொண்டு, பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும், அச்சமயங்களிற் குறித்த சாதனங்களும், தெய்வங்களும், கதிகளும், தத்துவ சித்தி விகற்பங்களென்றும்; அவ்வச் சமயங்களிற் பலபட விரிந்த வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் முதலிய கலைகளெல்லாம் தத்துவசித்திக் கற்பனைக் கலைகளென்றும்; உள்ளபடியே எனக்கறிவித்து, அச்சமயாசாரங்களைச் சிறிதும் அனுட்டியாமற் றடைசெய்வித் தருளினீர். அன்றியும் வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபடவிரிந்த மதங்களும், மார்க்கங்களும், சுத்தசன் மார்க்கானு பவலேச சித்தி பேதங்களென் றறிவித்து; அவைகளையும் அனுட்டியாதபடி தடை செய்வித்தருளினீர்.

உண்மைப் போனுபவம்

அங்ஙனம் செய்வித்ததுமன்றி, உலகியற்கண் பொன்விஷய இச்சை, பெண்விஷய இச்சை, மண்விஷய இச்சை முதலிய எவ்விஷய இச்சைகளிலும் என்னறிவை ஓரணுத்துணையும் பற்றுவிக்காமல், எல்லா வுயிர்களையும் பொதுமையில் நோக்கி எல்லாவுயிர்களும் இன்பமடைதல் வேண்டுமென்னுங் கருணை நன்முயற்சியைப் பெறுவித்து, சுத்தசன்மார்க்கத் தனிநெறி யொன்றையே பற்றுவித்து, எக்காலத்தும் நாசமடையாத சுத்த தேகம், பிரணவதேகம், ஞானதேகம் என்னுஞ் சாகாக் கலானுபவ தேகங் களும், தன் சுதந்தரத்தால் தத்துவங்களெல்லாவற்றையும் நடத்துகின்ற தனிப் பெருவல்லபமும், கடவுளொருவரே என்றறிகின்ற உண்மை ஞானமும், கருமசித்தி, யோகசித்தி, ஞானசித்தி முதலிய எல்லாச் சித்திகளும் பெறு கின்ற, அருட்பேறும் பெற்று, வாழ்கின்ற பேரின்பப் பெருவாழ்வில் என்னை அடைவிப்பதற்குத் திருவுளங்கொண்டு அருட்பெருஞ் ஜோதியராகி, நான் எவ் விதத்தும் அறிதற்கரிய உண்மைப் பேரறிவை யறிவித்தும், நான் எவ்விதத் தும் காண்பதற்கரிய உண்மைப் பெருங்காட்சிகளைக் காட்டுவித்தும், நான் எவ்விதத்தும் செய்தற்கரிய உண்மைப் பெருஞ்செயல்களைச் செய்வித்தும், நான் எவ்விதத்தும் அடைதற்கரிய உண்மைப்பெரு நன்மைகளை அடைவித்தும், நான் எவ்விதத்தும் அனுபவித்தற்கரிய உண்மைப்பேரனு பவங்களை அனுபவிப்பித்தும், எனது அகத்தினும் புறத்தினும், இடை விடாது காத்தருளி, எனது உள்ளகத்திருந்து உயிரிற்கலந்து பெருந்தயவால் திருநடஞ் செய்தருளுகின்றீர்.

இங்ஙனம் செய்தருளுகின்ற தேவரீரது திருவருட் பெருங்கருணைத் திறத்தை என்னென்று கருதி! என்னென்று துதிப்பேன்!!

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவருட்சமுக விசேஷ விண்ணப்பமென் னும்

சமரச சுத்தசன்மார்க்க

3. சத்திய ஞானவிண்ணப்பம்

அருட்பெருஞ்ஜோதி

இயற்கை விளக்கமென்கின்ற சத்தியஞானசபைக்கண்ணே, இயற்கை யுண்மையென்கின்ற சத்தியத் திருவுருவினராய் இயற்கையின்பமென்கின்ற சத்தியத் திருநடஞ் செய்தருள் கின்ற,

இயற்கைத் தனிப்பெருங்கருணைத் தனிப்பெரும் பதியாகிய, தனித்தலைமைக் கடவுளே!

தேவரீர் திருவருட்சமுகத்தை, யடைந்த உண்மை ஞானிகளின் சித்திவல்லப தரத்தை வகுத்தறிந்து, வாழ்த்துதுமென்று அளவிகந்த முகங்களைக்கொண்டு, அளவுகடந்த நெடுங்காலம், நித்தம் அளவைகளால் தனித்தனியளந்தளந்தும், ஒருமித்தளந்தளந்தும், ஒருவாற்றினும் முடிவு தோற்றுமையின், வேதாகமங்க ளனைத்தும் ஆங்காங்குக் 1 கோடித்ததிசயிக் கின்றனவென்றுட், அண்ட சராசரங்களெல்லாவற்றையும், படைத்தல், காத் தல், துரிசுநீக்குதல் முதலிய தொழில்களால் நிகழ்த்துகின்ற அதிகாரத் தலைவர்களும், எவ்வகைத் தத்துவங்களையும், காரண காரியதிறத்தால் நடத்துகின்ற சத்தி சத்தர்களும் உணர்ந்துணர்ந்தும், உணர்ச்சி செல்லாமை யின் முயற்சிபற்றுது மயங்குகின்றனரென்றும், பேரறிவாற் சிறந்த பெரி யர்களெல்லாம் வியந்து வியந்து விளம்புகின்றனர். அதனால் "திருவருட்" சமுகத்தை யடைந்த உண்மை ஞானிகளின் சித்திவல்லப தரத்தை, ஒருவ ராலும் ஒருவாற்றானும் உணர்ந்துகொள்ளுதல் கூடாவென்று ஐயுறவின்றி அறிந்து கொண்டேன்.

1 கோடித்து என்பது - அலங்கரித்து.

இங்ஙனமறிந்துகொண்ட சிறியேன் அவ்வுண்மை ஞானிகளுக்குச் சித்தி வல்லபதாத்தைக் கொடுத்தருளிய திருவருட் சமுகத்தினியற்கையுண்மை விளக்கத் தாத்தை எங்ஙன மறியத் தொடங்குவேன்! மலத்திற் புழுத்த புழுவினுஞ் சிறியேன், பொய்பறிவாற் புனைந்துரைத்த பொய்யுரைகளையும் மெய்யுரைகளாகக் கருணையிறைக் கடைக்கணித்தருளிய,

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே!

தேவரீரது திருவருட் சமுகத்தின் இயற்கைப் 'பெருங்கருணைப்' பெருந்தன்மையைக் கருதுதற்கு விரும்பிய ஐந்தொழிற் கருத்தர் முதலியோர், தூய்மைபுடைமை, அன்புடைமை முதலிய சுபகுணங்களைக் கருதுதற்குக் கருவியாய, தமது காரணங்கள் முற்றப் பெற்றிலவென்று கருதுதலின்றி எண்ணிலியெண்ணி இரங்குகின்றனரென்று, அறிவுடைபோர் வியந்துரைத்தலைப் பலகாற் பயின்று கேட்டறிந்தேன். இங்ஙனங் கேட்டறிந்த சிறியரிற் சிறியேன், அத்திருவருட்சமுகத்தின் இயற்கைப் 'பெருங்கருணைப்' பெருந்தன்மையைக் காமம், வெகுளி முதலிய அவகுணங்கட்கெல்லாம் வைப்பிடமாகிய, பராப் முருட்டன்ன, கருங்கற் காணத்தால் எங்ஙனங் கருதத்தொடங்குவேன்! நாயிற்கடையேன் செய்த குற்றங்களையெல்லாம், குணங்களாகக் கொண்டு, என்னுள்ளகத்தே யமர்ந்து,

'உயிரிற்கலந்த பெருங்கருணைப் பெருமானே!

தேவரீரது திருவருட்சமுகத்தின் இயற்கைப் பெருந்தணப் பெரும்புகழைத் துதித்தற்கு விரும்பிய, மூர்த்திகண் முதலியோர் துதித்தற் கருவியாய தத்தஞ் செந்நாவுறுப்புகள், வாய்மைகூறல், இன்சொற்புகறல் முதலிய ஒழுக்கங்களிற் சான்றில வென்று துதித்தலின்றி அச்சுற்று நிற்கின்றனரென்று, அறிஞருரைவாசகத்தாலறிந்தேன். இங்ஙனமறிந்த கடையேன், பொய்புரைத்தல், பயனிலகூறல் முதலிய தீவைக்கட் பயின்று தடிந்த, எனது அசுத்த நாவினால் தேவரீர் திருவருட்சமுகத்தின், இயற்கைப் பெருங்கருணைப் பெரும்புகழை, எங்ஙனந் துதிக்கத் தொடங்குவேன்! அண்டபிண்ட முதலிய எல்லாவற்றிற்கு மகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற,

அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெரும்பதியாய பூரணரே!

தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கை யுண்மைத்தாத்தை அறிதல் வேண்டுமென்றும், இயற்கைப் பெருங்கருணைப் பெருந்தன்மையைக் கருதுதல்வேண்டுமென்றும், இயற்கைப் பெருங்குணப் பெரும்புகழைத் துதித்தல்வேண்டுமென்றும், எனதுள்ளகத்தே ஓவாதுறைந்தூற்றெழுந்து விரைந்து விரைந்து மேன்மேற் பெருதுகின்ற பேராசைப்

பெருவெள்ளம் அணைகடந்து செல்கின்றதாகலின், அறிவாயறிகின்ற வண்ணங்களும், கருதுவார் கருதுகின்ற வண்ணங்களும், துதிப்பார் துதிக்கின்ற வண்ணங்களும், ஆகிய எல்லாவண்ணங்களையு முடையவர் 'அருட் பெருஞ்ஜோதித் தனிப்பெருங் கடவுள்' என்ற சத்திபஞானிகளது உண்மை வாசகத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு, தன்மைசாலாத் தமியனேன் அறிதற்கும், கருதுதற்கும், துதித்தற்கும், தொடங்கினேன். இங்ஙனந் தொடங்குதற்கு முன்னர் எனதறிவிற்கும் கருத்திற்கும் நாவிற்கும் இயல்வனவாகத் தோற்றிய வண்ணங்களுள், ஒன்றேனும் ஈண்டு இயற்படத் தோற்றுமையின் 'அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெருங் கடவுளே!' தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கைவண்ணங்கள், எத்தன்மையவோ எத்தன்மையவோ வென்று உணர்ந்துணர்ந்து கருதிக்கருதி உரைத்துரைத்து அதிசயிக்கின்றவனேன். இயற்கையுண்மைத் தனிப்பெரும் பொருளாயும், இயற்கை விளக்கத் தனிப்பெரும்பதமாயும், இயற்கையின்பத் தனிப்பெருஞ் சுகமாயும், பிரிவின்றி நிறைந்த பெருந்தன்மையராய,

"அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே"!

தேவரீர் திருவருள் வலத்தால் பொறி, புலன், கரண முதலிய தத்துவங்களனைத்தையும் வென்று, நின்மலராகித் தத்துவாதீதத்தில் நின்று, தம்முண்மையுணர்ந்து, இயற்கையுணர்ச்சியைப்பெற்று, இயற்கை யுண்மைக்கண், இயற்கை யின்பானுபவஞ் செய்கின்ற, சுத்த யோகாந்தர்களும், சுத்த கலாந்தர்களும், சுத்த போதாந்தர்களும், சுத்த நாதாந்தர்களும், சுத்த வேதாந்தர்களும், சுத்த சித்தாந்தர்களுமாகிய சுத்த சன்மார்க்க ஞானிகளின் திருக்கூட்டங்களை, நன்முயற்சியாற் றனித்தனியடைந்து பத்தியாற் பணிந்து,

"அற்புதப்பெருஞ்செயல் புரிகின்ற ஐயர்களே!

அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெரும்பதியாய கடவுளின் இயற்கைத் திருவருட்சமுக மிருந்த வண்ணம் உள்ளம் உவந்துரைத்தருளல் வேண்டும்," என்று விண்ணப்பிக்குந்தோறும் எல்லாம்பொருள்கட்கும், எல்லாக் குணங்கட்கும், எல்லாச் செயல்கட்கும், எல்லாப் பயன்கட்கும், எல்லா அனுபவங்கட்கும், மற்றெல்லாவற்றிற்கும், உரு, சொரூப, சுபாவ முதலிய இலக்கணங்கள், அனைத்தும் தாமேயாகியும், தாமல்லராகியும், தாக்கியும், தாக்கற்றும், அகத்தும், அகப்புறத்தும், புறத்தும், புறப்புறத்தும், நீக்கமின்றி, நிறைந்து, விளங்குகின்ற, இயற்கை உண்மைக் கடவுளது, இயற்கைத் திருவருட் சமுக மிருந்தவண்ணம்,

அந்தோ! அந்தோ!! எங்ஙனமறிவோம்! எவ்வாறு கருதுவோம்!! என் னென்று கூறுவோம்!!! என்று அவ்வக் கூட்டங்களினுந் தனித்தனி உரைத்துரைத்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, நெட்டுயிர்க்கின்றார்களென்றும்;

எல்லாத் தத்துவங்களையும் எல்லாத் தத்துவிகளையுந் தோற்று வித்தலும், இயக்குவித்தலும், அடக்குவித்தலும், மயக்குவித்தலும், தெளிவித்தலுமாகிய தொழில்களை, எளிதிற் கொடுத்தற்குரிய பூரண சுதந்தரத் தவர்களாய், இயற்கைச் சத்தியஞான சுகானுபவ பூரண சொரூப சாத்தியர்களாய், எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், தடைபடாத, நித்திய, சுத்த, சத்த, ஞான, தேகிகளாய்ப் பூதசித்தி, கரண சித்தி, இந்திரியசித்தி, குணசித்தி, பிரகிருதிசித்தி, காலசித்தி, கலாசித்தி, புருடசித்தி, வித்துசித்தி, பரசித்தி, சுத்தசித்தி, விசுவசித்தி, வியோமசித்தி, பிரமசித்தி, சிவசித்தி முதலிய பிண்டசித்தி, அண்ட சித்தி, பகிரண்டசித்தி, அண்டாண்டசித்தி, என்கின்ற அந்தரங்க, பகி ரங்க, தத்துவ, தத்துவி சித்திகளெல்லாவற்றையும், திருக்கடைக் கணிப் பாற் செய்ய வல்லவராய்ப், ஷடாந்த சமரச சத்தியராய் விளங்குகின்ற சமரச சுத்தசன்மார்க்க ஞானிகளது, சித்விலாசத் திருச் சபைக்கண்ணே, புண்ணியவசத்தாற் புகுதப்பெற்று, மனங்கனிந்து வணங்கி நின்று "சர்வ சுதந்தரராய சத்தியர்களே!

இயற்கையுண்மைத் தனிப்பெரும் பதியாகிய கடவுளின் இயற்கைத் திருவருட் சமுக மிருத்தவண்ணம் திருவுளம் பற்றித் திரு வாய்மலர்ந்து திருவார்த்தை யளித்தருளல் வேண்டும்" என்று விண்ணப் பிக்குந்தோறும், திருவார்த்தை யளித்தலின்றிப் பெருங் கருணைத் திருக் கண்களில் ஆனந்தநீர் பொழிந்து சுட்மாவிருக்கின்றனரென்றும்; உணர்ந் தோர் வியந்துரைப்பக் கேள்வியுற்று இயற்கைத் திருவருட்சமுக மிருத்த வண்ணம் என்னையோ! என்னையோ!! வென்று குலாவிக்குலாவிக் கூவு கின்றவனானேன்.

அடிநிலைக் கரும ஞானசித்தி யனுபவங்களினும், முடிநிலைக் கரும ஞானசித்தி யனுபவங்களினும், அடிநிலையோக ஞானசித்தி யனு பவங்களினும், முடிநிலையோக ஞானசித்தி யனுபவங்களினும், அடிநிலைத் தத்துவ ஞானசித்தி யனுபவங்களினும், முடிநிலைத் தத்துவ ஞானசித்தி யனுபவங்களினும், அடிநிலை ஆன்ம ஞானசித்தி யனுபவங்களினும், முடி நிலை ஆன்ம ஞானசித்தி யனுபவங்களினும், சுத்தஞான சித்தி யனுபவங் களினும், சமரச சுத்த ஞானசித்தி யனுபவங்களினும், அதுவதுவாகி நிறைந்தும், அதுவதுவாகி விளங்கியும், அதுவதுவாகி யினித்தும், ஆங் காங்கு அதீதமாகிக் கலந்தும், இவை யனைத்துமாகி ஒருமித்தும், அதீ தாதீதமாகித் தனித்தும், வயங்குகின்ற,

பெருங்கருணைப் பெரும்பதியாய கடவுளே !

எல்லாச் சத்திகளுக்கும், எல்லாச் சத்தர்களுக்கும், எல்லா மூர்த்திகளுக்கும், எல்லா மூர்த்தர்களுக்கும், எல்லாத் தேவிகளுக்கும், எல்லாத் தேவர்களுக்குப், எல்லாச் சாதனர்களுக்கும், எல்லாச் சாத்தியர் களுக்குர், எல்லா வுபிர்களுக்கும், எல்லாத் தத்துவங்களுக்கும், எல்லாப் பொருள்களுக்கும், எல்லாக் குணங்களுக்கும், எல்லாச் செயல் களுக்கும், எல்லா அனுபவங்களுக்கும், மற்றெல்லாவற்றிற்கும் முதற் காரணமாயும், நிமித்த காரணமாயும், துணைக்காரணமாயும், இவையல்ல வாயும் விளங்குகின்ற "திருவருட்சமுக மிருந்தவண்ணம்" அறிந்து கொள்ளுத லிங்ஙனமாலுல், "திருவருட்சமுகப் பெருங்கணைப் பெரும்பதி யாய தேவரீர்" இயற்கைத் திருவண்ணமறிதல் எங்ஙனமோ ! எங்ஙனமோ !!

ஓ ! ஒப்புயர்வின்றி விளங்குகின்ற ஒருவரே !

தேவரீர் திருவண்ணமும், திருவருட்சமுகத் திருவண்ணமும், அறிதற்கும், கருதுதற்கும், துதித்தற்கும், எத்திறத்தானும் கூடாவா யினும் அடிமையளவிற் கியன்றபடி அறியாதறிந்தும், கருதாது கருதி யும், துதியாது துதித்தும், எனது உரிமையை ஊற்றஞ் செய்கின்ற வனேனன். வந்தனம் ! வந்தனம். !!

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

சமரச சுத்தசன்மார்க்க சங்க

4. சத்திய விண்ணப்பம்

அருட்பெருஞ்ஜோதி

இயற்கை யுண்மையரென்றும், இயற்கை யறிவினரென்றும், இயற்கை யின்பினரென்றும், நிர்க்குணரென்றும், சிற்குண ரென்றும், நித்தியரென்றும், சத்தியரென்றும், ஏகரென்றும், அநேகரென்றும், ஆதியரென்றும், அநாதியரென்றும், அமல ரென்றும், அருட்பெருஞ் ஜோதியரென்றும், அற்புதரென்றும், நிரதிசயரென்றும், எல்லா மானவரென்றும், எல்லாம் முடையவரென்றும், எல்லாம் வல்லவரென் றும், குறிக்கப்படுதன் முதலிய, அளவுகடந்த திருக்குறிப்புத் திருவார்த்தை களால், சுத்த சன்மார்க்க ஞானிகள் துதித்தும், நினைத்தும், உணர்ந்தும், புணர்ந்தும், அனுபவிக்க விளங்குகின்ற,

"தனித்தலைமைப் பெரும்பதியாகிய பெருங்கருணைக் கடவுளே!

தேவரீர் திருவருட் சமுகத்தில் தாழ்ம்பினுஞ் சிறியேமாகிய யாங்கள், சிற்றறிவாற் செய்துகொள்ளுஞ் சிறுவிண்ணப்பங்களைத், திருச் செவிக்கு எற்பித்தருளி எங்களை இரக்ஷித்தருளல் வேண்டும்.

எல்லாச் சத்திகளும், எல்லாச் சத்தர்களும், எல்லாத் தலைவர் களும் அறிந்துகொள்ளுதற்கு மிகவும் அரியதாய், எல்லாத் தத்துவங்க ளுக்கும், எல்லாத் தத்துவிகளுக்கும், அப்பாலப்பாலாய் விளங்கும் ஓர் சுத்த ஞானவெளியில், தமக்கு ஒருவிதத்தாலும் ஒப்புயர்வு சிறிதுங் குறிக்கப்படாத "தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ் ஜோதியராகி விளங் குகின்ற தேவரீரது தனிப்பெருந்தன்மைக்கு" மெய்யறிவுடையோரால் விதிக்கப்பட்ட வேதாகமங்களும், பெருந்தகை வாசகத்தைப் பெறுது சிறுதகை வாசகங்களைப் பெற்றுத் திகைப்படைகின்றனவென்றால், மலத் திற் புழுத்த புழுவினுஞ் சிறியேமாகிய யாங்கள், திருச்சமுகத்தில் விண்ணப்பித்தற்குரிய பெருந்தகை வாசகத்தை எவ்வாறறிவோம்! எங்ங னஞ்செய்வோம்!! ஆகலின்,

'கருணைநிதியாகிய கடவுளே'!

யாங்கள் விண்ணப்பிக்கின்ற அற்பவாசகத்தில், உரிமை நோக்காது அங்கிகரித்தருளி எங்களைக் காத்தருளல் வேண்டும்.

தாயினுஞ்சிறந்த தயவுடைக் கடவுளே !

இயற்கையே, அஞ்ஞான இருளில், அஞ்ஞான உருவில், அஞ்ஞானிகளாய், அஞ்ஞானத்திற் பயின்று, ஏதுந் தெரியாது கிடந்த, எங்களைத் 'தேவரீர் பெருங்கருணையால்' பவுதிக வுடம்பிற், சிறிது அறிவு தோற்றுவித்து விடுத்த, அஞ்ஞான்று தொட்டு இஞ்ஞான்றுவரையும், அதுகொண்டு அறிவே வடிவாய், அறிவே உருவாய், அறிவே பொறியாய், அறிவே மனமாய், அறிவே அறிவாய், அறிவே அனுபவமாய், அனுபவிக்கத் தெரிந்து கொள்ளாது ; குற்றமே வடிவாய்க், குற்றமே வுருவாய்க், குற்றமே பொறியாய்க், குற்றமே மனமாய்க், குற்றமே அறிவாய்க், குற்றமே யனுபவமாய் அனுபவிக்கின்ற சிறியேங்கள், திருச்சமுகத்தில் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பமும், குற்றமே வடிவாய்க், குற்றமே குறிக்குமென்று அறிந்தேமாயினும், குற்றங் குறியாதவகை விண்ணப்பஞ் செய்தற்கு, ஒருவாற்றானும் உணர்ச்சியில்லோம். ஆகலின், துணிவுகொண்டு விண்ணப்பிக்கின்றோம். குற்றங்களையே குணங்களாகக கொள்ளுதல் "தேவரீர் திருவருட் பெருமைக்கு" இயற்கையாதலின், இவ்விண்ணப்பங்களிற் குற்றங் குறியாது கடைக் கணித்தருளிக் கருணைசெய்தல் வேண்டும்.

அஞ்ஞான இருளில் ஒன்றுந் தெரியாது உணர்ச்சியின்றிக் கிடந்த காலம் போக, அவ்விருளைவிட்டு நீங்கியகாலத்தே, இவ்வுலகினிடத்து, புல், நெல், மரம், செடி பூண்டு முதலியவாகவும், கல், மலை, குன்று முதலியவாகவும், பிறந்து பிறந்து, களையுண்டல், அறுப்புண்டல், வெட்டுண்டல், கிள்ளுண்டல், உலர்ப்புண்டல், உடைப்புண்டல், வெடிப்புண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்திறந்து, அத்தாபர யோனிவர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று, அலுப்படைந்தேம்.

பின்னர், எறும்பு, செல், புழு, பாம்பு, உடும்பு, பல்லி முதலியவாகவும்; தவளை, சிறுமீன், முதலை, சுறா, திமிங்கில முதலியவாகவும், பிறந்து பிறந்து, தேய்ப்புண்டல், நசுக்குண்டல், அடியுண்டல், பிடியுண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்திறந்து, அவ்வூர்வன, நீர்வாழ்வன, யோனிவர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று, அலுப்படைந்தேம்.

பின்னர், ஈ, வண்டு, தும்பி, குருவி, காக்கை, பருந்து, கழுகு முதலியவாகப் பிறந்து பிறந்து; அடியுண்டல், பிடியுண்டல், அலைப்புண்டல்,

உலைப்புண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்திறந்து, அப் பறவை யோனிவர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று, அலுப்படைந்தேம்.

பின்னர், அணில், குரங்கு, நாய், பன்றி, பூனை, ஆடு, மாடு, யானை, குதிரை, புலி, கரடி முதலியவாகப் பிறந்து பிறந்து; பிடியுண்டல், அடியுண்டல், குத்துண்டல், வெட்டுண்டல், தாக்குண்டல், கட்டுண்டல், தட்டுண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்திறந்து, அவ்விலங்கு யோனிவர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று, அலுப்படைந்தேம்.

பின்னர், பசாசர், பூதர், இராக்கதர், அசுரர், சுரர் முதலியராகப் பிறந்து பிறந்து; அலைப்படுதல், அகப்படுதல், அகங்கரித்தல், அதிகரித்தல், மறந்துநிற்றல், நினைந்துநிற்றல், மயக்குறுதல், திகைப்புறுதல், போரிடுதல், கொலைப்படுதல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்திறந்து, அத்தேவ யோனிவர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று, உழன்று உழன்று, அலுப்படைந்தேம்.

பின்னர், காட்டகத்தார், காவுசெய்வார், கொலைசெய்வார் முதலியராகப் பிறந்து பிறந்து, பயப்படல், சிறைப்படல், சிதைப்படல் முதலிய அவத்தைகளால் இறந்திறந்து, அந்தரக யோனிவர்க்கங்க ளெல்லாஞ்சென்று சென்று, உழன்றுழன்று அலுப்படைந்தேம். அங்ஙனம் யாங்கள் அப் பிறவிகள் தோறும், அடைந்த அலுப்பும், அச்சமும், அவலமும், கலைப்பும், துன்பமுந் திருவுளத்தடைத்து இரங்கியருளி, அழியாப் பெருவாழ்வைப் பெறுதற்குரிய உயரறிவுடைய இம்மனிததேகத்திற் செலுத்தி யருளிய, தேவரீரது பெருங்கருணைக்கு யாங்கள் செய்யும் கைம்மாறு, ஒன்றுந் தெரிந் தோமில்லை. உயிர்களின் அகத்தும், புறத்தும், அகப்புறத்தும், புறப்புறத் தும், நீக்கமின்றி, நிறைந்து, விளங்குகின்ற,

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே !

இம்மனித தேகத்திற் செலுத்திய காலத்தும், தாய்வயற்றிலும், சிசு பருவத்திலும், குமார பருவத்திலும், பல்வேறு அவத்தைகளால் அறிவின்றி யிருந்தேம். ஆகலின் 'தேவரீர் பெருங்கருணைத்திறத்தை' அறிந்து கொள்ளாமல் வீண்போது கழித்தேம். அப்பருவங் கழிய இப் பருவத்தினிடத்தே, எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும், எல்லாப் பொருள்களையும், மற்றை எல்லாவற்றையும், தோற்று வித்தும், விளக்கஞ் செய்வித்தும், துரிசு நீக்குவித்தும், பக்குவம் வருவித் தும், பலந் தருவித்தும், எங்கும் 'பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும்,' அக்கடவுள உண்மையன்பால் கருத்தில் கருதி

வழிபாடு செய்யின், 'அக்கடவுள் திருவருள்' நமது கருத்தின்கண் வெளிப் பட்டு விளங்குமென்றும், அத்திருவருள விளக்கத்தால், மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும், தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை, அடைதல் கூடுமென்றும், எங்களறிவில் தேவரீர் திருவருளால் உண்மைப்பட உணர்த்தி அருளப்பெற்றோம். அவ் வுணர்ச்சியைப் பெற்றது தொடங்கிக் "கடவுள் வழிபாடு எஞ்ஞான்று செய் வோம்? கடவுள் திருவருள் விளக்கம் எந்நாளடைவோம்? மரணம், பிணி, மூப்பு, முதலிய அவத்தைகள் எப்போது நீங்கும்? என்றும் அழியாத பேரின்ப சித்தி எக்காலங்கிடைக்கும்?" என்று எண்ணியெண்ணி, வழிதுணை தெரியா மல் வருந்தின்ற தருணத்தில,

கலைப்பறிந் துதவும் கருணைக்கடலாகிய கடவுளே !

தேவரீர், நெடுங்காலம் மரண முதலாகிய அவத்தைகளால், துன்ப முற்றுக் கலைப்படைந்த எங்களை அவ் வவத்தைகளினின்றும் நீக்கிக், கலைப்பும் கலக்கமுந் தவிர்த்து, அழியாத பேரின்பசித்தியை அடைவித்தற் பொருட்டாகவே, பூர்வஞானசிதம்பரத்தின் வடபால் பார்வதிபுரமென்று குறிக் கப்படுகின்ற உத்தரஞான சித்திபுரத்தில், யாம் அளவுகடந்த நெடுங்காலஞ் சித்தியெலாம் விளங்கத் திருவருள் நடஞ் செய்வாமென்றும், அது தருணம் மிகவும் அடுத்த சமீபித்த தருணமென்றும், அப்பதியினிடத்தில, யாம் அருள் நடம் புரிதற்கு அடையாளமாக ஓர் ஞானசபை காணுதல் வேண்டுமென் றுப, திருவருட்குறிப்பால் அறிவித்தது மன்றி, அருளுருவாகி எங்களகத் தும் புறத்தும் அமர்ந்தருளி, யாதோர் தடைகளுமின்றி அத்திருஞான சபையும் தோன்றி விளங்கச் செய்வித்தருளிய, தேவரீர் பெருங்கருணையைக் கருதுந்தோறும் பெருங்களிப்படைகின்றோம். இனி அத்திருஞானசபையை அலங்கரித்தல் வேண்டுமெனக் குறிபபித்த வண்ணம் அலங்கரிக்கத் தொடங்குகின்றோம்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே !

தேவரீர் அருளுருவாகி எங்களகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாங்கள் செய்யும் இவ்வலங்காரத் திருப்பணியில் எவ்விதத்தாலும் யாதொரு தடையும் வாராதவண்ணம் செய்வித்து, அவ்வலங்காரத் திருப் பணியை முற்றுவித்தருளல் வேண்டும்.

சர்வ வல்லபராகிய தனித்தலைமைக் கடவுளே !

அத்திருவலங்காரத் திருப்பணி முற்றிய தருணத்தில தேவரீர் அமர்ந்தருளி அற்புதத் திருவருள் விளக்கத்தால் எங்களையும்; இவ்வுல கில் இத்தேகத்தைப்பெற்ற மற்றவர்களையும் உண்மையடியார்களாக்கி,

உண்மையறிவை விளக்கி, உண்மையின்பத்தை யளித்துச் சமரச சுத்த சன்மார்க்க நிலையில் வைத்துச் சத்தியவாழ்வை யடைவித்து, நித்தியர் களாக்கி, வாழ்வித்தல் வேண்டும்.

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே!

இதுதொடங்கி எக்காலத்தும் சுத்தசன்மார்க்கத்தின் முக்கி யத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள், என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும்; வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களுமட்; எங்கள் மனத்திற் பற்றுதவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய ஆன்ம நேய ஒருமைப் பாட்டுரிமை, எங்களுக்குள், எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும், விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.

எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை
அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே!
தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம்! வந்தனம்!!
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

வள்ளலார் திருக்காப்பிட்டுக்கொண்ட தினம் வெளியிட்ட

5. அற்புதப் பத்திரிகை

அருட்பெருஞ்ஜோதி

உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும்
அருமையாகிய மனிததேகத்தைப்
பெற்ற நண்பர்களே !

அறிவுவந்த காலமுதல், அறிந்தறியாத அற்புத அறிவுகளையும், அடைந்தறியாத அற்புத குணங்களையும், கேட்டறியாத அற்புதக் கேள்விகளையும், செய்தறியாத அற்புதச்செபல்களையும், கண்டறியாத அற்புதக் காட்சிகளையும், அனுபவித்தறியாத அற்புத அனுபவங்களையும், இது தருணந் தொடங்கிக் கிடைக்கப் பெறுகின்றேனென்று உணருகின்ற ஓர் சத்திய வுணர்ச்சியாற் பெருங் களிப்புடையேனாகியிருக்கின்றேன்.

நீவிர்களும், அவ்வாறு பெற்றுப் பெருங்களிப்பு அடைதல் வேண்டுமென்று, எனக்குள்ளே நின்று, நிறைந்து எழுந்து வெளிப்பட்ட எனது சுத்தசன்மார்க்க லக்ஷிய மாகிய, ஆன்மநேய வொருமைப்பாட்டுரிமைப் போராசை பற்றியே இதனைத் தெரிவிக்கிறேன்.

இயற்கையிற் ருனே விளங்குகின்றவரா புள்ளவ ரென்றும், இயற்கையிற்ருனே புள்ளவாய் விளங்குகின்றவரென்றும், இரண்டுபடாத பூரண இன்பமானவரென்றும், எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லாப் பதங்களையும், எல்லாச்சத்திகளையும், எல்லாச் சத்தர்

களையும், எல்லாக் கலைகளையும், எல்லாப்பொருள்களையும், எல்லாத்தத்துவங்களையும், எல்லாத்தத்துவிகளையும், எல்லாவுயிர்களையும், எல்லாச்செயல்களையும், எல்லா இச்சைகளையும், வல்லா ஞானங்களையும், எல்லாப் பயன்களையும், எல்லா அனுபவங்களையும், மற்றெல்லாவற்றையும் தமது திருவருட்சத்தியால், தோற்றுவித்தல், வாழ்வித்தல், குற்றம் நீக்குவித்தல், பக்குவம் வருவித்தல், விளக்கஞ்செய்வித்தல் முதலிய பெருங்கருணைப் பெருந்தொழில்களையியற்றுவிக்கின்றவரென்றும், எல்லாமானவரென்றும், ஒன்றுமல்லாதவ ரென்றும், சர்வகாருணியரென்றும், சர்வவல்லரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்புயர்வில்லாத் தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதியரென்றும், சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே அகம் புற முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்த மெய்யறிவென்னும் பூரணப்பொதுவெளியில், அறிவாரறியும் வண்ணங்களெல்லாமாகி விளங்குகின்றார்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரேயாகிய கடவுளை, இவ்வுலகினிடத்தே ஜீவர்கள் அறிந்து அன்புசெய்து, அருளை யடைந்து, அழிவில்லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்றுவாழாமல், பலவேறு கற்பனைகளாற் பலவேறு சமயங்களிலும், பலவேறு மதங்களிலும், பலவேறு மார்க்கங்களிலுப், பலவேறு லக்ஷியங்களைக்கொண்டு நெடுங்காலமும் பிறந்து பிறந்து அவத்தைவசத்தர்களாகிச் சிற்றறிவுமின்றி விரைந்து விரைந்து பலவேறு ஆபத்துகளினால் துன்பத்தில் அழுந்தி இறந்திறந்து வீண்போகின்றார்கள்.

இனி இச்சீவர்கள் விரைந்து விரைந்து, இறந்து இறந்து, வீண்போகாமல், உண்மைபறிவு, உண்மையன்பு, உண்மைஇரக்கம் முதலிய சுபகுணங்களைப்பெற்று, நற்செய்கையுடையராய், எல்லாச்சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும், உண்மைப்பொது நெறியாகி விளங்குஞ் சுத்தசன்மார்க்கத்தைப்பெற்றுப், பேரின்ப சித்திப் பெருவாழ்வில் பெருஞ்சுகத்தையும் பெருங்களிப்பையும் அடைந்து வாழும் பொருட்டு மேற்குறித்த உண்மைக் கடவுள், தாமே திருவுள்ளங் கொண்டு சுத்தசன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய உண்மை விளக்கஞ் செய்கின்ற ஓர் ஞானசபையை இங்கே தமது திருவருட் சம்மதத்தாலியற்றுவித்து, "இக்காலந் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங்காலம், அளவுகுறிக்கப்படாத அற்புத சித்திகளெல்லாம் விளங்க, யாமே அமர்ந்துவிளையாடுகின்றும்" என்னுந் திருக்குறிப்பை வெளிப்படுத்தி, அருட்பெருஞ்ஜோதியராய் வீற்றிருக்கின்றார். ஆகலின் அடியிற்குறித்த தருணந்தொடங்கி வந்து

வந்து, தரிசிக்கப் பெறுவீர்களாயிற் கருதியவண்ணம் பெற்றுக் களிப் படைவதுமன்றி, இறந்தவர் உயிர்பெற்றெழுதல், மூப்பினர் இளமையைப் பெற்றுநிற்றல், முதலிய பலவகை அற்புதங்களைக்கண்டு பெருங்களிப்பும் அடைவீர்கள்.

சென்னபட்டணம் இராஜதானியைச்
சார்ந்த கூடலூர் ஜில்லா, ஷை தாலூகா
பார்வதிபுரம் அல்லது வடலூர்.
ஸ்ரீமுகவரு தைமீ 19உ சுக்ரவாரம்
பௌர்ணமி புனர்பூச நக்ஷத்திரம்.
1873.

திருமயம்

சிவசிவ

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

6. உண்மைப் பத்தினை

அருட்பெருஞ்ஜோதி

சுத்தசிவ சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்தும் வழங்கும். இதற்கு எவ்விதப்பட்ட தடைகளும் இல்லை. தடையற்ற பெருநெறி வழக்கம் இக்காலந் தொட்டு, அளவிறந்த நெடுங்காலம் வரையில் வழங்கும். அதன் மேன் மேலும் வழங்கும்.

பலவகைப்பட்ட சமய பேதங்களும், சாத்திர பேதங்களும், ஜாதி பேதங்களும், ஆசார பேதங்களும், போய் சுத்த சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம் விளங்கும். அது கடவுள் சம்மதம். இது 29 வருஷத்திற்குமேல்.

இப்போது வருகிற நமது கடவுள் இதற்குமுன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட ஏற் பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுள், தேவர், அடியார், யோகி, ஞானி, முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லாத் தேவர்களும், எல்லாக் கடவுளரும், எல்லாத் தலை வர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தாங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்ற தனித் தலைமைப் பெரும்பதி.

இது உண்மையாயின், அந்தப் பதியின் அருளை நான் பெறுவேன் ! பெறுகின்றேன் !! பெற்றேன் !!! என்னை அடுத்தவர்களும், பெறுதற்கு, யாதொரு தடையுமில்லை, பெறுவீர்கள் ! பெறுகின்றீர்கள் !! பெற்றீர்கள் !!! அஞ்சவேண்டாம் !

பிரஜோத்பத்தி வரு
சித்திரைமீ 1உ
சித்திவளாகம்
1872

சிதம்பரம்
ராமலிங்கம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

7. சமரசவேத பாடசாலை

அருட்பெருஞ்ஜோதி

இதில் வாசிக்க விருப்புகின்றவர்கள் பதினைந்து வயதிற்கு மேற்பட்டவர்களாகி நல்லறிவு, கடவுள் பத்தி, உயிரிரக்கம், பொது நோக்கம், திரிகரணவடக்கம் முதலிய நற்குணவொழுக்கங்களையும்; உண்மையுரைத்தல், இன்சொல்லாடல், உயிர்க்குபகரித்தல் முதலிய நற்செய்கையொழுக்கங்களையும்; பெற்று சுத்தசன்மார்க்கத்திற் குரியவர்களாயிருத்தல் வேண்டும்.

இதில் வாசிக்கின்றவர்களுக்கு, சிலகாலம் வாசித்து ஒருவாறு வாசிப்பிற் பயிற்சி கரிட்டால், அந்தப் பயிற்சிக்கும் அவரவர்கள் குடும்பத்திற்கும் தக்கபடி மாதந்தோறும் பொருளுதவி செய்யப்படும். காலை மாலை சுமார் ஐந்தைந்து நாழிகை வாசித்தல் வேண்டும்.

சித்திவளாகம்,
பிரமோதூத-வரு
மார்கழிமீ 21உ
1871

இப்படி,

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

ஞானசபை

8. விளக்கப் பத்திரிகை

அருட்பெருஞ்ஜோதி

அன்புடைய நம்மவர்களுக்கு வந்தனம்!

இன்றுதொடங்கி, சபைக்கு சமரச சுத்தசன்மார்க்க சத்திய ஞானசபை பென்றும், சாலைக்கு சமரச சுத்தசன்மார்க்க சத்திய தருமச்சாலை யென்றும், சங்கத்திற்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க மென்றும், பெயர் வழங்குதல் வேண்டும்.

இன்றுதொடங்கி, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரது அருட் பெருஞ்சித்தி வெளிப்படும் வரைக்கும், ஞானசபைக்குள்ளே தகரக் கண்ணாடி விளக்கு வைத்தல் வேண்டும். பித்தளை முதலியவற்றால் செய்த குத்துவிளக்கு வேண்டாம். மேலேற்றுகிற குளோப்பு முதலிய விளக்குகளும் வேண்டாம். தகரக்கண்ணாடி விளக்கு வைக்குங்காலத்தில் தகுதியுள்ள நம்மவர்கள் தேகசுத்தி, சரணசுத்தி உடையவர்களாய் திரு வாயிற் படிப்புறத்தி லிருந்துகொண்டு விளக்கேற்றி பன்னிரண்டு வயதுக் குட்பட்ட சிறுவர்கையில் கொடுத்தாவது, எழுபத்திரண்டு வயதிற்கு மேற்பட்ட பெரியர்கையில் கொடுத்தாவது, உட்புற வாயில்களுக்குச் சமீபங்களில் வைத்துவரச் செய்விக்கவேண்டும்.

நாலு காளைக்கொருவிதை காலையில், மேற்குறித்த சிறியரைக் கொண்டாயினும், பெரியரைக் கொண்டாயினும், உள்ளே தூசு துடைப் பிக்கவேண்டும். தூசு துடைப்பிக்கப் புகும்போது நீராடிச், சுத்ததகத் தோடு கால்களில் வத்திரம் சுற்றிக்கொண்டு புகுந்து, மூட்டிக்காலிட்டுக் கொண்டு, தூசு துடைக்கச் செய்விக்க வேண்டும். விளக்கு வைக்கின்ற போதும் இங்ஙனமே செய்விக்க வேண்டும்.

விளக்கு வைத்தற்கும் தூசு துடைத்தற்கும் தொடங்குகின்ற பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவரும் எழுபத்திரண்டு வயதுக்கு மேற்பட்ட பெரியரும், பொருள், இடம், போகம், முதலியவற்றில்

இச்சை சிறிதும் இல்லாதவர்களாய், தெய்வ நினைப்புள்ளவர்களாய், அன்புடையவர்களா யிருத்தல் வேண்டும். விளக்கு வைக்கும்போதும், தூசு துடைக்கும்போதும், நம்மவர்களில் சேர்ந்தவர்கள், புறத்தில் நின்று பரிசுத்தராய் மெல்லெனத் துதிசெய்தல் வேண்டும். யாரும் யாதொரு காரியங்குறித்தும் தற்காலம் உள்ளே புகுதல்கூடாது. ஞானசபைத் திறவுகோல் ஒருவர் கையிலும் வெளிப்பட இருத்தல்கூடாது. அத்திறவுகோலை வேறொரு பெட்டிக்குள்வைத்து அப்பெட்டியைப் பூட்டி பொற்சபைக்குள் வைத்து, அப்பெட்டித் திறவுகோலை ஆஸ்தான காவலுத்தரவாதியாயிருக்கின்றவர் கையில், ஒப்புவித்தல்வேண்டும்.

தொடர்ச்சி, காலம்நேர்ந்த தருணம் எழுதுகிறேன்.

இப்படி,

ஆங்கிரசவரு
ஆடிமீ 5உ
1873



அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகை

9. சத்திய ஞானதீப விளக்கத்தைப்பற்றிய வள்ளற்பெருமான் திருநெறிக் குறிப்புகள்.

அருட்பெருஞ்ஜோதி

ஸ்ரீ முகவரு கார்த்திகைமீ புனர்ப்பூச நட்சத்திரத்தில் உள்ளிருந்த விளக்கைத் திருமாளிகைப் புறத்தில்வைத்துத் "தடைபடாது ஆராதியுங்கள்."

இந்தக்கதவு சாத்திவிடப்போகிறோம், இனி கொஞ்சகாலம் எல்லோரும்,

ஆண்டவர் இப்போது தீபமுன்னிலையில் விளங்குகிறபடியால், உங்களுடைய காலத்தைவீணிற்கழிக்காமல்,

நினைந்துநினைந்து உணர்ந்துணர்ந்து தெளிந்துதெளிந்து அன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீரதனு ளுடம்பு
நனைந்துநனைந் தருளமுத கன்னிதியே ஞான
நடத்தரசே யென்னுரிமை நாயகனே யென்று
வணைந்துவணைந் தேத்துதுநாம் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்மூர்
புனைந்துரைபேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண மிதுவே.

என்னும் 23-பாசுரங்களடங்கிய பாடலிற்கண்டபடி, தெய்வ பாவனைபை இத்ததீபத்தில் செய்யுங்கள். நாமிப்போது இந்த உடம்பிலிருக்கிறோம், இனி எல்லா உடம்பிலும் புகுந்துகொள்வோம்.

ஸ்ரீ முகவரு ஐதமீ வள்ளலார் திருக்காப்பிட்டுக்கொள்ளுந் தருணம் வெளியிட்டவை.

நாம் உள்ளே பத்துப்பதினைந்து தினமிருக்கப்போகிறோம். பார்த்து அவசரம்பிக்கையடையாதீர்கள். ஒருகால் பார்க்கநேர்ந்து பார்த்தால்

யாருக்குந்தோன்றுது வெறுவீடாகத்தானிருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக்காட்டிக்கொடார். சுத்தபிரணவஞான தேகத்துடன் வெளிப்படுவோம். நாம் திருக்கதவை மூடியிருக்குங்கால் அதிகாரிகள் திறக்கும்படி ஆக்ஞாபிக்கின் ஆண்டவர் அருள்செய்வார்.

ஸ்ரீமுகவரு
தைமீ 19உ
1873.

ஞானசித்தி

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

சித்திவளாகத்திலும் தருமச்சாலையிலும் வசிப்பவர்கள் பரஸ்பரம் பழகுவதற்கு

10. எச்சரிப்புப் பத்திரிகை

அருட்பெருஞ்ஜோதி

அண்டவர் ஒருவர் உள்ளாரென்றும், அவர் பொதுப்பட உலகத்துள்ளார் யாவரும் சன் மார்க்கப் பெரும்பயன்பெற்று, நித்தியவாழ்வு வாழ்தற்பொருட்டு வெளிப்படக் காரியப்படுகின்றனர் என் றும், அதுகாலையில் நாமும் ஆன்ம லாபத்தைப் பெற்றுக் கொள்ளுவோமெனவும் நம்பி, இங்கே வசிக்கும் யாவரும் வழிபாடு விஷயத்தில் ஒருதடையும் சொல்லாது ஒத்து இருத்தல் அவசியம். அன்றியும், காலபேதத்தால அல்லது மற்ற வகையால் அவ்வத்தருணங்களில் நேரிடும் குரோதத் தால் விளையும் துவேஷாதிகள் உண்டாலுலும், அல்லது உண்டாகிறதா யிருந்தாலும், உடனே ஜாக்கிரதைப்பட்டு அதை முற்றிலும் மறந்துவிடல் வேண்டும். அப்படியிருத் தல் மேல்விளைவு உண்டுபண்ணு திருக்கும். அப்படி இனி மேல், ஒருவரை யொருவர் அதிக்கிரமித்த வார்த்தைகளால் சண்டை விளையத்தக்கதாக வைதாலும், அப்படி வைதவர் களையும் அந்தவைதலைக்கேட்டு சகிப்பவர்களோடு, மறுத்த படி அத்துவேஷத்தை ஒருங்கேவிட்டு மறந்து மனக்கலப் புடன் மருவுதல் வேண்டுவது. அப்படி மருவாதவர்களை யும, உடனே ஒதுக்கிவிடவேண்டுவது. அல்லது குரோ தத்தால் விளையும் அக்கிரம அதிக்கிரம வார்த்தைகளைக்

கேட்டுத் தாங்கள் எதிர்த்து வார்த்தையாடாமல் கூட்டத்தாரில் அப்போது இருக்கவாய்ந்த இரண்டொருவருக்குத் தெரிவித்தல் வேண்டும். அப்படி தெரிவிக்காதவர்களும் எதிர்த்துச் சண்டை தொடுப்பவர்களும் இங்கிருத்தல் அவைசியம். அப்படிப்பட்டவர்களை ஒரு பேசசுமில்லாமல், இந்த இடம் விட்டுப் போய்விடத்தக்க முயற்சி ஒவ்வொருவரும் செய்தல் வேண்டுவது.

இப்படி,

ஆங்கிரசவரு
கார்த்திகைமீ 12உ
1873.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

சமாதி

11. வற்புறுத்தும் பத்திரிகை

(சாலை சம்பந்தம் உடையவர்களுக்கு மாத்திரம்.)

அருட்பெருஞ்ஜோதி

அன்புள்ள நீங்கள் சமரசவேத சன்மார்க்க சங்கத் தருமச் சாலைக்கு மிகவும் உரிமையுடையீர்களாயின் உங்களுக்கு உண்மையுடன் அறிவிப்பது.

நீங்களும் உங்களை அடுத்தவர்களும் சிற்றம்பலத் தந்தையார் திருவருளால் சுகமாக வாழ்வீர்களாக.

கர்மகால முதலிய பேதங்களால், யார்க்காயினும் தேக ஆனி கேரிட்டால் 1 தகனஞ் செய்யாமல் சமாதியில் வைக்கவேண்டும். இறந்தவர்கள் திரும்ப எழுந்து திரும்ப நம்முடன் இருக்கப் பார்ப்போமென்கிற மூடு நம்பிக்கையைக் கொண்டு எவ்வளவுந் துயரப்படாமலும், அழுகுரல் செய்யாமலும் சிற்றம்பலக் கடவுள் சிந்தையுடனிருக்கவேண்டும். புருடனிறந்தால் மனைவி, தாலிவாங்குதல் வேண்டாம். மனைவி இறந்தால் புருடன், வேறு கல்யாணப் பிரயத்தினம் செய்யவேண்டாம். பிள்ளைகளிறந்தால் சஞ்சலிக்க வேண்டாம். கர்ம காரியங்கள் ஒன்றும் செய்யவேண்டாம். தெரிவிக்கத் தக்கவர்களுக்குத் தெரிவித்து ஒரு தினத்தில் கேரிட்டவர்களுக்கு கேரிட்ட மட்டில் அன்னவிரயஞ் செய்ய வேண்டும். இவ்வாறு உண்மையாக நம்பிச் செய்யுங்கள். செய்திருந்தால் சமரசவேத சன்மார்க்க சங்கமும் மேற்படி தருமச்சாலையும் நிலைபெற விளக்கஞ் செய்யும் பொருட்டாகவும் கருணைகூர்ந்து எனது தந்தையாராகிய எல்லாம் வல்ல திருச்சிற்றம்பலக் கடவுள் பார்வதிபுர சமரசவேத சன்மார்க்க சங்கத் தருமச்சாலைக்கு எழுந்தருளிக் காட்சி கொடுக்குந் தருணம் மிகவும் அடுத்த சமீபமாக இருக்கின்றது. அந்தத் தருணத்தில்

1 ஆறுவது திருமுறை இரங்கல் 111—பக்கம் 344, பாட்டு 9. "பரனளித்தந் தேகமிது சுடுவது அபாதம்."

சாலைக்கு உரியவர்களாக இருந்து இறந்தவர்களை யெல்லாம் எழுப்பிக் கொடுத்தருளுவார். இது சத்தியம் சத்தியம்.

இந்தக் கடிதம் வெளிப்பட்டறிந்துகொள்ளாமுன் இறந்து தகனமானவர்களையும் எழுப்பியருளுவார். இது வெளிப்பட்டறிந்தபின் தகனஞ் செய்யக்கூடாது. அது சன்மார்க்க சங்கத்திற்குத் தக்கதல்ல. ஆகலில் மேற்கண்டபடி உண்மையான நம்பிக்கையுடன் வாழ்வீர்களாக.

எனக்கு உலகு அறிவு தெரிந்ததுதொட்டு, எனது தந்தையார் திருவருளை நான் அடையும் வரையில், என்னுடன் பழகியும், என்னை நம்பி யடுத்தும், என்னைக் கேள்வியில் விரும்பியும், எனக்குரிமைப்பட்டும், இருந்து இறந்தவர்களை யெல்லாம் எழுப்பிக் கொடுத்து சமரச சன்மார்க்கத்தை விருத்தி செய்விக்கத் திருவுளத்துக் கருதி, பெருங்கருணை வள்ளல் சாலைக்குரியவர்களாகி இருந்தும், அவநம்பிக்கையுட னிருக்கின்றவர்கள் விஷயத்திலும், இந்த உபகாரஞ் செய்தருளுவார். ஆனால், அவர்கள் சன்மார்க்க சங்கத்திற்கு மாத்திரம் அருகராகார்கள்.

ஆகலில் நம்பிக்கையுடனிருங்கள்.

பெரிய களிப்பை அடைவீர்கள். இது சத்தியம்.

சாலை சம்பந்தமில்லாதவர்களுக்கு இந்தக் கடிதத்தைத் தெரிவிக்க வேண்டாம்.

பிரமோதூதவரு சித்திரைமீ 18உ 1872.

சிதம்பரம்

ராமலிங்கம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

ஒ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

சமரச சுத்தசன்மார்க்க சத்திய

12. ஞானசாரம், சுத்ததேகம்

அருட்பெருஞ்ஜோதி

இதுவரையில் கர்ம சித்தருடைய காலம், அதனால் சமயங்களும், மதங்களும், பரவி யிருந்தன. இப்போது வரப்போகிறது, ஞானசித்தருடைய காலம். இனி ஜாதி, சமய முதலான ஆசாரங்களெல்லாம் போய், சமரச சுத்தசன்மார்க்க சத்திய ஞான ஆசாரம் ஒன்றே விளங்கும். சமய மதங்களில் சொல்லுகிற கருத்தர்கள், மூர்த்திகள், ஈசுரன், பிரமம், சிவம், முதலிய தத்துவங்கள் காலப் பிரமாணபரியந்தம் இருப்பதே யொழிய அதற்கு மேலிராது.

சமயமதங்களில் சொல்லுகிற கர்த்தர்களுடைய சித்திகள், சர்வசித்திகளுடைய கடவுளின் சித்தியின் லேசங்கள். அந்த சர்வசித்தியையுடைய கடவுளுக்கு ஒப்பாகார்கள். கோடி, கோடிபங்கு தாழ்ந்ததரத்திலிருக்கிறார்கள். இப்போதிருக்கும், வேதாகம புராணங்களிலும் சமயமதங்களிலும், லட்சியம் வையாதீர்கள். வைத்தால் சமரச சுத்தசன்மார்க்கத்தில் உங்களுக்கு லட்சியம் வராது. வராவிட்டால் நீங்கள் அடையப்போகிறது ஒன்றுமில்லை. ஆதலால் அதுகளெல்லாம் பற்றறவிட்டு, சர்வசித்தியையுடைய கடவுள் ஒருவருண்டென்றும், அவர் ஒருவரே யென்றும், அவரை உண்மைபன்பால் வழிபாடு செய்ய வேண்டும்.

அப்படிப்பட்ட சமரச சுத்தசன்மார்க்கத்திற்குரிய கடவுளை வழிபாடு செய்வதற்குச் சாதனம் இருவகை: 1. பர உபகாரம், 2. சத்விசாரம்; பர உபகார மென்பது :— தேகத்தாலும், வாக்காலும். திரவியத்தாலும், உபகாரஞ் செய்வது. சத்விசார மென்பது :— நேரிட்ட பசுத்தில்—ஆன்ம நேய சம்பந்தமான தயாவிசாரத்தோடு இருப்பது. கடவுளது புகழை விசாரித்தல், ஆன்மாவின் உண்மையை விசாரித்தல், தன்சிறுமையைக் கடவுளிடத்தில் விண்ணப்பித்தல், இந்த மார்க்கத்தால் தான் சுத்ததேகம் பெறவேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

13. உபதேசம் *

அருட்பெருஞ்ஜோதி

இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரையில் இருந்ததுபோல் இனியும் வீண்காலம் கழித்துக் கொண்டிராதீர்கள்.

இதுமுதல் சாலைக்கு ஆண்டவர் போகிற—பத்துத் தினமாகிய கொஞ்சக் காலம் — வரையில், நீங்க ளெல்லவரும் நல்ல விசாரணையில் இருந்து கொண்டிருங்கள். அந்த விசாரணை எது என்றால்:— நம் நம்முடைய நிலை யெப்படிப்பட்டது? நமக்குமேல் நம்மை அதிஷ்டிக்கின்ற தெய்வத்தினுடைய நிலை யெப்படிப் பட்டது? என்று விசாரிக்க வேண்டியது. அதற்குத் தக்கபடி, நீங்கள் ஒருமித்தாவது, அல்லது தனித்தனியாகவாவது, உங்களறிவிற்கும் ஒழுக்கத்துக்கும் ஒத்தவர்களுடன் கூடியாவது, அல்லது—வேலாயுத முதலியாரைக் கேட்டால் மனுஷ்ய தரத்தில் போதுமான வரையில் சொல்லுவார்—அவரிடம் அப்படிக் கேட்டாவது நல்ல விசாரணையி லிருங்கள்.

இவ்விசாரணை மூகத்திலிருந்தால், நமது ஆன்ம அறிவை விளக்கமின்றி மூடிக்கொண் டிருக்கின்ற அனந்தந் திரைகளில் அழுத்தமா யிருக்கின்ற முதல் திரைபாகிய பச்சைத் திரை முதலில் நீங்கிவிடும். அது நீங்கிஞல், மற்றத் திரைகள் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும். அந்தப் பசுமை வர்ணம் எப்படிப்பட்ட தென்ருல், கருமைக்கு முதல் வர்ணமான பசுமையாக இருக்கின்றது. இப்படிப்பட்ட அழுத்தமான திரை நீங்கவேண்டுமென தோத்திரித்தும், தெய்வத்தை நினைத்தும், நமது குறையை உன்னியும், இவ்வண்ணமாக

* 1874 ஸ்ரீமுக வருஷம், ஐப்பசிமீ, 7உ, புதவாரம், பகல் 8 மணிக்கு, மேட்டுக்குப்பமென்னும் சித்திவளாகத் திருமாளிகையில் முதல் முதல் கொடி கட்டினவுடன் நடந்த விவகாரத்தின் குறிப்பு.

இருக்கின்ற போதும், படுக்கின்றபோதும், இடைவிடாதும், இவ்விசாரத் தோடும், ஆண்டவர் நமக்கு உண்மை தெரிவிக்க வேண்டு மென்கின்ற முயற்சியுடனிருந்தால், தெரிய வேண்டியதைத் தெரிந்து கொள்ளலாம்.

அவ்விசாரம்—பரம், அபரம், என்று இரண்டுவகையா யிருக்கின்றது. இவற்றில், பரம்—பரலோக விசாரம்; அபரம்—இகலோக விசாரம். இவ்விரண்டில் இகலோக விசாரம் விசாரமல்ல. சாதாரணமாக ஒருவன் விசாரம் செய்து கொண்டிருக்கின்றானே யென்றால், அவ்விசாரம் விசார மாகாது, உண்மை விசாரமு மல்ல. ஏனெனில் :— விசார மென்கின்றதற்குப் பொருள்:— வி - சாரம் என்பதில் வி சாதாரண உலக விசாரத்தை மறுக்க வந்தது; அதுமேலும்—பரலோக விசாரத்தையே குறிக்கும் பொருட்டு வந்தது. மேலும், ஜலத்திலிருக்கின்ற பாசியை நீக்குவதுபோல், நமது ஆன்மாவைத் தெரியவொட்டாமல் மூடியிருக்கின்ற பச்சைத் திரை யாகிய ராகாதிகளை, விசார அநுஷ்டானத்தா லல்லது, மற்ற உஷ்ணங்களால் நீக்கமுடியாது. அந்த உஷ்ணம் யோகியினுடைய அனுபவத்தில் தெரியும். அதை மனுஷ்ய தரத்தில் உண்டு பண்ணுவதற்குத் தெரியாது. அந்த விசாரத்தைவிட, ஆண்டவரை தோத்திரம் செய்கின்றதிலும், தெய்வத்தை நினைக்கின்றதிலும், அதிக உஷ்ணம் உண்டாகும். யோகிகள், வனம், மலை, முழை, முதலியவைகளில் போய், நூறு, ஆயிரம் முதலிய வருஷகாலம் தவஞ்செய்து, இவ்வுஷ்ணத்தை உண்டுபண்ணிக் கொள்ளுகிறார்கள்.

இப்படித் தவம் செய்து உஷ்ணத்தை உண்டுபண்ணிக் கொள்ளுகிறதைப் பார்க்கிலும், தெய்வத்தை தோத்திரம் செய்கின்றதிலும், நினைக்கின்றதிலும்—இதைவிடக்—கோடிப் பங்கு, பத்துக் கோடிப் பங்கு, அதிகமாக உஷ்ணம் உண்டு பண்ணிக் கொள்ளலாம். எவ்வாறெனில்:— ஒருஜாம நேரம், மனத்தில் இகவிசார மன்னியில், பரவிசாரிப்பும் அத்துடன் ஆன்ம நெகிழ்ச்சியுடன் தெய்வத்தைச் சிந்தித்துக் கொண்டாவது, அல்லது ஸ்தோத்திரம் செய்து கொண்டாவ திருந்தால், நாம் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம். ஆதலால், இவ்வுலகில் வி-சார மென்கின்ற உண்மை தெரியாது, விசாரமென்று வழங்கி, அதைத் துக்க மென்றே சொல்லுவார்கள். நாம் அப்படி அர்த்தம் பண்ணப்படாது. அவர்கள் பண்ணுகின்றது—துக்கமே விசாரமென்றது—அது தப்பு; சாரம் என்றால் துக்கம். வி சாரம்—என்றால் துக்கநிவர்த்தி. வி—உபசர்க்கம். சார மென்கின்ற துக்கத்தை நிவர்த்தித்தது வி. ஆதலால், விசார மென்கின்றது முன்குறித்தபடி பரலோக விசாரத்தையே குறிக்கின்றது. ஆதலால், இடைவிடாது விசார வசத்தரா யிருக்கவேண்டும். மேலும்,

வி-சார மென்பது: வி—விபத்து; சாரம்—தீர்ப்பது; நடத்தல். ஆதலால் இடைவிடாது நன் முயற்சியின்கண் பயிலுதல் வேண்டும்.

மேலும், சிலர், "இது ஆண்டவர் வருகின்ற தருணமாக இருக்கின்றதே! இத்தருணத்தில் முயற்சி செய்வானேன்? ஆண்டவர் வந்த வுடனே பெறவேண்டியதைப் பெற்றுக்கொள்ளப்படாதோ?" என்று வினவலாம். ஆம். இஃது—தாம் வினவியது நலந்தான். ஆண்டவர் வரப் போகின்றது சத்தியந்தான், நம்மவர்களின் திரை நீங்கப் போகின்றதும் சத்தியந்தான். நீங்கள் எல்லோரும் பெறவேண்டியதைப் பெற்றுக் கொள்ளுகின்றதும் சத்தியந்தான். ஆனால், முன் சொன்ன பச்சைத் திரை இரண்டு கூறுக இருக்கின்றது. யாவெனில்:—அசுத்தமாயா திரை யென்றும் சுத்தமாயா திரை யென்றும் இரண்டு. இவை, கீழ்ப்பாகத்தில் ஒரு கூறும் மேல்பாகத்தில் ஒரு கூறுமாக இருக்கும். கீழ்ப்பாகத்தி லுள்ளது அசுத்தமாயா திரை. மேல் பாகத்தில் உள்ளது சுத்தமாயா திரை. இவற்றில் அசுத்தமாயா திரை—இகலோக போகலக்ஷிய முடையது. சுத்தமாயா திரை—பரலோக சாத்தியத்தை யுடையது. இவற்றில்—ஆண்டவர் வந்து சாதாரணமாக அனுக்கிரகஞ் செய்கின்றபோது, முயற்சி யில்லாத சாதாரண மனுஷ்யர்களுடைய கீழ்ப்பாகத்தி லுள்ள அசுத்தமாயை யென்னும் பச்சைத் திரையை மாத்திரம் நீக்குவார். ஆதலால், கூடிய வரையில் அக்காலத்தில் நாம் அத்திரை நீங்கியவுடன் சுத்தமாய்ப் புனிதர்களாக இருக்கலாமேயல்லது, பெறவேண்டியதைப் பெற்றுக்கொள்ளுகிறதற்குக் கூடாது. மேலும், பஞ்ச கிர்த்திய விபவங்களும், இதர சித்தி முதலியனவும், ஆன்மானுபவத்தையும், செய்யவும், பெறவும், கூடாது. பின்னும் நன் முயற்சி செய்தே மேலேறவேண்டியது.

மேலும், இத்தருணம் இங்கு உண்டாகும் கூச்சல், முதலிய வைபும் அடுத்தவர்களுக்குப் பக்குவம் வருவிக்கவும் பாவிகளை விலக்கவும் உண்டாயின. ஆதலால், நாம் எல்லவரும் இத்தருணம், இப்போதே; விசேஷ நன்முயற்சியுடனே இருந்தால், ஆண்டவர் வருகிறபோது, நம் கீழ்ப் பாகத்தி லுள்ள அசுத்தமாயா திரையோடு கூடமேற் பாகத்தி லிருக்கிற சுத்த மாயையினுடைய பச்சைத் திரையும் நீங்கிப்போய்விடும். கருமையிற் பச்சை வர்ணமுடையது — அசுத்தமாயா திரை. பொன்மையிற் பச்சை வர்ணமுடையது — சுத்தமாயா திரை. கருமையிற் பச்சை வர்ணமுடைய அசுத்த மாயா திரை நீங்கினபிறகு மற்ற எட்டுத் திரைகளும் அதிக விரைவில் நீங்கிப் போய்விடும். இத்திரைகளின் விவரத்தை, ஆறுவது திருமுறை அருட்பெருஞ்ஜோதி அகவலில்(பக்கம்-24) கண்டுணர்க. மேலும், இது நீங்கினவுடனே அவன் பஞ்ச கிர்த்திய முத

லானதுஞ் செய்வான். ஆதலால், முயற்சியுடனே இருந்தால், அதற்குத்தக்க லாபத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கு மேற்பட, காம் காமும், பார்த்தும், கேட்டும், லக்ஷியம் வைத்துக்கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், முதலிய கலைகள் எதனிலும் லக்ஷியம் வைக்கவேண்டாம். எனென்றால், அவை களில் ஒன்றிலாவது குழுஉக்குறி யன்னியில் தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும், கொஞ்ச மேனும் புறங்கவியச் சொல்லாமல், மண்ணைப்போட்டு மறைத்து விட் டார்கள். அணுமாத்திரமேனுந் தெரிவிக்காமல் பிண்ட லக்ஷணத்தை அண்டத்தில் காட்டினர்கள். யாதெனில் :—கைலாசபதி என்றும், வைகுண்டபதி என்றும், சத்தியலோகாதிபதி, என்றும் பெயரிட்டு, இடம், வாகனம், ஆயுதம், வடிவம், ரூபம் முதலியவைகளும் ஒரு மனுஷ்ய னுக்கு அமைப்பதுபோல் அமைத்து, உண்மையாக இருப்பதாகச்சொல்லி யிருக்கின்றார்கள். "தெய்வத்துக்குக் கை, கால் முதலியன இருக்குமா?" என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத் தெரியாது விழிக்கின்றார்கள். இஃது உண்மையாக இருப்பதாகவே—முன்னும் பின்னும் உள்ள பெரிய வர்களென்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும், உண்மையை யறியாது அப்படியே கண்ணை மூடிக்கொண்டு உளறியிருக்கிறார்கள். ஆனால், ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டுபிடிக்கவில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. இதுவரைக்கும் அப்படிப்பட்டவன் பூட்டிய பூட்டை உடைக்க ஒருவரும் வரவில்லை. அவைகளில் எகதேச கர்ம சித்திகளைக் கற்பனைகளாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக ஒவ்வொரு சித்திக்குப் பத்துவருஷம் எட்டுவருஷம் பிரயாசை எடுத்துக் கொண்டால், அப்ப சித்திகளை யடையலாம். அதற்காக அவற்றில் லக்ஷியம் வைத்தால், ஆண்டவரிடத்தில் வைத்துக்கொண்டிருக்கிற லக்ஷி யம் போய்விடும். ஆண்டவரிடத்தில் வைத்த லக்ஷியம் போய்விட்டால், நீங்கள் அடையப் போகிற பெரிய பிரயோஜனம் போய்விடும். அல்லது, அதில் முயற்சிசெய்து, அவ்வளவு காலம் உழைத்து, அந்த அற்பப் பிரயோஜனத்தைத் தெரிந்துகொண்டு, அதனால் ஒரு லாபத்தை எக தேசம் அடைந்தால், முக்கிய லாபம் போய்விடும். ஆகையால், அவைகளில் லக்ஷியம் வைக்காமல், ஆண்டவரிடத்திலேயே லக்ஷியம் வைக்க வேண்டியது. முன் சொன்ன எகதேச சித்தி கற்பனை யென்கின்றது நான் செய்த (பக்கம் 536), வாசகப் பெரு விண்ணப்பத்தாலும் (பக்கம் 161-பாட்டு 87),

இயல்வேதா கமங்கள்புரா ணங்களிதி காசம்
இவைமுதலா விந்திரசா லங்கடையா உரைப்பார்
மயலொருநூல் மாத்திரந்தான் சாலமென அறிந்தார்
மகனேநீ நூலனைத்துஞ் சாலமென அறிக

செயலனைத்தும் அருளொளியாற் காண்கவென எனக்கே
திருவுளம்பற் றியஞான தேசிகமா மணியே
அயலறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற
ஆடுகின்ற அரசேயென் அலங்கலணிந் தருளே.

என்ற அருள் விளக்கமாலைப் பாசுரத்தாலு முணர்க. மேலும் அதிற்கண்ட குறிப்பையுந் தெரிந்துகொள்ளுங்கள்.

இது போல், வியாகரணம்—தொல்காப்பியம்—பாணினீயம்—முதலியவைகளில் சொல்லியிருக்கின்ற இலக்கணங்கள் முழுவதும் குற்றமே. அவைகளில் குற்றமே சொல்லியிருக்கின்றார்கள். எவ்வாறெனில் :—தொண்ணூறு, தொள்ளாயிரம் என்கிற கணிதத்தின் உண்மை நான் சொன்ன பிறகு தெரிந்து கொண்டீர்களல்லவா? இப்படியே ஒன்று, இரண்டு முதல் நூறு முதலான இலக்கங்களுக்கும் உகர இறுதி வருவானேன்? ஒருவாறு சித்தர்கள் காரணப் பெயராக இட்டிருக்கிறார்கள். தொல்-நூறு தொண்ணூறென்றும், தொல்—ஆயிரம் தொள்ளாயிரமென்றும் வழங்குகின்றன. தொல் என்பது ஒன்று குறையத் தொகையது. தொன்மை தொல்லெனப் பிரிந்தது. வழக்கத்தில் தொள்ளாயிரம் தொண்ணூறு என மருவியது. இதற்குப் பத்திடத்திற்கு ஓரிடம் குறைந்த முன் ஆயிரமென்றும், ஒன்று குறைந்த பத்தென்றும் ஒருவாறு கொள்க. இப்படி நான் சொன்னதுபோல் சொன்னால் சிறுகுழந்தைகள் கூட அறிந்துகொள்ளும்.

இதுபோல், சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும், லக்ஷியம் வைக்கவேண்டாம். (அவற்றில் தெய்வத்தைப் பற்றி) குழூஉக் குறியாகக் குறித்திருக்கிறதேதபன்றிப் புறங்கவிபச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவோமேயானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லக்ஷியம் வைக்கவேண்டாம். ஏனெனில், அவைகளில்—அவ்வச்சமய மதங்களிலும்—அற்பப் பிரயோஜனம் பெற்றுக் கொள்ளக் கூடுமேயல்லது, ஒப்பற்ற பெரிய வாழ்வாகிய இயற்கையுண்மை என்னும் ஆன்மானுபவத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றதற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. மேலும், இவைகளுக்கெல்லாம் சாக்ஷி, நானேயிருக்கின்றேன். நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்லமுடியாது. அதுபட்டணத்துச் சுவாமிகளுக்கும் வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலர்க்கும் தெரியும். அந்த லக்ஷியம் இப்போது எப்படிப் போய்விட்டது?

பார்த்தீர்களா! அப்படி லக்ஷியம் வைத்ததற்குச் சாக்ஷி வேறே வேண்டிய தில்லை. நான் பாடி யிருக்கிற 1திருவருட்பாவில் அடங்கியிருக்கின்ற பாடலையும், மற்றவர்கள் பாடலையும், சபைக்குக் கொண்டுவந்தால், அவை களே சாக்ஷி சொல்லிவிடும். என் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்த தென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது.

இப்போது ஆண்டவர் என்னை எழுத நிலமே லேற்றியிருக் கின்றார். இப்போது எல்லாவற்றையும் விட்டு விட்டதினால் வந்த லாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டுவிட்டீர்களானால், என்னைப்போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள். இதுவரைக்கும் விடாமல் வைத்துக் கொண்டிருந்தவர்கள் ஏதாவது லாபத்தைப் பெற்றுக்கொண்டார்களா? பெற்றுக்கொள்ளவில்லை. நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்திருந்த லக்ஷியமே என்னை இந்த நிலையில் தூக்கிவிட்டதென்றாலா, அந்த லக்ஷி யம் தூக்கிவிடவில்லை. என்னை இந்த இடத்திற்குத் தூக்கிவிட்டது யாதெனில்:— அக்காலத்திலேயே எனக்குத் தெரிவிக்க வேண்டியதைத் தெரிவித்தாரென்று 2வாசகப் பெருவிண்ணப்பத்திலும், "எத்தேவரை யும் நின் 3சாயையாய்ப் பார்த்ததே யன்றித் தலைவ வேறெண்ணிய துண்டோ" என 4"தேடியதுண்டு நினதுருவுண்மை" என்னும் தொடக்கமுடைய பதிகத்திலும், விண்ணப்பித் திருக்கின்றேன். மேலும் அவர் தெரிவித்த உண்மைப் பெருநெறி ஒழுக்கம் யாதெனில்: 5"கருணை யும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக" என்றது

---

1 அப்போது திருவருட்பாவில் அச்சாகி வெளிப்பட் டிருந்தவை முதல் நான்கு திருமுறைகள் மட்டுமே.

2 ஆறுவது திருமுறை வசனபாகம் (பக்கம் 536)

3 மாயையாற் கலங்கி வருந்திய போதும் வள்ளலுன் றன்னையே மறந்துன் சாயையாப் பிறரைப் பார்த்ததே யல்லாற் றலைவனே றெண்ணிய துண்டோ தாயைபோற் பாத மறியாத னறியேன் துயரினிச் சிறிதுமிங் காற்றேன் நாயகா வெனது மயக்கெலாந் தவிர்த்தே நன்றருள் புரிவதுன் கடனே. (பக்கம் 220)

4 தேடியதுண்டு நினதுருவுண்மை தெளிந்திடச்சிறிது நின்னுடனே ஊடியதுண்டு பிறர்தமை யடுத்தே யுரைத்தது முவந்தது முண்டோ ஆடியபாதமறிய நானறியேன் அம்பலத் தரும்பெருஞ் ஜோதி கூடிய நின்னைப் பிரிகிலேன் பிரிவைக் கூறவும் கூசுமென் னெஞ்சே. (பக்கம் 220)

5 கருணையுஞ் சிவமே பொருளெனக் காணுங் காட்சியும் பெறுகமற் றெல்லாம் மருணெறி யெனநீ யெனக்கறி வித்த வண்ணமே பெற்றிருக் கின்றேன் இருணெறி மாயை வினைகளாற் கலக்க மெய்திய தென்செய்வே னெந்தாய் தெருணிலை யின்றிக் கலங்கினே னெனினுஞ் சிறுநெறி பிடித்ததோன் றிலையே. (பக்கம் 106)

தான். என்னை எழுநிலைமிசை யேற்றிவிட்டது யாதெனில் தயவு. தயவு என்னுங் கருணைதான் என்னைத் தூக்கிவிட்டது.

அந்தத் தயவுக்கு ஒருமை வரவேண்டும். அந்த ஒருமை இருந்தால்தான் தயவுவரும், தயவு வந்தால்தான் பெரிய நிலைமேல் ஏறலாம். இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினுலேதான் வந்தது. நீங்களும் என்னைப்போல் ஒருமையுடனிருங்கள். என்னிடத்தில் ஒருவன் வசப்படாத மூரட்டுத் தனமாய் எப்படி யிருந்தாலும், 1. அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன்; 2. மிரட்டிச் சொல்லுவேன்; 3. தெண்டன் விழுந்து சொல்லுவேன்; 4. அல்லது பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன்; 5. அல்லது ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன். இப்படி யெந்த விதத்திலே யாவது நல்லவழிக்கு வரச்செய்து விடுவேன். நீங்கள் எல்லவரும் இப்படியே செய்தல்வேண்டும். இராத்திரி கூட "நான் இல்லாமல் இந்த ஜனங்கள் க்ஷணநேரம் இருக்க மாட்டார்களே" என்று ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக்கொண்டேன். அது இங்கே இருக்கிற ஜனங்கள் மட்டில் மாத்திரமல்ல. உலகத்திலிருக்கிற எல்லா ஜனங்களையும் குறித்தே விண்ணப்பித்துக்கொண்டேன். எனெனில் எல்லவரும் சகோதரர்களாதலாலும், இயற்கை யுண்மை யேகதேசங்களாதலாலும், ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை வைத்துக்கொண்டிருக்கிறேன்.

இப்போது நீங்கள்—இதுவரைக்கும் ஒழுக்கத்துக்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுஷ்யர்களாயிருந்தாலும்— சாலைக்குப் போகக் கொஞ்ச தினமிருக்கின்றது —அதற்குள்ளாக நீங்கள் நீங்களும் நல்லொழுக்கத்திற்கு வருவதோடுகூட மற்றவர்களையும் நமது ஒழுக்கத்திற்கு வரும்படி எவ்விதத் தந்திரமாவது செய்து நம்மவர்களாக்கிக்கொள்ளவேண்டியது. நீங்கள் கொஞ்ச தினத்துக்கு அப்படிச் செய்துகொண்டிருங்கள். நானும் ஆண்டவரிடத்தில் இவ்வுலகத்திலுள்ள எல்லா ஜீவர்களும் நன்மை யடையப் பிரார்த்தித்தும், ஆண்டவரிடத்தில் கேட்டுக்கொண்டும் வருகின்றேன். ஆதலால், நீங்கள் அப்படிச் செய்துகொண்டிருங்கள்.

சமயந்தவிர மதங்களில் உள்ள வேதாந்தி, சித்தாந்தி, யென்று பெயரிட்டுக்கொண்ட பெரியவர்களும் உண்மையறியாது, சமய வாதிகளைப்போலவே ஒன்றுகிடக்க ஒன்றை உளறுகிறார்கள். ஆனதினால் நீங்கள் அந்த ஒன்றையும் நம்பவேண்டாம். எவைகளிலும் தெய்வத்தைப் புறமுகமாகப் புலப்படச் சொல்லவில்லை. "தெய்வத்தைத்

தெரிந்து கொள்ளாது இவ்வுலகத்தார் என்னைத் தெய்வமெனச் சுற்று கின்றார்கள். ஐயோ! நம் சகோதரர்கள் தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாதநிலை யல்லவா நம்மைச் சுற்றுகிறார்கள்!" என்று நான் உள்ளூர் புறமும் பரிதாபப்பட்டுக்கொண்டே இருந்தேன், இருக்கின் றேன்; இருப்பேன். தெய்வத்தை என் தெரிந்துகொள்ள வில்லையென் றால்; ஒரு பதார்த்தத்தை அனுபவித்தா லல்லது அந்தப் பதார்த் தத்தினுடைய ருசி தெரியாது. ருசி தெரியாத பதார்த்தத்தின்மேல் இச்சை போகாது. அதுபோல், தெய்வத்தை யுள்ளபடி அனுபவித்தா லல்லது, தெய்வத்தினிடத்தில் பிரியம் வராது. ஆதலால், தெய்வத் தைத்தெரிந்துகொள்ள வேண்டுமென்கிற முக்கிய லக்ஷியத்தில் இருந் துகொண்டு விசாரஞ் செய்துகொண் டிருங்கள்.

அந்த விசாரம் செய்வது எப்படியென்றால்:— அண்டத்தில் சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள்—இவைகள் எப்படிப்பட்டன? இவை களினுடைய சொரூப ரூப சுபாவம் என்ன? இவை முதலான அண்ட விசாரமும்; பிண்டத்தில் நாம் யார்? இத்தேகத்தின்கண் புருவம் நெற்றி மூலம்—இவைகளிலும் இவைபோன்ற மற்ற இடங்களிலும் உரோமம் உண்டாவானேன்? கேற்றி முதலான இடங்களில் அது தோன்றி திருப்ப தென்ன? கால் கை களிலுள்ள விரல்களில் நகம் முளைத்தலும் அந்நகம் வளர்தலும்—இவைபோன்ற மற்றத் தத்துவங்களினது சொரூப ரூப சுபாவங்களும் விசாரமுஞ் செய்துகொண்டிருங்கள். இப்படி இடை விடாது விசாரஞ் செய்துகொண்டிருந்தால், இவ்வுலகத்தின்கண் உள்ள ஜனங்கள் அதைக்குறித்து வளமையாகச் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுவது அவர்களுக்குச் சுபாவம். ஏனெனில், அவர்களுக்கு உண்மை தெரியாது. ஆதலால் நீங்கள் அதை லக்ஷியம் செய்யக்கூடாது.

இப்படியே "காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வைத்தவர்—ஆணுக்குக் கடுக்கனிடுதலும், பெண்ணுக்கு மூக்குத்தி முதலியவை போடுதலும், தமக்குச் சம்மதமானால்—காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தல்களிட்டு வரவிட்டிருக்கமாட்டாரா?" என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளுகிற பக்ஷத்தில், காதில் கடுக்கனிடவும் மூக்கு முதலியவற்றில் நகையிடவும் சம்மதம் வருமா? இப்படி விசா ரித்துப் பிரபஞ்ச போகத்தின்கண் அலக்ஷியம் தோன்றினால், நிராசை உண்டாம். ஆதலால், சரியை முதலிய சாதகம் நான்கில், நான்காவது ஞானத்தில், சரியை, கிரியை, யோகம், ஞானம், என்கின்ற நான்கில், மூன்றுவது படியாகிய ஞானத்தில் யோகம் செய்கின்ற பலவகைய நிராசை யென்னும் படி உண்டாகின்றது. ஆகையினாலே, இந்த விசாரத்தி லிருந்து கொண்டிருங்கள்.

இவ் விசாரஞ் செய்துகொண்டிருந்தால், ஆண்டவர் வந்த வுடனே, கண்டமாக உங்களுக்குத் தெரிவிக்கவேண்டியதைத் தெரி விப்பார். மறுபடியும் உங்களுக்கு உரிமை வந்தவுடனே அகண்டமாகத் தெரிவிப்பார். ஆதலால் நீங்கள் இந்த முயற்சியிலிருங்கள். இரண்டரை வருஷமாக நான் சொல்லிக்கொண்டு வந்தேன். இனிச் சொல்பவர்கள் சிலநாள் தடைபட்டிருப்பார்கள். இனி நீங்கள் இதுவரைக்கும் இருந்ததுபோல் இராதீர்கள்.

இது கடைசி வார்த்தை

இதுமுதல்— கொஞ்ச காலம்—சாலைக்குப் போகின்ற வரைக் கும், ஜாக்கிரதையாக மேற்சொன்ன பிரகாரம் விசாரஞ் செய்துகொண் டிருங்கள்.

மேலும், சமய மதங்களில் தெய்வத்தினது உண்மையைக் குழூஉக்குறியால் குறித்து, அக்குறிப்பையும் வெளிப்படையாகக் காட் டாது, சிவாயநம எனறும், நமசிவாய என்றும், இதுபோன்ற அனந்த வர்ணங்களைச் சேர்த்து, ஒன்று, இரண்டு, மூன்று, ஐந்து, ஆறு, எட்டு, பத்து, பதின்மூன்று, பதினைந்து, பதினாறு, இருபத்துநான்கு முதலிய சங்கையில் மந்திரங்களாய் அமைத்து வழங்கி வருவிக்கவிட்டு நடந்து வருகின்றது. அவ்வவ் மந்திரங்களின் அர்த்தம் பலவாக விரியும். ஆத லால், நாம் அடைய வேண்டுவது முடிவான ஆன்மலாபமாகிய சிவானு பவமேயன்றி வேறில்லை. இங்குள்ள எல்லவர்க்கும் சுவர்க்கநரக விசார மில்லை. சுவர்க்க நரக விசார முள்ளவர்கள் தங்கள் கருத்தின்படி பல வகைச் சாதனங்களைச் செய்து அற்ப பிரயோஜனத்தைப் பெற்று, முடிவில் தடைபட்டித் திருவருட்டுணையால் கருணை நன் முயற்சி யெடுத்துக் கொண்டு, பின் முடிவான சித்தி இன்பத்தைப் பெறுவார்கள். அஃது அருமை.

இத்தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு, முடிவான இன்பா னுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மகா வாக்கியத் திருமந்திரத்தை (தமது உண்மையை வெளிப்படக்காட்டும் மகாமந்திர வாக்கியத்தை) எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம், எனது மெய்யறி வின்கண் அனுபவித்தறிந்த, உண்மைபறி வனுப வானந்த இன்பத்தை, நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம் திரிபு மயக்கம் இன்றி அடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்ம நேய ஒருமைப்பாட் டுரிமை யைப் பற்றிக் குறிப்பித்தேன்; குறிப்பிக்கின்றேன்; குறிப்பிப்பேன்.

நமது ஆண்டவர் கட்டளை யிட்டது யாதெனில்:— நமக்கு முன் சாதனம் கருணை யானதிலேல, ஆண்டவர் முதற்சாதனமாக,

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

என்னும் திருமந்திரத்தை, வெளிப்படையாக எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந் தயவுடைய தேவறிவே யாம். இஃது வாச்சி யார்த்தம். இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால், முடிவான இன்பாநு பவம் பெறுவதற்குத் தடையில்லை. "சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்து முற்றும்" 1 என்னும் பிர மாணத்தால் உணர்க.

மேலும், இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரிய லொட்டாது, அசுத்தமாயா காரிகளாகிய சித்தர்கள் மறைத்து விட்டார் கள். சுத்தமாயா காரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால், அனுபவித்தறியாத அனுபவமும், கேட் டறியாத கேள்வியும், நாம் கேட்டிருப்போம். மேலும், இறந்தவர்கள் மீள வும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால், கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத்தருணமே. ஆதலால், இத் தருணம் இக்காலமே சன்மார்க்கக் காலம். இதற்குச் சாக்ஷியாக இப் போதுதான் சன்மார்க்கக் கொடி கட்டிக்கொண்டது. அக் கொடி இப் போதுதான் கட்டிக்கொண்டது. அக் கொடி உண்மையில் யாதெனில்:— நமது நாபிமுதல் புருவமத்தி ஈறாக ஒரு நாடி யிருக்கின்றது; அந்த நாடி நுனியில் புருவமத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின் றது; அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம்; மேற்புறம் மஞ்சள் வர் ணம்; அச் சவ்வின்கீழ் ஓர் நரம்பு எறவும் இறங்கவும் இருக்கின்றது.

---

1 சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்றும் எனலால்
சகமீ திருந்தாலும் மரணமுண் டென்பது
சதாநிஷ்டர் நினைவ தில்லை
சிந்தையறி யார்க்கீது போதிப்ப தல்லவே
செப்பினும் வெகுதர்க் கமாம்
திவ்யகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள்
சித்தாந்த நித்ய ரலரோ?
தாயுமான சுவாமிகள்— கருணைக்காக் கடவுள், (7-ம் பாட்டு)

இக்கொடி நம் அனுபவத்தின்கண் விளங்கும். இவ் அடையாளக் குறிப் பாகவே இன்றைய தினம் வெளிமுகத்தில் அடையாள வர்ணமான கொடி கட்டியது. இனி எல்லவர்க்கும் நல்ல அனுபவம் அறிவின்கண் தோன்றும்.

உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்து கொள்வாரில்லை. கொடிகட்டிக் கொண்ட படியால், இனி எல்லோரும் உண்மையை அறிந்துகொள்வார்கள். முன் உள்ளவர்கள் உண்மையைத் தெரியவொட்டாது மண்ணைப் போட்டு மறைத்துவிட்டார்கள். இத்தருணம் ஆண்டவரும் தெரிவித்தார், தெரி விக்கின்றார், தெரிவிப்பார். நீங்கள் எல்லவரும் உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். இப்போது நான் சொல்லிவந்த பிரகாரம் ஜாக்கிரதை யுடன் உண்மையறிவாய் விசாரம் செய்துகொண்டிருங்கள். அவசியம் இதற்குக் காரணமான தயவிருக்க வேண்டியது. அந்தத்தயவு வரு வதற்கு ஏதுவான பொது உரிமையும் கூட இருக்கவேண்டும். இப்படி இருந்து கொண்டிருந்தால், ஆண்டவர் வந்தவுடனே எல்லா நன்மை யையும் பெற்றுக்கொள்வீர்கள். எல்லோருக்கும், தாய், தந்தை, அண் ணன், தம்பி முதலான ஆப்தர்கள் செய்யப்பட்ட உதவி எவ்வளவோ, அதற்குக் கோடி கோடிப்பங்கு அதிகமாக உதவி கொடுக்கும்படியான இடம் இந்த இடம்.

இது சத்தியம், சத்தியம், சத்தியம்.

இஃது ஆண்டவர் கட்டளை.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

14. மெய் மொழியும் ஒழுக்கமும் *

அருட்பெருஞ்ஜோதி

உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனித தேகத்தைப்பெற்ற கண்பர்களனைவரும் நாமும் அறியவேண்டுவதும் ஒழுக வேண்டுவதுமாதெனில்:—

இயற்கையிற்றானே விளங்குகின்றவராய் உள்ளவ ரென்றும், இயற்கையிற்றானே உள்ளவராய் விளங்குகின்றவ ரென்றும், இரண்டு படாத பூரண இன்பமானவ ரென்றும், எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லாப் பதங்களையும், எல்லாச் சத்திகளையும், எல்லாச் சத்தர்களையும், எல்லாக் கலைகளையும், எல்லாப் பொருள்களையும், எல்லாத் தத்துவங்களையும், எல்லாத் தத்துவிகளையும், எல்லா உயிர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லா இச்சைகளையும், எல்லா ஞானங்களையும், எல்லாப் பயன்களையும், எல்லா அனுபவங்களையும், மற்றை எல்லாவற்றையும் தமது திருவருட் சத்தியால் 1 தோற்றுவித்தல் 2 வாழ்வித்தல் 3 குற்றம் நீக்குவித்தல் 4 பக்குவம் வருவித்தல் 5 விளக்கஞ் செய்வித்தல் என்னும் ஐந்தொழில்கள் முதலிய பெருங்கருணைத் தொழில்களை இயற்றுவிக்கின்றவ ரென்றும், எல்லாம் ஆனவ ரென்றும், ஒன்றும் அல்லாதவ ரென்றும், சர்வகாருண்ய ரென்றும், சர்வ வல்லபரென்றும், எல்லாம் உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்பு உயர்வு இல்லாத தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்ஜோதியர் என்றும் சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக்கடவுள் ஒருவரே, அகம் புறம் முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்த மெய்யறிவு என்னும்

* இந்து, சுவாமிகளின் விரிந்த உபதேசங்களைப் பெரும்பாலும் சுவாமிகளின் திருவார்த்தைகளைக் கொண்டே, அவற்றின் சாரமாகத் தமக்கும் தம் போன்ற மெய் அன்பர்க்கும் பயன்படுமாறு, ஓர் மெய்யன்பரால் எழுதப் பட்டிருக்கிறது.

பூரணப்பொதுவெளியில், அறிவா ரறியும் வண்ணங்க ளெல்லாமாகி விளங்குகின்றார்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரே யாகிய கடவுளை, இவ் வுலகினிடத்தே ஜீவர்களாகிய நாம் அறிந்து, அன்புசெய்து, அருளை யடைந்து, அழிவில்லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பலவேறு கற்பனைகளாற் பலவேறு சமயங்களிலும், பலவேறு மதங்களிலும், பலவேறு மார்க்கங்களிலும், பலவேறு லக்ஷியங்களைக் கொண்டு, நெடுங்காலம், பிறந்து பிறந்து, அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவு மின்றி, விரைந்து விரைந்து, பல்வேறு ஆபத்துக்களினுல் துன்பத்திலழுந்தி, இறந்து இறந்து, வீண்போயினேம்; வீண்போகின் றோம்.

ஆதலால், இனிமேலும் ஜீவர்களாகிய நாம் விரைந்து விரைந்து, இறந்து இறந்து, வீண்போகாமல், உண்மைஅறிவு, உண்மைஅன்பு, உண்மைஇரக்கம் முதலிய சுபகுணங்களைப் பெற்று, நற்செய்கை உடை யவர்களாய், எல்லாச் சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும், உண்மைப் பொது நெறியாகி விளங்கும் சுத்தசன் மார்க்கத்தைப் பெற்றுப் பேரின்பசித்திப் பெருவாழ்வில், பெருஞ் சுகத் தையும், பெருங்களிப்பையும், அடைந்து வாழும் பொருட்டு—மேற் குறித்த உண்மைக்கடவுள், தாமே திருவுள்ளங்கொண்டு, சுத்தசன்மார்க் கத்தின் முக்கிய லக்ஷியமாகிய, உண்மை விளக்கஞ் செய்கின்ற, நூ ஞானசபையை, சித்திவளாகம் என்னும், இச்சந்நிதானத்திற் கடித்த உத் தரஞான சிதம்பரம், அல்லது ஞானசித்தி புரம் என்று குறிக்கப்படு கின்ற வடலூர் பார்வதி புரத்தில் தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து, "இக்காலந் தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங் காலம் அற்புத சித்திகள் எல்லாம் விளங்க யாமே அமர்ந்தருளித் திரு விளையாடல் செய்தருள்கின்றும்" என்னும் திருக்குறிப்பை இவ்விடத்தே தாயினுஞ் சிறந்த பெருந்தயவுடைய நமது கருணைக்கடலா ராகிய அருமைத் தந்தையார் அருட்பிரகாச வள்ளலார் முன்னிலையாகப் பல வாற்றானும் பிரசித்தப்பட வெளிப்படுத்தி, அருட்பெருஞ்ஜோதி சொரூப ராய் அப் பெருங்கருணை வள்ளலாரது உடல் பொருள் ஆவிகளைக் கொண்டு பொற்சபை, சிற்சபைப் பிரவேசஞ் செய்வித்தருளி, அரிய அவரது திருமேனியில் தாம் கனிவுறக் கலந்தருளிய எல்லாம் வல்ல சித்தத் திருக்கோலங்கொண்டு, அருளரசாட்சித் திருமுடி பொறுத்து அருள் விளையாடல் செய்தருளுந நிமித்தம், ஈரேழு பதினன்கு உலகங் களி லுள்ளவர்கள் யாவரும் ஒருங்கே, இஃது என்னை! இஃது என்னை! என்று அதிசயிக்கும்படி வெளிப்பட எழுந்தருளும் தருணம் அடுத்த

அதிசமீபித்த தருணமா யிருத்தலினால்,—அங்ஙனம் வெளிப்படுந் திரு வரவுபற்றி எதிர்பார்த்தலாகிய விரதங்காத்தலில் நிற்கும், அல்லது நிற்க வேண்டிய, நாம் எல்லவரும் மேற்குறித்த அரிந்திய அற்புதத் திரு வரவு நேரிட்ட கணத்திற்றானே, சுத்தசன்மார்க்க அரும் புருஷார்த்தங் களின் பெரும்பயன்களாகிய எக்காலத்தும் நாசமடையாத சுத்தம் அல் லது சுவர்ணதேகம், பிரணவ தேகம், ஞான தேகம் என்னும் சாகாக் கலானுபவ சொரூப சித்தித் தேகங்களும், தன்சுதந்தரத்தால் தத்து வங்கள் எல்லாவற்றையும் நடத்துகின்ற தனிப் பெருவல்லபமும், கடவுள் ஒருவரே என்றறிகின்ற உண்மை ஞானமும், கருமசித்தி, யோகசித்தி, ஞானசித்தி, முதலிய எல்லாச் சித்திகளும், பெறுகின்ற அருட்பேறும் பெற்று, வாழ்கின்ற பேரின்ப சித்திப் பெருவாழ்வை அடைவதற்கான சுத்தசன்மார்க்கத் தனிப் பெருநெறியைப் பற்று வதற்குரிய உண்மை ஒழுக்கங்களில் நாமெல்லவரும் தனித்தனி ஒழுக வேண்டுவது அவசியமாகலில், அவ்வொழுக்கங்கள் இவை என உணர வேண்டுவது இன்றியமையாததாகும்.

சன்மார்க்கப் பெருநெறியின் ஒழுக்கங்கள் :—

1. இந்திரிய ஒழுக்கம், 2. கரண ஒழுக்கம், 3. ஜீவ ஒழுக்கம், 4. ஆன்ம ஒழுக்கம் என நான்கு வகைப்படும். அவற்றுள்,

1. இந்திரிய ஒழுக்கம்

நாத முதலிய தோத்திரங்களை உற்றுக்கேட்டல் மற்றவை கோதாதிருத்தல், கொடுஞ்சொல் முதலியவை செவிபுகாமல் நிற்றல். அசத்தங்களை தீண்டாதிருத்தல், கொடூரமாகப் பாராதிருத்தல், ருசியின் மீது விருப்பமின்றி யிருத்தல், சுகந்தம் விரும்பாதிருத்தல் என்னும் ஞானேந்திரிய ஒழுக்கமும்; இனிய வார்த்தையாடுதல் பொய் சொல்லா திருத்தல், ஜீவஹிம்சை நேரிடுங்கால் எவ்விதத்தந்திரத்திலாவது தடை செய்தல், பெரியோரிடத்திற் செல்லுதல் — என்றல், சாதுக்களிடம் பரிச்சயம் பண்ணுதல், உயிர்க்கு உபகரிக்கு நிமித்தம் சஞ்சரித்தல், உயிர்க்கு உபகார நிமித்தம் கையால் உபகரித்தல், மலஜல பாதைகள் அளவு மீறுமலும் கிரமங் குறையாமலும் அளவைபோல் தந்திர ஔஷதிகளாலும், ஆகாரப் பக்குவத்தாலும், பவுதிகப் பக்குவத்தாலும் செய்வித்தல் என்னும் கருமேந்திரிய ஒழுக்கமும் ஆகும்.

2. காண ஒழுக்கம்

சிற்சபையின்கண் மனதைச் செலுத்துவது தவிற மற் றெந்த வகை ஆபாசத்திலும் செலுத்தாமல் இழுத்து மேற்குறித்த இடத்தில் நிறுத்துதல், பிறர் குற்றம் விசாரியா திருத்தல், தன்னை மதியாதிருத்தல், செயற்கைக் குணங்களால் உண்டாகிய கெடுதிகளை நீக்கி இயற்கையாகிய சத்துவ மயமா யிருத்தல், பிறர்மேற் கோபியா திருத்தல் தனது சத்துருக்களாகிய தத்துவங்களைக் கோபித்தல், அக்கிரம அதிக்கிரமப் புணர்ச்சி செய்யாதிருத்தல் முதலிய வாம்.

3. ஜீவ ஒழுக்கம்

எல்லா மனிதரிடத்தும் ஜாதி, சமயம், குலம், கோத்திரம், சூத்திரம், சாத்திரப், தேசம், மார்க்கம், உயர்வு, தாழ்வு முதலிய பேத மற்றுத் தானுக நிற்றல், முதலிய வாம்.

4. ஆன்ம ஒழுக்கம்

என்பத்து நான்கு நூறுயிரம் யோனி பேதங்களிடத்தும் உள்ள ஆன்மாக்களிடத்தும் இரங்கி, ஆன்மாவே சபையாகவும் அதன் உள்ளொளியே பதியாகவும் கண்டு கலந்து பூரணமாக நிற்றல் முதலிய வாம்.

இங்ஙனங் கூறிய ஒழுக்கங்களுள்ளே இந்திரிய ஒழுக்கம், காண ஒழுக்கம், என்னு மிவற்றை நாம் ஒவ்வொருவரும் உண்மை யுணர்ச்சியுடன், மேற்கொண்டு ஒழுகவேண்டும்; ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என்னும் இரு வகையான அரிய ஒழுக்கங்கள் திருவருட்டுணை பெற்ற பின்னன்றிக் கைகூடா: ஆதலால், அவ்வொழுக்கங்களைப் பெற்று ஒழுகவேண்டுவதற்கும் ஆன நன்முயற்சிகளில் பழக வேண்டும். அன்றியும் —

இவ்வண்ணமான ஒழுக்கங்களில் இயன்றமட்டில் ஒழுகப் பெற்று, இடந்தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், தெய்வம் போலல், பிறவுயிர்க்கிரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப்பணிதல், பத்தி செய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில் பலகால் முயன்று முயன்று பழகிப்பழகி இருத்தல் வேண்டும். அன்றியும் —

சைவம் வைணவம் சமணம் பவுத்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும், அச்சமயங்களிற் குறித்த சாதனங்களும், தெய்வங்களும், கதிகளும், தத்துவ சித்தி

விகற்ப பேதங்களென்றும், அவ்வச் சமயங்களிற் பலபட விரிந்த வேதங்கள் ஆகமங்கள் சாத்திரங்கள் புராணங்கள் முதலிய கலைகள் எல்லாம் தத்துவ சித்திக் கற்பனைக் கலைகளென்றும், வேதாந்தம், சித்தாந்தம் முதலாகப் பல பெயர்கொண்டு பலபட விரிந்த மதங்களும் மார்க்கங்களும் சுத்தசன்மார்க்கானுபவ லேச சித்தி பேதங்களென்றும், கேள்விப் பட்டிருக்கின்றனம். ஆகவில், அத்திரு வார்த்தைகளில் உண்மையான நம்பிக்கை கொண்டு, அவ்வவற்றின் உண்மைகளை உள்ளபடியே உணர்த் தப்பெற்று அவைகளின் அனுபவங்களை அடைதல் வேண்டுவதுபற்றி, அவ்வச் சமய மதாசாரங்களைச் சிறிதும் அனுட்டியாது நிற்றலும், அவற்றில் சுத்திய வுணர்ச்சி கொள்ளாமல் விடுதலும் வேண்டும். அன்றியும் —

உலகியற்கண் பொன் விஷய இச்சை, பெண் விஷய இச்சை, மண்விஷய இச்சை, முதலிய எவ்விஷய இச்சைகளிலும், நமது அறிவை ஓர் அணுத்துணையும் பற்றுவிக்காமல், பொதுப்பட நல்லறிவு, கடவுள் பக்தி, உயிரிரக்கம், பொதுநோக்கம், திரிகரண அடக்கம், முதலிய நற்குண ஒழுக்கங்களில் நின்று, உண்மையுரைத்தல், இன்சொல்லாடல், உயிர்க் குபகரித்தல், முதலியவாகக் குறித்த நற்செய்கைகளையும் உள்ளபடி பெற்று, சித்திவளாகம் என்னும் இம்மஹா சன்னிதானத்திற்றானே தரிக்கப்பெறவும்; உலக முகப்பட்ட பராக்கிலில் விலகி ஏமாந்து விடாமலும்; நமது எல்லாம் வல்ல ஆண்டவனுர் அற்புதத் திருவரவு குறிக்கும் வெளிப்படுகைக்கு எதிர்பார்க்கும் நிலையினராய், எல்லா அண்ட சராசரங்களையும் தமது தனித் திருவருட் செங்கோல் கொண்டு நடாத்துவித் தருளும் பேரருட் பெருங் கருணைவாய்ந்த தனிப்பெருந் தலைவனது அரிய திருவருகைச் சம்பந்தமான வழிபடுகை, அல்லது மங்கலம் புனைதல், முதலிய திருப்பணியினிடம் நமது காணைந்திரியங்களை விடுத்துக் குதூகலத்துடன் விந்து விளக்கம், நாதஒலி, என்பவற்றில் புறக்கடையில் விலகப்படாமலும்; ஆண்டவனுரது அருளற்புத ஞானசித்தத் திருமேனியின் மங்கலத் திருக்கோலத்தைக் கண் காட்சியாக, உடல் குழைய, உள்ளங்குளிர, ஆனந்தக் கண்ணீர்கொண்டு, பரவசத்துடன், தரிசிக்கப் பெறும், பெரும் புண்ணியமுடையவர்களாய் எதிர்பட வாய்க்கப்பெறவும் — நின்றேமேயானுல்;

நாம் எல்லவரும் சுத்தசன்மார்க்கத்தினுக்கு உரிமையுடையவர்களாகி, அறிவு வந்த கால முதல் கண்டறியாத அற்புதக் காட்சிகளையும், கேட்டறியாத அற்புதக் கேள்விகளையும், அறிந்தறியாத அற்புத அறிவுகளையும், அடைந்தறியாத அற்புதக் குணங்களையும், செய்தறியாத அற்புதச் செயல்களையும், அனுபவித்தறியாத அற்புத அனுபவங்களையும்,

வெளிப்படத் தரிசிக்கும் அதீத கணத்தினுள்ளே, பெற்றுப் பெருங் களிப்புடன் எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், தடைபடாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வு, என்னும் பேரின்ப சித்திப் பெருவாழ் வில் வாழப்பெறுவோம்.

இது சத்தியம், சத்தியம், சத்தியம்.

நேரிசை வெண்பா

ஏமாந் திருக்கு மெமரங்கா ளிவ்வுலகில்
சாமாந்த ராகாத் தரம்பெறவே — காமாந்த
காரத்தை விட்டுக் கருதுமினே வித்தருணம்
நீரத்தைச் சேர்வீர் நிஜம்.

போற்றி யுரைக்கின்றேன் பொய்யென் றிகழாதீர்
நாற்றிசைக்கண் வாழு நமரங்காள் — ஆற்றலருள்
அப்பன் வருகின்றான் அருள் விளையாட் டாடுதற்கென்
றிப்புவியி லித்தருண மிங்கு. (பக்கம் 337. சுத்த சிவநிலை.)

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

15. திருவருளை எவ்வாறு பெறக்கூடும்?

அருட்பெருஞ்ஜோதி

கடவுளது திருவருளை எவ்வாறு பெறக்கூடும்? அருளென்பது கடவுள் தயவு. ஜீவகாருண்ய மென்பது ஜீவர்கள் தயவு. ஆதலால், சிறு வெளிச்சத்தைக்கொண்டு பெரு வெளிச்சத்தைப் பெறுவதுபோல், சிறிய தயவாகிய ஜீவ தயவைக்கொண்டு பெருந் தயவாகிய கடவுளருளைப் பெறவேண்டும்.

அக்கடவுள் தயவாகிய அருள் எத்தன்மையுடையது? நமது ஆன்ம அறிவாகிய புத்தி தத்துவத்திலுக்கு நன்மை தீமையை விளக்கிக் காட்டுவதாயும், வேதாகம கலைகளைக்கொண்டு நன்மையாதிகளை விதிப்பதாயும் அறிபவர்களின் தரத்திற் கொத்ததாயும், அறிபவர்கள் எந்த வஸ்துவை அறிகின்றார்களோ அந்த வண்ணமாயும் உள்ளது.

அத்தன்மையான அருள்—பிண்ட அண்டத்தில் எவ்வண்ணமாய் விளங்குகின்றது?

காண்பார், காணுமிடம், காணப்படுமிடம்; அறிவார், அறியுமிடம், அறியப்படுமிடம்; தூண்டுவார், தூண்டுமிடம், தூண்டப்படுமிடம்; சுவைப்பார், சுவைக்குமிடம், சுவைக்கப்படுமிடம்; அனுபவிப்பார், அனுபவிக்குமிடம், அனுபவிக்கப்படுமிடம்; கருதுவார், கருதுமிடம், கருதப்படுமிடம்; முகருவார், முகருமிடம், முகரப்படுமிடம்; கேட்பார், கேட்குமிடம், கேட்கப்படுமிடம்; முதலியவாய் விளங்கும்.

இவ்வண்ணம் விளங்கும் அருளை, நாம் பெறுவதற்கு உபாயம் என்ன?

புத்தி தத்துவத்தால் நன்மை தீமையை விசாரித்து, நன்மையே உருவாய் விளங்கும் பெரியாரைத் துணைக்கொண்டு, அவரால் கட்டளை பிடும் திருப்பணியைக் கைக்கொண்டு இடையறாது செய்யில், அவ்வருளைப் பெறலாம்.

நன்மை தீமை என்பவை யாவை?

நன்மை தீமை யென்பவை புண்ணிய, பாவம்.

புண்ணிய மென்பது:—

ஆரம்பத்தில் செய்வதற்கும் அனுபவித்தற்கும் முயற்சிப்பதற்கும் துக்கமாயும், பின் சுகமாயும் விளங்கும்.

பாவ மென்பது:—

ஆரம்பத்தில் சுகமாயும், பின் துக்கமாயும் இருக்கும்.

புண்ணிய பாவங்கள் நம்மை எவ்வாறு அடைகின்றன?

மனம், வாக்கு, காயம், என்னும் மூன்றினாலும் அடையும். மேலும், மனத்தினிடத்தில் நால்வகையும், வாக்கினிடத்தில் நால்வகையும், சரீரத்தினிடத்தில் நால்வகையும், ஆகப் பன்னிரண்டு வகையாய் நம்மை அடையும்.

அவையாவன:—

மனத்தினால்:—1. பரதாரகமனம் பண்ண நினைத்தல், 2. அன்னியருடைய சொத்தைக் கிரகிக்க நினைத்தல்; 3. அன்னியருக்குத் தீங்கு செய்ய நினைத்தல்; 4. முடியாதகாரியங்களை நினைத்து அக்காரியம் அன்னியர்களுக்கு முடிந்ததை நினைத்துப் பொறுமையடைதல். இவை நான்கும் மனத்தினால் செய்யும் பாவங்கள்.

வாக்கினால்:—1 பொய் சொல்லல்; 2. கோட் சொல்லல்; 3. புறங்கூறல்; 4. வீணுக்கழுதல்—இவை நான்கும் வாக்கினால் உண்டாகும் பாவங்கள்.

தேகத்தினால்:— பிறர் மனைவியைத் தழுவுதல்; புசிக்கத்தகாத வேத விரோத ஆகாரங்களைப் புசித்தல்; அன்னியர்களை இம்சை செய்தல்; தீங்கு செய்கிற வர்களைத் தடுக்காமல் அவர்களுக்கு உபகாரஞ் செய்தல் — இந்நான்கும் தேகத்தால் உண்டாகும் பாவங்கள்.

இவை போன்றவைகளைத் தவிர்த்து, 1. அன்னியர்களுக்கு நன்மை யுண்டாக நினைத்தல், 2. பொறுமை யடையாதிருத்தல், 3. அன்னியர் சொத்தைத் தனதாக்க எண்ணாதிருத்தல், 4. தனது மனைவி தவிர

அன்னியமான பெண்களைத் தாய், சகோதரி முதலியவர்களாகச் சிந்தித்தல் — இவை மனத்தால் வரும் புண்ணியங்கள்.

1. பொய் சொல்லாமை, 2. கோட் சொல்லாமை, 3. இன் சொல்லாடல், 4. தோத்திரம் செய்தல்—இவை நான்கும் வாக்கினலுண்டாகும் புண்ணியங்கள்.

அன்னியர்களுக்குத் தீங்குண்டாகுங்கால், விலக்கல் முதலான நன்மையான கிருத்தியங்களெல்லாம் புண்ணியங்கள்.

அறிந்து செய்த பாவங்களும் அறியாது செய்த பாவங்களும் எவ்வாறு நீங்கும் ?

அறிந்த பாவங்கள் செய்தபின், தனக்குப் — பாவம் செய்ததாக எவ்வகையிலாவது தெரிந்தபின், "நாம் பாவச் செய்கையை முன்னமே தெரிந்தும், மோகத்தாலும், மறதியாலும், அபிமானத்தாலும், அகங்காரத்தாலும், செல்வச் செருக்காலும், தாட்சண்ய உடன் பாட்டாலும், உணவு பற்றியும், புகழ் பற்றியும், வழக்கம் பற்றியும் செய்து விட்டோமே!" என்று பச்சாத்தாபப்பட்டுப் பெரியோர்களை யடுத்து, அவர்களால் நியமனம் செய்யப்படும் பிராயச் சித்தங்களைக் கைக்கொண்டு, அவ்வண்ணம் இச்சரீரத்தைத் தவத்தாலும் விரதத்தாலும் இளைக்கச் செய்வதுமன்றி, யாத்திரையாதிய மேற்கொண்டு, புண்ணிய ஸ்தலங்களிற் சென்று வசித்து, இயன்றவளவில் அன்னவிரயஞ் செய்தால் நீங்கும். மேலும், சத்தியற்றவர்களாயும் வார்த்திகர்களாயு முள்ளவர்கள் மகான்களுக்குத் தொண்டு செய்தால் நீங்கும். மகான்கள் நேரிடாத பக்ஷத்தில், பச்சாத்தாபத்துடன் பாவகாரியங்களைச் செய்யாமலும், பாவிகளுடைய கூட்டத்தில் பழகாமலும், திருவருளைச் சிந்தித்து அவர்கள் தரத்திற் கொத்த தெய்வங்களைச் சிந்தித்துக் கொண்டிருந்தால் நீங்கும்.

அறியாத பாவங்கள் யாவெனில் :—

நடக்குங் காலத்திலும், நீராடுங் காலத்திலும், சயன காலத்திலும், தனக்குத் தோன்றுமல் நேரிடும் பாவங்களாம். இதன்றி, அவை மனதிற்குப் புலப்படாமலும் உண்டாகும். இவைகள் யாவும் — தினஞ் செய்யுஞ் ஜபத்தாலும், பாராயணத்தாலும், ஸ்தோத்திரத்தாலும், விருந்துபசரித்தலாலும், தெய்வம் பாவலாலும் நீங்கும்.

பிராயச்சித்த முதலியவைகள் செய்யாவிட்டால் பாவங்களா லடையுங் கதி யென்ன?

மனத்தால் செய்யும் பாவங்கட்குச் சண்டாளாதி சரீர முண் டாகும். வாக்காற் செய்த பாவங்கட்கு மிருகம் முதலான சரீர முண் டாகும். தேகத்தால் செய்யும் பாவங்கட்கு மரம் முதலான சரீர முண் டாகும்.

வேதாந்திகள் "பாவம் முதலிய கருமங்களும், புண் ணியம் முதலிய ஏதுக்களும், நமக்கில்லை. நாம் சர்வ சாகூடி" என்கிறார்களே—அஃதென்ன?

தேக வாசனை இந்திரிய வாசனை, கரண வாசனை, பிராண வாயுவின் செயற்கையி லுண்டாகும் வேறுபாடு, முதலிய நன்மைகளில் சலிப்பற்று, ஆகாரம், நித்திரை, பயம் முதலியவைகளில், தாம் சலித் தும் சோர்ந்தும், திடுக்கிட்டும், இல்லாமல், நிவாத தீபம் போல் விளங் கும் ஜீவன் முத்தர்கள் சமூகத்தில், பாப கிருத்தியங்கள் நடவா; புண் ணியங்களும் பிரயோஜனம் பற்றிச் செய்யார்கள்; பொன்னும் ஓடும் சரியாகக் காண்பார்கள். அத்தன்மையுடைய நித்திய, முத்த, சுத்த, ஞான தேக சித்தர்கட்குப் பாவ புண்ணிய மில்லை யென்று அவர்கள் சொல்ல வேண்டியதில்லை; நமக்கே தெரியும்.

மேலும், அவர்கள் இந்தப் பவுதிக சரீரத்தில் வசித்தாலும், சரீரமாகிய தத்துவ தாத்விகங்கள் இப்போது நமக்கு அசுத்த தேக மாயும், அசுத்தப் பொறியாயும் அசுத்தக் காரணமாயும், அசுத்த அனுபவ மாயும், அசுத்த அறிவாயும், இருப்பதுபோல் இரா. தத்த படத்தைப் போல் காரியத்தில் இலதாயும், காரணத்தி லுளதாயும், அறிவே வடி வாய், அறிவே பொறியாய், அறிவே மனமாய், அறிவே யழுகாய், அறிவே புருவாய், அறிவே புணர்வாய், அறிவே யனுபவமாய், அறிவே யறிவாய், விளங்கும்.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

16. சித்திவகை மூன்று

அருட்பெருஞ்ஜோதி

சித்தி வகை :— கருமசித்தி, யோகசித்தி, ஞானசித்தி, என மூன்று வகை.

கர்ம சித்தியாவது :-

அணிமா — தருமபை மேருவாக்குகிறது ; மகிமா — மேருவைத் தருப்பாக்குகிறது ; கரிமா — மேருவை ஒன்றுமில்லாமல் செய்கிறது ; லகிமா — ஒன்றுமில்லாத இடத்தில் அனேகங்களாகச் செய்கிறது ; ஈசத்துவம் — குளிகை வல்லபத்தா லெங்கும் செல்லுகிறது ; பிராகாமியம் — பரகாயப்பிரவேசம் ; வசித்துவம் — எழுவகைத் தோற்றமாகிய, 1. தேவ, 2. மானுஷ்ய, 3. நாக, 4. மிருக, 5. பக்ஷி, 6. ஊர்வன, 7. விருக்ஷம், முதலியவற்றைத் தன் வசப்படுத்துகிறது ;

தேகத்தைக் கல்பசித்திசெய்து கொள்ளுதல் ; அபாமார்க்கி ; சதாசிவாந்த அனுபவம் ; சதாசிவ கால வரை ; பிரேதத்தை உயிர்ப்பித்தல் ; சித்தி காலம் $3\frac{3}{4}$ நாழிகை முதல் $3\frac{3}{4}$ வருஷத்திற்குள்.

யோக சித்தி விவரம் :-

64 சித்திகளையும் தன் சுதந்தரத்தில் நடத்துகிறது

சங்கல்ப குளிகை ; பிராண கல்பதேகி ; பிரம காலம் ; பராபரமார்க்கி ; சித்திகாலம், 12 வருஷ முதல் 108 வருஷத்திற்குள் ; புதைத்த தேகத்தை நாசமடையாமுன் உயிர்ப்பித்தல்.

ஞான சித்திகளின் விவரம் :-

அறுபத்து நாலாயிரம் சத்திகளையும் தன் சுதந்தரத்தில் நடத்துகிறது ; 688 கோடி பேதமாகிய மகாசித்திகளையும் தன்னிஷ்டம்போல் நடத்துகிறது ; காலம் கடந்தது ; அடிநிலை முடிநிலை சுத்த கர்ம சுத்த யோக சுத்தஞான சித்தி வல்லபங்களைத் தன் சுதந்தரத்தால் நடத்துகிறது.

அருட்பெருஞ்ஜோதி



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

திருவைதுண்டியம்

சமரச சுத்தசன்மார்க்கத்

திருநெறிக் குறிப்புகள்

1. சமரசவேத சன்மார்க்க சங்கம்

அருட்பெருஞ்ஜோதி

சமரசவேத சன்மார்க்க சங்கம் என்பதற்குப் பொருள் :—

எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவுநூல் முடிபான நான்காவது மார்க்கத்தை அனுஷ்டிக்கின்ற கூட்ட மென்று கொள்க.

மேற்படி மார்க்கம் நான்காவன :— 1. தாசமார்க்கம், 2. சற்புத்திர மார்க்கம், 3. சகமார்க்கம், 4. சன்மார்க்கம் என நான்கு.

ஷடாந்த சமரச சுத்த சிவ சன்மார்க்கம் என்பதில் ஷடாந்தம் என்பது யாது ?

வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆக ஆறு. மேற்படி அந்தங்களின் அனுபவம், காலம், இடம், முத

லிய வேறு பாடுகளால் எறிக் குறையும். ஆதலால் ஷடாந்தமும் வியாபகமில் லாமல் வேதாந்த சித்தாந்தத்தில் நான்கந்தமும் வியாப்பியமா யிருக்கின்றன.

வை அந்தம் நான்கின் ஐக்கிய விவரம் :—

வேதாந்தத்தில் போதாந்த யோகாந்தமும்; சித்தாந்தத்தில் நாதாந்த கலாந்தமும்; அடங்கியிருக்கின்றன. இந்த ஐக்கியம் பற்றி வேதாந்த சித்தாந்தமே, இப்போது அனுபவத்தில் சுத்த வேதாந்த, சுத்த சித்தாந்தமாய், வழங்குகின்றன.

இவற்றிற்கு அதீதமாகிய சுத்த வேதாந்த சித்தாந்த அந் தாந்தமாகிய சமரச சுத்தசன்மார்க்கமே நித்திய மார்க்கம். மேற்குறித்த மார்க்கத்திற்குச் சமய மதங்களாகிய சன்மார்க்கங்கள் அநந்தியமாய் விளங்கும்; அந்தியமல்ல.

வை சமயமத மார்க்கங்கள் எவை எனில் :—

சமய சன்மார்க்கம், மதசன்மார்க்கம், என இரண்டு. இவற் றுள் அடங்கிய சன்மார்க்கம் அநந்தம். அதில், சமய சன்மார்க்கத் தின் வகை ஆறு, தொகை முப்பத்தாறு, விரிவு அறுகோடி. இது போல் மதத்திலும் வகை தொகை விரிவு உள்ளன. மேற்குறித்த சமய மத சன்மார்க்கங்களில், வகர வித்தை தகர வித்தை யுள. அவை அவ்வச் சமயமத சன்மார்க்கங்களின் தலைமையாகிய கர்த்தா, மூர்த்தி, ஈசுரன், பிரமம், சிவம் முதலிய தத்துவங்களின் காலப் பிரமாண பரி யந்த மிருக்கும்; அதற்குமே லிரா.

மேற்படி சமயமத சன்மார்க்கங்களில் ஷடாந்த சமரச முளதோ வெனில் :—

உளது. யாதெனில் :—

வேதாந்த சித்தாந்த சமரசம்; போகாந்த கலாந்த சமரசம்; போதாந்த நாதாந்த சமரசம்: இதற்கு அதீதம் ஷடாந்த சமரசம். இதற்கு அதீதம், சன்மார்க்க சமரசம். இதற்கு அதீதம், சுத்த சமர சம். ஆதலால், சுத்த சமரசத்தில், சன்மார்க்கத்தைச் சேர்க்க, சுத்த சமரச சன்மார்க்க மாம். இது பூர்வோத்தர ஞாயப்படி, கடைதலைப் பூட்டாகச் சமரச சுத்த சன்மார்க்க மென மருவியது.

இதன் தாத்பரியம் யாதெனில் :—

1. சமரசம் என்பதற்குப் பொருள் :— எல்லா அந்தங்களி னது அந்தமும் தனக்குப்பூர்வமாக்கித் தானுத்தரத்தில் நின்று மருவியது சமரசம். இதற்கு அனுபவம் குருதுரிய ஸ்தானம்.

2. சுத்த சமரச மென்பதற்கு ஞாயம் :—

விந்து, பரவிந்து, இரண்டையும் மறுக்கச் சுத்தவிந்து வந்ததுபோலும்; சிவம், பரசிவம், இரண்டையு மறுத்தது சுத்தசிவம் போலும்; சன்மார்க்கம், சிவசன்மார்க்கம் இரண்டையும் மறுத்தது சுத்த சன்மார்க்கம்.

பூர்வத்தில் நின்ற சமயமத சன்மார்க்கங்களை மறுப்பது சுத்த சன்மார்க்கம். இதன் பொருட்டு ஷடாந்த சமரச சுத்தசன்மார்க்க மென்றே மருவியது. ஒருவர்று, ஷடாந்தங்களின் பொதுவாகிய, ஷடாந்த சன்மார்க்கம் ஒன்று; இதன் பூர்வத்தில் சமரச சன்மார்க்கம் ஒன்று; இதன் உத்தரத்தில் சுத்த சன்மார்க்கம் ஒன்று; ஆதலால் ஷடாந்த சமரசம். ஆன்மாவுக்கு அருள் எப்படி அநந்தியமோ, அதுபோல் சுத்த சன்மார்க்கத்திற்குப் பூர்வத்தில் சொன்ன சன்மார்க்கங்கள் யாவும் அநந்தியம்.

சன்மார்க்கம் என்பதில் வகை தொகை விரிவு அனந்தம். இதன் தாத்பரியம் யாதெனில் :—

சமயசன்மார்க்கத்தின் பொருள் குணத்தினது லக்ஷியத்தை அனுசந்தானஞ் செய்வது.

குணமென்பது யாது ?

சத்துவகுணம்; இயற்கை உண்மை ஏகதேசமான சத்துவ குணத்தின் சம்பந்தமுடைய மார்க்கமே சமய சன்மார்க்கம்.

சத்துவ சம்பந்தமுடைய மார்க்கம் யாதெனில் :— சத்போதம், சத்கர்மம், சத்சங்கம், சத்காலம், சத்விசாரம், சத்பாத்திரம், சற்சனம், சற்செய்கை, முதலியனவும் சத்துவ சம்பந்தம், உடையன.

இதன் இயல்பாவன :—

கொல்லாமை, பொறுமை, சாந்தம், அடக்கம், இந்திரிய நிக்கிரகம், ஆன்ம இயற்கைக் குணமாகிய ஜீவகாருண்யம். இது சத்துவ குணத்தின் வாச்சியார்த்தம். இவ்வணம் வாச்சியானுபவம் பெற்றுச் சொரூபானுபவமாகிய சாதனமே சமய சன்மார்க்கம்.

சமயாதீதமாவது மதம், மத சன்மார்க்கத்தின் பொருள் : நிர்க்குண லக்ஷியஞ் செய்வது.

நிர்க்குணமாவது, பூர்வகுண மாகிய சத்துவத்தின் வாச்சியா னுபவம் பெற்று லட்சியானுபவம் பெறுதல்.

யாதெனில் :—

சோகம், சிவோகம், தத்துவமசி, சிவத்துவமசி என்னும் வாக்கியத்தின் முக்கியானுபவம்.

சத்துவகுண நிர்க்குண லட்சியத்திற்கு மார்க்கம் நான்கு :

எவை எனில் :—

சத்துவகுணத்தின் முதல் விளைவு, தன்னடிமையாகப் பல ரையும் பாவித்தல், இரண்டாவது புத்திரனைப் பாவித்தல், மூன்றுவது சிநேகிதனைப்போலப் பாவித்தல், நான்காவது தன்னைப்போலப் பாவித்தல். இது ஜீவ ஞாயம். இவ்வாறேதான் கடவுளுக்கு அடிமையாதல், பத்தி ரனைதல், சிநேகனைதல், கடவுளே தானைதல். இது சத்துவ குண லட் சியார்த்த மாகிய மதசன்மார்க்க முடிபு.

சத்துவகுண விளைவு என்பதற்குப் பொருள் :— சத்துவ குணத் தின் முக்கிய லட்சியமாகிய எல்லாம் வல்ல சர்வ சித்தியோடு ஞான சித்தியைப் பெறுதல். 'நெல்லி விளைத்தான் என்பதன் பொருள்—உழு தல் தொடங்கிக் கிரகத்தில் சேர்த்து அனுபவிக்கிற பரியந்தம்—அடங்கி யிருப்பதுபோல்' சன்மார்க்கம் என்பது—சாதாரணம் முதல் அசாதாரணம் ஈறுக அடங்கிய பொருளெனக் கொள்க.

குண நிர்க்குண வாச்சிய லட்சி யார்த்தமாகிய சமய மதத் தின் அனுபவ மல்லாதது சுத்தசன்மார்க்கம். இம்மார்க்கத்திற்கு மேற் குறித்த மார்க்கங்கள் அல்லாதனவே யன்றி இல்லாதன வல்ல.

சுத்த சன்மார்க்கந்தான் யாதெனில் :—

சுத்தம் என்பது, ஒன்றுமல்லாதது. சுத்தம் என்பது சன் மார்க்க மென்னுஞ் சொல்லுக்குப் பூர்வம் வந்ததால், மேற்குறித்த சமய மதானுபவங்களைக் கடந்தது.

சத்மார்க்கம் என்னும் பொருட்கு அர்த்தம் நான்கு வகை:— அஃது பூர்வாதி உத்த ரோத்தர பரியந்தம். இதின் முக்கிய லட்சியம் சுத்தசன்மார்க்க அனுபவ ஸ்தானமாகிய, சுத்த சிவ துரியாதீத நிலை பெறில் விளங்கும்.

ஏகதேசத்தில் ஒருவாறு பூர்வம் என்பதற்குப் பொருள் :—

சிருஷ்டியாதி அனுக்கிரக மீறுகச்செய்யும், பிரமாதி சதாசிவ மீறுக வுள்ள பஞ்சகிருத்திய கர்த்தர்களி லொவ்வொரு கிருத்தியத்தின் விரிவு ஐந்தாக விரிந்த கர்த்தர் பேதம் (25) இருபத்தைந்தாக விரிந்த மஹா சதா சிவானந்த அனுபவகாலத்தை, அறுபத்து நாலாயிரத்தில் (64,000) பெருக்கிய கால அளவு எவ்வளவோ, அக்கால அளவு சுத்த மகா சதா சிவானுபவத்தைப் பெற்றுச் சுத்த தேகியா யிருப்பது. சத் தென்பது பரி பாஷை. அது அனந்த தாத்பர்யங்களைக் கொண்டு ஓர் வாக்கிய பத மாய் நின்றது. மார்க்கம் என்பது யாதெனின் :— துவாரம், வழி. வழி யென்பது :— சத்தென்னும் பொருளின் உண்மையைத் தெரிவிக் கிற மார்க்கம். ஆதலால், எவ்வகையிலும் உயர்வுடையது — பாவனாதீ தாதீதம், குணாதீ தாதீதம், லட்சி யாதீ தாதீதம், வாச்சி யாதீ தாதீதம்; ஆகிய சுத்த சன்மார்க்கம்.

மேற்படி மார்க்கத்தின் ஏகதேசம் அடியிற் குறிக்கும் அனு பவங்கள் :—

எக் காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வகைத் தடையும் வாராத சுத்தமாதி ஞானதேக சித்தியும், அண்ட பிண்ட தத்துவங்களைச் சுதந்தரத்தில் நடத்தும் தனிப்பெரும் வல்லபமும் ஏம சித்தி, பிரேதஜீவி தாதி சித்தியும், வஸ்துப் பிரத்யகூஞானுபவ சித்தியும்— ஆகிய இவற்றை ஒருங்கே அடைவது மேற்குறித்த மார்க்கத்தின் முடிபு. ஒருவாறு.

சத் என்னும் சொல் பரிபாஷை என்பதற்குக் குழூஉக் குறி யாக இதன் கீழ்வரும் சில மந்திர வாசக பத வர்ணிகளை உணர்க.

காரண மாத்திரமாய் விளங்கா நின்ற — விந்து நாத முதலியன வும்; காரிய காரண மாத்திரமாய் விளங்கா நின்ற — அம் அங் சிங் வங் மங் சிவா வசி ஓம் முதலியனவும்; காரிய மாத்திரமாய் விளங்கா நின்ற — ஹரி, சச்சிதானந்தம், பரிபூரணம், ஜோதியுட்ஜோதி, சிவபவசி, சிவயநம, நமசிவய, நாராயணயநம, சரவணபவாயநம, முதலியனவும்; — இவ்வண்ணம் குறித்த பரிபாஷைகளின் உண்மை ஆன்ம அனுபவத்திலும் வகர தகர வித்தையினும் விளங்கும்.

மேலும், மேற்குறித்த வண்ணம் தத்துவங்களை உபாசித்தும், அர்ச்சித்தும், தத்து வாதி தாதீதத்தைத் தியானித்தும், இடையில்

ஜபித்துப், சரண லயமாகச் சமாதிசெய்தும், தத்துவச் சேட்டைகளை அடக்கா நின்ற விரதமிருந்தும், சாதாரண யோகபாகத்தில் மூச்சடக்கியும், சாதகர்கள்—மேற்குறித்த வண்ணம்—செய்வார்கள். சாத்தியர் கட்கே—கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்டைகூடல், என்னும் நான்கும் கடந்து அவர்கள் ஆருடராக நிற்பதால்—சாதன மொன்றும் வேண்டுவதில்லை. மேற்படி சாத்தியர்களே சுத்த தேகிகள். அவர்கள் அனுபவத்தை விரிக்கில் பெருகும்.

2. ஞானம்

ஞான மென்பது — மூன்று வகைப்படும். அவை :— உபாய ஞானம், உண்மை ஞானம், அனுபவ ஞானம்.

இவற்றின் தாத்பர்யம் :—

நகூத்திரப் பிரகாசம்போல் தோன்றிய ஜீவஅறிவே — உபாய ஞானம்;

சந்திரப் பிரகாசம்போல் தோன்றி அறியும் ஆன்ம அறிவே — உண்மைஞானம்;

எல்லா வஸ்துக்களையும் தெரிந்து அனுபவிக்கச் செய்கின்ற சூரியப் பிரகாசம் போன்ற கடவுளறிவே — அனுபவஞானம்.

ஒரு வஸ்துவை அதன் நாமரூபமின்றிக் காண்பது இந்திரியக் காட்சி, இந்திரிய அறிவு: கூடமாக அறிதல் கரணக்காட்சி, கரண அறிவு: இன்னதென்று தெரிதல் ஜீவக்காட்சி, ஜீவ அறிவு; எதையும் தானாக அறிதல் ஆன்மக்காட்சி, ஆன்ம அறிவு; இதற்குத் தோன்றுமறிவு 1, தோற்றுமறிவு 1, தோற்றுவிக்குமறிவு 1, பதியறிவு 1. ஆக — 4.

ஆதலால், ஒரு வஸ்துவினிடத்தில் பற்றுதல் அவா; அதை அநுபவிக்க வேண்டுமென எழுந்தது ஆசை; அதன் மய மாதல் காமம்; அதைத் தன் வசப்படுத்த எழுவது மோகம்; எந்த வஸ்துவிடத்திலும் மோக மாதிக ளின்றி அவாமயமாய் நிற்றல்வேண்டும்.

3. முக்குணம்

தானாக நிற்றல் சத்துவகுணம் 1; ராகத் துவேஷ சம்பந்த முடையது ராஜசம் 2; சோம்பலாதி ஜீவ இம்சைக் கிடனுவது தாமசம் 3.

ஆன்மாவின் செயற்கை — ரஜோதமங்கள்.

ஆன்மாவின் இயற்கை — சத்துவம்.

ஜனன — மரண ஏது செயற்கையா லுண்டாம்; இயற்கையால் சிவானுபவம் பெறலாம். இதை விரிக்கில், ஒவ்வொன்றும் மும் மூன்றுகும், அனந்தமு மாம்.

4. மும்மலங்கள்

1. ஆணவம், 2. மாயை, 3. கன்மம், என மலம் மூன்று. இதில் பக்குவம் மூன்று, அபக்குவம் மூன்று—ஆக ஆறு. இவை ஒவ் வொன்றும் மும்மூன்றுக விரிதலின் 18 ஆம். இந்தக் கன்ம பேதத் தால் அருட்சத்தியின் சமுகத்தில் எழுவகைத் தோற்ற முண்டானது. மேற்படி கன்ம மலத்தால், சிருட்டி உண்டாகும் விவரம் ஒருவாறு: பக்குவ ஆணவம், பக்குவ மாயை—இவ் விரண்டினாலும் விஞ்ஞான கலா பேதம். அபக்குவ மாயை, அபக்குவ கன்மம், அபக்குவ ஆண வம் கூடியது — தேவ நரக பைசாசங்கள். பக்குவ மாயை, அபக்குவ கன்மம் கூடியது — ஜீவர்கள். அபக்குவ கன்மம், அபக்குவ கன்ம ஆண வம், அபக்குவ கன்ம மாயை—இவை கூடியது — தாவர வுயிர்கள். இதை விரிக்கில் பெருகும்.

5. தர்மம்

தர்மமென்பதற்குப் பொருள் :— ஜீவதர்மம், குலதர்மம், சாஸ்திரதர்மம், ஆசாரதர்மம், ஆசிரம தர்மம், ஜாதி தர்மம் முதலியவாக விரியும். இதில் அதிஷ்டானமை, அதின் தன்மை, என இரண்டு. அதன் தன்மை யென்பது — அதின் சுபாவம், சுபாவ மென்பது — இயற்கைக் குணம், அது வென்பது — ஆன்மா. ஆதலால், ஆன்மாவுக்கு இயற்கைக் குணம் — தயை; ஆன்மாவின் இயற்கை யென்பதே தர்மத்திற்குப் பொருள்; ஆன்ம இயற்கையோடு இருந்தால் சிவ மாகலாம். இதைப் பலவாகத் தர்ம மென்று பெயரிட்டார்கள். அருள் வெளியாகிய ஆன்ம இயற்கையால் சிவானுபவத்தைப் பெறுவது உண்மை. இதற்கு வேதா கமங்களில் பலபட விரிந்த நாமங்கள் அனந்தம். அவற்றில் சில :— அருட்சத்தி, அருள்வெளி, விருஷபம், தர்மதேவதை, அனாதி யியற்கைக் குணம், பரஞானம், அகர வுகரம், அருள் நடம், அன்பு, ஆன்ம

நெகிழ்ச்சி, ஆன்ம அனைவு, சுத்த தத்துவம், ஆன்ம அறிவின் பேதம்—என இதை விரித்தார்கள். அருள் வடிவாய்ச் சிவமாகிப் பின்ன மன்றிப் பூரணமா யிருப்பது நிரதிச யானந்தம். ஆனந்த மென்பது — சந்தோஷம், நிரதிசய மென்பது—ஆனந்த மின்மை. ஜீவர் களுக்குத் திருப்தி யின்பத்தை நேர்ந்தவரையில் செய்வது — ஆனந்தா னுபவம்.

6. சங்கல்பம்—சன்மார்க்கக் கொள்கை

சங்கல்பத்தின் பொருளும் விரிவும் யாதெனில் :—

விரிவாவது ஐந்து : 1. நிர்விகல்பம், 2. சவிகல்பம், 3. சங் கல்பம், 4. விகல்பம், 5. கல்பம். இவற்றுள் நிர்விகல்பமாவது :— கடவு ளறிவு. மேற்படி அறிவின் விபாபகமே சவிகல்பம். சங்கல்ப மென் பது :— காரணம் யாதொன்றிலும் பற்றுமல் சுத்தமா யிருந்த காலத்தில் தோன்றிய அனைவே — சங்கல்பம்—ஒன்றிலும் பற்றுது அனைந்த மேலனைவென்னும் புடைபெயர்ச்சியே சங்கல்பம்—நாம் நஷ்ட மடை யோம் என்று உள் ளழுந்திய பிரக்ஞையே சங்கல்பம். விகல்ப மென்பது :— பிரம சதாசிவ கால அளவைக் குறித்தது. இதில் பலவாக விரிந்த அநுசந்தானங்கள் கல்பம். உள்ளழுந்தல், அதைச் சிந்தித்தல், சிந்தித்தலெவிசாரித்தல்—இம் மூன்றுமே சங்கல்ப விகல்ப கல்பம்.

மேற்குறித்த சங்கல்ப மயமா யிருந்தால் சிவானுபவம் பெற லாம் : "சந்ததமும் வேதமொழி யாதொன்றுபற்றி னதுதான் வந்து மூற்றும்" [1] என்றபடி. சர்வசித்தியைபுடைய தனித்தலைமைப் பதியாகிய ஆண்டவரை நோக்கி, அணுக்கள், தபசுசெய்து சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களையும் பெற்றுக்கொண்ட மூர்த்திகளாகியவர் ஒரு தொழி லுடைய பிரமாவும், இரண்டு சித்தியுடைய விஷ்ணுவும், மூன்று சித்தி யுடைய ருத்திரனும்,—இதுபோன்ற மற்றையர்களும், மேல் குறித்த மூவரால் எற்படுத்தியதத்துவ சித்திக் கற்பனைகளாகிய சமய மத மார்க் கங்களை அனுஷ்டித்து, அவர்களையே கர்த்தாக்களாக வணங்கி, வழிபாடு செய்துவருகிற இதுவரையிலுமுள்ள அணுக்கள், மேல் குறித்தவர்களது பதப் பிராப்தியை, மேற்படி அணுக்கள் லேசம் பெற்றுக் கொண்டார்கள். ஆதலால் இவர்களை அனைப்பித்து அநுக்கிரகிக்கும் சர்வ சித்தியை யுடைய தனித்தலைமைக் கடவுளின் சித்தியின் லேசங்கள் இவர்களுக் குள. ஆதலால் இவர்கள் அந்தச் சர்வ சித்தியையுடைய கடவுளுக்குக் கோடி கோடிப் பங்கு தாழ்ந்த தரத்தி லிருக்கின்றார்கள்.

1 தாயுமான சுவாமிகள்—கருணைகாக் கடவுள்.

ஆகவே, சமயத் தேவர்களை வழிபாடு செய்வது அவசிய மல்ல. மேல் குறித்தவர்கள் அற்ப சித்தியைப் பெற்று, அதில் மகிழ்ந்து அகங்கரித்து, மேல்படிகள் ஏறவேண்டியவைகளை யேறிப் பூரண சித்தியை யடையாமல் தடைபட்டு நிற்றல்போல், இங்கு மற்றவைகளை உன்னி அவல மடைந்து நில்லாமல், சர்வ சித்திபுடைய கடவுள் ஒருவருண் டென்று, அவரை உண்மை அன்பால் வழிபாடு செய்து, பூரண சித்தி யைப் பெறவேண்டுவது சன்மார்க்கக் கொள்கை. மேலும், தனித் தலை வன் லக்ஷியந் தவிர அநித்திய சட துக்காதிகளைப் பொருட்படுத்தி உபாசனாதி மார்க்கமாய் வழிபடுவது கொள்கையல்ல. உபாசனை முதலிய வற்றால் வழிபடுதலும் மேல் குறித்த தலைவனைக் குறித்ததே தவிர வேறில்லை.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியே னுமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவிரங்கிக் கேட்பீர்
என்மார்க்கத் தெனைநுமக்கு ளொருவனெனக் கொள்வீர்
எல்லாஞ்செய் வல்லசும திறைவனையே தொழுவீர்
புன்மார்க்கத் தவர்போலே வேறுசில புகன்றே
புந்திமயக் கடையாதீர் பூரணமெய்ச் சுகமாய்த்
தன்மார்க்க மாய்விளங்குஞ் சுத்தசிவ மொன்றே
தன்னுணை யென்னுணை சார்ந்தறிவி னீண்டே.

(பாட்டு. 63—பக்கம். 366.)

அறங்குலவு தோழியிங்கே நீயுரைத்த வார்த்தை
அறிவறியார் வார்த்தையென வுலெனிலிம் மொழிகேள்
உறங்குவதும் விழிப்பதும்பின் உண்ணுவது மிறத்தல்
உறுவதுடன் பிறத்தல்பல பெறுவதுமா யுழலும்
மறங்குலவு மணுக்கள்பலர் செய்தவிர தத்தால்
மதத்தலைமை பதத்தலைமை வாய்த்தனரங் கவர்பால்
இறங்குலிலென் பேசுதலா லென்பயனே நடஞ்செய்
இறைவாடிப் புகழ்பேசி யிருக்கின்றேன் யானே.

(பாட்டு. 6—பக்கம். 272.)

(இதன்றி, திருக்கதவந் திருக்காப் பிடுவதற்கு முந்தின இரவில்), "இதுகாறும் என்னோடு நீங்கள் பழகியும் சன்மார்க்க ஒழுக்கம் இன்னதென்று தெரிந்து கொள்ளவில்லை. யாதெனில் :— இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள்; எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள்" என்ற திருவார்த்தையதனால் தலைவனைத் தொழுவதே தொழிலாகவுடை யது கடமை.

7. நினைப்பு மறைப்பு

நினைப்பு மறைப்பு உண்டாவதற்குக் காரணம் :—

சந்திரன் அக்கினியோடுகூடி, சூரிய பாகத்திலுண்டாகும் காற்றினால் அசைக்கப்படும்போது, உண்டாகும் நினைப்பு ; சூரியன் அக்கினியோடு கூடி, சந்திர பாகத்திலுண்டாகுங் காற்றினால் அசைக்கப்படும்போது, உண்டாகின்றது மறைப்பு.

நினைப்பு மறைப்பு என்பதற்குப் பொருள் :—

1. நினைப்பென்பது யாது ?

ஜனனம், மன அசைவு, ஒன்றை நினைத்தல், சகல காலம், மேற்படி தத்துவம் வேறொன்றில் பற்றல், தத்துவத்தின் அசைவாகிய ஆவி மேலேறுதல், மேற்படி ஆவி எறின இடத்தில் நில்லாது, அக்கிரமித்தல்.

2. மறைப்பென்பது யாது ?

மரணம், தூக்கம், மனமொன்றைப்பற்றி உடனே மறைதல், கேவல காலம், மேற்படி தத்துவத்தின் கூர்மை கீழ்ச்செல்லுதல், பிரக்ஞை இல்லாதிருத்தல், மேற்படி ஆவி அக்கிரமித்தல், மனம் ஆபாசப்பட்டுச் சூனிய மாதல்.

மேற்குறித்த நினைப்பு மறைப் பற்று நிரதிசயானந்தமாய் அருள்வடிவாவதே சுத்த சன்மார்க்க சாதனம்.

8. விருப்பு வெறுப்பு

விருப்பு வெறுப்பு என்பதற்குப் பொருள் :—

1. விருப் பென்பது:—ஒன்றைவேண்டி பந்தப்பட்டு, பூரண லக்ஷியத்தை விட்டு, அதிசயமாகப் பார்த்து நிற்றல், விருப்பு. இந்த விருப்பால் தானுங் கெட்டு, இதர வஸ்துவுங் கெட்டு, சாதனமுந் தடைபட்டு விடும். எவ்வகையிலும் விருப்பென்பது கூடாது.

2. வெறுப் பென்பது யாது ? — வேண்டாமை, துவேஷம், இதர வஸ்துவைப் பற்றுதிருத்தல். இந்த வெறுப்பால் இதர வஸ்து

விடத்தில் துவேஷந் தோன்றி ஜீவோபகாரத்தைத் தடை செய்யும். ஆகையால் வெறுப்புங் கூடாது. மேற்குறித்த இரண்டு மற்று, சத்துவ மயமாய் நிற்றல்வேண்டும்.

9. சமயசூக்கும பஞ்சாக்ஷரத்தின் தாத்பர்யம்

சமய சூக்கும பஞ்சாக்கரத்தின் தாத்பரியம் நான்கு, மேற்படி அக்ஷரம் 5: சி வா ய ந ம—இதற்குத்தாத்பரியம் நான்காவன. பூர்வம், பூர்வ பூர்வம், உத்தரம், உத்தரோத்தரம் ஆக நான்கு.

இதில் பூர்வத்திற்கு அர்த்தம்:— சிவனை நமஸ்கரிக்கின்றேன்.

பூர்வ பூர்வத்திற்குத் அர்த்தம்:— அநாதியில் மலமில்லாத எல்லாமுடைய சிவத்திற்கு என்னுடைய கரண உள்ளங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

மற்ற இரண்டிற்கும் அர்த்தம் — அனுபவத்தால் தெரியலாம். இதுபோல் மத சன்மார்க்கத்திற்கும் மேற்படி அக்ஷரமே. அதற்கும் முன்போலவே நான்கு தாத்பரிய முள்ளது.

அதில் பூர்வத்திற்குத் தாத்பரியம்:— சி என்பது — பதி, வா—என்பது சத்தி, ய வென்பது—ஜீவன், ந வென்பது—திரோதை, ம வென்பது—மா மாயை; ஆதலால் மாமாயை—திரோதை நீங்கி, ஜீவபோத மற்று, அருள் வடிவாய்ச் சிவமாவது.

பூர்வ பூர்வத்தின் தாத்பரியம்:— சி என்பது — எல்லாமுடையது, வா என்பது — அபிந்நமாகிய அருள், ய வென்பது — ஆன்ம சிற்சாயை, ந வென்பது — ஜீவன், ம வென்பது — பசு; ஆதலால், — பசுத்தன்மை கெட்டு, ஜீவ போதம் போய், ஆன்மவியற்கை வடிவாய்ச், சத்துவமயமாய், எல்லாமுடைய துவாய்ப், பூரணமாய் நிற்றல்: ஒருவாறு. அனுபவத்தில், பரவிந்து பாநாதம் பரத்திலும், அபரவிந்து அபரநாதம் பூர்வத்திலும் வழங்கும்.

இவ்வளவும், ஜெப மூலமாய்க் கரண சுத்திவந்து, அக்ஷர முன்னுதலி விட்டு அறிவாகிருதியாய், கருணையும் சிவமுமே பொருளெனும்படி நிற்றற்கு முதற் றுவாரமாம். மற்ற உத்தரத்தில் ஏம சித்தியும் உத்தமோத்தரத்தில் தேகசித்தியும் சொல்லும்: இஃது மத

சன்மார்க்க அநுஷ்டானம். இதுபோல் சமயத்திலும், தேக சித்தியும் ஏமசித்தியு முள. மேல்குறித்த சமயமதங்களின் விரிவு அனந்தகோடி. அந்த சித்திகள் யாவும், அவ்வச்சமய மதங்களின், கர்த்தா, மூர்த்தி, தலைவன், தலைவி, முதலியவர்கள் பதப்பிராப்தி வரையிலும் நிற்கும். ஆதலால் மேல்குறித்த இரண்டு சித்தியும், எக்காலத்தும் அழிவுறு திருப்பதாகச் சொல்லுவது சுத்தசன்மார்க்கப் பூர்வோத்தரம்.

ஏமசித்தி தேகசித்தி ஆகிய இவற்றை மேல்குறித்த சூக்கும, பஞ்சாக்கரத்தில், சொல்லுவதற்குப் பிரமாணம் :—

"சிவாய நம வெனச் செம்பு பொன் னாகிடும் I " "சிவாய நம வெனச் சிந்தித்திருப்பார்க்கு அபாய மொரு நாளு மில்லை. 2" ஆதலால், மேல் குறித்த அக்காரத்தை மகான்கள் குழக் குறியாக—வரி வடிவாய்—சுட்டினர்கள். இதை அக அனுபவிகள் தத்துவங்களை அறிந்து, அனுசந்தானஞ் செய்வார்கள். சாதகிகளுக்கு நாவினு லுன்னிக் கரண மோய்ந்தால், தத்து வானுசந்தானஞ் செய்யக்கூடும். உலகிகள் நாவினு லுன்னத் தங்கள் மநோரதம் சித்திக்கும். வகர வித்தைபுடையவர்கள் மேற்படி அக்காரத்தின் உண்மையைப் பவுதிகம், லோகம், ஓஷதி, லவணம் முதலியவற்றிற் சேர்த்து வகரத்தை முடிப் பார்கள். தகர வித்தைபுடையவர்கள், அதுபோலவே அமைத்துக் கொண்டு, தேகத்தை நீடிக்கச் செய்வார்கள். ஆதலால் மேல் குறித்த அக்காரங்கள் பரிபாஷை. இதனது உண்மை யாவும் சுத்த சன்மார்க்க சகஜ, சாத்திய, ஞானானுபவிக்கு விளங்கும்.

10. சி என்பதன் பொருள்

மேலும் சி என்னு மெழுத்துக்குப் பொருள் ஒருவாறு :—

இதிலடங்கிய பீஜம் 5. அவையாவன :— தோன்றி அசைதலாகிய விந்து 1, அதின் புடைபெயர்ச்சி ஒலி யாகிய நாதம் 2, அதின் வண்ணவடிவ மாகிய வரி அக்காரத்தின் சகரமெய் யென்னும் ச் 3, அதனது குணங்களை வெளிப்படுத்தும் ஆதி அக்காரமாகிய பிரணவமூல அகரம் 4, இதைத் தன்வண்ணச் சுபாவத்தோடு வெளியில் தோன்றச் செய்வித்து விளக்கும் அருட்பிரணவமாகிய இகரம் 5. ஆகக் கூடிய விந்துக்கள் ஐந்தும், ஒருருவமாய்ச் சிகரமாயிற்று. இதன் இலக்கணம் விரிக்கிற் பெருகும். அனுபவத்தா லறிக.

1. திருமூலர் திருமந்திரம்—4-ந் தந்திரம் 21-வது மந்திரம்.
2. ஔவையார்—நல்வழி.

11. சிவ என்பதன் பொருள்

சிவ என்பதற்குப் பொருள் — அநாதியாய் மலமில்லாத சர்வ வல்லமை யுடையது. சி என்பதற்குப் பொருள் — அநாதியாய் மலமில்லாதது; வ என்பதற்குப் பொருள் — சர்வவல்லமை யுடையது.

12. சிவம் என்பதன் பொருள்

சிவம் என்பதற்குப் பொருள் — சச்சிதானந்தம். சச்சிதானந்தமென்பது :— சத்து, சித்து, ஆனந்தம். இதில் சிகரம் — சத்து, வகரம் — சித்து, மகரம் — ஆனந்தம்; சிகரம் — எல்லா முள்ளதாய் விளங்குவது, வகரம் — எல்லாம் விளங்குவதா யுள்ளது, மகரம் — இரண்டினுமிரம்பிய இன்பம்.

13. அகரத்தின் லக்ஷணம் — 9

மூலாங்கப் பிரணவமாகிய அகர லக்ஷணம் ஒருவாறு :—

அ

1. ஊன்றல் — வாமை
2. சுழித்தல் — ஜ்ஞ்டை
3. விசிரிம்பித்தல் — ரௌத்திரி
4. மடித்து மேலேறல் — காளி
5. அங்கிருந்து கீழ்வரல் — கலவிகரணி
6. மேல்புடை பெயர்த்தல் — பலவிகரணி
7. கீழ்த்தாழல் — பதப்பிரமதனி
8. கீழ் ஊன்றி நிற்றல் — சர்வபூத தமனி
9. வரிவடிவாதல் — மனோன்மணி

இதில் விந்து நாதம் முதலிய நவ நிலைகளு மூள.

14. கற்பபேதம் என்பதன் பொருள்

கற்ப பேத மென்பது கடவுள் இடபவாக ரூடராய் உலகத்தி லெழுந்தருளிக், காட்சி கொடுத்தருளுங் காலம். இடப மென்பதற்குப் பொருள் — தர்ம சுவரூபவம். தர்ம மென்பது — காருண்யம், தயவு, அருள். ஆதலால், அருள் வடிவமான ஆன்மாலய உலகமான தேசத்தின் அனுபவ ஞானம் தோன்றுதல்.

15. அண்டமும் பிண்டமும்

அகம் 1. அகப்புறம் 2, புறம் 3, புறப்புறம் 4, என்கின்ற நாலிடத்திலும் கடவுட் பிரகாசமுள்ளது. அதனுள் காரியத்தாலுள்ள விபரம் :—

I. பிண்டத்தில் :—

1. **அகம்** — ஆன்மா : ஒரு பொருளினது உண்மையை யறிதல் — ஆன்ம அறிவு.

2. **அகப்புறம்** — ஜீவன் : ஒரு வஸ்துவின் பிரயோஜனத்தை யறிந்த அறிவே — ஜீவ அறிவு.

3. **புறம்** — கரணம் : ஒரு வஸ்துவின் நாமரூபத்தையும், குணகுற்றங்களையும் விசாரித்தறிதல்—கரணமாகிய மன அறிவு.

4. **புறப்புறம்** — கண் முதலிய இந்திரியங்கள் : ஒரு பொருளினது நாமரூபம் குண குற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக் காணுதல்—இந்திரியக்காட்சி, இந்திரிய அறிவு. இதுபோலவே கரணக் காட்சி, ஜீவக்காட்சி, ஆன்மக் காட்சியுமுண்டு.

II. அண்டத்தில் :—

1.	அகம்	—	அக்கினி.
2.	அகப்புறம்	—	சூரியன்.
3.	புறம்	—	சந்திரன்.
4.	புறப்புறம்	—	நக்ஷத்திரங்கள்.

ஆகவே — பிண்டத்தில் நாலிடம்; அண்டத்தில் நாலிடம்—ஆக எட்டிடத்திலும் கடவுட் பிரகாசம் காரியத்தாலுள்ளது. காரணத்தாலுள்ள இடம் :—பிண்டத்தில்—புருவமத்தி; அண்டத்தில்—பரமாகாசம். காரியகாரணமாயுள்ள இடம் 4. பிண்டத்தில் விந்து, நாதம், அண்டத்தில் மின்னல், இடி : சர்வயோனி யிடத்தும், விந்து விளக்கமாகிய மின்னலிடத்தும், நாத விளக்கமாகிய இடியிடத்தும்; இதல்லாது "பாரோடு விண்ணுய்ப் பரந்ததோர் ஜோதி" என்றும், "ஜோதியுள் ஜோதியுள் ஜோதியாயும்" உளது.

ஞானசபையும் நடராஜரும்

மேல் குறித்த அகமாகிய ஆன்மப் பிரகாசமே — ஞானசபை, அந்தப் பிரகாசத்துக்குள்ளிருக்கும் பிரகாசம்—கடவுள், அந்த உள் ளொளியின் அசைவு — நடனம்; இதுதான் — ஞானகாச நடனமென்றும், அசைவுற்றதே—நடராஜ நடனமென்றும், ஆனந்த நடனமென்றும் சொல்லு கின்றது. ஆதலால் ஏமம், கனகம், ரஜிதம், சௌப்பியம் முதலாகச் சொல்வதில், சூரியனிடத்தில் — கனகமும், சசியிடத்தில் — ரஜிதமும் இருப் பதுபோல்; பிண்டத்தில் ஆன்மாகாசம் — பொற்சபை யென்றும்; ஜீவா காசம் — ரஜிதசபை, யென்றும் சொல்லுவது. ஆதலால் மேற்குறித்த இடங் கள் யாவற்றிலும் — கடவுள், பூரண இயற்கை விளக்கம், காரியமாயும், — காரணமாயும், — காரியகாரணமாயும், — இருக்கின்றது. முக்கிய இடங்க ளாகிய பிண்டத்தில், நாலும், அண்டத்தில் ஐந்தும் ஆகிய 9 இடத்திலும், கடவுள் விளக்கம் விசேஷமுள்ளது. ஆதலால் நாம் தினம் ஆறு காலத்திலும் மேல் குறித்த பிரகாசமே சபையாகவும், அதின் உள்ளொளியே பதி யாகவும், வணங்கவேண்டும். எக்காலத்திலும் புருவ மத்தியின்கண்ணே நம்முடைய காரணத்தைச் செலுத்தவேண்டும். மேல் குறித்த காலங்கள், சூரிய உதயம் 1, உச்சிப்போது 2, சாயரக்ஷை 3, மாலை 4, யாமம் 5, வைகறை 6, — ஆகிய 6 காலங்களில் எல்லாம் வல்ல தலைவனை வணங்கு தல் வேண்டும்.

16. எழுவகைப் பிறவி

மேலும் இந்தத் தேகத்திற்குப் பிறப்பு எழு உண்டு. அது போல் எழுவகைப் பிறப்பிலும் ஒவ்வொரு பிறப்பிற்கு எவ் வேழு பிறப்புண்டு. அந்த எவ்வேழு பிறப்பும் ஒவ்வொன்றில் அனந்தமாய் விரிந்த யோனிபேதங்களின் விரிவெல்லாம் தோன்றி மேலேறி மறு பிறவி உண்டாம். ஒவ்வொரு பிறவியும் எந்தக் கல்பத்தில் நஷ்டமடை கின்றதோ அந்தக் கல்பகாலம் வரையில் தோற்றமில்லாமல் மண்ணில் மறைந்திருந்து, மறு கற்பத்தில் தோன்றி, இவ்விதமாகவே மற்ற யோனிகளிடத்திலும் பிறந்து, முடிவில் இத்தேகம் கிடைத்தது.

இத்தேகத்திற்கும் ஏழு பிறவி உண்டு—

யாதெனில்:— கர்பத்தில் ஐந்து மாதம் வரையில் குழவியா யிருப்பது ஒன்று 1, அவயவாதி உற்பத்தி காலம் ஒன்று 2, பிண்டம் வெளிப்பட்ட காலமொன்று 3, குழந்தைப் பருவமொன்று 4, பாலப் பருவ மொன்று 5, குமாரப்பருவ மொன்று 6, விருத்தப்பருவ மொன்று 7,

ஆகப் பிறவி ஏழு. இவ்வாறே தாவர முதலியவற்றிற்கு மூள. மேலும் ஸ்தூலப் பிறப்பு 7 சூட்சுமப் பிறப்பு 7 காரணப் பிறப்பு 7.

ஆதலால், மேல் குறித்த ஸ்தூலப்பிறப்பு, சூட்சுமப் பிறப்பு யாதெனில் :— 1. ஜாக்கிரம், 2. சொப்பனம், 3. சுழுத்தி, 4. ஜாக்கிரத்தில் சொப்பனம், 5. ஜாக்கிரத்தில் சுழுத்தி, 6. சொப்பனத்தில் சொப்பனம், 7. சொப்பனத்தில் சுழுத்தி — ஆக பிறப்பு 7. காரணப் பிறப்பு :— மலே சங்கல்பங்களெல்லாம் பிறவி. ஆதலால் மேற்குறித்த பிறவிக்குக் காணம் நினைப்பு மறைப்பு. அது அற்றால் பிறவி யில்லை.

எப்படி அறு மெனில் :— பரோபகாரம் சத் விசாரம் — இவ் விரண்டாலும் மேற்குறித்தது நீங்கிச் சிவானுபவம் பெறலாம்.

17. சாகாத்தலை வேகாக்கால் போகாப்புனல்

சாகாத் தலை — வேகாக் கால் — போகாப் புனல் — என்ப வற்றிற்குப் பொருள் யாதெனில்:—

அடியில் வருவன வேயாம்.

1. சாகாத்தலை யென்பது :— ருத்திரபாகம், ருத்திர தத்துவம், வித்தியாகலை, வஸ்து, அருளானந்தம், காரணக்கினி, சிவாக்கினி.

2. வேகாக் காலென்பது :— மகேசுவரபாகம், மகேசுவர தத்துவம். சாந்திகலை, ஆன்மா, அன்பு, காரண வாயு.

3. போகாப்புன லென்பது :— சதாசிவ பாகம், சிதாசிவ தத்துவம், பிரதிஷ்டாகலை, ஜீவன், இரக்கம், காரியாதிகம்.

இவை மூன்றும் சாகாக்கல்வியைத் தெரிவிக்கும்.

ஆத்ம தத்துவாதி ஜீவகரணம் 36, நிர்மல குரு தரியாதீதம் 7; ஆக நிலைகள் 43. இந்த 43 நிலைகளில் ஒவ்வொரு நிலைகளிலும் மேற் குறித்தவை உள. மேலும், இவை மூன்றும் — பிண்டத்தில் நாலிடத்திலும் — அண்டத்தில் நாலிடத்தினும் உள. அவைகள் பிண்டாண்ட ருத்திர சதாசிவ பேதம். சாகாக் கல்வியைக் குறித்த 43 நிலைகளில் — முதல் நிலை அனுபவத்தைப் பெற்றுக் கொண்டவன் பிரமன். அவனது காலம் ஒரு கல்பம். இப்படி 43 நிலைகளையுமேறி அனுபவத்தைப் பெற்றவன் காலங்கடந்த காலாதீதன். மேற்குறித்த மூன்றும், பரமார்க்கமாகிய ஞான யோகக் காட்சியில் உண்டாகும்.

யோகானுபவங்களின் உண்மைப் பொருள்:—அபர மார்க்கத்தில் சிலர் உப்புவகைகளின் பேதமென்றும் — ஓஷதி பேதமென்றும்— பூதபேத மென்றும் — சொல்வது உபாயமார்க்கம். அக அனுபவமே உண்மை. உபாய வகையாகிய அபரமாக்கம் தேகபூஷணாதி காமிய சித்தியைத் தரும். உண்மை மார்க்கம் நீக்க மற்ற சொரூப ஞானத்தைத் தருமென் றறிக. ஷ உபாயங்களை ஒருவாறு தெரிவிப்பதும் சைவ சமயங்கள் தவிர வேறு எவ்வித சமயங்களிலு மில்லை. 'அப்படி யிருப்ப தாகச் சொல்லியிருப்பதும் ஏகதேச மென்றறியவும். ஷ ஏகதேசங் கள் மந்திரங்களிலும் ஷ மூன்றும் வழங்குகின்றபடியால், ஒன் பது மாற்றுக்கு மேற்பட்ட தங்கரேக்கில் பஞ்சாக்ஷரத்தை யடைத்து விக்கிரகத்தின் அடியில் வைக்க, மகத்துவங்க ளுண்டாகும். மேலும் ஷ உயர்வுடைய தங்கத்தில் விக்கிரகஞ் செய்துவைத்து ஓஷதியாதி லவணங்களை அதற்குச் சேர்த்து வைத்தால் விசேஷ சித்தி விளங்கும். இஃது திரிசியக் காட்சி. சுத்தசன்மார்க்கத்திற்கு உபாய வகைகளான அபர மார்க்கக் காட்சி கூடாது. பரமார்க்கமாகிய அக அனுபவமே உண்மை. ஷ மூன்றையும் லக்ஷியமாகவே கொள்க. உபாய வகை யான வாச்சிய திரிசியக் காக்ஷிகள் பரோபகாரம் ஆதலால், சாகாத் தலை வேகாக்கால் போகாப்புனலென்பவை இரண்டு புறத்திலுமுள. (உபாய வகையை நம்புதல் கூடாது; உண்மையை நம்புதல் வேண்டும். இஃது ரகசியம்.)

18. மூன்றுசை

சுத்தசன்மார்க்க லக்ஷிய அனுபவ விருப்ப முடையவர்களுக்கு நனவினும் மண்ணுசை, கனவினும் பெண்ணுசை, சுழுத்தியினும் பொன் னுசை முதலிய மூன்றுங் கூடாவாம்.

19. சாகாக் கல்வி

தூக்கத்தை ஒழித்தால் ஆயுசு விர்த்தியாகும். ஒருவன் ஒரு நாளைக்கு இரண்டரை நாழிகை தூங்கப் பழக்கஞ் செய்வானனால், அவன் ஆயிரம் வருடஞ் ஜீவித்திருப்பான். எப்போதும் மறப்பில்லாமல் ஆசானுடைய திருவடியை ஞபகஞ் செய்துகொண்டிருப்பதே சாகாத கல்விக்கு ஏதுவாம்.

20. சிவகுணம் 8 ஜீவகுணம் 8

சிவகுணம் 8 அவை:—

1. தன்வயத்தனாகுதல்
2. தூய உடம்பினனாதல்
3. இயற்கை புணர்வினனாதல்
4. முற்றும் உணர்தல்
5. இயல்பாகவே பாசங்களில் நின்றும் நீங்குதல்
6. பேரருளுடைமை
7. முடிவில் ஆற்றலுடைமை
8. வரம்பிலின்ப முடைமை

ஜீவகுணம் 8 அவை:—

1. பராதீனன்
2. துக்கதீதகி
3. செயற்கை உணர்வினன்
4. சிற்றுணர்வினன்
5. பந்தன்
6. காடின்னியன்
7. நிர்பவன்
8. மலதீதகி

21. இந்துவேதாகமம்

இந்து வேதாகமங்களில் மாத்திரந்தான் ஏமசித்தி ஞானசித்தி முதலிய சித்திகளைச் சொல்லியிருக்கின்றது. மற்ற எந்தச் சமயங்களிலும் மேற்படி சித்திகளையும் சாகாத கல்வியையும் சொல்லவில்லை. ஒருவேளை அப்படியிருக்கிறதாகக் காணப்படுமாகில், அது இந்து வேதாகமங்களில் சொல்லியிருப்பதின் ஏகதேசங்களென்பது உண்மை.

22. சாகாதவனே சன்மார்க்கி

சன்மார்க்கத்தின் முடிபு சாகாத கல்வியைத் தெரிவிப்பதே யன்றி வேறில்லை. சாகிறவன் சன்மார்க்க நிலையைப் பெற்றவனல்லன். சாகாதவனே சன்மார்க்கி.

23. சுத்த சன்மார்க்கத்துக்கு உரியவர்கள்

சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய தடையாகிய சமயம், மதம், முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும்; காமக்குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக்கொள்பவரும்; கோலை புலை தவிர்த்தவர்களும்; ஆகிய இவர்கள்தான், சுத்த சன்மார்க்கத்துக்கு உரியவர்கள் ஆவார்கள்; மரணம், பிணி மூப்பு, பயம், துன்பம்—இவை முதலியவைகளைத்தவிர்த்துக் கொள்வார்கள். அதாவது,—

செயற்கையாகிய குணங்களை நன்முயற்சியால் தடுத்துக் கொள்பவர் களுக்குக் கேவலாதிகார மரணம் நீங்கும். அப்படி இல்லாது இவ் விடம் காத்திருப்பவர்கள் மரணத்தைத் தவிர்த்துக்கொள்ள மாட்டார்கள்; அருள் விளங்குங்காலத்தில் அவரவர்கள் பரிபாகத்துக்குத் தக்கதாக இகலோக போகத்தை மட்டும் அனுபவிக்கக்கூடும்; பரலோக போக மாகிய ஞான சித்திகளைப் பெறமாட்டார்கள்.

24. ஆணவமல நிவர்த்தி

மனுஷ்ய வல்லபத்தால் தனக்கிருக்கிற அசுத்தங்களை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடுமா வென்றால்:—

இது நல்லது — இது கேட்டது என்று பகுத்தறியும் ஞானத் தால், விஷய வாசனையில் கரணங்களைச் செல்லவொட்டாமல் தடுக்கக் கூடுமே ஒழிய, நிவர்த்திக்கக்கூடாது. அது ஆண்டவ ரருளால் சுத்த தேகம் பெற்றவர்களால்தான் முடியும். அது அருளொளி கிடைத்தால் அத்தருணமே சுத்தக் கரணமாய் நிற்கும். அசுத்தம் வருவதற்குக் காரணம் யாதெனில் — செம்பிற் களிம்பு இயற்கை — அதுபோல், ஆன்மா விற்கு ஆணவம் இயற்கை. செம்பிலே களிம்பு இயற்கையா யுள்ளதைப் பரிசன வேதியினால் நிவர்த்தித்து சுமமாக்குவதுபோல், மாயா காரிய மான இந்தத் தேகத்தின்கண் உள்ள ஆன்ம இயற்கையாகிய ஆணவ மலம் ஆண்டவ ரருளினால் நீங்கப்பெற்று சுத்த உடம்பாக்கிக் கொள்ள லாம். ஆண்டவர் அருள் அடைவதற்கு, நாம் இடைவிடாது, நன் முயற்சியின்கண் பழகுதல்வேண்டும்.

இதற்குப் பிரமாணம்:—

"ஓடாது மாயை நாடாது நன்னெறி
ஊடா திருவென்றீர் வாரீர்
வாடா திருவென்றீர் வாரீர்" 6—பக்கம் 410

25. மாயா திரைகள் ஏழு

இந்தப் பவுதிக உடம்பிலிருக்கிற நீயாரெனில்:—

நான் ஆன்மா, சிற்றணு வடிவன். ஷ்டி அணு — கோடி சூரியப் பிரகாசமுடையது, லலாடஸ்தான மிருப்பிடம்; கால்பங்கு பொன்மை

முக்கால்பங்கு வெண்மை கலந்த வண்ணம். இப்படிப்பட்ட ஆன்மப் பிரகாசத்தை மறைக்க மாயா சக்திகளாகிய 7 திரைகளுண்டு. அவை யாவன:-1. கறுப்புத்திரை — மாயாசத்தி; 2. நீலத்திரை — கிரியாசத்தி; 3. பச்சைத்திரை—பராசத்தி; 4. சிவப்புத்திரை—இச்சாசத்தி; 5. பொன் மைத்திரை—ஞானசத்தி; 6. வெண்மைத்திரை—ஆதிசத்தி, 7. கலப் புத்திரை—சிற்சத்தி.

26. அமுதவகை ஐந்து

சுத்த அமுத ஸ்தானங்கள் 5. 1-வது அமுதம் நாக்கினடியில் இனிப்புள்ள ஊற்றுஜலம் போலிருக்கும். 2-வது அமுதம், உள்நாக் குக்குமேல் இளகின இனிப்புள்ள சர்க்கரைப் பாகு போலிருக்கும். 3-வது அமுதம், மூக்கு முனையில் காய்ச்சின சர்க்கரைப் பாகு போலிருக்கும். 4-வது அமுதம், நெற்றி நடுவில் முதிர்ந்த சர்க்கரைப் பாகு போலிருக்கும். 5-வது அமுதம், மகா இனிப்புள்ள மணிக்கட்டியாக விருக்கும்; அதிக குளிர்ச்சியாகவு மிருக்கும்.

இந்த 5-வது அமுதத்தை உண்டவர்கள் என்றும் அழியாத தேக சித்தியைப் பெற்றவர்கள்.

27. சுவர்ணதேகம் பிரணவதேகம் ஞானதேகம்

சுத்தமாதி மூன்று தேக விவரம்:—சுவர்ண தேகம், பிரணவ தேகம், ஞானதேகம்.

1. சுவர்ணதேக விவரம்:—காரியரூபம், பரதேகம், பர[illegible]சி, பரஅறிவு, பரத்துவம், பொன்வண்ணம், 12-வயது, பரவம்—கரை, திரை, பிணி, மூப்பு, மல, ஜலம், வேர்வை, ஆகாரம், நித்திரை, தாகம், சாயை முதலியன இல்லாமை, ரோம வளர்ச்சி, தாழ்ச்சி, யில்லாமை, அபரஞ்சிமாற்று, கர்மசித்தி, கல்பதேகி, அபரமார்க்கி.

2. பிரணவதேகம்:— காரிய காரண ரூபம், பரம்பர தேகம், பரம்பர வுணர்ச்சி, பரம்பர அறிவு, பரம்பர தத்துவம், 16 முதல் 108 வரையில் மாற்று, 5 முதல் 8 வயது, உரைபடாதது, தேகம் தோற்றும்—பிடிபடாது, சர்வ சித்தி, பிராண கல்பதேகி, பர அபர மார்க்கம்.

3. ஞானதேகம்:— காரணரூபம், எங்கும் பூரணவியாபகம், பராபர அறிவு, பராபர தத்துவம், அளவுகடந்த மாற்று, சப்தமய தரிசனம், சர்வமகாசக்தி, சர்வ சுதந்தரம், உருவம் தோற்றியும் தோற்றுமலு மிருக்கும், காலாதீதன்.

28. குளிகை மணி—ஒன்பது

குளிகை மணி ஒன்பதின் விவரம்:— 1, பரம்பரமணி — அண்டத்தையும் அண்ட வஸ்துக்களையும் காட்டுவது. 2. பராபரமணி — பிண்டத்தையும் பிண்ட வஸ்துக்களையும் காட்டுவது. 3. அரும்பெறன்மணி — நினைத்ததை நினைத்தபடி அருளுவது. 4. ககனமாமணி — விண்ணுலக வஸ்துக்களை ஆட்டிவைக்கும். 5. சர ஒளி மணி—மண்ணுலகையும் மண்ணுலக வஸ்துக்களையும் ஆட்டிவைக்கும். 6. கலை நிறை மணி—எல்லா வுலகத்தும் உலாவுதல். 7. வித்தகமணி—சர அசர வஸ்துக்களிடம் விளங்குவது. 8. சித்தி செய் மணி—மகாசித்திகளை நடத்துவது. 9. வளரொளி மணி—அழியாப் பெரு வாழ்வு அளிப்பது.

29. கடவுள் ஒன்றும் இரண்டும் ஆனர்

கடவுள் ஒன்றல இரண்டல ஒன்றுமிரண்டுமானர் என்பதற்குத் தாத்பரியம்:—

ஒன்றல, கடவுளானவர் ஒன்றுகிய ஞான தேகியும் அல்ல; இரண்டல, சுத்தப் பிரணவதேகியும் அல்ல. ஒன்றுமிரண்டுமானர், கடவுளானவர் தன்னருளைப் பெற்ற சுத்த ஞானிக்கு ஞான தேகத்தையும் சுத்தப் பிரணவ தேகத்தையும் கொடுக்க முதற்கருவியாக இருக்கின்றர். இதை அனுபவத்தால் குருமுகத்தில் உணர்க.

30. பிண்டானுபவ லக்ஷணம்

மனித தேகத்தில் கோசத்திற்கு $2\frac{1}{2}$ அங்குலத்திற்குமேல் நாற்சதுரமான ஒரு பையுண்டு. அதில், 16 வயதளவும் உண்டாகும் இந்திரியம், ஜலமாகச் சேருகின்றது. அதைத்தான் மானச தடாகமென்று சொல்லுகின்றது, 16-க்குமேல் சேரும் இந்திரியம், உறைந்த அந்த ஜலத்திற்கு மத்தியில் சேருகின்றது. அப்படியாகச் சேர்ந்துகொண்டு

வரும் இந்திரியம் பொன் வர்ணமாகவிருக்கும். அது தாமரைப்பூவென்று சொல்லப்படும். அதன் மத்தியில் ஒரு ஆவி சாதாரண காற்றுக்கு நூற்றிலொரு பங்காக வெகு சூக்ஷ்மமாக இருக்கும். அதன் வண்ணம் பொன்மயமா யிருக்கும். அதற்கு அதிஷ்டான தெய்வம் பிரமனென்று சொல்லப்படும். அந்த ஆவி உண்டாகுங் காலம் அவருக்குச் சகல காலம் — என்றும் அடங்குங் காலம் கேவல காலம் — என்றும் சொல்லப்படும். அந்த ஆவி உண்டாகுங் காலத்தில் செயற்கையாலல் கருத்தரிக்கும். அது சிருஷ்டி யென்று சொல்லப்படும்.

அதில் ஆவி யுண்டாகத் தோட்புளிலிருந்து ஒரு நாடி தோன்றி அதன் மத்தியில் முகந்துகொண்டிருக்கிறது. அதன் மூலமாய் அக்கினி யிருக்கின்றது. அது மூலாக்கினி என்று சொல்லப்படும். அது தொப்புளிலிருந்து உண்டாவதால் விஷ்ணு தொப்புளிலிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அதன்மேல் 2½ அங்குலத்தில் உந்திக்கு நேராக உட்பாகத்தில் சதுரமாய் ஒரு பைபுண்டு. புசித்த அன்னத்தை ஐந்து நாழிகையில் பால்போன்ற ஜலமயமாய்ருத்திர பாகத்திலுள்ள ஆவி பிரித்து அந்தப்பையில் சேர்க்கின்றது. அதை கூஷீராப்தி என்று சொல்லுகிறது.

அந்தப் பையிலிருக்கும் பால்போன்ற ஜலத்தின்மேல் ஆலிலை வடிவையுடைய வயிற்றி னுட்பாகம் படிவதனல் அதே வண்ணமாக ஓராடை கட்டியிருக்கும். அதை ஆலிலையென்று சொல்கின்றது. அந்த ஆடையின்மேல் ஒரு நரம்பு வட்டமாய்த் தலைதூக்கி யிருக்கின்றது. அதைச் சேஷனென்று சொல்லுகின்றது. அந்தக் குண்டலி வட்ட சேஷனென்னும் நாடி மத்தியில் செம்பினது களிம்புபோன்ற பச்சை மேனியா யொரு சத்தியுண்டு. அதை விஷ்ணுவென்றும், அச்சத்தியில் முன், பின், நடுவென்னும் இடத்தில் அதன் காரணச் சத்து, பொன் வண்ணமாயும் அரித்திரா வண்ணமாயும் குங்கும வண்ணமாயும் மூன்று உள்ளன. அவற்றைச் சீதேவி, பூதேவி, நீலாதேவி, யெனச் சொல்லுகின்றது. மத்தியில் ஒரு சத்தி யிருப்பதால் விஷ்ணுமார்பில் லக்ஷ்மியை வைத்தா ரென்பது.

குண்டலிவட்டமான நாடி மத்தியிலுள்ள பச்சை வண்ணமான சத்தியிலிருந்து ஒரு நாடி உண்டாய் இரண்டு தலையாய் விரிந்து ஒரு தலை மேலும், ஒரு தலை கீழும் செல்லுகின்றது. இந்த நாடிகளின் மூலமாய் அந்தச் சத்து, மேலே செல்லும்போது பசுமை வண்ணமாகவும், கீழ்ச் செல்லும்போது பீதவண்ணமாகவும் செல்லுகின்றது. மேலே செல்லுவதினல், ஜீவர்களுக்கு ஜீவிப்பும், அதின் சாரம் கெட்டுக், கீழே செல்வதினல், ஜீவிப்பின்மையும் உண்டாகின்றது.

மேலே செல்வதில், ஜீவிப்புண்டாகுவதால் காத்தல் தொழிலை உணர்த்துகின்றது. மேலும் மேலே செல்லுகின்றதை, விஷ்ணு வைகுந்தம் போகின்ரு ரென்றும் கீழே செல்கின்றபோது கூர்ராப்தியில் இருக்கின்ரு ரென்றும் சொல்கின்றது. கீழே செல்லும் நாடி முன் சொன்ன தொப்புள் நாடியுடன் கலப்புண்டாய் பிரமனுக்கு உஷ்ணத்தைத் தருகின்றது.

அன்றியும், இந்தச் சதுரமான பையின் வலப்பாகத்தில் ஒரு பையுண்டு. அந்தப் பையில் அக்கினி நிரம்பிக் காரணமாயிருக்கின்றது. அது புசித்த வஸ்துக்களின் சத்தைக் கிரகித்துக் கொண்டு அசத்தை மலமாக இடது பாகத்தில் சேர்த்து விடுகின்றது. கிரகித்த சத்தை முன்சொன்ன கூர்ராப்திப் பையில் சேர்க்கின்றது. இதை வடவாக்கினி என்று சொல்லுகின்றது. மேலும் இந்த வெள்ளை ஜலத்தை அக்கிரமமின்றிச் சமப்படுத்தி பிரளயம் வாராது காத்துக் கொண்டிருக்கிறது. இந்த உதராக்கினி குறைவுபட்டு கூர்ராப்தியின் ஜலத்தின் தரங்கெடுமாலை நோயுண்டு.

இந்தப் பையாகிய ஸ்தானத்திற்குமேல் $2\frac{1}{2}$ அங்குலத்தில் மலர்ந்த வாழைப்பூப் போல் ஒரு பையுண்டு. அது வெண்மையாய் இருக்கும். இதைக் கைலாய மென்று சொல்லுகின்றது. இந்தப் பையுள் முன் சொன்ன காற்றில் பதினுபிரங் கோடி பங்கி லொரு பங்காக வெது சர்மையாய் அக்கினி மயமாய் ஒரு ஆவியிருக்கும். இதற்குக் காரணக்கினி யென்று பெயர். இவ்வக்கினியைக் கால சந்திர ருத்திர மூர்த்தி யென்பர். இப்பையின் அருகில் இடப்புறத்தில் மலர்ந்த தாமரைப் பூப்போல் ஒரு பையுண்டு. அந்தப் பை, பசுமை வண்ணமாயிருக்கும். அதற்கும் முன் சொன்ன வெண்மைப் பைக்கும் ஒரு நாடியுண்டு. அதன் மூலமாய்க் காரணக்கினி அதிகப்படுத்தாமலும் குறைவு படுத்தாமலும் சமப்படுத்தி வைக்கும். இந்த மலர்ந்த பைக்கும் கீழிருக்கும் கூர்ராப்திப் பைக்கும் ஒரு நாடியுண்டு. அதன் மூலமாய் அதற்கு உஷ்ணங் கொடுத்து நிலைபில்வைக்கும். இதனால் ருத்திரனிடத்தில் விஷ்ணு பிறந்ததாய்ச் சொல்லுகின்றது. இந்த நாடி மூலமாக விஷ்ணு இடமாகிய ஜலத்திலும், பிரமனிடமாகிய இந்திரியத்திலும் உள்ள குற்றங்களைக் கண்டிப்பதால் ருத்திரனைச் சம்ஹார கர்த்தா வென்று சொல்வது.

இந்த அக்கினிப் பையில், குண்டலி வட்ட நரம்பு ஒன்று உண்டு. அதில் மூன்ருகப் பிரிபும் கிளையுண்டு. அது மூலமுதல் பிரமரந்திரம் வரையில் இடம், வலம், நடு, வென்று கத்தரி மாறலாய்ப்

பிராணபானனுக்கு இடங்கொடுத்து ஊடுருவி நிற்கும். இந்நாடிகளுக்கு சோம சூரி யாக்கினி யென்று பெயர்.

இஃதன்றி இக் குண்டலி வட்ட நாபி னடியில் நின்று இரண்டு நாடி — வலத்தில் அஞ்சு கவருடைய தலைபாடும் இடத்தில் ஆறுதலையுடைய கவராயும் — நிற்கின்றன. வலத்திலுள்ளது கணபதி யென்றும், இடத்திலுள்ளது சுப்பிரமணிய ரென்றும், பெயர் சொல்லுவது. மேற்படி ஐந்து கவருடைய நாபிற்கு அடியில் தலையெடுப்பான நாடி கீழ்நோக்கி கிருஷ்ணவர்ணமா யிருக்கும். இந்த நாடி இடைவிடாது அனைந்துகொண்டிருக்கும். இந்த அனைவால் அக்கினிப் பைக்கு ஆதாரம் உண்டாவதால் இதற்குக் கணபதியென்று பெயர். மேற்படி ஐந்து கவருடைய நாடிக்கு இடம் வலம் இரண்டிலும் சித்தி தத்துவம், புத்தி தத்துவம் உண்டு. இடத்திலுள்ள ஆறு கவருடைய நாடிக்குக்கீழ் அனந்த வண்ணமான நாடி ஒன்றுண்டு. இதற்கு மயூரமென்று பெயர். இந்த நாடியின் அனைவால் எழுபத்தீராயிரம் (72,000) நாடியும் அக்கிரம மின்றி நிலைபெறுகின்றபடியால், இதற்குச் சேஞ்தீபதி யென்றும் பெயர். மேலும் வலது புறத்து நாடிக்கு அறுபத்திரண்டு மாத்திரையும் — இடதுபுறத்து நாடிக்கு நாற்பது மாத்திரையும் அளவு வித்தியாசமிருப்பதால், இவர்களைச் சோதரர்களாகச் சொல்வதுமன்றி, மேற்படி ருத்திராம்சமாகவே சொல்லுகின்றது.

இருதயத்திற்குமேல் இரண்டரை அங்குல இடமான கண்டத்தில் மகேசுவரனும், அதற்குமேல் 2½ அங்குல அண்ணாக்கில் சதாசிவமும், அதற்குமேல் 2½ அங்குல உபரத்தில் புருவ மத்தியில் விந்துவும், அற்குமேல் 2½ அங்குலத்தில் நாதமும், அதற்குமேல் 2½ அங்குலத்தில் பரவிந்துவும், அதற்குமேல் 2½ அங்குலத்தில் பரநாதமும் அதற்குமேல் 2½ அங்குலத்தில் திக்கிராந்தம் அதிக்கிராந்தம் துவாதசாந்தம் முதலானவைகளும், அதிதத்தில் சுத்த சிவமூ மூள. மகேசுவரஸ்தான முதல் விந்துஸ்தானம் வரையிலும் முன்போல் இடம் நாடி தொழில் வண்ணம் முதலியவுமுள்ளன. நாத ஸ்தானந் தொட்டுத் துவாதசாந்தம் வரையில் அனுபவ வெளியாகிய ஆகாச பேதமபமாயிருக்கும். அதற்குமேல் அதிகாரண மாத்திரமாய் ஆன்மானுபவத்தில் விளங்கும்.

மேலும், பிரமஸ்தானந் தொடங்கிச் சுத்த சிவஸ்தானம் வரையில் ஒரு ஸ்தம்பம் இருதயம் வரையில் வாயுநாடி வண்ணமாயும் — அதற்குமேல் அக்கினி வண்ணமாயும் — இருக்கும். இது அடிபிற்பருத்து வரவர சூக்ஷ்மையாய், இந்திரிய கரணங்களுக்குப் புலப்படாமல் அனு

வுக்கணுவாய், ஜீவனுக்கும் புலப்படாமல் அகண்டமாய், ஆன்மக் காட்சியில் அருகித் தோன்றுவதாய், இரண்டற நிற்கும். இதற்குச் சிவாகார பூரண ஸ்தம்ப மென்று பெயர்.

மூன் சொன்ன இருதயாக்கினிப்பை அக்கிரமமாய் விரிந்து, விஷ அக்கினி ஜ்வாலை விசிரிம்பித்துக் கீழிருக்கும் க்ஷீராப்திப் பையி லிருக்கும் ஜலத்தைச் சுருட்டிக்கொள்ள, ஜீவனுக்கு மரணகாலம் நேரி டும். ஷை பை விரிவதற்கு ஆதாரம் அருந்தல் பொருந்தல். இவை சம மானால் மிருத்தியு வராது.

31. சிருட்டி ஞாயம்

ஆகாசம் அனாதி. அதுபோல் அதற்குக் காரணமான பர மாகாச சொரூபராகிய கடவுள் அனாதி. அனாதியாகிய ஆகாசத்தில் காற் றும் அனாதி. அனாதியான வெளியில் காற்று எப்படி அனாதியோ, அப் படிக் கடவுளிடத்தில் அருட்சத்தி அனாதியாய் இருக்கின்றது. ஆகாயத் தில் அணுக்கள், நீக்க மற நிரம்பி யிருக்கின்றன. இதுபோல் கடவுள் சமூகத்தில் — ஆன்மாகாசத்தில் — அணுக்கள் சந்தான மயமாய் நிரம்பி யிருக்கின்றன. அந்த அணுக்களுக்கு ஆன்மா வென்றே பெயர்.

பூதாகாயத்தி லிருக்கும் சாதாரண அசாதாரண அணுக்கள் எழுவகையாய்ப் பிரியும். அவையாவன :— 1. வாலணு, 2. திரவணு, 3. குருவணு, 4. லகுவணு, 5. அணு, 6. பரமாணு, 7. விபுவணு. மேற்படி அணுக்கள் அனந்த வண்ண பேதமாய் இருக்கும். இவற்றில், 1. காரிய வணு, 2. காரிய காரண வணு, 3. காரண வணு என மூன்று வகையாய், பக்குவ, அபக்குவ, பக்குவாபக்குவ மென நிற்கும். இவைபோல் ஆன்மாகாயமான கடவுள் சமூகத்தில், ஆன்மாக்களும் மூவகையாய் நிற்கும். யாவையெனில் :— பக்குவ ஆன்மா, அபக்குவ ஆன்மா, பக்கு வாபக்குவ ஆன்மா வென மூவகைப்படும். ஆகாயத்தி லிருக்கும் அணுக்கள் மூன்று விதமானதற்குக் காரணம் அங்குள்ள காற்றே யாம். அதுபோல் ஆன்மாக்கள் மூ விதமானதற்குக் காரணம் கடவுள் சமூகத்திலுள்ள அருட் சத்தியே யாம்.

அப்படி மூ வகையான ஆன்மாக்களுக்கு—அருட்சத்தியின் சமூகத்தில் தோன்றிய, இச்சை, ஞானம், கிரியை யென்னும் பேதத்

தால் ஆன்மாக்களுக்குத் தேகம் மூன்றுள. யாவையெனில் :— கர்ம தேகம், பிரணவ தேகம், ஞானதேகம் என மூன்று விதம்.

அப்படி மூன்று தேகம், உண்டானதற்குக் காரணம் :—

பூத ஆகாயத்தி லுண்டான, வாயு பேதத்திலை சோம, சூரிய, அக்கினி, யென மூன்று வகை நிற்பன போலுணர்க. அந்த ஆகாயத்தை விரிக்கில் அனந்தபேதமாம். வாயுவின் பேதம் அதுபோல் அனந்தம். ஒருவாறு அறுபத்துநான்கு கோடி பேதம். இவற்றில் அமுதபாகம், விஷபாகம், பூதபாகம், உஷ்ணபாகம், எனப் பல பேதப் படும்.

மேற்படி அணுக்கள் அனந்தவண்ண மாதலால், அனந்த அணுக்கள் சேர்ந்து ஒரு வித்தாய், இவ்வித்து திரவ அணு சம்பந்தமாய் குரு அணுவோடு சேரும்போது, பூதகாரிய அணுவாகிய கிரண உஷ்ணத்தால் ஜீவிக்கும். ஜீவித்த ஓஷதி முதலியன இந்த ஞாயத்தால் வர்ணம் ருசி முதலியன பேதப்படுகின்றன. இவ்வண்ணமே பௌதிக பிண்டவணுக்கள் காரண சூரிய உஷ்ணமாகிய ஜீவ உஷ்ணத்தால் வடிவமாய், பரம காரண தயையால் ஜீவிக்கின்றன. சில காலத்தில் வித்துக்க ளாதியாம். சில காலத்தில் விருக்ஷ மாதியாம். எல்லாவற்றிற்கும் ஆதியா யுள்ளது பூத காரிய அணு வாகிய சூரிய கிரணமே யாம்.

இவ்வண்ணமே, ஒரு காலத்தில் கடவுள் பிரேரகத்தால் அருட்சத்தி ஆன் மாகாசத்தில் விகிரிம்பிக்க, ஆன்மாக்கள் வெளிப்பட்டுப் பஞ்சகிருத்தியத் தொழிற்படும். மேற்படி ஆன்மாக்கள் வெளிப்பட்ட அக்கணமே, மேற்படி ஆகாயம் சந்தானமாதலால், ஆன்மாக்கள் நிரம்பி நிற்கும். ஆதலால் பஞ்சகிருத்தியம் எக்காலத்தும் தடையுறாது. ஆன் மாக்கள் தாழ்ந்த கதியடைவது அநாதி யியற்கை யல்ல; ஆதி செயற் கையே யாம். ஆணவம் அநாதி யியற்கையே யாம். இதன் ரஹஸ் யம் குருமுகமா யறிக.

---

32. பஞ்ச அமுத ஸ்தானங்கள்

யோகானுக்கிரக பஞ்ச அமுத ஸ்தானங்கள்—5

1. வது அமுதம்—நாக்குநுனியில், பக்குவ ஞானத்தால், சிருஷ்டி வல்லபப் பிரஞ்ஞையால்.

2. வது புவனமுதம் — நாக்குமத்தியில், பக்குவக் கிரியையால், ஸ்திதி பிரஞ்ஞை யுணர்ச்சியால்.

3. வது மண்டலாமுதம் — நாக்கினடியில், பக்குவ இச்சை, சம்மார உணர்ச்சியின் தன்மையால்.

4. வது ரகசியாமுதம் — உள்நாக்கடியில், பக்குவ திரோபவம்.

5. வது மௌனமுதம் — உண்ணக்குக்கு மேல், பக்குவ அனுக்கிரகம், அனுக்கிரகம், சுபாவத்தினது அனுபவம், துரியநிலை.

33. பிரமாண்ட பகிரண்ட வியாபக சந்திர சூரிய கிரகண பரிச லக்ஷண விவரம்

இவ் வுலகமும் இவ் வுலகத்திலுள்ள சராசரபேதங்களில், முக்கியமாயுள்ள சரமாகிய ஜீவராசிகளும், சற்பபேதமும் தோன்றி உய்யும் பொருட்டு, அனேகவித வாயுபேதங்கள் அநாதியில் கடவுளால் உண்டுபண்ணப் பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை அமுதக்காற்றும், விஷக்காற்றும். அவை விசேஷ வியாபகமா யிருந்து கொண்டிருக்கின்றன.

இவற்றில் அமுதக்காற்று :— பிரமாண்ட பகிரண்ட கடாகத்தில் — விசேஷ வியாபகமாயும், இம்மகா அண்டத்திலும் பிண்ட ஜீவரிடத்திலும் ஏகதேச வியாபகமாயும் இருக்கின்றது.

விஷக்காற்று :— மேற்படி பிரமாண்டாதி கடாகத்தில் — ஏகதேசம் நிமிஷகாலம் அல்லது முகூர்த்தம், அசாதாரணத்தில் ஜாமம் வரையில் — வியாபகமாயும், இம்மகா அண்டாதி ஜீவராசிகளிடத்தில் விசேஷ வியாபகமாயும் இருந்து கொண்டிருக்கிறது.

பிரமாண்டாதிகளில் அமுதக்காற்று விசேஷ வியாபகமா யுள்ளதால், அவ் வண்டங்களி லுள்ள சூரிய, சந்திர, உடுக்கள் முதலியவைகளும் சொல்ப காலத்தில் அழிவடைதலின்றி இருக்கின்றன. விஷக்காற்று ஏகதேச வியாபக மாதலாலும் கற்பகாலத்தில் வியாப்பியமாயும், வியாபகமாயும் இருத்தலாலும், அந்தக்காலங்களில் அவை, நஷ்டப்படுகின்றன.

மேற்படி விஷக்காற்று — கருமைவண்ணமாயும் செம்மை வண்ணமாயும் இரண்டு பாகமாய்ப் பிரியும். இவைகளை இராகு கேதுக்களென வழங்குகின்றனர். இது ஒரு முகூர்த்தம் ஒரு ஜாமம் இருக்கும். அதற்குமேல் இவ் வண்ணமாய், இவ்வண்டம் கணிதப்படி, அவ்வண்டங்களிற் கணிதகாலத்தில் வியாபகமாயிருப்பதுதான் சந்தராதித்த கிரகண தோஷகாலம்.

தோஷ காலமென்பது :— பிரகாசமின்றி இருள் வண்ணமாய்ச் சிலகாலத்தில் முற்றும் மறைத்தும், சில காலத்தில் எகதேசம் மறைந்தும் இருப்பதால், இவ்வண்ட புருஷனுக்குக் காரணஸ்தானமாகிய சந்திரனும், ஜீவஸ்தானமாகிய சூரியனும், பிரகாசம் மழுங்குகின்ற படியால் தோஷ மெனப் பெயர். மேலும் தோஷம் என்பது இருள், அறியாமை, அஞ்ஞானம். விஷக்காற்று வியாபகமாயுள்ளது இவ் வண்டத்திலும் ஜீவர்களிடத்திலும் ஆதலால், ஜீவகோடி ராசிகள் சொல்பத்தில் அடிக்கடி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அழுதக் காற்று இவ்வண்டத்தில் இரவில் அருமீனுதயந் தொடங்கி உதயபரியந்தம் வியாபகமாய் இருக்கின்றது. அக்காலத்தில் ஜீவர்கள் நன்முயற்சியிலிருப்பது விசேஷ நலம். தேகாதி பிண்டத்தில் வெடி அழுதக்காற்று வியாப்பியமாயிருக்கும். ஒருகால் ஒரு க்ஷணகாலம் அந்தக்காற்று வியாபகமா யிருக்குங்கால், ஜீவர்களுக்கு இதுவரையில் தாங்களறியாததான கடவுள் விளக்கம் உண்டாகும். வெடி காற்று வியாபகம் எகதேசமு மில்லாவிடில், ஜீவர்கள் விஷக்காற்றினால் சதா வியாபகமடைதலில், இந்தச் சொல்ப ஜீவிப்பும் வீர்த்திக்கு வராமாட்டாது. அழுதக்காற்று வியாப்பியமன்றி வியாபகமா யிருக்குங் காலத்தில், ஜீவர்களுக்கு அறிவு விளக்கம், மன நெகிழ்ச்சி, இந்திரிய அடக்கம், ஈசுரபத்தி, முதலியவும் விளங்கும். அக்காலத்தை அழுதக்காற்றின் வியாபக காலமென்று அறியவேண்டும். இதன்றி, இருண்மயமாய் முன்பின் தோன்றுது அறிவின்றி யிருக்குங்காலம் விஷக்காற்று வியாபகமா யிருக்குங் காலமென்றறியவேண்டும்.

அண்டத்தில் சந்திராதித்த கிரகண தோஷம் போல் இப் பிண்டத்தில் கிரகண தோஷம் யாதெனில்:—

பிண்ட புருஷனுக்குப் புறமாகிய காரணமென்னும் சந்திரனுகிய தோற்றும் அறிவு, இருப்பில் துரிசு எறுவதுபோல், விஷப வாசனையி லழுந்தி எகதேசப் பிரகாச விளக்கமுடையதுதான் சந்திர

கிரகணம். இஃ தறியாமை. சூரிய கிரகண மென்பது:— அகப்புறமாகிய ஜீவனென்னும் சூரியனுக்கு தோற்றுவிக்கும் அறிவு, செம்பிற் களிம் பேறுவது போல், விஷய வாசனை மயமாய் யாதுந் தோன்றுது அறி வின்றி நிற்குங் காலம் சூரிய கிரகணம். இஃது மாயாசிருட்டிக்கு இயற்கையானதும், இரும்பையும் தாமிரத்தையும் பரிசனதி வேதிகளால் ரவுப்பியாதி ஏமங்கள் செய்வதுபோல், நன்முயற்சியாகிய ஜீவகாருண்ய மயமாய் பரிச்சியஞ்செய்தால் மேற்படி துரிசு நீங்கும். மேலும் ஆசாரியர் அனுக்கிரகத்தாலும் நீங்கும். இது பிண்டாண்ட கிரகண சித்தாந்தம்.

34. வந்தன முறை

ஆசாரியனுக்குச் சிஷ்யன் வந்தனஞ் செய்வதற்கும், — பெரியவர்களுக்குச் சிறியவர் வந்தனஞ் செய்வதற்கும், — எல்லவர்க்கும் ஞானிகள், யோகிகள், சாந்தர்கள், வந்தனஞ் செய்வதற்கும் — காரணமும் அதன் பிரயோஜனமும் யாதெனில்:—

வந்தனஞ் செய்வது — ஆயுள் விர்த்திக்கும் அறிவு விளக்கத் திற்கும் ஆதாரமா யிருக்கின்றது. சிஷ்யனுக்கும் சிறியோருக்கும் — ஆசாரி யனும் பெரியோரும் வந்தனஞ் செய்தால், ஆயுள் விர்த்தியும் அறிவு விளக்கமும் குறைவாகும்.

இதற்குச் சம்பந்தம் யாதெனில்: — ஒரு ஜீவனுக்கும் திருவிளக் குக்கும் சம்பந்த மிருக்கின்றது. எப்படியெனில்:—

ஒரு திருவிளக்கு எரிவதற்கு நல்ல உஷ்ண சம்பந்தமான தைலத்தை உதவுகிறது போல், ஒரு ஜீவனுக்கு ஆன்ம விளக்கத்துக் கும் மலப்போக்குக்கும் ஆதாரமான நிரஹங்காரமென்கிற நல்ல உஷ்ண சம்பந்தமான தைலத்தை ஊட்டி விளக்கு வைக்கவேண்டியது. ஆனல் மேற்சொன்ன இரண்டுஞ் சந்திக்கும் போது, சீதக்கமான கெட்ட உஷ் ணத்தைச் சம்பந்தப் படுத்தினல் லாபஞ் செய்யாதாவெனின், செய் யாது. திருவிளக்கு ஜல உஷ்ணத்தையும் காற்றினுலுண்டாக வேண்டிய உஷ்ணத்திற்கு மேற்பட்ட அதிக உஷ்ணத்தையும் பெற்றல் கெடும். அதுபோல், ஜீவனுக்கு மும்மலத்தாலாகிய உஷ்ணத்தையும் இன்னும் பற்பல பேதமுள்ள கெட்ட உஷ்ணத்தையும் சம்பந்தப்படுத்தினல், அது கெட்டுப் போய்விடும். இது யாவருக்கும் திருஷ்டாந்தமாயிருக் கிறது அல்லவா?

இவற்றுல் ஆசாரியனையும், பெரியவர்களையும்,—சிஷ்யனும், சிறிய வர்களும் வணங்கிறுல் ஆயுள் விருத்தியும்,—சிஷ்யனையும், சிறுவர்களையும்—ஆசாரியரும், பெரியவர்களும்—வணங்கிறுல் ஆயுள் குறைவும் உண்டாகு மென்கிற சம்பந்தம் எப்படியெனில் :— திருவிளக்கு எரிய—சாதாரண காலத்தில் அதம பக்ஷத்துக்குரிய கொட்டை யெண்ணெய், இலுப்பை யெண்ணெய் முதலியவற்றுல் விளக்கு வைக்கின்றதும், கொஞ்சம் விசேஷ காலத்தில் நல்லெண்ணெயிறுல் விளக்கு வைக்கின்றதும், கடவுள் சந்நி தானத்திலும், குருசாரியர் சந்நிதானத்திலும் பசுவின் நெய்யிட்டு விசேஷ விளக்கத்தை யுடைய விளக்கு வைக்கின்றதும் போல், கொட்டை யெண் ணெய் முதலாகியதற் கொப்பாகிய ஒரு ஜீவன் அதமபக்ஷம் மத்திம பக்ஷத்திற்குரிய ஒவ்வொரு மலத்திறு லுண்டாகிய தோஷத்தைப் போக் கிக் கொள்வதில் ஆத்ம விளக்கத்திற்கு ஆதாரமாகிறதும், விசேஷமாய் கடவுளாதி ஆசாரியர் சந்நிதானத்தில் வைக்கும் நெய்விளக்குக்கு ஒப் பான மும்மலப் போக்கான சுத்த நிரஹங்கார மென்கிற தைலத்தை ஆன்மாவுக்கு உண்டாக்கி வைப்பதில் ஜீவவிர்த்தியு முண்டாகின்றது. திருவிளக்கு—அதன் உஷ்ண சம்பந்தமான தைலங்களை விட்டுக்கொண்டு வருவதில் விளக்கு எரிந்துகொண்டிருப்பது போலும், அதில் நல்லெண் ணெய், நெய், முதலியவை விட்டெரிப்பதில் விசேஷப் பிரகாசமாய் விளக்கு எரிவதுபோலும்—ஜீவனுக்கு அதன் உஷ்ண சம்பந்தமான மும்மலப்போக்கை யுண்டுபண்ணுவதில் ஜீவிப்பு விர்த்தியுண்டாகிறதும், விசேஷமாய் நிரஹங்காரமென்கின்ற சுத்த உஷ்ணத்தை யுண்டுபண்ணிக் கொண்டு வருவதில் ஜீவனுக்கு விசேஷ விளக்கத்திற்குரிய ஜீவிப் பிருந்து கொண்டிருக்கின்றதும், இதனுல்தான் தைலத்தைக் கொண் டிருக்கிற திருவிளக்கு விர்த்திபாவதுபோல் மும்மலப் போக்கைக் கொண்ட ஜீவனும் ஆயுள் விருத்தியடைகின்றது. ஆதலால் ஆசாரி யரையும் பெரியவர்களையும் — சிஷ்யனும் சிறியோரும் வணங்குவதில் நிர ஹங்கார சந்தி பெறுவதனுல் ஜீவனுக்கு ஆயுள் விர்த்தி யுண்டாகின் றது.

சிஷ்யனையும் சிறியோரையும் — ஆசாரியரும் பெரியோரும் வணங்குவதில் ஆயுட்குறைவு எப்படி யுண்டாவதெனின் :—

ஒருமணி வரையில் எரியத்தக்க எண்ணெயிட்டு எரிவித்திருக் கும் சிறிய திருவிளக்குக்குச் சமீபத்தில், ஒரு பெரிய பந்தத்திற்கு ப்பான ஒரு பெரிய திருவிளக்கு வைத்து எரித்தால் ஒருமணி நேரம் ரியத்தக்க அந்தத் தீப உஷ்ணத்தைப் பெரிய தீபம் கிரஹித்துக் கொள்வதில் ஒருமணி நேரம் எரியவேண்டிய தீபம் அரை மணிக்குள்

எரிந்துவிடுவதுபோல், ஆசாரியனும் பெரியோரும் — சிஷ்யனையும் சிறியோரையும் வணங்குவதில், பெரிய தீவர்த்திக் கொப்பான — ஆசாரியர் பெரியோர் என்கின்ற யோக்கியதையோடு, நிர்மல ரஹிதமான நிரஹங்கார மென்கின்ற மத்தாப்புக் கொப்பான விளக்கத்தை சிறிய விளக்கான — சிஷ்யன் சிறியோர் — முன்னிலைக்கு விளக்கி வைப்பதில், சின்ன விளக் கடைந்த குறைவைப்போல் ஜீவனுடைய ஜீவவிர்த்தியைக் குறைக்கின்றது. இந்த ஞாயத்தால், ஆசாரியனும் பெரியோரும்—சிஷ்யனையும் சிறியோரையும் வணங்கினால், ஆயுள் குறைவை அடையுமென்று திருஷ்டாந்தமாயிருக்கிறது.

ஆசாரியன், பெரியோர், ஞானி, யோகி இவர்கள்—சிறியோரையும் சிஷ்யரையும் வணங்கினால் ஆயுள் குறைவு வரமாட்டாது என்ற தெப்படியெனின் :—

மேற்குறித்தவர்களது விளக்கத்துக்கு மேற்பட்ட விளக்கம் இவர்களுக்கு அகத்திலுண்டாகு மானால், ஆயுள் விர்த்திக்குக் குறைவு வரமாட்டாது. இதற்குத் திருஷ்டாந்தம் :— சமயச் சார்பில் பரமசிவம் சுப்பிரமணிய சுவாமியிடத்தில் அநுக்கிரகம் பெற்றிருப்பதும், ஞானிகள் மாட்டுச் சம்பந்த சுவாமிகளை அந்தச் சுவாமிகளின் தாய் தந்தையர் வணங்கியதும், அப்பர்சுவாமி முதலியோரும் வணங்கியது முணர்க. மேலும் சமய, மதாதீத ஞானிகளுக்கும், சமயமதங்கட்குட்பட்ட பெரியோர்களுக்கும், இவ்வுலகத்தின் கண்ணுள்ள ஜீவராசிகளின் தேகமாதி யாவும், தமது பதியின் தூல சூக்கும மாதலாலும், தமது பரிபூரண ஆன்ம அனுபவத்தின்கண் தோன்றிய அனுபவங்களாகிய இயற்கை புண்மை ஏகதேசங்களாதலாலும், எல்லாம் அவர்கட்குத் தாமன்றி யிரண்டற் றிருப்பதாலும், எல்லாவற்றையும் இவர்கள் அத்துவிதத்தில் சிவமெனக் கண்டுணர்தலாலும், இவர்கள் சென்றவிடமெல்லாம் கண்டு சிவமாயும் தாமாயும் நீக்கமறக் கைகூப்புவது இயற்கை.

ஆதலால், மலசகிதர்களான ஜீவர்கள், மதிப்புடையவர்களாதலால், ஆசாரிய சிஷ்ய பாவத்தில் வணங்கலாதி தொழிலால் ஜீவிப்பின்மையும் விர்த்தியும் உண்டாகின்றன. மகான்கள் கைகூப்புவதில் ஆன்மவிர்த்தி குறைவுபடாது ; ஜீவர்களின் அறிவு விளங்கும். எனினில்:—அவர்கள் சங்கல்பம் சுத்தமாதலால், இவர்களை மேற்கொள்ளும்.

அருட்பெருஞ்ஜோதி

35. நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல்

1. சாதாரண நித்திய கரும விதி

காலைக்கடன்

அருட்பெருஞ்ஜோதி

சூரியோதயத்திற்கு முன் நித்திரை நீங்கி எழுந்து, விபூதி தரித்துச் சிறிதுநேரம் உட்கார்ந்து, கடவுளைத் தியானஞ் செய்தல் வேண்டும்.

பின்பு களிப்பாக்கு மிகுதியாகவும் வெற்றிலை சுண்ணாம்பு தாராளமாகவும் போட்டுக்கொண்டு, முன் ஊறுகிற ஜலத்தை உமிழ்ந்து, பின் வரும் ஜலத்தையெல்லாம் உட்கொள்ள வேண்டும். பின்பு எழுந்து உள்ளே சற்றே உலாவுதல்வேண்டும். பின் மலஜல உபாதிகளைக் கழித்தல் வேண்டும். மலங்கழிக்கின்றபோது, வலது கையால், இடது பக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல் வேண்டும். ஜலங்கழிக்கும்போது, இடது கையால் வலதுபக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல்வேண்டும். மலமாவது ஜலமாவது பற்றறக் கழியும் வரையில், வேறு விஷயங்களைச் சிறிதும் நினையாமல், மலஜல சங்கற்பத்தோடு இருக்கவேண்டும். மலம் தின்னுந் தடைபடுமானால், இடது பக்கமாகச் சற்றே படுத்துப் பிராண வாயுவை வலத்தே வரும்படி செய்து கொண்டு, மல சங்கற்பத்தோடு மலவுபாதி கழித்தல்வேண்டும். ஜலம் தடைபட்டால், வலதுபக்கமாகச் சற்றே படுத்துப் பிராண வாயுவை இடது பக்கம் வரும்படி செய்து கொண்டு, ஜல சங்கற்பத்தோடு ஜலவுபாதி கழித்தல்வேண்டும்.

மலஜல வுபாதி கழித்தபின், செவிகள், கண்கள், நாசி, வாய், தாப்புள் — இவைகளில் அழுக்கு, பீளை, சளி, ஊத்தை என்கின்ற அசுத்தங்களையும், கை கால் முதலிய உறுப்புக்களிலுள்ள அழுக்குகளை யும் வெந்நீரினால் பற்றறத் துடைத்தல் வேண்டும். பின் வேலங்குச்சி, லம்விழுது — இவைகளைக்கொண்டு பல்லழுக் கெடுத்து, அதன்பின் கரி யாங்கண்ணித்தூள்கொண்டு உள்ளே சிறிது சாரம் போகும்படி ல்லில் தேய்த்து வாயலம்பின பின்பு,

காலை ஆகாரம்

போற்றலெக்கையாந்தகரை இலை அல்லது கரிசலாங் ண்ணி இலை ஒரு பங்கு, — தூதுளையிலை, முசுமுசுக்கையிலை கால் பங்கு, —

சீரகம் கால்பங்கு — இவைகளை ஒன்றுகச் சேர்த்துச் சூரணமாகச் செய்துகொண்டு, அதில் ஒரு வராகனெடையை ஒரு சேர் நல்ல ஜலத்திற்போட்டு, அதனுடன் ஒரு சேர் பசுவின் பால்விட்டுக் கலந்து, அதிலுள்ள ஒருசேர் ஜலமுஞ் சுண்டக் காய்ச்சி, அந்தப் பாலில் நாட்டுச் சர்க்கரை கலந்து சாப்பிடல் வேண்டும்.

காலைவெய்யில் கூடாது

காலையில் இளம்வெய்யில் தேகத்திற் படாதபடி, பொழுது விடிந்து ஐந்து நாழிகை பரியந்தம் உடம்பைப் போர்வையோடு காத்தல் வேண்டும். பின்பு வெய்யிலில் நெடுநேரம் தேகமெலிவு வரத்தக்க உழைப்பை யெடுத்துக்கொள்ளாமல், இலேசான முயற்சியில் சிறிது வருத்தந் தோன்ற முயலுதல்வேண்டும். பின் இளம் வெந்நீரில் குளித்தல்வேண்டுமே. விபூதி தரித்துச் சிவசிந்தனையோடு சிறிது நேரம் இருத்தல்வேண்டும்.

பகல் ஆகாரம்

பசிகண்டவுடன் தடைசெய்யாமல் ஆகாரம் கொடுத்தல் வேண்டும். ஆகாரங் கொடுக்கும்போது, மிகுந்த ஆலசியமு மாகாது, மிகுந்த தீவிரமு மாகாது. முதற் பசுஷம் சீரகச்சம்பா அரிசி — அன்றிப் புன்செய் வினைவும், காரிசியுந் தவிர — கௌரிட்ட அரிசியின் வகைகள் — ஆகும். அது சாதமாகும்போது, அதிக நெகிழ்ச்சியு மாகாது, அதிக கடினமும் ஆகாது. நடுத்தரமாகிய சோற்றை, அக்கினி அளவுக்கு அதிகப்படாமலும் குறைவுபடாமலும் அறிந்துண்ணுதல்வேண்டும். ஆயினும் ஒருபிடி குறைந்த பசுஷமே நன்மை. போஜனஞ் செய்த பின்னர் நல்ல நீர் குடித்தல்வேண்டும். அந்த நல்ல நீரும் வெந்நீராதல் வேண்டும். அதுவும் அதிகமாகக் குடியாதிருத்தல்வேண்டும்.

ஆகாரவகை

கிழங்கு வகைகள் உண்ணுமல் இருக்கவேண்டும். அவற்றில் கருணைக்கிழங்கு மாத்திரம் கொள்ளுதல் கூடும். பழ வகைகள் உண்ணுதிருத்தல் வேண்டும். அவற்றில் பேயன் வாழைப்பழம், ரஸ்தாளி வாழைப்பழம்—இவை கேர்ந்தால் சிறிது கொள்ளுதல் கூடும். பழைய கறிகளைக் கொள்ளாதிருத்தல் வேண்டும். பதார்த்தங்களில் புளி, மிளகாய் சிறிதே சேர்க்கவேண்டும். மிளகு சீரகம் அதிகமாகச் சேர்க்கவேண்டும். கடுகு சேர்ப்பது அவசியமல்ல. உப்பு குறைவாகவே சேர்த்துக்கொள்ளல்வேண்டும். அன்றி, எந்த வகையிலும் உப்பு மிகுதியாகக் கொள்

ளாமல் உபாயமாகக் கொள்ளுவது தேகம் நீடிப்பதற்கு ஏதுவாம். தாளிப்பில் பசுவெண்ணெய் சேரிட்டால் தாளிக்கவேண்டும். நோாத பக்ஷத்தில் நல்லெண்ணெய் சிறிது சேர்க்கவும் கூடும். வெங்காயம், வெள்ளைப்பூண்டு சிறிதே சேர்க்க வேண்டும். கத்தரிக்காய், வாழைக்காய், அவரைக்காய், முருங்கைக்காய், பீர்க்கங்காய், கலியாணப் பூசுணைக்காய், புடலங்காய், தூதுளங்காய், கொத்தவரைக்காய், — இவைகள் பதார்த்தஞ் செய்தல் கூடும். இவற்றினுள் முருங்கை, கத்திரி, தூதுளை, பேயன்வாழைக்காய் —இவைகளை அடுத்தடுத்துக் கறிசெய்து கொள்ளலாம். மற்றவைகளை ஏகதேசத்தில் செய்துக்கொள்ளலாம்.

வடை, அதிரசம், தோசை, மோதகம் முதலிய அப்ப வர்க்கங்கள் கொள்ளப்படாது; ஏகதேசத்தில் சிறிது கொள்ளவும் கூடும். சர்க்கரைப் பொங்கல், திதியோதனம், புளிச்சாத முதலிய சித்திரான்னங்கள் கொள்ளப்படாது; ஏகதேசத்தில் சிறிது கொள்ளலாம்.

புளியாரைத் துவையல் தினந்தோறும் கிடைக்கினும் மிகவும் நன்று. கரிசலாங்கண்ணிக்கீரை, தூதுளைக்கீரை, முன்னைக்கீரை, பசலைக்கீரை, முருங்கைக்கீரை, — இவைகளைப் பருப்போடு சேர்த்தும், மிளகோடு சேர்த்தும், புளியிட்டும், தனித்தும், கறிசெய்து கொள்ளக் கூடும். மற்றைக் கீரைகள் ஏகதேசத்தில் நேரில் சிறிது சேர்த்துக் கொள்ளவும் கூடும். புளித்த தயிர் சேர்த்தல் கூடும். பருப்பு வகைகளில் முளைகட்டாத துவரம் பருப்பு, அல்லது முளைகட்டின துவரம் பருப்பு மிளகு சேர்த்துக் கடைதல், துவட்டல், துவையல், செய்தல், குழம்பிடல், வேறொன்றில் கூட்டல் முதலியவாகச் செய்து, நெய், சேர்த்துக் கொள்ளுதல் கூடும். அந்த நெய்யை மிகவுஞ் சேர்க்கப்படாது. மற்றப் பருப்பு வகைகள் அவசியமல்ல. ஏகதேசத்தில் நேர்ந்தால் கொள்ளவுங் கூடும்.

ஜலம்

சுக்கைச் சுண்ணைப்பு தடவிச் சுட்டு, மேலழுக்கைச் சுரண்டிப் போட்டுச் சூரணமாக்கி வைத்துக் கொண்டு, நல்ல ஜலத்திற் கொஞ்சம் போட்டு, 5. பங்கில் 3. பங்கு நீர் சுண்ட, 2 பங்கு நீர் நிற்கக் காய்ச்சி, அதைத் தாகங்கொள்ளுதல் வேண்டும். நோாத பக்ஷத்தில் வெந்நீராவது கொள்ளுதல் வேண்டுமே யன்றிக் குளிர்ந்த ஜலங் கொள்ளப்படாது.

எந்தப் போஜனத்திலும் புலால் எந்த வகையினும் புசிக்கப்படாது.

எப்படிப்பட்ட போஜனமாயினும் சிறிது குறையவே புசித்தல் வேண்டும். எந்தக் காலத்திலும் பசித்தா லல்லது எந்தவகையிலும் போஜனஞ் செய்யப்படாது. வாத பித்த சிலேத்துமங்கள் அதிகரிக்கத் தக்க போஜனங்களை அறிந்து விடல்வேண்டும்.

பகலில் நித்திரை கூடாது

பகலில் போஜனஞ் செய்தவுடன், சற்றே படுத்தெழுந் தல்லது வேறு காரியங்களிற் பிரவேசிக்கப்படாது. ஆயினும், நித்திரை வரும்படி படுக்கப்படாது. பகலில் எந்த வகையிலும் நித்திரை யாகாது. சிறிது படுத்து எழுந்தபின்—பாக்கும் வெற்றிலையும் குறைவாகவும்—சுண்ணாம்பு சிறிது அதிகமாகவும்—தாம்பூலம் பஞ்ச வாசங்களோடு தரித்து, முதலில் ஊறிய ஜலத்தைப் புறத்தில் உமிழ்ந்துவிட்டுப் பின்பு ஊறுஞ் ஜலத்தை உட்கொள்ளல்வேண்டும். பகற் போஜனஞ் செய்த சுமார் பதினேழரை நாழிகைக்குப் பின்பு, பேயன் வாழைப்பழம், ரஸ்தாளி வாழைப்பழம், பங்காள வாழைப்பழம் சிறிது சர்க்கரை சேர்த்து சாப்பிடக் கூடும். காலையில் பால் சாப்பிடும்போது பசி அதிகரித்திருந்தால், இந்தப் பழங்களில் நெய் சர்க்கரை கலந்து சிறிது சாப்பிடக்கூடும்.

பகலில் பெண்கள் தேகசம்பந்தங் கூடாது.

பகற் போஜனஞ் செய்தபின், சற்று நேரங் கடவுளைத் தியானித் திருக்கவேண்டும். அதன்பின் எந்த வேலை செய்யினுந் தேக காரணங்களுக்கு மெலிவு உண்டுபண்ணுகிற வேலைகளாகச் செய்யப்படாது. செய்யினுஞ் சிறிது சிறிதாகச் செய்தல்வேண்டும்.

மாலைக் கடன்

சாயங்கால வெய்யில் தேகத்திற் படும்படி சிறிது உலாவு தல்வேண்டும். காற்று மிகுந்தடிக்கில் அப்போது உலாவப்படாது. அன்றி, கடின வெய்யில், பனி, மழை — இவைகள் தேகத்திற்பட உலாவப்படாது.

இராத்திரி முன்பங்கில் தேக சுத்திசெய்து, விபூதி தரித்துச் சிவத்தியானஞ் செய்தல், தோத்திரஞ்செய்தல், சாத்திரம் வாசித்தல், உலகியல் விவகாரஞ் செய்தல் — இவை முதலியவை கூடும்.

பின் போஜனஞ் செய்தல்வேண்டும். இராப்போஜனம் பகற் போஜனத்தைப் பார்க்கிலும் அற்பமாகப் புசித்தல்வேண்டும். இரவில்,

தயிர், கீரை, வாயுவான பதார்த்தம், குளிர்ச்சியான பதார்த்தம், சேர்க்கப்படாது. சூடான பதார்த்தங்களையே அறிந்து சேர்க்கவேண்டும். அவை சிறுகத்தரி, முருங்கை, வற்றல் முதலியவை யாம். இரவில் போஜனஞ் செய்தபின், சிறிது உள்ளே உலாவுதல் வேண்டும். பின்பு சிவத்தியானம் முதலியவை செய்தல் வேண்டும். சுமார் 12 நாழிகைக்குமேல் காலைக்குச் சொல்லிய படியாவது தனித்தாவது பசுவின்பாலை நன்றாகக் காய்ச்சிக் குடித்தல் வேண்டும். பின் சில நேரஞ்சென்று சுமார் 15 நாழிகையில் பாக்கும் சுண்ணாம்பும் மிகவுங் குறைய வெற்றிலை மிகவும் அதிகப்படக்கலந்து பஞ்சவாசத்தோடும் போட்டுக்கொண்டு, முதற் ஜலத்தையுமிழ்ந்து பின்வருஞ் ஜலத்தை உட்கொண்டு, திப்பியை யுமிழ வேண்டும். மற்ற வேளையும் தாம்பூலத்தின் திப்பியை உமிழுதல் அவசியம்.

நித்திரை

பெண்களுடன் தேகசம்பந்தம் செய்யவேண்டில், முன் ஒரு நாழிகை பரியந்தம் மனத்தைத் தேகசம்பந்தத்தில் வையாது வேறிடத்தில் வைத்துப்பின் சம்பந்தஞ் செய்தற்குத் தொடங்கல் வேண்டும். தொடங்கியபோது அறிவு விகற்பியாமல் — மனமுதலிய கரண சுதந்திரத்தோடு, தேகத்திலும் கரணங்களிலுஞ் சூடுதான்றுமல், இடது புறச் சாய்வாகத் தேக சம்பந்தஞ் செய்தல்வேண்டும். புத்திரனைக் குறித்த காலத்தன்றி மற்றக் காலங்களில் சுக்கிலம் வெளிப்படாமலிருக்கத்தக்க உபாயத்தோடு தேகசம்பந்தம் செய்தல் வேண்டும். அவ்வுபாயமாவது பிராண வாயுவை உள்ளேயும் அடக்காமல் வெளியேயும் விடாமல் நடுவே யுலாவச் செய்து கொள்ளுதலாம். ஒருமுறை யன்றி, அதன் மேலுஞ் செய்யப்படாது. தேக சம்பந்தஞ் செய்த பின், தேக சுத்தி செய்து, திருநீறணிந்து சிவத்தியானஞ் செய்து, பின்பு படுக்க வேண்டும்.

படுக்கும்போது, இடதுகைப் பக்கமாகவே படுத்தல்வேண்டும்.

எந்தக் காலத்தில் எது குறித்துப் படுத்தபோதிலும், இடது கைப்பக்கமாகவே படுத்தல் வேண்டும். பின்பு ஏழரை அல்லது பத்து நாழிகை யளவு (3 அல்லது 4-மணி நேரம்) நித்திரை செய்தல்வேண்டும். அதன்பின் விழித்துக்கொண்டு நல்ல சிந்திப்புடனிருத்தல் வேண்டும். இரவில் தேகசம்பந்தம் 4 தினத்திற்கொரு விசை செய்தல் அதம பக்ஷம். 8. தினத்திற்கொரு விசை செய்தல் மத்திம பக்ஷம். 15. தினத்திற் கொரு விசை செய்தல் உத்தம பக்ஷம். அதன்மேற்

படில் சுக்கிலம் ஆபாசப்பட்டுத் தானே கழியும். 4 தினத்திற் கொரு விசை செய்யில் சுக்கிலம் நெகிழ்ச்சிபட்டுச் சந்ததி விருத்தியைக் கெடுக்கும். ஆதலில், அதம பக்ஷமாயிற்று. இரவில் சொப்பனம் வாராது மிருதுவாகவே நித்திரை செய்து விழித்துக்கொள்ளல் வேண்டும்.

எப்போதும் பயத்தோடிருக்கப்படாது. பரிச்சேதம் பயம் இல்லாமலும் இருக்கப்படாது. எப்போதும் மன உற்சாகத்தோ டிருக்கவேண்டும். கோலே, கோபம், சோம்பல், பொய்மை, பொறுமை, கடுஞ்சொல் முதலிய தீமைகள் ஆகா. உரத்துப்பேசல், வேகமாக நடத்தல், ஓடி நடத்தல், வழக்கிடல், சண்டையிடல் கூடா. எந்த விதத்திலும் பிராணவாயு அதிகமாகச் செலவாகாமற்படி, ஜாக்கிரதையோடு பழகுதல் வேண்டும்.

தலை முழுகுதல்

பொற்றலைக் கையாந்தகரையை உலர்த்தித் தூள்செய்து வைத்துக்கொண்டு, அதை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சித் தலைக்கிட்டு நான்கு நாளைக்கு ஒரு விசை வெந்நீரில் முழுகவேண்டும். அன்றி, வாரத்திற்கு ஒரு விசையாவது முழுகுதல் வேண்டும். தூளில்லாத பக்ஷத்தில் நல்லெண்ணெயைக் காய்ச்சியே முழுகுதல் வேண்டும். புகைக்குடி, சுருட்டுக்குடி, கள்குடி, சாராயக்குடி முதலிய மயக்கக் குடிகளாகா.

1. மலஜலத்தைச் சிறிதும் அடக்கப்படாது.
2. சுக்கிலத்தைச் சிறிதும் வீணில் விடப்படாது.
3. துன்மார்க்கப் பழக்கஞ் செய்யக்கூடாது.

எந்த வேலை செய்யினும், எந்த விவகாரஞ் செய்யினும், சிவசிந்தனையோடு செய்து பழகுதல் வேண்டும்.

இந்தத் தேகத்தில் புருவமத்தியில், நமது ஆன்ம அறிவென்கின்ற கற்பூரத்தில், கடவுள் அருளென்கிற தீபம் விளங்குவதாகப் பாவித்துப் பார்த்து, அதில் பழகிப் பழகிக் கடவுளிடத்தே உண்மையாகிய அன்பையும்—ஜீவர்களிடத்தே உண்மையாகிய காருணியத்தையும்—இடைவிடாமல் வைத்து, ஓங்காரபஞ்சாக்ஷர ஞாபகஞ்செய்தல் வேண்டும்! சிவபஞ்சாக்ஷர ஞாபகஞ் செய்தல் வேண்டும். அவசியம்.

2. பொது விதி

1. ஆறு மாதம் அல்லது மூன்று மாதத்திற் கொருதரம், வெள்ளைக்காக்கட்டான் முதலானவை களில் விசேசனம் வாங்கிக் கொள்ளுதல்.

2. நாலு மாதத்திற்கு ஒருதரம் மருக்காரை முதலியவை களால் வமனத்திற்கு வாங்கிக்கொள்ளல்.

3. ஒரு வருடத்திற்கு ஒரு தரம், முள்ளி முதலானவை களால் நசியஞ் செய்துகொள்ளல்.

4. நாலு நாளைக்கு ஒரு தரம், அத்திமுதலிய வஸ்துக் களால் செய்வகைப்படி செய்த மைகளால் கண்ணுக்கு அஞ்சனந் தீட்டல்.

5. ஒரு பகலும் அல்லது ஒரு வார வட்டத்திற்கு ஒரு தரம், சாவதானமாக நல்ல நினைப்போடு தன்வசத்திலிருந்து, மூச்சு அதிர்ந்து மேலிடாது, மெல்லெனப் பெண்போகம் செய்தல் — இது விருத்தர்களுக்கு விதித்ததல்ல.

6. வாரவட்டம் அல்லது நாலு தினத்திற் கொருதரம் முலைப்பால் பொன்னுங்கண்ணி முதலிய தைல மிட்டுக்கொண்டு செம் பாகமான வெந்நீரில் மெல்லென முழுகல்.

7. இளவெய்யில், கடுவெய்யில், மழை, குளிர் காற்று, பனி — இவைகளால் உடம்பை வருத்தாமற் காத்துக் கொள்ளுதல்.

8. கடுநடை, ஓட்டம், பெருஞ்சால், பேராசை, இசை பாடுதல், வழக்காடுதல், பெருநினைப்பு, பெருஞ்சிரிப்பு, பெருந்துயர், விகுபார்வை, ஊன்றிக்கேட்டல், தூக்கந்த நற்கந்த முகர்தல், சுவை விரும்பல், பெருண்டி, பெருந்தூக்கம், வீண்செயல், பெருமுயற்சி, விளை யாட்டு, மலமடக்கல், ஜலமடக்கல், தாகமடக்கல், பெருநீர்குடித்தல், சயன முணர்ச்சி, பயம், அசங்காரம், இடம்பம், பேராசை, உலோபம், கோபம் மோகம், மதம்—இவை முதலிய தேகேந்திரிய காரண குற்றங்க ளடையாதிருத்தல்.

9. பழஞ்சோறு, பழங்கறி; எருமைப்பால், எருமைத் தயிர் மோர் நெய்; செம்மறிப்பால் தயிர் மோர் நெய்; கேழ்வரகு, வரகு, தினை, சாமை, பருப்புவகை; அதிரசம் அப்பம், சுகியம் முதலிய சிற் றுண்டி; தயிர்ச்சோறு, புளிச்சோறு, முதலிய சித்திரான்னம்; காரரிசிச் சோறு, முளைக்கீரை, அசுத்திக்கீரை, முன்னை முதலான இலைக்கறி; சுரை, பூசணி, பறங்கி, பீர்க்கு, புடல், பாகல், கடுகு, நல்லெண்ணெய், புளி, புகையிலை, கள், சாராயம், கஞ்சா, புலால், மாமிசம் முதலிய விலக்குகளை நீக்கி, விதித்தவைகளை யனுசரித்தல்.

3. சிறப்பு விதி

1. நித்தியம் சூரியோதயமாக 5 நாழிகைக்கு முன்னே நித்திரை நீங்கி யெழுந்திருத்தல்.

2. எழுந்தவுடன் விபூதி தரித்துச் சற்றுநேரம் செவ்வை யாக வுட்கார்ந்து, கடவுளை யுன்றி நினைத்து எழுதல்.

3. அங்ஙனம் எழுந்து, சிறிதுந் தாமதியாமல், மவுனமாகச் சிறிது தூரம் நடந்து, எவ்விடத்தில் மலஜல வுபாதி நேரிடுகிறதோ, அவ்விடத்தில் அப்பொழுதே ஒன்றுஞ் சேஷ்டையில்லாமல், விரைவில் லாமல், இருந்து அற விடுதல்.

4. பொற்றலைக் கையாந்தகரை, கரிசலாங்கண்ணி — இவை களில் ஒன்றுகொண்டு, உள்ளே சிறிது சாரம் போகவும், கபநீர் பித்தநீர் வெளியாகவும் தந்தசுத்தி செய்தல்.

5. பின்பு, திருநீறு தரித்துக் கொண்டு, ஏகாந்தமாக ஓரிடம் பற்றி யிருந்து, சூரியன் உதயமாகிற வரையில், கடவுளைத் தியானஞ் செய்து கொண்டிருத்தல்.

6. உதயந் தொடங்கிச் சுமார் ஜாம பரியந்தம் தக்க முயற் சியோடு பழகுதல்.

7. காலையில் உண்ணுமல், சுமார் பதினைந்து நாழிகைக்கு உண்ணுதல்.

8. காலையில் சூரியோதய மானவுடன் தூதுளை, பொன்னங் ண்ணி, வில்வம், சீந்தில், பொற்றலைக் கையாந்தகரை, புளியாரை, வல் ரை, நன்னரி, கடுக்காய், மிளகு, அறுகம்வேர் — இவைகளில் யாதா னும் ஒன்றைப் பசும்பாலிற் சுத்திசெய்து சூரணமாக்கிக் கொண்டு, க்கரையிற் கலந்தாவது அல்லது சூரணமாகவாவது பசும்பாலில் அரை ணித்தாவது சிறிது சிறிதாக உண்ணுதல்.

9. சுமார் 15 நாழிகைக்கு உண்ணத் தொடங்கும்போது, ன் புசித்த போஜன முழுதுந் ஜீரணித்ததை நன்றாயுன்றி யறிந்து, ன்பு ஜீரணித்த அக்கணமே, விருப்பால், எராமலும், வெறுப்பால் றையாமலும், தராசு முனைபோல் அளவறிந்து அந்த அளவின்படி, திக விரைவும், அதிக தாமதமு மில்லாதபடி, சமமாகப் புசித்தல்.

10. புசிப்பில் பச்சரிசிச்சாதம், பசும்பால், பசுநெய், முருங்கை, த்தரி, முள்ளி, தூதுளை முதலிய இளங்காய், பொன்னங்கண்ணி, தூதுளை, தலிய இளங்கீரை — இவைகளில் மிளகு ஒரு பங்கு, சீரகம் காலே ரைக்காற் பங்கு, வெந்தயம் காற்பங்கு, புளி வீசம் பங்கு, உப்பு சம் பங்கு, மிளகாய் வீசம் பங்கு, சேர்க்கப்பட்ட கறியமுது, ழம்பு, ரசம் முதலான வைகளைக்கொண்டு பெருங்காயம், வெங்காயம், வள்ளைப்பூண்டு முதலான வைகளைத் தள்ளி, புசித்தல்.

11. புசித்தபின்பு, மத்தியானந் தொடங்கி 25 நாழிகை பரி ந்தப், சத்துவமான விவகாரங்களை மெல்லென இருந்தபடி நடத்தல், றர்க்கு விசேஷங் கேளாவகை படித்தல், மெல்லெனப் பேசல் — இவை ன்றி நல்ல நினைப்போடிருத்தல்.

12. காலை, மத்தியானம், சாயங்காலம் — இப்பொழுது னிலும் மத்தியிலும் நித்திரை செய்யா திருத்தல்.

13. மத்தியான போஜனம் செய்கிறபொழுது, அடிக்கடி காநீர் குடியாமல், போஜனஞ் செய்த பின்பு, ஒரு தரமாக இளஞ் டுள்ள வெந்நீரைக்கிரமமாகத் தாகத்துக்குக்கொண்டு, குளிர்ந்த ஜலம் றிதுங் கொள்ளாது தள்ளுதல்.

14. மத்தியானத்தில் சுமார் 5 நாழிகை பரியந்தஞ் சவ்வையாக ஓரிடத்தில் இருந்து, மனத்தை ஒருவழிப்படுத்தித் தய்வ சிந்தனையோ டிருத்தல்.

15. காலைப்புணர்ச்சி, பகற்புணர்ச்சி, அந்திப்புணர்ச்சி, இரவு முன்பங்குப் புணர்ச்சி, காலைப்போஜனம், அந்திப்போஜன முதலானவை யில்லாதிருத்தல்.

16. சாயங்காலத்திலும் 5 நாழிகை யாதொரு முயற்சியுமில்லாமல், ஓரிடத்தி லசையாதிருந்து தியானித்தல்.

17. இரவில் 10 நாழிகைக்குள் மத்தியான போஜனத்துக்கு அரைத்தராமாகப் புசித்தல்.

18. அதற்குமேல் இராத்திரி 15 நாழிகை பரியந்தம் மனத்தை யடக்கித் தியானித்திருத்தல்.

19. 15 நாழிகை தொட்டு இருபத்திரண்டரை நாழிகை பரியந்தம் மெல்லெனத் தூங்கல்.

20. படுத்து விழிக்கிற பரியந்தம் இடக்கை கீழிருக்கச் செய்தல்.

21. ஆகாரம் அரை; நித்திரை அரைக்கால்; மைதுனம் வீசம்; பயம் பூச்சியம்; ஆகப் பெறுதல்.

36. தேக நஷ்டத்தின் முக்கிய காரணங்கள்

இந்த உலகத்தில் மனிதர்களுக்குத் தேகம் சீக்கிரத்தில் நஷ்டம் அடைவதற்குக் காரணம் இரண்டு. அவையாவன:—ஆகாரம், மைதுனம். ஆகாரத்தால் ஒன்பதுபங்கு நஷ்டமும், மைதுனத்தால் ஒரு பங்கு நஷ்டமும் உண்டாகிறது. எப்படியெனில்:—பிண்ட உற்பத்தியின் காலம் தொடங்கி இறந்துபோகிற பரியந்தம் ஆகாரம் உண்டு. இது இயற்கை. சிசு, வாலிபம், விருத்தாப்பியம் — இந்தப்பருங்களில் மைதுனம் கிடையாது. கௌமாரம் யௌவனம் — இந்த இரண்டு பருவங்களில் மாத்திரம் மைதுனம் உண்டு. இந்தப் பருவங்களிலும், நோயாலும், துக்கத்தாலும், தரித்திரத்தாலும், பசியாலும், பயத்தாலும், வேறு அனந்தவகையால் உண்டாகும் தின்பங்களாலும், மைதுனம் தடைபடும்.

ந்தக்காலத்திலும் ஆகாரம் உண்டு. பொருந்தல் ஏகதேசம். நஷ்டமும் அப்படியே யிருக்கிறது. ஆகார விஷயத்தில், அதிக்கிரமம், அக்ரமம், அஜாக்கிரதை, அசாதாரணம் இப்படிப்பட்ட உணவுகளை நீக்கி, ந்த சத்துவ ஆகாரங்களைப் புசித்து, ஆயுள் விர்த்தி செய்துகொள்வது ந்த சன்மார்க்க ஏற்பாடு.

37. நம்மை நஷ்டஞ் செய்யும் நான்கு

நம்மை நஷ்டஞ் செய்வன நான்கு. அவையாவன :—

ஆகாரம் 1, மைதுனம் 2, நித்திரை 3, பயம் 4 — ஆகிய ந்நான்கிலும் அதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். இந்த நான்கிலும் க்கியமானவை — ஆகாரம் மைதுனம். ஆதலால், இவ்விரண்டிலும் தனிலும் அதிக ஜாக்கிரதையோடு இருக்கவேண்டும். இந்த இரண்டி மும் முக்கியமானது—மைதுனம். ஆதலால், இந்த விஷயத்தில் எல்லா ற்றைப் பார்க்கிலும்—அதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். அவ்வாறு ராவிடில், தேகம் அதிசீக்கிரத்தில் போய்விடும்; பின்பு முத்தி அடைவது டாது. முத்தியடைவதற்கு இம் மானிட தேகமே தக்கதாயும், வேறு தகத்தா லதை யடைவது அரிதாயும், இருப்பது—ஆதலால், எவ்விதத் ரலாயினும் தேகம் நீடித் திருக்கும்படி பாதுகாத்தல்வேண்டும்.

38. பெண்களின் சமத்துவம்

பெண்களுக்கு, யோகம் முதலிய சாதனங்கள் அவசியம் கற் கவேண்டியது. மேலும் பேதமற்று அபேதமாய்ப் படிப்பு முதலியவை சொல்லிக்கொடுக்கவேண்டியது. தத்துவம் முதலியவற்றின் சொரூப திகளைத் தெரிவித்துச் சரளமாக்கினால், பின் தடையின்றி நம்முடைய ரிய ஆசிரம காலத்தில் ஒத்திருப்பார்கள். "தெய்வந் தொழாஅள்" ன்னும் தேவர் குறளால் இதை அறிக.

39. துர் மரணங்கள்

ஜீவர்களுக்கு, வாந்தி பேதி, மாரடைப்பு, முதலியவற்றால் நேரிடும் துர்மரணங்கள், ஆகாரக் குறைவாலும், மிகுதியாலும், அக்கிரம அதிக்கிரமத்தாலும், பொருந்தலாலும்—இவைபோன்ற பலவகைக் கெடுதியாலும் உண்டாகின்றன.

40. தேகம் நீடிப்பதற்குத் தீபப் பிரமாணம்

தேகம் நீடிப்பதற்குத் தீபப் பிரமாணம் :— 1. அகல் — தேகம்; 2. எண்ணெய் — இரத்தம்; 3. திரி — சுக்கிலம்; 4. பிரகாசம் — ஆன்மா; ஆதலால்,

மேல் குறித்த தீபத்தினது திரியைத் தூண்டிவிட்டாலும், காற்றுள்ள இடத்தில் வைத்தாலும், காற்றில்லா இடத்தில் வைத்தாலும், பெருந்தீபச் சமீபத்தில் சேர்த்தாலும், விட்டில், பிரமரம், மூஷிகம், மார்ச்சாலம் முதலிய அஜாக்கிரதையாலும், மேற்படி தீபம் நஷ்டமாகும்.

புத்திமானிடத்தில் தீபத்தினது உபகரணங்களைக் கொடுத்து, ஒரு நாளைக்குத் தீபம் பார்க்கச் சொன்னால், புத்தி விசாலத்தால், மேல் குறித்த அஜாக்கிரதையின்றி, தகளிக்குச் சூடேறுமலும், எண்ணெயில் அழுக்கு ஏறுமலும், திரிக்குத் தூசு, இறுகல், தளர்ச்சி, பருமன் இவைகளில்லாமலும் திரி போட்டு, அடிக்கடி தூண்டாமல், தீபத்தை மற்றொருதினமு மிருக்கச் செய்விப்பான். மேல் குறித்த குற்றங்களோடு தீபமேற்றினால், பதினைந்து விநாடி அல்லது கணம் — இதில் சிட்டம் கட்டுவது இயற்கை. தூசு போக்கி வைத்தால், பதினைந்து நிமிஷத்திற் கொருவிசை சிட்டங்கட்டும். விசேஷ அறிவுடையவன் லோகம் முதலியவற்றில் தீபம் வையாது, வைர படிகங்களில் அமைத்த தீபத் தகளியில், மேல்குறித்த தீ போபகரணங்களைத் திராவகமாக்கி, சுத்தாக்கினியால் பிரகாசமுண்டாக்குவன். அப்போது சிட்டமும், பிரகாச நஷ்டமும், சேரிடாது. ஆதலால், நம்முடைய தேகத்தில் சுக்கிலமாகிய திரியை விசேஷம் தூண்டி, அடிக்கடி பெண்ணிடத்தாகிலும், வேறு தந்திரத்தாலாயினும், செலவு செய்துவிட்டால், சுக்கிலமாகிய திரி போய் ஆயு

திய பிரகாசம் நஷ்டமாய்விடும். ஆனல் சிட்டத்தை மாத்திரம் நீக்க ண்டுமாதலால் — தொள்ளாயிரத்து அறுபது (960) நாழிகைக் கொரு ம் தேகசம்பந்தஞ் செய்து — ஆபாசப்பட்ட சிட்டமாகிய சுக்கிலத்தை வெளிப்படுத்திவிடவேண்டும். இது மந்தனுக்கு. அதிதீவிர பக்குவி ர், மேல் குறித்த வண்ணம் கடவுளிடத்தில் இலக்ஷியமும், ஜீவர்க –த்தில் தயவு முடையவனுக்கு சிட்டம் போன்ற சுக்கிலாபாசம் சேரி து : தேகம் நீடிக்கும்.

41. இல் வாழ்வானுக்கு ஞாயம்

மைதுனம் ஊற்றுக்கேணி ஞாயத்தை ஒத்திருக்கின்றது. அதா ல, ஊற்றுக் கேணியை இடைவிடாமல் 10 தினம் இறைத்தால், அதின் நவாய் குறைந்து, அதில் ஜலமில்லாமல்போய்ப் பிரயோஜனப்படாது. நபோல், இறைக்காத ஊற்றுக்கேணியிலுள்ள நீரி லழுக்கேறி, அதின் நவாய் அடைபட்டு, அதின் சுரப்பு நின்றுவிடும். பின்பு அந்தக் ணியிலுள்ள ஜலம், சூரிய உஷ்ணத்தினல் கிரகிக்கப்பட்டு ஒன்று லாமல் போய்விடும். இதுபோல் இடைவிடாது மைதுனஞ் ய்தால், இந்திரியத்தின் வருவாய் குறைந்து, அருமையாகக் கிடைத் ;க்கின்ற தேகம், அதிசீக்கிரத்தில் போய்விடும். மைதுனம் எந்தக் யத்தும் இல்லாதிருத்தலினலும் மேல் குறித்த ஊற்றுக்கேணி ஞாயத் ல் கேடுண்டு, அதாவது மைதுனம் எந்தக் காலத்திலு மில்லா நத்தலினல், இந்திரியத்தின் தன்மை கெட்டு, அதனல் அவ்விந்தி தின் வருவாயடைபட்டு, மிகுந்திருந்த அவ்விந்தியமும் உஷ்ணத் நல் வற்றிவிடும். பின்பு தேகம் உடனே போய்விடும்.

42. ஜாக்கிரதை

ஜீவன் என்கிற தீபத்துக்குச் சுக்கிலம் — திரி; இரத்தம் — எண் ய். ஆகையால் சுக்கிலமாகிய திரியை விசேஷம் தாண்டிச் செலவு துவிட்டால் ஆயுசு நஷ்டமாய் விடும். ஆனல் சிட்டத்தை மாத்திரம் ந்துவிட வேண்டியது. அதாவது 16 தினத்திற்கு ஒரு தரம் ச சம்பந்தஞ் செய்து ஆபாசப்பட்ட சுக்கிலத்தை வெளிப்படுத்தி வேண்டும். ஆசானுடைய அல்லது, ஆண்டவருடைய திருவடி

யில் சதா ஞாபக முடையவனுக்குக் கோசத்தடிப் புண்டாகாது. ஆகை யால், தேகசம்பந்தம் எகதேசத்திற் செய்யலாமென்றது மந்த தரத்தை புடையவனுக்கே யன்றி, அதிதீவிர பக்குவிக் கல்ல.

43. பஞ்ச மகா பாதகங்கள்

1. கள், 2. காமம், 3. கோலை, 4. களவு, 5. பொய் — இவ் வைந்தும் கொடிய துக்கத்தை உண்டுபண்ணும். இவ்வைந்திலும் கோலை விசேஷ பாவம். எனினும், 1. கள்ளுண்டவனுக்கு 2. காமம் உண்டாகாம லிருக்காது, 3. கோலை செய்யத்துணிவு வராமலிராது, 4. களவு செய் யாமலிரான், 5. பொய் பேச அஞ்சான். ஆகையால், இந்த ஐந்தையும் ஒழிக்கவேண்டியது அவசியம். இதில் ஒன்றை அடைந்தவ னுலகும் அவனை மற்றவை தொடராமலிரா.

44. ஒளிநிலையும் சுத்தஞானியும்

இரவில் தீபமில்லாத இடத்தில் இருக்கக்கூடாது. ஏனெ னில் — அஃது பிராண நஷ்டம் பண்ணும். ஆதலால், நமது கிருகத் தில் தீபம் வைத்து இருளைப்போக்கி, ஆனந்த மயமாய் நித்திரை யில்லாதிருந்தால், ஆயுள் விருத்தியாகும். இஃது சாத்தியனுக்கு. சாதகன் ஒருவாறு நித்திரை செய்தல்வேண்டும். கிருகத்தில் இருளில்லாது எங்கும் பிரகாசமாய் தீபம் வைத்தால், மேற்படி இருள் அந்தத் தீபத் தில் அடங்கும். அதுபோல் ஜீவ தீபமாகிய நாம் வசிக்கிற கிருகத்தில் பிரகாச மில்லாவிட்டால், மேற்படி இருள் ஜீவப் பிரகாசமாகிய நம்மிடத் தில் சேர்ந்து, கஷ்டத்தைப் பண்ணும். அதுபோல் ஆன்ம வாசமாகிய இத்தத் தேகமாகிற கிருகத்தில், அருட்பிரகாச மில்லாது மருளாகிய அஞ்ஞான சம்பந்தமுடைய இருள் சேர்ந்தால், பிராண கஷ்டம் சீக் கிரமாம்.

ஆதலால், நாம் நெற்றியிலிருக்கும் நடுக்கண்ணா ஆராயி யர் அனுக்கிரகத்தால் திறக்கப்பெற்றுக்கொள்வது [illegible] னில், மேற்படி நெற்றிக் கண்ணைத் திறக்கப்பெற்றவ னுக்கு எல்லா அனுபவங்களும் பட்டப்பகல்போல் [illegible]

சுத்தஞானி. மேற்படி ஞானி தபவோடு ஒரு பிரேதத்தைப்
;த மாத்திரத்தில் பிரேதம் உயிர் பெற் றெழும். மேற்படி
ரிக்கு, ஆன்மாக்களினது அபக்குவ பரிபாகத்தால் சினம் தோன்
ல், உடனே அந்த ஜீவன் பஸ்மமாகி விடுவான். மேற்படி ஞானிக்கு
குறித்த அடையாளங்க ளுள. மேற்படி கண்ணைத் திறப்பதற்கு
கதவும், பூட்டுமுளது. மேற்படி பூட்டை, அரு ளென்கிற திறவு
லக்கொண்டு திறக்கவேண்டும். ஆதலால், வடி அருளென்பது
ம இயற்கையாகிய பெருந் தயவு. நாம் தயா வடிவமானால் வடி
பவம் வேரும்.

ாலும் அந்தச் சுத்த ஞானி இறந்த வுயிர்களை எழுப்பு
ற்குப் பிரமாணம் யாதெனில்:—

ஒருவாறு தீபப் பிரமாணத்தா லறிக. தீபப் பிரமாண மென்
யாது? தீபத்தினிடத்தில் காரிய வொளி, காரிய காரணவொளி,
ணவொளி என மூன்று. வடி ஒளிபாவன: — ஒளி, சோபை,
சம். ஆதலால் கடவுள் காரியமாய்ப் பிரகாசம்போல் சுவர்ண தேகி
த் தோன்றினால், — அதி தூரத்திலிருக்கிற இருளென்னும் அஞ்ஞானத்
ப் போக்கி ஆன்ம அனுபவத்தை வருவிப்பது பிரகாச மயம்.
போல் ஒளி மேற்படி பிரகாசத்திலடங்கிச் சோபை — காரிய
ணமாய் இருக்கின்றது போல், ஆன்மாக்கள் அஞ்ஞானத்தில் கட்
டு அறிவாகிய தீபத்தைக் கருதினால், மேற்படி அறிவாகிய தீபம்
ன்றின கணமே, அதின் மயமாவார்கள். அதுபோல், கடவுளின்
பையைக் கண்டால், பஞ்ச கிருத்தியமுஞ் செய்யக்கூடும். ஒளியைத்
ட்டால் சுடுவதுபோல், இறந்த பிரேதத்தை அவர்க்குச் சமீபிக்கச்
த்தல், தக்கணமே அது ஜீவிக்கும். மேலும் பிரகாசம் எங்கு
ளது. எந்த இடத்தில் புலி கோலி அகற்றிய ஜீவர்கள் பிரார்த்
ாலும் தக்கணமே, அவரது காரண வுருவமாகிய பிரகாசத்தில்
ய, காரிய வுருவமாகிய ஒளி, வடிவாய்த் தோன்றி அருள் செய்

இதற்குப் பிரமாணம்:—

சித்தமார்க்கத்தி லுள்ள துருசுச்சுண்ணத்தை — மஞ்சளில்
ப்த்த நூலை நெடுந்தூரங் கட்டி, அங்கங்கு காயாது உபகரணம் பூசி,
ர்களை நிற்க வைத்து, மேற்படி சுண்ணத்தை அடியில் காட்டின
ணமே நுனியில் சிவப்பேறும்.

45. சுத்தசன்மார்க்க ஆகார விலக்கு

சுத்தசன்மார்க்க சாத்தியர்கள் நெய், முதலிய வஸ்துக்கள் கொள்ளப்படாது. அதுபோல் சாதகர்களும் கொள்ளப்படாது. நேரிட்டால் ஒருவாறு கொள்ளப்படும். எனெனில், ஓர் தேகத்திலுள்ள தாதுக்களில் முதல் தாது கொழுப்பு, அதின் அமிசமே பால், அதின் அமிசம் நெய், மேற்படி ஆபாசம் மோர் தயிர். ஆதலால், மேற்படி கொழுப்பு வெளிப்பட்டால், மேற்படி பசுவின்கண் கெடுதியும் நேரும். ஆதலால் கோலே. கன்றுக்கு ஒருவாறு விட்டு மேற்படி பாலை கரகிக்கலாம். ஆதலால் இம்தால் ஜீவ இம்சை நேருதலால், மேற்படி வஸ்துக்கள் கொள்ளலாகாது; நேராத பக்ஷத்தில் கொள்ளலாம்.

46. பஞ்ச கவ்யத்தின் உண்மை

மேலும், பஞ்சகவ்யத்தின் உண்மை யாதெனில்: — கோ மயம், கோ ஜலம், கோ கிருதம், கோ ததி, கோ கூஷீரம் — இவை ஐந்து. இவற்றின் குணம்: — கோ மயத்தால் — பிரதிவி சுத்தி, கோ ஜலத்தால் — ஜல சுத்தி, கோ கிருதத்தால் — அக்னி சுத்தி, கோ ததியால் — வாயு சுத்தி, கோ பயசால் — ஆகாச சுத்தி. இதுபோல் பிண்டத்தில், பிருதிவியாகிய தேகத்திலுள்ள, குருக்களையும், அசுத்த மலங்களையும், கோ மயம் போக்கும்; நீர்க்கட்டு கோவை முதலிய வற்றை கோ ஜலம் போக்கும்; உஷ்ண ஆபாசம் முதலிபவற்றை கோ கிருதம் போக்கும்; அதுபோல், வாயுவின் கெடுதியாகிய மலபந்த முதலியவற்றை கோ ததி போக்கும். ஆண்மாவாகிய பிராணச் சோர்வை கோ கூஷீரம் போக்கும்; மேலும் பசு மிருகத்தின் ஆகாரமாகிய விருக்ஷத்தின் மூலாதி பலங்களே பஞ்ச கவ்யங்களாம்.

47. புறப்புற அழுதம்

அண்டத்தையும் பிண்டத்தையு மொருங்கே வளர்ப்பது, புறப்புற வழுதம். ஆதலால் அம்தே கொள்ளல் வேண்டும். யாதெனில்:— ஊற்றுநீர், பொற்றலை வாழை தென்னை முதலியவற்றின் பேரிலுள்ள பனி ஜலம், மழை ஜலம் — இவைகள் கொள்ளலாம்;

சாதாரண ஜலம்

சாதாரண ஜலங் கொள்ளுவது தகுதி. எனெனில் மேற்படி ஜலத்தில் மூன்று குணமுண்டு. எவை எனில் :— விஷம், பூதம், அமுதம். இம் மூன்று மொன்றுகவே இருக்கும். எப்படியெனில் :— மேல் பாகத்தில் சிலிர்ப்பாகிய விஷமும், அதனடியில் எகதேசம் சுத்தை யுள்ள பூதமும், அதனடியில் விசேஷ உஷ்ணமுள்ள அமுதமும் கூடி ஒன்றுயிருக்கும். மேற்படி ஜலத்தினது குணங்கள் ஆவன :— பூதஜலம் — தத்துவ விருத்திசெய்யும் ; அமுத ஜலம் — பிராண சக்தி செய்யும் ; விஷ ஜலம் — தத்துவத் துரிசைப் போக்கும். ஆதலால் இடமேபதத்தால் மேற்படி நீர்கள் தனித்தனியாகவு முள்ளன; ஒவ்வொன்றில் மும்மூன்று கவும் விரியும்.

48. வெந்நீர்

ஆதலால், மேற்படி சுத்தாமுதங் கிடையாத பக்ஷத்தில் இதர ஜலங்களைப் பச்சையாகக் கொள்ளப்படாது ; வெந்நீராகக் கொள்ளுதல் வேண்டும். அந்நீரும், ஐந்து மூன்றும் — ஐந்து இரண்டுமாகக் காய்ச்சி, சர்க்கரை, வெல்லம், கற்கண்டு — இவைகள் சேர்த்துக் கொள்ளவும். தோதக பக்ஷத்தில், தென்னை, நாயுருவி. வாழை, முதலிய வஸ்துக்களைச் சம்பந்தப் படுத்தியாவது, சூரியகிரணத்தில் வைத்தாவது, சூரிய சரத்தால் பார்த்தாவது, சிகரத்தை உன்னிபாவது, கொள்ளல் வேண்டுமே யல்லது பச்சையாய்க் கொள்ளப்படாது.

சுத்தசன்மார்க்கத்தில் தேக விர்த்தி செய்தல் வெந்நீராதலால், எக்காலத்தும் சுத்தஜலம் சேர்க்கக் கூடாது. பச்சை ஜலத்தினிடத்தில் மூன்று குணமுண்டு: விஷஜலம், பூதஜலம், அமுதஜலம். இந்த மூன்றும் ஒன்றுகவே இருக்கும். ஜலத்தின் மேல் பாகத்தில் விஷமாகிய சிலிர்ப்பும், அதனடியில் கொஞ்சம் சுத்தையுள்ள பூதமும், அதனடியில் விசேஷம் சுத்தையுள்ள அமுதமு மாக இருக்கும். பூத ஜலம் — தத்துவ விர்த்திசெய்யும். அமுதஜலம் — பிராண வாயுவை விர்த்தி செய்யும். விஷஜலம் — ஆபாசநீர்களாகப் பற்றும். ஆதலால் பச்சைஜலம் கொள்ளப்படாது.

49. குளிர்ந்த ஜலம்

காலங் கடந்து குளிர்ந்த ஜலத்தில் குளித்து ஈர உடையுடன் இருப்பது தகாக் கெடுதி. குளிக்க வேண்டுமாகில், வெந்நீரில் குளிக்கவேண்டும்.

50. சனி நீராடு என்பது

சனி நீரா டென்று சொல்லுவது — சனிபோன்ற கருமையான கருகிய நீரா லாடென்று சொன்னது. யாதெனில் :— வெங்நீர். ஒரு வாறு ஊற்று நீர். இதன்றி — மற்றப்படி — சொல்வது தெரியாமை.

51. சர்க்கரையும் உப்பும்

மேலும், சுத்தசன்மார்க்க சாதகர்கள் எக்காலத்தும் புழுக்காதிருக்கிற வஸ்துவைக் கொள்ளல் வேண்டும். புழுக்காத வஸ்துக்கள் யாவெனில் :—சர்க்கரை, தேன், கற்கண்டு, வெல்லம், அயம் முதலிய செந்தூரம்; தாமிர முதலிய பஸ்பம். ஆதலால் அவசியம் ஆகாரத்திற்கு முக்கிய வஸ்து மேற்குறித்தவை. பரியாயத்தில் சர்க்கரையென்று லவணத்தைச் சொல்லுவது முண்டு. மேற்படி லவணத்தைத் துரிசு போக்கி, ஜல லவணமாய்க் கட்டி, ஆகாரத்தில் கொண்டால் தேகம் நீடிக்கும். இதன்றி, சத்வ பதார்த்தத்தில் லவணம் சிறுகச் சேர்த்துக் கொள்ளவுங் கூடும்.

52. காரசாலையும் தாதுசாலையும்

காரசாலையை — தினை தினை பச்சையாகவாவது — சமையல் செய்தல் முதலிய வகையாலாவது — சாப்பிட்டு வரவேண்டும். பிரதம உள்ளுடம்பாகியதை நீடிக்கப் பண்ணும். மேல் குறித்த மூலிகையை அலக்ஷியம் செய்யாது, ஆசாரியன் திருவடியின்கண்ணே இலக்ஷியம் வைத்து, எவ்வித தந்திரத்திலாவது தினம் தினம் உட்கொண்டால், தேகக் கெடுதியாகிய அசக்தம் நீங்கி, தேகம் வலுவுள்ளதாய் நெடு நாளைக்கு இருக்கும். முத்திபடைவதற்கு சகாயமாயு மிருக்கும். மகான்களிடத்தில், அனந்தகாலம் காத்தாலும், மேல்குறித்த மூலிகையின் பிரயோஜனத்தையும் உண்மையையும் அனுபவத்தையும் வெளியிடார்கள். பரம கருணாநிதியாகிய நம் தலைவனால் கிடைத்தது. அசட்டை யின்றி உட்கொள்ளல் வேண்டும். மேல்குறித்த மூலிகை ஜலமில்லாத இடத்தில்

இருக்கிறது விசேஷ நன்று. ஜலமூள்ள இடத்தில் காரமிராது. தந்த சுத்திசெய்து அண்ணைக்கில் தர்ஜனி விரலால் தேய்க்க — மேல்குறித்த மூலிகையால் — பித்தநீர் கபநீர் வெளியாகி, கண்ணெளி விசேஷிக்கும். நோாத பக்ஷத்தில் பொற்றலைக் கையாந்தகரை கூடும். மேல்குறித்த மூலிகை செந்தூரம் செய்வதற்குச் சிறந்தது. உலர்த்திக் குழித்தைலம் வாங்கியும் செந்தூரஞ் செய்யலாம். அதுபோலவே, அறிவை விளக்குவதற்கும், கவனசத்தி உண்டுபண்ணுவதற்கும், கரணம் ஓய்வதற்கும், கபத்தை அரிப்பதற்கும் யோக்கியதை யுடைய ஓஷதி தூதுளை. அதை மேல்குறித்தபடி அநுஷ்டித்தால் விசேஷ நன்மை செய்யும். கரிசாலை தந்த சுத்தியால் வசிகரமும் நேரிடும் : உண்மை.

53. ஜீவகாருண்யமே முத்திக்கு முதற் படி

நம்முடைய தலைவராகிய கடவுளை நாமடைவதற்கு அவரெழுந்தருளி யிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். இவ்வருள், அன்பிலலல்லது வேறுவகையா லடைவதரிது. இவ்வன்பு ஜீவகாருண்யத்தா லல்லது வேறுவகையால் வாராது. ஜீவ காருண்யத்தின் லாபமே அன்பு.

இந்த ஜீவகாருண்ய முண்டாவதற்கு எது, அல்லது துவாரம், யாதெனில்:—

கடவுளுடைய பெருமையும் தரத்தையும் — நம்முடைய சிறுமையையும் தரத்தையும் ஊன்றி விசாரித்தலே. அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தலே, ஜீவ காருண்யம். இதுதான் முத்தியடைவதற்கு முதற்படியா யிருக்கிறது. ஆதலால், இதைப் பாதுகாத்தல் வேண்டும்.

ஜீவகாருண்யத்தால் பிரமன் ஆயுசும், பாச வைராக்கியத்தால் விஷ்ணு ஆயுசும், ஈசுர பக்தியால் ருத்திரன் ஆயுசும், பிரம்மஞானத்தால் என்று மழியாத சுவர்ண தேக முதலியவைகளைப் பெற்றுக் கடவுள் மய மாகலாம். எப்படியெனில்:—

கடவுள் சர்வஜீவ தயாபரன், சர்வவல்லமை யுடையவன்; ஆகையால், நம்மையும், சர்வ ஜீவ தயையுடைவர் களாய்ச், சர்வ வல்ல

மையையும் பெற்றுக் கொள்ளும்படி, மனித தேகத்தில் வருவித்தார். ஞானிக்குத் தயவு அதிகப்பட்டு இருக்கிறபடியால், கேளாத கேள்வி முதலிய மஹா அற்புதங்களான, இறந்தாரெழுதல் முதலிய அற்புத வல்ல மையைப் பெற்று இருக்கின்றார். எந்த ஜீவர்களிடத்தில் தயாவிருத்தியாகிய அருள் விசேஷம் விளங்குகின்றதோ, அந்த ஜீவர்களிடத்தில் கடவுள் விளக்கம் விசேஷமா யிருக்கும். மற்றவர்களிடத்தில் காரியப்படாது. ஆதலால் மலஜல சங்கல்ப காலங்கள் தவிர மற்றக் காலங்களில், கடவுளிடத்தில் அன்பும் ஜீவர்களிடத்தில் பக்தியும் செலுத்தவேண்டும்.

54. பக்தி

பக்தி யென்பது :— மனநெகிழ்ச்சி, மனவுருக்கம். அன்பு என்பது :— ஆன்ம நெகிழ்ச்சி, ஆன்ம வுருக்கம். எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்து இருப்பதை அறிதலே ஈசுர பக்தியாம். அந்தக் கரண சுத்தியின் பிரயோசனம் பக்தியை விளைவிப்பது. ஜீவகாருண்ய முண்டானால் அருளுண்டாகும், அருளுண்டானால் அன்புண்டாகும், அன்புண்டானால் சிவானுபவம் உண்டாகும்.

55. ஜாதி சமயங்கள்

தத்துவ வொழுக்கம் பற்றிச் — சமயங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தொழி லொழுக்கம் பற்றி — ஜாதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன — சமய ஏற்பாடு, ஜாதியேற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள். அவையாவன :— ஜாதிபா சாரம், குலாசாரம், ஆசிரம ஆசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சமயாசாரம், மதாசாரம், மரபாசாரம், கலாசாரம், சாதனாசாரம், அந்தாசாரம், சாஸ்திராசாரம் முதலிய ஆசாரங்கள். ஆதலால், மேல் குறித்த ஆசாரங்கள் ஒழிந்து, சுத்தசிவ சன்மார்க்க சத்திய ஞான ஆசாரத்தை வழங்கிப் பொது நோக்கம் வந்தால், மேல்படி காருண்யம் விருத்தியாகிக் கடவுளருளைப் பெற்று, அனந்த சித்திமுத்திகளைப் பெறக்கூடுமே யல்லது, இல்லா விடில் கூடாது.

56. சந்நியாசமும் தயவும்

மூன்றுசைகளில் விசேஷம் பற்றுள்ளவர்களாகித் தயவில்லாத கடின சித்தர்கள் சந்நியாசம் பேற்றுக்கொள்ள வேண்டும்: மேல்படி குற்றமற்றவர்களுக்குச் சந்நியாசம் வேண்டுவதில்லை.

சந்நியாசி காவிவேஷ்டி போடுவதற்கு ஞாயம்:—

தயவில்லாத கடின சித்தர்களாகையால் தத்துவாபாசமுள்ளது; தத்துவத்தை ஜெயித்து தயவை நடத்துவதற்கு யுத்தக் குறி, அல்லது, அடையாளமாகத் தரிப்பது—காவி. வெற்றியான பிறகு அடைவது தயவு. ஆதலால் வெற்றிக்கொடி வெள்ளை.

தயவு வெள்ளை யென்பதற்கு ஞாயம்:—

தயவென்பது சத்துவம், சத்துவ மென்பது சுத்தம், சுத்த மென்பது நிர்மலம், நிர்மலமென்பது வெள்ளை வருணம், வெள்ளை என்பது ஞானம், ஞானமென்பது அருள், அருளென்பது தயவு, தயவென்பது காருண்யம்.

57. பரோபகாரம்

பரோபகார மென்பது யாது?—தேகத்தாலும், கரணத்தாலும், இந்திரியத்தாலும், தரவியத்தாலும் ஆன்மாக்களுக்கு உபகரித்தல். தரவியம் நேராதபட்சத்தில், நிராகரண சுத்திபாய் ஆன்மநேய சம்பந்தமான தயா விசாரத்தோடு எல்லாச் சிவ்களினது வாட்டத்தைக் குறித்தும் பிராத்தித்தல்.

58. எல்லா உயிரையும் பொதுவாய்ப் பார்ப்பது

எல்லா உயிரையும் பொதுவாய்ப் பார்ப்பதென்பது:—

தனக்குள்ள ஆகாரத்தைக் கொடுத்துவிட்டுத் தான் பட்டினியிருப்பதல்ல. அப்படி இருந்தால் பாவம். வந்தவர்களின் பசி அறிந்து,

தாங்காதவர்களாகில் — தனது ஆகாரத்தைக் கொடுத்தும், சகிப்பார்கள் ஆகில் — எவ்வகையிலாவது முயற்சித்தும் பசியைத் தணிக்கவும். அதற்கும் இடம் இல்லையாகில், பச்சாத்தாபத்துடன் கடவுளைப் பிரார்த்தித்து இன்சொல்லினல் இனிக்கச்செய்து, தான் கெட்டிருப்பதே மேலான புண்ணியம்.

59. சத்விசாரம்

சத்விசார மென்பது :— கடவுளினது புகழையும், ஆன்மாவின் தரத்தையும், நமது சிறுமையையும், கடவுளின் தரத்தையும், இடைவிடாது விசாரித்து, நமது குறையெல்லாம் கடவுளின் திருவடியில் விண்ணப்பிப்பது.

சிவானுபவமாகிய தேகத்திரயம் பெறுவதற்கு மேற்குறித்த இரண்டு துவாரந் தவிர வேறில்லை.

60. கடவுள் தயவும் ஜீவ தயவும்

மேலும், தயவென்பது இரண்டு வகைப்படும். யாவெனில் :— கடவுள் தயை, ஜீவ தயை ஆகிய இரண்டு. கடவுள் தயை யென்பது — 1. இறந்த உயிரை எழுப்புதல், 2. தாவரங்களுக்கு மழை பெய்வித்தல், 3. மிருக, பட்சி, ஊர்வனவாதிகளுக்கு ஆகாரம் நியதியின்படி, அருட்சத்திபால் ஊட்டி வைத்தல், 4. சோம சூரியாக்கினிப் பிரகாசங்களைக் கால, தேச, வண்ணம் பிரகாசஞ் செய்வித்தல், 5. பக்குவிகளுக்கு அனுக்கிரகித்தல், 6. அபக்குவிகளைச் செய்யவேண்டிய அருள் நியதியின்படி, தண்டனை செய்வித்துப் பக்குவம் வருவித்தல். — ஜீவ தயை யென்பது — தன் சத்திபினளவு உயிர்க்கு உபகரித்தல், அல்லது ஆன்மசேய சம்பந்தம் பற்றித் தயாவடிவமாய் இருத்தல்.

61. சுரர் அசுரர் என்பதற்குப் பொருள்

சுரர் அசுரர் என்பதற்குப் பொருள் :— சுரர் என்பது :— அறிவுடைய ஜீவர்கள் முதல் வாசனுதி வஸ்துக்களெல்லாம் சுரர். அசுப்

காரி முதல் துர்க்கந்த வஸ்துக்களெல்லாம் பூமிக்குள் தோன்றுங் கந்த மூலம், அழுக்குடைய வஸ்து, இவைகள் அசுரர். மேலும், அறிவின் உயர்ச்சி தாழ்ச்சியால் தேவரென்றும், மனிதரென்றும் சொல்லப்பட்டதே தவிர, வேறு எந்தக் காரணத்தாலுமல்ல. ஆனல் தயை விசேஷமிருக்க வேண்டுமென்பது அறிவு உயர்ச்சியில் அடங்கிவிட்டது.

தேவர்களுக்கு நான்கு கை என்பது :—தயையின் விசேஷத் தைக் குறித்துச் சொன்னதே தவிர வேறில்லை. தயையே வடிவமாக இருக்கின்ற புண்ணிய தேகிகளே தேவர்கள்.

62. திரயோதச நிலைகளும் தாழுங் குணமும்

திரயோதச நிலைகள் யாவெனில் :— பூதநிலை 1, காரணநிலை 2, பிரகிருதிநிலை 3, மோகினி நிலை 4, அசுத்த மாயா நிலை 5, அசுத்த மகா மாயா நிலை 6, சுத்த மாயா நிலை 7, சுத்த மகா மாயா நிலை 8, சர்வ மகா மாயா நிலை 9, குண்டலி நிலை 10, பிரணவ நிலை 11, பரிக்கிரக நிலை 12, திருவருள் நிலை 13, ஆக பதின்மூன்று. இதற் கதீதத்தில் சுத்தசிவ நிலை. இதற்குச் சத்தி, ஆகாயம், நிலை, வெளி, பிரகாசம், அனுபவம், பதம், இடம் முதலிய பெயருள்ளன.

மேலும், வர்ணமாகிய எழுத்தாலும், வண்ணமாகிய ரூபத்தாலும், தொழிலாகிய பெயராலும், அனந்தமாக விரியும். இவை யாவும் ராக மென்கிற திரை நீங்கினல் ஒருவாறு தோன்றும்.

மேலும், இவைகள் படிப்பால் அறியக் கூடாது. அறிவது எப்படி யெனில் :— ஒழுக்கம் நிரம்பிக் கருணையே வடிவாக நிற்கும் விசார சங்கல்ப முண்டானல், நாம் தாழுங் குணம் வரும். அத்தருணத் தில் திருவருட் சத்தி பதிந்து அறிவு விளங்கும். ஆதலால், இடை விடாது நன்முயற்சியில் பழகல் வேண்டும்.

63. சுவர்ண தேகிகளின் ஆயுள்

சுவர்ணதேகிகள் ஆயுள் :—

ஒரு மாற்றுள்ள சுவர்ண தேகிகள் வயசு — நாலு லக்ஷத்து முப் பத்தீராயிரம் (4,32,000)

இரண்டு மாற்றுள்ள சுவர்ண தேகிகள் வயசு — எட்டு லகஷத்து அறுபத்து நாலாயிரம். (8,64,000)

மூன்று மாற்றுள்ள சுவர்ண தேகிகள் வயசு — பன்னிரண்டு லகஷத்துத் தொண்ணூற்று ஆறுயிரம். (12,96,000)

நான்கு மாற்றுள்ள சுவர்ண தேகிகள் வயசு — பதினேழு லகஷத்து இருபத் தெட்டாயிரம். (17,28,000)

ஐந்து மாற்றுள்ள சுவர்ண தேகிகள் யவசு — நாற்பத்து மூன்று லகஷத்து இருபதாயிரம். (43,20,000)

ஐந்து பூதங்களின் பேதம் பன்னிரண்டு லகஷத்து இரண்டாயிரத்து எண்ணூற்று ஐம்பது கோடியாய் இருக்கின்றது — (12,02,850,00,00,000).

64. அணுபகஷ சம்புபகஷ அனுபவ விவரம்

ஐந்து மாற்றுள்ள சுவர்ணதேகி பிரமன் வயசு — நாலு லகஷத்து முப்பத்தீராயிரம். (4,32,000)

ஆறு மாற்றுள்ள சுவர்ணதேகி விஷ்ணு வயசு — எட்டுலகஷத்து அறுபத்து நாலாயிரம். (8,64,000)

ஏழு மாற்றுள்ள சுவர்ணதேகி ருத்திரன் வயசு — பன்னிரண்டு லகஷத்துத் தொண்ணூற்று ஆறுயிரம். (12,96,000)

எட்டு மாற்றுள்ள சுவர்ணதேகி மயேச்சுரன் வயசு — பதினேழு லகஷத்து இருபத்தெட்டாயிரம். (17,28,000)

ஒன்பது மாற்றுள்ள சுவர்ணதேகி சதாசிவன் வயசு — நாற்பத்து மூன்று லகஷத்து இருபதினாயிரம். (43,20,000)

இவர் அணுபகஷித்தார்.

அணுபகஷித்தில் நாற்பத்து மூவாயிரத்து இருநூறு லகஷக் கோடி விந்து சத்தியின் அளவு; அளவிறந்த கோடி நாதத்தின் அளவு.

அணுபகஷித்தில் பரவிந்து சுத்த மாயையைக் கடந்தது; பரநாதம் சுத்தமகா மாயையைக் கடந்தது.

சம்பு பகுஷத்தில் பிரமன், விஷ்ணு, ருத்திரன், மகேச்சுரன், சதாசிவன், விந்து, நாதம், பரவிந்து, பரநாதம் என்பவற்றில்:— பிரமன், விஷ்ணு, — சுத்த மகா மாயைக் கடந்த ஞான அனுபவ பேதம்; ருத்திரன், — சித் அனுபவம்; மகேச்சுரன், — ஆனந்த அனுபவம்; சதாசிவன் — சத் அனுபவப்; விந்து — சிதானந்த அனுபவப்; நாதம், — சதானந்த அனுபவம்; பரவிந்து — சச்சிதானந்த அனுபவம்; பரநாதம் — சிவானுபவம். இவை ஒருவாறு.

65. சிருஷ்டிகளும் — பகுஷபேதங்களும்

சிருஷ்டிகள் பகுஷபேதத்தால் அனந்தவகை. பகுஷமாவன அணுபகுஷம், பரமாணுபகுஷம், சம்புபகுஷம், விபுபகுஷம், பிரகிருதி பகுஷம் — ஆக 5. இவற்றில் சம்பு விபு — இவ் இரண்டிற்கும் அபக்குவ மில்லை. மற்ற மூன்றிற்கும் பக்குவா பக்குவ முள.*

வே பகுஷ சிருஷ்டி விசித்திரங்க ளாவன:—

அணுபகுஷ அபக்குவ சிருஷ்டி, ஓஷதிகளாலும், பௌதிகங் களாலுப், ஆகார மூலமாய், ஸ்திரீ, புருஷ, சம்பந்தத்தோடு உண்டாக்கு வது. வெ பக்குவ சிருஷ்டியாவது — புருஷன் ஸ்திரீயைப் பார்ப்பது போல் தன் அஸ்தத்தால் ஸ்திரீயைத் தடவி ஊன்றி நோக்கிப் புருஷ னோடு தேகசம்பந்தஞ் செய்வித்து உண்டாக்குவது. பரமாணுபகுஷ அபக்குவ சிருஷ்டி — தேகத்தைக் கரத்தால் பரிசித்து ஊன்றிப் பார்த்த வுடன் கருத்தரித்தல். வெ பகுஷத்தில் பக்குவம் — கண்ணால் பார்த்த உடனே புணர்ச்சி யன்றிக் கருத்தரித்தல். சம்பு பகுஷம் — வாக்கினால் சொன்னவுடன் கருத்தரித்தல். பிரகிருதி பகுஷத்தார் — சங்கல்பித்த $3\frac{3}{4}$ நாழிகைக்குள் பிண்டம் கீழ்த் தோன்றுதல். விபு பகுஷ சிருஷ்டி — பார்த்தவுடன் திரண முதலான வற்றையும் நாணுகச் செய்வித்து அநேக விசித்திரங்கள் உண்டுபண்ணுவது. வெ சிருஷ்டிகள் பல; வேதாகமங்களிலேயும் பலபட விரிந்தன.

---

* இதற்குப் பிரமாணம்:— "அடர்மலத்தடையால் தடையுறும்" 1. திரு அருட்பா, 6-ந் திருமுறை — திருவடி நிலை, 3 — பக்கம் 182. "தடையுறுப் பிரமன்" 2. திரு அருட்பா, 6-ந் திருமுறை — திருவடி நிலை, 2 — பக்கம் 182. என்னும் திருப்பாசுரங்களின் உள்ளக்கிடையா னுணர்க.

இந்து வேதத்தின் முக்கியாமிசத்தைக் கவனிக்கவும். கிறிஸ்தவர்கள் ஏழு நாளில் இந்த வுலகத்தைப் படைத்ததாகச் சொல்லுவதின் உண்மை — அதுவல்ல, யாதெனில்:— சில அனுபவ விஷயங்களை அது விரிக்கின்றது; கைந்நொடிப் பொழுதில் 60-ல் 7 பாகம் ஆகிய 7 கலையில் முடிந்தது. வெ கலைகளாவன :— பெண் பாகத்தில் 4, ஆண் பாகத்தில் 3 — ஆக 7. ஒவ்வொரு கலையில் ஒவ்வொரு தாது அணு வாய்ச் சேர்ந்து, 7-வது கலையில் கரு சம்பூரணமாய்ச் சப்த தாதுவுங் கூடிய பிண்டமாகும்.

66. கரு உண்டாகும் விதம்

வெ கருத்தோன்றும் சுக்கில ஞாயம். யாதெனில்:—

வெ சுக்கிலம் இரண்டரை வராக னெடையளவா யிருக்கும். அதில் விஷபாகமாகிய சத்தி 1; சாதாரண மென்னும் பூத மாகிய அறிவு 1; அசாதாரண அமுத மாகிய வித்து $\frac{1}{2}$ — ஆக $2\frac{1}{2}$. இதுபோல், பெண்பாலிடத்தும் சுரோணித முளது. மேல்கண்ட சுக்கில சுரோணித மிரண்டினும் கடவுள் ஆவியுள்ளது. கோசத்தின் முன் விஷம், அதை அடுத்து பூதம், அதற்கு மேல் அமுதம் உண்டு. இவ்வாறு பெண்பாலிடத்து முண்டு. முன்னுள்ள விஷபாகம் புணர்ச்சிக் காலையில் வெளிப்பட்டால் தேக நஷ்டம்; பூதம் வெளிப்பட்டால் வியாதி; அமுதம் வெளிப்பட்டால் சந்ததி விர்த்தி. கடவுளருளால் காலச்சக்கரம் போல் ஏகதேசத்தில் கோச உபஸ்தங்களில் அமுதபாக நாடியை முன்னே தள்ளி, விஷாதிகளைப் பின்னே சேர்த்துக் கருத்தரிக்கச் செய்விப்பார். இந்த ஞாயத்தால் இடைவிடாது புணருகிறவர் களுக்குக் கர்ப்ப மில்லை. மேலும், வித்துவளம், இடவளம், வன்னி, கிருமி, மோகவிசேடம் — இவற்றாலுங் கர்ப்ப மில்லை.

67. சுக்கில சுரோணிதம்

சுரோணிதப் பையிடத்தில் மூன்று மணி சேர்ந்த கொத்து 1-வலது புறத்திலும், நான்கு மணி சேர்ந்த கொத்து 1-இடது புறத்திலும், — இருக்கின்றன. சுரோணித சுக்கிலம் கலந்து கர்ப்பந் தரிக்கிற காலத்தில், மூன்று சேர்ந்த கொத்தில் சம்பந்தப் பட்டால் ஆண் குழந்

தையும், நான்கு சேர்ந்த கொத்தில் சம்பந்தப்பட்டால் பெண் குழந் தையும் பிறக்கும். புணர்ச்சிக் காலத்தில் வலது புறம் சாய்வாகப் புணர்ந்தால் ஆணும், இடது புறம் சாய்வாகப் புணர்ந்தால் பெண் குழந் தையும் பிறக்கும்.

68. சுக்கிலம்

வெ சுக்கிலம் உண்டாவதற்குக் காரணம் :—

தினம் ஆகாரங் கொண்டால், அவ்வாகாரம் மார்பிடத்தில் ஓர் தட்டில் தங்கும். அந்தத் தட்டின்மேல் கடவுள் கடவுளி என்றிரண் டாகி யிருக்கிறது. உண்ட அன்னத்தை $2\frac{1}{2}$ நாழிகையில் — அந்த அன்னத்திலுள்ள அமுதைப் பிரித்து, ஊட்டவேண்டிய தத்துவத்திற்கு ஊட்டுகின்றது. மறுபடியும் ஐந்து நாழிகைக்குள் வெ அன்னத்தினது மத்திய தரமாகிய நெகிழ்ச்சியைக் குறித்துச் சுக்கிலமாக்கி, $2\frac{1}{2}$ வராக னெடையில் கோசநுனியில் ஒன்றும்—நாபியில் ஒன்றும்—பிரமரந்திரத்தில் அரையுஞ் — சேர்த்து, மற்றவைகளைக் கொண்டு அங்கங்கு விளக்கத்தை யுண்டு பண்ணி ஈளை, குருப்பை, நகத்தூசு, தொப்புளழுக்கு, கண்பீளை, முதலான அழுக்கை வெளிப்படுத்துகின்றது. வெ அன்னத்தை $7\frac{1}{2}$ நாழிகைக்குள் — அதிலுள்ள திரவாம்சத்தைப் பிரித்து, உதிரமாக்கி யூட்டுகின்றது. $7\frac{1}{2}$-க்குமேல் வெ சுக்கையை மலபாகத்தில் தள்ளிவிடு கின்றது. இதுபோல் எந்த வஸ்துக்களையும் பிரிக்கின்றது. ஆதலால், ஆகாரங்கொண்ட $7\frac{1}{2}$ நாழிகைக்குமேல் ஆகாரங் கொள்ளவேண்டும்.

69. சப்த தாதுக்களின் விவரம்

ஆணில் மூன்று பெண்ணில் நான்கு.

ஆணில் மூன்றுவன :—

ஆகாசம் 1, பிரகிருதி 2, ஆன்ம வுணர்ச்சி 3, — இவைகள் ஒருமித்துச் சுக்கிலமாகத் தடித்துக் கோசத்தடியில் செம்பரத்தம் பூவிதழ் மூன்று மொன்று யடுக்கியது போலிருக்கும்.

பெண்ணிடத்தில் நான்காவன :—

பிருதுவி 1, அப்பு 2, தேயு 3, இயமானன் என்னும் வாயு 4—ஆக நான்கும் ஒருமித்துப் பல்லிமுட்டைபோல் நாலு பாகமாகப் பிரிந்து ஒரே வண்ணமாய் யோனிக்குள் இருக்கும். ஆக 7-ம் கூடி ஒருமித்துச் சுக்கில சுரோணித சம்பந்தப்பட்டுப் பிண்டமாம். இது சப்த தாது. மேற்படி தாதுக்களின் பெயர் — 1. தோல், 2. அஸ்தி, 3. தசை, 4. மூளை, 5. சுக்கிலம், 6. இரத்தம். 7. இரசம் — ஆக ஏழு. மேற் படி சத்துக்கள் ஆணிடத்துள்ள இடங்கள் 1. மூளை, 2. தொப்புள், 3. லிங்கத்தடி ; பெண்ணுக்குள்ள இடங்கள் 1. மூளை, 2. தொப்புள், 3. உபஸ்தத்தடி, 4. ஸ்தனத்தின் கீழ். புணர்ச்சிக் காலத்தில் இந்தச் சத்துச் சேர்ந்து வெளிப்பட்டால் கர்ப்பமுண்டாம்.

70. ஆண் பெண் பருவம்

ஆண் பிள்ளைப் பருவம் 5: (1) சைசவம் — 5 வரையில். (2) வாலிபம் — 15 வரையில். (3) கௌமாரம் — 30 வரையில். (4) யௌவனம் — 40 வரையில். (5) வார்த்திகம் — 40-க்குமேல்.

பெண்பிள்ளைப் பருவம் 8 :— (1) பேதை — 7 வரையில். (2) பெதும்பை — 9 வரையில். (3) மங்கை — 12 வரையில். (4) மடந்தை — 16 வரையில். (5) அரிவை — 25 வரையில். (6) தெரிவை — 30 வரையில். (7) பேரிளம்பெண் — 40 வரையில். (8) விருத்தை — 40-க்குமேல்.

71. பிண்டமும் அண்டமும்

தலை – அண்டம்; மார்பு முதலானவை – பிண்டம். அண்டத்தில் பிண்டம் – புருவ மத்தி, அண்டத்திலண்டம் – பிரமரந்திரம். இதில் சோம சூரிய, அக்கினி பிரம விஷ்ணுக்கள் இருக்குமிடம் :– நேத்திரம், புருவ மத்தி, அண்ணை, பிரமரந்திரம். இதில் பிரகாசமாயும் அறிவாயும் பிராண வாயுவாயும் இருக்கின்றது. பிண்டத்தில் பிண்டம் – இடுப்புக்குங்கீழ் பாத பரியந்தம். பிண்டத்தி லண்டம் – பீஜம், பிண்டம் – வயறு. மேற்படி பிண்ட ஸ்தானத்தில் கர்த்தாக்க ளிருக்குமிடம் கோசம், தொப்புள்,

மார்பு ; இவர்கள் வண்ணம், நாடி-, உஷ்ணம், காற்று, குறி முதலிய பேதங்களாம். ஆதலால், பிரம விஷ்ணு ருத்திர பேதங்கள் அனந்த கோடி. அண்டத்தைப் பார்க்கிலும் பிண்டம் விசாலமுள்ளது. இது போலவே பிரமாண்ட ஞாயம்.

பிண்ட ஞாயம். அண்டமென்பது — கழுத்துக்குமேல் சிரம், பிண்டமென்பது — கழுத்துக் கீழ் பாதம் வரையில். அண்டத்தில், சோமன், சூரியன், அக்கினி ; பிரமா, விஷ்ணு, ருத்திரன், இருக்குமிடம் — நெற்றி. பிண்டத்தில் பிரமா, விஷ்ணு, ருத்திரன் இருக்குமிடம் — பிராஜாபதி, தொப்புள், மார்பு. இவர்கள் வாயு வடிவம். இதிற் பிரமபேத மனந்தம். விஷ்ணு ருத்திரபேத மனந்தம், அண்டத்தைப் பார்க்கிலும் பிண்டம் விசாலமுள்ளது. இதுபோலவே பிரமாண்ட ஞாயம்.

72. ஜீவன் இருக்கின்ற ஸ்தானம்

இந்தத் தேகத்தில் ஜீவன் இருக்கின்ற ஸ்தானம் 5. அதில் முக்கிய ஸ்தானம் 2. அவை யாவை? கண்டம், சிரம். சிரத்திலுள்ளது பரமாத்மா வென்னும் சாமானிய ஜீவன் : இது இறக்காது. கண்டத்திலுள்ளது ஜீவாத்மா வென்னும் விசேஷ ஜீவன் : இது இறந்துவிடும்.

ஷை தேகத்தில் பிரமபேதம் கீழும் மேலு மிருப்பதால், நாமடையவேண்டிய பத ஸ்தானங்கள் எவை என்றால் :— அவை கண்ட முதல் உச்சி வரையில் அடங்கியிருக்கின்றன. ஷை பதங்களாவன :— சோர்க்க பூர்வமாக சதாசிவ பத மீறுகவுள்ளன. இதற்குமேல் நாதாதி சுத்த மீறுக வுள்ளன. கைலாசாதி பதங்கள் உந்திக்குமேல் கண்ட மீறுக வுள்ளன : இது சாதாரணபாகம். நரக இடமாவன :— உந்தி முதல் குத பரியந்தம். கர்ம ஸ்தானம் :— குத முதல் பாத மீறுக வுள்ளது. இவைகளில் பிரமாதிப் பிரகாசமுள்ளது. அனுபவிப்பது கண்டத்தில். இந்தத்தேகத்தில் எமனிருக்கு மிடம் குதமாகிய நரகஸ்தானத்துக்கு இடது பாகம். ஷை தேகத்தில் ஆன்மா தனித்திருக்கும்; ஜீவன் மனமுதலிய அந்தக்கரணக் கூட்டத்தின் மத்தியிலிருக்கும்.

பிண்டத்தில் பூர்வமென்பது தலை, உத்தரமென்பது கால். பூர்வமென்பது பூர்வ சம்பந்தத்தால் வந்தபெயர். பூர்வஞான மென்பது நெற்றிக் கண்ணால் பார்த்தல். பிண்டத்திற்கு கிழக்கு — முகம்,

மேற்கு — கால், வடக்கு—வலது கை, தெற்கு — இடது கை; கொடி மரம் — தொப்புளடி, வெடி மரத்தின் அளவு — உண்ணுக்கு, கொடி — புருவ மத்திக்குள் விருக்கும் வடை, பலி பீடம் — தொப்புள், நந்தி— யென்பது பசு, ஆணவமலம், மூலாதாரத்தினது உள்ளங்கமே — சிவலிங்கம், வாய் — வாசல், புருவமத்தி — சபை, அறிவு — பதி ; ஆதி — கால், அநாதி — தலை ; கீழ் — தலை, மேல் — கால்.

ஆதலால், பூர்வம், பூர்வபூர்வம்; உத்தரம், உத்தரோத்தரம், என நான்கு. இதில் பூர்வமென்பது, புறப்புறமாகிய நாசித்திரம் போன்ற இந்திரியக் காட்சி. பூர்வ பூர்வம், புறமாகிய சகிபோன்ற கரணக்காட்சி. உத்தரம், அகப் புறமாகிய பரிதி போன்ற ஜீவக் காட்சி. உத்த ரோத்தரம், அக மாகிய அக்கினி போன்ற ஆன்மக்காட்சி. ஆதலால், அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்னும் நான்குமே மேற்குறித்த பூர்வாதி உத்தரோத்தர மென வழங்குவது.

73. ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணும்

ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணும் இருக்கும் விதம் எவ்வாறெனில் :—

பிருதுவி 1, அப்பு 2, தேயு 3, வாயு 4, ஆகாசம் 5, பிரகிருதி 6, ஆன்மா 7, என்னும் ஏழும் கூடி, சுக்கில சுரோணித சம்பந்த சப்ததாதுவாய், சிருஷ்டிக்குக்காரண மாயின. ஆதலால் ஆண்பாகம் சேராது பெண்ணுருவப்படாது, பெண்பாகஞ் சேராது ஆணுருவப்படாது. மேலும் ரூபபேதத்தைப் பெண், ஆண், என்பது அறியாமை. மேலும், அறிவினுயர்ச்சி தாழ்ச்சியாலும், சிருஷ்டிக்குக் காரணமான வித்துத் தங்குவதற்கு சேஷத்திர மானதாலும், ஒருவாறு உருவத்தால் கொள்ளலாம் ; அனுபவத்தால் கொள்ளப்படாது. அறிவினுயர்ச்சி — தாழ்ச்சி, என்பது — ஜீவ அறிவாகிய — மன அறிவு பெண்ணிடத்தும் ; ஆன்ம அறிவாகிய — அறிவு ஆணிடத்தும் உள்ளது. மேலும் மன அறிவு — புத்தியறிவு என்றும் சொல்லக்கூடும். ஆதலால், உருவங் குறிப்பது அவசிய மல்ல. மேலும், ஆகாசத்தில் பிருதிவி தோன்றுவதுபோல், ஸ்திரீ பாகமாகிய பிருதிவியில் — ஆகாசமுந் தோன்றும். ஆனதால் அனுபவத்தில் தெரியும்.

74. உரோமதத்துவமும் பிந்துஸ்தானமும்

இந்த மனித தேகத்தில் புருவ முதலாகிய இடங்களில் உரோமம் தோன்றி, நெற்றி முதலாகிய இடங்களில் உரோமம் தோன்ரு திருப்பதற்கு ஞாயம் யாதெனில் :—

இத்தேகம், பாதாதி பிரமரந்திர பரியந்தம் வாயுவாலாகிய தேகம். வெடி வாயுவினுடைய பிருதிவி காரியமே தேக வடிவம். ஆதலால், வாயுவின் வர்ணம் செம்மை; கருமை நிற உரோமம் பிருதிவியின் கூறு. தேகத்தில் பிருதிவி வாயு இரண்டும் முக்கிய காரணமானதால், செம்மையும் கருமையுமாகிய உரோமம் உண்டாயிற்று. இது நிற்க, நரை யுண்டாவது தத்துவக் கெடுதியால். இத்தேகத்தில் 27 இடங்களில் வாயுவில் பிருதிவி தங்கும். அவசியம் வெடி இடங்களில் ஆண் பாலுக்கு உரோமம் தோன்றும். வெடி இடங்கள் எவை எனில் : கபாலம் 1, புருவம் 2, கண்கீழ் இமை 2, மேலிமை 2, நாசிக்கு உட்புறம் 2, மீசை 1, மோவாய் கன்னம் 2, காதுக்குட்புறம் 1, இருதயம் 1, கைம்மூலம் 2, உந்திபின்மேல் ரேகை 1, அடிவயிறு 1, லிங்கத்தடி 1, புட்டத்தின் கீழ்ப்புறம் 1, துடை 2, முழந்தாள் 1, பாதத்தின்மேலிடம் ஒன்று வெடி விரலின் மேலிடம் பலவும் 1, முதுகு 2, விலாப்புறம் 2 முழங்கைக்குங்கீழ் 2, கைவிரலின் மேற்புறம் 1,— ஆக 27. இவை அலலாது மற்ற இடங்களில் தோன்றுவது தத்துவக் கெடுதி. தத்துவங்களின் உட்புற மலங்களே வாயுவின் பிருதிவி. ஆதலால், மேல் குறித்த இடங்களில் அக்கினியின் காரியமில்லாதநிறல் உரோமம் உண்டாகின்றது. அக்கினி காரியப்பட்ட இடங்களில் உரோமம் தோன்றியும், தோன்ருமல் அருகி யிருக்கின்றது.

நெற்றியில் தோன்ரு திருப்பது வெடி இடத்தில் ஆன்ம விளக்கம் விசேஷமுள்ளது. அதைப்பற்றி வெடி இடத்திற்கு விந்து ஸ்தான மென்றும், அறிவிட மென்றும், லலாட மென்றும், முச்சுடரிட மென்றும், முச்சந்திமூல மென்றும், நெற்றிக்கண் ணென்றும், மஹாமேரு வென்றும், புருவமத்தி யென்றும், சித்சபா அங்கமென்றும் பெயர். ஆதலால். விந்துவென்பதே ஆன்மா. விந்துவின் பீடம் அக்கினி. இந்த இரண்டினது காரியமே பிரகாசமாகிய அறிவின் விளக்கம். ஆதலால், உரோமம் அருகி யிருக்கின்றது. பூர்வத்தில் விந்துவும், உத்தரத்தில்

நாதமும் இருக்கின்றன. விந்து—ஆன்மா, நாதம்—பரமான்மா. நாதத் தோடு விந்து சேர்தலால், விந்து – சத்தியும், நாதம் – சிவமு மாகின்றன. விந்துவுக்கு உத்தர ஞாயம் — பூர்வ ஞாயமாவது :—எல்லாத் தத்துவங் களுக்கும், புறத்தும், அகத்தும், மற்றும் விளங்கி, தத்துவங்களைத் தன் வசப்படுத்தியும் தொழில்களைச் செய்வித்தும் தனித்து நின்றும் தன் னோடு தத்துவங்களைச் சேர்க்கின்ற படியால் விந்து சத்தனுயும், தத்து வங்கள் — சத்தியாயு மிருக்கும். மேலும் ஆன்மாவுக்குச் சகல விளக்க மாகிய சாக்கிர ஸ்தானம், லலாடம். ஆதலால், விசேடம் சிறந்தது லலாடத்தில் மூக்கு நுனியாகிய புருவ மத்தி. இதற்கு அனுபவ சித்தி கள் திரயோத சாந்தம் வரையிலுமுண்டு.

திரயோத சாந்தமாவது யாதெனில் :— ஜீவ சாக்கிரம், ஜீவ சொப்பனம், ஜீவ சுழுத்தி ஆக 3. நிர்மல சாக்கிரம், நிர்மல சொப்ப னம், நிர்மல சுழுத்தி ஆக 3. பரசாக்கிரம், பரசொப்பனம், பரசுழுத்தி ஆக 3. குரு சாக்கிரம், குரு சொப்பனம், குரு சுழுத்தி, குரு துரி யம், குரு துரியா தீதம் ஆக 5. ஆக மொத்தம் 14. இதற்கு மேலு முள. சுத்தசிவ சாக்கிரம், சுத்தசிவ சொப்பனம், சுத்தசிவ சுழுத்தி, சுத்தசிவ துரியம், துரியாதீதம் — இவை நேருங்கால் ஜீவ சாக்கிராதி நீக்கப்படும். இவ்வள வநுபவமும் பூர்வத்திலுள்ள அனுபவிகளால் குறிக்கப்பட்ட நிலைகளில் இல்லை. ஒருவாறு, குரு துரிய பரியந்தம் வேதாகமங்களாலும், தத்துவராயர் முதலிய மகான்க ளனுபவத்தாலும், குறிக்கப்படும். அதற்கு மேற்பட்ட அனுபவம் சுத்தசன்மார்க்க சாத்தியம்.

மேலும் பெண்களுக்கு உரோமம் தோன்றுதிருப்பதற்குக் கார ணம் :—ஆணிடத்தில் 3-ம் பெண்ணிடத்தில் 4-ம் ஆக இருப்பதால், வேறு பெண்களுக்குத் தலை, புருவம், இமைக்கீழ் மேல், மூக்கினுட்புறம், கைம் மூலம், விங்கத்தடி — இவைகள் தவிர மற்ற இடங்களில் உரோ மம் தோன்றுது அருகியிருக்கும். உரோமம் விசேஷம் மற்ற இடங்களில் உண்டாவது தத்துவக் கெடுதி. மேலும் உரோமம் தோன்றுதிருக்கிற இடங்களெல்லாம் விந்துவாகிய பிரகாசம் ஜாஸ்தியாயிருக்கும். வேறு விந்துக்கள் மோவாய், மார்பு, ஸ்தனத்தின் கீழ்ப்புறம் — இவைகளில் நிரம்பியிருக்கின்றன. அதனல் பெண்பாகம் உரோமம் இல்லை.

பரமாத்மா, ஜீவாத்மா, வென்னும் இரண்டின் நித்தியா நித்திய வ் களையும் பிண்ட பேதத்தில் உயர்வு தாழ்வையும் காரியகாரண சம்பந்த வ் களையும், தெரிவித்தல், யாதெனில் :—

சாமானியம் விசேட மென்று ஜீவன் இரண்டு. இவற்றில் சிறந்தது, சாமானியப், தாழ்ந்தது விசேடம்.

ஜீவன் இரண்டென்ப தெவ்வாறெனில் :—

ஆன்ம காரணம் சாமானியம், ஆன்மகாரியம் விசேஷம். சாமானிய மென்பது — ஆன்ம அறிவு; விசேட மென்பது — மன அறிவு. இவை பூர்வோத்தரமா யிருக்கின்றன. பூர்வ மென்பது — லிங்க ஸ்தானம். உத்தர மென்பது — பிந்து ஸ்தானம். ஆதலால், சிருஷ்டிக்குக் காரணம் — லிங்கம். ஆதலால், சாமானிய ஜீவன் காரணப்பட, விசேஷ ஜீவன் காரியப்படும். விசேஷ ஜீவ சம்பந்த மில்லாத பக்ஷத்தில் சிருஷ்டி காரியப்படாது. இது சாதாரண பாகம். அசாதாரண சம்பு பக்ஷ சிருஷ்டியில், சாமானியத்தைக் கொண்டே விசேடத்தை வெளிப் படுத்திக் கொள்ளலாம். சாமானியம் — சந்தானம், விசேடம் — அதற்குள் அடங்கியிருக்கும். பிரமாணம் யாதெனில் :— அங்குலிகளில், நகத்திற்கு அடி, சந்தானமும் வளர்ச்சி விசேடமும் போல.

மேலும், நெற்றியில் உரோமம் உண்டாகாத வஸ்துக்களெல் லாம் ஆன்ம காரண அறிவு காரியப்பட்டது. மிருகாதிகளுக்கு, உரோமம் உண்டானபடியால் ஆன்ம காரண அறிவு, காரண காரணமாய் அருகி யிருக்கின்றது. எப்படியெனில் :— சர்வேசுரனென்னும் காமத்தின் பிரத்தி யேக ஆத்ம சைதன்னியமாகிய வஸ்து, எங்கும் பூரணமாய் இருப்பது இயற்கை புண்மை ஏகதேசம். ஆதலால், கடவுளை, அறிவதற்கு, ஆன்ம அறிவைக் கொண்டே அறியவேண்டும். மேற்படி அறிவு, ஆன்ம வியாபக ஆலயமாகிய மனிதர் தேகத்தில், கடவுள் காரியப்படுவது உத்தமம்.

இதன்றி, சமய மத ஏற்பாட்டில் மகான்கள் குழுக்குறி அடையாளங் களாகப் பெயரிட்ட, விக்கிரக பேதமாகிய, சிலா, லோக, தாரு, தந்த, இஷ்டி, முதலியவைகளில் கடவுள் காரியப்படுவது சரியை, கிரியாதி பேதம் எட்டில்; சரியையில் சரியை; கிரியையில் சரியை; — இவ்விரண்டையும் செய்கின்ற மாந்தர்களினது ஞாயம். மேலும் அதில் தோன்றி அனுக்கிரகிப்பதற்குச் சாலம். அருவுருவமான அறிவே, உருவங்கொண்ட சிவத்தை, அறிவாலே அறிவது உண்மை. மேலும் அனலுக்குச் சரியான, கற்பூரம், பஞ்சு, கரி, கட்டை, முதலிய வஸ் துக்களில் அக்கினி, சீக்கிரம் காரியப்படும். கதலி, முதலிய வஸ்துக் களில் காரியப்படுவது தாமசம். அதுபோல், பக்குவ ஆன்மாக்களிடத்

தில் கடவுளருள் வெளிப்பட்டால் சுத்த மாதி மூன்று தேகமும் அத் தருணமே வரும். பக்குவ மில்லாதவர்களுக்கு அருள்செய்தால் வாழை யினிடத்தில் அக்கினி காரியப்படுவது போலாம். ஆதலால், கடவுளருள் வெளிப்படுவதற்கு அபக்குவிகள் தங்கள் செயற்கைக் குணங்களாகிய ராகத் துவேஷாதிகளை நீக்கல் வேண்டும். சினம், வெகுளி, முதலியவற் றையும் நீக்கல் வேண்டும்.

சினம் — வெகுளி

சினம் என்பது யாது? உள்வேக்காடு, புட ஞாயம் போல். இது தேகத்தைச் சீக்கிரம் நஷ்டம் பண்ணும். வெகுளி யென்பது :—மீசை துடித்தல், கண்சிவத்தல், கை முதலிய உறுப்புகள் துடித்தல், வாய் குழறி மேல் விழுந்து கூவுதல்: இஃது ஆயுளை நஷ்டம் பண்ணும். ஆகையால், எவ்வகையிலும் கோபத்தின் பூர்வோத்தர மாகிய சினம், வெகுளி என்னும் கூற்றை ஒழித்தல் அவசியம்.

இதுபோல் மற்றக் கெடுதியாகிய, காமக் குரோதாதி சம்பந்தங் களையும் நீக்கல்வேண்டும். காரணமென்பது :— கரண சம்பந்தமுடையது. கரணமென்பது :— ஒற்றுமை வேற்றுமைத் தொழிற்றன்மை உடையது— மட்குடத்தைப்போல். மேலும், இலக்ஷணம் = அடையாளம்; இலக்ஷியம் = அடையாளத்தை யுடையது. அங்கம் = இலக்ஷணம். ஆதலால் இலக்ஷ ணம் — இலக்ஷியம் — அங்கம் — காரணம் — கரணம் முதலிய சம்பந்தங் களை மொன்று மில்லாது, கெடுதியாகிய தத்துவங்களை அடக்கல்வேண்டும்.

75. மர்க்கட ஞாயம்—மார்ச்சால ஞாயம்

சிஷ்யன் ஆசாரியனைத் தேடிப் பிடிப்பதான மர்க்கடஞாயம் போற் காட்டப்பட்ட கோன்கண்ட குடியாகியது சித்தாந்தம். இவ்வழி நின்று ஜீவ போதம் கெட்டவிடத்தில், ஆசாரியனே சிஷ்யனைப்பற்றி இழுப்பதான மார்ச்சால ஞாயம்போல் ஊட்டப்பட்ட கோன்கொண்ட குடியாகியது வேதாந்தமாகிய அத்வைதம்.

76. புராணங்களின் உண்மை

பெரிய புராணத்திற் குறித்த 63 நாயன்மார்களும் தந்து வங்களே ஓழிய வேறல்ல. அதை அதை விசாரித்து அனுஷ்டித்

தால், அது அது ஒவ்வொரு சித்தியைக் கொடுக்கும். கணபதி, சுப்பிரமணிய சுவாமிகளும் தத்துவங்களே தவிர வேறல்ல. புராணங்களினிருதயமெல்லாம் தத்துவ சம்மாரமே. இதன் உண்மை சுத்தசன்மார்க்கத்தில் விவரமாய் வெளியாகும்.

77. சமய நூல்களில் பிழை

சமய மத சாத்திரங்களில் அனேக இடத்தில் பிழைகளிருக்கின்றன. அதற்குக் காரணம் அவற்றை இயற்றியவர்கள் மாயையின் சம்பந்தத்தை அடைந்திருந்தவர்கள். ஆகையால் முன்னுக்குப் பின் மறைப்புண்டு தப்புகள் நேரிட்டிருக்கின்றன. மாயையை வென்ற சுத்த ஞானிகளுக்கல்லது மற்றவர்களுக்குப் பிழையற இயற்ற முடியாது. அந்தப் பிழைகள் சுத்தசன்மார்க்கம் விளங்குகிற காலத்தில் வெளிப்படும்.

78. சுவர்க்க நரகம்

மனித தேகமே சுவர்க்கம் நரகம் இருக்கிற இடம். பிரமபதம், விட்டுணுபதம், ருத்திரபதம், மகேசுரபதம், சதாசிவபத முதலிய பதங்களின் இடம் — இந்த மனித தேகத்தில் — கண்டம் முதல் உச்சிவரையில். இந்தப் பதங்களுக்குச் சுவர்க்கம் என்று பெயர். நரகம், நரகாதிகளுக் கிடம் — உந்தி முதல் குத பரியந்தம். இபம நிருக்கு மிடம் குதத்திற்கு இடது பாகம்.

79. தயவுக்குத் தடைகள் — ஜாதி, சமயங்கள்

சூரபத்மனுடைய யுத்தம் முழுமையும் தத்துவ சம்மாரமே. சுப்பிரமணியர், விநாயகர், மயிலின்மேலும் பெருச்சாளியின் மேலும் ஏறினர்க ளென்கிற தாத்பர்யம் வேறு. அதுதெரியாம லந்தச் சுவாமிகளைத் திருவிழாக் காலத்தில் வாகனங்களின் மேல் ஏற்றுதல் தெரியாமை. தத்துவ நியாயத்தை அனுசரித்துச் சமயங்க ளேற்படுத்தப்பட்டிருக்கின்றன. தொழில் நியாயத்தை அனுசரித்து ஜாதிகள் ஏற்படுத்

தப்பட் டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையாக இருப்பன சமய ஏற்பாடு ஜாதி ஏற்பாடு முதலியவைகள். ஆதலால், இவைகளை விட்டொழித்துப் பொது நோக்கம் வந்தாலொழிய, காருண்ணியம் விருத்தி ஆகிக் கடவுள் அருளைப் பெற்று அனந்த சித்தி வல்லபங்களைப் பெற முடியாது.

80. வேதம் முதலிய நூல்கள்

அப்பு தத்துவத்தின் குணம் நான்கிலிருந் துண்டானவையே நான்கு வேதமும்.

வேதம் — பதி லக்ஷணத்தை விளக்கும். ஆகமம் — பசு லக்ஷணத்தை விளக்கும். புராணம் — பாச லக்ஷணத்தை விளக்கும். இதிகாசம்— பத்தியை விளக்கும். ஸ்மிருதி — கர்மத்தை விளக்கும். மேலும் வேதம் — பதி, பசு, பாசத்தைச் சொல்லும். அதுபோல் ஆகமமும் சொல்லும். வேதம் என்பது நான்கு மகா வாக்கியந்தான். மற்றவை அங்க உபாங்க சாங்கப் பிரத்தியாங்கங்கள். இவைகள் யாவும் மனமடங்கும் துவாரமாம்.

ஒருவன் ஆன்ம லாபம் பெறுவதற்கு இரண்டு மார்க்கம் உண்டு. ஒரு மார்க்கம் படியுள்ளது; ஒரு மார்க்கம் படி இல்லாதது. எப்படி எனில் :—மெத்தை ஏற வழியிருப்பதுபோல். ஏறிவிட்டால் மேலிடமாகிய அரமியம் ஒன்றே. அவ்வழி ஆகமவழி, சோபான முடையது. வேதவழி சோபானம் இல்லாதது. ஒருவன் ஆகமவழி செல்லாது வேதவழி போகக்கூடாது. எனெனில், ஜீவன் உபாசனை துவாரமாய் ஜீவத்துவங் கெட்ட இடத்தில், இரண்டற்று ஒன்றுகிய வேதவழி என்னும் அத்வைதம் நிலைக்கும். வேதவழியான அத்வைதம் அனுபவம்; ஆகம வழியான துவைதம் விவகாரம். ஒன்றென விவகரிப்பவரிடத்தில் அனுபவமில்லை. உபதேச ரீதியில் சொல்லாது ஒன்றெனப்படவேண்டும்.

81. தேவாரம்

தேவாரம் என்பது :— தேவ் — தயவு, ஆரம் — ஒழுங்கு; தயாவொழுங்கே தேவாரம்.

82. திருவாசகம்

திருவாசகம் என்பது :— மெய்ப் பொருள் நிரம்பிய வார்த்தை, மெய்ப் பொருளைத் தரும் வார்த்தை.

83. திருமந்திரமும் திருவாசகமும்

சாத்திரங்களிற் சிறந்தது திருமூலர் திருமந்திரம். இஃது மொத்தம் எண்ணாயிரம்; தோத்திரங்களிற் சிறந்தது திருவாசகம்: இவற்றை ஊன்றிப் பார்க்கவும்.

84. வேதாரண்ய விவரம்

வேதாரணியத்தில் கதவு திறக்கப்பட்டதும் மூடப்பட்டதும் யாதெனில்:— வேதப் பொருளை மறைத்ததுந் திறந்ததும் எனக் கொள்க. உண்மையை விளக்கினது — திறந்தது, மறைத்தது — மூடியது.

85. திருப்பாற்கடல் கடைந்த விவரம்

திருப்பாற்கடல் கடைந்து அமுதபானம் தேவர்கள் செய்யும் பொருட்டு விஷத்தை ருத்திரன் உட்கொண்டா ரென்பதற்குப் பொருள் :— திருப்பாற்கடலென்பது தேங்காய், அமுதமென்பது — அதன் ஜலம், தேங்காயின் பாலிலுள்ள எண்ணெயே விஷம்; வெ. எண்ணெயாகிய விஷத்தைப் போக்குவது முப்பூவாகிய ருத்திரன். ஆதலால், தேங்காய்ப் பாலிலுள்ள விஷமாகிய எண்ணெயை முப்பூவால் போக்குவது ருத்திரன் விஷம் சாப்பிட்டது. மற்றக் கடல்கள் யாவும், இட்சு, மது, முதலிய வஸ்துக்களே. இவ்வாறு, அண்டத்தினும், பிண்டத்தினும், பௌதிகத்தினும், தாதுக்களினும், ஓஷதியினும், கடல்கள் உள.

86. நாராயணன் என்பதன் பொருள்

நாராயணன் என்பதன் பொருள் :— அப்பு — தத்துவத்தின் அதிஷ்டான கர்த்தாவென்றும், அப்பு தத்துவத்தில் தோன்றினவன் என்றும், நரவிசேஷணப் பிறப்பை உடையோன் என்றும், நரனிற் றோன்றினை னென்றும், மாயா கோஷத்தை அல்லது நடப்பை உயிர்க்கு உண்டுபண்ணுவோன் என்றும், பகுதியின் சேட்டிப்பை உயிர்க்கு உண்டு பண்ணுவோன் என்றும், இன்ப சத்தியை உயிர்க்கு ஊட்டுவோன் என்றும் கொள்ளலாம். இன்னும் பலவேறு வகையிலும் கொள்ளலாம். நாரம் — ஜலத்தில், அணன் — உற்பத்தியானவன்; நா — மாயையினுடைய, ரா — கோஷம் — நடப்பு — வியாபாரத்தை, ய —உயிர் களுக்கு, ண — உண்டுபண்ணுகிறவன்; நா — பிரகிருதியினுடைய, ரா — சேட்டிப்பை. நா — ஆதி சத்தியினுடைய, ரா — இன்பத்தை.

87. மகாவிஷ்ணு என்பது

அகாரம் உண்டவுடனே ஜீரணமாய்ப் பால்வண்ணமாக ஆகாப் பையில் வெண்மை நிறமாக இருப்பது திருப்பாற்கடல் என்றும், அத னடியில் உண்டாம் பசி — தீவிர சக்தியாகிய உஷ்ணம் — வடவா முகாக் கினி என்றும், இரண்டிற்கும் மத்தியில் உண்டாகிய சீதளம் — விஷ்ணு பள்ளிகொண்டது என்றும் சொல்லுவது. திருப்பாற்கடலில் விஷ்ணு பள்ளிகொண்டது இது தான்.

88. வாமனாவதாரம் — மாபலி

காசிபர் என்பது — மனம். இவரது பிள்ளையாகிய மாபலிச் சக்கிரவர்த்தியாவது மனதின் மந்தம். அதில் உண்டாகிய சீதம் சரீ கரத்திலும் சுழுத்தியிலும் நிறைந்து நின்றது உலகளந்த பெருமாள் ஒரு கால் மேலும் ஒருகால் கீழும் அளந்து ஓர் அடிக்கு இடமில்லாதிருந்தது.

89. கருடன் மீது மகா விஷ்ணு ஏறியது

கருடன்மீது விஷ்ணு ஏறியது என்பது :— க — ஜலம், ரு — கருமை, ட — வெண்மை. ஆதலால் விளங்கா வெண்மையாகிய ஜலத்தின் பின் தோன்றும் செம்மைக்கு இடையில் உள்ள கருமையாகிய நீராவியே விஷ்ணு. ஆதலால், சீதவஸ்துக்களெல்லாம் விஷ்ணு; அணுத்துவமெல்லாம் பிரமா; உஷ்ணத்துவ மெல்லாம் ருத்திரன். இது போல் மற்றத் தத்துவங்களையும் அறியவும்.

90. பிரம விஷ்ணுக்கள் அடி முடி தேடல்

பிரமா அன்னமாகவும் விஷ்ணு வராகமாகவும் உருவங்கொண்டார் என்பதன் பொருள் :— பாச அறிவும் பசு அறிவும் ஆம். ஒரு பொருளைக் காணுந் தன்மையுடையது — பாச அறிவு. பசு அறிவாவது— பொறி புலன்களாலே அறியப்பட்டது ஜீவ அறிவு. மலத்தில் அழுந்துவது பாசம். பகுத்தறிவது பசு. மேலுங் கீழுஞ் செல்லுதலால், பாதாளத்திலும் ஆகாசத்திலும் தேடினரெனச் சொன்னது. மேலும், ஒவ்வொரு வஸ்துவிலும் பதி பசு பாச லக்ஷணம் உண்டு.

91. பிரமனுக்கு தலை ஐந்து — நான்கு

பிரம தேவனுக்கு ஐந்து முகமாவன : (1) ஆணவம், (2) காமியம், (3) மாயை, (4) திரோதை, (5) மாயாயை. இவைகளில் ஆணவம் என்னும் ஒரு தலைமாத்திரம் பரம சிவத்திலுல் அரியப்பட்டது. பிரம தேவனது ஒரு சிரசை வெட்டும்பொருட்டுத் தோன்றின ருத்திரனுக்கு ஐந்து தலையாவன :— இச்சை, ஞானம், கிரியை, ஆதி, பரை என்னும் ஐந்துமாம்.

92. இராவணனுக்குத் தலை பத்து என்பது

இராவணனது பத்துத் தலையும் அகங்காராதிகள் என அறியவும்.

93. சரஸ்வதியை மூக்கறுத்தது

பிரமதேவன் பத்தினியாகிய சரஸ்வதியை மூக்கறுத்தது யாதெனில்:— பிரமதேவனது சிரசில் ஒரு முகமாகிய அகங்கார தத்துவத்திற்கு உபகருவியாவது — அவரது பத்தினியாகிய சரஸ்வதி. வித்கல்வியின் முகப்பை அல்லது முகத்தலையாகிய மூக்கை அறுத்தது என்பது அடக்கியது. இல்லாவிட்டால், அபரஞானமே ஒழிய பரஞானம் வராது.

வடுகநாதர்

வடுகநாதர் விஷ்ணுவினுடைய தோலை உரித்துப் போர்த்துக் கொண்டது யாதெனில்:— மனத்தில் உண்டான மந்தத்தில் தோன்றின சீதமான விஷ்ணு அகம் புறம் எங்கும் இருப்பதை, அப்படி எங்கும் பரவவொட்டாது, உஷ்ண சத்தி விளங்கிச் சீதபாகத்துக்குக் கவசம் போல் உட்பக்கம் இல்லாமல் மேற்புறமாகப் பரவியிருப்பது ருத்திரனை வடுகநாதர் என்பது.

தக்கன் — யாகம்

தக்கன் என்பது:—யான்; தக்கன்யாகம் என்பது:—எனது — என்று அகங்கரிக்கும் ஜீவபோதம். தக்கன் யாகத்தை அழித்தது என்பது ஜீவபோதத்தை அழித்தது.

94. பைரவரும் வீரபத்திரரும்

வடக்கே பைரவர் இருப்பார் என்பது யாதெனில்: நமது பாதத்தின்கண் உஷ்ணசத்தி விளங்குவதுதான். சிரசிலே வீரபத்திரராவது இச்சாசத்தி. இதைத் தென்திசையில் வீரபத்திரர் இருப்பதாகச் சொல்லுவது.

95. சுப்பிரமணியம்

அருட்பெருஞ்ஜோதி

சுப்பிரமணியம் என்பது என்ன :—

நமது புருவ மத்தியில் ஆறு பட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணி, பிரகாசம் பொருந்தி யிருக்கின்றது. இந்த ஜோதி மணியை, ஷண்முகமென்று பெரியோர்கள் சொல்லுவார் கள். இதன்றி, நமது மூலாதாரத்திற்குமேல், மூன் றிடங் தாண்டி, விசுத்தியாகிய இருதய ஸ்தானத்தில் இடது புறத்தில் ஆறு தலைபுடைய ஒரு நாடி யிருக்கின்றது. இதைச் சுப்பிரமணியம் என்று சொல்லுவார்கள். இந்தத் தேகத்திலுள்ள ஆறறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்த விவேக மென்பதையும் ஷண்முக மென்பார்கள். ஆறு ஆதாரங்களிலுள்ள ஆறு பிரகாசத்தையும் ஷண்முகம் என்பார்கள். ஆயினும், சர்வ தத்துவங்களினது அந்தத்தில் உன்மனிக் கப்பால் சாந்த நிறைவாயுள்ள ஆறுதலாகிய சுத்த ஆன்ம அறிவாகிய உள்ளமே சுப்பிரமணியம்.

முகம் ஆறு என்பது :—

ஆறு ஜோதியாயும், ஆறறிவாயும், ஆறு தலை யுடைய தாயும் இருப்பதால் முகம் ஆறு.

கால் இரண்டு என்பது :— தோன்றும் அறிவு — தோற்று விக்கும் அறிவு — என்னும் இரண்டறிவாகிய விஷய உணர்ச்சியும், நிர் விஷய உணர்ச்சியுமே யாம்.

கை பன்னிரண்டு என்பது :—

ஆறு ஆதாரங்களிலுள்ள பிரகாச — அப்பிரகாசமாகிய — பன்னிரண்டுமாம்.

தசாயுதம் அபய வரத மென்பவை யாவெனில் :—

(1) வச்சிரம் என்பது — தீக்ஷிண்ணிய வுணர்ச்சி; (2) வேல் என்பது — சத்தி; (3) அருள் என்பது — அறிவு; (4) மணி என்பது — ஆன்ம விளக்கமாகிய நாதம்; (5) த்வஜ மென்பது — புகழாகிய கீர்த்தி;

(6) ஸரஸிஜம் என்பது — தயவு; (7) குடக்குடம் என்பது — மாச்சரிய மில்லாத நிறைவு; (8) பராகம் என்பது — பாசநீக்கப்; (9) தண்டம் என்பது — வைராக்கிய அறிவு; (10) பாணம் என்பது அன்பு; (11) அபயம் என்பது — சமாதான உணர்ச்சி; வரதம் என்பது — நிராபாரமாகிய ஆதாவென்னுஞ் சகிப்பு.

கடப்பமாலை யென்பது :— சர்வ தத்துவ கண்டனம்.

மயில் என்பது:—

பல வர்ணமுள்ளதுப், விசித்திர வடிவமானதுப், மறதி முதலிய குணங்களுக்குக் காரணமானதும், மாயைக்கு இருப்பிடமாயுள்ளதுமான மூலப்பிரகிருதியே மயில்.

மயிலின் மேல் சுவாமி ஏறிக்கொண் டிருத்தல் முதலிய வற்றிற்குக் காரணம் என்னவென்றால் :—

பிண்டாண்டமாகிய இந்தத் தேகத்திலும் அண்டத்திலுஞ், மூலாஞ்ஞான காரணமாயுள்ள கேவலமாகிய பிரகிருதி, மாயையின் அசுத்த கேவலமாகிய அசுத்தாசுத்த மகா அகங்காரமென்னும் இராஜஷ அம்சமான சூரதத்துவம், அதின் சோதரமான மூவகைத் தத்துவத்தோடு, அஞ்ஞான தசையில், ஆன்ம அறிவையும், — பிண்ட விளக்கமான தேவர் களையும்,—விஷய விளக்கமான இந்திரியங்களையும், — நாடி விளக்கமான யந் திரங்களையும், — பிராண விளக்கமான உயிரையும் — விழுங்கித் தன்னரசு செலுத்தும். அந்தச் சூரதத்துவத்தை வதைக்கும்போது, வை தத்துவம் மகா மாயையாகிய மாமரமாயும், மாச்சரியமாகிய கோழியாயும், விசித்திர மாயையென்னும் மயிலாயும், மகாமதமாகிய யானை முகமாயும், அதி குரோதமாகிய சிங்கமுகமாயும் விளங்கும்.

சர்வ தத்துவங்களையுந் தன்வசமாக்கி, அகங்காரக் கொடி கட்டி, அஞ்ஞான நாடகம் செய்த தத்துவ அகங்கரிப்பை அடக்கி, பதிபசு, பாசம், அநாதி, நித்தியம், என்னும் சித்தாந்தத்தை விளக்கிக் காட்டுவதற்காக, மாச்சரிய குக்குடத்தைப் போதமாகிய கைபால் அடக்கியும், — விசித்திர மாயைபாகிய மயிலைக் கீழ்ப்படுத்தி, மேலிருந் தடக்கியும், — ஆபாச தத்துவங்களைச் சம்மரித்தும், — சுத்த விஷய புவன மாகிய, தேவலோகத்தை நிலைபெறச் செய்தும், — இந்திர பதியான தேவேந்திரனுடைய பெண்ணாகிய தாந்தர தத்துவ மென்னுந் தெய்வ யானையை இடப்பாலமைத்தும், — இந்திரியங்களாகிய வேடர்களின் கண் ணிற் புலப்பட்ட மானசமென்னும் மானினது கர்ப்பத்திலுண்டான

வள்ளியாகிய சுத்த மனதை வலத்தில் வைத்தும், — நவதத்துவ காரண மாகிய நவவைராக தத்துவமாகிய வீரர்களைச் சமீபத்தி லிருத்தியும், சகல கேவலங்களுக்கும் நினைப்பு மறப்புக்கும் இடையில் — விவேகவடி வாயும், — பாதமுதல் நாபிவரையில் உஷ்ண உருவாயும், — நாபி முதல் கண்டம் வரையில் ஆதாரநாடி உருவாயும்,—கண்டமுதல் புருவமத்தி வரை யில் மணி உருவாயும்,—உச்சியில் ஒளி உருவாயும்,—புத்தியில் சுத்த அறி வாயும்,—அனுபவத்தில் நித்தியமாயும்,—எங்கும் நிறைவாயும்,—கோணத் தில் ஆறுயும்,—எக்காலமும் மதங்களில் ஆறுயும்,—சமயத்தில் ஆறுயும், ஜாதியில் ஆறின் கூட்டமாயும் — விளங்குகின்ற உண்மைக் கடவுளே சுப்பிரமணியம்.

சுப்பிரமணியம் ஒரு முகம்,—மூன்று முகம்,—நான்கு முகம்—ஆறு முகம் — ஆனதற்குக் காரணம் :—

ஒன்று மிரண்டு மல்லாத ஒப்பற்ற பரப்பிரம சொரூபம் நம் பொருட்டுக் குழூஉக்குறியாய் — பாவனைக்கு ஒன்றென்று நிச்சயிக்கும் பரகாரண நிமித்தமாகிய அறிவுருவமே ஒரு முகமென்று ஞானி கள் சொல்லுவார்கள். சுத்த ராஜசம், — சுத்த தாமசம், — சுத்த சாத்விக — மாகிய மூன்று குணங்களின் கூட்ட விளக்க மாகிய முக்குண விளக் கமே மூன்று முகம். பசுமனம், — சுத்தமனம், — உன்மனம், — சங்கலித மனம் என்னும் நான்கு தத்துவங்களின் கூட்ட விளக்கமே நான்கு முகம். சத்தவறிவின் மூலம், — ஒளியறிவின் மூலம், — சுவையறிவின் மூலம், — பரிச வறிவின் மூலம்,—வாசனை யறிவின் மூலம்,—ஆத்ம அறிவின் மூலம்— என்னும் ஆறு தத்துவங்களின் கூட்டறிவின் மூல காரணப் பிரகாச விளக்கமே ஆறு முகம்.

மயிலின் காலின்கீழும் வாயிலும் பாம்பு இருப்பதென்ன :—

விசித்திர மாயையின் காரிய வுருவமான அகங்காரம் தோன்றி வெளிப்படுங்கால், மூலாங்காரத்திலும் அதிகரிப்பிலும் பிராண வாயு வென்னும் பாம்பானது கீழும் மேலும் உண்டாயிலும், அகங்காரத்தின் முகப்பாகிய மயில் வாய் மூலமாய்ப் பிராணவாயுவினது வேகத்தை அது விழுங்கிக் கொண்டிருப்பது இயற்கைதான்.

படைவீடென்ப தென்ன ?

அடங்கி இருக்குமிடம். அடங்கியிருக்கும் ஸ்தானங்களே இயற்கை விளக்கம் தங்கு மிடங்களாகும்.

இவற்றிற்கு ஊர் —6— ஆவானேன் ?

1. ஏரகமென்பது :— அழகு பொருந்திய உள்ள மென்னும் இடம்.

2. திரு ஆவினன் குடி யென்பது :— திரு—ஆ—இனன்—குடி: திரு — இலக்குமியாகிய சந்தோஷமும்; ஆ — பசுவாகிய விளக்க மென்னுஞ் ஜீவனும், இனன் — சூரியனுகிய புத்தியும் ஒன்றுகூடி விளங் கும் ஆன்ம அறிவின் சுத்த காரிய இடம்.

3. பழமுதிர் சோலை யென்பது :— இந்திரிய—கரண—ஜீவ முதலிய அனுபவப் பழங்களாகிய பிரயோசன வின்பங்கள் நீங்கிக் குறைவற்ற அறிவாய் விளங்கும் இடம்.

4. திருச்சீரலைவாய், திருச்செந்தில், செயந்திபுரம் என்பன :— சுத்த மனத்தின் முகத்தில் விஷயக்கடலின் அவாவாகிய அலை யடித்துக்கொண்டிருக்கும் இடமாகிய கரை, செந்துக்களினது இருதய ஸ்தானமாகிய மனம், அஞ்ஞான சூரனை நிவர்த்தித்துச் சந்தோஷகரத் தைப் பெற்ற பதிமனத்தின் விளக்கம்.

5. திருப்பரங்குன்றமென்பது :— அசைதலில்லாத ஒன் றுன விளக்கத்தையுடைய விவேக உல்லாச இன்ப நிறைவு.

6. குன்றுதோறுடல் என்பது :—மலை தோறுடல். மலை என் பது—அலைவில்லாத உணர்ச்சிக்கு முதற்காரணமாயுள்ள துரிய நன்னிலை. இத்துரியம் — (1.) ஜீவதுரியம், (2.) பரதுரியம், (3.) சுத்ததுரியம், (4.) குருதுரியம், (5.) சிவதுரியம், (6.) சத்தி துரியம் முதலிய துரிய மலை கள் அனுபவக் காட்சியில் அனந்தம் உண்டு மேற்குறித்த அனுபவக் காட்சிகளுக்குத் தேகத்திலிடம் :— (1.) கோசத்தினடி, (2.) தொப்புளின் கீழ், (3.) தொப்புள், (4.) வயிற்றில் தொப்புளுக்கு மேல் மார்புக்குக் கீழ், (5.) மார்பு, (6.) நெஞ்சு, ஆக ஆறு.

பிரமாவைச் சிறையில் வைத்ததென்பது யாது ?

சுத்த மன சங்கல்ப சிருஷ்டித் தொழிலையுடைய பிரமாவாகிய மனத்தைக் கிரியையில் பிரவேசிக்க வொட்டாமல், சுத்த விளக்க விவேக

நிறைவாயுள்ள சுப்பிரமணிய தத்துவத்தால்—சர்வ பிண்ட விஷயங்களாகிய (1) தோன்றல், (2) வளர்தல், (3) குற்றம் நீங்கல், (4) ஒன்றினிடத்தில் மலிவடைதல், (5) தெளிதல், முதலிய பஞ்சகிருத்தியங்களை விவேக முன்னிலையில் நடத்துங்கால் — சலிப்பறப் பந்தித்து இருப்பதே சிறையிட்டது.

ஈசுவரனுக்கு உபதேசித்ததென்ன :—உருத்திர தத்துவமாகிய—பிரேரக நிலையான — காரண தத்துவ முடிவான — ஈசுவர தத்துவத்தினியற்கை ஞானம் ஏறிக் — கிரியை குறைந்திருப்பதால், கிரியா காரண பூதமாயும்—ஞான காரண அமிசமாயும்—விளங்கும் பிரணவமாகிய உண்மை நிறைவான கிரியையற்ற நிர்விஷய அனுபவம் ஈசுவரதத்துவத்திற்கு — நியதி செய்வது—சுத்த விவேக தத்துவ அதிஷ்டாதாவான சுப்பிரமணியம் அன்றித் தோன்றுது. இதுபற்றி யுபதேசஞ் செய்தா ரெனலாயிற்று.

கங்கையிலுள்ள ஞாணற்காட்டிற் பிறந்தது என்பது என்ன :—ஆன்ம இயற்கைக் குணமாகிய தயவே கங்கை. ஆன்மாவின் அனுபவ மத்திய நிலையாகிய சகித்தலென்னும் — சர்வ விஷயங்களிலும் அகங்கார மென்னும் தலை யெடாமல் — கீழ்ப்படிந்த குணமே ஞாணல். இவ்விரண்டின் மத்தியில், அனுபவத்திற்கு இயற்கை விளக்கமாய் விளங்கும் பகுத்தறிவாகிய விவேகம் தோன்றுவதே உற்பத்தியானது.

பின் கார்த்திகை அரிவை பால்கொடுத்த தென்பதென்ன :—விவேக விளக்கந் தோன்றுங்கால், பெண் பாலின் குணமாகிய சாதனை யென்னும் சத்திபின் விளக்கத்தால் இன்பமாகிய அமுத கிரணம் விவேகத்திற்கு ஊட்டுவதே பால் கொடுத்தல்.

சுவாமி அம்மையிடத்தில் குழந்தையைக் கொடுக்க அம்மை குழந்தை ஆறையும் ஒன்றுய்ச் சேர்த்துக் கையால் தடவ, முகம் ஆறும் ஒன்றி வேறுயும், உடல் ஒன்றுயும், கால் இரண்டாயும் ஆனதென்ன ?

பரமாத்மா வாகிய சுவாமி—அருளென்னுஞ் சத்தியுடன்,—தபவென்னும் நதிக்கரையில், — சகிப் பென்னும் ஞாணற் காட்டில், — சமாதி முதலிய காலத்தில் — தோன்றி விளங்கும்போது, சுத்த வாசனை தோற்றமாகிய அறுபொறியாகிய குழந்தையை அருள் வசமாக்க, அருட்சத்தி விகாரமன்றி அவிகாரமாய் அறுபொறியையும் அருட்போதக்கையால் அடக்க, விஷயங்களை அறிந்து தோயாமலிருக்க அறுபொறிகள் ஒன்றுயும், குறி ஆறுயும், அனுபவ விளக்கம் சாதன விளக்க மிரண்டுந் திருவடியாயுந் தோன்றி, சமாதி நிலை விளங்குவதே.

பிண்டத்தில் இவ்வண்ணமாக இருக்க, அண்டத்தில் இவற்றிற்கு ஊர், ஆலயம், மூர்த்தி, செய்கை முதலியன உண்டாவானேன் ?

ஆன்மாக்கள் புண்ணிய பாவ கருமங்களால் பேதப்பட்டு, மந்தம், மந்ததரம், ராஜசம், தாமசம், கருமம், முதலிய வேறுபாடுகளால் அநாதி தொடங்கி இன்றளவில் — உயிர்த்திரள் ஒன்றுளதும் — கரணக் கூட்டுறவால் வெவ்வேறு தன்மையாய் விளங்குகின்றன. ஆதலால், மா கருணையுடைய திருபாநிதியாகிய சிவபெருமான் திருவருளை அங்கை யிற்கனி யென வுணர்ந்த அநாதி, நித்திய, முத்த, சித்தராகிய, ஈசுவர தத்துவ புவனுபவ ஈசுவரனுல், நாம் உய்யும் பொருட்டு, உலகத்தின்கண், 1 பாசநூல், 2 பசுநூல், 3 பதிநூல், 4 அனுபவநூல், என்னும் 1 புராண, 2 வேத, 3 ஆகம, 4 உபநிஷத்துக்கள், உண்டுபண்ணப்பட் டிருக்கின்றன. அவற்றின் வாயிலாகச், சர்மகாண்டம், பத்திகாண்டம், உபாசனாகாண்டம், தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை, முதலிய பேதங்களும், இவற்றிற்கு முக்கியமான ஆசாரம், வருணம், ஆசிரமம், முதலியவைகளும், இவற்றிற்கு எதுவான சரியையாதி நான்கும், இவற்றிற் கடைவாகிய சாலோகாதி நான் கும், இவற்றிற்கு மார்க்கமாகிய, தத்துவம் புவனம், பதம், வர்ணம், மந்திரம், கலை, முதலியனவும் கிரணித்து, பாபநாசத்திற்கு எதுவான அனசன சாந்தி ராயண முதலிய பிராயச்சித்தங்களை விதித்து, இவைகள் செய்வதற்கு யோக் கியமான நதி முதலியவற்றையும், அவற்றிற்கு அங்கமான — தத்துவானுபவங் களாகிய உண்மை நாமங்கள் கெடாதிருக்க — திருப்பெயர் முதலிபவைகளை, மூர்த்தி, ஸ்தல, முதலிபவைகளுக்கு ஏற்படுத்தி வழங்கச் செய்தார்கள்.

உபாசிக்கின்றவர்களுக்குத் தத்துவ நாமங் கெடாமல் அருட்சத்தி தோன்றக் கிருத்திகையையும், வேதாந்த விளக்கத்திற்கு விசாகத்தையும், சதா சுபத்தைக் குறிக்கச் செவ்வாயையும், ஆறு குறி யைக் குறிக்கச் சஷ்டியையும், ஞான நிறைவைக் குறிக்கத் தைப்பூசத் தையும் சுட்டினர்கள். தத்துவங்களைக் கையிலெடுத்து ஆடுவதான போதமென்னுங் கையால், விஷய பலத்தைத் தத்துவ மாகிய காவடியில் கட்டித், தாங்கிய தோளிலேற்றித் தான் கெட்டித், தான் அவனுகிப் போத வடிவனுப், சங்கல்ப தீவிரனுப், சுப்பிரமணிய தத்துவமாய், விளங் கும். திருவுருவ முன்னுக்கு விஷயாபாவ நியாயமே காவடி பெற்ற தாயும், சுத்தவைராக்கிய நிச்சய சிவபோதமே இடும்பனையும் குறிக்கப் பட்டிருக்கின்றன. இருதயாகாச ஷட்கோண வடிவமே யந்திரமாய், அதின் அங்க வேறுபாடே நாற்பத்து முக்கோணமாய், உபாங்கமே நவ கண்டமாய், — உண்மையே சகரமாய், — விஷய நீக்கமே ரகரமாய், — நித்

திய திருப்தியே அகரமாய், — நிர்விஷயமே ணகரமாய், — பாப நீக்க ஏதுவே பகரமாய், — ஆன்ம இயற்கைக் குணமே வகரமாய் — விளங்கு வதே ஆறெழுத்து. நமது சரீர இருதய ஸ்தானமே — கோயிலாய், மாயா விசித்திரமே — மயிலாய், நாபியந்தமே — பலி பீடமாய், உண்ணுவின் மேலந்தமே —கொடிமரமாய், பஞ்ச கோசங்களே — பிராகாரமாய், மூக்கு ணங்களே — வில்வமரமாய், ஆன்ம தயையே — தடாகமாய், வாயே — வாச லாய், அனுபவ நிலையே — கோபுரமாய் விதிக்கப்பட் டிருக்கின்றன.

ஞானிகள், கடவுளை எங்கும் உபாசிப்பார்க ளென்றும், யோகிகள் இருதயத்தி லுபாசிப்பார்க ளென்றும், கர்ம காண்டிகள் அக்கினியில் உபாசிப்பார்களென்றும், பத்தி கண்டிகள் விக்கிரகத்தில் உபாசிப்பார்க ளென்றும் விதித்திருக்கிறது.

அதற்கு ஒத்தவண்ணம், தத்துவ விசாரத்தையே ஆலய மாக கினர்கள். ஆலயத்தில் விளங்கும் மூர்த்தியின்பால் — பாசங்களில் செல்லும் ஆன்மாக்களை, சிவபாசத்தில் பாச நூலைக்கொண்டு அழுத்தி, பசு நூலைக்கொண்டு மேல்குறித்த தந்திர மந்திர கலைகளைக் குருமூல மாய் உபதேச கலையால் விளக்கி, காண்டத்திரயத்தால் நிலைக்கப் பண்ணி, பதி நூலால் அறிவை விளக்கி, அனுபவ நூலால் சமாதியைத் தெரிவித் திருக்கிறது. இவற்றைச் சீவர்கள் மறவாதிருக்க மானைக் காட்டி மானைப்பிடிப்பதுபோல், ஆலயத்தில் மூர்த்தியாகிய சண்முகப் பெருமானைத் தத்துவ உருவமென்று விளக்கிக்காட்ட, அர்ச்சக வுருவ மான ஆசாரியன், நமது அறிவாகிய கற்பூரத்தில், சுப்பிரமணிய உண்மையாகிய விளக்கமென்னும் பிரகாசத்தைக் கொண்டு, அசுத்த விஷய முதலிய எண்ணங்கள் நம்முடைய பொறிகட்குப் புலப்படா மலிருக்க, உண்மை ஞானக் குறியாகிய மணியொலியுடனே தரிசிப் பிக்கச் செய்தும்; வேறு பராக்கன்றித் ததாகாரமாய் நிற்க, நமது தரத்திற்கொத்த உபசாரதியர்களால் வழிபடச் செய்தும் — தத்பல மடைய உத்தமர்கட்கு அன்ன வினியோகம் செய்வது மார்க்கமென்று சித்தாந்தம் பண்ணினர்கள்.

இவ்வண்ணமாய், அனாதி தொட்டு இன்றுவரை சென்ற நாட்களிலுள்ள அருணகிரியார், குமர குருபரர், நக்கீரர் முதலிய மகான் கள் தொண்டு செய்து, உத்தம ஞானிகளாய் நித்திய முத்தர்களாய் விளங்குகின்றனர்கள். ஆதலால், நாம் யாவரும் அவ்வுண்மைக் கடவுளை வேதாகம விதிப்படி உண்மைபாய்ப் பத்திசெய்து, அவர் அருளைப் பெற வேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி

சூரபத்ம சம்ஹாரம் என்பது:—

பதுமாசுரன் என்பது:— பதுமம் — நாபி, அ — அவா, சுரன் — சுழித்து எழுதல்; நாபியினிடமாய் அடங்காமல் எழும்பும் குணத்தை அடக்கியும், தடை படாதது பத்மாசுரனுகிய அவா. கஜ முகம் என்பது — மதம். சிங்கமுகம் என்பது — மோகம். இவைகளை வெல்வது — ஐந்தறிவாலும் உபசத்தியான பஞ்ச சத்தியாலும் கூடாது. ஆதலால், சிவத்தால் தடைபட்டது.

சுப்பிரமணியம் என்னும் ஷண்முகரால் சம்மரிக்க வேண்டியது எப்படி எனில்:—

பஞ்ச சத்தியோடு அனன்னியமாகிய சம்வேதனை என்னும் அருட்சத்தியையுங் கூட்டிச் சுத்த அறிவே வடிவாகிய ஆறறிவென்னும் முகங்களோடு, சுத்தஞானம், சுத்தக் கிரியை, என்னும் சத்தியுடன், கூர்மை பொருந்திய வேல், என்னும் விவேகத்தால், தயா வடிவாய் அவா மோக மதங்களை நாசஞ் செய்வது சூரசம்மாரம். மயில் என்பது — மேற்படி தத்துவங்கள் நஷ்டமானாலும் அவற்றின் அக்கிரமம், அதிக்கிரமம், கெட்டுக் கிரமமாத்திரம் இருப்பது. பூர்வ வாசனைகள் பல வண்ணமாய் விரிந்து ஆடுவது இயல்பாதலால், அவற்றை அசைபவோட்டாது மத்தியில் ஏறி இருப்பதாகிய சுத்த அறிவே — ஷண்முகம். விகல்ப ஜாலமே — மயில். இவ்வண்ணமே அண்டத்திலும் உண்டு. மேலும், நமது புருவ மத்தியில் — ஆறு பட்டையாய் — மணிபோல் ஓர் ஜோதி யிருக்கிறது. அந்த ஜோதியே ஷண்முகம்.

அருட்பெருஞ்ஜோதி

96. குண்டோதரனுக்கு அன்னமிட்டது

குண்டோதரனுக்கு அன்னமிட்டார் என்பதற்குப் பொருள்:—

குண்டோதரம் என்பது:— துத்தநாகக் குடாக்கு, தனை டென்பது — அன்னம், தரன் என்பது — பசியில்லாதவன்; மேற்படி நாகத்தைச் சுண்ணஞ் செய்து பசியில்லாதவனுக்களிக்க விசேஷ பசி உண்டாகும். எப்படியெனில்:— நாகக் கொட்டைபை மை போலாட்டி, நாகத்தில்

பிடிப்பித்துச் சிறு புடமாய்ப் பத்திட்டு எடுத்து, நாலி லொன்று சூதஞ் சேர்த்து, வட்டாக்கிக் கருந்துளசியால் கவசித்துச் சீலமண் செய்து, புடமிடச் சுண்ணமாம். இது போல் மற்ற திருவிளையாடல் முழுமையும். ஒருவாறு.

97. சந்திரனுக்குத் தண்டனை

சந்திரனுக்கு இரண்டு தண்டனை என்பது யாதெனில் :— கணபதியாகிய அவாவை உல்லங்கனம் பண்ணினதால் சண்டாளத்துவம் கோரிட்டது.

சந்திரனுக்குக் கலைகுறையவும்—சிவன் சிரசில் தரித்துக்கொண் டதும் யாதெனில் :—தக்கனுகிய ஜீவபோதத்திற்குப் பெண்கள் என்னும் உபகரணங்கள் 27. இவற்றை மனமாகிய சந்திரனுக்குக் கல்யாணம் என் னும் செயற்கையைச் செய்து, சமமாகப் பார்க்கும்படி தக்கன் சொன்ன தைத் தடுத்து, கிருத்திகை உரோகிணியாகிய — ஆசை மோகம் இரண் டையும் பாராட்டி, மற்றப் பெண்களைச் சந்திரன் அலக்ஷியம் செய்தான். செய்யவே, தக்கனது சாபத்தால், பதினாறு கலையின் கண்ணியங் கெட்டு ஒவ்வொன்றுய்க் குறைய, பயங்கொண்டு பிரமாவாகிய — பாச அறிவினிடத் துச் சொன்னன். பிரமன் தக்கனது பலத்தை எண்ணித் தன்னல் முடியாது என்று பதியாகிய — சுத்த அறிவினிடத்தில் சொல்லும்படி செய்தான். அங்ஙனம் சொல்லலும், சிவமானது சந்திரனுகிய மனத் தின் வியாபார கலைகளை ஒடுக்கி, ஒரு கலைபான சுத்த மனத்தைத் தானுகிய அறிவின் சிரம் என்னும் பிரஞ்ஞையில் தரித்து, சாபம் வீண் போகாமல் எறியும் குறைந்தும் இருக்கும்படி செய்தது. இப்படிச் செய்யாவிட்டால் அனுபவம் வராது.

98. அயக்கிரீவம் என்பதன் பொருள்

மாலின் 10-வது அவதாரம், அயக்கிரீவ அவதாரம். அயம் என்பதற்குப் பொருள் பிராணவாயு, கிரீவம் என்பது கழுத்து. ஆகவே அயக்கிரீவம் என்பது பிராணவாயுவையே கழுத்தாகக் சொண்டது. இப் படியே மற்ற அவதாரங்கள் என்பவற்றிற்கு வெவ்வேறு பொருள் உண்டு.

99. மார்க்கண்டேய சரித்திர உண்மை

மார்க்கண்டர்க்காக ருத்திர மூர்த்தி இடது காலால் எமனை உதைத்ததற்கு ஞாயம் :—

மார்க் கண்டரென்பது :— மயக்கமாகிய மறைப் பென்னும் மரணத்தைத் தவிர்த்தது.

ருத்திர னென்பது :— தனித்த ஆன்ம அறிவு.

எம னென்பது :— மயக்கத்தைத் தரத்தக்க வெகுளி, கினம் முதலிய.

இடது காலால் எமனை யுதைத்த தென்பது :— இடது என்பது சந்திரகலை, காலென்பது பிராணவாயு ; ஜனன மரணத்தை உண்டு பண்ணுவது சந்திர சூரிய கதி. ஆதலால், அஞ்ஞான பாசத் தால் — கினமாகிற கூற்றுவன் கட்ட, விவேகியென்னும் மார்க்கண்டன் — ருத்திர னென்னும் ஆன்ம அறிவோடு கூடவே, மேற்படி ருத்திரன் — பிண்ட நஷ்டஞ் செய்கின்ற இடகலையை மேலேற்றி, குணங்களாகிய சூலத்தால் கூற்றை யொழித்து, அருளாகிய சத்துவ மயமாய் நீடிக்கச் செய்வது — எம சம்மாரம்.

100. காயமே கோயில்

கிழக்கு — முகம், மேற்கு — கால், வடக்கு — வலதுகை, தெற்கு — இடதுகை, கொடிமரம் — தொப்புள், கொடி மரத்தின் அளவு — உள்நாக்கு, பலிபீடம் — வயிற்றின்மேடு, நந்தி — ஆணவம் முதலிய மலங்கள் உள்ள பசு, சிவலிங்கமே — மூலாதாரத்தின் உள்ளங்கம்.

101. சமய மத சன்மார்க்கம்

சமய சன்மார்க்கம், மத சன்மார்க்கம், ஆகிய இவற்றிற் குள் அடங்கிய சன்மார்க்கம் அனந்தம். அதில் சமய சன்மார்க்கம் 36.

அதை விரிக்க ஆறுகோடியாம். இதுபோலவே மதத்தினும் 36. மேல் குறித்த சமயம் மதங்களிலும், ஏக சித்தி, தேக சித்தி, முதலியவை உண்டு. அவை சமய மதங்களில் சொல்லுகிற, கர்த்தா, மூர்த்திகள், ஈசுவரன், பிரமம், சிவம், முதலிய தத்துவங்களின் காலப் பிரமாண பரியந்தம் இருப்பதையொழிய, அதற்குமேல் இரா.

சமய மதங்களிலும் சமரசம் உண்டு. வேதாந்த சித்தாந்த சமரசம், — யோகாந்த கலாந்த சமரசம், — போதாந்த நாதாந்த சமரசம். இதற்கு அதீதம் ஷடாந்த சமரசம். இதற்கு அதீதம் சன்மார்க்க சமரசம். இதற்கு அதீதம் சுத்த சமரசம். ஆதலால் சுத்த சமரசத்தில் சன்மார்க்கத்தைச் சேர்க்கச் சுத்தசமரச சன்மார்க்கமாம். இவை பூர்வோத்தர ஞாயப்படி, கடைதலைப் பூட்டாக, சமரச சுத்தசன்மார்க்க மென மருவின. இதற்குச் சாதனம் ஒருவாறு ஷடாந்த சமரசம்.

ஆன்மாவுக்கு அனன்னிய அருள் எப்படியோ; அதைப் போல் சுத்தசன்மார்க்கத்துக்கு அனன்னியமாக இருப்பது சர்வசித்தியாம். சுத்த சன்மார்க்கத்துக்குப் படி மூன்று. ஷடாந்தங்களின் பொதுவாகிய ஷடாந்த சன்மார்க்கம் 1, சமரச சன்மார்க்கம் 1, சுத்த சன்மார்க்கம் 1, ஆக 3. ஆதலால் சுத்தசன்மார்க்கத்திற்குப் படிகள் 3. சிற்சபை 1, பொற்சபை 1, சுத்த ஞானசபை 1, ஆக 3. இவைகள் மூன்றுந்தான் படிகளாக இருக்கும். சுத்த தேகத்தினுடைய அனுபவத்தை விரித்தால் விசேஷமாம். சுத்தசன்மார்க்கம் விளங்குங் காலத்தில் எல்லாம் ஆண்டவர் வெளிப்படையாய்த் தெரிவிப்பார்.

102. சமய மத சன்மார்க்கமும் சுத்தசன்மார்க்கமும்

சமய மத சன்மார்க்கிகளில் தாயுமான சுவாமிகளும் இன்னும் அநேக பெரியோர்களும் சுத்தப்பரப் பிரமத்தினிடத்தில் இரண்டறக் கலந்துவிட்டதாக முறையிடுவது வாஸ்தவமா? அவாஸ்தவமா? என்றால், அவாஸ்தவம். சுத்தசன்மார்க்கம் ஒன்றுக்கே சாத்தியம் கைகூடும்; என்றும் சாகாத நிலையைப்பெற்றுச் சர்வ சித்தி வல்லபமும் பெறக்கூடும். மற்றச் சமய மத மார்க்கங்களெல்லாம் சுத்தசன்மார்க்கத்துக்குச் செல்லக் கீழ்ப்படிகளாதலால், அவற்றில் ஐக்கிய மென்பதே யில்லை.

தாபுமானவர் முதலானவர்கள் சுத்த சன்மார்க்கிகள் அல்லர்; மதசன் மார்க்கிகள் என்று ஒருவாறு சொல்லலாம். இதில் நித்தியதேகம் கிடையாது. இது சாதக மார்க்கமே அன்றிச் சாத்தியமல்ல. நாளைச் சுத்தசன்மார்க்கம் வழங்கும்போது, இவர்கள் யாவரும் உயிர் பெற்று மீள வருவார்கள். முன்னிருந்த அளவைக் காட்டிலும் விசேஷ ஞானத்தோடு சுத்தசன்மார்க்கத்துக் குரியவர்களாய் வருவார்கள்; சாத்தியர்களாய் இரண்டறக் கலப்பார்கள்.

103. கடவுள் மனித தேகத்தில் காரியப்படுதல்

கடவுள் ஆன்ம வியாபகமாகிய மனித தேகத்தில் காரியப் படுவது உத்தமமாக இருக்க, சிலா விக்கிரக பூத தாரு முதலியவை களில் கடவுளை வெளிப்படுத்திக் கொள்வது மந்த ஞாயம். அதில் கடவுள் தோன்றி அனுக்கிரகிப்பதாகச் சொல்லுவது ஜாலம். காய்ந்த கட்டையினிடத்தில் அக்கினி அதி சீக்கிரம் பற்றுதல்போல், பக்குவக் ளாகிய ஜீவர்களிடத்தில் கடவுள் அருள் வெளிப்பட்டால், சுத்தமா தி மூன்று தேக சித்தியும் அத்தருணமே வரும். பக்குவ மில்லாதவர்க்கு அருள் செய்தாலும், வாழைபினிடத்தில் அக்கினி செல்வது போலவாம். ஆதலால், கடவுள் அருள் வெளிப்படுவதற்கு முன் அபக்குவர்கள் தங்கள் செயற்கையாகிய ராகத் துவேஷாதி அசுத்தங்களைப் போக்கிக் கொள்வது உத்தமம்.

104. சுத்தசன்மார்க்க சாதனம்

சுத்தசன்மார்க்கத்துக்கு முக்கிய சாதனம் என்னவென் றால் :—

எல்லா ஜீவர்களிடத்தும் தயவும் ஆண்டவரிடத்து அன்புமே முக்கியமானவை. உதாரணம் — அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் சொல்லியது :— "கருணையுஞ் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக மற்றெல்லாம் மருள்நெறி — எனவே எனக்கு நீ உரைத்த வண்ணமே பெற்றிருக்கின்றேன்".

சன்மார்க்க சாதனம்

சாதனங்கள் ஒன்றும் வேண்டாம். எதாவது ஓர் சாதனம் சொல்லக்கேட்டு, அதன்படி நடந்தால் சிறு ஒளி உண்டாம். அதைக் கண்டு பல்லிளித்து இறுமாந்து கெட நேரிடும். ஆதலால், காலந்தாழ்க் காது, எல்லா உயிரையும் தன்னுயிரைப் போலப் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும். இதுவே சாதனம். இத்தக்குணம் வந்தவன் எவனே அவன்தான் இறந்தவரை எழுப்பு கிறவன்; அவனே ஆண்டவனு மாவான்.

105. காயத்ரி

காயத்ரி :— கா — ய — த்ரி. கா — ஜல தத்துவமாகிய ஸ்தூல தேகம், பிரம ஸ்வரூபம். ய — வாயு தத்துவமாகிய சூக்ஷ்ம தேகம், விஷ்ணு ஸ்வரூபம். ஆ — அக்னி தத்துவமாகிய காரண தேகம், ருத்ர ஸ்வரூபம். த்ரி — மூன்று. ஆதாவது, மேற்குறித்த மூன்று தேகங் களின் ஸ்வரூப, ரூப, சுபாவ குணங்களை ஐயம், திரிபு, மயக்க மின்றிக் கடந்தால், ஜனன மரண சாகரம் நீங்கி நித்தியர் ஆவோம். எப்படி யெனில் :— காயத்திரி மந்திரத்திற்குப் பாதம் மூன்று. பாதம் ஒன் றிற்கு வர்ணம் எட்டு. ஆக மூன்று பாதத்திற்கும் வர்ணம் இருபத்து நான்கு. பாதம் மூன்றென்பதன் குறிப்பு ஜீவர்களுக்கு மலம் மூன்று.

வருணம் — இருபத்து நான்கு — என்பதன் குறிப்பு :—

இரு — இரண்டு, — (1) ஜீவகாருண்யம், (2) தத்துவ விசா ரம் ஆகிய இரண்டையும்; பத்து பற்று பிடி, பற்றிலல்; நான்கு = நாலாகிய — (1) ஜீவகாருண்யம், (2) ஈசுரபக்தி, (3) பாசவைராக்கியம், (4) பிரமஞானம் ஆகிய இவற்றை அடையலாம்.

அடைந்து, காயத்ரி மந்திரம் திரிமூர்த்தி ஸ்வரூப மாதலால், இதற்கு அதீதமான பிரமானுபவத்தைப் பெறலாம்.

மேலும், தத்துவ த்ரயங்களான மூன்று தேகங்களுக்கும் தத்துவம் யாதெனில் :— வர்ணம் இருபத்து நான்கு ஆதலால், ஸ்தூல தத்துவம் இருபத்துநான்கு. பாதம் மூன்று, காயத்ரி திரிமூர்த்தி

ஸ்வரூபம், இவற்றுள் ஒன்றில் ஒன்றைக் கொடுக்க வந்தது ஒன்று :— 3. + 3. + 1, ஆகிய இவற்றைச்சேர்க்க ஏழு (7) ஆகிறது. ஆதலால், சூட்சும தத்துவம் ஏழு. இதற்குச் சத்தி மூன்று. அனுபவ சத்தி ஒன்று, சமத்துவம் ஒன்று. ஆக ஐந்து. ஆதலால், காரண தேக தத்துவம் ஐந்து. மேற்குறித்த முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்தால், அனுபவம் விளங்கும்.

எப்படியெனில் :— ஓதநபாத் :— ஓ — ஆன்ம அறிவின் கண் ; த — சத்துவ குணமயமாய் ; த் — அருளனுபவம் பெற்று ; யா — பிரமமாதல். ஆதலால், மேற்குறித்த காயத்திரியின் ஸ்வரூபானுபவத்தைப் பெறுதலாம்.

106. சூரியன், சந்திரன், அக்கினி இவற்றின் கலைகள்

ஏமம், கனகம் என்பன சூரியனைக் குறிக்கின்றன. சூரியனிடத்தில் பொன் இருக்கின்றது.

சூரியன் சந்திரன்

சூரியன் ஆணாகவும், சந்திரன் பெண்ணாகவும், வலம் இடம், சத்தி சிவமுமாக வுடையது மருட்டேகம். வலம் சந்திரனாகிய சத்தியாயும், இடம் சூரியனாகிய சிவமாயு மிருப்பது அனுபவம். நிகிய அனுபவத்திலுள்ள இடம் வலமாகவும், வலம் இடமாகவும் அனுபவம் தோன்றும்.

சூரியன் சந்திரன் அக்கினி — கலைகள்

மேலும், சூரியன் அக்கினியோடு கூடினால் திங்களும் (1), சந்திரன் அக்கினியோடு கூடியபோது பானுவும் (2), சூரியன் மதியோடு கூடியபோது பௌமனும் (3), சந்திரன் பானுவோடு கூடியபோது சௌமியனும் (4), சூரியன் சௌமியனோடு கூடியபோது குருவும் (5), சந்திரன் பௌமனோடு கூடியபோது பிருகுவும் (6), சூரிய சந்திரர்கள் அக்கினியோடு கூடியபோது மந்தனும் (7), தோன்றும். ஆக 7.

மேற்படி சூரியனுக்குக் கலை 16. மேற்படி கலை 16-ல் சந்திரனுக்குக் கலை 4 போக இருப்பு கலை 12. சூரியன் — காரிய வுருவன். சந்திரனுக்குக் கலை 16. மேற்படி கலை 16-ல் தாரகைகளுக்குக் கலை 4 போக, சூரியனல் கொடுத்த 4 கலையுஞ்சேர்த்து சந்திரனுக்குக் கலை 16. சந்திரன் — காரிய காரண உருவன், சகலன் — சூரியன், கேவலன் — சந்திரன். அனுபவத்தில் இடம் — வலம் போல் மாறும். பிரமத்துவம் சூரியனிடத்திலும், விஷ்ணுத்துவம் சந்திரனிடத்திலும் உள்ளன. அக்கினிக்குக் கலை 64. இப்போது எட்டுக் கலையோடு காரண உருவனுப் மற்றைக் கலைகளை உள்ளடக்கி நீருறு தீப்போல் எங்கு முடையவன். ஆக கலை 96. மேல்படி 96 கலையே 96 தத்துவமாய்ப் பிண்ட வடிவாயிற்று.

அக்கினிகலை 64-ன் குணங்கள் சைவத்தில் 64 திருவிளையாடல் களாகவும், உண்மை அடியார்கள் 63 அதீதம் ஒன்று ஆகவும் வழங்குகின்றன. சந்திரகலை 12-மே வைஷ்ணவ பரத்தில் துவாதச ஆழ்வார்களாக வழங்குகின்றன. மற்ற 20 கலையும் கௌமாரம், பாசுபதம், மஹாவிரதம், சாத்தேயம், காணபத்தியம், காபாலம், சௌரம், மகம்மதீயம், பௌத்தம், நிறைந்துவம் முதலிய சமயங்களில் வழங்குகின்றன. இவற்றின் அனுபவங்களைக் குருமுகத்தில் அறிக.

அமாவாசை பௌர்ணமி

மேற்குறித்த சோம, சூரியர்கள் ஒன்றுபடுவது அமாவாசை. ஒன்றுபட்ட சோமன் ஒவ்வொரு கலையாகச் சூரியனிடத்திலிருந்து விடுபட்டு மேலேறிப் பகிரண்டத்தில் செல்லும் போது 64 கலையும் பூர்த்தியாய்ப் பிரகாசிப்பது பௌர்ணமி. பகிரண்டத்திலிருந்து பிரமாண்டத்திற்கு வியாபக மாகும் போது, சூரிய உஷ்ணம், சோம கலையை ஒவ்வொன்றாகக் கிரகிக்க ஒரு கலையோடு பானுவுடன் சேர்தல் அமாவாசை. ஷோடசோமகலையைப் பானு கிரகிக்காவிட்டால் இவ்வுலகம் ஜீவிக்காது. சூரியன் பிரமாண்ட பகிரண்ட வியாபகி. சந்திரன் பகிரண்ட பிரமாண்ட வியாபகி. சூரிய வியாபகம் தோன்றுது, சந்திரவியாபகந் தோன்றும்.

சந்திரன் மகிமை வரலாறு :— ரூபாரூபி, காரியகாரணன், சோபாமாத்திரன், சுடாத தன்மை, கலை 12, தாரகை கலை 4, அர்த்தவடிவன், பிரமாண்ட பகிரண்ட வியாபகன், பச்சைவெண்மை கலந்த மேனி, மன அறிவு — சபை, மன ஒளியே — பதி.

சூரியன் வரலாறு :— ரூபி, காரியன், ஒளிமாத்திரன், சுட்டுஞ் சுடாத தன்மை. கலை 16, வட்டவடிவன், பிரமாண்ட வியாபகி, பஞ்ச வர்ணம், ஜீவ அறிவு — சபை, ஜீவ ஒளியே — பதி.

பஞ்ச வர்ணங்க ளாவன :—

1.	வெண்மை	=	ஆதிசத்தி	=	அணுக்கிரகம்
2.	பச்சை	=	பராசத்தி	=	திரோபவம்
3.	செம்மை	=	இச்சாசத்தி	=	சம்மாரம்
4.	கருமை	=	கிரியாசத்தி	=	ஸ்திதி
5.	பொன்மை	=	ஞானசத்தி	=	சிருஷ்டி.

அக்கினியின் வரலாறு :— அரூபி, காரணன், பிரகாச மாத்திரன், சுடுந்தன்மை, கலை 64, பூர்ண வடிவன், எங்கும் வியாபகி, சுவர்ணம், ஆன்ம அறிவு சபை, ஆன்ம ஒளியே பதி.

107. மழை

புகையின் மூன்றுவது கலையின் சீதள சத்தியினால், மழை யுண்டாகின்றது. இதுபோல் சூரிய கிரண உஷ்ண ஆவியாகிய புகை ஓஷதிகளிலும், நீரிலும், பாரிலும், பொருப்பிலுமுள்ள திரவசத்திபைக் கிரகித்து, வாயு மண்டலத்தில் சேர்த்து, மேலுங் கீழும் உஷ்ணம் நிரம்ப, மத்தியிலுள்ள திரவ அணுக்கள் புழுங்கி நீராய், காலபேத வண்ணம் வாயுவால் பிரேரிக்கப்பட்டு அசைக்கும்போது கீழ்மேலுமுள்ள உஷ்ண வாயு தடிப்பு விலகும்போது மின்னலாகிய பிரகாசமும், நெருங்கி யொன்றுபடும்போது சத்தமாகிய இடியும், அத்தொனியால் படலம்போல மூடியிருந்த, காராகிய, மேகம் விலகி வாயுவால் கலங்கியபோது, மழை யும் உண்டாகும். இதன்றி, மேகம், கடல் ஜலத்தை உண்டி மழை பெய்வ தென்பது பொய்.

108. பூதம் என்பது

பூதம் என்பது :— பூ—த—ம் : பூ — அலர்ந்தது, த — தடித் தது, ம் — கலத்தல். ஆதலால், எங்கும் நிறைந்து அணுவாப்க் கலத் தல் பூதம்.

பூதமென்பது யாது? அதனது சொரூப ரூப சுபாவங்க ளென்ன?

பூதம் என்பதற்குச் சப்தார்த்தம் :—

பூ — மலர்ந்தது, பிரகாசம்; த — தடித்தது, காரியம்; ம் — ஊன்றியது, நிலை. இதற்குத் தாத்பர்யம் :— நிலைபெற்ற காரியப் பிரகாசம். பூத அக்கினித் தோற்றமென்றும் பெயர். பூத காரிய அக்கினி என்றும் பெயர். பூ என்பதில் — உகர உயிரும், தம் என்பதில் — அகர உயிரும் எண்ணில் 8-ம், 2-ம் ஆயின. ஆக தொகை 10. இந்தப் பத்து இடத்திலும் பூத காரிய அக்கினித் தோற்றம் உண்டு. கல்லுக்குள் இருக்கிற நெருப்பு பஞ்சில் காரியப்படுவது போலாம். பத்துப் பொது ஸ்தானங்களாவன :— 1. மண், 2. ஜலம், 3. அக்கினி, 4. காற்று, 5. வெளி, 6. பிரகிருதி, 7. மாயை, 8. சூரியன், 9. சந்திரன், 10. நக்ஷத்திரம் ஆக இடம் 10.

109. திசைகளும் பலனும்

1. வடக்குப் பாகம், — நக்ஷத்திரப் பிரகாசம். 2. கிழக்குப் பாகம், — சந்திரப் பிரகாசம். 3. மேற்குப் பாகம், — சூரியப் பிரகாசம். 4. தெற்குப்பாகம், — அக்கினிப்பிரகாசம்.

கிழக்குத்திக்கை நோக்கித் தியானம் செய்கிறது போக சித்தியைப் பெறுகிறதற்கு. மேற்கு, — மேற்படி சோர்ணை சித்தியைப் பெறுகிறதற்கு. தெற்கு, — சாகாக்கலையை — நித்திய தேகத்தையும் ஞான சித்தியையும் — பெறுகிறதற்கு. வடக்கு, — சித்த சுத்தியைப் பெறுகிறதற்கு. வடக்கு — காற் புறம். தெற்கு — தலைப்பாகம். இதனால் தான் தெற்கு ஞானத்தில் சிறந்தது; வடக்கு அஞ்ஞானத்தில் அழுந்தியது.

தலைகீழ், கால்மேல் என்பதற்கு நிபாயம் :— அடி கீழ், முடி மேல்; அடிதலை, முடிகால்; தலை கிழக்கு, கால் மேற்கு; கிழக்கு தாழ்ந்தது, மேல் திக்கு உயர்ந்தது. மேலும் இவற்றை அனுபவத்தால் அறிக.

110. தத்துவம் என்பது

தத்துவமென்பது :— தத்-த்வம் — தத்துவம். தத் — அது, அது வென்பது — சிவம் ; த்வம் — அதன் தன்மை. ஆதலால், தத்துவம் என்பது சிவத்தின் தன்மை.

111. பௌதிகம் என்பது

பௌதிகமென்பது, லிங்கமாதி உபரசம் நூற்றிருபதிற்கும், (120) பாஷாணமாதி 64 பாஷாணங்கட்கும், சுக்காதி ஓஷதி மூல பத்திர பீசங்கட்கும் பெயர். இஃது ஒருவாறு பூதகாரிய தேகமாதி தத்துவங்கட்கும் பெயர். பௌ-தீ-அகம் — பௌதிகம். பௌ — மூடல், அகம் — உள், தீ — அக்கினி. ஆதலால் தீயை உள்ளடக்கியது — பௌதிகம். தீ என்பது — காரண உஷ்ணம்.

112. கடவுள் ஏகம் அனேகம்

கடவுள் ஏகம் — அனேகம் என்பதற்குத் தாத்பரியம் :—

சமயத்தில் சிவம் ஏகம், பிரமாதிகள் அனேகம். — மதத்தில் பிரமம் ஏகம், பரவிந்து பரநாதம் முதலியவை அனேகம். — சமயாதீதத்தில் சொல்லிய பிரமம் முதல் சுத்தப் பிரமம் வரையிலும் ஏகம், அதைப் பெற்றவர்க ளனேகம். — சாதாரண பாகத்தில் கடவுள் ஏகம், ஜீவர்கள் அனேகம். — சுத்த சன்மார்க்கத்தில் கடவுள் ஏகப், கடவுளருளால் சுத்த மாதி மூன்று தேகங்களைப் பெற்ற ஞானிகளனேகம்.

113. கலியுக முடிவு

முதல் யுகத்திற்கு நாள் எட்டு, 2-வது யுகத்திற்கு நாள் ஆறு 3-வது யுகத்திற்கு நாள் நான்கு, 4-வது யுகத்திற்கு நாள் இரண்டு,

ஆகக் கூடிய நாள் 20-ம் கற்பம் முடிக்கக் கூடும்நாட்கள். 60 × 60 × 60 = 2,16,000 நொடி — ஒரு நாள். அதாவது, நாள் ஒன்றுக்கு நாழிகை 60, நாழிகை ஒன்றுக்கு விநாடி 60, விநாடி ஒன்றுக்கு நொடி 60 என்றபடி. நாளிரண்டிற்கு 4,32,000 நொடி. இந்த 4,32,000 நொடியும் அத்தனை வருஷமாகக் கலியுகத்திற்குச் சொல்லியிருக்கிறது. ஆனால் இந்தக் கலியுகத்திற்கு வருஷம் ஐயாயிரந்தான். முதல் யுகம் களங்க மார்க்கம்; இரண்டாவது யுகம் திராவக மார்க்கம்; மூன்றுவது யுகம் நவநீத மார்க்கம்; நாலாவது யுகம் பஸ்ம மார்க்கம். ஆதலால், மேற் குறித்த பஸ்மத்தை மேற்குறித்த வருஷத்தில் முடித்து உட்கொண்ட புருஷனுகிய சித்தனுக்கு கலிபுருஷனென்று நாமம் வந்தது. மேற்படி பஸ்மத்தை இரண்டு தினத்தில் முடித்து கற்பங்கொண்டு தேக சித்தியைப்பெற்றுத் திரிசியப்படாமல் மேற்படி புருஷன் தனது சங்கல்ப விகல்பங்களால் இவ்வுலகத்தைத் தோன்றலாதி அனைவுகள் செய்வித்து ஆடுகின்றான். இந்த யுகம் முடிவதற்கு இன்னும் 27 வரு இருக்கின்றது, இதற்குமேல் மேற்படி புருஷன் செயல் நடவாது; ஞானசித்தன் செயல் உண்டாம். (ஆங்கிரளவரு புரட்டாசிமீ 1872.)

114. கூடஸ்த பிரம ஐக்கியம்

மேலும், கேவல வேதாந்தத்தில், கூடஸ்த பிரம ஐக்கியத்தின் பொருள்:—(1) ஜீவ சைதன்யம், (2) ஈசுர சைதன்யம், (3) பிரம சைதன்யம், (4) கூடஸ்த சைதன்யம், (5) சர்வசாக்ஷி. இவற்றிற்குப் பிரதிநாமம் — மேகாகாசம், ஜலாகாசம், கடாகாசம், தத்துவாகாசம், மஹாகாசம் ஆக ஐந்து. 1—தம்பப் பூச்சி முதல், மனுஷர்களில் மூடர் பரியந்தம் பரதந்திரர்கள், ஜீவ சைதன்யம். 2—சுராசுரர் அறிவுடைய ஜீவர்கள் சுதந்திரர்கள், இவர்கள் ஈசுர சைதன்யம். 3—காரியம், ரூபம், முதலியவற்றோடு கூடிய சுத்ததேகி, பிரம சைதன்யம். 4—காரண காரியம் ரூபாரூபம் முதலியவற்றுட னின்ற பிரணவ தேகி கூடஸ்த சைதன்யம். 5—காரணம் அரூபம் முதலியவாக நின்ற ஞானதேகி சர்வசாக்ஷியெனக் கொள்க.

115. மலம் நீங்கிச் சிவமாதல்

பசுவென்பது—முற்றும் மலமுள்ளது. ஜீவனென்பது—மூன்று பங்கு மலமுள்ளது. ஆன்மாவென்பது — ஒரு பங்கு மலமுள்ளது.

சிவம் — முற்றும் மலம் நீங்கியது. ஆதலால் மலம் முற்றும் நீங்கித் தயா வடிவமாவதே சிவமாதல்.

116. தேகத்தைத் திறந்து வைத்திருத்தல் ஆகாது

ஆண் பிள்ளையின் தேகத்தில் 3 இடங்களில் சத்துண்டு. அவை (1) மண்டையின் மூளை, (2) கொப்பூழ், (3) இலிங்கத்தின் கீழ்ப் புறம். பெண்பிள்ளைக்குத் தேகத்தில் சத்து 4 இடங்களில் உண்டு. அவை (1) மண்டையின் மூளை, (2) ஸ்தனங்களின் கீழ், (3) கொப்பூழ், (4) குய்யம். தேகத்தைத் திறந்து வைத்திருத்தல் ஆகாது ; சத்து காய்ந்துபோம்.

117. அருள் வெளி

அருள் வெளியில் சன்மார்க்கத்திலுள்ள அனுபவங்களைப் பெறலாம். இதற்கு அருட்சத்தி என்றும், அருள்வெளி என்றும், நிஷ்ப மென்றும், அதின் தன்மை என்றும், அனுதி இயற்கை என்றும், பர ஞான மென்றும், பூரண நிஷ்டை என்றும், அகர உகர மென்றும், அருள் நடன மென்றும், ஆன்ம நெகிழ்ச்சி என்றும், ஆன்ம அமை வென்றும் பலபட விரிந்த நாமங்கள் உண்டு. அருள்வெளியின் வடி வாய் உண்மை என்னும் சி காரமாகிய பதியோடு கூடி மௌனானந்தத்தி லிருப்பதே உண்மை.

118. ஆனந்தம்

ஆனந்த மென்பது — சதா சந்தோஷத்தோடு எதிரிட்ட ஜீவர்களைத் திருப்தியால் சந்தோஷிப்பித்துத் தானதிசயமின்றி நிற்கும்.

119. சத்தியும் சிவமும்

சூரியன் அக்கினியோடு கூடியபோது சந்திரனும். சந்திரன் அக்கினியோடு கூடியபோது சூரியனுகும். சூரியன் ஆணுகவும் சந்திரன் பெண்ணுகவும், வலது பாகம் சிவமாகவும், இடது பாகம் சத்தியாகவும் வழங்கி வருவது மருட்டேக ஞாயம். வலது பாகம் சத்தியாகவும், இடது பாகம் சிவமாகவுமிருப்பது, அனுபவம்.

120. சன்மார்க்கத்தில் அவா

இந்திரியக் காட்சி என்பது:— ஒரு வஸ்துவின் நாமரூபமின்றிக் காணுதல்; கரணக் காட்சி என்பது — அந்த வஸ்துவைப் பற்றல், அதை அனுபவிக்க வேண்டு மென்கிற சித்த விருத்தி உண்டாகிறது ஆசை என்னும் காமம்; அதைத் தன் வசப்படுத்த எழுவது மோகம். ஆதலால் எந்த வஸ்துவினிடத்திலும் மோகம் காமம் முதலியவை யின்றி அவா மாத்திரமா யிருத்தல் வேண்டும். சன்மார்க்கத்தில் அவாவும் ஏகதேசத்திலும் கூடாது.

121. ஜீவனுக்குப் புருஷன் என்ற பெயர்

ஜீவனுக்குப் புருஷன் எனப் பெயர் வருவானேன்:— வித்தியா தத்துவத்தில் புருஷன் என்பது விஷயத்தில் அழுந்தியிருக்கும் எட்டுக் குணங்களைக் குறிப்பிக்கின்றபடியால், தத்புருஷன், மத்திய புருஷன், புருஷன் என்று வழங்கியது. மேலும் சிவம் என்பது ஒன்றே.

122. பற்று வகை

மனத்தின் கூறுபாடு 4 வகை :— அதாவது (1) ஜீவப்பற்று, (2) பந்துப்பற்று, (3) களத்திறப்பற்று, (4) தேகப்பற்று. தேகப் பற்றுகிய அகப்பற்று போயிருத்தல் சங்கல்பம்.

123. ஆன்மலாபம் அடைய மார்க்கம் இரண்டு

ஆன்ம லாபம் அடைவதற்கு ஞாயம் இரண்டு. என் னெனில் :— பிபீலிகா ஞாயம், விகங்க ஞாயம். இவற்றுள் சிறந்தது விகங்கம். பலவகை இம்சையால் போகத் தடைப்பட்டுப் போவது பிபீலிகாமார்க்கம்.

124. ஞானசிருஷ்டி

இறந்தவர்கள் உயிர்பெற்று வரும்போது அது ஞானசிருஷ்டி ஆதலால், ஞானத்தோடு வருவார்களா ? முன்னிருந்த ஆபிரவாதிகள் வருவார்களா ? என்றால் :— இந்த மானிடதேகம் ஆண்டவரது சிருஷ்டி அன்று, மாயா சிருஷ்டி. முன்னிருந்த ஞான அஞ்ஞானத்தோடிருப்பார்கள் வருவார்கள். ஆனால் கிஞ்சித்து ஞான விசேஷம் உண்டாயிருக்கும். ஆதலால், மீள தரிசன விசேஷத்தால் மந்தம் நீங்கி ஞானம் விளங்கும்.

125. சபை ஐந்து

ஆண்டவ ரிருக்கும் பொது ஸ்தானங்கள் 5. இவைகள் பஞ்ச சபைகளாகச் சொல்லப்பட் டிருக்கின்றன. (1) பிருதிவி — பொற் சபை, (2) அப்பு — ரஜத சபை, (3) தேயு — தெய்வ சபை, (4) வாயு — நிர்த்தசபை, (5) ஆகாயம் — சிற்சபை.

126. ஒளி

பிண்டவொளி 1, அண்டவொளி 2, ஆன்ம ஒளி 3, அக்கினி ஒளி 4, ஜீவவொளி 5, சூரிய ஒளி 6, மன ஒளி 7, சந்திர ஒளி 8, கண்ணொளி 9, நட்சத்திர ஒளி 10.

127. ரசவாதம் — உபரசவாதம்

ரசவாதம் 7 ; உபரசவாதம் 7

ரசவாத விவரம் :— ஸ்பரிசவாதம், ரசவாதம், தூமவாதம், தாதுர்வாதம், வாக்குவாதம், அக்ஷிவாதம், சங்கல்பவாதம், ஆக 7. இவை முறையே குரு சம்பந்தத்தால், ஔஷதி சம்பந்தத்தால், புகை வேதியால், பஞ்சலோகங்களால், சொல்லால், பார்வையால், தியானத்தால்—செய்யப்படும்.

உபரசவாத விவரம் :— மந்திரவாதம், புரீஷவாதம், தூளன வாதம், வாயு பிரேரகவாதம், தேவாங்கவாதம், பிரவேச விசிரிம்பித வாதம், தந்திரவாதம் ஆக 7. இவை முறையே எழுத்துகள் சம்பந்தத்தால், மலமூத்திரத்தினால், பாததூளிகை சம்பந்தத்தால், சுவாச சம்பந்தத்தால், உபாசனையினால், பூததாதுவால், நிரோதுவாக—செய்யப்படும்.

128. வாக்கு நான்கு

வாக்கு நான்கு என்பது — யாதெனில் : — (1) அபரவாக்கு, (2) பரவாக்கு, (3) துரியவாக்கு, (4) அனுபவ வாக்கு. இவற்றில் அபரம் ஸ்தூலவாக்கு, பரம் அசரீரி வாக்கு, துரியம் அறிவில் விளங்குவது, அனுபவம் யாவுமாய் விளங்கித் தோன்றுவது.

129. நித்தியத் துறவு

நித்தியத் துறவென்பது :— அறம், பொருள், இன்பம், வீடு — இந்த நான்கையும் நித்தியம் 4 காலங்களிலும், செய்து அனுபவித்துப் பற்றற்று இருப்பதே நித்தியத்தை அடைவதற்கு ஏதுவாக இருக்கின்றது.

130. மூக்குணவகை

சத்துவம், ராஜஸம், தாமசம் என்று குணங்கள் 3. ஓவ்வொன்றிலும் 3 சேர்ந்து 9 ஆயின. இந்த 9-ம் சுத்தம் அசுத்தம் என்னும் பேதத்தால் 18 ஆயின.

131. அவஸ்தை மூன்று

அவஸ்தை மூன்று:— ஜாக்கிரம், சோப்பனம், சுழுத்தி. இவற்றில் உள்ளம் பித்த உஷ்ணத்தோடு கூடி லலாட ஸ்தானத்தில் நிற்பது ஜாக்கிரம்; சோப்பன மாவது உள்ளம் வாத நாடியோடு கூடிக் கண்ட ஸ்தானத்தில் இருப்பது; சுழுத்தி யாவது உள்ளம் கிலேத்துமநாடியோடு கூடி மார்பு ஸ்தானத்தில் நிற்பது.

132. நவ நிலைகள்

நவநிலை என்பது:—அனுபவ மார்க்கம்: (1) விந்து; (2) நாதம்; (3) பாவிந்து; (4) பாகாதம்; (5) திக்கிராந்தம்; (6) அதிக்கிராந்தம்; (7) சாட மௌனம்; (8) சுத்தம்; (9) அதீதம். ஆக 9.

133. பரஞானம் அபரஞானம்

ஞானம் — பரஞானம் — அபரஞானமென இரண்டு.

1. பரஞானமென்பது :— முன், — சாத்திர ஞானம் அல்லது விசார ஞானம், வாசாகயிங்கரியம், சாதனம், வாச்சியார்த்தம்.

2. அபரஞானமென்பது :—பின்,—அனுபவ ஞானம், சாத்தியம், லக்ஷியார்த்தம். மேலும் பரம் முன், அபரம் பின்; சாத்திரம் முன், அநுபவம் பின்; சாதனம் முன், சாத்தியம் பின். ஆதி முதல், அந்தம் கடை, அநாதி — ஆதி அந்த மில்லாதது.

134. சுத்தசன்மார்க்க அனுபவ ஸ்தானம்

சுத்தசன்மார்க்கத்துக்கு அனுபவ ஸ்தானங்கள் கண்டத்துக்குமேல்.

135. அண்ட பிண்ட அமுதம்

அண்ட அமுதம் 4. அவை 1. அக அமுதம், 2. அகப்புற அமுதம், 3. புற அமுதம், 4. புறப்புற அமுதம் — மழை பிண்ட அமுதம் 4. அவை 1. அக அமுதம், 2. அகப்புற அமுதம், 3. புற அமுதம் 4. புறப்புற அமுதம் — வெயர்வை. அகண்ட அமுதம் மழை முதலாக — பிண்ட அமுதம் வெயர்வை முதலாக.

136. சகலர் விஞ்ஞானகலர், பிரளயாகலர்.

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் ஆக 3.

1. சகலர்:— (1) இயற்கையாகிய ஆணவம், (2) இயற்கையில் செயற்கையாகிய மாயை, (3) செயற்கையாகிய காமியம் அல்லது கர்மம் — இம் மூன்று முள்ளவர்.

2. பிரளயாகலர்:— (1) இயற்கையாகிய ஆணவம், (2) இயற்கையில் செயற்கையாகிய மாயை — இவ்விரண்டு முள்ளவர்.

3. விஞ்ஞானகலர்:— (1) இயற்கையாகிய ஆணவ மாத்திரம் உள்ளவர்.

சகலர் — ஜீவர்கள். பிரளயாகலர் — கல்பிதகிகள். விஞ்ஞான கலர் — காலாதிதர்கள். சுத்தம் 9, அசுத்தம் 9, ஆக 18.

---

137. ஓங்காரம்

ஓம் என்னும் எழுத்து பிரணவம் என்று சொல்லப்படும். படைத்து அளித்து அழிக்க வல்ல தலைவன் என்பதே அந்த ஓங்காரத்தின் பொருள்.

பிரணவத்தின் ஐந்து பாகம் யாவெனில்:— அகரம், உகரம் மகரம், விந்து, நாதம். பஞ்சமி என்னும் வாக்கு பிரணவத்தின்கண் இருந்து தோன்றியது. அதற்கு ஸ்தானம் மூலாதாரம். அதிலிருந்து தோன்றிய மற்ற நான்கும் (1) சூக்குமை, (2) பைசந்தி, (3) மத்திமை, (4) வைகரி. இவற்றிற்கு இடம், (1) நாபி, (2) இருதயம், (3) கண்டம், (4) லலாடம்.

---

138. பூர்வ ஜென்மம் உத்தர ஜென்மம்

பூர்வ ஜென்மம் என்பது — கர்ப்பகோள வாசம். உத்தர ஜென்மம் என்பது — ஜனன காலம்.

139. உபதேசம்

உபதேசம் :—படிகமேடை 1, ஆபிரத்தெட்டுக் கமல இதழ் 2, ஓங்கார பீடம் 3, குண்டலிவட்டம் 4, ஜோதிஸ்தம்பம் 5, சுத்தநடனம் 6, இவற்றை அனுபவத்திலு லறிக. இஃது நிராதார லக்ஷணம்.

140. தியானம்

தியானஞ் செய்ய வேண்டு மாலில், ஏதாவது ஓர் உருவத் தைத் தியானிக்க வேண்டும். நிஷ்களமாயிருக்கப்படாது. உருவமாக இருக்கவேண்டும். அருவமாகத் தியானிக்கப்படாது. பின், உருவங் கரைந்து அருவமாகும். துவைதமாக இருந்தால், அத்துவைதம் தானே ஆகும். எப்படி எனில் :— பார்க்கும் தான் கெடுவது அத்வைதம். பார்க்கப்படும் பொருளும் கெடுவது அதீதம். சத்தியம்.

141. கவலை

கவலை கூடாது. உள்ளும் புறமும் ஓர் துணையாக வள்ளல் இருப்பதால், வாட்டமடைவதற்குக் காரணமே இல்லை.

142. ஞானம்

தன்னையும் தனக் காதாரமான தலைவனையும் கூடஸ்தனையும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

143. ஜீவன் முக்தன் — ஞானசித்தன்

ஜீவன் முக்தன் — மனோசாக்ஷி. ஞானசித்தன் ரோமத்துக்கு ரோமம் சாக்ஷி. எங்கும் சுற்றுதல் இவர் தொழில் — யாவுமாய் நிற்றலே.

144. தன்மை முன்னிலை படர்க்கை

தமிழில் — தன்மை, முன்னிலை, படர்க்கை என்பவை யாவை? அவற்றின் கருத்து யாது? தன்மை — பண்புச் சொல். சார்பு மயமாய் இருத்தலைப்பற்றி — தனக்குமேல் ஒன்றினைச் சார்ந்திருப்பதனால் — பண்புச் சொல் ஆகிறது. முன்னிலை என்பது — முன் – நிலை, முன் இடங் கூறினது. ஆனால் மூன்றும் இடத்திற்குப் படர்க்கை என்பது என்னெனில்:— படர் – படருந்படியான, கை – இடம். நிலை – அகண்ட இடம், கை என்பது குறுகிய இடம். ஆதலால், பேதாபேதம் குறிக்கும் நிமித்தம் இரண்டாம் இடத்துக்கு முன்னிலை என்றும், மூன்றும் இடத்திற்குப் படர்க்கை என்றும் பெயர்கள் வந்தன என அறியவும்.

145. அபேதம்

தங்களைப் பார்க்கவேண்டு மானால், என்னைப் பாருங்கள்; என்னைப் பார்க்கவேண்டு மானால் தங்களைப் பாருங்கள். தங்களைப் பார்த்தால், என்னைப் பார்ப்பீர்கள்; என்னைப் பார்த்தால், தங்களைப் பார்ப்பீர்கள்.

146. ஆண்டவர் சோதனை

ஆண்டவர் சோதிக்கின்றார் என்பது:— பிணி, மூப்பு, பயம், பசி, முதலியவற்றால் வருந்தச் செய்விப்ப தல்ல. மரணமடையச் செய்விப்பது தான் சோதனை.

147. கலை அறிவும் — அருள் அறிவும்

பத்து ஆள்சுமை ஒரு வண்டி பாரம். நானூறு வண்டிச் சுமை ஒரு சூல்வண்டி பாரம். சூல்வண்டி ஆயிரங்கொண்ட நூல்களை ஒரு ஜென்மத்தில் ஒருவன் அதிதீவிர ஜீவ முபற்சியால் படிக்கச் சிறிய உபாசனைச் சகாயத்தால் முடியும். அப்படிப்பட்டவன் ஆயிரம் ஜென்மம் எடுத்துப் படிக்கும் கலை அறிவை, ஒருவன் அருள் முன்னிடமாகச் சுத்தசிவ நோக்கத்தால் அறியத் தொடங்கினால், ஒரு கணத்தில் படித்துக் கொள்ளலாம். இது சத்தியம்.

148. அகங்கார அழிவு

தன்னைக் காட்டாது ஒளிக்கவேண்டும்.

149. சிவ சிந்தனை

ஓம் சிவாயநம என்று சதா சிந்தித்துக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வுலகம் அருட் சத்தி, பொருட் சத்தி, கிரியா சத்தி, யோக சத்தி, ஞான சத்தி மயமாக இருப்பதாகப் பார்த்துக் கொண்டிருத்தல் வேண்டும். யோகம் செய்தல் வேண்டுவதில்லை. அதில் அழுந்தி விட்டால் மீளுவது கஷ்டம். சதாசிவ கலப்பாய்க் கிடந்தாலும் மீளுதல் அருமை. மூடம் உண்டாகும். உண்மை.

150. அன்புருவம்

கடவுளைக் காண உண்மையாய் விரும்பினால், அழுத கண்ணீர் மாறுமா? ஆகாரத்தில் இச்சை செல்லுமா?

151. சகஜ நிலை

சமாதிப் பழக்கம் பழக்கமல்ல. சகஜப் பழக்கமே பழக்கம்.

152. சங்கல்பம்

சங்கல்பமாவது :— சம் — முடிவு ; கல்பம் — காலபேதம்; காலமுடிவு.

153. திண்டதிசை

கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு என்பவற்றில், தலை — தெற்கு, கால் — வடக்கு, நெற்றி — கிழக்கு, முதுகு — மேற்கு.

154. பக்குவரும் சூரிய கலையும்

சாதாரண ஜீவர்கள் சந்திரகலையில் இறப்பதும் பிறப்பதும் இயற்கை. பக்குவர்கள் சூரியகலையில் பிறப்பதும் இறப்பதும் இயற்கை. சூரியகலை அனுபவம் கிடைப்பது கஷ்டம். தினம் சூரியகலையில் செல்லும்படி மனதை அந்தக் கண்களில் செலுத்தல் வேண்டும்.

155. ஆலமரத்தடியில் சூரியனை வணங்கல்

ஆலமரத்தடியில் சூரியனை வணங்கவேண்டியது என்பது என்னெனில் :— சூரிய கலையில் தியானம் முதலிய செயல்கள் எல்லாம் செய்யவேண்டியது பற்றிச் சொன்னது.

156. இகபர காமங்கள்

இகபர காமங்களை விரும்பாமலிருத்தல் வேண்டும்.

157. குடிலை

குடிலை என்பது மூலப் பிரகிருதி.

158. திருமந்திரம்

இந்த மார்க்க உண்மை தெரிய வேண்டுமாகில் திருமந்திரத்தைக் கவனிக்கில் விளங்கும்.

159. சாதம்

சாதம் வடித்துச் சாப்பிடுதல் நலமா? பொங்கிச் சாப்பிடுதல் நலமா? என்னில் :— வடித்துச் சாப்பிடுவது — அதிலுள்ள எண்ணெய் போய்விடுவதால் — நலம். பொங்குவதில் எண்ணெய் போகாது; தாமசகுணம் உண்டாகும். இதுபோலவே உப்பு, புளி, மிளகாய் முதலிய வஸ்துக்களின் எண்ணெய் போகச் சுடவைத்துச் சாப்பிடுதல் வேண்டும். பச்சரிசி என்பது இப்போது கொண்டுவருவது அல்ல. மேலும் உஷ்ணத்தை உண்டு பண்ணக் கூடிய ஆகாரங்கள் கொள்ளுதல் வேண்டும்.

160. உடம்பின் அருமை

இந்த உடம்பை அலக்ஷியம் பண்ணுமல் பொன்னைப்போல் பார்க்க வேண்டும்.

161. சன்மார்க்கத்தில் இன்னிசை

வள்ளலாருடைய விவகார காலத்தில் சேர்ந்திருந்த கூட்டங்கள், பிட்டில், மத்தள முதலான கருவிகளுடன் தோத்திரஞ்செய்ய ஆரம்பித்தார்கள். "சன்மார்க்கத்திற்கு இப்படிப்பட்ட விநோதங்கள், வேண்டியதில்லை. மனநெகிழ்ச்சியோடு தோத்திரஞ் செய்வதுதான் வழிபாடு" என்றார்கள். வெடியும் மனத்தைப் பிரமிக்கும்படியான சப்தத்தைத் தருவதால் தேங்காய் உடைப்பது முதலியனவும் வேண்டியதில்லையென்று, இப்படிப்பட்ட ஆரவாரச் செய்கைகளெல்லாம் (ஐயா அவர்கள்) தடை செய்துக் கொண்டிருந்தார்கள்.

162. உபதேசம் — அனுஷ்டான முறை

திருவருட் பிரகாச வள்ளலார் கையெழுத்து — தொழுவூர் வேலாயுத முதலியார் புத்தகத்தில் எழுதியிருந்தது.

அருட்பெருஞ்ஜோதி

டபுருவமத்தியில் வெண்டாமரை மலர் மலர்ந்திருப்பதாக, அதன் மத்தியில்,  இந்த வடிவமாய், ஒரு பீடம் இருப்பதாக, அதன் மத்தியில் அசையாது விளங்குகின்ற ஒரு தீபம் இருப்பதாக அந்தத்தீப நடுவில், கடவுள் இருப்பதாகப் பாவித்துக்கொண்டு 'சிவாயநம' என்று நாவசையாமல், நிலைக்கவேண்டும். சுத்த சன்மார்க்க யோகமாதி சித்தியெல்லாம் கிடைக்கும்.

இதை நம்ப வேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி

163. பிரார்த்தனை

ஒருவன் பிரார்த்தனை செய்வதில் அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல. இந்த உலகமெலாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால், அதில் ஒருவனுக்கு வேண்டியவை எல்லாம் அடங்கிவிடுகின்றன. பிரார்த்தனை செய்யவேண்டுமாகில் இப்படித்தான் செய்யவேண்டும்.

" பாதி இரவி லெழுந்தருளிப் பாவியேனை யெழுப்பியருட்
ஜோதி யளித்தென் னுள்ளகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி நடஞ்செய் போன்ப நிதிநான் பெற்ற நெடும்பேற்றை
ஓதி முடியா தென்போலிவ் வுலகம் பெறுதல் வேண்டுவனே.
(6-ந் திருமுறை—பக்கம். 129.)

என்பதே என் பிரார்த்தனை யாகும்.

164. தீகைஷ

தீகைஷ என்பது யாதெனில் :— தீ — மலம், கைஷ — ஒழிவு
தீகைஷ — மல ஒழிவு.

165. தமிழ்.

தமிழ் என்பது :— த் — அ; — ம் — இ; — ழ்; என்னும் ஐந்து அலகு நிலை யுடைத்து.

த், ம், ழ் :— ஜட சித் கலை.

அ, இ :— சித் கலை.

அ — அகண்டாகார சித்தை விளக்கும் ஓங்கார பஞ்சாக்கரத்துள் பதிநிலை யக்கரமாம்.

இ — பதியை விட்டு நீங்காத சித்தை விளக்கும் வியவகாரத்தால் அனந்தாகார வியஷ்டிபேதங் காட்டும் ஜீவ சித்கலை யக்கரமாம்.

பதி—சிதாத்ம கலைகளுக் காதாரமாகி உயிரினுக்குடலை யொத்துக் குறிக்கப்படும்.

த், **ம்**, **ழ்** எழுத்துக்களுக்கு உரை :—

த் — ஏழாவது மெய் ;

ம் — பத்தாவதாகும் ;

ழ் — 15-வது இயற்கை யுண்மைச் சிறப்பிய லக்கரமாம்.

ஐந் தலகு நிலையும், உபய கலை நிலையும், மூன்று மெய் நிலை யும், அமைந்துள்ளதும், சம்பு பக்ஷித்தாரால் அனுதியாய் — சுத்த சித் தாந்த ஆரிஷ ரீதிப்படி கடவுள் அருளாணையால் கற்பிக்கப்பட்டதும் — எப்பாஷைகளுக்கும் பிதுர் பாஷை யென்று ஆன்றோர்களால் கொண்டாடப் பட்டதும்,—இனிமை யென்று நிருத்தம் சித்திக்கப் பெற்றுள்ளதுமான,

தமிழ் என்னும் இயற்கை யுண்மைச் சிறப்பியல் மொழிக்குச் சுத்த சித்தாந்தப் பத உரை :—

த் — **அ** = **த** :—

த் :— **த**த்வரூபாதி, சிவபோ காந்தமான, தசகாரிய இயற்கை யுண்மைக் கட்டளை நிலையில், முன் அலகு நிலைப்பொருள் கூறிய விடத்துக் குறித்த ஏழாவது நிலை யாகிய த் என்பது சிவ ரூப இயற் கைபுண்மைக் கட்டளையாம்.

அ :— **அ**கண்டாகார சித்கலா ரூப ஓங்காரத் துட் பொருட் பிரதம விலக்கிய வியக்தி யக்கரம். பன்னீருயிர் நிலையிற் றலையாய முத லக்கர மாதலில், அதுவே பிர மாதி பரசி வாந்த நவ நிலைக்கும் அநுதி யாதி காரணமாயுள்ள இயற்கை யுண்மைப் பரி பூரணப் பொருளி லக்கரம். என்னவே, சிவ ரூப மாகும். தக ராகா சத்தில் சுத்த சிவமாகும் அருட் ஜோதி யினைந்துள்ள பூரணைனந்த ஸ்வரூப பரபதி வியக்த மாயிற்று.

ம் — **இ** = **மி** :—

சிங்கார ப்ரணவமாகிய,

மிகாரம் — மூக்தான் மாக்களுக்கு ஒளிவண்ணச் சதானந்த மாயும், — பெத்தான்மாக்களுக்கு இருள்வண்ண மலரூபமாயும், —

இருந்து, கற்பாந்தப் பிரளய முடிவின் சிருஷ்டி திதி யாதிகளில் சிதான்ம சக்தியாகிய ஜீவனுக்கு, அதிகரணமாகவும் — முற்குறித்த பத்தாவது நிலயமாகிய ஆன் மாதார மாகியு முள்ள தெனப் பொருளாம்.

இ — பன்னீ ருயிர் நிலைகளில் மூன்றும் நிலையுபிராகிய இகாரம், திரிகலா ஆன்ம வருக்கத்தில் அபரமாகிய சகலாகலரையும், பரமாகிய பிரளயாகலரையும் கீழ்ப்படித்தி அவ்விரு கூட்டத்தாருக்கும் மேற்பட்டு நின்ற சுத்த விஞ்ஞானகலாகிய சிதாத்மாக்களைச் சுட்டுகின்ற தாம். என்னவே, ஆதார ஆதேபக் கூட்டுறவால் என்றுந் தோன்றி விளங்கும் சிதான்ம வருக்கங்கள் பரபதி லக்ஷியமாகிய பூரணனந்தத் திற்கு அனுபவிகளாக வுரியவர்களெனக் குறிக்கொள்ளல் வேண்டும்.

ழ் :— இந்தச் சிறப்பிய லக்கரம் பதினெண் மெய்களில் பக்ஷ முடிபின் எண் குறிப்பில் நின்று, சிவயோக பூமியாகிய — பரதகண் டத்தில் பௌராணிக தத்துவத்தாற் குறிக்கப்பட்ட ஐம்பத்தாறு தேசங்களுள் சுதேசந் தவிர மற்ற ஐம்பத்தைந்து தேச பாஷைகளிலு மில்லாததாயும் பதினெண்ணிலமாகக் குறிக்கப்பட்ட செந்தமிழ், கொடுந் தமிழ் என்னும் இருமைக்கும் ஒற்றுமை யுரிமையாயும், முத்துறைத் தமிழுக்குள் முதன்மைத் துறையானதும், இருக்கு யஜுர் சாமமென்னும் சடல்கிருதீவதத் திரயப் பொருள் அனுபவத்தை யெளிதில் கற்று ணர்ந்து தெளிந்து அனுபவித்தற்குப் பரமேசுரனது திருவருளைப் பஞ் சாக்ஷர முத்தொழிற் சாரியமான பஞ்சதசாக்கரியால் பிரத்தியக்ஷானுப வம் சித்திக்கச் செய்யும் நிலயமானதும், ஸ்ரீ மணிவாசகர், சம்பந்தர், நாவரையர், சுந்தரர், திருமூலர் முதலிய மகாபுருஷர்களால் சாத்திர தோத்திரங்களாக அருளிச்செய்யப்பட்டிருக்கும் திருவாசகம், தேவாரம், திருமந்திரம் என்னும் பரமார்த்த ரகசியங்களை யுடையதும், — பலகாள் நைஷ்டிக அதிகரணம் பூண்டு போதகாசாரியர் சந்நிதியில், தாழ்ந்து சகபாடிகளோடு சூழ்ந்து, சுர, ஒலி பேதங்களைத் தேர்ந்து, உழைப் பெடுத்து ஓதிணலும், பாடமாவதற்கு அருமையாயும், பாடமாணலும், பாஷியம் வியாக்கியானம் டீக்கா டேக்கா டிப்பணி முதலிய உரை கோள் கருவிகளைப் பொருள் கொள்ளத் தேடவேண்டியதாயும், அவ்வகைகளை யும் தேடிக் கைவரினும் அக்கருவிகளால் போதகம் பெறவேண்டியதற் குப் பாஷியகாரர்கள், வியாக்கியான கர்த்தர்கள், டீக்கா வல்லபர்கள், டேக்கா சூசகர்கள், முதலிய போதக, உப போத காசாரியர்கள் கிட்டு வது அருமையில் அருமையாயும் இருக்கிற, ஆரியம், மகாராட்டிரம், ஆந்திரம் என்ற பற்பல பாஷைகளைப் போலாகாமல் — பெரும்பாலும் — கற்பதற்கு, — எண்ணளவு சுருக்கமாயும், — ஒலி யிலேசாயும், — கூட் டென்னுஞ் சந்தி அதிசுலபமாயும், — எழுதவும் கவிசெய்யவும், மிக நேர்

மையாயும், — அக்ஷர ஆரவாரம், சொல்லாடம்பரம், போது போக்கு, பெரு மறைப்பு, முதலிய பெண்மை அலங்கார மின்றி எப்பாஷையின் சந்தசுகளையும் தன் பாஷையுள்ளடக்கி ஆருகையால் ஆண்தன்மையைப் பொருந்தியதுமான, — தற்பாஷைக்கே அமைவுற்ற ழ் — ற் — ன் என்னும், முடி — நடு — அடி சிறப்பிய லக்கரங்களில், முடிநிலை இன்பானுபவ சுத்த மோனுதீதத்தைச் சுட்டறச்சுட்டும் இயற்கை யுண்மைத் தனித் தலைமைப் பெருமைச் சிறப்பிய லோலியாம்.

உரை கூறிப் போந்த சுத்தசித்தாந்த ஆரிடரீஷ முப்பத வுரைப் பொழிப்பு :—

மருளியற்கை மலஇருளைப் பரிபாக சத்தியால் அருளொளி யாக்கி, அதற்குள்ளீடான சிதாத்ம சிற்கலாசத்தியென்னும் சுத்த ஆன்மாவை தகர — ககன — நடன — அருட்பெருஞ்ஜோதி யென்னுஞ் சுத்த சிவானந்த பூரணத்தை சுத்த மோனுதீத வியலால் அனுபவிக்கும் இயற்கையுண்மையே தமிழ் என்னும் சொற்பொருள் சுட்டினவாறு காண்க.

இதன் கருத்து யாதெனில் :— தமிழ்ப் பாஷையே அதி சுலபமாகச் சுத்த சிவானுபூதியைக் கொடுக்கு மென்பதாம்.

திருவருட்பா — 4-வது — திருமுறை (பக்கம் — 153).

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

இலக்குள நீ ரழைத்ததனி *லிடங்கருற வழைத்த தன்வாய்த்
தலைக்குதலை மதலையுயிர் தழைப்பவழைத் தருளிய நின்
கலைக்கும்வட கலையின்முதற் கலைக்குமுறு கணைக்குயர்பொன்
மலைக்குமணு நிலைக்குமுரு வன்றெண்டப் பெருந்தகையே.

* இடங்கர் என்பது — முதலை.

166. அகாரம்



1. விந்து — பெரிய வெளிச்சம், சூரிய வெளிச்சம்.
2. நாதம் — பெரிய நாதம்.
3. பரவிந்து — அதில் பாதி வெளிச்சம், சந்திர வெளிச்சம்.
4. பரநாதம் — நாதம்.
5. அபரவிந்து — வெளிச்சம், நக்ஷத்திர ஒளி.
6. அபரநாதம் — நாதம்.
7. திக்கிராந்தம் — அருகிய வெளிச்சம், மின்னல் ஒளி.
8. அதிக்கிராந்தம் — சப்தம்.
9. வாமசத்தி.
10. ஜ்யேஷ்ட சத்தி.
11. ரௌத்திரி சத்தி.
12. காளி சத்தி.

167. அகரத்தைப்பற்றிய விளக்கள்*

பலவர்கள் பலர், அகங்காரத்தால் தம்மை மதியாது இயலறியாது எழுதியவாறே, — புலமையிற் பெரியோ மென்னுஞ் செருக்கின்றி, — அறிவறிந்தடங்கியாரிற் சிலர், எழுதியவற்றிற் சில சில இடங்களில் வழுவினர். இவ்வழுக்கள் செருக்கால் வழுவியதன்று. விசாரத்தாலுஞ் சிவானுபவ மேலீட்டாலும் வழுவியது. இவற்றைத் — தேவாரந் திருவாசக முதலிய உண்மை முறைகளிற் காண்கின்றேம். இக்காலத்து எமது ஆசிரியரை வணங்கி,

"ஐயரே! தேவரீர் எழுதிய சில வாசகத்தினுஞ் செய்யுளினுங் கருத்துக்கு விளங்கப் புலப்படாமை மயக்குகின்ற சொற்றொடர்கள் சில வுளவென்று எமது மாட்டாமையாற் றேன்றுகின்றது: இதற்கு யாது செய்வேம்?"

என்று விண்ணப்பஞ் செய்ய, அவர்,

"ஐய! நீர் அஞ்சற்க. யாம் எழுதிய வாசகத்தினுஞ் செய்யுளினும் அளவிறந்த குற்றங்களிருக்கின்றன: என் செய்வேம்! விசாரவசத்தால் ஆங்காங்குந் தவறினேம். அதனைப் பெருங்கருணையுள்ள எமது கடவுள் மன்னிப்பர். மற்றைபரு மன்னித்தல் வேண்டும். யாம் யார்? எமக்கு யாது தெரியும்? புழுவினுங் கடைய புலையரிற் சிறியேம். இதனல் காணுதலுடையேம்"

என்றனர். ஐயர் புகன்ற மாற்றம் எவ்வாறென் றெண்ணிநிற்குந் தருணத்து, எம்மை ஆண்டு இருக்கப் பணித்து மீட்டுஞ் சொல்லுவர்:—

---

* சுவாமிகளுக்கு ஆட்பட்ட சமரச வேத சன்மார்க்க சங்கத்து அறிஞர்களில் ஒருவராகிய, ஆனந்தநாத சண்முக சாமிலய சுவாமிகள் எழுதியவற்றுள் கண்டது.

"அகரவுயிர் என்பது யாது?

அகர உயிர்க்கு :—

1. வரி வரலாற்றின் இலக்கணம் என்னை ?
2. ஒலி வரலாற்றின் இலக்கணம் என்னை ?
3. தன்மை வரலாற்றின் இலக்கணம் என்னை ?
4. உணர்ச்சி வரலாற்றின் இலக்கணம் என்னை ?

அதன்,

5. உண்மை யனுபவ விலக்கணம் என்னை ?

அகர வுயிர்க்கு,

6. வரி உரு இலக்கணம் என்னை ?
7. ஒலி யுரு விலக்கணம் என்னை ?
8. தன்மை யுருவி னிலக்கணம் என்னை ?
9. உணர்ச்சி யுருவி னிலக்கணம் என்னை ?
10. உண்மை யனுபவ வுருவி னிலக்கணம் என்னை ?

அகர வுயிரின்,

11. வரிச் சொரூப இலக்கணம் என்னை ?
12. ஒலிச் சொரூப விலக்கணம் என்னை ?
13. தன்மைச் சொரூப விலக்கணம் என்னை ?
14. உணர்ச்சி சொரூப விலக்கணம் என்னை ?
15. உண்மை யனுபவச் சொரூப விலக்கணம் என்னை?

அகர வுயிர்க்கு,

16. வரிச் சுபாவ இலக்கணம் என்னை ?
17. ஒலிச் சுபாவ விலக்கணம் என்னை ?
18. தன்மைச் சுபாவ விலக்கணம் என்னை ?
19. உணர்ச்சிச் சுபாவ விலக்கணம் என்னை ?
20. உண்மை யனுபவச் சுபாவ விலக்கணம் என்னை ?

அகர வுயிரின்,

21. வரிச் செயற்கை இலக்கண மென்னை ?
22. ஒலிச் செயற்கை யிலக்கண மென்னை ?
23. தன்மைச் செயற்கை யிலக்கண மென்னை ?
24. உணர்ச்சிச் செயற்கை யிலக்கண மென்னை ?
25. உண்மைச் செயற்கை யிலக்கண மென்னை ?

அகர வுயிரின்,

26. வரி அதிகார இலக்கணம் என்னை ?
27. ஒலி யதிகார விலக்கணம் என்னை ?
28. தன்மை யதிகார விலக்கணம் என்னை ?
29. உணர்ச்சி யதிகார விலக்கணம் என்னை ?
30. உண்மை யதிகார விலக்கணம் என்னை ?

அகர வுயிரின்,

31. வரிப் பொது இலக்கணம் என்னை ?
32. ஒலிப் பொது விலக்கணம் என்னை ?
33. தன்மைப் பொது விலக்கணம் என்னை ?
34. உணர்ச்சிப் பொது விலக்கண மென்னை ?
35. உண்மைப் பொது விலக்கண மென்னை ?

அகர வுயிரின்,

36. வரிச் சிறப் பிலக்கணம் என்னை ?
37. ஒலிச் சிறப் பிலக்கணம் என்னை ?
38. தன்மைச் சிறப் பிலக்கணம் என்னை ?
39. உணர்ச்சிச் சிறப் பிலக்கணம் என்னை ?
40. உண்மைச் சிறப் பிலக்கணம் என்னை ?

அகர வுயிரின்,

41. வரிக் குண விலக்கண மென்னை ?
42. ஒலிக் குண விலக்கண மென்னை ?
43. தன்மைக் குண விலக்கண மென்னை ?
44. உணர்ச்சிக் குண விலக்கண மென்னை ?
45. உண்மைக் குண விலக்கண மென்னை ?

என்பன முதலாக இவ் அகர உயிர் ஒன்றற்கே இன்னும் பற் பல இலக்கண நியாய விசார விஞக்கள் உளவாயின், எம்போல்வா ருணர்ச்சிக்கண் அவ்விஞக்களுக்கு விடை யெங்ஙனந் தோன்றும் ? ஓரெழுத்திற்கே யிங்ஙனமாஞல், பற்பல வெழுத்துக்களுக்கும், அவ் வெழுத்துக்களா லாகிய சொற்களுக்குஞ், சொற்பொருள்களுக்கும், விடை கொடுப்பது எங்ஙனம் ? ஆகலில், கற்றே மென்னுஞ் செருக்கை முழு தும் விடுத்து, விசார வசத்தராகிச் சிவபெருமான் திருவருளைச் சிந்தித் திருத்தல் வேண்டும்" என்று எம்மை யோர் பொருளாகக் கருதி, இரக் கத்தால் இசைத்தனர். ஆகலின், கல்வியிற் செருக்கடைதல் எவ்வாற் ருனும் பொருந்தாது.

168. இலக்கண வியனடை வழக்கப்பா நூறுத்துவிக்கும் பத்திரிகை*

அருட்பெருஞ்ஜோதி

உணர்ந்தோரானியில் வகையவின்ன வென்றவற்றிற் பின்மொழி மதிக்கு முன்மொழி மறைக்கு முத லீறு விளங்க முடிப்பதாய பின்மொழி யடை சார் முன்மொழி ஞாங்கர் விளங்கிய ஞானிகட்கு:—

பொய்யற் கெதிர்சார்புற்ற மூலியொன்று வளைத்து வணக்கஞ் செய்த ககன நீரெழிலென்றும், வான் வழங்கு பண்ணிகாரமென்றும், நாகச்சுட்டு மீனென்றும் வேறு குறிப்ப தொன்று.

அண்மைச் சுட்டடுத்த வேழாவதன் பொருண்மை யும்மையடுத்த பல்லோர்விளைப் பெயர்ப் பொருள் குறிஞ்சி யிறைச்சிப் பொருளொன்றேடு புணர்ப.

சேய்மைச் சுட்டடுத்த வத்திறத்தியல் யாது?

இரண்டனுருபொடு புணர்ந்த தன்மைப் பன்மை யாழுவதன் பொருட்டாக்கிளர்க் குய்த்த கற்பிய லதிகரிப்பின் வருந் தலைமகட் பெயர விரண்டனேழு டிரண்டிரண்டுகக் கழி விலைப் பெயரவு மாகார வீற்று முதனிலைத் தனிவினைச் செய வென் வாய்ப்பாட்டு வினையெச்சத்தனவாகக் கலம்பகச் செய்பு னூறுப்பாற் சிறத்தும்.

இருவகை முதற்பொருளொன்றன் பாகுபாட்டுரப்பிற் குறித்த, வைம்பெரும் பூதத்தோர் விசேடனைத் தெதிர்மறை நடுக்குறை யியற்சொற் பெயர வுயிர்ப் பெயராக வெதிர்காலங் குறித்து நின்றது.

சில வினைச் சார்பான், விலங்கு சூடிய வரையில் வெளியாம்.

---

* இப்பத்திரிகை, இலக்கண வித்வான்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடியது.

இதலே டீரிருவகைப்பட்ட வோர்சார் புதுநிலஞ் செல வுய்த்தனம்.

வேண்டுழி வேண்டியாங் குய்க்க. மற்றைய பின்னர் வரைதும்.

இற்றே விசும்பிற் கணைச்சலம்.*

இங்ஙனம்:

நங்கோச்சோழன் வீரமணிச்

பார்வதிபுரம்
சுக்கில வரு
துலாரவி உஎ

சூடியார் திருவாணைப்படிக்கு அடிமை

தொழுவூர் வேலாயுதம்.

குறிப்பு:—

இப்பத்திரிகை, மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் மடத்தில், திருவருட் பிரகாச வள்ளலார் ஐக சகாப்தம் 2-ல் நிகழா நின்ற விபவவரு ஆவணிமீ த்தில், திருக்கழுக்குன்றம், திருச்சிற்றம்பல ஞானிகள் போயிருந்த தருணத்தில், கடந்த அகூய வருத்தில் கருங்குழி புருஷோத்தம ரெட்டியார், தன் வீட்டிலிருந்து கோபத்தால் மதுரைக்குப் போயிருந்த தருணத்தில் ஷை யாரை யுபசரித்து, இவ்விடம் அனுப்ப வேண்டுமென்று ஷை மடத்து சுவாமி களுக்கு சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை யவர்களால் அனுப்பப்பட்ட கடிதத் தால், — ஒருதருணம் நாவலர் மனுஷியர்களி லங்கிருந்த சிலர், "திருவருட் பிரகாச வள்ளலார் விஷேச வித்வானென்று சொல்லுகிறார்களே, — அவருடைய படிப்பு இலக்கணமில்லாப் படிப்பு," — என்று சொல்லக் கேட்ட, திருச்சிற்றம் பல ஞானியார் புகன்றது, — "அவர்களால் விவகரிக்கும் விவகாரத்தில் சிறிய இலக்கணத்தின் மொழிகளில் கோடியிலொருகூறு இவ்வுலகிலிருக்கிறது" என்று வாதிக்க — அம்மடத்து சுவாமிகள், "அப்படியாகில் நந்த சுவாமிகளா லிலக்கண விதிப்படி யொரு கடித மனுப்பும்படி கேட்டு வருவிக்க வேணும்," என்று கேட்டுக்கொண்டபடி — ஷை ஞானி, இவைகளைக் குறியாமல் சன்னிதானத்துக் கொரு கடித மனுப்பினர். — ஷை கடிதத்திலில் இவ்விடத்திய சுகுணங்களையும் அற்புதங்களையும் இலக்கணவகையாம் றனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று பிரார்த்தித்ததால், — அதன் பொருட்டெழுதி விடுத்த பத்திரிகை.

இலக்கண பத்திரிகை — ஆறுமுக முதலியார் வேலாயுத முதலியா ரிவர்கள் குடியிருந்த முகப்பிலிருந்து அய்யா அவர்களாற் சில வரியும், மற்றை ஆக்ஞையின்பேரில் வேலாயுத முதலியாராலும் எழுதியது.

இக்குறிப்பில் கண்ட "நாவலர் மனுஷியர்களி லங்கிருந்த சிலர்" என்பவர்கள் கணக்கி லவதானி தேவி பட்டினம் முத்துசாமி பிள்ளையைத் தலைமையாகக் கொண்ட சிலர் என்றும், இந்த இலக்கணத் திருமுகத்தைத்

திருச்சிற்றம்பல ஞானியார் பெற்றபின், மடத்துச் சுவாமிகள் அதைக் கணக்கிலவ தானியார்க்குக் காண்பிக்க, அவர்க்கு அதன் பொருள் விளங்காமையால் தாம் எழுதும் ஒரு கவிக்குச் சுவாமி களிடமிருந்து உரை தருவிக்க வேண்டு மென்று வாதித்து,

கணக்கிலவதானி தேவிபட்டினம்

ஸ்ரீ முத்துசாமி பிள்ளை எழுதியது

வெண்பா

தகர வரிக்குழல்கா மாதியைந்திற் றங்கும்
தகரவரி நாலைந்து சாடும் — தகரவரி
மூவொற்றி யூற்பதங்கள் மூன்றுமங்கை யேந்துமொரு
சேவொற்றி யூர்பதத்தைச் சேர்.

என்ற வெண்பாவை அமைத்துக் கொடுத்தார் என்றும், அதை ஞானியார் அனுப்பி வேண்டிக் கொண்டபடி சுவாமிகள் அதற்கு அவதானியார் கருதிய உரையையும், அவர் கருதப் பெறுத தத்துவ சம்பந்தமான அரிய உரை ஒன்றையும், வரைந்து விடுத்தனர். இவற்றைக் காணப்பெற்ற அவதானியார், அந்த நாள் முதல் அவர் ஆயுள்காலமுழுவதும் சுவாமிகள் திருவடிகளுக்கு ஆட்பட்டு வழிபாடு செய்து வந்தனர்.

---

169. வேதாந்த தேசிகர் குறட்பா*

குறட்பா

மூன்றி லொருமூன்று மூவிரண்டு முந்நான்குந்
தோன்றத் தொலையுந் துயர்.

இதற்கு உரை :—

1. பௌராணிக மத சித்தாந்தம் யாதெனில் :—

மூன்றில் — பறவையில், — கருடனில்,
ஒரு மூன்று — திரிமூர்த்தி சொரூபராகிய எம்பெருமான், விண்டு,
மூ விரண்டு — 6 : ஷட்குணம், ஷாட்குண்ணிய பரிபூரணராய — கன்னி,
திருமகளென்னும் பிராட்டியாரோடு,

---

* இஃது, உபதேசம் விரும்பிய ஓர் வடகலை வைணவர்க்குச் சுவாமிகள் வேதாந்த தேசிகர் இயற்றிய குறட்பாவுக்கு உரை விளக்கியவாறு எனத்தெரிகிறது.

மூந் நான்கு — 12, துவாதச அடியார்களாகிய ஆழ்வாராதிகள் சூழ,

மூன் னைந்து — 5, ஸ்ரீமத் பஞ்சாயுதபாணியாக,

தோன்ற — சேவை சாதிக்க,

தோலையுந் துயர் — துன்பம் நீங்கும்.

இதன் கருத்து :—

பறவை யென்னுங் கருடாழ்வான்மீது, திரிமூர்த்தி சொரூபராகிய எம்பெருமானுகிய விண்டு, ஷாட்குண்ணிய பரிபூரணராய்த் திருமகளென்னும் பிராட்டியாரோடு, துவாதச அடியார்களாகிய ஆழ்வாராதிகள் சூழ ஸ்ரீமத் பஞ்சாயுத பாணியாக எழுந்தருளி, கல்யாணகுணத்துடன் சேவை சாதிக்க, நமது துன்பங்கள் தோலையும்.

அன்றி,

2. அத்துவைதம்

மூன்றில் — (1) காரணம், (2) சூக்குமம், (3) தூலம் என்கிற மூன்று தேகத்தினுள்,

ஒரு மூன்று — (1) காரண தேகத்திற் குரிய — மூன்று தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும்,

மூ விரண்டு — (2) சூக்குமதேகத்திற் குரிய — ஆறு தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும்,

மூந் நான்கு — (3) ஸ்தூல தேகத்திற்குரிய — பன்னிரண்டு தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும்,

தோன்ற — ஐயந் திரிபு மயக்க மின்றித் தோன்ற — அத்தருணத்தே,

துயர் — பிறவித் துன்பம்,

தோலையும் — நீங்கும்.

இதன் கருத்து :—

காரணம், சூக்குமம், தூலம் என்கிற மூன்று தேகத்தினுள், காரண தேகத்திற் குரிய மூன்று தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும், சூக்கும தேகத்திற் குரிய, ஆறு தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும், ஸ்தூல தேகத்திற்குரிய பன்னிரண்டு தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும், ஐயந் திரிபு மயக்க மின்றித் தோன்ற, அத்தருணத்தே பிறவித் துன்பம் நீங்கும்.

அன்றி,

3. சிவாத்துவைதம்

ஒரு மூன்று மூவிரண்டு முந்நான்கு — 3, + 6, + 12 ; = (21) இரு பத்தொன்றினை,

மூன்றில் — மூன்றில், — கொடுக்க வந்த தொகையாகிய (21 ÷ 3) = 7, (1) காலம், (2) நியதி, (3) கலை, (4) புருடன், (5) மாயை, (6) ராகம், (7) வித்தை யென்னும் — ஏழு தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும்,

தோன்ற — சந்தேகம், விபரீதம், அஞ்ஞானம் அறத்தோன்ற,

தொலையுந்துயர் — துயர் தொலையும்.

இதன் கருத்து :—

3 + 6 + 12 ; = 21 இருபத்தொன்றினை, மூன்றில், — கொடுக்க வந்த தொகையாகிய (21 ÷ 3 =) 7, — (1) காலம், (2) நியதி (3) கலை, (4) புருடன், (5) மாயை, (6) ராகம், (7) வித்தை யென்னும் — ஏழு தத்துவங்களின் சொரூப ரூப சுபாவங்களும், சந்தேகம்; விபரீதம், அஞ்ஞானம் அறத்தோன்ற துயர் தொலையும்.

அன்றி,

4. விசிஷ்டாத்துவைதம்

மூன்றில்—சித்து, அசித்து, சிதசித்து என்கின்ற தத்துவத் திரயங்களில்,

ஒரு மூன்று—(1) சித்தினிடத்து — இச்சை, அறிவு, தொழில் என்கின்ற மூன்று குணங்களும்,

மூவிரண்டு—(2) அசித்தினிடத்து — மயக்கமின்மை 1, திரிபின்மை 2, ஐயமின்மை 3, விசித்திரமின்மை 4, அசுத்தமின்மை 5, விகாரமின்மை 6, என்கின்ற ஆறு குணங்களும்,

முந்நான்கு—(3) சிதசித்தினிடத்து — அறிவு 1, கருணை 2, அன்பு 3, வாய்மை 4, நிராசை 5, தூய்மை 6, நிறைவு 7, ஒழுக்கம் 8, பொறை 9, செப்பம் 10, சால்பு 11, மறதியின்மை 12, என்கின்ற பன்னிரண்டு குணங்களும்,

ஆகக்கூடி சித்து அசித்து சிதசித்து என்னும் மூன்றின் குணங்களாகிய இருபத் தொன்றின் சொரூப ரூப சுபாவங்கள் ஐயந்திரிபு மயக்க மின்றி,

தோன்ற — விளங்க,

துயர் தொலையும் — துன்பமாகிய சகல கேவலங்கள் நீங்கும், சுத்தராவோம்.

இதன் கருத்து:—

சித்து, அசித்து, சிதசித்து என்கின்ற தத்துவத் திரயங்களில், I சித்தினிடத்து — இச்சை, அறிவு, தொழில் என்கின்ற மூன்று குணங்களும்; II அசித்தினிடத்து — மயக்கமின்மை 1, திரிபின்மை 2, ஐபமின்மை 3, விசித்திரமின்மை 4, அசுத்தமின்மை 5, விகாரமின்மை 6, என்கின்ற ஆறு குணங்களும்; III சிதசித்தினிடத்து — அறிவு 1, கருணை 2, அன்பு 3, வாய்மை 4, நிராசை 5, தூய்மை 6, நிறைவு 7, ஒழுக்கம் 8, பொறை 9, செப்பம் 10, சால்பு 11, மறதியின்மை 12, என்கின்ற பன்னிரண்டு குணங்களும். ஆகக்கூடி சித்து அசித்து சித சித்து என்னும் மூன்றின் குணங்களாகிய இருபத்தொன்றின் சொரூப ரூப சுபாவங்கள் ஐயந் திரிபு மயக்க மின்றி விளங்க, துன்பமாகிய சகல கேவலங்கள் நீங்கும், சுத்தராவோம்.

170. பொன் வண்ணத் தந்தாதி

பாசுரம்

கட்டளைக் கலித்துறை

வேதியன் பாதம் பணிந்தேன்
பணிந்துமெய்ஞ் ஞானமென்னுஞ்
ஜோதியென் பாலுற வுற்றுநின்
றேற்கின்று தொட்டிதுவே
நீதியென் றுன்செல்வ மாவதென்
றேன்மே னினைப்புவண்டா
ரோதிநின் போல்வகைத் தேயிரு
பாலு மொழித்ததுவே. *

* சேரமான் பெருமாள் நாயனார் பொன்வண்ணத் தந்தாதி, 22-ம் பாசுரம்.

வியாக்கியானம்

வேதியன் — சத்தார்த்த லக்ஷிபகிய இறைவனது,

பாதம் — திருவடிகளை,

பணிந்தேன் — வணங்கினேன்,

பணிந்து — பணிந்து (திருவருட் சமூகத்தில் நின்ற யான் அவனுல் கடைக்கணிக்கப் பெற்றதனுல்),

மெய்ஞ்ஞான மென்னும் ஜோதி — மெய்யறி வென்னும் இயற்கை விளக்கமாகிய அவ் விறைவனது ஆண்பால் வடிவம்,

என்பா லுற — ஆண்ம சத்தி விளக்கமாகிய எனது பெண்பாலிற் கலக்க,

உற்று நின்றேன் — ஐக்கி யானுபவம் பெற்று நின்றேன்,

(நின்றேற்) கு — அங்ஙனம் நின்ற என்னை, இறைவன் மீட்டுங் கடைக் கணித்து,

இன்று தொட்டே — இது பொழுது தொடங்கி,

இதுவே — இவ் வனுபவ ஒழுக்கமே,

நீதி யென்றுன் — நீ யனுபவிக்கின்ற ஒழுக்கமாகுக என்று திருவாய் மலர்ந் தருளினன். (பாலும்),

செல்வ மாவ தென்றேன் — அடைதற்குரிய திருவருட் செல்வ மிங்ஙன மாவ தென் றங்ஙனமே நின்றனன்,

மேல் — அதன் பின்னர்,

நினைப்பு — இருவகைப் பாலினும் கவர்பட நின்ற எனது நினைவு,

வண் டா ரோதி — வண்டு மொய்க்கின்ற இயற்கை மணம் வீசும் அளகத்தை யுடையாய்!

நின் போல் வகைத்து (ஏ) — இறைவனது அனுபவ விருப்பம் பற்றி வந்த தாப விசேடத்தாற் பெண்பாற் குரிய நாணத்தை விடுத் துப் பலருங் கேட்கத் தூது செல்லுதியென்று, என்னை வருந்தி யேவுதலால், ஊக்க முதலிய வுடைய ஆண்பாற் றன்மை அவையின்றிய நின் பெண்பாற் றன்மையிற் கலக்கப்பட் டிருபாலு மொழித்து நின்ற நின் வண்ணம் போன்றதாய்,

இரு பாலும் — ஆண்பால் பெண்பால் என்னும் இருபாலினிடத்துஞ் செல்லுகை,

ஒழித்தது (எ) — நீங்கிற்று.

ஆகலில் நீயும் புறத்தே என்னை ஒப்பாயாக.

இதன் கருத்து:—

சத்தார்த்த லகூபகெய இறைவனது திருவடிகளை, வணங்கினேன். பணிந்து (திருட் சமுகத்தில் நின்ற யான் அவனுல் கடைக் கணிக்கப் பெற்றதனுல்), மெய்யறிவென்னும் இயற்கை விளக்கமாகிய அவ் விறைவனது ஆண்பால் வடிவம், ஆன்ம சத்தி விளக்கமாகிய எனது பெண்பாலிற் கலக்க, ஐக்கியானுபவம் பெற்று நின்றேன். அங்ஙனம் நின்ற என்னை இறைவன் மீட்டுங் கடைக்கணித்து, "இது பொழுது தொடங்கி, இவ்வனுபவ ஒழுக்கமே, நீ யனுபவிக்கின்ற ஒழுக்கமாகுக" என்று திருவாய்மலர்ந்தருளினன். யானும், அடைதற் குரிய திருவருட் செல்வ மிங்ஙன மாவ தென் றங்ஙனமே நின்றனன். அதன் பின்னர், இருவகைப் பாலினுங் கவர்பட நின்ற எனது நினைவு, "வண்டு மொய்க்கின்ற இயற்கை மணம் வீசும் அளகத்தை யுடையாய்! இறைவனது அனுபவ விருப்பம் பற்றி வந்த தாப விசேடத்தாற் பெண்பாற்குரிய நாணத்தை விடுத்துப் பலருங்கேட்கத் தூது செல்லுதி யென்று என்னை வருந்தி வேண்டுதலால் ஊக்க முதலிய வுடைய ஆண் பாற் றன்மை, அவை யின்றிய நின் பெண்பாற் றன்மையிற் கலக்கப் பட்டிருபாலும் ஒழித்து நின்ற நின் வண்ணம் போன்றதாய், ஆண் பால் பெண்பால் என்னும் இருபாலினிடத்துஞ் செல்லுகை நீங்கிற்று. ஆகலில் நீயும் புறத்தே என்னை யொப்பாயாக".

இது சிவானந்தத்தை அகத்தே யனுபவித்த தோழி புறத்தனுபவம் விரும்பிய தலைவியை அறி வுறுத்தியது.

சோதி யென்பது சோதிப்பாலெனக் கொளற்பாலது.

171. ஜீவகாருண்ய ஒழுக்க விளம்பரம் *

அருட்பெருஞ்ஜோதி

கல்வி கேள்விகளாற் பகுத்தறியத்தக்க அறிவை யுடைய உயர் பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்ட வர்க ளனைவருக்கும் வந்தனஞ் செய்தறிவிக்கை.

உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பிலுலடையத்தக்க பிரயோசனத்தைக் காலமுள்ள போதே யறிந்து அடைய வேண்டும்.

அந்தப் பிரயோசனம் யாதோ வெனில் :—

எல்லா அண்டங்களையும், எல்லாப் புவனங்களையும், எல்லாப் பொருள்களையும், எல்லா ஜீவர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லாப் பயன்களையும் தமது பரிபூரண இயற்கை விளக்கமாகிய, அருட்சத்தியால் தோன்றி, விளங்க விளக்கஞ் செய்விக்கின்ற இயற்கை, உண்மை, வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கை யின்பத்தைப் பெற்று, எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும், தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற, பெரிய வாழ்வை யடைவதே இந்த மனிதப்பிறப்பிலுல் அடையத்தக்க பிரயோசன மென் றறிய வேண்டும்.

இயற்கை யின்பத்தைப் பெற்றுத் தடைபடாமல் வாழ்கின்ற அந்தப் பெரிய வாழ்வை எதலுல் அடைய வேண்டு மெனில் :—

கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளைக் கொண்டே அடையவேண்டு மென் றறிய வேண்டும்.

கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளை, எதலுல் பெறக் கூடு மெனில் :—

ஜீவகாருண்ய வொழுக்கத்திறற் கடவுளருளைப் பெறக் கூடுமல்லது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடா தென்று உறுதி யாக அறிதல்வேண்டும்.

---

* இஃது வடலூர், சத்திய தருமச்சாலை ஆரம்பமான தினமாகிய பிரபவவரு வைகாசிமீ 11உ வெளியிட்ட பத்திரிகை.

ஜீவகாருண்யத்தின் முக்கிய லக்ஷியமாவது எது வெனில்:—

எந்த வகையாலும் ஆதாரமில்லாத ஏழைகளுக் குண்டாகின்ற பசி யென்கின்ற பெரிய ஆபத்தை நிவர்த்திசெய்கின்றதே முக்கிய லக்ஷியமென் றறியவேண்டும்.

ஆகலில், அந்த ஜீவகாருண்ய வொழுக்கத்தை நடத்தும் பொருட்டு, கூடலூர் ஜில்லா, கூடலூர் தாலூக்காவைச் சார்ந்த வடலூ ரென்கின்ற பார்வதிபுரத்தில், சமரச வேத தருமச்சாலை, யென்றொரு தருமச்சாலை யேற்படுத்தப் பட்டிருக்கின்றது. அது பலர் சகாயத்தி னாலேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவ தயையுடைய புண்ணியர்கள், தங்கள் தங்களாற் கூடியவரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனால் வரும் லாபத்தைப் பாகஞ் செய்துக்கொள்ள வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.

பசியின் கொடுமை:—

உலக முழுதும் ஆளுகின்ற சக்கிரவர்த்தியாகிய, அரசனுக்கும், உலக முழுதும் ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க, சுத்தவீரனுக்கும், மூன் றுசைகளையும் ஒழித்து, உண்மை யறிந்து, பிரமானுபவத்தைப் பெற்ற, ஜீவன் முத்தர்களுக்கும், பசி கோரிட்டபோது, மனமினைத்தும்,—வலிகுலைந்தும்,—அனுபவந் தடைபட்டும்,—வருந்துகின்றார்களின்றால், எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப் பசி கோரிட்டால் என்ன பாடுபடார்கள்! பசி அதிகரித்த காலத்தில், முகம் புலர்ந்து போகின்றது,—உச்சி வெதும்புகின்றது,—பிரமரந்திரம் அடைபடுகின்றது,—காது கும்மென்று செவிடுபடுகின்றது,—கண் பஞ்சடைந்து, எரிந்து, நீருலர்ந்து, குழிந்து போகின்றது,—நாசி அழன்று, கலைமாறி, பெருமூச்சு விடுகின்றது,—நாக்கு நீருலர்ந்து, தடிப்பேறுகின்றது,—மெய் முழுதும் கருகி, சத்தியற்று, ஸ்மரணை கெடுகின்றது,—வாக்குக் குழறித், தொனி மாறுகின்றது,—கைகளும்,—கால்களும் தடதடத்துச், சோர்ந்து, தடுமாறுகின்றது,—மல ஜல வழி வெதும்பி, வேறுபடுகின்றது,—உரோமம் வெறிக்கின்றது,—பற்கள் கருகித், தளர்கின்றது,—இரத்தமுஞ் ஜலமும் சுவறுகின்றது,—சுக்கிலம் தன்மை மாறி வறளுகின்றது,—எலும்புகள் குழைந்து சோக்கா டாகின்றது,—நாடி நரம்புகள் வலியிழந்து, மெலிந்து, கட்டுவிடுகின்றது,—வயிறு பகீரென்கின்றது,—மனசு தளர்ந்து நினைவு மாறுகின்றது,—புத்தி கெட்டு, நிலை மாறுகின்றது,—சித்தம் கலங்கித், திகைப்பேறு

கின்றது, — அகங்காரம் குலைந்து, அச்சமுண்டாகின்றது, — பிரகிருதி சுருங்குகின்றது, — கடவுள் விளக்கமும், ஆன்ம விளக்கமும் மறைபடுகின்றது, தாபசோபங்கள் மேன்மேலுண்டாகின்றது.

இவ்வளவு அவத்தைகளும் ஏக காலத்திலுண்டாகின்றது, எல்லாச் சீவர்களுக்கும் பொதுவாகவே யிருக்கின்றது. ஆகாரமுண்டு பசி நீங்கிய தருணத்தில் தத்துவங்களெல்லாம் தழைந்து, கடவுள் விளக்கமும், — ஆன்ம விளக்கமும், — அகத்திலும், — முகத்திலும் வெளிப்பட்டு திருத்தியின்ப முண்டாகின்றது. ஆகலில், நாமனைவரும் எந்த வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப் பசி கேரிட்டபோது மிகவும் கருணையுள்ளவர்களாகி நம்மாற் கூடியமட்டில் அந்தப் பசி யென்கின்ற ஆபத்தைப் பொதுவாக நிவர்த்திப்பதற்கு முயற்சி செய்வதே ஆன்ம லாபமென்று அவசியம் அறியவேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி

---

172. திருவருட்பா முதல் நான்கு திருமுறைகளை முதல்பதிப்பு அச்சிடும்போது இனி அச்சிடுவதாகக் குறிக்கப்பட்டவை :—

1. நடராஜ நிபுணம்
2. நடராஜ விசித்திரம்
3. நடராஜ மதுரம்
4. நடராஜ அலங்காரம்
5. நடராஜ ஞான நாடகம்
6. நடராஜ ஆனந்த நாடகம்
7. சிதம்பர உபதேசம்
8. சிற்றம்பல நடனம்
9. பொன்னம்பல நடனம்
10. பொது நடனம்
11. தத்துவ நடனம்
12. ஆனந்த நடனம்
13. அதீத நிலை
14. அருள் விளக்கம்
15. மெய்ப்பொருள் விளக்கம்
16. மெய்ம்மொழிப் பொருள் விளக்கம்
17. சன்மார்க்க விளக்கம்
18. சாதன விளக்கம்
19. கலாந்த விளக்கம்
20. யோகாந்த விளக்கம்
21. காதாந்த விளக்கம்
22. போதாந்த விளக்கம்
23. வேதாந்த விளக்கம்
24. சித்தாந்த விளக்கம்
25. அண்ட விளக்கம்
26. பிண்ட விளக்கம்
27. பிரகிருதி விருத்தி
28. தத்துவ விருத்தி
29. சுத்தசிவாசியம்
30. பரசிவாசியம்
31. மந்திரக் கொத்து
32. மகாவாக்கிய வகை
33. பொதுவேதம்
34. குடும்ப கோஷம்
35. இயல்வகை
36. அளவை வகை
37. நூய வகை
38. இலக்கண விருத்தி
39. தர்க்க விருத்தி
40. தெனமொழி விளக்கம்
41. வடமொழி விளக்கம்
42. உலகியல் விளக்கம்
43. கலை மரபு

ஐயா அவர்கள் தமது அன்பர்களுக்கு

எழுதிய கடிதங்களில் கிடைத்த

173. திருநெறிக் குறிப்புகள்

கடிதம் 1 *

அருட்பெருஞ்ஜோதி

அன்பு அறிவு இரக்கம் ஈஸ்வரபத்தி, முதலிய, நற்குணங்களாற் சிறந்த எனக்கு நற்றுணையாக விளங்கிய தங்கள் சமூகத்திற்கு வணக்கஞ்செய்து வரையும் விண்ணப்பம்.

தங்கள் சுபசரித்திர விவரங்களை அடிக்கடி கேட்டு மகிழ விருப்பமுள்ளவனாக இருக்கின்றேன்.

அன்புள்ள ஐயா, தாங்கள் ஆடிமீ 16உயில் விடுத்த கடிதம் நேற்றைய தினம் வரக்கண்டு அதிலுள்ளவைகளை அறிந்துகொண்டேன். இனி, இதன் அடியில் எழுதும் வரிகளைச் சற்றே தயவுசெய்து பார்க்கத் தொடங்கினால், தங்கள் தோள்களே, துணையாகக்கொண்டு பார்ப்பீர்களென்று நம்புகிறேன். சுந்தரமூதலி என்பவரும், கந்தமூதலி என்பவரும் பேரால் பெரியவர்களாகத் தோன்றினலும், குணத்தால் குன்றிமணியிலும் சிறியவர்களாகக் காண்கிறார்கள்.

இவர், தற்காலத்திற் செய்த மோசம் தங்களுக்குச் சிறிது துன்பஞ் செய்வது. ஆனல், இது பெரிதல்ல. இனி உடனே, தங்களுக்கு உண்டு பண்ணிய நஷ்டத்துக்கு ஈடாக, இந்த இருவரும் மோசம் போய், நஷ்டப்பட — அதைக்கண்டு தங்களுக்கு நேரிடும் துன்பமே பெரிதாகக் காணுமென்று உண்மையாகச் சொல்லமாட்டேன்.

மோசஞ் செய்தவர் நாசமடைவார்கள்

என்கிற உலக வழக்கு வீண்போகாது. இது குறித்துத் தாங்கள் கிலேசப்பட வேண்டுவதில்லை. தங்களுக்கு நடராஜப்பெருமான் ஒருவிதத்திலும், குறைவுவரச் செய்யார். இது சத்தியம். நான் அவ்விடம் வருமளவும், தாங்கள் தற்காலத்தி லிருக்கிறபடியே, ஓர் அலுவலில் இருக்க வேண்டும். நான் வந்த பின்பு தங்கள் இஷ்டப்படியே நடத்திக்

* இஃது அன்பர் ராயல் ஓட்டல் வேலு முதலியார் அவர்களுக்கு எழுதிய கடிதம்.

கொள்ளலாம். என் தேகம், மறையாம லிருக்குமாகில் எவ்விதத்திலும் தங்கள் கருத்தை நடராஜப்பெருமான் திருவடித் துணையைக்கொண்டு முடித்துவிப்பேன். இதில் சந்தேகம் வேண்டுவதில்லை.

என்னிடத்தில், தங்களுக்கு இருக்கின்ற பிரியம் எவ்வளவோ, அதில் எண்மடங்கு தங்களிடத்தில் எனக்கு இருக்கின்ற தென்று நான் சொல்வதன்ன! கடவுளுக்குத்தெரியும். ஆதலால், என்னிடத்தில் அவநம்பிக்கை வேண்டுவதில்லை. நான் வருவதற்குத் தடை யென்ன வென்றால், நமது நடராஜப் பெருமானைக் கேட்குந்தோறும், "நல்லது, இன்னஞ் சற்றே பொறு, இன்னஞ் சற்றே இரு," என்று உத்தரவாகிறது. இதை அசலார்க்குச் சொன்னால் நம்பார்கள். தங்கள் மட்டில் மாத்திரம் குறிப்பித்தேன். ஆனால், "இன்னஞ் சற்றேயிரு" என்றபடியால், இரண்டொரு மாதமாகக் காணுகின்றது. தாங்கள் அவசரப்பட வேண்டாம். இப்போது எவ்வளவு வருத்தப் படுகின்றீர்களோ, அதற்குப் பதின் மடங்கு சௌக்கியம் பின்பு கிடைக்கும். இது உண்மை! உண்மை!! உண்மை!!! நான் எவ்வகையாலும், இன்னும் இரண்டு மாதத்தில் வருகிறேன். அது பரியந்தம், பொருத்திருக்க வேண்டும். சிவானுபவச் சொரூபியாகிய சுவாமி சிதம்பர சுவாமிகள், வெள்ளை வேட்டி திருச்சிற்றம்பல சுவாமிகள், ஓதுவா மூர்த்தி சுந்தரம் பிள்ளை, இவர்களுக்கும் என் வந்தனம் குறிப் பிக்க மனமிருந்தால் குறிப்பிக்கலாம்: இனி, தாங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். சதா, நடராஜப் பெருமானைச் சிந்தித்துக் கொண்டு அலுவலை நடத்த வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். வந்தனம். வந்தனம்.

அருட்பெருஞ்ஜோதி

---

2. அன்பறி வொழுக்கத்தாற் சிறந்து நமது கண்கள் போன்று விளங்கிய சிரஞ்சீவி இரத்தின முதலியாருக்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் சிவக்கியானமும் மேன்மேல் உண்டாவனவாக. இங்கு ம-ா-ா-ஸ்ரீ நாயக்கரவர்களும் யானும் சேஷமம். அங்கு நமது சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன்.

தாம் மாசிமீ 24-தேதி வரைந்து விடுத்த கடிதம் பங்குனிமீ 2-தேதி காணப்பட்டது. அக்கடிதத்திற் குறித்த வண்ணம் சிதம்பரத்தில் வசிப்பது சம்மதமானாலும் இது விஷயத்தில் வசிப்பது சம்மத மின்று. எனினில், சிதம்பரத்தில் பச்சையப்ப முதலியார் பாடசாலை கிரமமல்லாததாகத் தற்காலத்தில் காணப்படுகிறது. அன்றியும் அவ்வலுவல் இராஜாங்க சம்பந்த அலுவலாக இருந்தால் நன்றாக இருக்கும். அவ்வாறின்றி ஒருமையில்லாத சில இந்துக்கள் சம்பந்த

மானதாக விருக்கின்றது. சிதம்பரம் தற்காலத்தில் நமது உயிர்த்துணை வராகிய நடராஜப் பெருமானைப் பற்றி நாம் போவதற்கும், இரண்டொரு தினம் இருப்பதற்கும், தக்கதேயன்றி வேறொரு வகையாலுந் தக்கதாகத்தோன்றவில்லை. ஆயின், அது கலிகால வண்ணம். ஆகலின், இதனடியில் எழுதுஞ் சில வரிகளிற் குறித்த வண்ணத்தை முழுதும் நம்பவேண்டும். அதாவது, நான் இந்த மாதக் கடையிலாவது, சித்திரை மாத முதலிடை கடையிலாவது அவ்விடம் வருவேன். வந்த பின்பு என் கருத்தை வெளிப்படுத்துகிறேன். எந்த விதத்தாலும் நாம் என் சமீபத்திலிருக்க வேண்டுமென்றே இரவும்பகலும் எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன். என் பிரார்த்தனைப் பிரகாரம் இன்னுஞ் சிலகாலத்துள் கூட்டிவிப்பார். இதற்குச் சந்தேக மிராது. ஆதலின், அங்கு நான் வருமளவும் சகித்திருக்கவேண்டும். சிவபஞ்சாக்கரத்தை சதா கருத்தில் வைத்துக் கொண்டே காரியங்களை நடத்த வேண்டும். எவ்வகையிலும் என்சமீபத்திலிருக்கும்படி சிவானுக்கிரகத்தால் செய்துக்கொள்ளுவேன். நாம் இது குறித்து சலனப்படவேண்டாம். தேக முதலான கருவிகளைப் பக்குவமாகப் பாராட்டிக்கொண்டு வரவேண்டும். மேற்குறித்தபடி வருகிறேன். விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல், இவைகளை அங்கிருந்து, இங்குவந்திருந்து, பிரயாணப் பட்டங்கு வருகின்ற, பெரிய தமக்கைபார் வசத்தில் சுமார் ஒரு மாதமாயிற்று கொடுத்தனுப்பினேன். அவர்கள் மத்தியில் கருங்களவால் கையில் நெய்யில் உள்ளவைகளெல்லாம் இழந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். அவர்கள் இன்னும் மத்தியில் பத்தாக் களிடமாக இருக்கின்றார்கள் போலக் காணுகின்றது. ஆகலின், அவர்கள் அவ்விடம் வந்தவுடன், மேற்படி புத்தகங்களைச் சேர்ப்பித்தபின் அல்லாததும் உடனே அவசியம் எனக்குத் தெரியப்படுத்த வெண்டும். மற்ற சங்கதிகளெல்லாம் நான் அவ்விடம் வந்த பின்பு பேசிக்கொள்ளலாம். சிரஞ்சீவி.

---

3. அருட்குணங்களனைத்தும் அடைந்து என் கருத்தினையாய் விளங்கிய தங்கட்கு சிவ கடாக்ஷத்தால் சர்க்காயுளும் திடதேகமும் சகலசம்பத்தும் மேன் மேல் விளைக.

வரைந்து விடுத்த நல்வாசகத்தைக் கண்ணுற்றுக் களிகூர்ந்தனம். குடும்ப கோஷம், புதுவேதம், மெய்ம்மொழிப் பொருள் விளக்கம், சன்மார்க்க விளக்கம் என்பவைகளை நூதனமாக எற்படுத்தக் குறிப்படி வரையாக் கடிதப்புத்தகம் மூன்றெண்ணிடத்தி லிருக்கின்றன. அறியமையமும். ஆகலில், அது விடயத்தி லுழைத்தல் வேண்டார். என்

வருமதிக் கடையில் அங்ஙனம் போதுதற் குளங் கொண்டிருக்கின்ற னன். இஃது மாயமன்று உண்மை.

அருணெறி செல்வோர்க்கும் அச்சுறுத்தத்தக்க இவ் வெய்ய பருவத்தின்கண் வான் பெயலறியா வன் னெறிப்பட்டு மெய்வருத் தங் கோடலொன்றே. எவ்வகையாங் களைகணின்றி, பசித்தாரது பசி நீக்குதற் பொருட்டே திருவருளாற் கிடைக்கும் பொருட் கருவியை அங்ஙனஞ் செலுத்தலின்றி இங்ஙனஞ் செலுத்தும் வெறுஞ் செயற் பாட்டிற் கொருப்படும் கொறைமையுங் கோடற்கிடனும். ஆகவில், இது விடயத்திற் றுணிந் துரைத்தற்கு சித்தமும் நாவும் செல்வன வல்ல. முன் குறித்தபடி வாற்குத் தடைநேரின், அன்று துணிந்து வரைவல். இஃதென்கருத்து. பின்னர் தங்கள் கருத்தின்படி செய்க. இஃது உலகியற்பிழைத்த சிலர்க்கு வரைதல்போல் வரைந்ததன்று. உள்ள முற்று வரைந்த தென்க. இதனை, நமது உள்ளன்பர்கட்குக் குறிக்க.

என்னையன்றித் தன்னையுங் கருதார், அன்றிப் பொன்னை யுங் கருதாரென்று கருதப்படும் அன்பர்தாம், எனக்கு இருமையுந் தொடர்ந்த துணைவராக நினைக்கின்றேன். அன்றி, வேறென்னை நினைப் பேன்! சூழும் வண்ணம் சூழ்க. சிவ சிந்தனையும் ஜீவகருணையும் கைவிடாது ஓங்குக. வேறு விடயங்களை சந்தி செய்யும் பந்த சந்தி சத்தியாலே மாறுது விழித்திருக்க. சுபம்பெறுக.

---

4. அன்புள்ள நம்மவர்களுக்கு அன்புட னறிவிப்பது — ஒரு வனைப் பற்றி அனந்தம் பேர்களுக்கு நன்மையுண்டாம் என்பதை யுண் மையாக நம்பியிருங்கள். என்னால் உங்களுக்கு நன்மை கிடைப்பது சத் தியம். நான் இன்னங் கொஞ்ச தினத்தில் திருவருள் வலத்தால் வெளிப்படு கின்றேன். அதுபரியந்தம் பொருத்திருங்கள். நான் மிக வும் சமீபத்தில்தானே வெளிப்படுவேன். அஞ்ச வேண்டாம். சாலையை லகுவாய் நடத்துங்கள். *

---

5. பிரம, விஷ்ணு, ருத்திராதிகளுடைய பதங்களும், அந்தக் கர்த்தாக்களும், அவர்களால் சிருட்டி, திதி, சங்காரம், செய்யப்பட்டு

---

* இஃது பிரமோதூதவரு ஐப்பசிமீ 11உ சாலையை நடத்தி வந்த புதுவை சதாசிவ செட்டியாருக்குப் பெருமான் திருக்கரத்தால் வரைந்தனுப்பியது.

வருகிற தேகாதி பிரபஞ்சங்களும், அநித்தியம். ஆகலில், நித்தியமாகியும் என்றும் ஒரு தன்மை யுள்ளதாகியும், சச்சிதானந்த வடிவமாகியும், அகண்ட பரிபூரண வஸ்துவாகியும் விளங்கிய சிவமே நமக்குப் பொருள். அன்றியும், தாய், தந்தை, குரு, தெய்வம், சினேகர், உறவினர், முதலியவர்களும் மேற்குறித்த சிவத்தின் திருவருளே யல்லது வேறில்லை.

நாம் பல ஜனனங்களையுந் தப்பி, மேலான இந்த மனிதப் பிறவி யெடுத்தது சிவத்தின் திருவருளைப் பெறுவதற்கே.

எவ்வகைப் பிரயாசத்தினாலாவது அந்த அருளை அடைய வேண்டும்.

அந்த அருள், எவ்வகையால் வருமென்றால் :— எல்லா உயிர்களிடத்திலும் தயவும், பிரபஞ்சத்தில் வெறுப்பும், சிவத்தினிடத்தில் அன்பும், மாறாத நம்மிடத்திருந்தால், அவ்வருள் நம்மை யடையும். நாமும் அதனை யடைந்து, எதிரற்ற சுகத்தி லிருப்போம். இது சத்தியம். இனி, மேற் குறித்த சாதனத்தை நாம் பெறுவதற்கு சிவ பஞ்சாக்ஷரத் தியானமே முக்கிய காரணமாக இருக்கிறது. ஆகலில், இடைவிடாது நல்ல மனத்தோடே அதனைத் தியானிக்க வேண்டும். அதனை இதனடியில் குறிக்கின்றேன்.

ஓம் சிவாய நம

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனையின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனுரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே. 1

திருவாசகம் — திருவேசறவு

சிவாய நமவென்று சிந்தித் திருப்பார்க்கு
அபாய மொருநாளு மில்லை — உபாயம்
அதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும். 2

ஔவையார் — நல்வழி

நான் செய்த புண்ணியம் யாதோ சிவாய நமவென
ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற் றேன்எனை ஒப்பவரார்
வான்செய்த நான்முகத் தோனும் திருநெடு மாலுமற்றைத்
தேன்செய்த கற்பகத் தேவனும் தேவருஞ் செய்யரிதே. 3

திருஅருட்பா — திருவருண் முறையீடு

இதனைக் கண்டு தியானித்து வந்தால் பின்பு எல்லாம் விளங்கும். இதை மற்றவர்களுக்கு வாசித்துக் காட்டப்படாது.

---

6. நான் சென்னப்பட்டணம் விட்டு இவ்விடம் வந்த நாள் தொடங்கி நாளது வரையில் பாடிய பாடல்கள் பல. அவைகளை முழுதும் எழுதிவைக்க வேண்டுமென்கிற லக்ஷியம் எனக்கு இல்லாமையால், அப்படி அப்படி சிதறிக்கிடக்கின்றன. ஆயினும், அவைகளைச் சேர்ப்பிக்கச் சுமார் இரண்டு மாதம் பிடிக்கும். ஆகலால், நான் பங்குனி மாதம் அவசியம் வருகிறேன். வரும்போது கொண்டுவருகிறேன். இது உண்மை. எவ்விதமாவது இரண்டு மாதத்திற்குள் தமது இடத்தில் இருக்கச் செய்கிறேன். குமாரசாமி பிள்ளை சண்முகப் பிள்ளை, செட்டியார் இவர்கள் இடங்களில் தற்காலம் இருக்கின்ற பாடல்கள் சுமார் 50-க்கு உட்பட்டதாகவே இருக்கும். வெளிப்பட்ட பாடல்கள் பல பல. ஆகலால் மன்னிக்க வேண்டும். அன்புள்ள என் கண்மணிபோன்ற தாம், இனி இதனடியில் எழுதுகின்ற வண்ணம் செய்யப் பிரார்த்திக்கின்றேன். அதாவது, இந்தப் பாடல்கள் பங்கியில் 'அனுப்பி என்னிடம் சேருகின்ற பரியந்தம் நான் ஒருவேளை போஜனந்தான் செய்வேன்' என்று எழுதியதைப் பார்த்த பின்பு, நான் சாப்பிடுகிற சாதம் உடம்பில் பொருந்தவில்லை. பட்டினி கிடந்தவனைப்போல இருக்கிறேன். ஆகலால், என்னை நிம்மதியுள்ளவனாக்க எண்ணங்கொண்டு, ஒரு வேளை போஜனம் கொள்ளுகிற விபத்தை நீக்கி, உடனே தபாலில் எனக்குத் தெரிவித்தால் அல்லது நான் சலிப்பைத் தவிர்ப்பேன். ஒருவேளை போஜனம் உள்ளவனாகவே யிருப்பேன். இது சத்தியம். என்மேல் ஆணை. தாம் மேற்குறித்த நிற்பந்த எற்பாட்டைத் தவிர்த்து உடனே எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். இரண்டு மாதத்திற்குப் பின்பு பாடல்கள் அவசியம் சேரும்.

---

7. உய்வதாமிது நற்குரு வாணையொன் றுரைப்பேன்
சைவ மாதிசித் தாந்தத்து மறைமுடித் தலத்தும்
நைவ தின்றியாங் கதுவது வாயது நமது
தெய்வ மாகிய சிவபரம் பொருளெனத் தெளிவீர்.

(6-திருமுறை — பக்கம்-356)

இங்ஙனம் சிவபரம் பொருளை அனுபவித்தற்கு முக்கியம்:— ஜீவகாருண்யம், பாசவைராகம், சிவபக்தி. இவை கிடைத்தற்கு முதற் கருவி :— சாதுக்கள் சார்பு ஆகலின், அவசியம் சாதுக்கள் சார்புவேண்டும். நல்லது, — சாதுக்கள் சார்பு தற்காலத்திற் கிடைப்பினும் கிடையாவிடினும், நம்மை யெழு பிறப்பென்னும் பெருங்கடலைக் கடப்பித்து பேரின்பமென்னுங் கரையிலேற்றும் சைவப்பதியில் தெய்வப்புணைபாக வாய்த்த திருமந்திரமாகிய பஞ்சாக்கரத்தை, இடைவிடாது சிந்தித்துக்கொண்டும், சிவபிரான் திருவடிகளை பாவித்துக்கொண்டும், வருவது முக்கியத்தினு முக்கியம். ஆகலில் நாம் அவசியம் பற்ற வேண்டிய காரியம் இவை. மற்றவை யன்று.

---

8. **சுவாமிகளுக்கு வந்தனம்** தங்கட்குத் தற்காலம் நேரிட்டிருக்கிற ஆபத்தைக்குறித்து, அஞ்சவேண்டாம். இந்த ஆபத்தால் தேக ஆனி நேரிடாது. கால பேதத்தால் நேரிடினும், நான் தங்களை எவ்விதத்தாலாயினும் திருவருள் வல்லபத்தைக் கொண்டு திரும்பவும் பார்ப்பேன். பேசிக்களிப்பேன். இது சத்தியம். இது சத்தியம். இந்த வார்த்தை யென் வார்த்தை யன்று. திருச்சிற்றம்பலமுடையார் செல்வப் பிள்ளை வார்த்தை. தேகத்திற்கு ஆனி வருவதாகக் கண்டாலும் அஞ்ச வேண்டாம். வந்தால் வரட்டும். திரும்பவும், உடனே மிகுந்த விரைவில் என்னைப் பார்த்துப் பேசிக் களிப்பீர்கள். திருவருளாணையிது. சற்றுங் கலங்க வேண்டாம்.

---

9. **தாங்கள்** அஞ்சவேண்டாம். "சிவாயநம வென்று சிந்தித் திருப்பார்க் கபாய மொருநாளு மில்லை உபாயம் இதுவே மதியா மிதல்லாத வெல்லாம் விதியே மதியாய் விடும்" என்ற ஔவையார் திருவாக்கு சத்தியம் ! சத்தியம் !! சத்தியம் !!! ஆதலால், அதை இடைவிடாது சிந்தித்துக் கொண்டே வாருங்கள். தங்கள் பிணிகள் பறந்தோடிப்போம். இதை நம்பவேண்டும். தாங்கள் பயப்படாது இருக்கவேண்டும்.

---

10. **தாங்கள்** தேக முதலிய கருவிகளை ஜாக்கிரதையோடு வைத்துக் கொண்டும், சிவபஞ்சாக்ஷரியையும், சிவபெருமான் திருவடிகளையும் இடைவிடாது சிந்தித்து தியானித்து வரவேண்டுமென்பது என் பிரார்த்தனை. தங்களை ஒரு கணப்போதாயினும் மறந்தவனல்ல. தாங்கள், கூடியமட்டில் சர்வஜாக்கிரதையோடும் இப்போது இருக்கிறபடியே யிருங்கள்.

இன்னுஞ் சில காலத்துள், விசேஷ சவுக்கியம் சேரிடுமென்று உண்மை யாகச் சொல்லுகிறேன்.

---

11. அன்பு, அறிவு, கல்வி, கேள்வி, முதலியவற்றில் சிறந்த தங்களுக்கு வந்தனம். தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன்.

தங்கள் மனத்திலுள்ள குறிப்பை சிரஞ்சீவி சுந்தரம் பிள்ளை யால் தெரிந்துகொண்டேன். தாங்கள் உலகநடை தெரிந்த விவகாரிக ளாதலால், தாங்களே, தங்கள், கருத்தின்படி செய்துக்கொள்வதில் யாதொரு விகற்பமும் சேரிடாதென்று நம்புகிறேன்.

நான் அது விஷயத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் தாங் கள் நேரே அவர்களை அழைத்து, ஒருமையோடு தங்கள் கருத்தின்படி ஏற்பாடு செய்துக்கொள்வது உத்தமமாகத் தோன்றுகிறது. தங்கள் கருத்தின்படி செய்துக்கொள்வதற்கு நான் தடையானவனல்ல. ஆகலில், யாவர்க்கும் மனது விகற்பமாகாதபடிக்கும், தயவு வேறு படாதபடிக்கும், தங்கள் கருத்தின்படி நடத்தலாம்.

---

12. இவ்விடம் கடிதம் அனுப்புந்தோறும், இந்தப் பிரகாரம் அனுப்புவது பிரயாசம் என்று, என் மனம் என்னை வருத்துகின்றது. இது நிற்க, இனி, தங்கள் கடிதத்திற்கு உத்தரம் எழுதுகிறேன். அதா வது, தங்கள் தமயனர் விஷயத்தில் தாங்கள் எத்தன்மை யுடையவர் களாக இருக்கின் றீர்களோ அத்தன்மை நானும் உடையவனு யிருக் கின்றேன். சீரகத்தை, கியாழம்செய்து அந்தக் கியாழத்தில் சுக்கை ஊற வைத்து ஜாமம் சென்றபின்பு எடுத்து உலர்த்தி தூள் செய்து வைத்துக் கொண்டு, அந்தத்தூள் காசிடை எடுத்து, அதில் பஸ்பம் அரிசியிடை வைத்து நெய்யில் குழைத்து சாப்பிடவேண்டும். பத்தியம் இச்சாபத்தியம். தலைமுழுக்கு பசுநெய்யில் முழுகவேண்டும். ஆறுதாரத்தில், அனைகதத்தில் சத்திசிவம், பத்திதழில், இருப்பதாகவே, கொள்ளவேண்டும். இரண்டிதழ் ஆசனமாகக் கொள்ளவேண்டும். அன்றியும், பன்னிரண்டிதழில் எட்டிதழ் சத்தி யிருப்பு, இரண்டிதழ் சிவத்தினிருப்பு, மற்றையிரண்டிதழ் மேலும் கீழும் அடையிருப்பு. இது இன்னுஞ் சில நாள் சென்ற பின்பு தங்க ளுக்கு நன்றாக அனுபவப்படும்.

---

13. விண்படைத்த பொழிற்றில்லை அம்பலத்தான்எவர்க்கு மேலானு னன்பருள மேவுநட ராஜன்" எனல் வேண்டும். இது நிற்க, நான் தற்காலம் அவ்விடம் வருவதற்கு சமயமாகத் தோற்றவில்லை. ஆயினும், நமது தலைவராகிய கடவுளது திருவுளச் சம்மதிக்கு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எந்த இரவில் — எந்தப் பகலில் — திருவுளச் சம்மத உத்தரம் எனக்குக் கிடைக்கின்றதோ, அந்த இரவில் அந்தப் பகலில் பிரயாணப் படுவதற்கு யாதொரு தடையுமிராது. இரவும் பகலும் இதை நினைத்துக் கடவுளை தியானிக்கின்றேன். அவர் உத்தரத் தடையன்றி வேறு தடை யாதொன்றுமில்லை. தாங்கள் தேக முதலிய வற்றில் ஜாக்கிரதை யுடையவராய் சிவத்தியான சகிதராக இருங்கள்.

---

14. இது விஷயத்தில் தமக்கு விசேஷம் பிரயாசம் நேரிடச் செய்கிறேன். ஆயினும், அந்தப் பிரயாசம் சிவகடாக்ஷத்தால் நேரிட்டதாகலின், பின்பு, தமக்கும் எனக்கும் தடைபடாத நிம்மதியை யும், சத்துவ சந்தோடத்தையும் உண்டுபண்ணு மென்கிற நிச்சயத்திலை நானது தெரிவிக்க நேரிட்டது. ஆலை, இது குறித்து விசேஷ முயற்சி யும் பிரயாசமும் தமக்கு நேரிடுமே என்ன செய்வது என்கிற விசாரமும் ஒருபக்கம் உடையவனாகவே யிருக்கிறேன். இனி வேறு வகையாற் பலவாக விரிப்பதென்ன! நானே தாமாகவும் — தாமே நானாகவும் — பழமை தொட்டு வந்த அபேத நேயத்தை எண்ணி, — மற்ற இடங்க ளில் கனவிலும் லக்ஷியஞ் செய்து குறிக்கப்படாத குறிப்பை தம்மிடத்தே குறித்தேன். இது எம் பெருமானுக்குச் சம்மதமாக விருக்கும். ஆக லில், தமக்கும் சம்மதமாக இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

---

15. தாம் தம்முடைய தேகத்தை ஜாக்கிரதையாக உப சரித்து வரவேண்டும். ஜாக்கிரதை என்பது அருந்தல் பொருந்தல்களில் மிதபோஜனம் மிதபோகம்.

மித போஜனமாவது:— கோபம், விராகம், அலக்ஷியம், முயற்சி, விரைவு, இவை முதலிய ஏதுக்களால் குறைத்தல், — விருந்து சுவைவிருப்ப முதலிய ஏதுக்களால் ஏற்றல் இல்லாமல், சமமாகப் புசித் தலாம்.

மிதபோகமாவது:— அதிபரிச்சயம், அதி ஞாபகம், முதலிய ஏதுக்களால் இரவு பகல் தோற்றுது பொருந்தல், — விராகம், அலக்ஷி யம், முதலிய ஏதுக்களால் பொருந்தா திருத்தல். இவை இரண்டுமின்றி 'மாதத்திரண்டுவிசை மாதரைப் புல்குவது' என்றபடி பொருந்தலாம்.

---

16. ஆரி பிரமாதிக ளெத்துணையும் பெறுதற்கு அரியதாகிய சிவ சம்பந்தத்தை, முன்செய்த தவப் பயனுற் பெற்றனம். அங்ஙனம் பெற்ற நாம், சிவானந்தபோக சாத்தியத்தைக் காலமுண்டாக அடைதல் வேண்டும். அதனை அடைதற்கு சிவபஞ்சாக்ஷர தியானமன்றி வேறு வதுக்கள் ஒன்றுமின்று. இஃது திருவருளாணை. என்னின், நாம் செல் லுங்காலமெல்லாம் சித்தசுத்தியோடு சிவபஞ்சாக்ஷர தியானத்தில் சர்வ ஜாக்கிரதையைப் பெற்று, வரவிற்கு ஒத்த செலவோடு வாழ்தல் வேண் டும். இஃதே நமது கடமை.

---

17. ஐயா, தற்காலத்தில் தங்கள் மனத்தில் கோரிட்ட சஞ் சலங்களை நிவர்த்தி செய்து, இனி, ஒருகாலங்களிலும் வாராத வண்ணம் பாது காத்து, சதா சௌக்கியத்தைப்பெற்று சந்தோஷமடைய அனுக் கிரகிக்க வேண்டுமென்று, ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். தாங் களும், இரவும் பகலும் நமது ஆண்டவனை இடைவிடாமல் சிந்தித்துக் கொண்டு சாக்கிரதையோடு இருக்கவேண்டுமென்று தங்களையும் பிரார்த் திக்கிறேன். நம்மைப்பெற்ற தாயைப்பார்க்கிலும் அனந்தங் கோடி பங்கு நம்மிடத்தில் தயவுள்ளவன் நமது ஆண்டவன். ஆகலால், நமக்கு ஒரு காலத்திலும் குறைவு கோரிடாது. இது சத்தியம். ஆனால், நாம் நம்பிக்கை தவராது இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் நான் விரித்துத் தங்களுக்குச் சொல்ல வேண்டுவதென்ன !!

---

18. தாங்கள் வரவுக்குத் தக்க செலவு செய்துக்கொண் டிருக்கவேண்டும். பின்பு, இஷ்டப்படி எல்லாஞ்செய்ய நமது ஆண்டவன் அனுக்கிரகிப்பான். இதற்குச் சந்தேகம் இராது. இது உண்மை. இந்த உண்மை தங்களுக்குத்தான் தெரியும். ஆதலால், தங்கள்மட்டில் இது தெரிவித்தேன்.

ஐயா, நானே புத்திதெரிந்த நாள் தொடங்கி, இது பரியந்த மும், இந்த பிண உடம்பும், இதற்குக் கொடுக்கின்ற பிண்ட துண்டங் களும் பெருஞ் சுமையாக இருக்கின்றதே! ஐயோ, இது என்றைக்குத் தொலையுமோ? என்று எண்ணி எண்ணி இளைத்துத் தள்ளப்படுகின்றவனை இருக்கிறேன். அப்படிப்பட்ட இந்த நாய்க்கு, பணம் என்ன செய்யும்? ஐயா, என்னைக் குறித்துத் தாங்கள் பணவிஷயத்தில் பிரயாச மெடுத் துக் கொள்ளவேண்டாம்.

---

19. நான், இத்திசைக்கண் வந்தபின், இங்ஙனமிருந்து தங்க ளிடத்திற் போந்த சில பாடல்களில் ஒன்றும் வெளிப்படா திருத்தல் வேண்டும். எனினெனில், நான் இங்ஙனம் வந்த பின்னர் சிதம்பர

விஷயத்தில் தோத்திர மாலைகளுஞ் சாத்திர மாலைகளுமாக சுமார் — 200-மாலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் வெளிப்படும்போது வெளிப்படுத்திக் கொள்ளலாம். இது நிற்க, முன்னர் கடிதத்தில் நான் குறித்த பாயிரத்தை இன்னுஞ் சிலதினஞ் சென்ற பின்னர் அனுப்பு கிறேன். தற்காலம் என் நினைவு விரிதற்கின்மையால், தாங்கள் தேகத்தை சாக்கிரதையாகப் பாராட்டிக் கொண்டு வரவேண்டும்.

---

20. தாங்கள், நமதுசாமி அவர்களைக்கொண்டு உபசாந்தி செய்துக்கொண்டு அதிக உழைப்பெடுத்துக் கொள்ளாமல் ஜாக்கிரதையாக வரவேண்டும். கடினமான அவுஷதங்களைக் கொள்ளவேண்டாம்.

மூசுமூசுக்கை சமூலங் கொண்டு வந்து இருமலுக்கு பசும் பாலிலாறவைத்து உலர்த்தி இடித்துச் சூரணமாக வைத்துக்கொண்டு, நித்தியம் காலையில், — தேயிலைத் தண்ணீர் காய்ச்சி சாப்பிடுவது போல, — சலத்தில் போட்டு சுண்ட வைத்துப் பசும்பால் சர்க்கரை யிளகுப்பொடி கலந்து, கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டு வரவேண்டும். இதை சாமிகளுக்குத் தெரிவித்து, அவாளைக்கொண்டு செய்வித்து சாப்பிட்டுக் கொண்டு வரவேண்டும். உத்தியோகம் தடையாயிருந்தால் அதைவிடுத்து தேகத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள். தேகம் பக்குவமான பின்பு சுவாலுக்கிரகத்தால் உத்தியோகம் சம்பாதித்துக் கொள்ளலாம்.

---

21. தமது சுய சரித்திர விபவங்களை அடுத்த தேட்க விருப்ப முள்ளவுகை விருக்கிறேன்.

நான் வைகாசி மாதம் 30-தேதிக்குள்ளே அவ்விடம் வரு வேன். அவசியம் தியாகராஜப் பெருமானையும் உன்னையும் காண வேண்டும் என்கிற விருப்பம் விசேஷ முள்ளவுகை இருக்கிறேன். ஆதலால், வருவது நிச்சயம் நிச்சயம். இது அன்றி, பகவத் பக்தி யிற் சிறந்தவராகிய வரதாசாரிய சுவாமிகள் திருவையிந்திர புரத்துக்கு வந்ததாகக் கேள்விப்பட்டேன். அந்த சுவாமிகளைச் சென்னப்பட்டனத் தில் தாம் கண்டால் ஒன்று சொல்லவேண்டுவது. அதென்னவெனில்,

பாலும் நீரும் போலும்
பார்ப்பன சினேகம்

என்று நான் தெரிவித்ததாகத் தெரிவிக்க வேண்டும்.

---

22. கல்வி கேள்விகளிற் பயின்று, அன்பறி வொழுக்கங் களிற் சிறந்து அருளொடு கிளர்ந்த ஆக்கத்தினுயர்ந்த குணமணியாகிய தங்கட்கு;—அரி பிரமாதியர்கள் எத்துணையும் பெறுதற்கரியதாகிய சிவ சம்பந்தத்தை, முன்செய்த தவப்பயனல் பெற்றனம். அங்ஙனம் பெற்ற நாம், சிவானந்த போக சாத்தியத்தைக் காலமுண்டாக அடைதல் வேண்டும். அதனை அடைதற்கு, சிவபஞ்சாக்ஷர தியானமன்றி, வேறு ஏதுக்கள், ஒன்றுமின்று. இஃது திருவருளாணை. என்னின், நாம் செல்லுங் காலமெல்லாம், சித்தசுத்தி யோடு சிவபஞ்சாக்ஷரத் தியானத்தில் இருத்தல் வேண்டும். வரவுக்கு ஒத்த செலவோடு வாழ்தல்வேண்டும். "செல்லும் போது செலுத்துவேன் சிந்தையை; வெல்லும்போது விடுவேன் வெகுளியை. இஃது நமது கடமை.

---

23. தாம் தடை செய்யவேண்டாம். எந்தக் காலத்தில்,—எந்த இடத்தில்,—எந்த விதமாக,—எந்த மட்டில்,—எதை—அனுபவிக்க வேண் டுமோ — அதை, அந்தக் காலம், அந்த இடம், அந்த விதம், அந்த மட்டும், பொருந்தப் பொசிப்பிக்கின்றது திருவருட் சத்தியா யிருந்தால், — நமக் கென்ன சுதந்தர மிருக்கின்றது. எல்லாம் திருவருட் சத்தி காரிய மென்று அதைத் தியானித்திருக்க வேண்டும். உண்மை இது. இதைக் கொண்டு தெளிந்திருக்க வேண்டும்.

---

24. தாம் ஜாக்கிரதையாக தமது தேகத்தை உபசரித்து வரவேண்டும். இனி விசேடமான அலுவல் நேரிடுகிற பரியந்தம் இப்பொழுது நேரிட்டிருக்கிற அலுவலைப்பார்த்து வரவேண்டும். என் எண்ணத்தின்படி ஆண்டவன் விரைவில் தமக்கு விசேஷ சவுக்கியத்தை யுண்டு பண்ணுவார் என்கிற நம்பிக்கையை யுடையவனாக இருக்கிறேன். தாம் இடைவிடாது பரமசிவமே பொருளெனக் கொண்டுப் பஞ்சாக்கரத் தையே சிந்தித்து வரவேண்டும்

25.

மருவாணைப் பெண்ணுக்கி யொருகணத்திற் கண்விழித்து வயங்கு மப்பெண் உருவாணை யுருவாக்கி யிறந்தவரை எழுப்புகின்ற வுறுவனேனும் கருவாணை யுறவிரங்கா துயிருடம்பைக் கடிந்துண்ணும் கருத்தனேல் எங் குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை ஞானியெனக் கூறுணுதே. — வாழ்க!

(2-ந் திருமுறை—359.)

சிரஞ்சீவி அன்பு, அறிவு, முதலிய சுபகுணங்களிற் சிறந்த தங்கட்கு, சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும், சகல சம்பத்தும்,

மேன்மேல் உண்டாவனவாக. அவ்விடம், இன்னும் சிலதினத்தில் அவசியம் நான் வருவேன். வந்த பின்பு தங்கள் வருத்தமெல்லாம் சிவ பெருமான் திருவருளால் நிவர்த்தியாய் விசேஷ சவுக்கியம் நேரிடும் என்று துணிந்திருங்கள். ம-ஈ-ஸ-ஸ்ரீ திருவேங்கிட முதலியார் காலஞ் சென்றதைக் குறித்து விசாரப்படுகிறேன். ஆயினும், அது அரிபிரமாதிகளுக்கும் உள்ள காரியம். ஆதலால், புதிதல்ல வென்று துணிந்தேன். சிவபஞ்சாக்ஷர தியானத்தோடு ஜாக்கிரதையாக இருங்கள். அஞ்ச வேண்டாம். சிரஞ்சீவி.

---

26. இராமலிங்க சுவாமி யென்று வழங்குவிப்பது என் சம்மத மன்று. என்னை, ஆரவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்று தலில், இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும்.

ஜீவகாருண்யமும் சிவானுபவமும் அன்றி, மற்றவைகளை மனத்தின்கண் மதியாதிருத்தல்வேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

---

27. தாங்கள் சிவத்தியான சகிதராய் வரவுக்குத் தக்க செலவு செய்துகொண்டு தேகத்திற்கு திடமுண்டாகுமாறு உபசரித்துக்கொண்டு சாக்கிரதையோடிருக்கவேண்டும். படிப்பிக்கிற விஷயத்தில் அதிக அதிக்கிரமப் பிரயாசை எடுத்துக்கொள்ளப்படாது.

---

28. தேகத்தைப் பக்குவமாகப் பாராட்டிக்கொண்டு சிவ சிந்தையும் ஜீவகாருண்யமும் மாறுமல், ஜாக்கிரதையோடு இருப்பீர்களாக. இதை சமரச வேத சன்மார்க்க சங்கத்தவர் அல்லாதவர்களுக்குத் தெரியப் பட வாசிக்கப்படாது. வேணும் சிரஞ்சீவி சிரஞ்சீவி.

---

29. தாம் தேக முதலிய கருவிகளைச் செவ்வனிருத்தி வைத்துக் வேண்டுமென்று எழுதுவது தவிர வேறொன்றும் எழுதியது அவசிய மாகத் தோற்றவில்லை. நமது சிவபெருமான் திருவடிகளையும், சிவ பஞ்சாக்ஷரியையும் இடைவிடாமல் தியானஞ் செய்து வரவேண்டியதை ஒன்றே முக்கியம் என்று தமது குறிப்பிற் காணப்பட்டது. அதைமட்டுமே குறித்தே னில்லை. ஜாக்கிரதையோடு இருக்க வேண்டும்.

---

30. என் எண்ணமொன்று இறைவன் எண்ணமொன்றுமாம், அறிவறிந்த உமக்கு இவ்விஷயத்தில் இன்னும் விரிக்க வேண்டியதில்லை. இருப்பது என் எண்ணம். 'கருத்தன்' எண்ணம் எவ்வண்ணமோ தெரிந்ததில்லை. தாம் தேக முதலிய கருவிகளை இயற்பட நடத்தல் வேண்டும். சிவத்தியானத்தோடு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நான் [illegible]

திருவருளை முன்னிட்டு சிலகாலத்தில் அங்ஙனம் வருகின்றேன். துணிவு திண்ணம்.

31. சடமும் துக்கமும், அநித்தியமுமாகிய உலகபோகத்தை விருப்புகின்ற மற்றவர்களைப் போல மயங்குதல் வேண்டாம்.

32. அகலில் சூழும் வண்ணம் சூழ்க. அன்றி, சிவசிந்தனையுஞ் ஜீவ கருணையுங் கைவிடாது ஓங்குக. வேறு விடயங்களைச் சிந்தி செய்யும், பந்த சந்தி சத்தியாலே மாறுது விழித்திருக்க. சுபம் பெறுக.

33. தமதிதயம் சிவபெருமான் திருவடிக்கண்ணே யன்றிப் பிறவொன்றிலும் பொருந்தா திருத்தல்வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றேன். தாம் உலகியற்கண் ஒழுகுங்கால் "கழிநடை பொருவன் கட்பார்வைபோன் றொழுகல்வேண்டும்" என்றும் பிரார்த்திக்கின்றேன்.

34. உனக்கு முக்கியம் தெரிவிக்க வேண்டியது ஒன்று. என்னென்றால் — "பழமை பாராட்டலும், கண்ணோட்டம் செய்தலும், சுற்றந் தழுவலும், அவசியம் சமுசாரிக்கு வேண்டும்" — என்பது நீ மாத்திரம் அடிக்கடி கவனிக்கவேண்டும்.

35. தங்கள் தேக விஷயத்தில் அதிகமாக ஜாக்கிரதையாக சிவத்தியானத்தை விடாமல் வரவுக்குத் தக்கபடி நடக்கவேண்டுமென்று மிகவும் கோருகிறேன்.

36. தேக முதலிய கருவிகளைக் கடைக்கணித்து வருக. சிவபிரான் திருவடித் துணையன்றி வேறு துணை நமக்கு இன்மையின் அவற்றை இடைவிடாது நினைக.

37. தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி தெரிவிக்க வேண்டும். தாங்கள் சிவசிந்தனையை விடாமல் சர்வ சாக்கிரதையோடு லௌகீகத்தை நடத்தி வரவேண்டும்.

38. புண்ணியப் பயனால் பெற்ற தேகத்தைக் கூடிய வரையில் ஜாக்கிரதையோடு பக்குவ மார்க்கத்தில் நடத்தவேண்டும்.

39. தாங்களும் சிவத்தியான சகிதர்களாய் தேக விஷயத்திலும் மற்றைக் குடும்ப விஷயத்திலும் சர்வ ஜாக்கிரதையோடு இருக்க வேண்டும்.

40. தாங்கள் 'சிவாய நமவென்று சிந்தித் திருப்பார்க்கு அபாயம் ஒருநாளு மில்லை' என்பதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

41. தாங்கள் தேக முதலிய கருவிகளை ஜாக்கிரதையாக நடத்திக்கொண்டு சுவத்தியான சுகிதராக இருங்கள்.

42. அநித்திய மென்பது அரிபிரமாதி களுக்கு முள்ளது. முத்தியடையும் வரையில் தேகம் வேண்டும்.

43. தேக திட முண்டாகும்படி உபசரித்துக் கொண்டு, ஜாக்கிரதையோடு தியானித்துக் கொண்டிருக்க.

44. தேக முதலிய கருவிகளைச் செவ்வையாக நிறுத்தி — பஞ்சாக்ஷரியும் திருவடியும் ஒன்றே நமது நேயம்.

45. செல்லும்போது செலுத்துவேன் சிந்தையை வெல்லும் போது விடுவேன் வெகுளியை.

46. தியான மயமானால் போசிப்பு மாறும்.

47. சுக்கிலம் மேலேற்றும் பழக்கத்திற்குப் பத்தியம் தூக்கம், சோம்பல் ஆகாது.

(1) ஹிதமஹிதம் கெட — திரோதானம் கெடும்.

(2) இருவினை யொப்பால் — மா மாயை பஞ்சதிருந்திபட் போம்.

(3) முன்னிலையான அவன் அவள் அது நீக்கிப் பராகக் கண்டால் — கர்மம் கெடும்.

(4) வடிவின் வாசனை கெட — மாயை நீங்கும்.

(5) சிவானுபவம் மேலிட — ஆணவம் கெடும்.

(6) தியான மயமானால் — போசிப்புமாறும்.

(7) கடவுளைக்காண உண்மையாக விருப்பில் அழுகைகண்ணீர் மாறுமா? ஆகாரத்தில் இச்சை செல்லுமா?

(8) இங்கு வந்திருக்கிறவர்களெல்லாம், அதிகாரம் பண்ண வந்திருக்கின்றார்கள். நீ என்னைப்போல் ஏழை. தனிமையாய் ஜாக்கிரதையாய் இரு.

(9) கவலை வேண்டாம். உள்ளும் புறம்பும் ஒரு தன்மையாக வைத்திருக்க வாட்டம் என்?

(10) அநித்திய மென்பது, அரிபிரமாதிகளுக்கு முள்ளது. முத்தியடையும் வரையில் தேகம் வேண்டும்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்மை வளர்க்கு முபாய மறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.
— (திருமந்திரம்)

துஞ்சினர் செத்தாரில் வேறல்லர்
எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர். — (குறள்)

---

(11) தத்வ ரூபம்:— பூதமுதல் நாததத்துவ மீறுக உள்ளவெல்லாம் நாமல்ல வென்று அறியும்போதம்.

(12) தத்துவ தரிசனம்:— தத்துவம் சடம். சடம் நம்மையறியாது. நாம் சித்துருவென்று அறியும்போதம்.

(13) தத்துவ சித்தி :— சித்துருவினை மறைத்தது இம்மிதன் மேற்றல்.

(14) ஆத்ம ரூபம்:— ஆணவமகன்று ஆசாரியனருளால் தன்னை யடைதல்.

(15) ஆத்ம தரிசனம்:— நாம் சித்துருவன் என்று மகிழ்தல்.

(16) ஆத்ம சுத்தி:— செயலற்று ஈசனருள் அடைதல்.

(17) சிவ ரூபம்:— சிவமாகத் தரிசித்தல்.

(18) சிவ தரிசனம்:— உயிரானந்திப்பது.

(19) சிவயோகம்:— எல்லாந் தானாக யோகு செய்தல்.

(20) சிவ போகம்:— சிவத்தோடத்து விதமாகி நிற்றல்.

---

48. 1. மகா கற்பம் :— மூலப்பிரகிருதி யினின்று உண்டாம் சிருஷ்டி முதல், பிரமாவின் ஆயுள் வரையில் ஏற்பட்டுள்ள காலம்.

2. அவாந்தர கற்பம் :— சதுர்முகப் பிரமனுடைய ஒரு நாட்குரிய காலம்.

இந்த இரண்டு கற்பத்தின் நடுவே ஒவ்வொரு ஒடுக்க முண்டாகிறது. அது (1) நித்திய, (2) நைமித்திக, (3) பிராகிருதிக, (4) ஆதியந்திகம் என நால்வகைத்தாம்.

(1) நித்தியப் பிரளயம் :— மரணமே நித்தியப் பிரளயம்.

(2) நைமித்திகப் பிரளயம் :— பிரமனுடைய கற்பமுடிவிலுண்டாகின்ற ஒடுக்கமெதுவோ அது, நைமித்திகப் பிரளயம்.

(3) பிராகிருதகப் பிரளயம்:— மகத்துவ முதல் விசேடபரியந்தம், ஒடுக்கத்தை யடைவது, பிராகிருதகப் பிரளயம்.

(4) ஆதியந்திகப் பிரளயம் :— தத்துவ ஞானத்தால் யோகிக்கு உண்டாகும் ஒடுக்கம், ஆதியந்திகப் பிரளயம்.

49. ஔடதங்கள்

1. இருமலுக்கு :—

முசுமுசுக்கை மூலம் பசும்பாலில், உலர்த்தி ஊற வைத்து, உலர்த்தியிடித்து, சூரணமாக்கிக், கியாழமாக்கிப், பாலில்கொள்ள. காலையில், மிளகு, சர்க்கரை, சிறுக சமன் சேர்த்துக்கொள்ள.

2. தேகமெலிவு, ஈளை, சுக்கிலக் கெடுதிக்கு :—

பொன்னங்கண்ணி ஒருபங்கு, கரிசாலை ¾ பங்கு, வேகவைத்து, நீர்வடித்து, மிளகுபொடிபோட்டு, நெய்விட்டு சீரகத்தில் தாளித்துப் புரட்டி சாப்பிடவும்.

3. நீர் கோர்வை, வாதபித்த, ஆபாசக்கெடுதி, மலபந்தம், சூலை, இவற்றிற்கு :—

சுக்கு பலம் 1½,— சுண்ணம்பில் 4 பலம் கவசித்து, மஞ்சளில் 4 பலம் கவசித்து, எருமைச் சாணத்தில் 4 பலம் கவசித்து, கவசங் கருகச்சுட்டு, எடுத்துச் சீவி வைத்துக்கொண்டு, மூன்று தினுசுகளிலும், மூன்று வராகனெடை யெடுத்து, நசுக்கி, அரைப்படி ஜலத்தில் போட்டுக் காய்ச்சி, வீசப்படியாகச் சுண்டினபிறகு, பனங்கற்கண்டு, நெய், இவைகளைக் கலந்து, இளஞ்சூடாகச் சாப்பிடவேண்டும்.

4. தேக வலிவு — சரீர திடத்திற்கு :—

20 பலம் கேட்டிமிளகு, — பேயன் வாழைக்கிழங்கு சாற்றில் 3 நாள், இளநீரில் 3 நாள், கரிசாலை சாற்றில் 3 நாள், பொன்னங்கண்ணி சாற்றில் 3 நாள், பசுங்கோமயத்தில் 3 நாள், பசும்பாலில் 3 நாள், தனித்தனியே இரவில் ஊறவைத்துப், பகலில் நிழலில் காயவைத்து, தேய்த்து, புடைத்து, (முன்போல ஊறவைத்து தேய்த்து, புடைத்து) வைத்துக்கொண்டு, 5 மிளகு அவ்வளவு கற்கண்டோடு சாப்பிடவும். சூடு அதிகமானால், அருகம்வேர் கியாழத்தில் பசுவெண்ணெய் சேர்த்துச் சாப்பிடவும். இவ்விதம் சிலவற்றில் ஊறவைத்துக் கடுக்காயும் கொள்ளலாம்.

5. பஞ்சகல்பம் :—

கஸ்தூரி மஞ்சள், வேப்பம்பருப்பு, வெள்ளைமிளகு, கடுக்காய்த்தோல், நெல்லிவற்றல், இவைகளை அரைத்துப் பாலில் காய்ச்சி — நறுமணத்துடன் இறக்கித் தேய்த்துக் கொள்ளவும்.

6. வேறு பஞ்சகல்பம் :—

கசகசா, பாதம்பருப்பு, கொப்பரைத் தேங்காய், மிளகு, சீரகம், இவற்றைப்பாலில் அரைத்துக் காய்ச்சி, நறுமணத்துடன் இறக்கித் தேய்த்துக் கொள்ளவும்.

---

50. நீலகண்ட மணிமாத்திரை

முதலிய குறிப்புகள்

மாந்தாளிக்கள்ளி — சதுரக்கள்ளி — வெள்ளெருக்கு வேர் பட்டை, — இவைகளைச் சமன் எடையால் நிழலில் உலர்த்திக்கொண்டு ஐந்து பலம் குழித்தைலம் வாங்கிக்கொண்டு சுரைக் குடுக்கையில் வைத்துக்கொண்டு, பெருங்காயம் — லிங்கம் — அபினி, — இந்த மூன்றும், ஒவ்வொரு பலம் கலுவத்திற் போட்டு பொடித்துக்கொண்டு, (1) குங்குமப்பூ — (2) கஸ்தூரி — (3) கோரோசனை — (4) பச்சைக்கற்பூரம் — (5) கூகைநீறு — இந்த ஐந்தும் வகைக்கு ஒன்றேகால் ($1\frac{1}{4}$) வராகனெடை சேர்த்து தைலத்தைதவிட்டு, எட்டு ஜாமம் அரைத்து குன்றிமணிப் பிரமாணம் மாத்திரை செய்து மூங்கில் குழாவில் அடைத்து மண்குடத்தில் வைத்து, பூமிக்குள் நாற்பது (40) நாள் வைத்துப், பின்பு எடுத்து, விஷ்ணுவுக்குப் பூசைசெய்து, தங்க டப்பியில் வைத்துக்கொண்டு, வாந்திபேதி கண்டவர்களுக்கு, மணிக்கு மூன்று மாத்திரை தேனில் கொடுத்தால் வாந்திபேதி நிற்கும்.

ஜன்னி, — வகைகளுக்கும் பிரயோகிக்கலாம், நல்லபாம்பு முதலிய விஷ திருஷ்டிகளுக்கும், தகுந்த அனுபானங்களில் பிரயோகிக்கலாம்.

இந்த மாத்திரைக்கு விஷ்ணு வைத்த பெயர் பிரளயாகால ருத்ர மணி மாத்திரை.

சிவனிட்ட பெயர் நீலகண்டமணி மாத்திரை.

இது நாடியில் சொல்லியது.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

"உலகெலாம்" என்னும்

174. மெய்ம் மொழிப் பொருள் விளக்கம்

"உலகெலாம்" என்னும் மெய்ம் மொழிப் பொருள் விளக்கம் என்பது எங்ஙன மெனில் :—

திருவருளின்பத்தை அங்ஙைகக் கனிபிற் பெற்ற பெரியரை யும், அத் திருவருளையும் வாச்சிய லக்ஷியமாகக் கொண்ட பெரிய புரா ணத்தில் தெய்வத் தற்சிறப்புச் செந்தமிழ்ச் செய்புட்கண், எல்லாம் வல்ல, "இறைவன் திருவருளால்" எடுத்துக் கொடுக்கப்பட்ட "உல கெலாம் உணர்ந் தோதற் கரியவன்" என்னும் மெய்ம் மொழியினது பொருள் விளக்கமாகலின், மெய்ம் மொழிப் பொருள் விளக்க மென்றுயிற் றென்க.

இதனை "மெய்ம்மொழி" யென்றது என்னை யெனின் :—

உணர்ந்தோர்,— இழிகுண ஆங்கார மொழியாய, — மனிதர் மொழியினும், — சமகுண ஆங்கார மொழியாய தேவர் மொழி,— மெய்ம் மொழி யென்பர் ;— அதனினும், உயர் குண ஆங்கார மொழியாய முனிவர் மொழி,— மெய்ம் மொழி யென்பர் ;— அதனினும், இயல்புப் பிரகிருதி மொழியாய அரிபிரமாதியர் மொழி மெய்ம்மொழி யென்பர் ; —

அதனினும், சுத்தா சுத்த மாயா மொழியாய உருத்திராதியர் மொழி மெய்ம் மொழி யென்பர்.

இங்ஙன மன்றி, மொழித்திறன் தெரிந்து முடிபு முற்றுணர்ந்தோர் அபர வயிந்துவப் பிரணவ மொழியாய சதாசிவாதியர் மொழியே மெய்ம்மொழி யென்பர். என்னின் :—

இவ்வபர வயிந்துவப் பிரணவ மொழிக்கு உபாதான, உப காரண, அதிகரண, வியாபக சித்தமாய், சுத்த வியோமாகாரமாய் விளங்கு கின்ற 'திருவருட்' பர வயிந்துவத் துரியத் திருவாக்கான் மொழிந்த "உலகெலாம்" என்னு மொழியை மெய்ம்மொழி யென்றல் இறும்பூ தன் றென்க. வேறியைபில் அடை யொன்று வழக்கின்கண் இன்மையிற் கூறியதன்றி, இஃதோரியைபில் அடைபு மன்றென்க.

இதனைத் 'திருவருட்' பரவயிந்துவத் துரியமொழி யென்றது எங்ஙன மெனின் :—

சுத்த முதலிய மாயா காரிய வாகாயங்களினன்றி, நாதா தீதமாய், சிதாகாசமென்று வேதாகமங்களால் மீக்கூறப்பட்ட சிற்சபைக் கண் தோன்றிய மொழி ஆகலின் அங்ஙனங் கூறிய தென்க.

ஆயின், இவ்வடை மொழிப் பொருட்டுணிபு என்னை எனின் :—

வாச்சியப் பொருளாங்கால் மெய்ம்மையை யுடைய மொழி யென்று வேற்றுமை வழியான் விரித்து அபர வயிந்துவப் பிரணவ மொழிக்கும், லகூியப் பொருளாங்கால் மெய்ம்மையாகிய மொழியென்று அல்வழியான் விரித்துத் 'திருவருட்' பர வயிந்துவத் துரிய மொழிக்கும் இயைபு கோடல் துணி பென்க.

இங்ஙனம், வாச்சிய லகூிய மொழி வரலாறு என்னை யெனின் :—

மனிதர், தேவர், முனிவர், அரிபிரமர், உருத்திராதியர், மொழி யாய ஆங்கார மொழி, பிரகிருதி மொழி, மாயை மொழி, என்பவை அசுத்தமும் சுத்தா சுத்தமு மாகிய சுத்தார்த்தப் பிரபஞ்ச காரண வைகரியாதி நான்கு வாக்கின் காரிய மொழியாகலின், மெய்ம் மொழி

யன்றென்க. சதாசிவாதி மொழியாகிய பிரணவ மொழி சுத்த சத்தார்த்தப் பிரபஞ்ச காரணமாகிய அபர வயிந்துவ காரிய மொழி யாகலின் வாச்சிய மெய்ம்மொழி யாயிற் றென்க. பரசிவ மொழியாய 'திருவருள்' துரிய மொழி, துரிய சத்தார்த்தப் பிரபஞ்ச காரணமாய்ச் சிற்சத்தி பரவிந்துவிற் பதிதலான் நாதமாத்திரத்தி னுண்டாய மொழி யாகலின், லக்ஷிய மெய்ம்மொழியாயிற் றென்க.

இஃது மெய்ம் மொழி யென்பதைப் பெரிய புராணத்துள்,

அருளி னீர்மைத் திருத்தொண் டறிவருந்
தெருளி னீரிது செப்புதற் காமெனின்
வெருளின் மெய்ம்ம மொழி வானிழல் கூறிய
பொருளி னுதமே னப்புகல் வாமன்றே. *

என்ற செய்யுளுள்ளுங் காண்க வென்க.

இஃது அபர வாக்கிய வியவகார மன்றுகளின் விசேட விலக் கணம் இயற்பட விரித்தலில மென்க.

இம்மெய்ம்மொழிப் பொருள் விளக்கத்தின் எல்லை எங்ஙன மெனின் :—

யோகாந்த, கலாந்த, நாதாந்த, போதாந்த, வேதாந்த, சித்தாந்த, மென்னுஞ் சடாந்தானுபவ சாத்நியர்களும் அவற்றை விரும்பி அவ் வழிக்க ணின்ற சாதகர்களும், அந்தாநுபவ திட்டாந்தமாக உபாசிக்க விளங்குகின்ற சிதம்பர ராசியத்தைக் குறிக்குஞ் சிற்சபைக்கண்ணே, சேக்கிழா ரென்னும் அருட் புலவர் பொருட்டே இறைவர் பரமாகாய வாக்கான் மொழியப்பட்டுச் சமர சானுபவ சாட்சாத்காரமாய் ஆறந்தத் தினும் நடிக்கின்ற சிதம்பர நடனத் திருவருட் பதத்தை வாச்சிய லக்ஷியமாகக் கொள்ளப்பட்ட தாகலின், சடாந்த சமரச லக்ஷியப் பொருள் எல்லையை யுடைய தென்க.

இனி, "உலகெலாம்" என்பதன் மட்டன்றி, "உணர்ந்தோதற் கரியவன்" என்ற தொடர் காறும் அத் 'திருவருட்' பர வயிந்துவத் துரியத் திருவாக்கி னெழுந்த மெய்ம் மொழியென் றையமறக் கொள்க வென்க.

---

* பெரிய புராணம்—பாயிரம். 9-வது திருவிருத்தம்.

எங்ஙனமெனின் :—

திருவருட் புலமை சான்ற சேக்கிழா ரென்னும் பெரியர், செயற்கரிய வென்று அரையன் பணித்தவாறு அடுத்தவர்கண் முறைப் பட வொன்றேனு மின்றி முடித்தற் கெங்ஙனங் கூடுமென்று ஐயுற்று அழுங் கிய வுள்ளத்தோடு அருட்பொதுவின்கண் போந்து, பணிந்து, பழிச்சித், 'திருவருட்' பெருமையைச் சிந்தித்து நிற்ப, ஆண்டு இறைவர் அவர் கரு திய பெருஞ் செயன் முடித்தற் பொருட்டு உளங் கொண்டு சிற்சபைக்கண் புறத் துலகெலாமென்றும் அவர் தந் நிலைக்கண் உணர்ந்தோதற் கரியவன் என்றும் மொழிந் தருளியவா றென்க.

அங்ஙன மொழிதற் கியைபு எங்ஙன மெனின் :—

"உலகெலா" மென்பது — பல நோக்குடைப் பெருமொழி யாகலின் எந் நோக்கங் கருதி மொழிந்தனர் இறைவர் அந்நோக்கம் அவ ரறிந்தே முடித்தல் வேண்டும், மற்றையர் முடித்தற் கணுத்துணையுங் கூடா. அன்றித் திருவருட் குரியத் திருவாக்கி னெழுந்த பயனிலை முற்றுக் குறைமொழியை மற்றை வாக்கான் முடித்தற் கியைபு மெவ்வாற்றானும் இறைத்தனையு மின்று. அன்றி, சிவசுதந்தரச் செயற் குறையைச் சிவசுதந்தரத்தான் முடித்தலுங் கூடா. அன்றி, இதுகாறும் இறை வர் அருள் வடிவாற் பக்குவர்கட்கு உபதேச முதலிய திருவாக் களித்த வற்றுள் இங்ஙனங் குறைமொழி யளித்ததின்று. அங்ஙன மளித்தல் அத்திருவருட் குரியத் திருவாக்கி னியலு மன்று. ஆகலினென்க.

ஆயின் ஓரிடத்தே மொழியாது அகத்தும் புறத்தும் மொழிந்தது என்னை யெனின் :—

அக்காலை, அருட்பொதுவின்கண் நின்ற அந்தணர் அறவோர் முதலிய பலரும் அவர்வழி மற்றையோரும் சேக்கிழா ரென்னும் பேரிற் சிறந்த பேரறிவுடைய பெரியர் திருவருட் டுணையால், அருட் காப்பிய முடித்தனர். இஃது மாயைத் துணையால் தேவர், முனிவர், மனிதர் இயற் றிய மற்றைக் காப்பியங்கள் போல் எளிதன்று அன்புகொண்டனுப வித் துய்தற்பொருட்டும் அம் மெய்ம் மொழியைக் கேட்டுச் சேக்கிழாரது புறக்கரணங்கள் சுத்தியாதற்பொருட்டும், புறத்தேயுலகெலா மென் றெழுந்து தத்துவபடலத்தான் மயங்கிய அவரது ஆன்ம திருட்டியைப் படல நீக்கி அறிவு விளக்கிச் சுத்தி செய்தற்பொருட் டகத்தே உணர்ந் தோதற் கரியவன் என்று முடிந்த தென்க.

ஆயின் அகத்தும் புறத்தும் மொழிதற்கு அளவை எங்ஙனம் எனின்:—

திருவருட் பர வயிந்துவத் துரியமொழி புறத்தே யெழுந்து அகத்தே நிறைந்தது சுத்தி செய்தற் கருணையான் வாயுப்போல வென்னுஞ் சுதன்மியமாகிய விக்கருதல் வியாத்தியா னறிக வென்க. என்னை எனின்:— பொருட் புலப்பாட் டின்கண் சிற்சத்தியானது பரவிந்துவிற் பதிதலு மதனுல் அதன்கண் நாத முண்டாதலும் உண்மையாதலிற் பக்கமும் பக்கத்தன்மையும் பெறப்பட்டன. வாலாற்றுப் புலப்பாட்டின்கண் அகத்தும் புறத்தும் சுத்தி செய்தற் கருணையா னன்றி அம்மொழி தோன்றுதாகலிற் சிதைக்கப்படா அளவைத் திறன் பெறப்பட்டது. உறழ்ச்சிப் புறப்பாட்டின்கண் நேர்ச்சிப் பொருள் வான்புறத் தெழுந்து அகத்து நிரம்புதல் எங்ஙன மங்ஙனந் திருவருட் பர வயிந்துவப் புறத் தெழுந்த வாக்து நிரம்புதல் கூடு மாகலின் அளக்கப்படுகை மாறுபடாமை பெறப்பட்டது. ஆகலில் அசம்பவம் அவ்வியாத்தி அதிவியாத்திகளுக்கு மின்று. இதனுல் வியாத்தி முறை காண்க வென்க.

இனி, இம் மெய்ம் மொழிக்குப் பொருள் விளக்கஞ் செய்யுமிடத்துக் காட்சியுங் கருதலு மின்றியு முரை யளவையும் வேண்டுங்கால் வேதாகம முதலிய குறித்தல் வேண்டுமா லெனின், குறித்தல் வேண்டா. என்னை யெனின்:—

வேதம்

இங்ஙனம் வருணைச்சிரம மானதத்தாற் பந்தப்பட்டு ஏக தேசத்தான் வழங்குகின்ற வேதம், வருணச்சிரம மானதத்தாற் பந்தப்படாது, யாண்டும் பூரணத்தான் வழங்கு மெய்ம் மொழிக்குப் பிரமாண மாகா வென்க. அன்றியும் வேதங்கள் ஓர் காலத்தில் உருத்திரனுலும், வேறோர் காலத்தில் விண்டுவாலும், பிறிதோர் காலத்தில் பிரமனுலும் மற்றோர் காலத்தில் பராசரன், வியாசன், முதலிய முனிவராலுந் தொகுத்தும் வகுத்தும், விரித்தும், பலவாறு விகாரப்படுகின்றனவாய்; தாதுக்கள் பிரத்தியயங்கள் பிராதி பத்தியங்கள் முதலிய வியலுறுப்பும், வர்ன்னம் பதம், ஜடை முதலிய வியல் விசேட வுறுப்பும், உதாத்தம், அனுதாத்தம், சுரிதக முதலிய விசையுறுப்பும், சிகைஷி, கற்பம், வியாகரணம், நிருத்தம், சோதிடம், சத்தம் முதலிய அங்கவுறுப்பும், ஆயுனூல், தனுனூல், காந்தருவனூல், முதலிய வுபவுறுப்பு முடையனவாய்; பஞ்சப் பிரம்ம மந்திரந் தத்துவத்திரய மந்திர முதலிய மந்திர சாமானிய விசேடங்களும், ஸ்நானம், சந்தி, ஜெபம், ஓமம், தர்ப்பணம், வைசுவதேவம், இட்டி, அக்கினிட்டோமம், பசுபந்தம், தியாக நீயம் முதலிய

நித்திய கன்மங்களும், வருடகன்ம விசேடம், அயனகன்ம விசேடம், மாத கன்ம விசேடம், பருவகன்ம விசேடம் முதலிய நைமித்திக கன்மங் களும், அசுவமேதம், ராஜசூயம், பௌண்டரீக முதலிய காமிய கன்மங் களும், சுராபானம், பரதாரகமனம், அசத்திய வாசக முதலிய நிஷேத கன்மங்களும், அசகசம், சாந்திராயணம், கிரிச்சர முதலிய பிராயச்சித்த கன்மங்களும், சூரிய வுபாசனை, பிரம வுபாசனை, விண்டு வுபாசனை, ருத்திர வுபாசனை, பிரணவ வுபாசனை முதலிய உபாசனை கன்மங்களு மாகிய கன்ம சாமாந்திய விசேஷங்களும்; சமயத்தார், சாதியார் பலர்க்கு மொத்த வண்ணம் வரைதற்கும் ஓதற்கும் உணர்தற்கும் இடங்கொடாமை யும், பலவாறு விகற்பித்துக் கூறு மயக்கமு முடையனவாய்; தாந் திரு வருட் பர வயிந்துவ சத்தியான அபாவித்துவின்கண் உற்பத்தியாய் அத னிடத்தே லய மாதலில் ஆதியு மந்தமு முடைத்தா யிருத்தும், அங்ஙனங் கோடலின்றி யுற்பத்தி யின்மையும், லய மின்மையு மாகிய வநாதியென் றும், நித்தியமென்றும் தம்மைத் தாமே விபரீதத்தான் மீக்கூறுகின்ற மதமும் அகங்காரமும் பெற்றிருத்தலு மன்றியும்;

கருமை, — கடினம், — எளிதினுருகாமை, — புலால் நாற்ற முடைமை, — முதலிய வன்மைக் குணங்களான் வெளிப்பட்டு, மண் வெட்டி, கோடரி அரிவாள் முதலிய அற்ப கருவியை விரும்பினோர் எளிதிற் பெறத் தான் பரிணமித்தலே யன்றி, மகுட குண்டல முதலிய விசேடக் கருவிகளை விரும்பினோர்க்குத் தன் உண்மைக் குணமாய சுவர்ணத் தன்மையை நெடுஞ் சேய்மைக்கண் மறைத்து அரிதிற் பெற விருந்த அயலோக ஞாயம்போல், மாயா சத்தார்த்தப் பிரபஞ்ச காரிய சித்த விருத்தியாகிய வன்மைக் குணங்களான் வெளிப்பட்டு, பூலோக போகம், சுவர்க்கலோக போக முதலிய அநித்திய போகங்களை விரும்பி னோர் எளிதிற் பெறத் தாம் மந்திர தந்திரங்களாற் பரிணமித்தலே யன்றி, அருட்போகம், ஆனந்த போகம், சிவ போகம் முதலிய நித்திய போகங்களை விரும்பினோர்க்குத் தமது உண்மைக் குணமாகிய உபதேச லக்ஷியத் தன்மையை நெடுஞ்சேய்மைக் கண் மறைத்து அரிதிற் பெற விருத்தலாலும்; தன் பலத்தை விரும்பினோர்க்கு நின்று கர நீட்டித் தலினாலும் வேற்றுக் கருவி முதலியவற்றினுங் கை கூடுதலின்றி, மேலிவர்ந் தரிதிற் றலைக்கணின்று தன் காய்களைக் கவர்ந்தும் அந் நிலைக்கண் அனு பவித்தற்கும் வேறோர் கருவி வேண்ட நின்ற 'இலாங்கலி விருட்ச ஞாயம் போல்' * உபதேச லக்ஷிபத் தன்மையைப் பெறத் தொடங்கிய சாதகர்க் குத் தத்தம் பருவத்திற்கடித்த வுணர்வானும், பல்வகைச் சாதகத்தானுங் கை கூடுதலின்றித் தெய்வ கதியான் முடிபு நோக்கி அத்தலைக்கண் அமைந்த பொருளைக் கவர்ந்தும் அந்நிலைக்கண் அனுபவித்தற்கும், வேதாந்த

* இலாங்கலி விருட்சம் என்பது,—மடல்விரிந்த பனை.

விசார முதலிய வேறோர் கருவி வேண்ட விருத்தலானும், — மனிதர் மொழி, — தேவர் மொழி, — முனிவர்மொழி, — அரிபிரமாதியர் மொழி, — உருத்திராதியர் மொழி, — என்பவைக்குப் பெரும்பாலும் பிரமாணமாகி நிற்பன வன்றித் திருவருட் பாவயிந்துரைத் தூரிய மொழிக்கு ஒருவாற் றானும் பிரமாண மாகா வென்க.

ஆகமங்களுள் சில, இருக்குவேதம் போல, மந்திர கலையைக் குறித்துஞ் சில, தயித்திரீய வேதம் போல், தந்திர கலையைக் குறித்துஞ் சில சாமவேதம் போல உபயமுங் குறித்துஞ், சில அதர்வணவேதம் போல உலகியலைக் குறித்தும், வருதலின் — வேத சம்மதமாகியும், — சில ஏகான்ம விரோதஞ் சாதித்தலின் வேத விரோதமாகியும், — உபயமாயா காரியங்களைப் பெரும்பாலும் விரித்து விளக்கலான்; — மகேச்சுர சதா சிவாதி மொழிக்குப் பெரும்பாலும் பிரமாணமாமன்றி, இத்தூரிய மொழிக்குப் பிரமாண மாகா வென்க.

இதனால், வேதாகமங்கள் சகலத்திற் சகுணமாகத் தோன்றிய ஈசுவர வாக்கியங்க ளென்பதும், "உலகெலாம்" என்பது பூரண நிஷ்களத்தில் நிர்க்குணமாகத் தோன்றிய பரசிவ வாக்கிய மென்பதும், "உணர்ந் தோதற் கரியவன்" என்பது ஏகதேச நிஷ்களத்தில் நிர்க்குண மாகத் தோன்றிய பரசிவ வாக்கிய மென்பது மறிக வென்க.

ஆயின் இம் மெய்ம் மொழிக்கு உரைப் பிரமாணம் வேறின் ருலோ எனின்:—

தற்சுதந்தரத்தானுந் தற்புகழ்ச்சியானுந், — தன் மேம்பாடு வெளிப்படுத்து நிமித்தத்தானும் ஈசுராதிகளா லுபசரித் துரைக்கப்பட்ட வேதாகமாதிகள் இவ்வன மெய்ம் மொழிப் பிரமாணமாகா வென்றதன்றி, சிவ சுதந்தரத்தானு நிரகங்காரத்தானுஞ் சிற்சத்தி, ஆனந்தசத்தி, துவாபர மாக நாதாந்தத்திருந்து சிவ ஞானிகண் மோனந் ததும்ப மொழிந் தருளிய, திருவருட் குரிய மொழிகளைப் பிரமாண மாகா வென்கிலம். ஆகலின் உரை யளவை வேண்டுங்கால் அச்சிவ ஞானிகளது திருவருட் குரிய மொழிகளுட் குறிக்கவேண்டுவன குறிக்குது மென்க.

இம் மெய்ம் மொழி நிர்க்குண லக்ஷியமுடைய தாகலின், —

"அறிவுறு வுடையார் குறி குணங் குறியார்
என்பது கருதி யன்பத ருலே
வெருவா திதன்பொருள் விளக்க மென்னப்
பெருவாய் மையர்போற் பிதற்றின னன்றி
விளக்கும் வன்மையான் விளக்க வந்தனன்
றனக்கு நுண்ணிய அறிவி லேனே!"

மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் வருமாறு

அருட்பெருஞ்ஜோதி

இனி யிம் மெய்ம் மொழிக்குப் பொருள் விளக்கங் கூறுதும்.

"உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்." *

இதனுட் கலிவிருத்த வியலின் நாற் சீ ரோரடியான் முடிந்த "உலகெலா முணர்ந் தோதற் கரியவன்" என்னும் திருவருட் பா வயிந்துவத் தூரிய மெய்ம்மொழித் தொடர்க்கண் 'உலகெலாம்' என்னும் முதன் மெய்ம் மொழிப் பொருள் விளக்கம் வருமாறு :—

"உலகெலாம்" என்பது :—

I. தத்துவ உலகங்கள்

1. காரிய பூத தத்துவ உலகு.

சூக்கும ஸ்தூல அந்தரங்க பகிரங்க சாதாரண அசாதாரண பவுதிகப் பிரத்தியக்ஷ வியக்தி ரூப சமவாய காரண மூலமாயாந்த ராந்த ராங்கார ஏகதேசாத்பவ தன் மாத்திரை காரிய பூத தத்துவ வுலகு.

1. சூக்குமாந்தர சிநேகாணுத்வ சவிகற்ப சாத்திய விசித்திர பூத ரூப சத்தி யுலகு. 2. ஸ்தூலவாகிய சிநேகாணுத்வ சவிகற்ப சாத்திய விசித்ர பூத சொரூப சத்தி யுலகு. 3. சூக்கும ஸ்தூலவாகி யாந்திர கிரியா சிநேகாணுத்துவ சவிகற்ப கன்ம சாத்திய சாதக விசித்திர பூத சுபாவ சத்தி யுலகு.

4. காரணனு காரிய பரியந்த சாத்திபத்துவ பூத சாதி சாமானிய வியாத்தி சத்தி யுலகு. 5. காரியாணு காரண பரியந்த சாத்தியத்வ பூ தோபாதி சாமானிய விபாபக சத்தி யுலகு. 6. விவித

* பெரியபுராணம், பாயிரம், 1-வது திருவிருத்தம் — நடராஜர் துதி.

ரூப சாத்திய பூத விசேட சத்தி யுலகு. 7. விதாணு வியாபாரத்துவ பூத குண சத்தி யுலகு. 8. பாகி யேந்திரிய சூக்கும விகற்ப விஷய சாத்தியத்துவ பூத வர்ன சத்தி யுலகு. 9. விசேஷாணுத்வ சாத்திய பூத பரதத்துவ சத்தி யுலகு. 10. சாமானி யாணுத்வ சாத்திய பூ தாபரத்துவ சத்தி யுலகு. 11. அநே காணுத்துவ விசித்திர சாமானிய சமவாய சாத்திய பூத பாவ சத்தி யுலகு. 12. அதிட்டாந மாத்திர பூத நிமித்த சத்தி யுலகு. 13. அதிட்டாந விசேட மாத்திர பூத நிமித்த விசேட சத்தி யுலகு.

14. அன்றி, சூக்கும ஸ்தூல சிதேகாணுத்துவ சம்பந்த ரூப வியத்தியாதி சாதக சாத்திய பூ தோற்பவ சத்தி யுலகு. 15. பூ தோற் பவ ரதிகரண சத்தி யுலகு. 16. பூதோற்பவ கரண சத்தி யுலகு. 17. பூ தோற்பவ பருவ சத்தி யுலகு. 18. பூ தோற்பவ கன்ம சத்தி யுலகு. 19. பூ தோற்பவ உபகார சத்தி யுலகு. 20. பூ தோற்பவ உபகார பிரேரக சத்தி யுலகு. 21. பூ தாதிகார சத்தி யுலகு. 22. பூ தாதி காரவதிகரண சத்தி யுலகு. 23. பூ தாதிகார கரண சத்தி யுலகு. 24. பூ தாதிகார பருவ சத்தி யுலகு. 25. பூ தாதிகார கன்ம சத்தி யுலகு 26. பூ தாதிகா ரோபகார சத்தி யுலகு. 27. பூ தாதிகா ரோபகாரப் பிரேரக சத்தி யுலகு. 28. பூத லய சத்தி யுலகு. 29. பூத லயாதிகரண சத்தி யுலகு. 30. பூத லய கரண சத்தி யுலகு. 31. பூத லய பருவ சத்தி யுலகு. 32. பூத லய கன்ம சத்தி யுலகு. 33. பூத லயோபகார சத்தி யுலகு. 34. பூத ல போபகாரப் பிரேரக சத்தி யுலகு.

இங்ஙனம், 35. கடிங் குருத்துவாதி பிருதிவி ரூப சத்தி யுலகு 36. சீதத் திரவத்வாதி யப்பு ரூப சத்தி யுலகு. 37. உஷ்ண லகுத்வாதி தேயு ரூப சத்தி யுலகு. 38. சலனத்ப திலகுத்வ வாயு ரூப சத்தி யுலகு. 39. நிரந்த ராதிகரண பரமாத்திய திலகுத் வாகாய ரூப சத்தி யுலகு.

40. சதுட் கோண பிருதிவி சொரூப சத்தி யுலகு. 41. திரி கோண வப்பு சொரூப சத்தி யுலகு. 42, திரி கோண தேயு சொரூப சத்தி யுலகு. 43. ஷட் கோண வாயு சொரூப சத்தி யுலகு. 44. குண்ட லாகார வாகாய சொரூப சத்தி யுலகு. 45. குருத்வ சிதேகாணுத் துவ சாதரா சாதாரண சூக்கும ஸ்தாபன கன்மத்துவ பிருதிவி சுபாவ சத்தி யுலகு. 46. திரவத்துவ சிதேகாணுத்துவ சாதரா தப்

பிரசாரண கன்மத்துவ வப்பு சுபாவ சத்தி யுலகு. 47. உஷ்ண சிநே காணுத் வாதிலகுத்வ சாதநோர்த்தப் பிரசாரண கன்மத்துவ தேயு சுபாவ சத்தி யுலகு. 48. ஆலம்புவ சிநேகாணுத்வத் யதிலகுத்வ சாதந வியாபகோபாநுப் பிரசாரண கன்பத்துவ வாயு சுபாவ சத்தி யுலகு. 49. நிராகார சிநேகாணுத்துவ பரமாத்தி யதிலகுத்வ சூக்கும சாத நாநுசூத காரண கன்மத்து வாகாய சுபாவசத்தி யுலகு.

50. விவித விசித்ர ரூப சாத்திய பிருதிவி விசேட சத்தி யுலகு. 51. அப்பு விசேட சத்தி யுலகு. 52. தேயு விசேட சத்தி யுலகு. 53. வாயு விசேட சத்தி யுலகு. 54. ஆகாய விசேட சத்தி யுலகு.

55. பிண்டாண்ட பரியந்த சாதி சாமானிய சாத்திபப் பிருதிவி விபாத்தி சத்தி யுலகு. 56. அப்பு விபாத்தி சத்தி யுலகு. 57. தேயு விபாத்தி சத்தி யுலகு. 58. வாயு விபாத்தி சத்தி யுலகு. 59. ஆகாய விபாத்தி சத்தி யுலகு.

60. மாயா பரியந் தோபாதி சாமாநிய சாத்திபப் பிருதிவி விபாபக சத்தி யுலகு. 61. அப்பு விபாபக சத்தி யுலகு. 62. தேயு விபாபக சத்தி யுலகு. 63. வாயு விபாபக சத்தி யுலகு. 64. ஆகாய விபாபக சத்தி யுலகு.

65. விவி தோற்பவாணு வாணுத்வ விசித்திரப் பிருதிவி குண சத்தி யுலகு. 66. அப்பு குணசத்தி யுலகு. 67. தேயு குணசத்தி யுலகு. 68. வாயு குணசத்தி யுலகு. 69. ஆகாய குணசத்தி யுலகு. 70. பிருதிவி வர்ன சத்தி யுலகு. 71. அப்பு வர்ன சத்தி யுலகு. 72. தேயு வர்ன சத்தி யுலகு. 73. வாயு வர்ன சத்தி யுலகு. 74. ஆகாய வர்ன சத்தி யுலகு, 75. பிருதிவி பாவ சத்தி யுலகு. 76. அப்பு பாவ சத்தி யுலகு. 77. தேயு பாவ சத்தி யுலகு. 78. வாயு பாவ சத்தி யுலகு. 79. ஆகாய பாவ சத்தி யுலகு. 80. பிருதிவி பரத்துவ சத்தி யுலகு. 81. அப்பு பரத்துவ சத்தி யுலகு. 82. தேயு பரத்துவ சத்தி யுலகு. 83. வாயு பரத்துவ சத்தி யுலகு. 84. ஆகாய பரத்துவ சத்தி யுலகு. 85. பிருதிவி யபரத்துவ சத்தி யுலகு. 86. அப்பு அபரத்துவ சத்தி யுலகு. 87. தேயு வபரத்துவ சத்தி யுலகு. 88. வாயு வபரத்துவ சத்தி யுலகு. 89. ஆகாய அபரத்துவ சத்தி யுலகு.

90. பிருதிவி யுற்பவ சத்தி யுலகு. 91. பிருதிவி யுற்ப வாதிகரண சத்தி யுலகு. 92. பிருதிவி யுற்பவ கரண சத்தி யுலகு.

93. பிருதிவி யுற்பவ பருவ சத்தி யுலகு. 94. பிருதிவி யுற்பவ கன்ம சத்தி யுலகு. 95. பிருதிவி யுற்ப வோபகார சத்தி யுலகு. 96. பிருதிவி யுத்ப வோபகாரப் பிரேரக சத்தி யுலகு. 97. பிருதிவி யதிகார சத்தி யுலகு. 98. பிருதிவி யதிகா ராதிகரண சத்தி யுலகு. 99. பிருதிவி யதிகார கரண சத்தி யுலகு. 100. பிருதிவி யதிகார பருவ சத்தி யுலகு. 101. பிருதிவி யதிகார கன்ம சத்தி யுலகு. 102. பிருதிவி யதிகார நிமித்த சத்தி யுலகு. 103. பிருதிவி யதிகார நிமித்த விசேட சத்தி யுலகு. 104. பிருதிவி லய சத்தி யுலகு. 105. பிருதிவி ல யாதிகரண சத்தி யுலகு. 106. பிருதிவி லய கரண சத்தி யுலகு. 107. பிருதிவி லய பருவ சத்தி யுலகு. 108. பிருதிவி லய கன்ம சத்தி யுலகு. 109. பிருதிவி ல யோபகார சத்தி யுலகு. 110. பிருதிவி ல யோபகாரப் பிரேரக சத்தி யுலகு.

111. அப்பு வுற்பவ சத்தி யுலகு. 112. அப்பு வுற்பவாதி கரண சத்தி யுலகு. 113, அப்பு வுற்பவ கரண சத்தி யுலகு. 114. அப்பு வுற்பவ பருவ சத்தி யுலகு. 115. அப்பு வுற்பவ கன்ம சத்தி வுலகு. 116. அப்பு வுற்ப வோபகார சத்தி யுலகு. 117. அப்பு வுற்பவோப காரப் பிரேரக சத்தி யுலகு. 118. அப்பு வதிகா ராதிகரண சத்தி யுலகு. 119. அப்பு வதிகார கரண சத்தி யுலகு. 120. அப்பு வதி கார பருவ சத்தி யுலகு. 121. அப்பு வதிகார கன்ம சத்தி யுலகு. 122. அப்பு வதிகார உபகார சத்தி யுலகு. 123. அப்பு வதிகா ரோப காரப் பிரேரக சத்தி யுலகு. 124. அப்பு லய சத்தி யுலகு. 125. அப்பு ல யாதிகரண சத்தி யுலகு. 126. அப்பு லய கரண சத்தி யுலகு. 127. அப்பு லய பருவ சத்தி யுலகு. 128. அப்பு லய கன்ம சத்தி யுலகு. 129. அப்பு ல போபகார சத்தி யுலகு. 130. அப்பு ல யோபகார பிரேரக சத்தி யுலகு.

131. தேயு யுற்பவ சத்தி யுலகு. 132. தேயு உற்ப வாதிகரண சத்தி யுலகு, 133. தேயு வுற்பவ கரண சத்தி யுலகு. 134. தேயு வுற்பவ பருவ சத்தி யுலகு. 135. தேயு வுற்பவ கன்ம சத்தி யுலகு, 136. தேயு வுற்ப வோபகார சத்தி யுலகு. 137. தேயு வுற்ப வோபகாரப் பிரேரக சத்தி யுலகு. 138. தேயு வதிகார சத்தி யுலகு. 139. தேயு வதிகா ராதிகரண சத்தி யுலகு. 140. தேயு வதிகார கரண சத்தி யுலகு. 141. தேயு வதிகார பருவ சத்தி யுலகு. 142. தேயு வதிகார கன்ம சத்தி யுலகு. 143. தேயு வதிகா ரோப காரச் சத்தி யுலகு. 144. தேயு வதிகா ரோபகாரப் பிரேரக சத்தி யுலகு. 145. தேயு லய சத்தி யுலகு. 146. தேயு ல யாதிகரண சத்தி யுலகு. 147. தேயு லய கரண சத்தி யுலகு. 148. தேயு லய

பருவ சத்தி யுலகு. 149. தேயு லய கன்ம சத்தி யுலகு. 150. தேயு ல யோபகார சத்தி யுலகு. 151. தேயு ல யோபகாரப் பிரேரக சத்தி யுலகு.

152. வாயு வுற்பவ சத்தி யுலகு. 153. வாயு வுற்பவ வாதிகரண சத்தி யுலகு. 154. வாயு வுற்பவ கரண சத்தி யுலகு. 155. வாயு வுற்பவ பருவ சத்தி யுலகு. 156. வாயு வுற்பவ கன்ம சத்தி யுலகு. 157. வாயு வுற்ப வோபகார சத்தி யுலகு. 158. வாயு வுற்ப வோபகாரப் பிரேரக சத்தி யுலகு. 159. வாயு வதிகார சத்தி யுலகு. 160. வாயு வதிகா ராதிகரண சத்தி யுலகு. 161. வாயு வதி கார கரண சத்தி யுலகு. 162. வாயு வதிகார பருவ சத்தி யுலகு. 163. வாயு வதிகார கன்ம சத்தி யுலகு. 164. வாயு வதிகா ரோப காரசத்தி யுலகு. 165. வாயுவதிகா ரோபகாரப் பிரேரக சத்தி யுலகு. 166. வாயு லய சத்தி யுலகு. 167. வாயு ல யாதிகரண சத்தி யுலகு. 168. வாயுலய கரண சத்தி யுலகு. 169. வாயு லய பருவ சத்தி யுலகு. 170. வாயு லய கன்ம சத்தி யுலகு. 171. வாயு ல யோபகார சத்தி யுலகு. 172. வாயு ல யோபகாரப் பிரேரக சத்தி யுலகு.

173. ஆகாய வுற்பவ சத்தி யுலகு. 174. ஆகாய வுற்ப வாதிகரண சத்தி யுலகு. 175. ஆகா யோற்பவ கரண சத்தி யுலகு. 176. ஆகா யோற்பவ பருவ சத்தி யுலகு. 177. ஆகா யோற்பவ கன்ம சத்தி யுலகு. 178. ஆகா யோற்ப வோபகார சத்தி யுலகு. 179. ஆகா யோற்ப வோபகாரப் பிரேரக சத்தி யுலகு. 180. ஆகாய வதிகார சத்தி யுலகு. 181. ஆகா யாதிகா ராதிகரண சத்தி யுலகு. 182. ஆகாய வதிகார கரண சத்தி யுலகு. 183. ஆகாய வதிகார பருவ சத்தி யுலகு. 184. ஆகாய வதிகார கன்ம சத்தி யுலகு. 185. ஆகாய வதிகா ரோபகார சத்தி யுலகு. 186. ஆகாய வதிகா ரோபகாரப் பிரேரக சத்தி யுலகு. 187. ஆகாய லய சத்தி யுலகு. 188. ஆகாய ல யாதிகரண சத்தி யுலகு. 189. ஆகாய லய கரண சத்தி யுலகு. 190. ஆகாய லப பருவ சத்தி யுலகு. 191 ஆகாய லய கன்ம சத்தி யுலகு. 192. ஆகாய ல யோபகார சத்தி யுலகு. 193. ஆகாய ல யோபகாரப் பிரேரக சத்தி யுலகு.

174. பிருதிவிப் பிருதிவி பூதசத்தி யுலகு. 195. பிருதிவி யப்பு சத்தி யுலகு. 196. பிருதிவித் தேயு சத்தி யுலகு. 197. பிருதிவி வாயு சத்தி யுலகு. 198. பிருதிவி யாகாய சத்தி யுலகு. 199. அப்புப் பிருதிவி சத்தி யுலகு. 200. அப்பு அப்பு சத்தி யுலகு. 201. அப்புத்

தேயு சத்தி யுலகு. 202. அப்பு வாயு சத்தி யுலகு. 203. அப்பு ஆகாய சத்தி யுலகு. 204. தேயுப் பிருதிவி பூத சத்தி யுலகு. 205. தேயு அப்பு பூத சத்தி யுலகு. 206. தேயுத் தேயு பூத சத்தி யுலகு. 207. தேயு வாயு பூத சத்தி யுலகு. 208. தேயு ஆகாய பூத சத்தி யுலகு. 209. வாயுப் பிருதிவி பூத சத்தி யுலகு. 210. வாயு அப்பு பூத சத்தி யுலகு. 211. வாயுத் தேயு பூத சத்தி யுலகு. 212. வாயு வாயு பூத சத்தி யுலகு. 213. வாயு ஆகாய பூத சத்தி யுலகு. 214. ஆகாயப் பிருதிவி பூத சத்தி யுலகு. 215. ஆகாய அப்பு பூத சத்தி யுலகு. 216. ஆகாயத் தேயு பூத சத்தி யுலகு. 217. ஆகாய வாயு பூத சத்தி யுலகு. 218. ஆகாய ஆகாய பூத சத்தி யுலகு.

அன்றி, 219. சரபேத பௌதிக சத்தி யுலகு. 220. அசர பேத பௌதிக சத்தி யுலகு முதலியவுங் கோள்க. (ஆக 220.)

2. தன்மாத்திரைத் தத்துவ உலகு.

சாதார ணாசாதாரண சூக்கும ஸ்தூல பூதாணுப் பிரத்தியகூப் பிரகிருதி வியக்தி சமவாய மூலமா யாந்த ரங்கா ரேகதேச காரிய தன்மாத்திரைத் தத்துவ உலகு.

1. பூத சமவாய மாத்திர தன்மாத்திரை ரூப சத்தி யுலகு. 2. பூத சமவாய சாமானிய மாத்திர தன்மாத்திரை சொரூப சத்தி யுலகு. 3. உற்ப வோத்தியோ கத்துவ தன்மாத்திரை சுபாவ சத்தி யுலகு. 4. பூத பௌதிக பரியந்த தன்மாத்திரை வியாத்தி சத்தி யுலகு. 5. மாயா பரியந்த தன்மாத்திரை வியாபக சத்தி யுலகு. 6. சூக்கும வியாபார மாத்திர தன்மாத்திரை விசேட சத்தி யுலகு. 7. பூதான்மிய மாத்திர தன்மாத்திரை குணசத்தி யுலகு.

அன்றி, 8. தன்மாத்திரை வர்ண சத்தி யுலகு. 9. தன்மாத்திரை பாவ சத்தி யுலகு. 10. தன்மாத்திரை பரத்துவ சத்தி யுலகு. 11. தன்மாத்திரை அபரத்துவ சத்தி யுலகு.

இங்ஙனம், 12. சூக்கும விசேஷாணுத்வ சம்பந்த ரூப வியக்தி யாதி சாதக சாத்திய தன்மாத்திரை உற்பவ சத்தி யுலகு. 13. தன்மாத்திரை உற்ப வாதிகரண சத்தி யுலகு. 14. தன்மாத்திரை உற்பவ கரண சத்தி யுலகு. 15. தன்மாத்திரை உற்பவ பருவ சத்தி யுலகு. 16. தன்மாத்திரை உற்பவ கன்ம சத்தி யுலகு. 17. தன்மாத்திரை

உற்ப வோபகார சத்தி யுலகு. 18. தன்மாத்திரை உற்ப வோபகாரப் பிரோக சத்தி யுலகு. 19. தன்மாத்திரை அதிகார சத்தி யுலகு. 20. தன்மாத்திரை அதிகா ராதிகரண சத்தி யுலகு. 21. தன்மாத்திரை அதிகார கரண சத்தி யுலகு. 22. தன்மாத்திரை யதிகார பருவ சத்தி யுலகு. 23. தன்மாத்திரை அதிகார கன்ம சத்தி யுலகு. 24. தன்மாத் திரை அதிகா ரோபகார சத்தி யுலகு. 25. தன்மாத்திரை அதிகா ரோபகாரப் பிரோக சத்தி யுலகு. 26. தன்மாத்திரை லய சத்தி யுலகு. 27. தன்மாத்திரை லயாதிகரண சத்தி யுலகு. 28. தன்மாத்திரை லய கரண சத்தி யுலகு. 29. தன்மாத்திரை லய பருவ சத்தி யுலகு. 30. தன்மாத்திரை லய கன்ம சத்தி யுலகு. 31. தன்மாத்திரை லயோபகார சத்தி யுலகு. 32. தன்மாத்திரை லயோபகாரப் பிரோக சத்தி யுலகு முதலியவுங் கொள்க.

33. தன்மாத்திரை நிமித்த சத்தி யுலகு. 34. தன்மாத்திரை நிமித்த விசேட சத்தி யுலகுங் கொள்க. ஆக (220 + 34 = 254.)

3. ஞானேந்திரிய தத்துவ உலகு.

மூல மாயாந்த ராங்கார பாகிய விகற்ப ஞான லேச ஏகதேச காரிய பவுதிக பாகியத் துவார ஞான வியக்தி விகற்ப மாத்திர ஞானேந்திரிய தத்துவ வுலகு.

1. பூத சம்பந்த பிரஞ்ஞா விஷ யாணுத்துவ சாத்திய ஞானேந் திரிய ரூப சத்தி யுலகு. 2. பௌதிகத் துவார ஞாணுத்துவ சாத் திய ஞானேந்திரிய சொரூப சத்தி யுலகு. 3. பிரஞ்ஞா விகற்ப கன்ம ஏகாணுத்துவ சாத்திய ஞானேந்திரிய சுபாவ சத்தி யுலகு. 4. தன் மாத்திரை பரியந்த சாதி சாமானிய ஞானேந்திரிய வியாத்தி சத்தி யுலகு. 5. விஷயப் பிரஞ்ஞா பரியந்த வுபாதி சாமானிய ஞானேந்திரிய வியாபக சத்தி யுலகு. 6. விஷய விசித்திரப் பிரஞ்ஞா வியாபார ஞானேந்திரிய விசேட சத்தி யுலகு. 7. இச்சாரம்பத்துவ ஞானேந்திரிய குண சத்தி யுலகு. 8. அந்த ரேந்திரிய சூக்கும விஷய சாத்திய ஞானேந்திரிய வர்ன சத்தி யுலகு. 9. விசேஷப் பிரஞ் ஞாணுத்துவ ஞானேந்திரிய பரத்துவ சத்தி யுலகு. 10. சாமானியப் பிரஞ் ஞாணுத்துவ ஞானேந்திரிய அபரத்துவ சத்தி யுலகு. 11. பகு வணுத்துவ சமவாய சாத்திய ஞானேந்திரிய பாவ சத்தி யுலகு.

இங்ஙனம், 12. சூக்கும சினேக ஞாலணுத்துவ சம்பந்த விசித்திர ரூப வியத்யாதி சாதக சாத்திய ஞானேந்திரி யோற்பவ சத்தி யுலகு. 13. ஞானேந்திரி யோற்ப வாதிகரண சத்தி யுலகு. 14. ஞானேந்திரிய உற்பவ கரண சத்தி யுலகு. 15. ஞானேந்திரிய உற்பவ பருவ சத்தி யுலகு. 16. ஞானேந்திரி யோற்பவ கன்ம சத்தி யுலகு. 17. ஞானேந்திரி யோற்ப வோபகார சத்தி யுலகு. 18. ஞானேந்திரி யோற்ப வோபகாரப் பிரேரக சத்தி யுலகு. 19. ஞானேந்திரி யாதிகார சத்தி யுலகு. 20. ஞானேந்திரிய அதிகா ராதிகரண சத்தி யுலகு. 21. ஞானேந்திரிய அதிகார கரண சத்தி யுலகு. 22. ஞானேந்திரிய அதிகார பருவ சத்தி யுலகு. 23. ஞானேந்திரிய அதிகார கன்ம சத்தி யுலகு. 24. ஞானேந்திரிய அதிகா ரோபகார சத்தி யுலகு. 25. ஞானேந்திரிய அதிகா ரோபகாரப் பிரேரக சத்தி யுலகு. 26. ஞானேந்திரிய லய சத்தி யுலகு. 27. ஞானேந்திரிய லயாதிகரண சத்தி யுலகு. 28. ஞானேந்திரிய லய கரண சத்தி யுலகு. 29. ஞானேந்திரிய லய பருவ சத்தி யுலகு. 30. ஞானேந்திரிய லய கன்ம சத்தி யுலகு. 31. ஞானேந்திரிய லயோபகார சத்தி யுலகு. 32. ஞானேந்திரிய லயோபகாரப் பிரேரக சத்தி யுலகு.

33. ஆகாய சம்பந்த சத்த விஷ யாணுத்துவ சாத்திய சுரோத்தி ரேந்திரிய ரூப சத்தி யுலகு. 34. வாயு சம்பந்த பரிச விஷயாணுத்துவ சாத்திய தொக் கேந்திரிய ரூப சத்தி யுலகு. 35. தேயு சம்பந்த ரூப விஷயாணுத்துவ சாத்திய சேத்தி ரேந்திரிய ரூப சத்தி யுலகு.

36. அப்பு சம்பந்த ரச விஷயாணுத்துவ சாத்திய சிங்ஙேந் திரிய ரூப சத்தி யுலகு. 37. பிருதிவி சம்பந்த கந்த விஷயாணுத்துவ சாத்திய கிராணேந்திரிய ரூப சத்தி யுலகு.

38. சத்தத் துவார ஞாலணுத்துவ சாத்திய சுரோத்தி ரேந்திரிய சொரூப சத்தி யுலகு. 39. பரிசத்துவார ஞாலணுத்துவ சாத்திய தொக் கேந்திரிய சொரூப சத்தி யுலகு. 40. ரூபத் துவார ஞாலணுத்துவ சாத்திய சேத்தி ரேந்திரிய சொரூப சத்தி யுலகு. 41. ரசத் துவார ஞாலணுத்துவ சாத்திய சிங் ஙேந்திரிய சொரூப சத்தி யுலகு. 42. கந்தத் துவார ஞாலணுத்துவ சாத்தியக் கிரா ணேந்திரிய சொரூப சத்தி யுலகு.

43. சத்த கன்ம ஏகாணுத்துவ சாத்திய சுரோத்தி ரேந் திரிய சுபாவ சத்தி யுலகு. 44. பரிச கன்ம ஏகாணுத்துவ சாத்

திய தொக் கேந்திரிய சுபாவ சத்தி யுலகு. 45. திருஷ்டி கன்ம ஏகாணுத்துவ சாத்திய நேத்தி ரேந்திரிய சுபாவ சத்தி யுலகு. 46. ரச கன்ம ஏகாணுத்துவ சாத்திய சிங் ஙேந்திரிய சுபாவ சத்தி யுலகு. 47. கந்த கன்ம ஏகாணுத்துவ சாத்திய கிரா ணேந்திரிய சுபாவ சத்தி யுலகு.

48. சத்த தன்மாத்திரை பரியந்த சுரோத்தி ரேந்திரிய வியாத்தி சத்தி யுலகு. 49. பரிச தன்மாத்திரை பரியந்த தொக் கேந்திரிய வியாத்தி சத்தி யுலகு. 50. ரூப தன்மாத்திரை பரியந்த நேத்தி ரேந்திரிய வியாத்தி சத்தி யுலகு. 51. ரச தன்மாத்திரை பரியந்த சிங் ஙேந்திரிய வியாத்தி சத்தி யுலகு. 52. கந்த தன்மாத் திரை பரியந்த கிரா ணேந்திரிய வியாத்தி சத்தி யுலகு.

53. சத்தப் பிரஞ்ஞை சாத்திய சுரோத்தி ரேந்திரிய வியா பக சத்தி யுலகு. 54. பரிசப் பிரஞ்ஞை சாத்திய தொக் கேந்திரிய வியாபக சத்தி யுலகு. 55. ரூபப் பிரஞ்ஞை சாத்திய நேத்தி ரேந் திரிய வியாபக சத்தி யுலகு. 56. ரசப் பிரஞ்ஞை சாத்திய சிங் ஙேந் திரிய வியாபக சத்தி யுலகு. 57. கந்தப் பிரஞ்ஞை சாத்திய கிரா ணேந்திரிய வியாபக சத்தி யுலகு.

58. சத்தத்துவ சாமானிய பிரஞ்ஞை விசேட சுரோத்தி ரேந்திரிய விசேட சத்தி யுலகு. 59. பரிசத்துவ சாமானிய பிரஞ்ஞை விசேட தொக் கேந்திரிய விசேட சத்தி யுலகு. 60. ரூபத்துவ சாமானிய பிரஞ்ஞை விசேட நேத்திரேந்திரிய விசேட சத்தி யுலகு. 61. ரசத்துவ சாமானிய பிரஞ்ஞை விசேட சிங் ஙேந்திரிய விசேட சத்தி யுலகு. 62. கந்தத்துவ சாமானிய பிரஞ்ஞை விசேட கிராணேந்திரிய விசேட சத்தி யுலகு.

63. சத் தேச் சாரம்ப சுரேத்தி ரேந்திரிய குண சத்தி யுலகு. 64. பரி சேச் சாரம்ப தொக் கேந்திரிய குண சத்தி யுலகு. 65. ரூ பேச் சாரப்ப நேத்தி ரேந்திரிய குண சத்தி யுலகு. 66. ரச விச் சாரப்ப சிங் ஙேந்திரிய குண சத்தி யுலகு. 67. கந் தேச் சாரப்ப கிரா ணேந்திரிய குண சத்தி யுலகு.

68. அந்த ரேந்திரிய சூக்கும விகற்ப விஷய சாத்திய சுரோத்தி ரேந்திரிய வர்ன சத்தி யுலகு. 69. தொக் கேந்திரிய வர்ன சத்தி யுலகு. 70. நேத்தி ரேந்திரிய வர்ன சத்தி யுலகு.

71. சிங் ஙேந்திரிய வர்ன சத்தி யுலகு. 72. கிரா ணைந்திரிய வர்ன சத்தி யுலகு.

73. விசேட சத்தப் பிரஞ் ஞாணுத்துவ சுரோத்தி ரேந் திரிய பரத்துவ சத்தி யுலகு. 74. விசேட பரிசப் பிரஞ் ஞாணுத்துவ தொக் கேந்திரிய பரத்துவ சத்தி யுலகு. 75. விசேட ரூபப் பிரஞ் ஞாணுத்துவ நேத்தி ரேந்திரிய பரத்துவ சத்தி யுலகு. 76. விசேட ரசப் பிரஞ் ஞாணுத்துவ சிங் ஙேந்திரிய பரத்துவ சத்தி யுலகு. 77. விசேட கந்தப் பிரஞ் ஞாணுத்துவ கிரா ணைந்திரிய பரத்துவ சத்தி யுலகு.

78. சாமானிய சத்தப் பிரஞ் ஞாணுத்துவ சுரோத்தி ரேந் திரிய அபரத்துவ சத்தி யுலகு. 79. சாமானிய பரிசப் பிரஞ் ஞாணுத் துவ தொக் கேந்திரிய அபரத்துவ சத்தி யுலகு. 80. சாமானிய ரூபப் பிரஞ் ஞாணுத்துவ நேத்தி ரேந்திரிய அபரத்துவ சத்தி யுலகு. 81. சாமானிய ரசப் பிரஞ் ஞாணுத்துவ சிங் ஙேந்திரிய அபரத்துவ சத்தி யுலகு. 82. சாமானிய கந்தப் பிரஞ் ஞாணுத்துவ கிரா ணைந் திரிய அபரத்துவ சத்தி யுலகு.

இங்ஙனம், 83. சுரோத்தி ரேந்திரிய பாவ சத்தி யுலகு. 84. சுரோத்தி ரேந்திரிய அதிகார சத்தி யுலகு முதலியவைபுங் கொள்க.

அன்றி, 85. சுரோத்தி ரேந்திரி யோற்பவ சத்தி யுலகு. 86. சுரோத்தி ரேந்திரிய அதிகார சத்தி யுலகு. 87. சுரோத்தி ரேந்திரிய லய சத்தி யுலகு. 88. தொக் கேந்திரி போற்பவ சத்தி யுலகு. 89. தொக் கேந்திரிய அதிகார சத்தி யுலகு. 90. தொக் கேந் திரிய லய சத்தி யுலகு. 91. நேத்தி ரேந்திரி யோற்பவ சத்தி யுலகு. 92. நேத்தி ரேந்திரிய அதிகார சத்தி யுலகு. 93. நேத்தி ரேந்திரிய லய சத்தி யுலகு. 94. சிங் ஙேந்திரி யோற்பவ சத்தி யுலகு. 95. சிங் ஙேந்திரிய அதிகார சத்தி யுலகு. 96. சிங் ஙேந்திரிய லய சத்தி யுலகு. 97. கிரா ணைந்திரி யோற்பவ சத்தி யுலகு. 98. கிரா ணைந்திரிய அதிகார சத்தி யுலகு. 99. கிரா ணைந்திரிய லய சத்தி யுலகு.

அன்றி, 100. உற்பவ அதிகார லய அதிகரண சத்தி யுலகு. 101. கரண சத்தி யுலகு, 102. பருவ சத்தி யுலகு. 103. கன்ம சத்தி யுலகு. 104. உபகார சத்தி யுலகு முதலியவுங் கொள்க. 105. ஞானேந் திரிய நிமித்த சத்தி யுலகு. 106. நிமித்த விசேட சத்தி யுலகுங் கொள்க.

(ஆக 254 + 106 = 360.)

4. ஞானேந்திரிய விஷய தத்துவ உலகு

மூலமாயா விச்சாலேச ஏகதேச காரியப் பிரஞ்ஞா விஷய மாத்திர ஞானேந்திரிய விஷய தத்துவ உலகு.

1. பூதபேத சூக்கு மாந்தர சவிகற்ப குணத்துவ ஞானேந்திரிய விஷய ரூப சத்தி யுலகு. 2. பூதபேத சூக்குமாந்தர சவிகற்ப குண விஷயத்துவ ஞானேந்திரிய விஷய சொரூப சத்தி யுலகு.

3. சூக்கு மாந்தர பௌதிக சையோகத்துவ ஞானேந்திரிய சுபாவ சத்தி யுலகு. 4. பர மாணுப் பிரஞ்ஞை சாத்திய ஞானேந்திரிய விஷய விசேட சத்தி யுலகு. 5. இந்திரிய பரியந்த சாதி சாமானிய ஞானேந்திரிய விஷய வியாத்தி சத்தி யுலகு. 6. பரமாணுப் பிரஞ்ஞா வியாபார வுபாதி சாமானிய ஞானேந்திரிய விஷய வியாபக சத்தி யுலகு.

7. பூத பீஜத்துவ ஞானேந்திரிய விஷய குண சத்தி யுலகு. 8. சொரூப விசித்திரத்துவ ஞானேந்திரிய விஷய வர்ன சத்தி யுலகு. 9. சாமானிய விசேஷாணுத்துவ சமவாய சாத்திய ஞானேந்திரிய விஷய பாவ சத்தி யுலகு. 10. கார ணாணுத்துவ ஞானேந்திரிய விஷய பரத் துவ சத்தி யுலகு. 11. காரி யாணுத்துவ ஞானேந்திரிய விஷய அபரத்துவ சத்தி யுலகு. 12. ஞானேந்திரிய விஷய நிமித்த சத்தி யுலகு. 13. நிமித்த விசேட சத்தி யுலகு. 14. சூக்கும சினேகாணுத் துவ சம்பந்த ரூப வியத்தியாதி சாதக சாத்திய ஞானேந்திரிய விஷய உற்பவ சத்தி யுலகு. 15. ஞானேந்திரிய விஷய அதிகார சத்தி யுலகு. 16. ஞானேந்திரிய விஷய லய சத்தி யுலகு.

இங்ஙனம், 17. உற்பவ அதிகார லய அதிகரண சத்தி யுலகு. 18. கரண சத்தி யுலகு. 19. பருவ சத்தி யுலகு. 20. கன்ம சத்தி யுலகு. 21. உபகார சத்தி யுலகு. 22. பிரேரக சத்தி யுலகு முதலிய வுங் கொள்க.

அன்றி, 23. ஆகாய சவிகற் பாந்தர குணத்துவ சத்த ரூப சத்தி யுலகு. 24. வாயு சவிகற் பாந்தர குணத்துவ பரிச ரூப சத்தி யுலகு. 25. தேயு சவிகற் பாந்தர குணத்துவ ரூப ரூப சத்தி யுலகு. 26. அப்பு சவிகற் பாந்தர குணத்துவ ரச ரூப சத்தி யுலகு. 27. பிருதிவி சவிகற் பாந்தர குணத்துவ கந்த ரூப சத்தி யுலகு.

28. ஆகாய சவிகற் பாந்தர குண விஷயத்துவ சத்த சொரூப சத்தி யுலகு. 29. வாயு சவிகற் பாந்தர குண விஷயத்துவ பரிச சொரூப சத்தி யுலகு. 30. தேயு சவிகற் பாந்தர குண விஷ யத்துவ ரூப சொரூப சத்தி யுலகு. 31. அப்பு சவிகற் பாந்தர குண விஷயத்துவ ரச சொரூப சத்தி யுலகு. 32. பிருதிவி சவிகற் பாந்தர குண விஷயத்துவ கந்த சொரூப சத்தி யுலகு.

33. ஆகாய பௌதிக ஏகதேச சையோக சம்பந்த சத்த சுபாவ சத்தி யுலகு. 34. வாயு பௌதிக ஏகதேச சையோக சம்பந்த பரிச சுபாவ சத்தி யுலகு. 35. தேயு பௌதிக ஏகதேச சையோக சம் பந்த ரூப சுபாவ சத்தி யுலகு. 36. அப்பு பௌதிக ஏகதேச சையோக சம்பந்த ரசசுபாவ சத்தி யுலகு. 37. பிருதிவி பௌதிக ஏகதேச சையோக சம்பந்த கந்தசுபாவ சத்தி யுலகு.

38. பரமாணுப் பிரஞ்ஞை சாத்திய சத்த விசேட சத்தி யுலகு. 39. பரிச விசேட சத்தி யுலகு. 40. ரூப விசேட சத்தி யுலகு. 41. ரச விசேட சத்தி யுலகு. 42. கந்த விசேட சத்தி யுலகு.

43. சுரோத்தி ரேந்திரிய பரியந்த சம்பந்த சாதி சாமானிய சத்த வியாத்தி சத்தி யுலகு. 44. தொக்கேந்திரிய பரியந்த சம்பந்த சாதி சாமானிய பரிச வியாத்தி சத்தி யுலகு. 45. நேத்தி ரேந்திரிய பரியந்த சம்பந்த சாதி சாமானிய ரூப வியாத்தி சத்தி யுலகு. 46. சிங்ஙேந்திரிய பரியந்த சம்பந்த சாதி சாமானிய ரச வியாத்தி சத்தி யுலகு. 47. கிராணேந்திரிய பரியந்த சம்பந்த சாதி சாமானிய கந்த வியாத்தி சத்தி யுலகு.

48. பரமாணுப் பிரஞ்ஞா வியாபார உபாதி சாமானிய சத்த வியாபக சத்தியுலகு. 49. பரிச வியாபக சத்தியுலகு. 50. ரூப வியா பக சத்தியுலகு. 51. ரச வியாபக சத்தி யுலகு. 52. கந்த வியாபக சத்தி யுலகு.

53. ஆகாயபீஜத்துவ சத்த குண சத்தி யுலகு. 54. வாயு பீஜத்துவ பரிச குண சத்தி யுலகு. 55. தேயு பீஜத்துவ ரூப குண சத்தி யுலகு. 56. அப்பு பீஜத்துவ ரசகுண சத்தி யுலகு. 57. பிருதிவி பீஜத்துவ கந்த குண சத்தி யுலகு.

58. பரமாத்தி அதியணுத்துவ சாத்திய சத்த வர்ன சத்தி யுலகு. 59. பரிச வர்ன சத்தி யுலகு. 60. ரூபவர்ன சத்தி யுலகு.

61. ரச வர்ன சத்தி யுலகு. 62. கந்த வர்ன சத்தி யுலகு. 63. சத்த பரத்துவ சத்தி யுலகு. 64. பரிச பரத்துவ சத்தி யுலகு. 65. ரூப பரத்துவ சத்தி யுலகு. 66. ரச பரத்துவ சத்தி யுலகு. 67. கந்த பரத்துவ சத்தி யுலகு. 68. சத்த அபரத்துவ சத்தி யுலகு. 69. பரிச அபரத்துவ சத்தி யுலகு. 70. ரூப அபரத்துவ சத்தி யுலகு. 71. ரச அபரத்துவ சத்தி யுலகு. 72. கந்த அபரத்துவ சத்தி யுலகு. 73. இங்ஙனம், சத்த பாவ சத்தி யுலகு. 74. பரிச பாவ சத்தி யுலகு. 75. ரூப பாவ சத்தி யுலகு. 76. ரச பாவ சத்தி யுலகு. 77. கந்த பாவ சத்தி யுலகு. முதலியவும், 78. நிமித்த சத்தி யுலகு. 79. நிமித்த விசேட சத்தி யுலகு முதலியவுங் கொள்க.

அன்றி, 80. சத் தோற்பவ சத்தி யுலகு. 81. சத்த அதி கார சத்தி யுலகு. 82. சத்த லய சத்தி யுலகு. 83. பரி சோற்பவ சத்தி யுலகு. 84. பரிச அதிகார சத்தி யுலகு. 85. பரிச லய சத்தி யுலகு. 86. ரூபோற்பவ சத்தி யுலகு. 87. ரூப அதிகார சத்தி யுலகு. 88. ரூப லய சத்தி யுலகு. 89. ரசோற்பவ சத்தி யுலகு. 90. ரச அதிகார சத்தி யுலகு. 91. ரச லய சத்தி யுலகு. 92. கந் தோற்பவ சத்தி யுலகு. 93. கந்த அதிகார சத்தி யுலகு. 94. கந்த லய சத்தி யுலகு.

95. உற்ப வாதிகார லய வதிகரண சத்தி யுலகு. 96. கரண சத்தி யுலகு. 97. பருவ சத்தி யுலகு. 98. கன்ம சத்தி யுலகு. 99. பிரோக சத்தி யுலகு. 100. உபகார சத்தி யுலகு முதலியவுங் கொள்க.

(ஆக 360 + 100 = 460.)

5. கன்மேந்திரிய தத்துவ உலகு

மூலமா யாந்த ராங்கார பாகிய விகற்ப கிரியாலேச ஏக தேச காரிய பௌதிக பாகியத் துவார கிரியா வியக்தி மாத்திர கன் மேந்திரிய தத்துவ வுலகு.

1. பூதேந்திரிய சம்பந்த கன்ம விஷ யாணுத்துவ சாத்திய கன்மேந்திரிய ரூப சத்தி யுலகு. 2. துவார கன்மாணுத்துவ வியா பார சாத்திய கன் மேந்திரிய சொரூப சத்தி யுலகு. 3. கன்ம விகற்ப விசித்தி ரோத்தி யோகத்துவ கன்மேந்திரிய சுபாவ சத்தி யுலகு. 4. பூத பரியந்த சாதி சாமானிய கன்மேந்திரிய வியாத்தி சத்தி

யுலகு. 5. மாயை பரியந்த வுபாதி சாமானிய கன்மேந்திரிய வியாபக சத்தி யுலகு. 6. சூக்கும சைதோகத்துவ கன்மேந்திரிய விசேட சத்தி யுலகு. 7. மாயா சடத்துவ கன்மேந்திரிய குண சத்தி யுலகு. 8. அந்த ரேந்திரிய சூக்கும விஷய கன்மேந்திரிய வர்ன சத்தி யுலகு. 9. விசேஷ கன்மாணுத்துவ கன்மேந்திரிய பரத்துவ சத்தி யுலகு. 10. சாமானிய கன்மாணுத்துவ கன்மேந்திரிய அபரத்துவ சத்தி யுலகு. 11. கன்ம பகு வணுத்துவ சாத்திய கன்மேந்திரிய பாவ சத்தி யுலகு. 12. அநிட்டான மாத்திர கன்மேந்திரிய நிமித்த சத்தி யுலகு. 13. அநிட்டான விசேடமாத்திர கன்மேந்திரிய நிமித்த விசேட சத்தி யுலகு.

இங்ஙனம், 14. சூக்கும சினேக கன்மாணுத்துவ சம்பந்த விசித்திர ரூப வியத்தியாதி சாதக சாத்திய கன்மேந்திரி யோற்பவ சத்தி யுலகு. 15. கன்மேந்திரிய அதிகார சத்தி யுலகு. 16. கன்மேந்திரிய லய சத்தி யுலகு. 17. கன்மேந்திரி யோற்ப வதிகார லய அதிகரண சத்தி யுலகு. 18. கரண சத்தி யுலகு. 19. பருவ சத்தி யுலகு. 20. கன்ம சத்தி யுலகு. 21. உபகார சத்தி யுலகு. 22. பிரேரக சத்தி யுலகு முதலியவுங் கொள்க.

அன்றி, 23. ஆகாயப் பிருதிவி சாதி சையோக சுரோத்திர ரோபாதி சம்பந்த வசன கன்ம விஷயாணுத்துவ சாத்திய வாக்கு ரூப சத்தி யுலகு. 24. வாயுப் பிருதிவி சாதி சையோக தொக்கு உபாதி சம்பந்த தான கன்ம விஷயாணுத்துவ சாத்திய பாணி ரூப சத்தி யுலகு. 25. தேயுப் பிருதிவி சாதி சையோக நேத்தி ரோபாதி சம்பந்த கமன கன்ம விஷயாணுத்துவ சாத்திய பாத ரூப சத்தி யுலகு. 26. அப்புப் பிருதிவி சாதி சையோக சிங்கு வோபாதி சம்பந்த விசர்க்க கன்ம விஷயாணுத்துவ சாத்திய குய்ய ரூப சத்தி யுலகு. 27. பிருதிவிப் பிருதிவி சாதி சையோக கிராணே பாதி சம்பந்த விசர்க்க கன்ம விஷ யாணுத்துவ சாத்திய குத ரூப சத்தி யுலகு.

28. வாக்குத் துவார வசன கன்மாணு வியாபாரத்துவ சாத்திய வாக்கு சொரூப சத்தி யுலகு. 29. பாதத் துவார கமன கன்மாணு வியாபாரத்துவ சாத்திய பாத சொரூப சத்தி யுலகு. 30. பாணித் துவார தான கன்மாணு வியாபாரத்துவ சாத்திய பாணி சொரூப சத்தி யுலகு. 31. குய்யத் துவார விசர்க்க கன்மாணு வியாபாரத்துவ சாத்திய குய்ய சொரூப சத்தி யுலகு. 32. குதத் துவார விசர்க்க கன்மாணு வியாபாரத்துவ சாத்திய குத சொரூப சத்தி யுலகு.

33. வசன கன்ம விகற்ப விசித்தி ரோத்தி யோகத்துவ வாக்கு சுபாவ சத்தி யுலகு. 34. கமன கன்ம விகற்ப விசித்தி ரோத்தி யோகத்துவ பாத சுபாவ சத்தி யுலகு. 35. தான கன்ம விகற்ப விசித்தி ரோத்தியோகத்துவ பாணி சுபாவ சத்தி யுலகு. 36. விசர்க்க கன்ம விகற்ப விசித்தி ரோத்தியோகத்துவ குய்ய சுபாவ சத்தி யுலகு. 37. குத சுபாவ சத்தி யுலகு.

38. ஆகாயப் பிருதிவி சாதிபரியந்த வாக்கு வியாத்தி சத்தி யுலகு. 39. வாயுப் பிருதிவி சாதி பரியந்த பாத வியாத்தி சத்தி யுலகு. 40. தேயுப் பிருதிவி சாதி பரியந்த பாணி வியாத்தி சத்தி யுலகு. 41. அப்புப் பிருதிவி சாதி பரியந்த குய்ய வியாத்தி சத்தி யுலகு. 42. பிருதிவிப் பிருதிவி சாதி பரியந்த குத வியாத்தி சத்தி யுலகு.

43. பிரகிருதி யுபாதி பரியந்த வாக்கு வியாபக சத்தி யுலகு. 44. பாத வியாபக சத்தி யுலகு. 45. பாணி வியாபக சத்தி யுலகு. 46. குய்ய வியாபக சத்தி யுலகு. 47. குத வியாபக சத்தி யுலகு.

48. அன்றி, 48. வாக்காதி விசேட சத்தி யுலகு. 49. குண சத்தி யுலகு. 50. வர்ன சத்தி யுலகு. 51. பரத்துவ சத்தி யுலகு. 52. அபரத்துவ சத்தி யுலகு. 53. பாவ சத்தி யுலகு. 54. நிமித்த சத்தி யுலகு. 55. நிமித்த விசேட சத்தி யுலகு. 56. உற்பவ சத்தி யுலகு. 57. அதிகார சத்தி யுலகு. 58. லய சத்தி யுலகு. 59. உற்ப வாதிகார லய அதிகரண சத்தி யுலகு. 60. காரண சத்தி யுலகு. 61. பருவ சத்தி யுலகு. 62. கன்ம சத்தி யுலகு. 63. உபகார சத்தி யுலகு. 64. பிரேரக சத்தி யுலகு முதலியவுங் கொள்க.

(ஆக 460 + 64 = 524)

6. அந்தக் காரண தத்துவ உலகு

சவிகற்ப இச்சாஞானக் கிரியாலேச ஏகதேச மூல மாயாந்தராங்க சாங்க சூக்கும சங்கற்ப விகற்ப சமவாய காரிய பௌதி கோபாங்கத் துவாரேந்திரி யாக்கிர கண்ணி யாங்க சாங்கத்து வாத்துவ அந்தக்காரண தத்துவ வுலகு.

1. பௌதிக அந்தர சாதாரண சங்கற்ப சமவாயத்துவ அந்தக்காரண ரூப சத்தி யுலகு. 2. பௌதி காந்தர சாதாரண சங்

கற்ப சமவாய சாத்திய அந்தக்கரண சொரூப சத்தி யுலகு. 3. பௌதி காந்தா சாதாரண சங்கற்ப விகற்ப சமவாய சாத்திய அந்தக்கரண சுபாவ சத்தி யுலகு.

4. புருட தத்துவ பரியந்த சாதி சாமானிய அந்தக்கரண வியாத்தி சத்தி யுலகு. 5. வித்தியா தத்துவ பரியந்த வுபாதி சாமானிய அந்தக்கரண வியாபக சத்தி யுலகு. 6. விஷயப் பிரஞ் ஞாக்கிர கண்ணிய அந்தக்கரண விசேட சத்தி யுலகு. 7. சங்கற்ப விகற்ப சாத்திய வந்நியாச அந்தக்கரண குண சத்தி யுலகு. 8. சங் கற்ப விசித்திர சாத்திய அந்தக்கரண வர்ன சத்தி யுலகு. 9. சங்கற்ப விசேடத்துவ அந்தக்கரண பரத்துவ சத்தி யுலகு. 10. சங்கற்ப சாமானியத்துவ அந்தக்கரண அபரத்துவ சத்தி யுலகு. 11. சர்வ சங்கற்ப விகற்ப சாத்தியத்துவ அந்தக்கரண பாவ சத்தி யுலகு.

இங்ஙனம், 12. அந்தக்கரண நிமித்த சத்தி யுலகு. 13. அந்தக்கரண நிமித்த விசேட சத்தி யுலகு. 14. அந்தக்கர ணேற்பவ சத்தி யுலகு. 15. அந்தக்கரண அதிகார சத்தி யுலகு. 16. அந்தக்கரண லய சத்தி யுலகு. 17. அந்தக்கர ணேற்பவ வாதி கரண சத்தி யுலகு. 18. அந்தக்கர ணேற்பவ கரண சத்தி யுலகு. 19. அந்தக்கர ணேற்பவ பருவ சத்தி யுலகு. 20. அந்தக்கர ணேற் பவ கன்ம சத்தி யுலகு. 21. அந்தக்கர ணேற்ப வோபகார சத்தி யுலகு. 22. அந்தக்கர ணேற்பவ பிரேரக சத்தி யுலகு. 23. அந்தக்கரண அதிகா ராதிகரண சத்தி யுலகு. 24. அந்தக்கரண வதிகார கரண சத்தி யுலகு. 25. அந்தக் கரண அதிகார பருவ சத்தி யுலகு. 26. அந்தக் கரண வதிகார கன்ம சத்தி யுலகு. 27. அந்தக் கரண அதிகா ரோபகார சத்தி யுலகு. 28. அந்தக் கரண வதிகாரப் பிரேரக சத்தி யுலகு. 29. அந்தக் கரண லயாதிகரண சத்தி யுலகு. 30. அந்தக் கரண லய கரண சத்தி யுலகு. 31. அந்தக் கரண லய பருவ சத்தி யுலகு. 32 அந்தக் கரண லய கன்ம சத்தி யுலகு. 33. அந்தக் கரண லயோபகார சத்தி யுலகு. 34. அந்தக் கரண லயப் பிரேரக சத்தி யுலகு. (ஆக 524 + 34 = 558.)

7. மலைரூப சத்தியுலகு

அன்றி, மூல மாயாந்த ராங்கார சவிகற்ப விச்சா லேச ஏகதேச காரண காரிய பௌதி காந்தர விச்சா

சங்கற்ப விகற்ப விசித்தி ராலம்பத்துவ சாதக சாத்தியத்துவ மேனை ரூப சத்தி யுலகு.

1. பௌதிகாந்தா இச்சா சங்கற்ப விகற்ப விசித்தி ராலம்ப சாமானிய சாத்திய மேனை சொரூப சத்தி யுலகு. 2. பௌதிகாந்தா இச்சா சங்கற்ப விகற்ப விசித்தி ராலம்ப விஷய நியாச கன்ம மேனை சுபாவ சத்தி யுலகு.

3. புருடத் துவார சாதி சாமானிய பரியந்த மேனை வியாத்தி சத்தி யுலகு. 4. வித்தியாத் துவார வுபாதி சாமானிய பரியந்த மேனை வியாபக சத்தி யுலகு. 5. விஷய விச்சா சங்கற்ப விசேஷ நியாச மேனை விசேட சத்தி யுலகு. 6. விஷய விச்சா சங்கற்ப விகற்ப நிபிடத்துவ மேனை குண சத்தி யுலகு. 7. விஷய விச்சா சங்கற்ப விகற்ப விவித விசித்தி ரத்துவ மேனை வர்ன சத்தி யுலகு. 8. விஷய விச்சா சங்கற்ப சர்வ சாத்தியத்துவ மேனைபாவ சத்தி யுலகு. 9. விஷய விசேட விச்சா சங்கற்ப விகற்பத்துவ மேனை பரத்துவ சத்தி யுலகு. 10. விஷய சாமானிய சங்கற்ப விகற்பத்துவ மேனை அபரத்துவ சத்தி யுலகு. 11. விஷய விச்சா சங்கற்ப வதிட்டானத்துவ மேனை நிமித்த சத்தி யுலகு 12. விஷய விச்சா சங்கற் பாதிட்டான விசேடத்துவ மேனை நிமித்த விசேட சத்தி யுலகு. 13. விஷய விச்சா சங்கற்ப விகற்ப உற்பவாதி சாதன சாத்திய மேனைப்பவ சத்தி யுலகு. 14. மேனை அதிகார சத்தி யுலகு. 15. மேனைலய சத்தி யுலகு. 16. மேனைப்பவ அதிகரண சத்தி யுலகு. 17. மேனைப்பவ காரண சத்தி யுலகு. 18. மேனைப்பவ பருவ சத்தி யுலகு. 19. மேனைப்பவ கன்ம சத்தி யுலகு. 20. மேனைப்ப வோபகார சத்தி யுலகு. 21. மேனைப்பவப் பிரேரக சத்தி யுலகு. 22. மேனை அதிகா ராதிகரண சத்தி யுலகு. 23. மேனை அதிகார காரண சத்தி யுலகு. 24 மேனை அதிகார பருவ சத்தி யுலகு. 25. மேனை அதிகார கன்ம சத்தி யுலகு. 26. மேனை அதிகா ரோபகார சத்தி யுலகு. 27. மேனை அதிகாரப் பிரேரக சத்தி யுலகு. 28. மேனை ல யாதிகரண சத்தி யுலகு. 29. மேனைலய காரண சத்தி யுலகு. 30. மேனை லய பருவ சத்தி யுலகு. 31. மேனைலய கன்ம சத்தி யுலகு. 32. மேனை லயோபகார சத்தி யுலகு. 33. மேனை லயப் பிரேரக சத்தி யுலகு.

(ஆக. 558 + 33 = 591)

8. அகங்கார தத்துவ உலகு

மூலமாயாந்தா விகற்பக்கிரியாலேச எகதேச காரண காரிய பௌதிகாந்தா கிரியா சங்கற்ப விகற்ப சாத்திய அகங் கார தத்துவ உலகு.

1. பௌதிகாந்தர கிரியாசங்கற்ப விகற்ப சமவாய நிச்சய அகம்பாவத் துவாகங்கார ரூப சத்தி யுலகு. 2. பௌதிகாந்தர கிரியா சங்கற்ப விகற்ப விவித குணபாங்க சமவாய அகம்பாவ சாத்திய அகங் கார சொரூப சத்தி யுலகு. 3. பௌதிகாந்தர கிரியா சங்கற்ப விகற்ப விவிதகுண விசித்திராலம்பத்துவ அகம்பாவ அகங்கார சுபாவ சத்தி யுலகு 4. பௌதிகாந்தர கிரியா சங்கற்ப விகற்ப புருஷபாவ பரியந்த அகங்கார வியாத்தி சத்தி யுலகு. 5. பௌதிகாந்தர கிரியா சங்கற்ப விகற்ப ஞான பாவ மாத்திர அகங்கார வியாபக சத்தி யுலகு. 6. பௌதி காந்தர கிரியா சங்கற்ப விகற்ப அகம்பாவ நியா சத்துவ அகங்கார விசேட சத்தி யுலகு. 7. பௌதிகாந்தர கிரியா சங்கற்ப விகற்ப அகம் பாவ நிபிடத்துவ அகங்கார குண சத்தி யுலகு. 8. பௌதிகாந்தர கிரியா சங்கற்ப விகற்ப அகம்பாவ விசித்திரத்துவ அகங்கார வர்ண சத்தி யுலகு. 9. பௌதிகாந்தர கிரியா சங்கற்ப அகம்பாவ சாத்தியத்துவ அகங்கார பாவ சத்தி யுலகு. 10. பௌதிகாந்தர சங்கற்ப விகற்ப அகம் பாவ விசேடத்துவ அகங்கார பரத்துவ சத்தி யுலகு. 11. பௌதிகாந் தர கிரியா சங்கற்ப விகற்ப அகம்பாவ சாமானியத்துவ அகங்கார அபரத் துவ சத்தி யுலகு.

12. கிரியா சங்கற்ப விகற்ப அதிட்டானத்துவ அகங்கார நிமித்த சத்தி யுலகு. 13. கிரியா சங்கற்ப விகற்ப அதிட்டான விசே டத்துவ அகங்கார நிமித்த விசேட சத்தி யுலகு. 14. கிரியா சங்கற்ப விகற்ப அகம்பா வோற்பவாதி சாதன சாத்திய அகங்கா ரோற்பவ சத்தி யுலகு. 15. அகங்கா ராதிகார சதி யுலகு. 16. அகங்கார லய சத்தி யுலகு. 17. அகங்கா ரோற்ப வாதிகரண சத்தி யுலகு. 18. அகங்கா ரோற்பவ காரண சத்தி யுலகு. 19. அகங்கா ரோற்பவ பருவ சத்தி யுலகு. 20. அகங்கா ரோற்பவ கன்ம சத்தி யுலகு. 21. அகங்கா ரோற்ப வோபகார சத்தி யுலகு. 22. அகங்கா ரோற்பவப் பிரேரக சத்தி யுலகு. 23. அகங்கா ராதிகார அதிகரண சத்தி யுலகு. 24. அகங்கா ராதிகார காரண சத்தி யுலகு. 25. அகங்கா ராதிகார பருவ சத்தி யுலகு. 26. அகங்கா ராதிகார கன்ம சத்தி யுலகு. 27. அகங்கா ராதிகா ரோபகார சத்தி யுலகு. 28. அகங்கா ராதிகாரப் பிரேரக சத்தி யுலகு. 29. அகங்கார லயாதிகரண சத்தி யுலகு. 30. அகங்கார லய காரண சத்தி யுலகு. 31. அகங்கார லய பருவ சத்தி யுலகு. 32. அகங் கார லய கன்ம சத்தி யுலகு. 33. அகங்கார லயோபகார சத்தி யுலகு. 34. அகங்கார லயப் பிரேரக சத்தி யுலகு.

9. புத்தி தத்துவ உலகு

மூல மாயாந்த்ர விகற்ப ஞானலேச ஏகதேச காரண காரியப் பௌதி காந்த்ர ஞான விகற்ப சங்கற்ப மாத்ர புத்தி தத்துவ வுலகு.

1. பௌதி காந்த்ர விகற்ப ஞான சங்கற்ப சமவாய விசா ராலம்பத்துவ புத்தி ரூப சத்தி யுலகு. 2. பௌதி காந்த்ர விகற்ப ஞான சங்கற்ப விசா ராலம்ப சாத்திய புத்தி சொரூப சத்தி யுலகு. 3. பௌதி காந்த்ர விகற்ப ஞான சங்கற்ப விசா ராலம்ப சமவாய சாத்தியத்துவ புத்தி சுபாவ சத்தி யுலகு. 4. புருஷ விசார பரியந்த புத்தி வியாத்தி சத்தி யுலகு. 5. வித்தியா தத்துவ பரியந்த புத்தி வியாபக சத்தி யுலகு.

